QH,31 N79
N80·31;2
1°R151

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1979, ஏப்ரல் 17, 18, 19, 20 மற்றும் 21 ஆம் நாட்கள்.

(தொகுதி XXXI—எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ்நாடு அரசு
1980

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை 600009

விலை ரூ. 1]

V211,31 N79

N80·31;2

122151

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979, ஏப்ரல் 17, 18, 19, 20, 21 ஆம் நாட்கள்.
(தொகுதி XXXI—எண்கள் 1 முதல் 5)

உள்ளடக்கம்.

	பக்கங்கள்.
(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும், அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும்.	i—vi
(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.	vii
(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட).	viii—xvi
அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
கடன் நிவாரண சட்ட முன்வடிவு, 1979.	63
கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.	63
கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.	790
பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.	790—791
மாநகரச் சிறுவழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.	791
அரசினர் தீர்மானங்கள்—	
அவைக் குழுவிற்கான தேர்தல்.	541
உரிமைக் குழுவிற்கான தேர்தல்.	541
பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.	540
பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.	540
மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.	540
விதி 22-ஐத் தளர்த்தல்.	156

பக்கம்

அறிக்கை அளித்தல்—

அரசு பதிவுபெறா அலுவலர்களின் சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவது குறித்து. 86

உரிமைக் குழுவின் அறிக்கைகள். 989

அறிவிப்புகள்—

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். 541—542

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 790

உரிமைப் பிரச்சினைகள்—

உணவுத் துறை அமைச்சர் மீது. 539

“ துக்ளக் ” பத்திரிகை மீது. 980—982

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு. 538—539

785—786

“ மக்கள் செய்தி ”, ‘ மாலை முரசு ” நாளேடுகள் மீது. 537—538

“ மன்றம் ” இதழில் கட்டுரை எழுதியுள்ள திரு. நெடுஞ் செழியன் அவர்கள் மீது. 529—531

மின்சாரத் துறை அமைச்சர் மீது. 787

முதலமைச்சர் மீது. 980

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை. 260—262

46

637—638

890

1060—1061

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

நீரார் சுரங்கப்பாதை வேலையில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்து குறித்து. 982—984

முகவை மாவட்டம் வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு குறித்து. 39—40

ஒழுங்குப் பிரச்னைகள்—

அவைக்குள் இருக்கும் உறுப்பினர்களிடம் முரசொலி பத்திரிகை விநியோகிக்கப் பெறுவது குறித்து. 2

330—3

பக்கங்கள்.

ஒழுங்குப் பிரசனைகள்—தொடர்ச்சி.

நீக்கம் குறித்து. 808—817

மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே வழங்கப்படாமை குறித்து. 989—990

முதலமைச்சர் மீதான உரிமை மீறல் தீர்மானம் எடுத்துக் கொள்வது குறித்து. 283

கவன ஈர்ப்புகள்—

இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றினைத் தமிழ் நாட்டில் நிறுவுவது குறித்து. 61—62

கள்ளக்குறிச்சியில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து. 987—988

சிமெண்ட் தட்டுப்பாட்டினால் லட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்களின் வேலை இழப்பு குறித்து. 787—790

சென்னை தி. நகர் சிவசைலம் தெருவில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து. 984—987

தமிழ்நாடு சுற்றுலா வாரிய ஊழியர்கள் சிலரை நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளது குறித்து. 46—60

தகவல் கோரல்—

அதிகாரிகள் மாடத்தில் உள்ளவர் குறித்து. 532

உறுப்பினர்களது அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து. 36—39

காமராஜர் சிலைக்கு விளக்கு இல்லாமல் இருப்பது குறித்து. 532—533

முரசொலி பத்திரிகையை விநியோகித்தவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து. 533—537

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம். 157—260

283—297,

காவல் துறை. 297—320,

தீயணைப்புப் பணிகள். 322—468

தொழில்கள்.

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 990—1060

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி. — பக்கங்கள்
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி.

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. — 543—637
நுகர்பொருள் வழங்கல்.
மீனளம். — 791—808,
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம். — 818—889
சாலைகளும் பாலங்களும்.
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து.
சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. — 64—86,
வினாக்கள்-விடைகள்— — 87—156
உடுக்குறியிட்ட வினாக்கள். — 1—38,
497—529,
751—785,
949—979

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)' 'உள்ளாட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது..

அ. — அறிக்கை.
அறிவி. — அறிவிப்பு.
அ.வி. — அரைமணி நேர விவாதம்.
கு.வி. — குறுகிய கால விவாதம்.
பொ.வி. — பொது விவாதம்.
ஆ.உ. — ஆளுநர் உரை.
உ.பி. — உரிமைப் பிரச்சினை.
ஒ.பி. — ஒழுங்குப் பிரச்சினை.
க.ஈ. — கவன ஈர்ப்பு.
க.ஈ.அ. — கவன ஈர்ப்பு அறிக்கை.
ச.அ.நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.
ச.ஆ.நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்,
(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்;
(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,
(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்,
(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,
(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
— சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல்.
— சட்டமன்றப் பேரவை.
— சட்டமன்ற மேலவை.
த.கோ. — தகவல் கோரல்.
த.வி. — தன்னிலை விளக்கம்.
தீ. — தீர்மானம்.
உ.தீ. — உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ. — தனித் தீர்மானம்.
து.மா.கோ. — துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
[illegible] — பேரவையின் அலுவல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979, ஏப்ரல் 17, 18, 19, 20, 21 ஆம் நாட்கள்.

(தொகுதி XXXI—எண்கள் 1-5.)

அ.

பக்கங்கள்.

அண்ணாமலை, திரு. எம்.—
வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு :
நுகர்பொருள் வழங்கல்
மீனவம்
1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் 157,
கட்டளைகள் சட்ட நிர்வாகம் 178—185
245—246,
257—258

அம்பிகாபதி, திரு. மு.— 973—975
அரிசனங்கள், தடுவச்சேரி, குடி நீர்வசதி 46,55—56
ஊழியர்கள், சுற்றுலா வாரியம், வேலை நீக்கம், (க.ஈ.)
சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலை 788,
யிழப்பு (க.ஈ.)
துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், 39
பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.)
பெரியார் நூற்றாண்டுவிழா, கைதிகள், விடுதலை. 522—523
வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு :
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 991, 992,
1043—1050

அம்பிகாபதி திரு. மு—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு — 544, 581—587

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு — 64—69

அமிர்தராஜ் திரு இரா—

தேர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயம், திருச்செந்தூர், சிற்பச் சிலைகள் திருட்டு — 5—7

வரவு-செலவுத்திட்டம், 1979—80 வாக்கெடுப்பு :

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் — 208—211

அரங்கநாதன் திரு. சென்னை மு—

நடைபாதைக் கடைகள், சென்னை — 957—959

அரிசன நலம்—

அரியப்பாடி, வீட்டு மனைகள்

சலவைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலிற் சேர்த்தல் — 972—973

சலவைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் — 11—12

சுடுகாட்டு நிலம், அணைக்கரைப்பட்டி, ஆக்கிரமிப்பு — 8—11

நடுவச்சேரி, குடிநீர் வசதி — 508—509

வீட்டு வசதி — 973—975

வீடுகள், வடதலைக்குளம் — 760—765

அலுவலர்கள்—

அரசிதழ் பதிவுபெறா அலுவலர் சங்கப் பிரதிநிதிகள், முதலமைச்சருடன் சந்திப்பு (அ) — 86

கால்நடை மருத்துவர்கள், பால்வள நிறுவனம் — 511—514

சுற்றுலா வாரிய ஊழியர்கள், வேலைநீக்கம் (க.ச.) — 46—69

அழகர்சாமி திரு. சோ.—

தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ச.) — 984, 985

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.) — 39

பம்ப் செட்டுகள், கீழ்க்ஷேமங்கலம், மின் துண்டிப்பு — 497

மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே வழங்கப்படாமை குறித்து (ஒ.பி.)

வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு :

நுகர்பொருள் வழங்கல், மீனளம் — 839—846

ஆ.

ஆசிரியர்கள்—

தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எடுக்கப்பட்டவர்கள் — 959

ஆண்டி அம்பலம் திரு. பெ—

நீச்சல் வீரர்கள், மதுரை, பாராட்டு — 518—519

வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு :

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடி-நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. — 587—591

நுகர்பொருள் வழங்கல், மீனளம்

ஆலயம்—

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத் தேர் — 5—7

ஆலைகள்—

அருணா சர்க்கரை ஆலை, கட்டாயச் சேமிப்பு
சக்தி சர்க்கரை ஆலை, கரும்பு எடுத்தல் 849—950
“சூரியகாந்தி” எண்ணெய் ஆலை, போச்சம்பள்ளி 950—953

ஆறுமுகம் திரு. சேலம் மு.— 18—21

தீ விபத்து, தி.நகர், சென்னை (க.ஈ.)
துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், 984, 986
பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.)
பேரவை, மாற்றுச் செயலாளர் (ஒ.பி.) 39—42
38

வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு :
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 284, 285
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு
991, 992,
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 1025—1029
544, 545,
546,
நுகர்பொருள் வழங்கல், மீனளம் 593—596
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 792, 794
1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். 94—99
211—216
959

இ.

இயற்கைச் சீற்றங்கள்—

கிழக்கு கடற்கரையோர கிராமங்கள், புயல், மழையினால் ஏற்பட்ட பாதிப்பு. 25
புயல் பாதுகாப்புக் கூடங்கள், அமைத்தல். 780—781
புயலினால் ஏற்பட்ட பாதிப்பு, இராமநாதபுரம் மாவட்டம் 25—26

இராகவானந்தம் திரு. எஸ்.— 987—988

குடிநீர் தட்டுப்பாடு, கள்ளக்குறிச்சி (க.ஈ.அ.)

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டுவசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 543, 544
545, 547
561
611—635

இராதா திரு. எஸ். ஆர்.— 980—982

‘துக்ளக்’ பத்திரிகை மீது (உ.பி.).
வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு : 396—409
காவல்துறை, தீயணைப்புப் பணிகள்.

இராமச்சந்திரன் திரு. எம். ஜி.— 985—986

தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.அ.).
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு: 283, 284
காவல்துறை, தீயணைப்புப் பணிகள். 286
429—467
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 990, 991,
992

இராமச்சந்திரன், திரு.ச—

சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலை இழப்பு (க.ஈ.அ.). 788—790
நீக்கப்பெற்ற சில சொற்கள் குறித்து (ஒ.பி.). 62—63
விதி 22-ஐத் தளர்த்தல் (தீ). 156

இ—தொடர்ச்சி. பக்கங்கள்.

இராமச்சந்திரன் திரு. செஞ்சி ந.—

கீழ்பவானி பாசனத் திட்டம்.

இராமசாமி திரு. எஸ். வி.— 766—770

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

இராமசாமி திரு. எல். ஜே.— 1007—1012

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

இராமலிங்கம் திரு. செ.— 1038—1043

சாயத் தொழிற்சாலை, திருநாகேசுவரத்தில் நிறுவுதல்.
சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலை இழப்பு (க.ஈ.). 781

இராஜாராம் செட்டி திரு. டி. ஆர்.— 787

பத்திரப் பதிவு, கட்டணம்.

இளங்கோவன் திரு. கோ— 519—520

தனியார் மேல்நிலைப் பள்ளிகள், மானியம்.
பெரியார் நூற்றாண்டு விழா, செலவிடப்பட்ட தொகை. 970—971

520

ச.

சங்கரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.—

ஊழியர்கள், சுற்றுலா வாரியம், வேலை நீக்கம் (க.ஈ.).

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : 46, 59—60
காவல்துறை, தீயணைப்புப் பணிகள்.
தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 285

992

உ.

உச்சி திரு. பே.—

அரசு நிலங்கள், கூடலூர் ஆக்கிரமிப்பு.
தேயிலை, விலை வீழ்ச்சி.

778—780

[illegible]

உ—தொடர்ச்சி.

பக்கங்கள்.

உணவு தானியங்கள்—

அவசியப் பண்டங்கள் பதுக்கல், கைது. 28—32
உணவு உற்பத்தி, சிறப்புத் திட்டம், வட ஆற்காடு மாவட்டம். 15—16

உத்திராபதி, திரு. பொ—

ஊழியர்கள், சுற்றுலா வாரியம், வேலை நீக்கம் (க.ஈ.). 46
தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.). 984
துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.). 39
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு:
1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். 204—208

உமாநாத், திரு. ரா—

திரு. நெடுஞ்செழியன் மீது (உ.பி.). 33—35
நீக்கப்பெற்ற சில சொற்கள் குறித்து (ஒ.பி.) 58, 59, 60, 61, 62, 63, 65—66, 67

'மன்றம்' இதழில் கட்டுரை எழுதியுள்ள திரு. நெடுஞ் செழியன் மீது (உ.பி.). 529—531

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு:
காவல்துறை, தீயணைப்புப் பணிகள். 293—297, 297—320

உய்யக்கொண்டான் திரு. கே. ஜே.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : 867—871
நுகர்பொருள் வழங்கல், மீனளம்.

உரிமைப் பிரச்சினைகள்—

பார்க்க—தலைவர்.

பக்கங்கள்.

எட்மண்ட் திரு. க. உரோ.—

நீக்கப்பெற்ற சில சொற்கள் குறித்து (ஒ.பி.). — 60, 61, 62, 66

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
நுகர்பொருள் வழங்கல், மீனவளம். — 971—792, 793, 794, 799, 835, 836, 837, 838, 841, 842, 844, 851, 871—888

ஏ.

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை. — 260—262, 468, 637—638, 890, 1060—1061

ஒ.

ஒழுங்குப் பிரச்சினைகள்—

பார்க்க—தலைவர்

க.

கடைகள்—

நடைபாதைக் கடைகள், சென்னை, — 957—959

கண்ணன் திரு. ம.—

அரிசனங்கள், வீட்டு வசதி. — 760—765

கணேசன் திரு. எஸ்.—

அவசியப் பண்டங்கள் பதுக்கல், கைது. — 28—32
கரும்பு, பயிரிடல். — 976—979

க—தொடர்ச்சி.

பக்கங்கள்

கணேசன் திரு. எஸ்.—தொடர்ச்சி.

கைத்தறி, பாலிஸ்டர் துணி, விலை. — 753—755
பக்கிங்காம் கால்வாய், சீரமைப்பு. — 765—766
வணிகவியல் பட்டப் படிப்பிற்கு மாணவர்களைச் சேர்த்தல், நன்கொடை வசூல். — 755—758

கந்தசாமி திரு. கா. வே.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் — 221—227,

கந்தசாமி திரு. கே.—

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கிழக்குப் கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.நி.) — 39, 43—44

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் — 221—227, 237, 246—247, 256

காவல்துறை, நியமனப்புப் பணிகள். — 386—395
தொழில்கள்,
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
சாலைகளும் பாலங்களும்
சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து
சாலைகள் பாலங்கள் குறித்த் மூலதனச் செலவு.
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. — 99—104, 136, 146, 153

தரியமாணிக்கம் அம்பலம் திரு. கரு. இராம—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
காவல் துறை
நியமனப்புப் பணிகள் — 286—292

க—தொடர்ச்சி.

	பக்கங்கள்.
கவன ஈர்ப்புகள்—	
இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டில் நிறுவுதல்	
குடிநீர் தட்டுப்பாடு, கள்ளக்குறிச்சி	60—62
சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலை இழப்பு	987—988
சுற்றுலா வாரியம், ஊழியர்கள், வேலை நீக்கம்	787—790
தீ விபத்து, தி.நகர், சென்னை	46—60
கனிவளம்—	984—986
கருப்புக் கற்கள், ஏற்றுமதி	
காடுகள்—	771—775
மேய்ச்சல் கட்டணம்	
கிட்டப்பா, திரு. என.—	781—785
இராசராச சோழன், சிலை, தஞ்சை	
உள்ளாட்சி மருந்தகங்கள், மருந்துச் செலவு	523—526
கரும்பு விலை	22—24
கல்லூரிகள், ராக்கிங்	975
சலவைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்	759—760
சவரத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்	8—11
சிறு தொழில்கள், மாயூரம்	11—12
கிளை நீதிமன்றம், திருவள்ளூரில் ஏற்படுத்தல்	514
புயல் பாதுகாப்புக் கூடங்கள், அமைத்தல்	522
பெரியார் நூற்றாண்டு விழா, செலவிடப்பட்ட தொகை	780—781
கிருஷ்ணசாமி திரு. கே. ஏ.—	520
கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979	

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

கிருஷ்ணன் திரு. ரா.—	
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :	
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	
வீட்டு வசதி	
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு	546,
குடிநீர்—	
கள்ளக்குறிச்சி, தட்டுப்பாடு (க.ஈ.)	987—988
திருவில்லிபுத்தூர்	959—960
குருசாமி திரு. ப.—	
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :	
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	
வீட்டு வசதி	
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு	576—577
குழந்தைவேலு திரு. ப.—	
நீரார் சுரங்கப் பாதை வேலை, வெடி விபத்து (ஒ.தீ.)	983—984
குழுக்கள்—	541
அவை, தேர்தல் (தீ)	989
உரிமை, திரு. துரை முருகன் மீது, அறிக்கை அளித்தல்	541
உரிமை, தேர்தல் (தீ)	540
பொதுக் கணக்கு, தேர்தல் (தீ)	540
பொது நிறுவனங்கள், தேர்தல் (தீ)	540
மதிப்பீடு, தேர்தல் (தீ)	
கூட்டுறவு—	751
இராமக் கூட்டுறவு நாணய சங்கம், பாரணம்	775—778
சர்க்கரை ஆலைகள், தணிக்கை	

பக்கங்கள்.

நதி—

பாலிஸ்டர் துணி, விலை — 753—755

க

கோதண்டராமன் திரு. வி. கே.—

உணவு உற்பத்தி, சிறப்புத் திட்டம், வட ஆற்காடு மாவட்டம் — 15—16

கிழக்கு கடற்கரையோர கிராமங்கள், புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்பு — 25

சலவைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் — 8—11

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.) — 39, 41

பெரியார் நூற்றாண்டு விழா, செலவிடப்பட்ட தொகை — 521—532

கோவிந்தராசன் திரு. ஏ.—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தணிக்கை — 775—778

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல் துறை

தீயணைப்புப் பணிகள்

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 1012—1024

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

வீட்டு வசதி — 4

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு

நுகர்பொருள் வழங்கல் — 544,

மீனளம் — 793

கோவேந்தன் திரு. எம். ஆர்—

வரவு-செலவுத் திட்டம், 1979-80 வாக்கெடுப்பு :

நுகர்பொருள் வழங்கல்,

மீனளம் — 544—51

ச

பக்கங்கள்.

சங்கரப்பா திரு. என்—

முரசொலியை அவையில் விநியோகித்தவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து (த.கோ.) — 533, 534

சட்ட முன்வடிவுகள்—

கடன் நிவாரண சட்ட முன்வடிவு 1979 : — 63

ச.அ.நி.

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1979 : — 63

ச.அ.நி.

கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : — 790

ச.அ.நி.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : — 790

ஆளுநர் செய்தி — 790—791

ச.அ.நி.

மாநகரச் சிறு வழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக் கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : — 791

ச.அ.நி.

சண்முகம் திரு. கூத்தக்குடி ச.— — 46,

சுற்றுலா வாரிய ஊழியர்கள் வேலை நீக்கம் (க.ஈ.) — 57—58

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.) — 32, 40

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : காவல்துறை, தீயணைப்புப் பணிகள். — 338—347

சதாசிவம் திரு. செ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. — 950

வகையில், மாண்புமிகு [illegible] அவர்கள் தன் [illegible] வெளியே [illegible] சொல்லியிருக்கிறார்கள் [illegible] தோ அதற் [illegible] செயல்படு [illegible] முறையைக் [illegible] குறிப்பிட்டார்கள். [illegible] சொல்வதற்கு [illegible] இருக்கிற [illegible] முறையில், அவ்வாறு [illegible] இருக்கிற அவர் நான் [illegible] என்று அவர்கள் [illegible] வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒன்று. [illegible] கொடுத்த [illegible] புறத்தில், [illegible] என்ற அவர் [illegible] பேசி [illegible] அவர்கள் [illegible] நான் [illegible] விட்டார் [illegible] வேண்டு[illegible] [illegible] ....

திரு. [illegible]: [illegible] வேண்டு[illegible]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: [illegible] துணை [illegible] பொன்னால் [illegible] என்று [illegible] மன்றத்திற்குத் தரப் [illegible] இரு [illegible] என்று [illegible] இங்கே [illegible] நியாயமா [illegible] அந்த [illegible] ஏன், எதற் [illegible] மன்றத்திற்குச் [illegible] யாராவது [illegible] யாருக்காவது [illegible] இன்னொரு [illegible] விடக்கூடும்.

அப்படியானால் [illegible] எவ்வளவு ஆத்திரம் [illegible] இருசாரரும் இருக்கும். [illegible] அந்த [illegible] எண்ணத்தில் [illegible] என்று [illegible] சரியல்ல என்று அந்த [illegible] அப்படிப்பட்டவர்களுக்கு [illegible] இந்த அரசு [illegible] என்று [illegible]

கூறினார்கள். நான் ஒன்றை பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டில் அமைதி காப்பது என்பது வெறும் சட்டத்தினால் மட்டும் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல என்று பன்முறை சொல்லியிருக்கிறேன். அதை பலரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேப்போல ஒரு சாரருக்குத் தண்டனை வாங்கிக்கொடுத்து சிறைக்கு அனுப்புவதினால் மட்டுமே எந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது என்று கருத முடியாது.

எனக்குக் கிடைத்த ஒரு செய்தியை நான் இங்கே கூறியாக வேண்டும். மாண்புமிகு உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். ஒருவரைப் பற்றி வந்த செய்தி. ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற நிலைமையிலே வழக்கு மன்றத்திலே, ஒருவரைக் கொலை செய்தவராக கருதப்பட்டு காவலிலே வைக்கப் பட்டிருந்தார். அதற்குப் பிறகு அவர் வெளியேவந்த பிறகு அவர் கொலை செய்யப் பட்டார் என்று செய்தி வந்திருக்கிறது. நான் பிறகு சட்டமன்றத்தில் அவை வேண்டுமானால் படித்துக் காண்பிக்கிறேன். இப்போது நேரம் இல்லை. அதை விளக்கமாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. அதேபோல எதுவாக இருந்தாலும், வெற்றி தோல்வி என்று பார்ப்பதை விட்டு உள்ளத்தின் ஒற்றுமை, அமைதியான சூழ்நிலையில் அவைகளைத் தீர்ப்பதற்குத்தான் இந்த அரசு விரும்புகிறது என்று சொல்லிக் கொள்ள நான் வெட்கப்படவில்லை.

இங்கே பல நண்பர்கள் அபிப்பிராயங்களை வெளியிடும் போது நீங்கள் துப்பாக்கியை நம்பிக் கொண்டு இருக்காதீர்கள், தடியடி கொடுத்தெல்லாம் எதையும் தடுத்துவிட முடியும் என்று எண்ணி விடாதீர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டபோது, நான் எந்தக் கருத்தை வெளியிட்டேனோ அந்த அடிப்படையில்தான் அவர்களும் தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளார்கள் என்று நம்புகிறேன்.

பேச்சின் மூலம் விவாதத்தின் மூலம் கருத்துக்களை எடுத்து வைத்து பகிர்ந்துகொள்வதன் மூலமே நல் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டு அதன் வாயிலாக சுமூகமாக உறவு ஏற்பட்டு, சண்டை சச்சரவுகள் தீரும், அது தான் நல்லதொரு முறையாக இருக்கும் என்ற கருத்து அதிலே உள்ளிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த வகையிலே இந்த அரசு கூடுமான வரையில் வழக்கு மன்றத்திற்கு சென்று அவர்கள் மீது வழக்குகள் போட்டு அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை என்று பன்முறை சொல்லியிருக்கிறேன். இன்னொரு முறையும் மீண்டும் இன்றையதினம் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இன்றைக்கு ஒரு பிரச்சனையை இங்கே குறிப்பிட்டார்கள். அவர் ஏன் அதைச் சொன்னார் என்று நான் எவ்வளவுதான் சிந்தித்துப் பார்த்தும் கூட பதில் கிடைக்கவில்லை. இருந்தாலும் எனக்கு தெரிந்த அளவில் ஒரு விளக்கம் சொல்ல நான் விரும்புகிறேன்.

க—தொடர்ச்சி.

பக்கங்கள்.

கவன ஈர்ப்புகள்—

- இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டில் நிறுவுதல் 60—62
- குடிநீர் தட்டுப்பாடு, கள்ளக்குறிச்சி 987—988
- சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலையிழப்பு 787—790
- சுற்றுலா வாரியம், ஊழியர்கள், வேலை நீக்கம் 46—60
- தீ விபத்து, தி.நகர், சென்னை 984—986

கனிவளம்—

- கருப்புக் கற்கள், ஏற்றுமதி 771—775

காடுகள்—

- மேய்ச்சல் கட்டணம் 781—785

கிட்டப்பா, திரு. என.—

- இராசராச சோழன், சிலை, தஞ்சை 523—528
- உள்ளாட்சி மருந்தகங்கள், மருந்துச் செலவு 22—24
- கரும்பு விலை 975
- கல்லூரிகள், ராக்கிங் 759—760
- சலவைத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் 8—11
- சவரத் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் 11—12
- சிறு தொழில்கள், மாயூரம் 514
- துணை நீதிமன்றம், திருவள்ளூரில் ஏற்படுத்தல் 522
- புயல் பாதுகாப்புக் கூடங்கள், அமைத்தல் 780—781
- பெரியார் நூற்றாண்டு விழா, செலவிடப்பட்ட தொகை 520

கிருஷ்ணசாமி திரு. கே. ஏ.—

- கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1979 780

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

கிருஷ்ணன் திரு. ரா.—

- வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
  - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
  - வீட்டு வசதி
  - பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 546.

குடிநீர்—

- கள்ளக்குறிச்சி, தட்டுப்பாடு (க.ஈ.) 987—988
- திருவில்லிபுத்தூர் 959—960

குருசாமி திரு. ப.—

- வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
  - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
  - வீட்டு வசதி
  - பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 576—577

குழந்தைவேலு திரு. ப.—

- நீரார் சுரங்கப் பாதை வேலை, வெடி விபத்து (ஒ.நீ.) 983—984

குழுக்கள்—

- அவை, தேர்தல் (தீ) 541
- உரிமை, திரு. துரை முருகன் மீது, அறிக்கை அளித்தல் 989
- உரிமை, தேர்தல் (தீ) 541
- பொதுக் கணக்கு, தேர்தல் (தீ) 540
- பொது நிறுவனங்கள், தேர்தல் (தீ) 540
- மதிப்பீடு, தேர்தல் (தீ) 540

கூட்டுறவு—

- இராமக் கூட்டுறவு நாணய சங்கம், பாரணம் 751
- சர்க்கரை ஆலைகள், தணிக்கை 775—778

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

சதாசிவம் திரு. செ.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1979—80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நுகர்பொருள் வழங்கல் 793,
மீனளம். 859—865

சந்திரன் திரு. ப.—

அரிசனங்கள், அரியப்பாடி, வீட்டு மனைகள். 972—979

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 257,
258—259

காவல்துறை, தீயணைப்புப் பணிகள். 377—381

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 1050—1052

சந்திரன் ஜெயபால் திரு. இரா. சு.—

தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.) 984

சமரசம் டாக்டர் கே.—

"சூரியகாந்தி" எண்ணெய் ஆலை, போச்சம்பள்ளி. 18—21

சமூக நலம்—

நீச்சல் வீரர்கள், மதுரை, பாராட்டு. 518—519

லாரி டிரைவர்கள், க்ளீனர்கள், ஈட்டுத்தொகை 12—14

சரணாலயம்—

வனவிலங்குகள், பழனி, கோடைக்கானல் பகுதியில் ஏற்படுத்தல். 966—969

சவுந்தரராஜன் திரு. செ. வீ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 157,
158—164

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 331

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொது சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச்செலவு. 546

நுகர்பொருள் வழங்கல், மீனளம். 794—801

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சாலைகள்—

கன்னியாகுமரி—திருச்செந்தூர் கடற்கரைச் சாலை, விரிவு படுத்தல். 14—15

சிகாமணி, திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல்துறை, தீயணைப்புப் பணிகள். 374—377

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 108—109

சிமெண்ட்—

தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலையிழப்பு. (க.ஈ.) 787—790

சிலைகள்—

இராசராச சோழன், தஞ்சை கோயிலுக்குள் வைத்தல். 523—526

சிவசாமி, திரு. செ.—

ஊழியர்கள், சுற்றுலா வாரியம், வேலை நீக்கம், (க.ஈ.). 46

கரும்பு, விலை. 976

தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.). 984

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல், (ஒ.தீ.). 39

நிலங்கள், ஆர். எஸ். மங்களம் ஒன்றியம், விளை நிலங்களாக மாற்றுதல். 1—2

புயலினால் ஏற்பட்ட பாதிப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 25—28

மருத்துவமனை, கட்டிடம் இளையாங்குடி. 516—517

ச—தொடர்ச்சி.

திரு. செ. சிவசாமி—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 158

காவல்துறை, தியணைப்புப் பணிகள். 284, 285

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 545, 546

சிறைச்சாலைகள்—

கிளை, நிர்வாகம். 954—956

சின்னராசு, திரு. க. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துச் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 113—115

சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துச் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 111—118

சுந்தரராஜ், திரு. நா.—

துப்பாக்கி சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.). 3[illegible]

பாப்பாயி மருத்துவ மனை, திருமயம், எக்ஸ்ரே கருவி அமைத்தல். [illegible]

ச—தொடர்ச்சி.

சுந்தரராஜ் திரு. நா.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல் துறை, தியணைப்புப் பணிகள். 363—374

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 992—1007

சுப்பிரமணியம் திரு. கே. ஜே.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல் துறை, தியணைப்புப் பணிகள். 292—293

சுப்பிரமணியன், திரு. ஓ.—

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.). 39

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல் துறை, தியணைப்புப் பணிகள். 409—413

சுப்பிரமணியன், திரு. சின்ன சேலம் மா.—

குடிநீர் தட்டுப்பாடு, கள்ளக்குறிச்சி, (க.ஈ.). 987

தீ விபத்து, தி. நகர், சென்னை, (க.ஈ.). 884, 885—886

தொல் பொருள் ஆய்வு, பல்லாவர்மேடு. 498

சுப்பிரமணியன், திரு. டி.—

கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கம், பாணம். 751

சுவாமிதாஸ், திரு. அ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல்துறை, தியணைப்புப் பணிகள். 284, 285, 323—338

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 543, 545, 546

சுற்றுலா—

தங்கும் விடுதிகள், மருதமலையில் கட்டுதல். 953—954

மங்கம்மாள் சத்திரம், மதுரை, நிர்வாகம். 7

ச—தொடர்ச்சி.

செங்கோட்டையன், திரு. கு. அ.—

சக்தி சர்க்கரை ஆலை, கரும்பு எடுத்தல். 950—953

செல்வராஜ், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடி-நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 551—556

செல்வராஜ், திரு. மு.—

மருத்துவமனை, விருத்தாசலம், விரிவுபடுத்தல். 962—963

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 790, 791

சௌந்திரராசன், திரு. கே.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், சாலைகளும் பாலங்களும், சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 74—79

ஞ

ஞானசிகாமணி, திரு. தே.—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், குறைந்தபட்சக் கூலி. 505—506

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

நுகர்பொருள் வழங்கல், மீனளம். 818—825

த.

தலைவர்—

அறிவிப்புகள்—

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் 541—542

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்.—

உரிமைப் பிரச்சினைகள்—

உணவுத் துறை அமைச்சர் மீது :

1979 மார்ச் 26 ஆம் நாளன்று உணவுத் துறை அமைச்சர் மீது பேரவையில் எழுப்பப் பெற்ற ஓர் உரிமைப் பிரச்சினை மீது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார். "உறுப்பினர் கொடுத்த அறிவிப்பிலும், பேரவையில் அவர் அளித்த விளக்கத்திலும், எந்தெந்த விதத்தில் அமைச்சர் தவறான தகவலைக் கொடுத்தார் என்பதைப்பற்றி விளக்கமான கருத்து எதுவும் கூறவில்லை. மாறாக நுகர்பொருள் வாணிபக் கழகம் நட்டத்தில் இயங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்தை எடுத்துக் கொண்டு அந்த நட்டம் எதனால் ஏற்பட்டது என்பதை விளக்க முற்பட்டார். இது இப் பிரச்சினைக்குத் தேவை இல்லாதது. அமைச்சர் கொடுத்த தகவல் சரியா, தவறா ? தவறு என்றால் எப்படித் தவறு என்பதைத்தான் விளக்க வேண்டும்.

எனவே இப்பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் எழவில்லை." 539

திரு. நெடுஞ்செழியன் 'மன்றம்' இதழில் எழுதியுள்ள கட்டுரை குறித்து :

சிம்கோ மீட்டர் சம்பந்தமாக பேரவையில் நடந்த நிகழ்ச்சியைத் திரித்து திரு. நெடுஞ்செழியன் 'மன்றம்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை குறித்து மன்றம் பத்திரிகை மீதும், திரு. நெடுஞ்செழியன் மீதும் ஓர் உறுப்பினர் 1979, ஏப்ரல் 9 ஆம் தேதி உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

" எழுப்பப்பட்ட பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால் அதன் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்ட பிறகு நான் எனது தீர்ப்பைக் கூறுகிறேன் " எனத் தலைவர் குறிப்புரைத்தார். 531

* ' துக்ளக் ' பத்திரிகை மீது

தலைவருடைய தீர்ப்பைக் களங்கப்படுத்துகிற வகையிலும் குறிப்பாக தம்மையே களங்கப்படுத்துகிற வகையிலும் 15—4—1979 துக்ளக் பத்திரிகையில் எழுதப்பெற்றுள்ளது அவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் 1979 ஏப்ரல் 21 ஆம் நாள் துக்ளக் பத்திரிகையின் மீது ஓர் உரிமைப் பிரச்சினையை பேரவையில் எழுப்பினார்.

" உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை பத்திரிகை மீது உள்ளதால், அப்பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டு, அவர் விளக்கம் பெற்று, பின் என் தீர்ப்பை அளிக்கிறேன் " எனத் தலைவர் குறிப்புரைத்தார். 980—982

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது :

1979 மார்ச் 26 ஆம் நாளன்று பேரவையில் எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

" இப்பிரச்சினை குறித்து உறுப்பினர் அளித்த விளக்கத்தையும், அமைச்சர் அளித்த விடையையும் விளக்கத்தையும் நன்கு கவனித்தேன். அமைச்சர் அவர்கள் முதலிலிருந்தே சில

* 27—4—1979 தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் அதனால் நிர்வாகத்தினர் தம் சம்மதத்தைத் திரும்பப் பெற்றனர் என்றும் கூறியிருக்கிறார். எனவே தொழிலாளர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்றோ அல்லது தொழிலாளர்களைப் பற்றி எந்தவிதமான தவறான கருத்தையும் தெரிவித்தார் என்று கூறுவதற்கோ எந்தவிதமான ஆதாரமும் காட்டப்படவில்லை.

எனவே இப் பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் எழவில்லை " எனத் தீர்ப்பளித்தார். 538—539

1979 ஏப்ரல் 20 ஆம் நாளன்று பேரவையில் எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

" ஒரு உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு ஏற்பத்தான் அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் கூறுகிறார். அந்தத் தீர்ப்பு இந்தத் தொழிற்சாலையிலுள்ள நிலைக்குப் பொருந்தாது என்று உறுப்பினர் கூறுகிறார். இது அவரவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாக இருக்கலாம். மேலும் ஒரு சாராரின் சட்ட உரிமைகள் பாதிக்கப்படுகிறது என்று யாரேனும் கருதுவார்களேயானால் அச் சாராருக்கு நமது அரசியலமைப்புச் சட்டத்தில் அவர்களது அடிப்படை உரிமைகளைக் காத்துக் கொள்ள நீதிமன்றங்களை அணுகுவதற்கு இடமிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் இந்த அவையின் மூலமாகத் தீர்வு காண இயலாது.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

மேலும் இதுபோன்ற கருத்து வேறுபாடு எழக்கூடிய பொருள்பற்றி உரிமை மீறல் பிரச்சினை என்று எடுத்துக் கொள்ளவோ மானால், உரிமைப் பிரச்சினையின் முக்கியத்துவம் குறைந்து விடும். எனவே, இதைக் கருத்தில்கொண்டு மிக முக்கியமான பிரச்சினைகளையே உரிமை மீறல் பிரச்சினைகளாகக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையில் எந்த விதமான அவை உரிமைப் பிரச்சினையும் எழவில்லை என்பது என் முடிவு ". 786

'மக்கள் செய்தி', 'மாலை முரசு' நாளேடுகள் மீது :

பேரவையின் நடவடிக்கைகளைத் தவறாகவும் களங்கம் கற்பிக்கும் வகையிலும் வெளியிட்டிருப்பது குறித்து மேற்படி பத்திரிகைகள் மீது 1979 ஏப்ரல் 9 ஆம் நாள் ஒரு உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பெற்றது.

" எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை பத்திரிகைகள் மீது இருப்பதால் அந்தப் பத்திரிகை ஆசிரியர்களிடமிருந்து விளக்கம் பெற்ற பிறகு தீர்ப்பளிக்கிறேன் " எனத் தலைவர் குறிப்புரைத்தார். 537—538

* மின்சாரத் துறை அமைச்சர் மீது :

1979 மார்ச் 31 ஆம் நாளன்று பேரவையில் எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

" 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாளன்று அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விளக்கம் அளிக்கையில், 1979

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் நாள் அன்று இருந்த நிலவரத்தைப்பற்றிய தகவல் அவைக்கு அளிக்கப்பட்டது என்று கூறியுள்ளார். உறுப்பினர் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாளன்று சிலர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனவே, 17-ஆம் தேதி அவைக்குக் கொடுக்கப்பட்ட தகவல் 10-ஆம் தேதி இருந்த நிலையைப் பற்றியதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த அறிவிப்புக் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை " எனத் தீர்ப்பளிக்கிறேன்.

மேலும் " பேரவையில் " தகவல் கொடுக்கப்படுகிறபோது அது எந்தத் தேதி வரையிலான நிலை என்பதை அரசு விளக்குவது நல்லது " என குறிப்புரைத்தார். 787

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

" கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வால் பாறை மலையில் நடைபெற்று வருகிற நீரார் சுரங்கப் பாதை வேலையில் 18—4—1979 ஆம் தேதி பெரும் வெடி விபத்து ஏற்பட்டு இரண்டு தொழிலாளிகள் இறந்தும், சுமார் 25 தொழிலாளர்கள் கடுமையான காயங்கள்பட்டும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ".

வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. 982—984

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி.
ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

"முகவை மாவட்டம், வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்களில் துப்பாக்கிச்சூட்டை நடத்திய பிறகு இன்னும் அங்கு போலீஸ் முகாமிட்டிருப்பதைப் பற்றியும், அந்தக் கிராமங்களின் வழியாகப் போய்க் கொண்டிருந்த பஸ்களை நிறுத்திவிட்டது பற்றியும் ஏற்பட்டிருக்கிற பதட்டநிலை குறித்து".

நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 39—46

ஒழுங்குமுறை—

வினா நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல் கூடாது. 28

கவன ஈர்ப்புகள்—

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் விளக்கம் பெற கேள்வி கேட்கலாம், திரும்பவும் விரிவாகப் பேசுதல் கூடாது. 56

குறுக்கீடு—

ஓர் உறுப்பினர் பேசும்போது அடிக்கடி குறுக்கிடுதல் கூடாது. அவரது பேச்சின் முடிவில் வேண்டுமானால் ஏதாவது விளக்கம் கேட்கலாம். (வ.செ.தி.) 456

நடைமுறைகள்—

விவரம் நீண்டதாகயிருந்தால் அதை அச்சிட்டு அவையில் வைக்கலாம். (து.வி.) 13

நீக்கம்—

தனிப்பட்டவர்களின் பெயர்களைச் சுட்டி பேரவையில் குற்றம் சாட்டுதல் கூடாது. (அவ்வாறு குறிப்பிடப் பெற்ற பெயர்கள் நீக்கப் பெற்றன.) (வ.செ.தி.) 205, 255, 280

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.
நீக்கம்—தொடர்ச்சி.

நீக்கப்பெற்ற சில சொற்கள் எந்த விதியின்கீழ் அவ்வாறு நீக்கப்பெற்றன என்பதாக தலைவரிடம் கேட்க முடியாது; எது இருக்கலாம் எது இருக்கக் கூடாது என்பதை முடிவு செய்ய வேண்டியவர் தலைவர்தான் (ஒ.பி.) 813—814

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி எந்தப் பொருளையும் பேரவையில் காட்டிப் பேசுதல் கூடாது. (அவ்வாறு செய்யப்பெற்ற பகுதி நீக்கப்பெற்றது.) 303—304

மூலக் கேள்வியை ஒட்டியதாக கேட்கப்படாத கேள்வி நீக்கப்பெற்றது (வி.வி.) 826

விசாரணையில் உள்ள பொருள் குறித்து குறிப்பிடுதல் கூடாது—அதுபற்றி குறிப்பிட்ட பகுதிகள் நீக்கப் பெற்றன. (வ.செ.தி.) 410, 411, 420, 422

பேசும் முறை—

அதிகாரிகள் குடும்ப விவகாரத்தைப் பேரவையில் குறிப்பிடுவது சரியல்ல. (ஒ.நி.) 44

பேசும்போது சட்டமன்றத்தில் இல்லாத வெளியே இருக்கிறவரைப்பற்றிப் பேரவையில் குறிப்பிடக் கூடாது. வெளியில் உள்ளவர் கூறுவதற்குப் பதில் பேரவையில் அல்லாது வெளியே தரலாம் (உ.பி.) 530, 531

பேரவைத் தலைவர் முடிவு குறித்து கேள்வி கேட்பது சரியானதல்ல. (வி.வி.) 777

மரபு—

பேரவைத் தலைவர் அல்லது பேரவைச் செயலாளர் அனுமதியின்றி எந்த ஏடும் உறுப்பினர்களிடம் வழங்கப் பெறுதல் கூடாது. 297, 320

தலைவர்—தொடர்ச்சி. — பக்கங்கள்

திர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—

ஒரே நேரத்தில் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். (து.வி.)

சுருக்கமாகயிருத்தல் வேண்டும். (து.வி.) — 967

மூலக் கேள்வியை யொட்டியதாக இருத்தல் வேண்டும். (து.வி.) — 34, 504, 973

526, 974

தனசேகரன் திரு. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 1054, 1056

நுகர்பொருள் வழங்கல், மீனளம் — 801—803

தாமரைக்கனி திரு. இரா.—

குடிநீர் திட்டம், திருவில்லிபுத்தூர்

சுடுகாட்டு நிலம், அணைக்கரைப்பட்டி, ஆக்கிரமிப்பு — 959—960

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : — 508—509

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்

திருநாவுக்கரசு, திரு. எஸ்.— — 172—173

உரிமைக்குழு, திரு. துரை முருகன் மீது, அறிக்கை அளித்தல்

திருவேங்கடம், திரு. பெ. சு.— — 989

தீர்த்தேக்கம், மிருகண்டா நதியின் குறுக்கே

தீர்மானங்கள்— — 868

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பார்க்க—தலைவர்.

பக்கங்கள்

குழுக்கள்—

அவைக் குழு, தேர்தல்

உரிமைக் குழு, தேர்தல் — 140

பொது கணக்குக் குழு, தேர்தல்

பொது நிறுவனங்கள் குழு, தேர்தல்

மதிப்பீட்டுக் குழு, தேர்தல்

விதி 22-ஐ தளர்த்தல் — 156

துரை கலியமூர்த்தி திரு.—

மருத்துவ மனைக் கட்டிடம், பாளையங்கோட்டை, சிதம்பரம் வட்டம் — 21—23

துரை கோவிந்தராசன் திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் — 218—221

துரை முத்துசாமி திரு.— — 761

அரிசனங்கள், வீட்டுவசதி — 46

ஊழியர்கள், சுற்றுலா வாரியம், வேலைநீக்கம் (க.ஈ.)

தலைமைச் செவிலியர், கள்ளக்குறிச்சி மருத்துவமனை நியமனம் — 514—516

துப்பாக்கிச் சூடு, வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்கள், பேருந்துகள் ஓடாதிருத்தல் (ஒ.தீ.) — 42

துறைமுகங்கள்— — 33

சிறு துறைமுகம் அமைத்தல், விளாத்திகுளம் தொகுதி

தொல்பொருள்— — 598

பல்லவர் மேடு, ஆய்வு

தொலைக் காட்சி— — 964—966

நிலையம், மதுரையில் அமைத்தல்

ந—தொடர்ச்சி.

தொழில்கள்— பக்கங்கள்

சிறுதொழில்கள்—

மாயூரம் வட்டம், உரிமம் வழங்கல்

தொழிலாளர்கள்— 514

தேயிலைத் தோட்டங்கள், குறைந்தபட்சக் கூலி

தொழிற்சாலைகள்— 505—506

சாயத் தொழிற்சாலை, திருநாகேசுவரத்தில் நிறுவுதல்

தோட்டப் பயிர்கள்— 765

தேயிலை, விலை

505—506

ந

நடராசன் திரு. ஆ.—

தங்கும் விடுதிகள் கட்டுதல், பெருந்தமலை

லாரி டிரைவர்கள், கிளீனர்கள், சட்டுத்தொகை 953—954

நாச்சிமுத்து திரு. க.— 13—14

வரவு-செலவுத் திட்டம், 1979-80 வாக்கெடுப்பு :

நுகர்பொருள் வழங்கல், மீனளம்

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 846—848

சாலைகளும் பாலங்களும் 106—108

சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து

குறித்த மூலதனச் செலவு

நாராயணசாமி திரு. கே.—

இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டில்

நிறுவுதல் (க.ஈ.அ.)

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1979 61—62

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 62

மாநகரச் சிறுவழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடை 63

முறை சட்டக் கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு,

1979.

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நீதி அலுவல்கள்—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் 157—260

சட்ட நிர்வாகம் 288—297

காவல் துறை 297—320,

322—468.

63—156

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதன செலவு 63—156

சாலைகளும் பாலங்களும் 63—136

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துப் 63—156

பணிகள் குறித்த மூலதனச்செலவு

283—297,

நீயணைப்புப் பணிகள் 297—320,

322—468.

990—1060

தொழில்கள் 990—1060

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 543—637

தொழிலாளர் நலமும் தொழிற்சாலைகளும் 791—808,

நுகர்பொருள் வழங்கல் 818—889

பொதுச்சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த 543—637

மூலதனச் செலவு 791—808,

818—889.

மீனளம்

63—156

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 543—637

வீட்டு வசதி

நிலங்கள்— 778—780

அரசு, கட்டூர், ஆக்கிரமிப்பு

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நீக்கங்கள்—

51, 58, 59, 175, 208, 217, 243, 255, 303, 304, 305, 349, 350, 356, 357, 358, 359, 410, 411, 420, 421, 422, 526, 759, 801, 808, 809, 816, 817, 1057

நீதிமன்றங்கள்—

அச்சிடப்பெற்ற சோதிசரி நோட்டுகள் — 35—36

இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டிற்கு நிறுவுதல் (க. ஈ.) — [illegible]—62

எஸ். டி. எம். கோர்ட், கடலூர் — 33—35

துணை, திருவள்ளூரில் ஏற்படுத்தல் — 522

முன்சீப் கோர்ட், ஆத்தூரில் நிறுவுதல் — 752—753

வேலூர், மாற்றுதல் — 956—957

நீர்ப்பாசனம்—

அணைகள்—

புல்லூர் அணைத் திட்டம் — 17

மிருண்டா நதியின் குறுக்கே அமைத்தல் — 50[illegible]

அய்யன் குளம், ஆயக்குடி, மராமத்துப் பணிகள் — 7

நூற்றாண்டு விழா—

பெரியார்—

கைதிகள் விடுதலை — 523

செலவிடப்பட்ட தொகை — 52

ப.

பண்ணை சேதுராம் திரு. கே.—

இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டில் நிறுவுதல் (க.ஈ.)

பெரியார் நூற்றாண்டு விழா, கைதிகள் விடுதலை

பக்கங்கள்

பண்ணை சேதுராம் திரு. கே.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

நுகர்பொருள் வழங்கல் — 826—832

மீனளம்

பத்திரப்பதிவு— — 519—520

கட்டணம்

பழனிமுத்து திரு. சி.— — 771—775

கரும்புக் கற்கள், ஏற்றுமதி — 752—753

முன்சீப் கோர்ட், ஆத்தூரில் நிறுவுதல்

பழனியப்பன் திரு. அ. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

காவல் துறை — 285

தீயணைப்புப் பணிகள்

பழனிவேல் திரு. என்.— — 770

அய்யன்குளம், ஆயக்குடி, மராமத்துப் பணிகள் — 761

அரிசனங்கள், வீட்டு வசதி — 522—523

பெரியார் நூற்றாண்டு விழா, கைதிகள் விடுதலை — 23—26

பெரியார் நூற்றாண்டு விழா, செலவிடப்பட்ட தொகை

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

தொழில்கள் — 9[illegible]—991

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

வனவிலங்குகள் சரணாலயம், பழனி-கொடைக்கானல் பகுதியில் ஏற்படுத்தல். — 9[illegible]—9[illegible]

பள்ளிகளும், கல்லூரிகளும்— — 969—970

அரசுப் பள்ளிகள், தஞ்சை மாவட்டம், மேல்நிலை வகுப்புகள் — 759—760

கல்லூரிகள், ராகிங் — 498—502

தனியார் கல்வி நிறுவனங்கள், நன்கொடை வசூல் — 970—971

தனியார் மேல்நிலைப் பள்ளிகள், மானியம்

தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல், வணிகவியல் பட்டப் படிப்பிற்கு — 765—768

பாண்டியன் திரு. பி. எச்.—

இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு, தமிழ் நாட்டில் நிறுவுதல் (க.ஈ.) 60—62

பாலகிருஷ்ணன் திரு. சோ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 1052—1054

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் 543

வீட்டு வசதி 544

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 547—551

பாலாஜி திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 190—192

பழனிச்சாமி திரு. அ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 1056—1057

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

வீட்டு வசதி

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 591—593

புருஷோத்தமன் திரு. அ.—

தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.) 984

புஷ்பராஜு திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

ப—தொடர்ச்சி.

புஷ்பராஜு திரு. த.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம் 1979-80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

பெரியசாமி திரு. மொ.—

அரிசனங்கள், வீட்டுவசதி 761—765

அருணா சர்க்கரை ஆலை, பெண்ணாடம், கட்டாயச் சேமிப்பு 949—950

பெருமாள் திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்

சாலைகளும், பாலங்களும்

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு 109—111

பெருமாள் திரு. ரா. கு.—

ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு எடுக்கப்பட்டவர்கள். 969

சிறு துறைமுகம், விளாத்திகுளம் தொகுதி 33

பொன்னுரங்கம் திரு. ப.—

குடியிருப்புகள் (புதியவை), ராயபுரம் 961

பொன்னையன் திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 72,

சாலைகளும், பாலங்களும் 79—86,

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து 87, 89,

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 115—154

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

பக்கங்கள்.

ம—தொடர்ச்சி.

முசிறிப்புத்தன், திரு. பி.—
தீ விபத்து, தி. நகர், சென்னை (க.ஈ.அ.) 984
முருகேசன் திரு. கூ. ச.—
சிமெண்ட் தட்டுப்பாடு, கட்டடத் தொழிலாளர்கள் வேலை யிழப்பு (க. ஈ.) 787

ய.

யூசுப் திரு. யா. சை. மு.—
கன்னியாகுமரி-திருச்செந்தூர் கடற்கரைச் சாலை, விரிவு படுத்தல் 14—15
கிளைச் சிறைச்சாலைகள், நிர்வாகம் 954—956

ர.

ரகோத்தமன், திரு. கோ.—
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்
சாலைகளும் பாலங்களும்
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து
சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பற் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
104—106
ரமணி திரு. கு.—
எல். டி. எம். கோர்ட், கடலூர்
தனியார் கல்வி நிறுவனங்கள், கோவை மாவட்டம், நன்கொடை வசூல் 33—35
நீக்கப்பெற்ற சில சொற்கள் குறித்து (ஒ.பி.) 498—502
நீரார் சுரங்கப் பாதை வேலை, வெடி விபத்து (ஒ.தீ.) 64, 65
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு : 982
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி

பக்கங்கள்.

ர—தொடர்ச்சி.

ரமணி, திரு. கு.—தொடர்ச்சி.
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 548
556—575
ராமநாதன் திரு. சி.—
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
நுகர்பொருள் வழங்கல்
மீன்வளம் 865—867
ராமலிங்கம், திரு. எ.—
அரிசனங்களுக்கு வீடுகள், வடதலைக்குளம் 506—508

ல.

லட்சுமிநாராயணன், திரு. என்.—
காடுகள், மேய்ச்சல் கட்டணம் 781—785
தொலைக்காட்சி நிலையம், மதுரையில் அமைத்தல் 964—966
மங்கம்மாள் சத்திரம், மதுரை, நிர்வாகம் 7
லத்தீப், திரு. எம். எ.—
வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் 193—204, 208, 257
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 347—361

வ.

வாசன் திரு. சீ. மு.—
அச்சிடப்பெற்ற பிராமிசரி நோட்டுகள் 35—36
விடுதிகள்—
அரசினர் கல்லூரி மாணவர், அரியலூர் 971—972

(ஊ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. .. 157—260

திரு. ரெ. வி. சவுந்திரராஜன். 158—164

திரு. ர. ஜெபமணி. 164—172

திரு. இரா. தாமரைக்கனி. 172—178

திரு. எம். அண்ணாமலை. 178—185

திரு. ரா. மார்க்கபந்து. 185—190

திரு. க. பாலாஜி. 190—193

திரு. எம். ஏ. லத்தீப். 193—204

திரு. பொ. உத்திராபதி. 204—208

திரு. இரா. அமிர்தராஜ். 208—211

திரு. சேலம் மு. ஆறுமுகம். 211—216

திரு. கா. வே, கந்தசாமி. 216—218

திரு. துரை கோவிந்தராசன். 218—221

திரு. கே. கந்தசாமி. 221—227

திரு. ஏ. ஆர். மாரிமுத்து. 227—231

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். 157, 158, 232—260

7. அறிக்கை அளித்தல்—

அரசு பதிவுபெறு அலுவலர்களின் சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவது குறித்து 86

8. அரசினர் தீர்மானம்—

விதி 22-ஐத் தளர்த்தல் 156

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 260—262

9. திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) : தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராம தானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) : அரிசன நலம், எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது), வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) : கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்): மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) : கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்,

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1. திரு. எம். வின்சென்ட் : நிதிஅமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆறூர் ஜெகதீசன் : கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிறி புத்தன் : வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஜசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு : சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி : கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு : போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவை செயலர்.

8. திரு. இரா. அருணாசலம் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru PRABHUDAS PATWARI.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)— Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition Prevention of Corruption, Large Scale Industries, Mines, and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)— Finance, Planning, Legislature, and Public Works (Buildings).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)— Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)— Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)— Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)— Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural Indebtedness, Bhoodan and Gramdan.

11. HON. THIRU S. RAGAVANANDAM (*Minister for Labour*)— Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, and Accommodation Control.

12. HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)— Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. HON. THIRU V. PONNAIYAN (*Minister for Transport*)— Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)— Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)— Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. HON. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)— Health.

17. HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians— Overseas, Refugees and Evacuees, Correctional Administration.

18. HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)— Handlooms, Khadi, Textiles and Yarn.

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finanee

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி. எல்.

* மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி.
2. திரு. பி. எச். பாண்டியன்.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 12—2—1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட)

	தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.).
2	அப்துல் ரசாக், திரு. கே.எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5	அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி.
6	அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
7	அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ. வ.).
8	அர்ச்சுனன், திரு. வீ. ..	ஆரணி.
9	அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ.வ.).
10	அரங்கநாதன், திரு. அ. க.	வேலூர்.
11	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி, சென்னை.
12	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர் (மேற்கு).
13	அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	நாமக்கல் (செ.வ.).
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம், சென்னை.
16	அன்பழகன், திரு. தி. ..	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்.
18	ஆதிசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. இல. ..	திருநாவலூர்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23	ஆறுமுகம், திரு. சேலம் மு. ..	சேலம்-2.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராசரத்தினம், திரு. து.	பூந்தமல்லி.
26	இராதா, திரு. எஸ். ஆர்.	கும்பகோணம்.
27	இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஒசூர்.

	தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
28	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்).	அருப்புக்கோட்டை.
29	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32	இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33	இராமசாமி, திரு. எஸ். ஜே.	சோளிங்கர்.
34	இராமசாமி, திரு. கே. என். கே.	கோபிசெட்டிபாளையம்.
35	இராமசாமி, திரு. கொ. ..	சிவகாசி.
36	இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்.
37	இராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோவில்.
38	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்.
39	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41	இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
42	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43	உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44	உச்சி, திரு. கே.	கூடலூர்.
45	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46	உமாநாத், திரு. ரா. ..	நாகப்பட்டினம்.
47	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48	எட்மண்ட், மாண்புமிகு, திரு, க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49	எத்திராஜ், திரு. கி. ..	அச்சரப்பாக்கம் (செ.வ)
50	ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பட்டு.

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1)	தொகுதி. (2)
51 ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52 கண்ணன், திரு. ம. ..	கண்டமங்கலம் (செ.வ.)
53 கணேசன், திரு. இ.	எடப்பாடி.
54 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.
55 கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56 கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57 கபாலி, திரு. டி. கே.	மயிலாப்பூர், சென்னை.
58 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை
59 கருணாநிதி, திரு. மு. ..	அண்ணா நகர், சென்னை.
60 கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர், (செ.வ.)
61 கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62 கருப்பசாமி பாண்டியன் திரு. வீ.	ஆலங்குளம்.
63 கலியமூர்த்தி, திரு. துரை. ..	சிதம்பரம்.
64 காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்).	திருப்பரங்குன்றம்.
66 காளியப்பன், திரு. இரா. ..	ஏற்காடு (ஆ.வா.)
67 காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68 கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69 கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	பல்லடம்.
70 கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
72 கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74 கிருஷ்ணன், திரு. ரா. ..	வாசுதேவநல்லூர் (செ.வ.).
75 குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ.வ.)
77 குழந்தைவேலு, மாண்புமிகு, ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1)	தொகுதி. (2)
78 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80 கோவிந்தராசன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், புலவர், கா.	செய்யாறு.
82 கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.
83 சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.
84 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85 சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86 சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87 சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89 சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90 சந்திரன், திரு. ப.	பெரணமல்லூர்.
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராயநகர், சென்னை.
92 சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டினம்.
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி. பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபநாசம்.
95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம் விளக்கு, சென்னை.
96 சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ.வ.).
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம், (ஆ.வா.)
102 சின்னசாமி, திரு. வி. கோ.	பவானிசாகர்.
103 சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104 சின்னராசு, திரு. க. இரா.	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. ..	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி.	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
114	சுப்பிரமணியம், பாக்கூர் திரு. சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஒ. ..	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா.	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.).
118	சுப்ரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார்கோவில், (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான், (செ.வ.)
126	செல்வரா்சன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி. ..	சமயநல்லூர். (செ. வ)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர், (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஒ. ப.	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்).	ஸ்ரீரங்கம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர. சு. ..	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. போ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.).
140	தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141	தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.).
142	தனுஷ்கோடி, திரு. கோ.	ராஜபாளையம் (செ. வ.).
143	தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144	திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்).	அறந்தாங்கி.
145	திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146	துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா).	திருவோணம்.
147	துரைசாமி, திரு. ப. ..	ராசிபுரம்.
148	துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149	துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150	துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ. வ.).
151	துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ. வ.).
152	தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153	நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154	நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155	நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156	நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157	நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158	நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159	பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
160	பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161	பரமசிவம், திரு. மொ.	வானூர் (செ. வ.).
162	பரமசிவன், திரு. ஏ. எம்.	மேலூர்.
163	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164	பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166	பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167	பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.)
168	பாண்டியன், திரு. பி. எச்.	சேரன்மாதேவி.
169	பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்.
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சீபுரம்.
173	பானுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174	புருஷோத்தமன், திரு. து.	சைதாப்பேட்டை-1, சென்னை.
175	புஷ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி.பி.எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ.வ.).
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ.வ.).
180	பெருமாள் திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப.	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்).	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ. வ.).
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ. வ.).
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிறி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா.	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே.	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இராக..	கும்மிடிப்பூண்டி.
202	முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்).	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையாதேவர், திரு. பி.கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு.	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம், சென்னை.
207	ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ.	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி.	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார் கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல். (செ.வ.).
216	ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம், (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப். திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.

தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
219	வடிவேல். திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன். திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன். திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்).	நாகர்கோவில்.
224	விஜயராகவன். திரு. பொ.	கிள்ளியூர்.
225	வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226	வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	ஆத்தூர்.
227	வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
228	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229	வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
230	ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	செங்கல்பட்டு.
231	ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232	ஜெபமணி, திரு. ர.. ..	சாத்தான்குளம்.
233	ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234	ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	காட்பாடி.
235	ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2. திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3. திரு. ஆர். எம். வீரப்பன்.
4. திரு. கே. நாராயணசாமி.
5. திரு. எஸ். இராகவானந்தம்.
6. திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர்—
திரு. வீ. பி. இராமன்.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 ஏப்ரல் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆர். எஸ். மங்களம் ஒன்றியப் பகுதியில் பாதிக்கப்பட்ட நிலங்கள்.

*குறுகிய கால வினா எண் 46— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம், ஆர். எஸ். மங்களம் யூனியனில் கடல் கொந்தளிப்பால் உவர் நிலமாக ஏற்பட்ட 1,116·28 ஏக்கர் நஞ்சை நிலங்களை மீண்டும் விளை நிலமாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தமிழக அரசும், வெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு வந்திருந்த இந்திய அரசுக் குழுவும் ஆய்வு செய்ததில், இப்பகுதி நிலங்கள் ஏற்கனவே வளமிழந்த நிலங்கள் என்றும் பொதுவாக ஏக்கருக்கு ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை மதிப்புள்ளதென்றும், எனவே மிகவும் நுட்பமான சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வது அவ்வளவாகப் பயனளிப்பதாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இப்பகுதி மக்கள் மேற்சொன்ன திட்டப் பணிக்காகும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் வகையில்லாதவர்கள், எனவே இப்பகுதி உழவர்கள் தமது வழக்கமான முறைகளை மேற்கொள்வதே நல்லதொரு வழியாகும் எனக் கருதப்படுகிறது. இதன்படி இப்பகுதிகளில் கிடைக்கும் கண்மாய் வண்டல்களை நிலத்திலிடலாம். மேலும் மழைத் தண்ணீரை நிறுத்தி வைத்து குறைந்த செலவில் உப்பினை வடிகட்டி விடலாம். இவ்வழியே சிறந்ததாகும்.

[1979 ஏப்ரல் 17

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய காலத்திலே அந்த உவர் நிலத்திற்கு எந்த உதவியும் கிடையாது என்பதைக் குறிப்பாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், அதே நேரத்திலே அந்த நிலங்களுக்குப் போடக்கூடிய தீர்வையையாவது தள்ளிக் கொடுக்க முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்டால் தகுந்த பதிலைச் சொல்வார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கொஞ்சநஞ்சமல்ல, 1,116 ஏக்கர். அந்த விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்வார்களா என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு பரிசீலிக்கும்.

பச்சைத் தேயிலையின் விலை.

*குறுகிய கால வினா எண் 47—

திரு. கே. உச்சி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிலைப் பாதிக்கும் அளவிற்கு, பச்சைத் தேயிலையின் விலை குறைந்து, விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் தேயிலைமீது கிலோவுக்கு ரூ. 5 மத்திய அரசு வரி விதித்ததால், பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கும் பச்சைத் தேயிலைக்கும் விலை குறைந்தது.

(ஆ) மத்திய அரசு ஏற்றுமதி வரியை தற்போது நீக்கியுள்ளதால் நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான சிறு தோட்டங்களை வைத்திருக்கக்கூடிய தேயிலைத் தோட்ட முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் அந்தத் தேயிலையைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இல்லை. பெரிய தோட்டங்கள் இருக்கக்கூடிய இடங்களில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

1979 ஏப்ரல் 17]

அத்தொழிற்சாலை முதலாளிகள் இந்தச் சிறு தோட்ட முதலாளிகளிடம் குறைந்த விலைக்கு தேயிலை வாங்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதை நிவர்த்தி செய்ய எடுக்கக் கூடிய நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ½ ஏக்கரிலே இருந்து 20 ஏக்கர் வரை வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் எல்லாம் கூட்டுறவு முறையிலே ஒன்று சேர்ந்து 11 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நீலகிரி மாவட்டத்திலே நடத்தி வருகிறார்கள். கிட்டத்தட்ட 6,000 பேர்கள் இதிலே பயனடைந்து வருகிறார்கள். அதற்கு மேலும் சிறு தோட்ட விவசாயிகள் இருப்பார்களானால், அவர்களும் கூட்டுறவு முறையில் வந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். தனியார் என்ன விலை கொடுத்து வாங்குகிறார்கள், கூட்டுறவில் என்ன விலை கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிந்தால், அவர்களை அந்த முயற்சியில் கொண்டு வருவார்கள் என்று கருதுகிறேன். எனவே, கூட்டுறவுத் துறையில் சரியான பாதுகாப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இப்போது நீலகிரி மாவட்டத்திலே உள்ள தேயிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அதனுடைய விலையை முன்பு எந்த அளவுக்குத் தந்து வந்தார்கள், இப்பொழுது எந்த விலை தரப்பட்டு வருகிறது என்ற விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மத்திய அரசு வரி விதிப்பதற்கு முன்பு, 1976–77 ஆம் ஆண்டு வரை கூட தேயிலை ஒரு கிலோவிற்கு ரூ. 4·50 பைசா வரை கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வரி விதிப்பின் காரணமாக, நம் தேயிலை உள் சந்தையிலே விலை குறைந்து வருகிறது. அது மட்டுமல்ல, வெளிநாட்டிலே ஏற்றுமதி விலையிலே கூட பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுது, ரூ. 1·75 வரை கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்கள், அமைச்சரவர்கள் குறிப்பிட்டது போல், சிறு தேயிலை உற்பத்தியாளர்கள், நூற்றுக்கணக்கான குடும்பங்கள், நீலகிரி மலையிலேயிருந்து அவர்கள் உற்பத்தி செய்த அந்த பச்சை இலையை, 'பாட்டில் லீஃப் ஃபாக்டரிஸ்' என்று சொல்லக்கூடிய, தோட்டம் சொந்தம் இல்லாமல், இலையை வாங்கியே பாக்டரியை நடத்தி வருபவர்களிடம் அந்த இலையை அவர்கள் விற்கிறார்கள். ஆகவே, மார்கட்டிலே ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்விலேயிருந்து இந்தச் சின்ன தேயிலை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க நமது அரசு விசேஷமான நடவடிக்கைகள் எடுக்க, விலைகள் கீழே போகிற

காலத்தில், அரசே வாங்கி அந்தக் கூட்டுறவு ஃபாக்டரிகளுக்கு சப்ளை செய்ய ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை என்பது சிறு விவசாயிகளால் நடத்தப்படுகிற தொழிற்சாலை. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ½ ஏக்கர் முதல் 20 ஏக்கர் வரை வைத்து இருக்கும் விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து அந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை அவர்கள் நடத்துகிறார்கள். அந்த வகையில் 11 தொழிற்சாலைகள் அங்கே இருக்கின்றன. அதில் இல்லாதவர்கள் கூட்டுறவுக்கு வர வேண்டும். அதற்கு நீங்கள் முயற்சி செய்தால் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்படும். புதிதாக இப்போது நீலகிரி மாவட்டத்தில் 5,000 ஏக்கரில் இந்த மாதிரி கூட்டுறவுக் உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முன் வரவேண்டும். அரசு அவர்களுக்கு நிச்சயம் பாதுகாப்பு அளிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்போது தேயிலை உற்பத்தி செய்யும் சிறிய விவசாயிகளுக்கு இந்த விலை கிடைப்பது இல்லை. அது கூட்டுறவு முறையில் இருக்கும் அந்தப் பாக்டரியில் அவர்கள் தேயிலையை வாங்கினால் போதும். பெரிய லிப்டன், ப்ருக்பாண்ட் போன்ற கம்பெனிகளிடத்தில்தான் அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. 50 சதவீத விலைதான் அவர்கள் கொடுக்கிறார்கள் என்ற புகார் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. நியாயமான விலை கொடுக்கும் வகையில், சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலையை கூட்டுறவு பாக்டரிகளில் வாங்கி, பெரிய பாக்டரிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றி, நியாயமான விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கொச்சியிலும், குன்னூரிலும் பதப்படுத்தப்பட்ட தேயிலை ஏலம் போட்டு விற்பனை செய்யப்படுகிறது. அங்கே என்ன விலைக்குப் போகிறதோ அதை வைத்துத்தான் பச்சைத் தேயிலை விலை நிர்ணயிக்கப்படுகிறது. கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்தவரையில் லாப நஷ்டம் பார்க்காமல் நியாயமான விலை கொடுத்து கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை நடத்தப்பட்டு வருகின்றது. தனியார் தொழிற்சாலைகளில் ஆரம்ப காலத்தில் மிகக் குறைந்த விலை கொடுத்து வாங்கிக்கொண்டு இருந்தார்கள். நாம் 1·50 பைசா கொடுத்த காலத்தில், தனியார் தொழிற்சாலையில் 40 பைசா என்று

கொடுத்து தேயிலை வாங்கியிருக்கிறார்கள். இப்போது கூட்டுறவுத் தொழிற்சாலை ஏற்பட்ட பிறகு அவர்கள் நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். மிகக் குறைவாக விலை கிடைக்கிறது என்ற புகார் இருக்குமானால் அரசு நிச்சயமாக அதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, டீ கார்ப்பரேஷன் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். அவர்களுடைய பணி என்ன ? இப்படி ஏற்கனவே சிறு விவசாயிகளிடமிருந்து அந்தத் தேயிலையை கொள்முதல் செய்வதற்குத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் இரண்டு விதமாக தங்களுடைய தேயிலையை விற்பனைக்குக் கொடுத்து வருகிறார்கள். ஒன்று கூட்டுறவு முறையில் தொழிற்சாலை நடத்தி, அதில் அந்தத் தேயிலையைப் பயன்படுத்தி, அதன் மூலம் நியாயமான விலையை, நல்ல விலையை அவர்கள் பெறுகிறார்கள். பிறிதொன்று, தனியாரிடத்திலும் உள்ள தொழிற்சாலைகளுக்கு அவர்கள் பச்சைத் தேயிலையைக் கொடுத்து வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற புகார் சொல்லப்பட்டு வருகிறது. இது உண்மையானால் நியாயமான விலை கிடைக்க அரசு தீவிரமான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயத் தேர்.

*வினா எண். 666— திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஸ்ரீசுப்ரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான பெரிய தேரில் விலை மதிக்க முடியாத சிற்ப வேலைப்பாடு அமைந்த மா சிற்ப சிலைகள் திருட்டு போயிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) தேரிலிருந்து களவாடப்பட்ட மரச் சிற்பங்கள் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு, களவில் சம்பந்தப்பட்ட ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி களவு சம்பந்தமான புகார் பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. கைப்பற்றப்பட்ட 13 மரச் சிற்பங்கள் காவல் துறையினரிடம் உள்ளன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, அந்தப் பெரிய தேரிலிருந்த மொத்த சிற்பச்சிலைகள் எத்தனை ? திருட் டுப்போன சிற்பச்சிலைகள் பொருத்தப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மொத்தச் சிற்பங்கள் அந்தத் தேரில் இருந்தது— 773. அதிலே களவு போனது என்று கூறப்படும் சிற்பங்கள் 13. கீழே விழுந்து போய் எடுத்து வைக்கப்பெற்று இருப்பவை 6. காலத் தால் சிதைந்து அழிந்து போனவை 74. மொத்தம்— 773.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் களவு போன மொத்த பொருள்கள் எண்ணிக்கை கூறினார்கள். எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரையில் அந்தக் களவு போய் இருக்கிறது. களவு போன அப்பொருள்களின் மதிப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன். களவு செய்தவர்களுக்கும், அந்தக் கோயிலில் உள்ளவர்களுக்கும் தொடர்பு உண்டா அல்லது வேறு எந்த நபருக்காவது தொடர்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற மாசி திருவிழாவை முன்னிட்டு தேரை பிரித்த போது அந்தச் சிற் பங்கள் களவு போனது கண்டறியப்பட்டது. அதை ஒட்டி 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 15-ந் தேதி அன்று காவல்துறை ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல் வேறு ஆய்வுகளுக்குப் பிறகு அந்த 13 மர பொம்மைகள் கைப்பற் றப்பட்டன. அதன் மொத்த மதிப்பு ரூ. 600. கைது செய்யப்பட் டவர்கள் இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்கள் என்று போலீஸ் துறை குற்ற வழக்குப் பதிவு செய்ததில் தெரிகிறது. அதிலே ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் ஈடுபட்டு இருப்பதாகவோ சம்பந்தப்பட்டு இருப்ப தாகவோ தகவல் இல்லை.

(முற்பகல் 9-10)

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சொந்த மான மின்சார வொயர்கள், காயில்கள், சுவிச்சுகள் ஆகியவை திருடு போயிருப்பது உண்மையா, அதற்கு அங்குள்ளவர்களே உடந்தை என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி விசாரித்து நட வடிக்கை எடுக்கப்பட்டதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைச் தலைவர் அவர்களே, இது தேரிலே உள்ள சிற்ப வேலைப்பாடு அமைந்த மரச் சிற்பங்கள் திருடு போனதைப்பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தகவல் தருகிறார்கள். விளக்க மாக விவரங்கள் எழுதித் தந்தால் சம்பந்தபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை.

*வினா எண். 667— திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென மதுரை நகரில் உள்ள ராணி மங்கம்மாள் சத்திரத்தை தமிழ்நாடு சுற்றுலா வாரி யத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. என். லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவர் அவர் களே அடுத்த ஆண்டு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடை பெறப்போவதாகச் சொல்லப்படுகிறது. தற்பொழுது உள்ள விடுதிகளில் போதுமான படுக்கை வசதிகள் இல்லை, எனவே உடனடியாக படுக்கை வசதிகளை அதிகப்படுத்த ஏதே னும் திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதனை தனிக் கேள்வியாகப் போட்டால் விவரங்கள் தேவையான அளவிற்கு சேகரித்துத் தரமுடியும். என்றாலும் இதற்கென புதிய விடுதிகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 17

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

* வினா எண் 691— திரு. வி. கே. கோதண்டராமன், திரு. என்.
இட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டிலுள்ள சலவைத் தொழிலாளர்களை
ஷெட்யூல் வகுப்பில் சேர்க்குபடியாக மத்திய அரசை மாநில அரசு
கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், என்ன பதில் வந்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) மற்றும்
(ஆ) 1970 ஆம் ஆண்டில் இம்மாநில அரசு தமிழ்நாடு முழுவதிலு
முள்ள "வண்ணார்" "புதிரை வண்ணார்" என்ற இனங்
களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு மத்திய
அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் அப் பரிந்துரை
யினை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், எல்லா மாநிலங்
களிலுமே இழிவான தொழிலில் ஈடுபடக்கூடிய, அதாவது மல
ஜலம் எடுக்கக்கூடியவர்கள், குப்பை அள்ளக்கூடியவர்கள்
எவ்வளவு பேர்கள் உண்டோ அவ்வளவு பேர்களும் தாழ்த்தப்
பட்ட வகுப்பிலே சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சலவைத்
தொழிலாளர்கள் மற்றவர்கள் துணிகளை சலவை செய்வது
மட்டும் அல்லாமல், மிக மோசமான நிலையில் இருக்கக்கூடிய
நோயாளிகளுடைய துணிகளையெல்லாம் கூட வெளுக்கக்
கூடியவர்கள், அப்படிப் பட்டவர்களை மற்ற மாநிலங்களிலே
தாழ்த்தப்பட்ட வகுப்பிலே சேர்த்திருக்கும்போது இந்த
தமிழ்நாட்டிலே உள்ளவர்களை மட்டும் ஏன் சேர்க்க
கூடாது என்பதற்கான காரணங்களை கேட்டீர்களா, அதற்கு
அவர்கள் என்ன கூறினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை தாழ்த்தப்பட்ட
வர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தான் இந்த
அரசாங்கம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆனால்
தீண்டாமை என்கிற கொடுமை அவர்கள் மத்தியில் இல்லை என்
கிற காரணத்தினால் அவர்களைச் சேர்க்க இயலாது என்று
கூறியிருக்கிறார்கள். மேலும் ஒரு முறை இந்த சலவைத் தொழி
லாளர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மேல் மத்திய
அரசாங்கம் தான் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1979 ஏப்ரல் 17]

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த
விதிகளின் அடிப்படையில் சில வகுப்புகளை இந்த தாழ்த்தப்
பட்ட வகுப்பிலே சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும், இந்த
சலவைத் தொழிலாளர்களை கன்னியாகுமரி மாவட்டத்திலும்
திருநெல்வேலி மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே
சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதே பழக்க
வழக்கங்களைக் கொண்ட இந்த பிரிவினர் அதாவது வண்ணார்,
புதிரை வண்ணார் என்ற இவர்கள் தமிழ்நாடு பூராவும் இருக்கின்ற
காரணத்தினால் அவர்களை, தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில்
சேர்க்க அரசு மேலும் முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்பு
கிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு வகுப்பினரை தாழ்த்தப்பட்டவர்கள்
பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு முதலில் அவர்கள் தீண்டாமை
கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்க வேண்டும். கல்வி, சமூகம்,
பொருளாதாரம் வாழ்க்கையின் பின்தங்கிய நிலைமையில்
இருக்க வேண்டும். மத்திய அரசாங்கம் கன்னியாகுமரி மாவட்
டத்திலும், திருநெல்வேலியில் செங்கோட்டை வட்டத்திலுள்ள
'வண்ணான்' புதிரை வண்ணான், என்கிற சலவைத் தொழிலாளர்
களை இந்த அடிப்படையில்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பில்
சேர்த்திருக்க வேண்டும். ஆனால் நாம் இங்கே வண்ணார்,
புதிரை வண்ணார் என்று 'ர்' போட்டு விட்ட காரணத்தினால்
மத்திய அரசாங்கம் சேர்க்க மறுத்திருக்கலாம்.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, இங்கே அமைச்சரவர்கள் வண்ணாரிடமிருந்து இரண்டாவ
தாக மனுக்கள் வந்திருக்கின்றன. என்று சொன்னார்கள். அது
எப்போது வந்தது? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது? மத்தியஅரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா
இங்கே வண்ணான் என்பதற்கும் வண்ணார் என்பதற்கும் உள்ள
வித்தியாசம் இர், இன் என்ற அளவில் மட்டும்தானா அல்லது
ஏதாவது சமுதாயத்திலே வித்தியாசம் இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத்
தலைவரவர்களே, அண்மையில் பாராளுமன்றக் குழு தமிழ்நாட்
டில் சுற்றுப் பயணம் செய்தபோது இந்தக் கோரிக்கையை அவர்
களிடம் கொடுத்திருக்கிறார்கள். இனி அவர்கள்தான் பரிசீலனை
செய்து இந்த மாநில அரசு என்ன செய்ய வேண்டும்
என்பது பற்றிச் சொல்ல வேண்டும். அப்போது தகுந்த பதிலை
இந்த அரசாங்கம் அளிக்கும். இர், இன் என்பது எழுத்தளவில்
தான் வேறுபாடு இருக்கிறதே தவிர வேறெந்த வேறுபாடும்
இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத்தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் இந்த சலவைத் தொழிலாளிகள் சலவை செய்கிறார்கள். வேறு சாதியினருக்கு அவர்கள் சலவை செய்ய முடியாது. ஆகவே அவர்களுக்குரிய குறைபாடுகளைப் போக்குகின்ற வகையில் அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இது போன்ற சலவைத்தொழில்செய்பவர்கள் அந்தப் பட்டியலில் தான் இருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற பிரச்சினை மற்ற எல்லா வகுப்புகளுக்கும் சலவை தொழில் செய்பவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதுதான்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, புதிரை வண்ணான் என்று சொல்லப்படுபவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இருப்பதாகச் சொல்வது சரிதானா? குதிரை வண்ணான் என்ற பிரிவைச் சேர்ந்த அத்தனை பேரும் ஏற்கனவே இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இர். இன். தான் வித்தியாசம். ஆகவே எல்லா சலவைத் தொழிலாளர்களையும் இந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கு தீவிரமான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே. புதிரை வண்ணான் என்கிற இனத்தவர் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் பட்டியலிலே சேர்ப்பதைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கிற அதிகாரம் தான் இருக்கிறது. பட்டியலில் சேர்க்கிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது.

திரு. எம். பழனிவேல்: தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்ப்பதற்கான கேள்வியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் இந்தத் தொழில் செய்யக் கூடியவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் அவர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

அடுத்து இந்த சலவைத் தொழிலாளி என்ற கேள்வியில் பேசும்போது குதிரை வண்ணான் என்றும் கழுதை வண்ணான் என்றும் அந்த இனத்தவரைக் கேவலப்படுத்தக்கூடிய வகையில் அமைச்சரவர்களும் மற்ற உறுப்பினர்களும் சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, புதிரை வண்ணான் என்பது பட்டியலில் இருக்கிற பெயர். ஆகவே நானோ மற்ற உறுப்பினர்களோ வேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே இதிலே தவறேதும் இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் அனுதாபம் இருக்கிறது. ஆகவே 1970-ம் ஆண்டு பரிந்துரை செய்த போது மத்திய அரசு கேட்கவில்லை. மீண்டும் பரிந்துரைக்க அரசு தயாராக இருக்கிறது.

*வினா எண். 692— திரு. எம். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சவரத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) சவரத் தொழிலாளர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாகாத காரணத்தால் இவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க இயலாது என்று மத்திய அரசாங்கம் கூறிவிட்டது.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, இந்தச் சவரத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததாகவும் அதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆகவே மீண்டும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு கேட்டுக்கொண்டு அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அனுமதி பெறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து இதுவரை எந்த எந்த இனத்தவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அண்மையில் பாராளுமன்றக் குழு தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது சவரத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கை மனுவைத் தந்திருக்கிறார்கள். மத்திய அரசும் பரிசீலனைசெய்து மாநில அரசின் கருத்தைக் கேட்கிற நேரத்தில் இந்த அரசு அனுதாபத்தோடு பரிந்துரை செய்யும்.

அடுத்து எந்தெந்த வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மனுச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். பல வகுப்பினர் அடங்கிய பட்டியல் அதிலே இருக்கிறது. அதை இந்த அவையிலே சொன்னால் நேரம் அதிகமாகும். ஆகவே நேரத்தைக் கருதி தனியாக வேண்டுமென்றால் அச்சடித்து கொடுத்து விடுகிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீண்டும் மத்திய அரசை அந்த லிஸ்ட்டில் சேர்க்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி அதற்காக இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அனுதாபம் இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். மீண்டும் அரசு பரிந்துரை செய்யும். இதற்காக சட்டசபையில் ஒரு தீர்மானம் போட வேண்டிய அவசியம் இல்லை.

லாரி போக்குவரத்தில் பணிபுரிவோர்களுக்கு நஷ்ட ஈடு

*வினா எண். 693—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாரி போக்குவரத்தில் ஈடுபடும் டிரைவர், கிளீனர்கள் விபத்தில் இறந்தால் நஷ்டஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) நஷ்டஈடு கேட்டு தொழிலாளர்கள் முதல்வரிடம் விண்ணப்பித்துள்ளார்களா ?

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) லாரி பஸ், வாடகைகார், ஆட்டோ ரிக்ஷா போன்ற போக்குவரத்து வாகனங்களினாலோ (டிரான்ஸ்போர்ட் வெகிகில்ஸ்) அல்லது மோட்டர் வண்டி, டிராக்டர், மோட்டர் சைக்கிள் போன்ற போக்குவரத்து அல்லாத (நான் டிரான்ஸ்போர்ட் வெகிகிள்ஸ்) வாகனங்களினாலோ தமிழகத்திற்குள் விபத்து ஏற்பட்டு அதனால் உயிரிழக்க நேரிடின் இறந்து போனவரின் குடும்பங்களுக்கு ஓராயிரம் ரூபாய், முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. டிரைவர்கள், கிளீனர்கள், குடும்பங்களுக்கும் இந்நிதியுதவி அளிக்கப்படும்.

திரு. இ. தமிழரசன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிரைவர்கள், கிளீனர்கள் சங்கத்திலிருந்து அரசுக்கு வந்த கோரிக்கைகள் என்ன? அரசு அந்தக் கோரிக்கைகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, லாரி கிளீனர்கள் சங்கம் பல கோரிக்கைகளை அரசுக்கு வைத்திருக்கிறது. அதிலே மிக முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விபத்தைப் பற்றியது. தாங்கள் தருகின்ற விவரம் நீண்டதாக இருந்தால் அச்சிட்டு அவையில் வைக்கலாம்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாகச் சொல்கிறேன். கோரிக்கை 1, குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 2. ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 3. அரசின் பரிசீலனையில் உள்ளது. கோரிக்கை 4. அரசின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறைக்கு விண்ணப்பிக்கலாம். கோரிக்கை 5. ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 6. சங்கத்தின் கோரிக்கை தெளிவாக இல்லை. கோரிக்கை 7. இக்கோரிக்கை அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

[1979 ஏப்ரல் 17

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் லாரி தொழிலாளர்களுக்கு இறந்துவிட்ட பிறகு அவர்களுக்குக் பாதுகாப்பு தொகையாகக் கொடுக்கப்படு கிற ரூபாய் 1,000ஐ ரூபாய் 5,000 ஆக உயர்த்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இது முக்கியமான கோரிக்கை. இந்த அரசு கவனிக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இந்த மாதிரி விபத்தில் இறக்கிற டிரைவர் கள், கிளீனர்கள் ஆகியவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற சட்டப் படி, வாகனச் சட்டம் 110. அ. பிரிவில் வகை செய்யப்பட்டிருக் கிறது. விபத்து நேர்ந்து இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத் தைச் சார்ந்தவர்கள் அந்த நட்ட ஈட்டைப் பெறுவதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

கன்னியாகுமரி-திருச்செந்தூர் கடற்கரைச்சாலை.

*வினா எண். 694—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரை உள்ள கடற்கரை சாலையை (Coastal Road) விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அப் பணி மேற்கொள்ளப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர் களே, கடற்கரைச் சாலை, தேசீய சாலை, நெடுஞ்சாலை பக்கத் தில் இருக்கிற மண்ணை வெட்டி எடுக்கிறபோது, அவைகளுக்கு அருகாமையில் உள்ள சிறு விவசாயிகளுடைய நிலங்களை எடுத்துக் கொள்கிறார்கள். குறைந்தது 4 செண்ட் நிலத்தை எடுத்துக் கொள்கிற நிலை இருக்கிறது. அந்தச் சிறிய விவசாயிகள் பயன் அடையக் கூடிய வகையில் அவர்களதுச் சிறு நிலத்தையும் அரசே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு நட்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 17]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போட் டால் பதில் சொல்லலாம்.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர்-கன்னியாகுமரி ஆகிய இந்த இடங்கள் இரண்டும் மிகவும் புகழ்வாய்ந்த இடமாகவும், புண்ணிய ஸ்தலங்களாகவும் கருதப்பட்டு வருகிறது. இந்த இடங்களுக்கு தினசரி நூற்றுக் கணக்கானவர்கள் சுற்றுலா பேருந்து மூலமாகவும் பல்லவன் விரைவு பேருந்துகள் மூலமாகவும் வந்து போகிறார்கள், ஆனால் இந்த பேருந்துகள் செல்லக்கூடிய சாலைகள் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாகவும், மேடு பள்ளம் ஆகவும் இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய சாலையை விரிவு படுத்தும் வகையில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்திக்கு சிறப்புத் திட்டம்.

*வினா எண். 695—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்பு மிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் சிறப்புத் திட்டம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஒரு விவரம் அறிக்கை † அவையின் முன்வைக்கப் படுகிறது.

---

† [illegible] பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 17

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இப்போது வடஆற்காடு மாவட்டத்தில் எந்த அளவுக்கு உணவு உற்பத்தியா கிறது? தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் இது எத்தனை சதவிகிதம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டில் எவ்வளவு உற்பத்தி என்று கேட்டால் சரியான பதிலைச் சொல்ல முடியும். இல்லாவிட்டால் 1947- லிருந்து சொல்ல ஆரம்பித்தால் அரை மணி நேரம் ஆகும். ஆகவே, சரியான கேள்வியை சரியான நேரத்தில், சரியான படி கேட்டால் சரியான பதிலைச் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: 1947-லிருந்து விவரங் களை சொல்ல முடியாது அமைச்சர் அவர்களால். 1978-க்குப் பின்னால் சொல்லியிருந்தால் போதும். தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் 25 சதவீதம் உற்பத்தியாகக் கூடிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று சொல்லப்படுகிறது. இதை உணர்ந்து, மேலும் அங்கு விவசாயத்தை மேம்படுத்துவதற்கு விதைகள், உரங்கள் இவை மட்டும் கொடுத்தால் போதாது— உண்மையிலேயே உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றால் நீர்ப்பாசன வசதிகளை எல்லாம் பெருக்க வேண்டும். அதற்கு வசதியாக மோர்தானா திட்டம், மேலரசம்பட்டு போன்ற அணை கட்டுத் திட்டங்களை எல்லாம் சிறப்புத் திட்டங்களாக எடுத்துக் கொண்டு கட்ட முன்வர வேண்டும். மேலும், வட ஆற்காடு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களை பெருக்குவதற்காகச் சிறப்பு மாநாட்டையும் நடத்துவதற்கு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அருமையான பேருரை ஆற்றியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே அரசு பல திட்டங்களை புலன்ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மேலரசம்பட்டு போன்ற அணைக் கட்டுத் திட்டங்களையும், நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. புல்லூர் அணைக்கட்டு பற்றி இன் னொரு கேள்வி வருகிறது. அதில் நன்றாக பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

புல்லூர் அணைத் திட்டம்.

*வினா எண் 696—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றம்பள்ளி தொகுதி வாணியம்பாடி தாலுகாவில் புல்லூர் அணைக் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அப் பணியினை முடிக்க அரசு எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) புல்லூர் அருகே கட்ட திட்டமிடப்பட்ட நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சுமார் 120 ஏக்கர் ஆந்திர மாநிலத்தின் எல்லையில் உள்ளது. ஆந்திர மாநிலத்தின் எல்லை யில் உள்ள இப்பகுதியில் இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான புலனாய்வு நடத்த ஆந்திர மாநிலம் அனுமதி அளிக்கவில்லை. இதனால், பாலாற்றின் குறுக்கே புல்லூர் அருகே அணை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது.

போச்சம்பள்ளி பகுதியில் ''சூரியகாந்தி எண்ணெய் ஆலை''

*வினா எண் 697—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியிலுள்ள ''சூரியகாந்தி'' எண்ணெய் ஆலை தற்போது இயங்கி வருகிறதா?

(ஆ) அந்த ஆலை எவ்வளவு ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டுள்ளது?

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தருமபுரி மாவட்டம்—போச்சம்பள்ளியிலுள்ள "சூரிய காந்தி எண்ணெய் ஆலை" செப்டம்பர் 1978 முதல் ஒவ்வொரு பிரிவாக, வெள்ளோட்டம் நடந்து வருகிறது. இன்னும், முழு உற்பத்தித் திறனுடன் இந்த ஆலை இயக்கப்படவில்லை.

(ஆ) போச்சம்பள்ளி "சூரியகாந்தி எண்ணெய் ஆலை" 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி பயிரிடும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சூரிய காந்தி அதிகமாகப் பயிரிட வேண்டும் என்பதற்காக ராமநாதபுரம் மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வங்கிகள் மூலமாகக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது மூன்று மாதப் பயிர்தான். இதில் 400 ரூபாய் செலவு செய்தால் ஏறத்தாழ 900 ரூபாய் வருவாய் வருகின்ற அளவுக்குத் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த அளவுக்கு விவசாயிகள் பலன் அடைய முடியும்.

(முற்பகல் 9–30)

திரு. எம் அண்ணாமலை : தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதை இப்போது என்ன விலைக்குக் கிடைக்கிறது ? இது குறித்து விவசாயிகளிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கிலோ ஒன்றுக்கு ரூ. 2.25 காசுக்கு வாங்குவதாக ஏற்கனவே வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 400 கிலோ விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, ரூ. 900 கிடைக்கும். ரூ. 400 வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்கப்படுகிறது.

1979 ஏப்ரல் 17]

திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி விதைக்காக கட்டப்பட்ட ஆலையில், போதுமான சூரிய காந்தி விதை கிடைக்காததினால், மணிலா பயிர், மற்றும் எள்ளையும் ஆட்டுகிறார்கள். அதைப் போக்குவதற்காக சூரியகாந்திப் பயிரை அதிகப்படுத்துவதற்கு ஊக்குவித்து இப்பேர்ப்பட்ட ஆலையை செயல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய காந்தி எண்ணெயின் சிறப்பை அறிந்துதான், இன்று தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தின் மூலம் 'ஸனோலா' என்ற எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு, இன்று வெளியிலே மக்களுக்குக் கிடைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையிலே 2,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, இன்று இந்தியாவிலேயே எட்டில் ஒரு பங்கை உற்பத்தி செய்யக் கூடிய அளவுக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மேலும், இந்த 'ஸனோலா' எண்ணெயை உபயோகிப்பதால் 'கொலஸ்ட்ரால்' வியாதி தவிர்க்கப்படுகின்றது. ஆகவே, இது சிறந்த எண்ணெய் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உபயோகித்து வந்தால், நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கு கடன் வழங்குவதாகச் சொன்னார்கள். இந்த சூரியகாந்தி விதையை அதிகப்படுத்துவதற்கு அரசுத் துறையிலே சப்சிடி கொடுக்கப்படுகிறதா ? அப்படி இல்லையென்றால், இனிமேலாவது கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அந்த உத்தேசம் இல்லை.

[1979 ஏப்ரல் 17

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெய் விதை உற்பத்தி செய்யும் திட்டம் எந்தெந்த மாவட்டத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக் கின்றதோ, அங்கேயெல்லாம் இந்த சூரிய காந்தியைப் பயிர் செய்யலாம். இதை மாற்றுப் பயிர்த் திட்டத்தின் மூலம் பயிரிட லாம். 'It is a draught resistance variety' இதற்கு மழை தேவையில்லை. ஒரு மழை பெய்தாலே, அதை வைத்துக் கொண்டு இதைப் பயிரிடலாம். மூன்று மாதங் களில் இதைப் பயிர் செய்ய முடியும். ஆகவே, இந்த எல்லா மாவட்டங்களிலுமே கூடப் பயிர் செய்யலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சூரியகாந்தி எண்ணெய் மிகவும் நல்லது என்று அமைச்சர் அவர்கள் கூறினார் கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத் தில் ரொம்ப குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது என்பதும் உண்மைதான். அதிக விலைக்கு விற்கக் கூடிய எண்ணெயோடு இதைக் கலப்படம் செய்து பயன்படுத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, தனியாக இதைக் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படம் செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக விற்கப்படுகின்ற இந்த எண்ணெயில் எந்த விதமான கலப்படமும் இல்லை. அப்படி கலப்படம் இருப்பதாக மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு காத்துக் கொண்டிருக்கிறது. மேலும், இதன் விலை இப்போது கிலோ ரூ. 12.50-க்கு விற்கப்படுகிறது. இதை இன்னும் குறைப் பதற்கான நடவடிக்கைகளை தாங்கள் எடுத்துக் கொண்டிருக் கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதை ஒரு கிலோ ரூ. 2—25-க்கு வாங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ரூ. 2-க்கும் குறைவாகத் தான் வாங்குவதாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே புகார் சொல்லப்பட்டது. மேலும், தனியார்கள் ரூ. 3-க்கு வாங்குவதால், தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. ஆகவே, இந்த விலையைக் கூட்டுவதற்கு வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்தது போல கிலோ ரூ. 2—25 இந்தசூரியகாந்தி விதை விலை. ஒரு ஏக்கரிலே 400 கிலோ சூரிய காந்தி விதை பயிராகும் என்று குறிப்பு வேளாண்மைத் துறையிலே இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 400 கிலோ மூலம் ரூ. 900 கிடைக்கும். ஒரு ஏக்கர் இதற்குப் பயிரிட ரூ. 400 செலவாகும். ஆகவே, ரூ. 500 மூன்று மாதங்களில் ஒரு ஏக்கருக்கு கிடைக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கட்டுப்படியாகவில்லை என்ற நிலை இல்லை. அப்படி இருந்து, கொண்டு வந்தால், கண்டிப்பாக அதைப்பற்றி கவனிப்போம்.

திரு. என். பழனிவேல் : சூரிய காந்திப் பயிர் நமது மாநிலத் தில் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை ஏக்கர் பயிரிடப்படு கிறது? சூரியகாந்தி விதையை அரசே கொள்முதல் செய்து கொடுக்க முன்வருமா? அந்த எண்ணெய் என்னென்ன காரியங் களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவேயே சொன்ன பதில்களில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி களுக்கு விடை இருக்கிறது. அவர்கள் அதையே திரும்பப் படித்துப் பார்த்தால் கண்டிப்பாக விடை கிடைக்கும்.

பாளையங்கோட்டை மருத்துவ மனைக்கட்டிடம்.

*வினா. எண். 698—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம் கீரபாளையம் ஒன்றியம் பாளையங்கோட்டையில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டும் இதுநாள்வரை மருத்துவமனை கட்டப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இம் மருந்தகம் காலியாயிருந்த மருத்துவ
அலுவலர் குடியிருப்பிற்கு மாற்றப்பட்டு தற்போது இயங்கி
வருவதால் அரசின் நிதி நிலைமைகளுக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு
முடிவெடுக்கப்படும்.

உள்ளாட்சி மருந்தகங்களுக்கு நிதி உதவி.

* வினா எண். 699—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா :—

நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்கள்
நடத்தும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காகும் செலவு
தொகையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நக
ராட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தும்
மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்வதற்காகும் செலவுத்
தொகையை அதிகப்படுத்தி அரசு உத்திரவு கீழ்க்கண்டவாறு
வழங்கப்பட்டுள்ளது :—

பகுதிநேர மருந்தகம் மருந்துச் செலவு ஒருவருடத்
திற்கு ரூ. 2,500-லிருந்து ரூ. 5,000 மாக அதிகப்படுத்தப்
பட்டுள்ளது. முழுநேர மருந்தகத்திற்கு மருந்துச் செலவு
ஒரு வருடத்திற்கு, ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 மாக
அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான பண ஒதுக்கீடு செய்
வதும் அவற்றிற்கான மருந்து வகையராக்களை வாங்குவதும்
அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகும்.

திரு. தி. அன்பழகன் : இந்த ஊராட்சி ஒன்றியங்களால்
நடத்தப்படும் மருந்தகங்களில் மருந்து இல்லாத குறை
பெரிய குறையாக இருக்கிறது. இதுபோன்ற மருத்துவ
மனைகளை அரசு மருத்துவ மனையாக மாற்றும் எண்ணம்
அரசுக்கு [illegible]ண்டா?

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :
ஊராட்சி ஒன்றியங்களுடைய மருந்தகங்களை அரசு மேற்
கொள்ள வேண்டுமென்று கொள்கை அளவில் முடிவு செய்யப்
பட்டு படிப்படியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு
வருகிறது. அதற்கிடையில் எந்தவிதமான மருந்துத் தட்டுப்
பாடும் வரக்கூடாது என்பதற்காகத்தான் நிதிநிலையை ஒதுக்கி
வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நகராட்சி,
ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தக்கூடிய மருத்துவ மனைகளில்
போதிய மருந்துகள் இல்லையென்பதும் அங்கு வரக்கூடிய
நோயாளிகளுக்கு காலாகாலத்தில் தேவையான மருத்துவ
உதவி கிடைக்கவில்லை என்பதுபற்றி அரசுக்குப் புகார்
வந்திருக்கிறதா? அந்தப் புகாரின்பேரில் தேவையான
மருந்துக்கள் அளிக்க செய்யப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நகராட்சி
மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றால் நடத்தப்
படும் மருத்துவ மனைகளில் வழங்கப்படுகிற மருந்துகள் போது
மான அளவு இல்லையென்று அறிந்த பிறகுதான் தற்போது
மருந்துக்காக அளிக்கப்படுகின்ற நிதியை ரூ. 2,500-ல் இருந்து
ரூ.5,000 ஆகவும், ரூ. 5,000 ஆக இருந்ததை ரூ. 10,000 ஆகவும்
அரசு உயர்த்தியிருக்கிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான குற்றச்
சாட்டுகளும் இதுவரை வரவில்லை.

திரு. பொ. முனுசாமி : ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் செயல்
படுகின்ற மருந்தகங்களில் ஆண் டாக்டர்கள் இருக்கிறார்கள்.
பெண்கள் வைத்திய வசதி பெற பெண் டாக்டர்கள் இல்லை.
பெண் டாக்டர்களைப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :
சாதாரணமாக உடல் நோய்க்காக வருகிற பெண்களுக்கு ஆண்
டாக்டர்களே பரிசீலனை செய்து மருந்து தருகிறார்கள். மற்றப்படி
பிள்ளைப்பேறுக்காக வருகிறவர்களைக் கவனிக்க பிள்ளைப்
பேற்றில் தேர்ச்சி பெற்றவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : அமைச்சர் அவர்கள் பதில்
கூறும்போது 2,500 ரூபாயை 5,000 ரூபாயாகவும் 5,000
ரூபாயைப் பத்தாயிரமாகவும் அதிகரித்திருப்பதாகக் கூறினார்கள்.
ஆண்டுக்காண்டு ஜனத்தொகை உற்பத்தி அதிகரித்துக் கொண்டே
வரும் காரணத்தால் ஜனத்தொகை அடிப்படையில் கூடுதலாக
மருந்து வழ[illegible] அரசுமுன்வருமா?

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்த ஜனப் பெருக்கத்தையும் மக்களின் தேவையையும் அனுசரித்துத்தான் பணத்தின் வரம்பை அரசு உயர்த்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் ஏற்கனவே 12,000 ரூபாய் அளவு மருந்து கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது இந்த அரசு வந்த பிறகு அந்தத் தொகை 14,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. அதே போன்று நடமாடும் மருத்துவ மனைகளுக்கு 15,000 ரூபாய் மருந்து வாங்குவதற்காக இருந்த அளவை 25,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த அரசு தற்போது பரிசீலனை செய்து வருகின்றது. இதற்கு மேலும் நடத்தப்படுகிற மருந்தகங்களில் தற்போது சொன்ன விகிதத்தில் மருந்துகள் தரப்படுவதால் எந்தவிதமான மருந்து தட்டுப்பாடும் தற்போது இல்லை.

(முற்பகல் 9.40)

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள், மற்றும் ஒன்றிய மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்குவதற்கு அரசு உதவிப்பணம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களில் அந்த மருந்துகள் ஒழுங்காக வாங்கப்பட்டு சரியாக நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அரசாங்கம் அதற்காக பணம் கொடுப்பதற்குப் பதிலாக அரசே மருந்துகளை வாங்கிக் கொடுத்தால் அந்த நோயாளிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும், ஆகவே பணத்தை நிறுத்திவிட்டு மருந்துகளாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கத்தால் எந்த அளவிற்கு எவ்வளவு தரப்படவேண்டுமென்று கூறப்படுகிறதோ அந்த அளவிற்குத்தான் எல்லா நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் மருந்துகள் வாங்கப்பட்டு தரப்படுகின்றன. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1979 ஏப்ரல் 17]

புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்பு.

*வினா எண். 715—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 நவம்பர் 4-வது வாரத்தில், புயல் மற்றும் பலத்த மழையின் காரணத்தினால், கிழக்கு கடற்கரையோர கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனவா?

(ஆ) அதனால் ஏற்பட்ட பாதிப்பென்ன?

(இ) அதற்காக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ) (இ) அவை முன் ஒரு @ விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*வினா எண் 716—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாளில் ஏற்பட்ட புயலினால் இராமநாதபுரம் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட வீடுகள், போட்டுகள், மிஷின் போட்டுகள், பயிர் நிலங்கள், குளங்கள், ஊரணிகள், கிணறுகள், வாழைத் தோட்டங்கள், கொடிக்கால்கள், புஷ்பத் தோட்டங்கள் இவைகளின் விபரம் யாது?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) அவைமுன் ஒரு † விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

@ 264-267-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

† 268-271-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்

[1979 ஏப்ரல் 17

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர்
அவர்களே, விவரமான அறிக்கை இராமாயணம் போல் இருக்
கிறது. இதற்கு உப கேள்வி கேட்டோம் என்று சொன்னால் அது
பிரசங்கம் போல் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்வார்
கள். மதிப்பிற்குரிய தலைவர் அவர்களும் மணியடிப்பார்கள்.
இருந்தாலும் சுருக்கமாகக் கேட்டுத்தான் ஆக வேண்டும். விவர
அறிக்கையிலே முதலில் பாதிக்கப்பட்ட, மீனவர்களுக்கு ஒரு
வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ வீதம் அரிசி வழங்கப்
பட்டது என்றும் பிறகு பாதிக்கப்பட்டவர்களுக்கு 15 கிலோ
அரிசியும் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது.
இந்தப் பாகுபாடுக்குக் காரணம் என்ன? சென்னையில் பாதிக்கப்
பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. ஆனால்
கிராமங்களிலோ அல்லது கடல் ஓரங்களிலோ உள்ள பாதிக்கப்
பட்டவர்களுக்கு 5 என்றும் 15 என்றும் கொடுக்கப்படுகிற பாகு
பாடான நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர்
அவர்களே, இராமாயணத்தை எவ்வளவு விளக்கமாகக் கம்பர்
எழுதியிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அதைப்
போல் இங்கே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத்
தான் நான் சொன்னேன். இந்த அவையிலே நான் பலமுறைகள்
சொல்லியிருக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 கிலோ அரிசி
கொடுக்கப்படுவது என்பது எப்போதும் உள்ள அரசினுடைய
ஆணை. சிறப்பு ஆணையாக பல நேரங்களிலே அது மாற்றப்
பட்டு அதிகமான நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
இந்த அவையிலேயே எந்த எந்த மாவட்டங்களிலே 50 கிலோ
அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.
சென்னைக்கு மட்டும் அல்ல, தமிழ் நாட்டில் பாதிக்கப்பட்ட
எல்லோருக்கும் சிறப்பாக ஒரு ஆணை போட்டுக் கொடுக்கப்பட்
டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, விவ
சாயிகள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு கிணறுகள், வாழைத்
தோட்டங்கள், புஷ்பத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.
அதனால் அந்த விவசாயிகளுக்கு ஏற்படுகிற செலவை அடுத்த
ஆண்டு வசூல் செய்யாது, இனாமாகக் கொடுக்க அரசு முன்
வருமா ? மேலும் தூராகிவிட்ட கிணறுகளை எல்லாம் சரி
செய்து விவசாயிகளைக் காப்பாற்ற அரசு முன்வருமா ?

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த அவையிலே
ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் அதே
கேள்வியைக் கேட்கிறார்கள். கேட்கட்டும் அதைப் பற்றி பரவா
யில்லை. ஆனால் இந்த அவையிலே ஏற்கெனவே சொல்லப்
பட்டதைப்பற்றி மீண்டும் மீண்டும் இங்கே கேட்காமல் இருந்தால்
அவையின் நேரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன். சிறப்பு விதியாக இந்த ஆண்டு போட்டு
சிறிய விவசாயிகளுக்கு கிணறு தூர்ந்துபோனாலும் நிலம் மண்
மேடிட்டுப் போனாலும் அதற்கான முழுச் செலவையும் அரசு
ஏற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் அதைப்போல் பெரிய
விவசாயிகளுக்கு அதிகப்படி ஆயிரம் ரூபாய் மானியமாகவும்
மற்றவைகளை 30 மாதங்களில் செலுத்தும் கடனாகக் கொடுக்கப்
பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இப்போது சிறிய
விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு செய்து அவர்
களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே விவ
சாயத் துறை அமைச்சர் ஒட்டு மொத்தமாக என்று சொல்லி
கையை விரித்துவிட்டார்கள். சிறிய விவசாயிகளுக்கு அரசு எந்த
அளவிற்கு உதவி செய்யும் என்பதைச் சொலல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவரவர்களே, விவசாய அமைச்சர் மொத்தமாகச் சொன்
னார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது
நானும் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவர் சிறிய
விவசாயி, பெரிய விவசாயி என்று பார்த்துத்தான் சொல்லிக்
கொண்டு வருகிறார்கள். உங்களுக்குச் சந்தேகம் என்னவென்று
சொன்னால் பதில் சொல்லுகிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, 1978
நவம்பர் கோர மழையின்பொழுது குமரி மாவட்டத்தில் பல புரவு
கள் குறிப்பாக பல கீழ்குளம் புரவு, உண்ணாமலைக்கடை புரவு,
மண்காடு புரவு ஆகிய புரவுகளில் உடைப்பு ஏற்பட்டு நூற்றுக்
கணக்கான ஏக்கர் நிலங்கள் சேதம் அடைந்தன. அந்த உடைப்பு
கள் இன்னும் அடைக்கப்படவில்லை. ரெவின்யூ துறையைக்
கேட்டால் எங்களுக்கு அது பொறுப்பு இல்லை என்று சொல்லி கை
கழுவி விடுகிறார்கள். பஞ்சாயத்தைக் கேட்டால் எங்களுக்குப்
பொறுப்பு இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் குறிப்பிட்ட ஒரு இடத்தைப் பற்றிக் கேட்டால் பதில் இருக்காது. பொதுப்படையாக இருப்பதை விட்டு விட்டு, குறிப்பிட்டுக் கேட்டால் அதை அனுமதிப்பதால்தான் நேரம் வீணாகிறது.

திரு. பொ. விஜயராகவன் : இப்படிப்பட்ட இடங்களில் ஒவ்வொரு துறையும் தட்டிக் கழித்துக்கொண்டே போகிறது. ஆகவே, ஜெனிவாஜி அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு இந்த உடைப்புகளை மீண்டும் அடைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரண வேலைகளைச் செய்வதற்கு அரசு உத்தரவு போட்டு, அந்தந்த இலாக்காக்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த இலாக்காக்கள் நடைமுறைப்படுத்தி வருகிறது. எங்கேயாவது செய்யவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக ஆவன செய்ய அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 717.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயிண்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்திலே கிடையாது. நீங்கள் உட்காருங்கள். நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

அத்தியாவசியப் பண்டங்கள் பதுக்கல்.

*வினா எண் 717— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உணவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் நிதி ஆண்டில் டிசம்பர் முடிய அவசி பண்டங்களை பதுக்கியதற்காக எத்தனை பேர் கைது செய் பட்டனர் ?

(ஆ) அவர்களின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) 1977-78-ம் நிதி ஆண்டில் டிசம்பர் முடிய அவசியப் பண்டங்களைப் பதுக்கிய தற்காக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை— 79.

(ஆ) சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	41
1. தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	30
2. விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	2
3. 1978 ஏப்ரலில் நீதி மன்றங்களில் வழக்குகள் நிலுவையிலுள்ள நபர்களின் எண்ணிக்கை.	9

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைரவர்களே, அத்தியாவசியப் பொருட்களின் அடிப்படையில் மிகவும் முக்கிய மான விஷயமாக மக்கள் மத்தியில் சிமெண்ட் தட்டுப்பாடு இருக்கிறது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சிமெண்ட் ஒரு மூட்டை 32 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதே நேரத்தில் பி. டி. ஓ. விடம் பர்மிட் கேட்கிறார்கள். அவர்கள் 3 மூட்டை, 5 மூட்டைகளுக்கு பர்மிட் கொடுக்கிறார்கள். ஆனால் அவைகளை 20 மைல்களுக்கு அப்பால் சென்று வாங்கக் கூடிய வகையில் பர்மிட் வழங்கப்படுகிறது. ஆகையால் இரண்டு மூன்று மாத காலமாக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, பக்கத்தில் உள்ள கடைகளில் அந்த சிமெண்டை வாங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை யென்றாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய பிரச்னை மிக முக்கியமான பிரச்னை என்கிற காரணத்தாலே, பொதுப்படையாகச் குற்றச்சாட்டுக்களைச் சொல்லாமல், எந்த இடத்திலே இப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னுடைய கவனத் திற்குக் கொண்டு வருவார்களேயானால் தகுந்த நடவடிக்கை உடனடியாக நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, சிமெண்டுக்குக் கட்டுப்பாடு கொண்டுவந்து வழங்கப்படுகின்ற இந்த நேரத்தில் சிமெண்ட் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அதாவது உற்பத்தியாளர்கள், அவர்களே, சொந்தமாக ஆயிரக் கணக்கான மூட்டைகளைச் சிலருக்கு விற்று அவர்கள் ஊரில்

கொள்ளையடிக்கின்ற அளவிற்குத் தவறான வழிகளில் சிமெண்ட் விற்பனை நடைபெறுவதால் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடம் இருக்கின்ற இந்த முறையைத் தடை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமி பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தத் துணை கேள்விக்கும் ஏற்கனவே சம்பந்தம் இல்லை என்று நான் சொன் பிறகும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப்பற்றிக் கேட்கிறா கள். இந்த சிமெண்ட் பங்கீட்டு முறையைப் பொறுத்தம டில் கடந்த ஆண்டிலேயிருந்துதான் பொது விநியோக முறையி படி இந்த சிமெண்டைத் தேவையானவர்களுக்குக் கொடுப்ப என்று முடிவு செய்து ஏறக்குறைய விநியோகத்தில் 50 சதவீத இப்போது பொது விநியோக முறையில் எடுக்கப்படுகிற தவறு உற்பத்தியாளர்களிடமும் நடைபெறுகிறது என் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண் வந்திருக்கிறார்கள். இதைப்பற்றி பரிசீலனை செய்து நிச் மாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9–50)

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, சிமெண்ட் சம்பந்தமாக, கலப்படம் சம்பந்தமாக, ஏற்கனவே மந்திரி அவர களுக்கு நான் ஒரு சாம்பிள் கொடுத்து, கலப்படம் பற்றி விந்த மாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டிருந்தேன். அது சம் மாக பின்னாலே சொல்லப்படும் என்று சொன்னார்களே எந்தத் தகவலும் இதுவரைக்கும் இல்லை. ஏதாவது தக உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, சிமெண்ட் கலப்படம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் ஏதாவது புகார்கள் கொ திருப்பார்களானால் (குறுக்கீடு), துறையினுடைய பரிசீலனைப் அனுப்பியிருக்கிறேன். கூடிய விரைவில் விவரம் அனுப் வேண்டுமென்றும் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) 6 ஆகவில்லை. இந்தச் சட்டசபைக் கூட்டத்திலேதான் நீ கொடுத்தீர்கள். ஆகவே அதற்கான நடவடிக்கைகள் யாலே எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, ப காரணமாக, அல்லது கடத்தல் காரணமாக, நடவடிக் எடுக்கப்பட்டதன் காரணமாக, அதிலிருந்து அவர்கள் தப் கொள்ள, அது சம்பந்தமாக அதிகாரிகள் ஹைகோர்ட்டுக்கு

வழக்கை கோர்ட்டுகளுக்கு அனுப்புகிற காரணத்தினால், தவறு செய்பவர்கள் தப்பித்துக் கொள்கிறார்களே, அதைத் தடுப்ப தற்கு, சரியான முறையில் நடவடிக்கை எடுத்து, தவறு செய்கிற வர்களைத் தண்டிக்க அரசு சூழ்நிலையை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, தவறு செய்தவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் பாதுகாப்புத் தேடி நீதிமன்றத்துக்குப் போகிறவர்களை போகக் கூடாது என்று தடுக்கின்ற அதிகாரம் அரசுக்கு இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஓராண்டுக் காலத்தில் இது சம்பந்தமாக போடப்பட்ட வழக்குகள் 40 என்று சொல்லப் பட்டது. ஆனால் சமீபகாலமாக, ஏராளமான பதுக்கல் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் வழக்குகளின் எண்ணிக்கை யைப் பார்க்கும்போது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட பதுக்கல் ஏராளமாக இருப்பதுநமக்கே தெரிகிறது, இப்பொழுது சிமெண்ட், டீசல், மண்ணெண்ணெய் எல்லாமே பதுக்கலாகத்தானிருக்கிறது. அப்படி இருக்கும்போது, வழக்கு களின் எண்ணிக்கை குறைவாக இருக்கக் காரணம் என்ன? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எண்ணிக்கை குறைவாக இருக் கிறதா? இது சம்பந்தமாக அரசாங்கம், அதிகாரிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, இங்கே கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் 1977–78-ம் நிதி ஆண்டில் டிசம்பர் முடிய உள்ள புள்ளி விவரங்கள்தான்— இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. முழு ஆண்டுக்கான புள்ளி விவரம் கொடுக்கப்படவில்லை. அதிகாரிகள் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அப்படிப்பட்ட பதுக்கல் வழக்குகளைப் பிடிப்பதிலே குறைபாடுகள் இருக்கிறதோ என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். போதுமான அதிகாரிகள் அங்கங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : பேரவைத் தலைவரவர்களே, குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அப்படி பதுக்கலால் தண்டிக்கப்பட்டவர்களுக்கு உரிமம் வழங் கப்பட்டிருந்தால் அதை அரசு நடவடிக்கை எடுத்து ரத்து செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பதுக்கல் குற்றத்திற்காக, அதுவும் குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்குகின்ற குற்றத்திற்காக யாராவது நீதிமன்றங்களிலே தண்டிக்கப்பட்டிருப்பார்களானால் நிச்சயமாக அவர்களுடைய உரிமங்கள் பறிமுதல் செய்யப்படுவதற் கான விதிமுறைகள் இருக்கின்றன.

[1979 ஏப்ரல் 17

திரு. ரா. அய்யாச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பதுக்கல்காரர்களைப் பிடித்து கேஸ் போடும் போது போராட்டங்களுக்குப் போகிறார்கள். அவைதத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்லதொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தவர்கள்மேல் நடவடிக்கை களை எடுக்கிற நேரத்தில், இப்பேர்ப்பட்ட போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். பொதுவாக அரசியல் வாதிகள், அப்படிப்பட்ட போராட்டங்களுக்கு ஆதரவு நல்காமல் இருந்தால் பதுக்கல்கள் தானாகவே அழிந்து விடும்.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவரவர்களே, சிமெண்ட் அத்தியாவசியப் பண்டங்களிலே ஒன்று. இன்றைக்கு அதனை விநியோகிக்கின்ற உரிமையை தனியாருக்கு வழங்குவ தால், ஏராளமான முறைகேடுகள் நடந்து, மூட்டை ரூ. 30–க்கு அதிகமாக விற்கிறது. எனவே, பொது ஸ்தாபனம் மூலம், அதாவது கூட்டுறவு அல்லது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விநியோகம் முழுவதையும் மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை கருத்தில் கொண்டு அதைப்பற்றி அரசு நிச்சய மாகப் பரிசிலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. தங்கவேலு கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர் அவர்கள் பெர்மிட் கொடுக்கிறார்கள். அதை எடுத்துக் கொண்டு சென்று கேட்டால், அங்கே சிமெண்ட் ஸ்டாக் இல்லை, என்று சொல்கிறார்கள். அதைப்போல ஒரு விவசாயி 3, 4 தடவை போய் இல்லை என்று திரும்பி வந்துவிட்டார். அரசு அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டை என்னிடம் நேரிலேயே தெரிவிக்கும்படியும், அந்த சிமெண்ட் விநியோகஸ்தர் யார் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் 10 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

சிப்பிகுளம், வேம்பாறு ஆகிய இடங்களில் படகுத் துறைகள்.

* வினா எண். 718— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் உள்ள சிப்பிகுளத்திலும், வேம்பாரிலும் 'ஜட்டி' (சிறுதுறைமுகம்) அமைக்கும் உத் தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படை யில்தான் இக்கேள்வியே எழுப்பப்பட்டது. ஆனால் இப் பொழுது தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி மக்களை குறிப்பாக மீனவ மக்களை மனத்தில் கருதி உடனடியாக இதை அமைக்க ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான தற்போது இல்லை என்று தான் சொன்னேன். ஆனால் சம்பந்தப்பட்ட துறையினுடைய பரிசீலனையில் அது இருக்கிறது. துறை தனது முடிவை சமர்ப்பித்த வுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூரர் எஸ்.டி.எம். கோர்ட்.

*வினா எண். 719.—திரு. கு. ரமணி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கடலூரில் உள்ள எஸ்.டி.எம். (S.D.M.) கோர்ட்டில் வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகை கள் பல தாக்கல் செய்யப்படாமல் உள்ளனவா ?

(ஆ) இதனால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு நியாயம் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்)

(அ) ஆம். தற்சமயம் 89 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் உள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு துரித நடவடிக்கை எடுத்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும்படி அறிவுரை தரப்பட்டுள்ளது.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நீதிமன்றங்களிலே இந்த புரொகிபிஷன் ஆக்டில் போடப்படுகிற எஃப்.ஐ.ஆர்-ல் அங்கே கெமிகல் அனலிஸ்டு உள்ள பிரிவு இரசாயன பரிசீலனை செய்த கருத்துக்களை தர 4, 5 மாதங்கள் ஆகிறது. இதனால் நிறைய பெண்டிங் ஏற்படு கிறது. அதைக் குறைக்கும் வகையில் டிஸ்ரிக்ட் வாரியாக டிஸ்டிரிக் லேபரட்டிரிகளை அமைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திலே இன்னொரு இரசாயன பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்கின்ற போது, அங்கே குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீனில் போகவில்லை என்றால், ட்ரையல் செஷனில் எடுக்கப்படவேண்டியிருக்கும். இப்பொழுது முறையான பரிசீலனை என்று சொல்லி கிட்டத் தட்ட 4 மாதம் ஆகிறது. பிரொகிபிஷன் என்றாலே கிட்டத் தட்ட குறைந்தது 6 மாதம் போடுகிறார்கள். ஆனால் இப் போது கெமிகல் ரிப்போர்ட் வருவதற்கே 6 மாதமாகிறது என்ற நிலைமையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் அதைப்பற்றியெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: அதிகப்பட்ச தண்டனை 6 மாதம் என்றிருக்கும்போது, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கே 6 மாதம் என்றால், இதை அரசு எப்படி நியாயம் என்று கருதுகிறது? உடனடியாக ஏதாவது செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவை செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 மாதங்கள் ஆகிவிட்டன என்று சொன்னாலே, நீதிபதிக்கு ஜாமீனில் விடுதலை செய்ய அதிகாரம் இருக்கிறது. நீண்ட நாட்களாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொல்லி நீதிபதியை அணுகி மனுக் கொடுத்தால் அவர் சம்மன் அனுப்பும் போது கோர்ட்டுக்கு வரலாம் என்று உத்தரவு இட அதிகாரம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்த கெமிக்கல் அனலைஸ் ரிப்போர்ட்டு வராததால் மட்டும் கால தாமதம் ஆகவில்லை. இந்த மது விலக்கு வழக்கை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் மட்டும் தான் விசாரிக்க வேண்டும், அவருடைய பொறுப்பிலேதான் ஜாமீனில் விட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே கிரிமினல் வழக்குகள் பல இந்த முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளிடம் குவிந்திருக்கிறது. அதன் காரணத்தினால் இந்த வழக்குகளை முதல் வகுப்பு மாஜிஸ் டிரேட்டுகள் உடனே நடத்த முடிவதில்லை. ஆகவே இந்தப் பிரச்னையைத் தீர்க்க, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மாஜிஸ் டிரேட்டுகள் இந்த வழக்குகளை எடுக்கலாம் என்று கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை மாஜிஸ் டிரேட்டுகளை முதல் நிலை மாஜிஸ்டிரேட்டுகளாக மாற்று வதற்கான குறிப்பு அரசினுடைய ஆய்வில் இருந்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Printed Promissory Notes.

* Q. No. 720—Thiru S. M. VASAN: Will the Hon. the Minister for Law be pleased to state.—

(*a*) whether the Government are aware of the observations of the Madras High Court on the use of printed promissory notes about the last week of April 1978; and

(*b*) if so, the action taken there on?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை உயர்நீதி மன்ற நீதிபதி யினுடைய அறிவுரையை ஏற்று திருத்த வேண்டுமானால் அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். ஏனென்றால், பிராமிசரி

நோட்டு என்பது நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்ட் அதாவது அரசியல் சட்டத்தின் 46 வது விதியின் கீழ் வருகிறது. அது 46ன் கீழ் வருவதால் மத்திய அரசுதான் இது சம்பந்தமாக முடிவை எடுக்க வேண்டும். மாநில அரசு இது சம்பந்தமாக முடிவை எடுக்க இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00).

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மத்திய அர சாங்கம் தான் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது பிரின்டெட் பிராமிசரி நோட் அச்சடித்து வைத்துக் கொண்டு, அதிலே கையெழுத்து வாங்கி விடுகிறார்கள், குறிப்பாக மணிலெண்டர்கள் இப்படி செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் துஷ்பிரயோகம் செய்கிற நிலைமை இருக்கிறது. வெறும் பாரத்தில் கையெழுத்து வாங்கி விட்டு, பிறகு அவர்கள் பூர்த்தி செய்து கொண்டு நீதி மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். இந்த நிலையைப்போக்கு வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, நீதிபதியே அதைத்தான் குறிப்பிட்டு இருக் கிறார்கள். அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தான் எடுக்க முடியும். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : மாநில அரசாங்கம் அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? How can we bring it to the notice of the Central Government ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : உறுப்பினர்களின் கருத்துக்களை ஒட்டி, மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவிக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

வினா எண்கள் 721-734 ஒத்தி வைக்கப்படுகின்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

(2) தகவல் கோரல் :

உறுப்பினர்களது அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் நேற்றைய தினம் இந்தச் சட்டமன்றத்தில் வாகைக்குளம் துப்பாக்கி சூட்டிற்குப் பிறகு நடந்து இருக்கும் சில முக்கியமான நிகழ்ச்சிகள் நீதி விசாரணையை பாதிக்கிற நிலையில் இருப் பதால் அது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஒரு வாரத்திற்கு முன் கொடுத்தேன். நேற்று முன்தினமும் கொடுத்து இருக்கிறோம். அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்கிறீர் களா என்று கேட்டால் போதும். நான் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : ஆசிரியர்கள் போராட்டம்பற்றி யும், அவர்கள் கைது செய்யப்பட்டது பற்றியும் ஒத்தி வைப்பு தீர்மானம் கொடுத்து இருந்தேன். அதனுடைய நிலைமை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் இருந்து பதில் வராததால் அப்படியே இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, என்.ஜி.ஓக்கள் கிளர்ச்சி சம்பந்தமாக அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்து இருக்கிறேன். நேற்று பேச்சு வார்த்தை நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் 16-ம் தேதி நடைபெற வேண்டிய பேச்சு வார்த்தை அன்று நடந்ததாகத் தெரியவில்லை. எப்போது நடக்கும் என்றும் தெரியவில்லை. பேச்சு வார்த்தை எப்போது நடக்கும் என்று டெபனட்டாக இல்லாததால், அந்த அட்ஜர்ன் மென்ட் மோஷன் இன்று எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ.க்கள் பிரச்னை அடிப்படையில் அந்த யூனியனைச் சேர்ந்த தலைவர்கள் சில நாட்களுக்கு முன்பு தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் சந்தித்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு என்னை சந்தித்துக் பேசினார் கள். அதற்குப் பிறகு முதலமைச்சரை சந்தித்துப் பேசி, மீண்டும் 16-ம் தேதி பேசலாம் என்று முதலமைச்சர் சொல்லி யதை ஒட்டி, 16-ம் தேதிக்கு மேல் என்ற அளவிற்குச் சொல்லி, அவர்களது போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்ட தற்கு இணங்க என்.ஜி.ஓ. யூனியனைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போட்டு போராட்டத்தை நிறுத்தினார்கள். கைது செய்யப் பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்

கொண்டார்கள். அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. நேற்றைக்கு முதலமைச்சர் அவர்களுக்கு மானியக் கோரிக்கை இருந்தது உங்களுக்குத் தெரியும். ஆகவே, நேற் றைக்கு கலந்து பேச இயலவில்லை. நாளைக்கு போலீஸ் மானியக் கோரிக்கை இருக்கிறது. அது முடிந்த உடன் முத லமைச்சர் அவர்கள் அவர்களுடன் கூடி கலந்து பேசி ஒரு நல்ல முடிவு எடுக்க இருக்கிறார்கள் என்பதை திரு. உமாநாத் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சென்னை நகரத்தில் 14-ம் தேதி ஆர்.எஸ்.எஸ். காரர் கள் ஊர்வலம் ஒன்று நடத்தி இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஆய்விலே இருக் கிறது.

திரு. மு. அம்பிகாபதி : ஆய்விலே இருக்கிறது என்று சொன்னால் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னால் சொல்ல இயலாது. என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

திரு. ர. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலை வரவர்களே, என். ஜி.ஓ. பிரச்சினை சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால் இப் போதுமாண்புமிகு நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்தத் தேதிக்குள் முடியும்? உறுதியாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் பேசியதையே திரும்ப பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்க முடியாது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் செயலாளராக பொறுப்பு வகிக்கக்கூடிய திருவாளர் அழகிரிசாமி அவர்கள் இங்கே இல்லை. அப்படி இருக்கும்போது அவருக்கு பதிலாக யார் மாற்றுச் செயலாளர் என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் நிர்வாகப் பிரச்சினை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே. ஆறு மாதங்களுக்கு முன்பு இங்கே என்னுடைய அறைக்குப் பக் கத்து அறையில் உள்ள திரு. சுந்தரம், எம்.எல்.ஏ. அவர்களுடைய தங்கச்சங்கிலி, வாட்ச் போன்றவை திருட்டுப் போய்விட்டன. பிறகு அவை காவல் துறையின் முயற்சியால் திரும்பக் கிடைத்து விட்டது என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதற் காக தமிழக முதலமைச்சரவர்களின் பொறுப்பிலே இருக்கும் காவல்துறைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத் தாற்போல தமிழ்நாடு காவல் துறையின் 1978–79-ம் ஆண்டுக் கான ஆய்வறிக்கைதான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. 1979–80-ம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தகவல் கொடுக்கி றீர்கள். அது என்ன ஆயிற்று என்பது குறித்து செயலாளர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, 3-4-79-ல் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தி ருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

முகவை மாவட்டம் வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''முகவை மாவட்டம், வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்களில் துப்பாக்கிச் சூட்டை நடத் திய பிறகு இன்னும் அங்கு போலீஸ் முகாமிட்டிருப்பதைப் பற்றி யும், அந்தக் கிராமங்களின் வழியாகப்போய்க் கொண்டிருந்த பஸ் களை நிறுத்தி விட்டது பற்றியும் ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலைமை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. கூத்தகுடி ச.சண்முகம், திரு. செ.சிவசாமி. திரு. வி.கே. கோதண்டராமன், திரு. ஓ. சுப்பிரமணியன், திரு. நா. சுந்தரராஜ், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. கே. கந்தசாமி, திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் ஒத்தி வைப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவரவர்
களே, துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான விவரங்கள் உள்ளே
நான் போக விரும்பவில்லை. நாளைக்கு போலீஸ் மானியக்
கோரிக்கை இருக்கிறது. ஆகவே நீதி விசாரணைக்கு ஏற்பாடு
செய்திருக்கின்ற சூழ்நிலையில் அதற்குக் குந்தகம் ஏற்படுகின்ற
வகையில் நடவடிக்கைகள் இருக்கின்றன. அதனால் அனைத்து
மக்கள் மத்தியிலேயும் பாதிப்பான நிலைமை இருக்கிறது என்
பதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்
காகவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.
அருப்புக்கோட்டையிலிருந்து 25மைல் தூரத்தில் இருக்கின்றது
வாகைக்குளம்.) அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற
திலிருந்து இன்றுவரை அங்குள்ள வழித்தடங்களில் பேருந்துகள்
ஓ'டவில்லை. அரசாங்க வழித்தடங்களிலும் ஓடவில்லை, அதே
சமயத்தில் தனியார் பேருந்துகளும் ஓடவில்லை. பேருந்துகள்
விட்டால் எங்கே எரிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரண
மாக தனியார் பேருந்துகள் கூட அங்கே ஓடவில்லை. இவ்
வாறு 25 மைலுக்கு பேருந்துகள் ஓடாமல் இருந்தால் மக்களுடைய
நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அது மட்டுமல்ல, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாக்கப்
பட்டவர்கள் மருத்துவமனையிலே சிகிச்சை முடிந்து வெளியே
வருகிறபோது கைது செய்யப்படுகிறார்கள். நீதிவிசாரணைக்கு
ஏற்பாடு செய்யப்பட்டு யார் குற்றவாளி என்ற உண்மை தெரி
வதற்கு முன்னாலேயே, காயம்பட்ட விவசாயிகள் மருத்துவ
மனைகளிலே இருந்து வெளியே வரும்போது கைது செய்யப்படு
வதால் அவர்கள் மத்தியிலே கொதிப்பும், பதட்ட நிலையும்
ஏற்படும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வருவதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்
கப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி கைது நடவடிக்கைகளை அர
சாங்கம் தெரிந்துதான் செய்கிறதா? அல்லது வேண்டுமென்றே
தான் செய்கிறதா என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

மேலும் இப்போது அங்கே வேலையும் நிறுத்தப்பட்டிருக்
கிறது. ஆனால் அங்கே போலீஸ் இன்னும் வைத்திருக்கிறார்கள்.
அங்கே ஏன் போலீஸ் காவல் தேவை? தேவையில்லாத
போது அங்கே போலீஸ் படை இருக்க வேண்டுமா? அங்கே
வேலை நடந்தால் கூட பரவாயில்லை, பாதுகாப்புக்கு போலீஸ்
தேவை என்று கருதி அங்கே போலீஸை இருக்கச் சொல்லலாம்.
ஆனால் இன்றைக்கு வேலைதான் நிறுத்தப்பட்டிருக்கிறதே.
நீதிபதி அங்கே விசாரணை செய்யப் போகிறபோது வேண்டு
மானால் பாதுகாப்பு தேவை என்று போலீஸ் படையை அங்கே
நிறுத்தலாம். ஆகவே இப்படிப்பட்ட காரணங்கள் எதுவும்
இல்லாமல் அங்கே போலீஸ் படையை நிறுத்தி இருப்பது மக்கள்
மத்தியிலே பதட்ட நிலையை ஏற்படுத்தாதா? இவைகளை
யெல்லாம் விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த
அவையில் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலை
வரவர்களே, இந்தவாகைக்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப்
பிரயோகத்தைப் பற்றி இன்றைய தினம் விவாதித்து ஒரு
முடிவுக்குவர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்தி
வைப்புத் தீர்மானம் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–10)

உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தத் துப்பாக்கிச்
சூடு வந்திருக்காது. பல்வேறு பிரச்சினைகளுக்காக சென்ற
ஒரு ஆண்டுகாலமாக சாத்வீகமான முறையில் அருப்புக்
கோட்டை தாலூகா ஆபீஸ் முன் அவர்கள் உண்ணாவிரதப்
போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அமைச்சர்அவர்களையும்
பார்க்க வந்திருக்கிறார்கள். மனுவும் எழுதி தந்திருக்கிறார்கள்.
அதற்குப் பிறகும் அதைக் கவனிக்காத காரணத்தால் இந்தத்
துப்பாக்கிச் சூடு வந்தது. அங்கே ஆயுதம் தாங்கிய போலீசார்
இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களை அங்கே வைத்திருந்
தால் மேலும் என்னென்ன செய்வார்கள், என்ன நடக்கும் என்று
சொல்லமுடியாது. அங்கே இந்த விஷயம் நீதி விசாரணைக்கு
விடப்பட்டிருக்கிறது என்ற பெயரில் அவர்களை அங்கே வைத்துக்
கொண்டு, அங்குள்ள ஒவ்வொருவரையும் எந்தவிதமான
சாட்சியம் கொடுக்க முடியாதபடி ஒரு நிலைமை உருவாக்கப்
பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் சாட்சி
சொல்ல வருபவர்களை பயமுறுத்துகிறார்கள். அந்தச் சூழ்
நிலையில் அந்த ராணுவப் போலீஸ் அங்கே இருக்கக் கூடாது
என்பது மட்டுமல்ல, இதிலே பல விஷயங்கள் அடங்கி இருக்
கின்றன. அதையெல்லாம்பற்றி இந்த அவையில் பேசவேண்டும்
என்றால் ஒரு மணி நேரம் ஆகும். நீங்கள் அனுமதிக்க மாட்
டீர்கள். மணி அடித்துவிடுவீர்கள். ஆகவே இந்தப் பிரச்
னையைப் பொறுத்தவரையில் தயவு செய்து உடனடியாக
அந்தப் போலீசாரை அப்புறப்படுத்த வேண்டும் என்பதற்காக
வேண்டி கண்டிப்பாக மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை
விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி, நீண்டநாள்
உறுப்பினர், பேரவைத் தலைவரை குறித்துப் பேசுவது
சரியல்ல. பேரவைத் தலைவருக்கு மதிப்பு தந்து பேசுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர்
மதிப்பு பாதிக்கக்கூடிய வகையில் நான் பேசவில்லை. பேசவும்
மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, நான்
கொடுத்திருந்த தீர்மானத்தை எடுத்துக்கொண்டதற்கு நன்றி.
எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது
போல துப்பாக்கிச் சூடு நடந்தபிறகும் அங்கே நீதி விசாரணைக்கு
ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நீதி விசாரணை வைத்த பிறகு
அங்கே போலீஸ்காரர்களை வைத்திருக்கிற காரணத்தால் அந்தப்
பகுதியில் இருக்கிற மக்கள் அன்றாட அலுவல்களைக் கூட செய்ய
முடியாமல் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.
குறிப்பாக பாதிக்கப்பட்ட 13 பேர்கள் மருத்துவ மனையில்
இருந்து மீண்டும் வெளியே வந்தபோது அவர்கள் கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள். அன்றாட வேலை செய்யக்கூடிய சாதாரண
மக்கள் தங்கள் அலுவல்களைச் செய்ய முடியாமல் பல அவதிக்கு
உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த போலீஸ்
படையை உடனே அங்கிருந்து வாபஸ் பெறவேண்டும். அப்படி
வாபஸ் செய்தால் நீதி விசாரணைக்குக் குந்தகம் இல்லாமல்
ஒழுங்காக நடைபெறும். ஆகவே, இந்தப் பிரச்னையை விவா
திப்பதற்காக சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க
வேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின்
சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு பிரச்சினையைப்பற்றி
நாம் ஏற்கெனவே விரிவாக விவாதித்திருக்கிறோம். இன்று
இந்தப் பிரச்சினையில் முழுக் கருத்து என்னவென்றால் இன்
றைக்கு துப்பாக்கி சூட்டினால் பல பேர் குண்டடிபட்டு மருத்துவ
மனையில் சேர்க்கப்பட்டு, பிறகு அவர்கள் வெளியே வந்தபிறகு
கைது செய்யப்படுகிறார்கள். இன்னும் பல விவசாயிகள்
சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் போக்கு
வரத்து வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதனால்
விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை மார்க்கெட்டுக்கு
எடுத்துச்சென்று விற்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, அங்கே
ஏராளமான போலீஸ்காரர்களை குவித்திருக்கிற காரணத்தால்
அங்குள்ள மக்கள் பீதி அடைந்து வெளியே நடமாடமுடியாத
ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஊரடங்கு உத்தரவு பிறப்
பிக்கப்பட்டிருக்கிறதா என்று பயந்து மக்கள் வாழ்ந்து கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, மக்கள் சுதந்திரமாக வாழவேண்டு
மானால், அவர்கள் நீதிபதிக்கு முன் சாட்சியம் சொல்ல வர
வேண்டுமானால், உடனடியாக அங்கிருந்து அந்த ராணுவப்
போலீஸ்காரர்களை விலக்கிக் கொள்ளவேண்டும். இந்த மாதிரி
மக்கள் பல அவதிக்கு உள்ளாகிய நேரத்தில், மீண்டும் மருத்துவ
மனையில் இருந்து வந்தவர்களை கைது செய்வதை குறித்தும்,
மீண்டும் இப்படிப்பட்ட சூழ்நிலை தோன்றாவண்ணம் இதைப்
பற்றி விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
ராமநாதபுரம் மாவட்டம் வாகைக்குளத்தில் ஏற்பட்ட
துப்பாக்கிச் சூட்டின் காரணமாக 5 பேர்கள் மரணமடைந்த
தோடு, இன்னும் 20-க்கு மேற்பட்டவர்கள் வைத்திய சிகிச்சை
யில் இருக்கிறார்கள். சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்கள
கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தந்தியும்
தகவலும் வந்திருக்கிறது. நாங்களும், பல தலைவர்களும்
சுடப்பட்ட இடம், சுடப்பட்டவர்களின் ஆட்கள் இவைகளை
எல்லாம் போய் பார்ப்பதற்காக போனபோது, ஒரு போலீஸ்
படையே கீழக்குடியில் 300-க்கும் அதிகமான பேர்கள் குவிக்க
பட்டிருந்தனர். இதையெல்லாம் பார்த்தால் வேண்டுமென்றே
திட்டமிட்டு, இந்தக் காரியத்தை செய்ததாக தெரிகிறது.
அதற்கு அரசு உடந்தையாக இருந்தது என்று நான் குறிப்பிட
மாட்டேன். அரசு நல்லது செய்யவேண்டும் என்று தான் விரும்பு
கிறது என்பதை நானும் அறிவேன். அங்குள்ள மக்களும்
அறிவார்கள். ஆனால் அங்குள்ள அதிகாரிகள், பொறுப்பற்ற
முறையில் டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ. இவர்கள் நடந்திருக்கிறார்கள்
என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இந்தப் பிரச்னை
அங்கு ஒரு வருடமாக இருந்து கொண்டிருக்கிறது என்று அறிந்
திருந்தும், அந்த மாவட்டத்தில் கூலிக்கு ஆள்கள் கிடைக்க
வில்லை என்று தெரிந்தும் மதுரை மாவட்டத்திலிருந்து ஆட்களை
கொண்டுவர முயற்சி எடுத்திருக்கிறார்கள். மாநில அளவில்
இந்தப் பிரச்னை நன்றாக தெரிந்து இருந்தும், அங்கு வேலைக்கு
ஆட்கள் கிடைக்காமல் இருந்தும், போலீஸ் அதிகாரிகளே,
தங்கள் காக்கி யூனிபாரம்களை கழற்றி வைத்துவிட்டு, வேட்டிக்
கட்டிக்கொண்டு பைப் பதிக்கும் வேலையில் ஈடுபடவேண்டும்,
அதை அங்குள்ள மக்கள் தடுப்பார்கள், அப்போது தாக்கவேண்டும்
என்று திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக நான்
அரசைக் குறை கூறவில்லை. இதைப் பொறுப்புள்ள அமைச்
சர்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்
தான் சொல்கிறேன். ஆனால் அங்குள்ள அதிகாரிகள்
இருக்கின்ற நிலைமையை நல்லமுறையில் சமாளிக்காமல்,
அரசின் கவனத்திற்கும் கொண்டுவராமல், அங்குள்ள டி.எஸ்.பி.
அவர்களும், ஆர்.டி.ஓ. அவர்களும் இன்னும் சொல்லப்போனால்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உட்பட இதற்கு காரணம்
என்று நான் குறை கூற விரும்புகிறேன். அரசைப் பொறுத்த
வரையில் நல்லதை செய்யவேண்டும் என்று கருதுகிறது. அரசின்
இந்த நோக்கத்தை அதிகாரிகள் புரிந்துகொண்டு செயல்பட
வேண்டும். அதைத்தான் நாங்களும் விரும்புகிறோம், மக்களும்
விரும்புகிறார்கள். ஆனால் அதிகாரிகள் அவ்விதம் செயல்
படுவதாக தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால்
அவர்கள் அரசியல் காழ்ப்பு உடையவர்கள் என்று கேள்வி.
அங்குள்ள டி.எஸ்.பி. தன்னுடைய மனைவியை அடித்துவிட்டு
அதற்காக கேஸ் போட்டுக்கொண்டிருக்கிறார். ஏற்கெனவே
அவருக்கும் மனைவிக்கும் கேஸ் நடந்து கொண்டிருக்கிறது.

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து, அதி காரிகளுடைய குடும்ப பிரச்னைகளை எல்லாம் இங்கு சொல்லா தீர்கள். அந்த விவரங்களை எல்லாம் இங்கே பேசக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : ஏன் பேசக் கூடாது? அங்கு இருக்கின்ற பிரச்னைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசக் கூடாது. அது சரியல்ல.

திரு கே. கந்தசாமி: நான் யாரையும் குறை கூற வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. அரசின் கவனத் திற்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லவேண்டும் என்ப தற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். தானே நடந்து போக முடியாதவன், மூட்டையும் சுமந்து கொண்டு ஓட்டப் பந்தயத்தில் போய் எப்படி பரிசு வாங்க முடியும். இப்போது துப்பாக்கிச் சூடு நடந்திருக்கின்ற பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி, இங்கு இன்னும் ரத்தவாடை மாறவில்லை, அங்குள்ள மக்கள் மூர்க்கத்தனமாகவும், முரட்டுத்தனமாகவும் இருக்கக் கூடியவர்கள். அங்கெல்லாம் ''டேக்டாக'' நடந்து கொள்ள ஆபீசர்களை நியமிக்கவேண்டும், மிகவும் ஸீஸன்டு ஆபீஸர்களை போடவேண்டும். மக்களுடைய மனதை நன்றாக தெரிந்துகொண்டு நடக்கின்ற ஆட்களாக இருக்கவேண்டும்....''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுங்கள்.

திரு. கே. கந்தசாமி: மக்களுடைய எண்ணங்களை புரிந்து கொண்டு செயல்படக்கூடிய ''ஸைக்லாஜிக்கல் அப்ரோச்'' என்ன என்பதை புரிந்து கொண்டு செயல்படுகின்ற ஆபீசர்களைத்தான் அப்படிப்பட்ட இடங்களில் போட வேண்டும் என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிட்டேன். மேலும் அங்கு கைது செய்யப் பட்டவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டும். நீதி விசாரணைக்கு உறுதுணையாக இருக்கின்றவர்கள், ஒத்தாசை யாக இருக்கின்றவர்கள் பலர் கைது செய்யப்பட்டு வைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும். மற்றவர்களும் கைது செய்யப்படுவார்களோ என் கின்ற சூழ்நிலை இருக்கக்கூடாது, இதன் மீது மற்ற நல்ல கருத்துக்களை எல்லாம் தெரிவிப்பதற்காக இதை விவாதிப்ப தற்கு சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகைக்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி, அதையொட்டி அந்தப் பகுதியில் இப்போது

உறுப்பினர்களால் சொல்லப்படுகின்ற பதட்ட நிலைமை களைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப் பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள், அதேபோல் சிவசாமி அவர்களும் இங்கே தீர்மானங்களை வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக அவர்கள் குறிப்பிட்டது நீதி விசாரணைக்கு உத்தர விட்டதற்குப் பிறகு எதற்காக நீங்கள் போலீசை அங்கே நிறுத்தி வைத்திருக்கிறீர்கள், அதன் காரணமாக அங்கே பீதி நிலவுகிறது. சாட்சி சொல்வதற்கு மக்கள் வர மறுக்கிறார் கள். ஆகவே உடனடியாக போலீசை வாபஸ் வாங்க வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் எழுப்பிய பிரச்னை.

(முற்பகல் 10-20.)

எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் அந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். அத்தோடு இன்னொன்றையும் அவர் கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஸ்கள் அந்தப் பகுதியிலே ஓடவில்லை என்றும், அந்த பஸ்கள் அங்கே ஓடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குறிப்பாக கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசியதாக நான் கருதுகிறேன். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, 4—4—1979—லிருந்து 8—4—1979 வரை பேருந்துகள் வாகைக்குளம் பகுதியில் ஓடவில்லை என்பது உண்மை. ஆனால், 9—4—1979 லிருந்து பேருந்துகள் வழக்கம்போல் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் கூத்தகுடி சண்முகம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செல்லவில்லை என்று கூத்தகுடி சண்முகம் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்க ளானால், தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ந்து கைது செய்து கொண்டிருக்கின்றார்கள் என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் திரு துரை முத்துசாமியும் திரு கந்தசாமியும் கொஞ்சம் ஆவேசத்தோடு சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்தினை வெளிப்படுத்தியபோது தெரித்த கனல் எந்த அளவிற்கு வீசி யிருக்கிறது என்பதை இந்த அரசு உணருகிறது. அவர்கள் ஆவேசமாகப் பேசியதன் அடிப்படையை இந்த அரசு நிச்சயம் புரிந்திருக்கிறது. அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 12—4—1979-க்குப் பிறகு எந்தக் கைது நடவடிக் கையும் அங்கே மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் இப்போது யாரும் அங்கே கைது செய்யப்படவில்லை என்ப தையும் இந்த அவைக்கு எனக்குக் கிடைத்த தகவலை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 17

எதற்காக நீங்கள் அங்கே போலீசை வைத்திருக்கிறீர்கள்
என்று கேட்டார்கள். விசாரணைக் கமிஷன் தொடங்க
ஆரம்பித்த அன்றே, அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற
போலீசைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக அங்கேயிருந்து அகற்றப்
படுவார்கள் என்பதையும் நான் இந்த அவைக்கு உறுதியாக,
உத்தரவாதமாக முதல் அமைச்சர் அவர்களின் சார்பாக
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த உத்தரவாதத்தை ஏற்று, இந்த ஒத்தி
வைப்புத் தீர்மானத்தை கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள்
இது குறித்து மேலும் வற்புறுத்தாமல், எல்லாவிதமான
அமைதியைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை இந்த
அரசு அந்தப் பகுதியிலே எடுக்கும் என்ற உறுதியை
நம்பி இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாம்
என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு நிதி அமைச்
சர் அவர்களின் விளக்கத்திற்குப்பிறகு, அவையின் பிற
அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க
வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு
இசைவு மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) தமிழ்நாடு சுற்றுலா வாரிய ஊழியர்கள் சிலரை
நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திருவாளர்கள் மு.
அம்பிகாபதி, ஏ. ஆர். மாரிமுத்து, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற
சொரணம், துரை முத்துசாமி, சோ. அழகர்சாமி, கூத்தகுடி
ச. சண்முகம், செ. சிவசாமி, பொ. உத்திராபதி, ரா. மார்க்க
பந்து ஆகியோர் ஒரு அவசரப் பொதுமுக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினைக், குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அற
நிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருவார்கள். திரு. மு. அம்பிகாபதி.

<u>திரு. மு. அம்பிகாபதி:</u> பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நான் கீழ்க்கண்ட அவசரப்
பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை "வேலை நிறுத்தத்தில்
ஈடுபட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா வாரிய ஊழியர்களை நிர்வாகம்
வேலை நீக்கம் செய்ததால், ஊழியர்களிடையேயும், சுற்றுலாப்
பயணிகளிடையேயும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

1979 ஏப்ரல் 17]

<u>மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்:</u> பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி
அரசினுடைய விவரமான, தெளிவான அறிக்கை ஒன்று இந்த
அவையில் வைக்கிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எட்டு ஆண்டுகள்
முடித்து ஒன்பதாம் ஆண்டில் காலடி வைத்துள்ளது. ஆரம்பத்தி
லிருந்தே பெரும் நட்டத்தில் நடந்து வந்த இந்தக் கழகம்,
கடந்த இரு ஆண்டுகளில் நட்டத்தைக் குறைத்து, இந்த
ஆண்டு முதன்முறையாக நிகர வருமானம் பெறத் துவங்கியுள்ளது.
கழகத்தின் நட்டம், கடந்த எட்டு ஆண்டுகளில் சுமார் 55·81
இலட்சங்களாகும். இந்த நட்டத்தை, அரசின் உதவியோடு
கடந்த ஆறு ஆண்டுகளில் நடத்திய பொருட்காட்சி மூலம்
கிடைத்த வருவாய் சுமார் ரூ. 32·73 இலட்சத்தை ஈடுகட்டிய
தற்குப் பிறகும் நட்டம் ரூ. 23·08 இலட்சமாகும். குறிப்பாகக்
கடந்த இரண்டு ஆண்டுகளில் பொருட்காட்சி மூலம் கிடைத்த
வருவாய் ரூ. 19·30 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

2. கடந்த இரண்டு ஆண்டுகளில் நட்டத்தைக் குறைத்து
முதன்முறையாக 1978–79-ல் நிகர வருமானம் கண்டிருப்பதற்கு
முக்கியமான காரணங்கள்:—

(1) நிர்வாகச் சீர்திருத்தம்.

(2) சிக்கன நடவடிக்கை.

(3) பொருட்காட்சியை விரிவாக நல்லமுறையில் நடத்தியது

(4) வீண் விரயச் செலவுகளைக் குறைத்தது—ஆகியவை
களாகும்.

3. சுமார் 2 கோடி ரூபாய் மூலதனமாகவும், கடனாகவும்
அரசாங்கம் இந்தக் கழகத்திற்குக் கொடுத்துவிட்டு, கடனாகக்
கொடுத்த பணத்திற்கு, வட்டியையும் சென்ற ஆண்டுவரை
தள்ளுபடி செய்துள்ளது. கழகத்தின் முக்கிய குறிக்கோள்
சாதாரண, ஏழை, நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்கு விரிவான
வசதிகள் செய்து கொடுப்பதாக இருப்பதால், அதிக இலாபத்
தைக் கருத்திற்கொண்டு வாணிப நோக்கோடு இக் கழகம் செயல்
பட முடியவில்லை. இருந்தபோதிலும், கழகம் செலவினங்
களைக் குறைத்து, வரவினங்களை அதிகரிக்க முயற்சி செய்து
வருகிறது.

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மூன்று
பிரிவுகள் உள்ளன, அவை:—

(1) தலைமை அலுவலக நிர்வாகப் பிரிவு.

(2) போக்குவரத்துப் பிரிவு.

(3) சுற்றுலா விடுதிகள்.

முதல் இரண்டு பிரிவுகளுக்கும் அரசு அலுவலர் பெறும் விகிதத் தில் மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி 1—1—1979 முதல் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு உணவு விடுதிகள் பணியா ளர்கள் சம்பளச் சட்ட விதிகளின்படி (Catering Establishment Act) அடிப்படைச் சம்பளத்தை நிர்வாகம் மாற்றிக் கொடுத்திருக்கிறது.

குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் படிப்படியாக தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலமுதல் "நாள் ஊதியம்" ரூ. 4 ஆக இருந்ததை 1—10—1978-ல் ரூபாய் 5 ஆகவும், 1—1—1979-லிருந்து ரூ. 6 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. உணவு விடுதிகள் பணியாளர் சம்பளச் சட்டத்தின்படி குறைந்த "நாள் ஊதியம்" வெவ்வேறு இடங்களுக்கு ரூ. 4 லிருந்து ரூ. 5·75 வரை நிர்ணயிக்கப்பட்டிருந் தாலும் எல்லாச் சுற்றுலா விடுதிகளிலும் வேலை செய்யும் எல்லாப் பிரிவு ஊழியர்களுக்கும் பாகுபாடின்றி நாள் ஒன்றுக்கு ரூ. 6 தரப்படுகின்றது. மாதத் தொகுப்புச் சம்பளம் ரூ. 120, ரூ. 130 என்று வாங்கிக் கொண்டிருந்ததை, குறைந்தபட்சமாக 1—10—1978 முதல் ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளரின் நீண்ட நாள் கோரிக்கையான "சம்பள விகிதம்" (Pay scales) ஒரு ஆண்டு பணிபுரிந்த, அனைவருக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு உணவு விடுதிகள் பணியாளர் சம்பளச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஊதியத்தைவிட எவ்வளவு அதிகம் கொடுக்கப்படுகிறது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்:—

வரிசை எண்ணும் விவரங்களும்.	பிரிவு-அ (மதுரை, திருச்சி.)	பிரிவு-ஆ (தஞ்சை, உதகை, சிதம்பரம்).	பிரிவு-இ (மற்றவை.)
(1)	(2)	(3)	(4)
1. வரவேற்பாளர்:			
அ. சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம்.	202·50	187·50	165·00
ஆ. 1—1—1979-க்கு முன் அளிக்கப்பட்ட ஊதியம்.	260·00	250·00	[illegible]

வரிசை எண்ணும் விவரங்களும்.	பிரிவு-அ (மதுரை, திருச்சி.)	பிரிவு-ஆ (தஞ்சை, உதகை, சிதம்பரம்.)	பிரிவு-இ (மற்றவை.)
(1)	(2)	(3)	(4)
1. வரவேற்பாளர்—தொடர்ச்சி.			
இ. 1—1—1979-க்குப் பின் அளிக்கப்படும் ஊதியம்.	285·00	275·00	270·00
2. சமையற்காரர்:			
அ. சட்டப்படி குறைந்த பட்ச ஊதியம்.	187·50	172·50	150·00
ஆ. 1—1—1979-க்கு முன் அளிக்கப்பட்ட ஊதியம்.	225·00	200·00	175·00
இ. 1—1—1979—க்குப்பின் அளிக்கப்படும் ஊதியம்	250 00	225·00	200·00
3. அறை பையன் (Room Boy):			
அ. சட்டப்படி குறைந்த பட்ச ஊதியம்.	142·50	135·00	120·00
ஆ. 1—1—1979-க்கு முன் அளிக்கப்பட்ட ஊதியம்.	180·00	180·00	180·00
இ. 1—1—1979-க்குப் பின் அளிக்கப்படும் ஊதியம்.	205.00	205·00	205·00
4. துப்புரவாளர் (Sanitary Worker):			
அ. சட்டப்படி குறைந்த பட்ச ஊதியம்.	142·50	135·00	120·00
ஆ. 1—1—1979-க்கு முன் அளிக்கப்பட்ட ஊதியம்.	155·00	155·00	150·00
இ. 1—1—1979-க்குப் பின் அளிக்கப்படும் ஊதியம்.	180·00	180·00	175 00

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 17

மற்ற சுற்றுலாவிடுதி கழக ஊழியர்களும் இதைப்போல் அதிக
ஊதியம் வாங்குகிறார்கள் என்பதை உறுதியாக எடுத்துச்
சொல்ல முடியும். இது மட்டுமல்ல;

இந்தக் கழகத்திற்கு இணையான மற்ற உணவு விடுதிகளுடன்
ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது கழகத்தின் ஊதியநிலை
உயர்வாகத்தான் உள்ளது என்பதை உறுதியாக எடுத்துக்காட்ட
முடியும். ஊதியம் தவிர ஊழியர்கள் ஆண்டுக்கு ஒரு முறை
போனஸ், ஆண்டுக்கு ஒரு முறை சீருடை, மாதாந்திர சலவைப்
படியாக ரூ. 5, தவிர வேலைநேரத்தில் அரைக்கட்டணத்தில்
உணவு முதலிய சலுகைகளையும் அனுபவித்து வருகிறார்கள்.
கடந்த 2 ஆண்டுகளில் இந்த ஊழியர்களுக்கு இத்தனை
சலுகைகள், இத்தனை ஊதிய உயர்வுகள் அளிக்கப்பட்டிருந்தும்,
இப்பொழுது முன்னறிவிப்பில்லாத சட்டவிரோதமான வேலை
நிறுத்தத்தில் எதற்காக ஈடுபட்டார்கள் என்பதை கழக
நிர்வாகத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(5) கடந்த ஆண்டுகளில், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெரும்
நட்டத்திற்கு உள்ளானதற்குக் காரணம் என்னவென்று ஆய்ந்து
பார்த்ததில் சுற்றுலா விடுதிகளில் பொருட்களை வாங்கும்போதும்,
வழங்கும்போதும், ஏற்படும் ஊழல்களும், தவறுகளுந்தான் அடிப்
படைக் காரணம் என்பது புலப்பட்டது. வெவ்வேறு முறைகளில்
ஆகும் செலவினங்களை மட்டுப்படுத்தவும், இந்த ஊழல்களைக்
களையவும், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக அமைப்பு
சீரமைக்கப்பட்டு, ஒரு வணிகமேலாளர் (உணவுவிடுதி) ஒரு
தலைமை கணக்காளர், ஒரு உள்துறை ஆய்வாளர் ஆகிய பதவி
கள் ஏற்படுத்தப்பட்டு, சுற்றுலா விடுதிகள் தீவிர கண்காணிப்
புக்கு உட்படுத்தப்பட்டன. இதன் பயனாக சுற்றுலா விடுதி
களை அடிக்கடியும், திடீர் சோதனை செய்யும் வாய்ப்புக்களும்
ஏற்படுத்தப்பட்டன. இச்சோதனைகளின் பயனாக குற்றங்கள்
கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை
எடுக்கப்பட்டது. இரண்டு மேலாளர்கள் உட்பட, 7 ஊழியர்கள்
மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஊழல் புரிந்தவர்கள் வேலையி
லிருந்து நீக்கப்பட்டார்கள் அல்லது தற்காலிக வேலைநீக்கம்
செய்யப்பட்டார்கள். இந்த தீவிர நடவடிக்கைகள் நீண்ட கால
மாக தவறு செய்வதில் பழக்கப்பட்ட ஊழியர்களுக்கு அதிர்ச்சியை
ஏற்படுத்தியது. இந்த ஊழலில் சம்பந்தப்பட்ட சில ஊழியர்கள்
தங்களுக்குத் துணையாக மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு,
ஒரு சங்கத்தை அமைத்து அதன்மூலம் நிர்வாகத்தை அச்சுறுத்த
முயன்றனர். எனினும், ஏற்படுத்தப்பட்ட இந்தத் தொழிற்சங்கம்
முறையாக அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், தொழிலாளர்
நலன் கருதி சம்பளப் பிரச்சினைகளைப் பற்றியும், சலுகைகளைப்
பற்றியும் சங்கத்துடன் பேச நிர்வாகம் முன்வந்தது. சொல்லப்

1979 ஏப்ரல் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

போனால், 1978ஆம் வருடம் செப்டம்பர் மாதம் தொடங்கிய
பேச்சு வார்த்தைகளை விரைவிலேயே சுமுகமாகத் தீர்த்துவிட்டு,
நிர்வாகம் மேலும் பல ஆக்கப் பணிகளில் ஈடுபட ஆர்வம் கொண்
டிருந்தது. ஆனால் தொழிற்சங்கம், இந்தப் பிரச்சினைகளை
சுமுகமாகவும், விரைவாகவும் தீர்க்க ஆர்வம் காட்டவில்லை.
மாறாக, இப்பிரச்சினைகளை எவ்வளவு காலம் தாழ்த்த முடியுமோ
அந்த அளவு காலதாமதம் செய்து வந்தது. நான்கைந்து
மாத காலத்தில், தொழிற்சங்கத்துடன் நிர்வாகம் பேச்சு
வார்த்தைகளை நடத்தியும் ஒரு முடிவும் காணமுடியவில்லை,
தொழிற் சங்கம், நிர்வாகத்துடன் பேசி சுமுகமான முடிவிற்கு வர
ஆர்வமோ, அக்கறையோ கொள்ளவில்லையென்று தெளிவாக
சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தெரிந்த பின்பு, சிதம்பரத்தில்
1979ஆம் ஆண்டு சனவரி திங்கள் 29-ம் நாள்அன்று கூடிய நிர்
வாகக் குழு இந்தப் பிரச்சினையைத் தீர விவாதித்து கீழ்க்கண்ட
முடிவு எடுத்தது:—

"தொழிற்சங்கங்களுடன் நான்கு மாத காலம் பேசியும் ஒரு
சுமுகமான முடிவிற்கு வராததாலும், இந்தப் பிரச்சினையை
தாமதப்படுத்தி, தொழிலாளர்களிடையே அதிருப்தியை உண்
டாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதாலும், நிர்
வாகக் குழு கீழ்க்கண்ட சம்பள விகிதங்களை நிர்ணயம் செய்ய
முடிவு செய்துள்ளது. தலைமை அலுவலகத்திலுள்ள நிர்வாகப்
பிரிவிற்கும், போக்குவரத்துப் பிரிவிற்கும் மூன்றாவது சம்பளக்
குழுவின் சிபாரிசின்படியும், சுற்றுலா விடுதிகளில் பணிபுரிவோ
ருக்கு உணவு விடுதிகள் பணியாளர்கள் சட்டத்தின் அடிப்படை
யில் மாதம் ரூ. 25க்குக் குறையாமல் ஊதிய உயர்வு கொடுப்
பது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், தொழிலாளரின்
நீண்டநாள் கோரிக்கையான ஒரு வருடம் பணிபுரிந்தோருக்கு
'நாள் ஊதியத்தி'லிருந்து 'சம்பள விகிதப்'படி ஊதியம்
கொடுப்பது என்றும் முடிவு செய்யப்படுகிறது.

(6) ஆனால், தொழிற்சங்க நிர்வாகிகள் ஊழியர்கள் நலத்
தைக் கருத்திற் கொள்ளாமல், இந்தச் சம்பள விகிதங்கள் அவர்கள்
தொழிற்சங்கம் மூலம் அமுல்படுத்தப்படவில்லை என்ற ஒரே
காரணத்திற்காக கோபம் கொண்டு, நிர்வாகத்தின் நல்ல திட்டங்
களுக்கு இடையூறு செய்யும் வகையில் ஊழியர்களைத் தூண்டிக்
கொண்டிருந்தனர். மேலும் தனிப்பட்ட அதிகாரிகளை மிரட்டும்
வகையில் அநாகரிமானதும், உண்மைக்குப் புறம்பானதுமான
கையேடுகளையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டு ஆத்திர
மூட்டும் செயல்களில் ஈடுபட்டது. சுற்றுலா வளர்ச்சியினை
யொட்டி, பசிபிக் நாடுகளின் பயண முகவர் சங்கத்தின் அழைப்பி்ே
பேரில், இந்திய அரசின் அனுமதிபெற்று, தமிழ்நாட்டு அரசின்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 17

பிரதிநிதியாக சுற்றுலா இயக்குநர், ஒரு சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றதை, திரித்தும் மிகைப்படுத்தியும், உண்மையான செலவைவிட பலமடங்கு அதிகம் செலவு செய்த தாக துவேசப் பிரச்சாரம் செய்து, ஊழியர்களிடையே ஒரு விரோத மனப்பான்மையை உண்டாக்க இச்சங்கம் முனைந்து செயல்பட்டது. முறைகேடாக நடக்கும் ஊழியர்களுக்கு சங்கம் உறுதுணை புரிய வந்தது.

(அ) தவறுகளுக்குக் காரணமாகவும் அல்லது தவறுகளைக் கண்டிக்கத் தவறியதற்காகவும் ஒருகணக்கு அலுவலரைஅவருடைய தாய்த் துறைக்குத் திருப்பி அனுப்பிவிட்டதைக் கண்டு தொழிற் சங்கம் ஆத்திரப்படுகிறது.

(ஆ) பயண வழிகாட்டியாகப் பணிபுரியும் ஒரு ஊழியர் வெளியாட்கள் பத்துபேர்களுடன் வந்து, மேலாளரை அச்சுறுத்தி கேவலமாகப் பேசியதற்கு விளக்கம் கேட்டதைக்கூட தொழிற் சங்கத்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

(இ) ரூ. 1,000க்கும் மேற்பட்ட மதிப்புள்ள எழுதுபொருட் கள் குறைந்திருந்ததற்காக எழுத்தரிடமிருந்து விளக்கம் கேட்டது, தொழிற் சங்கத்திற்கு விரோதமானதாம்.

குற்றச்சாட்டிற்குள்ளான ஊழியர்கள் தொழிற்சங்க நிர்வாகி கள் என்ற நிழலில் நின்றுகொண்டு, தவறுகளைத் தட்டிக்கேட்கக் கூடாது என்று போராடத் தூண்டுகின்றனர். கன்னியாகுமரி, இராமேசுவரம் சுற்றுலா விடுதிகளில் ஊழல் புரிந்தவர்களையும், உதகை படகுக் குழாத்தில் முறைகேடுகளுக்குக் காரணமாக இருந்த ஊழியர்களையும், வேலை நீக்கம் செய்தது பற்றி தொழிற் சங்கம் எதிர்த்து வாதாட முற்பட்டது. மதுரை சுற்றுலா விடுதி யில் ஒரு சொத்தும் இல்லாமல் வேலைக்கு வந்த எழுத்தர் மிகக் குறுகிய காலத்திலேயே பல வாடகை சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும், வட்டிக்குப் பணம் கொடுக்கும் முதலாளியாக ஆகியதையும், நிர் வாகம் விசாரணை செய்ய வேண்டி, அவரை அங்கிருந்து சென் னைக்கு மாற்றியதை தொழிற்சங்கத்தின் பெயரால் எதிர்க்கிறார் கள். மேற்சொன்ன செயல்கள் அனைத்தும் நிர்வாகத்தைத் தூய் மைப்படுத்தவும், சுற்றுலாக் கழகத்தினை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட பணிகள் ஆகும். ஆனால் துரதிருஷ்டவசமாக இப்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது எடுக்கும் நடவடிக்கையை பழி வாங்கும் நடவடிக்கைகளாக தொழிற்சங்கம் வர்ணித்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வாதாட முன்வருகிறது.

(7) 1971-இல் ஒரு சொகுசுப் பேருந்துடன் ஆரம்
பிக்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவு இன்று 10 பேருந்துகளைக்
கொண்டுள்ளது, சென்ற பல ஆண்டுகளாக நடந்து வந்த,
சிக்கனச் சுற்றுலாக்கள் சீரமைக்கப்பட்டு சென்ற டிசம்பரி
லிருந்து வாரத்திற்கு ஒரு முறை வீதம் ஏழு நாள் சிக்கனச் சுற்று
லாக்கள் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரு
கின்றன. வெற்றிகரமாகவும், நட்டமில்லாமலும் நடத்தப்படும்
போக்குவரத்துப் பிரிவையும், கதவடைப்பு செய்கிற நிலைமைக்கு
ஆளாக்கி விட்டார்கள்.

அ. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருநது
ஒட்டுநராக இருப்பவர் ஐந்தாண்டு பணிபுரிந்தால் ரூ. 424 பெற்று
வந்தார். இது மாற்றியமைக்கப்பட்டு ரூ. 455 ஆக உயர்த்தப்
பட்டுள்ளது. சம்பளத்தோடு மாதம் சராசரி ரூ. 200 லிருந்து
ரூ. 250 வரை படி (Bata) கிடைக்கின்றது. ஆக மொத்தம்,
ஊதியம் ரூ. 700 வரை ஒரு ஒட்டுநருக்குக் கிடைக்கின்றது

ஆ. இதோடு 8.33 சதவீதம் போனஸ் வேறு உண்டு. படி
விகிதம் மற்ற மாநிலங்களுக்கு அல்லது கோடை வாசஸ்தலங்
ளுக்குச் சென்றால் தினப்படி ரூ. 12 ஆக இருப்பது ரூ. 18 ஆக
உயர்த்தித் தரப்படுகின்றது. சுற்றுலா விடுதிகளில் ஒட்டுநர்
தங்கினால் ரூ. 20 வாடகை உள்ள அறை ரூ.2-க்குத் தரப்படு
கின்றது, உணவு விடுதிகளில் பாதிக் கட்டணத்தில் உணவு வழங்கப்
படுகிறது.

இ. ஒவ்வொரு ஓட்டுநருக்கும் ஆண்டொன்றுக்கு மூன்று டெரி
காட்டன் சீருடைகள் இலசவமாகத் தரப்படுகின்றன.

ஈ. ஆண்டொன்றுக்கு ஒரு ஜதை காலணியும், இரண்டு ஜதை
டெரிகாட்டன் கால் உறைகளும் இலவசமாகத் தரப்படுகின்றன.

உ. மாதம் ஒன்றுக்கு ரூ. 5 சலவைப்படி அளிக்கப்படுகிறது.

ஊ. ஆண்டொன்றுக்கு ரூ. 600 வரை வைத்திய வசதிப்படியும்
ஆண்டொன்றுக்கு 15 நாட்கள் (சரண்டர்) (Surrender) விடு
முறைச் சம்பளமும் தரப்படுகின்றது.

எ. ஓட்டுநர் வசதியோடு உட்கார்ந்து வண்டி ஓட்ட ரூ. 1,500
செலவில் ஒரு இருக்கையும் மற்றும் மின்விசிறி வசதியும் செய்து
தரப்பட்டுள்ளது., ஓட்டுநர்களுக்குள்ள எல்லா வசதிகளும் பயண
வழிகாட்டிகளுக்கும் அளிக்கப்படுகிறது. அதோடு, சுற்றுலாப்

[திரு. மு. அம்பிகாபதி] [1979 ஏப்ரல் 17

போய் விட்டு வந்து வேறு இலாகாவுக்குப் போய் விட்டார். தொழிலாளர் நல இலாகாவுக்குப் போய்விட்டார். இருப்பவர் வெளிநாட்டுக்குப் போய் வந்து வேலை நீக்கம் செய்வது வீட்டுக்கு அனுப்புவது, பழி வாங்குவது போன்ற மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மீது ஒரு சங்கந்தான் இருக்கிறது—ஆளும் கட்சி சங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு ஒரே ஏ.ஐ.டி.யு.சி. சங்கத் தலைவர் எந்த நேரத்திலும் பேச்சு வார்த்தைக்கு direct negotiation and settlement-க்குத் தயாராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம் கேட்கத் துணைக் கேள்வியாகக் கேட்கலாமே தவிர விரிவான பேச்சாக இருக்கக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : அரசாங்கம் பேசித் தீர்த்துக் கொள்ள சம்பந்தப்பட்ட யூனியன் தலைவர் திரு. கே. எம். சுந்தரம் போன்றவர்களை அழைத்துப் பேசி சுமுகமாகத் தீர்க்க முயல முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பது தமிழக அரசினுடைய நேரடி பார்வைக்கு உட்பட்ட அரசுத் துறை அல்ல. அது தன்னாட்சி நிறுவனமாகும். அதற்கென்று நிர்வாகக் குழு இருக்கிறது. டைரக்டர்கள் போர்டு இருக்கிறது. அவர்கள் தான் அந்த நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே யாரும் தனிப்பட்ட முறையில் நிர்வாக ஆதிக்கத்தைச் செலுத்த முடியாது. அன்றாட நிர்வாகத்தை அந்தக் கழகந் தான் கவனித்துக் கொள்ளும். அரசினுடைய கவனத்திற்கு அது வராது. இங்கு இவை எல்லாவற்றையும் விரிவாக விளக்க நேரம் ஆகும் என்ற காரணத்தால் எட்டு பக்கங்களுக்கு மேல் அத்தனை விவரங்களையும் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கேட்ட அத்தனை விளக்கத்திற்கும் விரிவான பதில் இந்த அறிக்கையில் இருக்கிறது என்பதுதான் என்னுடைய பதிலாக இருக்கும்.

இருந்தாலும், தொழிற்சங்கத் தலைவரை அழைத்துப் பேசவில்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறார். எப்போது அழைத்துப் பேசப்பட்டது என்ற விவரமும், எத்தனை தடவை பேசப்பட்டது என்ற விவரமும் அறிக்கையில் இருக்கிறது. அதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலைமையில்

ல் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

நிர்வாகி எந்த முடிவையும் எடுக்கவில்லை. அந்த க் குழு—போர்டு ஆப் டைரக்டர்ஸ் 1979ஆம் ஆண்டு ர் மாதம் 29ஆம் தேதி அன்று கூடி இதற்கு ஒரு முடிவு வேண்டுமென்று அவர்களாகவே சம்பளத்தை உயர்த்தி வித்து இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். வேறு ர் மீதும் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ட்டாண்டுக் காலமாக நஷ்டத்தில் போய்க் கொண்டிருக்கிற முகத்தைக் கடந்த இரண்டாண்டுகளில் தான் நிர்வாகச் சீர் திருத்தத்தின் மூலமும், சிக்கனச் செலவுகளை மேற்கொண்டதன் மூலமும் நல்ல தூய்மையான நிர்வாகத்தை மேற்கொண்டு அங்கே தவறுக... உட்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ...டத்திலிருந்து தடுக்கிற நிலைமைக்கு இந்தக் கழகம் வந்திருக்கிறது. நான் தெரிவித்திருப்பதுபோல் கடந்த எட்டாண்டு காலத்தில் நேரடியாக இந்த வழிகளால் ஏற்பட்ட நஷ்டம் 55·81 லட்சம் ரூபாய்.

(முற்பகல் 10–30.)

கடந்த நான்கு ஆண்டுகளிலே அரசின் ஆதரவோடு பொருட் காட்சிகளை நடத்தி ...ந்த லாபத்தைக் கொண்டு போய் 32·73 இலட்சத்தை அதிலே சேர்த்ததற்குப் பிறகு நட்டம் 23·08 இலட்சமாகக் குறைந்து இருக்கிறது. இப்போது 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல் ஒருமுறை சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றரை மாதத்திற்கு முன்னாலே சம்பளஉயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி நிச்சயிக்கப்பட்டிருக்கிற அரசு நிர்ணயித்திருக்கிற சம்பளத்திற்கும் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவறு செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. யார் மீதும் பழி வாங்குவது என்பதல்ல. தவறு செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால் அதற்குப் பழி வாங்குகிறார்கள் என்று இலக்கணத்தைச் சொல்வார்களானால் அதற்கு அரசு ஆதரவு அளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனம், எந்த அதிகாரியும் தனி அதிகாரம் செலுத்த முடியாது. அதற்கென்று நிர்வாக போர்டு இருக்கிறது, டைரக்டர்ஸ் போர்டு இருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இராதா அவர்கள் அதனுடைய தலைவராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் ...ள, அமைச்சர் அவர்கள் எப்போதும் எந்தப் ... ...ாகப் படித்துத் தான் பதில் சொல்வார்கள்

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 ஏப்ரல் 17

கேள்வி சம்பந்தமாகப் பதில் சொல்லும்போது நாங்கள்
அறிவோம். இந்தப் பிரச்சினையைப்பற்றியும் அவர்கள் ஆழமாகப்
படித்திருக்கிறார்கள், அதன் காரணமாகத்தான் இங்கே 8 பக்க
அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த விவரங்கள் எனக்குப்
பூரணமாகத் தெரியாவிட்டாலும் இப்போது சம்பள உயர்வு
என்பது பிரச்சினையல்ல. மாற்றங்களும், வேலை நீக்கமும் தான
இப்போது பிரதானப் பிரச்சினை என்று
யாரையும் தூக்குத் தண்டனை என்று சொல்கிறார்கள்.
ரத்து செய்கிறோம் என்ற நிலை. போட்டால் அதையும்
தூக்குத் தண்டனை போலத்தான். வேலை நீக்கம் என்பது
மறுபடியும் அவர்களோடு பேசி ஆகவே தயவு செய்து
அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
வர்கள் அதற்கு ஒத்துழைப்பதற்குத் எங்களைப் போன்ற
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தயாராக இருக்கிறோம்

<u>மாண்புமிகு திரு ஆர்.எம்.வீரப்பன்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கொலை செய்தவனுக்குக்கூட தூக்குத்
தண்டனை கிடையாது அல்லது கூடாது என்பது இன்றைக்கு
விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு விவரம். ஆனால்
தெரிந்து, திட்டமிட்டு பொதுமக்களுடைய பணத்தைக் கையாடல்
செய்து அல்லது தவறு செய்து அல்லது பொதுமக்களுடைய
பணத்தை எடுத்துக் கொள்கின்ற இப்படிப்பட்ட குற்றங்களுக்கும்
நடவடிக்கை தேவையேயில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்
போன்றவர்கள் அறிவுரை வழங்கமாட்டார்கள் என்று கருது
கிறேன். தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பபட்டி
ருக்கின்றது.

ஒரு சான்றை நான் தருகிறேன். ஒரு பொறுப்பா
ளரிடத்திலே எழுதுபொருள் ஆயிரம் ரூபாய் வரை குறைந்தி
ருக்கிறது, ஸ்டாக்கிலே. அதைக் கேட்டால்,
நடவடிக்கை எடுத்தால் அதுவும் தவறு என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி
பேருந்து ஓட்டுகிற ஒரு டிரைவரிடத்திலே செலவுகளுக்காக என்று
பணம் தருகிறார்கள். 3 மாதம் 4 மாதம் வரை ஒருவர் 7,500
ரூபாய்வரை கணக்குக் கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்
கிறார், ஒருவர் 3,500 ரூபாய் வரை கணக்குக் கொடுக்காமல்
வைத்துக் கொண்டிருக்கிறார், ஒருவர் 2,000 ரூபாய் வரை
கணக்குக் கொடுக்காமல் வைத்துக் கொண்டு இருக்கிறார்,
இவைகளை எல்லாம் கேட்டால் சங்கத்தின் மூலம் வேலை
நிறுத்தம் என்று சட்ட விரோதமாக முன்னறிவிப்பு இன்றி,
வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் நட்டத்தி
லிருந்து இப்போதுதான் மூச்சு விடுகிற நிலைமைக்கு வந்து
கொண்டிருக்கிற நிறுவனத்தில் என்றால் இவற்றையெல்லாம்
கடந்து ஒரு தவறான கருத்தை, ஒரு பிரச்சாரத்தை வெளியே
தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பவர்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். அதை இப்போது மாண்புமிகு உறுப்பினர்

1979 ஏப்ரல் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

திரு. அம்பிகாபதி எனது மரியாதைக்குரியவர் அந்தக் கருத்தை இந்தச் சட்டமன்றத்திலே பரப்பிக் கொண்டிருக்கிறார். நான் அதை வன்மையாக மறுக்கிறேன். ஒரு தனிப்பட்ட அதிகாரி இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்று சொல்லி யாரை எல்லாமோ உதாரணம் சொல்லிச் சொன்னார். அந்த அதிகாரிதான் 4 ரூபாயாக இருந்த நாள் ஊதியத்தை அக்டோபர் முதல் 5 ரூபாயாக மாற்றி ஜனவரி முதல் 6 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். அந்த அதிகாரி தான் குறைந்த பட்ச ஊதியம் சுமார் ரூபாய் 202 என்று இருந்ததை 285 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். ஆகவே தவறு செய்கிறவர்கள் அவர்கள் தொழிலாளர்களானாலும் சரி, நிர்வாகிகளானாலும் சரி, முதலாளிகளானாலும் சரி யாருக்கும் யாரும் ஆதரவு தர மாட்டோம் என்ற உறுதியை இந்த மன்றத்தின் மூலம் நாட்டிற்கு நாம் அளித்தால் எல்லாம் நன்மையாக நடக்கும்.

மக்களுக்கு நன்மை செய்ய முடியும். இவ்வளவுக்குப் பிறகும் இன்றைக்குத் தொழிற் கழக அதிகாரிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், தொழில்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முடிவு நல்ல முடிவாக அமைய வேண்டுமென்று அரசும் விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u>: தலைவரவர்களே, ஒரு விளக்கம். தவறு நடந்திருந்தால்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சரே பதில் சொல்லி விட்டார் அமைச்சர் சொன்னதற்கு அப்பாற்பட்டு கருத்துக்கள் இருந்தால் சொல்லுங்கள்.

<u>திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் :</u> தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே ஒன்றிரண்டு கிளாரிபிகேஷன் தான் கேட்க விரும்புகிறேனே தவிர வேறொன்றும் கேட்கவில்லை. இந்த அறிக்கையிலே சுற்றுலா இயக்குநருடைய சுற்றுப்பயணம் குறித்து அவதூறு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நான் துருவித் துருவிப் பார்த்தேன், அதற்கான செலவு பற்றிய விவரம் இல்லை அந்தச் செலவு பற்றி அமைச்சரவர்கள் அறிவிப்ப தோடு, ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது இந்த நேரத்திலே, அந்தக் குறிப்பிட்ட சங்க நிர்வாகிகள் மீது

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1979 ஏப்ரல் 17

நடவடிக்கை எடுக்கும் முறையில் வேறுபல இடங்களுக்கு மாற்று வதும், சிலரை டிஸ்மிஸ் செய்வதும் சுமுகமான பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் என்பதை மனத்திற் கொண்டு அதை வாபஸ் பெற்று பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப் பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விளக்கத்தை அவர்கள் கேள்வியாகக் கேட்டதற்கு நன்றி. இந்த சுற்றுலாத்துறை இயக்குநர் வெளிநாட்டிற்குச் சென்றபொழுது பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவாகி விட்டது என்று தொழிலாளர்கள் மத்தியில் அச்சிட்டுப் பரப்பப்பட்டு வந்திருக்கிறது. இந்திய சர்க்கார், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்காக இந்த அதிகாரிகளை அனுப்புகின்ற அந்தத் திட்டத்தின்படி, தமிழ் நாட்டிலிருந்து ஒரு அதிகாரி அனுப்பப்பட்டார். அவருககு ஏற்பட்ட செலவு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றதில், அதில் ஏற்பட்ட செலவு 20,305 ரூபாய். அதற்குப் பிறகு தூரக் கிழக்கு நாடுகளைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால், சுற்றுலா பற்றிய கருத்தரங்கு ஹாங்காங்கிலே நடந்த பொழுது, தூரக் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளைக் கவர வேண்டும், அவர்களிடத்தில் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய சர்க்கார் அனுமதியோடு அதிகாரி அனுப்பப்பட்டார். அதற்கு ஏற்பட்ட செலவு 32,619 ரூபாய். இதுதான் நடைபெற்றது. ஆனால் அச்சடித்துத் தரப்பட்டிருக்கிற துண்டு அறிக்கையிலே இலட்சம் இலட்சமாகச் செலவழித்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

இரண்டாவது கேள்விக்கு விடை, நடவடிக்கை எடுக்கப்படுவது, அவர்கள் செய்த தவறுகளுக்காக அல்லது வேறு பல குற்றங்களுக்காக. அது தனியாக இருக்கிறது, விசாரிக்கப்படுகிறது. அவைகள் நிரூபிக்கப்பட்டால் தண்டனை கிடைக்கும், இல்லையென்றால் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். எனவே, அதற்கும் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் சம்பந்தமில்லை, பேச்சுவார்த்தை தொடரலாம்.

(ஆ) இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றினை தமிழ் நாட்டில் நிறுவுவது குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் பி. எச். பாண்டியன், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி. எச். பாண்டியன்.

1979 ஏப்ரல் 17]

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே,
நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிரிவுகள் பல்வேறு
மாநிலங்களில் இயங்க வேண்டுமென்று, உயர்நீதி மன்றத்
தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் தெரிவித்த கருத்திற்கிணங்க,
ஒரு பிரிவை தமிழ்நாட்டில் நிறுவ வேண்டியதன் அவசியம்
குறித்து".

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத்
தலைவ்ரவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130
-வது பிரிவின்படி, இந்தியாவின் உச்ச நீதிமன்றம், டில்லியிலோ
அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று
இந்தியாவின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவ்வப்போது
குறிப்பிடக்கூடிய பிற இடத்திலோ அல்லது இடங்களிலோ அமைய
வேண்டும். "தென் மாநிலங்களில் இந்திய உச்ச நீதிமன்ற
நீதிபதிகளின் சர்க்யூட் பேராயம்" (Circuit Bench) என்
கிற பொருள், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிகளின் 1979
ஆம் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்தது.
இது குறித்து எடுத்துள்ள முடிவு பற்றி இதுவரையில் இந்த அரசு
எந்தவிதத் தகவலையும் பெறவில்லை.

எனவே, இப்பொருள் பற்றி இந்த அவையில் விவாதிக்க
எடுத்துக் கொள்வதற்கு இது உரிய தருணமல்ல என்று நான்
கருதுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே,
நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் இந்த உயர்நீதிமன்றத்
தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைப்
பற்றி அவர்களுக்கு தகவல் இல்லை என்று சொன்னார்கள்.
இந்த ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சென்னையிலே உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தில் பேசுகின்ற
பொழுது, தமிழ் மாநிலத்தில் உச்ச நீதிமன்றத்தின் பிரிவு அமைக்
கப்பட வேண்டுமென்ற எண்ணத்தையும், தமிழ் நாட்டு மக்களின்
கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40.)

அதற்குப் பின்னால் பாராளுமன்றத்தில் இதே எண்ணத்தை,
நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுப்பினார்கள்.
அங்கே பதில் அளித்த சட்ட அமைச்சரவர்கள் இங்கே தமிழகத்

(இ) கோரிக்கை எண் 40 : சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து.

(ஈ) கோரிக்கை எண் 54 : சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

(உ) கோரிக்கை எண் 55 : சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

*திரு. மூ. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசுப் போக்குவரத்து, சாலை மேம்பாடு மற்றும் இந்த மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்தின்கீழ் 5,366 பேருந்துகள் கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் வாகனங்களையும் சேர்த்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல், 43,536 தொழிலாளர்கள் கூட்ஸ் டிரான்ஸ்போர்ட்டையும் சேர்த்து அதிலே பணி புரிவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சுமார் 50,000 தொழிலாளர்கள் இந்த நிறுவனங்களின் கீழே பணி புரிகின்றார்கள் என்று நாம் அறிகிறோம்.

குறிப்பாக போக்குவரத்து துறையின் மேம்பாடு பற்றி இந்த மானியக் கோரிக்கை மீது சில முக்கியமான விஷயங்களை நான் தெரிவித்துக் கொள்ள முன் வரும்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் அனைத்தையும் லாபகரமாக நடத்துவதற்கான நடவடிக்கைகளில் நாம் முன் முயற்சி எடுக்க வேண்டும். லாபத்தை ஈட்டுவதாகவும், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகவும், மக்களுக்கு சேவை செய்வதாகவும் இந்த நிறுவனங்கள் அமையவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துப் போக்குவரத்துக் கழகத்திற்கும் தேவையான அனைத்து உதிரி உறுப்புகளையும், அதாவது அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான அனைத்து உதிரி உறுப்புகளையும் அது சம்பந்தப்பட்ட பொறியியல் கழகங்களிலேயே தயாரிப்பதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறியியல் கழகங்களில் பணியாற்றுகின்ற பி.ஈ., டி.எம்.ஈ., ஐ.டி.ஐ படித்தவர்களை அவர்கள் படித்திருக்கிற கல்வித்தகுதிக்கு ஏற்ப அவர்களுடைய தகுதிகளை, திறமைகளை பயன்படுத்

திக்கொள்ள அரசு முன் வர வேண்டுமே தவிர அவர்களை வேறு வேலைகளுக்கு ஈடுபடுத்தக் கூடாது. அரசு கழகங்களிலேயே இத்தகைய காண்டிராக்டுகள், அறவே இல்லாமல் போகின்ற நிலையில் அனைத்து கழகங்களிலேயும் இருப்பவர்களை பயன்படுத்தி நடத்துகின்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். சில இடங்களில் டிரைவர்கள், கண்டக்டர்கள் நியாயமற்ற முறையிலே நடத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கழகங்களுக்கு தேவையான உறுப்புகள் வாங்கப்படும்போது, அதற்கு முன்னர் கூட்டப்படும் கூட்டத்தில், தொழிலாளர்களையும் அதிலே பங்குபெற்று அதை வாங்குகின்ற ஒரு முறையினை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். அனைத்து பேருந்து கழகங்களிலும் பேருந்துகள் அனைத்து வழித்தடங்களிலும் எடுக்கின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இஷ்டமான முறையிலே ஸ்டாப்பேஜ் போடுவது அல்லது வண்டிகளை நிறுத்துவது என்கிற நியாயம் அற்ற முறைகள் தடுக்கப்படவேண்டும். பழுது ஏற்பட்டாலும் சீர்படுத்தி நிறுத்தாத நிலை உருவாகவேண்டும். நம்முடைய குறிக்கோள், இந்த நிறுவனங்களின் மூலம் லாபம் ஈட்டுவது ஒன்று, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது இரண்டு, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வது மூன்று என்கின்ற நிலைமையில் நம்முடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்லவன போக்குவரத்துக் கழகத்திற்கு, பல்லவன் பொறியியல் கழகத்தை முழுமையாகப் பயன் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பி.டி.சி யினுடைய வளர்ச்சி, பி.டி.சி. யினுடைய செயல்முறை ஆகியவற்றைப்பற்றி விரிவான அறிக்கை ஒன்றை எங்கள் A.I.T.U.C.யின் மாநிலதலைவர் கே.எம். சுந்தரம் அவர்கள் அமைச்சர் அவர்களை சந்தித்து கொடுத்திருக்கிறார் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுப் போக்குவரத்து கழகங்களைப் பொறுத்த வரையில் காலத்தை முறைப்படுத்துவது, பேருந்துகளை முழுமையாகப் பயன்படுத்துவது என்ற முறையில் நம் செயல்பாட்டை கொண்டு வர வேண்டும். ஒரு விஷயம் அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும், தனியார் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் இப்படி காலத்தை முறைப்படுத்தாத காரணத்தினால் மோதல்கள் ஏற்பட்டு, தஞ்சையில் 3 முறை பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் பிராஞ்சு மேனேஜர் தான் நினைத்த நேரத்தில் பேருந்துகளை விட அனுமதிக்கிறார். தனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் சில இடங்களில், சில வழித்தடங்களில் அனுப்புகிறார். இப்படிப்பட்ட நிலைமையில்

[திரு. மு. அம்பிகாபதி] [1979 ஏப்ரல் 17

அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கும் தனியார் போக்கு வரத்து தொழிலாளர்களுக்கும் தஞ்சையில் 3 முறை மோதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன்.

அனைத்து கழகங்களிலும் உள்ள தொழிலாளர்கள் குறிப்பாக சகல விஷயங்களிலும் தங்கள் பங்கைப் பெற வேண்டும். அந்த முறை வர வேண்டும். இன்னொரு விஷயம். வழித்தடங்களை யும் நேரங்களையும் கணிப்பு செய்கிறபோது ஒரு குறிப்பிட்ட வழி தடத்தில் பேருந்து செல்கிற திட்டத்தை நிறுத்திவிடலாம் என்று கருதுகிறபோது அந்த வழித்தடங்களில் பணியாற்றுகிற டிரை வர்கள் கண்டக்டர்கள் ஆகியவர்களை கூட்டி பிராஞ்ச் மேனேஜர் பேசி முடிவெடுக்க வேண்டியது மிக முக்கியமாகும் என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக போனஸ் வழங்குகிறபோது. தொழிற் சங் கங்களுடன் பேசி இது தீர்க்கப்பட வேண்டும். அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அலக்கபிள் அல்லது அவைல பிள் சர்பிளஸ் என்பதை தொழிலாளர்களையும் இணைத்து செயல்பட வேண்டும். தொழிற்சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும். அப்படி இல்லாமல் போனஸை வைத்துக் கொண்டு போனஸ் வழங்கினால் அதன் விளைவாக போராட்டம், அடிதடி, கலாட்டா, மக்கள் பாதிப்பு என்று ஏற் படுகிறது. கலெக்டிவ் சிஸ்டம் என்ற முறையிலே அது அமுலாக் கப்படவேண்டும் என்று இந்த அரசை வணக்கத்தோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–50]

தொழிற்சங்கத்துடன் பேசி இது எடுக்கப்படவேண்டுமே தவிர அரசு, போக்குவரத்துக்கழகங்களே தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கக்கூடாது. செப்டம்பர் 1978-ல் செய்யப்பட்ட ஒப்பந் தம்—பி.டி.சி. யிலும், மற்ற இடங்களிலும் இங்கே அமல்படுத் தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை அமல்படுத்து வதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சங்கம் வைக்கிறார்கள் என் பதற்காக அங்கிகரிக்கப்படாத சங்கங்களும் பெயர் பலகைகளை போக்குவரத்துக் கழகங்களின் பணி மனையில் தொங்க விடு கின்றன. உதாரணமாக, தஞ்சையில் இருக்கும் கிளை பி.டி.சி. அலுவலகத்தில் அனைத்திந்திய அண்ணா தொழிலாளர்கள் முன் னேற்றப்பேரவையின் பலகை உள்ளே வைக்கப்பட்டு இருக்கிறது. அது எந்த வகையில் நியாயம் என்பதை அரசு விளக்கவேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 17] [திரு. மு. அம்பிகாபதி]

அடுத்து, இன்றைக்கு அனைத்து கழகத்திலும் ஒரே மாதிரி யான ஊதிய விகித முறை மட்டுமின்றி, படி, அல்லது பேட்டா, எல்லாமே ஒரே அடிப்படையாக டிரைவர், கண்டக்டர்களுக்கு இருக்க வேண்டும். ஒருவருக்கு 10ரூ. அல்லது 15ரூ. என்று சொன்னால் அனைவருக்கும் அந்த அளவிற்குத்தான் இருக்க வேண்டும். இந்த கலெக்ஷன் பேட்டா அதிகமாக சிலருக்குக் கிடைக்கும் வகையில், சில பிராஞ்சு மானேஜர்கள் அவர் களுக்கு வேண்டியவர்களுக்கு கும்பகோணம் — திருச்சி, கும்பகோணம்—மதுரை போன்ற ரூட்டுகளில் போட்டு, அதிக ஊதியம் அதனால் பெறுகின்றவர்கள் மூலமாக சங்கத்தை உடைப்பது, தொழிலாளர்கள் ஒற்றுமையைக் குலைப்பது போன்ற வைகள் நிகழ்கின்றன. கலெக்ஷன் பேட்டாவால் வருகிற விளைவு இது தான். நாம் பொது மக்களுக்கு பணி செய்கிறோம். அப்படி பணி செய்கிற ஊழியர்களுக்கு அதிக பேட்டா கொடுக்கவேண்டி யது தான். எனவே எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் வகையில் ஒரு நிர்ணயிக்கப்பட்ட முறையில் பேட்டா கொடுக்கவேண்டும். ஊக்கஊதியம், இன்சென் டிவ் போனஸ்-ஒரே முறையில் எல்லோருக்கும் கிடைக்கும் வகை யில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்த 6 ஆண்டுகளில் 4 எம்.டி.க்கள் மாறியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது இப்போது முறையாக நடத்தப்படுவதாகவும், தகவல் கிடைக்கின்றது. லாபம் இருப்பதாகவும் சொல்லப்படு கிறது. நல்லது. வரவேற்கத்தக்கது. அந்த எம்.டி.க்கு வாழ்த் துக்கள். அதை மேலும் செம்மைப்படுத்த, இன்னும் பல்வேறு வழித்தடங்களில்—கூட்ஸ்—பொருள்போக்குவரத்து வாகனங்களை விடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

அரசுத் துறையில் 53சதவீதம் பஸ் இன்றைக்கு நம்மிடம் இருக் கிறது. தனியார் துறையில் 47 சதவீதம் இருக்கிறது. தனியார் துறை பஸ்ஸைப் பற்றி ஒரு தெளிவான கொள்கை என்ன என்பதை பற்றி இன்னும் சர்க்கார் அறிவிக்கமாட்டேன் என்கிறார்கள். அது 4 பஸ்ஸா, 5 பஸ்ஸா, அல்லது ரூபாய் அளவில் சொன்னால் 10 லட்சமா, 15 லட்சமா, அவர்கள் எந்தஅளவிற்கு வைத்துக் கொள்ளலாம், அந்தத் தொழிலைக் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்டிரீஸ் என்று அரசு கருதுகிறதா? சிறு தொழில் என்றால் 15 லட்சம் ரூபாய் வரை வைத்துக்கொள்ளலாம். 5—6 பஸ் வைத்துக் கொள்ளலாம். இதையெல்லாம் பற்றி தெளிவான முறையில் அறி விக்கவேண்டும். காரணம், தற்போதுள்ள சூழ்நிலையில் பேருந்து கள் வாங்குவதற்கு வட்டிக் கடைக்காரர்கள் கடன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். வட்டிக்கடன் வாங்குவதில் கூட சங்கங்கள் இருக்கின்றன. இத்தகைய ஒரு கொள்கை அறிவிப்பின் மூலம், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு, தொழிலாளர்களுக்கும்

வேலை நிரந்தரம், உத்தரவாதம் ஆகியவை கிடைக்கிறது. தற்போது தனியார் துறையில் அந்த வாய்ப்பு இல்லை. தனியார் பேருந்து நடத்தும் நிர்வாகிகளுக்கே பாதுகாப்பு இல்லாதபோது தொழிலாளர்களைப் பற்றி என்ன சொல்வது? ஆகவே, தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் அந்தத் துறை பற்றி அரசாங்கம் தன்னுடைய தெளிவான கொள்கையை அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு கும்பகோணத்திற்கும் முத்துப்பேட்டைக்கும் இடையே சி.ஆர்.சி. பேருந்து விட்டார்கள். அங்கே ஏற்கனவே கே.ஆர்.டி. பஸ் (தனியார் பஸ்) ஓடிக்கொண்டு இருந்தது. அந்த பஸ் அதிபர் ஒரு சேட்டிடம் கடன் வாங்கி அந்த பஸ்ஸை வாங்கியிருந்தார். இந்த சி.ஆர்.சி. பஸ் வந்ததன் காரணமாக அந்த கே.ஆர்.டி. பஸ் நின்று போயிற்று. பஸ் ஷெட்டுக்குப்போய் விட்டது. தொழிலாளர்கள் சந்தியில் நிற்கிறார்கள். ஆகவே, ஒரு ரூட்டை எடுக்கிறபோது அரசாங்கம் பஸ்ஸையும் எடுக்க வேண்டும், தொழிலாளர்களையும் எடுக்கவேண்டும். அப்போது தான் இப்படிப்பட்ட நிலையைப் போக்கமுடியும்.

ஆகவே, தனியார் துறையைப் பற்றி ஒரு தெளிவான கொள்கையை சிறு தொழில் என்று கருதுகிற அடிப்படையில் இருக்க வேண்டும். 15 லட்ச ரூபாய் மதிப்பு அல்லது 5 –6 பஸ் வைத்துக் கொள்ளலாம் என்கிற வகையில் முடிவு எடுத்து, அரசு அறிவிக்க வேண்டும். தனியார் துறை பாதுகாப்பு, சிறு தொழில் பாதுகாப்பு, தொழிலாளர்கள் பாதுகாப்பு என்கிற அடிப்படையில் அதை அரசு பார்க்கவேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து .... (குறுக்கீடு) .... இந்த ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் எப்படி இருக்குமோ அப்படி 15 இலட்சம் என்ற அந்த அளவுக்கு கணக்கு பண்ணிக்கொள்ளுங்கள். .. அரசாங்கமே செய்யலாம்.

அடுத்து சில முக்கியமான விஷயங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் துறை போக்குவரத்துத் தொழிலாளர் மாநாடு 13—4—1979 அன்று பட்டுக்கோட்டையில் நடந்து இருக்கிறது. அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மாநாடு 15—4—1979 அன்று குடந்தையில் நடந்திருக்கிறது. அந்த மாநாடுகளின் முடிவில் பல கோரிக்கைகள் அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

அடுத்து என்னுடைய தொகுதியாகிய, தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி தாலுக்காவில் ஆதிச்சபுரம், வேதபுரம், வங்கத்தான்குடி, மார்நகரி, நாணலூர், செந்தாமரைக்கண், தேவதானம், புத்தகரம், சித்தமல்லி என்ற ஊர்களிலுள்ள சாலைகள் நீண்ட நாளாக பேருந்து செல்லாத சாலையாக உள்ளது. இந்தச் சாலையை நன்கு அமைத்துக்கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கூறி இருக்கிறேன். அவர்கள் அந்தப் பகுதிக்கு நேரில் வருவதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

மன்னார்குடி தாலுக்காவில் பெருகவாழ்ந்தான்—மதுக்கூர் சாலையில் பாமினி ஆற்றில் இந்த ஆண்டு பாலம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்ட மாண்புமிகு அமைச்சரவர்கள் வருவதாக உறுதி கூறியுள்ளார்கள். அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியையும், எமனேஸ்வரத்தையும் இணைக்கக்கூடிய இடத்திலே உள்ள ஆற்றிலே ஒரு ஓடு பாலம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இராமநாதபுரம், தஞ்சை, நெல்லை ஆகிய இந்த மாவட்டங்களை இணைக்கும் முறையில் சேது சாலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க வேண்டும்.

அடுத்து திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் பனையூர் பஞ்சாயத்தில் உள்ள கோலப்பேட்டை, அய்யனாற்றில் ஒரு பாலமும், கோட்டூர் யூனியன் பகுதியில் முள்ளியாற்றில் ஒரு பாலமும் தகுந்த முறையில் கட்டித் தருவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாமினி ஆற்றில் பாலத்திற்கு அடிக்கல் நாட்ட வருவதாக அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அவர்கள் விரைவிலே வந்து அடிக்கல் நாட்டிக் கொடுப்பதோடு மன்னார்குடி தாலுக்காவில் இலட்சக்கணக்கான அரிஜன உழைக்கும் மக்கள் வாழ்கின்ற கரியாற்றங்கரைச் சாலையை விசேஷ திட்டத்தின் மூலம், சிறப்பு நிதியின் மூலம் சீர்படுத்தித் தரவேண்டும் என்று தாழ்மையோடு வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பஸ் போக்குவரத்து பற்றிப் பேசுகின்றபோது குறிப்பாக அந்த இலாக்கா சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளையும் பற்றிப் பேச வேண்டிய அவசியத்திலே இருக்கிறேன்.

[திரு.ரா.மார்க்கபந்து] [1979 ஏப்ரல் 17

ஏற்கனவே மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்
களும், முதலமைச்சரவர்களும், ஜூனியர் இன்ஜினியர்ஸ்,
டிப்ளமோ ஹோல்டர்ஸ் ஆகியவர்களுடைய நியமனத்தைப்
பற்றியும், ப்ரமோஷன்களைப்பற்றியும் ஏற்கனவே பேசி இருக்கி
றார்கள். பி. இ. பட்டதாரிகள் மூன்று பேர்களுக்கு டிப்ளமோ
இன்ஜீனியர் ஒருவர் நியமனம் செய்யப்படவேண்டும் என்று
ஏற்கனவே அரசாங்கத்தினுடைய உத்தரவில் இருக்கிறது. அதே
போன்று அடுத்த நெக்ஸ்ட் காட்டகரி என்று சொல்லக்கூடிய
ஏ.டி.இ. என்கிற ப்ரமோஷனுக்கு இன்ஜினியர்களாக அய்ந்
தாண்டுக் காலங்கள் பணி செய்தவர்களுக்கும், டிப்ளமோ இன்ஜீ
னியர்களாக 10 ஆண்டு காலங்கள் பணி செய்தவர்களுக்கும்
அதே ரேஷியோவிலே ப்ரமோஷன் தரப்பட வேண்டும் என்று
அரசாங்கத்தின் உத்தரவிலே இருந்து கொண்டிருக்கிறது.

சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில்கூட இது குறித்துப்
பேசினேன். ஆனால் அது இன்னும் அமலுக்கு வரவில்லை.
அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்திலே இந்த ப்ரமோஷன் தருவதிலே 10 ஆண்டுக்
காலம் டிப்ளமோ இன்ஜீனியராக இருக்கிறவர்களுக்கு இந்த
ரேஷயோவிலே ப்ரோமோஷன் தரவேண்டும். இல்லை என்று
சொன்னால் ஏற்கனவே டிப்ளமோ இன்ஜீனியர்களாக இருக்கிற
வர்கள் அவர்கள் ரிட்டைராகிற காலம் வரையில் அதே நிலையிலே
இருந்து ரிட்டையராக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவர்
களுடைய மகன் இன்ஜீனியராக வந்துவிட்டால் அவர்களுக்குக்
கீழே பணியாற்ற வேண்டிய அவல நிலை இருந்து கொண்டு
இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக
அறிவார்கள். ஆகவே அதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதாவது 'The disparity has to be removed'.

அடுத்து எனக்குக் கிடைத்த தகவல்படி 15 வருட சர்வீஸ்
உள்ளவர்கள் 280 பேர்கள் இருக்கிறார்கள். 10 வருடங்
களுக்கு மேல் பணி புரிந்தவர்களுக்கு ப்ரமோஷன் தாருங்கள்.
இப்போ கிட்டத்தட்ட 85 பேர்கள் அமைச்சர் அவர்களிடம்
முறையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ப்ரமோஷன் வரு
வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது ஒரு ட்ரான்ஸ்பர் முறை வந்திருக்கிறது.
அதாவது சர்க்கிள் விட்டு, சர்க்கிள் மாற்றவேண்டும் என்றும்
டிஸ்ட்ரிக்ட் விட்டு டிஸ்ட்ரிக்ட் மாற்ற வேண்டும் என்று தகவல்
அளித்திருப்பதாகத் தெரிகிறது. அதை அமல்படுத்துவதன்
மூலமாக 700 இன்ஜீனியர்களை மாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை
ஏற்படும். அப்படி மாற்றப்படும்போது டி.ஏ. போன்றவைகள்
மூலமாக அரசாங்கம் ஏறக்குறைய 15 இலட்ச ரூபாய் தர
வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது.

1979 ஏப்ரல் 17] [திரு. ரா. மார்க்கபந்து]

(முற்பகல் 11-00).

அது அந்த அளவில் வேண்டுமா என்று கேட்க விரும்பு
கிறேன். ஜூனியர் இன்ஜினியர் என்பவர்கள் அதிகமாக தங்கள்
அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலையில் இருக்க
முடியாது. டிஸ்டிரிக்குக்கு உள்ளே மாற்றலாம். அதை விட்டு
சர்க்கிளுக்கு சர்க்கிள் மாற்ற வேண்டும் என்று சொல்கிறபோது
பலவிதமான சங்கடங்கள் அவர்களுக்கு ஏற்படும், அரசாங்கத்
திற்கும் ஏற்படும். இது சம்பந்தமாக அரசு ஒரு உத்தரவை
போட்டதாகச் சொல்லப்படுகிறது. அதாவது ஜி.ஓ. 593,
தேதி 15—7—78. அதை ரத்து செய்வதன் மூலம் இந்த அதி
காரிகள் மாற்றம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நான்
மாற்றம் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. தவறு
செய்கிற அதிகாரிகளை மாற்ற வேண்டும். ஆனால் அதை விட்டு
விட்டு இந்தச் சிறிய அதிகாரிகளை மட்டும் மாற்றம் செய்வது
என்பது சரியாக இருக்காது.

அடுத்து வடஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் பகுதியில்
நேற்று முன் தினம் ஒரு விபத்து ஏற்பட்டு 15 பேர்கள் இறந்து
விட்டிருக்கிறார்கள். விபத்துக்கு உள்ளான பஸ் ஒருதனியார்
பஸ். அது 1958 அல்லது 1959 ஆண்டு மாடல். இந்த
விபத்து பற்றி பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்தப் பஸ்
மரத்தின் மீது மோதியிருக்கும் நிலைமையைப் பார்க்கிறபோது.
அது வேகமாகச் சென்றதாகத் தெரியவில்லை. அதனால்
அந்தப் பஸ்ஸில் உள்ள பயணிகள் கீழே விழுந்திருக்கிறார்கள்.
அந்தப் பஸ்ஸில் உள்ள சீட்டுகள் அவர்கள் மேல் விழுந்ததனால்
அவர்கள் எழுந்திருக்க முடியாமல், அந்த 15 பேர்கள் இறந்து
இருக்கிறார்கள். மற்றும் பல பேர்கள் அந்தத் தீக்கு இரை
யாக்கப்பட்டு மருத்துவமனைகளில் இருக்கிறார்கள். இப்படிப்
பட்ட நிலைமைகள் ஏற்பட இந்த அரசாங்கம் ஏன் விட வேண்
டும்? பிரேக் இன்ஸ்பெக்டர்கள் சர்டிபிகேட் கொடுக்கிறபோது,
அத்தகைய சர்டிபிகேட் சரியாக இருக்கின்றதா என்று பார்க்க
வேண்டி இருக்கிறது. அப்படி அந்தச் சர்டிபிகேட் கொடுப்ப
தற்கு முன், அதற்கு அந்தப் பஸ் லாயக்கா என்று பார்த்து தர
வேண்டும். பிரேக் இன்ஸ்பெக்டர்களைப் பார்த்து அவர்களைச்
சரிசெய்துவிட்டால், பிரேக் இன்ஸ்பெக்டர் சர்டிபிகேட் கிடைத்து
விடும் என்ற நிலைமைகள் உருவாக்கப்படுமானால் இது போன்ற
சம்பவங்களை நீங்கள் அடிக்கடி சந்திக்க வேண்டியநிலைவரும்.
உயிர் இழந்த அந்த 15 பேர்களுக்கு நட்ட ஈடு தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நிச்சயமாக இந்த
அரசாங்கம் நட்ட ஈடு தந்தாக வேண்டும். இது ஒரு மேஜர்
கெலாமிட்டி. ஆகவே, அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு நட்ட
ஈடு தரப்படும் என்று அறிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
அந்தப் பேருந்து என்னென்ன காரணங்களினால் விபத்திற்கு உள்
ளாகியது என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும்
சலுகை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். தமிழகத்தில்
புரட்சித் தலைவர் அவர்கள் இதுபற்றி உத்தரவிட்டிருக்
கிறார்கள். முதல்வர் அவர்கள் நிதியிலிருந்து இறந்துவிட்ட
ஒவ்வொருவருக்கும் அவரது வாரிசுக்கு ரூ. 2,500 தரப்படும்
என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதுபோன்று காயம் அடைந்
தவர்களுக்கும் உதவி தரவேண்டும் என்று உத்தரவிடப்பட்
டிருக்கிறது. மேலும் வழக்கு மன்றத்திற்குச் செல்லும்போது
அதன்மூலமாக அவர்களுக்கு இந்த அரசு உதவி செய்யும்.

*திரு. ரா. மார்க்கபந்து : அறிவிப்புக்கு நன்றி, வட ஆற்
காடு மாவட்டத்தில் எங்களுக்கு 6 மினி பஸ் ரூட்டுகளை தர
வேண்டும் என்று 6 மாதத்திற்கு முன்பு அவர்கள் ப்ரபோசல்ஸ்
அனுப்பியிருக்கிறார்கள். அதிலே என்ன என்ன சிக்கல் இருக்
கிறது என்று தெரியவில்லை. 6 மாத காலமாக அது தரப்
படாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்த 6 மினி
பஸ் ரூட்டுகளை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அதே நேரத்தில் பல பஸ் ரூட்டுகள் சாங்ஷன் ஆகியிருக்கிறது.
ஆனால் அவற்றில் பஸ்கள் ஓட முடியாத நிலைமை இருக்கிறது.
பெரணமல்லூர் ஆரணி ரூட்டில் டவுன் பஸ் விடுவதற்கு உத்தர
விட்டிருந்தும் பஸ் ஓடவில்லை. காரணம் கேட்டால் பஸ்
இல்லை என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக பல ரூட்டுகள்
விற்கப்பட்டு விடுகிறது விற்கவேண்டுமென்றால் மார்ச் 31-ம்
தேதிக்குள் விற்க வேண்டும் என்றிருக்கிறது. பின்னால்
ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து சாங்ஷன் ஆகியிருந்தாலும் 15, 20
நாட்கள், பஸ் ஓடவில்லை என்று சொன்னால் அந்தப் பகுதியி
லுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள் இதை
அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார்கள் பஸ்கள் வைத்துக் கொள்வதைப் பொறுத்த
வரையில் ஐந்து பஸ்கள் முதல் 7 பஸ்கள் வரை வைத்துக்
கொள்ளலாம் என்றும் 7 பஸ்கள் என்று ஸீலிங் வைக்கலாம்
என்று நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது. அதே நேரத்தில்
எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரே
குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 60, 70 பஸ்கள் வரை
இருக்கிறது. இதை இரண்டு மூன்று இடங்களில் வைத்துக்கொள்
கிறார்கள். வேலூர், சோழிங்கர், குடியாத்தம், திருவண்ணா
மலை ஆகிய ஊர்களில் வைத்துக் கொள்கிறார்கள்.
இப்படி 60, 70 பஸ்களை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

1979 ஏப்ரல் 17] [திரு. ரா. மார்க்கபந்து]

வைத்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் கிடையாது. ஆகவே
இதையெல்லாம தேசியமயமாக்க வேண்டும். அதோடு மூன்று
பஸ்களுக்கு மேல் ஒருவருக்கு தரக்கூடாது என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீமில் அரசாங்கம் அதிகமாக
செலவு செய்யப் போகிறது. அத்துடன் மினி பஸ்களை குக்
கிராமங்களுக்கு அதிகமாக விட வேண்டும். இதற்கு முக்கிய
மாக பல பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து
யூனியன்கள் கட்ட வேண்டும். 10 ஆயிரம் செலவு செய்ய
வேண்டும். அதற்கு இயலாத காரணத்தால் 'மினி' பஸ் விடு
கின்ற முறையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.

(மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, விபத்துக்கள் ஏற்பட்டு நஷ்டஈடு கோரு
வதற்காக எம்.எ.சி.டி.-யில் மனு போடுகிறார்கள். அதில்
ரெகுலர் எக்ஸிக்யூஷன் ப்ராஸீடிங்ஸ் போட்டு பணத்தை வசூ
லித்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அதை ஆர். ஆர். ஆக்ட்
பிரகாரம் வசூல் செய்ய வேண்டும். அதற்கு சில திருத்தம்
தேவை........

Once an award is passed by a court there should be provision to execute the awards under the Civil Procedure Code.

என்கிற முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று அரசு பேருந்துகள் ஓடு
கின்ற தடங்களிலேயே தனியார் துறை பேருந்துகள் போகும்
போது, ஏதோ காரணத்தைச் சொல்லி அரசு பேருந்துகளை
குறிப்பிட்ட நேரத்தில் நிறுத்திவிடுகிறார்கள் என்று சொல்லப்
படுகிறது. இதன் காரணமாக பல தவறுகள் நடைபெறுவதாகத்
தெரிகிறது. இதையெல்லாம் தவிர்த்து அரசு பஸ்கள் நிரந்தர
மாக ஓடுகின்ற வகையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.
நேற்று நமது முதலமைச்சர் அவர்கள் மானியத்திற்கு பதில்
அளித்துப் பேசும்போது, இப்போதுள்ள குறைபாடுகளை
சரி செய்கிறோம் என்று சொன்னார்கள். புதிதாக ரூட்டு
களை சாங்ஷன் செய்யும்போது, மக்களின் பிரதிநிதிகளாக
இருக்கின்ற எம்.எல்.ஏ.-க்களை வைத்துக் கொண்டு அதற்குப்
பின்னால் செக்ஷன் 55-ன் படி நோட்டிபிகேஷன் செய்ய வேண்டும்.
அப்போதுதான் மக்களுடைய குறைகளை தேவைகளை தெரி
விப்பதற்கு வசதியாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது).
ஆகவே பொதுமக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய கன்ஸல்
டேட்டிவ் கமிட்டி என்கிற முறையில் ஒன்றை அமைத்து, ரூட்

இன்ட்ரடுஸ் செய்யும்போது, இந்தக் கமிட்டியையும் கலந்து
மூடிவு எடுப்பது நல்ல பலன் உள்ளதாக இருக்கும் என்று கூறிக்
கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

*திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு
வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது எனக்குப்
பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
இன்றையு தினம் சாலைப் போக்குவரத்தைப் பற்றியும், சாலை
களையும் எடுத்துக்கொண்டால், இந்த நாட்டில் பல்வேறு கருத்
துக்கள் இருந்தாலும் நான் சில முக்கியமான விவரங்களை மட்டும்
எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறேன். காரணம் நேற்று
இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சில கருத்துக்களை வெளி
யிட்டிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம்
அளித்து பேசியிருப்பார்கள் என்று நினைத்தேன். அதற்கு
விளக்கம் அளிக்காதது எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. அந்த
ஏமாற்றத்தைப் போக்குகின்ற பொறுப்பு அமைச்சருக்கு
உண்டு என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு
கிறேன். காண்ட்டிராக்ட் தரப்படுகிற பொழுது, தரம் இன்றி
செயல்பட்டதற்காகவும் அதற்கு உடந்தையாக இருந்து ஊழல்
புரிந்ததற்காகவும் 50 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது என்பதை அறிந்து நாம் பாராட்ட வேண்டியிருக்க,
இந்தப் பத்திரிகை வரிந்து கட்டிக்கொண்டு, அதிகாரிகளுக்காக
ஏன் வாதாடுகிறார்கள் என்பது புரியவில்லை.

(முற்பகல் 11-10.)

இதைப்பற்றி இன்னும் சில விவரங்களைக் குறிப்பிட நான்
கடமைப்பட்டிருக்கிறேன். ஊழல்களுக்கும் சில காண்ட்ராக்
டர்களுக்கும் அதிகாரிகள் உதவி செய்கிறார்கள். எந்த ஆட்சி
வந்தாலும், கொடியை மாற்றிக்கொண்டு, சில பணக்கார
காண்ட்டிராக்டர்கள் நெடுஞ்சாலைத் துறையிலே இன்னும்
சலுகைகள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு இன்
னும் பல சலுகைகள் அதிகாரிகளாலே காட்டப்பட்டு வரு
கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்த பிறகு
தரக்கட்டுப்பாடு கொண்டு வந்ததை எதிர்க்கிறார்கள் என்றும்,
இதற்காக ஒரு சதியோகூட நடக்கின்றது என்றும் இந்த நெடுஞ்
சாலைப் பிரிவிலே இருக்கும் கீழ் மட்டத்திலே இருக்கும் அதி
காரிகளால் இன்றைக்குப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.
இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்றைய தினம் அமைச்

திருக்கின்ற அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால்தான்,
இந்தத் தரக்கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைத்
தொடர்ந்து இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்
கப்பட்டு வருகின்றன.

ஒரு பணமற்ற பாப்பருக்கு கடந்த காலத்திலே, பாம்பன்பாலம்
திட்டம் 1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டபோது கொடுக்
கப்பட்டிருக்கிறது. இந்தப் பாம்பன் பாலத் திட்டம் 1974ஆம்
ஆண்டு துவங்கப்பட்டு, 1976ஆம் ஆண்டிலே முடித்து விடுவோம்
என்று சொல்லப்பட்டது. ஆனால், 1978ஆம் ஆண்டு முடிவுற்
றும் இன்னும் இந்த பாலத்தின் கால் பங்கு வேலைகூட முடிய
வில்லை. இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்த அரசு பாம்பன
பாலத் திட்டத்தை 1974ஆம் ஆண்டு போட்டு, பல ஊழல்கள்
நடப்பதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. எனவே, நமது
அரசு ஒரு பொது விசாரணையை உருவாக்கி, இதிலே நடவடிக்
கைகள் எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தில், இந்த துறையிலே உள்ள அதிகாரிகள்
எந்த அளவுக்கு ஊழல் புரிந்திருக்கிறார்கள், இதிலே எந்த
அளவுக்கு அரசியல்வாதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள்
என்பதையும், இதை இன்றையதினம் எதிர்ப்பு நடவடிக்கை
எடுக்க அரசு முன்வரும்போது அதிகாரிகள் எந்த அளவுக்கு
தங்களுடைய பொறுப்புணர்ச்சியைத் தட்டிக்கழித்து நடந்து
கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, உள்ளபடியே
கடந்த காலத்திலே நடை பெற்றிருக்கின்ற ஊழல்கள் தெரியாத
படி, அதிகாரிகள் அதற்கு வக்காலத்து வாங்குகின்ற சூழ்நிலையும்,
அச்சமும் இருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல், இன்றைக்கு இந்தியா விடுதலை அடைந்து
முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும், தொடர்ந்து அதிகாரிகள்
மட்டும் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமா என்று பொதுமக்கள்
பேசினாலும், இவர்கள் செய்கின்ற ஊழல்களுக்கும், குற்றச்சாட்டு
களுக்கும் அரசியல்வாதிகள்தான் பதில் சொல்லவேண்டிய
சூழ்நிலை இருக்கின்றது என்பதையும், அரசியல்வாதிகளும்,
அமைச்சர்களும் தான் இந்த அதிகாரிகள் செய்கின்ற குற்றங்களை
யெல்லாம் 'ஷாக் அப்சார்வர்' போல் தாங்கி கொள்ள வேண்டி
யிருக்கின்றது என்பதையும், இத்தகைய பொறுப்பை
அமைச்சர்கள் ஏற்க வேண்டியிருக்கின்றது என்பதையும்,
அதிகாரிகள் தொடர்ந்து ஊழல் செய்கின்ற சூழ்நிலை மட்டும்
இருக்கின்றது என்பதையும்: இதைப் போக்குவதற்கு அரசு
நடவடிக்கை எடுக்கின்றபோது அதிகாரிகளும், பத்திரிகைகளும்
எதிர்க்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட
விரும்புகிறேன்.

[திரு.கே.சௌந்திரராஜன்] [1979 ஏப்ரல் 17

இந்தியா விடுதலை அடைந்து 30 ஆண்டுகள் ஆகிறது
பல்வேறு கிராமங்களிலே சாலை போக்குவரத்து இல்லாத
பரிதாப நிலைமை ஏராளமாக இருக்கின்றது.
மேலிடத்து அதிகாரிகள் இன்றையதினம் இதற்கும் அமைச்சர்
களும் சட்டமன்ற உறுப்பினர்களும்தான் பொறுப்பேற்க வேண்டு
மென்று கருதிக் கொண்டு, கிராமங்களைப் பற்றி கிஞ்சிற்றும்
கவலைப்படாத மந்த நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.
அதனால் கிராமப்புற சாலைகள் சரியாக இல்லாத காரணத்தி
னால், கிராப்புறங்களின் முன்னேற்றம் தடைப்படுகின்றது
என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.
இப்போது மினி பஸ்கள் பெயரளவில் 470 வழித் தடங்களுக்கு
விடுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தாலும், 46 வழித் தடங்
களிலே பஸ்கள் விடுகின்ற அளவுக்குத்தான் இருக்கிறது என்பதை
அறியும்போது, உள்ளபடியே இதற்கான தடைக் கற்கள் என்ன
என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து, அந்தத் தடைக் கற்களை
அகற்றி, கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு போக்குவரத்து
வழிவகைகள் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே
கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல நேரங்களிலே கிராமப்புற சாலைகள் அபிவிருத்தி பற்றிச்
சொல்லப்பட்டாலும், அங்கே ரோடுகள் அமைக்கப்படவில்லை.
சாலைகள் அமைப்பிற்காக 30 கோடி என்று திட்டம் தீட்டப்
பட்டு, அதற்குப் பின்னால் பராமரிப்பு செய்யப்படாத காரணத்
தால், அதற்கான தொகை செலவு செய்யப்படாத காரணத்தால்,
கிராமங்களிலே தார்போட்டு, 10 ஆண்டுகள் ஆன பின்னர்,
இன்றைக்கு அவைகள் மண் மேடிட்டு இருக்கும் நிலையில்
தொடர்ந்து இருந்து வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்
தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவைகளை யெல்லாம் மாற்றியமைக்கும் வகையில் நல்ல
முறையில் செயல்படுத்துகிற முறையில் பிராக்டிகல் அப்ரோச்
என்ற வகையில் கிராமப்புற சாலைகளுக்கு முக்கியத்துவம் தரும்
பணியை மேற்கொண்டால் கிராமப்புற மக்கள் நல்வாழ்வு மலர
வசதியாக இருக்கும்.

அடுத்து, சாலைப் போக்குவரத்து மூலம் 60 கோடி ரூபாய்
வருகிற நேரத்தில் அதிலிருந்து பெரும் பகுதியை பொது நிதிக்கு
ஒதுக்கிவிட்டு 30 கோடி ரூபாயை மட்டும் சாலையின் முன்னேற்றத்
திற்காகச் செலவழிக்கும் சூழ்நிலையை உருவாக்குவோமானால்
எப்படி எதிர்காலத்தில் நல்ல சாலைகள் தமிழகத்தில் இருக்க
முடியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அப்படி நான் குறிப்பிடுகிறபோது இன்றையதினம்
அரசு பல தடங்களை தன்னகத்தே வைத்துக் கொண்டிருந்தாலும்

1979 ஏப்ரல் 17] [திரு. கே. சௌந்திரராசன்]

அரசினுடைய பேருந்துகள் வழியில் நின்றுவிடுகிற நிலை உருவாகிறது. சாலைகள் அமைக்கப்படுகிறபோது தரமான சாலைகளாக அமைக்கப்பட வேண்டும். சாலைகளின் ஒப்பந்தக் காரர்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்று பார்க்காத காரணத்தால் சாலைகளுக்குப் பழுது ஏற்படுகிறபோது சாலை களில் செல்லுகிற பேருந்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு பெரும் பகுதியான பேருந்துகள் நஷ்டத்தில் ஓடுகிற அளவுக்கு சூழ்நிலை கள் உருவாகியிருக்கின்றன. இவற்றையெல்லாம் அரசு உடனடியாக களைய சாலைப் பராமரிப்பில் முக்கியத்துவம் அளித்து சாலைக்குத் தேவையான நிதியை வேறு நிதியிலிருந்து கொண்டு வந்து பராமரித்தால்தான் போக்குவரத்துக் கழகங்கள் கூட லாபகரமாக நடக்கும் சூழ்நிலை உருவாகும். இந்த நேரத்தில் நான் இதைக் குறிப்பிடுகிறபோது நானே போக்குவரத்துப் பேருந்து சொந்தக்காரர் என்ற முறையில் கூறுகிறேன் — கடந்த காலங்களில் சாலைகள் மோசமாக இருந்தபோது எந்த அளவுக்கு பேருந்து வண்டிகளால் நஷ்டம் ஏற்பட்டது என்பதை உணர்ந்த காரணத்தால் சொல்லுகிறேன். நெடுஞ்சாலைத் துறை யில் பணியாற்றுகிறவர்கள், ஒப்பந்தக்காரர்களுக்கு வேண்டிய வர்கள். அந்த ஒப்பந்தக்காரர்களுக்குத் தொடர்ந்து பக்கபலமாக இருந்து வரும் அரசியல்வாதிகளின் செல்வாக்கு ஆகியவற்றைத் தூக்கி எறிந்து நியாயமான முறையில் சாலைகளைச் சீரமைத் தால்தான் எதிர்காலத்திலாவது வளமுள்ள நாடாக கிராமப்புற மக்களுக்கு எல்லாம் நிச்சயமாக நல்ல எதிர்காலத்தை உருவாக்கு வதற்கு வசதியாக இருக்கும்.

எப்படி ஒரு நாட்டிலே கல்வி அவசியமோ அதைவிட மிக அவசியம் ரோடு டிரான்ஸ்போர்ட் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது என்னுடைய தலையாய கடமை என்று கூற விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை விரிவானால்தான் ஒரு நாட்டின் நாகரீகமே முன்னேற்றம் அடையும். மக்கள் வாழ்க்கை மலர முடியும். இந்தத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரி கள், இந்தத் துறையை எடுத்துக் கொண்டிருக்கிற அமைச்சர் பெருமக்கள் சாலைப் போக்குவரத்து என்று வருகிறபோது அதைப் பற்றி நிதானமாகக் கவனித்து சாலைகளைச் செவ்வனே போடு வதற்கான காரியங்களில் கவனம் செலுத்துவார்கள். அந்தக் காரியத்தைச் செய்வார்கள் என்று கருதுகிறேன். அப்போது தான் நல்ல முறையில் போக்குவரத்தை அமைக்க முடியும். எந்த அளவுக்கு இதிலே இடைத்தரகர்கள், செல்வாக்கு உள்ள வர்கள் தலையிடுகிறார்கள் என்று எண்ணிப் பார்த்து அத்தகைய நிலை நீடிக்குமானால் அது எதிர்கால வளத்தை ஏற்படுத்தாது,

நாடு மிக மோசமான நிலைமைக்குப் போய்விடும் என்று தெரி
வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில்
ஒரு லட்சம் கிலோ மீட்டர் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்
கின்றன. இதனால் வாகனங்கள் பிரேக் டவுனுக்கு உள்ளா
கின்றன. வசூலிக்கப்படும் மோட்டார் வரி முழுவதையும் நிச்
சியமாக அந்தத் துறைக்கே பயன்படுத்த வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரை அந்தத் துறை
யில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து
தர வேண்டுமென்ற கோரிக்கைகள் ஒருபுறத்தில் இருந்து வரு
கின்றன. போக்குவரத்துக் கழகங்களை நிர்வகிக்கும் நிர்வாகி
கள் ஐ.ஏ.எஸ். ஆபிசர்கள் போன்றவர்களாக இருக்கிறார்கள்.
அவர்களுடைய தவறான போக்கின் காரணமாக பல்வேறு பிரச்
சினைகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. தொழிலாளர்கள் குறை
களைப் போக்கும் அளவுக்கு நிதிநிலை இல்லை. பற்றாக்குறை
யாக இருக்கிறது. நஷ்டக் கணக்கு காட்டப்படுகிறது. இது
இந்த நாட்டில் இருக்கும் மிகப் பெரிய அவலநிலை.

கடந்தமாதம் நீண்டகால தொடர் ஊதியத் திட்டம் Longivity
Pay Scheme என்ற பெயரில் திட்டம் கொண்டு வந்தார்கள்.
எந்தத் தொழிலாளி வேலைக்கு அமர்த்தப்பட்டாலும் அந்தத்
தேதியிலிருந்து அளிக்கப்படும் என்று உறுதி மொழி தந்தார்கள்.
தற்போது வேலைக்கு உறுதி செய்யப்பட்ட பின்னால்தான் தரப்
படும் என்ற சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் மாற்றி
யமைக்கவேண்டும். கடந்த காலத்தில் எப்படி வாக்குறுதி
கொடுத்தோமோ அதைப் போலவே எந்த நேரத்தில் வேலைக்கு
சேர்க்கப்பட்டார்களோ அந்த நேரத்திலிருந்து அவர்களுக்கு
ஊதிய உயர்வைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்
கடமைப் பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு
வீட்டு வசதி செய்து தர இந்த அரசு விரைந்து நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

(முற்பகல் 11-20)

எப்படி இரயில்வே துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கு
போக்குவரத்துக்கு குடும்ப பாஸ்கள் வழங்கப்படுகிறதோ அதைப்
போன்று இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் வழங்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவைகளையெல்லாம்
நான் குறிப்பிடுகிறபோது அதிகாரிகள் தங்கள் பொறுப்பை
உணர்ந்து நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் சில நேரங்களிலே சில
உத்திரவுகளைப் போடுகிறது. ஆனால் அவைகளை நடை
முறைப் படுத்துகின்ற அதிகாரிகள் ஏனோ அவைகளைத் தாமதப்
படுத்துகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்
பாகிஸ்தான் யுத்தத்தின்போது இராணுவத் துறையிலே பணி
யாற்றியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று மத்திய
அரசு ஒரு அரசாணை பிறப்பித்தது, மாநில சர்க்காரும் அதை
ஏற்றுக்கொண்டு ஒரு அரசாணை பிறப்பித்தது. ஆனால் அந்த
அரசாணை பிறப்பிக்கப்பட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட
அது அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை
நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்ளக்கடமைப்
பட்டிருக்கிறேன். இவைகளை எல்லாம் பார்க்கிறபோது அதி
காரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் இடையிலே சரியான முறை
யிலே நல்ல உறவிருந்தால்தான் அமைச்சர்களுடைய எண்ணங்
களை அதிகாரிகள் செயல்படுத்தி நிச்சயமாக ஒளிமிக்க தமி
ழகத்தை உருவாக்கமுடியும். இறுதியாக, சாலைத் துறையிலே
பணியாற்றுகின்றவர்கள் நல்ல முறையிலே செயல்பட வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்
களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு.
வெங்கிடு அவர்கள் பேசுகின்றபோது கிராமப்புறச் சாலைகளுக்கு
என சென்ற நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தேுக்கீட்டில் ஒரு
கோடி ரூபாயை மத்திய அரசுக்குத் திருப்பித் தந்துவிட்டது
என்று சில பத்திரிகைகளிலே செய்திகள் வெளி வந்தன என்று
குறிப்பிட்டு விளக்கம் கேட்டபோது என்னுடைய விளக்கத்தின்
ஒரு பகுதியை நான் நேற்றே கூறினேன். இன்றைக்கு மாண்பு
மிகு உறுப்பினர் திரு. கே. சௌந்திரராசன் அவர்கள் பேசுகின்ற
போது அதற்கு அமைச்சர் இன்னும் சற்று அதிகமான விளக்கம்
தந்திருக்கலாம். அவர்கள் தராதது எனக்கு ஏமாற்றத்தைக்
தந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே அதைப்
பற்றிய அரசினுடைய நிலைமையை முழுமையாகக் கூறக் கட
மைப்பட்டிருக்கிறேன்.

நேற்று கூறியதுபோல் 1978–79ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீ
டான ரூ. 23 கோடியே 57 லட்சத்தைவிட ரூ. 26 லட்சம்
அதிகமாகவே செலவு செய்யப்பட்டுள்ளதேயொழிய செய்தியில்
வந்துள்ளபோல் பட்ஜெட் அலாட்மெண்ட் தொகையான
ரூ. 23 கோடியே 57 லட்சத்திலிருந்து ஒரு பைசா கூட மைய
அரசுக்கோ, மாநில அரசுக்கோ திருப்பித்தரப்படவில்லை.
மேலும், ஒரு சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர் மட்டும் கிராம
சாலைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ. 25
லட்சத்தை அரசுக்குக் திருப்பிக் கொடுக்கப்பட்டதாக வந்துள்ள
செய்தியும் முற்றிலும் தவறான செய்தியாகும். உண்மை என்ன
என்றால் கிராம சாலைத் திட்டத்துக்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்
பட்ட நிதி ரூ. 300 லட்சங்கள் தான். ஆனால், அக்கிராமச்

சாலைகளுக்காகச் செலவு செய்யப்பட்டது ரூ. 301 லட்சத்து
98 ஆயிரம். ஆக, கிராமச் சாலைக்கு ஒதுக்கிய நிதியை விட
ரூ. 1 லட்சத்து 98 ஆயிரம் அதிகமாகவே நெடுஞ்சாலைத் துறை
செய்துள்ளதேயன்றி செய்தியில் தவறாக வந்துள்ளது போல்,
ஒரு பைசாகூட திருப்பித்தரப்படவில்லை.

நெடுஞ்சாலை,கிராமப் பணித் துறை, சாலை அமைப்பு
மேம்பாட்டு பணிகளுக்காக ஒதுக்கப் பட்ட சென்ற
பட்ஜெட் அலாட்மெண்ட் ரூ. 10 கோடியே 55 லட்சம்.
ஆனால், முழுமையாக ஆதாரமின்றி தவறாகவே வெளியிடப்
பட்ட அச்செய்தியில் இப்பணிக்கு ரூ. 5 கோடியே 70
லட்சம் தான் ஒதுக்கப்பட்டுள்ளதெனத் தவறாகக் கூறப்பட்டு
உள்ளது.

நேற்று நான் கூறியதுபோல் நல்ல முறையில் திட்டமிட்டு
நிதி ஒதுக்கீட்டில் ரிஅப்ரோபிரியேஷன் செய்து சாலை
பராமரிப்புக்காக சுமார் ரூ. 2 கோடி பட்ஜெட் ஒதுக்கீட்டை
விட அதிகம் செலவிடப்பட்டது. பட்ஜெட் அலொகேஷன்
என்பது வேறு. பைனல் மாடிபைடு அப்ரோபிரியேஷன்
என்பது வேறு. பைனல் மாடிபைடு அப்ரோபிரியேஷனில்
கோரப்பட்ட தொகையை ஆண்டு இறுதியில் எம்முறையி
லாவது செலவு செய்தே ஆகவேண்டும் என்ற ஒரு தவறான
கருத்தில் மட்டுமே செயல்படுத்தல் கூடாது. செய்யும் வேலை
எதுவாக இருந்தாலும் தரமாக அமைய வேண்டும். அரசு பணம்
எக்காரணத்தைக் கொண்டும் வீண் விரயமாகக் கூடாது. எப்படியும்
ஆண்டிறுதியில் செலவு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அரசுக்கு
நட்டத்தைத் தந்து ஒப்பந்தக்காரர்கள், ஊழல் அதிகாரிகள்
ஆகியோருக்கு ஆதாயம் தருவதாக அமைந்துவிடக் கூடாது.
அதற்குப் பதிலாக அப்பணத்தை அரசுக்கு திருப்பித் தந்து
விட்டால் மற்ற எந்த நற்பணிக்கேனும் பயன்படும்.

மேலும் இது மைய அரசு நிதியல்ல. மாநில அரசு மற்றப் பணி
களுக்கு இதைப் பயன்படுத்தலாம். உதாரணமாக பைனல் மாடி
பைடு அப்ரோபிரியேஷன் தொகையிலிருந்து 1976–77ஆம் ஆண்டு
ரூ. 69 லட்சம் திருப்பித்தரப்பட்டது. அதேபோல் 1977-78-ம்
ஆண்டு ரூ. 58 லட்சம் திருப்பித் தரப்பட்டது. ஆனால், இவ்
வாண்டு பைனல் மாடிபைடு அப்ரோபிரியேஷன் தொகையில்
கோரப்பட்ட நிதியிலிருந்து போதிய காரணத்தின் அடிப்படை
யில் திருப்பப்பட்டது ரூ. 22 லட்சம் தான். கடந்த சில
ஆண்டுகளோடு ஒப்பிடும்போது இவ்வாண்டு பணிகள் நல்லபடி
நடந்துள்ளன என்பது தெளிவாகும். உதாரணமாக 25 ரோலர்
களுக்கு புதிதாக எஞ்சின்கள் வாங்கி ரோலர்களை புதுப்பிக்க
சனவரி மாதத்தில் அரசு ஆணையிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பதில்
சொல்லும்பொழுது இதைச் சேர்த்துச் சொல்லலாமே;

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மன்னிக்க வேண்டும்.
அவர்கள் சொன்னதற்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

பிப்ரவரி மாதம் விளம்பரப்படுத்தி டெண்டர் கோரப்பட்
டது. ஓரே ஒருவர்தான் டெண்டர் கண்டிஷன்களுக்கு ஏற்ப
டெண்டர் கொடுத்திருந்தார். மறு டெண்டர் அறிவிக்காமல்
இந்த ஒருவருக்கே போட்டியின்றி கொடுத்துவிட்டால், அரசுக்குச்
சாதகம் இல்லை. மாறாக, தனிப்பட்ட ஒரு காண்ட்ராக்ட
ருக்கு இலாபமாக அமையும். எனவே, மறு டெண்டர் கோர
முடிவு செய்து, இதற்காகக் கோரப்பட்ட 7 இலட்சம் ரூபாயை
முதல் டெண்டரில் தனிப்பட்ட ஒரு காண்ட்ராக்டரின் இலாபத்
திற்குச் சாதகமாக ஆக்கிவிடாமல், நல்ல முறையில் பயன்
படுத்தும் நோக்கத்தோடு, அரசுக்குக் திருப்பப்பட்டது.

அடுத்து, தேசீய நெடுஞ்சாலைப் பிரிவுகள் அமைய அரசு
ஒதுக்கிய நிதியில் 25 இலட்சம் ரூபாயை சரண்டர் செய்துள்ளது
என்று கூறியுள்ள செய்தியும் முற்றிலும் தவறானதாகும்.

நல்ல தரமான ஒரு பத்திரிகை இப்படிப்பட்ட ஆதார
மற்ற செய்திகளை எப்படி வெளியிட்டது என்பதுதான் புரிய
வில்லை. உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்கள் கூறியதைப்
போல உண்மைக்குப் புறம்பான இந்தச் செய்தியை எப்படி
வெளியிட்டது என்பதுதான் புரியவில்லை. ஒருவேளை மாண்பு
மிகு உறுப்பினர் திரு சௌந்திரராஜன் அவர்கள் கூறியதைப்
போல, உண்மைக்குப் புறம்பான இந்தச் செய்திகளைத் தந்தவர்
கள், எந்த ஆட்சி தமிழகத்திலே வந்தாலும் செல்வாக்கும் பலனும்
பெற முயலும் சில காண்ட்ராக்ட்காரர்களாகவோ அல்லது
காண்ட்ராக்ட்காரர்களை அதாவது அவர்களால் பலன் பெற்ற
பெற முயலும் ஊழல் அதிகாரிகளாகவோ அல்லது காண்ட்ராக்ட்
காரர்களால் ஆதாயம் பெற்ற, பெற முயலும் அரசியல்வாதி
களாகவோ இருக்கக்கூடும். அது யாராக இருந்தாலும் சில
உண்மை நிலைமைகளை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

மைய அரசு தேசீய நெடுஞ்சாலைப் பிரிவுக்கும் பாம்பன்
பாலத் திட்டத்திற்கும் தனித்தனியே நிதி ஒதுக்கீடு செய்திருக்
கிறது. பாம்பன் பாலத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும்,
அந்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 1974ஆம் ஆண்டிலிருந்து
ஒவ்வொரு ஆண்டும் மைய அரசினுடைய நிதி சரண்டர் செய்யப்
பட்டு வந்திருக்கிறது. ஆனால் அந்தப் பத்திரிகையில் வந்திருப்பது,
தேசீய நெடுஞ்சாலைப் பணிக்கான நிதி சரண்டர் செய்யப்
பட்டிருப்பதாக வந்திருக்கிறது. 1974–75 ஆம் ஆண்டில் 18

இலட்சம் ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 88 இலட்சம் ரூபாயும்
1976-77 இல் 75 இலட்சம் ரூபாயும், 1977-78-ல் 23 இலட்சம்
ரூபாயும் பாம்பன் பாலத் திட்டத்திலே சரண்டர் செய்யப்பட்
டிருக்கிறது.

இங்கே நான் குறிப்பிட விரும்புவது, அந்தக் காண்ட்ராக்ட்
ஒப்பந்தம், தனிப்பட்ட காண்ட்ராக்ட்காரருக்கு பண நிலை
தட்டுப்பாடு இருந்த ஒரு காண்ட்ராக்ட்காரருக்கு, 1974 ஆம்
ஆண்டுதான் கொடுக்கப்பட்டது என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஆனால், பாம்பன் பாலத் திட்டத்தில் சரண்டர் செய்யப்பட்ட
தொகையை தேசிய நெடுஞ்சாலையின் ஒரிஜினல் நிதி ஒதுக்
கீட்டிற்கு அப்பாற்பட்ட பணிகளுக்கு மைய அரசிடம் அனுமதி
பெற்று இதுகாறும் செலவழித்து வந்துள்ளது. இவ்வாண்டி
லும், பாம்பன் பால திட்டப் பிரிவு சரண்டர் செய்த ரூபாய் 47
இலட்சத்தில் ரூபாய் 22 இலட்சத்தை மைய அரசு அனுமதியோடு
தேசிய நெடுஞ்சாலை புதிய பணிகளுக்குப் பயன்படுத்தியது.
பாம்பனில் சரண்டர் செய்த எஞ்சியுள்ள ரூபாய் 25 இலட்சம்
மைய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த
ரூபாய் 25 இலட்சத்தையும் தேசிய நெடுஞ்சாலைக்குப் பயன்
படுத்த அனுமதி கேட்டும், மைய அரசு மறுத்துவிட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு சௌந்தரராஜன் அவர்கள் கூறி
யதைப்போல ....

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம் :</u> தலைவரவர்களே, அப்படி
யானால், பாம்பன் பால வேலை இனிமேலாவது நடைபெறுமா?
அதன் நிதியைப் பூராவும் சரண்டர் செய்துக்கொண்டிருந்தால்
இந்த அரசு அதைப் பரிசீலித்து அதைப்பற்றி நடவடிக்கை எடுக்
குமா என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிக முக்கியமான கேள்வியைக்
கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக அரசு அதைப் பற்றிப் பரி
சீலித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராஜன் அவர்கள்
ஒரு விசாரணை வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.
என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைத் தீவிரமாக
எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

1974 நவம்பரில் தொடங்கப்பட்ட பாம்பன் பாலத் திட்டப்
பணி, 1978 நவம்பரில் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால்,
ஒப்பந்தக்காரர் 1974-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பத்தில் சரியான

டிசைன் தராமல், அவ்வப்பொழுது ரூபாய் 47 இலட்சம் முன்
பணம் பெற்றும், ஒப்பந்தப்படியும் வாக்குறுதிப்படியும் டணியை
நிறை வேற்றாததும் இது போன்ற பல காரணங்களால் இப்பணி
1974-இலிருந்தே முறையாகச் செயல்படவில்லை. இக்கார
ணங்களால் தொடர்ந்து பாம்பன் பாலத் திட்டத்தில் இத்தகைய
சரண்டர்கள் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு, இது
காறும் ஐந்து ஆண்டுகளாக 34 சதவீத வேலைதான் நடந்திருக்
கிறது. பாம்பன் பாலத் திட்டத்தில் இத்தகைய நிலை இருக்கும்
பொழுது, தேசிய நெடுஞ்சாலையினுடைய பணி, ஏதோ சாலைப்
பணியிலிருந்து இந்தப் பணம் 25 லட்சம் ரூபாய் மைய அரசுக்குத்
திருப்பப்பட்டு விட்டது போன்ற எண்ணத்தை உருவாக்குகின்ற
அளவிற்குச் செய்திகள் வந்திருப்பது உண்மையிலேயே தவறான
செய்தியாகும்.

அடுத்து முக்கியமான ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு ஊழலை ஒழிக்க வேண்
டும், ஊழல் புரிகிற அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்களு
க்கு உடந்தை போகிற காண்ட்ராக்ட்காரர்கள் யாரானா
லும், அவர்கள் அத்தனை பேருக்கும் ஆதரவு தருகின்ற ஊழல்
புரிந்த அல்லது புரியமுயலும் அரசியல் வாதிகள் யாராக இருந்
தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்பது தான் இந்த ஆட்சியின் தலையாய எண்ணம், அதை
நடைமுறையில் மிகக் கண்டிப்பான உத்தரவோடு, நாம் நடை
முறையில் கடைப்பிடித்து வருகிறோம். உதாரணத்திற்குச்
சொல்ல வேண்டுமென்றால், 50க்கும் மேற்பட்ட பொறியாளர்
களைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்ததால் மொத்தமாகவே
துறை சோர்வுற்றதாகச் செய்தி வெளியிடப் பட்டிருக்கிறது.
காண்ட்ராக்ட் பணிகளில் தரமற்ற செயலுக்கு உடந்தையாக
இருந்து வேலைத் தரத்தைக் குறைத்து ஊழல் புரியும் அதிகாரி
கள் மீது நடவடிக்கை எடுத்தால், சஸ்பெண்ட் செய்தால் அத
னால் எப்படிச் சோர்வு உண்டாகும் என்பதுதான் புரியவில்லை.

(முற்பகல் 11–30)

உண்மையிலேயே ஊழல் புரிய முனைகின்றவர்கள், ஊழல்
புரிந்தவர்களுக்கு வேண்டுமென்றால் சோர்வு ஏற்படலாம்.
ஆனால், ஊழலை ஒழிக்க வேண்டும், நாணயமாக இருக்க வேண்
டும், நாட்டுப் பற்றோடு இருக்க வேண்டுமென்று எண்ணுகின்ற
அதிகாரிகளுக்கு, தரமான அதிகாரிகளுக்கு உண்மையிலே இது
சோர்வைத் தராது. மாறாக, உற்சாகத்தைத் தான் தரும்
என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காண்ட்ராக்ட் பணி
களில் ஊழல் என்று தரத்தை நிலை நிறுத்த எடுக்கப்பட்ட நட

வடிக்கைகளின் விளைவாக, 45 அதிகாரிகள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பட்டார்கள். அவர்களில் 23 அதிகாரிகள் மீது காண்ட்ராக்ட் வேலைகளில் இலஞ்சத்தில் ஈடுபட்ட குற்றத்திற் காக, இலஞ்ச ஒழிப்புக் கண்காணிப்புத் துறையும், தரக் கட்டுப் பாட்டை நிலை நாட்ட 4 பேர்கள் மீது வெள்ள நிவாரணத் தலைமைப் பொறியாளரும், காண்ட்ராக்ட் பணிகளில் ஊழலுக்கு இடம் தந்து தரம் குறையக் காரணமாக இருந்த 11 ஊழல் அதிகாரிகள் மீது முன்னாள் நெடுஞ்சாலைத் தலைமைப் பொறி யாளர் அவர்களும் 4 பேர்கள் மீது மாவட்ட ஆட்சியாளர் ஒரு அதிகாரி மீது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் 2 அதிகாரி கள் மீது கிராமம்புற வளர்ச்சித் துறை இயக்குநரும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஊழல் புரியும் அதிகாரிகள் மீதும் அதற்கு உடந்தையாக இருப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். மற்றும், ஒன்றை மட்டும் நான் முக்கியமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> பதில் சொல்லும் போது சொல்லிவிடுங்களேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான ஒரு பிரச்சினை. ஒரு பத்திரிகை, நெடுஞ்சாலைத் துறையிலே, ஊழல் நடவடிக்கை களை, ஊழல்களைக் களைய வேண்டுமென்ற தீவிரத்தோடு சில கட்டுப்பாடு ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கும்பொ ழுது, பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட இருக்கின்றவர்கள், அவர்களுக்கு உடந்தை போகும் ஒப்பந்தக்காரர்கள், அரசியல் வாதிகளுடைய கூட்டு சதி என்று கூட ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் சவுந்திரராஜன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், அரசு தூய்மையை நிலை நாட்ட நடவடிக்கை களை எடுத்து வருகின்றபொழுது, சில குற்றச் சாட்டுகளுக்குப் பதில் கூறுவது என்னுடைய கடமை என்ற நிலையில்தான் அவர் கேள்வியை எழுப்பியிருக்கிறார். அதற்காக, நான் பதிலைக் கூறு கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளரின் நேரடிப் பார்வையின் கீழ், பணிகளின் தொழில் நுட்பத் தரத்தை நிலை நிறுத்தவும், உறுதி செய்யவும், ஊழல் புரியும் அலுவலர், தர மான பணி செய்யாமல் தவறு செய்யும் ஒப்பந்தக்காரர்கள் ஆகி யோர் மீது நடவடிக்கைகளை எடுக்க உதவுதல் போன்றவை களுக்கு 'டெக்னிகல் செல்' ஒன்றும், 'ஆர்பிட்ரேஷன்' செல், ஒன்றும் நிறுவப்பட்டு செயல்பட்டு வருவதால், முறைகேடுகளை வரவேற்கும் சிலருக்கு சோர்வு ஏற்பட்டிருக்கலாம். மாண்புமிகு

முதலமைச்சரவர்கள் வெளிநாடு பயணம் சென்றிருந்தபோதுதா 'டெக்னிக்கல் செல்' என்ற குழு ஒன்று அமைக்கப்பட்டது என்று உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டையும் கூறியிருக்கிறார் கள். உண்மையில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வெளி நாட்டு பயணத்தை முடித்துத் திரும்பி வந்து, 6 வாரங்களுக்கு பிறகு, அதாவது, 21—3—1979 அன்றுதான் இந்த ஆணை வழங்கப்படிருக்கிறது.

அடுத்து, ஒரு கோட்டப் பொறியாளருக்கு, 20 கோட்டப் பொறியாளர்களை விட முன்னுரிமை அளித்து, அவருக்குப் பதவி உயர்வு தந்து விட்டதாகக் கூட கூறியிருக்கிறார்கள். இது ஒரு மிகத் தவறான செய்தி. காரணம், தேர்வு நிலைப் பணியாள கண்காணிப்புப் பொறியாளரின் பதவி உயர்வுக்குத் தகுதி உள்ள அனைத்து கோட்டப் பொறியாளர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியலை விதிமுறைகளின்படி தீர ஆய்வு செய்து தகுதி, திறமை இவை சமமாக இருக்கும்போது, அதிகாரிகளின் முதுநிலை வரிசை இவற்றின் அடிப்படையில்தான் பதவி உயர்வு தரப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட அதிகாரியைப் பொறுத்த வரைக்கும் "exceptional merit and high integrity, fit for promotion out of turn, an asset to the department, integrity impregnable. என்றெல்லாம் அந்த வரிசையிலே வந்த ஏனைய அதிகாரிகளை விட பல்வேறு அதிகாரிகளின்கீழ் பணி புரிந்த காலங்களில் இத்த கைய சிறப்புத் தகுதிகளைப் பெற்றிருந்த காரணத்தாலும், அரசினுடைய கொள்கை—மூப்புரிமை வரிசைப்படி பதவி உயர்வு தருவோமேயானால், மூப்புரிமை வரிசைப்படி அந்த அதிகாரி எஸ்.இ., சி.இ. என்ற தலைமைப் பொறுப்புக்கு வருகின்ற பொழுது, முக்கிய பொறுப்புக்கு வருகின்றபொழுது, மூப்புரிமை என்ற ஒரு அடிப்படையை வைத்து அந்தப் பதவிக்கு அவர்கள் வந்து விடுவார்களேயானால், கடந்த காலத்தில் தவறு புரிந்து, ஊழல் புரிந்து ஒப்பந்தக்காரர்களுக்கு உடந்தையாக இருந்து, அரசினுடைய பணத்தை வீணாக்கிய தவறு புரிந்தவர்களாக இருப்பார்களானால், தொடர்ந்து நாட்டுக்கு இழப்புத்தான் ஏற்படும் என்ற நோக்கத்தோடு தான் ஏற்கனவே விதியிலிருக்கிற விதிக்கு உட்பட்டு, seniorty will be given preference only when merit and ability are remaining the same என்ற அடிப் படையில் இந்தப் பதவி உயர்வு தரப்பட்டது. அதிலேயும் என் உண்மையிலே சோர்வு யாருக்கு ஏற்பட்டிருக்கும் என்றால், பன்னெடு ஆண்டுகளாக தவறு புரிந்தும் பதவி உயர்வு கிட்ட கிட்டவில்லையே, ஊழல் புரிந்த நமக்கு வாய்ப்பு கிட்ட வில்லையே என்று ஏங்குகிற அதிகாரிகளுக்கு வேண்டுமென்றால் சோர்வு ஏற்பட்டிருக்கலாமே ஒழிய, ஒழுக்கசீலர்களாகவும், உண்மையிலே பண்பாளர்களாகவும் கறைபடியாத கரத்திற்குச் சொந்தக்காரர்களாகவும் இருக்கிற அதிகாரிகள் இதுபோன்ற தரம் மிக்க, திறமைமிக்க அதிகாரிகளுக்கு ஊக்கம் தருகின்ற அரசினுடைய முயற்சியாயக் கண்டிப்பாக வரவேற்பார்கள் என்று மட்டும் கூறி ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

அந்தக் குறிப்பிட்ட பத்திரிகை நல்ல தரமான பத்திரிக்க
என்று பெயரெடுத்த பத்திரிகைதான். பத்திரிகையைச் சேர்ந்தவர்
கள் ஒரு தரப்பினரை மட்டும் பார்த்து இருப்பதை எழுதிவிடா
மல், அரசு தரப்பில் என்னிடமோ அல்லது என்னுடைய செய
லாளரிடமோ அல்லது தலைமைச் பொறியாளரிடமோ கேட்டிருப்
பார்களேயானால் உண்மையான விளக்கம் கிடைத்திருக்கும். பத்
திரிகை நடத்துபவர்கள் அரசினுடைய செயல்களைப் பற்றி விமர்
சிக்கவும், கண்டிக்கவும் உரிமைப் பெற்றவர்கள். அது அவர்க
ளுடைய சுதந்திரம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு
தரப்பில் இருப்பதை மட்டும் கேட்டுவிட்டு மற்றவர்களை கேட்
காமல் வெளியிடுவது நியாயம் அல்ல.

(மணி அடிக்கப்பட்டது).

(7) அறிக்கை அளித்தல்.

அரசு பதிவுபெறா அலுவலர்களின் சங்கத்தோடு பேச்சுவார்த்தை
நடத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது
82—வது விதியின் கீழ்மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு
விளக்கம் அளிக்க விருக்கிறார்கள் .

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு காலையில் மாண்புமிகு உறுப்
பினர் திரு. உமாநாத் அவர்கள், என்.ஜி.ஓ.வினரின் ஸ்டிரைக்
பற்றிச் சொல்லி, என்.ஜி.ஓ.வினரின் சங்கத் தலைவர்களை
என்றைக்குச் சந்திக்கப்போகிறார் முதலமைச்சர் என்று இன்றைக்கு
பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் கூறிய
போது நாளை மானியக் கோரிக்கை நடைபெறவிருக்கிறது,
அதை முடித்ததற்கு பிறகு முதல் அமைச்சர் அவர்கள்
கலந்து பேசுவார்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது முதல்
அமைச்சர் அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் வந்திருக்
கிறது. என்.ஜி.ஓ.வினரைச் சேர்ந்த சங்கத் தலைவர்களுக்கு
முதல் அமைச்சர் அவர்களின் சார்பாக அவருடைய செயலாளர்
கடிதம் எழுதி யிருக்கிறார். சிவஇளங்கோ போன்ற
தலைவர்களுக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த
கடிதத்தை மட்டும் உங்கள் அனுமதியோடு படிக்க விரும்பு
கிறேன்.

With reference to your letter, dated 16-4-79 I am to add that
due to pressing official preoccupations, the Hon. Chief Minister
is not in a position to meet your Association's represen-
tatives today or in the next two or three days. It will suit
the covenience of the Hon. Chief Minister if representatives of
our association could meet him on 22-4-79 at 5 P. M.

(7) வரவு செலவுத்திட்டம் 1979-80 வாக்கெடுப்பு
(தொடர்ச்சி)

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, பே
வரத்து துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபே
இன்டக்கிரிட்டி அண்டு எபிஷியன்சி என்ற முறையில்
புரோமஷன் தரப்பட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி எ
சொன்னால் ஏற்கெனவே இருந்த சீனியாரிட்டி முறை எ
வாயிற்று ? அதை இந்த அரசாங்கம் எடுத்துவிட்டதா ?
படிப்பட்ட முறைகளில், நீங்கள் சொல்லியபடி புரமோஷன் கெ
வது என்று வரும்போது வேண்டியவர்களுக்கு புரமோஷன் த
வதும் வேண்டாதவர்களை ஒதுக்கிவிடுவதும் ஏற்படும் சூழ்நி
உருவாகும். அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுதும் ஏற்பட்
ருக்கிறது. அந்தச் சூழ்நிலையை மாற்ற முனைவீர்களா
முறையாக புரமோஷன் கொடுக்க வேண்டிய அந்த என்ஜினீய
புறக்கணிக்கப்பட்டு, சீனியாரிட்டியில் அவருக்கு கீழே இரண்டு
மூன்று பேர்கள் தள்ளி புரமோஷன் கொடுத்திருக்கிறீர்
களே, அது எந்த அடிப்படையில் நடந்திருக்கிறது என்பதை அறி
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஏற்கெனவே விளக்கமாக இதைப்பற்றி
குறிப்பிட்டேன். இது ஏதோ வேண்டுமென்றே ஒருவருக்கு பதவி
உயர்வுத் தர வேண்டும் என்ற நோக்கத்தோடு தரப்பட்டதல்ல.
ஏற்கெனவே நடைமுறையில் அனைத்துத் துறைகளிலும் இருக்கிற
முறையைத்தான் பின்பற்றி யிருக்கிறது. "Merits and ability
will be taken into account for giving promotion".
மெரிட்ஸ், எபிலிட்டி என்பதை 5 பேர்கள் இருக்கிறார்கள் என்
றால், அந்த 5 பேருக்கும் மெரிட்ஸ் அண்டு எபிளிட்டி சமமாக
இருக்கிறபோதுதான் சீனியாரிட்டி எடுக்கப்பட வேண்டும்
என்று நடைமுறையில் இருக்கிறது. அப்படி நடைமுறையில்
இருந்து வருகிற முறையைத்தான் கடைபிடித்து
இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.
எல்லோரும் திரும்ப திரும்ப இதையே பேசிக் கொண்டிருந்தால்
எப்படி ?..

[1979 ஏப்ரல் 17

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்
களே அவர் பேசியதிலே சில கிளாரிபிகேஷன் கேட்கவேண்டி
யிருக்கிறது...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு
இந்தக் கருத்தை முடித்ததற்குப் பிறகு வேறொரு டிமாண்ட்
இருக்கிறது. இதிலே விவாதம் நடத்திக் கொண்டே இருந்தால்..

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : துணைத்
தலைவர் அவர்களே என்னுடைய இந்தக் கருத்தை மட்டும்
சொல்லிவிட அனுமதிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்தக்
குறிப்பிட்ட பிரச்னையில் விவரமான அறிக்கையை அவை முன்
வைத்தார்கள். அதை வரவேற்கிறேன். மத்திய அரசு அளித்த
அந்த 1 கோடி ரூபாயை மாநில அரசு முறையாகச் செயல்
படுத்தாமல் அந்த ஒரு கோடி ரூபாயைத் திருப்பி அனுப்பப்
பட்டதும் அதனுடையத் தொடர்பாக,—இது பத்திரிகையில்
வந்த செய்தி—அதிகாரிகள் இதில் உணர்வு இல்லாமல் ஊக்கம்
இல்லாமல் அந்த வேலைகளில் செயல்பட்ட காரணத்தினால்,
பணம் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட வேண்டிய
நிலை என்று குறிப்பிட்டு அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கமும்
அளித்தார்கள். இப்படிப்பட்ட செய்திகள் அரசாங்கத்திற்கு
தெரியாமல் பத்திரிகைக்கு எப்படிச் சென்றிருக்க முடியும் ?

(முற்பகல் 11–40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையில்
வந்த செய்தி எப்படி அங்கே போயிற்று என்று அமைச்சர் அவர்
களிடத்தில் விளக்கம் கேட்டால் எப்படி அவர் பதில் சொல்ல
முடியும். நான் எப்படி மற்ற நிகழ்ச்சிகளுக்குப் போக முடியும்?
இப்படி நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே போனால், நான்
நீங்கள் பேசியவைகளை நீக்கிவிட்டு, அவையை நடத்த வேண்டி
யிருக்கும். தயவு செய்து உட்காருங்கள். திரு. புஸ்பராஜூ.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நிலைமை என்ன
வென்றால் அரசாங்கத்திற்குத் தெரியாமலேயே இப்படி செய்தி
போகக்கூடிய நிலைமை அந்த இலாகாவில் இருக்கிறது என்று
சொன்னால், இப்படிப்பட்ட போக்கைத் தடுக்க என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து
கேட்டுக் கொள்கிறேன், பத்திரிகையில் வந்த செய்தி எப்படி
அரசாங்கத்திற்குத் தெரியாமல் போயிற்று என்று கேட்டுக்கொண்டு
இருக்காதீர்கள்.

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புலன் ஆய்வுத் துறை
யால் புலன் விசாரணை செய்து அத்தகைய தவறைச் செய்தவர்
கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு உத்திரவிட்டு
இருக்கிறது.

திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்று அவை முன்னுள்ள மானியக்
கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை கூறுகிறேன்.

இன்றைய தமிழகத்தில் போக்குவரத்துத் துறையில், போக்கு
வரத்துக் கழகங்களும், தனியார் பஸ் உரிமையாளர்களும் தங்கள்
கடமையைச் செய்து கொண்டு இருக்கின்றார்கள். தனியார் பஸ்
உரிமையாளர்கள் தங்கள் கடமையை போக்குவரத்துக் கழகங்
களை விட சீரிய முறையில் தங்கள் பணியைச் செய்து வருகின்
றார்கள். பஸ் தொழில் பொது மக்களுக்கு அதிலும் குறிப்
பாக ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்கின்ற ஒரு தொழி
லாகும். இந்த பஸ் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற உரிமையாளர்
கள் நிலையினை நாம் இன்று பார்க்க வேண்டும். தனியார்
பஸ் உரிமையாளர்கள் நிரந்தரமாக தங்கள் தொழிலைச் செய்ய
முடியாத நிலையில் இன்று இருக்கிறார்கள். எந்த ஒரு பஸ்
உரிமையாளரும் கடன் வாங்காமல் தங்களுடைய தொழிலைச்
செய்ய முடியாத நிலையில் தான் இன்று இருக்கிறார்கள். கடன்
கொடுப்பவர்கள் கூட அவர்கள் நிலையைக் கண்டு கடன்
கொடுக்க யோசிக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் தங்கள்
தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. இந்த நிலையில்
இருந்து தனியார் துறை பஸ் உரிமையாளர்களை காப்பாற்ற
அரசு முன் வரவேண்டும்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் இத்தனை பஸ் வைத்துக்
கொள்ள வேண்டும் என்ற அறிவிப்பை அரசாங்கம் அறிவிக்க
வேண்டும். குறைந்தது 5 பஸ்களையாவது அவர்கள் வைத்து
நடத்தினால்தான் வொர்க்ஷாப் வசதி, ஸ்பேர் பஸ் ஒன்று
வைத்து நடத்தவும், தொழிலாளர்களுக்கு பிராவிடென்ட் பண்ட்
போன்ற வசதிகள் செய்து கொடுத்து, பொதுமக்களுக்கு சீரிய
முறையில் சேவைகள் செய்ய முடியும் என்று இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் குறைவாக இருந்தாலும்
மேலே கண்ட வசதிகளை அவர்கள் செய்து கொடுக்க முடியாது.
அந்த அடிப்படையில் குறைந்தது 5 பஸ் வைத்து இருக்கலாம்
என்ற முடிவை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அரசு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அதில் குறைகள்
சொல்ல வேண்டும் என்று சொல்பவர்கள் சொல்லிக் கொண்டு
தான் இருப்பார்கள். அவர்களைப் பற்றி சிறிதும் யோசிக்காமல்,
தனியார் பஸ் உரிமையாளர்களும் சமுதாயத்தில் ஏழை எளிய
மக்களுக்கு தங்கள் சேவையைச் செய்கின்றவர்கள் என்ற அடிப்
படையில் அவர்கள் தங்கள் தொழிலை நிரந்தரமாகச் செய்
வதற்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

புதிய பஸ் ரூட்டுகள் கொடுக்க காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்
ஆலோசனைக் குழு என்று இருந்தது. பாராளுமன்ற உறுப்பி
னர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆட்சித் தலைவர், தொழில்
நிபுணர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின்
ஆலோசனைப்படி புதிய பஸ் ரூட்டுகள் வழங்கப்பட்டால் பல
தவறுகள் நடக்காமலிருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்
கொள்கிறேன். ஆகவே, ஆலோசனைக் குழுவை அரசு அமைக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளி நாடுகளுக்குச்
சென்று வந்திருக்கிறார்கள். வெளி நாடுகளில்உள்ளது போல்,
சென்னை, மதுரை, கோவை முதலிய நகரங்களில் கேபிள் பஸ்
(மின்சாரத்தில் இயங்கும் பஸ்) விடும் திட்டத்தை அரசு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் ஓடுகின்ற
வாகனங்களுக்கு புகை போக்கியை மேல் நோக்கி உயரமாக
வைக்க அரசு தீர்மானிக்க வேண்டும். இதனால் விஷப்புகையால்
மக்களுக்கு ஏற்படுகின்ற தீமைகள் ஒழிக்கப்படும் என்பதை
நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை வசதி இல்லாத கிராமங்களுக்கு சாலை அமைத்துக்
கொடுத்தால் அவர்களுக்கு அந்தச் சாலையில் பஸ் ஓட்டும் உரிமை
வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தும், இதுவரை அமல்
படுத்தப்படவில்லை. இதனால் பல தனியார்கள் சாலை வசதி
யைச் செய்து கொடுத்துவிட்டு, பஸ் ஓட்ட முடியாத நிலையில்
இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு பஸ் ஓட்ட அனுமதி
அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுமார் 1,300 பஸ்கள் சென்னை நகரத்தில் ஒரு நாளைக்கு
ஓட வேண்டும். ஆனால் 1,000 பஸ்தான் ஓடுகிறது என்று
சொல்கிறார்கள். நூறு பஸ்கள் தொழிலாளர்கள் இல்லாத
தாலும், 150 பஸ்கள் ரிப்பேரில் உள்ளதாலும், 50 பஸ்கள்
ஆக்சிடெண்டில் இருப்பதாலும் ஓடவில்லை என்று சொல்கிறார்

கள். 1,300 பஸ்கள் ஓட வேண்டிய இடத்தில் 1,000 பஸ்கள்
ஓடுவதால்தான், ஜன நடமாட்டம் அதிகமாக உள்ள நகரங்களில்
ஜன நெரிசலும், மக்கள் படிக்கட்டுகளில் தொத்திக் கொண்டு
பயணம் செய்வதால் பஸ் விபத்தும் ஏற்படுகிறது.

குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும்
தினசரி 50 முதல் 112 பஸ்கள் வரை டிரைவர் இல்லை என்ற
காரணத்தால் ஓடாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
அது எப்படி இருந்தாலும் டிரைவர் இல்லாமல் சுமார் 100
பஸ்கள் ஓடவில்லை என்ற ஒரு நிலையைக் கேட்கிறபோது அது
வேதனையான சூழ்நிலையாகத்தான் இருக்கிறது. ஆகவே இதை
அரசு உடனடியாக கவனம் செலுத்தி இனிமேல், டிரைவர் இல்
லாததால் பஸ் ஓடவில்லை என்ற நிலைமையைப் போக்க வேண்
வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

அதோடு அந்த 1,300 பஸ்களும் ஓடுவதற்குரிய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்து நிறுவனத்தில் டிக்கட் வசூலிப்பதில்
அடுத்து போக்குவரத்து நிறுவனத்தில் பெரும் அளவு பணம்,
சார்ட்டேஜ் ஏற்பட்டு மாதந்தோறும் பெரும் அளவு பணம்,
கணக்கில் வராமல் நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லப்படு
கிறது. இதனைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து சாலைகளில் கிடக்கும் ஆணி, லாடம் போன்ற,
இரும்புத் துண்டுகளை சுத்தம் செய்யும் வேன்கள் வைத்தால்,
டயர்கள் பெரும் அளவு சேதம் அடைவதையும், பயணிகளுக்கு
ஏற்படும் காலதாமதத்தையும் தவிர்க்கலாம். இம்முறையினை
டி.வி.எஸ். நிறுவனம் பஸ் விடும்போது பின்பற்றப்பட்ட முறை
யாகும். ஆகவே இந்த முறையை அரசு ஏற்படுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் தனியார் பஸ், லாரிகளில் வேலை
செய்கின்ற டிரைவர், கண்டக்டர்கள் பலர் பல்லாயிரக்கணக்
கானவர்கள் தினசரி சம்பளத்திற்கு வேலை செய்கிறார்கள்.
இந்த நிலையை உடனடியாக மாற்றி கட்டாயமாக அனைவருக்
கும் மாதச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசு பணிமனை மருத்துவ மனைகளில் மருந்துகளே
வழங்குவதில்லை. போதுமான டாக்டர்களும் இல்லை,
த நிலை உடனடியாக போக்கப்பட வேண்டும்.

[திரு. த. புஷ்பராஜு] [1979 ஏப்ரல் 17

அதிகாலையில் பஸ் ஓட்டுவதற்காக இரவு நேரங்களில் பணி
மனையில் தூங்கும் தொழிலாளர்களுக்கு கட்டில், படுக்கை வசதி,
சுடு தண்ணீர் வசதி, குளியல் அறை, கொசுத் தடுப்பு வலை
போன்ற வசதிகளை செய்து கொடுக்க அரசு உடனடியாக நட
வடிக்கை எடுக்க வேண்டும்.

போக்குவரத்துக் கழக ஒர்க் ஷாப்புகளில் தரை கூட சிமிண்டு
போடாத நிலையில் இருக்கிறது. தேவையான டூல்ஸ்கள் இல்லை.
இந்த நிலை உடன் போக்கப்பட வேண்டும்.

பொதுவாக ஆர்.டி.ஓ. ஆபீஸ்களில், பொதுமக்கள், வேலை
துரிதமாக நடக்கவில்லை என்று சொல்கின்ற குறைபாடு இருக்
கின்றது. இதற்குக் காரணம் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு
அலுவலகத்தில் எத்தனை நபர்கள் வேலை செய்தார்களோ அதே
அளவுதான் இன்றும் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி
தேவைக்குத் தகுந்த அளவு ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
ஒவ்வொரு ஆபீசிலும் ஊழியர்களை அதிகப்படுத்த வேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை டூ திருப்பதி சாலையில் திருவள்ளூர்
டூ திருத்தணி சாலையை தேசிய நெடுஞ்சாலையில் எடுத்து
சீர்படுத்த வேண்டும். இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்
பினர் சுந்தரராஜன் அவர்களும், விஜயரகுநாத தொண்டமான்
அவர்களும், சின்னையா அவர்களும் பேசி இருக்கிறார்கள். புதுக்
கோட்டை டூ சென்னை விரைவு பஸ் விட வேண்டும் என்ற
கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு காலதாமதம்
செய்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்த புதுக்கோட்டை டூ
சென்னை விரைவு பேருந்தை விடுவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது ஆலங்குடி தொகுதியில் வேங்கடகுளம்,
கருக்காகுறிச்சி, மரமடக்கி ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு பஸ் வசதி
செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருமயம் தொகுதியில் பொன்னமராவதி, விராச்சி
சிலை போன்ற இடங்களுக்கு பஸ் வசதி செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசு விரைவு பஸ்களில் குறிப்பிட்ட டிக்கட்டுகளுக்கு
அதிகமாக ஏற்றப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு பல
தொல்லைகள் ஏற்படுகிறது. விபத்தும் ஏற்படுகிறது. ஆகவே
அதிக டிக்கட் ஏற்றுவதைத் தடை செய்ய வேண்டும்.

1979 ஏப்ரல் 17] [திரு. தா. புஷ்பராஜு]

சென்னை போன்ற நகரங்களில் ஓடும் டவுன் பஸ்களில்,
படியில் நின்று கொண்டு பயணம் செய்வதால் ஏற்படும் விபத்துக்
களைத் தவிர்க்க டவுன் பஸ்கள் அனைத்திலும் ஆட்டோமெட்டிக்
கதவுகள் பொறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளில் இம்முறை பின்பற்றப்படு
கிறது. அதனால் விபத்துக்கள் நடைபெறுவதில்லை.

அடுத்து சாலையை கடப்பதற்கு சுரங்கப் பாதைகள்
அமைக்கிறார்கள். இந்த சுரங்கப் பாதைகளுக்குப் பதிலாக
மேம்பாலம் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைத்தால்
செலவும் குறைவு, மக்கள் பயம் இன்றி செல்வதற்கும்,
வசதியாக இருக்கும். பார்ப்பதற்கும் அழகாகவும் இருக்கும்.
சிங்கப்பூர் போன்ற நகரங்களில் அதுமாதிரி அமைத்திருக்
கிறார்கள். ஆகவே நமது அரசும் இதனைச் செய்ய
முன்வரவேண்டும்.

அடுத்து கிராமப்புறங்களில் பஸ் ஓடும் சாலைகளை
எல்லாம் தார் சாலைகளாக மாற்றுவதற்கு அரசு தக்க
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை, ஜூனியர் இன்ஜினியர்,
மேற்பார்வையாளர் மாறுதல் குறித்து ஜி.ஓ. 593 அமல்
படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கண்ட ஜி. ஓ. வை ரத்து செய்ய
வும், பணியாளர்களை சொந்த ஜில்லாவில் பணியாற்றவும்,
ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகள் என்ற முறையில் கட்டாய
மாக பணியாற்றவும், சர்க்கிளில் ஐந்து ஆண்டுகள் என்று
நிர்ணயம் செய்துள்ளதை மாற்றி அம்முறை அமல்படுத்து
வதை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாலம் கட்டுவதில், சாலை அமைப்பதில்
காண்ட்ராக்ட் முறையை ஒழிக்க வேண்டும். ஏன் என்றால்
இத்தனை சதவீதம் என்று ஒவ்வொருவருக்கும் லஞ்சம்
கொடுக்கப்படுகிறது. ஆகையால் காண்ட்ராக்ட் முறையை
ஒழித்து அரசே ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கரம்பக்குடி தஞ்சாவூர்
சாலையில் தட்டாமனைப்பட்டி ஆற்றில் பாலம் கட்டித்தர
வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை நகரம் மிக
முக்கியமான நகரம் ஆகும். மழைகாலத்தில் இந்த பட்டுக்
கோட்டை நகரம் துண்டிக்கப்படுகிறது. ஆகவே ஆவணம்

ரோ பட்டுக்கோட்டை சாலையில் உள்ள நரியாற்றில் ஒரு
பாலம் அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு
எனக்கு இந்த வாய்ப்பை அளித்த மாண்புமிகு சட்டப்
பேரவைத் துணைத்தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்து
கொள்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-50)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, சாலைகள், பாலங்கள், சாலைப் போக்குவரத்து,
கப்பல் துறை ஆகிய கோரிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள்
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு சமுதாய வளர்ச்சி
க்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிகவும் இன்றி
யமையாததாக இருக்கக்கூடியது சாலைப் போக்குவரத்துத்
துறை. ஆனால் இன்றைக்கு இந்தியாவில் 100-க்கு 80
சதவீதம் வாழக்கூடியவர்கள் கிராமப் பகுதியிலே இருந்தாலும்,
இந்த நாடு சுதந்திரம் அடைந்து 32 ஆண்டுகள் ஆகியும்
அவர்கள் உதாசீனப்படுத்தப்பட்டுவந்திருக்கிறார்கள். இன்றைக்கு
கிராம மேம்பாட்டுத் திட்டம் என்று வாயளவுக்குச் சொல்லப்
படுகிறதே ஒழிய, கடந்த 30 ஆண்டுகளாக எந்த அரசியல்
கட்சியும், இந்த கிராம மக்கள் நல்வாழ்க்கைக்குத் தேவை
யான எந்த ஒரு நல்ல சாலை வசதிகளையும் செய்து
கொடுக்கவில்லை. இன்றைக்கு கிராமச் சாலைகள்
அமைப்பதற்கு கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்
படுகின்றது. ஆகவே, மாநில அரசு மத்திய அரசை உதவி
கேட்டோம். கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.
கிராமச் சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியத்தைப்
பற்றி வாதாடி, தேவைப்பட்டால் போராடி அந்தத் தொகை
யைப் பெறவேண்டும். இந்தத் தொகையைப்
பெறுவதற்கான எல்லாவிதமான முயற்சிகளிலும்
மாநில அரசோடு தமிழகத்திலே இருக்கின்ற எல்லா அரசியல்
கட்சிகளுக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் இருக்காது.

இன்றைக்கு நம் சாலை போக்குவரத்தில், பஸ் போக்கு
வரத்தில், பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால்,
நம்முடைய அரசின் திட்டவட்டமான நிலை என்ன
என்பது கடந்த இரண்டாண்டுகளாகத் தெரியவில்லை.
இதனால், தனியார் துறையிலே இருக்கின்றவர்கள் தினமும்,
செத்து செத்து பிழைத்து வருகிறார்கள். காரணம்
அரசாங்கம் எந்த நேரத்தில் தங்கள் பஸ்களை எடுத்துக்
கொள்வார்களோ என்று பயப்படுகிறார்கள். ஒன்று அரசாங்

கம் நடத்த வேண்டும் அல்லது பஸ்களை இன்ன இன்னார்
வைத்துக்கொள்ள வேண்டும் என்று திடமான, தெளிவான
உறுதியான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். காரணம்,
அரசாங்கத்தின் தெளிவற்ற நிலை காரணமாக, தனியார்கள்
பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்கள்
கடன் பெற முடிவதில்லை. அவர்களுக்கு கடன் கொடுப்ப
தற்கும் பயப்படுகின்றார்கள். அரசு திடீரென்று எடுத்துக்
கொண்டால், கொடுத்த கடனை எப்படித் திரும்பப் பெறுவது
என்று பயப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை வாழ விடுங்கள்
அல்லது ஆளையாவது விடுங்கள் என்றுதான் கேட்டுக்
கொள்கிறேன். குறைந்தது 5 பஸ்கள் வைத்துக் கொள்ள
அனுமதிக்கவேண்டும். இல்லையென்றால், அவர்களுக்கு 5
பசுக்களையாவது கொடுத்து வாழ வகை செய்ய வேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு போக்குவரத்துத் துறையிலே
அதிகமான நெரிசல் ஏற்பட்டு, சாலை விபத்துக்கள் அதனால்
அதிகமாக ஏற்பட்டு வருகிறது. அதனால், போக்குவரத்திலே
காலதாமதமும் ஆகிறது. ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு
முன்னால் கட்டப்பட்ட பாலங்கள், வருங்காலத்தை கணக்கில்
எடுத்துக்கொள்ளாமல் கட்டப்பட்டதால், இன்றைக்கு போக்கு
வரத்து நெரிசல் காரணமாக விபத்துக்கள் அதிகமாக ஏற்படு
கிறது. ஆகவே, போக்குவரத்துச் சாலைகள், பாலங்கள்
வருங்காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பாலங்கள்
கட்ட வேண்டும்; அமைக்கவேண்டும். அது மட்டுமல்ல.
பாலங்கள், போக்குவரத்துச் சாலைகளுக்கு தரக் கட்டுப்பாடு
பிரிவு நம்முடைய மாநிலத்திலே இல்லை. இன்றைக்கு
பாலங்கள், சாலை போக்குவரத்துக்கான தரக் கட்டுப்பாடு
கள் மத்திய அரசினால்தான் செய்யப்பட்ட வேண்டியிருகிறது.

இன்றைக்கு சாலைகளிலே அதிகமான போக்குவரத்து
இருப்பதன் காரணமாக, உள்நாட்டு போக்குவரத்து வாணியப்
போக்குவரத்து பக்கிங்காங் கால்வாய், கூவம் ஆற்றைப் பயன்
படுத்தி, படகு விடமுயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.
காரணம் என்னவென்று சொன்னால், நெரிசல் இப்போது
அதிகமாக இருப்பதன் காரணமாக, அதைக் குறைக்க முடியும்.
ஆகவே, இன்றைக்கு இந்த கூவம், பக்கிங்காங் கால்வாயில்
படகுகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு போக்குவரத்துத் துறைக்கு மோட்டார்
வாகன வரியின் மூலம் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் வரி
வசூலிக்கப்படுகிறது. இந்த 60 கோடி ரூபாய் எந்த வகையிலும்

செலவு செய்யப்படாமல், இன்று அந்த 60 கோடி ரூபாய் ஒரு
பொது நிதியில் சேர்த்து விட்டு, இதற்கு ஒரு குறைந்த
தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்காரணமாக இன்றைக்கு
சாலைப் போக்குவரத்துக்கு அதிகமாகச் செலவிட முடிய
வில்லை. அதனால், வாகனங்கள் இன்றைக்கு செம்மையாக
ஓட முடியவில்லை. அடிக்கடி இந்தப் பாதைகளில் வாகனங்கள்
போவதால் அங்கேயுள்ள குண்டுகளிலும் குழிகளிலும் விழு
வதின் காரணமாக பேரிங், கிர் பாக்ஸ், டயர்கள்
இவைகள் எல்லாம் சேதமடைகிறது. இவையெல்லாம் பழு
தடைவதற்கு காரணம் அரசாங்கம்தான், இந்தத் துறையில்
கிடைக்கின்ற முழு தொகையையும் இந்தத் துறையில் செலவு
செய்யவேண்டும். இல்லாவிட்டால் வாகனங்களுக்கு ஏற்படு
கின்ற சேதங்களுக்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு மன்றத்
திற்கு செல்லக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த
அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.
எனவே அரசாங்கமானது போக்குவரத்துத் துறையின் வாகன
வரி என்ற முறையில் 60 கோடி ரூபாய் வருகிறது. இதை
பொதுநிதியில் சேர்க்காமல், இந்த நிதியிலிருந்து சாலைகள்,
பாலங்கள், சாலைப் போக்குவரத்து இப்படிப்பட்ட காரியங்
களுக்கு மட்டும் செலவு செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சேலத்திற்கு நமது முதலமைச்சர் அவர்கள்
தமிழ்நாடு மாக்னஸைட் நிறுவனத்தை திறப்பதற்கு வந்தார்
கள். அப்போது கௌரிமேடு டேனிஷ்பேட் ரோட்டில்
குடுவம்பட்டி வழியாகத்தான் சென்றார்கள். அப்போது அந்த
ரோடு முழுவதும் புழுதி நிறைந்து புகைமண்டலமாக
காட்சியளித்ததை நமது போக்குவரத்துத்துறை அமைச்சர்
அவர்களும் கண்ணால் கண்டார்கள். முதலமைச்சர் அவர்
கள் வருவதற்கு முன்பாகவே அந்த ரோட்டில் லாரிகள்
மூலமாக தண்ணீர் தெளித்திருந்தும் கூட, அந்த ஏரியா
முழுவதும் புழுதிமண்டலமாக காட்சி அளித்தது. அந்த
வழியாக போனவர்களுடைய முகத்தில் எல்லாம் மண்
பவுடர் பூசிய காட்சியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்
என்று நம்புகிறேன். இந்த நிலையில் இருக்கின்ற கோரி
மேடு டானிஷ்பேட்டை ரோட்டை சீரமைத்து அங்கு மினி
பஸ்-ம் விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சேலம் பவானி வழியில் 1949-ல் பத்தே
பத்து வண்டிகள் விடப்பட்டது. 49-லிருந்து 79 வரைக்கும்
இரண்டு வண்டிகள்தான் இந்த ரூட்டில் அதிகப்படுத்தப்பட்டிருக்
கிறது. கடந்த 30 ஆண்டுகளாக 12 வண்டிகள்தான் அங்கு
போய்கொண்டிருக்கின்றன. இதனால் அங்கு மக்கள் படுகின்ற

கஷ்டத்தைப்பற்றி அங்குள்ளவர்கள் என்னிடம் கோரிக்கையாக
கொடுத்தார்கள். சம்பந்தப்பட்ட துறையிடம் அவற்றை
சேர்த்து இருக்கிறேன். இப்போதுள்ள இந்த 12 வண்டிகள்
போதாது. இந்த இடத்தில் மேலும் 6 அல்லது 7 வண்டிகள்
அதிகமாக விடுவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

மேலும் முக்கியமாக இப்போது டீசல் கிடைப்பது மிகவும்
கஷ்டமாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 120, 160 லிட்டர்
டீசல் வேண்டுமென்றால், 80, 90 லிட்டர் டீசல் தான் கிடைக்
கிறது. இதன் காரணமாக இரண்டு அல்லது மூன்று முறை
வண்டிகளை விட முடியாத் நிலைமை ஏற்படுகிறது. இதன்
காரணமாக இப்போது காலாண்டு வரியை உரிய காலத்தில்
செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்போதுள்ள
காலாண்டு வரி இந்த மாதம் 24-ம் தேதியோடு செலுத்தியாக
வேண்டும். அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டத்தை உணர்ந்து 24-ந்
தேதி என்றிருப்பதை 30 ஆம் தேதி வரை என்றுகாலத்தை நீட்டிக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டீசலைப்
பற்றி சொல்லும்போது, அதைப்பற்றி உணவுத் துறை அமைச்
சரிடம் தான் கேட்கவேண்டும் என்று சொன்னாலும் அமைச்
சர்களுக்கு கூட்டுப்பொறுப்பு இருப்பதால், எப்படியாவது
இதைப்பற்றி பேசி பஸ் தொழிலும் லாரி தொழிலும் நல்வாழ்வு
பெற, அவை நசித்து விடாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சரியான நேரத்தில்
வரியை செலுத்துவதற்கு தகுந்த முறையில் வண்டிகளை ஓட்டு
வதற்கு அவர்களுக்கு தேவைப்படும் டீசலை வழங்குவதற்கும்
முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பட்டது)

மேலும், குறிப்பாக நல்ல காரியங்களுக்குச் செல்லும்போது,
ரயில்வே கேட் மூடியிருந்தால் அந்த நேரத்தை அபசகுனம் என்று
நினைக்கிறோம். சேலம் நகரத்தைப் பொறுத்தளவில், காந்தி
சிலைக்கு அருகே ஒரு மேம்பாலம் கட்டவேண்டும். இந்த இடத்தில்
ரெயில்வே கேட் அடிக்கடி மூடப்பட்டிருப்பதால் போக்குவரத்து
அரை மணி நேரம் தடைபடுகிறது. ஆகவே சேலத்தில் காந்தி
சிலை, சென்ட்ரல் தியேட்டர் இவைகளுக்கு அருகில் உடனடி
யாக ஒரு மேம்பாலம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதைப்பற்றி நெடுஞ்சாலைத் துறை தலை
மைப் பொறியாளர் அவர்களிடம் போய் கேட்டபோது, இது
போன்று 20, 30 கோரிக்கைகள் வந்திருக்கின்றன, ஆனால்
ஒவ்வொரு பாலத்திற்கும் 40 லட்சம், 50 லட்சம் தேவைப்
படுகிறது என்று சொன்னார்கள். நமக்கு தேவை லட்சியங்கள்
தானே தவிர லட்சங்கள் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்

கிறேன். மக்களுக்கு தேவைப்படும் பாலங்களை அமைத்துக்
கொடுத்தால்தான் மக்கள் முன்னேற்றம் அடைய முடியும்.
இப்படிப்பட்ட லட்சியங்களை நிறைவேற்றும்போது லட்சங்கள்
குறுக்கிடக் கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது
இத்துடன் முடித்து விடுங்கள்....

திரு. சேலம் மு. ஆறுமுகம் : முக்கியமாக பத்திரிகை
நிருபர்களுக்கு எல்லா இடங்களிலும் செல்வதற்கு பஸ் பாஸ்
வழங்க வேண்டும். அதற்கான அறிவிப்பை இப்போதே அறி
விக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது
மல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ்களில் செல்லும்போது,
பாதுகாப்பு மிகவும் தேவைப்படுகிறது. அண்மையில் முருகையன்
கொலையை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.
அதுமட்டும் அல்ல, திடீரென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
ரத்தக் கொதிப்பு, மாரடைப்பு போன்றவை பாதிக்கும்போது,
அவர்களுக்கு துணை இருக்கவேண்டும். ஆகவே சட்டமன்ற
உறுப்பினர்கள் பஸ்களில் பேமிலியோடு செல்வதற்கு தகுந்த
படி அரசு அனுமதிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) மேலும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பல தடவை மணி
அடித்தும் நீங்கள் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள், ஒன்று
என்னைப் பார்க்க வேண்டும், அல்லது நேரத்தைப் பார்க்க
வேண்டும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : இன்னும் ஒரு விஷயத்தை
மட்டும் கேட்டுக்கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எவ்வளவோ
கேட்டுவிட்டீர்கள், இவ்வளவையும் அமைச்சர் அவர்கள் செய்
தாலேபோதும்... முடியுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : கோடை காலத்தில் பஸ்
களில் செலவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அர
சாங்கம் அரசு பஸ்கள் செல்கின்ற எல்லா வழித் தடங்களிலும்
குளிர்சாதனம் பொருத்திய வண்டிகளை விடவேண்டும். பஸ்களில்
குளிர்சாதனம் இல்லாமல் இருப்பதால், பலரும் குளிர்சாதனம்
உள்ள ரயில்களில் பிரயாணம் செய்வதால், நம்முடைய பணம்

எல்லாம் மைய அரசிடம் போய் குவிந்து விடுகிறது. இந்தப்
பணம் நம்முடைய மாநில அரசுக்கு வரக்கூடிய அளவில் எல்லாத்
தடங்களிலும் குளிர்சாதனங்கள் உள்ள பஸ்களை விடவேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி
தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12-00)

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
இன்று மன்றத்தின்முன் மோட்டார் வண்டிகள், சாலைப்
போக்குவரத்து சம்பந்தமான மானிய கோரிக்கைகள்மீது
பார்வேட் பிளாக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச்
சுருக்கமாக கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மோட்டார்
வண்டிகள் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கடந்த
ஆண்டைவிட, இந்த ஆண்டு மிக நல்ல முறையில், நுணுக்க
மாக, தீவிரமாக, நடைமுறையிலே இருக்கின்ற சிக்கல்களை,
இருக்கின்ற பிரச்னைகளை அலசி ஆராய்ந்து செயல்படுத்தியதன்
மூலம், அதிகாரிகளையும், நிர்வாக எந்திரத்தையும்
முறையாக முடுக்கியதன் மூலம், 7 கார்ப்பரேஷன்களில்
ஏறக்குறைய 6 கார்ப்பரேஷன்கள் லாபம் ஈட்டக்கூடிய
நிலைக்கு வந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியைத் தருகிறது.
தமிழக மக்களின் சார்பாக, நான் மட்டற்ற மகிழ்ச்சியை
அமைச்சர் அவர்களுக்கும், இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரி
களுக்கும், ஊழியர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இப்படி இங்கே நான் பாராட்டிப் பேசினாலும், இதிலே
இன்னும் சைன்டிபிக் அப்ரோச் என்ற வகையிலும், ரேஷனல்
அப்ரோச் என்ற வகையிலும் விஞ்ஞான ரீதியான முறையிலே
இதிலே இன்னும் கண்காணிக்கின்ற முறையிலே, அமைச்சர் அவர்
களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய முறையில்,
Technical Cell to judge the standard of work குவாலிடி
செல்ஸ் என்று சொல்கிறார்கள். மத்திய அரசிலே இப்படி
வைத்திருக்கிறார்கள். அதன்மூலம் தரக் கட்டுப்பாட்டைக்
கண்காணிக்கின்றார்கள். அதேபோல், ஒரு குவாலிடி செல்லை
ஏற்படுத்தி, தரக்கட்டுப்பாட்டு எந்திரத்தை நம் மாநிலத்திலும்
அமைக்கவேண்டும். இது மிக அவசியம் என்பதை நான் மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு, கூறத்
தேவையில்லை.

அதேபோல், இந்த நாட்டினுடைய நன்மைக்காகவும்,
நிர்வாகத்திற்கு பயன்படக்கூடிய அளவிலேயும் ஒரு ஆலோ
சனைக் குழுவை, அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை

கிறேன். மக்களுக்கு தேவைப்படும் பாலங்களை அமைத்துக்
கொடுத்தால்தான் மக்கள் முன்னேற்றம் அடைய முடியும்.
இப்படிப்பட்ட லட்சியங்களை நிறைவேற்றும்போது லட்சங்கள்
குறுக்கிடக் கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது
இத்துடன் முடித்து விடுங்கள்....

திரு. சேலம் மு. ஆறுமுகம் : முக்கியமாக பத்திரிகை
நிருபர்களுக்கு எல்லா இடங்களிலும் செல்வதற்கு பஸ் பாஸ்
வழங்க வேண்டும். அதற்கான அறிவிப்பை இப்போதே அறி
விக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டு
மல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ்களில் செல்லும்போது,
பாதுகாப்பு மிகவும் தேவைப்படுகிறது. அண்மையில் முருகையன்
கொலையை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.
அதுமட்டும் அல்ல, திடீரென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
ரத்தக் கொதிப்பு, மாரடைப்பு போன்றவை பாதிக்கும்போது,
அவர்களுக்கு துணை இருக்கவேண்டும். ஆகவே சட்டமன்ற
உறுப்பினர்கள் பஸ்களில் பேமிலியோடு செல்வதற்கு தகுந்த
படி அரசு அனுமதிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) மேலும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பல தடவை மணி
அடித்தும் நீங்கள் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள், ஒன்று
என்னைப் பார்க்க வேண்டும், அல்லது நேரத்தைப் பார்க்க
வேண்டும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : இன்னும் ஒரு விஷயத்தை
மட்டும் கேட்டுக்கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எவ்வளவோ
கேட்டுவிட்டீர்கள், இவ்வளவையும் அமைச்சர் அவர்கள் செய்
தாலேபோதும்... முடியுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : கோடை காலத்தில் பஸ்
களில் செலவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அர
சாங்கம் அரசு பஸ்கள் செல்கின்ற எல்லா வழித் தடங்களிலும்
குளிர்சாதனம் பொருத்திய வண்டிகளை விடவேண்டும். பஸ்களில்
குளிர்சாதனம் இல்லாமல் இருப்பதால், பலரும் குளிர்சாதனம்
உள்ள ரயில்களில் பிரயாணம் செய்வதால், நம்முடைய பணம்

எல்லாம் மைய அரசிடம் போய் குவிந்து விடுகிறது. இந்தப்
பணம் நம்முடைய மாநில அரசுக்கு வரக்கூடிய அளவில் எல்லாத்
தடங்களிலும் குளிர்சாதனங்கள் உள்ள பஸ்களை விடவேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி
தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12-00)

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
இன்று மன்றத்தின்முன் மானிய கோரிக்கைகள்மீது
போக்குவரத்து சம்பந்தமான ஒரு சில கருத்துக்களைச்
பார்வேட் பிளாக் கட்சியின் சார்பாக கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மோட்டார்
வண்டிகள், சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் கடந்த
ஆண்டைவிட, இந்த ஆண்டு மிக நல்ல முறையில், நுணுக்க
மாக, தீவிரமாக, நடைமுறையிலே இருக்கின்ற சிக்கல்களை,
இருக்கின்ற பிரச்னைகளை அலசி ஆராய்ந்து செயல்படுத்தியதன்
மூலம், நிர்வாக எந்திரத்தையும், அதிகாரிகளையும், கார்ப்பரேஷன்களில்
முறையாக முடுக்கியதன் மூலம், 8 கார்ப்பரேஷன்கள் லாபம் ஈட்டக்கூடிய
நிலைக்கு வந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியைத் தருகிறது.
தமிழக மக்களின் சார்பாக, நான் மட்டற்ற மகிழ்ச்சியை
அமைச்சர் அவர்களுக்கும், இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரி
களுக்கும், ஊழியர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இப்படி இங்கே நான் பாராட்டிப் பேசினாலும், இதிலே
இன்னும் சைன்டிபிக் அப்ரோச் என்ற வகையிலும், ரேஷனல்
அப்ரோச் என்ற வகையிலும் விஞ்ஞான ரீதியான முறையிலே
இதிலே இன்னும் கண்காணிக்கின்ற முறையிலே, அமைச்சர் அவர்
களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய முறையில்,
Technical Cell to judge the standard of work குவாலிடி
செல்ஸ் என்று சொல்கிறார்கள். மத்திய அரசிலே இப்படி
வைத்திருக்கிறார்கள். அதன்மூலம் தரக் கட்டுப்பாட்டைக்
கண்காணிக்கின்றார்கள். அதேபோல், ஒரு குவாலிடி செல்லை
ஏற்படுத்தி, தரக்கட்டுப்பாட்டு எந்திரத்தை நம் மாநிலத்திலும்
அமைக்கவேண்டும். இது மிக அவசியம் என்பதை நான் மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு, கூறத்
தேவையில்லை.

அதேபோல், இந்த நாட்டினுடைய நன்மைக்காகவும்,
நிர்வாகத்திற்கு பயன்படக்கூடிய அளவிலேயும் ஒரு ஆலோ
சனைக் குழுவை, அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை

சொல்லக்கூடிய வகையிலே அமைத்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். என்ஜீனியரிங் டிப்பார்டுமென்டைப் பொறுத்தவரையில், ஆலோசனை சொல்வதற்காக ஒரு ரிடையர்ட் அதிகாரியைப் போடலாம். அதேபோல் மெக்கானிகல் சைடிற்கும், டெக்னிகல் சைடிற்கும் அதற்கான நிபுணர் களைப் போடலாம். அதேபோல், இன்னும் பொது மக்கள் பிரச்னை அணுகுவதற்கு பொது மக்கள் பிரதிநிதிகள், பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களை இந்த ஆலோசனைக் குழுவிலே வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும். உதாரண மாக, இதிலே ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டு, போராட்டம், ஊர்வலம் போன்றவை ஏற்படும்போது, அவர்களைச் சந்திக் கின்றது, அதேபோல் நிர்வாகத்திலே ஏதாவது ஏற்பட்டால், அவைகளைத் தீர்ப்பதற்கு இந்த ஆலோசனைக் குழு பயன் படும், அந்த வகையிலே இதை அமைத்தால் நல்லது என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்தைப் பொறுத்தவரையில் காம் போசிட் லாரி பர்மிட் கொடுப்பதை ராணுவத்திலே சேவைசெய்து விட்டு வந்தவர்கள், தாழ்த்தப்பட்ட குடிமகன், இன்னும் சமுதாயத்திலே பிற்பட்ட குடிமகன் ஆகியோர்களுக்கு முன்னு ரிமை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஸ் பேருந்துகளில் பிரயாணம் செய்யும் போது, சென்னை டு கன்னியாகுமரி பேருந்துகளில் பிரயாணம் செய்யும்போது, அதிலே ஸ்டாண்டிங் டிக்கட் கொடுக்கப்படுகின் றது. ஏதோ அவசரத்திற்கு பஸ்ஸிலே போகக்கூடிய ஒரு நிலைமை வருமானாலும்கூட, இப்படி நீண்டநேரம் பிர யாணம் செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, எப்பேர்ப்பட்ட சூழ்நிலை வந்தாலும், இப்படி ஸ்டாண்டிங் டிக்கட் கொடுப்பதை அறவே ரெகண்டிபோக மாற்றவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, நமது மாண்புமிகு உறுப்பினர் சேலம் ஆறுமுகம் அவர்கள் 5 பஸ்கள் வைத்துக்கொள்வதற்காவது விடுங்கள் அல்லது 5 பசுக்கள் வைத்துக் கொள்வதற்காவது விடுங்கள் என்று ஆஸ்யமாகச் சொன்னார்கள். எங்கள் கட்சியின் நிலை மையும் அதேதான் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு சோஷலிச பாதையிலே செயல்படப் போவதாகச் சொல்லி, அந்தக் கொள்கையிலே செயல்பட்டாலும்கூட, அவர்கள் சொன்னார்கள் ஒரு தனிப்பட்ட நபர் 10 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று. நமது அரசு வந்ததற்குப் பின்னால், 5 பஸ்கள் என்று சொல்கிறார்கள். இன்னும் 7 பஸ்கள் என்று சொல்கிறார்கள். இது குழப்பமாக இருக்கிறது.

The situation is very liquid and ambiguous. It is the duty of the Government to make the point very clear and unambiguous to that (the [illegible]) entrepreneurs may try to have a clear line of life in future [illegible] வே, வரும் காலம் [illegible] முடியவில்லை. [illegible] [illegible] எடுத்துக்கொண்டால் என்ன செய்வது என்று இந்த [illegible] பார்க்கிறார்கள். (We are for பிரைவேட் என்டர்பிரீனர்ஸ் [illegible] நிலை இருந்தாலும் சோஷலிசம் socialism definitely). இந்த நிலை வைத்துக்கொண்டு தேர்தலிலே அரசியல் என்று காட்ட வேண்டும் [illegible] கட்சிகள் பயன்படுத்துகிறார்கள்.

நம்முடைய அரசைப் பொறுத்த அளவில், அரசியலுக்காக அடுத்த தேர்தலுக்காக ஒரு காரியத்தைச் செய்கிற அரசு இல்லை; இருக்கிற வரை நல்லதைச் செய்ய இருக்கிறோம் என்று முதல்வர் அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு உறுதுணையாக இருக்கும் அமைச்சர் [illegible] பத்து [illegible] பஸ்களாவது [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நடத்துகிறவர்கள் [illegible] [illegible] [illegible] முடியும். மதுரையில் [illegible] [illegible] செயல்பட பிரைவேட் [illegible] [illegible] சில பகுதிகளுக்கு [illegible] [illegible] பார்க்கிறேன். [illegible] பிரச்சி [illegible] [illegible] இருக்கிறது. [illegible] [illegible] கலெக்டரிடம் [illegible] [illegible] போது [illegible] தேவையில்லை, அதற்கு [illegible] தீப்பற்றி எரியும் போது [illegible] சொல்லி விடுகிறார்கள். [illegible] தனி நபர் உரிமை [illegible] எப்படி இயணைப்பது? வருகிற [illegible] [illegible] [illegible] [illegible] அவர்கள் [illegible] சொல்லுகிறார்கள். [illegible] என்ன தவறு? தனியார் [illegible]

Live and let live என்பதுதான் — democratic principle.

[illegible] ரோட்டைப் பொறுத்த வரை 13 கோடி ரூபாய் [illegible] [illegible] அறிகிறேன். ஏறக் குறைய 30 [illegible] ஒதுக்கியிருப்பதாக [illegible] ஒதுக்கியிருக்க வேண்டும் [illegible] 40 கோடி ரூபாயாவது [illegible] திட்டம், காந்தியடிகளின் [illegible] திட்டம், முதல்வர் அவர்கள் [illegible] வேண்டுமென்று விரும்புகிறார்கள். [illegible] டத்தை நடைமுறைப்படுத்த

122151
Y211,31 N79
N8m.31;2

[திரு. கே. கந்தசாமி] [1979 ஏப்ரல் 17

When the villages live India lives என்று சொல்லுகிறார்கள். இந்தியாவின் உயிரே, ஆத்மாவே கிராமங்களிலே இருக்கிறது என்பதுதான் அரசியல் தலைவர்கள், பக்தர்கள் கருத்து. ஆத்மாவாக இருக்கும் கிராமங்களை தேச அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும். ரோடுகள் நாகரிகத்தை, கல்ச்சரத்தை, பொருளாதாரத்தை விருத்தி செய்கிறது என்பதை உணர வேண்டும். கிராமங்களுக்கு லிங்க் ரோட்ஸ் மிக அவசியம். ரூரல் ரோட்டை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்த முடியாது. பல ரோடுகளை பல லட்சம் ரூபாய்க்கு அமைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அரசே அவற்றை செயல்படுத்த முனைய வேண்டும். அதற்காக அரசு அதிகமாக நிதி ஒதுக்குவதோடு மாத்திரமல்லாமல் மத்திய அரசிடமும் மிகக் கடுமையாக வாதாடி, அவசியம் ஏற்பட்டால் போராடி நிதி வாங்க வேண்டும்.

மழையின்மைக்குக் காரணம், வறட்சிக்குக் காரணம் மரம் வெட்டப்படும் சூழ்நிலை என்று விஞ்ஞானிகளும் சொல்லுகிறார்கள், மெய்ஞ்ஞானிகளும் சொல்லுகிறார்கள். மரங்களை வளர்க்க 1954-ஆம் ஆண்டில் வன மகோத்சவம் என்று ஸ்ரீ பிரகாசா அவர்கள் கவர்னராக இருந்தபோது ஆரம்பித்தார்கள். ஆனால் நடைமுறையில் மரங்கள் குறைந்து கொண்டே வருவதைத்தான் பார்க்கிறோம். ஏறக் குறைய ஒரு லட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள ரோடுகள் தமிழ் நாட்டில் இருப்பதாக அறிகிறோம். ஒரு கிலோ மீட்டருக்கு 10 மரங்களை வைத்தால் பத்து லட்சம் மரங்களை ஏற்படுத்திவிட முடியும். டார்கெட் பிக்ஸ் பண்ணி மரங்களை வளர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரை ஆண்டிப்பட்டி தொகுதி என்று சொல்லுகிறபோது ஆண்டவனால் கூட கைவிடப்பட்ட பகுதி என்று கூறுவார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது கூட அங்கு நாகரிகமே பரவவில்லை என்று சொன்னார்கள். அ.தி.மு.க. கட்சி அமைப்பாளர் இருந்திருக்கிறார். அவருடைய மகன் 12 வயது. டவுன் தெரியாது. கம்பம் எங்கே இருக்கிறது என்று தெரியாது. தேனிக்கு வந்தது இல்லை. 25 மைல் தூரத்திலுள்ள முனிசிபல் டவுனை வந்து பார்த்ததில்லை. ஒரு அமைப்பாளர் குடும்பமே இந்த நிலையில் இருக்கிறது என்றால் மற்றவர்கள் நிலை என்ன என்று பார்க்க வேண்டும்.

1979 ஏப்ரல் 17] [திரு. கே. கந்தசாமி]

போக்குவரத்துக்கு ரோடு வசதி இல்லாமல் அந்தப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி அந்தப் பகுதியில் ரோடு வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக கொட்டக்குடி கோம்பைத் துணிக்கு ஊடே வைகை ஓடுகிறது. மலைக்குண்டு வரை ரோடு போட வேண்டும். சென்ற ஆண்டு அதிலே பாலம் கட்டி ரோடு போட அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் வைகையாற்றிலே மாண்புமிகு குடிநீர் அமைச்சர் அவர்கள் வந்த போது நாங்களெல்லாம் விழுந்து விட்டோம்.

(பிற்பகல் 12-10)

ஆறு அடித்துக் கொண்டு போய் விட்டது. ஏறக்குறைய அன்றைக்கு அமைச்சர் உட்பட, நான் உட்பட என்ஜினியர்களும் அது புராவிடன்ஷியல் எஸ்கேப் என்று தப்பினோம். மயிலாடும் பாறையிலிருந்து கண்டமனூர் சொல்ல வேண்டும். இண்டர் டிஸ்ட்ரிக்ட் பேருந்துகள் விட வேண்டும். இந்த இரண்டு ரூட்களும் முக்கியமானவை. சேர்க்கக் கூடிய பகுதிகள், ஆகவே அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.டி.இ.-யிலிருந்து டி.இ. புரமோஷன் கிடைப்பது 15 ஆண்டுகள் ஆகியும் கிடைக்காமல் இருக்கிறது. ஸ்டாக்னேஷன் ஆகியிருக்கிறது. டிபார்ட்மெண்ட் போர்டிலே 5 ஆண்டுகள் ஆனதும் கிடைக்கிறது. ஆனால் இந்தத் துறையிலே மட்டும் அந்த நிலை இருப்பது ஏன்? எப்படி அவர்களுக்குப் புரமோஷன் இருக்கும்? ஆகவே, மற்றவர்களுக்கு இருப்பதைப் போலவே இவர்களுக்கும் புரமோஷன் கொடுப்பதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டும். தவறு செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், நாங்கள் ஆதரிக்கிறோம். அதற்காக அவர்கள் சோர்வடைகிறார்கள் என்று அறிக்கை கொடுத்தால் அது தவறானதுதான், வேதனை தரத்தக்கதுதான்.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ.க்களுக்கு உதவியாக வருகிற ஒரு அட்டன்டன்ட்டுக்கும் பஸ் பாஸ் கொடுக்கப்பட வேண்டும். பத்திரிகைகாரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் செய்திகளைச் சேகரிக்க வேண்டும், அத்தியாவசியமானது அது, அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 17

திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக தங்களுக்கும் இந்த மாமன்றத் திற்கும் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டு இரண் டாண்டுக் காலத்திற்குள் நம்முடைய போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களும் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் செம்மையாகச் செயல்பட்டதன் காரணமாக நம்முடைய தமிழகத்திலே இருக்கக் கூடிய அரசுப் போக்கு வரத்துத் துறையைச் சேர்ந்த 7 போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக பல கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய அளவிற்கு இருக் கிறது என்றால் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரின் இடையறாத உழைப்பின் காரணமாகவும் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் நல்ல முறையிலே செயல்பட்டதன் காரணமாக இந்த அரசுக்குப் பல கோடி ரூபாய் லாபம் ஈட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலுள்ள பல குக்கிராமங் களை இணைக்கும் வகையில் 6 மினி பஸ் ரூட்களை இந்த அரசு அமைத்துள்ளது. ஒன்று, திருக்கோவிலூர்-டு-கல்பட்டு வழி புத்தூர்-திருக்கோவிலூர், அரசண்டநல்லூர், கொல்லூர், புத்தூர், மேலக் குண்டூர், கீழக் குண்டூர், பரனூர், காகுப்பம், வீரசோழ புரம், ஆற்காடு, கூடலூர், ஆய்ந்தூர், மாம்பழப்பட்டு, கல்பட்டு வழியாக ஒரு ரூட். இரண்டாவதாக திருக்கோவிலூர்-டு-அனந்த புரம் வழி ஆலம்பாடி, சித்தாதூர், கண்டாச்சிபுரம், நல்லா பாளையம், கடையம், கருவாச்சி, சி.என். பாளையம், பனை மலைப் பேட்டை, அனந்தபுரம், மூன்றாவதாக திருக்கோவிலூர் -டு-தேவனூர், வழி நாயனூர் அரசங்குப்பம், திருவெண்ணெய்நல்லூர், வீரபாண்டி, ஒட்டம்பட்டு, அருணாபுரம், வீராச்சி புரம், புதுப்பாளையம், கண்டாச்சிபுரம், நான்காவதாக மல்லிகைப் பட்டு-டு-அனந்தபுரம், வழி கோழிபட்டு, பள்ளியந்தூர், அரிய லூர், கச்சனூர், புதூர், அத்தியூர், திருக்கை, அமைந்தபுரம், அடங்குளம், கொசப்பாளையம், அன்னியூர், பனைலப்பேட்டை, அனந்தபுரம், ஐந்தாவதாக கனக்கங்குப்பம்-டு-முகையூர், வழி கழுத்கம்குப்பம், கல்லேரி, அனந்தபுரம், அள்ளியூர், சங்கீத மங்கலம், அத்தியூர், திருக்கை, ஒதியத்தூர், மேல்வாழை, ஓடுவன்குப்பம், இருதயபுரம், முகையூர், இவைகளை எல்லாம் இரண்டு ஆண்டுகளில் திட்டமிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 6 பஸ் ரூட்களையும் செயல்படுத்த ஒன்றிரண்டு மாதங் களில் ஆவன செய்ய வேண்டுமென்றும் சிற்றுந்துகளை விட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலந்தல்காங்கேனூர் -டு- மணலூர்பேட்டை இடையில் சோழ நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டுமென்று திட்டமிடப்பட்டு கரும்பு செஸ் நிதியிலிருந்து 5 லட்ச ரூபாய்

செலவிடத் திட்டமிடப்பட்டு அதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை நிறைவேற்றித்தந்தால் மூங்கில்துறைப் பட்டு-மணலூர்பேட்டை தார் சாலை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் அரசு செய்த செலவுத் தொகையையும் ஈடுகட்டும் முறையில் இந்தப் பாலத்தை அமைத்தால் தான் அரசு செலவு செய்த 11 இலட்சம் ரூபாய் தொகையும் நல்லதொரு பயனை அடைய ஏதுவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் காரனை, புரவடை, சித்தேரிப்பட்டு ஆகிய இடங் களில் சுமார் 10,000 மக்கள் தொகை இருக்கிறது. அந்த மக்கள் பம்பை நதி என்ற நதியால் சூழப்பட்டு, வெள்ளக்காலத்தி லும், மற்றக் காலங்களிலும் கஷ்டப்படுகிறார்கள். பேறு காலங் களில் பெண்களை அழைத்துச் செல்ல முடியாத நிலையில் அவதி அடைபட்டு இருக்கிறது. ரூரல் ஒர்க்ஸ் மூலமாக சுமார் நான்கு இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது அரசின் ஆய்வில் உள்ளது. அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மணலூர்பேட்டையிலிருந்து தியாகதுருகம் சாலை யில் பொன்னை நதியில் பாலம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அதையும் அரசு நடத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மாணங்கியூர், பையூர், சேத்தூர், கொங்கராயனூர் ஆகிய நான்கு கிராமங்களும் வடபுறத்தில் பெண்ணை நதியும், தென்புறத்தில் கோரையாறும் இருந்து அது ஒரு தீவுத் திடலைப்போலக் காட்சியளிக்கிறது. அங்கே சுமார் 15,000 ஜனத் தொகை இருக்கிறது. அந்த மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். வெள்ள நிவாரணத் தலைமை பொறியாளர் கடந்த மாதம் விசிட் செய்து பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அதையும் நடத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பற்றி பெரியார் போக்குவரத்து மேனே ஜிங் டைரக்டர் அவர்களிடமும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் பல கோரிக்கைகளைக் கொடுத் திருக்கிறேன். திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரத்திற்கும், திருக் கோவிலூரிலிருந்து திருவண்ணாமலைக்கும், பஸ் விட வேண்டும்.

[திரு. கோ. ரகோத்தமன்] [1979 ஏப்ரல் 17

விழுப்புரத்திலிருந்து முகையூருக்கு டவுன் பஸ் விட வேண்டும். விழுப்புரத்திலிருந்து கண்டாச்சிபுரத்திற்கு செல்லும் பொழுது அன்னியூர், அனந்தபுரம் சாலைகளில் இடைஞ்சல் ஏற்பட்டு போக்குவரத்து சரியாகச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. திருவிழாக் காலங்கள், மற்றும் திருமண நேரங்களில் மக்கள் இதனால் மிகவும் அல்லல் படுகிறார்கள். அந்த வழித் தடத்தில் செல்லும் வண்டிகளில் 100 பேர், 150 பேர் பயணிகள் என்று ஏற்றிச்செல்லும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் திருக்கோயிலூரிலிருந்து விழுப்புரத்திற்கு வாங்கும் கட்டணத்தை, அதே கட்டணத்தை திருக்கோயிலூரிலிருந்து மாம்பழப்பட்டுக்கும், அதாவது அருகில் இருக்கின்ற இடத்திற்கும் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதுபற்றி ஆர். டி. ஓ., மற்றும் பிரேக் இன்ஸ்பெக்டர்கள் ஏதாவது நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குத் தயாராக இல்லாமல் இருக்கிறாரகள்.

எனவே மீண்டும் சொல்கிறேன், விழுப்புரத்திலிருந்து முகையூருக்கு ஒரு டவுன் பஸ் விட வேண்டும். விழுப்புரத்திலிருந்து கண்டாச்சிபுரத்திற்கு ஒரு டவுன் பஸ் விட வேண்டும். இந்த பஸ் சூரப்பட்டு, அனந்தப்புரம் அன்னியூர், பனைமலைப்பேட்டை வழியாக விடப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இவைகளையெல்லாம் அரசு எடுத்து நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.,

திரு. க. நாச்சிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம், சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள், பாலங்களைப் பொறுத்தமட்டில், சாலைகள் மேம்பாட்டிற்காக இந்த அரசு வேண்டிய அளவு நிதி ஒதுக்கியிருந்தாலும், இன்னும் கிராமங்களில் சாலைகள் மேம்பாடு அடையவில்லை என்பதால் மத்திய அரசிடம் வற்புறுத்தி இன்னும் அதிக நிதி கேட்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காகக் கிராமங்களில் போராட்டங்களை வேண்டுமானாலும் நடத்துவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அப்படிப் போராடியும் வாங்கலாம்.

சாலைகள் பராமரிப்பில் கிராமங்களில் இன்னும் நல்ல முன்னேற்றம் அடையவில்லை, கிராமங்களை அடிப்படையாக கொண்டு அமைந்திருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் அரசு, கிராமச் சாலைகளுக்கு முதலிடம் கொடுத்து கிராமச் சாலைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17] [திரு., க. நாச்சிமுத்து]

என்னுடைய தொகுதியில் காங்கேயத்திலிருந்து பல்லடம் பொங்கலூருக்கு ரோட்டில் அவினாசிப்பாளையத்திற்கும், தொட்டிபாளையம், ரோட்டில் இடையில் வேலாயுதம்பாளையம், கரைப்பாளையம், ஓடக்கல் பாளையம், சொக்கம் பாளையம், ஆகிய கிராமங்கள் ருக்ரர்வதி, ஜோதியம் பட்டி, சேடபாளையம் ஆகிய கிராமங்கள் வழியாக குண்டடத்திற்கு ரோடு வசதி இல்லை. இதனால் போக்குவரத்துக்கு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்த ரோட்டை, கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்து ரோடு போட்டு, போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரத்திலிருந்து பெரியபட்டி வழியில் கன்னிப்பாளையம் முதல் குமாரபாளையம் வரையில் சாலை சரியாக இல்லை. அந்தச் சாலையைச் சீர்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தாலுக்காவைச் சேர்ந்த குண்டடத்திலிருந்து பொன்னாவரம் வரையில் உள்ள சாலையில் பெல்லம்பட்டிக்கும் மருதூருக்கும் இடையில் உப்பாறு என்ற ஆறு இருக்கிறது. இதனால் இரண்டு பக்கங்களிலும் உள்ள மக்கள் 10, 12 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பஸ் வசதி இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, அந்த உப்பாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20.)

கிராமத்திலேயிருக்கிற மாணவர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கிராமத்திலே இருக்கின்றவர்கள் டவுனில் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் வசதியில்லாமல் இருக்கிறார்கள். கிராமத்திலே இருக்கிற மாணவர்களுக்கு பஸ் பாஸ் உடனடியாக இலவசமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் தாராபுரம் தாலுக்காவில் பல டவுன் பஸ்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அந்த பஸ் வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும். தோழவு

மாவட்டத்தில் சி. டி. சி. நல்ல முறையில் ஓடுகிறது. அதிகமாக இலாபம் கொடுக்கிறார்கள். திருப்பூர் தாராபுரம் பகுதியிலே உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வீட்டு வசதி செய்து கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பல்லடம் பேரூராட்சிக்கு கிராமத்திலேயிருந்து வர அதிக வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.. (மணியடிக்கப்பெற்றது)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: போதும். இதற்குப் பின்பு பேசுகிற உறுப்பினர்கள் ஏதாவது தொகுதி பற்றி 2, 3 நிமிடத்தில் பேசுகிறேன் என்று சொன்னால், பேசுங்கள். இல்லா விட்டால், அமைச்சரைக் கூப்பிடுவேன், பேசுவதற்கு.

<u>திரு. பொ. சிகாமணி</u>: இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்த திர்மானத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக, குளுகுளு வசதி கொண்ட பேருந்துகளை அதிகமாக விட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பேருந்துகளிலே டெலிவிஷன் போன்ற வசதிகளை செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசின் எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தமிழக அரசின் திறமையால், நிர்வாகத் திறமையால் இன்று லாபகரமாக நடத்தப்படுகிற காரணத்தால், எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரே சீரான வகையில் போனஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு உற்சாகத்துடன் சோர்வில்லாமல் வேலை செய்கின்ற தன்மையிலே அவர்களுக்கு இரவு நேரத்திலே டீ, பன் போன்ற வசதிகளை செய்து தருவதோடு, எல்லா கழகங்களிலும், இந்த வசதிகளை அளிக்க முயற்சி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி ஒன்றை, கோளாக விடுகிறேன். எல்லாப் போக்குவரத்து தொழிலாளர் களுக்கும் எல்லோருக்கும் அதிகபட்ச சீரான போனஸ் வழங்கப்பட வேண்டுமென்று முதலிலே குறிப்பிட்டேன். இன்று, போக்கு வரத்துக் கழகங்கள் இலாப நிலையிலே இருக்கிற காரணத்தாலே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் சலுகை அளித்து வசதி செய்து தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]லையில் படிக்கும் மாணவர்களுக்கு பஸ் பாஸ் சலுகை [illegible]ரப்பட்டதைப் போல், கிராமப்புறங்களிலே படிக்கும் மாணவர் [illegible]ளுக்கு டஸ் பாஸ் வசதி செய்து தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை—திருவனந்தபுரம் குளுகுளு [illegible]பேருந்தில், கூட்டம் அதிகமாக இல்லாத காரணத்தால், குறைந் [illegible]து 2 பைசா வீதம் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கழகங்களில், 240 நாட்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புத் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன.

தொழிலாளர் குடும்பங்களுக்கு வருஷத்திற்கு ஒரு முறை இலவச உல்லாச பயண வசதி செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக, சென்னையிலே, ஸ்கூட்டர் ஓட்டுபவர் களுக்கு கர்நாடக மாநிலத்திலே இருப்பதைப் போல், "ஹெல் மெட்" வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன.

<u>*திரு. என். பெருமாள்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது வரகூர் தொகுதி யின் சார்பிலும், என் சார்பிலும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவைப் போன்று, வளரும் நாடுகளுக்கு போக்குவரத்து உயிர் நாடியாகும். நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்துக் கழகங்களும் செவ்வனே செயலாற்றி வருகின்றன. மக்கள் மனம் மகிழ்ந்து போற்றும் வகையில் புரட்சித் தலைவருடைய ஆட்சி ஏழை, எளிய மக்களுக்குச் சிரமம் இன்றி சென்று வர போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்து மேலும், விரைவுப் பேருந்துகளில் சட்டணங்களை அதிகரித்துள்ளது. இருப்பதன் மூலம், புரட்சித் தலைவரை மக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர்.

இது நாள் வரை ஏழை, எளிய மக்கள் விரைவுப் பேருந்து [illegible] கால் எடுத்துக் கூட வைக்க முடியாத நிலைமை மாறி, [illegible]வோரும் பயணம் செய்யும் வண்ணம் செய்தமைக்காக ஏழை [illegible] மக்கள் நமது புரட்சித் தலைவரையும், கழக அரசையும் பாராட்டி வருகின்றனர்.

என்னுடைய தொகுதியில் சாலைப் போக்குவரத்துகளின்றி மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள்.

ஆலத்தூர் கேட்டிலிருந்து அரியலூர் செல்லும் பாதையில் தனியார் பஸ்களும், சி. ஆர். சி. பஸ்களும் போய்க் கொண்டிருக்கிறது. அந்தச் சாலையில் பல உயிர்களை இரையாக்கிய மருதையாறு சென்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பாலத்தில் ஒரு அணை கட்ட வேண்டும் என்று பல முறை எனது தொகுதி மக்கள் முனபிருந்த அரசிடம் எடுத்துச் சொல்லியும் கேட்பாரற்று கிடந்து வருகிறது.

இது குறித்து நமது கழக அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து நமது போக்குவரத்து அமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கிய எனது தொகுதி மக்களின் அவதியை இப்பாலத்தை கட்டியும், தார் ரோடு போட்டும் போக்குவரத்தை சீர் செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 1962–ஆம் ஆண்டிலிருந்து திட்டக்குடி, சீகூர் பார்டர் நடுவில் வெள்ளாறு ஓடிக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியான ஆடுதுறை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பல ஊர்களிலிருந்தும் பள்ளி மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் காலங்களில் சுமார் 30 மைல் தூரம் சுற்றி வந்து பள்ளியைச் சேரும் அவல நிலை ஏற்படுகின்றது.

மேலும் புதிதாக இவ்வாற்றில் பாலம் கட்டுவதால், தென் ஆற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் இணைத்த பெருமை நமது கழக அரசுக்கு கிட்டும் என்றும், பொது மக்களின் சௌகரியங் களுக்கும் உடனடியாக பரிசீலனை செய்து ஆவன செய்ய கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

இன்னும் கொஞ்சம்தான். மேலும் சீகூர்பார்டரி லிருந்து சென்னை தேசிய நெடுஞ்சாலை வரை சாலைகள் மிகவும் குறுகலாக இருப்பதால் எரையூர் பண்டித ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றி வரும் வண்டிகளும், எதிரிலே செல்லும் இதர வாகனங்களும் செல்ல வழி இல்லாததால் இந்த சாலையில் பல முறை விபத்துக்களும், உயிர் சேதங்களும் ஆகியுள்ளன என்பதை சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன். ஆகவே இந்தச் சாலையை அகலப்படுத்தி போக்கு வரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் செய்யும்படி கேட்டுக் கொள் றேன்.

மேற்கொண்டு சுதந்தரம் பெற்று 31 ஆண்டு காலமாக குக் கிராமங்கள் அதிகம் இருப்பதால், ஊராட்சி ஒன்றிய மையங் களுக்கு அவசரமாக செல்வதென்றாலும், சுமார் 25 கிலோ மீட்டர் சுற்றித்தான் செல்ல வேண்டியிருக்கிறது எனவே, இதனை இணைக்கும் வகையில் திருச்சியிலிருந்து சீகூர் பார்டர் வழியாக பாடாலூர், பெரம்பலூர், குன்னம்வேப்பூர், ஓலைப்பாடி, வயலப்பாடி, சீகூர் பார்டர் வரை புதிதாக பஸ் விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும். நிறுத் திக் கொள்ளுங்கள். திரு. சீனிவாச ரெட்டியார் அவர்கள் பேசட்டும்.

*திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்: சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகள், பாலங்கள் போக்கு வரத்து மானியத்தின் மீது பேச அனுமதித்ததற்கு நன்றி கூறி என் தொகுதியில் உள்ள குறைபாடுகளை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திருச்சியிலிருந்து கரூர் செல்லும் நெடுஞ் சாலை குறுகிய பாதையாக இருப்பதால் அதனை விரிவு படுத்தி அகலமாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசிடம் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் சில இடங்களில் வளைவு பாதை கள் மிக மோசமாக இருக்கின்றன. அவைகளைச் செப்பனிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் லாலாப் பேட்டையில் ரயில்வே லைனுக்கு மேல் மேம்பாலம் ஒன்று கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திம்மாச்சிபுரம் கிழக்கு—குளித்தலைக்கு மேற்கே உள்ள பாலம் மோசமான நிலையில் இருக்கிறது—அது மிகவும் குறுகியதாக இருப்பதால் அதையும் அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டவாய்த்தலையில் உள்ள பாலத்தில் அடிக்கடி லாரிகள் கவிழுகின்றன. விபத்துக்கள் ஏற்படுகின்றன. இருபக்கமும்கோவில் கள் உள்ளன. பாலத்தை மாற்றி நேராக கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டளை மேட்டு வாய்க்கால் பாலங்களில் 1933–ஆம் ஆண்டு கட்டப்பட்ட பாலம் இது. அந்தப் பாலங்கள் அகலம் இல்லாது குறுகியிருப்பதால் கிராமப்புறங்களுக்கு பஸ்கள் விட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை அகலப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. போ. எ. சீனிவாசரெட்டியார்] [1979 ஏப்ரல் 17 (பிற்பகல் 12-30)

அடுத்து, திருச்சியில் இருந்து சின்னப்பனியூர், தேசிய மங்கலம் வழியாக குளித்தலைக்கு பஸ் விட வேண்டும். திருச்சி யில் இருந்து சின்னப்பனியூர், தேசியமங்கலம் வழியாக கீரனூர் பாளையம் கருருக்கு பஸ் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

எங்களுடைய பகுதியில்—திருச்சியில் நெடுஞ்சாலை தலை மைப் பொறியாளர் டிவிஷன் இன்ஜினியர் அலுவலகம் இல்லை. அது புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது. ஆகவே, திருச்சியில் தலைமைப் பொறியாளர் டிவிஷன் இன்ஜினியர் ஆபீஸ் இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

15—4—1979 அன்று மாலை 5 மணிக்கு பட்டவாய்த்தலை யில் இருந்து திருச்சிக்குப் போகும் பஸ்ஸில் சென்றேன். அந்த பஸ் எண். டி. எம். என். 4118. சோழன் போக்குவரத்துக் கழக பஸ். அந்த பஸ்ஸில் அதிகமான பயணிகளை ஏற்றிச் சென் றார்கள். அதிலே நானும் சட்டமன்ற உறுப்பினர் என்று இருந் தும் நின்று கொண்டே பயணம் செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலையைத் தடுக்க வேண்டும். பி.டி.சி. பஸ்களில் எம். எல். ஏ-க்களுக்கு என்று சீட்டு ஒதுக்கி இருப்பது போல சேரன், பாண்டியன், சோழன் போக்குவரத்துக் கழகங்களிலும் இடம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் சாலைகள் இரண்டு ஆண்டுகாலமாக செப்பனிடப்படவில்லை. அதுவும் வெள்ளம் வந்ததால் அந்தப் பாதைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அந்தப் பாதைகள் செப்பனிடப்பட வேண்டும். அதே நேரத்தில் சாலைகளுக்கு தார் போடவேண்டும் என்றும கேட்டுக் கொள்கிறேன். மணப்பாறைப் பகுதியில் சமுத்திரம் அருகே பாலம் ஒன்று கட்ட வேண்டும். அது இரண்டாண்டு காலமாக பேசி இருக்கிறேன்., செய்யப்படாமல் இருக்கிறது. அவசியம் அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரயில்வே ஸ்டேஷன் அந்த ஒரு வழியாகத்தான் மக்கள் போகமுடியும் என்பதால் மழை பெய்து வெள்ளம் வந்துவிட்டால் அந்தப் பக்கம் போக முடியவில்லை. ஆகவே, அவசியம் அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குளித்தலை— காவேரி பாலம் திறக்கும்போது அதற்கு லைட் போடவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கடிதம் மூலமாக எழுதிக் கொடுத்து இருக்கிறேன். அது லைட் போடாமல் திறப்ப தாகக் கேள்விப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் தயவு செய்து

1979 ஏப்ரல் 17] [திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்]

அந்தப் பாலத்திற்கு லைட் வசதி செய்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முசிரிக்கும்-குளித்தலைக்கு இடையே மக்கள் அந்தப் பாலம் வழியாகத்தான் போகவேண்டும் என்பதால் லைட் வசதி அவசியம் தேவை.

குளித்தலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே விரைவுப் பேருந்து விடவேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், குளித்தலை-முசிரியிடையே உள்ள காவேரி பாலத்திற்கு காமராஜர் பெயர் வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

*திரு க. இரா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவரவர் களே, இன்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகளை வர வேற்று பேசுகையில் என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

போக்குவரத்துத் துறையில் நமது ஆட்சி ஏற்பட்டபிறகு நல்ல மாற்றங்கள் செய்து, நல்ல லாபகரமான நிலைக்கு வந்து இருப்பது பாராட்டி, வரவேற்கத்தக்கதொன்றாகும். அந்த அடிப்படையில் பாராட்டி, என் தொகுதி சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், அங்கே கிராமப் புறங்களுக்கு சரியான முறையில் சாலை வசதி இல்லாத காரணத் தால், கிருஷ்ணகிரி ஒரு நகராட்சிப் பகுதியாக இருப்பதால் பல கிராமங்களிலிருந்து அங்கே வருவதற்கு வாய்ப்பாக இருக்கிற வகையில் சில இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் இருந்து சோக்காடி, மோரமோடுகு வரையில் சாலை அமைத்து, பஸ் போக்குவரத்து விட வேண்டும். அதேபோல், கிருஷ்ணகிரியில் இருந்து கண்ணம்பல்லி கோயில் பெரிய மலைக் கோவில் வெலம்பட்டிக்கு சாலை அமைத்து பேருந்து விட வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி பெங்களூர் போகிற சாலையில் குருபரபள்ளி, எண்ணேகோல், புதூர் பாலிகானூர், பெல்லம்பள்ளி வழியாக ராயக்கோட்டை ரோடு இணைப்புப்பாதை ஏற்படுத்தி,—அமைச்சர் அவர்கள் நான் சொல்வதைக் கவனமாகக் கேட்க வேண்டும், அந்த வழியில் பெண்ணையாறு குறுக்கே வருகிறது. அதற்கு பாலம் கட்டி

பேருந்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்படி செய்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல
வசதி ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

சென்னை நகரில் வரும் லாரிகளைவண்டிகளை சோதனைச்
செய்கிறோம் என்று சார்ஜென்டுகள் டிரைவர்களை மிரட்டி
ஒன்றும் தவறு இல்லை என்றாலும் ஏதாவது லஞ்சம் பெறுவதற்
காக நிறுத்துகிறார்கள். இதற்கு முன்னாலே, போன அரசு ஒரு
சட்டத்தைப் போட்டு இருந்தார்கள். இரவு 8 மணிக்கு மேல்
லாரிகளை நிறுத்தி சோதனை போடக் கூடாது. காலை 6 மணி
வரை லாரிகளை நிறுத்தக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தார்
கள். அந்த அடிப்படையில் உத்தரவு போட வேண்டும் என்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து தனியார் பஸ்களிலே வேலை செய்கின்ற
தொழிலாளர்களுக்கும் அரசுத் துறையில் குடும்பநல நிதி ரூபாய்
பத்தாயிரம் என்று இருப்பது போல் தரப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வண்டி உரிமையாளர்கள் 3 மாதத்திற்கு ஒரு முறை
வரி கொடுக்கின்ற போது இந்த குடும்பநல நிதிக்கும் அவர்கள்
ஒரு பங்குத் தொகையைக் கட்ட வேண்டும் என்று அரசு ஆணை
யிட்டு அதன்படி 10 ஆயிரம் ரூபாய் தொழிலாளர்களுக்கு
சேர வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அரசுப் பேருந்துகளில் தொழிலாளர்கள் பணி புரிகின்ற
போது 25 பைசா, 50 பைசா தவறிவிடுகின்ற போது உடனடியாக
அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அந்த முறையை
மாற்றி அவர்களுக்கு நிர்வாகத்தில் வேறு வகையிலே
பனிஷ்மெண்ட் கொடுத்து அவர்களைப் பணியிலே தொடர்ந்து
இருக்க அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து எண்ணூரில் ஒரு மீன் பிடிக்கும் துறைமுகம் ஏற்படுத்து
வதற்கு ஆக உத்தரவிட்டுள்ளதாக நான் அறிகிறேன். உட
னடியாக அந்த மீன் பிடிக்கும் துறைமுகத்தை ஏற்படுத்த வேண்
டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாரண்டஹள்ளி—டு—காரிமங்கலம் இடையில் உள்ள
திருடன் பள்ளத்திற்கு ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டு
இந்த வாய்ப்பைத் தந்த தலைவருக்கு நன்றி சொல்லி விடை
பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு
பட்ட அரிய கருத்துக்களையும், அரசு நடைமுறைக்குக் கொண்டு
வரவேண்டிய ஆலோசனைகளையும், மக்களின் உடனடித் தேவை
களைப் பற்றியும், எங்கெங்கு நிர்வாகம் செம்மையாவதற்கு
என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது
பற்றி பல்வேறு அரிய கருத்துக்களையும், ஆலோசனைகளை
யும் நல்கி இருக்கின்றார்கள்.

அத்தோடு வேறு சில சட்டமன்ற உறுப்பினர்களும் பேச
வாய்ப்பினைப் பெறாமல் போய்விட்டாலும், அவர்கள் நேரடி
யாக என்னிடம் பல முறை வேண்டுகோள்களாகக் கொடுத்தும்
பல கோரிக்கைகளை எழுப்பி இருக்கிறார்கள். அவைகளை
எல்லாம் மிக கவனத்துடன் ஆய்ந்து விரைவிலே நடவடிக்கைகள்
மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதனை
முதற்கண் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அம்பிகாபதி
அவர்கள் சித்தமல்லி கோரையாற்றின் குறுக்கே ஒரு பாலம்
வேண்டும் என்றும் மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் பாலாற்றின்
குறுக்கே ஒரு பாலம் வேண்டும் என்றும் மாண்புமிகு திரு.
கந்தசாமி அவர்கள் கோம்பைத்துண்டு பகுதியின் அருகே ஒரு
பாலம் வேண்டும் என்றும் மாண்புமிகு திரு. ஆறுமுகம் அவர்கள்
தமிழ்நாடு மேக்னைசட் கார்ப்பரேஷன் வழிச்சாலை உடனடியாக
தார்ச்சாலையாக மாற்றப்பட வேண்டும் என்றும் இது போன்ற
பல கோரிக்கைகளை அவர்களும் மற்ற பல உறுப்பினர்களும்
கூறினார்கள். அவர்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து
ஆய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிகளை மேற்
கொள்ளும் என்பதனை முதற்கண் கூறிக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

மோட்டார் வாகன மானியக் கோரிக்கையைப் பொறுத்த
வரைக்கும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள்
கூறினார்கள். பவானி சட்டமன்ற உறுப்பினர் திரு.
சௌந்திரராஜன் அவர்கள் பேசுகின்ற போது மோட்டார்
வாகனத் துறையிலே உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு
உயர் பதவிகள் தருவதிலே முன்னுரிமை வழங்கப்பட்டது
பற்றிக் குறிப்பிட்டு அது சிறந்ததொரு நடவடிக்கை எனக் கூடக்

கூறினார்கள். ஆனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். மோட்டார் வெகிக்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கும், சூப்பிரண்டுகளுக்கும் 1:1 என்ற அளவில் இதுவரை கொடுக்கப்பட்டுவந்த பதவி உயர்வு 4:1 என்று மாற்றப்பட்டதில் மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர்களுக்கு சலுகை வழங்கப்பட்டது என்றும் ஏறத்தாழ 150-க்கு மேற்பட்டவர்களிடமிருந்து பெரும் பணம் வசூலித்துக் கொடுத்த பிறகு இந்தச் சலுகையைப் பெற்றிருக்கின்றார்கள் என்றும் அணு அளவும் ஆதாரமற்ற முற்றிலும் உண்மைக்குப் புறம்பான வகையிலே புழுதிவாரி தூற்றுகின்ற வகையிலே குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கின்றார்கள். அதற்கு நான் பதிலிறுக்க வேண்டியது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன். இந்தப் பதவி உயர்வு முடிவு இந்த ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டது போலும் அன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். ஆதாரம் இன்றி, ஆய்வு நடத்தாமல், புழுதி வாரி இறைப்பது போல் ஏதேனும் ஒரு வீணான குற்றச்சாட்டைக் கூற வேண்டும் என்ற நோக்கத்தோடு அது கூறப்பட்டிருக்கிறது என நான் கருதுகிறேன்

(பிற்பகல் 12-40)

அவசரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நிதான ஆய்விற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பாரேயானால், இப்படி ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அன்று கூறியிருக்க மாட்டார் என்று கருதுகிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நிர்வாகத்தில் தூய்மை ஏற்படுத்த வேண்டும், ஏழாண்டு காலமாக படிந்திருந்த மாசு இந்த ஆட்சிக் காலத்தில் போக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு மோட்டார் வாகன ஆய்வாளராக இருந்தாலும் சரி, மற்ற எந்தப் பிரிவினராக இருந்தாலும் சரி, ஊழல் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். அந்த அடிப்படையில் இந்தத் துறையில் மட்டும் இந்த ஓராண்டு எட்டு மாத ஆட்சிக் காலத்தில் மட்டும் 13 அலுவலர்கள் மீது தற்காலிக பணி நீக்கம் செய்து, கடும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, 1974-75 ஆகிய இரண்டாண்டு காலத்தில் 4 அலுவலர்கள் மீது மட்டும் தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால், எங்களைப் பொறுத்த வரையில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மூலமாகவோ, மற்ற எந்த அதிகாரிகள் மூலமாகவோ, வேறு எந்த விதத்திலோ, அவர்களுக்கு சலுகை

காட்டுவதற்காகவோ, வேறு எந்த நலனுக்காகவோ, எவ்வித நிதியும் வழங்கப்படவுமில்லை, வசூலிக்கப்படவுமில்லை. என்பதனை இந்த அவைக்கு திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் முதல்வராக இருந்த ஆட்சிக் காலத்தில் எந்த எந்த வித நிதி வசூலுக்கெல்லாம் மோட்டார் வாகன ஆய்வாளர்களும், மற்ற மேல் அதிகாரிகளும் கட்டாயமாக உட்படுத்தப்பட்டார்கள் என்னும் கசப்பான உண்மைகளுக்கு ஆதாரமாக, அப்படி கட்டாயப்படுத்தப்பட்ட அதிகாரிகள் விசாரணைகளின்போது முன்னர் எழுத்துமூலம் தந்த விளக்கங்கள் இன்றும் அரசு ரிக்கார்டுகளாக இருக்கின்றன.

மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு உயர் பதவியில் அதிக வாய்ப்புத் தருவது பற்றி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ, பின்னரோ, எடுக்கப்படாத ஒரு முடிவு தற்போது இந்த ஆட்சிக் காலத்தில்தான் எடுக்கப்பட்டுள்ளது போன்று உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலையும், அவைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இதுபற்றிய உண்மை நிலையை அவைக்குக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய முடிவு எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது போல், இந்த ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டது அல்ல, மாறாக, எதிர்க்கட்சித் தலைவர் முதல்வராக இருந்த 1974 ஆம் ஆண்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டு விட்டது.

1974-ல் தமிழக போக்குவரத்துத் துறையை சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கருதிய போது, இத்துறையை முழுதும் பொறியியல் துறையாக மாற்ற அப்போதைய அரசு கீழ்க்கண்ட முடிவு எடுத்தது.

போக்குவரத்துத் துறையின் பெரும் பணி, வாகனங்கள் நல்ல நிலையில் இருக்கின்றனவா, வண்டி ஓட்டுனர்களுக்கு உரிமம் வழங்குவதற்கேற்ற தொழில் நுட்பத் தேர்வுகளில் தேர்வு பெறுகின்றனரா என்றே பார்க்க வேண்டி வரும். இன்று மாவட்டப் போக்குவரத்துத்துறை அலுவலராக, தொழில் நுட்பத் தகுதி இல்லாதவரும் வரலாம் என விதி இருப்பதால், தொழில் நுட்பம் தேவைப்படும் காரியங்களில் குறைபாடு ஏற்படுவது இயற்கை.

இத்தகு தொழில் நுட்பக் குறையைப் போக்கிடவும், வழித்தடங்களை உருவாக்குவதில் பயணிகள் எண்ணிக்கை, பயணிகள் விருப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ப வழித் தடங்களை விஞ்ஞான

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

முறையில் சீரமைத்திடவும், போக்குவரத்துத் துறை அலுவலாளர் தொழில் நுட்ப வல்லுநராக இருக்க வேண்டும் என்றும், அரசு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே, மராட்டியம் , குஜராத் போன்ற மாநிலங்களில், போக்குவரத்துத் துறை முழுவதையும் தொழில் நுட்ப வல்லுநர்களே நடத்தி வருவது இங்கே குறிப்பிடத் தக்கது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆகவே, நிர்வாக அமைப்பு முறையை நான்கு நிலைகளாக சீரமைத்தும், நிர்வாக அலுவலர்களைப் படிப்படியாகத் தொழில் நுட்ப வல்லுநர்களாக மாற்றி அமைக்கவும் இச் சீரமைப்பு வழிவகை செய்கிறது.

இந்த முடிவை 1974-லே இருந்த அரசு ஒரு வெளியீட்டிலே வெளியிட்டிருக்கிறது. அதைத்தான் நான் இங்கே படித்துக் காண்பித்தேன். இந்த முடிவைத்தான் எடுத்தார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை மறந்து விட்டார்கள். மறந்துவிட்டதுபோல், நாங்கள் தேடிப்பார்க்க மாட்டோம் என்ற எண்ணத்தில் கூறினார்கள். நாங்கள் இதையெல்லாம் தேடி எடுத்து, ஆய்வு செய்து, முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் போக்கு வரத்து அமைச்சராக இருந்தார்கள். அப்போது நடக்கவில்லை. இப்போது நடந்திருக்கிறது. 1974 ஆம் ஆண்டு அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டதற்கு அரசு ரிக்கார்டு இருக்கிறது. அதிலே குறிப்பிட்டதைத் தான் நான் கூறியிருக்கிறேன்.

தற்போது மோட்டார் வாகனப் உதவிப் பொறியாளர் ஒருவரையும் சேர்த்து மொத்தம் தமிழகத்தில் 21 மண்டல போக்குவரத்து அதிகாரிகள் பணிபுரிகின்றார்கள். மண்டல தலையாய பணி பொறியியல் தன்மை வாய்ந்தது. இவர்களது பொறியியல் பயிற்சி பெற்ற மோட்டார் வாகன ஆய்வாளர் களின் பணிகளை மேற்பார்வை செய்வதுமாகும். மேலும் 1974-ம் ஆண்டிலேயே பொறியியல் வல்லுநர்களுக்கு மட்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களாகப் பதவி உயர்வு கொடுப்பதென முந்தைய அரசு முடிவு செய்யது.

இத்தகைய பதவிக்கு உயர்வு கொடுக்கும் போது, அமைச்சுப் பணியாளர்கள் , மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகிய இரு சாராருடைய கல்வி, பயிற்சி முதலியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். எழுத்தர், உதவியாளர், கண்காணிப்பாளர் ஆகிய அமைச்சுப் பணியாளர்கள் எஸ். எஸ். எல். சி. எனும் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். ஆனால், மோட்டார் வாகன ஆய்வாளர் பதவிக்கு பள்ளி இறுதிக் கல்விக்குப்

...னையன்]

...யல் டிப்ளோமா பெற்றிருத்தல்
...எம். இ., டி. எம். இ. போன்ற
...து மோட்டார் வாகன பொறியியலில்
இன் ஆட்டோமொபைல் என்ஜினியரிங்
...போன்றவை பெற்றிருத்தல் வேண்டும்.

...மூன்று
...படித்தவர்கள், அதாவது
...லது எஸ். இ. இ. ...மோட்டார் வெகிக்கல்ஸ
...டுகள் பயிற்சி பெற்றவர்கள் ...கொள்ளப்படுகிறார்கள். அதோடு,
...ஸ்பெக்டர்களாக எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அமைச்சுப் பணியில் இருக்கிற
...ஸ். எஸ். எல். சி. படித்துவிட்டு அமைச்சுப் வேலை வாங்கக்
...வர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர்களை என்று சொல்வது தவறு
கூடிய அளவில் பதவி தரவேண்டும் என்று இதற்கான ரிக்கார்டும்
என்று 1974-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கான ...குறிப்பிட்டிருக்
இருக்கிறது. இந்தக் கருத்தை புத்தகத்திலும்
...கிறார்கள்.

அதோடு வட்டார போக்குவரத்து அலுவலர்கள்
...தகுதியில் இருப்பவர்களும்
என்பதில், நான்-டெக்னிக்கல் இருக்கிறார்கள். இதிலும்
டெக்னிக்கல் தகுதியுள்ளவர்களும் 21 ஆகவும், பொறியியல் தகுதி
பொறியியல் தகுதியுள்ளவர்கள் 4 ஆகவும் இருந்ததின் அடிப்.
...யில்லாதவர்கள் என்ற முறையில் முடிவு எடுக்கப்பட்டது.
படையில் 5:1 என்ற விகிதத்தில் பொறியியல் தகுதியுள்ள
இன்னொரு முக்கியமான பிரச்சினை பதவி உயர்வு தகுதியில்.
...வர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் 84 பேர்கள். ஆனால்,
உள்ள 'ர்டர் போஸ்டில் இருப்பவர்கள் ...உயர் பதவிக்கு வரக்
வெறும் எஸ். எஸ். எல். சி. படித்துவிட்டு இருக்கிறவர்கள் 16 பேர்
கூடிய தகுதி பெற்ற ரீடர் போஸ்டில் இருக்கிறால், எஸ். எஸ். எல் சி.
கள். அந்த 16 பேருக்கு அந்த பதவி என்றால், ...க்கு மேல் 4½ ஆண்டுகள்
படித்தவர்களுக்கு எஸ். எஸ். எல். சி. ஆய்வாளர்களுக்கு கண்டிப்
பயிற்சி பெற்று மோட்டார் வாகன தரவேண்டும். காரணம் என்ன
பாக அதுபோல் ஐந்து மடங்கு தரவேண்டும். போஸ்டுக்கு இருக்கிறார்கள்;
வென்றால், 84 பேர்கள் அந்த ?டர் முடிவுகள் அடிப்படையில்.

இருப்பினும் 74-ல் எடுக்கப்பட்ட தகுதியில்லாதவர்களுக்கும் சலுகை
படிப்படியாக பொறியியல் முதற்கட்டமாக 4 : 1 என்று இந்த மு...
தரும் முகத்தான் எனபதைக் கூறி, இது போன்ற முடிவு த...
எடுக்கப்பட்டது 74-ல் தமிழகத்தில் எடுக்கப்பட்...
இல் மட்டுமல்ல, மாநிலத்திலும். குஜராத் மாநில...
மகாராஷ்டிர இது போன்ற முடிவு நடை...
வங்கத்திலும் அங்கு வந்து. மோட்ட...
முழுமையாக டெக்னிக்கல் துறை...
என்பது ஒரு எடுத்ததற்குக் க...
அந்த முடிவு என்...
...யமான முடிவு என்...
...டுத்து நட...

கள். நாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.
அதற்குக் காரணம், இந்த மோட்டார் வாகனத் துறையைப்
பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க—உதாரணமாக போலீஸ்
துறையை எடுத்துக் கொண்டால் போலீஸ் துறையில் எழுத்தர்
இருப்பார், ஜூனியர் அசிஸ்டெண்டு என்று இருப்பார்.
போலீஸ் துறையில் கான்ஸ்டபிள் என்றும், அதற்கு மேல் பதவி
உயர்வு பெற்று ஹெட் கான்ஸ்டபிள் ஆகி, சப்-இன்ஸ்பெக்டராக
மாறி அதற்கு மேல் டி. எஸ். பியாகவும், எஸ். பி. அளவுக்கும்
வந்துவிடலாம். ஒரு கான்ஸ்டபிள் அந்தத்துறையில் வரலாம்,
காரணம் காவல் துறையின் அடிப்படையிலானது அது.

அதுபோல மோட்டார் வாகன் துறையில் ஆணிவேராக இருப்
பதுமோட்டார் வாகன ஆய்வாளர்கள். மோட்டார் வாகனத்
தைப்பற்றி தொழில் நுட்பம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.
அவர்கள் தவறு செய்கின்றார்கள் என்றால் அது வேறு. தவறு
செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.
பத்திரிகையில் கூட அறிக்கை விட்டிருக்கிறேன். மோட்டார்
வாகன ஆய்வாளர்கள் தனியார் துறையிலுள்ள பெருந்து
உரிமையாளர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்றும்
அத்துடன் பிட்னெஸ் சர்ட்டிபிக்கேட் கொடுப்பதில் கூட தவறு
கள் நடக்கின்றன என்றும் பத்திரிக்கையில் அறிக்கை விட்டு கடுமை
யாக நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறேன். ஆனால், அது வேறு.
எப்படி காவல்துறையில் கணக்கு எழுதுகிற ஒருவர் ஹெட்கான்ஸ்
டபிளாக அல்லது ஹெட்கான்ஸ்டபிள்களையெல்லாம் மேய்க்கிற
இன்ஸ்பெக்டராக வரவேண்டும் என்றோ அல்லது டி. எஸ்.
பி-யாக வரவேண்டும் என்றோ கேட்க முடியாதோ அது போலத்
தான் மோட்டார் வாகனத் தொழில் நுட்பத் துறையில் வெறும்
கணக்கு எழுதுகிறவர்கள் வெறும் எஸ், எஸ். எல். சி. வரை
படித்தவர்கள் அந்த மோட்டார் வாகன தொழில் நுட்பம்
வாய்ந்த 3, $3\frac{1}{2}$ ஆண்டுகள் காலம் பயிற்சி பெற்று பணியாற்று
கின்ற மோட்டார் வாகன ஆய்வாளருக்கு மேலதிகாரிகளாக
வரவேண்டும், ஆர். டி. ஓ. வாக வரவேண்டும், டெப்யூடி
டிரான்ஸ்போர்ட் கமிஷனராக வரவேண்டும், ஜாயிண்ட் டிரான்ஸ்
போர்ட் கமிஷனராக வரவேண்டும் என்றால் இது செம்மையான
நிர்வாக சீரமைப்பாக இராது என்பதின் அடிப்படையில்
தான் 74-ல் முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதை விளக்கமாக
கொடுத்துவிட்டு மற்றும் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் விளக்கிக் கொண்டிருக்கிற இந்த விஷயம் நம்பிக்கை
யில்லாத் தீர்மானத்தில் பேசும் போது, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவரவர்கள் இங்கே குறிப்பிட்டது..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி):
தங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் முடிவில் கேட்கலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில்
சொல்லப்பட்ட ஒரு குற்றச்சாட்டிற்கு அன்றைக்கே பதில்
அளித்திருக்கலாம், அன்றைக்கு பதில் அளிக்காமல் எதிர்க்கட்சித்
தலைவர் இல்லாத நேரத்தில் பதில் அளித்தால் அதற்கு விளக்கம்
தரக்கூடிய சூழ்நிலை இப்போது சபையில் இல்லாமல் இருக்கிறது.
ஆகவே இது ஒருதலைப்பட்சமாக இருக்கிறது அதற்கு என்ன
காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
அன்று நம்பிக்கை இல்லாத தீர்மானத்திற்கு பதிலளிக்கின்ற
பொறுப்பை தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திருந்தார்கள்.
அந்த நேரத்தில் அதற்கான விளக்கத்தை நான் அவரிடம் கொடுத்
திருந்தும், நேரம் போதாத காரணத்தினால், அன்றைய தினம்
முதல் அமைச்சர் அவர்களால் கொடுக்க முடியவில்லை. இப்போது
நான் கொடுக்க முன்வந்திருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் கண்டிப்பாக தொடர்ந்து இந்த அவைக்கு வரமாட்
டார் என்ற நிலை இல்லை. அவர்கள் அப்படி வருகின்ற காலத்
தில், இது பற்றி கேட்டால் கண்டிப்பாக அப்போதும் இதற்
கான விளக்கங்களை, ஆதாரங்களைத் தந்து, அதற்கும் கண்டிப்
பாக பதில் கூறுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விழை
கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்ந்த நிலையிலிருந்து
உயருவதற்கு, வெறும் பிரசாரம் செய்தால் மட்டும் போதாது,
அதற்கு மாறாக பொருளாதாரத் துறையிலே அவர்களுக்கு
செம்மை ஏற்படுத்தினால் தான், அவர்கள் சமுதாயத்திலே
ஒரு பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டு, அதன் மூலம்
சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும் என்ற நோக்கத்தோடு தமிழக
முதல்வர் அவர்கள் போக்குவரத்துத் துறையிலே பர்மிட் கொடுப்
பதிலே, குறிப்பாக, ஆட்டோ பர்மிட் வழங்குவது, லாரி பர்மிட்
வழங்குவது, இன்னும் பேருந்து அதாவது பஸ் பர்மிட் வழங்கு
வதில் இனிமேல் நடப்பு ஆண்டிலிருந்து கட்டாயமாக 18
சதவீதம் பர்மிட் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட அருந்ததி
மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்படும் என்ற முதல்வர்
அவர்களின் முடிவை நான் இங்கே அறிவிக்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்
திரு. பி. எச். பாண்டியன் அவர்களால் எழுப்பப்பட்ட, டெல்லி
மாநிலம்—பாரதத்திலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும்,
இந்தி பேசாத, தமிழ் மாநிலங்களுக்கும் டெல்லி தலைநகராக
இருக்கின்ற காரணத்தால், மோட்டார் வாகனங்களிலே

இருக்கின்ற இந்தி நெம்பர் பிளேட்டுகளை, அதிலே எண்ணும், எழுத்துக்களும் இந்தியில் மாற்றப்பட்டிருப்பதை எடுத்துக் கூறி, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளையும், அதோடு தன்னுடைய உணர்வையும், வெளிப்படுத்தி, இதை மாற்ற வேண்டும் என்றும், இந்த நெம்பர் பிளேட்டில்லே ஆங்கிலத்திலும், ரோமன் லெட்டர்களிலும் இருக்க வேண்டும் என்பதையும், இது இந்தி திணிப்பதாக இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டியதன் பேரில், அந்த அஞ்சலுக்கு பதில் தருகின்ற முறையில், பாரதப் பிரதமர் அவர்கள் இனி பாரதம் முழுவதும் இந்திக்குப் பதிலாக ஆங்கிலமும், ரோமன் லெட்டரும் இருப்பது பற்றி விரைவில் பரிசீலனை செய்வதாக பதில் அஞ்சல் எழுதியிருக்கிறார்கள்.

அடுத்து, மோட்டார் வாகன வரியை எளிமைப்படுத்தியிருக்கிறோம். தற்போது இந்த மோட்டார் வாகன வரியைச் செலுத்த வேண்டுமானால், அவர்கள் ஆர்.டி.ஓ. ஆபீசுக்குச் சென்று, பல மணி நேரம் காத்திருந்து அவர்களுக்குத் தாமதம் ஏற்பட்டது. அதோடு, இடையிலே தரகர்கள் மூலமாக சில தவறுகள் எல்லாம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு, மோட்டார் வாகன வரியை இந்தியன் வங்கியிலும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும், நகரத்திலே உள்ள பல கிளைகளிலும், தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் செலுத்துகின்ற முறையில் வழி வகை செய்யப் பட்டிருக்கிறது. மோட்டார் வாகனங்கள் என்றால், ஆட்டோ மோட்டார்பைக், ஸ்கூட்டர், மற்றும் லாரிகள் போன்ற அனைத்தும்தான்.

அடுத்து, சென்னை மாநகரத்தில் சாலைப் போக்குவரத்தில் விபத்துக்கள் ஏற்படுகின்றன....

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், 1—4—1979 முதல் 30—6—1979 முடிய ஒரு குவார்ட்டருக்கு கட்ட வேண்டிய பணம், காலதாமதமாகக் கட்டலாம் என்ற அறிவிப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது எந்தத் தேதி என்று தெரியாமல் குழப்பமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவு படுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. இன்றோ, நாளையோ முடிவு எடுக்கப்படும்.

அதோடு, குறிப்பாக சென்னை போன்ற பெருநகர்ப் பகுதிகளில் விபத்துக்கள் ஏற்படுவது புட்போர்டிலே அதாவது படிக்கட்டுகளிலே செல்வதால் விபத்து ஏற்படுகின்றது என்பதைத்

தடுப்பதற்காக, முதல்வர் அவர்கள் விருப்பப்படி சென்னையில் ஓடுகின்ற பேருந்துகள் அனைத்திலும் ஆடோமாடிக் குளோஸ் டோர்ஸ் பொருத்துவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

அடுத்து, விபத்துக்குக் காரணமாக இருப்பது, ஆட்டோக்களில் வலது பக்கம் இறங்குகின்ற காரணத்தினால் ஏற்படுகின்றது என்பதை அறிந்து, ஆட்டோக்களில் வலது பக்கம் தடுப்பு அதாவது அடைப்புப் போடுவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

15-4-79 அன்று திருவண்ணாமலையில் தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி, அதிலே மண்ணெண்ணெய், டீசல் ஏற்றிச் சென்ற காரணத்தால் தீ விபத்துக்குள்ளாகி வேதனை தரத்தக்க முறையில் பலர் இறந்து போனார்கள். அதிலே யிருந்த பயணிகள் பலர் தப்ப முயன்றும் ஒரே வழியில் இறங்க வேண்டிய நிலை இருந்த காரணத்தால் இறங்க முடியாத நிலையில் தீப்பிடித்து தீயில் கருகி விட்டார்கள். நகரப் பேருந்துகளில் இரண்டு வழிகள் இருக்கின்றன. அதே போன்று இனி மேல் மஃபசல் பஸ்களிலும் இரண்டு கதவுகள் பொருத்தப் பட்டு இரண்டு வழிகள் கட்டாயமாக அமைக்க வேண்டுமென்ற உத்தரவைத் தமிழக முதல்வர் அவர்கள் நேற்றைய தினம் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பேசுகிறபோது லாரி பர்மிட் வழங்குவதில் ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று கூறினார்கள். கடந்த காலத்திலே அது போன்று இல்லையென்ற உண்மையை உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். யார் உடனடியாக சேசிஸ் வாங்க முடிகிறதோ, புது வாகனத்தைக் கொண்டு வந்து நிறுத்த முடிகிறதோ அவர்களுக்குத்தான் அன்று முன்னுரிமை தரப் பட்டது. அந்த நிலையில் பணம் படைத்தவர்கள் சேசிஸை வாங்கி லாரிக்கான பாடி கட்டி முன்னுரிமை பெறக் கூடிய சூழ்நிலையில் இருந்தார்கள். இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு அதை மாற்றி, ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்ற அடிப்படையில் ஏற்கெனவே உத்தரவிட்டு அதை நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

கடந்த காலத்தில் லாரி பர்மிட் வழங்குவதில் 'பிக் அண்டு சூஸ்' என்ற முறை இருந்தது. ஆயிரம் பேர் பர்மிட்டுக்காக மனுச் செய்து 100 பேருக்குத்தான் பர்மிட் தர முடியும் என்ற நிலை இருந்ததால் அன்று 'பிக் அண்டு சூஸ்' என்ற முறையில் தேர்ந்தெடுத்தார்கள். அதிலே தவறுகள் நடக்கவாய்ப்பிருக்கிறது. அந்த முறையைக் கடைப் பிடிக்கக் கூடாது என்று அரசு கருதி ஆயிரம் பேர் ஓட்டுநர்கள் மனுச் செய்திருந்தால் அதிலே யார் யார் முதல்

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

முதலாக ஹெவி டிரைவிங் லைசென்ஸ் வாங்கி இருக்கிறார்கள்
என்று பார்த்து அந்த ஆண்டு, மாதம், தேதியைக் கணக்கில் எடுத்து
மூப்புரிமைப் பிரகாரம் உரிமம் வழங்கப்படுகிறது. அதிலே 50
வயதுக்கு மேற் பட்டவர்களுக்கும் 20 வயதுக்கு கீழ்ப்பட்டவர்
களுக்கும் உரிமம் வழங்கப்படுவதில்லை. சீனியாரிட்டி அடிப்
படையில் இந்த ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.
இதைப்பற்றிக் குறை சொல்லி எழுதிய பத்திரிகை மீது அரசு
வழக்குத் தொடர்ந்திருக்கிறது என்பதையும் கூறிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதித் திராவிட, அருந்ததிய மக்கள், தாழ்த்தப்பட்ட
மக்கள், மலை வாழ் மக்கள் எவ்வளவு பேர் மனுச் செய்திருந்
தாலும், அத்தனை பேருக்கும் உரிமம் தர வேண்டுமென்று
உத்தரவிட்டு அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ராணுவ வீரர்கள் ஓய்வு பெற்றவர்கள் மனுச் செய்திருந்தால்
அப்படி மனுச் செய்தவர்கள் அத்தனை பேருக்கும் ஓட்டுநர்
உரிமம் இருந்தால் உரிமம் கொடுக்க வேண்டுமென்று உத்தர
விடப்பட்டிருக்கிறது.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம் :</u> ராணுவ வீரர்களுக்கு
வயது வரம்பு உண்டா? 50 வயதானவர்களுக்கு உரிமம் தரப்
படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> ராணுவ வீரர்களைப்
பொறுத்த வரை 30, 35 வயதிலேயே, பத்தாண்டுகள் பணி
செய்து விட்ட உடனேயே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே,
50 வயது வரம்பு என்பது அனைவருக்கும் பொருந்தும்.

அண்டை மாநிலங்களில் சரக்குப் பேருந்துகள் ஓட்டுகிறவர்
களுக்கு உரிமம் வழங்கப்படுகிறது. முக்கியமான ஒன்றைக்
கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆந்திரம், கேரளம், கர்
நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு ஏற்கெனவே சரக்கு உந்துகளை,
லாரிகளை ஓட்டி அனுபவம் பெற்றவர்களுக்கு உரிமம் வழங்கு
வதில் முன்பு 'பிக் அண்டு சூஸ்' முறையைக் கடைப்பிடித்து
வந்தார்கள். அந்த முறையை மாற்றி, முதல் முதலாக ஆந்திர
மாநிலத்திற்குள் செல்ல யார் யார் வாகன உரிமையைப் பெற்
றார்களோ, அதே போல் கேரள மாநிலம், கர்நாடக மாநிலம்
ஆகியவற்றில் என்றைக்கு காலடி வைத்தார்களோ அந்த ஆண்டு,
மாதம், தேதியைக் கணக்கில் எடுத்து மூப்புரிமைப் பிரகாரம்
உரிமம் வழங்கப்படுகிறது. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால்,
முதல் முறையாக புதிதாக விண்ணப்பம் செய்கிற ஓட்டுநருக்கு
உரிமம் வழங்கப்படவில்லை என்பதைக் கூறுவதற்காகத்தான்
இதை நான் கூறினேன்.

1979 ஏப்ரல் 17] [திரு. சி. பொன்னையன்]

(பிற்பகல் 1·00).

அத்தோடு, சாலைகள், பாலங்களைப் பற்றிப் பல்வேறு
கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் பேசுகின்ற பொழுதும்
இன்னும் மற்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பொழுதும் தமிழ
கத்தின் சாலைகள் எல்லாம் மிகப் பழுதுண்டு, குண்டும் குழியு
மாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக ஒன்றியச்
சாலைகளைப் பற்றியும், பஞ்சாயத்துச் சாலைகளைப் பற்றியும்
குறிப்பிட்டார்கள். நான் பொறுப்பேற்றிருக்கிற நெடுஞ்சாலை
துறையில் ஒன்றியச் சாலைகளும், பஞ்சாயத்துச் சாலைகளும்
இல்லை என்ற போதிலும் அதற்கும் நான் பதில் கூறலாம்
என்று கருதுகிறேன்.

தமிழகத்திலே ஒட்டு மொத்தமாக இருக்கும் சாலைகள்
1,48,002 கிலோ மீட்டர். இதிலே பஞ்சாயத்தின், ஒன்றியத்தின்
அதாவது உள்ளாட்சித் துறையின் கீழ் உள்ளது 68,247 கிலோ
மீட்டர், நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பிலே இருப்பது
29,248 கிலோ மீட்டர், அத்தோடு, 1,852 கிலோ மீட்டர்
நேஷனல் ஹைவேஸ் என்ற முறையிலே தேசிய நெடுஞ்சாலைத்
துறையின் பொறுப்பிலே இருக்கிறது.

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையிலும் பஞ்சாயத்து
சாலைகளுக்கு காலணா கூட அரசு நிதியாகத் தருவதில்லை.
ஊராட்சி ஒன்றியச் சாலைகளை எடுத்துக் கொண்டால் சராசரி
யாக ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் நிதி தரப்படுகிறது.
பல பஞ்சாயத்துக்கள் வறுமையில் இருக்கின்றன, சில ஊராட்சி
ஒன்றியங்கள் இன்றைக்கு வறுமை நிலையில் இருக்கின்றன.
இந்த நிலையில் பஞ்சாயத்துக்களும் ஒன்றியங்களும் சாலை
களைச் செப்பனிடுவதற்காக எந்தச் செலவையும் செய்யமுடியாத
சூழலில் இருந்து வருகிறார்கள்.

ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்தகால
ஆட்சிக் காலங்களில் நடந்த ஒரு குறை என்று கூட நான் அதைக்
குறிப்பிடுவேன். தமிழகத்தை எடுத்துக் கொண்டால் சாலைகள்
மேம்பாடு என்றால் பஞ்சாயத்துச் சாலைகளை
சில ஆண்டுகளில் பஞ்சாயத்து யூனியன் சாலைகளாக
ஆக்குதல், பஞ்சாயத்து யூனியன் சாலைகளை சில ஆண்டு
களில் சிறிது மேல் நிலை சாலைகளாக மாவட்ட சாலைகளாக
மாற்ற வேண்டும், மாவட்ட சாலைகளை, மாநில சாலைகளாக
மாற்றுதல், மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக
மாற்றுதல் என்ற முறையிலே வர வேண்டும். ஒவ்வொன்றிற்
கும் ஒரு தரம் இருக்கிறது. இதைக் கணக்கிலே எடுத்துக்
கொண்டு தான் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தமிழ
கத்தை எடுத்துக் கொண்டால், மாநில நெடுஞ்சாலை என்பது
1745, கிலோ மீட்டர் இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப்

போன்ற மற்ற மாநிலங்களை எடுத்துக் கொண்டால், கர்
நாடகாவிலே 6,090 கிலோ மீட்டர் இருக்கிறது, மகாராஷ்
டிரத்திலே 14,782 கிலோ மீட்டர் இருக்கிறது, மத்தியப்
பிரதேசத்திலே 10,635 கிலோ மீட்டர் இருக்கிறது, பீகாரிலே
14,418 கிலோ மீட்டர் இருக்கிறது, ஆந்திராவிலே 5,098
கிலோ மீட்டர் இருக்கிறது, அதைப் போலவே இதர சாலைகளை
எடுத்துக் கொண்டாலும் இந்த 5 மாநிலங்களை விட குறை
வாகத்தான் தமிழகத்திலே இருக்கின்றன.

ஏன் நான் இதைச்சுட்டிக்காட்டுகிறேன் என்றால் படிப்படியாக
கடந்த 31 ஆண்டுகளில் சாலை மேம்பாட்டிற்காக நடவடிக்கை
எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்
சொல்கிறேன். இந்த நிலையிலே தமிழகத்தின் பல்வேறு சாலைகள்
ஒரு கோரமான நிலையில் இருக்கின்றன, அந்தக் கோர நிலையி
லிருந்து தமிழகத்தை மீட்க கடுமையான முடிவுகளை எடுத்து
அரசு செயல் படுத்தத் தொடங்க உள்ளது. தமிழகத்திலே
கிராமப் புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செய்து தர
வேண்டுமென்பதிலும், கிராமப் புற மக்களுக்கு சாலைகளை
செம்மையாக அமைத்துத் தந்து அவர்களுக்கு போக்குவரத்து
வசதிகளை ஏற்படுத்தித் தந்தால் ஆண்டுக்கொரு முறை ஆறு
மாதங்களுக்கொரு முறை மக்கள் கையில் கிடைக்கிற விளைப்
பொருட்களை காசாக்கிட, அன்றாடம் காய்கறி, பால் போன்ற
வற்றை எடுத்துச் செல்வதற்கு வசதி ஏற்படுத்தித் தந்தால்
கிராமப் புற பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும்
என்பதிலும் இந்த அரசு மிகத் தெளிவாக இருக்கிறது. அந்த
அடிப்படையில் தான் கிராமப் புற சாலைகளைச் செப்பனிட்டு
கிராமப் புறப் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்த வழி
வகை காணவேண்டுமென்றால் 600 கோடி ரூபாய் தேவைப்படும்
என்று ஆய்விலே கணக்கிடப்பட்டு இருக்கிறது. ஆனால் 1951
ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் 84 கோடியே 58 இலட்சம்
ரூபாய் தான் ஏறத்தாழ 30 ஆண்டுகளிலே ஒதுக்கப்பட்டிருக்
கிறது. இந்தக் கணக்கிலே நாம் நிதியை ஒதுக்கிக் கொண்டே
போனால், தமிழகத்திலே கிராமப் புற சாலைகளைச் செப்ப
னிட்டு போக்குவரத்து வசதிகளைச் செய்து தருவதற்கு
ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் வீதம் ஒதுக்கினால் இன்னும்
200 ஆண்டுக் காலம் ஆகும். ஆகவே உண்மை நிலை என்ன
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டு
மென்றுதான் இதைக் கூறுகிறேன்.

தமிழகத்தில் பேருந்து சாலைகளின் தரத்தை உயர்த்த
மண் சாலைகளை மெட்டல் சாலைகளாக மாற்ற, மெட்ட
சாலைகளாக இருக்கின்றவற்றை முதல் நிலை தார் சாலைகளா
மாற்ற இது போன்ற பணிகளைச் செய்வதற்கு 76 கோ
ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் உடனடியாகச் சரியாகச் செய்ய நமக்கு
நிதி நிலையைப் பொறுத்த வரையில் வாய்ப்பு இல்லை.
மைய அரசுக்கும், மாநிலங்களுக்கும் சோர் செக்டார் என்ற
பிரிவிலே இதைச் சேர்த்துத்தரக் கூடிய அளவிற்கு மனப்பாங்கு
வரவில்லை. ஆனால் மாநில அரசு மக்களுக்கு வேண்டிய
திட்டங்களைக் கையாளாமல் இருக்க முடியாது என்பதற்காகச்
சில அணுகுமுறைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்
கிறது.

அந்த அடிப்படையில், ஏற்கெனவே, பல வழித் தடங்களில்
பேருந்துகள் ஓடி நின்று விட்ட வழித் தடங்கள் இருக்கின்றன.
அங்கு தேவை இருக்கிறது, மக்கள் தொகை இருக்கிறது,
பொருளாதார வளர்ச்சி இருக்கிறது, பேருந்துகள் ஓட்டப்
பட்டன. ஆனால் சாலை சரியில்லை என்ற காரணத்தால்
பிறகு பேருந்துகள் ஓடவில்லை. அந்த வகையில் 3,886 கிலோ
மீட்டர் சாலைகள் இருக்கின்றன. அந்த சாலைகளை உடனடி
யாகச் செப்பனிட வேண்டுமென்றால் 20 கோடி ரூபாய் தேவைப்
படுகிறது.

கிராமப் புறங்களில் பல சாலைகளுக்கு, மக்கள் தொகை
இருக்கிறது, பொருளாதார வளர்ச்சியும் இருக்கிறது. அவர்கள்
தங்கள் மூட்டைகளை வண்டிகளிலும், சைக்கிள்களிலும், நடந்தும்
எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கு சிறு சிறு
செப்பனீடுகளை நாம் மேற் கொண்டால் அந்த வழித்தடங்களில்
உடனடியாக பேருந்துகளை விடுவதற்கு முடியும். அப்படியிருக்கக்
கூடிய சாலைகள் 1,243 கிலோ மீட்டர்கள். இந்தச் சாலைகளை
உடனடியாகச் செப்பனிட்டு நல்ல முறையில் செய்ய வேண்டு
மென்றால் 70 கோடி ரூபாய் உடனடி நிதி தேவைப்படுகிறது.

இன்னும் ஒரு விதமான சாலை இருக்கிறது, கிராமங்களில்
ஒரு சாலை 20 கிலோ மீட்டருக்கு நல்ல சாலையாக இருக்கும்,
மற்றொரு சாலையும் இருக்கும். ஆனால் இணைப்புச் சாலை
இல்லாமல் இருப்பதால் பேருந்துகள் விடப்படாமல் இருக்கும்
அப்படியிருக்கின்ற சாலைகள் 1,925 கிலோ மீட்டர் நீளமுள்ள
இணைப்புச் சாலைகளை உடனடியாகத் தமிழ் நாட்டிலே
அமைத்தால் இங்கு பேருந்துகளை விட முடியும். இதற்கு 21
கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக, 111 கோடி ரூபாயை
உடனடியாகச் செலவு செய்தால் ஒருவாறு சாலைப் போக்கு
வரத்து வசதிகளைப் பெருக்கலாம் என்று ஆய்வு நடத்தி கணக்
கிட்டிருக்கிறது. இது வரையில் இது போன்ற ஆய்வு மேற்
கொள்ளப்பட வில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

பராமரிப்பு ஒழுங்காக இல்லை என்பதைப் பற்றி வருத்தத்
தோடும், வேதனையோடும் இங்கே சில உறுப்பினர்கள் கூறி
னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற சாலைகளைப் பராமரிக்க
நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கிறவற்றைப் பராமரிக்க
ஆண்டுக்கு சராசரியாக 26 கோடி ரூபாய் தருகிறது. ஆனால்
கடந்த காலத்தில் பல ஆண்டுக் காலமாக ஒதுக்கப்படுவதிலே
சாலைகளின் பராமரிப்புக்காகத் தேவையான நிதியில் பாதி
நிதியைக் கூட ஒதுக்க வில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். ஒரு ஆண்டு அல்ல, பல ஆண்டுகளாகச் சாலை
பராமரிப்புக்காக 30 கோடி ரூபாய் தேவை என்றால் அல்லது
26 கோடி ரூபாய் தேவை என்றால், 10 கோடி ரூபாய், 12
கோடி ரூபாய்தான் இதுகாறும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதையெல்லாம் கணக்கில் கொண்டுதான் இந்த ஆண்டு
அரசு சாலைப் பராமரிப்புக்காக சென்ற ஆண்டு 2 கோடி ரூபாய்
அதிகமாகச் செலவிட்டது, இந்த ஆண்டு பேருந்து ஓடும் வழித்
தடங்களைப் பற்றிப் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்ற
அடிப்படையில் ஓடிக் கொண்டிருந்து நின்று விடக் கூடாது
என்பதற்காக 6 கோடி ரூபாயை அதிகப்படுத்தி செலவிடப்
படுகின்ற அந்த நிலையை மேற்கொள்ள இருக்கிறது, முயற்சித்து
வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோர் செக்டார் என்ற பிரிவின் கீழ், எப்படி நீர்ப்பாசனத்
திற்கும், கல்விக்கும், மின்சாரத் துறைக்கும் அதிக நிதி ஒதுக்கு
கிறார்களோ அதைப் போல சாலைப் போக்குவரத்திலும்
கிராமப் புற வளர்ச்சிக்காக அந்த செக்டாரில் சேர்த்து அதிக
நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்கின்ற முயற்சியை மேற்
கொண்டிருக்கிறது. தமிழக முதலமைச்சரவர்கள் கூட பாரதப்
பிரதமர் அவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் இது பற்றி
வற்புறுத்தி வருகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, அமைச்
சரவர்கள் 1947 ஆம் ஆண்டிலிருந்து எவ்வளவு ஒதுக்கினார்கள்
என்று அதையும் விளக்கினார்கள். இப்பொழுது எல்லா
சாலைகளையும் பராமரிப்பது எவ்வளவு என்பதையும் விளக்கி
னார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.
1978 ஆம் ஆண்டிலே பெய்த மழை, புயலின் காரணமாக
பாதிக்கப்பட்டுள்ள சாலைகளுக்காக மாவட்ட வாரியாக ஒதுக்கி
யிருக்கிறீர்கள். நான் கேட்பது என்னவென்றால், 1978 ஆம்
ஆண்டிலே நவம்பர் மாத மழை, புயலா பாதிக்கப்பட்ட
வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு சல்லிக்காசு கூட ஒதுக்கப்
படவில்லை. உங்கள் அறிக்கையிலேயே அப்படி இருக்கிறது.
இதைப் பார்த்தால் தெரியும், எந்த அளவிற்கு வடாற்காடு

1979 ஏப்ரல் 17] [திரு. வி. கே. கோதண்டராமன்]

மாவட்டத்தைப் புறக்கணித்திருக்கிறீர்கள் என்று. அதற்குக்
காரணம் என்ன ? பல முறை எழுதியும் கொடுத்திருக்கிறேன்,
அதிகாரிகளைப் பார்த்தும் இருக்கிறேன், எனக்கு அவர்
களிடத்திலிருந்து வந்திருக்கின்ற பதில் என்ன தெரியுமா ?
அந்த மாவட்டத்திலேயிருந்து எந்தவிதமான தகவலும் வர
வில்லை என்பதுதான். அது எந்த அளவிற்கு உண்மை ? அப்படி
யிருந்தால் எவ்வளவு பொறுப்பற்ற முறையில் அந்த அதிகாரிகள்
நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.
ஆகவே, ஒரு வேளை புயல் இல்லை என்று நீங்கள் சொல்வதாக
இருந்தாலும், 2, 3 மாவட்டங்களிலே அப்படி இருக்கலாம்.
ஆனால் மழையால் எல்லா மாவட்டங்களுமே பாதிக்கப்பட்
டிருக்கின்றன.

(பிற்பகல் 1-10.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் தற்காலிகத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம்
மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் அனைத்து மாவட்
டங்களுக்குமேதான் நிதிப் பற்றாக்குறை காரணமாக பல குறை
பாடுகள் இருக்கலாம். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர்கள்
கூறுவது என்ன என்பதை மீண்டும் பார்த்து அதற்கேற்ற நட
வடிக்கையும் நான் எடுப்பேன் என்பதையும் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். (குறுக்கீடு) பார்க்கின்றேன். சல்லிக் காசு கூட இல்லை
என்பது அவ்வளவு சரியாக இருக்காது. இருந்த போதிலும்
மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கூற்றை ஏற்று, பார்த்து
என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதனை நான் மேற்
கொள்கிறேன்.......

திரு. எம். ஏ. லத்தீப் : நீங்கள் கொடுத்திருக்கிற அறிக்கை
யிலே விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே.
இராமசாமி) : மாண்புமிகு லத்தீப் அவர்கள், அமைச்சர் பேசி
முடித்த பிறகு, அவரது சந்தேகத்தைக் கேட்கலாம். நடுவிலே
குறுக்கிட்டால் நேரம் போகிறதே என்பதற்காகத்தான் நான்
குறிப்பிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சரவர்கள் பதில் சொல்ல
சௌகரியமாக இருக்கலாம். அரசாங்கம் கொடுத்த அறிக்கை
யிலே, எல்லா மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும்போது
வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்பது
ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணங்களைத்தான்
அவர்கள்........

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் லத்திப் கூட பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டார். நிதியிலே ஒதுக்கவில்லை, ஆகவே முடியாது என்று நான் கூறவில்லை. அதைக் கூட நான் ஆய்வேன், பார்ப்பேன் என்றுதான் கூறி உள்ளேன், எனவே....

திரு. க. பாலாஜி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை-காஞ்சிபுரம், சென்னை-திருவள்ளூர், சென்னை-செய்யாறு, சென்னை-வந்தவாசி, சென்னை-ஆரணி, சென்னை-போளூர் இப்படிப்பட்ட ஊர்களிலேயிருந்து தனியார் பஸ்கள் இங்கே வருகின்றன. தனியார் பஸ்களை எல்லாம் தேசியமயத்திலே நாம் தேசியமாக்கியிருக்கிறோம். ஆனால், உச்ச நீதிமன்றத்திற்கு அவர்கள் சென்று கூட அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டும், இப்பொழுது அந்த தனியார் பஸ்கள் இங்கே ஓடிக் கொண்டிருக்கின்றன. அது அமைச்சர் கவனத்திற்குத் தெரியுமா? அப்படியென்றால் உடனடியாக, அதன்மீது அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து, அரசுப் பேருந்துகளை விட........ (குறுக்கீடு) இப்பொழுது காஞ்சிபுரம் பாலாற்றில்........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது பற்றி அரசுக்கு ஏற்கனவே தெரியும், அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வழித் தடங்களில் அரசு பேருந்துகள் ஓட இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

சாலைப் போக்குவரத்து அதிகாரக் குழு என்ற Rural Road Transport Authority ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நல்ல சாலைகளும், சாலை போக்குவரத்து வசதிகளும் கிராமப்புற வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படைத் தேவையாயிருந்த போதிலும், நாடு விடுதலை அந்த நாள் முதல் கிராமப்புற வளர்ச்சியைப் பற்றி பேசப்பட்டிருக்கிற அளவுக்கு அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படாததோடு போதுமான அளவு நிதியும் ஒதுக்கப்படவில்லை. ரூ. 600 கோடி கிராமப்புற சாலைகளைச் செப்பனிடவே தேவை என்று இருக்கும் போது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடி என்றால், 200 ஆண்டுகளாகும் என்ற காரணத்தால், இதற்கு ஒரு தீவிர ஆய்வு செய்து ஒரு பரிகாரம் தேட

1979 ஏப்ரல் 17] [திரு. சி. பொன்னையன்]

கிராமப்புறங் வேண்டுமென்ற நோக்கோடு தீர பரிசீலித்து பெருமளகளில் நல்ல சாலைகள் அமைத்து பராமரிப்பதற்கு அரசு ஆய்த்வில் முதலீடு செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அரசின் நிதி ஒதுக்தது. அதன் அடிப்படையில் தற்பொழுது மோட்டார் வாகனஇடு மட்டும் இதற்குப் போதாது. எனவே, ஏற்கனவே, வரியிலிருந்து கிராமப்புற சாலை மேம்பாட்டிற்காக போல் பல மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் ஐந்து முதல் பத்து ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்குவது. பாலங்களைப் பயன் இலட்சத்துக்குமேல் செலவில் கட்டப்பட்ட வசூலிப்பது, பற்றியும் படுத்துவோரிடமிருந்து சுங்க வரி உயர்த்தியும், டீசல் பெட்ரோல் மீதான கலால் வரியை தோட்டப் பயிர்களான எண்ணெயின் மீது வரி விதித்தல், மலைத் மீது "கரும்பு காப்பி, தேயிலை, ஏலக்காய் போன்றவற்றின் மூலம் மத்திய செஸ்" போன்ற வரி விதித்தல் ஆகியவற்றின் அரசு போக்குவரத்துக் கழகங் சாலை நிதியை அதிகப்படுத்துதல் பயன்படுத்துதல், களின் கூடுதல் இலாபத்தில் ஒரு பங்கினைப் நிதி திரட்டுதல் போன்ற உலக வங்கி போன்ற நிறுவனங்கள் மூலம் கண்டறிவதற்காக, Rural புதிய நிதி திரட்டும் வாய்ப்புகளைக் குழு முதன் Road Transport Authority என்னும் ஒரு ஆணைக் நிறைவேற்றப்பட முறையாக இந்தியாவிலேயே தமிழகத்திலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

அதோடு பொதுப் பணத்தில் செலவிடப்படும் தொகையை பொது மக்களுடைய நன்மைக்கு முழுவதுமாகப் பயன்படுத்துவதற்காகவும், ஊழலை ஒழிப்பதற்காகவும், பணிகள் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் தேசிய நெடுஞ்சாலை பிரிவின் கண்காணிப்பு பொறியாளர்கள் நேரிடை கட்டுப்பாட்டின் கீழ் இதுகாறும் இயங்கி வந்த குவாலிடி கண்ட்ரோல் டிரையினிங் போன்ற ஒன்றை அரசு நெடுஞ்சாலைப் பிரிவிலும் குவாலிடி கண்ட்ரோல் டிரையினிங் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தோடு பல இலட்சக்கணக்கான மதிப்புள்ள ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிற ஒப்பந்தக்காரர்கள் வழக்குகளைப் போட்டிருக்கிற காரணத்தினால், ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட நெடுஞ்சாலைப் பொறியாளர்களுக்கும், நிர்வாகப் பொறியாளர்களுக்கும் நடுவர் குழுவிலே ஒப்பந்தக்காரர்கள் தாக்கல் செய்திருக்கும் போது, அவர்கள் தங்கள் நிலைமையை போதிய அளவு எடுத்துச் சொல்ல இயலாது இருந்தால் அவர்களுக்கு நல்ல முறையிலே அறிவுரை வழங்கி நடத்திச் செல்ல வல்லுநர்களை உருவாக்குவதற்காக நடுவர் தீர்ப்பு அறிவுரைக் குழு, ஆர்பிட்ரேஷன் செல் ஒன்று அமைக்க அரசு 9-7-79 அன்று ஆணையிட்டிருக்கிறது. இவ்வசதி நெடுஞ்சாலைத் துறை முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது."

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

சென்ற 2 ஆண்டுகளாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்
பலனாக நடுவர் தீர்ப்புக் குழுவிலே வழக்கமாக ஒப்பந்தக்காரர்
களுக்கு அதிகமாக சலுகைகள், காண்டிராக்ட் காரர்களுக்கு அதிக
மாகச்சலுகைகள் கிடைத்து அவர்கள் ஒப்பந்தத்தில் கோரியிருக்
கிற தொகையை விட பல லட்சங்கள் அதிகமாக ஆர்பிட்ரேஷன்
மூலமாக பெற்று விடுவதற்கு தடைக் கற்களாக துறை
யிலே என்னென்ன குறைபாடுகள் இருந்தனவோ அவ்வகளை
களைவதற்காகத்தான் இந்த ஆர்பிட்ரேஷன் செல் தற்போது
நிறுவப்பட்டிருக்கிறது.

அத்தோடு தரக்கட்டுப்பாட்டை வலியுறுத்தவும் ஒழுங்காக
சாலைகளை அமைக்கவும், நல்லவிதமாகப்பாலங்களை அமைக்
கவும், செயல்படுகின்றன. அதோடு ஒப்பந்தக்காரர்கள் விதிமுறை
களுக்குஉட்பட்டு வேலைசெய்கிறார்களா, தரம் காக்கப்படுகிறதா
என்பதை கண்டறிய நேரடியாக அந்தப் பணியில் ஈடுபட்டி
ருக்கிற மேல் அதிகாரிக்கு கட்டுப் படாமல், தலைமைப் பொறி
யாளரின் கீழ் உட்பட்டு அவர்கள் தன்னிச்சையாக சுதந்திரமாக,
அஞ்சாமல் செயல்படுவதற்காக டெக்னிகல் செல் ஒன்று
அண்மையில் வேலையின் தரத்தை காக்க வேண்டும் என்ற
நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு சாலைகளை யெல்லாம் செப்பனிட குறைந்த
செலவில் செப்பனிடுவதற்காக ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேஷன்
மூலமாக ஆய்வு செய்யப்பட்டு லோ காஸ்டு (குறைந்த
செலவில்) ரோடு என்று சொல்லப்படுகிற சாலைகளை அமைக்க
வேண்டும் என்று குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள சாலைகள்
எல்லாம் மழை பெய்தால் அடித்துக் கொண்டு சென்றுவிடுகின்ற
நிலைமையில் இருக்கின்றன. மழைக்காலங்களைப் பார்த்து சில
ஒப்பந்தக்காரர்கள் சாலைகளை அமைத்து விடுவதும் அவர்க
ளுக்கு தவறு செய்யும் அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருந்து
வருவதை படிப்படியாக மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு
தற்போது மெட்டல் சாலைகளில் போடப்படுவது போல வாட்
டர் பவுண்டு மெக்காடம் என்ற முறையில் 6 அங்குல உயரத்
திற்கு கிராவல் போட்டு அதற்கு மேல் குறைந்தது 6 அங்குல
உயரத்திற்கு கப்பி சாலை போடப்பட்டு வருகிறது. அந்த
முறைக்குப் பதிலாக கிராமப்புற சாலைகளில் 6" உயரத்திற்கு
சரளை மண் மட்டும் போடுவதற்கு பதிலாக சரளை மண்ணை
யும் மணலையும் ஒன்றாக கலந்து 6" உயரம் பரப்பி அதற்கு
மேல் வழக்கமான 6" உயரத்திற்கு பதிலாக 3" உயரத்திற்கு
மட்டும் கப்பி சாலை வாட்டர் பௌண்ட் மெக்காடத்தைப்
போட்டு, மேற்பகுதியில் தாரை ஸ்ப்ரே செய்து அதற்கு
மேல் மணலை லேசாகத் தூவி சாலை அமைக்கலாம். கிராமப்புற
சாலைகளில் புழுதியும் தூசும் இல்லாமல் இருக்கும். கிராம
புறங்களில் மாட்டு வண்டிகள் ஓடுவதால் கற்கள் உடைந்து பின்
னால் பேருந்துகள் செல்லும்போது, புழுதியாக மாறி விடுகிறது.

1979 ஏப்ரல் 17] [திரு. சி. பொன்னையன்]

போக்குவரத்து அதிகமாக வளரும்போது இச் சாலை
களின் மீது 1/4 அங்குல 1/2 அங்குல அகலத்திற்கு ஜெல்லிப்
போட்டு, தாரை ஸ்ப்ரே செய்தால்—சிங்கள் லேயர் சர்ப்பேஸ்
டிரஸ்ஸிங் என்னும் இந்த முறை தார் சாலையை விட சிறந்த
தாகவும், செலவும் குறைவாகவும் இருக்கும். இந்த முறை
முதன் முதலாக தமிழகத்திலே கொண்டு வந்திருக்கிறோம் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு சாலை ஓரங்களில் மரங்களை நட வேண்டும்
என்று மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் கேட்டார்கள்.
வனத்துறையின் உதவியோடு இணைந்து செயல்பட வேண்டியது
இது. மரங்கள் தமிழகத்தில் அதிகமாக இல்லாத காரணத்தி
னால்தானோ என்னமோ, அண்டை மாநிலங்களில் பெய்யும் அள
வுக்கு மழை தமிழகத்தில் பெய்வதில்லை என்பதை கூட மன
தில் கொண்டு எந்த அளவுக்கு அதிகமான சாலைகளில் மரங்
களை நடவேண்டும் என்று ஆய்வு செய்து சென்ற ஆண்டு தமிழ
கத்திலே 32 லட்சம் பனை மரங்கள் தமிழகத்தின் பல்வேறு
இடங்களில் நடப்பட்டிருக்கிறது. பனை மரங்களை நட்டதன்
மூலமாக மக்களுக்கு பலன்கள் அதிகமாக கிடைக்க வாய்ப்பு
உண்டு. அத்தோடு பல்வேறு மரங்களையும் நடுவதற்கு அரசு
ஆய்வு செய்து கொண்டு வருகிறது.

(பிற்பகல் 1–20)

சாலை ஓரங்களில் மரம் நடுவதற்கும், சாலை ஓரப்பூங்காக்
கள் அமைப்பதற்கும் நெடுஞ்சாலையை அழகு படுத்தக்கூடிய
அளவிற்கு சிறு சிறு மரத்தோப்புகளை அமைப்பதற்கும் அரசு
நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கு என்று தனி ஹார்ட்
டிகல்சர் கூட தற்போது அரசு அமைத்து இருக்கிறது.

அதோடு, அரசே தற்போது ஒரு மாபெரும் முயற்சியினை
மேற்கொண்டு முதன்முறையாகத் தமிழகத்தில் கிராமப்புறங்
களில் எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் இருந்தும், பேருந்து
கள் விடப்படவில்லை, எந்தெந்தப் பகுதிகளில் சிறிது செலவு
செய்து செப்பனிட்டால் உடனே பேருந்துகள் விடமுடியும்,
மக்கள் தொகை அதிகமான இருந்து, எந்தெந்த பகுதிகளில்
பேருந்துகள் விடப்படவில்லை. என்பதைப் பற்றி ஆய்வு
நடத்தியது. கடந்த காலத்தில் பேருந்து உரிமம், பஸ் பர்மிட்
கொடுப்பது என்றாலே ஒரு மாவட்டத்திலே பணம் படைத்த
ஒரு பேருந்து உரிமையாளர் அல்லது செல்வாக்கு மிக்க அரசியல்
வாதி விரும்பினால் ஏதோ ஒரு வழித்தடத்தில் பேருந்து உரிமம்
பெற்றுவிடமுடியும். அந்தச் சூழ்நிலைதான் இருந்து வந்தது.
அந்த உண்மை நிலையை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும்.

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

எந்தெந்த பகுதிகளில் பேருந்துகள் விடவேண்டும், எங்கெங்கே
பேருந்துகள் தேவைப்படுகிறது, எங்கெங்கே மக்கள் தொகை
இருக்கிறது, எங்கெங்கே சாலைகள் இருக்கின்றன என்ற
தேவையின் அடிப்படையில் ஆய்வுசெய்து இதுகாறும் தமிழ
கத்தில் பேருந்து உரிமங்கள் வழங்கப்படவில்லை. இதனால் ஒரு
நகர்ப்புறத்தில் இருந்து மற்றொரு நகர்புறம் இணைக்சப்பட்டு
வநத சூழ்நிலை இருந்தது. கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்
புறத்திற்கு இணைக்கப்படாமல் இருந்த சூழ்நிலை இருந்து
வந்தது. அதை மாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு முத
லமைச்சர் அவர்கள் விருப்பப்படி அரசு ஒரு நடவடிக்கை மேற்
கொண்டது. அதற்கு ஒரு குழுவை அமைத்து, டேட்டா சென்டர்
என்று சொல்லப்படுகிற 'புள்ளி விவர கம்ப்யூட்டர் மையத்தின்'
மூலமாக நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர், கிராம
வளர்ச்சித்துறை இயக்குநர், நாட்டுடமையாக்கப்பட்ட போக்கு
வரத்துக் கழகங்கள் மற்றும் அரசு டிரான்ஸ்போர்ட் டிபார்ட்
மெனட் ஆகியவர்கள், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர்கள்
அடங்கிய குழு அமைககப்பட்டு ஒரு விரிவான ஆய்வு நடத்தி
அரசு தற்போது சிலவற்றைக் கண்டறிந்து இருக்கிறது.

அதன் மூலமாக எந்தெந்த வழித்தடங்களில் பஸ் ரூட் விடவேண்
டும் என்று தன்னிச்சையாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் விடா
மல் ஏற்கனவே சில உறுப்பினர்கள் கூறியது போல், எந்தப்
டகுதியில், அந்த மாவட்டத்தில் இந்த ஆண்டு பேருந்து உரிமம்
வழங்வேண்டுமானாலும் முன்னுரிமையாக மககளின்தேவை எங்க
கெங்கே இருக்கிறதோ அங்கே தான் உரிமங்கள் வழங்க வேண்
டும் என்ற உத்தரவை அரசு எடுப்பதற்கு வசதியாக இந்த ஆய்
வினை முதன்முறையாக நடத்தினோம். அந்த ஆய்வின் பிரகாரம்
தமிழகத்திலுள்ள தற்போது 17,86,248 மக்கள் வசிக்கின்ற
1,656 கிராமங்களை உள்ளடக்கிய 968 பஞ்சாயத்துகளுக்கு நல்ல
சாலைகள் இருக்கினறன. பேருந்துகள் உடனடியாக விட
முடியும். ஆனாலும் இதுகாறும் ஒரு ரூட் பிளானிங் இல்லாத
காரணத்தால், தன்னிச்சையாக பேருந்து உரிமங்கள் வழங்கிய
காரணத்தால், சாலைகள் இருந்தும் அதனால் 476 வழித்தடங்
கள்—நல்ல வழித்தடங்களாக பேருந்து ஓடுகிற அளவிற்கு தர
மான வழித்தடங்களாக இருப்பது இப்போது கண்டு பிடிக்கப்
பட்டு இருக்கிறது. அங்கே பேருந்துகள் விடப்படவில்லை.
அந்த வழித்தடங்களில் அந்த 476 வழித்தடங்களில் 118 வழித்
தடங்களில் பெரிய பேருந்துகளையும், 67 வழித்தடங்களில் மினி
பஸ்-சிற்றுந்துகளையும், மீதமுள்ள 291 குறைந்த தூர வழித்தடங்
களில் பேருந்து வழித்தட நீட்டிப்பும் 30-6-1979-க்குள் கிரா
மப்புற மக்களின் நலன் கருதி, முன்னுரிமை தந்து மாவட்ட
ஆட்சித் தலைவர் இங்கே எல்லாம், இந்த கிராமங்களுக்கு எல்
லாம் பேருந்துகளை உடனே விடவேண்டும், உரிமங்கள் வழங்க
வேண்டும் என்ற உத்தரவினை அரசு பிறப்பித்து இருக்கிறது.

1979 ஏப்ரல் 17] [திரு. சி. பொன்னையன்]

இரண்டாவது கட்டமாக அந்த ஆய்வின் பிரகாரம்
21,73,959 மக்கள் வசிக்கின்ற 2,508 கிராமங்களை உள்ளிட்ட
637 பஞ்சாயத்துக்களுக்கு 426 வழித்தடங்களில் சிறுசிறு
செம்மைகளைச் செய்வோமானால், உடனடியாக பேருந்து
களைச் சிற்றுந்துகளை விடலாம் என அந்த ஆய்வில் கணக்
கிடப்பட்டு இருக்கிறது. அதற்காக 12,78,86,000 ரூபாய் நிதி
தேவை என்று கூறப்பட்டு இருக்கிறது. தமிழக முதலமைச்சர்
அவர்கள் கூட நடப்பு ஆண்டிலேயே இது பற்றியும் ஒரு நல்ல
முயற்சியினை மேற்கொண்டு கிராமப்புறங்களில் நாடு சுதந்திரம்
அடைந்து 31 ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு கொடுக்கப்
படாத இந்த சலுகையை, வசதியைச் செய்துதர நிதிநிலை உயர்
வினை எப்படி ஏற்படுத்துவது என்பதைப் பற்றி ஒரு முடிவை
விரைந்து எடுக்கலாம் என்ற உறுதியினைத் தந்து இருக்கிறார்
கள். விரைவில் அது கண்காணிக்கப்படும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, நாட்டுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகன
சம்பந்தப்பட்ட மானியங்களைப் பொறுத்தவரையில் ஏற்
கனவே வெட்டுத் தீர்மானத்திலேயே மாண்புமிகு உறுப்பினர்
ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் போன்றவர்கள் எல்லாம்
அரசு நாட்டுடமை கொள்கையை விரைந்து செயல்படுத்தவில்லை
என்று கூட எழுதியிருந்தார்கள். இதிலே அரசின் கொள்கையை
நான் சற்றுதெளிவாகக் கூற விரும்புகிறேன். பயணப்பேருந்து
நாட்டுடமைக் கொள்கை என்பது அரசால் ஏற்கனவே ஏற்றுக்
கொள்ளப் பட்ட ஒன்று. அதிலே இந்த அரசு ஒருக்காலும்
பின்வாங்கப் போவது இல்லை. கண்டிப்பாக அது செம்மை
யாக படிப்படியாக நடைமுறைப் படுத்தும் என்பதை
முதற்கண் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1969-ல் 25·5 சதவீதம் மட்டுமே நாட்டுடைமையாக்கப்பட்ட
பேருந்துகள் என்ற நிலை தமிழகத்திலே இருந்தது. அது
படிப்படியாக உயர்ந்து 1975–76-லே 46.7 சதவீதமாக வந்து
இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு 46·7 சதவீதத்திலி
ருந்து இன்றைக்கு 53·2 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இது
காறும் போக்குவரத்து உரிமங்கள் தற்காலிகப் போக்கு
வரத்து உரிமங்கள் திருவிழாக்களுக்கு தனி உரிமங்கள் ஆகி
யவை வழங்கப்பட்டதில் கூட சில உறுப்பினர்கள் கேட்டார்
கள். திருவிழாக்களுக்கு தற்காலிக உரிமங்களை எல்லாம்
தனியாருக்கும் தரவேண்டும் என்று. அரசு முடிந்த அளவுக்கு
தனியாருக்கு தற்காலிகப் பேருந்து உரிமங்களைத் தருவது
என்றால் அதிலே சிக்கல்கள் இருப்பதோடு மட்டுமல்ல அரசு

எந்தக் கிராமங்களுக்கு பேருந்துகள் மக்களின் நலன் கருதி
செல்ல வேண்டும் என்று விரும்புகிறதோ அங்கெல்லாம் தனியார்
கள் பேருந்துவிட முன்வரமாட்டார்கள் என்ற காரணத்திற்காக
தற்காலிகப் பேருந்து உரிமங்கள் பூராவும் குறிப்பாக கிராமப்புற
வழித்தடங்களுக்கு கிராமப்புற மக்களுக்கு அரசுப் போக்கு
வரத்துக் கழகங்களுககு மட்டும்தான் தரவேண்டும் என்ற உத்த
ரவை அரசு விதித்திருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, பாயின்ட் ஆப்
கிளாரிபிகேஷன். சில இடங்களில் திருவிழாக்கள் நடைபெறு
கின்றன. மதுரை போன்ற இடங்களில் சித்திரை திருவிழாக்கள்
நடைபெறுகிறது. வீரபாண்டி போன்ற இடங்களிலும் நடை
பெறுகிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு பி.ஆர்.சி. பேருந்து
கள் ஓடிக்கொண்டிருந்தாலும், தனியார்கள் உடனடியாக
பேருந்து விடுவதற்கு தயாராக இருக்கும்போது, பி.ஆர்.சி.க்காரர்
கள் வேண்டுமென்றே போட்டியிட்டுத் தடுக்கிறார்கள். அவர்
கள் கொடுக்கிறபோது கொடுக்கட்டும். பொதுமக்கள் வசதி
யைக் கருதி நம்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியும்
கொடுக்க மறுக்கிறார்களே, அதை மாண்புமிகு அமைச்சரவர்
கள் உணருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே,
அரசும் ஏற்கனவே அதை உணர்ந்து இருக்கின்ற காரணத்தால்
தான் எங்கெங்கு அரசுப் பேருந்துகள் இன்று நிதித்தட்டுப்பாடு
காரணமாக விடப்பட முடியாமல் இருக்கிறதோ, அல்லது உண்
மையான காரணத்தால் விடப்பட முடியாமல் இருக்கிறதோ,
பேருந்து உரிமங்களை வழங்கி 4 மாதம் கழித்து அங்கே டெப்போ
இல்லை என்ற காரணத்தால் தனியாருக்கு அந்தப் பேருந்து
ஆர்.டி.ஏ. மீட்டிங் மூலமாகச் சென்றுவிடுமேயானால் பரவலாக
ஒன்று கூறப்படும். அதாவது 4 மாத காலமாக அரசுப் பேருந்து
ஓடி தற்போது திடீரென தனியார் பேருந்து ஓடுவதின் மர்மம்
என்ன என்று கூட குற்றச்சாட்டு கூறுகின்ற வகையிலே கேட்டு
விடுகிறார்கள். இது சட்டத்திலே இருக்கின்ற ஓட்டை, சிக்
கல் ஆகியவற்றால் வந்துவிடுகிறது.

ஆனால், அரசினுடைய எண்ணம் எல்லாம் முடிந்த அளவுக்கு
தமிழகத்தின் பல பகுதிகளில், இன்னும் பொருளாதாரத்தை
விருத்தி செய்து டெப்போக்களை அமைத்து முடிந்த
அளவுக்கு மக்களின் நலன் கருதி அரசுப் பேருந்துகளை
படிப்படியாக விடவேண்டும் என்பதுதான். ஆனால்
அதுவரைக்கும் மக்களைத் தொல்லைக்கு உட்படுத்த வேண்டும்
என்று, இன்னலுக்கும் இடுக்கணுக்கும் ஆட்படுத்த வேண்டும்

என்று விட்டால் அரசுப் பேருந்துகளைத்தான் விடுவோம்
இல்லையேல் பேருந்துகளை யாரும் விட விடமாட்டோம் என்ற
கொள்கை அரசினுடைய கொள்கை அல்ல. அந்தப் பகுதிகளில்
தனியார் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஏற்கனவே அனுமதி
அளித்து வருகிறது. அதோடு தற்போது நான் ஏற்கனவே கூறிய
படி இத்துணை கிராமப்புற பகுதிகளுக்கு பேருந்துகள் இல்லாத
சூழ்நிலையில் பேருந்துகளே கண்டிராத கிராமங்கள் பல்லாயி
ரக்கணக்கான கிராமங்கள் சாலைகள் இருந்தும் பேருந்துகள் இல்
லாத சூழலில் அரசுக்கு நிதிப்பற்றாக்குறை இருக்கின்ற சூழலில்
அரசுக்கு இருக்கின்ற நிதியை முதலில் எங்கு செலவிட வேண்
டும் என்பதுதான அரசினுடைய ஆய்வாக இருக்கின்றது.

ஏற்கனவே பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்ற வழித்தடங்
களில் உள்ள தனியார் பேருந்துகளை எல்லாம் அந்த இடத்தை
விட்டு அகற்றுவதையே முன்னுரிமையாக நாம் எடுப்போமேயா
னால் நம்மிடம் இருக்கின்ற குறைந்த நிதியை முதற்கண் நாம்
அதற்கு செலவழிக்க வேண்டி வரும். அப்படி அந்தப் பணி
யிலே ஈடுபட்டால் தற்போது இருக்கின்ற ஏறத்தாழ 5 ஆயிரத்
துக்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளை அகற்றுவதற்காக
நிதியை சேர்ப்பதற்கே நமக்கு 12 ஆண்டுகள் ஆகிவிடும். கஷ்
டப்பட்டு சேர்க்கின்ற நிதியை எல்லாம் முழுமையாக அதற்கே
நாம் செலவழித்தோமேயானால் 31 ஆண்டுகாலமாக புறக்கணிக்
கப்பட்டு இருக்கின்ற, சாலைகள் இருந்தும் பேருந்துகளைக்
காணாத அப்பாவியான அந்த கிராமப்புற மக்களுடையவளர்ச்சிக்கு
தடைக்கற்களாக நாம் இருக்கக்கூடாது என்ற நோக்கோடு
தான் அரசுப் பேருந்துகளே இதுவரையில் கண்டிராத சாலைகள்
இருக்கின்ற கிராமங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்ற
நோக்கோடு அந்தப் பகுதிகளுக்கு தற்போது பேருந்துகளை
அரசு விட்டு வருகிறது.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து என்றாலே நட்ட
நிலைதான் ஏற்படும் என்றிருந்த நிலை முடிந்த அளவுக்கு மாற்றப்
பட்டு பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்களையும் நவீன அணுகுமுறை
களையும் இவ்வரசு மேற்கொண்ட காரணத்தால் இன்று லாப
நிலைக்கு வந்திருக்கின்றன. அரசு போக்குவரத்துத்துறை
பொறியியல் வல்லுநர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோர்
ஒருங்கிணைந்து ஆய்வு செய்து புதிய முறையில் மேம்பாடு செய்த
அடாப்ஷன் கேப்ஸூல் என்ற உறுப்பினை ஃபியூயல் பம்புகளில்
பொருத்துதல் போன்ற தொழில் நுட்ப நடவடிக்கைகளை மேற்
கொண்ட காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களின் செலவில்
பெரும் பங்கை வகிக்கும் டீசல் செலவில் பெரும் சிக்கனத்தை
சென்ற ஆண்டிலிருந்து ஏற்படுத்தியதோடு தற்போது குறித்த

காலத்தில் தரமான உயர்ரக ரப்பரை பயன்படுத்தியும் நவீன
தொழில் நுணுக்க முறைகளைக் கடைப்பிடித்து போக்குவரத்துக்
கழகங்களின டயர்களை போக்குவரத்துக் கழகங்களே ரெட்ரீட்
செய்வதால் சாதாரணமாக 10 ஆயிரம் கிலோமீட்டர் பயணத்
திற்கு மட்டுமே ஓடக்கூடிய ரெட்ரீட் டயர்கள் 25 ஆயிரம்
கிலோ மீட்டர் வரை ஓடுவதன்மூலம் டயர் வாங்கும் செல
வில் பெரும் சிக்கனம் ஏற்படுத்துதல், ரியர் ஆக்சில், ஃப்ரண்ட்
ஆக்சில், கியர் பாகஸ், ஸ்டீரிங் பாக்ஸ் போன்ற முக்கிய தேய்ந்து
விட்ட பேருந்து உறுப்புகளை போக்குவரத்துக் கழகங்களே
நல்லமுறையில் ரீக்கண்டிஷன் செய்து மீண்டும் சோதித்து உப
யோகப்படுத்துவதன் மூலம் செலவில் பெரும் சிக்கனத்தை ஏற்
படுத்துதல் போன்ற........

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ பேரவையின்
அனுமதியோடு பேரவையின நேரத்தை சற்று நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30).

__மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :__ பேருந்துகளை ஓட்டு
வதில் சில நுணுக்கமான முறைகளை கவனத்தோடு கையாளு
கின்றபோது பேருந்துகளுக்கு ஏற்படும் வீண் தேய்மானங்களைத்
தடுக்க முடியும் என்ற அடிப்படையில் ஓட்டுநர்களுக்கு அது
பற்றி பயிற்சி அளித்தல் போன்ற பொறியியற் மேம்பாடுகளை
சென்ற ஆண்டிலிருந்து தீவிரமாக மேற்கொண்ட காரணத்தால்
அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் செலவினங்கள்
பெரிதும் குறைக்கப்பட்டன.

1975–76-ல் ஒட்டு மொத்தமாக போக்குவரத்துக் கழகங்கள்
ரூபாய் 8 கோடியே 37 லட்சத்து 11 ஆயிரம் நட்டத்தில் ஓடின.
ஆனால் 1977–78-ல் முன்னர் கூறிய பல்வேறு சீர்திருத்தங்களை
மேற்கொண்டதினாலும், அச்சீர்திருத்தங்களுக்குப் பணியாளர்கள்
தந்த ஆக்க பூர்வமான ஒத்துழைப்பினாலும், ஒட்டு மொத்தமாக
அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் ரூபாய் 4 கோடி,
16 இலட்சத்து, 70 ஆயிரம் நிகர லாபம் ஈட்டின. 1978–79-ல்
இந்த மார்ச்சு 31 முடிய அனைத்துப் போக்குவரத்துக் கழகங்
களும் ஒட்டு மொத்தமாக ரூபாய் 7 கோடியே, 50 இலட்சத்து,
58 ஆயிரம் நிகர லாபத்தை ஈட்டியுள்ளன.

எங்குமே மெட்ரோபாலிடன் சர்வீஸ் என்றாலே நட்டத்தில்
தான் இயங்கி வருகிறது அனைவரும் அறிந்ததே.

டில்லி மெட்ரோபாலிடன் பேருந்து துறையில் 1977–78-ம்
ஆண்டு மட்டும் 15 கோடியே 17 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய்
நட்டம் ஏற்பட்டது. அதேபோன்று 1977–78 பாம்பே மெட்ரோ
பாலிடன் பேருந்துத் துறையில் 5 கோடியே 18 இலட்சத்து
71 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது. ஆனால் சென்னை
மெட்ரோபாலிடன் போக்குவரத்துத் துறையைப் பொறுத்த
வரைக்கும் 1975–76-ல் 2 கோடியே 88 இலட்சத்து 29 ஆயிரம்
ரூபாய் நட்டத்தில் இருந்த நிலைமை மாறி இந்த மார்ச்சு
மாதம் முடிய 1978–79 மாணவர் சலுகைக் கட்டணம் இழப்
பீடாக அரசு பல்லவன் பெருநகர்ப் பிரிவிற்குத் தந்துள்ள
தொகையினையும் சேர்த்து நிகரமாக 24 இலட்சம் ரூபாய்
லாபமீட்டிருக்கிறது. எந்த மெட்ரோபாலிடன் சர்வீஸிலும்
இல்லாததை நாம் இந்த ஆண்டு கண்டு இருக்கிறோம்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் சென்ற ஆண்டு
நட்டத்திலேயே இயங்கி தற்போது 5 இலட்சத்து 15 ஆயிரம்
ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. சென்ற ஆண்டு நட்டத்திலே
இயங்கிய பல்லவன் புறநகர்ப் பிரிவு 29 இலட்சத்து 19 ஆயிரம்
ரூபாய் லாபமீட்டியுள்ளது. அடுத்து பல்லவன் துரித பிரிவு
57 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாயும், அண்ணா போக்குவரத்து
கழகம் 65 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாயும், சோழன் போக்கு
வரத்துக் கழகம் 1 கோடியே 8 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாயும்,
சேரன் போக்குவரத்துக் கழகம் 1 கோடியே 18 இலட்சத்து
61 ஆயிரம் ரூபாயும், கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம்
1 கோடியே 26 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயும், பாண்டியன்
போக்குவரத்துக் கழகம் 2 கோடியே 37 இலட்சத்து 93 ஆயிரம்
ரூபாயும் லாபம் ஈட்டியுள்ளன. அனைத்துப் போக்குவரத்துக்
கழகங்களும் ஒட்டு மொத்தமாக 7 கோடியே 50 இலட்சத்து
50 ஆயிரம் ரூபாய் ஈட்டியுள்ளன. இது வரவேற்கத் தக்க ஒரு
வருவாயை ஈட்டித் தந்திருக்கிறது என்று கூறிக் கொள்ள
விழைகிறேன்.

பல போக்குவரத்துக் கழகங்கள் போனஸ் சட்டத்திற்கு உட்
பட்டு தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய போனஸ்
தொகைக்கென நிதியினை ஒதுக்கிய பிறகும் தொழிலாளர்கள்
பயனுறும் வகையில் பல சேமநலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கிய
பிறகும், எஞ்சிய இலாபத்தில் ஒரு பெரும் பகுதி குண்டும்
குழியுமாக உள்ள பேருந்து வழித்தட சாலைகளைச் செப்பனிட
ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு போனசை பொறுத்த
வரைக்கும் மத்திய அரசின் போனஸ் சட்ட விதிக்குட்பட்டு,
பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போனஸ் மற்றும் அதற்கு
ஈடான சிறப்புத் தொகையாக 20 சதவீதம், கட்டபொம்மன்
போக்குவரத்துக் கழகம் போனஸ் மற்றும் அதற்கீடான சிறப்புத்

தொகையாக 20 சதவீதம், அண்ணா போக்குவரத்துக் கழகம்
போனஸ் மற்றும் அதற்கீடான சிறப்புத் தொகையாக 20 சத
வீதம், சேரன் போக்குவரத்துக் கழகம், போனஸ் மற்றும்
அதற்கீடான சிறப்புத் தொகையாக 20 சதவீதம், சோழன்
போக்கு வரத்துக் கழகம் போனஸ் மற்றும் அதற்கீடான சிறப்புத்
தொகையாக 17 சதவீதம் அளிக்கப்படும்.

நட்ட நிலை எல்லாம் தாண்டி லாபத்திலுடைய எல்லையில்
அடி எடுத்து வைத்திருக்கின்ற தந்தை பெரியார் போக்குவரத்து
நிறுவனத்தில் போனஸ் கொடுக்க இயலாத நிலையில் சட்டம்
தடையாக இருக்கிறது. காரணம் தொடர்ந்து நான்கு ஆண்டு
களாக நட்டத்தில் இயங்கி வந்திருக்கின்ற காரணத்தால் 8.3
சதவீதம் போனஸ் கொடுக்கக் கூடாது என்று போனஸ் சட்டத்தில்
இருக்கிறது. இருந்தாலும் இதிலுள்ள தொழிலாளர்களுக்கு
சலுகைகள் தர வேண்டும் என்ற நோக்கத்தில் 8.3% போனஸ்
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும்,
பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் தரப்படு
கிறது. மேற் கொண்டும் தற்போது நடை முறையில் இருந்து
வருகின்ற நிலையைப் போல் இன்னும் ஆறு மாத காலத்திற்கு
நீடிக்குமானால், காரணம் ஒரு நாள் வேலை நிறுத்தம் நடந்தால்
அரசுக்கு இழப்பு 6 இலட்சத்திலிருந்து 9 இலட்சம் ரூபாய் வரை
ஆகிறது, வேலை நிறுத்தம் செய்வது தொழிலாளர்களுடைய
உரிமை. அதை நான் வேண்டாம் என்று கூறவில்லை. இந்த
அரசு தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட அரசு தான்.
எந்தப் பிரச்னையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும்,
அவைகளை எல்லாம் நேரடியாக சந்தித்துப் பேசி வேலை
நிறுத்தங்களுக்குத் தீர்வு காணலாம். கடந்த காலத்தில் இதை
நாம் கண்கூடாக கண்டிருக்கிறோம். போக்குவரத்துத் துறையி
லுள்ள தொழிலாளர்களும் கண்டிருக்கிறார்கள். எந்தச் சங்கங்
களாக இருந்தாலும் அவர்களுடைய பிரச்னைகள் என்ன என்
பதை போக்குவரத்துத் துறை சரியான முறையில் அணுகி
வருகிறது என்பதை அனைத்துச் சங்கத் தொழிலாளர்களுக்கும்
தெரியும். இப்போது கடந்த ஆறு மாத காலமாக நடந்து
கொண்டிருக்கின்ற முறை, இன்னும் ஆறு, ஏழு மாத காலத்திற்கு
நீடித்து வருமானால் பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மற்ற
போக்குவரத்துக் கழகங்களைப் போல் லாபத்தை எட்டிவிட
முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதோடு போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு
வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றை அரசு நடைமுறைக்கு
கொண்டு வருகிறது. போக்குவரத்துத் துறையிலுள்ள தொழி
லாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்
என்பதில் இந்த பேரவையில் பல உறுப்பினர்கள் ஆர்வம் காட்டி
னார்கள். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 'உங்களுக்கு
சொந்த வீடு' என்ற திட்டத்தின் கீழ் 1,500 வீடுகளை பல்லவன்
போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கு
ஒப்புக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். (ஆரவாரம்) இது முதல் கட்டமாக ஒதுக்கப்
பட்டுள்ளது. மேலும் 1,220 வீடுகள் அடுத்த ஆண்டில் தொகுதி
தொகுதியாக ஒதுக்கப்படும். நமது தொழிலாளர் நல அமைச்சர்
அவர்களின் முயற்சியால் 'ஹட்கோ' திட்டத்தின் கீழும்
போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்
படும் திட்டம் கொண்டு வரப்படவிருக்கிறது. இவ்விதம் இப்
போது ஒதுக்கப்பட்டுள்ள 2,720 வீடுகள் நீங்கலாக இதர கூட்
டுறவு சங்கங்கள் அமைத்தும், ஹட்கோ மூலமாகவும், எல். ஐ. சி.
போன்ற நிறுவனங்களில் உதவி பெற்றும், மேலும் 3,000 வீடுகள்
கட்டித் தர வேண்டும் என்று திட்டமிட்டு அதற்காக 6 கோடி 34
லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவு செய்து அனைத்து போக்கு
வரத்துத் கழக தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து
கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது. போக்குவரத்துத் தொழி
லாளர்களுக்கு என்று இதுபோன்ற முயற்சிகள் முதன் முதலில்
மேற் கொண்டிருப்பது தமிழகத்தில் தான்என்பதையும் தெரிவித்
துக் கொள்கிறேன்.

அத்துடன் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், திருவாளர்கள்
கூத்தகுடி சண்முகம், சுந்தரராஜன், ஆறுமுகம், கந்தசாமி போன்ற
வர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்
தோடு செல்வதற்கு பாஸ் வழங்கப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொண்டார்கள். அதை இந்த அரசு நடைமுறைக்குக்
கொண்டு வருகின்ற முறையில், போக்குவரத்துக் கழகங்களில்
பணிபுரியும் தொழிலாளிகள் தங்கள் குடும்பத்துடன் அரசு
பேருந்துகளில்—ரயில்வே தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு
முறை சுற்றுப்பயணம் செய்ய அனுமதிப்பதைப்போல்—தமிழகத்
திலுள்ள போக்குவரத்து தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தோடு
அரசு பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்
கின்ற வகையில், ஆண்டு ஒன்றுக்கு 1,500 கிலோ மீட்டர் வரை
குடும்பத்துடன் இலவசமாகச் செல்ல பாஸ் வழங்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்.)

அத்துடன் போக்குவரத்துத் துறையில் லாபத்திற்கு வரக்கூடிய
நிலைமை ஏற்பட்டதற்கு காரணம் தொழிலாளர்கள் மத்தியில்
ஆர்வமும், பணியில் அவர்கள் காட்டுகிற ஆர்வமும், அவர்கள்

தருகின்ற பலவிதமான ஆலோசனைகளும், பல புதிய ஆராய்ச்சி
களை கண்டுபிடிப்பவர்களுக்கும் வெகுமதி வழங்க வேண்டும்
என்று புதியதொரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம்.
ரயில்வே துறையில் ரயில்வே தினம் என்று ஒவ்வொரு ஆண்டும்
கொண்டாடி ஓட்டுநரிலிருந்து பொறியாளர் வரையிலும் வெகு
மதிகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் நமது போக்குவரத்துக்
கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், ஓட்டு
நர், நடத்துநர், பொறியியல் பிரிவில் பணிபுரிபவர்கள், நிர்வாகப்
பிரிவினர், மற்றும் மேல்நிலை அலுவலர் மற்றுமுள்ள பல பிரி
வினருள் போக்குவரத்துக் கழகங்களில் வளர்ச்சிக்கும் சிக்கனத்திற்
கும், பொதுமக்கள் நலனுக்கும் உகந்த சிறப்பு ஆலோசனைகளை
வழங்குபவர்களுக்கும், புதிய முன்னேற்றங்களை ஆராய்ச்சி
மூலம் கண்டுபிடிப்பவர்களுக்கும் மிகச்சிறந்த முறையில் பணி புரி
வோருக்கும், அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் ஒவ்வொரு
ஆண்டும், தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், 500, 250,
100 ரூபாய் என்ற மூன்று பிரிவுகளில் வெகுமதி பணமுடிப்பும்
பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அளிக்கப்படும்.

(பிற்பகல் 1—40)

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகின்றபோது, போக்கு
வரத்துக் கழகங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இரவு
நேரங்களிலே பணியாற்றுகின்றபோது அவர்களுக்கு வசதிகள்
செய்து தரவேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலே
போக்குவரத்துக் கழகங்களில் இரவு நேரங்களில் பணிபுரிகின்ற
இரவு நேர ஷிப்டு தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு
தினமும் நடப்பு ஆண்டிலிருந்து டீயும் பன்னும் இலவசமாக தினமும்
வழங்கப்படும்.

வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்.
சென்ற ஆண்டு அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின்
மூலமாகவும் தொழில் நுணுக்கப் பணியாளர், ஓட்டுநர், நடத்துனர்
ஆகிய பிரிவுகள் முதல் பல்வேறு பிரிவுகளில் 4,021 பேருக்கு
வேலை வாய்ப்பு தரப்பட்டது. இந்த ஆண்டில் அதாவது வரு
கின்ற ஆண்டில் கிராமப் புறங்களையும் கணக்கில் எடுத்துக்
கொண்டு அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் பல்
வேறு பிரிவுகளில் மொத்தம் 4,689 பேர்களுக்கு வேலை வாய்ப்பு
தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் வெங்கிடு அவர்கள் பேசு
கின்றபோது கூறினார்கள். என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் ஏன்
ஆட்கள் அதிகம் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்
பிட்டார்கள். அது டெக்னிக்கல்லாக இருக்கின்ற காரணத்தால்,
அதிலே இந்த டெக்னிகல் தொழிலாளர்கள் அதிகமாக அமர்த்தப்
பட்டிருக்கிறார்கள்.

அதோடு, பேருந்துகளுக்குத் தேவையான உறுப்புக்கள், உதிரி
பாகங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு, தமிழகத்திற்கு அப்
பாற்பட்டுள்ள மாநிலங்களிலுள்ள தனியாரைச் சேர்ந்த தொழில்
களுக்கு லாபம் போகக்கூடாது என்ற நோக்கத்தோடு, பொறியியல்
பட்டதாரிகள், டிப்ளமோதாரர்கள் போன்ற பொறியியல் கல்வி
பயின்றவர்களுக்கு சிறுதொழில் தொடங்கவும், தொழிற் கூட்டுறவு
தொடங்கவும், தொழில் நுணுக்க அறிவுரையும், நிதி
உதவியும் அளிக்க போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுக்
கும். அப்படி ஏற்பாடு செய்கின்றபோது, அதன்மூலம் சிறு
தொழில்கள் பெருகவும், வேலை வாய்ப்பு ஏற்படவும் வழி ஏற்
படும் என்ற நல்ல நோக்கத்தோடு அரசு இத்தகைய நடவடிக்கை
களை மேற்கொண்டிருக்கிறது.

அதோடு மிக, முக்கியமான முதல்வர் புரட்சித் தலைவர் அவர்
களால் எடுக்கப்பட்ட இந்த அரசின் முடிவை அறிவிக்க விரும்பு
கிறேன். நகர்புறத்திலே இருக்கின்ற மாணவர்களுக்கு பேருந்து
களில் கட்டண சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நகரப்
புறத்திலே இருக்கின்ற இந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற
இந்தச் சலுகை, ஏழ்மைநிலையிலே கிராமப் புறங்களிலே இருக்
கின்ற மாணவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவில்லை.
இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கோடு,
அதோடு நகரப் புறங்களிலே உள்ள பேருந்துகளுக்கு கட்டணம்
மிகவும் குறைவு, கிராமப்புறத்திலே உள்ள மாணவர்கள் நகரப்
புறத்திலே உள்ள மாணவர்களை விட அதிகமான கட்டணம்
கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதை இந்த அரசு உணர்ந்து,
பொருளாதாரத்தில் பெரிதும் நலிவுற்றுள்ள கிராமப்புற மக்களின்
நலனில் அக்கரையுள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்
களின் விருப்பப்படி, தமிழகத்தின் அனைத்து கிராமப் பகுதிகளி
லுள்ள மாணவர்கள் தங்கள் இல்லங்களிலிருந்து பள்ளிக்களுக்கும்,
கல்லூரிகளுக்கும், ஒரு முறை சென்றுவர கிராமப் பேருந்துகளிலும்,
நகரப் பேருந்துகளிலும் 33/3 சதவீதம் கட்டணச் சலுகை வரும்
கல்வி ஆண்டிலிருந்து வழங்கப்படும். அரசுப் பேருந்துகளோடு,
தனியார் பேருந்துகளிலும் கிராமப்புற மாணவர்களுக்கு இச்
சலுகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கு
அரசு சட்டப்படி நடவடிக்கை எடுத்து, கிராமப்புற மாணவர்
களுக்கு இச்சலுகையை வழங்க இந்த அரசு நடவடிக்கையை
மேற்கொள்ளும்.

சென்னை பத்திரிகை சங்கத்தின மூலமாக ஏற்கனவே ஒரு
வேண்டுகோள் கொடுக்கப்பட்டது. பத்திரிகையாளர்கள் தமிழ்
நாடு பேருந்துகளில் சென்றுவர சலுகை தரவேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். அந்த அடிப்படை
யிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னாலும்,

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

சென்னையிலே, இருக்கின்ற சில பத்திரிகையாளர்கள், பல்வேறு பகுதிகளிலே, வெகு தொலைவிலிருந்து அரக்கோணம், செங்கற்பட்டு போன்ற பகுதிகளிலே இருந்து வருகின்ற காரணத்தால், சென்னையிலே பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு அந்தப் பகுதிகளிலே இருந்து இங்கே வருவதற்கு சலுகைகள் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

அதன் அடிப்படையில் சென்னை புறநகர் பகுதியிலும் பல்லவன போக்குவரத்தில் பத்திரிகையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் சென்று வர சலுகை அளிக்கப்படுகிறது. மாவட்டங்களில் கூட சப்-அர்பன் ஏரியாக்களிலிருந்து பத்திரிகையாளர்கள் வரவேண்டியிருக்கிறது. உதாரணமாக, நெல்லையில் பத்திரிகையாளருக்கு பேருந்தில் பயணம் செய்ய சலுகை இருக்கிறது. தூத்துக்குடியிலிருந்து வரவேண்டுமென்றால் சலுகை இல்லை. கோவையில் பத்திரிகையாளருக்குச் சலுகை இருக்கிறது. ஈரோட்டிலுள்ள பத்திரிகையாளருக்கு சலுகை இல்லையென்று கூறினார்கள். இந்தக் குறையைக் களைய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்திரிகையாளர்கள் எந்தெந்தப் பகுதிகளில் இருந்தாலும் மாவட்டத் தலைநகருக்கு அனுமதிக்கப்பட்ட சலுகை வட்டப் பகுதிகளில் உள்ள அனைவருக்கும் அந்தச் சலுகை அளிக்கப்படும் என்பதை நடைமுறைக்கு அரசு கொண்டு வரும்.

ஏற்கனவே நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்று, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்து விட்டார்கள். பெட்ரோல் விலை ஏறிய போதிலும், டீசல் விலை ஏறிய போதிலும், ஆயத் தீர்வை ஏறிய போதிலும், ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறிய போதிலும் பல சிக்கன நடவடிக்கைகளை நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் மேற்கொள்ளப்பட்டதன் மூலம், தனியார் பேருந்துகளும் தாங்கும் என்ற நம்பிக்கையோடும் இந்த விலை உயர்வின் காரணமாக பேருந்துக் கட்டணங்களை அரசுத் துறையிலே உயர்த்தாது, தனியார் துறையிலும் உயர்த்தப்படமாட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979ஆம் ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. குழந்தைகளுக்கு ஏதாவது சலுகைகள் தர வேண்டுமென்று கடந்த ஒருவார காலமாகவே திரு. சுவாமிநாதன் அவர்கள் வற்புறுத்திக் கேட்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் 5 வயது வரையிலுள்ள குழந்தைகள் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். தற்போது 3 வயதுவரை உள்ள குழந்தைகள் அரசுப் பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும் இலவசமாகச் செல்லலாம். அதுபோன்று ஐந்து வயதுக்குட்பட்ட

1979 ஏப்ரல் 17] [திரு. சி. பொன்னையன்]

குழந்தைகள் அனைவரும் குழந்தைகள் ஆண்டான இந்த ஆண்டு அரசுப் பேருந்துகளிலும் தனியார் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும்.

அதேபோன்று தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையில் பார்வையிழந்த அனைத்து மக்களும் மாநில முழுவதும் அரசுப் பேருந்துகளில் மருத்துமனைக்கும், வேலை செய்யுமிடங்களுக்கும், பள்ளிகள் போன்ற இடங்களுக்கும் சென்று வர இலவசமாக அனுமதி வழங்கப்படும்.

எட்டு ஆண்டுக்கு மேல் வயதான பேருந்துகளை மாற்றி, அவ்வழித் தடங்களில் புதிய பேருந்துகளை பயணிகளின் வசதி கருதி விடவேண்டுமென்று அரசு மேற்கொண்ட திட்டத்தின் அடிப்படையில் சென்ற ஆண்டு மட்டும் 886 புதிய பேருந்துகள் விடப்பட்டன. அதே அடிப்படையில் 1979–80ஆம் ஆண்டான நடப்பு ஆண்டில் எட்டு ஆண்டிற்கு மேற்பட்ட 933 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 933 புதிய பேருந்துகள் விடப்படும்.

மாண்புமிகு வெங்கிடு அவர்கள் வழித்தடங்கள் மிகுந்து புதிதாகப் பேருந்துகள் விடப்பட்டும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறதே என்று கூறினார்கள். போக்குவரத்துக் கழகங்களில் எட்டு ஆண்டுகளான பழைய பேருந்துகள் ஏலம் விடுவதற்காக வைக்கப்பட்டு ஏலம் விட்ட பிறகு பேருந்துகள் கணக்கில் எண்ணிக்கை குறைந்திருக்கும்.

அதோடு, பேருந்து வசதி இதுவரை அறவே இல்லாத அவசரத் தேவை மிகு பகுதிகளுக்கு முன்னுரிமை தந்து பேருந்துகள் உடனே விட வேண்டுமென்றும், மக்கள் பெரிதும் அல்லல் படுமளவிற்கு நெரிசல் மிக அதிகமாக உள்ள பேருந்து வழித் தடங்களில் கூடுதல் பேருந்துகள் விட வேண்டுமென்றும் அரசு எடுத்த முடிவின் அடிப்படையில் சென்ற ஆண்டு 468 புதிய பேருந்துகள் விடப்பட்டன. அதே அடிப்படையில் இந்த நடப்பாண்டில் 557 புதிய பேருந்துகள் விடப்படும்.

ஆக, பழையனவற்றை மாற்றுதல், புதிய வழித் தடங்களிலும் கூடுதலாகவும் பேருந்துகள் விடுதல் என்ற அடிப்படையில் சென்ற ஆண்டு 1,354 புதிய பேருந்துகளை விட்ட போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில் மேலும் 1,490 புதிய பேருந்துகளை மேலும் விடும்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வினால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்களது அவசரப் பணிகளுக்கும் அலுவலகங்களுக்கும் காலதாமதமில்லாமலும் குறைந்த செலவில் விரைந்து செல்ல உதவுகின்ற வகையில்

சென்னை மாநகரத்தில் மட்டும் பொதுமருத்துவமனைகள், மிக முக்கிய அலுவலகங்கள் உள்ள குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் நிற்கக் கூடிய, பயணிகள் உட்கார்ந்து மட்டுமே செல்லக் கூடிய சற்று வசதிகள் நிறைந்த 70 சிறப்புப் பெருநகர விரைவுப் பேருந்துகள் இந்த ஆண்டிலே சென்னை மாநகரத்தில் விடப்படும். சாதாரண நகரப் பேருந்துக் கட்டணத்தைவிட இரண்டரை மடங்கு அதிகக் கட்டணம் இச் சிறப்புப் பேருந்துகளுக்கு வசூலிக்கப்படும். பெட்ரோல், விலை உயர்வின் காரணமாக ஆட்டோ, டாக்சி கட்டணங்கள் உயர்த்தப் பட்டு விட்ட காரணத்தால் இந்தப் பேருந்துகள் பொதுமக்கள் நலன் கருதி முதன்முறையாக விடப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : சென்னை நகரைப் போன்றே மதுரை நகரத்திலும் டாக்சி கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, அங்கும் இந்த மாதிரி பேருந்து விடப்படுமா ?

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கும். அத்தோடு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு புதிய பேருந்துகள் வேண்டுமென்று கேட்டார்கள். ஓடுகின்ற பேருந்துகள் பழைய பேருந்துகளாக இருப்பதால் நல்ல வசதிகள் உள்ள புதிய பேருந்துகள் வேண்டுமென்று கேட்டார்கள். அதன் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் 195 புதிய விரைவுப் பேருந்துகள் விடப்படும். அவற்றில் வசதிகள் நிறைந்த பேருந்துகள் 50 பேருந்துகள் சொகுசுப் பேருந்துகளாகப் நடப்பு ஆண்டிலே விடப்படும். பயணிகட்கு நெடுந்தூரம் பயணக் களைப்பைக் குறைக்கும் வண்ணம் மிக வசதியுள்ள சொகுசு பேருந்துகளாக அவை இயங்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது மத்திய அரசுக்கு மாநிலத்தினுடைய வருவாய் சென்றுவிடுகிறது. ரெயில்வேயில் அதிகமான வசதிகள் இருப்பதால் அங்கே அதிகமாக வருமானம் போகிறது. ஆகவே இங்கேயும் ஏர்கண்டிஷன் பஸ்கள் விட வேண்டுமென்று கேட்டார்கள். ரயில் வசதி இல்லாத முக்கிய நகரப் பகுதிகளிலிருந்தும், ரயில் வசதி உள்ள நகர்ப் பகுதிகளில் அப்பகுதிக்கென ரயில்வேயில் ஒதுக்கப்பட்டுள்ள ரிசர்வேஷன் இருக்கைகள் போதிய அளவு இல்லாத இடங்களிலிருந்தும், பல வழித்தடங்களில் நெடுந்தூரம் செல்லும் பயணிகட்கு வசதியாக சென்ற ஆண்டு குளுகுளு வசதி பொருந்திய சொகுசு விரைவுப் பேருந்துகள் விட வேண்டுமென

முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்னையிலிருந்து திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில் வழியாக திருவனந்தபுரம்வரை 2 குளுகுளு பேருந்துகள் சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவரால் திருவள்ளுவர் என்னும் பெயர் சூட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்டன. அவை பயணிகட்குப் பலனுள்ள வகையிலும் லாபத்திலும் நன்கு இயங்கி வருகின்றன. சென்ற ஆண்டு எடுத்த முடிவை ஒட்டியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரின் கோரிக்கைக்கு ஏற்பவும் இந்த ஆண்டு, சென்னையிலிருந்து திருச்சி, புதுக்கோட்டை, காரைக்குடி தேவக்கோட்டை, ராமநாதபுரம் வழியாக மண்டபம் வரைக்கும் 2 பேருந்துகளும் சென்னையிலிருந்து சித்தூர் வழியாக பெங்களூர் வரைக்கும் ஒரு பேருந்தும், நாகர்கோவிலிலிருந்து, திருநெல்வேலி மதுரை, சேலம் வழியாக பெங்களூர் வரைக்கும் 2 பேருந்துகளும், சென்னையிலிருந்து சேலம் வழியாக கோவை வரைக்கும் 2 பேருந்துகளும், சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வரைக்கும் ஒரு பேருந்தும் இத்தகைய வழித்தடங்களில் நடப்பாண்டில் எட்டு குளுகுளு சொகுசு பேருந்துகள் விடப்படும்.

மொத்தமுள்ள இந்த பத்து குளுகுளு சொகுசு விரைவுப் பேருந்துகளிலும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், சாலை விபத்துகளை தடுத்தல், கிராமப்புற பொருளாதார வளர்ச்சி, தமிழ்நாட்டு சுற்றுலாச் சிறப்புகள் மற்றும் செய்திகள்பற்றிய டாகுமெண்டரி படங்களும் நல்ல சமுதாய முன்னேற்றக் கருத்துள்ள படங்களும் 16 எம்.எம். படங்கள் மூலம் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட சொகுசு பஸ்களில் பயணத்தின் போது பயணிகளுக்குக் காட்டப்படும்.

இந்த ஏ.சி. குளுகுளு பேருந்துகள் விடுகிறபோது செலவினம் அதிகமாக இருக்காதா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணலாம். இத்தகைய அதிக வசதிகள் படைத்த குளுகுளு பேருந்துகளின் கட்டணம் ரயில்களில் முதல் வகுப்பிற்கு விதிக்கப் படும் கட்டணத்தில் பாதியாகவும், ரயிலில் ஏ.சி. வகுப்பில் வசூலிக்கப்படும் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்காகவும் இருக்கும்.

அடுத்து இன்னொன்று முக்கியமானது. பல்லவன் போக்கு ரத்துக் கழகத்தினுடைய முப்பிரிவுகளும் மிகப் பெரிய அளவிலே வளர்ந்துவிட்ட காரணத்தாலும், துரிதப் பேருந்துகளைப் பாறுத்தவரைக்கும் தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் இப்போது ஓடிக் கொண்டிருக்கிற காரணத்தாலும் பல்லவன் விரைவுப் பேருந்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கூறியது போல் சிறப்பான முறையிலே இன்னும் ஆட்களைக் கூட அதிகப் ...த்தி நல்ல முறையிலே கொண்டு வர வேண்டுமென்ற நன்

நோக்கோடு நடப்பு ஆண்டிலிருந்து பல்லவன் போக்கு
வரத்துப் பிரிவு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்' என
மாற்றப்பட்டு அது தனித்து இயங்கும்.

அடுத்து இந்த ஏ.சி. பஸ்களைப் பொறுத்தவரைக்கும்
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு வருத்தம்.
களுக்கு எல்லாம் இந்த ஏ.சி. பஸ்களில் பயணம் செய்ய அனுமதி
தரப்படவில்லையே என்று ஒரு வருத்தம் இருந்து வருகிறது.
அந்தக் குறையைக் களைய ஏ.சி. பேருந்துகள் தமிழகத்தின் பல
பகுதிகளிலேயும் நடப்பு ஆண்டிலிருந்து விடப்படுகிறகாரணத்தால்
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏ.சி. பஸ்களில் மற்ற
பேருந்துகளில் பயணம் செய்வதுபோல் பயணம் செய்ய நடப்பு
ஆண்டிலிருந்து அனுமதிக்கப்படுவார்கள்.

அதோடு இன்னும் ஒரு முக்கியமான அறிவிப்பு நாட்டு
உடமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த
வரைக்கும் அதிலே பல்வேறு முன்னேற்றங்களை நடைமுறைக்குக்
கொண்டுவர அமைச்சுப் பொறுப்பிலே இருக்கின்ற நானோ
அல்லது அதிகாரிகள் மட்டும்தான் முன்னேற்றங்களைக் கொண்டு
வரமுடியும் என்று எண்ணிக்கொண்டு நாங்கள் செயல்படவில்லை.
மாறாக அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பங்கு வகிக்கின்ற
ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கன்சல்டேடிவ் கமிட்டியில் அங்கம்
வகிக்கின்ற அந்த உறுப்பினர்களும் போக்குவரத்துக் கழகங்களில்
முன்னேற்றங்களை கொண்டுவருவதற்கும் குறைபாடுகளைக்
களைவதற்கும் அதிகாரம் அளிக்கின்ற முறையில் தமிழகத்திலே
நமது போக்குவரத்துக் கழகங்களின் பஸ்கள் எங்கு ஓடினாலும்,
அந்தப் பேருந்துகளில் அவர்கள் அவ்வப்பொழுது பயணம் செய்து,
அதை அவர்கள் சோதனையிட்டு, அதில் இருக்கின்ற குறைபாடு
களைக் களைவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யச் சற்று அதி
காரம் கொடுக்கக்கூடிய அளவிற்குத் தனியாக பாஸ்கூட அளிக்கப்
படும். அந்த வகையிலே சர்வகட்சி உறுப்பினர்களையும் கொண்ட
அந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கன்சல்டேடிவ் கமிட்டி உறுப்
பினர்களுக்கு நடப்பாண்டிலிருந்து இந்த அதிகாரம் வழங்கப்
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திற்குட்பட்ட
அருகாமையிலுள்ள குறுகிய தூர கிராமப்புற பயணிகள் நகர்ப்
புறங்களுக்குச் செல்வதற்கோ, அல்லது நகரங்களிலிருந்து கிரா
மங்களுக்குத் திரும்பி வருவதற்கோ, நகரப் பேருந்துகள் நீங்க
லாக பயணப் பேருந்துகளில் இடம் பெற முடியாமல் அல்லல்
படுகின்ற சூழல் பன்னெடு ஆண்டுகளாக தமிழகத்தில் பரவலாக
இருந்து வருகிறது. கிராமப்புற மக்கள் பட்டணங்களுக்குச்
செல்ல வேண்டும். அவர்களுடைய காய்கறி, பால் போன்ற

பொருட்களை எடுத்துச் சென்று விற்பதற்குச் செல்லும்பொழுது
மொபசல் பஸ்களில் அவர்களை ஏற்றிச் செல்வதில்லை. அதனால்
அவர்கள் பலவிதமான சிக்கல்களுக்கு உள்ளாகிறார்கள். இதைக்
களைய வேண்டுமென்று அரசு நடவடிக்கை மேற்கொண்டு, தற்
பொழுது அருகாமையிலுள்ள நகரங்களுக்கு கிராமப்புற மக்கள்
சிரமமின்றி சென்று வர வாய்ப்பினை ஏற்படுத்துவது கிராமப்புற
மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், மற்ற தேவைகட்கும்
மிக்க அவசியமென அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில்
தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முனிசிபாலிடிகளிலிருந்து 25 கிலோ
மீட்டர் தூரம் வரையிலுள்ள கிராமப்புற மக்கள் அந்தந்த நகரங்
களுக்கு அல்லலின்றி வந்து செல்ல உதவும் வகையில் அக்கிரா
மங்கள் வரை நகர்ப்பேருந்துகள் விடப்படும். (குறுக்கீடு) 25
கிலோ மீட்டர் என்பது ஏற்கெனவே இருக்கிறது. ஆனால் நகரப்
பேருந்துகள் வசதி இல்லை. அதைத்தான் குறிப்பிடுகிறேன்.
நகரப்பேருந்துகள் பல முனிசிபாலிட்டிகளில் இல்லாத சூழ்நிலை
யில் கிராமப்புறங்களில் சிக்கல்கள் இருப்பதால் சொல்கிறேன்,
25 கிலோ மீட்டரை 30 கிலோ மீட்டராக உயர்த்துவதற்கு
அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கும்.

அடுத்து, இன்னும் முக்கியமான ஒன்று. தமிழகத்திலே இருக்
கின்ற பேருந்து நிலையங்களில், குறிப்பாக முனிசிபாலிட்டிகளில்
கண்ட்ரோலில் இருக்கும் பேருந்து நிலையங்களில் பயணிகளுக்கு
எந்தவிதமான வசதியும் இல்லாமல், பல சுகாதாரம் கேடுகள்
ஏற்படும் அளவில், செம்மையாகப் பராமரிக்கப்படாமல் இருக்
கிறது என்ற குறை இன்றைக்கு இருக்கிறது. முனிசிபாலிட்டிகள்
தனியாருக்கு லீசுக்கு விடுகின்றன. தனியார்களைப் பொறுத்த
வரையில், முனிசிபாலிட்டி பேருந்து நிலையங்களைக் கவனிக்காத
நிலையிருப்பதால், பயணிகள் பல சிக்கல்களுக்கு ஆளாக்கப்பட்டு
வருகிறார்கள். அத்துடன், பேருந்து நிலையங்களைப் பராமரிப்
பதற்கு முனிசிபாலிட்டிகளுக்கு போதிய நிதிநிலை இல்லாத கார
ணத்தால் பல சிக்கல்கள் அவர்களுக்கும் ஏற்படுகிறது. ஆகவே,
உள்ளாட்சித் துறையும், போக்குவரத்துத் துறையும் சேர்த்து
நல்ல முடிவை எடுத்திருக்கிறது. பராமரிப்புக்கான செலவை
நீக்கி அந்த நகராட்சிக்கு உட்படுத்தப்பட்ட போக்குவரத்து
பஸ் நிலையங்களைப் பூராவும் படிப்படியாக நாட்டுடைமையாக்
கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களே எடுத்து, அந்த பஸ்
ஸ்டாண்டுகளிலே பயணிகளுக்கு வேண்டிய பல வசதிகளைச்
செய்து தந்து, அவர்களுக்கு நல்ல கழிவறைகள், ஓய்வெடுப்
பதற்கான வசதிகள், சிற்றுண்டி வசதிகள், சுகாதார மேம்பாடு
ஆகியவற்றைச் செய்து, அந்த முனிசிபாலிட்டிகள் தனியாரிடம்
கொடுப்பதற்குப் பதிலாக அரசுப்போக்குவரத்துக் கழகங்களுக்குக்
கொடுத்து, போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்திலே ஓடுவதால்
அந்த லீசை அவர்களுக்குக் கொடுத்து—நல்ல முறையில், செம்மை
யாக அந்த பஸ் நிலையங்களை அமைக்க நடப்பாண்டிலிருந்து
அரசு படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மணி இரண்டு
ஆகப் போகிறது. இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் உங்
களுக்கு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : டென் மோர்
மினிட்ஸ். பேருந்துகள் நிற்கும் இடங்களில் வெயில், மழை
ஆகியவற்றிலிருந்து பேருந்துகளுக்காகக் காத்திருக்கும் பயணி
களுக்குப் பாதுகாப்புத் தர நிழற்குடைகள் பரவலாக, விரைவாக
நிறுவ வேண்டுமென அரசு எடுத்த முடிவின் அடிப்படையில்
சென்ற ஆண்டு 402 நிழற்குடைகள் அனைத்து போக்கு
வரத்துக் கழகங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டன. நடப்பாண்டில்
மேலும் 600 நிழற்குடைகள் அனைத்துப் போக்குவரத்து கழகங்
களாலும் நிறுவப்படும். அத்தோடு, மருத்துவ மனைகளின்
அருகில் பேருந்துகள் நிற்குமிடங்களில் நிழற் குடைகள் அமைப்
பதோடு, ஆங்கு பேருந்துகளுக்காகக் காத்திருக்கும் நோயாளி
களின் நலனுக்காக அந்த பஸ் ஸ்டாண்ட் இருக்கும் இடங்களில்
இருக்கைகளும் அமைக்கப்படும்.

(பிற்பகல் 2-00)

எல்லா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், சுற்றுலாத்
துறை முக்கியத்துவம் கொடுத்து விரிவுபடுத்துகின்ற இடங்களி
லும், திருவிழாக் காலங்களில், மக்கள் பெருந்திரளாகக் கூடும்
இடங்களிலும் பயணிகளுக்குத் தேவையான குடிநீர், ஓய்விடம்,
கழிவிடம் போன்ற வசதிகளை நடப்பாண்டிலே படிப்படியாக
போக்குவரத்துக் கழகம் செய்து தரும்.

அதோடு, சாலை விபத்துக்களிலே உயிர்ச் சேதங்கள் ஏற்
பட்டு, அப்படி உயிருக்குப் போராடிக் கொண்டு, அடிப்பட்டுக்
கிடக்கின்றவர்கள், விரைவிலே அருகாமையிலே இருக்கிற நகர்ப்
புற மருத்துவ மனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற வாய்ப்பில்லா
மல் இதுகாறும் இருந்து வருகிறது. இந்தக் குறையைப் போக்க
மருத்துவத் துறையிலே எடுத்த முயற்சியின் அடிப்படையில்,
போக்குவரத்துக் கழகங்களுடைய இலாபத்திலிருந்து 150 ஆம்
புலன்ஸ் வண்டிகள் வாங்கி அந்தச் சாலை விபத்திலே சிக்குண்ட
வர்களுக்கு, உயிர்ப் பாதுகாப்பு விரைவிலே அளிக்க, மருத்துவ
வசதி அளிப்பதற்காக, நடப்பாண்டிலிருந்து மருத்துவ வசதி
செய்து தரப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 50 ஆம்புலன்ஸ்

வண்டிகள் ஆரம்பத்தில் விடப்படும். படிப்படியாக, அது இன்
னும் மேற்கொள்ளப்படும். அடுத்து, ஏற்கெனவே, பலமுறை
நான் வெளியிலே கூறியிருப்பது போன்று தமிழகத்திற்கு வரு
கின்ற கப்பல்களைப் பொறுத்த வரைக்கும் சென்னைத் துறை
முகத்திலே இங்கு பழுதடைந்து விட்டது என்றால், பல இலட்சம்
ரூபாய் செலவு செய்து, அவர்கள் விசாகப்பட்டிணத்திற்கோ,
கல்கத்தாவுக்கோ, பம்பாய்க்கோ சென்று தான் அவர்கள் பழுது
பார்க்க வேண்டிய சூழல் இருக்கிற காரணத்தால், சென்னைத்
துறைமுகத்திலேயே, கப்பல் பழுது பார்க்கும் தொழிற்கூடம்
ஒன்றை அமைக்க வேண்டுமென மைய அரசை மாநில அரசு
கேட்டு, தமிழக முதல்வர் அவர்கள் பலமுறை வற்புறுத்தி ஆரம்
பத்தில் 180 மீட்டர் நீளம் உள்ள தொழிற்கூடம் அமைக்க
ஒப்புக்கொண்ட மைய அரசு, தற்பொழுது 220 மீட்டர் நீள
முள்ள தொழிற்கூடம் — பெரிய கப்பல்கள் கூட வந்து செல்ல
வாய்ப்பிருக்கும் வகையில் அமைக்க, மைய அரசு அமைச்சர்
சாந்த்ராம் அவர்கள் புரட்சித் தலைவரிடம் உறுதி அளித்
துள்ளார்.

அதோடு, சேதுசமுத்திரம் திட்டம் பொறுத்தவரைக்கும் இந்
தியாவின் மேற்கு கடற்கரை ஓரப்பகுதிக்கும் கிழக்கு கடற்கரை
ஓரமாகவும் சென்று வருகிற கப்பல்கள், தமிழகத்தை விடுத்து,
இலங்கைக் கடற்கரையைச் சுற்றி வருகிற காரணத்தால் ஏறத்
தாழ போக வர 660 மைல்கள் அதிகமாகப் பயணம் செய்து,
அதனால் காலமும் எரிபொருளும் வீணாகின்ற காரணத்தால்,
இந்தத் திட்டத்தை விரைவில் நடைமுறைக்குக்
கொண்டு வர வேண்டுமென தமிழக முதல்வர் அவர்கள் மைய
அரசை வற்புறுத்தியிருக்கிறார்கள். 1955-லும், 1968-லும்,
1974-லும் ஆய்வுகள் நடத்தப்பட்டும் மைய அரசு இன்றைக்கு
ஏற்காமலிருந்தபோதிலும், அதனால் ஏற்படுகின்ற ஆரம்பச் செல
வைவிட, இறுதியிலே கிடைக்கிற பலன் நிச்சயமாக மிக அதிக
மாக இருக்கிற காரணத்தால் இதை விரைவிலே மேற்கொள்ள
வேண்டுமென மைய அரசை மாநில அரசு மிகவும் வற்புறுத்தி
இருக்கிறது.

அதோடு, கப்பல் துறையிலே, இந்தியாவிலே வேலை பெற
வேண்டுமென்றால், தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் யாராக
இருந்தாலும், கல்கத்தாவுக்கோ, பம்பாய்க்கோ சென்று எம்
பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்தால்தான் அவர்களுக்கு
வேலை வாய்ப்பு கிட்டும். அதற்காக, நூற்றுக்கணக்கான ரூபாய்
களைச் செலவு செய்து, தமிழகத்திலே இருக்கிற ஏழை, பம்
பாய்கோ, கல்கத்தாவுக்கோ சென்று எம்பிளாய்மென்ட் எக்சேஞ்
சில் பதிவு செய்து, வேலை பெற முடியாத சூழ்நிலையில் அவர்கள்

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 17

இருக்கிற காரணத்தால், தமிழகத்திலேயே (Employment Exchange
for Sea-men at Madras) ஒன்றை அமைக்க வேண்டுமென்று அரசு
கேட்டிருக்கிறது.

அதோடு, தூத்துக்குடி சிறு துறைமுகம் பெரும் துறை
முகமாக, மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால், பெரிய துறை
முகங்களுக்கு வழக்கமாக வரும் சரக்குக் கப்பல்களில் வரும்
பொருள்களைத் துறைமுகங்களிலிருந்து நாட்டின் உட்பகுதி
களுக்கு அனுப்ப வேண்டுமென்றால், அதற்கு மீட்டர் காஜ்
இருப்புப் பாதைக்குப் பதிலாக, பிராட் கேஜ் இருப்புப்பாதை
தான் வேண்டுமென்றும் பெரும் துறைமுகம் தூத்துக்குடி
யில் திறக்கப்பட்ட காலத்திலே பிராட் கேஜ் என்ற அகலப்
பாதை அமைக்கப்படாத காரணத்தாலும் அதை மேற்கொள்ள
வேண்டுமென மைய அரசு மாநில அரசைக் கேட்டது. மாநில
அரசு அதற்குத் தற்பொழுது ஒப்புதல் அளித்திருக்கிறது.

அதோடு, விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை காட்பாடி
வரைக்கும் மீட்டர் கேஜ் பாதையில் சென்று, காட்பாடியிலிலே
யிருந்து மாறி, ஜோலார்பேட்டை வழியாக, பெங்களூர் செல்லும்
தூரத்தை விட, 100 கிலோ மீட்டர் குறைவாக அமையும் அள
விற்கு, பாண்டியிலிருந்து பெங்களூருக்கு, திருவண்ணாமலை, செங்
கம், கிருஷ்ணகிரி வழியாக இரு புதிய இருப்புப் பாதை அமைக்க
மைய அரசை மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறது.

சென்னையிலிருந்து திருவள்ளூர் வரை உள்ள மின்சார இருப்
புப் பாதையை அரக்கோணம் வரைக்கும், சென்னையிலேயிருந்து
விழுப்புரம் வரை உள்ள இருப்புப் பாதையை திருச்சி
வரைக்கும் நீடிக்கவும் அரசு மைய அரசை வற்புறுத்தியுள்ளது.
நேற்று கூட தமிழக முதல்வர் அவர்கள், கூட அதைப் பெரிதும்
வலியுறுத்தி இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நான் இதுகாறும் கூறிய அரசு
முடிவுகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல கோரிக்கை
களுக்கு அரசு தரப்பிலே நான் அளித்த விளக்கங்களையும் ஏற்றும்
நான் எவற்றிற்கேனும் பதிலுரைக்க முடியாமல் போயிருந்தால்,
நேரமில்லாத காரணத்தால் தான் என்பதனை அவர்கள் ஏற்று,
வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்
கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

திரு. கே. சுந்தசாமி : தலைவர் அவர்களே, நாட்டின் முன்
னேற்றத்திற்கு தனியார் துறைகளும் வளர வேண்டும். அதற்காக
தனியார்களுக்கு எத்தனை பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று
கேட்கப்பட்டது. அதற்கு அரசின் பதில் என்ன ?

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நாட்டு
டைமை ஆக்குவதை வரவேற்பவன் நான், இருந்தாலும், இடைக்
காலத்தில் மக்களுடைய போக்கு வரத்துக்கு இடைஞ்சல் ஏற்படக்
கூடாது என்பதற்காக தனியார்கள் எவ்வளவு பஸ்கள் வைத்துக்
கொள்ளலாம் என்று திட்ட வட்டமாக ஐந்து, ஆறு, ஏழு அல்
லது எட்டு என்று இவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம்
என்று அறிவித்துவிட்டால், அதுவும் காலம் தாழ்த்தாமல் சீக்கிரம்
அறிவித்துவிட்டால், அரசின் மீது ஏற்பட்டிருக்கும் தவறான
அபிப்பிராயம் நீங்கிவிட இடமுண்டு. அதனால் சீக்கிரமாக
அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தனியார்களுக்கு எத்தனை பஸ்கள் வைத்துக்
கொள்ளலாம் மூன்றா, ஐந்தா, அல்லது திராவிட முன்னேற்றக்
கழக அரசிலே அனுமதிக்கப்பட்டதுபோல பத்தேவா என்பதை
யெல்லாம் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று மாண்புமிகு
உறுப்பினர்கள் பலர் கூறினார்கள்.

தமிழகத்தில் தற்போதுள்ள சாலைகளைப்பற்றி,
போக்கு வரத்து துறையைப் பற்றி மாபெரும் ஆய்வுகளை
நடத்தி என்னென்ன மேம்பாடுகளை மேற்கொள்ள
வேண்டும், எந்தெந்த வழித்தடங்கல்களில் தனியார்பேருந்துகளை
ஓட்டலாம் எந்தெந்த வழித்தடங்களில் அரசு பேருந்துகளை
ஓட்டலாம், தனியார் பேருந்துகளை கிராமப்புற சாலைகளுக்கு
அளிப்பதால், அவர்கள் திடீரென்று நிறுத்திவிட்டால்
அவர்கள் மீது வழக்குகள் தொடர வேண்டிய நிலை இருக்கிறது.
அதற்கான வழி முறைகள் என்ன? இப்படிப்பட்ட பல பிரச்சினை
களை பல ஆய்வுகளை அரசு கடந்த 4 மாத காலமாக நடத்தி
வருகிறது. இந்த ஆய்வு முடிந்து விட்டால், எந்தெந்த வழித்
தடங்களில் தனியார் துறை பேருந்துகள் ஓட வேண்டும், அல்லது
இரண்டும் இணைத்து செயல்பட வேண்டுமா என்பதைப்பற்றி
யெல்லாம் முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: ஒரே ஒரு பாயின்ட் தான். தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்வேறு விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே தொழிலாளர்களுடைய விஷயத்திலே 240 நாட்கள் வேலை செய்தால் டெம்பரரி தொழிலாளர்கள் பெர்மனன்ட் செய்யப்பட வேண்டும் என்று பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் இருக்கிறது. அதுபோல மற்ற கழகங்களுக்கும் கொண்டு வரப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, போக்கு வரத்துக் கழகங்களில் பணி செய்பவர்களில் பல்லவன் போக்கு வரத்துக் கழக தொழிலாளர்கள், பாண்டியன் போக்கு வரத்துக் கழக தொழிலாளர்கள் என்று இந்த அரசு பிரித்துப்பார்ப்பது இல்லை. பிரித்து பார்த்த காலம் இருந்தது. ஆனால் இனி மேல் அது கூடாது என்று எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் ஆணையிடப்பட்டிருக்கிறது. உத்தரவுகள் சில இடங்களில் நடைமுறைபடுத்தப்படவில்லை. அவைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்தரராஜன், வி. கே. கோதண்டராமன், அ. சுவாமிதாஸ், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 3— மோட்டார் வண்டிகள் சட்டங்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,55,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 39

திருவாளர்கள் செ. சதாசிவம், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள், என். பழனிவேல், திரு. பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டு தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—''சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பில் ''மானியக் கோரிக்கை எண்.39-ன் கீழ் ரூ. 35,37,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(பிற்பகல் 2-10)

கோரிக்கை எண். 40-

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், அ. சுவாமிதாஸ், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. தே. ஞானசிகாமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 54-

திருவாளர்கள். வி. கே. கோதண்டராமன், அ. சுவாமிதாஸ், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 54-சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,55,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 55-

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(8) அரசினர் தீர்மானம்:

விதி 22-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :-

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாளன்று தளர்த்தி, அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்''.

1979 ஏப்ரல் 17]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப் : மாலை 4 மணி மீண்டும் கூடுவது என்பதற்கு பதிலாக 5 மணி என்று வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, இன்று மாலை 5 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 5-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(7) வரவு-செலவுத் திட்டம் 1979—80 வாக்கெடுப்பு(தொடர்ச்சி)

(ஊ) கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநர்அவர்களின் பரிந்துரையின்மேல்,கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்டநிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,61,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆலய ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு உள்ள சலுகைகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,61,42,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தைமொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, கோவிலுக்கு வருகின்ற நன்
கொடை, வருமானங்களை அந்தந்தக் கோவிலின் சுற்றுப்புறமுள்ள
ஊர்களின் சாலைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்
படுத்துவது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 12 —1959-ஆம் ஆண்டு தமிழ்
நாடு இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட—நிர்வாகம் என்ற தலைப்
பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,61,42,000-இல் ரூ. 100
குறைக்கவேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்
கையும், வெட்டுத்தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்
காக வைக்கப்படுகின்றன.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் துணைத்
தலைவரவர்களே, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்
கட்டளைகள் சட்டநிர்வாகம் பற்றியகொள்கை விளக்கக்குறிப்பு *
ஒன்று அச்சடிக்கப்பட்டு அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.
அதை நான் அவையில் பேசியதாகக் குறிப்பேடுகளிலே பதிவு
செய்யும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதையொட்டி
மாண்புமிகு உறுப்பினர்கள் தருகின்ற கருத்துக்களையும் ஆராய்ந்து
இறுதியிலே விடையளிப்பதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டு
அமைகிறேன்.

*திரு. ரெ.வி. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலை
வரவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்
என்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை
கூற விரும்புகிறேன்.

இந்து சமயம் வளர்வதற்கும் காப்பாற்றப்படுவதற்கும் மிக
ஆதாரங்களாக உள்ளவை ஆலயங்கள், மடங்கள், மட்ாலயங்கள்
அறக்கட்டளைகள் முதலியவைகள் ஆகும். இவைகளை காப்
பாற்ற வேண்டிய பொறுப்பு அரசின் முக்கிய கடமையாகும்.
அது எந்த அரசாக இருந்தாலும் இந்த அறநிலையங்களைக
காப்பாற்றவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

@....271-281—ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்
பெற்றுள்ளது.

எங்களுக்குகூட முதலில் இந்த அரசு பதவி ஏற்ற பிறகு இந்த
அரசின் மீது சந்தேகமும் கொஞ்சம் பயமும் கூட இருந்தது.
காரணம், நாமும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இங்கே பதவி
பிரமாணம் எல்லோரும் எடுத்துக்கொண்டோம், அப்போது
கடவுள் பெயரால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர்கள்
45பேர். மற்றவர்கள் எல்லோரும் அந்தப் பதவிப்பிரமாணத்தில்
உளமாற உறுதி கூறினார்கள்.

அதன்பிறகு இதனால்தான் எனக்குக் கொஞ்சம் அச்சம்
ஏற்பட்டது. ஆனால் சென்ற நிதிநிலை அறிக்கையின்போது
அந்தத்துறையின் மீது விவாதங்கள் நடைபெற்ற பிறகு நமது
மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் பேசியபோதும்,
இப்போது அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளைப்
பார்க்கும்போதும் உண்மையிலேயே எனக்கு மன நிம்மதி ஏற்
படுகிறது. காரணம் ஆலையங்களில் அர்ச்சகர்களாக நியமிப்
பதற்கு உள்ள வழி வகைகளை வகுப்பதற்கு வல்லுநர்கள் அடங்கிய
ஒரு குழுவை ஏற்படுத்தப் போவதாக அதிலே அறிவிக்கப்பட்
டிருக்கிறது. அதிலே யார் யார் வல்லுநர்களாக இருக்கிறார்கள்
என்றால் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியவற்றில்
மிகவும் புலமை பெற்றவர்கள் அவர்களைத்தான் நியமிக்க போவ
தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் நமது பண்டைய
நாகரீகத்திற்கும், கலைகளுக்கும், பண்பாட்டிற்கும் கருவூலங்
களாக உள்ள ஆலையங்களின் பணி பாதுகாப்பிற்காக அரசு
அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று
அரசு முடிவு எடுத்திருப்பதைக்காண உண்மையிலேயே நான்
மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன்.
சமய நிறுவனங்களில் நல்ல முறையில் அன்றாட பூஜைகள் சரிவர
ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் அந்த நிறுவனங்களின் நிதி
நிலைமை சரியாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக நிர்வாக அதிகாரிகள், பணியாளர்கள், அறங்
காவலர்கள் ஆகியவர்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆனால்
இப்போது எடுத்துக்கொண்டால், நிதி நிலையைப் பொறுத்த
வரையில் பல கோயில்களில் நிதி நிலை பற்றாக்குறை இருந்து
வருகிறது. அந்தக் கோயில்களுக்கு நிறைய நிலங்கள், சொத்துக்
கள் இருந்தபோதிலும் அதை நிர்வாகம் செய்யக்கூடிய நிலைமை
இல்லை. காரணம், வரவேண்டிய பணத்தை சரியாக வசூலிப்
பதில்லை. அந்தக் கோவில்களுடைய நிலங்களின் குத்தகை
பாக்கிகளை கொடுப்பதிலும் அலட்சியம் காட்டுகிறார்கள். நான
இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த
ஊராட்சி நிலங்களை எல்லாம் ஏலம் விடுவதுபோல், இந்தக
கோயில்களின் நிலங்களையும், ஒரு வருஷ அல்லது மூன்று

வருஷம் என்று ஏலம் விடுவதில் ஆட்சேபணை இல்லை.
அந்தக் கோயில், மடம் ஆகியவற்றின் நிலங்களை ஆனால்
சொந்தமாக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். உழுபவனுக்கே
பற்றியும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதைப்
களின் நிலங்களை விற்று அந்தப் பணத்தை பிக்சட் டிபாசிட்டில்
போட்டுவிட்டால் அதில் இருந்துவரும் வட்டியைக் கோயில்
தாராளமாக அந்தச் சமய நிறுவனங்களை நன்றாக பேணி காக்க கொண்டு
முடியும்.

அதோடு, நிர்வாக அதிகாரிகள், அவர்களை நியமனம் செய்த
உடன் அவர்களுக்கு தனியாக நிர்வாக நலன் கருதி மூன்று மாதங்
களுக்காவது பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். நிர்வாக அதிகாரிகள் ஒழுங்காகவும், நேர்மையாகவும்
இருக்கவேண்டும். மேலும் அவர்கள் கட்டாயமாக பக்தியுள்ளவர்
களாகவும் இருக்கவேண்டும். அதைப் பார்த்து அந்த நிர்வாக
அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

அடுத்து, முக்கியமாக கோயில் பணியார்களுக்குப் பணிபாது
காப்பு இல்லை. பணி நிரந்தரம் இல்லை. அதிலே பல
கோயில் பணியார்களுக்கு சம்பளம் 6 மாதம் முதல் 2 வருஷம்
வரையில் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றுசொல்கிறார்கள்.
அதற்கு இந்த அரசு அறநிலையத்துறை ஆணையாளர்
அவர்களுக்குக் கடனாகக் கொடுத்தாவது இன்றைக்கு அந்தந்தக்
கோயில்களில் பணியாற்றுகின்ற 6,000 பணியார்களுக்கு சம்பளம்
கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-10)

மேலும் அவர்களுக்கு வருங்கால சேமிப்புத் திட்டம், குடும்ப
நலப் பாதுகாப்புத் திட்டம் எல்லாம் ஆண்டு வருமானம் 10
ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரக்கூடிய கோவில்களுக்கு மட்டும்
அமல் நடத்தப்போவதாக சொல்லப்படுகிறது. ஆனால் இங்கு
தமிழ்நாட்டில் எல்லா கோவில்களிலும் இது அமல் நடத்தப்பட
வில்லை. ஒருசில கோவில்களில் மட்டும்தான் அமல் நடத்தப்
படுகிறது. ஆகவே எல்லா கோவில்களில் உள்ளவர்களுக்கும்,
அரசு ஊழியர்களைப்போல் நினைத்து அரசு ஊழியர்களுக்கு
எந்தெந்த வகையில் சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அந்த சகல
வசதிகளும், சலுகைகளும் சம்பளம், படிகள், பணிப்பாதுகாப்பு
போன்ற என்னென்ன சலுகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்
கின்றதோ அதை எல்லாம் கோவில்களில் பணியாற்றக்கூடியவர்
களுக்கும் கொடுத்தால்தான் கோவில்களில் பணியாற்றக்
கூடியவர்களுக்கு உற்சாகமாக இருக்கும், அவர்கள் உற்சாகமாக
ஒழுங்காக பணியாற்ற முடியும்.

மேலும் இந்த சமய நிறுவனங்களை நான்கு வகைகளாக்
பிரித்து இருக்கிறோம். ஆண்டு வருமானம் 10 ஆயிரம் ரூபாய்க்கு
உட்பட்டது, 10 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம்
ரூபாய் வரை வருமானம் உள்ள நிறுவனங்கள், 50 ஆயிரம் ரூபாய்
முதல் 1 இலட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவை.
1 இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள நிறுவனங்கள் இப்படி
பிரித்திருக்கிறார்கள். இதில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டு
வருமானம் வரக்கூடிய நிறுவனங்களில் தமிழ் புலவர்களை
ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு புலவர் வீதம் 100 நிறுவனங்
களில் நியமிக்கப்போவதாக கூறப்பட்டிருக்கிறது. இது பாராட்டப்
படவேண்டிய விஷயம். அந்தப் புலவர்களுக்கு என்ன வேலை
என்றால், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்ற வேண்டும், தமிழ்
நெறிகளை பரப்பவேண்டும், நூல் நிலையங்களை ஏற்படுத்த
வேண்டும். அந்தந்த ஸ்தலத்தைப்பற்றி ஸ்தல புராணம் எழுத
வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைக்
கேட்டுக்கொள்கிறேன். 50 ஆயிரம் ரூபாய் முதல்
1 இலட்ச ரூபாய்க்குள் வருமானம் உள்ள நிறுவனங்களிலும்
தமிழ் புலவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அறங்காவலர்களை நியமிக்கும்போது, கட்சி சார்பில்லாமல்
எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடிய முறையில் நியமிக்க
வேண்டும். கட்சி சார்பற்ற முறையில் யார் யார் உண்மையில்
கடவுள் பக்தர்களாக இருக்கிறார்களோ, யார் ஒழுக்கம் உள்ளவர்
களாக இருக்கிறார்களோ, அவர்களைப் பார்த்து நியமனம் செய்ய
வேண்டும். அதற்காக இப்போது வட்டாரக்குழு 'ஏரியா
கமிட்டி' போடப்பட்டிருக்கிறது. அந்த ஏரியாக் கமிட்டியில்
பெரும்பாலும் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களைத்தான் போட்டி
ருக்கிறார்கள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த
ஏரியாக் கமிட்டிக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய
அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யக்கூடிய அதிகாரம் இருப்பதாக
சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பரிந்துரை செய்வதில் ஒரு
கோயிலுக்கு மூன்று அறங்காவலர்களை நியமனம் செய்ய
வேண்டுமென்றால் குறிப்பிட்டு 5 அல்லது 10 பேர்களை குறிப்
பிட்டு எழுதி அனுப்பினால் அதிலிருந்து 3 பேர்களை எடுக்கலாம்
என்பதற்காக இந்த கமிட்டி போடப்பட்டிருப்பதாக தெரிகிறது.
ஆனால் ஏரியா கமிட்டி எத்தனை பேர்களை பரிந்துரை செய்
கிறதோ அத்தனை பேர்களையும் அறங்காவலர்களாக நியமனம்
செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்று கூறப்படு
கிறது. அரசு இதை கவனிக்க வேண்டும். இந்த அறங்
காவலர் நியமனம் விஷயத்திலும் ஏரியாக் கமிட்டி விஷயத்திலும்
ஒழுக்கமாக இருப்பவர்களையும், நல்லவர்களாக இருப்பவர்களை
யும் பார்த்து போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால் நமது இந்து மதம் பழம்பெரும் மதம். நமது
நாடு மதசார்பற்ற நாடு. எல்லா மதங்களுக்கும் சம உரிமை

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்து மதத்திற்குத்தான்
இன்றைக்கு எல்லாவிதமான ஆபத்துக்களும் வந்துகொண்டு இருக்
சிறந்து என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்து
மதத்தை எடுத்துக்கொண்டால் ஒருவர் ஒரு கல்யாணத்திற்கு
மேல் கல்யாணம் பண்ண முடியாது. ஆனால் ஒருவர் முஸ்லீ
மாக இருந்தால் 4 கல்யாணம் வரை செய்யலாம். சட்டப்
படியே செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. அதற்காக
எல்லோரும் இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்
என்று நான் சொல்லவில்லை. அதுமாதிரி யாரும் ஒருவருடைய
மதத்தில், மத நம்பிக்கையில், இன்னொருவர் தலையிடக் கூடாது
என்று அரசியல் சட்டம் கூறுகிறது. இங்கு பெரியாரைப்பற்றி
பேசினார்கள். பெரியார் அவர்கள் பல நல்ல விஷயங்களை
இந்த நாட்டுக்கு சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்த
நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டவர். ஒரு பெரிய தலைவர்.

அவரது சிலை வைப்பதைப்பற்றிக்கூட ஒரு பிரச்னை இங்கே
ஏற்பட்டது. காஞ்சீபுரத்தில் சங்கராச்சாரியார் மடத்திற்குப்
பக்கத்திலே அந்த பெரியார் சிலை வைப்பதில் சில தகராறுகள்
எல்லாம் ஏற்பட்டு, நமது புரட்சித் தலைவர் முதல்வர் அவர்கள்
கூட அங்கே வைப்பதற்கு அனுமதி அளித்திருப்பதாக, அப்படி
வைக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டதாக (குறுக்கீடு) இல்லை,
அங்கே வைக்கத் தேவையில்லை என்றும், முடியாது என்றும்
சொல்லி விட்டார்கள். ஆனால், உண்மையிலேயே பெரியார்
அவர்கள் உயிரோடு இருந்திருப்பார்களானால், எந்தவிதமான
ஆட்சேபணையும் செய்திருக்கமாட்டார்கள் என்று நான் இந்த
நேரத்தில் கூறிக் கொள்கிறேன். அங்கே வைக்கக்கூடாது என்
பதற்கு .... (குறுக்கீடு) பெரியார் அவர்கள் உயிரோடு
இருந்திருந்தால், தன்னுடைய சிலையை வைக்க வேண்டாம்
என்றுதான் சொல்லியிருப்பார்கள். அவர்களுக்கு தனியாக ஒரு
மதிப்பும், மரியாதையும் இருந்தது. ஆகவே, பெரியார் அவர்
கள் அங்கே சிலையை வைப்பதற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.
அங்கே சிலை வைத்தால் பல இந்துக்களுடைய மனம் புண்படும்
என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், சுவாமிமலையில், சுவாமிநாத சுவாமி கோயில்
இருக்கிறது. அங்கே உயர்நிலைப்பள்ளிக்கு பிரார்த்தனைக்கூடம்
கட்டுவதற்கு ரூ. 25,000 வரையில் அனுமதி அளிக்க வேண்டும்
என்று கேட்டு ஆட்சியாளருக்கு வந்தது. அங்கே பிரார்த்தனைக்
கூடம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்
நான் ஒரு ஆண்டுக்கு முன்பு எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கி
றேன்.

மதிப்பிற்குரிய அறநிலைய ஆணையாளர் அவர்கள் சுவாமி
மலைக்கு வந்தபோது, நான் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன்.
ஆகவே, இந்த உயர்நிலைப்பள்ளியில் கண்டிப்பாக ஒரு பிரார்த்
தனைக்கூடம் அவசியம் தேவை என்பதை நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இந்த சுவாமிமலைக் கோவிலில் தொன்றுதொட்டு
யானை இருந்துவந்தது. ஏதோ ஒரு காரணத்திற்காக
யானையை விற்றுவிட்டார்கள். பழைய பண்பாட்டின்படி,
அங்கே ஒரு யானை அந்தக் கோயிலுக்கு வாங்கித் தருவதற்கு
ஏற்பாடு செய்யும்படி இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்
கிறேன். எல்லாப் பெரிய கோயில்களிலும், யானை இருப்பது
முக்கியமாகக் கருதப்படுகிறது. எனவே, சுவாமிமலையிலே
அந்த யானையை வாங்கித் தர இந்த அரசு ஆவன செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளிலும், அரிசனங்கள் குடியிருப்புப் பகுதி
களிலும் கிராமக் கோயில்கள் ஏற்படுத்துவதற்கு 1,000 2,000
ரூபாய் அரசு மானியமாக கொடுக்கின்றது என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. அதுமாதிரி இங்கே பல கோயில்கள் அரிசன
குடியிருப்புகளில் பாதி கட்டப்பட்டு, பூர்த்தியடையாமல், நிதி
நிலைமை இல்லாத காரணத்தால் அப்படியே கட்டப்படாமல்
இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு எல்லாம் 1,000, 2,000
என்று கொடுப்பதைவிட, அந்தக் கோயில்கள் கட்டுவதற்கு
எவ்வளவு தொகை செலவாகுமோ, அவ்வளவு தொகையையும்
கொடுக்கும்படி, அரசு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, பிரசித்தி பெற்ற மாங்காடு காமாட்சி அம்மன்
கோயில் இருக்கிறது. எல்லோருக்கும் தெரியும்.
இந்தக் கோயிலுக்கு பஸ் போக்குவரத்து வசதி சரியாக இல்லை,
மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே,
இந்த பஸ் போக்குவரத்தை அதிகப்படுத்த அவசியம் ஏற்பாடு
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5—20)

மேலும் அங்கு காலையில் இருந்து இரவு வரையில் வேலை
செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம்
மிகவும் குறைவு என்று கூறுகிறார்கள். அந்தச் சம்பளத்தையும்
அதிகரித்துக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

எந்த அரசாக இருந்தாலும் மத விஷயத்தில் தலையிடக் கூடாது என்று முன்பே சொன்னேன். சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கூட கலைஞர் கருணாநிதி அவர்கள் ஓடாத தேரை ஓட்டிக் காண்பித்தார் திருவாரூரில். மகாமகத்தின்போது மக்களுக்கு எவ்வளவு வசதி செய்து தர முடியுமோ அவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 19·16 கோடி ரூபாய் அளவுக்கு கோயில்களுக்கு வரவேண்டிய பணம் பாக்கி இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்தப் பணத்தையெல்லாம் வசூலிக்க உள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முன்பு இருந்தவர்கள் எந்தெந்தக் காரியத்திற்காக மடங்களுக்கும் கோயில்களுக்கும் சொத்துக்களை எழுதி வைத்தார்களோ அந்த நோக்கம் நன்கு நடைபெற வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் சவுந்தரராஜன் அவர்கள் பேசும்போது அறங்காவலர் குழுவுக்கு கட்சி சார்பில் போடப்படுவதாகச் சொன்னார்கள். கும்பகோணம் ஏரியா கமிட்டிக்கு போடுகிற போது கும்பகோணம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தியாகராஜ அய்யரைப் போட வேண்டுமென்று அமைச்சர் அவர்களே சொல்லி போட்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றும் கட்சி சார்பு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஏதோ ஓரிருவரைப் போட்டிருப்பார்கள். பெரும்பாலானவர்கள் கட்சி சார்பில் போடப்படுகிறார்கள்.

*திரு. ர. ஜெபமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சுந்தரராஜன் அவர்கள் ஆலயங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதே மாதிரி தேவஸ்வம் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கெல்லாம் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைக் கொடுப்பதாக அரசாங்கம் அறிவிக்கும் என்று கருதுகிறேன். அவர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதற்கான எல்லாக் காரியங்களையும் மாண்புமிகு வீரப்பன் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். காரணம் அவர்களுக்குக் கொஞ்சம் தெய்வ பக்தி உண்டு, அவர்களுடைய குடும்பத்தில் நிறைந்த தெய்வ பக்தி இருக்கிறது என்று நன்றாகத் தெரிந்தவன். ஆலயங்களைப் பற்றிக் கொஞ்சம் அக்கறை எடுத்து வருகிறார். அதிலே மெத்த மகிழ்ச்சி,

கன்னியாகுமரி அப்போது தமிழ்நாட்டோடு சேர்ந்தபோது 13 லட்சம் ரூபாய் வருஷத்திற்குக் கொடுத்தார்கள். அப்போ துள்ள விலைவாசியில் 13 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். இன்று ஆண்டவனுக்குக் கொஞ்சம் விலைவாசி ஏறவில்லையா? அந்தத் தொகையைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்கவேண்டும். அதையும் செய்வார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

தமிழகத்திலுள்ள ஆலயங்களுக்கு வரவேண்டிய பாக்கி 19 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 'சிவன் சொத்து குலநாசம்' என்று சொல்வார்கள். இதை ஜாக்கிரதையாகப் பரிசீலிக்கவேண்டும். அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஆளும் கட்சியாக இருக்கலாம். பக்தியில் வேறுபாடுகள் இருக்கலாம். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பாண்டியனைப் பற்றியும், சோழனைப்பற்றியும், சேரனைப்பற்றியும் சொல்லும் போது, அவர்கள் மோதிக் கொள்ளுகிறார்களோ, முட்டிக் கொள்கிறார்களோ, அவர்கள் வருமானத்தைத் தருகிறார்கள் என்று சொல்லும்போது மகிழ்ச்சியாக இருந்தது. ஏன் சேர, சோழ, பாண்டியர்கள் என்று பெயர் வைத்தார்கள். அவர்கள் எல்லாம் கடவுள் இல்லையென்று சொன்னவர்களா? கோயில்களை அழித்தவர்களா? அவர்கள் தங்களுக்காக அரண்மனையைக் கட்டி வைக்கவில்லை, ஆலயங்களைக் கட்டி வைத்தார்கள். நம்முடைய சரித்திரங்களைச் சொல்ல நமக்கு அவற்றை விட்டுச் சென்றார்கள். நம்முடைய கலையும், கலாசாரமும், வாழும் முறைகளும், வாழவேண்டிய முறைகளும்— சல்லால் அடித்து வைத்து விட்டுப் போனார்கள்—வருங்கால சந்ததியினர் அழிந்துவிடக்கூடாது என்று. அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக எத்தனையோ விதத்தில் சொத்துக்களைச் சேர்த்து வைத்தார்கள். நல்லவர்கள் தங்களுடைய ஆலயங்கள் நன்றாக இருக்கவேண்டுமென்று தங்களுடைய சொத்துக்களை எல்லாம் எழுதி வைத்தார்கள். அவர்கள் எல்லாம் ஒன்றும் அறிவற்றவர்கள் அல்ல. அது இந்த நாட்டின் பாரம்பரியம் தெய்வபக்தி நிறைந்த நாடு நம்முடைய தமிழ்நாடு. தேவ ஆலயங்களை நாம் மரியாதை செய்ய வேண்டும். அதற்குத்தான் கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று, தெய்வம் இகழேல் என்ற பொன்மொழிகளை குழந்தைகள் கற்றுக்கொள்ளவேண்டும், அது தான் அவர்களுக்கு அஸ்திவாரமாக அமையவேண்டுமென்று சுற்றுக் கொடுத்தார்கள். ஆகவே, நான் உங்களைப் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன், எந்த ஆலயத்திலேயும் இன்றைக்கு

நடக்கவேண்டிய காலக்கிரமமான பூஜைகள் நடக்காமல்
நின்றுவிடக்கூடாது. ஒரு முறை வைத்தீஸ்வரன்கோயில் மூடப்
பட்டு இருந்ததை நான் பார்த்தேன். அதற்குக் காரணம்
என்னவென்றால் அந்தக் கோயிலுக்குத் தரவேண்டிய பாக்கியை
வசூல்பண்ண முடியாமல் தவித்தபோது, நான்கு வருஷ பாக்கியை
நீங்கள் தரவேண்டியதில்லை என்று அரசு உத்திரவிட்டது.
கொடுக்கவேண்டியதில்லை என்று உத்திரவிட்டவுடனே,
பொதுவாக மக்கள் கடன் வாங்கும்போதும் தருகிறேன் என்று
சொல்லும்போதும் சந்தோஷமாகச் சொல்லுவார்கள், கொடுக்
கக்கூடாது என்று சொல்லுவதன் அடிப்படையில் நம்முடைய
தத்துவமே அடிபட்டுப்போகிறது. வாங்கியதைக் கொடுக்கக்
கூடாது என்று சொல்லவே கூடாது. மனிதனுடைய ஒழுக்
கத்திலே ஏதோ ஒரு பாதகம் ஏற்பட்டுவிட்டால் அது ஒரு
இடத்திலே மட்டும் சேதம் ஏற்படுத்தாது, எல்லா இடத்திற்கும்
அது பரவிவிடும். கடன் பெறுவது எவ்வளவு அவசியமோ அதைப்
போல் திருப்பிக் கொடுப்பதை வட்டியோடு கொடுக்க வேண்டு
மென்று சொல்லியிருக்கிறார்கள், ஆனால் வட்டி கூட வேண்டாம்,
பஞ்சாயத்துப் பண்ணி கொடுக்கச் சொல்லி இருக்கிறார்கள்,
பஞ்சாயத்துப் பண்ணி கொடுக்கச் சொல்லவேண்டியவர்களே
கூட கொடுக்கவேண்டாம் என்று சொன்னதால் தான் கோவில்
மூடப்பட்டு இருக்கிறது. கோவிலை மூடியதற்குக் காரணமாக
இருந்தவர்களையே அவன் மூடினான். நம்புகிறவர்களுக்கு
அவன் நடராசன், நம்பாதவர்களுக்கு அவன் யமராசன்.
அதை மாற்ற முடியாது. நம்முடைய முன்னோர்கள் எழுதி
வைத்ததை எல்லாம் நாம் மாற்றமுடியாது. நாம் பகுந்தறிவு
வாதிகளாக இருக்கலாம். அதனால் வருஷத்திற்கு 365
நாட்கள் என்பதை ஆயிரம் நாட்கள் என்று மாற்ற முடியுமா?
அதை எழுதிவைத்தவன் யார் என்று நாம் இது வரையிலே
ஆராய்ச்சி செய்ததுண்டா? உலகத்தைப் பற்றியெல்லாம்
என்னவெல்லாம் அப்போதே எழுதி வைத்தான். அவன் நானே
உலகத்தைப்பற்றி ஒழுங்காக எழுதினான். காய்களைச் சாப்
பிட்டுவிட்டு கனிகளைத் தின்றுகொண்டிருந்தவன் ஆண்டவ
னோடு பேசி உலகத்தின் எல்லா அண்டசராசரங்களை பற்றி
எழுதி வைத்தான். ஆலயத்திலே கற்களிலே செதுக்கி
வைத்தான். அதைத்தானே நாம் இன்றைக்கு மெபோட்டு
பார்க்கிறோம். அந்த ஆலயங்கள் சிதைவுறாமல் இருக்க நான்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அந்த ஆலயங்களுக்கு
வரவேண்டிய எந்த குத்தகை பாக்கியாக இருந்தாலும் கண்டிப்
பாக வசூலித்தாக வேண்டும். காரணம் அது எல்லோருக்கும்
பொதுவான காரியம். ஒரு தனிப்பட்டவன் காரியம் அல்ல.
அதை நீங்கள் தீர்க்கமாகச் செய்தால் தான் ஆலயங்களுக்கு
வருமானம் வரும். ஆலயங்களைப் பார்க்கத் தான் வடக்கே
யிருந்தும் மேற்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் வருகிறார்கள். ஏன்
கலைகளைக் கண்டேன், கடவுளைக் காணேன் என்று பாடுவதற்கு
வரவில்லை. கோயிலைக் கண்டேன். உயர்ந்த கோபுரங்களைக்
கண்டேன். கலையைக் கண்டேன். கடவுளைக் காணேன் என்று

சொன்னால் கல்லூரியைக் கண்டேன், நான் பேராசிரியரைக்
கண்டேன், நான் டிகிரி வாங்கவில்லை என்றால் என்ன பொருள்?
நான் படித்தால்தானே டிகிரி வாங்கமுடியும், கோயிலில்
கும்பிட்டால்தானே ஆண்டவன் எண்ணத்திலே வருவான்.
அதைப்பற்றி நான் உபதேசம் பண்ண வரவில்லை. ஆனால்
அவைகள் அழிக்கப்பட்டுவிடக்கூடாதே என்று தான் அங்கலாய்க்
கிறேன், ஆனால் அழியாது, வீரப்பனைப் போன்றவர்கள் வந்து
மாட்டிக் கொள்வார்கள், அழியாது அவைகளைக் காப்பார்கள்.
காரணம் என்ன என்றால நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டா
லும் அதிலே கடலிலே ஒரு முத்து கிடைப்பதைப்போல நான்
அதைச் செய்து காட்டுகிறேன் என்று இப்போது சேரிகள் பக்கம்,
ஏழைகள் வாழும் குடியிருப்புகள் பக்கம் எல்லாம் கோயில் வேண்டு
மென்று அவர்கள் கட்டிய கோயில்களுக்கு எல்லாம் முடியாத
நிலையில் இருப்பவைகளை முடித்துக்கொடுக்க பணம் கொடுக்
கிறேன் என்று சொன்னதை நினைத்தபொழுது எனக்கு உள்ளூற
மகிழ்ச்சி; அன்றைக்கு நான் நன்றாகத் தூங்கினேன். காரணம்
என்னவென்றால் நீங்களும் கோயிலுக்கு வேட்டு வைப்பீர்களோ
என்று எனக்கு ஒரு பயம். ஆனால் சில காரியத்தில் எனக்குக்
கொஞ்சம் பயம். நான் இந்த கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிற்
குள்ளே வருகிறபோது பெரிய போர்டு வைக்கப்பட்டிருக்
கிறது, கடவுளைக் கும்பிடாதே, கோயிலுக்குப் போகாதே
என்று. அதை சர்க்கார் எஸ்டேட்டிலே வைக்கலாமா? அவன்
எழுதிவைக்கிறான். கடவுளைக் கும்பிடுகிறவன் காட்டுமிராண்டி,
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்று. நான் கும்பிடுகிறவன்,
கடவுள் இல்லை என்று சொன்னவன் காட்டுமிராண்டி, கடவுள்
இல்லை என்று ஊரெல்லாம் எழுதிவைக்கிறவன் முட்டாள் என்று
எழுதி வைத்தால் என்ன டென்ஷன் ஆகும்? ஒன்றும் ஆகாது
என்று எப்படிச் சொல்லமுடியும்? நாம் எல்லாம் ஆண்கள்
தானே? ஆத்திரம் வராதா? நாங்கள் எல்லாம் அடக்கிக்
கொண்டிருக்கிறோம் என்றால் முடியாதவர்கள் என்ற அர்த்தம்
அல்ல. ஏதோ விளையாட்டுப் பிள்ளைகள் செய்கிறார்கள்
என்று நினைக்கலாம். ஆனால் அரசாங்க இடங்களை கொடுக்கக்
கூடாது. அரசாங்க இடங்களிலே அதை அனுமதிக்கக்கூடாது.
தனிப்பட்டவர்கள் இடங்களிலே வேண்டுமானால் அவர்கள்
வைக்கலாம். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அதை
எழுதி அங்கே வைத்தால் எங்களுக்கு எவ்வளவு துன்பம் வரும்?
நான் மட்டுமா? நான் இந்தத் தொப்பியை அணிகிறேன் என்—
றால் இதை ஆண்டவனைக் கும்பிடுகிற சின்னமாக அல்ல.
ஆனால் இஸ்லாமியர் ஒருவர் தொப்பி அணிகிறார் என்றால் அது
அவர்களின் தெய்வச் சின்னம். இப்போது நம்முடைய பெண்
அமைச்சர்கள் பொட்டு அணிகிறார்கள். அது அவர்களுடைய
மதச் சின்னம். அவர்கள் எல்லாம் காட்டுமிராண்டிகளா?
நாங்கள் எல்லாம் காட்டுமிராண்டிகளா? இப்படிப்பட்ட எண்
ணங்கள் வரக்கூடாது. என்னைக் காட்டுமிராண்டி என்றால்

(மாலை 5-30)

என்னோடு வளர்ந்த வீரப்பன் யார்? நான் சின்னக் காட்டு மிராண்டி. இவ்வளவுதானே வரும்? நான் என்னையே பழித்துக்கொள்வதா? எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பாடியவன் மறைந்துவிட்டான். ஜாதியைத் தூண்டிக்கொண்டிருந்த காலத்தில், அவரை யாரோ, ஐயரே என்று அழைத்துவிட்டானாம். உடனே அவர், பாப்பானை ஐயர் என்ற காலமும் போச்சு, வெள்ளைப் பரங்கியரைத் துரை என்ற காலமும் போச்சு, பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே, புராணனுக்கே அடிமை செய்வோம் என்று பாட வில்லையா? மனிதனுக்கு மனிதன்தான் அடிமையாக இருக்கக் கூடாதே, தவிர, சர்வேஸ்வரனுக்கு அடிமையாக இருக்கலாம். எந்த செகண்டில் என்ன ஆகும் என்று தெரியாது. என்னுடைய நண்பர், என்னோடு பழகியவர், அவரைப்பற்றி இன்று செய்தி வருகிறது, மோட்டார் சைக்கிளில் செல்லும்பொழுது இறந்துவிட்டார் என்று. கொடியோ, செடியோ, நடுக்காடோ, திண்ணையோ என்று எங்கே முடிவு வரும் என்று தெரியாது. ஆசைத்தம்பி அவர்கள் அந்தமானுக்குச் சென்றார். அவரது உயிரைப் பிடிக்க முடியவில்லை. அவரைக் காப்பாற்ற முடியவில்லை. எனவே, நாம் எல்லோரும் ஒரு முடிவுக்கு வர வேண்டும். தெய்வத்தை எதிர்க்கின்ற எந்தக் காரியத்தையும் பொது இடத்தில் நடத்தக்கூடாது. அதைப் பெரியாரே அனுமதிக்கமாட்டார். அவர் மனிதத் தன்மை உள்ளவர். அவரோடு நான் பழகியிருக்கிறேன். மேடையிலே பேசுவாரே தவிர தனிப்பட்ட முறையில் யாரையும் புண்படுத்த மாட்டார்.

பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தைப் பற்றி ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே விடுதலையில் எழுதினார். பிள்ளை யாரை உடைக்க வேண்டும், தோழர்களே, துணிந்து வரவேண் டும், ஆனால் ஒன்று, பிள்ளையாரை நீங்களே களிமண்ணால் செய்து கொண்டு வர வேண்டும். தனிப்பட்டவர்களிட மிருந்தோ அல்லது கோயில்களிலிருந்தோ நீங்கள் பிள்ளையாரை எடுத்து வரக்கூடாது, அந்தப் பக்கம் போகக்கூடாது, அப்படிப் போகின்றவர்களை எச்சரிக்கிறேன், அவர்கள் கருங்காலியாக இருப்பார்கள் என்று சொல்லியிருந்தார். அவர் கொண்டு வந்து பொத்தென்று போட்டார். புலியைத் திறந்து விடுவாரே தவிர, யாரையும் கடித்துக் குதற விடமாட்டார். அந்த ஒழுக்க நெறியைப் போதித்தார். காரணம், அவரிடம் மனிதப்பண்பு இருந்தது.

குன்றக்குடிக்குப் போனார், சாமியார் திருநீறு கொடுத்தார். பட் என்று இட்டுக்கொண்டார். நண்பர்கள் கேட்டார்க சொறு போட்டார், சாப்பிட்டேன், விபூதி கொடுத்தார்.

போட்டுக் கொண்டேன் என்று சொன்னார். பிரார்த்தனைக்குப் பாடலாமா என்று இருந்த நேரத்தில் அவரே எழுந்து நின்று பிரார்த்தனை பாடுங்கள் என்று சொல்லியதும் எல்லோருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. எனவே, அவர்கள் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட காரியங்களில் தலையிடுவது இல்லை.

காஞ்சிபுரத்தில் அவருக்குச் சிலை வைக்கப் போகிறார்களாம், எங்கே வைக்கப்போகிறார்கள் என்றால் ஆச்சார்ய சுவாமி இருக் கிறாரே அந்த இடத்திற்கு எதிரிலே வைக்கப்போகிறார்களாம். சிலை வைப்பது என்றால் யாருக்கு வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம். அப்படி வைத்துத்தான் இவ்வளவு கோயில்கள் வந்துவிட்டன. புதுக்கோயில்கள் இவை. அந்தக் கோயில்கள் வேறு. நாம் அதற்காக இன்னும் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம், எப்படி வந்தன என்று. இரண் டாயிரம் ஆண்டுகள் சென்றால், இந்தச் சிலைகள் எப்படி வந்தன என்று ஆராய்ச்சி செய்வார்கள். ஆங்காங்கே முக்குக்கு முக்கு சிலை ஆகிவிட்டிருக்கிறதே. ஆனால் எதை எங்கே வைப்பது என்று பார்க்க வேண்டும்.

நான் முதலமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன், அந்த இடத் தில் வைக்க அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் கள். அன்றைக்கு நான் இல்லை. இருந்தாலும் அதை அறிந்த பொழுது நான் நெக்குருகிவிட்டேன். நல்லதைச் செய்யும் பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படி யொரு போராட்டம் என்று முடிவு செய்தால், அந்தப் போராட் டத்தை எதிர்க்கக்கூடிய முதல் ஆளாக இருப்பவன் இந்த ஜெப மணி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு நாளும் நான் அதை அனுமதிக்க மாட்டேன்.

பெரியார் மீது அக்கறை இருக்கட்டும். ரஷியாவிலே லெனின் இருந்தார். அவர் அந்த நாட்டின் தலைவராக இருந்த வர், அவர் சோஷலிசத் தந்தை என்று மதிக்கப்பட்டவர். அவர் இறந்தவுடனே மக்கள் ஆசைப்பட்டதாலே ரஷியாவிலே இன்னும் இருக்க வேண்டும் என்று நினைத்ததாலே தைலம் பூசி வைத் திருக்கிறார்கள். அதைப்போலவே மாசே துங், அதைப்போலப் பெரியாருக்கும் தைலம் பூசியிருக்க வேண்டும்.

ஒருவரைப் போஸ்ட்மார்ட்டம் செய்வது என்றால் நான்கு காரணங்கள் இருக்க வேண்டும். ஒன்று அவர் எழுதி வைத்திருக்க வேண்டும், இரண்டாவது அவர் மனைவி, அவர் அப்படி நினைத் தார் என்று எழுதியிருக்க வேண்டும். அல்லது அவர் தற்கொலை செய்திருக்க வேண்டும். அல்லது ஒருவரால் கொலை செய்யப் பட்டிருக்க வேண்டும். இந்த நான்கும் நடக்காமல் எப்படி அறுத்தார்கள்? இதற்கு நீதி விசாரணை வேண்டாமா?

இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்தும்,மேதைகள் என்று சொல்லிக்
கொண்டிருந்தும், அவர் உடலை வேலூரிலேயிருந்து கொண்டு
வந்து இந்த ஜெனரல் ஆஸ்பிடலில் ஐஸ் ரூமிலே வைத்திருக்கக்
கூடாதா ? அறுத்து எடுத்து இருப்பதை அறிந்த நான் என்ன
பாவம் என்று நினைத்தேன். இதோ இருதயம், இதோ ஈரல்,
இதோ குடல் என்று சொல்வதைப் பார்க்கும்பொழுது, அய்யோ
பாவம், இப்படிப்பட்ட பெரியாருக்கு இந்தக் கதியா என்றுதான்
நினைக்கத் தோன்றுகிறது. இவர்கள் சிலை வைக்கிறார்கள்
என்றால் எப்படி இருக்கும் என்று அல்லவா மனம் நினைக்கிறது.
புண்படாத மனிதர். யாரையும் புண்பட பேசமாட்டார்,
தனிப்பட்ட முறையிலே, மேடையில் பேசுவார். அதைப்பற்றி
நாங்களும் கவலைப்படவில்லை, மற்றவர்களும் கவலைப்
படுவதில்லை. 'பிராமணனை ஏன் பேசுகிறீர்கள் ? மற்ற
ஜாதிக்காரர்கள்தானே அரிவாள், கத்தி தூக்கிக்கொண்டு
வருகிறார்கள்.'பிராமணன் வீட்டிலே,அரிவாள்மனை தவிர கத்தி
இருக்காதே' என்றுபெரியாரைக் கேட்டோம். 'அதனாலேதான்
அவனைப் பேசுகிறோம்' என்றார். ''மற்றவர்களைப் பேசினால்,
அன்றைக்கே அரிவாளோடு வருவான். அதுதான் முதல் கூட்ட
மாகவும் இருக்கும், கடைசிக் கூட்டமாகவும் இருக்கும்''
ஏன்பார். 'நீங்கள் இந்துக்களைத்தானே திட்டுகிறீர்கள்.
மற்றவர்களைத் திட்டுவதில்லையே' என்று கேட்டோம்.
அதற்கு அவர் சொன்னார், 'அதனாலேதான் அவனைத்
திட்டுகிறேன். மற்றவர்களைத் திட்டினால் எப்படி
நடமாடவிடுவான் ? அவன்தானே எல்லாம் ஒத்துப் போவான்'
என்பார். அதுதானே, இந்து மதம், இந்து வேதம், இந்து
தர்மம், யாருக்கும் இன்னல் செய்வதில்லையே ?

'இன்னாசெய் தாரை ஒருத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

எந்த உலகத்திலும் சொன்னான், அய்யா? இங்கே வள்ளுவன்
சொன்னான், இயேசு சொன்னான், அடுத்து காந்தி சொன்
னான். நாம் அதைப் புரிந்துகொண்டோம். ஆனால், நாம்
அந்தப் பாரம்பரியத்தைக் காப்பதற்காகத்தான் இங்கே,
சோழன் பெயர், பாண்டியன் பெயர், சேரன் பெயர், பல்லவன்
பெயர், இந்தப் பெயர்களை எல்லாம் ஏன் வைத்திருக்கிறீர்கள்?
எதற்காக. நான் கேட்கிறேன். உங்களையெல்லாம் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன், என்ன செய்தார்கள் என்று வைத்திருக்
கிறீர்கள்? வேறு பெயர்களை வைத்துக்கொள்ளுங்கள்,அது உங்கள்
கட்சி. வ. உ. சிதம்பரம் பெயரை வைத்தீர்களா ? பாரதியார்
பெயரை வைத்தீர்களா ? சத்தியமூர்த்தி பெயரை
வைத்தீர்களா ? திரு.வி.க. பெயரை வைத்தீர்களா ? அதை
நீங்கள் வைக்க மாட்டீர்கள். அவர்கள் பெயரை ஏன்

வைப்பீர்கள் ? அவர்கள் தேசியவாதிகள், சுதந்திரம் வாங்கித்
தந்தவர்கள். நீங்கள் சுதந்திரம் வேண்டாம் என்றீர்கள்,
நீங்கள் எப்படி அவர்கள் பெயரை வைப்பீர்கள் ? (ஓர் குரல் :
கட்டபொம்மன் பெயர் வைக்கப்பட்டது) அதை நீங்கள் பேசக்
கூடாது. அது இந்தச் சபையிலே ஒரு முறை பேசப்பட்டு, சங்
கடப்பட்டது. நீங்கள் எந்தப் பெயரை வேண்டுமானாலும்
வைத்துக் கொள்ளுங்கள். கல், மண், முள் என்று வைத்துக்
கொள்ளுங்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். நமக்குத் தெரிய
வேண்டியது—1, 2 என்று போலிசுக்குப் பெயர்கள் வைக்கப்
பட்டிருக்கிறது — ஆள் தெரிய வேண்டுமென்பதற்காக நீங்கள்
பெயர் வைத்துக்கொள்ளுங்கள். பாண்டியன், சேரன், சோழன்
என்ற பெயர்களை ஏன் வைத்தீர்கள் ? திராவிட முன்னேற்றக்
கழகத்தை உண்டுபண்ணினார்கள் என்றா வைத்தீர்கள்.
அந்தப் பெயர்களை எதற்காக வைக்கிறீர்கள்? ஆலயங்களைக்
கட்டி, இந்த நாட்டு மக்களுக்கு அளித்துவிட்டுச் சென்றார்கள்.
ஆலயங்கள் இல்லையென்றால்— அந்தக் காலத்தில், கோர்ட்டு
கிடையாது, கோயில்தானே. 'சத்தியம் பண்ணப்பா' என்பான்.
'நான் சத்தியம் பண்ணமாட்டேன், வாங்கியது உண்மைதான்,
நான் செய்தது தப்புதான்,' என்பான். இவன். ஏனென்றால்,
அந்த ஆலயங்களே நீதிபதியாக இருந்தன. காரணம் என்ன
வென்றால், நீதிமன்றமாக இருந்தது. அப்படித்தானே நீதி
வழுவாது, எல்லா அரசர்களும் வாழ்ந்தார்கள். இப்பொழுது,
இந்த அமைச்சர்களுக்குப் பயம் ஏன் ? வீட்டிலே போன
உடனே, பெண்களே சொல்லிவிடுவார்கள், தப்பு பண்ணி
விடாதீர்கள், கடவுள் இல்லையென்று வெளியே பேசுங்கள்,
ஒன்றும் தப்பு பண்ணிவிடாதீர்கள், என்று. ஆமாம். நான்
கூட ஒரு கல்யாண வீட்டிலே மாட்டிக்கொண்டேன். 'தாலி
கட்டக்கூடாது' என்று பேசினார் ஒரு ஆள். 'உங்கள்
வீட்டிலே கட்டி இருக்கிறீர்களா' என்று கேட்டேன். 'அய்யா,
கட்டாவிட்டால் என் வீட்டுக்காரி சோறு போட மாட்டாளே'
என்று சொன்னான், ஆகவே, அது வேறு, நம்முடைய பாரம்
பரியம் வேறு. இந்து தர்மம் உலகத்திலே உயர்ந்த தர்மம்.
இது யாரையும் எங்கள் தர்மத்திற்கு வா என்று அழைப்ப
தில்லை. காரணம் என்னவென்றால், இது பலாப்பழம்.
பழுத்தால் வருவார்கள். இப்பொழுது, ஐரோப்பிய நாட்டில்
உள்ளவர்கள் எல்லாம் ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். இப்படி
ஒரு கைவல்யமா ? இப்படி ஒரு திருக்குறளா ? இப்படி ஒரு
கீதையா ? இப்பேர்பட்ட இந்துவா, கை அடக்கத்திற்குள்ளே
கடவுளைக் காட்டியிருக்கிறானே, சந்திரகிரணம், சூரிய
கிரணம் பிடிக்கும் என்று இந்த நாட்டில் விஞ்ஞானத்தை
எழுதியிருக்கிறானே ? சூரியனை பூமி எத்தனை தடவை
சுற்றும் என்று எழுதியிருக்கிறானே, இது எப்படி சுற்றும் என்று
இதையெல்லாம் அவர்கள் மெய்மறந்து கண்டுகொண்டிருக்
கிறார்கள். சித்தர்களைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும்,
நாயன்மார்களைப் பற்றியும், சமயக் குரவர்களைப்
பற்றியும் அவர்கள் நினைத்து, நினைத்து, உள்ளம் உருகு

கிறார்கள். காரணம் என்னவென்றால், நமக்குத் தெரிய
வில்லை. ஆகையினாலே, அந்த அருமை, பெருமையெல்லாம்
ஆழ்ந்து அறிந்திருக்கிற நல்ல அறிவாளிகளையெல்லாம் இவர்கள்
இப்பொழுது கோவில்களிலே போடுவதாகச் சொல்கிறார்கள்.
அவர்கள் அந்த நல்லவர்களுடைய எல்லா திவ்விய சரித்திரங்
களையும் திவ்விய நூல்களாக வெளியிட்டு எல்லா மொழிகளிலும்
கொடுத்தால், உலகத்திற்கு உய்யும் வழியும் கிடைக்கும்.
உண்பதற்கும் உறங்குவதற்கும், பிள்ளைகளைப் பெறுவதற்கும்
ஒருவன் பிறக்கவில்லை. அப்படியானால், அதை ஆடு
களும், மாடுகளும் செய்கின்றன. அதற்கு, எதற்காக நமக்கு
வேட்டி, சட்டை, செருப்பு? அது இலட்சியவாதியின் காரிய
மல்ல. நாம் பிறந்தது எதற்கு என்பது அப்பொழுது தான்
புரியும். ஆகையினாலே, தெய்வம் தொழுவது சாலவும் நன்று,
விதைப் பேணிக் காப்பது, நன்று, வீரப்பன் அதைச் செய்வார்,
செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெற்றுக் கொள்கிறேன்,
ஜெய் ஹிந்த்.

(மாலை 5-40)

*திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மானியத்தில் பேசு
வதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக முதற்கண்
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிப்புத்தூரிலே உள்ள கோயில், பாடல் பெற்ற
ஸ்தலம், வரலாற்று சிறப்பு மிக்க தொன்மையான இடம்.
திருவனந்தபுரத்தைப் போன்ற 3 நிலைகளில் கண்டு
களிக்கக்கூடிய விஷ்ணுவின் சைன திருக்கோலம்
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழிலே சிறப்புபெற்ற திருப்
பாவை உருவான இடம். சூடிக்கொடுத்த சுடர்கொடி பிறந்ததும்
சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற இடம்.
ஆனால் அந்த ஆலயம் மிகவும் பழுதுபட்டு கிடக்கிறது. அதை
யெல்லாம் சீர்திருத்தி பழுது பார்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த ராஜகோபுரம்
அங்கே இருக்கிறது. கடந்த காலங்களில் அது விஷ்ணுகோயில்
என்ற கருத்து இருந்தது. அதிகாரிகள் பழுது பார்க்க
(திருப்பணிக்கு) குறிப்பு அனுப்பவில்லை. இந்த ஆட்சி வந்த
பிறகு அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டு ராஜ
கோபுரத்தை பழுது பார்ப்பதற்கு வேலை செய்வதற்கான முயற்சி
களில் இப்போதுதான் முனைந்திருக்கிறார்கள். அந்த ராஜ

கோபுரம் கீழே விழுந்துவிடும் தருவாயில் இருக்கிறது; அது விழுந்து
விடுமோ என்ற அச்சத்தில் அங்கே ஊரில் உள்ள பிராமணர்
களும் மற்றவர்களும் ஊரைவிட்டே வெளியேறிவிடக்கூடிய நிலை
மையில் இருந்துக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக சுற்று
லாத்துறை அமைச்சர் ஆர். எம். வி. அவர்களிடம் எடுத்துச்
சொன்னேன். அதற்கு அவர் எந்தச் சமயத்தைச் சேர்ந்த
தாக இருந்தாலும் சரி நமக்கு ஒன்றுதான். ஒன்றே குலம் ஒரு
வனே தெய்வம் நமக்கு என்று சொன்னார். திருவில்லிபுத்தூர்
கோவிலுக்கும், மற்றும் திருவரங்கம், சிதம்பரம் கோவிலுக்கும்
சேர்த்து இம்மானியத்தில் 17 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்
டிருப்பதாக அரசு தரப்பில் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள்
என்னிடம் சொன்னார்கள். அதனால் இந்த மானியத்தை நான்
மனதார வரவேற்கிறேன்.

அடுத்து திருவில்லிபுத்தூரில் தேர் ஒன்று இருக்கிறது. அது
திருவாரூர் தேர் போன்று பெரியது, புகழ் பெற்றது. அது
இப்போது கவனிப்பாரற்று மிகவும் சீர் குலைந்த நிலைமையில்
இருக்கிறது. அதை சீரமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். சமீபத்தில் தேரில் தீப் பிடித்து பொதுமக்களும்,
தீயணைப்பாளரும் அணைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், நமது அமைச்சர் அவர்கள் கூட
அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். புதுக்கோட்டை
மாவட்டத்தில் அறந்தாங்கியில் ஆவுடையார் கோயில் ஒன்று
இருக்கிறது. இந்த ஆவுடையார் கோயிலில் பத்து வருஷமாக
திருவிழாக்களே நடைபெறவில்லை. என்ன காரணம் என்று
தெரியவில்லை. ஆனால் நமது அமைச்சர் அவர்கள் அங்கே
சென்றிருந்தபோது, அதை நடத்த முன் வந்ததால் நமது
அமைச்சர் அவர்களை அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாராட்டு
கிறார்கள். அது மட்டும் அல்லாமல் 25 ஆண்டு காலமாக
அங்கு தேர்ஓடாமல் நின்றுகொண்டிருக்கிறது. அதற்கும் காரணம்
என்னவென்றே தெரியவில்லை. ஆனால் எல்லாக் கோயில்
களிலும் கடவுள் விக்கிரகங்களை வைத்துத்தான் தேர் இழுத்துச்
செல்வார்கள். ஆனால் இந்தக் கோவிலிலே தமிழுக்கு முத
லிடம் கொடுத்து, திருவாசகம் பாடிய மாணிக்க வாசகரை வைத்
துத்தான் தேர் இழுப்பார்கள். அமைச்சர் கூட சொல்லிவிட
லாம்; அந்தக் கோவில் திருவாடுதுறை ஆதினத்திற்கு சொந்த
மானது, நாம் எப்படி அதில் தலையிட முடியும் என்று கேட்கலாம்.
ஆனால் அமைச்சர் அவர்கள் மனது வைத்து ஆதீனக்காரர்களை
சந்தித்து அவர்களை கம்பெல் பண்ணி அங்கே தேரை மீண்டும்
ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏற்பாடு
செய்தால், தமிழுக்காக, தமிழ் இனமக்களுக்காக தேர் இழுத்
தார் என்ற பெருமை அமைச்சர் அவர்கள் பெறுவார்கள். அரசுக்
கும் அந்தப் பெருமை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

[திரு. இரா. தாமரைக்கனி] 1979 ஏப்ரல் 17

அடுத்து திருவில்லிப்புத்தூருக்கே வருகிறேன். அந்த திரு
வில்லிபுத்தூரில் பெரிய தெப்பக்குளம் இருக்கிறது. இது மதுரை
வண்டியூர் தெப்பக்குளம் மாதிரி உள்ளது, அங்கே 'போட்' விட
ஏற்பாடு செய்தால், கோயிலுக்கும் நல்ல வருமானம் ஏற்படும்.
வெளிநாட்டு பயணிகளுக்கும், அங்குள்ள மக்களுக்கும் நல்ல
பொழுதுபோக்கு அம்சமாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து நிலப்பிரச்சினை. கோயிலுக்கு சம்பந்தமான நிலங்
கள் நிறைய இருக்கின்றன. பல நிலங்கள் ஒரு சிலரால் மறைக்
கப்பட்டிருக்கின்றன. அதற்காக தமிழகம் தழுவிய ஒரு குழுவை
ஏற்படுத்தி யார், யார் எந்த எந்த இடத்தில் கோவில் நிலங்களை
மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று கண்டு பிடித்து அவைகளை
திருப்பவும் கோவிலுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, பெரிய பெரிய
அரசியல் வாதிகள் எல்லாம் தங்களுடைய மனைவி, மகன்
களுடைய பெயரில் கோயில் நிலங்களை குத்தகை எடுத்துக்
கொண்டு அதைக் கொடுப்பது கிடையாது. அமைச்சர் அவர்கள்
பதில் சொல்லும்போது, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்
போகிறார்கள் அல்லது எடுத்திருக்கிறார்கள் என்று கூற வேண்
டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

நமது சமய நிலையங்கள் 7 கல்லூரிகளை நடத்துவதாக
இந்த மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது மிகவும்
மகிழ்ச்சியைத் தருகிறது. திருவில்லிபுத்தூர் பாடல் பெற்ற
சிறப்பு பெற்ற ஸ்தலம், தமிழிலே மிகச் சிறந்த திருப்பாவை
பாடிய ஆண்டாள் பிறந்த ஊர். நம் தமிழ்நாட்டுப் பெண்கள்
ஆண்டாள் திருப்பாவையை மிகவும் விரும்பி படிக்கிறார்கள்.
ஆகவே அந்த ஆண்டாள் பெயரால் ஒரு தொழிற் கல்லூரியை
ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்லூரி
கட்டுவதற்கு, கோயில் நிலங்கள் எக்கச்சக்கமாக இருக்கின்றன.
இப்படிச் செய்தால் பெண் குலம் உங்களை பாராட்டிக்
கொண்டே இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17] [திரு. இரா. தாமரைக்கனி]

இந்த திருவில்லிப்புத்தூர் கோயில் கோபுரத்தை மாடலாகக்
கொண்டு தான் நம்முடைய அரசு முத்திரைச் சின்னம் உருவாக்கப்
பட்டு உள்ளது. ஆகவே, இது தான் அரசு முத்திரைச் சின்னத்
திற்கு எடுக்கப்பட்ட கோபுரம் என்று கல்வெட்டு வைக்க வேண்
டும். இது சம்பந்தமாக கேள்வி கூட கேட்டு இருக்கிறேன்.
இரண்டு வருஷமாகிறது. சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டில்
இருந்து பதில் வரவில்லை. அமைச்சர் அவர்கள் நேரடியாக
கவனம் செலுத்தி, கல்வெட்டை அந்த கோபுரத்தில் போட
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

36 கருணை இல்லங்கள் கோயில் நிதியில் இருந்து நடத்தி
வருவதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.
இது வரவேற்கத்தக்கது. திருவில்லிப்புத்தூரில் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சி காலத்தில் கருணை இல்லம் ஆரம்பிக்கப்
பட்டது. அந்தத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு டாக்டர்
கலைஞர் அவர்கள் வருவதாக அறிவிப்பு இருந்தது. அந்த
கருணை இல்லத்திற்கு மாணவர்களைச் சேர்க்க முடியவில்லை.
ஆகவே, தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்த பிள்ளை
களைப் பிடித்துக் கொண்டு வந்து அன்றைக்கு அந்தக் கருணை
இல்லம் திறக்கப்பட்டது. அவர் திறந்து வைத்து விட்டுப் போய்
விட்டார். பின்னர் ஒரு மாதத்திற்கு பிறகு அது குளோஸ் ஆகி
விட்டது. ஏன் என்று கேட்டால் கலைஞர் திருவில்லிப்
புத்தூருக்கு வருகிறார், அரசு நிகழ்ச்சி ஒன்று கூட கிடையாது,
அரசு நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்தோம் என்று சொன்னார்கள்.
இது சம்பந்தமாக பெரிய தவறுகள் நடந்து இருக்கின்றன. அர
சுக்கு ஏகப்பட்ட செலவு, பணம் வீணாக்கப்பட்டு இருக்கிறது.
ஆகவே, இது சம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டும்.
மீண்டும் கருணை இல்லம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, திருவில்லிப்புத்தூரில் உள்ள ஸ்ரீ வைத்தியநாதசுவாமி
கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் ராஜபாளையத்தில் 37.50
ஏக்கர் இருப்பதாகவும், அதனுடைய மதிப்பு 10 லட்சம்
பெறும் என்றும், அதில் உள்ள சங்கம சொத்துக்கள் குறிப்பாக
புளியமரம் அதிக அளவில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.
அதனை ராஜபாளையத்தில் உள்ள ஒருவர்** அவரது
அறக்கட்டளைக்கு ரூ. 60,000-க்கு வாங்கிவிட்டார் என்
றும், அதில் இருந்த புளிய மரங்களை 3 லட்ச ரூபாய்க்கு விற்று
விட்டார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் சொல்வார்;
எனக்கு ஜனாதிபதி சொந்தக்காரர், அமைச்சர் கூடப்படித்தவர்,
எஸ். பி., கலெக்டர் என்று இப்படிப்பட்ட பெரிய அதிகாரிகள்
எல்லாம் எனக்கு வேண்டியவர்கள் என்று சொல்லும் பெரிய

தலைவரின் ஆணைக்கிணங்க
** மாண்புமிகு பேரவைத் துணைத்
மாற்றப்பெற்றது.

மனிதர் அவர். அங்கே இப்படிப்பட்ட தவறுகள் நடந்து இருக்கின்றன. அந்த நிலங்களை வைத்து ஒரு அறக்கட்டளை அவர் நடத்துகிறார்கள். அரசு அதை எடுத்துக் கொண்டு, ஏழை எளியவர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் அறக் கட்டளை என்று வைத்துக் கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுவதற்கு பணக்காரர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பு என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மானியக்கோரிக்கையில் விலங்குகள், பறவைகள், பலித் தடைச்சட்டம், தமிழ்நாடு 1950-ம் ஆண்டு விலங்குகள், பறவைகள், பலித்தடைச் சட்டத்தின் கீழ் இந்து கோவில்களுக்கு வெளியேயும், உள்ளேயும் பலி இடுவதை தடை செய்யும் அளவில் மானியக்கோரிக்கையில் அதனைச் செயல்படுத்தும் வகையில் செயற்குறிப்பு உள்ளதால் வரவேற்கிறேன். இன்றும் குல தெய்வங்கள் என்று சொல்லிக்கொண்டு, கிராமப் புறங்களில் மாரி, காளி, இருணப்ப சாமி என்று சொல்லி அங்கே பலியிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வத்ராயிருப்பு அருகே உள்ள சதுரிகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலில் வருஷா வருஷம் ஆடி அமாவசைக்கு ஆயிரக்கணக்கில் விலங்குகளை பலியிடுகின்றனர். இதைத் தடுக்க வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து இக்கோவிலுக்கு மக்கள் வத்ராயிருப்பு வழியாக வருகின்றனர். வத்ராயிருப்பு யூனியனில் இருந்து கோவில் அடிவாரம் வரையில் ரோடு போட்டு உள்ளனர். மீதி 5 கிலோ மீட்டர் மலை மீது அரசு ரோடு போட வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன். இப்போது ரோடுஇல்லாததால் பக்தர்கள் ஒத்தையடிப் பாதையில் தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மலைமேல் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டும். பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு ஆலயங்களில் தமிழ் நெறிகளையும், தமிழ் இலக்கிய உணர்வுகளையும் வளர்ப்பதற்காக சுமார் 1 லட்ச ரூபாய் அளவிற்கு மேற்பட்டு வருவாய் உள்ள கோயில்களில் வேலை வாய்ப்பு அற்ற தமிழ் புலவர்களை 100 தமிழ் புலவர்களை நியமிக்க ஆணை பிறப்பித்துள்ளதாக இந்த மானியக்கோரிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. அதற்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் கோவில் திருவிழா நடக்கவில்லை. ஏன் என்று கேட்டால் ஒரு சிங்களவர் அந்தக் கோவிலில் அறங்காவலராக இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள ஒருவரை அறங்காவலராக அந்தக் கோயிலுக்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த கோயிலுக்குச் சொந்தமான 1800 ஏக்கர் உப்பளங்களை 50 வருடத்திற்கு முன்னால் மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டது. அதை மத்திய அரசு தனியார்க்கு லீசுக்கு விட்டு இருக்கிறார்கள். அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். இதனால் அந்த கோயிலுக்கு வருடத்திற்கு ரூ. 1,800 தான் வருமானம் வருகிறது. ஆகவே, பழைய படி மத்திய அரசாங்கத்தில் இருந்து அந்த உப்பளங்களை கோவிலுக்கு பெற்று தந்தால் வருஷத்திற்கு 2 லட்சம் ரூபாய் வருமானம் வரும். அதனைச் செய்தால் அங்கே திருவிழா நடத்தவும் வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

சமயபுரம் மாரியம்மன் கோயில் இருக்கிறது. இந்த சமயபுரம் மாரியம்மன் கோயிலில் நிறைய தங்கம் இருக்கிறது. அங்கே ஒரு தங்கத் தேர் செய்து கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் செயற்குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார்கள். ஆனால் இங்கே உள்ள அறநிலையத்துறை அதிகாரிகள் இன்னும் அதைப் 'பெண்டிங்கில்' வைத்திருக்கிறார்கள். ஆகவே சமயபுரம் மாரியம்மன் கோயிலிலே தங்கத் தேர் உருள வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து ஆண்டாள் கோவிலுக்குச் சொந்தமான பனை மரங்களை எல்லாம் அதாவது மம்சாபுரத்திற்கு அருகே இருக்கிற கோயில் இடங்களில் உள்ள பனை மரங்களையெல்லாம் பனை ஏறும் தொழிலாளர்கள் அரசாங்கத்திடமிருந்து ஊசிப்பட்டாவுக்கு எடுத்து குத்தகை ஒழுங்காக கட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த பனைப் பொருட்களை சிலர் திருடிக் கொண்டு போய்விடுகிறார்கள். இது சம்பந்தமாக அந்தக் கோயிலின் ஈ. ஓ. அவர்கள் கூட போலீசுக்கு பெட்டிஷன் கொடுத்தார்கள். ஆனால் அங்கே எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மனிதர் அவர். அங்கே இப்படிப்பட்ட தவறுகள் நடந்து இருக்
கின்றன. அந்த நிலங்களை வைத்து ஒரு அறக்கட்டளை அவர்
நடத்துகிறார்கள். அரசு அதை எடுத்துக் கொண்டு, ஏழை
எளியவர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் அறக்
கட்டளை என்று வைத்துக் கொண்டு அரசாங்கத்தை
ஏமாற்றுவதற்கு பணக்காரர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பு
என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மானியக்கோரிக்கையில் விலங்குகள், பறவைகள், பலித்
தடைச்சட்டம், தமிழ்நாடு 1950-ம் ஆண்டு விலங்குகள், பறவை
கள், பலித்தடைச் சட்டத்தின் கீழ் இந்து கோவில்களுக்கு
வெளியேயும், உள்ளேயும் பலி இடுவதை தடை செய்யும் அளவில்
மானியக்கோரிக்கையில் அதனைச் செயல்படுத்தும் வகை
யில் செயற்குறிப்பு உள்ளதால் வரவேற்கிறேன். இன்றும்
குல தெய்வங்கள் என்று சொல்லிக்கொண்டு, கிராமப் புறங்களில்
மாரி, காளி, இருணப்ப சாமி என்று சொல்லி அங்கே பலியிட்டுக்
கொண்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் தடுத்து நிறுத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வத்ராயிருப்பு அருகே
உள்ள சதுரிகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலில் வருஷா வருஷம்
ஆடி அமாவசைக்கு ஆயிரக்கணக்கில் விலங்குகளை பலியிடுகின்ற
னர். இதைத் தடுக்க வேண்டும் என்று அமைச்சரவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து இக்கோவிலுக்கு மக்கள்
வத்ராயிருப்பு வழியாக வருகின்றனர். வத்ராயிருப்பு யூனியனில்
இருந்து கோவில் அடிவாரம் வரையில் ரோடு போட்டு உள்ளனர்.
மீதி 5 கிலோ மீட்டர் மலை மீது அரசு ரோடு போட வேண்டும்
எனக்கேட்டுக்கொள்கிறேன். இப்போது ரோடு இல்லாததால் பக்தர்
கள் ஒத்தையடிப் பாதையில் தான் செல்ல வேண்டியிருக்கிறது'
ஆகவே, மலைமேல் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டும். பக்தர்
களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த அரசு ஆலயங்களில் தமிழ் நெறிகளையும், தமிழ் இலக்
கிய உணர்வுகளையும் வளர்ப்பதற்காக சுமார் 1 லட்ச ரூபாய்
அளவிற்கு மேற்பட்டு வருவாய் உள்ள கோயில்களில் வேலை
வாய்ப்பு அற்ற தமிழ் புலவர்களை 100 தமிழ் புலவர்களை
நியமிக்க ஆணை பிறப்பித்துள்ளதாக இந்த மானியக்கோரிக்
கையில் கூறப்பட்டு இருக்கிறது. அதற்கு என் பாராட்டுக்
களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் கோவில் திருவிழா
நடக்கவில்லை. ஏன் என்று கேட்டால் ஒரு சிங்களவர் அந்தக்
கோவிலில் அறங்காவலராக இருக்கிறார் என்று சொல்லப்படு
கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள ஒருவரை அறங்காவல
ராக அந்தக் கோயிலுக்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அந்த கோயிலுக்குச் சொந்தமான 1800 ஏக்கர் உப்பளங்
களை 50 வருடத்திற்கு முன்னால் மத்திய சர்க்கார் எடுத்துக்
கொண்டது. அதை மத்திய அரசு தனியார்க்கு லீசுக்கு
விட்டு இருக்கிறார்கள். அவர்கள் லாபம் சம்பாதிக்
கிறார்கள். இதனால் அந்த கோயிலுக்கு வருடத்திற்கு ரூ.
1,800 தான் வருமானம் வருகிறது. ஆகவே, பழைய படி
மத்திய அரசாங்கத்தில் இருந்து அந்த உப்பளங்களை கோவி
லுக்கு பெற்று தந்தால் வருஷத்திற்கு 2 லட்சம் ரூபாய் வரு
மானம் வரும். அதனைச் செய்தால் அங்கே திருவிழா நடத்தவும்
வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

சமயபுரம் மாரியம்மன் கோயில் இருக்கிறது. இந்த சமயபுரம்
மாரியம்மன் கோயிலில் நிறைய தங்கம் இருக்கிறது. அங்கே ஒரு
தங்கத் தேர் செய்து கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள்
செயற்குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார்கள். ஆனால் இங்கே
உள்ள அறநிலையத்துறை அதிகாரிகள் இன்னும் அதைப் 'பெண்
டிங்கில்' வைத்திருக்கிறார்கள். ஆகவே சமயபுரம் மாரியம்மன்
கோயிலிலே தங்கத் தேர் உருள வேண்டிய ஏற்
பாடுகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டும் என்று
இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து ஆண்டாள் கோவிலுக்குச் சொந்தமான பனை மரங்
களை எல்லாம் அதாவது மம்சாபுரத்திற்கு அருகே இருக்கிற
கோயில் இடங்களில் உள்ள பனை மரங்களையெல்லாம் பனை
ஏறும் தொழிலாளர்கள் அரசாங்கத்திடமிருந்து ஊசிப்பட்டாவுக்கு
எடுத்து குத்தகை ஒழுங்காக கட்டிக் கொண்டு வருகிறார்கள்.
ஆனால் அந்த பனைப் பொருட்களை சிலர் திருடிக் கொண்டு
போய்விடுகிறார்கள். இது சம்பந்தமாக அந்தக் கோயிலின்
ஈ. ஓ. அவர்கள் கூட போலீசுக்கு பெட்டிஷன் கொடுத்தார்கள்.
ஆனால் அங்கே எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.
ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோயில்களுக்கென்று அறங்காவலர் அமைக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழுக்களுக் கூட பலர் அப்ளிக்கேஷன் போட்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்களை நியமிக்கும்போது கொஞ்சம் பார்த்துச் செய்ய வேண்டும். ஏனென்றால் அந்தக் கோயிலுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகின்றது என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்து ராஜபாளையத்தில் தேவதானத்தில் திருமிகு நச்சாடை தவத்தருளிய சுவாமி தேவஸ்தான கோயிலுக்குச் சொந்தமான 100 ஏக்கர் தென்னந்தோப்புகள் நிறைந்த நிலத்தை ஒருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிறார், ஆனால் அவர்கள் 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் குத்தகை பாக்கி கோயிலுக்குச் செலுத்த வேண்டி இருக்கிறது. அதற்கு கோர்ட்டிலே சென்று ஸ்டே வாங்கி விட்டார்கள். இந்த நிலையில் அந்தத் தென்னந் தோப்புகள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்துகொண்டிருக் கின்றன. அவை 5 வருடத்திற்கும் மேலாக இந்த நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அரசாங்கம் மீண்டும் அவற்றை எடுத்து அந்தத் தோப்புகளை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. எம். அண்ணாமலை</u> : தலைவரவர்களே, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீது மார்க்ஸிஸ்ட் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை கூற விரும்புகிறேன். மடம், கோயில், அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய குத்தகை விவசாயிகள் 4 ஆண்டுகளாக குத்தகை கட்ட முடியாத நிலையில் இருப்பதால் இன்றைக்கு அறநிலையத்துறை அதிகாரிகளால் வழக்கு தொடரப்படக் கூடிய ஒரு சூழ்நிலை பல்வேறு பகுதிகளில் இருக்கின்றது. குத்தகை பாக்கிக்கான காரணத்தை பார்க்கும் போதும் 1385—வது பசலியிலிருந்து 1388—வது பசலி வரையிலும் தான் இந்த பாக்கிகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி ஏற்படும் போது இதற்கான யதார்த்தமானகாரணங்களையும் நாம் ஆராய வேண்டும் என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று இந்த நான்கு ஆண்டுகள்தான் கடுமையான இயற்கை பாதிப்புகள் ஏறபட்ட ஆண்டுகளாகும் என்பதும், பூச்சி நோய் தாக்குவதாலும்

அதனால் ஏற்பட்ட சூழ்நிலையும் அடுத்தது 60, 40 என்ற அளவிலே இதுவரையிலும் வாரம் கொடுக்கப்பட்டு வந்த நிலையினை கொண்டும்தான் இன்றைக்கு இந்தப் பாக்கி ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் இந்த அவையிலே கூட நிறை வேற்றிய 75, 25 என்ற வார சட்டத்தின் நோக்க அடிப்படையில் நாம் பார்த்தாலும் இன்றைக்கு குத்தகை கட்ட முடியாத நிலை இருக்கிறது என்பதை அரசும் உணர்ந்துள்ளது என்பதை நம்மால் நம்ப முடிகிறது. ஆகவே இந்த யதார்த்தமான நிலைமைகளைக் கொண்டு பார்த்தாலும் இந்தக் குத்தகை பாக்கியைக் கொடுக்க முடியாத சூழ்நிலை நன்கு தெரியும். மற்றும் ஒரு எடுத்துக்காட்டு; இன்றைக்கு சொந்த சாகுபடியை செய்யக்கூடிய விவசாயிகளும் கூட தங்களுடைய கடன்களையும், இதர வரிகளையும் செலுத்த முடியாத நிலை நாடு முழுவதும் இருக்கின்றது. அதனால் அவர்கள் கிளர்ச்சிகள் நடத்தி கோரிக்கைகள் வைக்கக்கூடிய இந்த கால கட்டத்தில் யதார்த்த மான நிலைமைகளைப் பார்க்கும்போது இயற்கையின் பல பாதக நிலைமைகளாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதும் ஏற்கெனவே இருந்த 60, 40 என்ற வார அடிப்படையில் நிலுவைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டும் ஏழை விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும், உணவு உற்பத்தியில் ஊக்கமளிக்கும் பொருட்டு, நடப்பு ஆண்டு குத்தகையை செலுத்தினால் பெற்றுக் கொண்டு மேற்கொண்டு செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியைத் தள்ளிவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.]

அடுத்து, இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும் 6 இலட்சம் ஏக்கர் நிலம் கோவில்களுக்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் கோயில் நிலங்களை அரசு எடுத்துக் கொண்டு கோயில்களுக்கான செலவுகளை அரசே ஏற்று இந்த 6 லட்சம் ஏக்கர் நிலத்தையும் பாடுபடும் நிலமற்றவர் களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், அரிஜனங்களுக்கும் கொடுக்கக் கூடாதா? குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தாலும் போதுமே, இன்றைக்கு அந்த விவசாயிகள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலங்களை அரசு எடுத்துக் கொண்டு ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. எம். அண்ணாமலை) [1979 ஏப்ரல் 17

அடுத்தபடி கருணை இல்லங்கள். இன்றைக்கு 36 கருணை இல்லங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் 2,700 சிறுவர், சிறுமியர்கள் தங்கி வருகிறார்கள். இந்த குழந்தைகளுக்கு தினம் ஒன்றுக்கு 50 பைசா செலவழிக்கப்படுகிறது, என்று சொல்லப்படுகிறது. 50 பைசா என்கிறபோது எந்த அளவிற்கு அந்தக் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியும். எப்படி பராமரிக்க முடியும் என்ற நிலைமையை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதோடு அந்தச் சிறுவர்களுடைய இல்லங்கள் பெயரளவிற்குத் தான் நடைபெறுகின்றன. ஒன்றுக்கு மூன்று வருவதாகக் கணக்கு காட்டப்பட்டு, முறைகேடுகள் செய்யப்படுவதாக சொல்லப்படுகிறது. இதை பரிசீலிக்க வேண்டும். உணவும் பாதுகாப்பும் முழுமையாக கொடுக்கும் முறையில் மாற்றம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இன்றைக்கு கோயில்களுக்கு பக்தர்கள் மூலமாகவும், பல்வேறு குத்தகை ஏலங்கள் விடுவதன் மூலமாகவும், ஏராளமான கோடிக் கணக்கில் வருமானம் வருகிறது. அப்படி வரும் அந்த வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை தொழு நோய் ஒழிப்புக்கு ஒதுக்க வேண்டும். அந்தத் தொழு நோயாளிகள் பொது இடங்களிலும் பஸ் நிலையங்களிலும், ரயில்வே பிளாட்பாரத்திலும் இன்றைக்கு பிச்சை எடுத்து பொது சுகாதாரத்திற்கும் மனித ஆரோக்கியத்திற்கே அச்சுருத்திக் கொண்டிருக்கும் கொடிய நோயை ஒழிக்கவும், கட்டுப்படுத்தும் பொருட்டு தொழு நோயாளிகளுக்கு என அந்தக் கோயில் நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கி ஒரு மருத்துவ மனையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்தால்தான் அறநிலையத்தின் உண்மையான அறப்பணி செய்தவர்களாவோம். இதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

குடியிருப்புகள் இன்றைக்கு அறக்கட்டளைக்குச் சொந்தமான நில இடங்களில் வீடுகட்டியும், வாடகைக்கு குடியிருந்தும் கடைகளை வைத்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் சாதாரண மக்கள் இன்று நாடு முழுவதும் சில கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் ஒன்று நில வாடகை, வீட்டு வாடகை 5 மடங்கிலிருந்து 10 மடங்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு அந்த வரி உயர்த்தப்பட்டு அவர்கள் கட்ட முடியாத நிலையாலும், வசூல் நிர்ப்பந்தங்களாலும் பல, இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதோடு குத்தகைக்கு மொத்தமாக எடுத்து சில்லரையாக வாடகைக்கு விட்டு அதிகப்படியான பணம்சம்பாதிக்கிறார்கள். அப்படியிருந்தும் அந்த வீடுகளுக்கு எந்தவிதமான ரிப்பேரும். பாதுகாப்பும் இல்லாத நிலை இருக்கிறது. இந்த நிலை நாடு பூராவும் இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கையைஉடனடியாகப்பரிசீலத்து, வருமானத்தின்

1979 ஏப்ரல் 17] [திரு. எம். அண்ணாமலை]

அடிப்படையில் வரி விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். மேலும் கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான அந்த
வீடுகளை அவர்களுக்கே இலவசமாகப் பட்டா செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல கோயில் நிலங்கள் எல்லாம் கைமாறிக் கொண்
டிருக்கும் நிலை பல இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக
ஒருவர் பினாமியின் பெயரில் நிலங்களை எடுத்துக்
கொண்டு அதிகப்படியான வாடகை வசூலித்து லட்சக்
கணக்கான ரூபாய்களை சம்பாதிக்கும் முறையில் செயல்பட்டு
வருகிறார். அப்படி நடைபெறுகிறவற்றிற்கு எடுத்துக்
காட்டாக ஒரு நிகழ்ச்சியைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதைத் துரித
மாகப் பரிசீலித்து பரிகாரம் காணுவதாகச் சொன்னார்கள்.
இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிடுகிறேன், குமாரபா
ளையம் திரு. லட்சுமிநாராயணா தேவஸ்தானத்திற்கு உட்பட்டு
50 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அது அந்த நகரத்தின்
எல்லைக்குள் இருக்கிறது. அந்த தேவஸ்தான நிர்வாகிகளில் சிலர்
அந்தநிலங்களை வேறு நபர்களுக்கு விற்று பின் பிளாட்போட்டு
அதிகப்படியான லாபம் சம்பாதிக்கக்கூடிய நிலையில் செயல்
படுகிறார்கள்.

(மாலை 6-00)

இதை உடனடியாக அரசு தலையிட்டு அந்தப் பகுதியிலுள்ள
வீடற்று இருக்கும் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதே போல் வேதாந்த மடம், அப்பராய சத்திரம்
என்ற இரண்டு இடங்களில் 30 ஆண்டுகளுக்கு மேலாக 500 நெச
வாளர் குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு
வேறு சொத்துக்களும் இல்லையாதலால் இந்த வீடுகளின் பேரில்
கடன் பெற்று தொழில் செய்யவும் செக்யூரிட்டி . எதுவும்
கொடுக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.
இப்படி நாடு பூராவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போ
தும் நில வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை
அரசு பரிசீலித்துக் குறைவாக வருமானம் வரக்கூடிய நெசவாளர்
கள் எல்லோருக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். மேலும் இவர்கள் எல்லாம் 30 ஆண்டு
களாக நில வாடகை கொடுத்துக் கொண்டிருப்பதை கணக்கில்
எடுத்துக்கொண்டாலும் கொடுத்த வாடகைத்தொகையை ஈடான
தொகையாகக் கருதி, வீடுகட்டியுள்ள இடங்களை அவர்களுக்குப்
பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதாவது 490 பேர்களில் 66 பேர்கள் அரிசன். இதிலே, குறைந்தது உயர்ந்தது என்பதற்குள் நான் போகவில்லை. ஆனால், இங்கே நான் குறிப்பிட விரும்புவது தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒதுக்கப்படுகின்ற நிலையில்தான் அங்கே அவர்களது பணி இருக்கிறது. அங்கே அவர்களுக்கு எடுபிடி வேலைகள்தான் ஒதுக்கப்படுகிறன்ன என்பதோடு அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அரிசன் என்பதால், ஒரு நிகழ்ச்சிக்கும் கூப்பிடப்படுவது இல்லை. பொது நிகழ்ச்சிக்கு அங்குள்ள பெரிய மனிதர்கள் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் அரிசனப் பெரியவர்கள் அழைக்கப்படுவதும் இல்லை. இதுபோன்ற நிலைமையை மாற்றியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தினுடைய நிலை. அறநிலைய துறையினுடைய நிர்வாகத்தைப்பார்க்கும்போது, இன்றைக்குப் பெருமளவுக்கு முறைகேடாக நிலங்களைக் குத்தகை விடுவதற்கு மோசடி வழிகளில் விற்கக்கூடிய ஏஜண்டுகளாகவும் தான், அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்என பல புகார் மனுக்கள் உள்ளன. லட்சக்கணக்கான ரூபாய்களைச் சுருட்டுவதற்குத் தான் அவர்கள் உதவி செய்கிறார்கள். ஆனால் தங்களுடைய கடமைகளை ஒழுங்காக ஆற்றக் கூடிய பணியாளர்களாக இருந்தால், அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதில்லை. அவர்களை பழி தீர்க்கின்ற வகையிலே இன்றைக்கு அவர்கள் காட்டுப் பிரதேசங்களுக்கும், மற்றப் பகுதிகளுக்கும் மாற்றப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாம் இன்றைக்கு அந்த இலாகாவிலே இருக்கின்றது. முறைகேடுகளில் துறையிலே உள்ள எல்லா அதிகாரிகளும் இல்லா விட்டாலும், ஒருசில அதிகாரிகள் இன்றைக்கு பல லட்சக்கணக்கான வருமானங்களை அபகரிக்கவும் கையாடல் மோசடி காரியங்கள் செய்யக் கூடிய சூழ்நிலையும் உருவாகி இருக்கின்றது.

உதாரணமாக, பழனியில் பி.ஏ. ராமன் வாத்தியார் என்ற ஒரு சாது, அவர் ஒரு தர்மஆஸ்ரமம் உருவாக்கி, 5லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு மடத்தை உருவாக்கினார் என்றும், அவருக்கு வாரிசு இல்லை என்ற நிலைமையில், 14—11—1977 அன்று சென்னை இந்து அறநிலைய ஆட்சியாளர்களிடம் ஒப்படைப்பதாக எழுதிக் கொடுத்தும்கூட, இன்றைக்கும் அந்த மடத்தை இந்த இலாகாவினர் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, அவருடைய சிஷ்யர் ஒரு அறையிலே இருந்தார் என்றும், அந்த சிஷ்யரைக் கூட அங்கே உள்ள ஒரு சிலர் அடித்து வெளியேற்றி விட்டு, அந்த மடத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். தன்னை அடிக்கிறார்கள் என்று அவர் காவல்துறையினரிடம் சொன்னால், காவல் துறையினரும் சேர்த்து அவரை

அடித்து வெளியேற்ற உதவியிருக்கிறார்கள். இதைப் பற்றிய ஒரு மனு அமைச்சர் அவர்களுக்கும், மற்ற துறையினருக்கும், என்னைப் போன்றவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப்பட்டும், அந்த இடத்தை ஒப்படை செய்யப்பட்ட அறநிலையத் துறையும் கவலிக்கப்பட காவல் துறையின் பாதுகாப்பும் இல்லை.

இப்படிப்பட்ட ஒருவர் சொத்தை ஒப்படை செய்தும் அவர் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்புத் தரவேண்டிய ஒரு காவல் துறையே இன்றைக்கு துன்பப்படுத்தக் கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்குகின்ற சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆலையத்துறைக்கு கமிட்டிகளை அமைக்கும்போது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதைப் பார்க்காமல், இந்த ஆலையத் துறை ஈடுபடும் நிர்வாகத்திலே அனுபவம் பெற்றிருக்கக் கூடியவர்கள் விருப்பம் உடையயாராக இருந்தாலும் யாரோ, அவர்களைச் சேர்த்து, எந்த அளவுக்கு இந்த ஆலையங்களை, அதன் நிர்வாகத்தை சீரமைக்க உதவ வேண்டுமோ, அந்தளவு அதைச் செய்ய வேண்டும் என்பதோடு பொதுவான சீரமைப்பு காரியங்களுக்கும் பரிசீலனைக்குரிய காரியங்களைச் செய்யும்போது, சர்வ கட்சிகள் கொண்ட ஒரு மக்கள் குழுவின் மூலமாக இத்தகைய கருத்துக்களை எல்லாம் அறிந்து, அவைகளை நடைமுறைப்படுத்தினால், பலனுள்ளதாக இருக்கும். அப்போதுதான் இந்த ஆலயத்திலுள்ள சொத்துக்கள் பல லட்சக்கணக்கான, பல கோடிக்கான சொத்துக்களைப் பாதுகாக்க முடியும். இந்த உண்மையான நிலையிலே பாதுகாக்க வேண்டுமென்பதோடு அறவழிக்கு எடுத்துக்காட்டாக பாடுபடும் ஏழைஎளிய மக்களுக்கு (6 லட்சம் ஏக்கர்) நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். அதேபோல், இன்றைக்கு தொழுநோய் பிச்சைக்காரர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, நோய் தீர்க்கவும்— தடுக்கும்படியான விரிந்த மருத்துவமனையை உருவாக்க பாதுகாத்திட இந்தப் பணத்தைச் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன்.

(மாலை 6—10)

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறையில் நியமிக்கப்பட்ட சில பணியாளர்கள் மீண்டும் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதாக அறிகிறோம். இந்து அறநிலையச் சட்டம் செக்ஷன் 55-ன் கீழ் ஒரு கோவிலுக்குரிய பணியாளர்களை அந்த டிரஸ்டிகளே நியமனம் செய்யலாம் என்று விதி

இருக்கிறது. அதன்படி 1976-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளுக்குப் பின்னாலே நியமிக்கப்பட்ட அதிகாரிகளை எல்லாம், கோவில் பணியாளர்களை எல்லாம் வெளியிலே அனுப்ப வேண்டுமென்ற உத்தரவை கமிஷனர் அவர்கள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கமிஷனருடைய சர்குலரை அமல்படுத்துவதன் மூலம் ஏறக்குறைய 500 பேர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது.

Commissioner's orders cannot have overriding effect over the Act.

என்று சொல்வது போல் சட்ட விதியில் சொல்லப்பட்ட விதிகளுக்கு மாறாக கமிஷனர் அவர்கள் ஒரு சர்குலரை அனுப்பினால் அது செல்லுபடியாகாது என்ற நிலைமை இருக்கும் காரணத்தால் ஏற்கனவே சர்குலர் மூலமாக வெளியிலே அனுப்பப்பட்ட பணியாளர்களை வெளியிலே அனுப்பாமல் அரசாங்கம் மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கனவே ஆலயப் பணியாளர்களாக இருப்பவர்கள் மீது செக்ஷன் 56-ன் கீழ் டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. (ஆக்ட் 24/1976 என்ற புதிய சட்டத்தின்கீழ் 'பிட் பர்சன்ஸ்' (Fit persons) நியமிப்பார்கள். Accusers, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஃபிட் பர்சன்ஸுக்கு அதிகாரம் இருக்கிறது. குற்றம் சுமத்திவிட்டு அவ்வாறு குற்றம் சுமத்தியவரே விசாரிக்கும் அதிகாரம் 'ஃபிட் பர்சன்ஸ்' என்பவர்களிடத்தில் இருக்கிறது. யார் ஒருவர் குற்றம் சுமத்துகிறாரோ அவரே நீதிபதி பொறுப்பில் இருந்து நீதி வழங்க வேண்டும், விசாரிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும் காரணத்தால் நியாயம் கிடைப்பதில்லை. வேடிக்கை என்னவென்றால்—செக்ஷன் 56-ன் கீழ் 'ஃபிட் பர்சன்ஸ' என்குயரி செய்து தீர்ப்பளிப்பார். அப்பீல் செய்ய வேண்டுமென்று சொன்னால் டெபுடி கமிஷனரிடத்திலே அப்பீல் செய்ய வேண்டும். டெபுடி கமிஷனர் உத்தரவுக்கு மேல் அப்பீல் செய்ய வேண்டுமென்றால் கமிஷனருக்கு அப்பீல் செய்ய வேண்டும். அதற்குப் பின்னால் சட்டத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. செக்ஷன் 7-ன், கீழ் சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொன்னால்—

Restricted for heriditary trustees

என்ற முறையில் இருக்கிறது. ஆகவே, இப்படி கோவில் பணியாளர்களைக் குற்றம் சுமத்த வேண்டுமென்று ஒரு முறை நிலைத்துவிட்டால் குற்றம் சுமத்தியவர்களே தீர்ப்பு சொல்லும்

நிலைமை இருக்கும் காரணத்தால் நியாயம் கிடைப்பதில்லை. 'ஃபிட் பர்சன்ஸ்' என்குயரி ஆபீசராக இருக்கக் கூடாது. வேறு ஒருவர் என்குயர் ஆபீசராக இருக்க வேண்டும். நான் கூட ஒரு மனு கொடுத்தேன். சோளிங்கர் கோயில் கணக்காயர் மீது வழக்கு விசாரணைக்கு வந்தது. 'ஃபிட் பர்சன்' எப்படி ஐயா குற்றம் சுமத்தியவரே விசாரிக்கலாம் என்று நான் கேட்டபோது விசாரித்தால் என்ன என்று அரசாங்கத் தரப்பிலே சொன்னார்கள். எங்கே நீதி கிடைக்கும்? அவரிடத்திலே வேலை பார்க்க வேண்டும்.

Whether it is a judicial order, whether it has been judicially passed

என்ற முறையில் அணுகுவதற்காக கொடுக்கப்பட்ட தீர்ப்புகளைப் பரிசீலிக்கும் உரிமையை நீதிமன்றங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே பரதராமியிலே ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே ஊழியம் செய்கிறவர்களுக்கு 1970 ஆம் ஆண்டிலே நிலத்தைப் பட்டா செய்து கொடுத்தார்கள்.

As long as they render service, they can enjoy the property.

என்ற கன்டிஷனின் பேரிலே அந்தச் சொத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்தார்கள். ஆனால் அதற்கு மேலே எக்ஸிகியூடிவ் ஆபீஸர் எம்.ஐ.ஏ.டி. அப்பீல் என்ற முறையிலே செய்கிறார், அது காலம் கடந்தது என்று தள்ளுபடி செய்யப்படுகிறது. உடனே அந்த தர்மகர்த்தா அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்களை டிஸ்மிஸ் செய்கிறார். அதன் காரணமாக அந்தப் பட்டா அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படுகிறது. பின்னாலே அஸிஸ்டெண்ட் கமிஷனருக்கு அப்பீல் செய்யப்பட்டது. இப்போது அது கமிஷனரிடம் 3 ஆண்டுகளாக Pending—ல் இருந்து கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை வேண்டுமா? நிலத்தை எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல் டிசிப்ளினரி ஆக்ஷன் என்ற முறையிலே எடுத்து டிஸ்மிஸ் செய்யப்பட்டு 3 ஆண்டு காலமாக அப்பீல் இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தஞ்சாவூரிலே சட்டநாதக் குருக்கள் என்பவர் இருக்கிறார், அவர் மீது வழக்கு ஒன்றும் இல்லை, சி.பி.ஐ. ரிப்போர்ட்டும் இல்லை. கடந்த நான்கு ஆண்டுக் காலமாக அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருந்து கொண்டிருக்கிறார். அரசாங்கத்திடம் அந்த மனு பெண்டிங்காக இருந்து கொண்டிருக்கிறது. இது

வரையில் அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இந்த நிலைமை வேண்டுமா? இந்த நிலைமைகளைத் தெரிந்து நீதித் துறையில் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில் பணியாளர்கள் என்ற முறையிலே உங்களுடைய பாலிசி நோட்டிலே 51 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 1971-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 15, 10,5 என்று சம்பளஉயர்வு கொடுப்பதாக அறிவித்தார்கள். 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் 10, 5 என்று பஞ்சப்படி தருவதாக அறிவித்தார்கள். ஆனால் அவைகள் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த அரசாங்கம் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவில் பணியாளர்கள் குறித்த சட்டத்திலே செக்ஷன் 12-இல் கோவில் பணியாளர்கள் அரசாங்க ஊழியர்கள் ஆகிறார்கள் என்று இருக்கிறது. ஆனால் அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. வில்லேஜ் ஆபீஸர்ஸ் என்று வருகிறபோது மணியம், கர்ணம், தோட்டி, தலையாரி இருக்கிறார்கள். தோட்டி இன்றைக்கு கடைநிலை ஊழியர், அரசாங்க ஊழியராக அந்தஸ்து அவர்களுக்குத் தரப்படுகிறது. அந்த அந்தஸ்து தரப்படுகிற காரணத்தினாலே அவர்கள் பணிக்காலத்தில் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் குடும்ப நல நிதி என்ற முறையில் தரப்படுகிறது. உங்களுடைய பாலிசி நோட்டிலே 1,409 கோயில்கள் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானத்தைப் பெறக் கூடியவையாக இருக்கின்றன என்று இருக்கிறது. அந்தக் கோயில்களிலே பணியாற்றுகின்றவர்கள் பணிக் காலத்திலே இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் குடும்ப நல நிதி என்று வைத்திருக்கிறீர்கள், ஆனால் இதுவரையில் நன்மை பெற்றவர்கள் 100 கோயில்கள்தான். 1,409 கோயில்கள் எங்கே, பலன் கிடைத்த 100 கோயில்கள் எங்கே, என்று அரசு சிந்தித்துப் பார்த்து அரசாங்கம் அதிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கோயில்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு 6 மாதம் முதல் 2 ஆண்டுக் காலம் வரையிலும் சம்பளமே இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. கோயில் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து வருகின்ற வருமானத்தைக் கொண்டுதான் அவர்களுக்குச் சம்பளம் தர வேண்டியிருக்கிறது. ஊராட்சி மன்றங்களிலே பணியாற்றுகின்ற துப்புரவாளர்கள் போன்றவர்களுக்கு ஊராட்சி நிதியில் இருந்துதான் சம்பளம் தருகிறார்கள். கோயில்களிலேயும் அதே மாதிரிதான் செய்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற ட்ரீட்மெண்ட் வேறு, கோயில் பணியாளர்களுக்கு தரப்படுகிற ட்ரீட்மெண்ட் வேறு. இவர்களுக்கு எவ்

விதப் பாதுகாப்பும் இல்லை, அதனால் அவர்கள் பசியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். செத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். நிலங்களை வாரத்திற்கு விட்டிருக்கிறார்கள். Cultivating Tenants Protection Act மூலமாக கோயில் நிலங்கள் குத்தகை பயிரிடுவோர், சர்குபடி செய்கிறவர்களுக்கு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு தரப்பட்டு இருக்கிறது. இப்போது நீங்கள் 25, 75 என்று அறிவித்து இருக்கிறீர்கள். அதை தயவுசெய்து கோயில்களுக்கு அமலாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே கோவில் வருமானத்தையே நம்பியிருக்கின்ற 51 ஆயிரம் கோயில்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். முனிசிபாலிட்டிஸ் ஆக்டின் கீழ் லீஸ் அன்ட் லைசென்ஸ் என்ற சட்டத்தின் கீழ் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான நிலங்களை ஏலம் விடுகிறார்கள் 3 ஆண்டுகளுக்கு.

(மாலை 6–20)

அந்த மூன்றாண்டுக் காலம் முடிந்தவுடன் லைசென்சானது ரத்து செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்படுகிறது. அதன்மூலம் அந்த முனிசிபாலிட்டிக்கு வருமானம் வருகிறது. அதே சட்டத்தை இந்தக் கோயிலுக்கும் அமல்செய்து லைசென்ஸ் என்ற முறையில் தர வேண்டும். 19.16 கோடி ரூபாய் வசூலிக்கவேண்டிய அரியர்ஸ் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இவைகளெல்லாம் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் கோயில் பணியாளர்களுக்கு சேர வேண்டியவை. இவைகளுக்கு மாற்று விதிகள் ஒன்றும் செய்யவில்லையே. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் வசூலித்துக் கொடுக்க முடியவில்லை என்றாலும், இந்த அரசாங்கமே 20 அல்லது 25 இலட்சம் ரூபாயை முதலீடாக வைக்க வேண்டும். அவ்வாறு செய்து பசியால் செத்துக்கொண்டிருப்பதை உணர்ந்து, அரசாங்கமாவது கடனாகக் கொடுத்து அவர்களுடைய பசியைத் தீருங்கள். பிறகு அந்த வருமானத்தை வசூல் செய்து ஈடு செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

46–ஏ என்ற செக்ஷன், ஏற்கனவே இந்தச் சட்டத்திலேயிருந்து, இடைக்காலத்திலே அது ரத்து செய்யப்பட்டு, மீண்டும் இந்த ஆட்சியாளராலே அது அமலாக்கப்பட்டிருக்கிறது. ஏரியாக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து தர்மகர்த்தாக்களை நியமிக்கவேண்டுமென்றால், இந்தக் கமிட்டி மூன்றுபேர்களைப் போடலாம், மீதம் இரண்டு பேர்களை அரசாங்கம் போடலாம் என்ற விதி இருக்கிறது. நீங்கள் தானே இந்த ஏரியாக் கமிட்டிகளை நியமித்தீர்கள், அதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

அவர்களே அந்த ஐந்து பேர்களையும் தேர்ந்தெடுக்க மாட்டார்களா? இப்படியெல்லாம், அரசாங்கம் இரண்டு பேர்களை நியமிக்கவேண்டுமென்று இருக்கிறது. எவ்வளவு நாட்களுக்கு முன் போட்டீர்கள்? எந்த இடங்களிலெல்லாம் அது பூர்த்தி செய்யப்பட்டு அந்தக் கோயில்களுக்குத் தர்மகர்த்தர்க்களின் ஆளுகையில் வந்திருக்கிறது என்பதைச் சற்றுக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், காட்பாடி தொகுதியில் காங்கேய நல்லூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே பெரிய வேலைப்பாடு அமைந்த தேர் சீர்கெட்டு இருக்கிறது. எங்கள் பகுதியிலே இருக்கின்ற விரிஞ்சிபுரம் பகுதிக்கு 25,000 ரூபாயை இந்த அரசாங்கம் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் இந்த காங்கேய நல்லூர் கோயிலுக்கும் அதைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், ஒலி-ஒளிக் காட்சி என்பதைப் பொறுத்தவரையில், சமீபத்தில் நான் டெல்லிக்குச் சென்றபொழுது பார்த்தேன், டெல்லியிலே வடநாட்டுப் பகுதியிலே இருக்கும் வடநாட்டுச் சரித்திரம் மட்டும் ஒளி பரப்புகிறார்கள். தமிழகத்தின் சரித்திரம் அங்கே சொல்லப்படுவதில்லை. ஆகவே, தமிழகத்தின் ஒட்டுமொத்தமான சரித்திரத்தை ஒலி-ஒளி காட்சியில் அமைப்பதன்மூலம் தமிழகத்தின் பழம்பெரும் வரலாற்றைத் தமிழக மக்கள் அறிந்து கொள்ளும் நிலையிலும், வெளிநாடுகளிலேயிருந்து வருபவர்கள் தமிழ்நாட்டின் பெருமையை அறிந்து கொள்ளும் வகையிலும் அந்த ஒலி-ஒளிக் கண்காட்சியை அமைக்கும் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக கோயில் பணியாளர்களின் துயரைத் துடைக்கின்ற அரசாக இந்த அரசு இருக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன், வணக்கம்.

திரு. க. பாலாஜி: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் வைத்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களை நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள எல்லா அறநிலைய நிர்வாகத்திற்கும் உட்பட்ட ஆலயங்களின் பராமரிப்பு அந்த ஆலயங்களின் வருமானத்தைப் பொறுத்தது என்பது தெள்ளத் தெளிவாக எல்லோரும் உணர்ந்ததுதான். ஆனால் தமிழகத்தில் உள்ள

எல்லா ஆலயங்களின் சொத்துக்களும் வசதி படைத்தோ ஆதிக்கத்தின் கீழும், விவசாயிகள் என்ற போர்வையில் உள் சில நிலச்சுவான்தார்களின் ஆதிக்கத்திலும் இருக்கின்ற காரண தால் ஆலயங்களுக்கு வருகின்ற வருமானம் பாதிக்க படுகின்ற அதேநேரத்தில், ஆலயங்களில் அன்றாடம் நடை பெற்று வருகின்ற நடைமுறைகள் முறையாக நடத்தப்பட மலும், தொன்றுதொட்டு பாரம்பரியமாக நடைபெற் வந்த தேவாரம் ஓதுதல், ஏழை மாணவர்கட்கு உண அளித்தல், இயல்-இசை மூலமாக மாணவர்களுக்கு பயிற் அளித்தல், அறிவார்ந்த புலவர் பெருமக்களைக் கவுரவித்த ஆகிய இவைகள் எல்லாம் தடைப்பட்டதோடு அல்லாம அன்றாட வழிபாடுகளும் இன்றி, சில கோவில்களை மூ வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்கின்ற அச் உணர்வை வருத்தத்தோடு எடுத்துச்சொல்லக்கூடிய நிலை யில் இருக்கிறேன்.

இதற்கெல்லாம் உள்ள மூலகாரணம், தமிழகத்தில் உள் ஏழை எளிய கூலி விவசாயிகளையும், ஏழை குத்தகைதார களையும் காப்பாற்றவேண்டி சில பாதுகாப்பான சட்ட களை, குறிப்பாக குத்தகை வாரப் பாதுகாப்புச் சட்டம் விவசாயக் கடன் நிவாரணச் சட்டம், குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கப் பாதுகாப்பு சட்டம் போன்றவைகளைத் தமிழக அரசு பொதுவா நல்லெண்ணத்துடன், செயல்பட்டு வருகின்ற சமயத்தில் விவசாயிகள் என்ற போர்வையில் உள்ள நிலச்சுவான்தா களும், பெரும் வசதி படைத்தவர்களும் இந்தப் பாது காப்புச் சட்டங்களையே தங்களுக்குப் பாதுகாப்பாக கொண்டு, கோவில்களுக்கு வருகின்ற வருமானங்களை முழுமை யாகத் தங்களின் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றார்கள்.

தமிழகத்தின் பண்டைய பாரம்பரியத் தன்மையைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், தொன்றுதொட்டு வரும் தெய் வீகத்தன்மை பாழ்பட்டு விடாமல் இருக்கவும், கோவில்களின் வருமானம் சீரோடும் சிறப்போடும் அதிகரிக்கவேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, ஆலயங்களின் சொத்துக் களை முழுமையாகப் பாதுகாக்கின்ற வகையில் சட்ட இடர்ப்பாடுகள் களையப்பெற்று, இதற்கென தனியாக அரசு ஆய்வு செய்து ஓர் புதிய சட்டத்தையே உருவாக்கி, எங்கெங்கு கோவில் சொத்துக்களை சொந்த மாக்கிக் கொண்டிருக்கிறார்களோ, அச்சொத்துக்களை இட்

புதிய சட்டத்தைக் கொண்டு கோயில் சொத்துக்களாக மாற்றி விட முடியும் என்று இத்தருணத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு இதனைச் செயல்படுத்துமானால் குத்தகை நிலுவை பாக்கிகளும், மற்றும் இதர நிலுவைகளும் ஒட்டு மொத்தமாக கோயில்களின் வருமானம் சுமார் 50 கோடி ரூபாய் அளவு உயரும் எனக் குறிப்பிட விரும்புகின்றேன். இதன்மூலம் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி பொருளாதாரத்தில் சீர்குலைந்து வாழும், ஏழை எளிய மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க உதவும் என எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு என்னுடைய தொகுதியான காஞ்சிபுரம் தொகுதியில் ஏகாம்பரேஸ்வரர் பெரிய கோயிலும், அதைப் போல் வரதராஜர் பெரிய கோயிலும், ருத்திர கோட்டீஸ்வரர் ஆலயம், இப்படிப்பட்ட ஆலயங்களின் சொத்துக்களை, நிலங்களை முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர், அவருடைய சொந்தக்காரர் பேரில் நீண்ட காலக் குத்தகைக்குக் குறைந்த வாடகையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் ஒரு நல்ல கடுமையான சட்டம் போட்டு, அப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் வைத்திருக்கிற கோயில் சொத்துக்களை அரசாங்கம் கைப்பற்றி நிலமில்லாத ஏழை-எளிய மக்களுக்கு, விவசாயம் செய்வதற்கு, அதிலே அவர்கள் வீடுகள் கட்டிக்கொண்டு, தங்களுடைய வாழ்க்கையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே இயங்குகின்ற அரசு அதிலே கடுமையாக நடந்து கொள்ளவேண்டும். காரணம், ஏராளமான கோயில் நிலங்களை, இன்றைக்கு பெரும், பெரும் பணக்காரர்கள், பெரும், பெரும் நிலச்சுவான்தார்கள், அரசியல் சாதகபாதகங்களை வைத்துக்கொண்டு, ஆட்சியிலே இருப்பவர்களது அனுசரணை கொண்டு, முன்னாலே இருந்த அந்த நண்பர்கள் எல்லாம், கோயில் நிலங்களைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்று, அறநிலையத் துறை அமைச்சர், அண்ணன் அவர்கள், கடுமையாக நடவடிக்கை எடுத்திருப்பதைத் தமிழகம் நன்கு உணர்ந்திருக்கிறது.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியிலுள்ள திருக்கழுக்குன்றத்திலுள்ள வேதகிரிஸ்வரர் மலைக்கு மின்சார ரயில் போட வேண்டுமென்று நீண்டகாலமாகவே சொல்லப்படுகிறது. அதற்கு ஏன் போட வேண்டுமென்று நான் கூறுகிறேன் என்றால், அந்த மலை செங்குத்தாக இருக்கிற மலை. அதிலே குழந்தைகளும், பெரியவர்களும் கொஞ்சம் தவறினால்கூட இடறி விழுகின்ற அளவுக்கு அந்த மலை செங்குத்தாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டம் எங்கிலுமிருந்தும்,

வெளிநாட்டிலே இருந்தும் வருகின்றவர்கள் எல்லாம் தமிழகத்திற்கு வந்தால், குறிப்பாக, திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்வதை சுற்றுலாக் காட்சியாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மின்சார ரயிலை அங்கே போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அங்கேயிருக்கிற அருள்மிகு ருத்தரகோடீஸ்வரர் கோயில் இன்றைக்குப் பாழடைந்திருக்கிறது. அந்தக் கோயிலையும் நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, பல மானியங்கள் விவாதத்திற்கு வந்திருக்கின்றன. இன்னும் வர இருக்கின்றன. அந்த மானியங்களில் எல்லாம் சமுதாயத்தினுடைய ஒரு பெரும்பான்மை— அந்தப் பெரும்பான்மையினுடைய தன்மை அந்தத் தன்மை காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் இவைகளைக் குறித்த மானியமாக இது இருக்கிற காரணத்தினால், இது மிக முக்கியமான மானியம் என்பதை நான் முதலிலேயே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாலை 6-30)

மனிதன் வாழ்வது உணவை உண்டு மட்டும் அவன் வாழ்வது இல்லை. உணர்வை பெற்றிருக்கிற காரணத்தினாலேதான் மனிதனாக வாழ்கிறான். உணவை மட்டும் வைத்து வாழ்வதாக இருந்தால், மிருகங்கள் வாழ்கின்றன, மாக்களும் வாழ்கின்றன. ஆனால், உணவு, உடை, இருப்பிடம் இவைகளை முறையாகப் பெற்று, அவைகளை தன்னுடைய உணர்விற்கு ஆதாரமாக வைத்து வாழ்வதால்தான் மனிதன் மனிதனாக வாழ்கிறான். அப்படிப்பட்ட வாழ்விற்கு, உணர்வை அடிப்படையாகப் பெற்ற வாழ்விற்கு அவனவன் சேர்ந்திருக்கிற மார்க்கம் அடிப்படையாக அமைகிறது என்பதை நாம் இந்த நேரத்தில் மறந்து விடக்கூடாது.

கோயில் நிலங்களை, கோயில் சொத்துக்களை பகிர்ந்து அளிக்க வேண்டும். நாட்டிலே பற்றாக்குறை இருக்கும் போது, எல்லா மக்களுக்கும் பகிர்ந்து அளிக்கும் வகையில் அந்த கோயில் நிலங்களை கையகப்படுத்தி பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இன்றைக்கு நாம் ஒரு பாஷனாக நாம் பேசுகின்ற பேச்சுக்களில் பேச வேண்டும் என்ற நிலைமை நாட்டிலே இருந்து வருகிறது. அது கேட்பவர்கள் சிலரை வசீகரிக்கக் கூடியதாக இருந்தாலும், உணர்வுபூர்வமாக அறிவுபூர்வமாக அடிப்

(திரு எம். ஏ. லத்தீப்) [1979 ஏப்ரல் 17]

படையாக எவ்வளவு தவறு என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். மனிதனுடைய உணர்வுகளை பாதிக்கும் வகையில் நாம் பேசும்போது. மனிதசமுதாயத்தினுடையஅடிப்படைகளைத் தகர்த்து விடும் என்பதை நாம் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும். கோயில்கள் மூலமாகத்தான், அந்தக் கோயில்கள் செம்மையாக நடைபெற்றால்தான் சமுதாயத்தில் இருக்கிற ஒரு பெருமையான உணர்வு—திருப்தி ஏற்படும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அந்த உணர்வை பாதிக்கும் வகையில் பேசிவிட்டு, அதற்காகத்தான் ஆட்சி இருக்கிறது, நிர்வாகம் இருக்கிறது சமுதாயம் இருக்கிறது என்ற எண்ணத்தில் பேசிவிடுவோமேயானால் அது நிச்சயமாக நாகரிகத்தையும், பண்பாட்டையும் அழித்து விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த அடிப்படையில்தான் அரசினுடைய அணுகுமுறைகள் இருக்க வேண்டும் என்று நான் இந்த அவையில் கேட்டுக் கொள்கிறேன்.

அறக்கட்டளைகள் அறத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறக்கட்டளைகள் யாரையோ ஏமாற்றுவதற்காகத்தான் சேர்த்து வைத்த சொத்துக்களை தங்களுக்கே தக்க வைத்துக் கொள்வதற்காக, நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற கருத்து மிகவும் வேதனைக்குரிய ஒன்று. அதுவும் இந்த மன்றத்திலே அப்படிபட்ட கருத்துக்கள் சொல்லப்படுமேயானால் அதைப்பற்றி நான் பெருத்த வேதனையடைகிறேன். அறக்கட்டளை என்பது அறத்தின் அடிப்படையிலே அமைவது. அந்த அறக்கட்டளை நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள் ஒரு சிலர் தவறு செய்து இருக்கலாம், ஆனால் அப்படி தவறு செய்த காரணத்தினால், யார் தமது வாய்ப்பையும், வசதியையும், செல்வத்தையும் ஒரு அறத்திற்காக, அறத்தினுடைய அடிப்படையில், தூய்மையான உணர்வோடு விட்டுச் செல்கிறார்களோ அவர்கள் நினைவிற்கும் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்காத நிலையில் இன்றைக்கு நாம் பேசுவது சரியல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது ஒரு பழத்தை சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஒரு ஆரஞ்சுப் பழத்தை சாப்பிடும்போது பழத்தைத்தான் சாப்பிட முடிகிறது. தோலை சாப்பிட முடியவில்லை. அதை ஏன் உற்பத்தி செய்தான் என்று கேட்பது எவ்வளவு அறிவுடையதாக இருக்குமோ அப்படித்தான் சமுதாயத்தில், வாழையடி வாழையாக பல்லாயிரம் ஆண்டுகள் காலமாக, பல நூற்றாண்டுகளாக வந்திருக்கிற பழக்கவழக்கத்தை ஏன் வந்தது என்று கேட்பது ஆகும்.

1979 ஏப்ரல் 17] (திரு. எம். ஏ. லத்தீப்)

ஒரு மரத்தை அறுக்கிறோம், ஒரு பலகை வேண்டும் என்பதற்காக அதன் தோல் பெரியதாக இருப்பதால் பலகை அறுப்பதற்கு சிரமமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய தோல் இருப்பதினால் தானே நமக்கு வேண்டிய பலகையை எடுத்துக் கொள்ள முடியவில்லை, தோல் ஏன் இருக்கிறது என்று கேட்டால், அந்த தோல் இருப்பதினால்தான் செடி வளர்ந்து மரமாகிறது, இன்றைக்கு பலகை அறுப்பதற்காக நம்மிடம் வந்திருக்கிறது. அதை மறந்து விடக் கூடாது. அப்படித்தான் சமுதாயத்தில் சில பழக்க வழக்கங்கள் காலங்காலமாக தொடர்ந்து வருகின்றன. அவைகள் தேவையற்றது போல இன்றைக்கு தெரியலாம். மாறி வரும் கால நேரங்களில் இவைகள் தேவையற்றதுபோல் தோன்றலாம். ஆனால் சமுதாயம் வாழ்வதற்கும், அது நிலைத்து நிற்பதற்கும் அது ஆதாரமாக இருந்து வந்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்து என்று எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு நிலை இருக்கிறது, ஒரு தன்மை இருக்கிறது. அந்த தன்மை மூலமாகத் தான் இந்து என்ற நிலை காக்கப்படுகிறது. இந்து என்ற நிலை மூலமாகத்தான் அந்த தன்மை காப்பாற்றப்படுகிறது. ஒன்றுக்கொன்று தொடர்பு உடையது, ஒன்றிலிருந்து ஒன்றை பிரித்து விட முடியாது. ஆனால் இந்து என்ற நிலையை மறுக்கிறேன். இந்து தன்மையை இழந்து பேசுவது அல்லது, இந்து தன்மையை இழந்து இந்து நிலை இருக்கிறது என்று சொல்வதும் எந்த வகையில் அறிவுடையது என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தெரியவும் இல்லை. ஆகையினால் அவரவர்கள் தங்களுடைய தன்மைக்கு நீதி செய்தவர்களாக இருக்க வேண்டும்.

இன்று கோவில்களையெல்லாம் எடுத்து விடவேண்டும். கோவில்கள் எல்லாம் ஏதோ அதிலே பெருத்த செல்வத்தைக் கொண்டு நாட்டை ஏமாற்றிக்கொண்டு இருக்கும் நிறுவனங்கள் என்று, பேசுவது, அது ஒரு பெரும் சமுதாயத்தை, அந்த சமுதாயம் கொண்டு இருக்கிற உணர்வை நாம் மதிக்கவில்லை என்பதற்குத்தான் ஒப்பாகும். நாம் பெரும்பான்மையான உணர்விற்கு மதிப்புத் தர கடமைப் பட்டு இருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு நாம் எவ்வளவு செய்கிறோமோ அவ்வளவு நாட்டிற்கு நல்லது. பண்பாடு காப்பாற்றும் வகையில் அது அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று எல்லா ஜாதியினருக்கும் கோவில்கள் இடம் பெறும் வகையில், அவர்கள் கோவில்களில் பணியாற்றும் வகையில் சட்டத்தை இயற்றுகிறோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே அந்தக் கொள்கைகளை

இந்தச் சட்ட மன்றத்திலே சட்டமாகக்கொண்டு வந்து, அந்தச் சட்டம் உச்ச நீதி மன்றத்தில் திரிசங்கு நிலையில் ஆக்கப்பட்டு இருக்கிறது என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற வகையில் எல்லோருக்கும் இறைவன் சன்னிதானத்தில் சம அந்தஸ்த்து பெற்றவர்கள் என்கிறமாபெறும்தத்துவத்தைமெய்ஞ் ஞான தத்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதிலே யாருக்கும் எதிர்ப்பு இல்லை. ஆனால் அவர்களுடைய மார்க்க அனுஷ்டானங்களிலே சில நெறிமுறைகள் இருக்கின்றன. அந்த நெறி முறைகள்காப்பாற்றப்பட்டால் தான், அந்தமார்க்க அனுஷ்டானங்கள் நிலை நிறுத்தப்படும். அந்த நெறிமுறைகளை, அந்த மார்க்க அனுஷ்டானங்களை காப்பாற்றாவிட்டால், ஒரு நீதி செய்யப்போய், ஒருஅநீதி செய்யும் வகையில், ஒரு கட்டிடத்தை எழுப்புவதற்கு பதிலாக அடித்தளத்தையே தகர்த்து எறியும் நிலையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டால் கட்டிடம் எழும்பாது என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்கி கிறேன்.

கோவிலில் பணிபுரிவதற்கு வேதம், ஆகமங்கள் இவைகளை முறையாக கற்று, அவ்வகையில் தேர்ச்சியும், பயிற்சியும் பெற்று இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் எல்லா ஜாதியினருக்கும் அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு இடம் அளிக்கவேண்டும். இந்துக்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்ற தத்துவம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தத்துவம், ஆனால் அதே நேரத்தில், எல்லா ஜாதியினருக்கும், எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும், கோவிலிலே எல்லாப் பணிகளையும் ஏற்றுக்கோள்ளும் வகையில் பூசை, புனஸ்காரங்களை அவர்கள் செய்யும் வகையில், நிலைமைகளை உருவாக்க வேண்டும். அந்த மாதிரி நிலையில் வேதங்களையும், ஆகமங்களையும், கற்றுக்கொள்வதற்கு, கற்றுக்கொண்டு அதிலே தேர்ச்சியும், பயிற்சியும் பெறுவதற்கு என்ன பூர்வாங்கமாக பணிகளை நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டு இருக்கிறீர்கள். ஆந்த பூர்வாங்கமான வேலைகளை மேற்கொள்ளாமல் எல்லோருக்கும் எல்லா நிலையும் தருவோம் என்று சொல்வது அடிப்படை இல்லாமல் கட்டிடம் எழுப்புவதற்கு ஒப்பாகும். ஒரு மாபெரும் சமுதாயம் கொண்டு இருக்கும் மார்க்க உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கவில்லை. அதை மறந்து நீங்கள் செயல்படுகிறீர்கள். ஏதோ வேறு காரணங்களுக்காக இதில் தலையிடுகிறீர்கள் என்பது தான் அதற்கு அர்த்தமாகுமே தவிர சமுதாயத்தில் நீங்கள் எண்ணிப்பார்க்கும் சமத்துவம், இறைவன் சன்னிதானத்தில் அனைவரும் ஒன்று என்ற மெஞ்சான தத்துவத்திற்கு நீங்கள் தருகிற மாபெரும் மதிப்பு என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்தக் கொள்கை விளக்கப்புத்தகத்திலே சொல்லியிருக்கிறீர்கள். எல்லோருக்கும் வேலை கொடுக்கப்படும் என்று, ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எல்லோருக்கும் பயிற்சி தர என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறீர்கள். வேத, ஆகமங்களை பயிற்றுவிக்க வேண்டும் என்று சொன்னால், அதிலே அவர்கள் தேர்ச்சி பெறவேண்டும் என்று சொன்னால், அவர்கள் அதிலே பூர்வாங்க கல்வி கற்கவேண்டும். அந்த வேத ஆகமங்களிலே அவர்கள் நம்பிக்கை வைத்து இருக்கவேண்டும். அந்த நம்பிக்கை வைத்து இருந்தால் தான், அவர்கள் உள்ளூர உணர்வுகளைப் பெற்று, அந்த வேத ஆகமங்களிலே முறையாகப் பயிற்சிபெற்று, செம்மையாக செயல்படமுடியுமே தவிர, அவர்களுக்கு அந்த உணர்வு இல்லாவிட்டால், அந்த அறிவு இல்லாவிட்டால், அந்தக் கல்வி இல்லாவிட்டால், அந்தத் தேர்ச்சியும் பயிற்சியும் இல்லாவிட்டால், நிச்சயமாக அதிலே எந்தவிதமான மான முன்னேற்றத்தையும் நம்மாலே காண முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு.லத்தீப் பேசுகிறபோது ஒருகுறிப்பிட்ட சமுதாயம் தான் வேத ஆகமங்களிலே தேர்ச்சி பெற்று இருக்கிறது. அந்தச் சமுதாயம் தான் கோவிலில் பணியாற்றவேண்டும். எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்படுமானால் அவர்கள் முறையாக அந்தக் கல்வியைப் பெற்று இருக்க வேண்டும் என்ற பிரச்னையை எழுப்பினார்கள். நான் அவர்களிடம் கேட்டுக் கொள்ளவிரும்புவது, அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கோவிலில் அர்ச்சனை செய்கிற போது, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உண்மையாக நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் பழக்கத்திலே அந்தப் பூசையை செய்துகொண்டு வருகிறார்கள். அப்படியிருக்கிற நேரத்திலே அவர்கள் கடவுளை பூசை செய்வதற்கு என்னென்ன வாசகங்களை வைக்கிறார்களோ அதே வாசகங்களை தமிழில் வைத்து மற்ற சமுதாயத்தினரும் அந்தப் பணிகளில் பங்கு கொள்கிற வகையில் தான் இந்த அரசாங்கம் மற்ற சமுதாயத்தினருக்கு வாய்ப்பளிக்க இருக்கிறது. அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இருப்பதாக நான் கருதவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 6-40)

திரு. எம். ஏ. லத்தீப் : இது மிகவும் ஒரு நாசுக்கான விஷயமாகையால் தான் வழக்கத்திற்கு மாறாக மிக நிதானமாக பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒன்றை அவர்கள் சொன்னார்கள்.

அது அவருடைய நிலை. ஆனால் அதைக்கேட்டு நான் வேதனை அடைகிறேன். கோயில்களிலே ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் வேதங்களை ஓதவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அங்கே என்ன ஓதுகிறார்கள் என்பதே தெரியவில்லை என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் என்ன ஓதுகிறார்கள் என்று உங்களுக்கு தெரியாமல் இருக்குமேயானால் அது உங்களுடைய குற்றமாகத்தான் இருக்குமே தவிர ஓதுகிறவர்களின் குற்றமல்ல.

மேலும் நான் சொல்லும்போது ஒரு குறிப்பிட்ட சமுதாயம் தான், ஒரு குறிப்பிட்ட ஜாதிதான் இதிலே ஈடுபடவேண்டும் என்று சொல்லவில்லை. யார் ஈடுபடுவதாக இருந்தாலும் முறைப்படி ஈடுபடவேண்டும். அதாவது கோயிலிலே எப்படி அந்த பூஜை புனஸ்காரங்களிலே ஈடுபடவேண்டுமோ அதிலே அதற்குண்டான அனுகுமுறையிலே ஈடுபடவேண்டும். ஆகமங்கள், சாத்திரங்கள், உபநிஷத்துக்கள் போன்றவைகளை நன்கு தெரிந்தவர்கள் ஈடுபடுத்தப்படவேண்டும். இதற்கெல்லாம் மேற்கொண்டு ஒரு நிலையினை எடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே தக்க முறைப்படி கோயிலே செய்கின்ற அந்தப்பணியிலே ஈடுபடவேண்டும். யாராக இருந்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். நான் ஒரு சமுதாயத்திற்கு என்று சொல்லவில்லை. அந்தச் சமுதாயத்தினர் இன்றைக்கு வேறு நிலைகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கே இடம் இல்லாவிட்டாலும், ஆண்டவன் வேறு இடங்களிலே வருகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறான். இன்றைக்கு அவர்கள் கலெக்டர்கள். இன்ஜினியர்கள் போன்ற நிலைகளுக்கெல்லாம் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் ஒரு சமுதாயத்திற்காகச் சொல்லவில்லை....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது வேதம், ஆகமம் இதைப்பற்றி எல்லாம் கூறுகிறார்கள். அது அவர்களுக்கு அதிகம் தெரிந்திருக்கலாம். ஆனால் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் வேத ஆகமங்களைத் தெரிந்துதான் ஆகவேண்டும் என்பதுதான் அவருடைய வாதமா. அவர்கள் மட்டும்தான் கோயில் பூஜைகளைச் செய்யலாம் என்று சொல்கிறாரா என்பது எனக்குப் புரியவில்லை. முன்னாலே வாழ்ந்த பெரியவர்கள் பலர், அதாவது ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தமிழிலேயே மிக நல்ல முறையில் பாடி கடவுளை வாழ்த்தித் துதித்து இருக்கிறார்கள். ஆகவே முறைப்படி அதற்குள்ள மொழியைக் கற்றுக் கொண்டுதான் வழிபட வேண்டும், பூஜை போன்ற காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்வது தவ .

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, எந்த மொழியாக இருந்தாலும் ஆண்டவனுக்கு தெரிந்த மொழிதான். ஆண்டவனுக்குத் தெரியாத மொழி எந்த மொழியும் கிடையாது.

ஆனால் இன்றைக்கு ஓதுவார்கள் இருக்கிறார்கள். திருவாசகத்தை ஓதுகின்ற ஓதுவார்கள் இன்றைக்கு சரியான முறைகளைக் கடைப்பிடித்து அவர்கள் பூஜை புனஸ்காரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருச்செந்தூர் கோயிலுக்கு எஸ்டிமேட் கமிட்டியுடன் நான் போயிருந்தேன. அப்போது திரு வேழவேந்தன் அவர்களும். வந்திருந்தார்கள். ஜோதி அம்மாள் அவர்களும் வந்திருந்தார்கள். அப்போது அங்கே அந்தக் கோயிலிலே உள்ள ஓதுவார் அவர்கள் பூஜை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் திருவாசகத்தின் ஒரு பக்கத்தை எடுத்து திருச்செந்தூர் சுவாமிக்கு அர்ச்சனை செய்தார்கள். அதன்பிறகு அவரை ஜோதி அம்மாள் அவர்கள் ஒன்று கேட்டுக்கொண்டார்கள். அதாவது முறையாக நடக்கிற வழியிலே நீங்கள் எனக்காக பூஜை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த ஓதுவார் உடனடியாக சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்தார்கள். அவர்கள் எல்லாம் தமிழிலே பயிற்சி பெற்றவர்கள். ஆதலால் சமஸ்கிருதத்திலே சொல்லும்போது கொஞ்சம் தவறாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது நான் அங்கே இருந்தேன். அப்போது நான் கொஞ்சம் திருத்திச் சொன்னேன. உடனே அவர்கள் என்னிடம் 'தாங்கள் யார்' என்று கேட்டார்கள். எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ தெரியாது என்பதுபோல சுவாமிகள் தாங்கள் யார் என்று கேட்டார்கள். அப்போது, திரு. வேழவேந்தன் அவர்கள் லத்தீப் சாமியார் என்று சொன்னார்கள்

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் எந்த ஒரு மொழியாக இருந்தாலும். அதிலே திருப்தி அடைவதிலே ஆட்சேபணை இல்லை, தமிழிலே இருந்தாலும் சமஸ்கிருதத்திலே இருந்தாலும் எந்த மொழியாக இருந்தாலும் நமக்குத்தான் வேறுபாடே ஒழிய ஆண்டவனுக்கு பேதம் கிடையாது, மொழி இல்லாவிட்டாலும் உள்ள உணர்வைத் தெரிந்துகொள்ளவேண்டும்,

ஆகையால்தான் ஆண்டவன் மீது நம்பிக்கைகள் இருக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது, ஒரு முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும், எந்த மொழியைக் கடைப்பிடித்தாலும் ஆட்சேபனை இல்லை, ஆனால் உங்களுடைய தன்மை, நிலை எதிர்க்கும் நிலையிலே இருக்கிறது. பி,ஏ,. பாஸ் செய்ய வேண்டும் என்று ஒரு எஜுகேஷனல் குவாலிபிகேஷன் வைத்திருக்கிறோம். அப்படி எஜுகேஷன் குவாலிபிகேஷன் வைத்திருக்கிறோம் என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட காரியத

திற்கு. ஒரு குறிப்பிட்ட தன்மை இருக்கவேண்டும் என்று சொல்கிறோம். குறிப்பிட்ட குவாலிபிகேஷன் என்று சொல்லும்போது, வேண்டாம் என்று சொல்லலாம்; வேறு காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம், இன்னொன்று........

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, வேதம். ஆகமம், வர்ணாசிரமம் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், எந்த ஜாதிக்காரரர் வேண்டுமானாலும், ஆண்டவனை வழிபடுவதற்காக அவர்கள் பூஜை செய்யலாம் என்று சொன்னால், இந்து தர்மம், ஆகமம் போன்றவற்றில் ஒரு குறிப்பிட்ட ஜாதியை, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று பிரித்து வைத்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, எதையும் செய்யலாம் என்று எடுத்து வைப்பதற்கு ஆகமம் வர்ணாசிரமத்திற்கு எதிரானதல்ல என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மேலெழுந்தவாரியாக இராதா அவர்கள் பார்க்கிறார்கள், இந்த வாதத்தினுடைய நுணுக்கமான விளக்கங்களுக்குள் அவர் செல்லவில்லை. அதனால் தான் அவர்கள் இதைக் கூறுகிறார்கள். வர்ணாசிரம தர்மம் என்று ஒரு தர்மம் இருந்தாலும். எல்லா தர்மத்திற்கும் எல்லா நிலைக்கும் கருமத்தில் உயர்வு அடைந்தால் அதாவது நல்ல காரியம் செய்தால் உயர்ந்தவர், நல்லொழுக்கம் உள்ளவர் உயர்ந்தவர், தீய ஒழுக்கம் உள்ளவர் தாழ்ந்தவர் என்பதைத் தான் இந்த வேதம் வற்புறுத்துகிறது. ஜாதியை வற்புறுத்தவில்லை, பிற்காலத்திலே பேதங்கள் ஏற்பட்டிருந்தாலும், அது சமுதாய அமைப்புகளுக்கு அந்தக் காலத்திலே தோல், செடிக்கும் மரத்திற்கும் தேவைப்பட்டது. செடி மரம் வளர்ப்பதற்கு அப்போது தோல் தேவைப்பட்டது. சமுதாய அமைப்பில் ஒருவன் கர்மத்தால்தான், நல்லவைகளால் தான் ஒழுக்கத்தால்தான் உயர்கிறான். அதைத் தான் இந்த வேதம் வற்புறுத்துகிறது. நந்தனார் கதையைக் கேட்டிருப்பீர்கள். நந்தனார் ஒரு சிவ பக்தன், நந்தனாருக்கு சிதம்பரத்தில் நந்தி இடம் கொடுத்தது என்றால், அப்படிப்பட்ட மனப் பக்குவத்தை அவர் பெற்றிருந்தார். அதைத் தான் நாம் இந்த நேரத்திலே தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, கோவில்களின் சொத்துக்கள் பற்றி, இந்தச் சொத்துக்களை எல்லோருக்கும் பங்கீட்டுத் தரவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது, ஆனால், அந்தக் கோரிக்கையை நீங்கள் தகர்த்து எறிவீர்கள். ஆனால், இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பங்கீட்டுத் தருவதாகக்கூட நீங்கள் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள், இதிலே 10,000 ரூபாய்க்கு குறைவாக

வருமானம் வரக்கூடிய கோயில்கள், 50,000 ரூபாய் வருவாய் வரக்கூடிய கோயில்கள் என்று இப்படி நான்கு பிரிவுகளாகப் பிரித்து இருக்கிறீர்கள். அதிகமாக வருமானம் வரக்கூடிய கோயில்களிலே இருந்து குறைந்த வருமானம் வரக்கூடிய கோயில்களுக்குத் தந்து விடலாம். அந்த வருமானம் எந்த அறக் கட்டளைக்காக வழங்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்குப் போகவில்லை. செத்து விட்டார்கள் என்று நினைத்தால், நாமும் நாளைக்கு சாகவேண்டி வரும், அப்போது நமக்கும் இந்த நிலை ஏற்படும். ஆகவே, எல்லாவற்றிற்கும், குறிப்பாக இந்த உணர்வுகளுக்கு மதிப்பு தரவேண்டும். கோவில் நிலங்களை பகிர்ந்து கொடுப்பது சோஷியலிசமாக இருக்கலாம். ஆனால், அதை வேறு காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டாம். அது ஒரு சமுதாயத்தின் உணர்வை பாதிக்கக் கூடியதாக அமைந்துவிடும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாலை 6–50)

ஒரு காலத்தில் இருந்ததை எல்லாம் நாம் நினைத்துப் பார்க்கலாம். கோவில்களையொட்டித்தான் பல நகரங்கள், பல ஊர்கள் உருவாகியிருக்கின்றன. தமிழ்நாட்டின் நாகரீகம், பண்பாடு இவை எல்லாம் அமைந்திருக்கிறது. மதுரையில் சென்று பார்த்தால், அங்கே நாம் பார்க்கிறோம், கீழ ரதவீதி, மேற்கு ரதவீதி, தெற்கு ரதவீதி, இப்படி கோயிலைச் சுற்றித்தான் வீதிகள் எல்லாம் வருகின்றன. கோயிலையொட்டித்தான் பெரு நகரங்கள் எல்லாம் உருவாகியிருக்கின்றன. கோயில் என்று சொன்னாலே—கோ என்றால் அரசன் என்றுதான் பொருள். நம்முடைய மக்கள் உண்மையாகவே மன்னனுக்கு மன்னனாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற மன்னனுடைய இல்லமாக இருப்பதால்—கோயில் என்று குறிப்பிடுகிறோம். உண்மையிலேயே மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற அந்த தன்மையை நாம் அகற்றி விடக்கூடாது. கோயில்கள் எல்லாம் தமிழ் வளர்ந்திருக்கிறது. தமிழ் இசை வளர்ந்திருக்கிறது. தமிழ் எண்ணங்கள் வளர்ந்திருக்கின்றன. மதுரை கோயில்தான் சிவபெருமான் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து தமிழை வளர்த்தார் என்று சொல்லப்படுகிறது. முருகப்பெருமான் தமிழினுடைய அவதாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் பெரும்பான்மையான மக்களுடைய நம்பிக்கை இருந்து கொண்டு இருக்கிறது. அதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே இங்கே பேசுகிறவர்கள்கூட, இதில் மாற்றம் வேண்டும் என்று பேசுங்கள். அதே நேரத்தில் மற்றவர்களின் உணர்வுகளை தகர்த்தெறியக்கூடிய வகையிலோ அவர்களுடைய எண்ணங்களுக்கு ஊறு ஏற்படும் வகையிலோ பேசுவது சரியல்ல. ஏதோ

சமூக விரோத செயலாக இருக்கின்ற வகையில் அறக்கட்டளை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசுவது நல்லதல்ல என்பதை நான் வற்புறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, மிக வேதனைக்குரிய ஒன்று, கோயில்களில் சிலை திருட்டு நடைபெறுகிறது. அடிக்கடி தமிழ்நாட்டு சிலைகள் திருடு போகின்றன. அதுவும் பூஜையில் இருக்கின்ற மூலவர்கள், மூலஸ்தானங்களில் இருக்கின்ற மூலவர்கள் இன்றைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள் என்று சொன்னால்—ஒரு கொலை செய்தால் ஒரு மனிதன் மடிகிறான். ஆனால் ஒரு கோயிலில் இருந்து சிலை திருடப்பட்டால் அந்த சமுதாயத்தைச் சேர்ந்த இந்து சமுதாயத்தைச் சார்ந்த அத்தனை பேர்களுடைய உள்ளங்களிலும் கத்தி பாய்ச்சப்படுகிறது என்றுதான் பொருள். எவ்வளவோ பெரிய மக்களுடைய உணர்வுகளுக்கு பாதிப்பு. ஒவ்வொரு கோயில்களிலும் மக்களுடைய உணர்வுகளின் கேந்திரமாக இருக்கின்ற மூலவர்கள் திருடப்படுகிறார்கள் என்று சொன்னால் நான் சொல்லுகிறேன், மூலவர்கள் திருடப்படுகிறது என்ற நிலை வந்தால் ஆட்சியினுடைய மூலவர்கள் ஆட்டம் காணுவார்கள். ஆகவே அது ஆட்சிக்கு நல்லதல்ல என்கின்ற வகையில் நான் கேட்டுக்கொள்வது தயவுசெய்து யார் இந்தத் தவறை செய்கிறார்கள் என்பதை கண்டுபிடித்தாக வேண்டும். தவறானவர்களை பிடித்துவிடாதீர்கள், எங்கெங்கேயோ புழக்கடையில் கொண்டு வந்து போட்டுவிட்டு பிடித்து விடாதீர்கள்— அரசியல் காரணங்களுக்காக— நீங்கள் பிடித்துவிடாதீர்கள். (குறுக்கீடு.) ஆக அப்படி ஏதாவது இருந்தால் ஆண்டவன் அதற்கு தண்டனை கொடுப்பான்..............

திரு. துரை கோவிந்தராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அமைச்சரவை தவறாக எங்கேயோ எதையோ கொண்டு போய் போட்டு விட்டுப் பிடித்துவிட்டதாக ஒரு தவறான தகவலை இந்த மன்றத்திற்கு தருகிறார்கள். இது சரியா............

திரு. எம். ஏ. லத்தீப் : நான் எந்த குறிப்பிட்ட இடத்திற்கும் போகவில்லையே, நீங்கள் ஏன் அங்கே போகிறீர்கள், தயவு செய்து நீங்கள் அங்கேயெல்லாம் போக வேண்டாம். ஆக, எது செய்தாலும், இதய தூய்மையாக இருக்க வேண்டும். நல்ல நோக்கம் இருக்கவேண்டும். நீதி நிலைக்க நம்முடைய நிலையை உருவாக்க வேண்டும். அதுதான் நிலைக்கும், இல்லாவிட்டால் நிலைக்காது. இதுதான் தர்ம நீதி, இதற்கு மாறுபாடாக எதுவும் நிலைக்காது.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள இரண்டு மூன்று விஷயத்தைப்பற்றி சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். திருக்கோயில் என்ற சஞ்சிகை வெளியிடுவதாக இந்த கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். கடந்த தடவை எனக்கு நான்கு ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வந்து கொண்டிருந்தது. இப்போது அந்த சஞ்சிகை எனக்கு வருவதில்லை. என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை 'திருக்கோயில்' வெளியிடுவது இல்லையா ? இல்லாவிட்டால் லத்தீப் ஆச்சே எதற்காக இவருக்கு அனுப்பவேண்டும் என்று நினைக்கிறார்களா ? என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அது வந்து கொண்டிருந்தது எனக்கு நிறுத்தப்பட்டு இருந்தால் அது கண்டனத்திற்குரியது. எனக்கு ஏன் அனுப்பப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாணியம்பாடியில், பாலாற்றின் இரு கரைகளிலும் ஒரு கரையில் சைவத்தின் மூலக்கோயிலாக ஒரு கோயில் இருக்கிறது. இன்னொரு கரையில் வைஷ்ணவத்தின் மூலக்கோவிலாக இன்னொரு கோவில் இருக்கிறது. ஏன் மூலக்கோயில் என்று சொல்லுகிறீர்கள் என்று சொல்லுவார்கள். இன்னும் சொல்லுகிறேன். இதை ஆராய்ச்சி செய்து பாருங்கள். தமிழ் நாட்டு நாகரீகத்திலே— முதல் நாகரீகம் பாலாற்று நாகரீகம்தான். அதற்குப் பிறகுதான் பொருனை ஆற்று நாகரீகம், அதற்குப் பிறகுதான் காவேரி ஆற்று நாகரீகம். சோழர் காலத்தில் உருவானது, பின்னால் பாண்டியன் காலத்தில் நிலைநாட்டப்பட்டது. இதற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது முதல் நாகரீகமாக இருப்பது, பாலாற்று நாகரீகம்தான். இதற்கு ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. இன்றைக்குக்கூட அங்கு இருக்கின்ற அகத்தீஸ்வரர் ஆலயம் என்று ஒன்று இருக்கிறது— வாணியம்பாடிக்கு பக்கத்திலுள்ள பழைய வாணியம்பாடி என்ற ஊரில் இருக்கிறது. அந்த ஆலயத்தை வந்து பாருங்கள். அங்குள்ள சிலாசாசனத்தைப் பார்த்தாலே நீங்கள் புரிந்து கொள்ளமுடியும். எவ்வளவு புராதனமானது என்பதை புரிந்துகொள்ள முடியும். அதை திருப்பணி செய்வதற்கு மூன்று இலட்சம் ரூபாய் அரசாங்கம் அந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்திருப்பதாக சொல்லி இன்று ஆறு, ஏழு ஆண்டுகளாகியும் அது என்னவானது என்று தெரியவில்லை.

அதேபோல் தான் சுந்தரப்பெருமாள் கோவில் என்ற கோவில் வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருக்கக்கூடிய மிகப் பெரிய வைஷ்ணவ ஸ்தலம். அது இன்றைக்கு மிக மிக க்ஷீண திசையில் இருக்கிறது. அந்துடன் இதன் சிலாசாசனங்களை பார்த்தால் வேதனையாக இருக்கிறது. எவ்வளவு பெரிய கோவிலாக இருந்தது, இன்றைக்கு கேட்பாரற்றுக் கிடக்கிறதே என்று வேதனையாக இருக்கிறது.

இவ்வளவு பெரியகோயில், இன்றைக்கு கேட்பார் அற்று
சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றன.
காரணம்; நான்கூட காரணம். இதற்கு நாமும்
பிக்கை இல்லாமல் போனதும் ஒரு காரணம். கோயில்களின்பேரில் நம்
லும், இந்த இரண்டு கோயில்களும் பராமரிக்கப்பட எப்படி இருந்தா
இப்படிப்பட்ட பிரசித்திப்பெற்ற இந்த இரண்டு கோயில்களையும் வேண்டும்.
பாதுகாக்க வேண்டும். காரணம், பாலாற்றின் கரையிலே
இருந்துதான் பின்னர் காவிரிக்கரைக்கு நாகரீகம் பரவிற்று
எனவே, பாலாற்றின் கரையிலே இருக்கும் அகத்தீஸ்வரர் கோ
லையும், இன்னொரு பக்கத்திலுள்ள அழகுபெருமாள் கோயில்
அதாவது சுந்தரப்பெருமாள் கோயிலையும், ஆம்பூரிலே உள்ள
திருநாகேஸ்வரர் கோயிலையும், வைகுண்ட பெருமாள் கோயி
லையும், பள்ளிக்கொண்டாவிலே உள்ள பள்ளிக்கொண்ட பெரு
மாள் கோயிலையும், இப்படி வரும்போது, பாலாற்றங்கரையிலே
இருந்து காஞ்சிக்கு வருகிறோம். காஞ்சியும் பாலாற்றங்கரை
யிலே இருக்கின்றது; அண்ணா அவர்கள் பிறந்த பிரசித்தி பெற்ற
ஊர். அன்றக்கு நாகரீகத்திலே மிகச் சிறந்து விளங்கிற்று.
இந்தக் கோயில்களை எல்லாம் தயவுசெய்து, திருப்பணி செய்
வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று
நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அகத்தீஸ்வரர்
கோயில், வாணியம்பாடி., சுந்தரப்பெருமாள் கோயில், வாணியம்
பாடி, திரு நாகேஸ்வரர் கோயில், ஆம்பூர், வைகுண்ட பெருமாள்
கோயில், ஆம்பூர், இங்கே ஒரு கல்யாண மண்டபம் கட்ட ஏற்பாடு
செய்யப்பட்டது. ஆனால் இன்றைக்கு வரையிலும் எந்தவித
மான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதை
எல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்
இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி
கூறி அமர்கிறேன்.

***திரு. பொ. உத்திராபதி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்
களே, இந்து அறநிலையக் கட்டளை மானியக் கோரிக்கையின்மீது
நான் சிலகருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு
நாம் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, இரு குரல்கள் வந்தி
திருக்கின்றன. ஒரு பக்கம் கோயில் நிலத்தை எடுக்கவேண்டும்
என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கம்
எடுக்கக்கூடாது என்ற குரலும் எழுப்பியிருக்கிறார்கள். நான்
சொல்வதெல்லாம், நமது அடுத்த மாநிலமான கேரளாவில்
1970 ஆம் ஆண்டு முஸ்லீம் லீக், காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட்
கட்சி உள்ளிட்ட கூட்டணி ஆட்சி அன்றைக்கும் நடந்து கொண்டு
இருந்தது, இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அந்த
ஆட்சியிலே பத்மநாபஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான
நிலத்தை எடுத்து, அங்கிருக்கக்கூடிய உழுகின்ற குத்தகைதாரர்
களுக்கு, விவசாயிகளுக்குச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். அந்த

நிலத்தை எடுத்து, சர்வ கட்சி குழு அமைக்கப்பட்டு, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். அடுத்த மாநிலத்தில், அப்படி கொடுக்கின்றபோது, அந்த சுவாமி வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தக் கோவிலிலே உள்ள பணியாளர்களுக்கு, ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தக் கோயிலுக்கு அதன் மூலம் வருமானம் கிடைக்கின்றது. அது கொடுக்க முடியும். இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் தமிழகத்திலே செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சிறிய கோயில்களைப் பற்றி பிரச்னை இல்லை.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் தியாகராஜ சுவாமிக்கு 7,000-க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலத்தை ஒரு தனிப்பட்ட மனிதர்** என்பவர் வைத்துக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு தி.மு. கழகமும், அண்ணா தி.மு. கழகமும் ஒன்றாக இருந்த காலத்தில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில், திருவாரூரில் தியாகராஜ சுவாமிக்கு உள்ள நிலத்தைப் பார்த்து,

'' ஏர் ஓட்டும் உழவனுக்கு நிலம் இல்லாதபோது
தேர் ஓட்டம் உனக்கு ஏன் தியாகராஜா''

என்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்த நிலங்களை எல்லாம் எடுப்போம், இந்த நிலத்தை நம்பி வாழ்கின்ற ஏழைகளுக்குக் கொடுப்போம் என்று அன்றைக்கு இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது சொன்னது, இன்றைக்கும் பசுமையாக நினைவிலே இருக்கின்றது.

அதேபோல், அன்றைக்கு 1960-லே சட்டம் வருகின்றபோது, பெரிய நிலப் பிரபுக்கள் எல்லாம் கட்டளை என்ற பெயரால் அவர்கள் குடும்பத்திலேயே வாரிசு வாரிசாக, யார் முதலிலே செத்தாலும், அதற்கு அடுத்தவர், அதற்குப்பின் அதற்கு அடுத்தவர் என்று நிலத்தை வைத்துக்கொண்டு, தங்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்கக் கூடிய வகையிலே, அன்றைக்கும் சட்டத்தை ஏமாற்றி, ஆயிரக்கணக்கான பேர்கள் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பக்கம் 255) அகற்றப்பெற்றது.

அதேபோல் திருத்துறைப்பூண்டி கோயிலில் இருக்கக்கூடிய நிலத்தில் பெரும்பகுதியை பினாமியாக வைத்திருக்கிறார்கள். அந்த நிலத்தை எல்லாம் எடுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். அப்படிச் சொல்லுகிறபோது கம்யூனிஸ்ட் கட்சி பக்தர்களுக்கு விரோதமாகவோ அல்லது கோயில்களை இடிக்கவேண்டுமென்றோ சொல்லவில்லை. கோயில்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். கோயில் வேலை செய்யக்கூடிய இலட்சக்கணக்கான ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக மாற்றுங்கள். அதேநேரத்தில் அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான நிலத்தில் சுமார் 60,000 குத்தகை விவசாயிகள் உழுது கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாறாக 200 ஏக்கரை, 300 ஏக்கரை தன் பெயரால், தன் மகன் பெயரால், தன் மனைவி பெயரால், தன் மருமகன் பெயரால் பினாமியாகக் குத்தகைக்கு வைத்துக் கொண்டு ஒரே நபர் பெரும் பண்ணையாக வைத்துக்கொண்டு நடத்துகிறார். அந்த நிலங்களை எல்லாம் எடுத்து நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் அப்படிக் கொடுப்பதன் மூலம்தான் தமிழகத்தில் உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். இந்த அடிப்படையில் உண்மையான குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கவேண்டும். குத்தகை விவசாயிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக வெள்ளம், புயல், வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசாங்கமே அங்கீகரித்திருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுடைய குத்தகைகளை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7–00)

மனைக்கட்டைப் பொறுத்தவரை இன்றைக்கு தமிழகத்திலே மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் வெகு விரைவில் எல்லோருக்கும் மனைப்பட்டா கொடுப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் தமிழகத்திலே பெரும்பகுதி குடியிருக்கக்கூடிய இடங்கள் அத்தனையும் கோயில் இடங்கள். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் திருத்துறைப்பூண்டி நகரம் பூராவும் 5 சதவிகிதம் போக 95 சதவிகிதம் பேர் கோயில் மனையில்தான் குடியிருக்கிறார்கள். அதே போன்றுதான் வேதாரண்யத்திலும், அதே போல்தான், தஞ்சையிலும், அதே போல்தான், மன்னார்குடியிலும், தமிழகம் பூராவும் 90 சதவிகிதம் பேர் கோயில் மனையில் தான் இருக்கிறார்கள். அந்த இடத்தை அவர்களுக்கே பட்டா வழங்க அறநிலைய அமைச்சர் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கருணை இல்லம் என்று நடத்துகிறார்கள். கோவிலுக்கு 50 குழந்தைகளை வைத்துப் பராமரிக்கிறார்கள். வரவேற்கிறோம். அவர்கள் அநாதைக் குழந்தைகள். ஆனால் என்ன நடக்கிறது ? உண்மையில் 50 குழந்தைகளையும் வீட்டில் குழந்தைகளைப் பாதுகாப்பது போல் , பாதுகாக்கிறார்களா ? அந்த அளவுக்குக் கிடையாது. திருத்துறைப் பூண்டி கோவிலில் பார்க்கிறேன். அவர்களுக்கு நல்ல உணவு கிடையாது. நல்ல உடை கிடையாது. ஆனால் செலவுக் கணக்கு எழுதுகிறார்கள். என்ன பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. இதையெல்லாம் சரி செய்து அந்தக் குழந்தைகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கோயில்களுக்கு அறங்காவலர்களாக யாரை வேண்டுமானாலும் போடுங்கள். எங்கள் கட்சியைப் பற்றி அதிலே பிரச்சினை இல்லை. அறங்காவலர் என்று எந்தக் காலத்திலே போட ஆரம்பித்தார்களோ அன்றிலிருந்து கோவில் பொருளாதாரம் எப்படி சீரழிக்கப்பட்டது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தயவு செய்து எங்கள் மாவட்ட அமைச்சர் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலே நிறையக் கோயில்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கோட்டூரில் கோயில் இருக்கிறது. அங்கே அறங்காவலர் போடப்பட்டு அவர் எல்லா வற்றையும் சாப்பிட்டு விட்டார். சாப்பிட்டுவிட்டால் கூட பரவாயில்லை. கோயிலுக்குள் என்னென்ன செய்யக்கூடாதோ அவ்வளவு செய்தார். அந்த சாமி அவரை நன்றாக வாழ வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. சாமியிடம் பக்தியுள்ளவர்கள் வாழ வழிவகை இல்லை. சாமி சொத்தை கொள்ளையடிக்கிறவர்கள் வருஷா வருஷம் நிலம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள், சாமி அவர்களைத்தான் வாழ வைக்கிறது. இது போன்று தமிழகத்திலே நிறைய நடை பெற்றிருக்கிறது.

தமிழகத்திலுள்ள முக்கால்வாசி சாமிகள் அமெரிக்காவுக்கு குடியேறிவிட்டது. லண்டனுக்குக் குடியேறிவிட்டன. அங்கே இருந்து சிவபுரம் நடராஜரை சம்மன் செய்து கைது செய்யப் பட்டு இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திருட்டுப் போன சாமியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். லத்தீப் அவர்கள், எப்படித் திருட்டுப் போகிறது, ஏன் திருட்டுப் போகிறது என்று கேட்டார்கள். பதினைந்து வருஷத்திற்கு முன்பு எங்காகிலும் கோயில் திருட்டுப் போனதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமா ?

அன்றைக்கு இருந்த அறங்காவலர்கள் எப்படி இருந்தார்கள் எப்படி பாதுகாத்தார்கள் ? ஆனால் 10 வருடங்களுக்குள் ? கோயில்களின் நிர்வாகம் எவ்வளவு சீர்கேடாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எதிர்காலத்திலே நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் கோயில்களை எந்த அளவிற்கு

பாதுகாக்கவேண்டுமோ பாதுகாத்துக்கொள்ளுங்கள், எந்த அளவிற்கு பக்தர்களைப் பாதுகாக்கவேண்டுமோ பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஆனால் அந்தக் கோயில்களிலே பணியாற்று கின்ற லட்சக்கணக்கானவர்கள் சென்னையிலே ஒரு மாநாட்டை நடத்தி கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். பினாமியாக வைத்துக்கொண்டு, சட்டத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும். அதன் மூலம் அந்தக் கோயில்களுக்கு எந்தவித பாதகமும் வராது. அந்த வருமானத்தை அரசாங்கமே நேரடியாக ஏற்றுக்கொண்டு கோயில்களின் நிர்வாகத்திற்கு வேண்டிய செலவுகளைக் கொடுத்து 1 மூட்டை அரிசி தேவையென்றால் 2 மூட்டைகூட கொடுங்கள், ஆனால் அறங்காவலர்கள் என்ற முறையிலே இடைத் தரகர்கள் கையில் கொடுக்காமல் அரசாங்கமே நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

<u>திரு. இரா. அமிர்தராஜ்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் மாண்புமிகு அமைச்சர் இராம வீரப்பன் அவர்கள் இந்து அறநிலையத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர்தான் அந்த புண்ணிய ஸ்தலங்கள் எல்லாம் புனிதமாக ஆக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இந்த மன்றத்திலே தி.மு.க.வும் அண்ணா தி.மு.க.வும் ஒரே கொள்கையை வைத்திருக்கிறார்கள், பெரியாரின் கொள்கையை வைத்திருக்கிறார்கள் என்று பாராட்டிப் பேசினார்கள். இன்று இந்து மக்களுக்கான வர்ணாசிரம கருத்துக்களை ஆதரித்துப் பேசினார்கள். அவர் எப்படி வேண்டுமானாலும் பேசுவதில் சிறந்த ஆற்றல் உள்ளவர் என்பதால் நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்...............

<u>திரு எம். ஏ. லத்தீப்:</u> தவறான நோக்கம் கற்பிக்க வேண்டாம். அந்த அந்த நிலைமைகளுக்கு அந்த அந்த தன்மைகள் இருக்கவேண்டுமென்றுதான் சொன்னேன். அந்த நிலை இருக்கிறது என்று சொன்னால் அந்த தன்மை இருக்கிறது என்று சொன்னேன். அந்தத் தன்மை உங்களுக்கு இருக்கிறது என்றால் அந்த தன்மையோடு இருங்கள், இல்லாவிட்டால் பேசாமல் இருங்கள்.

<u>திரு. இரா. அமிர்தராஜ்:</u> அறநிலையத் துறையைச் பொறுத்தமட்டில் எனது தொகுதியில் உள்ள திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குப் பாத்தியப்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்களை குத்தகைக்கு தனியார்கள் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் வருடந்தோறும் சரியாகக் கொடுக்காமல் பாக்கி வைத்திருக்கிறார்கள், நெல் போன்ற தானியங்களையும் சரியாகக் கொடுக்கவில்லை, அப்படிப்பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலுவையை வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் ஆலயத்திற்கு வருகின்ற யாத்திரீகர்கள் தங்கு வதற்கு அங்கே 3 கூடங்கள் கட்டப்பட்டன. தங்குகின்ற யாத்திரீகர்கள் தங்களுடைய பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் அவர்கள் தங்குவதற்கும் தான் கட்டி வைத்தார்கள். ஆனால் அந்தக் கூடங்களிலே யாத்திரீகர்கள் வந்து தங்குவதற்கு இடம் கொடுக்காமல் அவர்களுடைய பொருள்களை வைப்பதற்கும் இடம் கொடுக்காமல் ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட பொருட்களை சேமித்து வைத்திருக்கிறார்கள். வருடந்தோறும் லட்சக்கணக்கான யாத்திரீகர்கள் வருகிறார்கள். ஆகவே அந்தக் கூடத்தில் இருக்கின்ற அந்தப் பொருட்களை எடுத்து அதைக் காலி செய்து யாத்திரீகர்கள் வந்தால் அவர்கள் தங்குவதற்கும் அவர்களின் பொருட்களை வைப்பதற்கும் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் ஆலயத்திலிருந்து வருகின்ற வருமானத்தை குத்தாலம் பராசக்தி மகளிர் கல்லூரி பராமரிப்புக்கும், சங்கரன் கோவில் பராமரிப்பிற்கும் கொடுக்கப்படுகிறது. குத்தாலம் பராசக்தி மகளிர் கல்லூரிக்கு 75 ஆயிரம் ரூபாயும், சங்கரன் கோவில் பராமரிப்புக்கு 45 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப் படுகிறது. அந்த ஆலயம் இருக்கிற இடம் திருச்செந்தூர் அந்த திருச்செந்தூர் நகரத்தில் எந்தவிதமான உதவியும் அந்த ஆலயத்திலிருந்து செய்யப்படவில்லை அந்தப் பகுதியில் இருக்கின்ற செந்தில் ஆண்டவன் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள் பழுது அடைந்து சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. ஆகவே அந்தக் கட்டடங்களை பாரமரிப்பதற்கு அந்த ஆலயத்தின் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-10)

கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் திருச்செந்தூருக்கு வருகை தந்த நேரத்திலே, அந்த ஆலய நிதியிலிருந்து சுமார் எட்டு இலட்சம் ரூபாயை, கண் மருத்துவ

மனைக்கும், பிரசவ விடுதியும் அமைக்க வேண்டுமென்று, இன்றைய தினம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் போடப்பட்டிருக்கிறது. பிரசவ விடுதியும், கண் மருத்துவமனையும கட்ட வேண்டுமென்று, சுமார் இருபது ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆடம்பரச் செலவு செய்யப்பட்டு, வரவேற்பு கொடுக்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த இரண்டு மருத்துவ மனைகளுக்காகவும். பொதுமக்கள் அந்த அடிக்கல்லைப் பார்த்து விட்டு இது சுமைதாங்கிக் கல்லாக மாறிவிட்டது என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு அந்த நிலையை மாற்றி, அந்தக் கண் மருத்துவமனையும் பிரசவ விடுதியும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த ஆலயத்திற்கு வருஷத்திற்கு 300 கோட்டை நெல் பச்சரிசியாக ஆக்கப்படுகிறது. அப்படிப் பச்சரிசியாக்கப்படும் பொறுப்பைத் தனியார் ஆலை ஏற்றிருக்கிறது. வருஷந்தோறும் அளவுக்கு அதிகமாக அந்த ஆலையில் அறைக்கப்படுவதால், ஆலயங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் அதிகமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். எனவே, அந்த ஆலயமே அறவை மில்லை வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குவிண்டால் நெல்லைச் சேமித்து வைத்துப் பாதுகாக்கக்கூடிய சேமிப்புக் கிடங்கு அந்த ஆலயத்தில் இல்லை. எனவே, அங்கே ஒரு சேமிப்புக் கிடங்கை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கந்த சஷ்டி சமயத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள் அந்த ஆலயத்திற்கு வருகிறார்கள். ஆனால், வருகின்ற பக்தர்களுக்குத் தேவையான விடுதிகள் கிடைப்பதில்லை. இருக்கின்ற விடுதிகளையும் வெளியிலே உள்ள தனியார்கள அதை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, 7 ரூபாய், 15 ரூபாய் என்ற அறைகளை 200 ரூபாய், 300 ரூபாய் வரையில் ஒருவார காலத்திற்குப் பக்தர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தனியார் விடுதிகளில் பக்தர்களிடத்தில் அபரிமிதமான வாடகையை கந்த சஷ்டி திருவிழா சமயத்தில் வசூலிக்கிறார்கள். இதைத் தடுக்கக்கூடிய குழுவையோ அல்லது நல்ல நடவடிக்கையையோ எடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, குலசேகரம்பட்டிணத்தில் முத்தாரம்மன் கோயில் இருக்கிறது. அங்கு முன்பிருந்த குழுவினர் கல்யாண மகால் ஒன்றைக் கட்டினார்கள். பொதுமக்களைப் பொறுத்தவரையில் அந்தக் கல்யாண மகால் கட்டியதில் ஊழல் நடந்திருபபதாகவும், பண முறைகேடு நடந்திருப்பதாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கல்யாண மகால் கட்டப்பட்ட கணக்கைச் சரி பார்க்க, உடனடியாக அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஆலய நிதிகளிலிருந்து கல்லூரிகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பலயிடங்களில் கல்லூரிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் திருச்செந்தூர் ஆலயம், தமிழகத்திலே மிகப்பெரிய ஆலயம், அதிகப்பணத்தை வருவாயாகத் தரும் ஆலயம். அந்தப் பகுதியில் ஒரு கல்லூரி கூட இல்லை. ஆகவே, அமைச்சரவர்கள் அங்கே பெண்கள் தொழில் பயிற்சி கல்லூரி ஒன்றை அமைத்துந் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் உடன்குடியில், மின்சாரத் துணை நிலையம் சப் ஸ்டேஷன் அமைக்க நிலம் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலையில், செட்டியாபத்து சிதம்பரேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை எடுக்க வேண்டுமென்று கமிஷனருக்கு மனு அனுப்பி, ஆறு மாத காலமாகியும் இந்த நிலத்தில் துணை மின் நிலையம் அமைக்கலாம் என்ற அனுமதி மின் கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு வந்து சேரவில்லை. அதையும் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில், காட்பாடி தொகுதியில், மகாதேவர் கோவிலையும், பெரணமல்லூர் தொகுதி, வடபாதி மங்கலத்தில் உள்ள மகாதேவர் கோவிலையும் சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் ஆலய நிதியிலிருந்து அந்தத் திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட இடங்களில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்து அறநிலையத் துறையின் சார்பாக இன்றைக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் உலகத்திலேயே மிகவும்

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 17

தொன்மை வாய்ந்த பழம்பெரும் நாகரீகங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழ் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிற இந்து சமயத்தைத்தான் இன்றைக்கு மற்றவர்கள் வெகு சுலபமாக தாக்கிப் பேசக்கூடிய நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. உலகத்திலே எந்த ஒரு மதமுமே இந்த அளவுக்குத் தாக்குதலுக்கு ஆளாவதில்லை, ஆனால் இன்றைய தினம் நம்முடைய இந்து சமயம் ஒன்றுதான், நம்முடைய இந்து சகோதரர்களாலேயே அது சர்ச்சைக்குரிய ஒரு மதமாக மாற்றப்பட்டு, மற்றவர்கள் நம்மைப் பார்த்து நகைப்பதற்கு இடமளிக்கும் வகையில் அவர்கள் ஆக்கிவிட்டார்கள்.

இன்றைக்கு அறக்கட்டளைகளைப் பொறுத்த வரைக்கும் கோயில்களுடைய சொத்துக்கள் பாதுகாக்கப்படவேண்டும். கோயில்களுக்கு எழுதி வைக்கப்பட்ட அந்தச் சொத்துக் களிலே வரக்கூடிய வருமானங்கள், அந்தக் கோயில்களுடைய உற்சவங்களையும், கோயில்களுடைய அன்றாட நிர்வாகங்களை நடத்துவதற்கும் பயன்பட வேண்டுமென்ற உயர்ந்த, சீரியநோக் கத்தோடுதான் இந்த அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த அறக்கட்டளைகளைப் பாதுகாக்க வேண்டிய, அற நிலையத் துறையின் சார்பாக இன்றைக்கு அறங்காவலர்கள் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த ஒரு நோக்கத்தின் அடிப்படையில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் களோ அந்த நோக்கத்தையே தகர்த்தெறியக்கூடிய நிலைமைகள் கடந்த காலத்தில் நாட்டில் நடைபெற்று வந்தன. அறங்காவலர் கள் என்று சொல்லக்கூடியவர்கள், கொள்ளையர்களை விட படுமோசமான நிலையில், அன்றைக்குக் கோயில், சொத்துக் களை, அவர்கள் ஏப்பம் விட்டிருக்கிறார்கள். அம் மாதிரியான கோயில் சொத்துக்கள் அறங்காவலர்களால் எந்த அளவு பரா தீனம் செய்யப்படுகிறதோ அந்த அளவில் அவர்கள் மீது கடுமை யான நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் முன் வர வேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், சிவன் சொத்து குலநாசம் என்று சொல்வார்கள். ஆனால், அப்படி கோயில்களுடைய சொத்தைத் தின்று ஏப்பம் விட்டவர்கள்தான் இன்றைக்கு நன்றாக கொழு, கொழு என்று இருக்கிறார்கள். ஆகவே, கோயில்களுடைய சொத்து எந்த அளவிலும், எந்த நிலையிலும் பாதுகாக்கப்பட வேண்டு மென்பதில் நம்மிடையே இருவித கருத்துக்கு இடம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன் றைக்கு நம்முடைய இந்து சமயத்தைப் பொறுத்த வரைக்கும் இந்து சமயங்களுடைய சொத்துக்கள் மிகவும் அனாதையாகி விட்டன. இன்றைக்குக் குத்தகைதாரர்.....................

1979 ஏப்ரல் 17]

திரு எம். ஏ. லத்தீப்: நம்முடைய சேலம் ஆறுமுகம் அவர்கள் பார்ப்பதற்கு கொழு கொழு என்று இருக்கிறார்கள். என்ன காரணம் என்று.......... (சிரிப்பு)

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரே ஆறுமுகம். அல்லல் படுபவர்களுக்கு ஆறுதல் தருவதற்காகத்தான் இந்த ஆறு தலை கொண்ட ஆறுமுகம் இருக்கிறேனே தவிர, கோயில் சொத்துக்களை ஏப்பம் விடக்கூடிய வன் நான் அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். நானே ஒரு சாமி. அதுவும் தகப்பன் சாமி.

இன்றைய தினம் நம்முடைய தமிழகத்திலே உள்ள இந்த நிலக் குத்தகை தாரர்கள் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தச் சட்டத்திலே உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு சில நிலத் திமிங்கலங்கள், நிலக் கிழார்கள் என்று சொல்லக் கூடிய பெரு நிலச்சுவான்தார்கள், சில பெயர்களிலே, அவற்றை அந்தக் கோயில் நிலங்களை பினாமியாகக் குத்தகை எடுத்துக் கொண்டு, ஆக்கிரமித்துக் கொண்டு, பல ஆண்டுகளாக குத்தகை கொடுக்காத நிலைமை நாட்டிலே இருந்து வருகிறது.

இந்துசமய அறக்கட்டளைகளைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு தமிழ்நாட்டில் ரூ. 19 கோடி அளவுக்கு குத்தகை வசூலாகாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, ரூ. 19 கோடி குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள்—இன்றைக்குச் சிறுசிறு குத்தகைதாரர்கள் என்று சிலரை ஊர்வலமாக விட்டு, நாட்டிலே ஆற்றக்கூடிய ஒரு நாடகம் நடந்து கொண்டிருந்தபோதிலும் அவர்களுக்குப் பின்னால், இந்தப் பெரும் பெரும் திமிங்கலங்கள் இருந்து, கோயில்களுடைய சொத்துக்களை ஏப்பம் விடுவது நம்முடைய அமைச்சருக்குத் தெரியாததல்ல. ஆகவே, அந்தக் குத்தகைதாரர் சட்டத்தை திருத்தி, குத்தகையைக் கொடுக் காமல் கோயில் நிலத்தை இப்படி தனியார் சிலர் அபகரித்துக் கொண்டு, ஏகபோக உரிமை நடத்துவதை வெளியேற்றுவதற்கு வேண்டிய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் என்பது, கோயில் நிலத்தில் மூன்று போகம், இரண்டு போகம் நல்ல விளைச்சல் ஏற்பட்ட போதிலும், இன்றைக்கு அந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குத்தகையைத் தராமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சில ஏகபோக ஆதிக்கக்காரர்களை வெளியேற்றுவதற்காக வேண்டி, சட்டத்தைத் திருத்தியாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 17

அது மட்டுமல்ல, இந்த இந்து அறநிலையத் துறையைப் பொறுத்தவரைக்கும் நிர்வாகமும், நீதியும் ஒருவராலேயே பரிபாலிக்கப்பட்டு வருகிறது என்பது அன்றைக்கு நாட்டிலே வேறு எந்த துறையிலும் நடக்காத விசித்திரமான ஒரு சம்பவம். இந்தத் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியால் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அந்த வழக்கைப் பதிவு செய்தவரால் அதற்கான குற்றப் பத்திரிகை தயாரிக்கப்படுகிறது. அவராலேயே சாட்சிகள் தயாரிக்கப்பட்டுகிறது. அவரே அதை விசாரித்து தீர்ப்பு வழங்கக் கூடிய நிலை இந்த இந்து சமய அறநிலையத் துறையிலே தானிருக்கிறது. ஆகவே, நிர்வாகம் வேறு, நீதி வேறு என்ற அடிப்படையில், அந்த நிர்வாகத்திலேயிருந்து நீதியைத் தனியாகப் பிரித்து, நிர்வாகத் துறையிலே பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்கு சென்றுதான் நீதியைத் தேடவேண்டுமே தவிர, அந்தக் குற்றப் பத்திரிகை தயார் செய்து, அவரே தான் தொடுத்த வழக்குக்கு விரோதமாக நீதியை, தீர்ப்பை வழங்கமாட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்திடமிருந்து நீதியைப் பிரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-20)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு கோவிலில் இருக்கிற 10,15 ஆண்டு காலமாக பணியில் இருக்கிற மணியக்கரார் என்று சொல்லப்படுகிற பலபேர் மணியக்காரர்களாகவே இருக்கிறார்கள் அவர்ளுக்கு எந்த விதமான பதவி உயர்வும் கொடுக்கப்படவில்லை. அப்படியே இருக்கிறார்கள். அவர்களுக்கு 10 ஆண்டுகள் ஆகி விட்டன என்று சொன்னால், அந்த மணியக்காரருச்கு நிர்வாக அதிகாரி என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட சட்டத்திலே வகை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் காவல் துறையைச் சேர்ந்த பணியில் ஈடுபட்டிருக்கிற கான்ஸ்டிபிளுக்கு கூட சப் இன்ஸ்பெக்டர் ஆக பதவி உயர்வு வருவதற்கு இடம் இருக்கும்போது, மணியக்காரர்கள் மணியை சம்பாதிக்கக் கூடிய நிலைமையில் இல்லாமல், அந்தப் பணியிலேயே தங்களுடைய வாழ்நாளை முடித்து விடக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள கோயில்களில் உள்ள புராதனமான சிற்பங்களும் ஆபரணங்களும் களவாடப்பட்டு வருகின்றன, அது மட்டும் அல்ல உயர்ந்த தங்கத்திலும், வைரத்திலும் செய்து வைக்கப்படும் அவைகளை திருடிவிட்டு, அதற்கு மாற்றாக போலி உலோகங்களைக் கொண்டு செய்து வைத்து விடுகிற நிலைமை இருப்பதாக இன்றைக்கு பேசப்படுகிறது.

1979 ஏப்ரல் 17] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

ஆகவே மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அந்தக் கோயில்களில் இருக்கக்கூடிய ஆபரணங்களை, சிலைகளை மதிப்பீடுகள் செய்வதற்காக அப்பிரைசர் என்ற ஒரு தனி அதிகாரியை நியமித்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, கோயில்களில் இருக்கக்கூடிய சிலைகள், ஆபரணங்களை போட்டோ எடுத்து ஆல்பம் தயாரித்து, அந்த ஆல்பத்தையும், கோயில்களில் அப்போது இருக்கிற சிலைகள் ஆபரணங்களையும் மதிப்பிடுவதற்காகவேண்டிய ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் பணியிலே இருக்கக் கூடியவர்கள் இந்தப் பணியிலே பதவி உயர்வு பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளமும் மிகவும்குறைவு. தமிழகத்திலே இருக்கிற கோயில்களில் வேலை செய்யும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும். அதனால் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் அத்தனை சலுகைகளும் அவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்கள் பணிக் காலத்தில் இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும்

இன்றைக்கு நமது மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். நமது நாட்டில் சிலைகள் அதிகமாக திருடுபோவது பற்றி, அதுவும் பிள்ளையார் சிலைகள் தான் அதிகமாக திருடு போகின்றன என்று சொன்னார்கள். நம்முடைய பழக்கத்திலேயே சொல்வார்கள் திருட்டுப் பிள்ளையாருக்குத்தான் சக்தி அதிகம் என்று. ஆகவே நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும் யார் அப்படிச் செய்வது என்று. ஆகவே சிலை திருடியவர்கள் யாராக இருந்தாலும் சரி நிச்சயமாக அவர்களை கடுமையாக தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி சிலை திருடுபவர்களுக்கு அந்த கோயிலில் பணிபுரியக் கூடிய நிர்வாகிகள் உடந்தையாக இருக்கிறார்களோ என்று சந்தேகப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள கோயில்களில் விலை உயர்ந்த சிலைகளும், ஆபரணங்களும் திருட்டுப் போகாமல் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசினுடைய கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருவாரூரிலே, திருவரங்கத்திலே, மதுரையிலே திருவில்லிபுத்தூரிலே உள்ள கோயில்களில் உள்ள சிற்ப வேலைப்பாடு அமைந்த மரச் சிற்பங்களும் உலோகச் சிற்பங்களும் பாழ் அடைந்து வருகின்றன. வெளிநாட்டுக்காரர்கள் அதிகமாக வருகின்ற இந்த இடங்களில் உள்ள கோயில்களுக்கு அந்த சிற்பங்

களுக்கும் சிலைகளுக்கும் பராமரிப்பு செய்து கொடுத்து பாதுகாக்க வேண்டியது நம்முடைய அரசின் கடமை. நம்முடைய அமைச்சர் அவர்களின் துறை சார்பாக இவை பாதுகாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஒரே நிர்வாக அதிகாரி பல கோயில்களை நிர்வாகம் பார்க்க வேண்டியிருப்பதால் எந்தக் கோயிலிலும் செம்மையாக பணியாற்ற முடிவதில்லை. அதற்காக நிர்வாகியை ஒரு கோயிலுக்கு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்துக் கொடுக்கப்பட வேண்டும்

இன்றைக்கு பல இடங்களில் இருக்கிற பழமையான பழக்க வழக்கங்களை அறநிலையத் துறையில் இருக்கக் கூடிய பணியாளர்கள் நடைமுறையில் மாற்றி வருகிற அந்த நிலைமையை போக்க வேண்டும். அவர்கள் அந்தப் பழமையை தொடர்ந்து செய்ய வேண்டும். அந்த நிலைமையை அப்படியே பாதுகாப்பதற்கும், புராதன பாரம்பரிய உரிமைப்பெற்றவர்களுக்கு, அவர்களுக்குரிய மரியாதை தொடர்ந்து காட்டப்படுவதற்கும் அங்கே இருக்ககூடிய அதிகாரிகளுக்கு நம்முடைய அரசின் சார்பாக உத்தரவு இடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் புராதன பாரம்பரிய உரிமை பெற்றவர்கள் அலட்சியப் படுத்தப்படுகிறார்கள். பழமையான சில பழக்க வழக்கங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி புகார்கள்கூட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த பழைய பழக்க வழக்கங்களை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்றும், நியாயமான உரிமைப் பெற்றவர்களுக்கு அவர்களுக்குரிய மரியாதை காட்டப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. கா. வே. கந்தசாமி : மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை மானியக் கோரிக்கை மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிதனை தெரிவித்து, என் உரையை ஆரம்பிக்கிறேன். தமிழ் நாட்டில் மிகப் பெரிய ஸ்தலமானது பழனி கோயில்தான். தமிழ் நாட்டில் இருக்கும் கோயில்களிலே அதிகப்படியான வரவு அந்தப் பழனியில்தான் இருக்கிறது. சென்ற 5 6 ஆண்டுகாலமாக 1971-ல் இருந்து பழனி கோயிலில் பூசைகள் சரிவர நடைபெறாமல் இருந்ததால் மலையாளத்தில் இருக்கின்ற ஐயப்பன் கோவிலுக்கு பக்தர்கள்

எல்லாம் அதிகப்படியாக சென்று கொண்டிருந்தார்கள். இப்போது 2 ஆண்டு காலமாகத்தான் பழனி கோயிலில் ஏதோ ஒரு சுமாரான முறையில் பூசைகள் நடைபெறுவதால் இப்போது பழனி கோயிலுக்கு தமிழ்நாடு பக்தர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். வனத்துறையில் கவனம் செலுத்திக் கொண்டு இருக்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்த அறநிலையத்துறையிலும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். வனத்துறையில் கிடைக்கின்ற மரங்களை வெட்டி வீழ்த்திவிடாமல் காப்பாற்றும் வகையில் சட்டத்தில் இருக்கின்ற ஓட்டை உடைசல்களையெல்லாம் அடைத்துக் கொண்டு வரும் அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் இந்த அறநிலையத்துறையிலும் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளை அடைக்க—செம்மையாக அடைக்க வேண்டும், அதற்கு அமைச்சர் அவர்கள் இன்னும் திறமையைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பழனியில் **ஒருவரே 200 கடைகளுக்குச் சொந்தக்காரராக இருக்கிறார். அவர் கோவில் நிலங்களில் கடைகளைக் கட்டிக் கொண்டு பலவிதமான விபூதி, பன்னீர் போன்றவைகளை வைத்துக் கொள்ளை அடித்து வருகிறார். அந்தக் கடைகளை எல்லோருக்கும் பிரித்துத்தரவேண்டும். வருஷத்திற்கு ஒரு முறை ஏலம் கொண்டு வரவேண்டும். அவர் எருமை சாணியை எரித்து விபூதி தயாரித்து பல உலக நாடுகளுக்கு அனுப்பி, பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக்கொண்டு இருக்கிறார். அதையும், அந்தப் பழனி கோயில் மூலமாக அந்த விபூதியைத் தயாரித்து தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் அனுப்பி, அனைவரும் நல்ல முறையில் விபூதி பெற ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஆதிஸ்வரன் கோயில், திருப்பணிக்கு, முன்னாலே இருந்த அரசு 1 இலட்சம் ரூபாய் அளித்தது. அந்த 1 இலட்ச ரூபாயில் மதிற் சுவர் கட்டுவதாக இருந்தது. அன்று இருந்த ஆட்சியாளர்கள் அந்தக் கோவில் பணத்தை எடுத்து அதற்காக 25,000 ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். 75,000 ரூபாய் கொள்ளை அடித்து இருக்கிறார்கள். அதையும் நன்கு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க (பக்கம் 255) அகற்றப்பெற்றது.

தமிழ் நாட்டு கோவில்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு ஆங்காங்கு பத்திரிக்கைக்கு விளம்பரம் வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அவர்கள்கேட்டுக் கொண்டதாகச்சொல்லி, கோவிலில் பணம், செக்குகள் வாங்கி வைத்துக் கொண்டு மோசடி செய்தது இந்த அரசுக்கு நன்கு தெரியும். இருந்தபோதிலும் அவர்கள் பேரில் இன்னும் சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை. அதையும் எடுக்க வேண்டும்.

என்னுடைய ஊரில் —பொள்ளாச்சியில்— உள்ள சுப்பிரமணியச் சுவாமி கோவில் கட்டுவதற்கு ரூபாய் 50,000 பழனி கோவிலிருந்து வாங்கிக் கொடுத்தார்கள். அதைச் செய்வதற்காக பணி ஆரம்பிக்கப்பட்டு, குழி மட்டும் பறித்து விட்டுச் சென்று விட்டார்கள். அந்தக் குழிகள் அப்படியே இருக்கின்றன. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அந்தக் கோவிலுக்கு— அந்த சுப்பிரமணியர் கோவிலுக்கு பழனி கோவிலில் இருந்து 1 இலட்சம் ரூபாய் பெற்று அந்தக் குழிகளையும் நிரப்பி, கடைகளையும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டு இருக்கிற அறநிலையத் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த அறநிலையங்களைப் பாதுகாப்பதில் தங்களுடைய அக்கரையையும் ஆர்வத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் போன்றவர்கள் சிவன் சொத்து நன்கு காக்கப்பட வேண்டும் அல்லது அது மற்றவர்களுக்கு ஏதோ கெடுதலாக வந்து விடும். விஷ்ணு சொத்துக்கள் இந்த நாட்டிலே எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற அந்த நோக்கத்திலா என்பது எனக்குத் தெரியவில்லை.

(இரவு 7.30)

சிவன் சொத்தைச் சாப்பிடுகிறவர்கள்தான் இந்த நாட்டிலே இன்றைக்கு சாவார்கள் என்கிற கருத்தை வைத்து அவர்கள் சொன்னார்கள். அந்த நேரத்திலே நான் கூட எண்ணிக்கொண்டிருந்தேன். இன்னபிற சாமிகளின் சொத்துக்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட சொத்துக்களும் காக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும். இங்கே பலபேர் சொல்லுகிறபோது, இந்த ஆலயங்களில் ஊழியர்களாக இருக்கின்ற 50 ஆயிரம் பேர்களும்

அரசு அலுவலர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் அப்படி ஆக்கப்பட வேண்டும் என்று சொல்கின்றபோது அந்த 50 ஆயிரம் பேர்கள் ஆலயங்களிலே பணிபுரிகின்றபோது 19 கோடி ரூபாய்க்கு மேல் வரவேண்டிய வசூலைச் செய்ய முடியாத நிலையிலே பல கோயில்கள் இருக்கின்றன. அதாவது 6 கால பூஜை, 7 காலப் பூஜை என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் ஒரு காலப் பூஜை கூட நடக்காமல் இன்றைக்கு பல்வேறிடங்களிலே கோயில்கள் சாத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் அதிகமான நிலங்களை உள்ளடக்கிய ஆலயங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை ஆண்டாண்டுகாலமாக வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் தாங்கள் வழங்க வேண்டிய குத்தகைப் பாக்கியைத் தராத காரணத்தால் இந்த நிலை இருக்கிறது. நாம் எல்லாம் திராவிட உணர்வு கொண்டவர்கள். கோயில் என்று சொன்னால் அது கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதைத்தான் அன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அதை இந்த ஆலயங்கள் நாட்டில் எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னார்கள். அதே நேரத்தில் அதிலே உள்ள காரண காரியங்களின் உள்ளே புக வேண்டும் என்ற அந்த உணர்வோடு சொல்லவில்லை. பண்டைய மூதாதையர்கள் எல்லாம் எந்தெந்த காரணங்களுக்காக அந்த ஆலயங்களுக்குத் தங்களுடைய சொத்துக்களை எழுதி வைத்து அவை பராமரிக்கப் படவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு வைத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சொத்துக்களை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு குத்தகை கட்டாமல் இருந்துகொண்டிருக்கிறார்களே, அதற்காக வேறு வகையிலே பல்வேறு சட்டத்தைப் போட்டு அவைகளின் மூலமாக அந்தப் பாக்கிகளை வசூல் செய்வதற்கு ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னாலும்கூட அந்த ஆலயத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை பலபேர் தனித் தனியாக எடுத்துக் கொண்டு வாடகை கொடுக்காமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக அந்தக் கோயில்களிலே பூஜைகள் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் அரசுக்குச் சொந்தமான ஆலயங்களின் நிலங்களிலே சில மடாதிபதிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மடாதிபதிகள் பெரிய பெரிய நிகழ்ச்சிகளை நடத்தி, முக்கியமான பெரிய பெரிய ஆட்களை அழைத்து அவர்களை மகிழ்வித்து வருகிறார்கள். இதனை நாட்டிலே பலபேர் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அதை அரசும், அமைச்சரவர்களும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய மரியாதைக்குரிய ஆறுமுகம் அவர்கள் எடுத்துச்

[திரு. துரை கோவிந்தராசன்] [1979 ஏப்ரல் 17

சொல்கிறபோது ஒன்றைத் தெரிவித்தார்கள், அதாவது இந்த ஆலய ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்று சொன்னாலும் 15 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை சம்பளம் பெறுகின்ற ஏறத்தாழ 50 ஆயிரம் பேர்களை உள்ளடக்கிய இந்த ஆலயத்தினுடைய பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில், அதாவது கோயில்களிலே பூஜை ஒழுங்காக நடப்பதற்காக அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில் ஆலயத்திற்கு சேரவேண்டிய 20 கோடி ரூபாயை வசூல் செய்வதற்கு உடனடியாக, சட்டங்களை இயற்றி யார் யாரிடத்தில் இருந்து வசூல் செய்ய வேண்டுமோ அவர்களிடமிருந்து ஆலயத்திற்கு சேரவேண்டிய தொகையை வசூல் செய்கிற அளவுக்கு மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். நீண்ட காலமாக கட்டிடங்களைக் கட்டி வைத்துக் கொண்டு, அதாவது குத்தகை என்ற பெயராலே பல ஆலயங்களைச் சேர்ந்த கட்டிடங்களை வைத்துக் கொண்டு இருக்கின்ற நிலையை மாற்றி அரசினுடைய சட்டத்தின் மூலமாக அப்படிப் பட்ட நிலங்களை அரசே எடுத்துக் கொண்டு அல்லது ஆலயத் திற்கு அதைச் சொந்தமாக்கி அதனை வாடகைக்கு விடுகிற ஒரு நிலையைக் கொண்டுவந்து அந்த ஊழியர்களைக் காப்பாற்றுகிற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் இன்றைக்கு அந்தச சார்புடைய மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டிக் கொணடிருக்கிறார்கள் என்றாலும், மேலும் அவர்கள் வரவேற்கின்ற வகையில் அந்தத் துறையை அவர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு அறநிலையத்துக்குச் சொந்தமான நிலங்களை பெரிய நிலச்சுவாந்தார்கள் எடுத்துக்கொள்கிறார்கள். என்று பேசுகிற போது, கம்யூனிஸ்ட் உறுப்பினர் கூட கோடிட்டுக் காட்டினார்கள். அந்த நிலங்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்கு மற்ற மா நிலத்தில் இருப்பது போல் நாமும் வழங்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைகு அந்த நிலங்களையெல்லாம் பெரிய நிலச் சுவாந்தார்கள் தங்களுக்குச் சொந்தமாக மற்றவர்கள் பெயரில் வைததுக்கொண்டு ஏறத்தாழ 30, 40 அல்லது 50 ஏக்கர் என்ற அளவிற்கு கூலி விவசாயம் செய்து அதற்குச் செலுத்த வேண்டிய வரியை செலுத்தாத காரணத்தால் சில ஆலயங்களில் செய்ய வேண்டிய காரியங்கள் செய்யப்படாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்

1979 ஏப்ரல் 17] [திரு. துரை கோவிந்தராசன்]

கிறேன். முன்னாள் ஆட்சியைச் சொல்லவில்லை என்றாலும்
இன்றைக்கு ஆலயங்களில் விக்ரகங்கள், சிலைகள் வெகு இடங்
களில் காணப்படாமல் இருந்தாலும், வைக்கப்பட்டிருக்கிற சிலை
கள் கூட உண்மையான சிலைகளா அல்லது பழைய சிலைகள்
வெளியே போகிற அளவிற்கு, அமெரிக்கா போன்ற வெளி நாடு
களில் இங்கே இருக்கிற புராதன சிலைகளுக்கு அதிகமாக மதிப்பு
இருக்கிறது என்ற அடிப்படையில் அவையெல்லாம் வெளிநாடு
களுக்கு கடத்திச் செல்லப்படுகின்றன. கடத்தியவர்கள்
அறங்காவலர்களை என்று மட்டும் சொல்ல மாட்டேன்.
பல்வேறு வகைகளில் கடத்தப்பட்ட அந்தச்
சிலைகள் எல்லாம் மீண்டும் தமிழகத்திற்கு கொண்டு
வரப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சிலைகள் கொண்டு
வரப்பட்டது மட்டுமல்லாமல் இன்னும் தொடர்ந்து
அந்தச் சிலைகளை கடத்துகின்ற வேலை நடைபெற்றுக்கொண்
டிருக்கின்றன. கடத்திக்கொண்டிருக்கின்ற அந்த வேலையை
விரைவில் தடுத்து நிறுத்தி இந்த தமிழ்நாட்டின் கலாச்சாரத்
திற்குச் சொந்தமான அந்தச் சிலைகள் இனி கடத்தபடாத
அளவிற்கு சட்டங்களைப் போட்டு மிகக் கடுமையான தண்ட
னையை அளிக்க வழிவகை காண வேண்டும் என்று இந்த நேரத்
தில் நான கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு நம்
முடைய மரியாதைககுரிய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்
கள் ஏதோ இந்த ஆட்சியில் இப்படிப்பட்ட தவறுகள் இருக்
கின்றன என்றும் அவைகளையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்
என்றும் கோடிட்டுக் காட்டினார்கள். எங்களுக்கு இருக்கும்
அக்கறையெல்லாம் இந்த நாட்டில் வைக்கப்பட்டிருக்கிற, வணங்
கப்படுகின்ற, அந்தச் சிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். கடத்திச் செல்வதை தடுத்து
நிறுத்தும் அளவிற்கு, அப்படிக் கடத்தி செல்பவர்களுக்கு கடுமை
யான தண்டனை அளிக்கத் தக்க வகையில் ஒரு சட்டத்தைக்
கொண்டு வந்து அந்தச் சிலைகளைப் பாதுகாப்பதோடு அற
நிலைய துறையின் மூலம் 20 கோடி ரூபாய் வருமானம் வந்தும்,
அந்தத் துறையில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான
ஊழியர்களுக்கு பாதுகாப்பு தருகிற வகையில் இந்த அரசு வழி
வகை செய்ய வேண்டும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி
முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(இரவு 7-40.)

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இன்று அவை முன்பு தமிழக அரசின் சார்பாக வ்வாதத்
திற்கு வைக்கப்பட்டுள்ள இந்து அறநிலைய பாதுகாப்பு மான்
யத்தை வரவேற்று கீழ்க்கண்ட எனது கருத்துக்களை சுருக்கிக்
கூற ஆசைப்படுகிறேன். இந்து மதத்தினுடைய புனிதத் தன்மை

[திரு. கே. கந்தசாமி] [1979 ஏப்ரல் 17

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் பார்க்கிறோம்.
காஞ்சீபுரத்தைக் காட்டுகிறோம். இன்னும் எல்லோராவைக்
காட்டுகிறோம். இப்படி மிகவும் புராதனமான கோவில் சித்தி
ரங்களைக் காட்டுகிறோம். சிற்பங்களைக் காட்டுகிறோம்.
அந்தச் சித்திரங்களில் உள்ள கலை உணர்வுகளை நாம் காட்டு
கிறோம். அவைகளை யெல்லாம் ஒத்துக் கொள்கிறோம்.
ஆனால், இதிலே மைய மூலபீடமாக உள்ள தெய்வத்தை'
சுவாமியை ஒத்துக் கொள்ளவில்லை, என்றால் அது என்ன
நியாயம? அப்படி ஒத்துக்கொள்ள வேண்டிய உரிமை நமக்கு
இருக்கிறது. ஆனால், அதைப் புரிந்துக்கொள்ளவில்லை என்றால்
என்ன நியாயம்? ஆனால், நிந்தனை செய்யக்கூடாது.

காஞ்சீபுரத்திற்கு மடத்திற்கு சென்றிருந்தோம். அங்
குள்ள சாதுக்களையும், சுவாமிகளையும் பார்த்தோம். அவர்
கள், வழக்கமாக இருந்து போகட்டுமே, அதனால் என்ன
என்று சொன்னார்கள். அதற்கு நாங்கள், தேர் வந்தால்,
சுவாமி ஊர்வலம் வந்தால் இடைஞ்சலாக இருக்காதா என்று
கேட்டபோது, அவர்கள் சாதுக்கள் பயந்து நாங்கள் என்ன
செய்வது, கூட்டம் பாட்டிற்கு வந்து போகட்டுமே என்று பதில்
அளித்தார்கள், இது எப்படி இருக்கிறது என்றால், 'குட்ட
குட்ட குனியவும் கூடாது, குனியக் குனியக் குட்டுபவன்
முட்டாள்' என்று எங்கள் தேவர் பெருமான் சொன்னார்கள்.
என்னைப் போன்றவர்கள் இந்து மதத்தைப் புரிந்து கொள்பவர்
கள். சாதாரணமாக, மூடப் பழக்கத்தை கொண்டு ஏமாற்றும்
கூட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ''உள்ளத்தில்
உள்ளார் அடி'' என்று ராமலிங்க அடிகள் சொன்னார்கள்.
அதைப்போல், ஜாதி சமயங்கள் எல்லாம் தூக்கி எறியப்பட
வேண்டும். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று பேரறிஞர்
அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால், அண்ணா
அவர்கள் சொல்வதற்கு முன்பே இது சொல்லப்பட்டு வந்தது
என்று சொன்னபோது, அவர்கள் அதை ஒத்துக் கொண்டார்கள்.
அப்படி இருக்கின்றபோது, நிந்திப்பது, அவமானப்படுத்துவது,
கேலிப் பொருளாக்குவது ஆகியவற்றுக்கு இடமளிக்கக்கூடாது.
அதே நிலையில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ
சொல்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவிலே நம்பிக்கை கொண்ட
வர்கள்......

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் அவர்கள்
சொல்வதைக் கேட்டுக் கொண்டு வரும்போது, எப்போது அவர்
கள் முடிக்கிறார்கள் என்பதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

திரு. கே. கந்தசாமி: எனக்குத் தெரியும், இப்படிப்பட்ட
பேச்சுக்களில் அவர்களுக்கு அதிகமாக 'அட்ராக்ஷன்' இருக்காது
என்று. என்றாலும், நாங்கள் எங்கள் கடமையை ஆற்ற
வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். ஜனநாயகப்படி நாங்
கள் கூறவேண்டிய கடமை இருக்கிறது. இதிலே மெஜாரிடி
யாக இருக்கக் கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனாப் லத்தீப்
அவர்கள்கூட தெளிவாகச் சொன்னார்கள். அவர்கள் பேசியதை
வின்சென்ட் அவர்களும், சந்திரன் அவர்களும், என்ன சொல்
கின்றீர்கள், ஒன்றுமே புரியவில்லை என்று சொன்னார்கள்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்):
தலைவர் அவர்களே, நான் ஒன்றும் அதை ஏளன
மாகச் சொல்லவில்லை. லத்தீப் அவர்கள் சொன்
னார்கள். நிலையைப் பற்றியும், தன்மையைப் பற்றியும்
பேசினார்கள். அப்படிப் பேசும்போது, ஆரஞ்சுப் பழத்திற்கும்
தோலை வைத்திருக்கிறேன், மரத்திற்கும் தோலை வைத்திருக்
கிறேன் என்று அவர்கள் ஆரம்பத்திலே பேசிய காரணத்தினால்,
இந்த நிலை, தன்மை விளங்கவில்லை என்றுதான் பேசினேன்.
இது குற்றச்சாட்டாக இல்லை.

திரு. கே. கந்தசாமி: அவர்கள் இப்படி விளக்கம் சொல்லத்
தேவையில்லை. அவர்கள் கெட்ட நோக்கத்தோடு பேசவில்லை.
நல்ல நோக்கத்தோடு தான் எதை எதைப் பற்றியெல்லாம் பேசி
னார்கள் என்பதைச் சொன்னார்கள். அவர்களுக்கே புரிய
வில்லை என்று சொன்னார்கள். சாதாரண கிராம மக்களுக்கு
எப்படிப் புரியும்? ''கல்லைப் பார்த்தால் நாய், நாயைப்
பார்த்தால் கல்'' என்பதைப் போல், சித்திரத்தைக் காணும்
போது, பக்தன் ஆண்டவனைக் காண்கின்றான், சிற்பி அதன்
கலையைக் காண்கின்றான். ஆனால், சாதாரண மக்கள் கிரா
மத்திலே இருக்கின்றவர்களுக்கு கல்லாகத் தோன்றும். ஆகவே,
அவர்கள் கலையைக் காணவில்லை. கல்லைத் தான் காண்
கின்றார்கள். கல்லை, தெய்வம் என்று சொன்னால், அதை
ஒரு சர்ச்சையாக எடுத்துக்கொண்டு, விவாதிக்கக் கூடாது.
'அன்பே தெய்வம்' என்று நாம் அனைவரும் ஒரு கருத்திற்கு
வந்தபோது, முதலிலே வேறுபாடு இல்லை. ஆகவே, இந்த
அளவிலே நிறுத்திவிட்டு, இன்று தமிழக அரசு பெரியார் அவர்
களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்காக ஒரு

கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு ஆண்டு தொடர்ந்து கொண்டாடுவதாகக் கூறியிருக்கிறார்கள். நீங்கள் கொண்டாடு வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

(இரவு 7-50)

சட்டமன்ற விடுதிக்குள் நுழைகிற வாயிலில் அண்ணா சிலைக்கு எதிரிலே அண்ணா சாலையில் பெரியார் நூற்றாண்டு விழா என்று சொல்லி ஒரு போர்டு வைத்து அதிலே சில வாசகங் களை எழுதி வைத்திருக்கிறார்கள். அரசு அனுமதியோடோ அல்லது அரசோ அதை வைத்திருக்கிறது என்றுதான் கருது கிறேன். அதிலுள்ள சில வாசகங்கள் பலர் மனதைப் புண் படுத்தும். காலையில் பேப்பர் வாங்கப்போகும்போது கிராமத்திலிருந்து சட்டசபைக்கு வருகிறவர்கள் பலர் அதைப் பார்த்து ஏன் இப்படி எழுதி வைத்திருக்கிறார்கள் என்று கேட்கிற நிலை இருக்கிறது. ஒரு கருத்தைப் பரப்புவதில் ஆட்சே பணை கிடையாது. ஆனால் அதே நேரத்தில் பிறர் மனதைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது. ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தொண்டர்களாகிய நீங்கள் அந்த மாதிரி எழுதி வைப்பதை அனுமதிக்கக்கூடாது. அந்த வாசகங்கள் என்ன என்று நீங்களே போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெரியார் நூற்றாண்டு விழா ஆண்டையொட்டி ஒரு புத்த கத்தை வெளியிடுவதற்காக ஒரு அமைப்பை வைத்திருப்பதாகக் கருதுகிறேன். அதிகாரிகள் மூலம் செய்தால் சரி வராது. ஒரு கமிட்டி போடவேண்டும். உங்கள் அரசு சார்பாக இருக்கக்கூடிய சிலரைப் போடுவதோடு இந்து மதத்தில் நம்பிக்கையுடையவர்களையும் உறுப்பினர்களாகப் போட்டால் யார் மனமும் புண்படாத அளவுக்கு அந்தத் தொகுப்பைப் பிரசுரிக்க ஒத்தாசையாக இருக்கும். தெய்வ நம்பிக்கை யுடையவர்களையும் போடுங்கள். உதாரணமாக மேலவைத் தலைவர் மாண்புமிகு ம.பொ. சி. அவர்களைப் போடுங்கள். ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் கிருஷ்ணசாமி ரெட்டியாரைப் போடுங்கள். இந்து அற நிலையத் துறைத் தலைவராக இருந்த ரெட்டியாரைப் போடுங்கள். அப்படி அவர்களை எல்லாம் குழுவில் போட்டால் ஆட்சேபிக்கக்கூடிய கருத்து அதிலே வராது.

டெம்பிள் லாண்ட்சிலிருந்து 19 கோடி சில்லரை ரூபாய் அரியர்ஸ் வர வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் மிக வேதனையோடு குறிப்பிடுகிறேன். இந்து அறநிலையக் கட்டளை என்று தனியாக ஏன் வைத்திருக்கிறார்கள்? எந்த அடிப்படை நோக்கத்தோடு அறக்கட்டளைகளை ஏற் படுத்தினார்கள்? எந்த மாற்றங்கள் செய்தாலும் அடிப்படை நோக்கத்தை மையமாக வைத்து சூழ்நிலைக்கேற்ப செய்வதில் தவறு இல்லை. 19 கோடி ரூபாய் பாக்கியை சாதாரண மார போரியமாக செய்துவிடக்கூடாது. தஞ்சாவூர் நெற்களஞ்சியம் அங்கே ஒருவர் கூட அங்கே குத்தகை தரவில்லை. கோயில்கள் இருளடைந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. கடைத் தேங் காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கலாம், அது இலேசு. அண்ணா பெயரால் டிரஸ்டை உருவாக்கியிருக்கிறார் கள். தந்தை பெரியார் பெயரால் டிரஸ்டை மூன்று கோடி ரூபாய் அளவுக்கு உள்ள சொத்துக்கு பொதுமக்கள் தந்த அந்தச் சொத்துக்கு டிரஸ்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எதற்காக அவற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சில நல்ல நோக்கங்களை லட்சியத்தை நிறைவேற்ற அமைத்திருக்கிறார்கள். அந்த மாற்ற உரிமை உண்டா? அதே போன்று ஆதியில் அறக்கட்ட ளைகளை ஏற்படுத்தியவர்கள் சில தர்ம காரியங்களுக்காக நல்ல காரியங்களுக்காக, தெய்வ பிரசாரங்களுக்காக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு சாதாரண சட்டத்திலிருந்து அவற்றிற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். நன்றாக நிலத்தில் விளைந்திருந்தும் கோயில்களுக்கு நெல்லை கொடுக்க மறுக் கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலமைச்சர் அவர் களைக் கலந்து குத்தகைதாரர்கள் சட்டத்தை இதற்குப் பொருந் தாது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் கோயில்களைச் சரியானபடி பராமரிக்க முடியும்.

கோயில்களில் பணியாற்றக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு எக்சிகியூட்டிவ் ஆபீசர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்க வில்லை என்று சொல்லுகிறார்கள். தாழ்ந்த நிலையில் இருக்கக் கூடியவர்கள் தஞ்சையில் மாநாடு போட்டார்கள். அவர்களுக்கு என். எம். ஆர். க்குக் கிடைப்பது கூடக் கிடைக்கவில்லை. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேணடும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த மைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நான் அதிக நேரம் பேசப் போவதில்லை. இந்த அறநிலைய மானியத்தின் பேரிலே மதங்களைப் பற்றி நன்கு புரிந்து உணர்ந்தவர்கள் எல்லாம் உரையாற்றினார்கள். நான் அந்த அளவுக்கு அதை யெல்லாம் படித்து பெரிதாகப் புரிந்தவன் அல்ல. ஒன்று மட்டும் நான் சொல்ல முடியும்.

ஸ்பிரிச்சுவலிஸம், மெட்டிரியலிஸம் என்று இரண்டு தத்துவங்
கள் உண்டு. ஸ்பிரிச்சுவலிஸத்தை முறியடிக்க வேண்டும் என்றும்
இல்லையென்றும் நிருபிக்க வேண்டுமென்றால் தர்க்க ரீதியாக
தான் அது முடியும் என்று ஏஞ்சல்சே சொல்லியிருக்கிறார்.
ஸ்பிரிச்சுவலிசம் என்பது ஒரு தத்துவம். அந்தத் தத்துவம்
உணர்வுப் பூர்வமாக சொல்லப்பட்ட ஒன்று. அதை விஞ்ஞான
ரீதியாக நிருபிக்க முடியாது. கடவுள் நம்பிக்கை என்பது
ஒரு உணர்வு. அந்த உணர்வை வெளியே எடுத்துச் சொல்ல
முடியும். கடவுள் எங்கே இருக்கிறார் என்றால் அதை விஞ்ஞானப்
பூர்வமாக நிருபணம் பண்ணமுடியாது. மெட்டீரியலிஸ்ட்களு
டைய வாதம் வேறு. இப்போது கடவுள் நம்பிக்கை பற்றி
நாம் மோத வேண்டிய அவசியம் இல்லை. 20 ஆம் நூற்றாண்
டின் முற்பகுதியில் அது தேவைப்பட்டது. ஐரோப்பிய நாடு
களிலே அரசியல் மாற்றங்கள் விரும்பப்பட்ட போது முற்போக்கா
கான மாற்றம் கொண்டுவருவதற்கு கடவுள் நம்பிக்கையை
ஒழிக்கவேண்டியிருந்தது, மதமும் கிடையாது, கடவுளும் மதமும்
சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாக இருந்தன
என்று அவர்கள் கருதினார்கள். ஆட்சி என்று ஒன்று இருந்தாலும்
அவர்கள் மதத் தலைவர்களின் கட்டளைக்குட்பட்டவர்
களாக இருந்தார்கள். ஆகவேதான் சமுதாய மாற்றத்தைக்
கொண்டுவரவேண்டுமென்றால் மதத்தைச் சாட வேண்டும்.
என்ற நிலைமை இருந்தது, ஆனால் இன்றைக்கு சமுதாயத்திலே
முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால் அப்படிப்
பட்ட நிலைமைகள் இல்லை. நாம் எத்தனையோ சமுதாய
மாற்றங்களை செய்துகொண்டிருக்கிறோம், அதற்கு கடவுளோ,
மதமோ குறுக்கிடவில்லை. ஜமீன் ஒழிப்பு வந்த போது கடவு
ளுக்குச் சொந்தமான சொத்துக்களை எடுத்துவிட்டோம், அப்
போது அவைகள் ஒன்றும் குறுக்கே வந்துவிடவில்லை. இன்னும்
பல மாற்றங்கள் வரலாம், ஆனால் அவைகள் எல்லாம் குறுக்கே
வராது. அதைப்போல் அவைகளை இப்போது நாம் சாடிக்
கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய
கருத்து. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் நாட்டிலே
அதிகமாக இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை பாதுகாக்கப்பட
வேண்டும். அதைப்பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய கடமை
ஜனநாயக அமைப்பிலே செய்ய வேண்டிய பணிகளிலே அதுவும்
ஒன்று. இந்த அறநிலையத் துறை ஒழுங்காக செயல்பட வேண்டு
மென்பதிலே அபிப்பிராய பேதம் கிடையாது. கோவில்கள்
பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே கடவுள் நம்பிக்கை
உள்ளவர்களும் சரி கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் சரி
மாற்றுக் கருத்து சொல்ல முடியாது. இந்த அறநிலையங்கள்
பாதுகாக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டுமென்
றால் எப்படிப் பாதுகாப்பது, எங்கே இருந்து பாதுகாப்பது
என்பது தான் நம்முடைய பிரச்சினை. எனக்கு முன்னாலே
பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். 19, 20 கோடி ரூபாய்

வரை பாக்கிவர வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அது ஏன் வரவில்லை. எப்படி வரவில்லை, நீங்கள் அதை எப்படி வசூல் பண்ணப்போகிறீர்கள் என்பது தெரியுவில்லை. நான் செலக்ட் கமிட்டியில் பல மாவட்டங்களுக்குச் சென்றிருந்த போது பார்த்திருக்கிறேன், கோயில்களிலே இருக்கிறவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்தச் சொத்துக்களை எடுத்துக் கொண்டு அதற்கான நட்ட ஈட்டைக் கொடுத்தால் அதைப் பேங்கிலே போட்டு அதன்மூலமாக வருகிற வருமானத்தை வைத்து கோயில் காரியங்களை நடத்தலாம், குத்தகைக்கு விட்டு ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள் அந்தச் சொத்துக்களைக் கொடுத்தார்கள். எந்த நம்பிக்கையின் பேரிலே கொடுத்தார்களோ அந்த நம்பிக்கை அந்த எண்ணத்திற்கு மாறாக சொத்துக்களை விட்டுவிடக்கூடாது என்பது சிலருடைய வாதம். நடைமுறையிலே பார்க்கின்ற போது நடக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அதிலே மிகத் தீவிரமாக இருக்கிறார்கள். எப்படியும் காப்பாற்றியே தீருவேன் என்று சொல்கிறார்கள். காப்பாற்றுங்கள். ஆனால் நீங்கள் காப்பாற்றுகிற சொத்துக்களிலிருந்து வருவாய் சரியாக வராது, நிரந்தர வருமானம் வராது. அதனால் வீண் வம்பும் சண்டையும் வந்து குத்தகை பாக்கிகளை ரத்து செய்யக்கூடிய நிலைமை தான் வரும். எந்த அரசாங்கமாக இருந்தாலும் ஓட்டைத்தான் பார்க்கும். ஆகவே இது சாத்தியமில்லை. ஆகவே அந்த நிலங்களைக் கொடுத்துவிட்டு காம்பன்சேஷன் வாங்கி அந்தப் பணத்தை வங்கியிலே போட்டு அதன் மூலமாகக் கிடைக்கிற வருமானத்தை வைத்து நிரந்தரமாக வருகிற வருமானத்தை வைத்து கோயில் காரியங்களை நடத்த முடியும். திருக்கோயில்கள் காப்பாற்றப்பட வேண்டும். ஒழுங்காக வேலைகள் நடக்க வேண்டும். கலைகள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும், நீண்ட நெடுங்காலமாக உள்ள கலைகளின் உருவமாக கோயில்கள் திகழ்கின்றன என்பதில் எல்லாம் அபிப்பிராய பேதம் இல்லை. நிலத்தையும் அப்படியே வைத்துக் கொண்டு அவைகளை காப்பாற்றப் போகிறீர்கள் என்று சொன்னால் கடவுளை நீங்கள் காப்பாற்ற முடியாது. இனாம் நிலங்களை எடுத்த போது அன்யுட்டி கொடுத்தார்கள். அதைப்போன்று அதற்காக நட்டஈடு கொடுத்து அதன் மூலமாக வருவாயைப் பெற்று காரியங்களை நடத்த வேண்டும்.

(இரவு 8-00)

அன்யுட்டி கொடுக்கலாம், அதேமாதிரி எதையாவது செய்து ஏற்பாடு செய்ய வேண்டும். இதை வைத்துக் காப்பாற்றுவது என்று நினைத்தால் அது காரிய சாத்தியமில்லை. யதார்த்த நிலையை வைத்துப்பார்க்க வேண்டும், கற்பனையை வைத்துக் கொண்டு பார்க்கக்கூடாது.

வேதம், ஆகமம் ஆகியவற்றைப் பார்த்தால்
இருக்கிறதா. தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்களா [illegible]
பார்த்தால்,— நான் அவைகளை உள்ளே [illegible] இல்லை.
தீண்டாமை என்று இடையாது என்றுதான் [illegible]
கிறார். அதிலே ரொம்ப ஆழ்ந்து [illegible] [illegible]
தர்மத்திலே தீண்டாதவன் என்று வைக்க [illegible]
எங்கும் சொல்லவில்லை என்று காந்தியடிகள் [illegible] வேண்டுமென்று
அந்த நம்பி நான் சொல்கிறேன். சொல்கிறார்.
தீண்டாமையை ஒழிப்பதற்குத் தீவிரமாக ஆகவே, அறநிலையத்
பல கோயில்களில் அரிசனங்கள் அனுமதிக்கப்படவில்லை. [illegible] வேண்டும்.
ஊர்களில் ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், மதுரை பெரிய
கோயில்களிலே உபரிநிலங்களை விட்டாகிவிட்டது. இந்தமாதிரி
நீங்கள் அரிசனங்களை டிரஸ்டியாகப் போட்டாலும் (குறுக்கீடு)
கோயிலுக்குள்ளே போகவில்லை, பல கோயில்களில் அவர்கள்
யிருக்கிறது. இப்படி

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே மதுரையைப்
பற்றி சொல்கிறார்கள். அங்கே நடைமுறையிலே இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பெரிய கோயில்களில் திறந்து
விடப்பட்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் எந்த [illegible]
யைப் போட்டாலும், எட்டித்தான் நிற்கிறார்கள். [illegible]
போகவில்லை. எனவே, நீங்கள் ஒரு முடிவெடுத்து அறநிலை
யத்தில் சேர்க்கப்பட்ட கோயில்கள் எங்கேயிருந்தாலும், அரி
சனங்கள் உள்ளே போய் சாமி கும்பிடுவதற்கு வசதி செய்ய
வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை அறநிலையங்கள்
இருந்தும், அவர்களை ஒதுக்கி வைத்தால் என்ன நியாயம்?
எனவே, இதை அறநிலையப் பணியாக எடுத்துச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் போகும் இடங்களில் பெரும்பாலும் கோயில்களைப்
பார்க்காமல் வருவதில்லை. உள்ளே போய்ப் பார்ப்பேன்.
அங்கே நல்ல கலைகள் இருக்கின்றன. [illegible]
கிறார்கள். ஆனால் அதுபூராவும் வர்ணத்தை [illegible] செதுக்கியிருக்
டிருக்கிறார்கள். போய்ப்பார்த்தால் என்னவென்றே புரிய
வில்லை. கருங்கல் சிலைகளின் மீதெல்லாம் வர்ணத்தைப் பூசி
வைத்திருக்கிறார்கள். முதலில் அதை நிறுத்த வேண்டும்.
அவற்றின் அழுக்குப் பிடித்து விடுகிறது என்று வெள்ளையையோ,
வர்ணத்தையோ பூசுகிறார்கள் போல் தெரிகிறது. அவ்வாறு
இல்லாமல் கருங்கல்லில் சுத்தப்படுத்துவது என்றால் அதற்காகத்
தனியாக ஏதோ கெமிகல்ஸ் எல்லாம் இருக்கிறது. இரண்
டொரு இடங்களில் அப்படியேயும் [illegible] [illegible]
வைத்திருக்கிறார்கள், அது பார்ப்பதற்கு [illegible] [illegible]

இருக்கிறது. மெச்சத் தகுந்த அளவில் அதுஇருக்கிறது. எனவே,
[illegible] கலைகளின் மீது வெள்ளை, வர்ணம் முதலியவற்றை
[illegible] இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதைச் சொல்வதற்காகத்தான் நான் முதலில் எழுந்தேன், அதைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பொறுத்த
வரையில், பல கோயில்களில் ஆறு மாதம் முதல், இரண்டு
[illegible] வரையில் சம்பளம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு
[illegible] போகிறோம்? நாம் சென்று சாமி கும்பிடு
எப்படிக் [illegible] போகிறோம்? நாம் சென்று சாமி கும்பிடு
[illegible] அவன் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்? நாம்
[illegible] அவன் ஏன் பட்டினி கிடக்க வழிபடுவதற்காக அவன் தன்னைத் தானே
[illegible] என்று [illegible] கொண்டிருக்கிறான். அவனுக்குச் சோறு
[illegible] செய்து [illegible] பார்க்க வேண்டும்.
[illegible] என்ன வழி என்று பார்க்க வேண்டும்.

கோயில் பணியாளர்கள் அரசுப்பணியாளர்களாகப் பாவிக்கப்
பட வேண்டுமென்று ஆக்டிலே சொல்லியிருக்கிறார்கள்,
(குறுக்கீடு) அப்படித்தான் அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கி
றார்கள். அந்தமாதிரி இருந்தால் அரசுப் பணியாளர்களுக்கு
நீங்கள் கொடுக்கும் சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க
வேண்டும். அதற்கு அரசு முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

[illegible] இன்றைக்கு நீங்கள் இந்தப் பாக்கியுள்ள சம்ப
[illegible] அறிவித்தாக வேண்டும். கொடுத்து
[illegible] எதைப்பற்றியாவது அறிவிக்க வேண்டுமென்று அறநிலையத்துறை
விடுவோம் என்று அறிவிக்க கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)
அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தெரியாது. அவனுக்குச்
எப்படிச் செய்வீர்களோ எனக்குத் தெரியாது. நாங்கள் எப்படி வழியைச்
சோறு போட்டாக வேண்டும். சம்பளப் பாக்கியைக் கொடுக்க
சொல்ல முடியும்? எனவே, சம்பளப் பாக்கியைக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாக்கி என்னென்ன குறைகள் என்று அவர்கள் சொல்லி
[illegible] அவை உங்களுக்கும் வந்திருக்கும். ஆனால்
முதலிலே சோறு போட்டாக வேண்டும்.

குளித்தலை சட்ட மன்ற உறுப்பினர் சிவாயமலை இரத்தின
கிரீஸ்வரர் கோயில் கோபுரம் புதுப்பிக்கப்படாமல் பாழடைந்
திருக்கிறது. அதைப் புதுப்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை
[illegible] இதையும் கருத்திலே கொண்டு செய்ய
[illegible] கொள்கிறேன். ரொம்பப் பெரிய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்து
கோயிலாக இருக்கும் என்று கருதுகிறேன். கேட்டுக்கொண்டு
கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு
அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்து சமய அற கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை யின்மீது இந்த மாமன்றத்திலே 9 கட்சிகளைச் சேர்ந்த மாண்பு மிகு உறுப்பினர்கள் 14 பேர் கடந்த 3 மணி நேரங்களாக இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் செய்தி, சுற்றுலா, வனம் மற்றும் பல துறைகளையெல்லாம் சேர்த்து ஒரு ½ நாள் மானியக் கோரிக் கைகளுடைய விவாதம் போதும் என்று ஒதுக்கி, இந்து அற நிலையத் துறைக்கு ஒரு நாள் ஒதுக்கியிருக்கிறார்களே என்று நான் அந்த நிகழ்ச்சி நிரலைப் பார்த்தபொழுது புரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது தான் புரிந்தது, அதுவும் காலையிலே அதை இப்போது கொண்டிருந்தால், அவசர அவசரமாக ஒரு மணி நேரத் திற்குள்ளே இந்த விவாதம் முடிவு பெற்றிருக்கும். இதை எடுத்து மானியத்தை நிறைவேற்றி, தந்திருப்பார்கள். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டுமென்ற கோரிக்கையிலே, இதிலே வேண்டாம் என்று சொல் வதற்கு ஒன்றுமே இல்லை. ஆகவே, மாலை நேரத்திலே, இப்பொழுது, இந்த மன்றத்தை நடத்தி, இங்கே மிகப் பெரிய பிரச்சனைகளை விவாதத்திற்கு உரியனவாக ஆக்கி, பல்வேறு உறுப்பினர்களும் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு நாள் தனியான விவாதம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நடைபெற்ற விவாதங்களிலே இருந்து என்னாலே புரிந்து கொள்ளமுடிகிறது. ஆகவே, நான் மிக விரைவிலே விளக்கம் அளித்துவிட்டு, இந்த மன்றத்தின் கூட்டத்தை முடித்து விடலாம் என்றுதான் கருதுகிறேன். என்றாலும், இங்கே பல்வேறு பிரச்சனைகளும் உணர்வுகளும் எழுப்பப்பட்டு இருக்கிற காரணத்தினாலே, அவைகளுக்கு விளக்கம் சொல்கிற அந்த நிலையில், ஏதாவது கொஞ்சம் அதிக நேரமானாலும் மாமன்ற உறுப்பினர்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும். காரணம், இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தவர்கள் இந்த மன்றத்திலே இப்பொழுது இல்லை. ஏனென்றால், அவர்கள் கருத்துக்களை எடுத்து வைக்கிற பொழுது அதற்கு என்ன அரசாங்கத்திலேயிருந்து பதில் அளிக்கப்படுகிறது என்று தெரிகிற பொறுப்போடு அவர்கள் இருப்பார்களானால், அவர்கள் எடுத்து வைக்கிற கருத்துக்களுக்கும் அந்தப் பொறுப்பு, மதிப்பு, மரியாதை, மக்கள் மன்றத்தில் கிடைக்கும் என்ற உணர்வை நான் இந்த மன்றத்தில் எடுத்து வைப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தவறாகக் கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

முதலில், இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பு எடுத்துக் கொண்ட காரணத்தாலே இங்கே சமயங்களைப் பற்றிய கருத்தாடல்கள், கருத்து பரிமாறல்கள் நடைபெற்றன. அது கொஞ்சம் சுவையாகவும் இருந்தது, பலன் உள்ளதாகவும் இருந்தது. ஆனாலும், நான் அரசாங் கத்தின் தரப்பிலே பேசுகிற காரணத்தாலே அதற்குள்ளே நுழைய முடியாது. வெளியிலே பேசுவதானால் என்னுடைய கருத்தை நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் கருத்தைச் சொல்ல முடியும்.

இங்கே பேசிய உறுப்பினர்கள், இந்த அரசாங்கத்தின் மீது, இது ஆரம்பத்திலே ஏதாவது ஊனம் விளைவித்துவிடுமோ என்று அஞ்சினோம். ஆனால், எங்களுடைய அச்சத்திற்கு ஆதாரம் இல்லை. இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக் கிறது. அந்தப் பணிகளை நிறைவேற்றியே தீரும் என்கின்ற உத்தரவாதத்தை நடைமுறையிலே தெரிந்துகொண்டோம் என்று இங்கே இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் சவுந்திரராஜன் அவர் களிலேயிருந்து தொடங்கி, அநேகமாக, அத்தனை உறுப்பினர் களும் இந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள், வரவேற்றி ருக்கிறார்கள். அதற்காக, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பிலே, இந்த அரசின் சார்பிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, நான் இங்கே பேச வேண்டா மென்று கருதினாலும் தந்தை பெரியாருடைய பெயர் இங்கே இழுக்கப்பெற்று அவருடைய கொள்கைகளைப் பற்றியும், இங்கே விவாதிக்கப்பட்ட காரணத்தாலே, அதைப்பற்றி ஒரு விளக்கத்தைத் தரவில்லையானால் பெரியாருடைய அந்தக் கல்லூரியிலே பயின்ற மாணவர்கள் அடங்கிய இந்த அமைச்சு அவை, இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கடமையிலேயிருந்து நழுவியது என்ற குற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை வந்து சேரும் என்ற காரணத்தினால் அந்த விளக்கத்தைத் தருவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 8-10)

பெரியாரைப்பற்றி முதலிலே பேசிய ஜனதா கட்சி உறுப்பினர் பெரியவர் ஜெபமணி அவர்கள் இங்கே இல்லை என்றாலும் நான் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்கிறேன். அவர்கள் மிகத் தெளிவாக தந்தை பெரியார் அவர்கள் எப்படி லட்சியங்களை இந்த நாட்டிலே எடுத்து வைத்தார்கள் அவர்கள் பயன்படுத்திய

மிகச் சிறந்த செல்வங்கள். ஒழுக்க நெறியை அவர்கள் அப்படி
காப்பாற்றினார்கள் என்பதை எடுத்துக் காட்டியதைத் தான் தந்தை
பெரியாருடைய மாணவன் என்ற முறையிலும் இந்த அரசினுடைய
சார்பிலேயும் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி இந்த நாட்டு மக்களுக்கு
ஒருவேளை சரியாக தெரிவிக்கப்படவில்லையோ என்கிற என்
னுடைய அந்த அய்யம்கூட இந்த மாமன்றத்திலே மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்டு தெளிவாகத் தெரிந்துகொள்ள
முடியும் என்ற நிலைமைக்கு நீங்கிவிட்டன. தந்தை பெரியார்
அவர்கள் சில லட்சியங்களை இந்த நாட்டிலே பரப்ப வேண்டும்
என்று விரும்பிய காரணத்தினால், சமுதாயத்தில் அடி
மட்டத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட, நசுக்கப்பட்ட,
அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏழை எளியவர்
களுக்கு உயர்வு கிடைக்க வேண்டும் என்கிற எண்ணத்தினாலே
அதற்காக தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்கள்
அந்த உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக குறுக்கே
வந்தவர்கள் யாராக இருந்தாலும் அந்தத் தடையை நீக்கும்
வேலையில் ஈடுபட்டார். மலையை தகர்க்க வேண்டுமானால்
வெடி வைத்தால்தான் தகர்க்க முடியும் என்ற நிலை ஏற்படுகிற
போது, வெடி வைத்துத் தகர்த்தார். அது கல்லையாக
இருந்து வெட்டிச்சாய்க்க வேண்டுமென்றால், வெட்டிச்சாய்த்தார்,
அப்புறப்படுத்த வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் அப்புறப்படுத்
தினார். அதை எப்படி செய்ய வேண்டுமோ அப்படிச் செய்தார்.
இப்படி அவர்கள் லட்சியங்களை நிறைவேற்றினார்கள். அப்படி
லட்சியங்களை நிறைவேற்றும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்
ஜெபமணி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், அவருடைய 50
ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில், அவர் எந்த சமுதாயத்தை
எதிர்த்து புரட்சி செய்தாரோ, அந்த சமுதாயத்தைச் சேர்ந்த
ஒருவரைக் கூட துன்பப்படுத்தவில்லை, தாக்கவில்லை என்ற
மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியை உலகத்தி
லேயே படைத்துவிட்டு சென்றிருக்கிறவர் தந்தை பெரியார்
ஒருவர்தான் என்பதை அவருடைய மாணவன் என்ற முறையிலே
இந்த மாமன்றத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ பேர்கள் புரட்சி செய்தார்கள், இவரும்
புரட்சி செய்தார். அவருடைய பேச்சிலே கனல் தெறித்திருக்
கிறது. அனல் பறந்திருக்கிறது. புரட்சி ஏற்படவேண்டும்
என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையிலே, நம்
முடைய மாண்புமிகு அருமை உறுப்பினர் ஜெபமணி அவர்கள்
எடுத்துக் காட்டியது போல யாரையும் புண்படுத்தியது இல்லை.
பிள்ளையார் சிலையை உடைக்க வேண்டும் என்று சொன்னபோது

கூட கோவிலில் இருக்கிற பிள்ளையார் சிலையை கொண்டு
வந்து உடை என்று சொல்லவில்லை. பிள்ளையாரைப்போன்ற
ஒரு உருவத்தை செய்து அதைக் கொண்டு போய் உடை
உன்னுடைய உணர்வை காட்டு என்றுதான் சொன்னார்கள்.
இந்த பெருமையான சிறப்பை வரலாற்றிலே தந்தை பெரியார் அவர்
கள் உருவாக்கினார்கள் என்பதை அவருடைய வழி நடப்பவர்கள்
மாணவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள், அவருடைய
அரசியல் வாரிசுகள் என்று பெருமை பேசுகிறவர்களும்கூட
தந்தைப் பெரியாரை அவர்கள் தமது வாழ்க்கையில் சிறப்பான
லட்சியங்களை பரப்புகின்ற நிகழ்ச்சியை கூட எவ்வளவு சாத்வீக
மான முறையில் நடத்திக் காட்டியிருக்கிறார் என்பதை இது
வரையில் புரிந்துக் கொள்ளாமல் இருந்தாலும்கூட இப்
போது அறிந்திருக்க முடியும். அண்ணல் காந்தியடிகள்
சொல்லிய அஹிம்சை சத்தியம் என்பதை தந்தை பெரியார்
அவர்கள் சொல்லாமலேயே தம் வாழ்க்கையில் செய்து
காட்டினார்கள் என்பதை கடந்த 50 ஆண்டு கால அரசியல்
அனுபவம் காட்டியிருக்கிறது. அதை நம்து அருமைப் பெரியவர்
ஜெபமணி அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதற்காக
அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட
பெரியாருடைய பெயராலே அரசுக்கு சொந்தமான பொது
இடத்திலே ஆத்திகர்களுடைய மனத்தை வருத்துகிற விதத்திலே
போர்டுகள் காணப்படுகின்றனவே அது ஏன் என்று கேட்டார்கள்.
நான் ஒன்றை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது
அரசினுடைய அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருக்கிற போர்டு.
ஆனால், அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்ட
போது அது யாருக்குச் சொந்தமான இடம் என்பதிலே சிக்கல் ஏற்
பட்டது. அதன் ஒருகால் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலேயும், இன்
னொரு கால் வெளிலேயும் இருக்கிறது. அந்தக் கால் இருப்பது
ஹைவேஸுக்குச் சொந்தமான பகுதி. அந்தப் போர்டை வைத்
தவர்கள் கலெக்டரிடம் அனுமதி பெற்றார்களா, கவர்ன்
மெண்ட் எஸ்டேட்டினுடைய அதிகாரிகளிடம் அனுமதி பெற்றார்
களா, ஹைவேஸிடம் அனுமதி பெற்றார்களா என்று
தெரியவில்லை. இன்றைக்கு அந்தப் போர்டை வைத்தவர்கள்
யார் என்று அறியும் நிலைமையில் அரசாங்கம் நடவடிக்கை
எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் அப்படிப்பட்ட போர்டை வைக்கலாமா என்று
கேட்கிற அந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிடவில்லை.
அதை வைப்பது அவர்களுக்குள்ள உரிமை. அதை எதிர்க்கும்
உரிமையை மற்றவர்களும் இயற்கையாகவே பெற்று விடு
கிறார்கள். அந்த போர்டை வைக்கும் உரிமை அவர்களுக்கு—
ஒருவருக்கு உண்டு என்றால் அதை எதிர்த்து வைக்கும் உரிமை
மற்றவர்களுக்கும் உண்டு. ஆனால் இப்படி வரக்கூடாது என்பது

தான் தந்தை பெரியார் அவர்களுடைய லட்சியம். பேரறிஞர்
அண்ணா அவர்கள் வழி காட்டும் முறை. அதனால்தான்
தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையார் சிலையை செய்து உடை
என்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் நான் பிள்ளையாருக்குத்
தேங்காய் உடைக்கவும் மாட்டேன், பிள்ளையார்
உடைக்கவும் மாட்டேன் என்று சொன்னார். சிலைவு
இயக்கத்தின், இந்த அரசின், புரட்சித் தலைவரின் கொள்கை
என்பதை இந்தமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
அதுதான் இந்த

ஆகவே, அந்த போர்டை உருவாக்கியவர்கள் தயவு செய்து
மற்றவர்கள் என்ன எண்ணுவார்கள் என்பதைப் பற்றி கவலைப்
படவேண்டாம். ஆனால் பெரியாரின் சீடர்கள் என்பவர்கள்
எண்ணிப் பார்க்கவேண்டும். பெரியாரின் வாழ்க்கையில் அவர்
எத்தகைய எதிராளிகளானாலும் கொள்கையின்படி எதிரிகள்
என்று கருதினார்கள். ஆனால் அவர்களை மதிப்பதிலே
பெரியாருக்கு இணையானவர்கள் தமிழகத்தில் யாரும் இல்லை
என்பதை பெரியாரின் சீடர்கள் உணர்ந்துகொண்டாகவேண்
டும். யாருடைய மனதையும் புண்படுத்த பெரியார் விரும்ப
மாட்டார். அவரைப் பற்றிய சிறப்பே, சிறிய பையனைப்
பார்த்தால் கூட வாருங்கள் என்று தான் சொல்வார்.
என்று சொல்ல மாட்டார். எழுந்து அவர்களைக் கொண்டு வா
போய் கார்வரை விடுகிற அந்தப் பண்பை உலகத்திலே
வேறு எந்தத் தலைவர் பெற்றார்களோ நமக்குத் தெரியாது.
ஆனால் அவர்களுடைய லட்சியங்களைப் பரப்பிக்கொண்டு
வருகிற நாம் மற்றவர்களுக்கு மதிப்பளித்து, அந்த உணர்வுகளை
பரப்ப நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நான் தெரிவித்
துக்கொள்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் பேச
இறபோது, உலகத்திலேயே இந்து மதந்தான் தாக்கு
தலுக்கு ஆளாகி இருக்கிறது. நீங்கள் வேறு ஒரு கிறிஸ்துவ
சர்ச்சிலே போய் சொல்ல முடியுமா என்று எல்லாம் கேட்டார்கள்.
ஜெயமணி அவர்களும் கேட்டார்கள் என்று கருதுகிறேன்.
நான் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்துகிறேன். சேலம்
முகம் அவர்களும் கேட்டார்கள். அவர்களுக்கும் நான் ஒன்றை
நினைவு படுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். உலகத்திலே
எல்லா மதத்திலும் பகுத்தறிவுவாதிகள் தோன்றி இருக்கிறார்
கள். இந்து மதத்தில் மாத்திரம் தோன்றவில்லை.
மதத்தைச் சீர்திருத்தவேண்டும் என்று தோன்றிய பெரியவர்கள்
எல்லா மதத்திலும் தோன்றி இருக்கிறார்கள். இந்
பகுத்தறிவு இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் வெளியிடப்பட்
''பகுத்தறிவு'' அல்லது ''மரண சாசனம்'' என்ற நூல் ஒ
50 ஆண்டு காலத்திற்கு முன்னாலே சுய மரியாதை இயக்க
திலே தந்தை பெரியார் அவர்களால் வெளியிடப்பட்ட நூல

எழுதியவர் ஜான் மெஸ்லியர் என்ற ஒரு பாதிரி. அவர் வாழ்நாள் முழுவதும் பாதிரியாராக இருந்து கடைசியில் கண் மூடுகிற நேரத்தில் உண்மையை உணர்ந்து என்னுடைய வாழ்நாளில் எனது மனத்திற்குத் தெரிந்து தவறைச் செய்து கொண்டு இருந்தேன். என்று மரண சாசனம் எழுதி வைத்ததைத்தான் தமிழகத்திலே பெரியார் அவர்கள் பகுத்தறிவு இயக்கத்தின் பெயராலே பகுத்தறிவு அல்லது மரண சாசனம் என்ற பெயரில் புத்தகத்தை வெளியிட்டார்கள்.

<u>திரு கே. கந்தசாமி:</u> பாதிரியார் அவர்கள் பகுத்தறிவுக் கருத்தை தந்தை பெரியார் அவர்களுக்குக் கொடுக்கிற அளவிற்கு மரண சாசனம் என்ற புத்தகத்தை எழுதியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர் ஒரு கிருஸ்டியன் என்று கருதுகிறேன். கிருஸ்டியனாக இருப்பாரானால்—நான் கிருஸ்துவ மதத்திற்கு, கிருஸ்துவர்களுக்கு அளவு கடந்த மரியாதையும், அன்பும் வைத்து இருப்பவன் என்று முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்—ஆகவே, யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது—கிருஸ்துவ மதத்தில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றி எந்த அளவிற்கு கண்டித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக விளக்கம் கூறியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன், இந்து மதத்தைமட்டும்தானா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> இந்து மதத்தைப் பற்றிப் பேசவில்லை. கிருஸ்துவ மதத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். அப்படி ஒவ்வொரு மதத்திலும், அந்தந்த மதத்தைச் சீர்திருத்துவதற்காக ஒவ்வொரு நேரத்திலும் பெரியவர்கள் தோன்றி, அதைப் பற்றியகுறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவேகானந்தர் அவர்கள் கூட இந்து மதத்தில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உத்தமர் காந்தியடிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மூதறிஞர் ராஜாஜி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு இயக்கம், ஒரு பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்வது என்பது ஏதோ இந்து மதத்திற்கு மாத்திரம் வந்து இருக்கிறது என்ற உணர்வை நாம் கொள்ளவேண்டாம். அதே நேரத்தில் நான் அதைத்தான் முன்னாலே சொன்னேன், சொல்கிற கருத்துக்களை மற்றவர்கள் மனம் புண்படாமல் எடுத்துச்சொல்லவேண்டும் என்பது தான் பெரியார் அவர்கள் இந்த நாட்டிலே கற்றுத் தந்து இருக்கிற அரசியல் நாகரீகம், பண்பு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்குப் பிறகு, இன்றைக்கு இந்து சமய அறநிலையத் துறை பற்றி பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு சிறிய விளக்கத்தை நான் தெரிவிக்க

இந்தக் கணக்கை தவ்வுசெய்து தெரிந்துகொண்டு, அதற்கு
மேல் நாம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும், அரசு
என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் மாண்புமிகு காங்
கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.
எப்படியும் செய்யவேண்டும் என்றும், என்னுடைய நிலையைச்
சொல்லிவிட்டேன் என்றும், அரசு செய்யவேண்டும் என்றும்
இங்கே மிகப் பெரிய பொறுப்பை அரசின்மீது சுமத்தியிருக்
கிறார்கள். அரசுக்கு ஆலோசனை வழங்க எதிர்க் கட்சி உரிமை
பெற்றிருக்கிறது. அப்படி அடிக்கடி சொல்லியிருக்கின்றார்கள்.
ஆனால், இந்த யாத்திரி நேரங்களில் அரசைக் கை விட்டு
விட்டு, அந்தரத்திலே விட்டுவிட்டு. நீங்கள் என்ன செய்ய வேண்
டுமோ தெரியாது, தஞ்சைக்கு நான் போய் இருந்தேன், அங்கே
ஒரு மனு கொடுத்தார்கள், அதைப்பற்றி சட்ட மன்றத்திலே
சொல்லிவிட்டேன், இன்மேல் அது உங்கள் பாடு, அரசாங்கம்,
அமைச்சர் பாடு என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து
இங்கே சொல்லிவிட்டார்கள் என்றால், இங்கே என்ன நடை
பெற்று கொண்டிருந்தது? என்ன நடைபெறுகிறது? என்பதை
உங்களுக்குச் சொல்கிறேன். சிவன் சொத்து குல நாசம் என்ற
ஒரு பழமொழியைச் சொன்னார்கள். சேலம் ஆறுமுகம் அவர்கள்
ஆண்டவன் இல்லை என்று சொல்லி, அவர் சொத்தை அனு
பவிப்பவர்கள் கொழுகொழுவென்று இருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். நீங்கள் இப்படி எடை போட்டீர்கள். ஆண்டவன்
இருக்கிறாரா, இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. ஒரு
அறிஞர் சொன்னார் "ஆண்டவன் இருக்கிறான் என்று சொல்பவன்
முட்டாள்; இல்லை என்று சொல்பவன் அவனைவிட முட்டாள்,
தெரியாது என்று சொல்பவன்தான் புத்திசாலி" என்று உலகத்
தில் தெரியாதது இன்னும் எத்தனையோ இருக்கிறது. ஒவ்வொரு
நாளும் நாம் புதிது புதிதாகத் தெரிந்துகொண்டுதான்
இருக்கிறோம், முடிவில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும்
தெரியவில்லை. ஆகவே நான் சொல்கிறேன். ஆண்டவன்
சொத்தை மாத்திரம் அவர்கள் ஏமாற்றவில்லை. நீங்கள்
தீர்ப்பே மகேசனின் தீர்ப்பு' என்ற இலக்கணத்தின்படி,
மக்கள் சொத்தை தின்று கொண்டிருக்கின்றவர்கள் சில காலம்
அப்படிச் செய்யலாம்; என்றைக்கும் அவர்கள் அப்படி இருக்க
முடியாது என்பதை நான் இந்த நாட்டு மக்களுக்கு இந்த மன்
றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட
உணர்வுகளைப் பார்த்தால், கடந்த காலங்களில் நீங்கள் இங்கே
பேசினீர்கள், அறங்காவலர்கள் வந்தார்கள். அவர்கள் அறத்தை
காக்கவில்லை என்று சொன்னீர்கள். நான் அதற்குள் நுழைய
விரும்பவில்லை. நுழைந்தால் அது அரசியலாகி விடும். இன்னும்
கூட கொஞ்சம் சொல்லாம் — பிரதான எதிர்க் கட்சி
இங்கே இருந்தால் நான் இன்னும் சில விவரங்களைச் சொல்லு

வேன். அவர்கள் இங்கே இல்லாத காரணத்தால், இதிலே
நுழைய விரும்பவில்லை. அப்படி அறங்காவலர்களைப் போடும்
போது, அதற்காக ஒரு கமிட்டி அமைத்திருக்கிறோம். அந்தக்
கமிட்டியிலே உங்கள் கட்சிக்காரர்களைத் தான் போடுகிறீர்கள்
என்ற குற்றச்சாட்டை நம்முடைய உறுப்பினர்களில் சில பேர்கள்
இங்கே சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெளிவாக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு அசிஸ்டென்ட் கமிஷ
னருக்கும் ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. எல்லாக் குழுவிலும்,
வேறு கட்சியைச் சார்ந்தவர்களும், எந்தக் கட்சியிலும் சேராதவர்
களும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். கடலூரிலே ஜீ. வாகீசம்
பிள்ளை, தஞ்சையிலே திரு. கே. எஸ். சௌரிராஜன், என்ற
ஒரு பக்தர், பிராமண குலத்தைச் சார்ந்தவர். திருச்சிராப்பள்ளி
யில் திரு. ஏ. வி. ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார், ராஜகோபால்
நாயுடு—எந்தக் கட்சியையும் சேராதவர்கள். கோயம்புத்தூரிலே
சண்முகம் பிள்ளை—எந்தக் கட்சியிலும் சேராதவர், நாகப்
பட்டினத்திலே திரு. வேதையன்—முன்னாள் எல். எம். ஏ.
காங்கிரஸ்காரர்.

(இரவு 8-30)

திருநெல்வேலி—திரு. எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை,
எந்தக் கட்சியையும் சாராதவர், சிறந்த பக்தர்.

கும்பகோணம்—திரு. ராதா அவர்கள் சொன்னதைப் போல்,
திரு. பி. ஆர். தியாகராஜன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்,
பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்.

நாகர்கோயில்—திரு. எ. கனகசபாபதிபிள்ளை, வழக்கறிஞர்.
எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று எங்களுக்குத் தெரியாது.

மதுரை—திரு. டி. சுந்தரம், அவரும் எந்தக் கட்சியைச்
சார்ந்தவர் என்று எங்களுக்குத் தெரியாது, எந்தக் கட்சியையும்
சாராதவர் என்று தெரிகிறது.

சேலம்—திரு. பி. கோபாலகிருஷ்ணன், வழக்கறிஞர், எந்தக்
கட்சியையும் சாராதவர்.

ஈரோடு—திரு. எஸ். ஆர். பொன்னுசாமி, திரு. எம். பி.
நாச்சிமுத்து, பெரியவர். கைத்தறித்துறையில் ஈடுபாடு
கொண்டவர்.

ராமநாதபுரம்—திரு. ராம சீனுவாசன் என்ற நாட்டுக்
கோட்டை செட்டியார். அகில இந்தியாவிலும் ஆத்திக துறையில்
தொடர்பு உடையவர்.

புதுக்கோட்டை— நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தைச்
சேர்ந்த திரு. வி. என். சிதம்பரம், இவர் தான் குழுத் தலைவர்.

சென்னை— திரு. டி. பாலகிருஷ்ணன், எந்தக் கட்சியையும்
சாராதவர்.

காஞ்சிபுரம்—திரு. பிரகாசம், எந்தக் கட்சியையும் சாராதவர்.

ஆகவே இப்படிப்பட்ட முறையில், நமது முதலமைச்சர்
அவர்கள் தெளிவாக உத்தரவிட்டிருக்கிறார்கள். இதைக் கட்சி
யாக மாற்றி விடாதீர்கள், நல்லவர்கள் வர வேண்டும், நல்ல
பற்றுள்ளவர்கள் வர வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.
அதனால்தான் இந்தக் குழு போடப்பட்டது. இந்தக் குழுவின்
மூலமாக மூன்று பேர், இவர்களை எடுத்ததற்குப் பிறகு இந்தக்
குழு யாரையாவது விட்டுவிட்டால், ஏனென்றால்—குழுவுக்கு சில
நிபந்தனைகள் இருக்கின்றன. மனுக்கள் போட வேண்டும்,
அவற்றைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும். இவைகளுக்கு
எல்லாம் உட்பட வேண்டும். அப்படி வராத சில பெரியவர்கள்,
சிலர் தனியாக இருப்பார்கள். அவர்கள் கோயில்களுக்காக நல்ல
காரியங்களை, நல்ல அறங்களை செய்திருப்பவர்களாக,
செய்பவர்களாக இருப்பார்கள். அவர்களைப் பார்த்து போட
வேண்டுமென்றால் அரசாங்கம் தேவையானால் இருவரை
போடலாம் என்று அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்
கிறது. இங்கே ஆளுகிற கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னது
போல், இங்கே வந்திருக்கின்ற பட்டியலைப் பார்த்தால், பல
பேர், பழைய பெருச்சாளிகள். அந்தப் பெருச்சாளிகளை கண்டு
பிடித்து, அந்தப் பெருச்சாளிகள் மீண்டும் வளைபோட்டு உள்ளே
நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்குத்தான் இந்தக் குழு
போடப்பட்டிருக்கிறது. இல்லையென்றால் இந்த முயற்சியில்
ஈடுபட்டிருக்கவே மாட்டோம். இதற்குச் சில அதிகாரிகளும்
துணையாக இருந்தார்கள் என்பதைப் பார்த்தபொழுதுதான்
இந்தக் குழுவை போட்டோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, நம்முடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி
உறுப்பினர் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்
அவர்களும்— ஏனென்றால் இவர்கள் இருவரும் தான் மாறுபட்ட
கருத்தைச் சொன்னார்கள். வேறு மற்ற அத்தனை கட்சி
உறுப்பினர்களும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்தி
இருக்கின்றார்கள். மாண்புமிகு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்
புதிய ஒருமுறையை செயல்படுத்த முடியும் என்று அதை
பரிசீலனைக்கு வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் முதலில் சொன்னார்கள்,
முதலில் இந்த ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை எல்லாம் எடுத்து
பிரித்து கொடுத்து விடுங்கள். கோவில் இடம் இருந்தால், அவர்

களுக்கு வீடுகள் கட்ட மனைக்கட்டு என்று கொடுத்து விடுங்கள்
என்று முதலில் சொல்லி விட்டார்கள். எல்லாம் தீர்ந்து விட்டது,
அரசாங்கம் இதை எடுத்துக் கொடுப்பதில் யாருக்கும் நஷ்டம்
இல்லை. அரசாங்கம் இதை எடுத்துக் கொடுத்து விடலாம்.
இப்படி எடுத்துக்கொடுத்த கதையை சொல்லுகிறேன். இப்படி
கோவை மாவட்டத்தில் எடுத்துக் கொடுக்கப்பட்ட கதையைக்
கேட்டால், 74ஆம் ஆண்டில் கொடுத்ததில் இதுவரை அரசாங்
கத்திற்கு 2½ கோடி ரூபாய் வராமல் பாக்கியாக இருக்கிறது.
இதன் காரணமாக நூற்றுக் கணக்கான ஆலயங்கள் இன்றைய
தினம் திண்டாடிக் கொண்டிருக்கின்றன என்ற கதையை
சொல்லுகிறேன். நிலத்தை எடுத்துக் கொடுத்து விடுவதில்
ஒன்றும் கஷ்டம் இல்லை. ஜனதாக் கட்சியைச் சேர்ந்த நமது
பெரியவர் ஜெபமணி அவர்கள் அருமையாக சொன்னார்கள்.
வாங்கியதை கொடுக்காதே என்று சொல்லுவதே மிகப் பெரிய
பாவம். ஒரு ஒழுக்கக் கேட்டை உருவாக்குகிறோம் என்று தான்
பொருள் என்று சொன்னார்கள். இவற்றையெல்லாம்
சொன்னால் இதையெல்லாம் சொல்லித்தானே அரசியல் நடத்திக்
கொண்டிருக்கிறோம் என்று சொல்ல வேண்டிய நிலைமை
எல்லாம் வரும். இதன் காரணமாக அவர்களுக்கு சில
சங்கடங்கள் ஏற்படலாம், ஆகவே, இதையெல்லாம் தூக்கி
கொடுத்து விட்டால், உதறி எறிந்து விட்டால், இந்த 50 ஆயிரம்
ஆலயங்கள் தமிழ் மாநிலத்தில் இருக்க வேண்டுமா, இல்லையா
என்பதற்கு நீங்கள் முடிவு செய்து விடுங்கள். அதற்குப் பிறகு
90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்து
கொண்டிருக்கிறார்களே, இன்றைக்கு 50 ரூபாய், 60 ரூபாய்,
70 ரூபாய், 100 ரூபாய் என்றெல்லாம் சம்பளம் பெற்றுக்
கொண்டிருக்கின்ற இந்த லட்சக் கணக்கான குடும்பங்களின் கதி
என்ன என்பதை சொல்லுங்கள். இதற்கு ஒரு வழி வகுத்து
அரசுக்கு நீங்கள் சொல்வீர்களேயானால் அதன்மீது இந்த
அரசாங்கம் முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களே சொன்னார்கள், பினாமி என்ற பெயரில், கோயில்
நிலங்களை பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்
களிடமிருந்து இந்த நிலங்களை எல்லாம் பறிக்க வேண்டும் என்று
சொன்னார்கள். இங்கே சபையில் இல்லாதவர்கள் சிலரின்
பெயரைச் சொல்லி, சில குற்றச்சாட்டுக்களை சொன்னதில்,
மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்
உத்திராபதி அவர்கள் * * பெயரைச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆளுகிற கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு
உறுப்பினர் கிணத்துக்கடவு கந்தசாமி அவர்கள் பழனியிலுள்ள
ஒருவருடைய பெயரைச் சொல்லி அவர் கொள்ளையடித்திருக்
கிறார் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
(பக்கம் 255) அகற்றப் பெற்றது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 17

பேபுவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு
நீபர்களின் பெயர்களையும் அவைக் குறிப்பிலே இருந்து
க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
பதில் சொல்வதற்கு அவர்கள் இந்த அவையிலே
இல்லை. அவையிலே இல்லாதவர்களைப்பற்றிப் பேசினார்,
அவர்கள் பதில் அளிக்க முடியாது. அதைச் சொல்கிறபோது,
அண்ணா தி.மு.க. அமைச்சர் நிலத் திமிங்கலங்களுக்கு
லக்காலத்து வாங்கி விட்டார் என்ற செய்திகள் வரலாம். நான்
அதையும் ஏற்றுக் கொண்டு, உண்மையைச் சொல்லத் தயாராக
இருக்கிறேன். அங்கே இருக்கின்ற திருவாரூர் கோயிலுக்குச்
சொந்தமான நிலங்கள் இன்றைக்கு தனிப்பட்டவர்கள் யாரிடத்
திலும் இல்லை. அங்கே இருக்கின்ற நிலங்கள் மொத்தம் 854
ஏக்கர்கள் 'வெட்'. 994 ஏக்கர்கள் 'டிரை',
1,848 acres in all. Lands belonging to this temple and
'Kallalais' have been leased out to 620 tenants. 620
குத்தகைக்காரர்களுக்கு இந்த நிலம் பங்கிடப்பட்டிருக்கிறது.
குத்தகைக்காரர்களுடைய லட்சணம் என்ன தெரியுமா?
அவர்கள் தர வேண்டியது எவ்வளவு தெரியுமா? 10,748
குவிண்டால்கள் குத்தகை பாக்கி. இதனுடைய தொகை
எவ்வளவு தெரியுமா? 12,93,318 ரூபாய். ஆனால், பாக்கி
களைப் பெற முடியாமல், திருவாரூர் தியாகராஜப் பெருமாள்
இன்றைக்கு பிச்சை எடுக்கின்றார். முன்னாள் முதல் அமைச்சர்
மாண்புமிகு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதி
அவர்கள்கூட பெருமையோடு சொன்னார்கள். 'ஓடாமல்
இருக்கின்ற தேரை ஓட்டு வித்தேன்' என்று சொல்லியிருக்
கின்றார்கள். இந்த அமைச்சரவையில், முதல் அமைச்சர்
புரட்சித் தலைவர் அவர்கள் சென்னையிலே இருக்கின்ற மாரி
யம்மன் கோவிலில் இருந்து 10,000 ரூபாய் கடன் வாங்கி இந்த
ஆண்டுத் தேரை ஓட்டினார்கள். அது மாத்திரமல்ல. அங்கே
இருக்கின்றவர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சித்
தலைவர் எப்படியாவது சம்பளத்தைக் கொடுங்கள் என்று
சொன்னார்கள். சம்பளம் கொடுப்பது மாத்திரம் அல்ல. அந்த
ஆண்டவனுக்கு நித்தியபடிக்காக ஒரு லட்சம் ரூபாய் இங்கே
திருவேற்காடு மாரியம்மனிடத்திலிருந்து பிச்சை எடுத்திருக்
கிறார்கள். இதை ஒரு கணக்கிற்காகச் சொல்கிறேன். ஆயிரம்
ஏக்கர் நிலம் தர்மபுரம் ஆதீனத்தில் இந்தக் கோயில் ராஜ
கட்டளைக்காக இருந்தது. இந்த நிலத்தை சர்க்கரை ஆலைக்கு
கரும்பு பயிரிடுவதற்காக, விதி விலக்கு அளிக்கப்பட்டு, முன்னால்
இருந்த அரசு கொடுத்தது என்பது உங்களுக்குத் தெரியும்.
எனவே, அது தனிப்பட்டவர்கள் இடத்திலே இல்லை.

1979 ஏப்ரல் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பினாமி, பினாமி என்று சொல்கிறோம். நான் அதையும்
சொல்கிறேன். தயவுசெய்து நான் பெயரைச் சொல்ல
விரும்பவில்லை. பெயரைச் சொல்ல வேண்டுமென்று என்னை
வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பினாமி
எங்கே இருந்து வருகிறது? நிலத் திமிங்கலம் என்று எல்லாம்
சொல்கிறீர்கள். இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர்
சொல்கிறபோது, கோவில் நிலங்களை எடுத்து, மடங்களின்
நிலங்களை எடுத்து, ஆதித் திராவிட மக்களுக்குக்கொடுங்கள்
என்று சொன்னார்கள். நான் இங்கே சொல்வது, ஒரு ஆதித்
திராவிடரைப்பற்றித்தான். அவர் ஒரு அரசியல் தலைவர்.
நாடாளு மன்ற உறுப்பினராக இருந்தவர். அவர் தஞ்சை
மாவட்டத்தைச் சேர்ந்தவர். விவசாயிகளுக்காகப் பாடுபடுகின்
றவர். விவசாயிகளினுடைய தலைவர். ஏழை எளிய மக்களின்
கண்ணீரைத் துடைப்பதற்கு அங்கேஉள்ள நிலத்திமிங்கிலங்களோடு
போராடுகின்றவர். அவருக்கு ஒரு கோயிலினுடைய நிலம்,
நீங்கள் பினாமி நிலம் என்று சொன்னீர்களே, அந்த நிலம்
எப்படி அவர் பெயருக்கு வந்தது? அவருடைய தந்தை,
மனைவி, கொழுந்தியாள் ஆகியவர்களின் பெயர்களில் இருக்கிறது.
அவருடைய பெயரிலே 1.13 ஏக்கர் நஞ்சை. அவருடைய
தகப்பனார் பெயரிலே 7.38 ஏக்கர் நஞ்சை. அவருடைய
சகோதரர் பெயரில் 0.66 ஏக்கர். இவருடைய கொழுந்தியார்
பெயரில், இன்னொருவர் பெயரில் இருந்த நிலத்திற்காக ரூ. 2,000
கொடுத்து, அவர் வாங்கிக் கொண்டிருக்கிறார். இந்த குத்தகை
மாற்றத்திற்கு அனுமதி இல்லாமல் அவர் பெயருக்கு 4.45 ஏக்கர்.
அவருடைய அத்லைதக்கு 2.52 ஏக்கர். அவருடைய மாமனுக்கு
4.48 ஏக்கர்.

(இரவு 8—40)

மொத்தம் அந்தக் குடும்பத்திற்கு 20·62 ஏக்கர். ஆனால்
நம்முடையபொது பொறுப்புச் சட்டத்தின்படி என்ன இருக்கிறது
தெரியுமோ? ஒருவருக்கு குடும்பத்திற்கு 5 ஏக்கருக்குமேல்குத்தகை
விடக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம்
எவ்வளவு நாசூக்காக, தெளிவாக, துணிவோடு மீறப்பட்டிருக்
கிறது? நான் கேட்கிறேன் — 20·62 ஏக்கரைத் தஞ்சை மாவட்
டத்தில் வைத்திருப்பவர் ஏழை விவசாயியா?

*திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, தஞ்சை
மாவட்டத்தில் ஒரு விவசாயச் சங்கத் தலைவர் குறிப்பாக அரிசன்,
முன்னாள் M.P., தன் குடும்பத்தின் பேரில் பினாமி
யாக 20 ஏக்கர் நிலம் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். பினா
மியாக எந்த உருவில் யார் வைத்திருந்தாலும் எங்களைப் பொறுத்

தவரை இது உண்மையானால் அனுமதிக்க முடியாது என்பதை அறுதியிட்டுச் சொல்கிறேன். அந்தக் காரியத்தைச் செய்தவர் யாராக இருந்தாலும் அரிசனாக இருந்தாலும், பிற ஜன்னாக இருந் தாலும், எந்த ஜன்னாக இருந்தாலும். அனுமதிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நன்றி கூறிக்கொள் கிறேன். விளக்கத்திற்காக — அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தால் தைரியத்தோடு எடுத்துச் சொன்னார்கள். அதற்காகவும் நன்றி. அதோடு அல்ல. அவர்கள் வைத்திருக்கட்டும். அதைக்கூடத் தவறு என்று சொல்லவில்லை. அவர், இவ்வளவு நிலத்தை வைத்திருக்கிற இந்த ஏழை, அந்த ஆண்டவனுக்குத் சதவிகிதம் குத்தகையைக் தரவேண்டிய 40 பாக்கி 1,558 கலம். கொடுக்காமல் வைத்திருக்கிற மாவட்டத்தைச் இதற்கு என்ன விலை என்பது தஞ்சை இருந்து 40,000 சேர்ந்தவர்களுக்குத் தெரியும். 35,000-ல் பாக்கித் தொகை. ரூபாய் ஆண்டவனுக்கு வைத்திருக்கிற இதோடு விட்டார்களா ?

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஏழை அரிசன விவசாயி களுக்கு நிலத்திலே இறங்கி பாடுபடுகிறவர்களுக்கு ஒரு குடிசை கட்டிக் கொண்டிருக்க இடம் இல்லை. இந்த அரசு சட்டத்தைப் போட்டு அவனுக்கு இடம் கொடுக்க முடிவு செய்கிறது. அவனுக்கு வழங்குகிற இடம் எவ்வளவு தெரியுமா ? 3 சென்ட் அல்லது 5 சென்ட். ஆனால் இந்தப் பெரியவர்கள் ஒரு புஞ்சைக் காட்டை யும் வளைத்துப் போட்டிருக்கிறார்கள். எவ்வளவு தெரியுமா ? அவருடைய தகப்பனார் 0·17 என்ற அளவுக்கு புஞ்சைக் காட்டை வைத்திருக்கிறார். அது மாத்திரமல்ல. பழங்காலத்தில் ஒரு கோயில் இருந்து இடிந்து விட்டது என்று கருதப்படுகிறது, அல்லது இடித்தார்களோ என்னவோ தெரியாது. அப்படிப்பட்ட 2·27 ஏக்கர் புஞ்சை நிலத்தில் இவர் 1·02 ஏக்கரை வைத்துக் கொண்டு அதிலே அவர்கள் வீடு கட்டிக் கொண்டு, குடிசை கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள் — ஒரு ஏக்கர் இரண்டு சென்டில். எந்தத் தஞ்சையில் 3 சென்ட் நிலத்தை அரிசன ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியாமல் அரசு திண்டாடுகிற இந்தக் காலத்தில் 1 ஏக்கர் 2 சென்டில் குடிசை கட்டிக் கொண்டு, கரும்பு விளை வித்துக் கொண்டு அங்கே குத்தகையையும் கொடுக்காமல்.....

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, அந்தக் கட்சியைச் சேர்ந்த பொதுவுடைமைவாதி கோவில் நிலத்தை எடுத்துக் கொண்டு அல்லது கோவில் இருந்த இடத்தில் கோவிலை இடித்துவிட்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது எந்த முறையில்

அவரால் ஆக்கிரமிக்கப்பட்டது ? எப்போது ஆக்கிரமிக்கப் பட்டது ? அப்படி ஆக்கிரமித்திருப்பார்களானால் தெய்வ நெறி களைப் பாதுகாக்கும் இந்த அரசு அவர் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கதையைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் — எப்போது நடைபெற் றது ? எப்படி நடைபெற்றது ? அப்படிச் செய்கிறவர்களே வந்து முன்னால் நின்று கூக்குரல் இடுகிறார்கள். நியாயம், தர்மம் தலைகவிழ்ந்து நிற்கிறது, என்பதற்காகச் சொல்கிறேன். இந்த இடத்தில் எப்போதோ நடை பெற்றிருக்கிறது, இப்போது அல்ல.

இன்னொரு கதையையும் சொல்லுகிறேன். அந்த இடத்தை மனைப் பகுதியாக வைத்திருப்பதற்கு வருஷக் குத்தகை ரூ. 10. 1 ஏக்கர் 2 சென்ட் நிலத்திற்கு அந்தப் 10 ரூபாயும் 14 வருஷங் களாகக் கொடுக்கப்படவில்லை. 141 ரூபாய் பாக்கி. ஆகவே, எந்தக் காலத்தில் இது நடைபெற்றது என்று மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு இங்கே விடை இருக் கிறது. நான் இது ஒரு சான்று சொல்லியிருக்கிறேன். மற்றொரு சான்று மேலவையில் சொல்ல வைத்திருக்கிறேன். ஆகவே, அதைச் சொல்லவில்லை. விவசாய நிலங்களைப் பற்றிச் சொன் னேன்.

கட்டடங்கள் கட்டுகிற இடங்கள், வைரமாக, தங்கமாக மதிக் கப்படுகிற இடங்கள், சென்னை நகரத்திலே 40 கிரவுண்ட் நிலத்தை ஒரு பொது இல்லம் நடத்துகிறோம் என்று சொல்லி ஒரு ஐந்தாண்டுக் குத்தகைக்கு ஒரு கிரவுண்டுக்கு மாதம் 4 ரூபாய் வாடகைக்கு ரூபாய் 160 மாத வாடகைக்கு, 40 கிர வுண்ட் என்று பேசி, 45 கிரவுண்டை ஆக்கிரமித்துக் கொண்டு, ஐந்தாண்டுக்காலம் முடிந்து அந்தத் துறை கண்விழித்து 5 கிரவுண் டை வாங்கிக் கொண்ட பிறகு, 40 கிரவுண்டையும் ஒப்பந்தப்படி திருப்பி அற நிலையத்திற்குத் தராமல் இந்தக் கேவலம், பிச்சைக் காசு, இந்த ஆண்டவனுக்குத் தருகிற பிச்சைக் காசு, கிரவுண்டுக்கு 4 ரூபாய், 40 கிரவுண்டுக்கு 160 ரூபாய். என்று கொடுக்காமல் இருக்கிறார்கள், இங்கே சொல் னார்களே நம்முடைய மாரிமுத்து அவர்கள் இதை விற்றுவிடுங் கள், பணமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். இதை வங்கிகளிலே போடுங்கள் அந்த வங்கிகளிலிருந்து வருகிற வட்டியிலிருந்து அற நிலையங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு பரிசீல னைக்குரிய கருத்தை இங்கே வைத்தார்கள். மாண்புமிகு முன் னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களும் அப்படிச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஏன் அவர் காலத்திலே இதைச் செய்யவில்லை என்று நான் இப்போது கேட்கக்கூடாது,

கேட்பது அது அவ்வளவு சரியாக இருக்காது. அவர் மிகப்
பெரியவர், நான் மிகச் சாமான்யன். ஆனால் நான் கேட்கிறேன்,
இந்த 40 கிரவுண்டினுடைய மிகக் குறைந்த மதிப்பு என்ன தெரியு
யுமா? சென்னையிலே உள்ள கோடம்பாக்கத்திலே ஒரு கிரவுண்ட்
15 ஆயிரம் ரூபாய் என்று வைத்தால் 6 லட்சம் ரூபாய் ஆகிறது.
அந்த 6 லட்சம் ரூபாய்க்கு 12 பர்சன்ட் என்று மிகக் குறைந்த
வட்டி என்றால் 6 ஆயிரம் ரூபாய் மாதம் இந்த அறநிலை
யத்திற்கு வரும். விற்றால் தான் 6 லட்சம். அப்படியே விற்று
விட்டால் 6 லட்சம் ரூபாயைப் போட்டால் 6 ஆயிரம் ரூபாய்
குறைந்த வட்டியாவது கிடைக்கும். கட்டடங்களைக் கட்டி
வேறு வகைகளிலே முதலீடு செய்தால் என்ன வருமானம்
வரும் என்பது தெரியும். ஆனால் முன்னால் ஆட்சிப் பொறுப்
பிலே இருந்தவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி அஞ்சுகம்
இல்லம் என்ற பெயரில் ஒரு பொது நிறுவனம் நடத்துவதாகச்
சொல்லி இந்த நாற்பது கிரவுண்டை கையகப்படுத்தி 1976 ஆம்
ஆண்டு லீஸ் அக்ரிமென்ட் முடிந்தும் குத்தகைப்படி, அந்த ஒப்
பந்தப்படி கொடுக்காமல், பாக்கியைக் கூடக் கொடுக்காமல் இன்
றைக்கு வழக்கு மன்றத்திலே அந்தப் பணத்தை வசூல் செய்
வதற்காக வழக்குப்போட்டுக் கொண்டிருக்கிறது இந்து அறநிலை
யத் துறை என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சரி, இப்படியெல்லாம் விற்றுவிடுவோம் என்று ஒரு முடிவு
எடுத்தால் நமக்கு எப்படி பணம் வந்து சேரும் என்று
முன்னாலே இருக்கிற சான்றுகளைப் பார்த்தோம்.
சரி இப்படி ஒரு முடிவு எடுத்தால் என்ன, பணத்தை வாங்கித்தான்
விடுவோமே என்றால் 1974 ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த
அரசு ஒரு முடிவை எடுத்து மைனர் இனாம்களை ரயத்துவாரியாக
மாற்றி மைனர் இனாம்களை சிறு இனாம்களை எல்லாம் ஒழிப்பது
என்று 1960 ஆம் ஆண்டிலே ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள்.
60 ஆண்டுகள் அதை அனுபவித்துக் கொண்டிருந்தால் அவனுக்கு
இலவசமாகத் தந்துவிடுவது, அதற்குப் பிறகு ஒரு முடிவை எடுத்
தார்கள், 30 ஆண்டுகள் அனுபவித்துக் கொண்டிருந்தால் அவன்
12 ஆண்டுகளுக்கு அதைத் தவணையாக அதைக் கட்டுகிற உரிமை
யோடு அவனுக்குப் பட்டா செய்து கொடுப்பது என்று அற
நிலையத் துறையினுடைய நிலத்தை இதன்படி 13,825·20 ஏக்கர்
நிலம் வழங்கப்பட்டது. அதனுடைய தொகை 2 கோடியே
44 லட்சத்து 13 ஆயிரத்து 727 ரூபாய் 76 காசுகள். அதை
4,871 வழக்குகளில் அல்லது எண்ணிக்கைகளில் இந்தப் பிரிவினை
நடத்தப்பட்டது. ஆனால் தரவேண்டிய கன்ஸிடரேஷன் அவர்கள்
தருவதை அரசாங்கம் அறநிலையத் துறைக்குத்தருவதாக எடுத்
துக்கொண்டது, அவர்களிடமிருந்து 12 வருடங்களில் பெறுவது
என்பது திட்டம், ஆணை. ஆனால் 1974 ஆம் ஆண்டிலே
இன்று ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. இதற்குக் காரண

காரியத்தை தேடித் நான் பார்த்தேன், கோப்புகளிலே.
கிடைக்கவில்லை. இந்த 2 கோடியே 44 லட்சத்தை இப்போது
கொடுக்கவேண்டாம். சரி, அரசாங்கம் கொடுக்க வேண்டாம்
என்பது மாத்திரமல்ல, அவர்களிடமிருந்து வசூலும் செய்ய வேண்
டாம் என்பது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்
மொத்தம் பட்டாப் பெற்றவர்கள் 5,014 — அதனால்
பாதிக்கப்பட்ட அற நிலையங்கள் 2,608.

ஆகவே, இப்படிப்பட்ட ரொம்பக் கசப்பான உணர்வுகள்,
வருந்தத்தக்க அனுபவங்கள், இப்படிப்பட்ட ஏமாற்றுகிற முயற்சி
கள், கொள்ளை என்று நான் சொல்ல மாட்டேன்,
மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள்,
அதனாலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள் என்ற
அந்தமுறையிலே அந்த வார்த்தையை நான் பயன்படுத்துகிறேன்

(இரவு 8—50)

இப்படிக் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அறங்காவலர்களா
கவே இருந்தவர்கள், கும்பகோணத்திலே கோவிலை இடித்து,
கடை கட்டி, வாடகைக்கு விட்ட கதையெல்லாம் இருக்கிறது.
இதையெல்லாம் நீங்கள் ஏன் வழக்குப் போடவில்லை என்று
கேட்கிறீர்கள், தெரிகிறது. அங்கேதான் வருகிறது. இந்த
நாட்டிலேயிருக்கிற சட்டங்கள், குற்றவாளிக்குத்தான் அதிக
மாகத் துணை போகின்றன. அப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.
இந்தச் சட்டங்களை அப்புறப்படுத்தி, இந்தக் குற்றவாளிகளை,
நினைத்த நேரத்திலே கொண்டு வந்து மக்கள் மன்றத்திலே
நிறுத்தி தண்டனை தருவதற்கான முயற்சியிலே இந்த அரசு
சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

நான் இதையெல்லாம்கூடச் சொல்லவில்லை, இங்கே ஆலயங்
களிலே சிலைகள் திருட்டுப்போவதைப்பற்றிச் சொன்னார்கள்.
அதை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கொஞ்சம்
கேலியாகக் கூடச் சொன்னார்கள். கேலி பேசுவது என்றால்
நாங்களெல்லாம் பேசிப்பேசிப் பழக்கப்பட்டு இன்றைக்கு அனுபவப்
பட்டு வந்திருக்கிறவர்கள். ஆகவே, கேலி பேசுவதாலேயே
பிரச்னை தீர்ந்து விடாது.

திருச்சி மாவட்டத்திலேயிருந்து புதை பொருள் ஒன்று
கிடைக்கப்பெற்றது. —Cholas period—12th Century A. D.
அதிலே ஒரு சிலையை மாத்திரம்— 40 இலட்சம் ரூபாய் பெறு
மானமுள்ள சிலையைக் கடத்திக் கொண்டு வந்தார்கள். அதைக்
காவல் துறை பிடிக்கிறது. அந்தத் திருடன்—குற்றவாளி, மூன்று

வருடங்களாக வழக்கு மன்றத்திற்குப்போய் அரசாங்கத்தையும்,
அரசாங்கத் துறையிலிருக்கிற கல்வித் துறை துணைச்
செயலாளரையும், இவரைப் பிடித்து வழக்குப் போட்ட காவல்
துறை அதிகாரியையும் Contempt of Court என்று வழக்கு மன்றத்
திலே வாதாடுகிறான். இன்றைக்கிருக்கிற சட்டம் இப்படி அந்த
மனிதர் இன்றைக்கும் இந்தச் சென்னை மாநகரத்தில் மிகப்
பெரிய இலட்சாதிபதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
எமெர்ஜென்சி காலத்தில் உள்ளே சிறைப் பிடித்து வைக்
கப்பட்டார். இன்றைக்கு வெளியே உலாவுகிறார். அந்தச் சிலை
யின் மதிப்பு 40 இலட்சம் ரூபாய்.

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள், சட்டங்கள், சிக்கல்கள்
ஆகிய இவைகள் அத்தனையும் இருக்கின்றன.
நுழைந்து, ஆலயங்கள் இன்றைக்கு இருட் குகையாக மாற்றப்
பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே இருளுக்குள்ளே நாங்கள்
நுழைகிறபொழுது திக்குத் தெரியாமல், திசை தெரியாமல்,
தடுமாறிக்கொண்டிருக்கிறோம். இதிலே தெளிவு கண்டாக
வேண்டும். இதற்குள்ளே

இந்த நாட்டினுடைய பழம்பெரும் புராதனச் சின்னங்களை
யெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராய
பேதம் கிடையாது. அது பகுத்தறிவு இயக்கமானாலும் சரி,
ஆத்தீகர்களானாலும் சரி. அதைத்தான் நான் சொன்னேன்.
தந்தை பெரியார் விரும்பியிருந்தால் இதை வைத்திருப்பாரா?
வைத்திருந்தார். அண்ணா சொன்னார், "ஒன்றே குலம் ஒரு
வனே தேவன்", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று இந்த
உலகத்திற்கு முழக்கத்தைத் தந்த தமிழகம் இந்த அற நிலையங்
களை, அற்புதச் சிற்பங்கள் நிறைந்த கலைப் பொக்கிஷங்களை
அது எந்த ஆட்சி வந்தாலும், சரி, அது எத்தனை பெரிய பகுத்
தறிவின் உச்சிக்கே சென்ற ஆட்சியானாலும், உலகத்திலே, அவ்
வளவு சுலபத்திலே அழிக்க முடியாது என்கிறபொழுது, கலையைக்
கரு உருவாக வடித்துத் தந்திருக்கின்ற கருவூலமாகக் கொண்டிருக்
கிற, 2,000, 3,000 ஆண்டுகளுக்கு முன்னாலே பெற்றிருக்கிற
தமிழகத்திலே அழித்து விட முடியுமா?

இன்றைக்கும் பகுத்தறிவு பேசுகிறவர்கள் பற்றவர் மனம்
புண்படாமல் நீங்கள் சிலையை வையுங்கள், தொந்திரவு இல்
லாமல் யாருக்கும் இடையூறு இல்லாமல் வையுங்கள். நான்குபேர்
மகிழ்ச்சி அடைவார்கள் என்பதற்காக பத்து பேர் மனத்தைப்
புண்படுத்தாதீர்கள் என்று சொன்னால், "நான் வைப்பேன்" என்ற
பலகையில் அதிகாரத்தோடு ஆட்சியில் இருந்த காலத்தில் வைக்கா
மல் இன்றைக்கு வாதாடுகிறார்கள், வல்லடி செய்கிறார்கள்.
ஆனால், அவர்களே என்ன சொல்கிறார்கள். மாமாங்கக் குருக

குளத்தைத் தூர் எடுத்தோம். நாங்கள் திருவாரூர்த் தேரை
ஓட்டினோம் என்று சொல்கிறார்கள். அதைச் சொல்லாமல் அர
சியல் நடத்த முடியாது. ஆனால் இங்கே சவால் விட முடிகிறது.
வெளியிலே சவால் விட்டு மாட்டிக்கொண்டார்கள்.

நான் இங்கே மனம் திறந்து சொல்கிறேன். இன்றைக்கும்
ஆலயங்களுக்கு நான் அமைச்சர் என்ற முறையில் செல்கிற
பொழுது திருநீறு தருகிறார்கள். குங்குமம் தருகிறார்கள். அதை
நான் வாங்குகிறேன். மரியாதையோடு வணங்கி வாங்குகிறேன்.
ஆனால் அதை யார் நெற்றியிலே இட வேண்டுமோ இடுகிறேன்.
நான் எல்லாயிடங்களுக்கும் செல்கிறேன். நான் சைவக் கோயில்
களுக்குச் செல்லும்பொழுது திருநீறு பூசிக்கொண்டேன் என்றால்,
வைணவக் கோயில்களுக்குச் சென்றால் என்னுடைய கதி என்ன?
அங்கே நாமத்தைப் போட்டுக் கொண்டால் நான் என்ன ஜோக்
கரா? என்னுடைய கருத்து, என்னுடைய இலட்சியம் என்ன
என்பது வேறு, இந்த அரசின் கொள்கை என்பது வேறு.

ஆனால், இந்த நாட்டு மக்களுடைய உணர்வுகளை, நாம்
பாதுகாத்தாக வேண்டும், மதித்தாக வேண்டும். சட்டத்திலே
சத்தியம் செய்து கொடுத்து, உறுதிமொழி எடுத்து நாம் இன்
றைக்கு வந்திருக்கிறோம். அது மாத்திரம், அல்ல, தமிழ்
நாட்டிலே இவைகள் காப்பற்றப்பட்டாக வேண்டும். அவைகள்
காப்பாற்றப்பட்டால்தான் தமிழ் உண்டு, தமிழ்நாடு உண்டு,
தமிழ் நாகரீகம் உண்டு, தமிழ் கலை என்று சொல்வதற்கு நமக்கு
வழி உண்டு, திருவள்ளுவரைச் சொல்வதற்கு நமக்கு சான்றுகள்
உண்டு. இல்லையானால், ஒன்றும் கிடையாது. நாம் பாலை
வனத்திலேதான் நிற்போம். உலகத்திலே வேறு எந்தக் குறை
நமக்கு இருந்தாலும், இன்றைக்குத் தமிழன் தலை நிமிர்ந்து
செல்கிறானே, அந்தச் சிறப்புகள் இந்தத் தமிழக
அறநிலையங்களிலேதான் உருவாக்கப்பட்டன. ஆகவே,
அவைகளைப் பாதுகாக்க வேண்டும்: அவைகளைப்
பாதுகாக்கின்றபொழுது அதிலே பணி புரிகின்ற
இந்த 90,000 ஜீவன்களையும் காப்பாற்றியாகவேண்டும். இதற்கு
ஒரு முடிவை எடுக்க வேண்டும். அதற்கு முடிவெடுக்க அரசு
முனைகின்ற பொழுது, தயவு செய்து இந்த மாமன்ற உறுப்பினர்
கள் அதற்கு கணக்கு ஒத்துழைக்க வேண்டும். ரூ. 15
கோடி, ரூ. 18 கோடி பாக்கி என்று இங்கு கணக்கு கொடுத்தது,
போன வருஷம் கொடுத்தது. இந்தவருடம் ரூ. 5
கோடியைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ரூ. 23 கோடி
இல்லையென்றால் என்ன கதியாகும் என்பதையும் பாருங்கள்.
எப்படி சம்பளம் கொடுப்பது என்பதையும் பாருங்கள். இப்
படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த அரசு மிகுந்த அக்கறையோடு
விவரங்களைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் குத்தகையினுடைய வரம்பு 5 ஏக்கர் என்று இருப்பதை 2½ ஏக்கர் என்று குறைக்கலாமா என்பதை இந்த அரசு பரிசீலித்து கொண்டிருக்கிறது. அப்படி, 2½ ஏக்கர் என்று இருந்தால், அவர் களிடத்திலே இருக்கிற அதைப் பறித்து அல்லது அதை எடுத்து நிலமற்ற ஏழை, அரிசன, நிலத்திலே பாடுபடுகிற விவசாயிக்குத் தான் கொடுப்போம் என்கிற உறுதியோடு, அரசு இப்படி ஒரு முடிவை எடுக்கலாமா என்கிற பரிசீலனையிலே இருக்கிறது என் பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி தெரிவிக்கிறபொழுது இன்றைக்கு தேவஸ்வம் போர் டைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே, அவர்கள் சொன்ன கருத்தைத்தான் உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். 13 இலட் சம் என்று கேரளாவிலிருந்து தமிழ்நாட்டோடு இணைந்த பொழுது கொடுத்தார்கள். இன்றைக்கு ஆண்டவ னுக்கு மாத்திரம் விலை எல்லாம், உயராதா, என்று கேட்டார்களே. அதுதான் நிலைமை இன்றைக்கு நிலமாக இருந்தால், அதிலே வருகிற விளைச்சலுடைய மதிப்பு, தானிய மதிப்பு, காலத்திற்கேற்ப வளருகிறது. செலவு வளர்கிற பொழுது, மதிப்பும் வளர்கிறது, வரவும் வளர்கிறது. ஆகவே, இரண்டையும் ஈடுகட்டுக் கொள்கிறோம். இப்பொழுது இங்கே 13 இலட்சம் என்று தீர்மானித்து விட்டோம். கன்னியாகுமரி யிலே, தேவஸ்வம் போர்டிலே, இப்பொழுது செலவு உயர்ந்து கொண்டே போகிறது. 131 ஊழியர்கள், ஐயா, நாங்கள், அந்த அரசாட்சியிலேயிருந்தபொழுது அரசாங்க ஊழியர்களாக மதிக்கப் பட்டோம், உங்களிடத்திலே வந்து மாட்டிக் கொண்டோம், என்ன பாவம் செய்தோம் என்று கேட்டார்கள். அவர்களை அர சாங்க ஊழியர்கள் என்று ஏற்றுக்கொள்ளுவது என்று இந்தத் துறை இப்பொழுது முடிவெடுத்துள்ளது. —131 பேரை இப்படி எடுக்கிறபொழுது என்ன தெரியுமா, 30 இலட்சத்திற்குள்ளே அடங்குவதில்லை. நீங்கள் பணத்தை ருவாக்கிவிட்டால் பணம் வளராது. பணம் அதன் மதிப்பு எப்போதுமே குறைந்து கொண்டுதான் வரும். ஆனால், சொத்துக்களாக இருந்தால், வளரும். என்றைக்கோ, ஒரு கிரவுண்ட் ஆயிரம் ரூபாய் இருந்தது. இன்றைக்கு 15,000 ரூபாயாக மாறுகிறது. ஆனால், அதை அன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்கு விற்று விட்டால், ஆயிரம் ரூபாய் தான் இன்றைக்குக் கிடைக்கும், 15,000 ரூபாய் கிடைக்காது. ஆனால், ஊழியர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். அங்கே படித்தரங்களுக்கான சாமான்களுடைய விலை உயர்ந்து கொண்டே போகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட சொத்துக் களைத் தீர்த்து விட்டால், இன்றைக்குப் பணமாக்கிவிட்டால், இன்றைக்கு இந்த அனுபவம் நமக்கு முன்னாலே வந்து, அபாயக் குறியாக நின்று கொண்டிருக்கிறது, எச்சரிக்கையாக நின்று கொண்டிருக்கிறது. அதனாலேதான் அதைப்பற்றியும் தீவிர

மாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இல்லையெனில் பிரச்சி னைகளை எப்படியாவது தீர்த்தாக வேண்டுமென்பதிலே மிகுந்த அக்கறையோடு இன்றைக்கு முதலமைச்சரவர்கள் எனக்கு ஆணை யிட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும். ஒரு முடிவு கட்டியாக வேண்டுமென்று, இப்படி இழுத் துக்கொண்டே போகக் கூடாது என்று தெரிவித்திருக்கிற காரணத் தாலே இந்தத் துறை, இதை எப்படி சீர்திருத்துவது, இந்தச் சொத்துக்களை எப்படி பாதுகாப்பது, இன்னும் சொல்லப் போனால், திரைப்படக் கொட்டகைகளைப் கட்டி இருக்கிறவர் கள், 100 ரூபாயைத் தருகிறார்கள். —இடத்திற்காக, எத் தனை கிரவுண்ட் என்று உங்களுக்குத் தெரியும், சென்னையிலே சைனா பஜார்— உங்களுக்குத் தெரியும், எவ்வளவு பெரிய நெருக் கடியான இடம், என்று. அதை ஒருவர் ஓட்டலுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் என்ன தருகிறார் தெரியுமா வாடகை? ரூ. 25. அவர் எடுத்துக் கொண்டிருக்கிற அளவு எவ்வளவு தெரியுமா?

பர்ஸ்ட் ப்ளோர் 2,174 ஸ்கொயர் பீட்; செக்கண்ட் ப்ளோர் 1,249 ஸ்கொயர் பீட்; கிரவுண்ட் ப்ளோர் 687 ஸ்கொயர் பீட். எங்கே? நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில்.

(இரவு 9-00)

சைனாபஜாரில் ஆண்டவன்-சொத்து. பிள்ளையில்லாச் சொத்து- யாரோ பெரியவர்கள் எழுதி வைத்து விட்டு சென்றார்கள்- சம்பாதித்ததை எழுதிவைத்துவிட்டுச் சென்றார்கள். இன்று போல எங்கேயோ சுற்றி வளைத்து கொண்டு வந்து சேர்த்து அதைக் கணக்கில்சேர்ப்பதற்கு அவர்கள் டிரஸ்ட் எழுதி வைத்து விட்டுப் போகவில்லை. அவர்கள் ஆயுள் காலத்தில் சம்பாதித்ததை எழுதி வைத்துவிட்டுப்போனால், இன்றைக்கு அந்த வாடகையை ரூ 5,285 என்ற அளவிற்கு உயர்த்தினால், உடனே வாடகையை உயர்த்துகிறீர்களே என்று கூக்குரல். இப்படிப்பட்ட சூழ்நிலை களிலேதான் இந்தத் துறையை அரசாங்கம் சந்தித்துக் கொண்டு இருக்கிறது, நடத்திக்கொண்டு இருக்கிறது.

இதேநேரத்தில், நம்முடையகுடும்ப நலப்பாதுகாப்புத் திட்ட த்தை நம்முடைய ஆலயங்களிலே பணியாற்றுகிறவர்களுக்கு முதன் முறையாக ஒரு முறையை அமல்படுத்த தீர்மானித்து இருக்கி றோம். அது பற்றி எல்.ஐ.சி.யிடத்தில் பேசுகிறபோது அவர்கள்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 17

அரசாங்க ஊழியர்களுக்கு வைத்து இருக்கும் அந்தத் திட்டத்
ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். என்றாலும் 2½ ரூ. 5 ரூ.
7½ ரூ. என்று மாதா மாதம் அவர்கள் செலுத்தினால்
அவர்களுக்கு ரூ. 2,000, ரூ. 3,000, ரூ. 5,000 என்று
இடையில் துர்ப்பாக்கியவசத்தால் மரித்து விட்டால்
அவர்களுக்குக் கொடுக்கப்படும். இல்லை என்றால்
அவர்கள் வேலையை விட்டு விலகுகிறபோது அவர்கள் செலுத்தி
யுள்ள தொகை வட்டியோடு திருப்பித்தரப்படும். அப்படிப்
பட்ட ஒரு திட்டத்தை இந்தத் துறை மூலம் உருவாக்கியிருக்கி
றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே அரசிலே
வழங்குகிற திட்டம், கொடுத்த ரூபாய் இறந்தால் கிடைக்கு
அவர்கள் ஓய்வு பெறும்போது திரும்பி வராது. இந்தத் திட்ட
தின் படி அவர்கள் கொடுக்கிற தொகை அவர்களுக்கு வட்டி
யோடு திருப்பித் தரப்படும். இடையில் இறந்து போனால் ரூ.
2,000, ரூ. 3,000, ரூ. 5,000 என்று தரப்படும். இதை எல். ஐ. சி.
நிறுவனத்தோடு பேசச் சொல்லியிருக்கிறோம். அதிலே மாறு
தல் செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் முயற்சித்துக்கொண்டு
இருக்கிறோம். இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுகிற இதே
நேரத்தில், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள்
சம்பளத்தைக் கொடுப்போம் என்ற உறுதியைக் கொடுங்கள்
என்று சொன்னார்கள்.

நான் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த
பாக்கிகளில் ஒரு பாதியையாவது கொஞ்சம் கொஞ்சமாக தரு
வதற்கு வழி வகுத்து நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சிப்
போம். இதற்கிடையிலே அரசாங்கம் ஏக விரித்து விடாது.
முன்னாலே இருந்த அரசு 2½ கோடி ரூபாய் பாக்கி வைத்து
விட்டுச்சென்று இருக்கிறது, எப்படியாவது, எங்கேயாவது வசூல்
செய்து, இன்றைக்கு இந்த ஆலயங்களிலே பணிபுரியும் அலு
வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்கும் அந்தப் பணியாளர்களுக்கு
இந்த அரசு அவர்களுடைய சம்பள பாக்கியை தீர்க்க முயற்சி
கும், சம்பளத்தை உயர்த்த முயற்சிக்கும் என்று சொல்கிற அதே
நேரத்தில், அவர்களையெல்லாம் அரசு அலுவலர்கள் ஆக்குங்கள்
என்று கேட்கிறார்கள்.

அவர்களை அரசு அலுவலர்கள் என்று ஆக்கினால் பல
ஆயிரம் பேர் இப்போதே வீட்டுக்குப் போகவேண்டும். அரசு
அலுவலர்கள் என்றால் 55 வயதுக்கு மேலே வேலை பார்க்க முடி
யாது. அங்கே 60 வயதைத் தாண்டியவர்கள் எல்லாம் வேலை
பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். பல விதிகள் இடையூறாக
இருக்கின்றன. இதிலே இன்னொரு பரிதாபம் என்னவென்
றால், அவர்களிலே சிலருக்கு சேவை மானியம் என்று கொடுத்து,
இவனல்ல அந்தக் கோவிலில் நீ இந்த வேலையைச் செய்

1979 ஏப்ரல் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்].

நீ நாதஸ்வரம் ஊது, நீ தவில் அடி, நீ விளக்கு கொளுத்து, நீ
அந்த வேலையைச் செய் என்று சொல்லி, ஒரு ஏக்கர் நிலம்
தந்து, அதிலே வருவதைச் சாப்பிட்டுக்கொண்டு இரு என்று
சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்
துக்கொண்டவன் நிலத்தையும் தரமாட்டேன் என்கிறான்,
குத்தகையையும் தரமாட்டேன் என்கிறான், கோவிலிலும் உனக்குத்
தான் சேவை மானியம் இருக்கிறதே ~~என்று சம்பளம்~~ தரமாட்
டேன் என்கிறார்கள். இதற்கிடையில் அவர்கள் ஆண்டவனுக்கு
அந்தக் காரியத்தையும் செய்யவேண்டும். இப்படிப்பட்ட தர்ம
சங்கடமான நிலை இருக்கிறது. தயவு செய்து மாமன்ற உறுப்
பினர்கள் இவ்வளவு விவரங்களையும் நன்றாக சிந்தித்துப்
பார்த்து, அறநிலையத் துறை என்று வருகிறபோது இங்கே
பல்வேறு பாதுகாப்புச் சட்டங்கள், விவசாயிகளுக்கு என்ற
பெயரால் கொண்டு வந்த காரணத்தால், வசூல் செய்ய முடி
யாமல் தடைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதைத்தான் நான்
சொன்னேன்.

விதி விலக்குத் தரவேண்டும், விதி விலக்குத் தரவேண்டும்
என்று நீங்கள் அதைப்பரிசீலிக்கும் அதேநேரத்தில், எத்தனையோ
விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். கடந்த காலத்தில் புயல்
வெள்ளத்தால், பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு
உண்மையான நிவாரணம் வேண்டும்.

நான் இங்கே கணக்குத் தந்தேனே அதைப்போல் ஆயிரக்
கணக்கில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ~~கண்டு~~ பிடித்து
வசூல் செய்வதற்கு இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள்
உதவி செய்யவேண்டும் என்று கேட்டு, இப்படிப்பட்ட ஒரு
வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, இங்கே உறுப்பினர்கள் தந்து
இருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை திரும்பப்பெற்றுக்
கொண்டு இந்த மானிய கோரிக்கையை நிறைவேற்றித்தர
வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது * * * * என்று
சொன்னதற்கு பதிலாக, தஞ்சை மாவட்டத்தில் ஒருவர்
என்று இருக்கட்டும். அதேபோல * * * * என்பதற்குப்
பதிலாக பழனியிலே ஒருவர் என்று இருக்கட்டும். அந்த
இரண்டு பெயர்களையும் சபைக்குறிப்பிலே இருந்தும் பத்திரிகைக்
குறிப்பிலே இருந்தும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1979 ஏப்ரல் 17

தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது'
நாளைக்கு உறுப்பினர்கள் வேண்டுமானால் 9 மணிக்கு மேல்
வரலாம், நான் காலை 8½ மணிக்கே வரவேண்டும். நேரம் ஆகி
விட்டது முடித்துவிடலாம்.

<u>திரு. கே. கந்தசாமி</u> : தலைவரவர்களே, அரசு தரப்பில்
அமைச்சரவர்கள் ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள். சில
சிக்கல்களைச் சொன்னார்கள். அரசினுடைய நல்லெண்ணத்
தை நாங்கள் பாராட்டுகிற நேரத்தில் ஒன்றைச் சொல்கிறேன்.
அதாவது, அவர்கள் குத்தகை பாக்கிக்காரர்களிடமிருந்து வசூல்
பண்ண முடியாத நிலவரத்தைப் பற்றிச் சொன்னார்கள். இன்
னும் சென்னையில் சைனா பஜார் போன்ற இடங்களில் தகுந்த
வாடகை கொடுக்காமல் எப்படி எல்லாம் ஏமாற்றுகிறார்கள்.
என்று சொன்னார்கள். சட்டத்தை மாற்றுவதற்கு அதிகாரம்
உடைய அரசு இதற்கான சட்டத்தை மாற்றி, நம்முடைய மன்
றத்தின் மூலமாக உடனடியாக நிறைவேற்றி, இந்த 19 கோடி,
24 கோடி, 25 கோடி என்ற அந்தத் தொகையை வசூலிப்பதற்
குரிய வழிகளில் நடவடிக்கை எடுக்கப்படுமா? அதற்கான சட்
டத்தைக் கொண்டுவரவும், குத்தகையை வசூல் செய்யவும் அதி
காரத்தை கமிஷனர், டெபுடி கமிஷனர் போன்றவர்களுக்கு
அளித்து அப்போதைக்கப்போது ரெமிஷன் கொடுக்கவும் அப்படிக்
கொடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் முன்வருவார்களா
என்பதைஅறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : அதைத்தான்
நான் என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறேன். உண்மை
யான ஏழை எளிய, நிலத்திலே இறங்கிப் பாடுபடுகிற விவசாயி
களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நன்மையைப் பயன்படுத்தி,
இப்படி விவசாயிகள் என்ற பெயராலே ஏமாற்றிக் கொண்டிருக்
கிறார்கள். அரசுக்கு அல்லது ஆலயத்திற்கு தரவேண்டிய பாக்கி
யைத் தராமல் ஏமாற்றிக்கொண்டிருக்கிற நிலைமையைத்
தடுத்து, உண்மையிலேயே அந்த வாடகை போன்றவற்றை
வசூலிக்கச் செல்லுகின்றபோது அவர்கள் உடனே வழக்கு
மன்றத்திற்கு போகின்ற முறைகளைத் தடுக்கவும், சிலையைத்
திருடிக்கொண்டுவந்தால் சிலையைத் திருடியவனைப் பற்றி புகார்
செய்த போலீஸ்மீதே கண்டம்ப்ட் ஆப் கோர்ட் என்ற வழக்குப்
போடுகின்ற அந்த நிலைமையை மாற்றவும் இப்படிப்பட்ட பல்
வேறு சூழ்நிலைகளைச் சேர்த்து மொத்தமான ஒரு சட்டதிருத்
தத்தைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை
நான் முன்னாலேயே தெரிவித்துவிட்டேன். அதை மீண்டும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : தலைவரவர்களே, ஏற்கனவே
ரென்ட் கன்ட்ரோல் ஆக்டிலேயிருந்து
சட்டம் இருக்கிறது. ரிலிஜியஸ் எண்டோமென்ட்டுக்கு எக்ஸம்ஷன் இருக்கிறது.
அப்படி இருக்கும்போது இந்த சென்னையைச் சுட்டிக்காட்டினீர்
களே, 5 ஆயிரம் ரூபாய் குத்தகை பாக்கி வரவேண்டி இருக்
கிறது என்று. சட்டப்படி சரியான வாடகை நிர்ணயிக்கப்பட
வேண்டும். சட்டத்திலே இன்றைக்கு அதிகாரம் இருக்கின்றது.
அப்படி இருக்கும்போது அதை ஏன் செய்யவில்லை என்பதுதான்
கேள்வி ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : தலைவரவர்களே,
மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் மிகச் சிறந்த வழக்கறிஞர்.
இருந்தாலும் இதிலே எப்படியோ தவறிவிட்டார். இந்தச் சட்டத்
தின் விதிவிலக்கைச் சேலஞ்ச் செய்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய்
இந்த விதிவிலக்கு தருவது தவறு என்று அதற்கான தடையைப்
பெற்றுவிட்டார்கள். அதை எதிர்த்து இந்த அறநிலையைத்
துறை உச்ச நீதிமன்றத்திலே வழக்காடிக் கொண்டிருக்கிறது.
இப்படி விதிவிலக்கு தந்தாலும் ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட்டை
வைத்துக்கொண்டு கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். மன்னிக்க
வேண்டும். பல வழக்கறிஞர்கள் அதற்காகவே இருக்கிறார்கள்.
'நீங்கள் வாருங்கள், நான் ஸ்டே வாங்கித் தருகிறேன்' என்று
சொல்லி உடனே கோர்ட்டிலே ஒரு பெட்டிஷன் போடுகிறார்கள்,
அப்போது ஸ்டே ஆர்டரும் பெற்றுவிடுகிறார்கள். அதனால்
அவை எல்லாம் ஆண்டுக் கணக்கில் தூங்கிக் கொண்டிருக்கின்றன.
இப்படி அறநிலையத் துறையிலே ஆயிரக்கணக்கான வழக்குகள்,
அந்த சொத்துக்களுக்குரிய நியாயமான வாடகையை வசூலிக்க
முடியாமல், தூங்கிக்கொண்டிருக்கின்றன.

<u>திரு. எம். அண்ணாமலை</u> : தலைவரவர்களே, அமைச்சர
வர்கள் தனது தொகுப்புரையில் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள்
குறிப்பிடும்போது நிலத்தைப் பிரித்துக்கொடுக்கச் சொல்லி இருக்
கிறார்கள். அதே நேரத்தில் இந்த ஆலய ஊழியர்களின்
வாழ்க்கை என்ன என்பதைப் பற்றியும் வெளியில் கவர்ச்சியாக
பேசுவது போல் பேசினார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது
ஏதோ கவர்ச்சிக்காக அல்ல. கவர்ச்சியில் எங்களுக்கு நம்பிக்
கையும் இல்லை. இன்றுள்ள வருமானத்தைக் கொண்டே இந்த
ஆலய ஊழியர்களைப் பாதுகாக்க முடியும். அமைச்சரவர்கள்
பல பினாமிகளையும் முறைகேடுகளையும் பற்றியும் குறிப்
பிட்டார்கள். மேலும் அவருடைய உரையிலே சொல்லும்போது
இந்தத் துறைக்குள் நுழையும்போது ஒரு இருண்ட குகைக்குள்
நுழைவது போல் இருக்கிறது என்று சொன்னார்கள். பல்வேறு
முறைகேடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நாங்கள்
இதை எல்லாம் கணக்கில் எடுத்துத்தான் சொல்கிறோம். ஒரு

[திரு எம். அண்ணாமலை] [1979 ஏப்ரல் 17

துணி கிழிந்தது என்பது, கிழிக்கப்பட்டதைப் பார்ப்பதல்ல, ஏன் கிழிந்தது என்பதைப் பொறுத்துத்~~தான் பார்க்கவேண்டும்~~. ஆனால் இன்றைக்கு இந்தத் துறைக்கு வரவேண்டிய வருமானத்தை, மடாதி பதிகளும், அறங்காவலர்களும், ஆலையத்தார்களும் அடிக்கும் கொள்ளையை தடுத்தால் பல கோடி ரூபாய் வரவேண்டி இருக் கிறதே, அந்த வருமானம் வந்தால், அதற்கு உதவி செய்தால் அந்த ஆலயப் பணிகளை எந்த வகையிலும் குறையாமல் நடத்த முடியும். அதே நேரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களை யும் பாதுகாக்க முடியும் என்ற ஒரு யதார்த்தமான சமூகக் கண்ணோட்டத்தோடுதான் பேசப்படுகிறதே ஒழிய, ஏதோ கவர்ச்சிக்காகப் பேசுவதல்ல என்பதை நான் இங்கே தெளிவாகக் கூற விரும்புகிறேன் என்பதோடு, பினாமி நிலம் பற்றி குறிப்பிடும் போது முன்னாள் M.P., தலைவர், அறிஞர் என்று குறிப்பிட்டபடி மடாதிபதிகளையும், அறங்காவலர் போன்றோரின் பினாமி களையும் இணைப் பெயரோடும் பதவி பெயரோடும் குறிப்பிடு வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, அமைச்சர் பேச கின்றபோது நான் குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். அவர்கள் சொல்லுகின்றபோது 40 ஏக்கர் நிலத்திலே அஞ்சுகம் இல்லத்தை நடத்தி வருவதாகவும், அவர்கள் அரசாங்கத்திற்குரிய கட்டணத்தைச் செலுத்தவில்லை என்றும் சொன்னார்கள். அந்த நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் யார் ? அது எந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். 40 இலட்சம் ரூபாய் செலவிலே சிலை திருட்டு செய்யப்பட்டு அதைப்பிடித்த அதிகாரிமீதே கன்டம்ட் ஆப் கோர்ட் என்று வழக்கு போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப படிப்பட்ட குற்றவாளி யார் என்று மக்கள் தெரிந்துகொள்கின்ற வகையில், அறிமுகப்படுத்துகின்ற வகையில் இங்கே வெளி படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 9-10.)

அதோடு, 40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிலையைப் பிடிக்க உதவிய அதிகாரிகள்மீது "கன்டெம்ட் ஆப் கோர்ட்" என்று வாதாடியதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட குற்ற வாளி யார் ? வழக்கு மன்றத்திலே அவர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும்போது, இந்த மன்றத்திலே அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அஞ்சுகம் இல்லம் ஏற்படுத்தப்பட்டது 1971-ஆம ஆண்டில். 1976-ல் அவர்களது 5 ஆண்டு குத்தகை முடிந்துவிட்டது. இந்த 40 இலட்சம் ரூபாய் சிலை விவகாரம் வழக்குமன்றத்திலே இருக்கிறது. அதனால் அவர்கள் பெயரைச் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால், அமைச்சர் பேரிலேகூட "கன்டெம்ட் ஆப் கோர்ட்" வரலாம். அப்படிச் சட்டத்தில் எவ்வளவோ உரிமைகள் தரப்பட்டிருக் கின்றன. அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்திலே ஒரு சிக்கல் இருக்கிறது. இது புதைபொருள்; எனவே களவாடியது அல்ல என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாம். பின்னால் சமயம் வரும்போது, இந்த மன்றத்திலே அறிவிக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, கோவில்களிலே உள்ள அரிய தங்க அபரணங்களையும், சிலை களையும் திருடுகிறார்கள். உண்மையான சிலைகளைத் திருடிக் கொண்டு, மாற்றுப் போலி விக்கிரகங்களை வைத்து விடுகிறார்கள். அதே போல் ஆபரணங்கள் திருடப்படுகின்றன. எனவே, ஒரு அப்ரெய்சரை நியமித்து அங்கே இருக்கக்கூடிய விக்கிரகங்களை எல்லாம் போட்டோ எடுத்து வைக்கவேண்டும் என்று அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொன்னதுபோல், இப்போது அறநிலையத் துறை யில் அசெஸ்ஸர்ஸ் என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, பல் வேறு கோயில்களிலே இருக்கும் நகைகள் இப்போது சரிபார்த்து ஸ்டாக் எடுக்கப்பட்டு வருகின்றது. நான் சென்றபோது, வைரங்கள் இத்தனை கேரட் என்று போடாமல், மதிப்பு போட்டிருந்தார்கள். அதே மாதிரி, தங்கத்தையும் எவ்வளவு எடை என்று போடாமல், எவ்வளவு மாற்று என்று சொல்லாமல், மதிப்பு போட்டிருந்தார் கள். அவைகளை எல்லாம் மாற்றி, வைரத்திற்கு இவ்வளவு காரட் எடை என்றும், தங்கத்திற்கு இவ்வளவு எடை என்றும் முறையாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, முறையாக அவைகளை எல்லாம் கணக்கெடுப்பதற்கு, அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே, சிலைகளைக்கூட தொல்பொருள் ஆய்வுத் துறையின் மூலம் நிர்ணயிக்கப்பட்டு, கணக் கிடப்பட்டு, அவைகள் பரிசோதிக்கப்பட்டு, படங்கள் எடுக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டு இருக்கின்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

[1979 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண் 12—

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,61,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.”

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9·14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது·

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

139. இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையம் மலை யடிப்பட்டியில் உள்ள கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மன்றத்தின ரால் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 12—3—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண் 274-ல் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

140. தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்சக்தி விநி யோக நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) விதிகளில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து பொதுப்பணித் துறையின் 14—2—79 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 228-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தனியார் மின்சக்தி விநியோக நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1973) 21 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1979 ஏப்ரல் 17]

141. மதுரை மாவட்டம், பழநி வட்டம், சத்திரப்பட்டியில் உள்ள காந்தி சேவா சங்கத்தில் கையினால் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் சோப்புகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப் பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 29-1-1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 74-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

142. சென்னை அண்ணா சாலையிலுள்ள 'சிவ்ராஜ் ஆட்டோ மொபைல் நிறுவனம் சென்னையிலுள்ள காது கேளாதோர் பள்ளிக்கு விற்பனை செய்துள்ள ஆட்டோ ரிக்ஷாவிற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 19-2-1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 181-ல் வெளியான அறி விப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*159. கோரிக்கை எண் 40, 55—சாலைப் போக்குவரத்துப் பணி—கப்பல் போக்குவரத்து ; சாலைப் போக்குவரத்துப் பணி கள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

*160. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து — கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

*161. 1979-80 ஆம் ஆண்டில் துறைமுகத் துறையின் சாதனை விளக்க அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

*162. கோரிக்கை எண் 33— தமிழ்நாட்டில் வீட்டு வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

*163. கோரிக்கை எண் 35— தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 (தமிழ், ஆங்கிலம்).

**164. கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங் கள்—நிர்வாகம்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

**165. தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து குறித்த ஆய்வுரை, 1978–79 (தமிழ், ஆங்கிலம்).

**166. தமிழ்நாட்டில் சாலைப் மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆய்வுரை, 1978–79 (தமிழ்).

***167. தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆய்வுரை, 1978–79 (ஆங்கிலம்).

@168. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1978–79 (தமிழ், ஆங்கிலம்).

@169. தமிழ்நாடு தீயணைப்புத்துறை குறித்த ஆய்வுரை, 1978–79 (தமிழ், ஆங்கிலம்).

கோரிக்கை எண்கள் 15, 16-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 16-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

* 12-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 13-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*** 15-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

@ 16-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

இணைப்பு I

[15ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 695க்கான விடையைக் காண்க].

விடை.

வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுகின்றன:—

(1) மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம்.—பரிந்துரைக்கப்படும் உயர் விளைச்சல் விதைகள், பசுந்தாள் உரம், இரசாயன உரம், பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவைகளை பயன்படுத்தி ஒரு பகுதியில் (unit) உள்ள உற்பத்தித் திறனை பெருக்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1978–79-ஆம் ஆண்டுக்கு ரூ. 6·91 இலட்சம் செலவாகும்.

(2) அமோக விளைச்சல் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அமோக விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்தி நெல், சிறு தானியங்கள் உற்பத்தி பன்மடங்கு பெருக்கப்படும். வட ஆற்காடு மாவட்டத்தில் இத்திட்டம் செயல்பட 1978–79-க்கு ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) பயறுவகை விதைப் பெருக்குத் திட்டம்.—ஆண்டுதோறும் 400 டன்கள் தரமான சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பயறு விதைத் தேவைகளை நிறைவு செய்வது இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். இத்திட்டமும், மைய அரசின் பயறு மேம்பாட்டுத் திட்டமும் செயல்பட 1978–79 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	இலட்சம்.
(1) ஒருங்கிணைந்த பயறு வகை விதை மற்றும் விதைப் பெருக்குத் திட்டம்.	ரூ. 5.68
(2) மைய அரசின் பயறு மேம்பாட்டுத் திட்டம்.	ரூ. 0.24

மேற்காண் மூன்று திட்டங்கள் மூலம் சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு கீழ்க்கண்டவாறு அதிக அளவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது:—

(அ) நெல்	0.30 இலட்சம் டன்.
(ஆ) சிறு தானியங்கள் ..	0.07 இலட்சம் டன்.
(இ) பருப்பு வகைகள் ..	0.11 இலட்சம் டன்.

[1979 ஏப்ரல் 17

இணைப்பு II.

25ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா
எண் 715-க்கான விடையைக் காண்க.]

விடை.

(அ) அண்டு (ஆ): ஆம். இராமநாதபுரம் மாவட்டத்தி
லுள்ள 301 கிராமங்களிலுள்ள 7,154 குடிசைகள்
பாதிக்கப்பட்டன. 5 பேர் உயிரிழந்தனர். மீன் துறை
மற்றும் தனி நபருக்குச் சொந்தமான 637 விசைப் படகுகள்
சேதமடைந்தன. மீனவர்களின் 1,941 நாட்டுப் படகுகள்
சேதமடைந்தன, 3,990 வலைகளும் சேதமடைந்தன. பயிர்ச்
சேத பாதிப்பு விவரங்களாவன :—

பயிர்.	பரப்பு.	பாதிப்பின் அளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(ஏக்கரில்.)		
வாழை ..	1,185.00	முழுச் சேதம்.	550 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது
கரும்பு ..	120.31	,,	60 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
வெற்றிலை	207.54	,,	100 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
தேங்காய் (1,000 மரங்கள்)	10.00	,,	எல்லாமே சிறு விவசாயிகளைச் சார்ந்தது.

மேலும் சாலைகள், நீர்ப்பாசனங்கள் மற்றும் தனியார்
களின் பொருள்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. மாவட்ட
ஆட்சித் தலைவரின் மதிப்பீட்டின்படி மொத்தச் சேதம் ரூபாய்
5.69 கோடி.

மற்ற மாவட்டங்களில் பாதிப்பு அதிகமில்லை.

(இ) அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றி
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரித் திங்களில் எதிர்க்
கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்

[1979 ஏப்ரல் 17

மீது அளித்துள்ள பதிலில் ஏற்கெனவே விவரமாகத் தெரிவித்
துள்ளார். இருப்பினும், விவரங்கள் பின்வருமாறு :—

கடலோரக் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும்
மக்களை தனி ரயில் மூலமும், தனி ஊர்திகள் மூலமும் அப்புறப்
படுத்தி, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்
களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 20 கிராமங்களில் வசிக்
கும் சுமார் 13,805 பேர்கள் 10 நிவாரண முகாம்களில் தங்கினர்.
மூன்றிலிருந்து நான்கு நாட்கள் அவர்களுக்கு ரூ. 16,577 மதிப்
புள்ள 36,400 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சேத
முற்ற குடிசைகளுக்கான கருணை மானியம் ரூ. 100 அல்லது
50 ஆக ரூ. 3,58,680 வழங்கப்பட்டுள்ளது. முதலில் பாதிக்கப்
பட்ட, மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு
5 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டது. மேலும் மீனவர்கள்
வீடிழந்து, படகுகள் சேதமடைந்ததால் மீன் பிடிக்கச் சில
காலம் செல்ல இயலாததால், 135 கடலோரப் பகுதிகளில்
வாழும் 5,439 மீனவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்குக் கூடுத
லாக 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ரூ. 1,87,968 மதிப்
புள்ள 5,874 வேட்டியும், புடவையும் வழங்கப்பட்டன.

இறந்துபோன 4 பேர்களுடைய குடும்பத்திற்கு முதல்
அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,000
வீதம் உதவித் தொகை கொடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின்
விவரங்களாவன :—

	ரூபாய்
(1) கட்டுமரங்கள் :—	
(1) முழுமையாக பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும்	2,000
(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும்	1,000
(2) நாட்டுப் படகுகள்/வள்ளம் :—	
(1) முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும்	4,000
(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும்	2,000
(3) நைலான் வலைகள் :— முழுச்சேதம்	3,000

1979 ஏப்ரல் 17]

நிவாரணம் 50 சதவிகிதம் மானியமாகவும் 50 சதவிகிதம்
கடனாகவும் அளிக்கப்படும். நிவாரணம் அளிப்பதற்கு முன்
பணமாக மீன்துறை இயக்குனருக்கு அரசு ரூ. 50 இலட்சம்
அளித்துள்ளது. கடன் தொகை வட்டியில்லாக் கடனாகக்
கொடுத்து 30 மாதத் தவணைகளாக வசூலிக்கப்படும். கடனும்,
மானியமும் வலைகள் தொலைந்திருந்தால் வலைகளாகவும்,
படகுகள், கட்டுமரங்கள் சேதமடைந்தால், பணமாகவும்
கொடுக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மதுரையிலுள்ள
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வட்டார அலுவலருக்கு, மீனவர்களுக்கு
முழுச் சேதமடைந்த படகுகளை மீட்பதற்காக விசைப்படகிற்கு
ரூ. 5,000-ம் நாட்டுப் படகிற்கு ரூ. 3,000 வீதமும் கடனுதவி
செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர்
ரூ. 7,284 செலவு செய்து கொடுக்கப்பட்டது. ரூ. 4,750
செலவு செய்து, 11 ஊரணியில் உள்ள கடல் தண்ணீர் இறைக்கப்
பட்டது.

சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளும், உரங்கள்
25 சதவீதம் குறைந்த விலையிலும் வழங்க உத்திரவிடப்பட்
டுள்ளது.

யூரியா உரம் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் விலையை
இலவச உதவியாகவும், மீதியைக் கூட்டுறவுக் கடனாகவும்
வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. மண்ணில் புதையுண்ட
நிலங்களுக்கும், கிணறுகளுக்கும் சிறு விவசாயிகளுக்கு இலவச
மாகவும், மற்றவருக்கு 50 சதவிகிதம் உதவியாகவும், ஒரு
ஏக்கருக்கு அல்லது ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல்
உதவி செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தென்னங்கன்றுகளை இலவச
மாகவும், கரும்பு, வாழை இவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100
உதவித் தொகையாகவும், வெற்றிலைக்கு ரூ. 500 (ஒரு ஏக்க
ருக்கு) உதவித் தொகையாகவும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250-க்கும்
நபர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கும் மேற்படாமல் உருளைக் கிழங்கு
விதைகளுக்கு 25 சதவிகிதம் விலை இலவச உதவித் தொகை
யாகவும் காய்கறி தோட்டத்திற்கு விதைகள் இனாமாகவும்,
சிறு விவசாயிகளுக்கு அளிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978 நவம்பர் புயலி
னாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட 3 வட்டங்களான
இராமநாதபுரம் (இராமேஸ்வரம் துணை வட்டம் உட்பட)
முதுகளத்தூர் (கமுதி துணை வட்டம் உட்பட) மேலும

[1979 ஏப்ரல் 11

திருவாடானை ஆகிய இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள்
உள்ளாட்சி ஊழியர்கள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்
கூடங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத
ஊழியர்கள், மேலும் முழு நேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்கள்
இவர்கட்கு அளிக்கப்பட்ட சலுகைகளாவன :—

ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 400-க்கு அதிக
மாகாத வகையில் முன்பணம் கொடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது;
இப்பணத்தை 10 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்
படும். ஆனால் (2) முழு நேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்
களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 200-க்கு அதிக
மாகாத வகையில் முன்பணமாகக் கொடுக்கப்படும். இப்பணத்தை
20 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்படும்.

மேலும் மேலே குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில் பணிபுரியும்
அரசு ஊழியர்களும், மற்றும் 3 வட்டங்களைச் சார்ந்த, ஆனால்
வேறு இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களும், அவர்களது
வீடோ மற்ற பொருட்களோ குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில்
பாதிக்கப்பட்டிருப்பின் கட்டாய சேமிப்புநிதியிலிருந்துபணத்தைப்
பெற்றுக்கொள்ளலாம்.

இம்மாநிலத்தில் 1978 நவம்பர் திங்களில் வெள்ளத்தால்
சேதமடைந்த பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக மத்திய
அரசிடம் மொத்த ரூபாய் 2,284·15 லட்சம் நிதியுதவி கோரப்
பட்டது. வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலைகள், சீரமைத்
தல், பொதுக் கட்டிடங்களை புதுப்பித்தல், மீனவர்களுக்கு
உதவி, நெசவாளர்களுக்கு உதவி, நகராட்சிகள் ஆகிய இப்
பணிகளுக்கெல்லாமாக மத்திய அரசு ரூபாய் 1,011·40 லட்சம்
திட்ட உதவி முன்பணமாக அளித்துள்ளது. சேதமடைந்த
சாலைகள், நீர்ப்பாசனங்கள், ஊராட்சி ஒன்றியங்களைச்
சார்ந்த பள்ளிகள் முதலியவற்றை சீர்படுத்துவதற்கான பணி
களுக்காக அரசு நிதிஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை
விரைவாக மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

இணைப்பு III

[..25ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 716-க்கான விடையைக் காண்க]

விடை.

(அ) 301 கிராமங்களில் 7,154 குடிசைகள் பாதிக்கப்பட்டன. மீன்துறை மற்றும் தனி நபருக்குச் சொந்தமாக 637 விசைப்படகுகள் சேதமடைந்தன. 1941 நாட்டுப் படகுகளும், 4,022 மீன் வலைகளும் சேதமுற்றன. சங்கரநத்தம் அணைக்கட்டும், ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 31 சிறு பாசன ஏரிகளும் சேதமுற்றன. 11 ஊரணிகளில் கடல் தண்ணீர் கலந்து விட்டது.

பயிர் சேதப் பாதிப்பு விவரங்கள்.

பயிர்.	பரப்பு (ஏக்கரில்.)	பாதிப்பின் அளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வாழை ..	1,185 00	முழுச் சேதம்	550 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
கரும்பு ..	120·31	,,	60 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
வெற்றிலை	207·54	,,	100 ஏக்கர் சிறு விவசாயிகளைச் சார்ந்தது.
தேங்காய் (1,000 மரங்கள்)..	10·00	,,	எல்லாமே சிறு விவசாயிகளைச் சார்ந்தது.

(ஆ) அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர், அவர்கள் பிப்ரவரி மாதம் எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது அளித்துள்ள பதிலில் ஏற்கெனவே விவரமாகத் தெரிவித்துள்ளார். இருப்பினும் விவரங்கள் பின்வருமாறு :—

இம்மாதிரியான புயல் வெள்ளம் போன்ற அவசர காலங்களில் ஒவ்வொரு மாவட்டத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ''அவசரக் காலத் திட்டம்'' ஒன்று ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருந்ததால், மாவட்டம் முழுவதுமுள்ள பல

நிவாரணம் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம்
கடனாகவும் அளிக்கப்படும், நிவாரணம் அளிப்பதற்கு முன்பண
மாக மீன் துறை இயக்குனருக்கு அரசு ரூ. 50 லட்சம் அளித்
துள்ளது. கடன் தொகை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து
30 மாதத் தவணைகளாகக் வசூலிக்கப்படும். கடனும்
மானியமும், வலைகள் தொலைந்திருந்தால் வலைகளாகவும்
படகுகள், கட்டுமரங்கள் சேதமடைந்தால் பணமாகவும் கொடு
கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரையிலுள்ள
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வட்டார அலுவலருக்கு, மீனவர்களுக்கு
முழு சேதமடைந்த படகுகளை மீட்பதற்காக விசை பட
கிற்கு ரூ. 5,000-ம், நாட்டுப் படகிற்கு ரூ. 3,000 வீதமும்
கடனுதவி செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார். வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் ரூ. 7,284
செலவு செய்து கொடுக்கப்பட்டது. ரூ. 4,750 செலவு செய்து
11 ஊரணியில் உள்ள கடல் தண்ணீர் இறைக்கப்பட்டது.

சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளும், உரங்கள்
25 சதவீதம் குறைந்த விலையிலும் வழங்க உத்திரவிடப்பட்
டுள்ளது. யூரியா உரம் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம்
விலையை இலவச உதவியாகவும், மீதியை கூட்டுறவுக் கடனாக
வும் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. மண்ணில் புதையுண்ட
நிலங்களுக்கும், கிணறுகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் இலவச
மாகவும், மற்றவருக்கு 50 சதவிகிதம் உதவியாகவும், ஒரு ஏக்க
ருக்கு அல்லது ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல்
உதவி செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட
இடங்களுக்கு தென்னங் கன்றுகளை இலவசமாகவும், கரும்பு,
வாழை இவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100 உதவி தொகையாகவும்
வெற்றிலைக்கு ரூ. 500 (ஒரு ஏக்கருக்கு) உதவித் தொகையாகவும்
ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250-க்கும், நபர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கும்
மேற்படாமல், உருளைக் கிழங்கு விதைகளுக்கு 25 சதவீதம்
விலை இலவச உதவித் தொகையாகவும், காய்கறி தோட்டத்திற்கு
விதைகள் இனாமாகவும் சிறு விவசாயிகளுக்கு அளிக்க உத்திர
விடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978 நவம்பர் புயலினாலும்
வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட 3 வட்டங்களான இராம
நாதபுரம் (இராமேஸ்வரம் துணை வட்டம் உட்பட) முது
குளத்தூர் (கமுதி துணை வட்டம் உட்பட) மேலும் திருவாடானை
ஆகிய இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி
ஊழியர்கள், மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களைச்

[1979 ஏப்ரல் 17

துறையைச் சார்ந்தவர்களைச் சரியாக முடுக்கி கடலோரப் பகுதிகளில் நிவாரண பணியாற்ற முடிந்தது. கடலோரக் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை, தனி ரயில் மூலமும் தனி ஊர்திகள் மூலமும் அப்புறப்படுத்தி. பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 20 கிராமங்களில் வசிக்கும் சுமார் 13,805 பேர்கள் 10 நிவாரண முகாமில் தங்கினர். மூன்றிலிருந்து நான்கு நாட்கள் அவர்களுக்கு ரூ. 16,577 மதிப்புள்ள 36,400 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன: முதலில், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டது. மேலும், மீனவர்கள் வீடிழந்து, படகுகள் சேதமடைந்ததால் மீன் பிடிக்கச் சில காலம் செல்ல இயலாததால் 135 கடலோரப் பகுதிகளில் வாழும் 5,439 மீனவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூடுதலாக 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ரூ. 1,87,968 மதிப்புள்ள 5,874 வேட்டியும், புடவையும் வழங்கப்பட்டன. இறந்து போன 4 பேர்களுடைய குடும்பத்திற்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,000 வீதப் உதவித் தொகை வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் விவரங்களாவன:—

(1) <u>கட்டுமரங்கள் :</u>

(1) முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும் .. .. ரூ. 2,000

(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும் .. .. ரூ. 1,000

(2) <u>நாட்டுப் படகுகள்/வெள்ளம் :</u>

(1) முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும் .. .. ரூ. 4,000

(2) பகுதி சேதமடைந்தவை ஒவ்வொன்றுக்கும் .. .. ரூ. 2,000

(3) <u>நைலான் வலைகள் :</u>

முழுச்சேதம் .. .. ரூ. 2,000

சார்ந்த ஆசிரியர், மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள், மேலும் முழுநேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்கள் இவர்கட்கு அனு கப்பட்ட சலுகைகளாவன :—

(1) ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 400-க்கு அதிக மாகாத வகையில் முன்பணம் கொடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது. இப்பணத்தை 10 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப் படும்.

(2) முழுநேர நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 200-க்கு அதிகமாகாத வகையில் முன் பணமாகக் கொடுக்கப்படும். இப்பணத்தை 20 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்படும்.

(3) மேலும், மேலே குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில் பணி புரியும் அரசு ஊழியர்களும், மற்றும் 3 வட்டங்களைச் சார்ந்த ஆனால் வேறு இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களும் அவர்களது வீடோ மற்ற பொருட்களோ, குறிப்பிட்டுள்ள 3 வட்டங்களில் பாதிக்கப்பட்டிருப்பின், கட்டாய சேமிப்பு நிதியிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இம்மாநிலத்தில் 1978 நவம்பர் திங்களில், வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக, மத்திய அரசிடம் மொத்தம் ரூ. 2,284·15 லட்சம் நிதியுதவி கோரப் பட்டது. வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலைகள் சீரமைத்தல் பொதுக் கட்டிடங்களைப் புதுப்பித்தல், மீனவர்களுக்கு உதவி, நெசவாளர்களுக்கு உதவி, நகராட்சிகள் ஆகிய இப்பணிகளுக் கெல்லாமாக, மத்திய அரசு ரூ. 1,011·41 லட்சம் திட்ட உதவி முன்பணமாக அளித்துள்ளது. சேதமடைந்த சாலைகள், நீர்ப் பாசனங்கள், ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பள்ளிகள் முதலியவற்றை சீர்படுத்துவதற்கான பணிகளுக்காக, அரசு நிதி ஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை விரைவாக மேற் கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

இணைப்பு-IV.

[158-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை எண் 12.

1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை கள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

முகவுரை.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 22) 1960 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு

வந்தது. இச்சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத்
துறைக்கு, ஒரு ஆணையரும், அவருக்குக் கீழ் 7 துணை ஆணை
யர்களும், 16 உதவி ஆணையர்களும் உள்ளனர். அவர்கள் இத்
துறையின் நிர்வாகத்திற்குச் சட்டப்படி அமைந்த அதிகாரிகளா
வார்.

இந்த அலுவலர்களைத் தவிர, அறநிலையைத் துறையின்
கீழ், ஒரு தலைமைத் தணிக்கை அதிகாரியும் அவருக்குத் தேவை
யான அலுவலர்கள், பணியாளருடன் ஒரு தணிக்கைப் பிரிவும்
இருந்து வருகின்றது. அத் தணிக்கைப் பிரிவு சமய நிறுவனங்
களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றது.

மேலும், ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையின்
கீழ் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான மேற்
பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் மாவட்டங்கள்
தோறும் இருந்து, சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடு
களையும், அவற்றின் மேற் பார்வைப் பணிகளையும், மற்றக்
கட்டிட வேலைகளையும் கவனித்து வருகின்றனர்.

ஒரு துணை ஆணையர், நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும்
நீதி விசாரணைகளைச் செய்து முடிப்பதற்காகத் தனியாக
நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்.

இவர்களைத் தவிர, உதவி ஆணையர் பதவித்தரத்தில்
அமைந்துள்ள சரி பார்க்கும் அலுவலர்கள் (Verification
Officers) எண்மரும், அவர்களுக்குத் தேவையான
துணைப் பணியாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்த
மான நகைகளையும், மற்ற விலையுயர்ந்த பொருட்களையும்
ஆய்வு செய்து மதிப்பிடும் பணியை கவனித்து வருகின்றனர்.

இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறையின் கட்டுப்பாட்
டின் கீழ் 24,605 சமய நிறுவனங்கள் உள்ளன.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்திற்கும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கும் திருத்தம்.

இதுவரையில் இச்சட்டத்தைச் செயல்படுத்தியதில் கிடைத்த
அனுபவத்தைக் கொண்டும், குறிப்பாக சிறப்பு விசாரணைப் பிரி
வின் அறிக்கையால் வெளிக் கொணரப்பட்ட தகவல்களைக்
கொண்டும், மூலச் சட்டத்திற்கு விரிவான திருத்தங்களைச் செய்
வது குறித்து அரசு.

** இதற்கிடையில் உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை
எனக் கருதப்பட்ட திருத்தங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
இந்து சமய நிறுவனங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்ற தக்கார்
என்ற பொறுப்புக்குப் பதிலாக, அறங்காவலர் குழுவை அரசு
ஏற்படுத்த இயலும் வண்ணம், மூலச் சட்டத்திற்கு 42/78-ஆம்
சட்டத்தால் 1978 செப்டம்பரில் திருத்தம் செய்யப்பட்டது.

இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்கள் பரம்பரை முறையில்வருவதை நீக்குதலும் சாதி சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப் பாராமல் அர்ச்சகர்களை நியமித்தலும்.

எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது
நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கமாக
உள்ளதால், அந்நெறியில் எடுக்கப்படும் சமூக சீர்திருத்த நட
வடிக்கையாக இந்து சமயத்தைச் சேர்ந்தோரில் தகுதி வாய்ந்
தோரை—சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப்
பாராமல்—இந்து சமய ஆலயங்களில் அர்ச்சகர்களாக, பூசாரி
களாக அல்லது ஏனைய உள்துறை வேலையாட்களாக நியமிக்க
அரசு விழைகிறது. இந்துஆலயங்களில் அர்ச்சகர்களை நியமிப்பது
தொடர்பாக உச்ச நீதி மன்றத்தின் குறிப்புரைகளைக் கருத்தில்
கொண்டு, மேற்சொன்ன நோக்கத்தை அடைவதற்குரிய வழி
வகைகளைக் கூறுவதற்கு, வேதங்கள், ஆகமங்கள், திருமுறை
கள் முதலியனவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை
அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை முறையில்வராத அறங்காவலர்களை நியமித்தல்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்
சட்டம், இந்தியக் குடியரசுத் தலைவரின் 24/1976 ஆம் எண்
ணுள்ள சட்டத்தால் திருத்தப்பட்டது. இத்திருத்தம் 1976ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.
பரம்பரை முறையில் வராத அறங்காவலர்கள் பதவி வகிப்பது
அந்நாளிலிருந்து அற்றுப் போனது. அவர்களது இடங்களில்
இந்து சமய நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகளும், இந்து சமய
அறநிலையத் துறையின் ஆய்வாளர்களும், அரசின் ஏனைய
துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் தக்கார்களாக நியமிக்கப்
பட்டனர்.

1978 செப்டம்பரில், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து
சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தால் (சட்டம் எண்.
4/1978) இந்து சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வரு

வாயையொட்டி (சகாயத் தொகை விதிப்பிற்குரிய) பின்வருமாறு
புதிதாக வகைப்படுத்தப்பட்டன:—

(1) ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் குறைவாகக்
கொண்டுள்ள சமய நிறுவனங்கள்;

(2) ஆண்டு வருவாய் ரூ. 10,000-மும் அதற்கு மேலும்,
ஆனால் ரூ. 50,000-த்திற்குக் குறைவாகவும் கொண்டுள்ள
சமய நிறுவனங்கள்;

(3) ஆண்டு வருவாய் ரூ. 50,000-மும் அதற்கு மேலும்
ஆனால் 1 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாகவும் கொண்டுள்ள
சமய நிறுவனங்கள்;

(4) ஆண்டு வருவாய் ரூ. 1 இலட்சமும் அதற்கு மேலும்,
உடைய சமய நிறுவனங்கள்;

பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை
பொருத்தமான, தகுதி வாய்ந்த நபர்களின் பெயர்ப்பட்டியல்
களை தயாரித்து, சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரி
களுக்கு, அதாவது 1-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்
களைப் பொறுத்த மட்டில் உதவி ஆணையாளர், 2-வது வகை
யின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த மட்டில்
துணை ஆணையாளர், 3-வது வகையின் கீழ் வரும் சமய
நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் ஆணையாளர் அவர்
களுக்கு, அனுப்புவதற்காக திருத்தப்பட்டவாறுள்ள இச் சட்டத்
தின் 46ஏ பிரிவின் கீழ் வட்டாரக் குழுக்கள் அமைக்கப்
பட்டுள்ளன. தகுதி வாய்ந்த அதிகாரிகள், வட்டாரக் குழுக்கள்
பரிந்துரை செய்துள்ள பெயர்ப் பட்டியல்களிலிருந்து, அறங்
காவலர்களை நியமிப்பதுடன், பொதுவாக மக்களின் நலன்,
சமய நிறுவனத்தின் வருமானம், சொத்துக்கள் மற்றும் வழி
படுபவர்களின் எண்ணிக்கை, யாத்திரை தலமாக அச்சமய
நிறுவனத்திற்குள்ள முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்
கொண்டு, அரசு அவசியமெனக் கருதினால், அத்தகைய சமய
நிறுவனங்களுக்கு இரண்டு அறங்காவலர்களை நியமிக்க அரசு
அதிகாரம்பெற்றுள்ளது. ஆண்டு வருவாய் ரூ. 1 இலட்சமும்,
அதற்கு மேலும் உடைய சமய நிறுவனங்களுக்கு, பரம்பரை
முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்க, நியமன
அதிகாரியாக உள்ள அரசு, அவசியமான நடவடிக்கைகளையும்
எடுத்து வருகின்றது.

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சமய நிறுவனங்கள்
அனைத்திற்கும் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்
கள் வெகு விரைவில் நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன.

<u>மாநில ஆலோசனைக் குழு.</u>

சட்டத்தின் விதிகளுக்
குடியரசுத் தலைவரது (24/1976) ஆணையாளரை
கிணங்க, இந்து சமய அறநிலையத் துறையின கோயில் நிர்வாகத்
அலுவல் முறையில் தலைவராகவும், அவருக்கு அரசுச்
தில் பல்வேறு கூறுகள் குறித்து ஆலோசனை நல்க ஆலோசனைக் குழு
சார்பற்ற 12 உறுப்பினர்களைக் கொண்ட
ஒன்றை புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>யாதொரு சமய வழிபாட்டுப் பொது இடத்தில்</u>
<u>அல்லது இறை வணக்கத்திற்குரிய இடத்தில்,</u>
<u>விலங்குகள். பறவைகளை பலி கொடுப்பது,</u>
<u>விற்பது அல்லது விலங்கினங்கள் அல்லது</u>
<u>பறவைகளின் இறைச்சிகளை விற்பதற்காகப்</u>
<u>பார்வையில் வைப்பது ஆகியவற்றைத் தடுப்பது.</u>

விலங்குகள், பறவைகள் பலித்
தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு (தமிழ்நாடு சட்டம் 32/1950), இந்து கோயில்
தடைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் வளாகங்களில் மட்டும் விலங்குகள்,
கள் அல்லது அவற்றின் வளாகங்களில் தடுக்க வகை செய்கிறது.
பறவைகள் பலியிடப்படுவதைத்

பொது இடங்களிலும், பொது
கோயில்களுக்கு வெளியே உள்ள பலியிடப்படுவதைத்
வீதிகளிலும், விலங்குகள், பறவைகள் கீழ் வழங்கப்
தடை செய்ய வேண்மென்றும், இச்சட்டத்தின் வேண்டுமென்றும் கூறி
படும் தண்டனைகளை அதிகரிக்க கவனமாகப் பரிசீலனை
வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளைக் வழிபாட்டுப் பொது இடம்
செய்த பிறகு, எந்த ஒரு சமய மற்றும், அதனைச்
அல்லது இறை வணக்கத்திற்குரிய இடம் சொந்தமாக இருந்து,
சுற்றியுள்ள வளாகங்கள், தனி நபருக்குச் காரணமாக பொது
மரபு வழி உரிமை அல்லது பயன் உரிமை ஒரு தெரு அல்லது
மக்கள் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ள பொதுத்தெரு
சந்து அல்லது ஏனைய பொது வழி உட்பட எநத ஒரு
ஒன்றில் ஒரு சமய வழிபாடு தொடர்பாகக் கூடியுள்ள விலங்குகள்
வழிபாட்டுக் கூட்டத்திலும் அல்லது ஊர்வலத்திலும், இச்சட்டத்தைத்
பறவைகள் பலியிடப்படுவதைத் தடை செய்து அத்தகைய
திருத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும், இறைச்சியை
இடங்களில், விலங்குகள் அல்லது பறவைகளின் வைப்பதைத் தடை
விற்பதை அல்லதுவிற்பதற்காகப் பார்வைக்கு இச்சட்டத்தின் விதித்
செய்யவும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்
துறைகளை மீறினால் தண்டனைகளை அதிகரிக்கவும் குற்றங்
தின் கீழ்வரும் குற்றங்களை பிடியாணை வேண்டாக்
களாகச் செய்யவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவைச் செயலாக்குவதற்கான சட்ட முன்வடிவு விரைவில் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்களும் புதுக்கோட்டை கோயில்களும்.

1974 ஆம் ஆண்டின் 50-வது சட்டத்தின் மூலம் கன்னியாகுமரி தேவஸ்வம் குழு 1975 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதியன்று நீக்கப்பட்டது. முன்னாள் திருவிதாங்கூர் மன்னர்களின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் இருந்த தேவஸ்வங்கள், தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு 22-வது சட்டத்தின் வரம்புக்குள் கொண்டுவரப்பட்டன. அவை, திருநெல்வேலி துணை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையாளர் தரத்தில் உள்ள ஒரு நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் பராமரிப்புக்காக, அரசு, ஒவ்வோராண்டும் தொடர்ந்து ரூ. 13,70,000 மானியம் வழங்கி வருகிறது.

இந்த தேவஸ்வங்களில் பணிபுரியும் 131 பணியாளர்களை அரசுப் பணியாளர்களாகக் கருத வேண்டுமென்னும் வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முன்னாள் புதுக்கோட்டை மன்னர் நிர்வாகத்தின் கீழ் இருந்த 136 கோயில்களின் பராமரிப்புக்காகவும் அரசு ஆண்டுதோறும் ரூ. 5 இலட்சம் வழங்கி வருகிறது.

கோயில் பணியாளர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கோயில்களில் சுமார் 51,000 பணியாளர்கள் உள்ளனர். ஆண்டொன்றுக்கு ரூ. 1 இலட்சம் வருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கு மட்டுமே அமல்படுத்தி வந்த ''பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்'', ரூ. 10,000 மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியுடன், கோவில் பணியாளர்களுக்கென பொருத்தமானதொரு குடும்ப நலத்திட்டம் தீட்டுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

துறையின் வளர்ச்சியும் தொடரும் அதன் பணிகளும்,

கருணை இல்லம்.

கோயில்கள் அளிக்கும் உதவியைக் கொண்டு, 36 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 2,770 பேர் (2,000 சிறுவர்கள், 770 சிறுமிகள்) தங்கியுள்ளனர். இங்கு தங்கியுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 செலவாகிறது. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர் செலவில் முக்கால் பாகத்தை சம்பந்தப்பட்ட கோயில்களே ஏற்றுக் கொள்கின்றன. கால் பாகத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. இதுவரை ஆன செலவு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

		அரசு மானியம் அதாவது 25 சதவீதம்.	கோயிலின் பங்கு அதாவது 75 சதவீதம்.
	ரூ.	ரூ.	ரூ.
1975-76 ..	10,92,000.00	2,73,000·00	8,19,000·00
1976-77 ..	13,08,000.00	3,27,000·00	9,81,000·00
1977-78 ..	9,60,996.91	2,40,249·23	7,20,747·68
1978-79 .. (தோராயமாக)	10,00,000.00	2,50,000·00	7,50,000·00
மொத்தம்..	43,60,996.91	10,90,249·23	32,70,747.68

தெய்வச் சிலைகளையும் ஏனைய விலை உயர்ந்த பொருட்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்.

கோயில்களில் உள்ள பழங்கால வெண்கலச் சிலைகள், தெய்வ உருவச் சிலைகள், ஏனைய விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கவும், கோயில்களின் திருப்பணிக்காகவும் 1978 79 ஆம் ஆண்டில் ரூ. 17 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1979-80-ஆம் ஆண்டில் இதற்காக இதே அளவுக்குத் தொகை ஒதுக்க அரசு கருதியுள்ளது. விலையுயர்ந்த தெய்வச் சிலைகளும், பழங்கால வெண்கலச் சிலைகளும் உள்ள கோயில்களில் பாது

காப்பான அறைகள். மடக்குக் கதவுகள் அமைக்கவும் இத்
தொகை பயன்படுத்தப்படும். பாதுகாப்பு அறைகள் அமைக்க
கவோ போதிய, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவோ சாத்திய
மில்லாத இடங்களில், தெய்வச் சிலைகள் முதலியன போதுமான
பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ள அருகிலுள்ள ஆலயங்
களில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. தெய்வச்
சிலைகள், பிற விலையுயர்ந்த பொருட்களின் திருட்டு சம்பந்தப்
பட்ட வழக்குகளில் காவல் துறையினர் முனைப்பாகத் தொடர்
நடவடிக்கை எடுக்கின்றனர். புலனாய்வு குறித்த முன்னேற்றம்
அரசால் கண்காணிக்கப்படுகிறது. 1972 ஆம் ஆண்டு தொல்
பொருள்கள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்
52/1972) கீழ் மிகத் தொன்மையான மதிப்பு மிக்க பொருள்களை
யும் சிலைகள் அனைத்தையும் பதிவு செய்ய தீவிர முயற்சிகள்
தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றது.

நியாய வாடகை நிர்ணயித்தல்.

கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு நியாய
வாடகை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட நியாய வாடகைக்
குழு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளரின் வழி
காட்டுதலையொட்டி ஒவ்வொரு கட்டடத்திற்கும் நிர்ணயிக்கப்
பட வேண்டிய வாடகையைக் கணக்கிட்டு வருகிறது. குடி
யிருப்போருக்கு இன்னல்கள் ஏற்படாத வகையிலும், அதே சம
யத்தில் கோயில்களில் பூஜைகளும், பண்டிகைகளும் நடத்துவதற்
கென்றே அறக்கொடையாக வழங்கப்பட்டுள்ள சொத்துக்களி
லிருந்து கோயில்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கின்ற
வகையிலும், இந்த வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பழனியில் இரண்டாவது மின்சார இழுவைப் பொறி அமைத்தல்.

ரூ. 12 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், பழனி அருள்மிகு
தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு இரண்டாவது மின்சார
இழுவைப் பொறி அமைப்பது தொடர்பான பணி முடியும் தரு
வாயில் உள்ளது.

‘திருக்கோயில்.’

‘திருக்கோயில்’ என்னும் திங்கள் இதழ் தொடர்ந்து வெளி
வந்து கொண்டிருக்கிறது. தலை சிறந்த தமிழ் அறிஞர்கள் பலர்
இப்பத்திரிக்கையில் கட்டுரைகள் எழுதி வருகின்றனர்.

கோயில் திருப்பணி.

திருவரங்கத்திலுள்ள அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயில்,
சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் கோயில், திருவில்லி
புத்தூரில் உள்ள அருள்மிகு நாச்சியார் கோயில் போன்ற வர
லாற்றுச் சிறப்புமிக்க பழமையான கோயில்களின் திருப்பணிகள்
நடைபெற்று வருகின்றன. அதே சமயத்தில் பின் தங்கிய பகுதி
களிலும், அரிசனக் குடியிருப்புகளிலும் உள்ள கிராம தேவதை
களின் கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 1,000 முதல் ரூ. 2,000
வரை நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட 62
கோயில்களின் திருப்பணிக்காக இதுவரை ரூ. 63,000 நிதி உதவி
அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் புலவர்களை கோவில்களில் நியமித்தல்.

ஆலயங்களில், தமிழ் நெறி தமிழ் இலக்கிய உணர்வை வளர்ப்
பதற்காக வேலை வாய்ப்பற்ற தமிழ் புலவர்களை முதல் நடவடிக்
கையாக கோயில்பணிகளில் நியமிக்கலாம் என்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, தனித் தனியாக
அல்லது ஒரு தொகுதியாக ஆண்டொன்றுக்கு ரூ. 1 இலட்சத்திற்கு
மேற்பட்டு வருவாய் உள்ள கோயில்களில் 100 தமிழ் புலவர்களை
நியமிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கோயில்களில்
இலக்கிய சொற்பொழிவுகள் நடத்துதல், தமிழ் நெறியைப் பரப்பு
தல், நூலகங்களை ஏற்படுத்துதல், கோயில்களின் தல வரலாறு
களை எழுதுதல் போன்ற பணிகளுக்கு அவர்கள் பயன்படுத்திக்
கொள்ளப்படுவர்.

தமிழிசையை மேம்படுத்துதல்.

தமிழிசை வளர்ச்சிக்காக ஊக்க உதவித் தொகையைக்
கொடுக்கும் நோக்கத்துடனும், நாதஸ்வரத்திலும் தவிலிலும் மேல்
பயிற்சியை அளிக்கும் நோக்கத்துடனும், அரசு, பயிற்சி உதவித்
தொகைகள் வழங்குவதற்கான திட்டம் ஒன்றை 1978 முதல்
கொண்டு வந்துள்ளது. நாதஸ்வரப் பள்ளிகளில் பயிற்சிக்
காலத்தை முடித்துள்ள 3 நாதஸ்வர மாணவர்கள் மற்றும் 3 தவில்
மாணவர்கள் புகழ் வாய்ந்த வித்துவான்களின் கீழ் நடத்தப்படும்
மேல் பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கோயில் வருமானம்.

வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டங்கள், குத்தகை
சட்டங்கள், பொது பொறுப்புக் கழகங்கள் சட்டம் ஆகியவை
கோயிலுக்குச் சொந்தமான நில உடைமைகளிலிருந்து அவை

களுக்குக் கிடைக்கும் வருமானத்தை மிக மோசமாகப் பாதித்
துள்ளன. கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை நிலுவைகள்
ரூ. 19.16 கோடி என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

கோயில்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகளை எவ்வாறு சமா
ளிக்க முடியும் என்பது குறித்தும், தேவையான நிவாரணங்களை
கோயில்களுக்கு எவ்வாறு அளிப்பது என்பது குறித்தும் அரசு
ஆய்வு செய்து வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும்.

மாநிலத்தில் 7 கல்லூரிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள், 11
இதரப் பள்ளிகள், 7 தேவாரப் பாடசாலைகள் ஆகியவைகள்
சமய நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

சமுதாய நலப் பணிகள்.

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற் கொள்ளப்
பட்ட சமுதாய நலப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படு
கின்றன. செவிடர், ஊமையர் பள்ளிகள் 2, அன்பு இல்லங்கள் 3,
நூலகங்கள் 202, சித்த மருத்துவ மனைகள் 25, ஆங்கில மருத்துவ
மனை 1, 36 கருணை இல்லங்கள் உட்பட பல அநாதை இல்லங்கள்
ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்.

துறையின நிர்வாகத்தையும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்
தையும் ஒழுங்குபடுத்தவும், மேம்படுத்தவும் முயற்சிகள் தொ
டர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வரு
வாயில் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், சமய நிறுவனங்களுக்குச்
சொந்தமான கட்டிடங்களுக்குரிய நியாய வாடகைகளைத் திருத்தி
மறு நிர்ணயம் செய்வதன் மூலம் வருவாயினை அதிகரிக்கவும்,
தக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்
றன. ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்ற சொத்துக்
களை இனங்கண்டு அவற்றை ஆலயங்களின் வசம் கொணரவும்,
அவற்றை அனுபவித்து வருபவர்களைக் குத்தகைதாரர்களாக ஏற்க
வும், அச் சொத்துக்களின் மூலம் வரக்கூடிய வருவாயினைப்
பெறவும், தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்குச்
சொந்தமான விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் மற்றும் முத்துக்
கள் பதித்த பொன் ஆபரணங்கள் சிதைக்கப்பட்டதாக அரசின்
கவனத்திற்கு வந்த ஒரு புகாரின் பேரில் இப் பொருளின முக்கியத்
துவத்தைக் கருத்தில் கொண்டு, இது குறித்த விசாரணை வரு
வாய் வாரியத்தின் ஆணையாளர் ஒருவரால் நடத்தப்பட வேண்டும்
என்று அரசு முடிவெடுத்து, வருவாய் வாரியத்தின் ஆணை
யாளர் திரு. ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ். அவர்களை விசாரணை
நடத்த நியமித்துள்ளது. அவரது அறிக்கை எதிர் பார்க்கப்படு
கின்றது.

நமது பண்டைய நாகரிகத்திற்கும் கலைகளுக்கும் பண்பாட்
டிற்கும் கருவூலங்களாக உள்ள ஆலயங்களைப் பேணிப் பாதுகாப்
பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்
கொண்டு வரும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) முதலமைச்சர் மீதான உரிமை மீறல் தீர்மானம் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது ஒரு உரிமை மீறல் தீர்மானம் கொடுத்து இருந்தேன். முதலமைச்சர் வருகின்ற நேரத்தில் அதை எடுத்துக் கொள்கிறேன் என்று நீங்கள் அறிவித்து இருந்தீர்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் அது எடுத்துக் கொள்ளப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கேள்வி நேரத்தைத் தள்ளி வைத்து மானியக் கோரிக்கையை எடுத்து இருக்கிறோம் என்பது திரு. ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரியும். இன்றைய தினம் மானியக் கோரிக்கையை முடித்து விடலாம். நாளைக்கு அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறேன்.

(2) வரவு-செலவுத் திட்டம் (1979-80) வாக்கெடுப்பு-தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல்துறை.

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 38,59,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.”

குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே,
தொழிலாளர்களின் பிரச்னைகளில் காவல்துறையினர், முதலாளி
களுக்கு ஆதரவாக செயல்படாமல் தடுத்து நிறுத்த வேண்டிய
அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 15—காவல்துறை என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 38,59,84,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, காவல்
துறையில் மக்கள் தேவைக்கு ஏற்றவாறு மிகுதியாக காவலர்களை
நியமிக்காதது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 38,59,84,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இளையான்குடி
"சர்க்கிள்' 20 மைலுக்கு அப்பால் உள்ள பார்த்திபனூர்,
சத்திரக்குடி போன்ற காவல்நிலையங்களுக்கு எல்லாம் சர்க்களாக
இருப்பதால் அந்த காவல் நிலையத்திற்கு ஜீப் வழங்குவது
சம்பந்தமாக விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 38,59,84,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

Thiru Salem M. ARUMUGAM: Sir, to discuss the need to provide police security for the students of the chingleput medical college as the number of robb.ry cases have increased there I move:

"That the allotment of Rs. 38, 59, 84,000 under Demand No, 15 police be reduced by Rs. 100.

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல்
கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் —
" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,88,39,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

திரு. அ. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, மதுரை
மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று
அமைக்க குறிப்பிடாததைப்பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,88,39,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர்
அவர்களே, தீயணைப்பு ஊழியர்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கை
பரிசீலிக்காமல் காலம் கடத்துவதுபற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,88,39,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, தீயணைப்புப்
படையில் உள்ள காவலர் அனைவருக்கும் போலீஸ் காவலர்
அனைவருக்கும் அளிக்கப்படும் சலுகைகளும் பதவி உயர்வுகளும்
அளிக்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,88,39,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இளையான்குடி,
ஆர். எஸ். மங்கலம் போன்ற இடங்களில் தீயணைப்பு நிலையங்கள்
திறக்க வேண்டியது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,88,39,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை
பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,88,39,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்
வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்காக அவை முன் வைக்கப்
பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர்.

[1979 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற குறிப்பு
களை * நான் பேசியதாக எடுத்துக் கொண்டு, அவைகளை
அவைக் குறிப்பில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை
வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய
சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியக் கோரிக்கைகளின் மீது
எனது கருத்துகளை கூற விரும்புகிறேன். போலீஸ் டிப்பார்ட்
மென்ட் இப்போது அரசின் கொள்கையின் காரணமாக நல்ல
விதமாக செயல்படவில்லை என்பது நன்றாக தெரிகிறது.
போலீஸ் எங்கு பார்த்தாலும் நல்ல நிலையில் நடந்து கொள்ள
வில்லை. குறிப்பாக அந்த டிப்பார்ட்மெண்டில் எங்கு பார்த்தா
லும் லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது. இதற்கு லஞ்சத்தை
ஒழிக்கக்கூடிய நிலையில் அரசு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.
போலீசில் போய் ஒரு குற்றம் நடந்ததற்காக மனு கொடுக்கும்
போது லஞ்சம் கொடுக்க வேண்டும். அதைப்பற்றி விசாரணைக்கு
வரும்போதும் லஞ்சம் கொடுக்க வேண்டும். எதிர்த் தரப்பி
லிருந்தும் லஞ்சம் வாங்கிக் கொள்கிறார்கள். இப்படி இரண்டு
தரப்பிலிருந்தும் லஞ்சம் வாங்கிக் கொண்டு கேசை பரிசீலனைக்கு
எடுத்துக் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்காமல் தள்ளி கொண்டே
போகிறார்கள். கேசை விசாரிப்பதற்கு மனு கொடுத்தவர்களை
யும், எதிர் தரப்பினர்களையும் பத்து நாட்கள் மாறி மாறி வரச்
சொல்லி தள்ளிக் கொண்டே போகிறார்கள். பணவில் பலபோர்
வந்து தங்கினால் எவ்வளவு செலவாகும் என்பதை யோசித்துப்
பார்க்கவேண்டும். அந்த மாதிரி நிலை இல்லாமல் நல்லவித
மாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதற்கு சம்மன் செய்கின்ற ஒரு முறை இருந்தால், அது மிகவும்
நன்றாக இருக்கும். சம்மன் செய்து கூப்பிட்டு அவர்கள் அதன்படி
கட்டாயமாக அவர்களை விசாரித்து, அதற்குத் தகுந்த பரிகாரம்
தேடவேண்டும் என்றிருந்தால் அது நன்றாக இருக்கும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரண கேஸ்களிலேகூட லாக்-அப்பிலே வைக்கிறேன்
என்று பயமுறுத்தி பணம் வாங்குகிறார்கள். அந்த நிலை கட்டாய
மாக இல்லாமல் செய்ய வேண்டும். லாக்-அப்பிலே போடுகின்ற
கேஸ்கள் ஒரேமாதிரியாக இருக்கவேண்டும். பணக்காரர்களை
வெளியே விடுவதும், ஏழைகளை உள்ளே போடுவதும், இல்லை
யென்றால் பணம் வாங்குவது என்கின்ற நிலை இருந்தால், நாட்
டிலே இந்த போலீசுக்கு மிகவும் கெட்ட பெயர் ஏற்படும்.
அதிலே அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் வருகிறது. இதை
நன்றாக கவனித்து, அதற்காக சட்டத்தைத் திருத்த வேண்டு
மென்றாலும் திருத்தி, அதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

* 498-496 ஆம் பக்கங்கள் இணைப்புகள் I, II ல்
அச்சிடப் பெற்றுள்ளன.

1979 ஏப்ரல் 18] [திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்]

கேசுகளை வைத்துக்கொண்டே சார்ஜ்சீட் போடுவதும், ஒரு
6 மாத காலம், 8 மாத காலம் சுணக்குவதும், அதனுடைய விளை
வாக மிகவும் மோசமான நிலையும் ஏற்படுகிறது. ஒவ்வொரு
கேஸ்களும் கண்டிப்பாக இத்தனை நாளைக்குள் சார்ஜ் சீட்
போட வேண்டுமென்றிருந்தால், அதிலே ஊழல் நடப்பதைத்
தவிர்க்கலாம். அதையும் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

கேஸ் போட்டாலும்கூட, கேஸ்களுக்கு அனுகூலம் செய்ய
வேண்டும் என்று அவர்கள் நினைத்தால், கேஸ்களை நல்லவித
மாக நடத்தி, தண்டனை பெறுவதற்குப் பதிலாக விடுதலை
ஆவதற்கு வேண்டியவைகளைச் செய்கிறார்கள். அதையெல்லாம்
கண்காணித்து, அந்த மாதிரி நிலை ஏற்படாமல் செய்ய வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் போட்டிருக்
கிறார்கள். அதேபோல் உதவி சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் போட்
டிருக்கிறார்கள் ; உதவி டெபுடி சூபரின்டென்டுகள் பதவிகளை
ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வேலை
இருக்கின்றதா என்றால், ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல
வேண்டும். இவர்கள் அதை வைத்துக்கொண்டு, அங்கே இருக்
கின்றவர்களோடு பெரிய தகராறுகள் செய்கிறார்கள். இவர்
களுக்கும் மேலே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் தகராறுகள் ஏற்
பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் ஸ்டேஷன் நல்ல நிலை
ஏற்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பதவிகளால்
ஏராளமான செலவு ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்கும்
பொருட்டு, இந்தப் பதவிகள் இல்லாமல் செய்வது நல்லது.
இருக்கின்றவர்களுக்கு பதவி கொடுக்கலாம். இனிமேல் நிய
மிக்காமல் இருப்பது நல்லது என்று நான் இந்த நேரத்திலே
கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் ஏராளமான பணம் விரைய
மாவதை நிறுத்தலாம் என்றும் கூறிக் கொள்கிறேன்.

சம்மன் இல்லாமல் போலீஸ் டிபார்டுமெண்டு யாரையும் கூப்
பிடக்கூடாது என்ற நிலைமையை உறுதிப்படுத்த வேண்டும்.
அதற்கு சம்மன் இருந்தாலும்கூட, சம்மன் சரியாக சார்வு செய்து,
வந்தவர்களை ஒழுங்காக விசாரித்து, அப்படி விசாரிப்பதற்கான
ரிஜிஸ்தர்களிலே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, இதிலே
அவர்கள் தவறு செய்யாமல் இதை ஒழுங்குபடுத்த வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது எங்கு பார்த்தாலும் சூதாட்டம் அதிகமாக இருக்
கிறது. சூதாட்டத்திலே இவர்கள் வாடிக்கையாக ஸ்டேஷன்
களுக்கு பங்கு கொடுத்து வருகின்றார்கள். அப்படி பங்கு
கொடுத்துவிட்டு, சூதாட்டம் நடக்கின்றது. அது திருவிழா
நடக்கின்ற இடங்கள், நடைங்கள் நடக்கின்ற இடங்கள், மக்கள்
கூடுகின்ற இடங்களிலே எல்லாம் நடந்து கொண்டு வருகிறது.
இதை பல தடவை இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியுள்ளேன்.

இது நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் பொதுமக்கள்
பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். டவுன்களிலேகூட. இந்தச்
சூதாட்ட கிளப்புகள் சட்டபூர்வமாக நடத்தப்படுவதில்லை. சட்
டத்திற்குப் புறம்பாக நடக்கும் சூதாட்டத்திலே பெரும்பாலும்
இளைஞர்கள் கெடுகின்றார்கள். டவுன்களில் இருக்கின்ற
கிளப்புகளுக்குகூட லைசன்ஸ் கொடுப்பதை ரத்து செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீசைப் பொறுத்தவரைக்கும் பாதுகாப்புக்காக மட்டும்
இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். கேஸ்
எடுக்கின்ற நிலை இந்த டிபார்டுமென்டுக்கு இல்லாமல்,
கோர்டுக்கு இருந்தால், எல்லாக் கேஸ் மனுக்களையும் பரிசீலனை
செய்கின்ற நிலை ஏற்பட்டால், இதிலே இருக்கின்ற லஞ்சம்
போகும், மக்களுக்கு நல்ல நியாயம் கிடைக்கும்.

[முற்பகல் 9—10.]

அந்த மாதிரி நிலையில் ஏற்பாடு செய்யவேண்டும். பாது
காப்புக்கு மட்டும் போலீஸ் இருந்தால் நன்றாக இருக்கும் என்பது
என்னுடைய அபிப்ராயம்.

மதுரையிலே நடந்த சிவாஜி விழாவிலே திடீரென்று மாட்டு
வண்டிகள் போகக்கூடாதென்று தடை செய்து அதன் காரணமாக
அதிலே ஒரு கேசைப் போட்டார்கள். ஏன் அப்படிச் செய்ய
வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.
அப்படி என்றால் மாட்டு வண்டி ஊர்வலம் விடுகிறோம் என்று
சொன்னபோது அதை ஏன் தடை செய்யாமல் ஊர்வலம் ஆரம்
பித்த பிறகு தடைசெய்யவேண்டும்? அரசு ஏதோ தவறாக
இதைச் செய்திருக்கிறது. காவல் துறையினர் செய்திருக்
கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வ
திலிருந்தும் அரசியல் கட்சிகளுக்கும் இழுக்கான காரியங்களை
நடத்துவதிலிருந்தும் இந்த அரசு நல்ல நிலையை உண்டுபண்ண
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை கண்ணங்குடி
என்ற கிராமத்தில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும். அங்கு தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தித்
தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரை எங்கு பார்த்தாலும் மது
அதிகமாகக் கிடைக்கிறது. இப்போது ரேட்தான் அதிகமாகக்
கூடியிருக்கிறதே தவிர, மது ஒழிந்தபாடாக இல்லை. ஆகவே,
இதை ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு போலீஸ்
டிப்பார்ட்மெண்ட் நம் பக்கமாக ஒத்துழைப்பாக இல்லை. அது
தான் இதற்குக் காரணம். போலீஸ் டிபார்ட்மெண்டை இப்
போது மூன்று பிரிவாகப் பிரிக்கப் போவதாகக் கூறியிருக்
கிறார்கள். மூன்று பிரிவாகப் பிரித்தாலும் இவர்கள்தான் அதி
கிருந்து இந்த வேலைகளைக் கவனிக்க போகிறார்கள். இவ
சரியாக நடக்குமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

எங்கு பார்த்தாலும் களவுகள் அதிகமாகப் போய்க்கொண்
டிக்கின்றன. இதைக் கண்டு பிடிப்பதில் போலீஸ் அசிரத்தையாக
இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க சி.ஐ.டி டிப்பார்ட்மெண்ட்
சரியாகச் செயல்படவில்லை என்றுதான் கூறிக்கொள்வேன். விஜி
லென்ஸ் போலீஸ் பொறுத்தவரை அந்த டிப்பார்ட்மெண்ட் தனி
யாக இருக்கிறது. அவர்கள் கேஸ் எங்கும் போடுவதில்லை.
எங்காவது 'ரேர்' ஆக ஒன்றிரண்டு கேஸ்களைப் போட்டாலே
ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது ஏராளமாக லஞ்சம்
கூடமாடிக்கொண்டிருக்கும் நேரத்தில் ஏன் அவர்களால் கேஸ்
களைப் பிடிக்க முடியவில்லை? அதற்கு அரசு தடை விதித்
திருக்கிறதா என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் எங்
காவது கேஸ் போட்டார்களா என்று பார்ப்பது மிகவும் அரிதாக
இருக்கிறது. ஆகவே, இப்படி ஒரு டிப்பார்ட்மெண்ட் இருந்து
அதற்கு ஏராளமான பணம் கொடுத்து செலவு செய்து அது
பிரயோசனம் இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் அவற்றைக்
கலைத்து விடுவது நல்லது. ஆகவே லஞ்சத்தைப் பொறுத்த
வரை போலீஸ் டிப்பார்ட்மெண்ட் கண்காணிக்கவேண்டிய டிப்
பார்ட்மெண்ட். இதிலே மோசமான நிலை இருக்கிறது. ஆகவே,
அரசு நன்றாக யோசித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருவாடானை போலீஸ் சரக
இன்ஸ்பெக்டர்மீது ஏராளமான கம்ப்ளெயின்ட் கொடுத்து ஒரு
வருஷ காலமாகக் கொடுத்து வந்தும்கூட நடவடிக்கை எடுக்கப்
படவில்லை. முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கம்ப்ளெ
யின்டை நானும் எம்.எல்.சி. இராமகிருஷ்ண தேவரும் கொடுத்
தோம். மிக மோசமான நிலை அங்கு இருக்கிறது. அவர்கள்
மீது இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.
அதைப் போல் தேவகோட்டை இன்ஸ்பெக்டர்மீது எம்.எல்.சி.
அவர்கள் மேல்சபையில்கூட விவரங்களை எல்லாம் விளக்க
மாகக் கூறினார்கள். அவர்கள் மீது எந்த வித நடவடிக்கையும்
இல்லை. இப்படிப்பட்ட மோசமான நிலையில் போய்க்கொண்
டிருந்தால் அந்தப் பகுதியிலே எப்படி நாம் ஒழுங்கை நிலை
நாட்டமுடியும்? இப்போதுகூட ஏராளமான கம்ப்ளெய்ண்ட்ஸ்
இருக்கின்றன. அவர்கள், அங்கேயிருந்து மாற்றப்படவில்லை,
அங்கேயே இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மோசமான
நிலையில் இருக்கின்றன.

இப்போது 3 ஐ.ஜிக்கள் போடவேண்டுமென்று அரசாங்கத்
தின் நோக்கமாக இருப்பதாகத் தெரிகிறது. எதற்காக 3
பேர் வேண்டும்? இருக்கின்ற நிர்வாகத்தை சீராகச் செய்தால்
3 பேர் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அதனால் டிபார்ட்
மெண்டிற்கு நாம் செலவு பண்ண வேண்டிய செலவுகளும் சுருக்க
மாக இருக்கும். ஆகவே, அவைகளை கவனிக்கவேண்டும்.

[திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1979 ஏப்ரல் 18

போலீஸ் டிப்பார்ட்மெண்டிலே இருப்பவர்களுக்கு சாதாரண
மாக இருக்கின்ற போலீஸ்காரர்களுக்கு இன்னும் கொஞ்சம் சம்
பளத்தை கூட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இப்
போது சர்க்கிள் இருக்கக்கூடிய ஜூரிஸ்டிக்ஷனிலே ஒரு ஜீப்
கார் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும். அப்படியானால்தான்
அவர்கள் கேஸ்களை பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கை
களை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். அவர்களுக்கு குடி
யிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். போலீஸ்
அலுவலர்கள் குடியிருப்பு இல்லாத இடங்களிலே அவர்கள் வாட
கைக்கு வீடு பிடித்து இருப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடு
செய்யவேண்டும்.

லஞ்சம் அதிகமாகப் பெருகிக் கொண்டே இருக்கிறது. அதை
நிவர்த்தி செய்வதற்கு முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்து
வதற்கு அதற்கு வேண்டியவைகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்த வரையில் ஒன்றிரண்டு கருத்
துக்களை கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.
என் தொகுதியிலே ஏராளமான காட்டாறுகள் இருக்கின்றன.
அந்தக் காட்டாறுகளிலே எங்கு பார்த்தாலும் பாலங்கள் இல்லா
மல் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்
ஆகவே அந்தக் காட்டாறுகளிலே பாலங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டும். குறிப்பாக மணிமுத்தாறு என்ற ஆறு இருக்கி
றது, கன்னங்குடியையும் திருவாடானையையும் இணைத்து ஒரு
பாலம் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கி
றார்கள். அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு
களைச் செய்ய வேண்டும். கிராமரோடுகள் எல்லாம் மிகவும்
மோசமான நிலையில் இருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது காவல் துறை
மானியம். அதுபற்றி பேசினால் முதல்வர் அவர்கள் பதில்
சொல்வதற்கு முடியும்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : எங்களுக்கு
இதிலே தான் வாய்ப்பு, வேறு எதிலே கூறுவது ?

திரு. ரா. உமாநாத் : பையர் சர்வீஸ் வருவதற்கு ரோடுகள்
வேண்டும், ஆகவே அதைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் உங்க
ளுக்கு வழியைச் சொல்கிறார். தாங்கள் அதைப்பற்றி மட்டும்
பேசினால் நல்லது.

1979 ஏப்ரல் 18]

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : போலீஸ்
போய் வருவதற்குக் கூட ரோடு வேண்டுமே, மேலும் மாண்புமிகு
முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிறார், எங்களுடைய
தொகுதியிலே உள்ளவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டு
மென்று நாங்கள் சொல்ல வேண்டும், அவர்கள் கேட்கவேண்டும்.
அதனால்தான் சொல்கிறேன். கிராம ரோடுகள் மிகவும் மோச
மான நிலையில் இருக்கின்றன. இராமநாதபுரம் ஜில்லா மிகப்பின்
தங்கிய பகுதி. திருவாடானை கடைசியாக உள்ள இடம். மோச
மான நிலையில் இருக்கிறது. ரோடுகள் மோசமான நிலையில் இருக்
கின்றன. தனியாக கிராண்ட் கொடுத்தால் ஒழிய இதைச் சரிப்
படுத்த முடியாது. பஞ்சாயத்து யூனியனிலே செய்வார்கள் என்று
எண்ணலாம். பஞ்சாயத்து யூனியன் வெறும் ஆபீஸ்தான் இருக்
கிறது. அங்கே சர்ப்ளஸ் ஆக பணம் இல்லை. பஞ்சாயத்து
யூனியன் தேர்தல் வந்து சேர்மன், கவுன்சில் எல்லாம் வந்தாலும்
அவர்கள் எதை வைத்து இவைகளை எல்லாம் முன்னுக்குக்
கொண்டு வரமுடியும்? அந்தக் கிராம ரோடுகளுக்கு தனியாக
நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

ஏற்கெனவே போட்டிருக்கின்ற ரோடுகளுக்குத் தூம்புகள்
போடாமல் இருப்பதால் வண்டிகள் போக முடியாத நிலையில்
ஏராளமான ரோடுகள் இருக்கின்றன. ஆகவே, போட்ட ரோடு
களுக்குத் தூம்பு போட்டு, மெட்டல் போட வேண்டும், வண்டிகள்
போவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டன் சத்திரத்திலே போலீஸ் ஸ்டேஷன் ஊருக்கும் ரொம்பத்
தூரத்திலே தள்ளியிருக்கிறது. அதை மத்தியமான இடத்திலே
வைப்பதற்கு இடம் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் ரொம்ப
தூரத்திலே தள்ளியிருப்பதால் மக்களுக்கு மிகவும் சௌகரியக்
குறைவாக இருக்கிறது. எனவே, அதை மத்தியமான இடத்
திலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்
திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்றத்தைப் பொறுத்த வரைக்கும் இங்கே நான்முன்பு
பேசுகின்ற பொழுதுகூட சொன்னேன். அப்பொழுது முதலமைச்
சரவர்கள் இங்கேயில்லை. ஏராளமான பேர்கள் ஓல்ட் ஹாஸ்டலில்
அதாவது மேற்கேயிருக்கிற பகுதியில் இருக்கிறார்கள். அவர்கள்
குளிப்பதற்குத் தனியாகத் குளிக்க அறைகூட கிடையாது.
(குறுக்கீடு) தனியாகக் கிடையாது. மொத்தமாகத்தான் இருக்
கிறது. அதனால் பெருங்கஷ்டமாக இருக்கிறது. பழைய ஓல்ட்
ஹாஸ்டலில் ரூம்கள் தனித்தனியாக கக்கூஸ் வசதி, பாத் வசதி
எல்லாம் இருக்கிறது. எனவே அதிலே அவர்களை மாற்றி
அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கரு. இராம. சுரியமாணிக்கம் அம்பலம்] [1979 ஏப்ரல் 18

நமது ஹாஸ்டலில் இருக்கின்ற ஹோட்டல் ரொம்ப மோச
மான நிலையிலே இருக்கிறது. அங்கே நாங்களெல்லாம் இப்
பொழுது சாப்பிட முடியாத நிலையிலே இருக்கிறது. அதை நல்ல
நிலையிலே ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்திலும், தீ அணைப்புத்
துறை மானியத்திலும் பேச வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி
கூறி எனது உரையைத் தொடங்குகிறேன். காவல் துறையை
நடத்திச் செல்கிற புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்ச
ரவர்கள் எந்த மாநிலத்திலும் கண்டிராத அளவிற்குத் தமிழ்நாடு
வழிகாட்டியாகக் காவல் துறையை நாம் கூர்ந்து கவனித்துப்
பார்ப்போம். புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்
டாண்டுக் காலத்தில் எத்தனை போராட்டங்கள், எத்தனை
கிளர்ச்சிகள், எத்தனை வன்முறைச் செயல்கள் தமிழகத்திலே
நடந்தன, எந்த முறையில் நடந்தன. எந்த விதத்திலே நடந்தன,
எந்த ரூபத்திலே நடந்தன என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள
நாம் அனைவரும் உணர்வோம். இத்தனை வன்முறைச் செயல்
களையும் காவல் துறையினர் சட்டத்தையும், ஒழுங்கையும்
மற்ற மாநிலங்களைவிடத் தமிழகக் காவல் துறை அமைதியைக்
கட்டிக் காத்ததற்கு நாம் பாராட்டியே ஆக வேண்டும் என்பதை
இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
கிறேன்.

மேலும் என் தொகுதிக்குத் தேவையான ஒரு சிலவற்றைக்
கேட்பதற்கு முன்பு, தீயணைப்பு நிலையம் இல்லாத காரணத்தால்
ஏற்பட்ட விபத்துக்களைப்பற்றி நான் இந்தமன்றத்திலே சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற, 15—4—1979 ஞாயிற்
றுக் கிழமை 12–30 மணி அளவில் போளூர் அருகாமையில் ஓர்
பஸ் தீப்பற்றி எரிந்து 13 பேர்கள் எரிந்த பஸ்ஸிலே இறந்து
போனார்கள். மீதி 10, 11 பேர்கள் ஆஸ்பத்திரிக்குச் கொண்டு
போகப்பட்டார்கள் என்பதை நம் அரசு அறியும். ஆகவே, அரசு
இந்தத் தீ விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்குப் புரட்சித்
தலைவர் முதலமைச்சரவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும்
2,500 ரூபாய் கொடுத்ததை நான் அந்தக் குடும்பத்தினர் சார்
பாக பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே, இது
போன்ற சம்பவம், தீயணைப்பு நிலையம் போளூரில் இல்லாத
காரணத்தால் ஏற்பட்டது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கி
றேன். போளூர் அருகாமையில் நடந்த பஸ் விபத்து சம்பந்த
மாகத் தீ அணைக்கும் படை வரவேண்டுமென்றால் திருவண்ணா
மலையிலிருந்து வந்தாக வேண்டும். அதற்குச் சுமார் இரண்டு
மணி நேரம் ஆகிறது. அதனால் தீ விபத்துக்களை உடனுக்குடன்
தடுக்க முடியாமல் இருக்கிறது.

அதுபோன்றே போளூர் அருகாமையில் சென்ற ஆண்டு மே
மாதம் கட்டி பூண்டி என்னும் காலனியில் தீப்பிடித்து சுமார் 77
வீடுகள் எரிந்து அந்தக் காலனியே தீயால் எரிந்துபோய்விட்டது.

1979 ஏப்ரல் 18] [திரு. கே. ஜே. சுப்பிரமணியம்]

கிடைக்காத
இதற்குக் காரணம் உடனுக்குடன் முதலுதவி விரும்பு
தனால் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கொள்கிறேன்.
கிறேன். எனவே, இதனை வலியுறுத்திக் கேட்டுக் கொடுக்க
போளூரிலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திக் தலைவரையும்
வேண்டுமென்று நமது அரசையும் புரட்சித்
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கணியம்பாடியில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித்
தரவேண்டுமென்று நான் இதற்கு முன்பு கேட்டிருந்தேன்.
இப்பொழுது காவல் நிலையம் செல்ல வேண்டுமென்றால்
வேலூருக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, கணியம்
பாடியில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று
மாண்புமிகு புரட்சித் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சரவர்கள் மது விலக்குக் கொள்கையைத்
தீவிரமாகச் செயல்படுத்துவதை நாம் அனைவரும் பாராட்டியே
யாக வேண்டும். எனவே, இந்த மது விலக்குப் பிரச்னையை
இன்னும் தீவிரப் படுத்தி, எல்லா கிராமங்களிலும் மது விலக்கு
கமிட்டியைப் போட வேண்டும். அந்த கமிட்டிக்கு காவல் துறை
அதிகாரம் கொடுத்து வேண்டிய பாதுகாப்பும் கொடுத்து உதவி
னால் அந்த கமிட்டி செயல்பட ஏதுவாகும். ஆகவே, முதல
மைச்சரவர்கள் இது போன்ற கமிட்டியை எல்லா கிராமங்களிலும்
அமைத்து வேண்டிய பாதுகாப்பும் கொடுக்க வேண்டுமென முத
லமைச்சரை நான் வேண்டி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், காவல் துறையினருக்கு வேண்டிய சலுகைகள்
கொடுத்து ஆகவேண்டும். இன்னும் சில காவல் துறையினர்
களுக்கு குடி இருக்க கோட்டர்ஸ் கட்டாமல் இருப்பதை நம் அரசு
காவல் துறையினருக்கு கட்டிக் கொடுத்தாக வேண்டும். குறிப்பாக,
என தொகுதியில் உள்ள களம்பூர் காவல் துறையினர்களுக்கு
கோட்டர்ஸ் கட்ட இடம் ஒதுக்கி பல ஆண்டுகளாகின்றன.
எனவே, இது போன்ற ஒதுக்கப்பட்ட இடங்களை அரசு ஆவன
செய்து இந்த ஆண்டே கட்டுவதற்கு உண்டான உத்தரவை
மாண்புமிகு முதலமைச்சரவர்களை நான் வேண்டி விரும்பி
கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், சட்டத்தையும் ஒழுங்
கையும் காக்கக்கூடியவர்கள் காவல் துறையினர் ஆவார்கள்.
அவர்களுக்கு வேண்டிய தேவைகளைக் கொடுப்பது அரசினுடைய
கடமையாகும் என்பதை புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி
விரும்பி கேட்டுக் கொண்டு, இந்தக் காவல் துறை மானியத்தில்
பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடை
பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த மானி
யங்களின் மீது இந்த ஆண்டும் பேசுகிறபொழுது வேதனை
மிகுந்த ஞாபகங்களுடன்தான் நான் ஆரம்பிக்க வேண்டியிருக்
கிறது. ஏனென்று சொன்னால், எங்கள் அருமைத் தோழர்
வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டு $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகி
விட்டன. உங்களுக்குத் தெரியும். $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பிறகும்

இதுவரை கொலைகாரர்களை போலீஸ் கண்டுபிடித்து கூண்டில்
ஏற்றுவதோ அல்லது தண்டனை பெற்றுக் கொடுப்பதோ,
யார்தான் கொன்றார்கள் என்று கண்டுபிடிக்கவும் இல்லாத ஒரு
நிலை. அரசாங்கத்தைக் கேட்டால், எந்தத் துப்பும் இல்லாத
நிலையில் நாங்கள் புலனாய்வு ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது;
என்ன செய்ய முடியும், முயற்சி எடுக்கிறோம் என்கிறார்கள்
அரசாங்கம். என்னவோ, துப்பு சிறிதாவது கிடைத்திருந்தால்,
அவர்கள் கண்டுபிடித்திருப்பார்கள் என்ற தொனியில்
அரசாங்கத்தின் ஸ்போக்ஸ்மென் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.
அப்படியானால், நான் கேட்க விரும்புவது ஒன்றுதான். கிருபா
கரன் என்பவர் இராயபுரம் அருகில் காசிபுரம் 7-வது தெருவில்
குடியிருந்து வந்தவர். என்னூர் பவுண்டரியில் பழி வாங்கப்
பட்ட ஒரு தொழிலாளி, 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்
29-ம் நாளன்று அவர் உறவினருக்குத் கொடுத்த கடனைத்
திருப்பி வாங்குவதற்கு என்று சொல்லி உறவினர் வீட்டுக்குச்
சென்றார். இன்றுவரை ஆளைக் காணோம். கொல்லப்பட்டார்
என்பதற்கு பல துப்புகளுடன் அவருடைய மனைவி கமலவேணி
என்னூர் போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெயிண்ட் கொடுத்தார்
கள். உருக்கமான அந்த கம்ப்ளெயிண்ட் கடைசி பகுதியை
தான் படித்துப் பார்க்கிறபொழுது உருக்கமான ஒரு பகுதியை
தான் கண்டேன்.

அந்த அம்மா, சொல்கிறார்கள், போலீஸ் கம்ப்ளெயிண்டில்,
"எனக்கு மூன்று மகள்களும், இரண்டு மகன்களும் இருக்கிறார்கள்.
'அப்பா எங்கே அம்மா' என்று அன்றாடம் அழுது தீர்க்கும்
என் குழந்தைகளின் முகம் பார்த்து என் கணவரைக் கண்டு
பிடித்துக் கொடுங்கள். போலீஸ் அதிகாரிகளாகிய நீங்கள்,
எனக்கு, தாலி பிச்சை போடுங்கள்" என போலீஸ் கம்ப்ளெ
யிண்டில் அந்த அம்மா எழுதினார்கள். இன்றைக்கு வரைக்கும்
எந்தத் துப்பும் கிடையாது, எந்த நடவடிக்கையும் போலீஸ்
லைசடிலே கிடையாது.

[முற்பகல் 9-30]

அதுபோல் எத்திராஜ் என்பவர் ஒருவர், இன்னொரு எக்
சாம்பிள் சொல்ல விரும்புகிறேன். அவர் ஏழை விவசாயி,
அரக்கோணத்திற்கு அருகே மேலப்பாக்கம் ஊரைச் சேர்ந்தவர்.
அவருடைய நிலம் லட்சுமணய்யா என்ற நிலப்பிரபுவின் நிலங்
களுக்கு அருகே இருந்தது. எத்திராஜனுடைய நிலத்தை
இந்த நிலப்பிரபு கபளீகரம் செய்யப்பார்த்தார். அந்த நிலை
மையில் 1978 மார்ச் மாதம் 18-ம் தேதி அன்றைக்கு அவரை,
அதாவது எத்திராஜை அவருடைய வீட்டிற்கே சென்று அடித்து
நொறுக்கி, இரத்தம் சொட்டச் சொட்ட எல்லோருடைய முன்னா
லேயும் இழுத்துக் கொண்டு சென்றார். இன்றைக்கு
வரைக்கும் அவர் ஆளைக் காணோம். என்னவானார் என்றே
தெரியவில்லை. அவர் எப்படி எங்கே கொலை செய்து புதைக்கப்

பட்டார் என்பது கூட தெரியவில்லை. அது பற்றி அவருடைய
மனைவி ஜோதி அம்மாள் என்பவர் இந்தச் சம்பவத்தைப் பற்றிய
எல்லா விவரங்களையும் எழுதி, எல்லாவற்றையும் குறிப்பிட்டு
போலீசில் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அந்தப் புகார் மீது
எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. ஜோதி அம்மாளின்
புகார் மீது போலீஸ் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது
மாத்திரம் அல்ல. அவருடைய நிலையை, அந்த அம்மாளுடைய
சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த அம்மாள் அந்த
நிலத்தில் இறங்குவதை இன்றைக்கும் போலீசினுடைய உதவிக்
கொண்டு தடுத்துக் கொண்டிருக்கிறார் பொய்க் கேஸ் போட்டு
அந்த நிலப்பிரபு.

அந்த அம்மாள் தன் சொந்த நிலத்தில் இறங்குவதற்கு
முயற்சி எடுத்தால், அவர்களைச் சேர்ந்த ஆட்களின் மேல்
பொய்க் கேஸ் போட்டு, போலீசின் உதவியுடன் அவர்களைத்
தடுத்துக் கொண்டிருக்கிறார் அந்த நிலப்பிரபு. வெங்கிடா
ஜலம் விஷயத்தில்தான் துப்புக் கிடைக்கவில்லை என்று சொல்
கிறார்கள். ஆனால் இந்த விஷயம் என்ன? எவ்வளவு துப்புகள்
கண்முன்னாலேயே இருந்து கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும்
எந்த நடவடிக்கையும் ஏன் எடுக்கவில்லை? துப்பு இல்லாத
காரணம் இல்லை. என்னுடைய அசெஸ்மெண்ட் என்னவென்றால்
class bias in the investigation in the department, போலீஸ் அளவில்
வர்க்கப்பாகுபாடு இந்த டிபார்ட்மெண்டிலே இருக்கிறது என்று
சொல்கிறேன். நான் இங்கே ஒரு விஷயத்தை கேட்க விரும்பு
கிறேன். சில நாட்களுக்கு முன்பு இராமநாதபுரம் மாவட்டத்
தில் நிலப்பிரபு ஒருவர் கொலை செய்யப்பட்டபோது,
தஞ்சை மாவட்டத்திலே மடத்தைச் சேர்ந்த ஒரு கணக்கர்
என்று நினைக்கிறேன், அவர் கொலை செய்யப்பட்டபோது,
மாநிலம் பூராவும் போலீஸ் புகுந்து சுமார் 100 பேர்களுக்கு
மேல் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்களில் மார்க்
சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஆட்களும் இருந்தார்கள். இந்திய
கம்யூனிஸ்டு கட்சி ஆட்களும் இருந்தார்கள். அந்த இரண்டு
கொலைகள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு, புலன் ஆய்வு
நடத்துவதற்கு என்று காரணம் சொன்னார்கள், கேட்டபோது,
அந்த இரண்டு கொலைகள் சம்பந்தமாக மாநிலம் பூராவிலும்
கைது செய்திருக்கிறார்கள். நக்ஸலைட்டுகளின் கருத்து அடங்
கிய வாசகம் இருந்தது என்று சொல்லி, அவர்கள் நக்ஸலைட்டு
களாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி
கவலையில்லை, போலீஸ் புலன் ஆய்வுக்கு விசாரணை செய்
வதற்காக கைது செய்தோம் என்று இந்த அவையில் சொன்னார்
கள். நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். கொலை
செய்யப்பட்ட எத்திராஜ், நிலத் தகராறு காரணமாக புரட்சி
செய்தவர் அதன் காரணமாக தமிழகம் பூராவிலும் உள்ள
நிலப்பிரபுக்களின் விரோதத்தை சம்பாதித்துக் கொண்டவர்.
ஏன் அவர் கொலைக்காக, தமிழகம் பூராவும் வேண்டாம் விட்டு
விடுங்கள். மாநிலம் பூராவும் கூட வேண்டாம், விட்டு விடுங்கள்.

தஞ்சை மாவட்டத்தைக் கூட விட்டுவிடுங்கள், அவர் இருந்தது
மேற்கு தஞ்சையில், அந்த மேற்குத் தஞ்சையில் இருக்கிற நிலப்
பிரபுக்கள் கூட அவருக்கு விரோதமானவர்கள்தாம்? ஏன் அவர்
களை— அந்த நிலப்பிரபுக்களை அவருடைய கொலைக்காக
புலன் ஆய்வு செய்வதற்காக கைது செய்யக்கூடாது. செய்ய
மாட்டார்கள். அப்படிச் செய்வதற்கு இறந்தவர் ஒன்றும் மடத்
தையோ, பிரபுக்கள் இனத்தையோ சேர்ந்தவர் இல்லையே.
அப்படிப் புலன் ஆய்வுச் செய்ய வேண்டுமென்றால் அவர்கள்
மடாதிபதிகளாகவோ, நிலப்பிரபுக்கள் ஆகவோ இருக்க
வேண்டுமே. எத்திராஜ் ஒரு சாதாரண விவசாயிதானே. நிலப்
பிரபு இல்லையே, மடாதிபதி இல்லையே. கொலை செய்யப்
பட்ட கிருபாகரன் என்னூர் பவுண்டரியில் வேலை செய்யும்
ஒரு சாதாரண தொழிலாளிதானே. அந்தப் பவுண்டரி
முதலாளி இல்லையே. லட்சுமணய்யாவைப்போன்ற நிலப்
பிரபு இல்லையே. எதற்காக நான் சொல்கிறேன் என்றால்
கொலை விசாரணையில் கூட பாகுபாடு இருக்கிறது. நான்
சில எக்சாம்பிள்கள் தான் சொன்னேன். டைம்முக்கு உட்பட்டு
முடிக்க வேண்டும் என்பதால்தான் சில சாம்பிள்களோடு நிறுத்தி
யிருக்கிறேன்.

அதேபோல உண்மைகளை மறைத்து வைக்க வேண்டும்
என்று அரசாங்கம் விரும்பினால், நான் எல்லா கேஸ்களையும்
இங்கே சொல்லவில்லை, எதிலே அரசாங்கத்திற்கு விருப்பம்
இருக்கிறதோ அத்தகைய சில கேஸ்களில் போலீஸ் புலன் ஆய்வு
சுதந்திரமாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

டியூட்டர்ட் இன்வெஸ்டிகேஷன் இருக்கிறது என்பது என்னு
டைய கருத்து. எல்லாவற்றிலும் இல்லை. எதிலே அரசாங்
கம் விரும்புகிறதோ அந்தந்த கேஸ்களில் போலீஸ் ஆய்வு சுதந்திர
மாக இல்லை. சேரன் டிரான்ஸ்போர்ட் விஸ்வநாதன் கொலை
வழக்கில் டியூட்டர்ட் இன்வெஸ்டிகேஷன். முருகையன் கொலை
டியூட்டர்ட் இன்வெஸ்டிகேஷன். எதிர்க்கட்சித் தலைவர்மீது
உளி வீசி கொலை செய்ய முயன்றதில் டியூட்டர்ட் இன்வெஸ்டி
கேஷன். இப்படிப்பட்ட இன்வெஸ்டிகேஷன் இருக்கின்றன.
இதிலே இன்னொரு ஆஸ்பெக்ட்டும் இருக்கிறது. சில கேஸ்
களில் அரசாங்கம் அந்த இன்வெஸ்டிகேஷன் எந்த இலக்கு போய்
சேரவேண்டும் என்று விரும்பினால் அந்த டைரக்ஷனில் இன்
வெஸ்டிகேஷன் இருக்கும். அரசாங்கம் இன்டர்பியரன்ஸ் செய்
வது உண்டு. என்னுடைய வீடு தாக்கப்பட்டது தெரியும்.
புலனாய்வு என்ன ஆகிவிட்டது? கிணற்றில் போட்ட கல்
மாதிரி போய் இருக்கிறது. போலீஸ் சுதந்திரமாக புலனாய்வு
செய்தபோது, புலனாய்வு ஆரம்பித்து இருக்கிற நேரத்தில் பாராளு
மன்றச் செயலாளர் அங்கே போகிறார். அந்த இடத்தில்
பாராளுமன்ற செக்ரட்டரி இரண்டு பப்ளிக் மீட்டிங் போடுகிறார்.
ஒரு நாள், அதற்கு மறுநாள் என்று இரண்டு பப்ளிக் மீட்டிங்
அங்கே பேசுகிறார். அந்த பப்ளிக் மீட்டிங்கில் பகிரங்கமாக
பிரகடனப்படுத்துகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச்

சேர்ந்தவர்கள் ஒரு பெண்ணைத் துரத்திக்கொண்டு போனார்கள்.
அந்த பெண் தப்பிப்பதற்காக உமாநாத் வீட்டிற்குள் புகுந்து
விட்டாள். அதனால் கோபம் அடைந்த திராவிட முன்னேற்றக்
கழகத்தினர் கல் வீசினார்கள் என்று பாராளுமன்ற செயலாளர்
இரண்டு பப்ளிக் மீட்டிங்குகளில் பேசுகிறார். நான் சொல்ல
விரும்புகிறேன், ஒரு பாராளுமன்ற செயலாளர் ஒரு மினி மினிஸ்
டர் பதவி அந்தஸ்து உடையவர். அரசு அந்தஸ்து உடையவர்.
ஒரு இன்வெஸ்டிகேஷன் நடக்கிற இடத்திற்குப்போய் பகிரங்க
மாக, மேடை போட்டு, ஒரு மினி மினிஸ்டர் அந்தஸ்தில் இருக்கக்
கூடியவர் இப்படிப் பேசினால், அந்த லைன் ஆப் இன்வெஸ்டி
கேஷனை இன்புளுயன்ஸ் செய்யாதா என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். நாங்கள் இங்கே பேசுகிற நேரத்தில், அது இன்
வெஸ்டிகேஷனை மிஸ்டைரக்ட் செய்துவிடும் என்று எங்களைப்
பார்த்து சொல்கிற நேரத்தில், ஒரு மினி மினிஸ்டர் அந்தஸ்து
உடையவர் பகிரங்கமாக இப்படித்தான் நடந்தது என்று டிக்ளேர்
பண்ணி சொல்கிறார் என்றால் It is nothing but abject interference
in investigation— absolute obstruction of free investigation.
எனவே நான் சொல்லவிரும்புவது— என் வீடு தாக்கப்பட்ட சம்ப
வம் குறித்த புலனாய்வு செத்துப்போய்விட்டது என்று சொல்ல
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தில் ஒரு சட்டம் ....

(1) ஒழுங்குப்பிரச்சினைகள்— தொடர்ச்சி.

(ஆ) அவைக்குள் இருக்கும் உறுப்பினர்களிடம் முரசொலிப்
பத்திரிகை விநியோகிக்கப்பெறுவது குறித்து.

திரு. ஆர். மணிமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர்
சார், பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபைக்குள் "முர
சொலி" பத்திரிக்கை இப்போது அனைவருக்கும் கொடுத்து
வருவதாகத் தெரிய வருகிறது. அது தங்களுடைய அனுமதி
யோடு இங்கே வழங்கப்பட்டு இருக்கிறதா என்று நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதியோடு
இல்லை. ஆனாலும் அதை உடனே விசாரித்து தகவலை அவைக்
குத் தரத் தயாராக இருக்கிறேன்.

(2) வரவு-செலவுத்திட்டம், 1979-80 வாக்கெடுப்பு.—தொடர்ச்சி

கோரிக்கை எண் 15. காவல் துறை.

கோரிக்கை எண் 16. தீயணைப்புப் பணிகள்.

திரு. ரா. உமாநாத் : லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு
போவதைப்பற்றி ஒரு தடுப்பு உத்தரவு நம்முடைய மாநிலத்தில்
இப்போது இருக்கிறது. நான் கூற விரும்புகிறேன். அந்தச்

சட்டத்தை, அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று
கூறவிரும்புகிறேன். அது ஒரு பாதிப்பு செய்யும் உத்தரவாக
இருக்கிறது என்பது என்னுடைய கருத்து.
எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்தும் உத்தரவாக இருக்கிறது என்று அந்த உத்தரவு
நான் கருதுகிறேன். ஏனென்றால் லாரியில் ஆட்களை ஏற்றிச்
செல்கிற உரிமை ஆளும்கட்சிக்காரர்களுக்கு மட்டும் ஏகபோக
உரிமை வழங்கும் முறையில் இருக்கும் ஒரு உத்தரவாக அது
இருக்கிறது. நான் என்னுடைய அனுபவத்தில் இருந்து இதைச்
சொல்கிறேன். அதற்கு ஒரு சாம்பிள்-லேடஸ்ட்-நடந்த
தைச் சொல்கிறேன். எங்களது அனைத்திந்திய சி.ஐ.டி.யு.
மாநாடு சென்னையில் நடந்தது தெரியும். பஸ்கள் கிடைக்க
வில்லை என்ற காரணத்தால் ஆர்வத்தோடு இருந்து ஏராளமான
தோழர்கள் லாரிகளில் வந்தார்கள். அங்கே ஆலந்தூர் பகுதிக்கு
அவர்கள் வந்ததும் போலீசார் அவர்களை நிறுத்தி சார்ஜ் செய்து
விட்டார்கள். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் டிரை
வர்களை இப்படிச் செய்தால் அவர்கள் கேஸ்கள் நடக்கிறபோது
சென்னைக்கு ஒவ்வொரு வாய்தாவுக்கும் எப்படி வருவார்கள் ?
அப்படி வருவது நடைமுறைக்குச் சாத்தியம் அல்ல. அவர்கள்
இந்த வகையில் துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள் செய்தால்என்னசெய்கிறீர்கள்?
3—2—1979 சென்னையில் அண்ணா நினைவு நாள் கொண்டாடப்
பட்டது. அதற்கு டி.என்.எஸ். 8088 லாரியில் ஏராளமான ஆட்கள்
சவாரி செய்தார்கள். போலீஸ் தடுக்கவில்லை.
சுதந்திரமாகச் சுற்றுவதற்கு விட்டுவிட்டார்கள். அவர்களை
வடிக்கை எடுக்கவில்லை, தடுக்கவில்லை என்றால் அந்த லாரியில் ஏன் நட
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், தாரா
புரம் நகரக்கிளை என்று போர்டு போட்டு இருந்தார்கள்.
போல், டி. என். எஸ். 9610, டி. என். யு. 3889, எம். டி. டி.
7942, உபயோகப்படுத்தப்பட்டதையும் நான் பார்த்தேன். அதே
பார்த்தவர்கள் சாட்சியம் சொல்லவும் இருக்கிறார்கள்.
களும் தடுக்கப்படவில்லை, அவர்களும் சுதந்திரமாக அனுமதிக்கப் அவர்
பட்டார்கள். அதேபோல், திருநெல்வேலியில் பெரியார் விழா.
அதற்கும் அ.தி.மு.க. ஊழியர்கள் ஏராளமாக வந்தார்கள். நான்
பார்த்தேன். எம்.டி.ஏ. 7038, எம்.டி.யு. 7471-ல் வந்தார்கள்.
அவர்களையும் போலீஸ் தடுக்கவில்லை. சுதந்திரமாக அனு
மதிக்கப்பட்டார்கள். ஒருக்கால் அரசாங்கம் சொல்வார்கள்,
லாரியில் டிராவல் பண்ணினால் ஆக்சிடென்ட் ஏற்படும், அதற்
காக உபயோகிக்கக்கூடாது என்று தடுத்து இருக்கிறோம் என்று
சொல்வார்கள். அப்படியானால், அக்டோபர் 23 பந்தில்போது
இரவு 12 முதல் விடிய விடிய கைது செய்யப்பட்ட ஊழியர்களை
லாரியில் ஏற்றி பல மாவட்டங்களில் உள்ள சென்டிரல் ஜெயி
லுக்கு அனுப்பினீர்களே, திருச்சி சென்டிரல் ஜெயிலில் என்
கண்ணால் நானே பார்த்தேன்.

(முற்பகல் 9-40):

அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் லாரி
நான் கேட்கிறேன். என்று தடை செய்தார்
யிலே சென்றால் ஆக்சிடென்ட் ஏற்படும் எதிர்க்கட்சிக்காரர்களாகிய இவர்கள்
கள். அப்படியானால் ஏற்படலாம் அல்லவா ?
லாரியிலே ஏறுகிறபோது ஆக்சிடென்ட் நடந்தால் பரவாயில்
எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஆக்சிடென்ட் ஆபத்து வந்தால் வந்து
லையா ? எதிர்க்கட்சிக்காரர்கள்தானே செய்தீர்களா? ஆகவே
விட்டுப்போகிறது என்ற நோக்கத்தோடு பண்ணப்படவில்லை. இது
அது சரியான முறையிலே யூஸ் சட்டம், சர்க்கார்
என்ன சட்டம் ? ஆளும் கட்சிக்கு ஒரு சட்டம், ஆளும்
கட்சிக்கு ஒரு சட்டமா ? பிரஜைகளுக்கு ஒரு citizens in this respect?
கட்சிக்கு ஒரு சட்டமா ? Are we second-rate ஆகவேதான் நான் எம்.ஜி.
என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைத்
பேட்டிக்காக நான் கேட்க விரும்புகிறேன். As a rule it becomes ஆகவே
தயவுசெய்து ரத்து செய்யுங்கள். என்று கேட்கிறேன்.
தடைச்சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்னுடைய அனு
அதிலே கட்சி வித்தியாசம் பார்க்கப்படுகிறது. ஒரு விசேஷ அனுபவத்
பவம் காரணத்தால் சொல்கிறேன். இந்த மாதிரிச் சூழ்நிலையிலே என்னுடைய
தைச் சொல்கிறேன். திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் ஐ. ஜி.யை
கட்சியைச் சேர்ந்த பண்ணினார்கள். இந்த மாதிரி நடந்
போனிலே காண்டாக்ட் கேஸ்களை வாபஸ் வாங்கவேண்டும்
திருக்கிறது, ஆகவே அந்தக் சொன்னார். அதற்கு ஐ. ஜி.
என்று கஷ்டங்களை எடுத்துச் தெரியுமா ? I am helpless. It is law
என்ன பதில் சொன்னார் அப்படியானால் இந்தச் சட்டத்தை ஆளும்
என்று கூறினார்கள். அதைத் தடுக்கலாமே, அதிலேயும்
கட்சியினர் மீறுகிறார்களே, அங்கேயும் ஹெல்ப்லெஸ், இங்கே
அந்த ஐ. ஜி. ஹெல்ப்லெஸ். நான் கேட்க விரும்புவது-
யும் ஹெல்ப்லெஸ். ஆகவேதான் in either using his dis-
Am I to take it that the I.G. is paralysed his duty which he must.
cretion which he should or discharging விளக்க வேண்டும். இப்
முதலமைச்சர் பதில் சொல்லும்போது என்று நான் கூறுகி
படிப்பட்ட நிலைமையை மாற்ற வேண்டும்
றேன்.

கிளர்ச்சியில் முதலாளி
அடுத்தபடியாக தொழிலாளர்களின் பற்றி அடிக்கடி பேசி
களுக்கு ஆதரவாக போலீஸ் தலையிடுவது அதிகம் பேச விரும்ப
இருக்கிறேன். ஆகவே நான் அதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன்.
வில்லை. ஒரு விஷயத்தைமட்டும் ஊழியர்கள் போராடினால்,
என்.ஜி.ஓ.க்கள் போராடினால், வங்கி அடிக்கடி நம்முடைய
யந்திரத் தொழிலாளர்கள் போராடினால் "அந்த ஊதியம்
முதலமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும் வாழ்க்கையை உயர்த்தத்
கூட கிடைக்காத கிராமப்புற ஏழைகளின் " என்று கூறி வருகிறார்கள்
தான் நான் முதலிடம் கொடுப்பேன் அதுபோல் இந்த அர
Proof of the pudding is in the eating. என்ன என்பது சொல்லில்
சாங்கத்தின் உண்மையான உத்தேசம் இங்கே ஒரு விஷ
தெரியாது, நடைமுறையில்தான் தெரியும்.
யத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாயவரம் தாலூகாவில் ஆக்கூர் என்ற இடத்தில் விவசாயத்
தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்த கூலியாகிய 6
ரூபாய் ஆண்களுக்கும், 4 ரூபாய் பெண்களுக்கும் என்பது மறுக்கப்
பட்டது. அந்தக் கூலியைக்கூட அங்கே இருக்கின்ற நிலப்பிரபுக்
கள் கொடுக்க மறுக்கிறார்கள். அதாவது அந்தக் கூலி கொடுக்
கப்பட வேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயித்தது. ஆகவே
அரசாங்கம் நிர்ணயித்த கூலியைக் கொடுங்கள் என்று அந்த
கிராமப்புற ஏழைகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நாற்பது
நாட்கள் வேலை நிறுத்தம் நடந்தது. அப்போது அந்த நிலப்
பிரபுக்கள் வெளியாட்களைக் கொண்டுவந்தார்கள். அப்போது
எல்லாம் போலீசார் யார் பக்கம் நின்றார்கள்? சர்க்கார்
நிர்ணயித்த கூலியைக் கொடுக்காத நிலப்பிரபுக்கள் பக்கம்
நின்றது. அந்த ஏழைகள் சட்டப்படியான கூலி வேண்டுமென்று
கோரி போராடுகின்றபோது, வெளியாட்கள் நிலப் பிரபுக்களால்
கொண்டுவரப்பட்டபோது அரசாங்கத்தினுடைய ஆயுதம்
என்று சொல்லப்படக்கூடிய அந்த ஆர்ம்ஸ், போலீஸ் எந்தப்
பக்கம் நிற்க வேண்டும்? நிலப்பிரபுக்கள் பக்கம் நின்றது.
இதற்கெல்லாம் ஆதாரம் வைத்திருக்கிறேன். யாரும் சேலேஞ்
பண்ண முடியாது. அப்போது போலீஸார் அந்த ஏழை தொழி
லாளர்களை வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் ஹவுஸ்
அரஸ்ட் செய்து விட்டது. ஆனால் நிலப்பிரபுக்களும்,
கொண்டுவரப்பட்ட வெளியாட்களும் சுதந்திரமாக நடமாடினார்.
அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. சட்டத்
தின்படி கொடுக்கப்படவேண்டிய கூலி முறியடிக்கப்பட்டது.
I can give umpteen instances.

ஆகவேதான் சொல்கிறேன். தமிழக அரசு கிராமப்புற
மக்கள் மீது காட்டுவது பரிவல்ல. கிராமப்புற ஏழை எளிய
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்த அர
சாங்கம் அவர்கள் பக்கம் நிற்கவில்லை. நடைமுறையில் அப்படி
இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இந்தக்
குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் பதில் கூற மாட்டார் என்பது
எனக்குத் தெரியும். இருந்தாலும் இதை இங்கே ஏன் பேசு
கிறேன் என்றால் பத்திரிகைகளிலாவது இந்த உண்மையைப்
பிரசுரிப்பதின் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு நியாயம்
வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் பேசுகிறேன்.

அடுத்த கேஸ்கள் சம்பந்தமாக அரசின் கொள்கை விஷயமாக
ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். தொழிற்சாலைகளிலும்,
கிராமங்களிலும் சமரசம் ஏற்பட்ட பின் கேஸ்கள் வாபஸ் பெற
வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. இதை நாங்கள் அடிக்கடி
வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் வன்
முறையில் சம்பந்தப்பட்டது போக மற்ற கேஸ்களை வாபஸ்
பெறுவதாக அரசு அடிக்கடி இரண்டு மூன்று தரம் கூறி
இருக்கிறது. அப்படியும் இல்லையே. [illegible] தொழி
லாளர்கள் அமைதியான முறையில் மூன்று நாட்கள் மறியல்செய்
தார்கள். அவர்கள் மிகவும் அமைதியான முறையில் மறியல்
செய்தார்கள்.

அது சம்பந்தமாக இந்த அவையிலே பிரச்னை வந்தது.
அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள். கேஸ்
வாபஸ் வாங்கக் கூடாது, அமைதியான முறையிலேதான்
அதைச் செய்தார்கள். அப்படிச் சொல்லியும் இன்றைக்கு
வரை அந்தக் கேஸ் வாங்கப்படவில்லை. நோ கான்
பிடன்ஸ் மோஷனுக்கு பதில் அளிக்கும்போது, டி. ஐ. சைக்கிள்ஸ்
சம்பந்தமாக கோப்புகளை வரவழைத்து நானே பார்த்து
வாபஸ் வாங்க வேண்டுமா என்பதைப் பற்றி முடிவு செய்கிறேன்.
என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
மாதம் 22 ஆகிவிட்டது, எந்த மாறுதலும் இல்லை. மறு
பக்கம் அந்தத் தொழிலாளர்கள் மீது கேஸ் போடப்படுகிறது.
அந்த முதலாளிகள் வருகின்ற சாட்சிகளை வராமல் தடுத்து
நிறுத்தி, கேஸ்களை இழுக்கடிக்கிறார்கள். கோர்ட்டில்
மாஜிஸ்ட்ரேட்டும் அந்தக் கேஸை டிஸ்மிஸ் பண்ணுவதில்லை,
சாட்சிகள் வரட்டும் சாட்சிகள் வரட்டும் என்று சொல்லி ஒரு
வருஷம் அந்த ஓர்க்கர்களை இழுத்தடித்துக் கொண்டு போகி
றார்கள். தொடர்ந்து இப்படி நடைபெற்றுக்கொண்டிருக்
கிறது.

அடுத்து வன்முறை சம்பந்தமாகச் சொல்கிறேன். வன்
முறை என்றால் எப்படி முடிவு செய்கிறார்கள்? போடப்படுகிற
கேஸ் செக்ஷனைப் பார்த்து போடவேண்டும். அந்தச் செக்
ஷன்படி ரிக்கார்டை யார் தயார் செய்கிறார்கள்? இன்வெஸ்டி
கேஷன் அடிப்படையில் செய்தால் திருப்தி ஏற்படும். எப்.ஐ.ஆர்.
அடிப்படையில் போடுவதும் கிடையாது. முதலாளிகள், நிலப்
பிரபுக்கள் சொன்னவுடனேயே ஸ்டிரெய்ட்டாகக் கேஸ் போடு
கிறார்கள். நாங்கள் சொன்னால் செய்வதில்லை. முதலாளிகள்
போலீஸை நிர்ப்பந்தப்படுத்தி கேஸ் போட வைக்கிறார்கள்.
ஒரு லேட்டஸ்ட் கேஸ் பற்றி சொல்கிறேன். நாகப்பட்டணத்தில்
உள்ள தொழிலாளர்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்காக
அங்குள்ள முதலாளிகள் போலீஸை தூண்டி கேஸ் போட்டார்கள்.
இப்படி மூன்று இருக்கின்றன. கோர்ட்டில் ஜாமீன் கேட்கிற
போது அவர்கள் நாகப்பட்டணத்தில் இருக்கக் கூடாது,
திருவாரூரில் இருக்க வேண்டும் என்று சொல்லி திருவாரூருக்கு
அனுப்பினார்கள். அவர்களுடைய குடும்பத்தை பிரித்திருக்
கிறார்கள். இப்படி ஒரு ஆண்டு இழுக்கடித்து அந்தக் கேஸ்
கடைசியாக முடிந்து அவர்கள் கம்பிளிட்டாக அக்விட் செய்யப்
பட்டிருக்கிறார்கள். நான் இப்போது கேட்கிறேன். அப்போதே
வாபஸ் வேண்டும் என்று கேட்ட போது, எஸ். பி. அவர்கள்
இது வன்முறை என்று சொன்னார்கள். கம்பிளிட் அக்விட்டல்
செய்யப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் அவர்கள் ஒரு ஆண்டு
ஜெயிலில் இருந்தது வீண் தானே? அங்கே அவர்களை
திருவாரூரில் வைத்து அவர்களது குடும்பத்தைப் பிரித்தது வீண்
தானே? இப்படி இந்தக் கேஸ் இழுக்கடித்து ஆயிரக்
கணக்கான ரூபாய் செலவழித்தது வீண் தானே. ஆகவே,
இப்படி கேஸ் போடுவதில் யாருக்கு பலன்? அந்த முதலாளிகள்

கேஸ் அக்விட் ஆகும் என்று தெரிந்தாலும், அங்குள்ள தொழி
லாளர்களுடைய ஒற்றுமையை பலவீனப் படுத்த வேண்டும் என
பதற்காக பல துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இப்படிப்
பட்ட நிலைமை கிராமப்புறங்களில் இருக்கிறது. அதற்கு
எல்லாம் அரசாங்கம் ஈடுகொடுக்க வேண்டுமா? இந்த மாதிரி
பாகுபாடு இருக்கக் கூடாது. பி.எச்.இ.எல்.-லில் ஒரு வேலை
நிறுத்தம் 6-ம் தேதி நடத்தினார்கள். அந்த மானேஜ்மென்ட்
போலீஸ் நிர்ப்பந்தப்படுத்தி ஒரு கேஸ் போட வைத்திருக்கி
றார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் அவர்கள் நேற்று
தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 10 நாட்களுக்குப்
பிறகு கைது செய்யப்பட்டார்கள். 6-ம் தேதிக்கு மறுநாளே
7-ம் தேதி கைது செய்யப்பட்டிருக்கலாம், அல்லது 8-ம் தேதி
கைது செய்யப்பட்டிருக்கலாம். அப்படி அவர்களை அரெஸ்ட்
பண்ணவில்லை. அவர்கள் அகில இந்திய அடிப்படையில்
வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை
களை வற்புறுத்துவதற்காக அவர்கள் வேலை நிறுத்தம் செய்
திருக்கிறார்கள். ஆகவேதான் சொல்கிறேன்—முதலிலே அந்தக்
கேஸை வாபஸ் வாங்கினால் நலமாக இருக்கும். மேலும்
தோழர் டி. ஜி. கைவிலங்கு செய்யப்பட்டு கேஸ் போடப்பட்டது.
கடந்த 14-7-1978 அன்று ஒரு கடிதம் கொடுத்தோம். அர
சாங்கம் விசாரணை வைத்து 20 மாதம் ஆகிவிட்டது. இப்படிப்
பட்ட நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியில் நடைபெற்றுக் கொண்
டிருக்கின்றன.

(முற்பகல் 9—50).

அடுத்தபடியாக, போலீஸ் அத்துமீறலும் கொடுமைகளும்
அதிகரித்துள்ளன என்கிற விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்
திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். லாக்-அப் கொலைகள் பல
நடந்துகொண்டேயிருக்கின்றன. போலீஸ் அத்துமீறல்கள் வளர்ந்து
கொண்டே வருகிறது. போலீஸ் ஜபர்தஸ்து அதிகமாகியிருக்
கிறது என்பதற்கு திருப்பரங்குன்றம் சம்பவம் ஒரு எடுத்துக்
காட்டாகும். போலீஸ் அத்துமீறல் குறித்து, மூன்று வாரங்
களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன்,
லேட்டஸ்ட்டாக நடந்தது, பழைய செய்திகளை
சொன்னால் அதெல்லாம் செத்துப்போன சம்பவங்களாக
இருக்கும். இது அண்மையில் நடந்தது, சிவகிரி சரகம் என்ற
இடத்தில் ஒரு மந்தை—பொது இடம். அங்கு 24-3-1979
அன்று இரவு 9 மணி, போலீஸ் லாரி ஒன்று வருகிறது. அங்குள்ள
மந்தையில் கூட்டம் இருக்கிறது. திடீரென்று போலீஸ் இறங்கி
அடி. அது அவர்களுடைய பழக்கம். அப்படித்தான் அவர்களுக்கு
ட்ரெயினிங் கொடுத்திருக்கிறார்கள். இந்த அடியைப் பொறுக்க
முடியாமல் அங்கு நின்றவர்கள் எல்லாம் ஓடிப்போய் இருக்கி
றார்கள். செல்லபாண்டியன் என்பவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
பார்டி செக்ரட்டரி, அவர் ஓடிப்போகவில்லை. சா
காசமாக போயிருக்கிறார், அப்படி நடந்து சென்று கொண்டிருந்

அவரைப் பார்த்து, ''என்னடா இவ்வளவு மெதுவா நடந்து
போறே. எல்லோரும் ஓடிப் போகும்போது நீ மட்டும் என்ன
மெதுவா போறே'' என்று கேட்டிருக்கிறார்கள். அவர் தான்
மார்க்சுஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று
சொல்லவும், அவரை பிடித்து அடி அடி என்று அடித்ததோடு
மட்டுமில்லாமல் லாரியில் ஏற்றி அதிலேயும் அடித்து, பின்னால் * *
ஸ்டேஷனில் கொண்டுபோயும் அடித்திருக்கிறார்கள். *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்
களுக்கு சபை விதிகளைப் பற்றி நன்றாகத் தெரியும். சபையில் *
காட்டவேண்டும் என்றால் என்னிடம் அதைக்காட்டி முன் அனு
மதியைப் பெற்றிருக்க வேண்டும்........

திரு. ரா. உமாநாத்: முன்னாலும் இதுபோன்று இங்கு
* காட்டப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போது காட்டினாலும்
என்னுடைய முன் அனுமதியைப் பெற்றுவிட்டுத்தான காட்ட
வேண்டும்.

திரு. ரா. உமாநாத்: முதலமைச்சர் அவர்கள் கூட முன்னால்
* *காண்பித்து பேசுகிறார்கள்
பேசியிருக்கிறார்கள்.
என்று மேடைகளில் பேசியிருக்கிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேடையில் எப்படி
நடந்தது என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. சபையில்
எதை காட்ட வேண்டுமென்றாலும் என்னிடம் காட்டி அனு
மதியை பெற்றுவிட்டுத்தான் காட்ட வேண்டும். இங்கே
காட்டப்படுகின்ற * என்பதை நான் தெரிந்து கொள்ள
வேண்டும்........

திரு. ரா. உமாநாத்: அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்
கிறேன். வேறு * கொண்டு வந்து * காட்டுவேனா?
அப்படி எப்போதும் செய்யமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அப்படி
செய்வார்கள் என்று நான் சொல்லவில்லை. என்னுடைய அனு
மதியில்லாமல் நீங்கள் காட்டியிருக்கக் கூடாது என்பதைத்தான்
நான் சொல்லுகிறேன்........

திரு. ரா. உமாநாத்: எப்படியோ நான் * காண்பித்து
விட்டேன்.........

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி பெறாமல் சபையில் காட்டி பேசியதை நான் நீக்க வேண்டியிருக்கிறது. இங்கு அதை காட்டவேண்டுமென்றால் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் காட்டியிருக்க வேண்டும். ஆகவே * காட்டி பேசியதை நான் அனுமதிக்க முடியாது.

திரு. ரா. உமாநாத் : இதற்கு முன்னால் திரு. அழகர்சாமி அவர்களும் * காண்பித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் என்னிடம் அனுமதி பெற்றுத்தான் காட்டியிருக்கிறார்கள். திரு. அழகிரிசாமி அவர்களும் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் காட்டியிருக்கிறார்கள். தாங்கள் என்னுடைய அனுமதியைப் பெறாமல் காட்டி பேசியிருக்கிறீர்கள். ஆகவே அதை நீக்கியாகத்தான் வேண்டும். திரு. உமாநாத் அவர்கள் நீண்டகாலம் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்.....

திரு. ரா. உமாநாத் : பாராளுமன்றத்தில் இப்படி கிடையாது. இதை காட்டியிருக்கிறேன். இப்போது நீங்கள் உங்கள் அனுமதியைப் பெற்றுவிட்டுத்தான் காட்டவேண்டும் என்று ரெய்ஸ் செய்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிப்படி நாம் நடக்க வேண்டும். நீங்கள் காட்டுகிற * இதில் சம்பந்தப்பட்ட * தானா என்பதை நான் தெரிந்து கொண்டு முடிவு எடுக்கிற வரையில் நீங்கள் இங்கே அதை காட்டியிருக்கக்கூடாது. ஆகவே * காட்டி அதையொட்டி பேசிய வார்த்தைகளை மட்டும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். திரு. உமாநாத் அவர்கள் * காட்டுவதற்கு அனுமதி பெறவில்லை. மற்ற தலைவர்கள் எல்லாம் * காட்டியபோது அனுமதி பெற்றிருந்தார்கள் என்று சொன்னீர்கள். அவர்கள் சொல்வதை நம்பித்தான் நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். சம்பவங்கள் நடைபெறுகின்ற இடத்தில் போய் ஸ்பாட் வெரிபிக்கேஷன் செய்ய முடியாது. இப்போது பிரச்சினை தங்கள் அனுமதியை பெறாமல் *காட்டினார்கள் என்பதுதான். ஆகவே தாங்கள் * காட்டியதை மட்டும்தான் நீக்க வேண்டுமே தவிர இதன் தொடர்பாக அவர் பேசியதையெல்லாம் தாங்கள் நீக்குவது சரியா என்பதை கேட்க விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது, நாம் வைத்திருக்கின்ற விதிமுறைகளைத்தான் சொன்னேன். * காட்டிய பிரச்சினை வரை நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: ஆகவே அடித்தார்கள், அவர் போட்ட சட்டையைக் கிழித்தார்கள். அப்படி கிழிகின்ற அளவுக்கு அடித்தார்கள், பையைப் புடைத்தார்கள்; ஊமைக் காயம் ஏற்படும் அளவுக்கு அடித்தார்கள். சில சொட்டு இரத்தம் அவருடைய சட்டையிலே படும் அளவுக்கு பயங்கரமாக அடித்தார்கள். அதனால், ஊரிலே பரபரப்பு ஏற்பட்டு, சி.பி.ஐ., சி.பி. எம்., டி.எம். கே., இந்திரா காங்கிரஸ் ஆகியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஜாயிண்ட் கம்பிளெயிண்ட் எஸ். பி. க்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு போர்ஷனை நான் படிக்கிறேன். "இம் மாதிரியான செயல், உண்மையிலேயே அரசியல் வாதிகளாகிய எங்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியையும், போலீஸ் நிர்வாகத்தின் மீது மிகப் பெரிய அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் நலன்கள், அதன் சர்வாம்சக் கொள்கைகள் ஆகியவற்றிற்கு தம்மை அர்ப்பணித்துள்ள அரசியல்வாதிகளுக்கு இந்த போலீஸ் நிர்வாகத்தின் கீழ் சுதந்திரமாக செயல்படுவதில் அச்சமும், அவநம்பிக்கைக்கும் உட்பட்டிருக்கிறோம். நாங்கள் மேற்கூறிய சம்பவங்களுக்கு எங்களால் போதுமான ஆதாரங்களைத் தங்கள் முன் கொடுக்க முடியும்" என்று ஜாயிண்ட் கம்பிளெயிண்ட் கொடுத்திருக்கிறோம். இதிலே போலீஸ் எக்சஸ் சீரியசாக இருந்து இருக்கிறது.

அதேபோல், தென்காசியில் போலீஸ் ஸ்டேஷன் முன்பு டெமான்ஸ்ட்ரேஷன் செய்யப்போவதாக டி. எஸ். பிக்கு முதலிலேயே செய்தி சொல்லியிருக்கிறார்கள். டி. எஸ். பி. ஓடிவந்தார். டெமான்ஸ்ட்ரேஷன் செய்ய வேண்டாம், நான் 2 ஆம் தேதி என்கொயரிக்கு வருகிறேன் என்று சொன்னார். டெமான்ஸ்ட்ரேஷனைக் கைவிட்டார்கள். 2 ஆம் தேதி டி. எஸ். பி. வரவில்லை. 4 ஆம் தேதி வருவதாகச் சொன்னார்கள். 4 ஆம் தேதியும் வரவில்லை. பின்னர் 6 ஆம் தேதி வருவதாகச் சொன்னார்கள். அன்றும் வரவில்லை. ஆனால், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எழுத்து மூலமாக எழுதிக் கொடுங்கள், அதை நான் பார்வேட் செய்கிறேன் என்று சொன்னார். இந்த மாதிரி ஊரிலே ஜனங்களிடையே ஒரு பரபரப்பு. ஆனால் டி. எஸ். பி. என்கொயரிக்கு வருவதாகச் சொல்லி, தட்டிக் கழித்துக் கொண்டே போனதால் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போலீஸ் ஸ்டேஷன் முன்பு தர்ணா செய்வதாக அறிவித்த பிறகு 16 ஆம் தேதி, முந்தா நாள்தான் அவர் என்கொயரிக்கு வந்திருக்கிறார். இந்த மாதிரியான நிலைமை, எக்சஸ் இன்றைக்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ரா. உமாநாத்] [1979 ஏப்ரல் 18

அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிறது.
லேட்டஸ்ட்டாக மாயூரத்தில் ஒரு நிகழ்ச்சி. 3ஆம் தேதி
நடந்திருக்கிறது. Police attacking Thirumanancherry—Harijan
people are frightening—action prayed—particulars coming—Ganesan
Marxist Secretary, Kuttalam. அதேபோல், எங்கள் பார்ட்டி
செகரட்டரி, கோர்ட்டூரிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி
அறிவித்திருக்கிறார். On 21-3-79 Murugan brought from temple
to Police station, Kuttur and beaten by shoe without reasons pray
public enquiry and suitable action Secretary Kisan Sabha,
Pongaliyur. இந்த மாதிரி நடவடிக்கைகள் இன்றைக்கு அன்றாடம்
நடக்கும் நடவடிக்கைகளாக இருக்கிறது. அதற்குப் பின் ஒரு
வக்கீல் சம்பவம்.

அதற்குப் பின் ஒரு செய்தி. சென்ட்ரல் ஸ்டேஷனிலே
நான்கு மணி நேரத்திற்கு ரயில் நிறுத்தப்பட்டது. ஏன்? என்ன
சம்பவம் நடந்தது? ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ரிசர்வேஷன் வேண்டும்
என்று கேட்டார். ரிசர்வேஷன் கிளார்க் பார்த்துவிட்டு,
சீட் இல்லை என்று வெயிட்டிங் லிஸ்டில் போட்டார். அவர்
வெளியே வந்தபோது, ஒரு ஆளை வைத்து அடித்தார். இந்த
நிலைமையில் ரயில் நான்கு மணி நேரம் ஓடவில்லை. இந்த
மாதிரியான கொடுமைகள், அச்சுறுத்தல் எல்லாம் இன்றைக்கு
போலீஸ் துறையிலே இருந்து வருகின்றது. சமுதாயத்தை அச்
சுறுத்தும் அளவுக்கு அது வளர்ந்து வருகிறது. இதனால், நீதி
மன்றங்களை ஸ்தம்பிக்கச் செய்கின்றது. ரயில் போக்குவரத்தை
ஸ்தம்பிக்கச் செய்கிறது. கல்லூரிகள் மூடச் செய்கின்றது;
போக்குவரத்து இதனால் ஸ்தம்பிக்கின்றது. இதெல்லாம் இந்த
அரசு வந்த பிறகுதான் என்று நான் கூறவில்லை. அப்படிக் கூற
மாட்டேன்.

ஆனால், இக் கொடுமைகளை இந்த அரசு எப்படி அணுகு
கிறது? இது போலீசிலே ரொம்ப காலமாக இருக்கிறது.
இவற்றை அரசாங்கம் அடக்குகிறதா? அல்லது ஊக்குவிக்
கின்றதா என்பது கேள்வி. ஆனால், எங்கள் கருத்து,
அரசாங்கம் இதை ஊக்குவிக்கின்றது என்பதுதான். இக்
கொடுமைகளுக்கான காரணம் பற்றி அரசின் கணிப்பு என்ன?
போனதரம் போலீஸ் மானிய விவாதத்தின்போது முதல்வர்
அவர்கள் கூறினார்கள்; அது ரிகார்டிலே இருக்கிறது. 'காவல்
துறையில் இருக்கின்றவர்கள் அனைவரும் தவறு செய்கிறார்களா
என்று கேட்டால்—நான் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.
யாரோ ஒரு சிலர் செய்கிற தவறுக்கு அந்த இலாகா அனைத்தும்
பொறுப்பேற்க வேண்டி இருக்கும் காரணத்தால் ...... ' என்று
கூறியிருக்கிறார்கள். ஆகவே, முதல்வர் அவர்கள் அசஸ்மெண்ட்-
படி சில பிளேக்ஷிப்புகள் இந்த டிபார்ட்மெண்டிலே இருக்கிறார்கள்
என்றாகிறது. இது தவறான கணிப்பு. சில மோசமானவர்களின்
செயலல்ல. இதுதான் போலீசில் இன்றுள்ள சராசரி நிலைமை.
நாங்கள் சொல்லி நம்பவில்லை என்றால் வேண்டாம். தமிழ்நாடு
போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டிலே, 1971லே மூன்று வால்யூம்கள்

1979 ஏப்ரல் 18] [திரு. ரா. உமாநாத்]

சப்மிட் செய்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டிலே ஒரு பகுதி
யைப் படித்துக் காட்டினால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.
அதிலே போலீசின் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்தி
யிருக்கிறார்கள். ஒருவர் புகாரை எடுத்துக் கொண்டு வந்தால்,
என்ன நடக்கும் என்பதை இந்த ரிப்போர்ட்டிலே எழுதியிருக்கிறார்
கள். அதைப் படிக்கிறேன்.

[முற்பகல் 10-00]

"ஒரு புகாரை எடுத்துக் கொண்டு ஒருவர் காவல் நிலையத்
திற்குச் சென்றால், அங்கு அவரிடம் புகாரைப் பெற்றுக் கொண்டு
அவர் கூறுவதை கவனமாகவோ பொறுமையாகவோ கேட்க
மாட்டார்கள். நிலைய ரைட்டர் மற்ற அலுவல்களில் மிகவும்
பிஸியாக இருப்பார். இந்நிலையில் வந்தவரை காலவரையற்ற
முறையில் காத்திருக்கச் செய்வார். வந்தவர் தனது புகாரை
சீக்கிரம் கவனிக்க வேண்டுமென வற்புறுத்தினால், போலீஸ்
காரர் வந்தவரை இழிவான பாஷையில் திட்டுவார். அதோடு
நிற்காமல் குறைசொல்ல வந்தவர் மீதே வழக்குப் போடுவேன்
என்று மிரட்டுவார்."

இதுதான் போலீசில் இருக்கிற நிலைமை. இது போலீஸ்
கமிஷன் ரிப்போர்ட்டில் ஒரு போர்ஷன். இன்னொரு போர்ஷன்,
அடிக்கடி போலீஸ் கள்ள கேஸ் பிடிக்கிறார்கள். அதைப் பற்றி
போலீஸ் கமிஷன் ரிப்போர்ட் சொல்கிறது—

"சில சந்தர்ப்பங்களில் போலீஸ்காரர்கள் பொய் வழக்குகளை
ஜோடிக்கின்றனர். சாட்சிகளை நிச்சயிக்க அந்த வட்டாரத்
தில் உள்ள சமூக விரோதிகளைத்தான் போலீஸ் நம்பி இருக்கிறது.
இந்த நபர்கள் ரவுடிகளும் குண்டர்களும் ஆவர்.
இவர்கள் அந்த வட்டார பொதுமக்களை பீதியிலேயே மிரட்டி
வைத்துக் கொண்டிருப்பார்கள். குறிப்பாக, குடிசைப் பகுதியில்,
இப்படிச் செய்வதன் மூலம் குறுகிய காலத்தில் சாட்சிகளைத்
தயார் செய்ய முடியும்".

இதுவும் போலீஸ் நிலையத்தில் வருகிற நிலைமை. இவ்
வளவுக்கும் காரணம் என்ன? அதையும் போலீஸ் கமிஷன்
ரிப்போர்ட் கூறுகிறது—

"பொதுமக்கள் மத்தியில் ஒரு அச்சத்தையும் பீதி மனப்
பான்மையையும் உண்டாக்கினால்தான் போலீஸ் ஸ்டேஷன்களை
கான்ஸ்டேபிள் முதல் சப்-
இன்ஸ்பெக்டர் வரை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியுமென
நினைக்கின்றனர்".

This is police philosophy.

இதுதான் போலீஸ் ஃபிலாசபி. இதை அனுமதிக்க விரும்பி
னால்—விரும்பமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். ஒரு நட
வடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்—

[திரு. ரா. உமாநாத்] [1979 ஏப்ரல் 18

But you have to deal with the attitude of the Police.
போலீஸ் இயந்திரத்தின் ஃபிலாஸபி வெளியே இருந்து கம்பிளெ
யின்ட் கொடுக்க வருபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்றால்
இதுதான் போலீஸ் கொடுமைகள் என்று சொல்லுகிறேன்.

சமீபத்தில் மக்கள் போராட்டங்களில் லத்தியால் அடிப்பதும்,
துப்பாக்கியால் சுடுவதும் ஒரு போக்காகவே வளர்ந்து வருகிறது
என்பது எங்கள் கணிப்பு. அரசாங்கத்தின் சட்டம் அமைதி காப்
பாற்றும் கொள்கையிலும் கோளாறை அது எடுத்துக் காட்டுகிறது
என்பது எங்கள் கருத்து. மக்கள் பிரச்சினையைத் தீர்த்து
வைத்து அமைதி காப்பது என்பதற்குப் பதிலாக, அடித்து
நொறுக்கி, சுட்டு, பிரச்சினையைத் தீர்ப்பது என்ற அணுகுமுறை
சரியல்ல என்பது எங்கள் கருத்து. மக்கள் சொந்தவிப்பை மக்
களின் பிரச்சினையுடன் இணைத்துப் பார்ப்பதில்லை. சட்டம்,
அமைதி என்கிற விஷயத்தை மக்கள் பிரச்சினையில் இருந்து
பிரித்துப் பார்ப்பது என்பது சரியான அணுகுமுறையாகாது.
'ஹ்யூமரஸ்' ஆகச் சொல்வதாக இருந்தால், ஐயப்ப பக்த
னுக்கு சாமியே சரணம்! என்பது போல், நமது சர்க்காருக்கு
லட்டியே சரணம்! கண்ணீர்ப்புகையே சரணம்! துப்பாக்கியே
சரணம்—அவைத் தலைவர் அவர்கள் பொறுத்துக் கொள்ளக்
கூடாது.

இந்தப் பார்வைதான் வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டில்
பலிச்சென்று மின்னி மறைந்தது. பைப் லைன் போடுவதை
விவசாயிகள் தடுத்தது அன்றுதான் முதல் தடவையா? ஃபயரிங்
நடந்த அன்றுதான் தடுத்தார்களா? இல்லை. இதற்கு முன்
னாலும் தடுத்திருக்கிறார்கள். இப்போது முதல்வர் அவர்கள்
அதை நிறுத்த உத்தரவிட்டு விவசாயிகளைக் கன்வின்ஸ் பண்ணு
வேன் அல்லது விவசாயிகள் தன்னைக் கன்வின்ஸ் பண்ணட்டும்
என்று சொல்லி விசாரிக்க உத்தரவு போட்டு அந்த வேலையை
நிறுத்தியிருக்கிறார்கள். இதை முன்னாலேயே செய்திருக்கலாம்.
'மாஸ்' ஆகத் தடுக்கிறார்கள் என்பது முன்னாலேயே நடந்
திருக்கிறது. இன்றைக்கு போலீஸ் வன்முறையில் இறங்க
வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நிறுத்தி
யதை முன்னாலேயே நிறுத்தியிருக்கலாம் அல்லவா? ஏன்
என்றால் பேச்சு வார்த்தையைவிட, துப்பாக்கி முனையில் அதிக
நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். பிரச்சினை வரும்போது நாம்
விட்டுக் கொடுத்தால் எது செய்தாலும் சர்க்கார் ஒத்துக் கொள்
வார்கள் என்ற எண்ணம் வந்துவிடுமோ என்ற அச்சம் அரசாங்கத்
திற்கு இருக்கிறது. மக்கள் பிரச்சினையில், மக்கள் அதிருப்திப்
படக் கூடிய நிலையில், மெகானிகல் லா அண்டு ஆர்டர், டெக்னிகல்
ஆஸ்பெக்ட் ஆப் தி லா அண்டு ஆர்டர் என்று பார்க்காமல் பேச்சு
வார்த்தைகள் மூலம் தீர்வு காண என்ன வழிவகைகள் என்று
பார்க்க வேண்டும். லா அண்டு ஆர்டர் பிரச்சினையில் தீர்வு
காண துப்பாக்கி முனையில் அல்லவா நம்பிக்கை வைத்திருக்
கிறீர்கள்.

1979 ஏப்ரல் 18] [திரு. ரா. உமாநாத்]

சட்டம், அமைதி பிரச்சினையை எப்படிப் பார்ப்பது சரியாக
இருக்கும்? நமது முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு முதலமைச்
சர்களின் மாநாட்டில் தோழர் ஜோதி பாசு, மேற்கு
வங்க முதலமைச்சர் கூறினார். எங்கள் கட்சியின் நிலைமைக்
கூறினார்.—

Administrative vigilance and efficiency இருக்க வேண்டும்.

"நாட்டில் பயங்கரமான அளவில் வேலையில்லாத் திண்டாட்
டம் இருந்து கொண்டிருக்கிறது. மக்கள் தொகையில் 70 சத
விகிதம் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள். நாட்டு மக்க
ளின் பின்தங்கிய பகுதியினருக்கு எதிராக, சமூக ஒடுக்குதலும்
கொடுமைகளும் இன்னமும் தொடருகின்றன. நகர்ப்புறங்களிலும்
கிராமப்புறங்களிலும் சுரண்டுகிற வர்க்கங்களின் வர்க்க
ஆதிக்கம் என்பது வாழ்க்கையின் ஒரு உண்மையாக இருக்கின்றன.
ஆகவே இத்தகைய ஒரு பின்னணியில்தான் சகஜ நிலையை
ஏற்படுத்த நாம் வழி காணவேண்டியுள்ளது. இப்படிப்பட்ட
நிலைமையில், இந்த முயற்சியில் மக்களது பாத்திரத்திற்குத்தான்
நான் அழுத்தம் கொடுப்பேன். சமூக விரோதிகளை ஒதுக்கு
வைப்பதற்கும், கிரிமினல் குற்றங்களை எதிர்த்து போராடுவதில்
உதவி புரிவதற்கும் சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகளில்
ஆழமான அக்கறை எடுத்துக் கொள்வதற்கும் மக்களை நாம்
திரட்ட வேண்டியிருக்கும்." எப்படி என்றால், வெண்ணிறப் பண்ட
அமைத்து அல்ல, அவர் சொல்லக் கூடியது வேறு. 'மக்களைத்
திரட்டும் இந்தப் பணியை வெற்றிகரமாக செய்வதற்கு, மக்கள்
மத்தியில் சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு
இயக்கத்தை விடாது தொடர்ந்து நடத்த வேண்டியது அவசிய
மாகும். அத்துடன் நிர்வாக விழிப்பும் திறமையும் இணைக்க
வேண்டியது அவசியமாகும். மேலும் இந்தப் பிரச்சினையில்
ஆளும் அரசு எந்த லட்சியத்திற்காக பாடுபடுகிறது என்பது
அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக நான் கருதுகிறேன்.' இதுதான்
லா அண்ட் ஆர்டரை எப்படி அணுகுவது என்ற எங்களுடைய
அணுகுமுறை. இந்த வார்த்தைகளிலே அது அடங்கியிருக்கிறது.

அடுத்து, தொழிலாளர்கள் போராட்டங்கள் நடந்திருக்கின்றன.
குத்தகைதாரர்கள் போராட்டங்கள் நடந்திருக்கின்றன மேற்கு
வங்காளத்திலே. இதுவரையிலும் எந்தவிதமான துப்பாக்கிப்
பிரயோகமோ லாத்தி சார்ஜோ அந்த டெமாக்ரடிக் ஸ்ட்ரக்கிள்ஸில்
நடக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். கிளர்ச்சிகள் நடக்கிறபொழுது தூண்டி
விடுகிறார்கள் என்றுதான் அதைப் பார்க்கிறார்கள். அது
தப்பு. வேலை நிறுத்தம் நடந்தால் தூண்டி விடுகிறார்கள்
என்று சொல்கிறார்கள். வக்கீல்கள் போராட்டம் நடந்தால்

[திரு. ரா. உமாநாத்] [1979 ஏப்ரல் 18]

எக்ஸ்டிரிமிஸ்ட்ஸ் செக்ஷன் அதை தூண்டி விடுகிறார்கள் என்று
சொல்கிறார்கள். வாகைக்குளம் சம்பவம் என்றால் தூண்டி
விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படியே தூண்டி
விடுகிறார்கள், தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டே
இருந்தால், I want our Government to avoid a particular thing.
என்ன என்று சொன்னால் Forrestall என்ற ஒரு டிஸிஸ் இருக்
கிறது. அது வரக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம்.
What is Forrestall disease? ரொம்ப ஆண்டுகளுக்கு முன்னாலே
Forrestall என்பவர் American Secretary of State ஆக இருந்தார்.
அவர் செஞ்சேனையின் செல்வாக்கு உலகம் பூராவும் வளர்ந்து
வருகிறது, அமெரிக்காவிலே அது பரவக்கூடாது என்று முறையிலே.
அவர் எந்த மேடையாக இருந்தாலும், 'பார்லிமெண்டாக இருந்
தாலும் செஞ்சேனை வரப் போகிறது, செஞ்சேனை வரப்
போகிறது என்று சொல்லி பயம் காட்டிக் கொண்டே இருந்தார்.
அப்படிப் பேசிக்கொண்டே இருந்தார். திடீரென்று ஒரு நாள்
ஜுரம் வந்தது. ஆஸ்பத்திரியிலே 4வது மாடியிலே அவரை
அட்மிட் செய்து இருந்தார்கள். உங்களுக்குத் தெரியும், ஜுரம்
அதிகமானால் ஜன்னி வரும். Then you do not know yourself.
அது ஜன்னியாக வந்தது, அவர் திடீரென்று செஞ்சேனை வந்து
விட்டது, செஞ்சேனை வந்து விட்டது என்று சொல்லிக்
கொண்டே ஓடினார், ஓடினார், ஓடிக்கொண்டே போனார்.
குதித்தார், கீழே விழுந்தார், ஆள் அவுட். இது உண்மையாக
நடந்தது. அதைத் தொடர்ந்துதான் Forrestall disease
என்ற பெயர் வந்தது. இது கதையல்ல, நடந்தது. ஆகவே,
நான் சொல்லக் கூடியது என்னவென்றால் இந்த மாதிரியாக
தூண்டுகிறார்கள், தூண்டுகிறார்கள், தூண்டுகிறார்கள் என்று
சொல்லிக்கொண்டே இருப்பது சரியல்ல. சில போராட்டங்கள்
தூண்டிவிட்டே நடக்கின்றன என்று வையுங்கள், அப்படி
போராட்டங்களிலே எங்களுடைய அணுகுமுறை எப்படி இருக்கும்
என்றால் சம்பந்தப்பட்ட மக்களுக்கு உண்மையான குறைகள்
இருக்கிறதா என்று பார்த்து அதைச் சொல்லி தீர்வு காண்கிற
முறையிலே ஸ்டிரன்த்தன் பண்ணுகிற வெளிப்பாடாகத்தான்
இருக்கும். ஆகவே, அந்தப் பார்வைதான் இருக்க வேண்டும்,
இந்தப் பார்வை இருக்கக் கூடாது என்று நான் அரசாங்கத்தைக்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊழல் எந்த மட்டத்தில் இருந்தாலும்
வெளிக் கொண்டு வருவோம் என்று பறை சாற்றுகிறார்கள்.
ஆனால் ஊழல்களைப் பிடிக்கும் என்று கருதி விஜிலன்ஸ் டிபார்ட்
மெண்ட் இருக்கிறது. ஆனால் அதற்குள் பிளாக்ஷீப்
இருக்கிறார்கள் என்பதை நான் முதலமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். என்னுடைய அனுபவத்திலே நான்
ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பெரிய புள்ளி, திருச்சி
யிலே எஞ்சினியரிங் கல்லூரியின் முதல்வர், இந்த ஆட்சியிலே
நிச்சயம் பிடிபடுவார் என்று நம்பினேன். நம்பி குற்றச்
சாட்டுகளை நான் முதல்வரிடம் கொடுத்தேன். கல்லூரி முதல்வர்

[1979 ஏப்ரல் 18] [திரு. ரா. உமாநாத்]

நிதிகளை கையாடல் செய்தல், மாணவர்களைச் சேர்ப்பதிலே
பயங்கரமான ஊழல், ஆட்களை நியமனம் செய்வதிலே பயங்கர
மான ஊழல், செல்வாக்கு உள்ளவர்களை கைக்குள் போடுவது
போன்றவற்றில் பயங்கரமான எவிடென்ஸோடு, சாட்சியங்களோடு
நான் முதல்வரிடம் கொடுத்திருக்கிறேன். எவ்வளவு சீரியஸான
சார்ஜ். அண்ணாமலை யூனிவர்சிடியிலே வைஸ்-சான்ஸலர்ஷிப்
என்பது கல்லூரி முதல்வர் பதவியைவிட பெரியது.
World-renowned demographer, Dr. Chandrasekhar அவருக்கு
அந்தப் பதவியை ஆஃபர் பண்ணியவுடனே வேர்ல்ட் ரினவுண்ட்
டெமோகிராபராக அவர் அக்செப்ட் பண்ணினார். அப்படிப்

[முற்பகல் 10-10]

பட்ட உயர்ந்த பதவியை இந்தக் கல்லூரி முதல்வருக்கு ஆஃபர்
செய்தபொழுது அதை மறுத்தார், இந்தச் சின்ன இதுவே
போதும் என்று அதிலேயே இருக்கிறார். 14 வருஷங்களாக
அந்தப் பதவியிலேயே இருக்கிறார். " வொர்ல்ட் ரினௌன்ட்
டெமாகிராபர் " ஒருவர் அக்செப்ட் செய்து கொண்டிருக்கிற
அளவுக்கு அவ்வளவு அந்தஸ்து உள்ள ஒரு பதவி ஆஃபர் செய்யப்
பட்டபொழுது இது போதும் என்று சொல்கிறார்
என்றால் அந்தப் பதவியில் வெஸ்டட் இன்டரஸ்ட் இருக்கிறது
என்றுதானே அர்த்தம். நீண்டகாலம் விடாமல் முதலமைச்
சருடன் பர்சு பண்ணியதன் விளைவாக சார்ஜ் ஷீட் விஜிலன்ஸுக்கு
அனுப்பப்பட்டது. விஜிலன்ஸ் ஆபீசர் ஒருவர் வந்து
ஆசிரியர்களை விசாரித்திருக்கிறார் என்று தெரிய வந்தது.
அவர்கள் ஏன் அவர்களை விசாரித்தார்கள் என்று பிரச்னையை
ஆக்க விரும்பவில்லை. Any way I want serious enquiry
இதுவரைக்கும் என்ன நடந்திருக்கிறது என்று எனக்குத் தகவல்
இல்லை, ஆனால் நான் கேள்விப்பட்டவரைக்கும், விஜிலன்ஸ்
ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்து விட்டதாகவும், அதில் ஆசிரியர்கள்
பேரில் குற்றம் சாட்டி எழுதியதாகவும் அறிகிறேன். கல்லூரி
முதல்வர் பேரில் விசாரணை ரிப்போர்ட் கேட்டால் ஆசிரியர்கள்
பேரில் ரிப்போர்ட் அனுப்புகிறார்கள் என்றால், If this is true,
அப்படி அந்த அதிகாரி செய்தது உண்மையாக இருந்தால், அந்த
அதிகாரி கல்லூரி முதல்வரின் செல்வாக்குக்குள்ளே வீழ்ந்து
விட்டார் என்று பொருள் என்று நான் நம்புகிறேன்.
ஏனென்றால் முந்தய அனுபவமும் இப்படி வந்திருக்கிறது.
இதே கல்லூரியில் 1968-ல் ஆசிரியர்கள் இந்த மாதிரிக்
குறைகளை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்தபொழுது திருமலை
என்ற சி.ஐ.டி.யை ரிப்போர்ட் அனுப்பச் சொல்லி அனுப்பினார்கள்.
ஆசிரியர்கள் பேரிலே கண்டனம் செய்து, தப்பான ரிப்போர்ட்டை
அனுப்பியிருக்கிறார் அவர். இதன் இரகசியம் என்ன என்று
அப்பொழுது புரியவில்லை. சோழியன குடுமி சும்மா ஆடாது.
ஆடுகிறது என்றால் ஏதோ இருக்கிறது என்று அர்த்தம். அங்கே
போனவர் ஆசிரியர்களுக்கு எதிராக ரிப்போர்ட் கொடுத்தார்.
விஷயம் என்னவென்று பார்த்தால் திருமலை, சி.ஐ.டி. ரிடைய
ரானதும், He is appointed as a watchman in the Regional

Engineering College by the principal. அவர் ரிடையரான பிறகு
வார்மேனாக அந்தக் கல்லூரியிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்.
இன்றைக்கும் அவர் வாச்மேன். நான் கேட்கிறேன், நாமும்
சிந்திக்க வேண்டும். அந்த முதல்வருக்கு இவர் அனுப்பிய
ரிப்போர்ட்டில் சாதகமாக செய்திருந்தால் தவிர, முதல்வர்
இவரை வாச்மேனாக நியமிக்கவேண்டிய அவசியம் என்ன வந்து
விட்டது ? ஆகவே, இவ்வளவு பயங்கரமான குற்றச்சாட்டிலே
நிச்சயமாக ஏதோ இருக்கிறதுஎன்பதற்கு இதைவிட என்ன
அத்தாட்சி வேண்டும் ? சி.ஐ.டி. ஆக அனுப்பப்பட்டவர் விலை
போனார் என்பதற்கு இதைவிடஎன்ன அத்தாட்சி வேண்டும் ?

இப்பொழுது அனுப்பப்பட்ட விஜிலன்ஸ் ஆபிசரும்,
முதலமைச்சர் கொடுத்த சார்ஜ்ஷீட்டை விட கூடுதலாக ஆசிரியர்
களைப்பற்றி குறை கூறியிருந்தார் என்றால் இந்த அதிகாரியும்
அந்த வலையில் விழுந்து விட்டார் என்பதுதான் உண்ஜிதமாகிறது,
அதுதான் என்னுடைய அச்சமுமாகும். பிரிவியஸ் இன்சிடெண்ட்ஸ்,
பிரிவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் இதை எடுத்துக் காட்டுகிறது,
வேலியே பயிரை மேய்ந்தால் ஊழலை எதிர்த்து எப்படிப்
போராடுவீர்கள் ?

மதுவிலக்குச் சட்டத்தை வைத்து போலீஸ் செய்யும்
அநியாயம் இங்கே நிறைய பேசப்பட்டது. மறுபடியும்
லெட்டஸ்டாக, பூந்தமல்லி பக்கம் நெற்குன்றம் என்கிற கிராமம்
இருக்கிறது. அங்கு மகாலிங்கம் என்ற, சஸ்பெண்டட் டி.வி.எஸ்.
ஒர்க்கர் இருக்கிறார். அந்தக் கிராமப் பகுதியில் உள்ள எல்லா
மக்களும் அவரை பெஸ்ட் சோஷியல் ஒர்க்கர் என்று ஏற்றுக்
கொள்கிறார்கள். அவர் சாராயம் காய்ச்சுவதை எதிர்த்து
வந்தவர். பிரச்சாரம் செய்வது, ரோடு போடுவது, அதிகாரி
களைப் பார்த்துச் சொல்வது ஆகிய காரியங்களைச் செய்தார்.
அவருக்கு பெஸ்ட் நேம் இன் தி வில்லேஜ். கள்ளச்சாராயம்
காய்ச்சுபவர்களுக்கு அவர் பேரிலே ஆத்திரம் வந்து விட்டது.
அவர்களுடைய ஆத்திரத்திற்கு இலக்கானார். அவர்களுக்குப்
போலீசாரோடு இருக்கும் தொடர்பைப் பயன்படுத்தி 1979 ஆம்
ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி அவர் கைது செய்யப்பட்டு
ரிமாண்ட் செய்யப்பட்டார். காய்ச்சுபவன் வெளியே சுதந்திர
மாகக் காய்ச்சிக் கொண்டிருக்கிறான். உங்கள் சட்டம் வந்த
பிறகும் காய்ச்சுபவர்களை எதிர்ப்பவன் உள்ளே போகிறான்;
இதுதான் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதன் அனுபவம்.

அதே நேரத்தில் இன்னொரு சம்பவத்தை நான் சொல்ல
விரும்புகிறேன். "இண்டியன் பொட்டாஷ் லிமிடெட்" என்ற
ஒரு கம்பெனி இருக்கிறது. மத்திய அரசு நடத்தும் கூட்டுத்
துறை நிறுவனம் அது. கோஆப்பரேடிவ் மார்க்கெட்டிங்
சொசைட்டிக்கு மூன்று இலட்சம் பங்கு உண்டு, ஷேர் இருக்கிறது.
நம்முடைய இன்றைய தினம் இருக்கிற அமைச்சருக்கு அது
தெரியாது. பிறகு அதன் டீடெயில்ஸ் சொல்கிறேன். அங்கே
பயங்கரமான ஊழல் நடக்கிறது. பயங்கரமான ஊழல் நடை-

பெறுகிறது. அமைச்சர் சாந்திபூஷணுக்கு அனுப்பியபொழுது
ஒப்புக் கொண்டார் தீர்வாக எப்படி ஊழலை மறைக்கிறது
என்றால் டெல்லியிலேயிருந்து ஆடிட்டர்ஸ் வருகிறபொழுது
மதுபானத்தைத் தருகிறார்கள். ஃபாரின் லிக்கர்ஸ் கொடுக்கி
றார்கள். கம்பெனி காரைக் கொடுத்து திருவனந்தபுரம்,
மதுரை, கன்னியாகுமரிக்குச் சவாரி ஏற்றிக் கொண்டு
சென்றார்கள். இப்படி அவர்களைத் தாஜா செய்து ஊழலை
மறைக்கிறார்கள். 1978 நவம்பரில் டெபுடி டைரக்டர் ஆப்
அக்கவுண்ட்ஸ், மினிஸ்ட்ரி ஆஃப் அக்ரிகல்சர், மிஸ்டர்எச். எல்.
வர்மா தலைமையில் இரண்டு பேர் ஆடிட் பண்ண வந்தார்கள்.
அவர்களுக்கு சாராய பாட்டில்கள் எப்பொழுதும்போல் கொடுக்
கப்பட்டது. காரில் சவாரி கொண்டு போனார்கள். தப்பித்
தவறி, நம் போலீசுக்கு இவர்கள் என்று தெரியவில்லையென்று
நினைக்கிறேன். 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம்
நாள் அன்று காரைப் பிடித்தார்கள். அதிலே பாட்டில்கள் இருந்
தன. சாராய பாட்டில்களோடு அவர்களைப் பிடித்தார்கள்.
இப்பொழுது அவர்களைத் தப்பித்துவிட முயற்சி நடக்கிறது
என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வரவிரும்பு
கிறேன். மத்திய அரசு தலையீடு இருக்கிறது என்று நான்
கேள்விப்பட்டேன். எஃப்.ஐ.ஆரை. மாற்றுவதற்கும் முயற்சி நடப்
பதாக நான் அறிகிறேன். டிரைவருடைய 'ஒரிஜினல் ஸ்டேட்
மெண்ட்'டை மாற்றுவதற்கான முயற்சி நடப்பதாக நான் அறி
கிறேன். தனது புனிதத் தன்மையை நிலைநாட்ட தூக்குமேடை
யும் ஏறத்தயாரானவராச்சே நம்முடைய மாண்புமிகு உணவு
அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள். அவர் அந்த இலாகாவை
வைத்திருக்கிற பொழுது, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
1 ஆம் நாளில் எழுதினேன்.

"Dear Thiru Edmund,

I am enclosing herewith serious charges of mal practices and
corruption and mismanagement against Thiru Sohan Singh, Mana-
ging Director of Messrs. Indian Potash Limited in which Tamil
Nadu State Co-operative Marketing Federation Ltd., is holding
shares of Rs. 3 lakhs.

I request you to depute a high level independent Officer to
enquire into the charges and submit report to you for further action.
மேலாயிற்றே ?
இவ்வளவு எழுதின பிறகும், வருஷம் ஒன்றுக்கு எடுத்ததாக
இந்த ஊழலைப்பற்றி எந்தவித நடவடிக்கையும் கேசிலிருந்து தப்
எனக்குத் தெரியாது. நேர்மாறாக, மாட்டிய எனக்குத் தெரி
பிக்க வைப்பதற்கான முயற்சி நடப்பதாகவும் பொறுத்தவரைக்கும்,
கிறது. அதுதான் அதைப்
(Interruption by Hon. Thiru G. R. Edmund)
Indian Potash Limited. The letter is dated 1-3-1978. I will give a
copy of the letter to Hon. Edmund.

[திரு. ரா. உமாநாத்] [1979 ஏப்ரல் 18

அடுத்து, சாதாரண போலீஸ்காரர்கள் அவர்கள் வாழ்க்கை
யைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் தங்களுக்கும்
சங்கம் வேண்டும் என்ற ஆர்வம் போலீஸ் மத்தியில் பரவலாக
ஏற்பட்டுள்ளது. அதன் எதிரொலிதான், நெல்லை நயினார்தாஸ்,
பி. எஸ். சி., திருநெல்வேலி டவுன் எஸ். ஐ. வெளியிட்ட
பகிரங்கமாக அச்சிட்ட, இதுவரைக்கும் 4 நோட்டீஸ்கள். அதன்
எதிரொலிதான் பல இடங்களில் அந்த நோட்டீஸ்கள் இன்றைக்
கும் ஒட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்கள் சங்கம்
வைத்தால் மாநிலத்தில் நாம் ஆட்சி நடத்துவது கஷ்டமாக
இருக்கும் என்ற பொருள்படும்படி நம்முடைய முதல்வர் இதற்கு
முன்னால் நடந்திருக்கக்கூடிய ஒரு விவாதத்தில் சொன்னார். அப்
படியானால், அவர்களுடைய குறையை அரசாங்கமாவது தீர்த்து
வைக்க வேண்டுமல்லவா ?

போன போலீஸ் மானியத்தில் நான் பேசி, அதற்குப் பதில்
அளிக்கையில் முதல்வர் சில வாக்குறுதிகளை அளித்தார். எஸ். ஐ.
யிலிருந்து கீழே இருக்கிறவர்களுக்கு 8 மணி நேரம் (வேலை)
நிச்சயமாக அமுல்படுத்தப்படும் என்று அஷ்யூரன்ஸ் கொடுத்
தார்கள். செய்தீர்களா ? இல்லையே ! "கடந்த விவாதத்தில்
அவைக்கு கொடுத்த வாக்குறுதியாச்சே !". அந்த வாக்குறுதி
யைப் பற்றி இந்த விவாதம் வருகிறபொழுது என்ன செய்தோம்
என்று சொல்ல வேண்டியிருக்குமே என்று சொல்லி, அவைக்கு
நாம் ரெஸ்பான்சிபில் ஆயிற்றே என்று சொல்லி, எடுத்த நட
வடிக்கைகள் என்ன என்று 'போலீஸ் ரெவியூ'வில் நான்
தேடித் தேடிப் பார்த்தேன். This is on record. This assu-
rance is on record. 'போலீஸ் நோட்', 'பாலிசி நோட்',
'போலீஸ் ரெவியூ நோட்' வருஷா வருஷம் ஈயடிச்சாங்
காப்பி அச்சடித்துப் போடுகிறார்களே, 'நோட்'. நான் 10
வருஷம் நோட் பார்த்தேன், அதே ஈயடிச்சாங்காப்பிதான்.
'பட் லாஸ்ட் இயர் 8 மணி நேரம் அஷ்யூரன்ஸ்' என்ன நட
வடிக்கை எடுத்தீர்கள் என்று அதில் குறிப்பிட வில்லை. அந்த
உணர்வு இருந்திருந்தால், இதைக் குறிப்பிட்டிருக்கலாமே
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வேலை செய்தால் ஊதியம் —
பாட்டா, டி.ஏ. உச்ச வரம்பு ரத்து செய்வதன் அவசியம், குடி
தண்ணீர், மின் வசதியின் அவசியம் பற்றியெல்லாம் நான் பேசி
னேன். அதற்கு முதல்வர் என்ன பேசினார்? ரெக்கார்டிலே
யிருந்து 'கோட்' செய்கிறேன். "அதைப்பற்றி நிச்சயமாக
கவனிப்போம் என்பதையும்,காவல் துறையில் உள்ளவர்கள் மகிழும்
வண்ணம் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து எந்த அள
வுக்கு ஈடு செய்ய முடியுமோ அந்த அளவுக்குக் கொடுப்பதற்கு
முயலுகின்ற வகையில் — நாங்கள் நிச்சயமாகக் கடமையாற்றி
எங்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்வோம்". செய்
தீர்களா ? இன்றைக்கும் ஞாயிற்றுக் கிழமை வேலை செய்
கிறார்கள், ரூ. 2 வாங்கிக் கொண்டு. நீங்கள் செய்ய வில்லையே.
அவைக்குக் கொடுத்த வாக்குறுதியாயிற்றே, என்ன நடவடிக்கை
எடுத்தோம் என்றாவது அந்த 'ரெவியூ நோட்'டிலே இருக்க
வேண்டும் அல்லவா ? ஒரு வார்த்தை, அந்த ஆய்வுக் குறிப்பிலே

1979 ஏப்ரல் 18] [திரு. ரா. உமாநாத்]

இல்லை. இந்த அவையை மதிக்க வேண்டும், மதிக்கவேண்டு
மென்று அடிக்கடி குறிப்பிடுகிறீர்கள். அவையை மதிக்க வேண்டு
மென்று குறிப்பிடக்கூடிய நீங்கள் அரசாங்கத்தைச் சேர்ந்த
வர்கள் அவையை, எங்களை விட அதிகம் மதிக்கவேண்டும்
அல்லவா ? அப்படியானால், இந்த அவைக்குக் கொடுத்திருக்கக்
கூடிய இரண்டு மூன்று வாக்குறுதி—விவாதத்திற்கு மீண்டும்
ஓராண்டுக்குப் பிறகு வருகிறபொழுது, அந்த வாக்குறுதியைப்
பற்றி, என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று—எடுக்கவில்லை
யென்றால், Whatever it is, you can say this is the maximum—
நெக்ஸ்ட் டைம் நாங்கள் இப்படி செய்யப் போகிறோம். Some
thing you must say, what ever you have done. சொல்ல வேண்டு
மல்லவா ? இது அவையை மதிப்பதாக ஆகாது என்று
நான் சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10—20]

அட்டூழியம் செய்த திருப்பரங்குன்றம் சப்-இன்ஸ்பெக்டருக்கு
அவருடைய உரிமைக்காக முதல்வர் அவர்கள் மிகவும் அக்கறை
காட்டினார்கள். நாங்கள் பார்த்தோம். அதில் பாதியையாவது
அவர்களுக்கு ஞாயிறு விடுமுறை வழங்குவதில் அக்கறை காட்டி
னால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதில் பாதியையாவது
அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்று அமுல் நடத்துவதில்
அக்கறை காட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதில் 50
பர்சண்ட்-பாதி வேண்டாம், 25 பர்சண்டையாவது பேட்டா
சீலிங் இல்லாது செய்வதற்கு அக்கறை காட்டினால் எவ்வளவு
நன்றாக இருக்கும். அவர்களின் குறையை சர்க்காரும் தீர்க்காது.
சங்கம் வைத்து அவர்களாகவே தீர்த்துக் கொள்வதற்கும் அனு
மதிக்காது. அப்படியானால் ஆங்கிலத்திலே சொல்வார்கள்:
This is Dog in the Manager Policy அவர்களும் செய்யமாட்டார்கள்,
போலீஸ்காரர்களே சங்கம் வைத்துப் பேசி அவர்கள் பிரச்னையை
அவர்களே தீர்த்துக் கொள்ளவும் விடமாட்டார்கள். நிலைமை
இப்படி இருக்கும்போது இந்தப் பாலிசியை போலீஸ்காரர்கள்
ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நான் சொல்கிறேன் பரபரப்
பான நிலைமை போலீஸ்காரர்கள் மத்தியில் இருக்கிறது. அத
னால் அவர்கள் சங்கம் வைத்தே தீருவார்கள். வேறு ஏதாவது
நிலைமை பின்னால் டெவலப் ஆகிவிட்டால், நாங்கள் தூண்டி
விட்டோம் என்று சொல்லவேண்டாம். அப்படிப்பட்ட நிலைமை
இன்று இருந்து வருகிறது.

போலீஸ்காரர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் துன்பகர
மானது. அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகமிகக் குறைவு.
ஆனால் அவர்கள் பேணிக் காக்க வேண்டிய குடும்பம் எவ்வளவு
பெரியது என்று தெரியுமா? கான்ஸ்டபிள்களின் மொத்த எண்
ணிக்கையில் 40 பெர்சன்ட்டுக்கு நான்கிற்கும் மேற்பட்ட குழந்தை

வாகும்? அடுத்து, பி.யு.சி. பாஸ் செய்வதர்கள் இப்போது எஸ்.ஐ.
போஸ்ட்டுக்கு செலக்‌ஷனுக்கு வரலாம் என்று சொல்லி இருக்கி
றார்கள். பட்டதாரி கான்ஸ்டேபிள்கள் பி. ஏ. படிக்கின்றபோது.
5 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டு இருந்தவன் இப்போது எஸ்.
ஐ. ஆகிறான் என்றால், அந்த எஸ்.ஐ. கீழ் பட்டதாரி கான்ஸ்
டேபிள் வேலை செய்ய வேண்டும் என்றால், கலகம் வராதா?
வயிற்றெரிச்சல் வராதா? ஆகவே, தற்பொழுது பட்டதாரி கான்ஸ்
டேபிள்களாக இருப்பவர்களை உடனடியாக ஹெட்கான்ஸ்டேபிள்
களாக அப்கிரேடு செய்து, மாற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அவன் எங்கே போய் சொல்வான் ? அவன் மனம்
குமுறுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, அவர்களுக்கு
பிரமோஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாடு ஸ்பெஷல் போலீசில் பாலோயர்ஸ் என்ப
வர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 40 ஆண்டுக் காலமாகப் பணி
புரிந்தும் இன்னும் கன்டின்ஜென்சியாக பணிசெய்து வருகிறார்கள்.
அவர்களுடைய வேலை என்ன வென்றால், காலை 3 மணிக்கு
எழுந்து சமையல் செய்து, 4—5 மைல்களுக்கு அப்பால்,
சென்று, அங்குள்ள கான்டேபிள்களுக்கு சாப்பாடு கொடுத்து
விட்டு, இரவு 12 மணிக்குத்தான் திரும்ப முடிகிறது. இரவு 12
மணிக்குத் திரும்பியவன் மீண்டும் 3 மணிக்கு எழுந்து சமையல்
செய்ய வேண்டும். இந்தமாதிரி அவனை வேலை செய்ய வைத்
தால், அவன் என்ன மனிதனா, மிருகமா? அவன் பெரிய குற்றம்
செய்து விட்டால் என்ன தண்டனை தெரியுமா? பெரிய அண்டா
பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி, அதை தலையில் ஏற்றி வைத்து,
8 என்று பெரிய எழுத்தில் தரையில் எழுதி அதில் மணிக்கணக்கில்
நடக்க வைப்பது, இப்படிச் செய்வது நியாயமா? இதை இந்த
அரசாங்கம் வந்த பிறகு ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை.
இந்த முறை இருக்கிறது. அந்த முறையை இந்த அரசு மாற்ற
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இதில் தலையிட்டு
தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது விமன் கான்ஸ்டேபிள்கள் போட்டு இருக்கிறார்கள்.
அவர்களுக்கு ஸ்டேஷன்களில் ப்ரைவசி கிடையாது. விமன்
கான்ஸ்டேபிள்களை போடுகிறோமே அவர்களுக்கு பிரைவசி
வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தெரியாதா? டிரெயினிங்கில்
இருக்கிறபோதே அதற்காக நடவடிக்கைகள் எடுத்து இருக்க
வேண்டாமா? ஏன் செய்யவில்லை. இப்போது எதோ டெம்பரரி
அரேஞ்மென்ட் செய்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.
போலீஸ் ஸ்டேஷன் பூராவும் ஆண்கள் என்று இருக்கிறபோது
அவர்களுக்கு பிரைவசி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வர
வேண்டும். அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா
என்று கேள்வி கேட்டு இருந்தேன். அதற்கு, அவர்களுக்கு
லைனில் வீடுகள் ஒதுக்கியிருக்கிறோம் என்று பதில் கொடுத்து
இருக்கிறார்கள். லைன் வீடுகளில் ஏராளமான ஆண்கள் வசிக்கி
றார்கள். அவர்கள் இந்தப் பெண்களை கிண்டல் செய்கிறார்

கள். டியூட்டியில்லாத நேரங்களில் சாயங்கால நேரத்தில்
அவர்கள் புடவையைக் கட்டிக்கொண்டு வெளியே போனால் ஆபி
ரம் அவதூறு பேசுகிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள்
பெண்கள். அவர்கள் மனம் நொந்து போகாதா? திருச்சியில்
எனக்குத் தெரியும். போலீஸ்காரர்களுக்கு உள்ள இடத்திற்குப்
பக்கத்தில் ஹவுசிங் போர்டில் சில வீடுகளை கட்ட எடுத்து இருக்கி
றார்கள். அந்த இடத்தில் இந்த பெண் கான்ஸ்டேபிள்களுக்கு
வீடுகள் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இந்தமாதிரி பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. மெடிகல்
ரி-இம்பர்ஸ்மென்ட் பெரிய அதிகாரிகளுக்கு ஏராளமாக இருக்
கிறது. ஆனால் சாதாரண பதவிகளில் உள்ள கான்ஸ்டேபிள்,
ஹெட்கான்ஸ்டேபிள்களுக்கு இல்லை.

இந்த கவாத், 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் கூடாது
என்று ஜி.ஓ. கூட இருக்கிறது. சென்ற முறை ஜி.ஓ. வையே
படித்துக் காட்டினேன். எந்தவிதமான நடவடிக்கையும்
எடுக்கவில்லை. அது நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.
4 நோட்டீஸ், 5 நோட்டீஸ் என்று விட்டு இருக்கிறார்கள். ஆகவே
அந்த நோட்டீஸ் என்பது வந்துவிட்டால் — அது ஒரு பிரம்மாஸ்
திரம் மாதிரி— ஆகவே, அதனை நம்முடைய முதலமைச்சர் அவர்
கள் தடுத்து நிறுத்த வேண்டும். அந்த நோட்டிஸ் வருவ
தால் அங்கே நிலைமை என்ன என்றால், ஏற்கெனவே கொந்த
ளிப்பு, மேலும் அதிகமாகிறது. இது குறித்து ஒன்றை மட்டும்
நான் குறிப்பிடுகிறேன்.

தற்போது பொது மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளியவர்
கட்கு போலீஸ் நிலையங்களில் நியாயம் கிடைப்பது இல்லை.
காரணம் பல மேலதிகாரிகளின் லஞ்சலாவண்யக் கொள்கைகளே.
மேலதிகாரிகள் தூய்மையாக இருப்பின் கீழதிகாரிகள் தவறு
செய்திடல் இயலுமோ. பல மேலதிகாரிகளை திருப்தி செய்திட,
நாங்கள், ஏழைக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தை செல்வந்தர்
களுக்கு விற்று வரும் அவல நிலையிலிருக்கிறோம். சில மேலதி
காரி வீட்டில் விளக்கெரியும் பில் தொகையை ஏழையின் வீட்டில்
விளக்கை அணைத்து கட்ட வேண்டியதாகவும், அவர் வீட்
டில் தண்ணீர் தீர்வையை கட்ட பொது மக்கள் சிலரை தண்ணீர்
காட்டவேண்டியதாகவும், அவரின் வீட்டில் நிற்கும், பெட்ரோல்
வாசனையே அறியாத கார் என்று கூறப்படும் மாதாந்திர மைலேஜ்
பணத்தைக் கொடுக்கும் காமதேனுவுக்கு குவார்ட்டர் டாக்ஸ்
கட்ட பல பணக்காரர்களிடம் சாமர் ரால்ட் அடிக்க வேண்டிய
தாகவும், அவருக்கு வாட்ச் வாங்கிக்கொடுக்க, கடத்தல்காரர்களை
'வாச்'செய்யவும் இல்லையேல் கேஸ்ஃபாயின்ட்செய்யவும்வேன்டிய
தான நிர்ப்பந்தங்களில் மனசாட்சியை மறந்து பணி செய்ய
வேண்டியதாயுள்ளது. இல்லையேல், பி. ஆர். பிரம்மாஸ்திரம்.

(2) வரவு-செலவுத் திட்டம் 1979—80வாக்கெடுப்பு—தொடர்ச்சி. [1979 ஏப்ரல் 18

(அ) கோரிக்கை எண். 18—காவல் துறை. (தொடர்ச்சி)

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப்பணிகள்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே,
காவல் துறை மானியத்தின் மீதும் தீயணைப்புத் துறை மானியத்
யின் மீதும், அதனை வரவேற்றுப் பேசுவதற்குண்டான வாய்ப்பு
கிடைத்தமைக்கு நான் அவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கி
றேன்.

பொதுவாக காவல் துறை ஒரு பிரச்சினைக்குரிய துறையாகவே
இருக்கிறது என்பது அனைவருமே ஒத்துக்கொள்ள வேண்டிய
ஒரு விஷயமாகும். பிரச்சினைக்குரிய காவல் துறை பிரச்சி
னையை சாமாளிக்கின்ற துறையாகவும் இன்றையதினம் இயங்கி
வருகிறது என்பது அனைவரும் அறிந்திருக்கின்ற ஒன்று தான்.
இங்கே நம்முடைய மாண்புமிகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள்
பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த அரசாங்
சத்தைப் பொறுத்த வரையில் சாமியே சரணம் அய்யப்பா என்று
அய்யப்பனை வணங்குவதைப்போன்று இந்த அரசாங்கம் துப்
பாக்கியே சரணம், தோட்டாவே சரணம், தடியடிப் பிரயோகமே
சரணம் என்கிற முறையில் இயங்கி கொண்டு இருக்கிறது என்று
அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் ஒன்றை இந்த அவைக்கு நான் கவனப்படுத்திக்
கொள்ள விரும்புகிறேன். வன்முறையே சரணம், அராஜகமே
சரணம், அட்டூழியங்களும் சரணம் என்ற நிலையை வன்முறை
யாளர்கள் ஏற்படுத்திக் காட்டுகிறபோது துப்பாக்கிப் பிரயோகமே
சரணம், தடியடியே சரணம் என்று நினைக்கக் கூடிய அளவிற்கு
காவல்துறை ஒரு துர்ப்பாக்கியமான நிலைக்கு வந்துவிடுகிற
சந்தர்ப்ப சூழ்நிலைகள் வன்முறையாளர்களால் ஏற்படுத்தப்படு
கிறது என்பது நாடு அறிந்த உண்மை. ஆகவே வன்முறைகள்
கட்டுக்கு அடங்க வேண்டும் என்று சொன்னால் இப்படிப்பட்ட
அராஜகங்கள் எழுகிற நேரத்தில் அதற்குத் தடுப்பு சுவர் போட
வேண்டிய சக்தி காவல் துறைக்கு இருக்கிறது என்பது யாவருமே
ஒப்புக்கொள்கிற ஒரு தன்மையாகும். காவல் துறைச் சட்டத்தை
ஒழுங்காக நிலை நாட்டுவதிலே காவல் துறை சட்டம், ஒழுங்கு
அமைதியை நிலைநாட்டி நாட்டிலே மக்களுக்கு அமைதியை
உருவாக்குவதற்காக அது தன்னுடைய பணியை செய்து கொண்டு
இருக்கிறது என்பது யாருமே ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு
விஷயம். அதிலே யாருக்கும் கருத்து மாறாட்டம் இருக்க
முடியாது. அது தொழில் துறையானாலும் சரி, விவசாயத்
துறையானாலும் சரி, நிர்வாகத்துறையானாலும் சரி, அல்லது
வேறு எந்தத் துறையானாலும் சரி, அதற்குள் ஒரு கட்டுமானத்தை

தலைதூக்கி ஆட்டி வைக்க வேண்டும் என்று சொன்னால் அங்கே
வன்முறையாளர்கள் தலை தூக்குகிற நேரத்தில் இந்தக் காவல்
துறை அங்கே தலையிட வேண்டிய அவசியம் நிச்சயமாக இருக
கிறது என்று இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்
பட்டவனாக நான் இருக்கிறேன். சில பல உணர்வுகள் வைக்
கப்படாமல் பொதுவாக ஜாதிப் பிரச்னை தூண்டி விடுகின்ற
தன்மைகள் நாட்டில் ஆங்காங்கே முளைவிட்டு கிளம்ப ஆரம்பித்து
இருக்கின்றன. இந்தச் சாதி பிரச்னைகள் சொல்லி அல்லது
இனப் பிரச்னைகள் சொல்லி ஒரு குறிப்பிட்ட பலமில்லாத
சாராரைத் தாக்குதலில் ஈடுபடுகிற தன்மைகள் தலைதூக்கிஆடிக்
கொண்டிருக்கிறது என்பதை நான் குறித்து காட்ட விரும்பு
கிறேன். குறிப்பாக ஆயுதப் புரட்சி ஏந்திப் போராட வேண்டும்
என்று வாசகங்கள் எல்லாம் போஸ்டர்களில் இன்றைக்கு சுவர்
முழுவதிலும் ஒட்டப்பட்டு விவசாயிகளைத் தூண்டிவிடுகிற
தன்மைகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்ற பாங்கு
நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. வரிகொடா
இயக்கத்தை நடத்துவோம் என்கிற கூப்பாடுகள் இன்றும் ஓர
பாரங்களில் எழுந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் அறி
விக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆகவே வரிகொடா
இயக்கம் என்பது ஒரு தார்மீக சிந்தனையின் அடிப்படையில்
அல்லது ஜனநாயக மரபுகளைக் குழித் தோண்டிப் புதைக்காத
வண்ணம் ஏற்படுத்துகிற அடையாளமாக இருக்க வேண்டுமே
தவிர ஏதோ இங்கே பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டு கொண்டிருக்
கிறார்கள் அல்லது அந்நிய தேசத்தைசேர்ந்தவர்கள் இங்கே தான்
ஆட்சியை நடத்தி கொண்டிருக்கிறார்கள் என்கிற முறையை
எடுத்துக் காட்டுவது போல வரிகொடா இயக்கத்தை இந்த
அரசுக்கெதிராக நடத்தி தீரவேண்டும் என்ற ஆர்ப்பாட்டங்கள்
எழுகிறபோது நான் காவல் துறையைப் பார்த்து பணிவன்போடு
கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்தச்
சக்தியை யார் தூண்டிவிட்டாலும் இந்த அரசாங்கம் இந்தத்
தமிழ்நாடு சர்க்கார் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்பதை மன்றத்தின் வாயிலாக நான் கூறிக்கொள்ள கடமைப்
பட்டவனாக இருக்கிறேன். பாதைகளில் மரத்தை வெட்டிப்
போடுவதும் ஒரு மிகப் பெரிய ஜனநாயகம். இதேபோல்
பொதுமக்கள் குடிக்கின்றதண்ணீரில் பாலிடாலைக் கலப்பது அதை
விட மிகப் பெரிய உன்னதமாக நின்று கொண்டிருக்கிற, தலை
தூக்கி நின்றுக் கொண்டிருக்கிற ஒரு அற்புதமான ஜனநாயகம்.
இதே காவல் துறையைச் சார்ந்தவர்கள் சட்டம், 'ஒழுங்கு,
நீதியை காப்பாற்ற புறப்பட்டுப் போனால் அவர்கள்மீது கல்லை
ஏறிதல், அல்லது அவர்களை அடித்துத் தாக்குதல் என்பது மிகப்
பெரிய ஜனநாயகமாக இன்றைக்கு கருதப்பட்டு வருவதை அடி
யோடு நாம் முறியடித்து ஒரு முற்றுப்புள்ளியை வைக்க
வேண்டிய சூழ்நிலைக்கு இந்த அரசாங்கம் தன்னை ஆளாக்கிக்
கொள்ள வேண்டும் என்பதை நான் பணிவன்போடு கூறிக்கொள்ள
கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பொதுவாக இன்றைக்கு
இருக்கிற காவல்துறை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு

[திரு. ஆர். மணிமாறன்] [1979 ஏப்ரல் 18

இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிற விளக்கப் பாடமாக
தான் இந்தக் காவல் துறை மான்யத்தின் நூல் தெளிவாகக்
காட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் பழைய காலங்களில் அப்
படி இருக்கிறது என்றால் நான் அதனைக் கோடிட்டு காட்டக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காவல் துறையைச்
சார்ந்தவர்கள் எப்படிப்பட்ட பணிகளை செய்து கொண்டிருந்
தார்கள் என்பதை இந்த நேரத்தில் கவனித்துப் பார்க்கிறபோது
சத்தியமங்கலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் இந்த
அவைக்கு வைப்பது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.
அங்கே பிச்சைக்காரர் மறுவாழ்வுஇல்லத்தைக் கட்டிமுடித்தார்கள்.
அந்தப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் ஒரு பிச்சைக்காரர்
கூட வரவில்லை.

[முற்பகல் 10-40].

ஆனால் அமைச்சர் வருகிறார், அமைச்சர் வருகின்ற காரணத்
தால், அந்த பிச்சைக்காரர் இல்லத்தில் பிச்சைக்காரர்கள் நிரம்பி
வழிய வேண்டும் என்பதற்காக, சாலையோரத்தில் போய்க்
கொண்டிருந்த பிச்சைக்காரர்கள், சத்திரம் சாவடியில் இருந்த
பிச்சைக்காரர்கள், ஆற்றங்கரை, குளக்கரை இங்கெல்லாம்
சென்று பிச்சைக்காரர்களை பிடித்து வந்து மறுவாழ்வு இல்லத்தில்
சேர்த்தார்கள். இந்தத் திருப்பணியைச் செய்தவர்கள் காவல்
துறையைச் சார்ந்தவர்கள், அவர்கள் போலீஸ் வேனை எடுத்துக்
கொண்டு யாரெல்லாம் காவிச் சட்டை போட்டிருந்தார்களோ
அவர்களை எல்லாம் பிடித்து உள்ளே போ என்று காவிச் சட்டை
அணிந்திருந்த அத்தனை பேரையும் பிடித்துக்கொண்டு வந்து
விட்டார்கள். அதில் ஒருவர் காவிச் சட்டை அணிந்திருந்தவர்,
நிலம் வரப்பு எல்லாம் உள்ளவர், அவரையும் போலீஸ்காரர்கள்
பிச்சைக்காரன் என்று பிடிக்க, அவர், போலீசைப்பார்த்து, நானா
பிச்சைக்காரன், நீ தான் பிச்சைக்காரன் என்று சொல்ல இப்படிப்
பட்ட சம்பவங்களும் அன்றையதினம் நடந்திருக்கின்றன. எதற்
காக இதை நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், அன்றைய
தினம் காவல்துறை எதற்காக பயன்படுத்தப்பட்டது என்பதை
எடுத்துக் காட்டத்தான். அதையாற்றி இன்றைய முதலமைச்சர்
அவர்கள் நம்முடைய காவல்துறையை அதன் நிர்வாகத்தை
சீரான பாங்கில் கொண்டு வந்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றி
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், நாட்டில் கலவரம், வன்முறை, அராஜக சம்பவங்
கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அதை காவல்துறை
கட்டுப்படுத்தவில்லை என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள்
எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச் சொல்லுகிற
போது, ஒன்றைச் சொன்னார்கள், போராட்டங்கள் எல்லாம்
நடைபெறுகிறபோது, எதிர்க்கட்சிதான் இதை எல்லாம் தூண்டி
விடுகிறது என்று அரசு தரப்பில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
து தவறான கருத்து என்று சொன்னார்கள். ஆனால் அதே
ரத்தில் நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை

1979 ஏப்ரல் 18] [திரு. ஆர். மணிமாறன்]

நான் பணிவோடும் அடக்கத்தோடும் கூற விரும்புகிறேன். வன்
முறை சம்பவங்கள் நடைபெறுகின்றன என்றால் அவற்றை
தூண்டிவிடுகிற அளவுக்கு தூண்டிவிடுகிற எழுத்துக்களாக ஆக்கிக்
கொண்டிருக்கிறார்கள என்பதை என்னால் நிருபித்துக் காட்ட
முடியும். எழுத்துக்களின் மூலம் இப்படிப்பட்ட உணர்வுகளையும்
தன்மைகளையும் வளர்த்துக் கொண்டிருப்பதை ஜனநாயக
மரபாக கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால்
தெளிவாக காட்ட முடியும். ஒரு உதாரணத்தைச் சொல்ல
விரும்புகிறேன். "முரசொலி" பத்திரிக்கையில் ஒரு மடல்
எழுதப்பட்டிருக்கிறது. அதை நான் கோடிட்டுக் காட்ட விரும்பு
கிறேன். "செஞ்சிக்கோட்டை வாலிபன்" என்ற தலைப்பில்
எழுதப்பட்டிருப்பது, "எங்கள் கை மட்டும் பூப்பறித்துக்
கொண்டா இருக்கும்" என்ற வார்த்தைகளை அந்த மடலில்
வார்த்தைகளாக அலங்காரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை
அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இது
ஒன்று மட்டும் தானா, இதேபோல் எத்தனையோ எடுத்துக்
காட்டுகளை என்னால் கூற முடியும். 1973 ஆம் ஆண்டில்
மதுரையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த கே.டி.கே.
அவர்கள் ஒரு நிகழ்ச்சியை ஒரு உணர்வை எடுத்து வைத்தார்கள்.
திண்டுக்கல் இடைத் தேர்தலில் தோற்றுவிட்ட உடனே இந்திய
கம்யூனிஸ்டு கட்சி பொதுக்குழுவில் ஒரு தீர்மானத்தை நிறை
வேற்றியது. திண்டுக்கல்லில் தோற்றுவிட்டதால், உங்கள் ஆட்சி
இராஜிநாமா செய்துவிட வேண்டும் என்று தீர்மானம் நிறை
வேற்றப்பட்டது. பிறகு, புதுவையில் பேசிய இன்றைய
பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "கம்யூனிஸ்ட் கட்சி
எங்களை ஆட்சியிலிருந்து இராஜிநாமா செய்ய வேண்டும் என்று
தீர்மானம் போட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்லிக் கொள்
கிறேன், நாங்கள் ஆட்சியிலிருந்து இராஜிநாமா செய்தால் எங்கள்
கையிலுள்ள செங்கோல் தான் கீழே இறங்குமே தவிர, எங்கள்
கையில் வாள் இருக்கிறது, அது போதும்" என்று சொல்லி
இருக்கிறார். அதைச் சுட்டிக்காட்டி இது வன்முறையை தூண்டி
விடக்கூடியது ஆகாதா என்று கேட்கப்பட்டது. அதுமட்டு
மல்ல, அவர்கள் பேசியது, "தண்ணீரில் இருக்கின்ற பாஸ்பரஸ்
யைபோல் ஆட்சியில் இருக்கும்போது இருப்போம், நாங்கள் வெளி
யில் வந்துவிட்டால் கரையில் எடுத்துப் போட்ட பாஸ்பரஸாக
ஆகிவிடுவோம்" என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். இப்படிப்
பட்ட வார்த்தைகளில் என்ன மின்னிக் கொண்டிருக்கிறது
என்பதை நாம் பார்க்க வேண்டும். இதிலுள்ள உணர்வுகள்
தான் இன்றைக்கு துக்கம் விசாரிக்கப் போகின்ற இடத்திலும்
வன்முறைகள் தலைதூக்கிக் கொண்டிருக்கின்ற நிலைமைகள்—
தொடர்கதையாக உருவாகிக் கொண்டிருக்கிறது, இதை காவல்
துறை சரியான முறையில் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, அரசியல் மேடைகளில் பேசப்படுவதை
எடுத்துக்கொண்டு பார்த்தால், அவ்வளவு அநாகரீகமான
சொற்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதை நம்மால் பார்க்க

[திரு. ஆர். மணிமாறன்] [1979 ஏப்ரல் 18

முடிகிறது. அந்த அளவுக்கு நாராசமான வார்த்தைகளில் நரகல்
நடையில் தங்கள் பேச்சுக்களை அரங்கேற்றம் செய்து கொண்டு
இருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்களைப்பற்றி
அவ்வளவு கேவலமாக மேடைகளில் பேசிக்கொண்டு வருகிறார்கள்.
இவற்றை எல்லாம் காவல்துறை உண்மையிலேயே கண்காணிக்
கிறார்களா, அங்கு பேசப்படுகிற பேச்சுக்களை சரியான முறையில்
குறிப்பு எடுக்கிறார்களா, அவற்றை அரசாங்கத்தின் பார்வைக்கு
கொண்டு வருகிறார்களா என்பது ஐயப்பாடாக இருக்கிறது.
தயவுசெய்து இவற்றை எல்லாம் சரியான முறையில் கண்காணிக்க
வேண்டும் என்று கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட்டு சொல்ல வேண்டியது அவசிய
மாக இருக்கிறது. திருப்பூர் நகரத்தில் 15 நாட்களுக்கு முன்னா
ஒரு பயங்கரமான படுகொலை விடியற்காலை 6½ மணிக்...
நடந்திருக்கிறது. இந்தக் கொலை நடந்து 15, 20 நாட்க
ஆகியிருக்கும் என்று கருதுகிறேன். இன்னும் குற்றவாளியை கண்டு
பிடிக்கவில்லை. அங்கே நடந்திருப்பதில் இது மூன்றாவது
கொலை என்பதை கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இதற்கு முன்பு இரண்டு கொலை இதேமாதிரி நடைபெற்றது.
ஒரு கொலை காலை 6½ மணிக்கும், இன்னொரு கொலை இரவு
8½ மணிக்கும் நடந்தது. ஜெயபாரதம் நிட்டிங் கம்பெனி
அதிபரின் மனைவி ஒன்றில் கொலை செய்யப்பட்டார்கள்.
இதற்கு முன்பு ஒரு வட்டக்கத்திக்காரர் இதேமாதிரி கொலை
செய்யப்பட்டார். இப்போதும் அதேபோல் விடியற்காலை 6½
மணிக்கு மற்றொரு கொலை நடந்திருக்கிறது. இந்த மூன்றாவது
கொலையில் உண்ணத்தாள் என்ற 50 வயது பெண்மணி கொலை
செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த மூன்று கொலைகளும் கடந்த
ஐந்தாண்டு காலத்தில் இடையிடையே நடந்திருக்கிறது. இந்த
கொலைகள் நடைபெற்றிருக்கின்றதே தவிர, இதுவரை கொலை
செய்தவர்கள் யாரையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், குற்ற
வாளி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படு
கிறது. குற்றவாளி கைது செய்யப்பட்டு, போலீஸ் ஸ்டேஷ
னுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார். ஆனால், காவல்துறை
யினரால் நிரூபிக்கப்படாமல், விடப்பட்டிருக்கிறார்கள். எனவே,
இதுவரையில் குற்றவாளி யார் என்பதை அவர்களால் கண்டு
பிடிக்க முடியவில்லை. ஆகவே, திருப்பூரிலே உள்ள பொதுமக்கள்
என்ன நினைக்கிறார்கள் என்றால், இதிலே ஏதாவது ஒரு அர
சியல் தலையீடுகாரணமாக இருக்குமோ என்று. அப்படி அவர்கள்
நினைப்பதிலும் உண்மை இருக்கிறது. காரணம், இன்றைக்கு
வரையிலும் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் யார் என்பதை
காவல்துறையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, திருப்
பூர் நகரிலே நடந்த இந்த மூன்று கொலைகளைச் செய்தவர்கள்
யார் என்பதை உடனடியாகக் கண்டுபிடிக்க வழிவகை செய்ய
வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 18] [திரு. ஆர். மணிமாறன்]

[illegible]த் தினுடைய காவல் துறையைப் பற்றி மற்றவர்கள்
சொல்லித் தெரியவேண்டிய அவசியம் கிடையாது. எனவே,
இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் யார் என்பதைப் பற்றி
இந்தக் காவல்துறை கண்டிப்பாக இப்படிப்பட்ட கொலைகளை
யெல்லாம் யார் செய்தார்கள் என்பதை தயவுசெய்து கண்டு
பிடிக்க வேண்டும் என்று நான் பணிவோடும், அடக்கத்தோடும்
கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. உமாநாத் அவர்களும் சொன்னார்கள் ; ஆளும் கட்சி
யைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். லாரி
களிலே கூட்டம் கூட்டமாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
வருகிறார்கள் ; அப்படி அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்
களாக இருப்பதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவ
தில்லை, அவர்கள் நிறுத்தப்படுவதில்லை, அவர்கள் மேலும்
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.
அதற்கும் இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதற்குத்
தடுப்புச் சுவராகவோ, தடைக் கல்லாகவோ இந்த அரசாங்கம்
இல்லை. இப்படி ஆளும் கட்சியைப்பற்றிச் சொல்லுகின்ற அதே
நேரத்திலே, அண்மையில் திருப்பூர் நகரத்திலே 20 நாட்களுக்கு
முன்பு தமிழகம் தழுவிய விவசாயிகள் ஊர்வலம் நடைபெற்றது.
அப்போது நூற்றுக் கணக்கானவர்கள் லாரிகளிலே, நூற்றுக்கணக்
கான லாரிகளிலே வந்தார்கள். ஆனால் என்ன நடைபெற்றது ?
யாருடைய லாரியும் சீஸ் செய்யப்படவில்லை. வழக்கு
போட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தின்
வாயிலாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி
பல்வேறு பிரச்னைகள் இன்றைக்கு நடைமுறையில்......

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர்
அவர்களே, திருப்பூர் நகரத்திலே விவசாயிகள் அணிவகுத்து
ஏராளமான லாரிகளிலே வந்ததைப் பற்றி மணிமாறன் அவர்கள்
கூறினார்கள். அதேபோல் தங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்
களும், இப்படிப்பட்ட லாரிகளில் கோவையிலே இந்தி எதிர்ப்பு
மாநாடு நடைபெற்றபோது.........

திரு. ஆர். மணிமாறன் : இதேபோல், மார்க்சிஸ்ட் கம்
யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதுரையிலே மாநாடு கூட்டிய
போது, லாரிகளிலே போயிருக்கிறார்கள். நான் இதைக் குறிப்
பிடுவதற்குக் காரணம், லாரிகளில் வந்தவர்களை கைது செய்ய
வேண்டுமென்றோ, வழக்குகள் போட வேண்டுமென்றோ அந்தக்
காரணத்தினால் கூறவில்லை. இப்படி லாரிகளில் வரக்கூடாது
என்பது அரசாங்கம் போட்டிருக்கின்ற ஒரு சட்டம். அந்தச்
சட்டத்தை மீறுகின்றவர் அண்ணா தி.மு.கழகத்தைச் சேர்ந்தவ
ராக இருந்தாலும், தி.மு.க. அல்லது கம்யூனிஸ்ட் கட்சி அல்லது
வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சட்டத்தை
மீறுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத்
தான் நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 ஏப்ரல் 18

காப்புக் கொடுக்கிறோம்? இந்த இலாகா தனது சிப்பந்திகளுக்கு
என்ன பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும்
நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்ன என்ன வழிகளிலே
அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமோ அத்தனையையும்
நாம் செய்து கொடுத்துத்தான் ஆகவேண்டும். அப்படிக் கொடுத்
தால் தான் அவர்களை சுயமாக இயங்க வைக்கமுடியும், அவர்கள்
சுயமாக இயங்குகிற நிலைமை இருந்தால் தான் ஓரளவிற்கு
சட்டம் ஒழுங்கை அவர்கள் அமல்படுத்த முடியும்.

இன்றைய நிலையில் நாம் ஒரு குற்றம் சுமத்துகிறோம்,
நாம் என்றால் நாம் மட்டுமல்ல, பொதுமக்களும் இன்றைக்கு
குற்றச் சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சட்டம்,
ஒழுங்கை நாட்டிலே சரியாக அமல்படுத்தவில்லை, எங்கு பார்த்
தாலும் அராஜகம் தலைதூக்கிக் கொண்டிருக்கிறது. பிக்-பாக்
கெட்டும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது, கொள்ளை அடிப்பு அதிக
மாகிக் கொண்டிருக்கிறது, சண்டை வழக்குகள் அதிகரித்துக்
கொண்டிருக்கின்றன, வழக்குகள் ஸ்டேஷனிலே பதிவுசெய்யப்
படுவது மிகுதியாகிக் கொண்டு இருக்கின்றன என்ற குற்றச்
சாட்டை மக்கள் மட்டுமல்ல, இங்கே கொடுத்திருக்கிற ஆய்வுரை
யிலேயும் காண்கிறோம். 1977 இல் கொள்ளை 22 ஆக இருந்தது
1978 இல் 21 ஆகியிருக்கிறது. ஆனால் வழிப்பறி 130 ஆக இருந்
தது 1978 இல் 192 ஆக் உயர்ந்திருக்கிறது. கன்னக்களவு
10,305 ஆக் இருந்தது 1978 இல் 10,499 ஆக ஆகியிருக்கிறது.
பெரிய திருட்டுகள் 24,589 ஆக இருந்தது 1978 இல் 26,915
ஆக ஆகியிருக்கிறது. சிறிய திருட்டுக்களும் அதிகரித்திருக்கின்றன
என்று எல்லாம் இதிலே கொடுத்து இருப்பதைப் பார்க்கிறோம்.
அதனாலே காவல் துறை சுயமாக இயங்கவில்லை, செம்மையாக
இயங்கவில்லை, ஏதோ மகுடியைக் கேட்ட பாம்புபோல் அடங்கி
ஒடுங்கி இருக்கிறார்கள் என்ற காரணத்தால் தான் இப்படிப்பட்ட
குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று பொதுமக்களே சொல்கின்ற
அளவிற்கு நாட்டிலே நிலைமை உருவாகியிருக்கிறது. இன்னும்
பல நிலைமைகளை எடுத்துச் சொல்லமுடியும் என்னால், போலீஸ்
ஸ்டேஷனிலே ஏதாவது புகார் மனுக்கொடுத்தால் உடனடியாக
விசாரணை செய்வதே கிடையாது, ஏன் என்றால் அவர்கள்
பயப்படுகிறார்கள், அவர்களுக்கு அச்சம் இருக்கிறது, அந்த வழக்
கிலே சார்ந்தவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ, ஆளுங்கட்
சியைச் சேர்ந்தவரோ அல்லது அந்த லோக்கல் எல்.எல்.ஏ.-வுக்கு
வேண்டியவரோ என்ற அச்ச உணர்வு அவர்களிடத்திலே இருக்
கிறது. போலீஸாரிடம் நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்
தாகவேண்டும் என்று சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்கு
பெரிய காரியம் ஒன்றும் புகாரிலே இல்லை, ஒருவன் அடித்து
விட்டான் என்றால் அடிபட்டவனுக்கு பெரிய காயம் இல்லை,
காயமே கிடையாது, காயம்பெற்றிருந்தாலும் பெரிய காயமாக
இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். எனது தொகுதியில்
நகரப் பஞ்சாயத்துத் தலைவர் P. D. S. மணி இரவிலே
தாக்கப்பட்டார், பலர் அவரைத் தாக்கினார்கள். அவர் அதைப்
பற்றி புகார் கொடுத்தார். அந்த ஊரிலே வந்து விசாரியுங்கள்,

1979 ஏப்ரல் 18] [திரு. அ. சுவாமிதாஸ்]

எனக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்றும் இன்னும்
நால் தாக்கப்படுவேன் என்றும் அவர் கேட்டபோது அவருக்கு
இதுவரையிலும் எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்கப்
படவில்லை. தக்கலை காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரும்,
இன்ஸ்பெக்டரும், டி. எஸ். பி.-யும் அவருக்குப்
பாதுகாப்பு கொடுக்கவில்லை. இரண்டு வாரங்கள் சென்ற
பின்னர் என்னிடம் வந்து அவர் நிலையை எடுத்துச் சொன்னார்.
நீங்கள் காவல் துறையினரிடம் சொல்லி நடவடிக்கை எடுக்க சொல்
லுங்கள் என்று சொன்னார். நான் அந்த சப்-இன்ஸ்பெக்டரைக்
கேட்டால நான் சுயமாக இயங்க இயலவில்லை, அவரிடம்
இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., என்ன கட்டளை போட்டிருக்கிறார்
கள் என்றால் ஆபீஸுக்குள் இருந்து ஒழுங்காக ரிக்கார்டுகளை
மட்டும் பார்த்துக்கொள், வெளியே போகவேண்டாம் என்று
சொன்னார். ஆகவே அங்குள்ள இன்ஸ்பெக்டரிடம் அது
குறித்து சொன்னேன், நானும் அவரும் அது குறித்து சிறிது
நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். கடைசியாக அவர் பஞ்சா
யத்துத் தலைவர் சாகவில்லையே, செத்தால் தான் நாங்கள்
நடவடிக்கை எடுக்கமுடியும் என்று சொன்னார். தவறாக,
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்ல நான் போகவில்லை,
பஞ்சாயத்துத் தலைவர், பொதுக் காரியத்திலே ஈடுபட்டவர்
அவர் தாக்கப்பட்ட காரணத்தினாலே ஏதாவது நடவடிக்கை
எடுங்கள் என்று சொல்லப்போனதற்கு "அவர் சாகவில்லையே"
என்று என்னிடம் சொலகிறார் என்றால் அந்த இன்ஸ்பெக்ட
ருடைய உணர்வு என்ன என்றால் "செத்தால் தான் வெளியே
வருவோம் என்பதுதானா?" அதே நிலையிலே தான் டி.எஸ்.பியும்
இருக்கிறார். நடவடிக்கை எடுப்பதில்லை, வெளியே வரு
வதே கிடையாது, அதனால் கள்ளச்சாராயக் குற்றங்கள்
அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன.

(முற்பகல் 11-00)

திருட்டுக் குற்றம் வளர்ந்துகொண்டிருக்கிறது. ஏனென்
றால் அவர்கள் அந்த அலுவலகத்திலே இருக்கிறார்களே தவிர
வெளியே வருவதில்லை, என்ன காரணமோ தெரியவில்லே.
தக்கலையில் இருப்பவர் அந்த நிலையில் இருக்கிறார், அங்குள்ள
சப்-இன்ஸ்பெக்டரை நான் குறை சொல்ல மாட்டேன். அவர்
வேலைக்குப் புதிது. அந்தப் பதவியிலே புதிது. அவர்
சுறுசுறுப்பாகப் பணியாற்ற வேண்டுமென்று விரும்புகிறார்.
அந்தத் துறைக்குப் புதிதாக வருகின்ற எல்லாருமே அப்படித்தான்
இருக்கிறார்கள், அவர்களுக்குக் கள்ளத்தனம் தெரியாது. நல்ல
திறமையாகப் பணியாற்ற வேண்டுமென்று நினைக்கிறார்கள்.
ஆனால் அவர்களை அப்படி மேலதிகாரிகள் விடுவதில்லே. நான்
அறிந்தவரையில் ஏன் மேலதிகாரிகள் அப்படி இருக்கிறார்கள்
என்று பார்த்தால் அரசு அப்படி எங்களுக்கு ஆணை
போட்டிருக்கிறது, உங்களால் யாருக்கு எந்தவிதமான தொல்லை
யும் வரக்கூடாது, நீங்கள் திருடர்களுக்கும் நண்பர்களாக
இருக்க வேண்டும், நல்லவர்களுக்கும் நண்பர்களாக இருக்க வேண்

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 ஏப்ரல் 18

டும் என்ற முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று பணித்
தால் எப்படி முடியும்? தீய சக்திகளை ஒடுக்குவதற்குக்
காவலர்கள் காவலர்களாகத்தான் வீற்றிருக்க வேண்டும்.
அவர்கள் நண்பர்களாக மாறினால் முடியாது. குற்றங்களை
ஒடுக்க முடியாது. சென்னை நகரத்தில் நடமாட முடிகிறதா?
நடைபாதைகளிலேயெல்லாம் கடைகள். 1962-ஆம் ஆண்டிலே
நான் சென்னைக்கு வந்திருக்கிறேன். அப்பொழுதிருந்த நிலை
யில் காவல் துறையினர் இப்பொழுது இல்லை. ஆகவே நாங்கள்
வேதனைபடுகிறோம், நடைபாதைகளில் நடமாட முடியவில்லை.
அங்கே பிக்பாக்கெட்டுகள் நடக்கின்றன. இப்பொழுதுகூடப்
வங்கியிலே பணிபுரியும் ஒரு பணியாளர் 4,000 ரூபாய் பணத்தை
மவுண்ட் ரோட்டில் வைத்துக்கொண்டிருந்தபொழுது அதை
யாரோ பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். இவர் துரத்தி
துரத்திப் பார்த்தார், முடியவில்லை. காவல் துறையிடம் புகாரது
கொடுத்தார். அங்கே அவர்கள் கேட்ட கேள்வியை அறிந்து
நான் வேதனைப்படுகிறேன். காவல்துறையினர் கேட்ட
கேள்வி என்னவென்றால், நீ அந்தப் பணத்தைத் திருடி மறைத்து
வைத்துக் கொண்டு ஏமாற்றுவதற்காக கணக்குக்கொடுக்கின்ற
அளவிற்குச் செய்கின்ற சூழ்ச்சி என்று சொல்கிறார்கள். அவர்
கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை. ஏன் இந்த
அவலநிலை? மவுண்டுரோடு, சைனா பசார், பாரிஸ் கார்னர்
போன்ற பகுதிகளில் எங்கு பார்த்தாலும் பிக் பாக்கெட்டுகள்
ஏராளமாக நடந்துகொண்டிருக்கிறது.

நான் இன்னும் சொல்வேன். முதலமைச்சரவர்கள் நெல்
லைக்கு ஒரு விழாவிற்குச் சென்றிருக்கிறார்கள். கன்னியா
குமரி மாவட்டக் கலெக்டர் வந்திருந்தார். அவரிடத்தில்
இருந்த 700 ரூபாயைப் பிக்பாக்கெட் அடித்து விட்டார்கள்.
அதைத் தடுக்க முடியவில்லையே.
சக்திகளை ஒடுக்க வேண்டுமென்றால் கொஞ்சம் கண்டிப்பாகக் இத்தகைய
காவல்துறையினர் நடக்க வேண்டும். அவர்கள் கைக்கட்டை
அவிழ்த்து விட வேண்டும். அவர்களை எல்லோரிடத்திலும்
நண்பனாக இருங்கள் என்றால் நடக்காது. அப்படியென்றால்
காவல்துறை தேவை இல்லை. எல்லோரையும் சன்மார்க்க
பிரச்சாரத்திற்கு அனுப்பிவிடலாம். இப்பொழுது எங்கள்
ஊரிலே இருக்கிற எஸ்.பி. எப்பொழுதும் பிரச்சாரம்
செய்கிறார். தன் கடமையைச் செய்வது இல்லை. அவரை
அணுகினால், நான் காந்தியவாதி என்று சொல்லி, காந்தியத்
தத்துவங்களைப் பிரச்சாரம் செய்கிறேன் என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்களே தவிர, அங்கே அவர் எஸ்.பி.யாக
இருந்து பணியாற்றவில்லை என்பதைச் சொல்ல கடமைப்பட்
டிருக்கிறேன். பிரச்சாரத்திற்காக வேறு எவ்வளவோ துறைகள்
இருக்கிறதே. ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மதவாதிகள்
இருக்கிறார்கள். எவ்வளவோ பெரியவர்கள் இருக்கிறார்கள்.
இதற்குக் காவல் துறை அதிகாரிகள் எதற்கு? இப்படி
இருக்கின்ற காரணத்தால் அங்கே உள்ள நிலைமை என்ன?
கன்னியாகுமரி மாவட்டத்திலே எஸ்.பி. இப்படிச் செய்துகொண்டி

979 ஏப்ரல் 18] [திரு. அ. சுவாமிதாஸ்]

அமல்படுத்தப்படவில்லை.
ருப்பதால், சட்டம் ஒழுங்கு அங்கே அதற்கு இந்தப்
எனவேதான் பஸ்ஸுக்குத் தீ வைத்தார்கள். போலீசாரைக் கண்டு மக்களுக்கு
போலீஸ்தான் காரணம். இந்த நிகழ்ச்சி நடந்து இருக்காது.
அச்சமிருந்தால் நிச்சயமாக மாட்டார்கள் என்ற எண்ணம்
போலீசார் நடவடிக்கை எடுக்க படுபாதகச் செயல்
உருவான காரணத்தால்தான் இந்தப் மாதம் 18, 19 ஆம்
நடைபெற்றது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் தீ வைக்கவும்
தேதியில் தக்கலையில் போஸ்டாபீஸுக்கு செய்தார்கள் என்று
பஸ்ஸைக் கொளுத்தவும் பலர் முயற்சி டி.எஸ்.பியோ, சர்க்கிள்
புகார் கொடுக்கப்பட்டது. அதன் மீது எடுக்கவில்லை.
இன்ஸ்பெக்டரோ உடனடி நடவடிக்கை ஆகவே என்ன
அப்படியே மந்தமாக இருந்து விட்டார்கள். என்றால், நாம்
உணர்வு ஏற்பட்டது அந்தக் கட்சிக்காரர்களுக்கு மாட்டார்கள்,
என்ன செய்தாலும் போலீசார் ஒன்றும் செய்ய இருப்பார்கள் என்ற
எல்லாம் ஃபிலாசபிதான் பேசிக்கொண்டு அளவிற்கு
நிலை ஏற்பட்டு விட்டதால்தான் பஸ் எரிக்கக்கூடிய விட்டார்கள்.
சூழ்நிலைகள் வந்து, பத்து பேர்களைக் கொன்று சொல்லி
இதற்குப் போலீசார்தான் காரணம் என்று பலதடவை போலீசார் மீது
யிருக்கிறேன். ஆனால், அது குறித்து அவர்களுக்கு ஊக்கம்
விசாரணை செய்யவில்லை. ஆகவேதான் இப்படி இருப்பதற்குக்
பிறக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு? தீ வைத்தார்கள்?
காரணம் என்ன? எந்தக் காரணத்தாலே உடந்தையா? அவர்கள்
உண்மையிலேயே அதற்குப் போலீஸ் குற்றஞ்சாட்டுகிறோம். இதில்
உடந்தை என்று நாங்கள் என்று பார்ப்பதற்காக
உண்மை இருக்கிறதா இல்லையா எந்த அதிகாரி
விசாரணை வைக்க வேண்டும். அதற்கு மாறாக வைத்தே
மீது குற்றஞ் சாட்டுகிறோமோ அந்த அதிகாரியை நடந்துகொண்டிருக்
அந்தக் குற்றஞ்சாட்டின் மீது விசாரணை போலீசாரை
கிறது என்றால் எப்படி நீதி கிடைக்கும்? சொன்னாலும்,
எப்படி நம்ப முடியும்? எஸ்.பி.யிடத்தில் என்ன சொல்லிவிட்டு,
நான் பெரிய காந்தியவாதி என்று முதலில் பாகுபாடு
எனக்கு சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் குறித்தாவது
கிடையாது என்று சொல்வாரே ஒழிய ஒரு வழக்கு எவ்வளவோ
அவர் விசாரணை நடத்தியது கிடையாது. நாங்கள் சொந்தத்திற்
காரியும் சொல்லியிருக்கிறோம். எங்களுடைய என்பதற்
காகச் சொல்லமாட்டோம். நீதி, நியாயம் வேண்டும் போவதில்லை.
காக போவோமேயொழிய வேறு எதற்கும் என்று சொல்வார்கள்.
சொன்னால் நடவடிக்கை எடுப்போம் நடவடிக்கையும் எடுப்
நடவடிக்கை எடுப்பதே கிடையாது. ஒரு நிலைமை
பதில்லை. மாறாக, அவர் நடந்துகொள்கிற சரித்திரத்திலேயே
களைப் பார்த்தால், கன்னியாகுமரி மாவட்ட காட்டினார்.
இல்லாத நிகழ்ச்சியை அந்த எஸ்.பி. நடத்திக் சாமியார்கள்
எங்கள் ஊர்களிலே, கிறிஸ்தவ சங்கைக்குரிய அவர்களுக்குக் கீழே
அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிராம மக்க
கிராமங்கள் கட்டுப்பட்டு நடக்கும். தியாகம் செய்தவர்கள்.
ளுக்காகப் பாடுபடக்கூடியவர்கள்,

அவர்கள் எவ்வித சண்டை சச்சரவுக்கும் போகமாட்டார்கள்.
முட்டத்திலே (Muttam Village) ஒரு தகராறு
ஏற்பட்டது. அந்தத் தகராறில் சமரசம் பேசுவோம்
என்று முட்டம் பங்கு சாமியாரை குளச்சலுக்கு அழைத்துச்
சென்றார்கள். டி.பி.யிலே சமரசப்பேச்சு நடந்தது. என்ன
நடந்ததோ, யாது நடநததோ தெரியாது, அந்தச் முட்டம் பங்கு
சாமியார்மீது புல குற்றச்சாட்டு சொல்லி, கைது செய்து ஜெயிலில்
போட்டார்கள். அப்போது நாங்கள் நினைத்திருந்தால், பெரிய
கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும். நாங்கள், கிறிஸ்துவ
மக்களை அமைதிப்படுத்தினோம். கொதித்தெழுநத மக்களை
அமைதிப்படுத்தினோமே தவிர, தூண்டி விடவில்லை. ஆனால்,
அந்த எஸ்.பி. ஒரு சாமியாரை ஜெயிலில் போட்டது தவறு
என்று ஊர் மக்கள் கொந்தளித்து வந்தபோது நாங்கள் அமைதிப்
படுத்தியிருக்காவிட்டால், ஷூட்டிங் நடந்திருக்குமே. ஆகவே
இப்படி ஒரு எஸ்.பி. தேவையா? அவர் தேவையில்லை. வேண்டு
மென்றால், அவரை ஆஃபீஸில் போடுங்கள். சரி, அதுவாவது
பரவாயில்லை. சாமியாரை ஜெயிலில் போட்டாரே, வேறு
இரண்டு சாமியார்களை பலர் தாக்கியிருக்கிறார்கள். புதுக்
கடையிலே ஒரு சாமியார் தாக்கப்பட்டார். புகார்
கொடுத்தார்கள். நடவடிக்கை கிடையாது. இராஜாக்கமங்கலத்
திலே ஒரு சாமியார் தாக்கப்பட்டார். அங்கும் புகார்
கொடுத்தார்கள், நடவடிக்கை கிடைப்பது ஏனென்றால் அவர்
களைத் தாக்கியவர்கள் ஆளும்கட்சிக்காரர்கள். அந்தக் குற்றச்
சாட்டை பகிரங்கமாகச் சொல்கிறேன். இதற்கு விசாரணை
இல்லை; நீதி இல்லை. யாராக இருந்தால் என்ன? நடவடிக்கை
வேண்டாமா? ஆகவே போலீசார் நீதி நியாயத்தை
ஒழுங்காக செய்ய வேண்டும். பொதுமக்கள் அச்சம்,
பயமின்றி நடமாட அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள
வேண்டும். சொத்துக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். தவறு
கள் நடக்கும்போது நீதி வேண்டும். போலீஸ் துறையினர் நேர்
மையாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொள்வார்கள் என்ற நியாய
மான அச்ச உணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும். இப்
பொழுது போலீசைக் கண்டால், பயமே கிடையாது. யாருக்
கும் பயம் கிடையாது. போலீசாரைக் கண்டு பயம் ஏற்பட்டால்
தான் யாரும் ஒழுங்காக இருப்பார்கள். பயம் இல்லாவிட்டால்
எப்படி ஒழுங்காக இருப்பார்கள். அந்த இலாகாவில் உள்ளவர்
கள்மேல் யாருக்கும் பயம் இல்லை. ஏனென்றால், மக்களின்
பெரும் பகுதியினர் நல்லவர்கள். ஒரு பகுதியினர் தீய
சக்திகள், குறும்பு செய்வார்கள். கொள்ளை அடிப்பார்கள்,
பிக்பாக்கெட் அடிப்பார்கள், மது அருந்துவார்கள், எல்லாம்
செய்வார்கள். அவர்களுக்கு அச்ச உணர்வு இருந்தால்தான்
அவர்களை திருத்த முடியும். அவர்களுக்கு அச்ச உணர்வு
இல்லாவிட்டால் திருத்தவே முடியாது. சில சமயங்களிலே
போலீசார் அடித்துவிட்டார்கள் என்று நாம் ஆத்திரப்படுகிறோம்.
இருந்தாலும் திருட்டுக்களை எப்படி தடுப்பது, திருடர்களை
எப்படி பிடிப்பது? நாகர்கோவிலில் இருக்கிற தேசமணி நகரில்,

மாலை நேரத்திலே தாலி செயினை அடித்துக்கொண்டு ஓடுகிறார்
கள்; சில திருடர்கள், அதனால், பெண்கள் வெளியே போவ
தேயில்லை. ஒரு முறை பொதுமக்களே ஒரு திருடனைப் பிடித்
தார்கள். போலீசாரிடம் ஒப்படைத்தார்கள். போலீசார்
வழக்கு தொடரவில்லை. ஏன் என்று கேட்டால், அவன்
தான் திருடவில்லையென்று சொல்கிறான், அந்தப் பக்கமே
போகவில்லை, களவாடவில்லையென்று சொல்கிறான், நாங்கள்
என்ன செய்வது'' என்று சொல்கிறார்கள். இப்படி சொல்வதற்கு
போலீஸ் எதற்கு என்று கேட்கிறேன். அந்த மக்கள் அதைத்
தான் கேட்கிறார்கள். முதலமைச்சருக்குக் கூட புகார்
கொடுத்திருக்கிறார்கள். எனக்குக் கூட தந்தி வந்திருக்கிறது.
8 பவுன் தாலி செயினை பறிகொடுத்திருக்கிறார்கள் ஒரு அம்மா.
அதைப் போல, தாலி செயின் போட்டு நடமாட முடியாத
நிலைமை. காரணம் என்ன? திருடர்களுக்குப் போலீசைப்
கண்டு பயமே இல்லை. பயமில்லாமல் போயிற்று. போலீ
சார் நம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள். நம்மை அடிக்க
மாட்டார்கள். ஜெயிலுக்குப் போனால், நல்ல சாப்பாடு
போட்டு வெளியே அனுப்புவார்கள் என்ற உணர்வு ஏற்பட்டு
விட்ட காரணத்தினால், அரசு தன்னுடைய போக்கை மாற்றிக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அரசு
இதன் மீது தன் கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்........

[முற்பகல் 11-10]

திரு நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' மாண்புமிகு
பெரியவர் சுவாமிதாஸ் அவர்கள் போலீஸ்காரர்கள் இடம்
அவர்கள் யாரையும் அடிப்பதில்லை
மக்களுக்கு பயம் இல்லை. அவர்கள் அடிக்க வேண்டும் என்று
என்று சொல்லுகிறார்களே, அவர்கள் கேட்கிறேன்.
விரும்புகிறீர்களா என்று நான் அடிக்க வேண்டும் என்று

***திரு அ. சுவாமிதாஸ்:** நான் அடிக்க வேண்டும், அவர்களுக்கு பயம்
சொல்லவில்லை, பயம் ஏற்பட வேண்டும், நாம் குழந்தை
இல்லை என்று சொல்கிறேன். இப்பொழுது கட்டுப்படுத்திவிட
களை வளர்க்கும்போது, சில குழந்தைகள் பிடிக்கும். அவர்களிடம்
முடியும். சில குழந்தைகள் முரண்டு தட்டிப் பார்க்க
முதலில் சொல்லிப் பார்க்க வேண்டும். கிள்ளிப்பார்க்க வேண்டும்.
வேண்டும், கேட்கவில்லை என்றால் அப்படித்தான்
கடைசியில் உதைத்துப் பார்க்க வேண்டும். இருக்க வேண்டும்.
இதுவும். போலீஸ்காரர்கள் கண்டிப்பாக தப்பு? போலீஸ்காரர்கள்
மனதில் உள்ளதைச் சொல்வது என்ன சொல்வதில் என்ன பயம்?
கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று பாதுகாப்பு தேவை. நம் உயர்
என்ன தப்பிருக்கிறது? நமக்குப் பாதுகாப்புக் தேவை, அந்த
களுக்கும் உடமைகளுக்கும் கொடுத்திருக்கிறோம். அவர்கள்
பொறுப்பை அவர்களிடம் தான் அவைகளைப் பாதுகாக்க
கண்டிப்பாக இருந்தால்தானே

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 ஏப்ரல் 18

முடியும். போலீஸ்காரர்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும்
என்ற உண்மையை ஏன் சொல்லக் கூடாது? லா அண்டு ஆர்டர்
பாதுகாக்கப்பட வேண்டாமா? எனக்குப் பாதுகாப்பு வேண்டும்
என்று நான் சொன்னால், என்னைப் பாதுகாப்பதற்காக
அவர்கள் கண்டிப்பாக இருந்தேயாக வேண்டும்.
அரசினுடைய கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று இதனால்
கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பெரிய போலீஸ் அதிகாரி என்னிடத்திலே சொல்கிறார்.
சென்னையில் ஒரு ஊர்வலம் வருகிறது.
ஊர்வலம் என்று சொல்ல வரவில்லை. அது யார் நடத்திய
யான ஊர்வலமும் அல்ல. 300, 400 பேர்கள் அது அவ்வளவு அமைதி
டிருந்தார்கள். அந்த ஊர்வலம் வரும்போது, வந்துக்கொண்
கணவன் மனைவி இருவர் ஸ்கூட்டரில் வந்துக் ஒரு இளம்,
கள். ஊர்வலத்திற்காக ஸ்கூட்டரை கொண்டிருந்தார்
தார்கள். அப்பொழுது அந்த ஊர்வலத்தில் நிறுத்தி வைத்திருந்
டிருந்த இளைஞன் ஒருவன் அந்தப் பெண்ணின் வந்து கொண்
கன்னத்தை தொட்டு, தன் கையை அருகே சென்று
னாம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்தமிட்டுக் கொண்டா
அதிகாரிதான் என்னிடத்தில் சொன்னார். அந்த போலீஸ்
னால் பார்த்தும் என்னால் ஒன்றும் இதை என கண்
நான் பார்த்துக் கொண்டிருந்தேன்—இந்த செய்ய முடியவில்லை
போட்டுக் கொண்டிருப்பதால் ஒன்றும் போலீஸ் டிரஸ்
என் மகளாக இருந்திருந்தால் செய்ய இயலவில்லை.
எவறு சொன்னார். அவருடைய ரத்தம் கையை உடைத்திருப்பேன்
திருக்கிறது. ஆனால் அவர் போலீஸ் அப்போது கொதித்
ஒன்றும் செய்ய முடியவில்லை. உடையில் இருந்ததால்
நாட்டில் இருக்கிறது. எதற்காக இப்படிப்பட்ட நிலைமை தமிழ்
மரியாதை கிடையாதா? அந்த போலீஸ் உடை? அதற்கு
அந்த நிலைமை மாற வேண்டும் எப்படி பாதுகாப்பு கிடைக்கும்?
ஆசை என்றுதான் சொல்கிறேனே என்பதுதான் என்னுடைய
காக சொல்லவில்லை. தவிர, குற்றம் சாட்டுவதற்

நமது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்
கருத்தை எல்லாம் சொன்னார்கள். அவர்கள் நல்ல
வீட்டிலே ஆர்டர்லீஸ் போடுவது பற்றி. போலீஸ் அதிகாரிகளுடைய
அதிகாரிகளாக இருப்பவர்கள் உண்மையில் பெரிய
டார்கள். அந்த ஆர்டர்லீஸ் இதையெல்லாம் விரும்ப மாட்
களையெல்லாம் செய்ய அவர்களுடைய வீட்டு வேலை
பேர்கள் இருக்கிறார்கள். வேண்டும். இன்ஸ்பெக்டர் வீட்டில் 2
கிறார்கள். அவர்கள் டி.எஸ்.பி. வீட்டில் 7 பேர்கள் இருக்
கொடுக்க வேண்டும், தான் அங்கே மீன் வாங்கி கொண்டு வந்து
களுடைய மனைவிமார்களுக்கு காய்கறிகள் வாங்க வேண்டும். அவர்
வேண்டும். பிள்ளைகளை துணிகளைத் துவைத்து போட
விட வேண்டும். இப்படி பள்ளிக் கூடத்திற்கு கொண்டு போய்
களைச் செய்கிறார்கள். நிறைய வேலைகளை—வீட்டு வேலை
தன் கணவர் டி.எஸ்.பியாக அந்த டி.எஸ்.பி. யினுடைய மனைவி
என்று நினைத்துக் கொள்கிறார்கள், இருப்பதால் தானும் டி.எஸ்.பி.
அதிகாரம் செய்கிறார்கள்

1979 ஏப்ரல் 18] [திரு. அ. சுவாமிதாஸ்]

என்னிடம் ஒரு வழக்குப் பற்றி ஒரு குறிப்பு வந்தது. மரக்
காணத்தில், அபுக் ரஹ்மான் வீதியில், ஒரு இன்ஸ்பெக்டருடைய
மனைவி, அந்த அம்மாள் அடுத்த வீட்டு பெண்ணை—பெயர்
கையருன்னிசா—அடித்து விட்டார் என்று வழக்கு வந்திருக்கிறது.
அந்தப் பெண் மொகைதீன் என்ற ஆசிரியரின் மனைவி.

எதற்காகத் தெரியுமா, இன்ஸ்பெக்டர் மனைவி அந்த
வழியாகப் போகும்போது அந்தப் பெண், இவர்களைப் பார்த்த
வுடன் எழுந்திருக்காமல் கட்டில் மேல் உட்கார்ந்திருந்தாள்
என்பதற்காக, அந்த இன்ஸ்பெக்டருடைய மனைவியும் அவரது
உறவினரும் சேர்ந்து அந்தப் பெண்ணை அடித்திருக்கிறார்கள்.
"நான் இன்ஸ்பெக்டருடைய மனைவி, என்னைக் கண்டால்
தெருவில் உள்ளவர்கள் எழுந்து மரியாதை செய்கிறார்கள்.
இவள் மட்டும் எழுந்திருக்காமல் உட்கார்ந்திருப்பதா" என்று
சொல்லி அடித்ததாகத் தெரிகிறது. இப்படி நிலைமை இருக்கும்
போது அந்த வீட்டில் வேலை செய்யும் போலீஸ்காரர்கள் என்ன
கதியாவார்கள்? போலீஸ்காரர்களுக்கு போலீஸ் ஸ்டேஷனில்
தான் வேலை—அதிகாரியினுடைய வீட்டில் என்ன வேலை?
அதனால் அதிகாரிகளுக்கு ஆர்டர்லீஸ் என்ற பெயரில் இனிமேலா
வது இந்த செஷனில் இருந்தாவது, போலீஸ்காரர்களை
அவர்கள் வீட்டில் வேலைக்கு போடக் கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(மணியடிக்கப்படுகிறது.)

கடைசியாக என்னுடைய ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்
கிறேன். நமது ஐ.ஜி. அவர்களுக்கு பதவிகள் எக்ஸ்டென்ஷன்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் அப்படி என்ன நாட்டில் பஞ்சம்
வந்துவிட்டது? அவரை அனுப்பி விட்டு அடுத்தப்படியாக இருக்
கும் அதிகாரிக்கு ஐ.ஜி.யாக கொடுக்க வேண்டியதுதானே? அவ
ருடைய காலம் முடிந்துவிட்டது, (அவையில் சிரிப்பு) அதாவது
அவருடைய பதவிக் காலம் முடிந்துவிட்டது, அடுத்த தகுதி
படைத்தவருக்கு அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டும். 3, 4
ஐ.ஜி-க்களைப் போடப் போகிறார்களா? அவருக்கு எதற்காக
எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட வேண்டும்? நான் மட்டும்
கேட்கவில்லை, எல்லோரும் கேட்கிறார்கள், அவருக்கு எக்ஸ்
டென்ஷன் தேவையா என்று? போலீஸ் இலாகாவைப் பொறுத்
தவரையில், வெகு கவனத்தோடுதான் காரியங்களைப் பண்ண
வேண்டும். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்பது இந்த
அரசுக்கும் இருக்கக் கூடாது. அந்த இலாகாவிற்கும் இருக்கக்
கூடாது. அவருடைய காலம் முடிந்துவிட்டது—அவருடைய
காலம் என்றால், நான் பதவிக் காலத்தைத்தான் சொல்கிறேன்.

பதவிக் காலம் முடிந்து போய்விட்டது. எல்லோரும்
அதைத்தான் சொல்கிறார்கள். பொது மக்களும் அதைத்தான்
சொல்கிறார்கள். ஐ.ஜி. யாக அருள் இருந்தபோது
இருந்த விக்பாக்கெட் நடக்குமா? என்று சொல்கிறார்கள்.
இப்போது ரோட்டில் எங்கே பார்த்தாலும் நடைபாதைக்
கடை. நடக்க முடியவில்லை. முதலமைச்சருக்கு

வேண்டியவர் ஒருவர் அந்தக் கடைகளை
அனுமதி கொடுத்து தனியாரிடத்தில் வைப்பதற்கு
பாதித்து கொண்டு இருக்கிறார் என்று தினசரி ரூ. 2,000 சம்
அறிந்ததைச் சொன்னேன். அதிலே சொல்கிறார்கள். நான்
நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உண்மை இருக்கிறது என்ற
பதை முதலமைச்சர் அவர்கள் உண்மையா, இல்லையா என்
நடைபாதையில் நடக்க விசாரித்துப் பார்க்க வேண்டும்.
10 ரூ., 15 ரூ. இருந்தது முடியவில்லை. என்னிடத்திலே ஒரு
கையை வைத்துக் என்று சொன்னால் பாக்கெட்டில் இப்படி
எல்லோரும் அப்படித்தான் கொண்டே போக வேண்டியிருக்கிறது.
போது நடைபாதையில் நடமாட வேண்டியிருக்கிறது. இப்
மேலும் நடைபாதைகளில் பிக்பாக்கெட் அதிகமாக நடக்கிறது.
அனுமதித்து விட்டால், இப்படிக் கடைகளைப் போட
நடைபாதையில் கடைகளைப் அது நெரிசலை அதிகரிக்கும். ஆகவே,
கண்டிப்பாக இருக்க போட விடக் கூடாது. அதில்
விவகாரங்கள் நடக்காமல் வேண்டும். அப்படி இருந்தால் பல
இருக்கும்.

மதுவிலக்குச் சட்டத்தை போலீஸ்காரர்கள் தீவிரமாக
அமல் படுத்த வேண்டும் என்றால், அவர்களுக்கு ஜீப், கார்,
போன்ற வசதிகள் இருக்க வேண்டும். அப்படி இல்லாததால்
இப்போது அவர்கள் அத்தகைய ஆர்வமாக முன்பு போல் வேலை
செய்வது இல்லை. முன்பு எப்படி இருந்தது என்றால் அவர்களே
கைது செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடுவதற்கு வழி இருந்
தது. அதற்கு ரூ. 25, ரூ. 30 வாங்கிவிடுவார்கள். ஸ்டேஷ
னுக்கு வருகிறவர்கள்தான் அவர்களுக்கு பேப்பர், பென்சில்
கார்பன் பேப்பர் வாங்கித் தரவேண்டும். அரசாங்கம் இத்
தகைய பொருள்களை அவர்களுக்கு சப்ளை செய்வது இல்லை.
அவர்கள் செலவிலேயே டாக்சி, போன்றவற்றை சமாளித்து விடு
வார்கள். இப்போது அப்படி செய்ய முடியவில்லை. ஆகவே,
இந்த மதுவிலக்குச் சட்டம் சரியாக அமல் படுத்த வேண்டு
என்றால் ஒவ்வொரு ஸ்டேஷன் எஸ்.ஐ.-க்கும் மோட்டார்
சைக்கிள், சைக்கிள் போன்றவை கொடுக்க வேண்டும்.

இதையெல்லாம் செய்து அந்தத் துறையை இன்னும் நல்ல
முறையில் ஆய்வு செய்து, அதை மாற்றியமைக்க நடவடிக்கை
களை எடுத்து, அவர்கள் அச்சம் பயமின்றி தமிழ்நாடு அரசு
திறமை உடைய காவலர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்ற
நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தி, அந்தத் துறையை முதலமைச்சர்
அவர்கள் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்று மன்றாடி கேட்டுக்
கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்:</u> பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அரசால் இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற
காவல் துறை மானியத்தின் மீதும், தீயணைப்புத் துறை மானி
யத்தின் மீதும் இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னு
கருத்துகளை சொல்ல முனைகிறேன்.

இந்த ஆட்சி வந்த பிறகு 1976-ம் ஆண்டோடு ஒப்பிட்டுப்
பார்த்தால் அதனுடைய புள்ளி விவரங்களே பேசுகிறது. குற்
றங்கள் அதிகமாகி இருக்கிறது, கொலைகள் அதிகமாகி இருக்
கிறது. அந்த விவரத்தைப் படிக்க நேரம் ஆகும் என்று அதிலேயே
ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். 1976-ம் ஆண்டோடு
ஒப்பிட்டுப் பார்த்தால் 1978-ம் ஆண்டு 1979-ம் ஆண்டு ஏறத்
தாழ 10,000-க்கும் அதிகமான குற்றங்கள் அதிகமாகியிருக்
கின்றன என்று அவர்கள் கொடுத்து இருக்கும் புள்ளி விவரங்கள்
பேசுகிறது.

சுருக்கமாக இதைப் பற்றியெல்லாம் சொன்னால் அவர்கள்
தரப்பில் பேசுகிற தம்பி மணிமாறன் அவர்கள் போலீசின்
நடவடிக்கைகளுக்கு, அடக்கு முறைகளுக்குக் காரணம் எதிர்க்
கட்சிக்காரர்களின் தூண்டுதல்தான்; ஆகவே, அடக்கு முறை
எல்லாவற்றிற்கும் காரணமாக ஒரே ஒரு காரணத்தை மாத்திரம்
சொல்லி அவர்கள் இன்று அமர்ந்து இருக்கிறார்கள். என்னைப்
பொறுத்த வரையில் பலாத்காரமாக இந்த ஆட்சியை மாற்
றவோ கவிழ்க்கவோ நாங்கள் நிற்கவில்லை என்பது அவருக்குத்
தெரியும். ஆகவே, பலாத்கார நடவடிக்கையை கம்யூனிஸ்ட்
கட்சி தூண்டி விடாது. நாங்கள் அதை கொள்கை என்று ஒப்புக்
கொண்டுவிட்டால் பகிரங்கமாகச் சொல்லுவோம். நேரு
அவர்கள் இருக்கிறபோதே ஆயுதம் தாங்கி கலகம் செய்வோம்
என்று சொன்னவர்கள் நாங்கள். ஆகவே, இரகசியமாக தூண்டி
விடமாட்டோம் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். சமாதான முறையில் மாற்ற
வேண்டுமென்று தீர்மானித்தபிறகு சமாதான முறையில் நட
வடிக்கைகளை, போராட்டங்களை, வர்க்கக் கிளர்ச்சிகளை,
வர்க்கப் போராட்டங்களை நடத்துவோமே தவிர, ஆயுதம்
தாங்குவது, கல்லெறிவது என்ற அந்தமாதிரி சின்னத்தனமான
காரியங்களில் ஈடுபட மாட்டோம், தூண்டிவிட மாட்டோம்
என்பதை இந்த அவையில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

போலீசின் கொள்கையில் மிகப் பெரிய மாறுதல் வேண்டும்
என்று நாங்கள் சொல்லுகிறோம். அப்படிச் சொல்லுகிறபோது
கீழே உள்ள போலீஸ்காரர்களைப் பற்றி குற்றச்சாட்டு கூறு
வதில்லை. பெரிய போலீஸ் அதிகாரிகள் பெரும்பாலோர் மீது
குற்றச்சாட்டு கூறுவதில்லை. ஆனால் நடுவாந்தரத்தில் இருக்
கும் இன்ஸ்பெக்டர் நிலையிலுள்ள போலீஸ் அதிகாரிகள் மீது
தான் பெருவாரியான தவறுகள் நடக்கின்றன என்று கூறு
கிறோம். அதைச் சரியாக அரசு கொஞ்சம் கண்காணிக்க
வேண்டும்.

[முற்பகல் 11—20.]

இதற்குப் பல்வேறு உதாரணங்களை நான் சொல்ல முடியும். ஒவ்வொரு துறையிலேயும் ஒவ்வொரு உதாரணம் சொல்ல முடியும். ஆகவே முதலில் இந்தச் சொல்லிவிட்டு மானியக் கோரிக்கையின் மீது பொதுவான கருத்துக்களைப் பின்னால் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே என்னுடைய கண் முன்னாலேயே, சிட்டுப் போட்ட குற்றத்திற்காக ஒரு இன்ஸ்பெக்டர் ஒருவரை முழங்காலிலே வைத்து அடித்தார். இது குறித்து நான் நேரடியாக தந்தி மூலம் தெரிவித்திருக்கிறேன். அவர் செய்தது களவுக்குற்றம் அல்ல, வழிப்பறிக் குற்றம் அல்ல சிட்டுப் போட்ட குற்றம்தான். ஆகவே அவரைக் கூட்டிக் கொண்டுபோய் அடிக்கிறார்கள். மூன்று பேர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், முதலில் அடித்ததாகச் சொல்கிறார்கள், பிறகு அடிக்கவில்லை என்று அவர்களிடம் எழுதிக் கையெழுத்து வாங்குகிறார்கள். இப்படிப் பட்ட நிலை இருக்கின்றது. இதில் எல்லாம் அரசாங்கம் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

அடுத்து ஒரு அரசாங்கத்தின் மேல் மக்கள் நம்பிக்கை வைப்பது அதனுடைய போலீஸ் கொள்கை எப்படி இருக் கிறதோ அதற்கேற்பத்தான் இருக்கும். அதாவது போலீஸ் எப்படி இருக்கிறதோ அதை வைத்துத்தான் மக்கள் அரசாங் கத்தை எடை போடுவார்கள். அடக்குமுறை அதிகமானால் மக்களின் மத்தியிலே எதிர்ப்பு வரும் என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சாதாரணமாக ஒரு கிராமத்திலே ஒருவன் வாய்க்கு வந்தபடி பேசுகிறான் என்று வைத்துக்கொண்டால் அதைப் பெரிதாக யாரும் கருதுவதில்லை. ஆனால் அடித்துவிட்டான் என்றால் என்னதான் இருந்தாலும் கை நீட்டி இருக்கக் கூடாது என்றுதான் சொல்வார்கள். ஆகவே அடக்குமுறையை அரசாங்கம் கையாளக்கூடாது. அதனால் மக்கள் மத்தியிலே எதிர்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து சூதாட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நெற்குன்றத்திலே பூலாங்குறிச்சியிலே போலீஸ் அவுட் போஸ்ட் இருக்கிறது. அங்கே வாடிக்கையாக மதமைக்காரன் சூதாட்டம் நடத்துகிறான். அப்போது போட்டிக்கு இன்னொருவன் வந்து அவனும் நடத்துகிறான். மகமைக்காரன் போலீஸைத் தாண்டிவிட்டு சூதாட்டம் நடத்துகின்ற இன்னொருவனைப் பிடித்து வழக்கு பதிவு செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதனால் ஊருக்குள் கலகம் வருகிறது. ஆகவே இந்த மாதிரி பிரச்சினைகளை எல்லாம் கொஞ்சம் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும்.

பெரிய மாற்றம் கொண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எதிர்க்கட்சிக்காரர்கள்தான் வந்துவிட்டோம். ஆனால் என்று சொல்வது கலவரங்களைத் தூண்டிவிடுகிறார்கள் விரும்புகிறேன். சரிதானா என்று கேட்டுக்கொள்ள

இடங்களிலே வடிக்கப் அடுத்து சாராயம் பெருவாரியான மாமூல் 250 படுகிறது. அங்கே போலீஸ் அதிகாரிகளுக்கு மாமூல் கொடுக்கா ரூபாய் கொடுக்கப்படுகிறது. அப்படி போடப்படுகிறது. இந்த தவர்கள் மீது மட்டும் வழக்கு தெரிந்து திருப்பூர் மாஜிஸ்ட் நிலைமை மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தள்ளுபடி செய்துவிடுகிறார். ரேட் அந்தமாதிரி வழக்குகளைத்

இருந்தாலும், சூதாட்ட இந்தமாதிரி சாராய வழக்காக வழக்குகள் போடப்படு வழக்காக இருந்தாலும் எத்தனை கண்காணிப்பதற்கு ஓர் அமைப்பு கின்றன என்பதை எல்லாம் இருந்தால் பெரிய இருக்கிறதா? அப்படி அந்த அமைப்பு இன்ஸ்பெக்டர் அதிகாரிகள், எஸ். பி., இருக்கிறார்களா என்று கண்காணிக்க போலீஸ் அந்தத் தகவலை சரியான முறையில் வருகிறது என்றால் இன்ஸ்பெக்டர் முடியும். ஒரு தந்தி யார்? எஸ். பி., கொடுக்கப்படுகின்றன. மேலே கொடுப்பவர்கள் தகவல்கள் வருகிறபோது அவர்கள் என்ன மூலமாகத்தானே, அந்தத் பற்றி ஊழியர்களைப் பாது அவர்கள் இலாக்காவைப் இலாக்கா விடுகிறார்கள். செய்கிறார்கள்? தங்கள் மறைத்து காக்கின்ற வகையிலே அவற்றை

ஒரு எஸ். பி. இருக்கி ஈஸ்ட் ராம்நாட் டிஸ்ட்ரிக்டுக்கு அங்கே இருக்கின்ற ஆனால் றார். அவர் அப்பாவி. இருக்கிறார். அவர்கள் இன்ஸ்பெக்டர்தான் எஸ். பி. போன்று பற்றி முறையான எல்லாம் இதுபோன்ற தவறுகளைப் நடக்கக்கூடிய பல்வேறு வகையில் தகவல் கொடுக்காமல் அங்கே தெரிவிப்பதில்லை. பொதுவாக சம்பவங்களைப் பற்றியும் சொல்வதாக நினைக்கக்கூடாது. அரசாங்கத்தைப் பற்றி தப்பு

அடுத்து எஸ். பி. டிப்பார்ட்மெண்டுக்கும், சி.அய்.டி. டிப்பார்ட் மெண்டுக்கும் சாம்ரமைஸ் பண்ணிக்கொள்கிறார்கள். அதாவது அவர்கள் தகவல்களை அனுப்பும்போது ஒப்பிட்டுப் பார்த்துக்கொள் கிறார்கள். இரண்டுபேர்கள் அனுப்புகின்ற தகவல்களில் வேறு பாடு வந்துவிடக்கூடாது என்று இரண்டுபேரும் சேர்ந்துக் கொண்டு ஒரேமாதிரி அனுப்புகிறார்கள். ஆகவே, இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் மக்கள் மத்தியிலே கலந்து பேசினால் உண்மையான விவரங்கள் தெரியும். உண்மையான தகவல் அனுப்பப்படாத காரணத்தால் அது முதலமைச்சருக்கும் தெரியாது, பெரிய போலீஸ் அதிகாரிக்கும் தெரியாது.

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 ஏப்ரல் 18

என்ன இருந்தாலும் வக்கீல் வக்கீலை 'டிபென்ட்'
செய்கிறார்கள். ஓர்க்கர்ஸ் ஓர்க்கர்ஸை டிபென்ட் செய்
கிறார்கள். இந்தமாதிரி போக்கு இந்தக் காவல் துறையிலும்
இருக்கிறது. இதை எப்படிக் களைவது என்பதுதான் பிரச்னை.
உதாரணத்திற்குச் சொல்கிறேன்— ஒரு இன்ஸ்பெக்ஷனுக்கு கூப்
பிடுங்கள். நீங்களே யாரையாவது 10 பேர்களைக் கூப்பிடுங்கள்.
3 மாத காலத்தில் எத்தனை பொய் கேஸ்களைப் போட்டிருக்
கிறார்கள் என்பதைச் சொல்ல முடியும். டி. ஐ. ஜி. ஏதோ
இன்ஸ்பெக்ஷனுக்கு வருகிறார். பிறகு போய்விடுகிறார். அது
இன்ஸ்பெக்ஷன் அல்ல. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்
கப்பட்டிருகிக்கிற எங்களை வைத்துக்கொண்டு இஸ்ன்பெக்ஷன்
செய்தால் நாங்கள் அவர்களுக்கு முன்னால் எத்தனை பொய்
கேஸ்களை 3 மாத காலத்தில் போட்டார்கள், என்னென்ன
தவறுகளைப் புரிந்து இருக்கிறார்கள் என்று சொல்லமுடியும்.
இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால்தான் அந்த
போலீஸ் இலாகாவைத் திருத்த முடியும். இல்லை என்றால்
திருத்த முடியாது. வேறு உதாரணத்தையும் சொல்வேன்.
போலீஸ் இலாக்காவில் ஏற்படுகிற தவறுகளுக்கு என்ன
காரணம்? இந்த ஆட்சி வந்த பிறகு 1978-ஆம் ஆண்டில்
அவர்கள் சொல்வது 12 இடங்களில் சுட்டிருக்கிறார்கள்.
14 பேர்களைக் கொன்று இருக்கிறார்கள், என்பதை
யெல்லாம் அறிக்கையில் பார்த்தேன். கேட்டால் பக்ஷாட்
(ஊமைக் குத்து) செய்தோம் என்று சொல்லுகிறார்கள்.
ஆனால், 5 பேர்களைக் கொன்றிருக்கிறார்கள். இதையெல்
லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

இன்னொரு உதாரணத்தையும் சொல்கிறேன்: இப்போது
தஞ்சையில் 3 போகத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறார்கள்.
ராமநாதபுரம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் தண்ணீர்
கிடையாது. வரட்சிப் பகுதிகள். அந்தக் காவிரி தண்ணீரை
எடுத்து ராமநாதபுரம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு
தண்ணீர் கொடுக்கக் கூடாதா? அவர்கள் சும்மா விடுவார்களா?
விடமாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் கடலாடிப்
பகுதியில் குடிக்கத் தண்ணீர் கிடையாது. காவிரி தண்ணீரை
அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால் அவர்கள்
ஒத்துக்கொள்வார்களா? நிச்சயமாக எதிர்ப்பார்கள்.

அடுத்து இந்த அம்புரோஸ் கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து
விட்டார்கள். அதிலே துப்பாக்கிச் சூடு நியாயம் என்று
தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். நொச்சி, ஓட்டப்பட்டி, வேட
சந்தூர் ஆகிய இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி
முதல் அமைச்சர் அவர்களி[illegible] சொல்லியிருக்கிறேன். மடைக்
கல் உடைந்ததால்தான் அங்[illegible] மக்களுக்குக் கோபம்
வந்தது. அவர்களுக்குக் கோபம் வருவதற்கு யார் காரணம்?
இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். துப்பாக்கிச்
சூடு நியாயம் என்று தீர்ப்பு கூறுகிறபோது

1979 ஏப்ரல் 18] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

அந்த மக்களுக்குக் கோபம் வருகிறது. யார் இந்தப் போக்கை
உருவாக்கினார்கள், என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.
ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?
அப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்காமல் போலீஸ் மீது
கல் எறிந்தார்கள் என்பதற்காகத் துப்பாக்கி சூடு வந்திருக்
கிறது என்று சொன்னால் அது சரியல்ல. நாளைக்கே
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரலாம்.

அடுத்து, வாசைகுளம் துப்பாக்கிச் சூடு பற்றி. போலீஸ்
வேலம்மாள் என்பவரை சுட்டது. அந்த அம்மாளுடைய
சொந்த சகோதரி போய் அந்தப் பாக்கியம்மாளை தூக்குகிற
போது அந்[illegible] அம்மையாரும் சுடப்பட்டார்கள். இந்த
மாதிரியான [illegible]சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று
சொல்கிறேன். [illegible]வ, போலீஸ் துப்பாக்கிச் சூடு சம்பவம்
அதிகமாக இருக்கிறது. அதனால் அங்கே உள்ள மக்களுக்குக்
கோபம் வருமா வராதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். கொஞ்சம் தங்கள் கட்சிக்காரர்களை அடித்தால்
கோபம் வரும்.

[முற்பகல் 11—30]

சொந்தக்காரர்கள் என்பது தனிப்பட்ட முறையில்
மட்டுமல்ல, பாலிட்டிக்ஸில் கூட குடும்ப உணர்வு இருக்கிறது.
இல்லையென்று சொல்லிவிட முடியாது. குடும்ப முறைகள்
எல்லா இடத்திலும் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கும் சண்டைவந்தாலும் இந்த உணர்வு ஏற்படத்தான்
செய்யும், அந்த முறையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த
ஒருவர் தாக்கப்படுகிறார் என்றால் நிச்சயமாக வேதனை
வரத்தான் செய்யும். கே. டி. கே. தாக்கப்படுகிறார்கள்
என்றால்; அதிலும் ஒரு பெரிய தொழிற்சங்க தலைவர்
தாக்கப்படுகிறார், கோபு தாக்கப்படுகிறார் என்ற செய்தியை
கேட்டும்போது, எந்த அணியும் சும்மா இராது. இல்லை,
அடித்தது சரிதான் என்றோ அல்ல[illegible] ஏதோ
நடந்துவிட்டது என்று சும்மா இருக்க முடியுமா? ஆகவே
தான் இப்படிப்பட்ட [illegible]மைகளையெல்லாம் தவிர்க்க
முயற்சிகள் எடுக்கவேண்டும். இதைப்பற்றி அரசு சிந்திக்க
வேண்டும்.

முருகையன் கொலை. இதற்கு என்ன காரணம் என்கின்ற
ஆராய்ச்சிக்குள் நான் போகவில்லை. இதுபோன்ற கொலைக்
கேஸ்களில் சம்பந்தப்பட்[illegible] நூற்றுக் கணக்கானவர்
களை நான் பார்த்திருக்கி[illegible] சிறைச்சாலையில் பல
ஆண்டுகளாக இருந்திருக்கின்ற காரணத்தால், இதை நான் நன்கு
தெரிந்திருக்கிறேன். ஒருவர் கொலை செய்துவிட்டு இன்னொரு
வரை ஒத்துக்கொள்ளச் சொல்வார்கள். உனக்காகத்தான்
இங்கே வந்தேன், இதை நீ ஒத்துக்கொள் என்று சொல்லக்

கூடிய நிலைமை எல்லாம் இருக்கிறது. ஆளுக்காக இப்படி
ஒத்துக்கொள்வதும் உண்டு. காசு கொடுத்து ஒத்துக்கொள்ளச்
சொல்வதும் உண்டு. இப்படிப்பட்ட நிலையில், இதை
முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால்,
நாங்கள் அரசியல் காரணம் என்று சொல்வோம். அவர்கள்
தனிப்பட்ட காரணம் என்று சொல்லலாம். அதற்குள் நான்
போக விரும்பவில்லை. ஏற்பட்டிருக்கின்ற கத்திக் குத்துக்களைப்
பார்த்தால், 25 குத்து முன்னால், 7 குத்து பின்னால், ஒரு
குத்து தலையில். இத்தனையும் பார்த்த பின்னால், ஒருவர்
தான் இந்தக் கொலையைச் செய்தார் என்றால் சந்தேகம்
வருமா வராதா? கீழ்கோர்டில் ஒத்துக்கொண்டதைப் போல்
மேல் கோர்ட்டில் சொல்லவில்லை. ஆகவே, திட்டமிட்டு
தான் இது செய்யப்பட்டது என்ற சந்தேகம் [illegible] அந்த வட்டாரத்
திலுள்ள மக்களுக்கு வருமா வராதா, [illegible] செய்து இதை
யெல்லாம் யோசித்துப் பாருங்கள். திட்டமிட்டுத்தான் இந்த
செய்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, முதலமைச்சர்
அவர்களோ, அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமோ இதற்கு திட்டமிட்டது என்று
சொல்வதாக நினைத்துக்கொண்டு இதில் டிபண்ட்பண்ணக்கூடாது
ஆகவே, இதில சம்மந்தப்பட்டவர் ஒருவர்தான் என்று
சொல்லி தப்பித்துக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. போலீஸ்
ரிப்போர்ட் ஒருவர்தான் என்று வந்தால் அதை மட்டும்
நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. இதேயெல்லாம்யோசிக்க வேண்டும்,
இதுஒருநிகழ்ச்சி,மட்டுமல்ல, பல்வேறுநிகழ்ச்சிகளை நான் ஆதாரத்
துடன் காட்ட முடியும். கொலை செய்வது எப்படி
ஆதீர்யத்திற்காகக் கொலை நடப்பதும் உண்டு, அரசியல்
காரணமாகவும் கொலைகள் நடப்பது உண்டு. இவையெல்லாம்
நடப்பதற்குக் காரணம் என்ன? போலீசார் [illegible]
பார்த்தால், எங்களுக்கு அடிக்கிற உரிமை இன்னும் [illegible]
வேண்டும் என்று இந்த அறிக்கையின் மூலமாகக் கேட்டிருக்
கிறார்கள். இப்போது குற்றங்கள் எல்லாம் அறிவுத்துறையின்
மூலமாக புலன் விசாரணை செய்கிறார்களாம். அறிவார்ந்த
துறையின் [illegible]மாக விசாரணை செய்கின்ற காரணத்தால்
நாங்கள் அதிகமாக வழக்குகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை
என்று இங்கு அறிக்கையாக சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படி
யென்றால் என்ன பொருள், இன்னும் கொஞ்சம் அடிக்க
விடுங்கள் என்று மறைமுகமாக அடிக்க அனுமதி தாருங்கள்
என்று கேட்கிறார்கள். நான் சொல்லிக்கொள்வது இப்போது
இருக்கின்ற அதிகாரங்களே போதும். அரசாங்கத்தைக் காப்
பாற்றிக்கொள்வதற்காகத்தான் போலீஸ் இருக்கிறது. அது
காகத்தான் போலீஸ், [illegible]காகத்தான் ஜெயில்,
அதற்காகத்தான் நீதிமன்றமும். இந்த மூன்றும் மக்களுக்கு
சாதகமாக இருக்கிறதுஎன்ற நம்பிக்கை மக்களுக்கு வரவேண்டும்.
இல்லையென்றால் மக்களுக்கு கோபம்தான் வரும். ஒரு [illegible]
மாறுவது கூட போலீஸ் கையில் தான் இருக்கிறது. போலீஸ்
நினைத்தால் ஒரு ஆட்சியையே மாற்றிவிடலாம். இன்று

ஊர் ஊருக்கு கொஞ்சம் அடியுங்கள், ஏற்கனவே மக்கள்
சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதோடு இன்னும்
கொஞ்சம் வழக்குகளைப் போடுங்கள். கொஞ்சம் திட்டமிட்டு
அடியுங்கள். அவையெல்லாம் எதிர்கட்சிகளுக்கு சாதகம் தான்.
மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்
போலீஸ் நடவடிக்கைகள் அமைய வேண்டும். அதற்கு
தகுந்த ஏற்பாடுகளை செய்யுங்கள். அதற்கான முறையில்
போலீசை ஒழுங்குபடுத்த முயற்சி எடுக்கவேண்டும்.

லஞ்சம் என்று எடுத்துக்கொண்டால், திருடுகிற சாமான்
களில கூட பங்கு போட்டுக்கொள்கிறார்கள். அப்படிப்
பட்டவர்களும் இருக்கிறார்கள். செட்டிநாட்டில் நடைபெற்ற
மூன்று கொள்ளைகள். இது சம்பந்தமாக சிலரிடம் அக்கௌண்
டுகளைப் பார்த்தபோது 400, 500 பவுன் நகைகள் இருக்கிறது.
இன்ஸ்பெக்டர் வந்து பார்க்கிறபோது, இதில் நீங்க கொஞ்சம்
எடுத்துக் கொள்ளுங்கள் எஜமான் என்று சொல்லக்கூடிய
நிலைமையில்; 100 பவுன் என்றிருந்தாலும் 24 பவுன் என்று
தான் கணக்கைப் போட்டு காட்டுவார்கள். இதற்கு ஒத்துக்
கொள்ளவில்லையென்றால், இவ்வளவு பவுன் நகை இருப்பதாக்
வழக்கு போட்டுவிடுவோம் என்று சொல்லி மிரட்டுகிறார்கள்.
இந்த ஆட்சியில் தான் நடக்கிறது.

கோயம்புத்தூரில் களவு போனது, திருப்பத்தூரில்
பிடிக்கப்படுகிறது. 37 ஆயிரம் ரூபாய் பணம் கிடைக்கிறது.
அதில் 17 ஆயிரத்தை கொடுத்துவிட்டு, 20 ஆயிரத்தை பங்கு
வைத்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்ற [illegible]கத்தை இதற்காக குறை கூறவில்லை......

ஏனென்று கேட்டால், முதலமைச்சர் இலாகாவிலே போலீஸ்
தலையிடக்கூடாது. ஆனால், கொஞ்ச பேர்கள் தலையிட்டு
விளையாடுகிறார்கள். அவர்களைப்பற்றி பேசவில்லை. உண்டா
இல்லையா என்று கேட்டால், அண்ணா தி.மு.க.-வினர் தலையீடு
இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், சிலர் தலையிட்டிருக்
கிறார்கள். அந்தத் தலையீட்டைக் கேட்க மாட்டார்கள். இது
எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும். ஒரு ஜனநாயக மரபிலே
போலீஸ் சுடுவதை டிபெண்ட் செய்கின்ற நிலைமை ஏற்படு
மானால், நிச்சயமாக தமிழ்நாட்டிலே போலீஸ் நிர்வாகம்
கெடும். அதை மாற்றியாக வேண்டும்.

யாராக இருந்தாலும், நிர்வாகம் நல்லதாக இருக்க வேண்
டும். இப்போது இருக்கின்ற ஐ.ஜி.-யை மூன்றாகப் பிரிப்பது
என்பது நல்லதுதான். காரியங்கள் நல்லமுறையிலே ஆற்ற
முடியும். எப்போதுமே இருவராக இருந்தால், சாட்சி சொல்
லக்கூட முடியாது. கூட்டாக இருந்தால்தான் நல்லது. எனவே,
இப்படி 3 பேர்கள் இருப்பது நல்லது. அந்த யோசனைப்படி
ஏற்கனவே 3 பேர்கள் போட்டோம். வேகமாக வேலைகள்

நடப்பதற்கு வசதியாக இருக்கும். இந்த 3 பேர்களுக்கும் ஒரு
டைரக்டர் போடுவதும் நல்லதுதான். இதனால் கொஞ்சம்
வேகமாக வேலைகள் செய்து, படிப்படியாக முறையாகக்
கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். அப்படிக் கொண்டு
வந்து இந்த இலாகாவை தூய்மைப்படுத்த வேண்டும். அதை
முதலில் செய்ய வேண்டும்.

இப்போது 10,000 போலீசை அதிகமாக சேர்க்கப் போவதாக
கொள்கை விளக்கத்திலே அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு
பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆனால், என்னைக் கேட்
டால், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற போலீசே போதும்,
மேலும் 10,000 போலீசார்களைச் சேர்க்கவேண்டாம்.
1974-75-லே 26 கோடி ரூபாய் காவல்துறைக்கு மானியமாக
இருந்தது. இப்போது 38 கோடியாக இருக்கிறது. இது காவல்
துறைக்குச் சம்பளமா, நவீனக் கருவிகள் வாங்குவதற்காக
அல்லது வேறு வகைக்கான செலவுக்கா என்ற விவரம் தெரிய
வில்லை. காரணம், நான் பூராவையும் படிக்கவில்லை. 26
கோடியிலிருந்து 38 கோடி ரூபாய்க்கு கடந்த 4 ஆண்டு காலத்
தில் காவல்துறைக்கு கொடுக்கப்பட்டிருப்பதை நான் வர
வேற்கிறேன். ஆனால், மேலும் போலீசின் எண்ணிக்கையை
அதிகப்படுத்துவது, மேலும் 10,000 போலீசைப் போடுவது என்று
சொன்னால், இன்றைக்கு தேவைதானா என்பதைப் பார்க்க
வேண்டும். அது சரியல்ல. போலீஸ் ராஜ்யமாகிவிடும். தமிழக
மக்களிடையே குழப்பமான ஒரு நிலைமையும், அவ நம்பிக்கையும்
ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே ஆர்டர்லிகளைப் பற்றிச் சொன்னேன்.
ஜெயிலிலேயும் ஆர்டர்லிகள் போடுகிறார்கள். இந்த ஆர்டர்லி
போடுவதிலே பல கணக்குகள் இருக்கின்றது. முதல் வகுப்புக்
கைதியாக இருந்தால்கூட, ஆர்டர்லி உண்டு. இன்னும் சில
ருக்கு இரண்டு ஆர்டர்லிகளும் தரப்படுகின்றது. இந்த
ஆர்டர்லிகள் வேண்டாம் என்பதுபற்றி முதல் அமைச்சர்
அவர்கள் அறிவித்து விடுவார்கள் என்று நினைக்கிறேன்.
ஆர்டர்லிகள் வீட்டுச் சாமான்கள் வாங்குகிறார்கள். அதற்கு
ஆள் தேவையில்லை. ஆகவே, இந்த அறிவிப்பைச் செய்தாக
வேண்டும். எதற்காகக் கூறுகிறேன என்பதைச் சிந்திக்க
வேண்டும். அதிகாரிகளேகூட வேண்டாம்என்று எழுதிவிடலாம்.
தெளிவாக இதிலே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

போலீசுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும். சைக்
கிளில் இரண்டு பேர்கள் போகலாம் என்று அறிவித்தது வர
வேற்கத்தக்கது. ஆனால், சைக்கிளில் லைட் இல்லாமல் யார்
வருவார்கள் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். லைட்
இல்லாமல் போனால், அல்லது டைனமோ லைட் இல்லை என்று
சொன்னால், அதுவும் 26-ம் தேதி ஆகிவிட்டால், போலீசிடம்
காசு இல்லை, பிடிக்கிறார்கள். காரணம், அரிசி வாங்க வேண்
டும். அப்பேர்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருப்பன்றத்
பார்க்கிறோம். அதனால்தான் அவர்கள் சம்பளத்தை எல்லாம்
கொஞ்சம் உயர்த்திக் கொடுங்கள் என்று சொல்கிறோம்.

மத்தியானத்தில் சட்டமன்றம் நடக்கும்போது, மன்ற உறுப்
பினர்களுக்கு ஸ்வீட், காரம், காப்பி கொடுக்கிறார்கள்.
ஆனால் காவல் துறையினருக்கு ஆளுக்கு ஒரு காப்பி ஒட்டுமட்டும்
கொடுத்து, அதற்கு அவர்களுக்கு வெறும் காபியோ, பாலோ
கொடுக்கிறார்கள். அந்தப் பாலும், நமக்குக் கொடுக்கும்
பால் வேறு, அவர்களுக்குக் கொடுக்கும் பால் வேறு. அதனால்
வயிற்றுப்போக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.
எனவே, அவர்களுக்கு சம்பளம் கொடுக்காவிட்டாலும், இந்த
சாப்பாடு விஷயத்திலாவது கொஞ்சம் வசதி செய்து கொடுக்க
வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால், நாங்களும் சாப்
பிட வரவில்லை. அவர்களுக்கும் தயவுசெய்து கொடுத்தாக
வேண்டும். எதிரிலே அவர்கள் இருந்துகொண்டு, நாம் சாப்பிட்
டாலும் அதனால் வயிற்று வலி வந்துவிடும். இப்படி அவர்களைப்
பார்க்க வைத்துச் சாப்பிடுவது நல்லதல்ல.

[முற்பகல் 11-40]

இந்த நோக்கத்தோடு சொல்லுகிறேன். அவர்களுக்குச் சம்
பளத்தைக் கூட்ட வேண்டும். வேலை நேரத்தை ஒழுங்கு
படுத்த வேண்டும். இப்போது சங்கம் வைக்கிற கோரிக்கை
வந்திருக்கிறது. ஏன் சங்கம் வைக்கிற கோரிக்கை வருகிறது?
இவற்றையெல்லாம் கொடுத்துவிட்டால் வருமா? வர்க்கபேத
மற்ற சமுதாயத்தில்தான் இருக்காது. இந்த மாதிரி கோரிக்
கைகளை நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் துறையிலே அடிப்படையான மாறுதல்களைச்
செய்ய அதுபற்றி விவாதித்து என்னென்ன குறைகள் இருக்
கின்றன என்று கண்டறிந்து களைந்தெறிய வேண்டும். போலீஸ்
இலாகாவின் ஆள் மட்டும் கண்காணிக்காமல் பொதுமக்களும்
கண்காணிக்கும் முறையில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கண்
காணிக்கும் முறையில் ஒழுங்குபடுத்த, உறுதியான நடவடிக்கை
எடுக்கக்கூடிய, தைரியமாக நடவடிக்கை எடுக்கக்கூடிய மன
நிலையை போலீசாருக்கு உருவாக்க, ஜனநாயகப் பின்
னணியைக் கொண்டுவர, ஊழல் இல்லாத அமைப்பை உரு
வாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீஸ் இலாகாவில்
லஞ்சம் அதிகமாக இருக்கிறது. அதைக் களைந்தெறிய நட
வடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கா
விட்டால் நாடு கேவலமான பாதைக்குப் போகும், தமிழ்
நாட்டில் போலீஸ் இலாகாவின் பெயர் கெட்டுவிடும் என்று
சொல்லி அதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, போலீஸ் துறை மானியத்தில் என்னுடைய கருத்
துக்களை இணைத்துக்கொள்கிறேன். இன்று காவல் துறை
யைப்பற்றி பல்வேறு விதத்தில் விமர்சனங்கள் நடைபெறு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 1

கின்றன. இன்றைக்கு மட்டுமல்லாமல் பல்லாண்டுகளாக நடை
பெற்றுக்கொண்டு வருகிறது. அதிலிருந்து நாம் தெரிந்து
கொள்வது எந்த ஆட்சியாக இருந்தாலும் போலீஸ் துறையைப்
பற்றி இத்தகைய கடுமையான விமர்சனம் செய்யக்கூடிய
அளவுக்குத்தான் இந்தத் துறை நடந்து கொண்டிருக்கிறது
என்ற அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது. இதை எந்த
அளவுக்கு அந்தத் துறை போக்கிக் கொள்ளுகிறதோ அந்த
அளவுக்கு நாட்டுக்கும் நல்லது. அந்தத் துறைக்கும் நல்லது
என்பதை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்.

இந்தத் துறையை நிர்வகிக்கக்கூடியவர்களுக்கு என்ன
பொறுப்பு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தத் துறையில்
எல்லா இடங்களிலும் ஊழல் மலிந்துவிட்டது என்று சொல்லப்
படுகிற குற்றச்சாட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காகச்
சொல்லப்படுகிற குற்றச்சாட்டு அல்ல. அன்றைக்கும் சொல்
லப்பட்டது. இன்றைக்கும் சொல்லப்படுகிறது என்பதைத்
தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்து
அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்களே குற்றம் செய்கிறவர்களுக்குத் துணை
வர்களாக ஊக்கம் அளிப்பவர்களாக ஆக்கம் அளிப்பவர்
களாக இருக்கிறார்கள் என்பது அப்பட்டமான உண்மையாகும்.
இதனை எந்த விதத்திலும் மறைத்துவிட முடியாது. உதா
ரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு நாட்டிலே
இருக்கிற மக்கள் சாராயம், மது வகைகளைச் சாப்பிடக்
கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் மிக்க அக்கரையாகச்
இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக
சட்டத்தைக் கடுமையாக்கி நிறைவேற்றியிருக்கிறார்கள்
பாராட்டுகிறோம்.

அதே நேரத்தில் இன்றைக்கு சமுதாயத்தின் ஒழுக்கத்
தையே பொருளாதாரத்தையே பாதிக்கும் வகையில் வேறு
பல காரியங்கள் நாட்டில் நடைபெறுகின்றன. அதை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.
உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சென்னையில்
கிளப்புகள் என்ற பெயரால் ஏறக்குறைய 300 கிளப்புகள்
நடக்கின்றன, 300 கிளப்புகள் யார் பெயரில் எப்படி நடை
பெறுகிறது? யார் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்? அது முத
லமைச்சருக்குத் தெரியாதா? கேள்வி கேட்டால் — தெரியாது
என்று சொன்னாலும் அவர் மீது குற்றம் வரும், தெரியும்
என்று சொன்னாலும் குற்றம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.
தெரிந்திருந்தால் ஏன் அவர்களை விட்டு வைத்திருக்கிறார்கள்?
தெரியாது என்றால் இது கூடத் தெரியாமல் என்ன நிர்வாகத்தை
நடத்திக்கொண்டிருக்கிறார்கள்? என்ற கேள்வி எழுகிறது.

1979 ஏப்ரல் 18] [திரு. எம். ஏ. லத்தீப்]

நடைபெற்றுக்கொண்டிருந்தன.
கடந்த காலத்தில் கிளப்புகள் உதயசூரியன் மன்றம்
கலைஞர் மன்றம், நாவலர் மன்றம், அன்று நடத்திக்
என்ற போர்டுகளைப் போட்டு அவர்கள் பார்ப்போமானால் அந்த
கொண்டு வந்தார்கள். இன்றைக்குப் மன்றம் என்று போட்டு
போர்டுகள் மாறி எம்.ஜி.ஆர். மாட்டி வைத்திருக்
எம்.ஜி. ஆரின் ஆள் உயர போட்டோவை மிகப் பெரிய
கிறார்கள் சாதாரண போட்டோ அல்ல, பார்த்திருக்க
போட்டோ. முதலமைச்சர் அவர்களே கூடப் அண்ணா
மாட்டார்கள். அவ்வளவு பெரிய போட்டோ. அந்த
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அது யார்
கிளப்புகள் நடத்துவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதை நான்
என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆனால் நான் ஒரு
விளக்கிச் சொல்லத் தேவையில்லை. * * * என்கிற
உண்மையைச் சொல்கிறேன். *பாராளுமன்ற
ஒருவர் நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் அவர்களிடத்திலே
உறுப்பினர் * * * * * *
சமையல்காரராக வேலை பார்க்கக்கூடியவர் அந்த
என்பவர் எவ்வளவு கிளப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார்
ஏறக்குறைய 20 கிளப்புகளை நடத்திக் கொண்டிருக்கிறார்,
ஒரு நாளைக்கு அவருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்
றால் ஒரு டேபிளிலே 5 ஆயிரம் ரூபாய், யாருக்கு லாபம் வந்
தாலும் யாருக்கு நட்டம் வந்தாலும் அவருக்கு கொடுத்தாக
வேண்டும். அந்த * * * என்பவருக்கு 2
ஆயிரம் 3 ஆயிரம் கொடுத்துவிட வேண்டும். ஒரு நாளைக்கு
அவருக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வருமானம் வரு
கிறது. முதலமைச்சருக்குக் கூட அவ்வளவு கிடைக்குமா?
அப்படிப்பட்ட வருமானம் யாருக்காவது கிடைக்குமா? மக்கள்
இன்றைக்கு பேசிக் கொள்கிறார்கள் * * *
என்பவர் இப்படி நடத்திக் கொண்டிருக்கிறார் என்று
மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.......

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப்
அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள், குற்றச்சாட்டைக்
கூறக்கூடாது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் இந்த
அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றி அவர் பெயரைச்
சொல்லி அவர் இப்படிச் செய்கிறார் என்று குற்றம் சுமத்து
கிறார். அவர் அவையில் இல்லாத காரணத்தினால் இந்த
மன்றத்திலே அவர் அதை மறுக்கவோ அல்லது அதற்கு பதில்
சொல்லவோ வாய்ப்பு இல்லாத காரணத்தினால் அதைச்
சொல்லலாமா? பண்பட்ட திறமையான மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[1979 ஏப்ரல் 18

திரு. எம். ஏ. லத்தீப் : நான் தெரிந்துதான் ஆராய்ந்து
விசாரித்து தான் சொல்லியிருக்கிறேன். அதிலே உண்
மையிருக்கிறது, சொல்கிறேன், குற்றம் சாட்டப்படுகிறது. முதல்
அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப்
அவர்கள் பேசுகின்றபோது சொன்ன அந்த கிளப்புகள் என்பது
எல்லாம் இருக்கட்டும், ஆனால் பெயர் குறிப்பிட்டுச் சொன்ன
* * * * * *
களை எல்லாம் சபைக் குறிப்பிலிருந்தும் என்ற பெயர்
விருந்தும் நீக்கிவிட வேண்டும் என்று பத்திரிகை குறிப்பி
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்தமாதிரி நீக்கிக்கொண்டே
இருப்பீர்களானால் குற்றங்கள் களையப்படப் போவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீக்குவதைப்
பற்றி தாங்கள் காமென்ட் அடிக்க வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : நாட்டிலே நடக்கிறதை நான்
சொல்லிக் கொண்டிருக்கிறேன், அதை அகற்றுவது என்றால்
என்ன அர்த்தம், அகற்றுகிறீர்கள் என்றால் அது என்ன
அன்பார்லிமெண்டரியா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அன் பார்லி
மெண்டரியாக இருந்தால் தான் நீக்க வேண்டும் என்பதில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆளுங்கட்சியில் உள்ள அந்தஸ்து
உள்ள ஒருவருடைய சமையல்காரர் 20 கிளப்புகளை வைத்து
நடத்திக்கொண்டிருக்கிறார், ஒரு நாளைக்கு 15 ஆயிரம் முதல்
20 ஆயிரம் வரை வருமானம் பெற்றிருக்கிறார். அதைப்பற்றி
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிறேன்.
அதிலும் போலீஸ்காரர்களுக்கு பங்கு இருக்கிறது. போலீஸ்
காரர்களுக்கு ஆண்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
பெண்ணிடத்திலே ஆண்மையைக் காட்டுகிற போலீஸ்காரர்கள்,
எளியோரிடத்திலும் வறியோரிடத்திலும் ஆண்மையைக் காட்டு
கிற போலீஸ்காரர்கள், எவனாவது வந்து லாக் அப்பிலே இருந்
தால் அவனிடம் ஆண்மையைக் காட்டுகிற போலீஸ்காரர்கள்
அவர்களுக்கு ஆண்மையிருக்குமானால் நிர்வாகத் திறமை
இருக்குமானால் இந்த கிளப்புகள் மீது நடவடிக்கை எடுக்க
வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்று இன்
றைக்கு நாம் வேதனைப் படுகிறோம். 300 கிளப்புகளுக்கு
மேல் இன்றைக்கு நடந்துகொண்டு இருக்கின்றன. அதிலிருந்து
கையூட்டுப் பெறுகின்ற போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள்.
யார் யார் என்று சொல்லவில்லை. மேல் அதிகாரியிலிருந்து
கீழ் அதிகாரிகள் வரையில் நடக்கிறது என்று தெரியும். புராப்பர்
சேனல் வழியாக பாஸ் ஆகிக்கொண்டிருக்கிறது.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 18] [திரு. எம். ஏ. லத்தீப்

நேற்றைய தினம் 16 ஆம் தேதி மின்ட் தெரு, சாதாரணத்
தெரு அல்ல, மிகுந்த ஜன நடமாட்டம் உள்ள தெரு. அங்கே
பாரத் மெட்டல் ஒர்க்க்ஸ் என்ற கம்பெனி, இரவு 10 மணிக்கு
ஷட்டர்ஸ் உடைக்கப்பட்டு அந்தப் பூட்டு உடைக்கப்பட்டு
உள்ளே நுழைந்து இரும்புப் பெட்டியைத் திறந்து இரவு பத்து
மணிக்கு கேஷ் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. என்று
சொன்னால் அங்கே இருக்கிற போலீஸ் என்ன நிலைமையில்
செயல்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதுவும் மின்ட்
தெருவிலே இருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால்,
இந்த போலீஸ்காரர்கள் வகையற்றவர்கள், வக்கற்றவர்கள்,
திறமையற்றவர்கள் என்று தான் நாட்டு மக்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பொறுப்பை முதல், அமைச்சர்
அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மின்ட் தெருவிலே நடைபெற்றது பற்றி என்ன நட
வடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

அடுத்து, வடபுலத்திலே, நடந்துவந்ததைப் போல தமிழ்
நாட்டிலே வகுப்பு துவேஷம் அதிகமாக நடந்து வருகின்றன
என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் வேறு வகையில்
அப்படியெல்லாம் பேசக்கூடாது என்று உபதேசம் சொல்வார்.
முதல் கூட்டத்திலே சிறுபான்மை யோர் பற்றி நான் பேசிய
போது அவர் உபதேசம் செய்ததால் தான் அவர்களுக்கும்
எங்களுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது என்பதை சொல்லிக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

நாங்கள் எதற்காகச் சொல்கிறோம் ? எங்களுக்கு
யாரிடத்திலேயாவது பகையா ? பகைத்துக்கொண்டு நாங்கள்
வாழமுடியுமா ? பெரும்பான்மையோரின் நல்லெண்ணம் இல்லா
விட்டால் நாங்கள் வாழ முடியுமா ? அவர்களுடைய நல்
லெண்ணத்தை இழக்கக்கூடிய அளவிற்கு பேசக் கூடியவைத்தியக்
காரர்களா நாங்கள் ? நாட்டிலே இருக்கின்ற உண்மைகளைச்
சொன்னால் நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, சிறுபான்மை
யோர் பெரும்பான்மையோர் என்றெல்லாம் பேசக்கூடாது,
எல்லோரும் ஒன்று என்று சொன்னால், அப்பொழுது இங்கேகூட
சிறுபான்மை பெரும்பான்மை இல்லாவிட்டால் நான்கூட காலை
யில் எட்டரை மணிக்கொல்லாம் இங்கே வந்து முதலமைச்ச
ரவர்களுடைய இடத்தில் உட்கார்ந்து கொள்ளலாம். யார்
முதலிலே வருகிறார்களோ அவர் முதலமைச்சராக இருக்கட்டும்
என்று வைத்துக்கொள்ளலாம். எனவே, சிறுபான்மை, பெரும்
பான்மை என்று வேண்டாம், எல்லோரும் ஒன்றுதான் என்ற
அடிப்படையில் முறையிலே அணுகுகின்ற முறையை நீங்கள்
வைத்துக்கொள்ளக்கூடாது.

ஆர். எஸ். எஸ். காரர்களின் ஆக்டிவிட்டீஸ், அவர்களுடைய
நடவடிக்கைகள் மிகவும் அதிகமாக இருக்கிறது. சென்னைப்
பட்டணத்திலே பேரணி நடத்தியிருக்கிறார்கள்.
அவ்வாறு நடத்துவதற்குத் தடை செய்திருக்கிறார்கள். கேரளத்திலே
கத்திலே தடை செய்திருக்கிறார்கள். கர்நாட
தடை செய்திருக்கிறார்கள், உத்திரப் பிரதேசத்திலே
கலவரம் தமிழ்நாட்டிலே எந்தக் காரணத்திற்காக நடந்ததோ,
அதே அளவிற்கு வடபுலத்திலே இன்னொரு மாநிலத்திலே நடந்த
வகுப்புக் கலவரமும் அதே அடிப்படையில் 'இன் டோடோ',
முழுக்க முழுக்க அதே அடிப்படையில் அந்த தெருவிலே போகக்
கூடாது என்றார்கள், போனால், பாவம் என்று சொன்னார்கள்.
இதுவரையிலே அந்தத் தெருவிலே போகவில்லை என்று சொன்
னார்கள். ஆனால் இவர்கள் பிடிவாதமாகப் போனார்கள்.
பிறகு 500 பேர் செத்தார்கள், எப்படித் தமிழகத்தின்
இந்த நகரத்தில் நடந்ததோ அதேமாதிரி அங்கே நடக்கிறது
என்றால் அகில இந்திய அளவிற்கு வகுப்புத் துவேஷ இயக்கம்
இங்கே வேலை செய்கிறது என்பதை முதலமைச்சரவர்கள்
கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய பேர
ணிகளை அவர்களுடைய பயிற்சிகளை நிறுத்துவதற்கு முத
லமைச்சர்ரவர்கள் நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டும். இல்லாவிட்டால், சிறுபான்மையோர் சமுதாயத்தைச்
சேர்ந்த எங்களுடைய இளைஞர்களுக்கும் பயிற்சி கொடுக்க
வேண்டிய நிலைமை வரும், நீங்கள் பயிற்சி பெற வேண்டுமென்று
எங்கள் மக்களை நிச்சயமாக நாங்கள் கேட்டுக்கொள்வோம்.
எனவே, உடனடியாக இதில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் தமிழகத்தில் உள்ள
அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட வேண்டும்.
தமிழ்நாட்டுப் மக்கள் பண்புக்கும், நிதானத்திற்கும் உறைவிட
மாக இருக்கும் மக்கள், அவர்கள் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்
டும். எனவே, எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல்
எல்லா மக்களும் ஒன்றுபட்டு இப்படிப்பட்ட பலப்பரீட்சை
யைச் செய்யும் விஷ சக்தியை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்
கொள்ள வேண்டும். இதைப் பற்றி எனக்கு விளக்கம் கொடுத்து
விடலாம். இந்தச் சபைக்கு விளக்கம் கொடுத்து விடலாம்.
ஆனால் அந்த விளக்கம் நாட்டிலே எடுபடாது.
இதனால் ஏதாவது நடந்தால் நிச்சயமாக முதலமைச்சரவர்கள்
தான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுவார் என்று இந்த
நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அன்றைக்கு நான் சொன்னேன். சிறுபான்மை மக்களுக்கு
இப்படி நடக்கிற காரணத்தால், இப்பொழுது கூட ஜாம்ஷெட்பூர்
கலவரத்திற்கு என்னென்ன காரணங்களைச் சொல்கிறார்களோ
அதே காரணங்களை நான் சொல்லிச் சொன்னேன். சிறுபான்மை
யோருக்குப் போலீஸ் துறையிலே உரிய இடத்தைத் தாருங்கள்.
இதை நான் கூடச் சொல்லவில்லை. 1965-ஆம் ஆண்டிலே
லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், எல்லா முதலமைச்சர்களுக்கும்
அனுப்பிய சுற்றறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த

சொன்னேன். அந்த
உண்மையின் அடிப்படையில் நான் சொன்னேன். 10 சதவிதமாவது
சிறுபான்மையோர் 1 சதவீதம் இருந்தாலும் குவாலிஃபிகேஷன்
அந்த இடத்திலே கொடுங்கள். பேசிக் கொடுத்தாவது கொடுங்கள்
இல்லாவிட்டாலும் எக்செம்ஷன் கொடுத்தாவது கொடுங்கள் என்று
லால்பகதூர் சாஸ்திரி அன்றைக்கு அனுப்பினார்கள். நான்
இந்தச் சபைக்கு வந்த பிறகு எல்லா ஆண்டும் பேசிக்கொண்டு
வருகிறேன். அன்றைக்கிருந்தவர்களையும் சேர்த்துத்தான்
சொல்கிறேன். அவர்கள் செய்யவில்லை. அன்றைக்குத் தவறு
செய்திருக்கிறார்கள் என்றால் நீங்களாவது அதைத் திருத்திச்
செய்து நல்ல பெயரைத் தட்டிக்கொண்டு போங்களேன்,
எங்களுடைய இதயத்திலெல்லாம் இடம்பெறுங்களேன்,
அதை ஏன் நீங்கள் செய்யக்கூடாது? நான் சொன்னதற்குப்
பதில் சொல்லாமல் என்ன சொல்கிறீர்கள், அன்றைக்கு நான்
உண்மை நிலையைப் பேசினேன். அந்தத் தன்மையை உணர்ந்து
கொள்ளாமல், சிறுபான்மை, பெரும்பான்மை என்றெல்லாம்
பேசுவது மிகப் பெரிய தவறு என்று சொல்கிறார்கள். நான்
சொல்லும், அந்த உணர்வு உங்களுக்கு இருந்தால், உங்கள் எல்
லோருக்கும் இருந்தால் பிரச்னையே இல்லை, நான் பேச
வேண்டிய பிரச்னையே இல்லை, எனவே, அதை உணர்ந்து
பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பட்டது) என்ன சார்? போலீஸ் துறை எனக்கு அரை மணி
உண்டு, ஆரம்பித்துப் பத்து நிமிஷம்தான் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 நிமிடம்
ஒதுக்கப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் நேரத்தைப் பார்த்துத்தான்
பேசுகிறேன். நீங்கள் உட்கார்ந்திருப்பதால் நேரத்தைப்
பார்க்கிறேன். இன்னும் 15 நிமிடம் வேண்டும், கொஞ்சம்
நேரத்தை ஒதுக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 11-40-க்கு
ஆரம்பித்தீர்கள், 15 நிமிஷங்கள் ஆகப்போகிறது. நேரம் வேண்டு
மென்று கேட்டால் ஆட்சேபணையில்லை. ஆனால் பத்து
நிமிஷந்தான் ஆகிறது என்று சொல்லாதீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகவே தயவு செய்து இதை
நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸ்பெஷல் பிராஞ்சில் ஏதோ ஒரு கன்வென்ஷன் இருக்கிறதாம்.
போலீஸ் பற்றி ஹைதராபாத்திலே நடந்தபொழுது ஸ்பெஷல்
பிராஞ்சிலே முஸ்லீம்களைப் போடக் கூடாதாம். ஏன் அப்படிப்
பட்ட கன்வென்ஷன் இருக்க வேண்டும். எங்கள் தேச பக்தியைச்
சந்தேகிக்கிறீர்களா? உங்களுக்கெல்லாம் இல்லாத தேசபக்தி
எங்களுக்கு உண்டு.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 18

ஏனென்றால், நாங்கள் யார் மீது நம்பிக்கை வைத்திருக்கி
றோமோ, அவன் சொல்கிறான், உங்களுக்கு தேச பக்தி இல்லா
விட்டால், நீங்கள் என்னைச் சேர்ந்தவர்கள் அல்ல வென்று
நபிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினாலே, நம்பிக்கை
இழந்தவர்களாக மாறுவோம் என்றால், தேச பக்தி எங்களுக்கு
இல்லாவிட்டால், எங்கோ பக்கத்திலே இருக்கிற ஆந்திரப்
பிரதேசத்திலே ஹாசிம் போலிஸ் கமிஷனராக இருக்கலாம்;
எல்லா வற்றையும் தன்னுடைய கையிலே வைத்திருக்கலாம்.
எல்லைப்புற மாகாணத்திலேயிருக்கிற ஷேக் அப்துல்லா
முதலமைச்சராக இருக்கலாம். இங்கே, உலகத்திலே இல்லாத
அளவுக்கு, தமிழ்நாட்டிலே ஸ்பெஷல் பிராஞ்சிலே முஸ்லிம்களுக்கு
இடம் இல்லையென்று சொன்னால், நான் சொல்கிறேன், இந்த
அநீதி நீடிக்குமனால் இந்த அநீதி உங்களை அழிக்கும். எங்களு
டைய தேச பக்தியைச்சந்தேகிக்கிற உங்களுடைய அந்தப் போக்கு
உங்களை அழிக்கும். ஆனால், முதலமைச்சருக்குத் தெரியுமோ,
தெரியவில்லையோ— அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை.
உங்களுக்குத் தெரிந்திருந்தால், தயவு செய்து அந்த கன்வென்
ஷனை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில மாவட்டங்களுக்கு முஸ்லீம்களை எஸ்.பி.யாக போடக்
கூடாதாம். அதாவது, வட ஆற்காடு மாவட்டத்திலே,
முஸ்லிமை, எஸ். பி.யாக போடவே கூடாதாம். என்ன ஐயா,
இது அநியாயம். நான் சொன்னால்— நான் என்ன சொன்னேன்,
ஐயா, போலிஸ் துறையிலே முஸ்லிம்கள் இருந்தால், ஓரளவுக்கு
அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வும் இருக்கும் என்று சொன்னால்,
அதை வகுப்புவாதப் பேச்சு என்று முதலமைச்சர் சொல்வார்.
ஆனால், வட ஆற்காடு மாவட்டத்திலே போலீஸ் எஸ்.பி.
யாக முஸ்லிமை போடக்கூடாது என்று அவர்களே ஒரு
கன்வென்ஷனை வைத்திருக்கிறார்கள். ஏன் ஐயா, வைத்
திருக்கிறீர்கள். ஏனென்றால், வட ஆற்காடு மாவட்டத்திலே
முஸ்லிம்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே
வகுப்பு வாதம் இல்லை? அதைவிட ஒரு பச்சை வாதம்
எது இருக்க முடியும்? தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க
வேண்டாமா?

அதே நேரத்தில் இன்றைக்கு நிலை என்னவென்று சொன்
னால், ஏதோ அத்தி பூத்தாற்போல் சில முஸ்லிம்கள் உயர்
பதவிக்கு வருகிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்து 2 டி.எஸ்.பி.க்
களை சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்கள். இங்கேயிருந்த அபிபுல்லா
என்பவர் விருத்தாசலத்திற்கு அனுப்பப்படுகிறார். அங்கே
யிருந்த இக்பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறார். அங்கே
யிருந்து போனவரும் சஸ்பெண்ட், அங்கேயிருந்து வந்தவரும்
சஸ்பெண்ட், அபிபுல்லா மேலே என்ன குற்றச்சாட்டு என்று
சொன்னால், யாரோ மது விலக்கிலே ஒரு கார்-ஐ இம்பவுண்ட்
செய்தார்கள். அந்த காரிலேயேயிருந்த ஸ்பேர் பார்ட்ஸை எடுத்
தார்களாம். அதுவும் குற்றச்சாட்டு. ஒரு பெரிய போலீஸ்
அதிகாரி, ஒரு டி.எஸ்.பி. விரும்பினால், அவருக்கு ஸ்பேர்

1979 ஏப்ரல் 18] [திரு. எம். ஏ. லத்தீப்]

பார்ட்ஸ்ஸா கிடைக்காது? எவ்வளவு ஸ்பேர் பார்ட்ஸை,
எங்கெங்கேயிருந்து வாங்க முடியும்? அதை ஒரு பழைய வண்டி
யிலே யிருந்தா எடுத்துக்கொள்ளவேண்டும்? இப்படி ஒரு குற்றச்
சாட்டு. அதற்குவேறு பல.........

திரு. சி. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, அபிபுல்லா என்பவர், மதுக் கடத்தல் விஷயமாகப்
பிடித்த வண்டியிலுள்ள ஸ்பேர் பார்ட்ஸை— சக்கரத்தைக் கழட்டி
அவருடைய சொந்த வண்டிக்கு போட்டதன் பேரிலேதான்
சஸ்பெண்ட் செய்யப்பட்டார்களே ஒழிய, மற்ற.......

திரு. எம். ஏ. லத்தீப்: நானே அதைத்தான் சொல்கிறேன்
நீங்கள் காரணங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் காரணங்கள் சொல்
லக்கூடிய நல்லவர்கள் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்
கிறேன், வேறொன்றும் இல்லை. அதற்காக ஒரு டி.எஸ்.பி.
சஸ்பெண்ட். இன்னொரு இக்பால் என்று பார்த்தால் இங்கே
ஒரு சஸ்பெண்ட் இருக்கிறதே 4,5 டி.எஸ்.பி.க்கள் முஸ்லிம்
களிலே அவர்களையும் சஸ்பெண்ட் செய்யுங்களேன்; நல்ல
வர்கள், என்ன செய்வது?

போலீஸ் துறையிலே டி.டி.பி. அப்துல்லா என்பவர் சீனியர்
மோஸ்ட் ரேங்கிலே. முதலமைச்சருக்கு தெரியுமோ இல்
லையோ தெரியாது— டி.டி.பி. அப்துல்லா. வெளிநாட்டிலே
அவர்கள் தூதராக இருந்திருக்கிறார்கள். ஐ.பி.எஸ். லே அவர்
தான் இன்றைக்கு சீனியர் மோஸ்ட் தமிழ்நாட்டு ரேங்கிலே.
பல்லவன் கார்ப்பரேஷனிலே சேர்மனாக இருந்தவர். அவரை
ஐ.ஜி.யாகப் போடுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு எண்ணம்
இல்லை. அவரைத் தூக்கி கேரளாவிற்கு அனுப்பி விட்டார்
கள். ஏன் ஐயா? யார் சீனியர் மோஸ்டோ அவர்களை விட்டு
விட்டு— சீனியர் மோஸ்ட் டி.டி.பி. அப்துல்லா இருக்கும் போது
வேறு ஆளுக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?
கொடுக்க வேண்டிய காரணம் என்ன? அதை இந்தச் சமுதாயம்
ஏற்றுக் கொள்ளும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்
கேரளாவைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் அவர் தமிழ்
நாட்டில் சீனியர் மோஸ்ட் ரேங்கில் இருக்கும்போது அவருக்கு
இந்த வாய்ப்பைத் தராமல் இங்கேயிருந்து அவரைக் கேரளா
வுக்கு 'பார்சல்' செய்து விட்டார்கள்— ஏனென்றால் ஒரு
முஸ்லிம் ஐ.ஜி.யாக வரக் கூடாதாம். ஒரு முஸ்லிம் ஐ.ஜி.யாக
வரக்கூடாது என்று நீங்கள் நினைத்தீர்களானால் உங்கள் மீது
நாங்கள் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? முஸ்லிம் இந்து
என்ற பிரச்னை அல்லது சிறுபான்மை பெரும்பான்மை—
பிரச்னை உங்களுடைய உள்ளங்களிலே இருக்கிறதே தவிர
எங்களுடைய உள்ளங்களிலே நிச்சயமாக இல்லை என்பதை
நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 18

அடுத்து வாணியம்பாடி பகுதியிலே ஆம்பூர் வாணியம்பாடி
யிலே தோல் ஷெட்டுகள் நிறைய இருக்கின்றன என்பது எல்லோ
ருக்கும் தெரியும். கடந்த ஓராண்டு காலத்திலே நூற்றுக்கணக்
கான திருட்டுக்கள் அந்தத் தோல் ஷெட்டுகளிலே நடந்திரு
கின்றன. நான் சொல்கிறேன் ஏறக் குறைய ரூ. 5 கோடி அள
வுக்கு அங்கே திருட்டுக்கள நடந்திருக்கின்றன. எத்தனை கம்ப்
ளெயின்டுகள் அங்கேயிருக்கிற போலீஸ்காரர்களிடம் கொடுப்பது,
பிறகு நானாக விசாரணை செய்தேன். விசாரணை செய்தால்
போலிஸ்காரர்களே காங்குகளை வைத்துக்கொண்டு அங்கே
இருக்கிற தோல்களை திருடி விற்பனை செய்து அவர்கள் கையூட்டு
களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிற
ஆண்டவன் சத்தியமாகச் சொல்கிறேன். அவர்கள் வாங்கிக்
கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை தகவல் எனக்குக் கிடைத்
திருக்கிறது விசாரணை அடிப்படையிலே. இந்த போலிஸ்
காரர்கள் இந்த ஆம்பூர் வாணியம்பாடியிலே இருக்கிற போலிஸ்
காரர்கள், தண்டனைக்குரியவர்கள். நாட்டிலே மிகப் பெரிய
குற்றவாளிகள், நேரடிக் குற்றவாளிகள் இந்த போலிஸ் துறை
யிலே இருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று நான் பன்முறையிலே கேட்டிருக்கிறேன்.

[நண்பகல் 12—00]

முதலமைச்சர் அவர்களிடம் நானே சென்று மகஜர் கொடுத்
திருக்கிறேன். ஐ.ஜி. அவர்களிடமும் மக்களே மகஜர் அனுப்பி
யிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் என்ன செய்தார்கள்
என்று தெரியவில்லை?

அடுத்து மதுவிலக்கு நடைமுறையை எடுத்துக் கொண்டால்,
மதுவிலக்கு உண்மையில் நாட்டில் நடைமுறைப் படுத்தப்படு
கிறதா? போலீஸ் உயர் அதிகாரிகளை கேட்டுப் பாருங்கள் அவர்
கள் தங்கள் மனத்தில் கை வைத்துச் சொல்லட்டும் மதுவிலக்கு
அமுல் படுத்தப்படுகிறது என்று. அது எல்லோருக்கும் தெரி
யும். அது இன்றைக்கு இல்லாத இடம் இல்லை. * *
கொண்டு வந்து விற்கிறார்கள். நமது * * *
கொண்டு வந்து கொடுக்கிறார்கள். எந்தத் தண்ணீர் இல்லா
விட்டாலும், காவேரியில் தண்ணீர் இல்லாவிட்டாலும் பாலாற்
றில் தண்ணீர் இல்லாவிட்டாலும் குழாயிலேயே தண்ணீர் வரா
விட்டாலும் இந்தத் தண்ணீர் இருக்கிறது என்று கொண்டு வந்து
கொடுக்கிறார்கள்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நிற்கின்றார்கள்)

நீங்கள் சி.ஐ.டியைத்தான் போட்டுப் பாருங்களேன். அந்த
சி.ஐ.டி.கள் ஸ்பெஷலாக கவனிக்கப்பட்டு அவர்களும் ஸ்பெ
ஷலாக வாங்கிக் கொண்டு ஸ்பெஷல் டிரீட்மெண்டோடு போய்
விடுவார்கள்..............

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின்
ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1979 ஏப்ரல் 18]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே பாயிண்ட்
ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **
மது விற்கப் படுவதாகச் சொல்கிறார்கள். நான் சொல்லிக்கொள்
விரும்புவது யார் யார் வாங்கிக் குடிக்கிறார்கள் என்பதை அவர்
கள் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இல்லை
என்றால் ** என்ற உணர்வு மக்கள் மத்தியில்
பரவி விடும். அப்படி பரவிவிட்டால் ** மக்கள் மதிக்க
மாட்டார்கள் என்ற அடிப்படையில் யார் என்று
குறிப்பிட்டு தயவு செய்து சொன்னால் இங்கே முதல்வர் அவர்
களும் இருக்கிறார்கள் அவர்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு
இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்........

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே இன்
றைக்கு மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் சாகிப் அவர்கள் நிறைய
பேசிக் கொண்டே போனார்கள் நல்ல அனுபவம் பெற்றவர்கள்.
அப்படிக் குடித்தவர்கள் இன்னார் என்பதை உணர்த்துவீர்
களேயானால் எங்கள் கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்
கிறேன், யாராக இருந்தாலும் நாங்கள் ராஜினாமா செய்யத்
தயாராக இருக்கிறோம். அதைவிட்டு புழுதி வாரிதூற்றும்
விதத்தில் பேசுவது சரியாக இருக்காது என்று எடுத்துக் காட்ட
விரும்புகிறேன்....

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச ஆரம்பிக்கிறார்கள்)

திரு. எம். ஏ. லத்தீப்: ஏற்கனவே இந்த விஷயத்தைப்
பற்றி இந்த அவையில் பேசியிருக்கிறார்கள். அது பத்திரிகை
யிலும் வந்திருக்கிறது. நான் குறிப்பாக ** ** குடித்தார்
கள் என்று சொல்லவில்லை.....

திரு. நா. சுந்தரராஜ்: நான் என்ன சொல்கிறேன் என்றால்
நாமெல்லாம் சட்டசபையை நடத்துவதைப் பார்த்து மக்கள்
என்னய்யா நீங்கள் சட்டசபை நடத்துகிறீர்கள் என்று கேட்
கிறார்கள், வெட்கமாக இருக்கிறது. ஊருக்கு போகும் போது
அவர்கள் இந்தச் செய்தியையும் படித்தார்களேயானால் நம்
மைப்பற்றிய ஒரு தவறான உணர்வு பரவிவிடும். மக்கள் நம்மை
மதிக்க மாட்டார்கள். ** ** பல கட்சியைச் சேர்ந்த
வர்களும் இருக்கிறோம். அதனால் மக்கள் மத்தியில் தவறான
எண்ணத்தை உருவாக்காமல் யார் என்று குறிப்பிட்டுச் சொன்
னால் நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்
நடவடிக்கை எடுக்க முடியும் என்றுதான் சொன்னேன்......

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே .. ** **
** ** ** தவிர
** ** ** குடிக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.....
என்றுதான் சொன்னேனே

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலை
வர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1979 ஏப்ரல் 18

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ** **
மட்டும் தான் இருக்கிறார்கள். ஆகவே அது அவர்களைத்தான்
குறிக்கும்........

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, தாங்
கள் தான் இதற்கு ஒரு முடிவைக் கொண்டு வரவேண்டும். சட்ட
மன்ற உறுப்பினர்கள் சார்பாக நீங்கள் இருந்துக் கொண்டு
சபையை நடத்தி வருகிறீர்கள், ஆகவே..........

திரு. க. பாலாஜி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு லத்தீப் சாயபு அவர்கள் கூட மது அருந்துகிறார்
களா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: யார் யார் மது அருந்துவார்கள் என்று
மக்கள் உணர்ந்தேயிருக்கிறார்கள். நான் குடிப்பது இல்லை
என்று அவர்களுக்குத் தெரியும். ** ** இந்த நிலை
இருக்கிறது என்றேன் அவ்வளவுதான்....

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே....
(மணியடிக்கப்பட்டது).

திரு. நா. சுந்தரராஜ்: இந்த அவையிலே ஏற்கனவே நடை
பெற்ற ஒரு சம்பவத்தின் காரணமாக பொது மக்களுக்கு சட்ட
மன்ற உறுப்பினர்கள் மீது மரியாதைக் குறைந்திருக்கிறது என்று
எல்லோருக்கும் தெரியும். அதே நேரத்தில் இது போன்று அனா
வசியமான குற்றச் சாட்டுகளை ** ** மீது சுமத்துவீர்
களேயானால் அதனுடைய விளைவு சரியாக இருக்காது. நாளைக்கு
நாம் ஊருக்கு திரும்பிப் போய் தலைகாட்டவே முடியாது. *..*
எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்குகிறார்கள்
அதனால் மாண்புமிகு லத்தீப் குறிப்பிட்டது எல்லாம் அவை
குறிப்பேட்டிலே இருப்பது அவ்வளவு நல்லதாக இருக்குமா என்று
யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே **
** என்று பேசிய பேச்சுக்கள் பத்திரிக்கைகளில் வந்திருக்கின்
றன. அதனால் தான் நீங்கள் பேசுகிறபோது குறுக்கிடாமல்
இருந்தேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள்
அனேகமாக அத்தனை பேரும் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்
தால் அது ** பாதிக்கும் என்ற வகையில் நீங்கள் பேசிய **
** அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.
பத்திரிகைகளிலும் இதை வெளியிட வேண்டாம் என்று கேட்
டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்
கிணங்க அகற்றப்பட்டது.

1979 ஏப்ரல் 18]

திரு. எம். ஏ. லத்தீப்: உள்ளத்திலிருக்கிற எண்ணங்கள்
நீக்கப்பட வேண்டும். உணர்வுகள் மாற வேண்டும். சட்டமன்ற
உறுப்பினர்களின் மரியாதை போய்விடும் என்று மட்டும் பேசு
வதில் பிரயோசனம் இல்லை. அந்த இடத்தைத் தூய்மைப்
படுத்தவேண்டும்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு உறுப்பினர் பேசு
கிற நயமுடைய ** ** என்ற பொருள்படும்படி
சொல்லி இருக்கிறார்கள். மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் **
ஒரு கருத்தை இது ஏற்படுத்துகிறது. அது சபைக் குறிப்பில்
இருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: பெயரைக் குறிப்பிட்டு அவர்
சொல்லட்டும். நடவடிக்கை எடுக்கத் தயார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து
உட்காருங்கள். ஏற்கனவே நீக்கியாகிவிட்டது. அதைப் பற்றி
விவாதம் வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்க
ளின் கவனத்திற்கு நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள்
11-40க்கு ஆரம்பித்தீர்கள். இன்னும் இரண்டு நிமிடத்தில் முடி
யுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: என் நேரத்தில் முழு நேரத்தை மற்
றவர்கள் எடுத்துக்கொண்டு விட்டார்கள். சரி.

வட்டாற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு பகுதியில் உள்ள
வள்ளல் குளம் என்ற ஊரில் ஒரு அரிசன் எலெக்டிரிக் ஷாக்
கொடுத்து உயிரோடு கொல்லப்பட்டு இருக்கிறார். 3 நாளைக்குப்
பிறகு அவனுடைய உடலை காட்டில் இருந்து கண்டெடுக்கப்
பட்டு, இது வரையில் அது குறித்து எந்தவிதமான நடவடிக்கை
யும் எடுக்க வில்லை. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்
பினர் மாண்புமிகு திரு. தமிழரசன் அவர்கள் கூட மாவட்ட
எஸ்பி.க்கு ஒரு கம்ப்ளெயின்ட் செய்து இருக்கிறார்கள். ஆனால்
நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் அவன் அரிசன் என்றநினைப்பா?
அரிசன் என்றால் அவனுக்கும் உயிர் உண்டு, உணர்வு உண்டு,
அவனுடைய ரத்தத்திலும் செம்மை உண்டு என்று அதிகாரி
கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அது குறித்து உடனடி
யாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு உயர்நிலைப்
...ம்பூரில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளி மாணவி, கலியாணமாகாதவன்
பள்ளியில் ஒரு உயர்நிலைப் பள்ளி மாணவி, அவளை அங்கே பணிசெய்யும் பணியாள்
வயதுக்கு வந்த மாணவி, அவளை அங்கே பணிசெய்யும் பணியாள்
ஒருவரால் கற்பழிக்கப்பட்டு இருக்கிறாள். அவர்களுடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

வாழ்க்கை என்ன என்று எனக்குத் தெரியவில்லை. கண்ணீரோடு
அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்கள் அழுகிறார்கள்; அது சிறு
குழந்தையாக இருக்கிறது. அந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள்
போலீசில் கம்ப்ளெயின்ட் கொடுத்தால், அங்கேயுள்ள போலீஸ்
காரர்கள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. பின் எதற்காக
அங்கு போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். எங்கே அநீதி நடக்
கிறதோ அங்கே அநீதி போக்க அவர்கள் போகவில்லை என்றால்
என்ன அர்த்தம். உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஒருவரே
இப்படிச் செய்து இருக்கிறார் என்று சொல்லியிருக்கிற போது
அது தலைமைச் ஆசிரியைக்கும் தெரியும், அப்படி
யிருக்கிறபோது, நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்து இருக்
கிறதோ இல்லையோ, அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொய்தீனைப் பற்றி திரு. சுவாமிதாஸ் அவர்களும் சொன்
னார்கள். அவர்கள் எனக்கும் ஒரு பெட்டிஷன் அனுப்பி இருக்கி
றார்கள். ஒரு முஸ்லீம்—பெண் அவள் பெயர் கயிருன்னிசா. அவள்
உடற்பயிற்சி ஆசிரியரின் மனைவி. இன்ஸ்பெக்டரின் மனைவி
நடந்து போகும்போது எழுந்திருக்கவில்லை. அந்த அம்மையாரின்
முடியைப் பிடித்து, வார்த்தைக்கு வார்த்தை ஒரு 25-30
துலுக்கச்சி உனக்கு இவ்வளவு திமிரா என்று சொல்லி அடித்து
இருக்கிறார்கள். இப்படி கோர சம்பவம் நடந்து இருக்கிறது
என்று போலீசுக்கு ரிப்போர்ட் கொடுக்கப்போனால் அந்த உடற்
பயிற்சி ஆசிரியர் மீதே தங்களுடைய பயிற்சியை போலீஸ்காரர்
கள் காட்டியிருக்கிறார்கள். காக்கிச் சட்டை அணிந்து
விட்டதாலே அவர்கள் என்ன பெரிய மனிதன் என்று நினைத்
துக்கொண்டு விட்டார்களா காக்கிச் சட்டை போட்டிருந்த
இடிஅமீன் எல்லாம் எங்கே போய் இருக்கிறார்கள் என்று
காக்கிச் சட்டைக்காரர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

[பிற்பகல் 12-10.]

மக்கள் ஆர்த்தெழுந்தால் நிலைமை என்ன ஆகும்? காவல்
என்று சொன்னாலே அது என்ன அழகான வார்த்தை. கா
என்றால் பூங்கா, அதாவது தோட்டம் என்று பொருள். வல்
என்றால் அந்தத் தோட்டத்தை ஒழுங்காக வல்லமையோடு காப்
பாற்றுகின்ற தன்மை. ஆகவே காவல் என்பதன் அர்த்தமே
அதுதான். தமிழிலே காவல் என்பது மிக அழகான வார்த்தை..
(குறுக்கீடு) வேலியே பயிரை மேய்கிறது என்ற நிலைமை இருந்
தால் சரியாகாது. ஊழியர்கள் எல்லாம் மாற வேண்டும் என்ற
போலீஸ் கமிஷனரின் பரிந்துரைகளை எல்லாம் பார்த்து நட
வடிக்கை மேற்கொள்ளுங்கள். போலீஸ்காரர்களின் சம்பளத்தை
அதிகமாக்குங்களேன். த்ரேதா யுகத்திலே கொடுத்த சம்ப
ளத்தை இந்தக் கலியுகத்திலேயும் கொடுக்கிறீர்களே. அவர்
களுக்கு ஏன் சம்பளத்தை அதிகமாக்கக்கூடாது? அப்படி

எல்லாம் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்துவிட்ட பிறகு அதற்குப்
பிறகும் லஞ்சம் வாங்கித்தான் பிழைப்பேன் என்று சொன்னால்
நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே மாண்புமிகு முதலமைச்ச
ரவர்கள் இந்த நிலைமையை அலசிப்பார்த்து என்னென்ன நட
வடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவற்றை மேற்கொண்டு நட
வடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து போலீஸ் துறையினரை நோக்கிக் கேட்டுக்கொள்கி
றேன்; நீங்கள் உங்கள் பொறுப்பை உணர்ந்து. போலீஸ்
துறையின் தன்மையை உணர்ந்து நடந்துக் கொள்ளவேண்டும்.
கட்சியிலே பலர் வருவார்கள், போவார்கள், ஆட்சிக்கு பலர்
வருவார்கள். ஆனால் நீங்கள் நியாயமாக நடந்து கொள்ள
வேண்டும். அன்றைக்கு ஆளும் கட்சிக்கு சாதகமாக நடந்து
கொண்டார்கள் போலீஸ் துறையினர் என்ற குற்றச்சாட்டு வந்
தது. அதேபோல இன்றைக்கும் ஆட்சிக்கு சாதகமாக நடக்கி
றார்கள் என்று குற்றச்சாட்டு வருகிறது. உங்கள் வேலையை
நீங்கள் சரியாகச் செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக
இன்றைக்கு லத்தீப் இருப்பான். நாளைக்கு வேறு ஆள் வரு
வான். ஆனால் ஆட்சித்துறை என்பது இருந்துகொண்டுதான்
இருக்கும். பொதுவான முறையிலே கடமையை ஆற்ற வேண்டி
யது உங்கள் பொறுப்பு. அப்போதுதான் போலீஸ் துறைக்கு
மக்களுடைய ஆதரவு இருக்கும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் துறை சம்பந்த
மாக நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசுகின்ற
போது, சிற்றுண்டிகள் எல்லாம் இங்கே பணியாற்றுகின்ற காவல்
துறையினருக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்
கள். அது குறித்து விசாரித்தபோது சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு என்னென்ன கொடுக்கப்படுகிறதோ அத்தனையும் சட்ட
மன்றத்திலே பணியாற்றுகின்ற காவல்துறையினர் அத்தனை பேர்
களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்தார்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: துணைத் தலைவரவர்களே,
நான் பொய்யான தகவலைச் சொன்னதாக நீங்கள் அறிவிக்கி
றீர்கள். அது இங்கே பணியாற்றும் காவலர்கள் அனைவருக்கும்
கொடுக்கப்படவில்லை. வேண்டுமானால் நான் கொண்டு
வந்து நிறுத்துகிறேன் அப்படி கிடைக்காதவர்களை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தவ
றான தகவலைத் தந்ததாக நான் சொல்லவில்லை. ஒருவேளை
உங்களுக்கு வந்த தகவல் தவறாக வந்திருக்கலாம். ஆனால்
அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. நீங்கள் தவறாகச்
சொன்னதாக நான் சொல்லவில்லை.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 18

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு
குறையைச் சொல்கின்ற போது அதை நிவர்த்திக்க நடவடிக்கை
எடுக்க வேண்டுமே தவிர குறை இல்லை என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோருக்
கும் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி
ஒருவேளை கொடுக்கப்படாமல் யாரும் இருந்தால் அவர்கள் என்
னுடைய அறையிலே வந்து கேட்கட்டும். அத்தனை பேருக்கும்
நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, என்னைப்
போன்றவர்கள் போனால் கூட கிடைப்பதில்லை. ஆகவே,
தயவுசெய்து ஒரு குறையைச் சொல்கிறபோது கேட்க வேண்
டும். மூன்று தடவைகள் நான் போய் இருக்கிறேன். எனக்குக்
கூட கிடைக்கவில்லை. கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்க
வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்
றைக்கு ஒரு நாள் கூட பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி
அவர்களிடம் ரிப்போர்ட் செய்தேன். அப்போது தப்பு நடந்தி
ருக்கிறது என்று சொல்லி கூப்பிட்டுக் கண்டித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோ
ருக்கும் கொடுக்கிறோம். ஆனால் சில வேளைகளில் போகும்
போது அங்கு இல்லாத நிலைமை இருந்திருக்கலாம். ஆனால்
எல்லோருக்கும் என்றுதான் கொடுக்கப்படுகிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : ஏன் இல்லாமல் போகி
றது? அதற்கு யார் காரணம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிலே தவறு
கள் இருந்தால் விசாரிக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : குறைவாகக் கொண்டு
வருகிறார்கள். ஆகவேதான் கொடுப்பதில்லை என்று
சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அத்தனை காவ
லர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதிலே வித்தியாசம் இல்லை.
கொடுக்கப்படுகிறது. ஆனால் கொடுக்காமல் தவறுகள் நடந்
திருந்தால் அதை விசாரிக்கிறோம்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, ஒவ்வொரு மானியக் கோரிக்கை வரும்போது
இதைப் போல டிஃபன் கொடுக்கவேண்டிய சூழ்நிலை உருவா
கிக்கொண்டிருக்கிறது. ஆகவே தயவு செய்து இதை அடி
யோடு தவிர்க்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்
பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால்
மானியக் கோரிக்கையை இங்கே விவாதத்திற்கு எடுத்து
கொள்கிறபோது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில அமைச்சர்கள்
தாங்களாகக் கொடுக்கிறார்கள்.

1979 ஏப்ரல் 18]

*திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே
இன்றையத் தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே காவல்
துறை, தீயணைப்புப் பணிகள் ஆகிய மான்யத்திற்குத் தொகை
கோரி வந்துள்ளதால் இதை விவாதிக்க வேண்டிய நிலையில்
இருக்கிறோம். என் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக எந்த ஒரு
நாடு ராணுவத்திற்கு அதிகமாகச் செலவு செய்கிறதோ அந்த
நாடு ஜனநாயகத்தைக் கொலை செய்வதாக ஆகிறது. எந்த ஒரு
மாநிலம் காவல் துறைக்கு அதிகமாகச் செலவு செய்கிறதோ
அங்கே போலீஸ் ராஜ்யம்தான் உருவாகிக் கொண்டிருக்கிறது
என்று பொருள். காரணம் 1935-ல் அந்தத் துறையின் அலுவலர்
களின் எண்ணிக்கை 29,245. 1969-ல் 41,377. 1971-ல்
47,161. மேலும் 10,000 அலுவலர்களை சேர்க்கப்போவதாக
முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தயவுசெய்து
நீங்கள் அதிகமாக அலுவலர்களை உருவாக்குவதற்குப் பதிலாக
பணியில் இருக்கக்கூடிய அலுவலர்களுக்கு அதிகமாகச் சம்பளம்
கொடுத்தால் அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள். தங்கள்
கடமையை ஒழுங்காக செய்வார்கள் என்று சொல்கிறேன்.
இன்றையத்தினம் எங்களைப் பொறுத்தவரையில் போலீஸ் மனோ
பாவம் மாற வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கி
றேன். 1946-ல் வெள்ளைக்காரன் ஆட்சியில் எப்படி இருந்ததோ
அதேபோல்தான் இன்றையத்தினம் அந்த முறை இருக்கிறது.
அந்த முறை மாறவில்லை. இன்றையத்தினம் காவல் நிலையத்
திற்கு ஒரு சாதாரண மனிதன் சென்றால், அங்கே இன்ஸ்பெக்டர்
அவர்களைப் பார்த்து வாடா, போடா, வாயா, போயா என்ற
முறையில் பேசுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வசதி
உள்ளவர் ஒருவர் அங்கே போனால் வாருங்கள் உட்காருங்கள்
என்று சொல்லி நாற்காலியை எடுத்துப் போடுகிறார்கள். இந்த
மனோபாவத்தை மாற்றுங்கள். சாதரணமாக ஆரம்பக் காலத்
திலே, டிரெய்னிங் கல்லூரியிலே இந்த மனோபாவத்தை மாற்றுங்
கள், இந்த முறை டிரெய்னிங் காலத்தில் இருக்கக் கூடாது.
ஆனால் டிரெய்னிங் காலத்தில் அந்த இன்ஸ்பெக்டருக்கு இப்படி
வாடா, போடா, என்று சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று
கேள்விப்படுகிறேன். ஏன் என்று கேட்டால் அப்போதுதான்
குற்றவாளிகளைத் திருத்த முடியும் உண்மை நிலையை அவர்
களிடமிருந்து தெரிந்து கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள்.
ஆய்வுரையில் 7-வது பக்கத்தில், இந்த வகைக் குற்றங்களின்
எண்ணிக்கை 2,041 உயர்ந்துள்ளது அல்லது 5.1 சதவீதம் உயர்ந்
துள்ளது. நடப்பாண்டில் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை
ஓரளவு உயர்ந்ததற்கு முக்கிய காரணங்கள் யாதெனில், அவசர
நிலை தளர்த்தப்பட்டபின் துப்புதுலக்குவதில் அறிவியல் சார்ந்த
முறைகளை மட்டும் பின் பற்றுவதால் ஏற்படும் தாமதமும்
அனைத்துக் குற்ற வழக்குகளும் பதிவு செய்யப்பட்டதும் ஆகும்.
ஆக, அவசரக் காலத்தில் துப்பு துலக்கப்பட்டதாகக் சொல்லப்
பட்டிருக்கிறது. இதைப்போன்று மக்கள் மத்தியில் பிரச்சாரத்தைச்
செய்யாதீர்கள். எதிர்க் கட்சிகளில் உள்ள பல்வேறு
நண்பர்கள் இந்த அவையில் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்

(திரு. நா. சுந்தரராஜ்) [1979 ஏப்ரல் 18

எதற்குச் சொல்கிறேன் என்றால், இது எல்லாம் சான்றாக
அமைந்து விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். என்னு
டைய பகுதியில் இருந்த இன்ஸ்பெக்டர் நம்பியார் அவர்கள்
இன்றையத் தினம் துணை சபாநாயகர் அவர்கள் தொகுதியில்
இருக்கிறார். இதுவரையில் அவர்கள் யாரையும் அடித்ததில்லை
உட்கார்ந்துகொண்டே கேள்விகளைக் கேட்பார். அவர்களுடைய
தன்மையையும், ஒழுக்கத்தையும் பார்த்து குற்றவாளிகள்
உண்மை எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறார்கள். மேலும், பல
இலட்சக்கணக்கான திருட்டுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு
இருக்கிறது. காரணம். அடிப்பதால் மட்டும் பிரச்னையைத்
தீர்த்துவிட முடியாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுவாமி
தாஸ் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளத் தயாராக
இல்லை. சிங்கப்பூர் போன்ற நகரங்களில் பார்க்கிறோம்.

[பிற்பகல் 12-20]

போலீஸ்காரர்களைக் கண்டால் சாதாரண மக்கள் பயப்படுவ
தில்லை. அதே நேரத்தில் அங்குள்ள மக்களும் தவறான முறை
யில் எதையும் பேச மாட்டார்கள். வழியில் ஐந்து ரூபாய், பத்து
ரூபாய் என்று லஞ்சம் வாங்கமாட்டார்கள். அந்த அளவுக்கு
உயர்ந்த முறையில் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொடுத்து
இருக்கிறது அங்குள்ள அரசாங்கம். நல்ல மாடி வீடுகளை கட்டிக்
கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே எப்படியிருக்கிறது
என்றால் ராயப்பேட்டையில் வேலை என்றால் வேலைக்கு வர
வேண்டிய போலீஸ்காரர் தாம்பரத்தில் இருப்பார். அங்கிருந்து
வரவேண்டும். எப்படி வருவார். ஒரு நாளைக்கு எவ்வளவு
செலவு செய்ய வேண்டும்? ராயப்பேட்டை ஸ்டேஷனில் வேலை
என்றால் பக்கத்திலேயே ஐந்தாறு மாடியுள்ள வீடுகளைக் கட்டிக்
கொடுக்க வேண்டும். இந்த வசதிகளை காவல் துறைக்கு செய்து
கொடுக்க வேண்டும். மேலும் புதிய நபர்களை சேர்க்கவேண்டும்
என்றால், ஒரு செக்கன்டறி போர்ஸாக ஆரம்பிக்கலாம்.
அதாவது செக்யூரிட்டி போர்ஸ் என்ற அளவில் ஒரு பாதுகாப்புப்
படையை — சிஸ்கோ என்ற அமைப்பில்— பல பெரிய வங்கி
களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், கிராமக் கூட்டுறவு வங்கிகளில்
பாதுகாப்பு அளிக்கவும், பெரிய பாங்குகளில்— இந்தியன் வங்கி
போன்ற பெரிய வங்கிகளுக்கு அரசாங்கமே பாதுகாப்பு கொடுக்க
வேண்டும். இதற்காக அரசாங்கமே நபர்களை தேர்ந்தெடுத்து
கொடுக்கலாம். வங்கிகள் மட்டுமல்ல, பெரிய கம்பெனிகளுக்கும்
பாதுகாப்பு கொடுக்கின்ற அளவில் செக்யூரிட்டி போர்ஸ் என்ற
முறையில் உருவாக்கலாம். இதன் மூலம் பத்தாயிரம் பேர்களுக்கு
வேலை அளிக்க முடியும். இவர்களுக்கும் ரிவால்வர் போன்றவை
களை வழங்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சபையில் பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்ட
ஒரு விஷயம், பிரேமா கொலை பற்றியது. அதற்குக் காரணம்
யார், குற்றவாளி யார்? இதிலுள்ள குற்றவாளியைப்பற்றி
சான்றுகள் தருவதாக சொல்லப்பட்டது. இந்த சான்றுகள்
முதலமைச்சர் அவர்களுக்கு தரப்பட்டதா, இந்த பிரேமா

1979 ஏப்ரல் 18] (திரு. நா. சுந்தரராஜ்)

கொலை வழக்கு சம்பந்தமாக (குறுக்கீடு) மன்னிக்கவும், இந்திரா
கொலை வழக்கு அல்ல. இந்திரா நகரில் நடைபெற்ற பிரேமா
கொலை வழக்கில்— இன்னும் ஒரு மாதத்திற்குள் இதற்கான
குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னும் குற்றவாளி கண்டு
பிடிக்கப்படவில்லை. இதுபற்றி பல சந்தேகங்கள் வருகின்றன.
ஏதோ சாதனங்கள் கைமாற்றப்பட்டதாக சொல்லப்படுகிறது.
இந்த இலாகா என்ன செய்துக் கொண்டிருக்கிறது? இந்த
அவையிலே இதுபற்றி பலமுறை பேசப்பட்டாகிவிட்டது. இந்த
இலாகா இதை ஒரு பிரீஸ்டிஜ் கொஸ்டினாக எடுத்துக் கொண்டு
செயல்பட வேண்டும். இதுவரை கண்டுபிடிக்காமல் இருப்பது
வேதனைக்குரிய விஷயம், — a black—mark on the part of the Police
administration of Tamil Nadu. இதை வருத்தத்துடன் சொல்லிக்
கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒன்றையாவது
எப்படியாவது கண்டுபிடித்து உங்கள் பெயரை காப்பாற்றிக்
கொள்ளுங்கள். உங்களுக்கு பின்னால் நிலைமைகள் எப்படி
யெல்லாமோ வரலாம். அமைச்சர்களுக்கு சலூட் அடிப்பது
மட்டும் முக்கியமல்ல. அமைச்சர்கள் ரயிலில் செல்லுகிறார்
என்றால் ரயில்வே டி.ஐ.ஜி. வரை வந்து சலூட் அடித்துக்
கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் இவர்கள் அடிக்கும்
சலூட்டை மட்டும் நம்பியிருந்து விடக்கூடாது. இன்றைக்கு
உங்களுக்கு சலூட் அடிப்பார்கள். நாளைக்கு வேறு ஆட்கள்
ஆட்சிக்கு வருவார்கள். அவர்களுக்கு இவர்கள் சலூட் அடித்துக்
கொண்டிருப்பார்கள். ஆனால் உங்களை கையெடுத்து
கும்பிடுகிறானே அந்த ஏழையைத்தான் நீங்கள் என்றைக்கும்
நம்பவேண்டும். இந்திராகாந்திக்கு என்ன ஏற்பட்டது? யார்
அவர்களைப் பார்த்து சலூட் செய்துக் கொண்டிருந்தார்களோ,
அவர்களே இந்திராகாந்தியைக் கைது செய்தார்கள். கொடுமை
களை செய்தார்கள். போலீஸ்காரர்கள், இன்றைக்கு உங்களோடு
இருப்பார்கள். நாளைக்கு ஆட்சி மாறிவிட்டால், நாளைக்கு
ஆட்சிக்கு வருகிறவர்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள், ஆகவே
ஜனநாயக உணர்வோடு நடந்துக் கொள்ளக் கூடிய முறையில்
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்னொன்று இந்தியாவில் ஒரு புதிய முறையை உருவாக்க
வேண்டும் என்று பல அறிஞர்களும் கருத்து தெரிவித்திருக்கி
றார்கள். அடையாள அட்டைகளை எல்லா மக்களுக்கும்
கொடுத்துவிட்டு, யாராவது தவறு செய்தால், அவர்களது
கார்டில் அந்தத் தவறைப்பற்றி குறிப்பிட்டுவிடலாம். இது
போன்ற ஐடன்டிட்டி கார்டை கொடுத்துவிட்டால், அதைப்
பார்த்துவிட்டு பல ஐயங்களை போக்கிக் கொள்ள முடியும்.
இதில் இன்ன தண்டனை பெற்றவர் என்று மார்க் செய்து
அதை கொடுத்துவிட்டால், அல்லது கேடியாக இருந்தால்,
தெரிந்து கொள்ளவும் வசதியாக இருக்கும். இன்றைக்கு யாரை
வேண்டுமானாலும் எந்த இடத்திலும் சந்தேக கேஸ் என்று

(திரு. நா. சுந்தரராஜ்) [1979 ஏப்ரல் 18

வழக்கு போடுகின்ற நிலைமை இருக்கிறது. இவையெல்லாம்
இந்த அடையாள கார்டின் மூலமாக தவிர்க்கலாம். எங்கள்
ஊரைச் சேர்ந்தவர் திருச்சியில் கைது செய்யப்பட்டு அவர் மீது
சந்தேக கேஸ் என்று வழக்கு போடப்பட்டது. பின்னால்
மூளைக் கோளாறு என்று சொல்லப்பட்டது. பின்னால்
எங்கேயோ போய் இறந்து விட்டார். இது போன்று தமிழ்நாட்
டில் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆகவே பொது
மக்கள் எல்லோருக்கும் ஐடென்டிடி கார்டு கொடுப்பதற்கு ஆலோ
சனை செய்யுங்கள். தேர்தல் காலத்தில் கள்ள ஓட்டு போடுவதை
தவிர்க்கலாம். ரேஷன் கடைகளில் பொய் சொல்லி ரேஷன்
வாங்க முடியாது. இதுபோன்ற முறை உலகநாடுகள் பலவற்றில்
அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

இன்றைய தினம் ஆய்வு அறிக்கையிலே அதிகமாக துப்பாக்கிச்
சூடு கிராமங்களிலே நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. அதிலும் விவசாயிகள் மத்தியிலே அதிகம் நடை
பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் போராட
மாட்டார்கள் என்ற உணர்வு அரசாங்கத்திற்கும், அதிகாரி
களுக்கும் ஏற்பட்டிருக்கின்றதா என்பது தெரியவில்லை. He is not
an organized society அவர்கள் கூட்டாக ஒன்று சேரக்கூடிய சக்தி
வாய்ந்தவர்களாக இல்லாத காரணத்தால், இப்படிக் கருது
கிறார்களா? ஆனால், அதேநேரத்திலே இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்
போராட்டம் என்றால், சைக்கிள் செயின் எல்லாம் வரும் என்று
போலீஸ் கருதுகிறார்கள் போலும். விவசாயிகளிடத்திலே கம்பு
தானே இருக்கும், அதனால் சுட்டால் அவர்கள் கம்பால் தான்
திருப்பித் தாக்குவார்கள், அதனால் சுடலாம் என்ற எண்ணம்
இருக்கிறதா? அல்லது அடிக்கலாம், அடித்தாலும் கேட்க
மாட்டான் என்ற உணர்வு இருக்கிறதா? என்ன என்று தெரிய
வில்லை. நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், போலீஸ்
சொல்லக்கூடிய இந்த 'பிளிம்சி எக்ஸ்கியூஸ்'-ஐ நான் ஏற்றுக்
கொள்ளத்தயாராக இல்லை. போலீஸ் தரப்பிலே சொல்லப்
படுகிறது, 10பேர்கள் பாதிக்கப்பட்டால், அவர்கள் தரப்பிலேயும்
4, 5 பேர்கள் பாதிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். புதுக்
கோட்டையிலே மாணவர்களுக்கும், போலீசுக்கும் இடையே
மோதல் ஏற்பட்டது. மாணவர்கள் இதிலே அடிபட்டு, அங்
குள்ள மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்கள். அவர்
களை நான் பார்க்கச் சென்றேன். அப்போது, பக்கத்திலே
போலீசும் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்
களையும் பார்க்கச் சென்றேன். அவர்கள் சுண்டுவிரலிலே பான்
டேஜ் போடப்பட்டிருந்தது. அப்போது விசாரித்தபோது
சொன்னார்கள், மாணவர்கள் இப்படி அடிபட்டு இருக்கும்போது
தாக்கப்படும்போது நாங்களும் ஒருசிலர் இப்படி இருந்தால்
தான் பாதுகாப்பு என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன
இந்த 'பிளிம்சி எக்ஸ்கியூசை' நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.
இப்படி சாதாரணமாக ஒரு பரிகாரம் தேடுவதைவிட, உண்மை
நிலைமையை எடுத்துச் சொல்லுங்கள்.

1979 ஏப்ரல் 18] (திரு. நா. சுந்தரராஜ்)

ஆர்டர்லிகளைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே
இன்றைக்கு கிட்டத்தட்ட 9,000 போலீஸ் அதிகாரிகள் இருக்கி
றார்கள். சப்-இன்ஸ்பெக்டர்களிலிருந்து இன்றைக்கு எடுத்துக்
கொண்டால் 9,218 அதிகாரிகள் இருக்கிறார்கள். அவ்வளவு
பேர்களுக்கும் ஒரு நபர் என்று வைத்துக் கொண்டாலும், கிட்
டத்தட்ட 9,000 பேர்கள் வந்து விடுவார்கள். ஆனால்,
எஸ்.பி., டி.ஐ.ஜி. போன்றவர்களுக்கு 4, 5, 10 என்றெல்லாம்
ஆர்டர்லிகள் இருப்பார்கள், இதனால், அரசாங்கத்திற்கு எவ்
வளவு பணம் செலவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள். இப்
போது புதிதாக 10,000 பேர்கள் சேர்க்கப் போவதாகச் சொல்கி
றார்கள். இது அவசியந்தானா என்பதை யோசித்துப் பார்க்க
வேண்டும்.

ராணுவத்திலே வேலை இல்லாமல் இருக்கும்; ஆனால் ராணு
வம் எப்போதும் தயாராக இருக்கும். அப்படித் தயாராக
இருந்தாலும்கூட, அங்குள்ளவர்கள் மேல் அதிகாரிகளுக்கு உதவி
கரமாக இருப்பார்கள். ஆனால், நம்முடைய ஜனநாயக நாட்
டிலே இந்த ஆர்டர்லிகள் தேவைதானா என்பதை தயவுசெய்து
எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு அதிகாரிக்கும் மாதம்
150 ரூபாய் என்று அதிகமாகச் சம்பளம் கொடுத்து, அவர்களை
தனிப்பட்ட முறையில் ஆட்களை நியமித்துக்கொள்ளச் சொல்ல
லாம். அதிலே என்ன கஷ்டம் வரப் போகிறது? இந்தப்
போலீஸ் துறையிலே உள்ள ஆர்டர்லிகள் சாதாரணமாக டிரை
வர்களாகவோ, காய்கறி வாங்கிக் கொடுப்பதற்கோ உபயோ
கப்படுத்தப்பட்டு, திரும்பி வரும்போது 2, 3 பட்டைகள் பெற்று
உயர் பதவிக்கு வரும்போது, எவ்விதத் திறமையும் இல்லாமல்
இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆர்டர்லி முறையை அவசி
யம் மாற்றுங்கள்.

அடுத்து, தீண்டாமை ஒழிப்புத் துறை, இந்தத் துறையைப்
பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் பேசப்பட்டது. தனிப்பட்ட
போலீஸ் படை வைத்து, ஊரிலே சும்மா ஒரு போலீஸ் கேசைப்
போட்டு, மோதலை உண்டாக்குகின்ற சூழ்நிலையை எல்லாம்
உருவாக்கப்படுகின்றது. எனவே, இந்தத் தீண்டாமையை ஒழி
பதற்கு, அங்கே ஒரு சமாதான கமிட்டியை அமைத்து, அதிலே
ஆர்.டி.ஓ. இன்னும் அங்குள்ள முக்கியஸ்தர்களை எல்லாம்
போட்டு, இரண்டு பேர்களையும் ஒன்றுசேர்த்து வைக்க வழி
வகை செய்ய வேண்டும்.

[பிற்பகல் 12-30.]

சட்டபூர்வமான நடவடிக்கையை எடுத்து போலீஸ் துறையி
லிருந்து வழக்கு பதியலாம். எதற்கெடுத்தாலும் தீண்டாமை
வழக்குகள் என்றால், மோதல்கள்தான் ஏற்படும். திரு. லத்தீப்
அவர்கள் சிறுபான்மை, சிறுபான்மை என்று சொன்னார்கள்.
சிறுபான்மையினருக்கு அவர் உயிரைக் கொடுப்பது மாதிரியும்
மற்றவர்கள் சிறுபான்மையினரை ஒழித்துவிடுவது போலவும்

சொன்னார்கள். பெரும்பான்மையினரின் ஆதரவோடுதான் இருக்கிறோம் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை இரண்டு ஜனாதிபதிகளை முஸ்லீம்களாகப் போட்டிருக்கிறது. வேறு எந்த நாட்டிலும் இப்படி வேறு மதத்தினர் சாதாரண பதவிக்குக் கூட வரமுடியாது. இந்தியாவில்தான் செக்குலர் ஸ்டேட் என்று சொல்லி பெருமையோடு இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறோம். நண்பர் லத்தீப் அவர்கள் இவ்வளவு வேகமாக அந்தப் பிரச்னையில் ஈடுபட வேண்டாம்.

திருட்டு சாமான்களைக் கண்டுபிடிப்பதில் போலீஸ் கையாளும் முறை என்ன? ஒரு ஆசாரி திருட்டுப்போன பவுன் ஒரு பவுனை வாங்கிவிட்டால் அவ்வாறு கொடுத்தவனை போலீஸ் பிடித்து அவன் இந்த ஆசாரியிடம் கொடுத்தேன் என்று சொன்னதும் அந்த ஆசாரியிடம் போய் பத்து பவுன் திருட்டுப் பொருளை வாங்கியிருக்கிறாய், அதைக் கொடு என்று போலீஸ்காரர்கள் கேட்பார்கள். அப்படிக் கேட்டு அந்த ஆசாரியிடமிருந்து வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். அந்த கேஸ் கோர்ட்டுக்குப் போகாது. என்னுடைய திருமயம் தொகுதியில் ஒரு ஆசாரி வெள்ளித் தட்டை ஒருவன் கொடுத்தான் என்று வாங்கிவிட்டார். திருமயம் போலீசார் திருடனைப் பிடித்து அவனைக் கேட்டபோது இந்த ஆசாரியிடம் கொடுத்தேன் என்று சொன்னவுடன் அந்த ஆசாரியிடம் போலீஸ் போனபோது அவர் அதற்காக ஆயிரம் ரூபாய் கொடுத்து விட்டார். அதே ஆள் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு இராமநாதபுரம் பள்ளத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் பிடிக்கப்பட்டு அப்போதும் ஒரு வெள்ளித்தட்டை அந்த ஆசாரியிடம் கொடுத்தேன் என்று சொல்லி அந்த போலீசார் இந்த ஆசாரியிடம் வந்து மீண்டும் வெள்ளித் தட்டுச்காக ஆயிரம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். கோர்ட்டில் கேசைப் போடுங்கள். இது என்ன நியாயம்? அரசாங்கம் பொற்கொல்லர்களிடம் விசாரிக்கவேண்டும். அவர்கள் உண்மையான நிலைமையைச் சொல்வார்கள். போலீஸ் இலாகாவில் தவறு நடக்கிறது. சில இடங்களில் அவ்வாறு தவறு செய்கிறவர்கள் இருக்கிற காரணத்தால் போலீஸ் இலாகா முழுவதும் இப்படித் தவறு செய்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. மக்கள் மத்தியில் அத்தனை பேரும் தவறு செய்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது.

ரிசர்வ் போலீஸ் யூனிபாரத்தைத் தயவுசெய்து மாற்றுங்கள். முக்கியமான நேரத்தில் அவர்கள் வருவதால் மக்கள் வித்தியாசத்தை உணர்ந்து எச்சரிக்கையோடு இருக்க முடியும். ஊதாச் சட்டை, ஊதா ட்ரவுசர் கொடுங்கள்.

பெண் போலீசாருக்கு சேலை கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அவர்களுக்குச் சேலை வேண்டாம். இன்றைக்கு நாகரிகமாக சாதாரண பெண்களே பாண்ட் போடுகிறார்கள். போலீஸ் பெண்கள் சேலை கட்டினால் எப்படி ஓட முடியும்? நடக்கக்கூட முடியாது. பாண்ட் போட்டுக் கொண்டு ஓப்பன் கோட் அல்லது சட்டை போட்டுக் கொள்ளலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவல் துறையைச் சேர்ந்த பெண்களுக்குச் சேலை கொடுப்பது சரியல்ல என்றார்கள். கர்ப்பமுற்ற நேரத்தில் சேலைதான் கட்டிக் கொள்ள முடியும், கால்சட்டை போட்டுக் கொள்ள முடியாது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

திரு. நா. சுந்தரராஜ்: பெண் கர்ப்பமுற்றால் லீவ் கொடுத்துவிடுவார்கள். வீட்டில் போய் இருக்க வேண்டும். வெளியே என்ன வேலை? மூன்று மாதம் இருக்க வேண்டும். வாச் அண்டு வார்டு சட்டையை வெளியே போய் கொடுக்கலாம். மேலும் வேண்டும், ராணுவத்தில் இருப்பது போல் அவர்களுக்கு யூனிபார்ம் கொடுக்கலாம். டிராபிக்கை ரெகுலேட் செய்யும் பணிகளில் பெண் போலீசைப் போடுகிறார்கள். நாடுகளில் சிங்கப்பூர் போன்ற இடங்களில் டிராபிக் சட்டத்தை அமல்படுத்துவதில் கடுமையாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. சிங்கப்பூரிலுள்ள அவர்கள் டிராபிக் சட்டத்தை கடுமையாக பெண்களும் கர்ப்பம் தரிக்கிறார்கள். இங்கும் டிராபிக்கில் பெண்களை ஈடுபடுத்தினால் அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள், நியாயமாக நடப்பார்கள். ஆகவே டிராபிக் இலாகாவில் ஆண் போலீசை விட அதிகமாக பெண் போலீசைப் போட வேண்டும்.

சாந்தி தியேட்டர் எதிரே சப்-வே இருக்கிறது. அந்த சப்வேயில் போகப் பெண்கள் யாரும் உபயோகிப்பதில்லை. ஆண்களும் பயப்படுகிறார்கள். பயப்படுகிறார்கள்.

இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு தயவுசெய்து மேம்பாலங்களைக் கட்டுங்கள். சப்வே கட்டுவதற்கு ஒன்றும் தப்பில்லை. அதற்குப் பதிலாக 2 13 லட்சம் 8 லட்சம் என்று ஆகிறது. மக்கள் நம்பிக்கையோடு லட்சத்திலே மேம்பாலத்தைக் கட்டுங்கள். போய்விடுவார்களோ போவார்கள். தாலியை அறுத்துக் கொண்டு போய்விடுவார்களோ அல்லது சங்கிலியை அறுத்துக் கொண்டு. மேல் நாடுகளிலே எல்லாம் பயப்படுகிறார்கள் இப்போது. மேம்பாலங்களைத்தான் கட்டுகிறார்கள். சப்வே கட்டுவதில்லை. மேம்பாலம் வேண்டுமென்று கேட்டுக் ஆகவே இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போலீஸ் ரோந்துக்காரர்கள் போகிறார்கள். அவர்கள் எதற்காகப் போகிறார்கள் என்று தெரியவில்லை. தங்களுடைய பெண்களையும் பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு பள்ளிக்கு அழைத்துப் போகிறார்கள். ஒயர்லெஸ் கார்களிலே மக்களுடைய வரிப் பணம் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது. ரோந்துக்கார்களில் செல்கிறார்கள். நிர்வாகம் சரியாக இல்லை. எழுத்திலே எழுதித்தான் காவல் காவல்துறை என்று பெரிய எழுத்திலே இருக்கிறவர்கள், உடுப்போடு தான் போகவேண்டும். உடுப்பிலே இருந்தால் அவர்கள் போகவேண்டும், உடுப்பில்லாதவர்கள் ஆக அதற்காக அரசாங்க தனியாக கார் போகட்டும்.

பணத்தை வாங்கிக்கொள்ளட்டும். ஆனால் அவைகள் இன்றைக்குத் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றன. போலீஸ் அதிகாரிகள் தங்கள் மனைவிமார்களை சினிமாவுக்கு அந்த வயர்லஸ் கார்களிலே அழைத்துச் செல்கிறார்கள். அது கூடாது. மக்கள் எப்படிப் பயப்படுவார்கள்? பெட்ரோல் காராக இருந்தாலும், ரோந்துகாராக இருந்தாலும் சரி மக்களுக்கு போலீஸ் கார் என்றால் ஒரு அச்சம் மட்டும் அல்ல, எந்த நேரத்திலேயும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற கார் தேவை. ஆகவே அப்போது அந்தக் கார் இல்லை. இப்போது தான் இன்ஸ்பெக்டருக்கு காய்கறி வாங்கிக்கொடுத்துப் போகிறேன் என்று சொன்னால் குற்றங்களை எப்படித் தடுக்கமுடியும். ஆகவே இதிலே அதிகமாகக் கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, சென்னை நகரத்திலே அம்பாஸிடர் கார்களைப் பயன்படுத்துங்கள். ஜீப்புகளை எடுத்து கிராமப்புறங்களுக்குக் கொடுத்துவிடுங்கள்' சென்னை நகரத்திலே அம்பாஸிடர் கார்களிலே 2,3 பேர்கள் என்று இருந்து ரோந்து சுற்றிக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்தால் குற்றங்கள் குறையும். முதலமைச்சர் வந்தாலே என்ன முதலமைச்சர் தானே என்ற நிலைமை, ஆனால் அதே நேரத்திலே போலீஸ் வருகிறார்கள் என்றால் மக்கள் பயப்படுகிறார்கள் அப்படிப்பட்ட உணர்வு இருக்கிறது, கலெக்டருக்குக்கூட அவ்வளவு மரியாதை காட்டமாட்டார்கள், ஆனால் போலீஸ்காரர்களுக்கு காட்டுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அம்பாஸிடர் கார்களைக் கொடுத்து ரோந்து சுற்றிச் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து லத்தி. அவர்களுக்கு பெரிய கம்பு எதற்கு? கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் ஊர்வலத்திலே கொண்டுவந்ததைப் போல் பெரிய கம்பு எதற்கு. அதை மாற்ற வேண்டும், சிறிய கம்பு அவர்கள் பெல்டோடு வைத்து கட்டிக்கொண்டு, அதிலே பிக்ஸ் பண்ணி கொண்டு இருக்கிற முறையில் சிறிய கம்பு இருந்தால் போதும்.

கிராமங்களிலே உள்ள சப்இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுத்த மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் இன்றைக்கு கண்டம்ன் ஆன நிலையில் இருக்கின்றன. ஒன்று அவர்களுக்கு சர்க்காரிடத்தி லிருந்து லோன் கொடுத்து அலாட்மெண்ட் கொடுக்கவேண்டும், அல்லது அவர்களுக்கு அதிகமான டி.ஏ.யைக் கொடுக்கவேண்டும், அல்லது கவர்ன்மென்ட் வெகிக்கிள்ஸ் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும், இரண்டும் இல்லாமல் இருந்தால் அவர்கள் எப்படி எந்த ஊருக்குப் போய் இன்வெஸ்டிகேட் பண்ணுவார்கள்? 10 மைல் தூரத்திற்குச் சென்று குற்றம் நடந்தது பற்றி விசாரிக்க வேண்டுமென்றால் பஸ்ஸிலே அவர்கள் போகமுடியாது, டாக்ஸி தான் வேண்டும், யார் காசு கொடுப்பார்கள், பார்ட்டியிடம் தான் வாங்கவேண்டும், 5 ரூபாய் என்றால் 50 ரூபாய் வாங்கு வார்கள். எப்படிக் குற்றங்களைத் தடுக்க முடியும்? என்வே அவர்களுக்கு அந்த வசதிகளைச்செய்து கொடுக்கவேண்டும்.

என் ஊரிலே ஒரு சப்இன்ஸ்பெக்டர் இருக்கிறார், அவர் ரொம்ப கரக்டான பேர்வழி. நேர்மையாக நடக்கிறவர், சிபாரி சுக்கு அவர் கட்டுப்படுவதில்லை. நேர்மையாக நடக்கிறார் என்ற காரணத்தினால் பெரிய பணக்காரர்கள் அவருக்கு வீடு கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். நாம் சொன்னால் கேட்கமாட்டார், எதற்காக கொடுக்கவேண்டுமென்று கொடுப்ப தில்லை, இதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே அவர்களுக்கு வீடுகள் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து டிரைவிங் சொல்லித்தரப்படுகிறது. முதலில் சொல்லித்தருகிறவருக்கு எப்படிக் கற்றுக்கொடுப்பது என்பதற்கு ஒரு பயிற்சியை அவர்களுக்குத் தரவேண்டும். இப்போது டிராபிக் ரூல்லை யாரும் பின்பற்றுவது கிடையாது. எங்கே வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போகலாம் என்ற நிலைமை இருக்கிறது.

"Driving instructors should be given refresher course as far as driving is concerned" என்று கற்றுக்கொடுக்கின்ற முறையிலே அந்த வாத்தியாருக்கு முதலிலே பாடம் கற்றுக்கொடுங்கள். எப்படி ஓட்டுவது

[பிற்பகல் 12-40]

அப்பொழுதுதான் அவர்கள் ஒழுங்காகக்கற்றுக்கொடுக்க முடியும்.

மோட்டார்சைக்கிளை பொறுத்தவரையில் ஹெல்மெட் வைக்க வேண்டியது அவசியம் என்று சட்டத்திலே இருந்தாலும், அது சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை. அதை அவசியம் அமுல்படுத்தப்பட வேண்டும். அதில் ஒரு சில இன்கன்வீனியஸ் இருந்தாலும் அது உயிரைப் பாதுகாக்கிறது. உயிரைப் பாது காக்கும் முக்கியமான ஒரு சாதனமாக அந்த ஹெல்மெட் இருக்கிறது.

அடுத்து மது விலக்குப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், பஸ் ஸ்டாண்டுகளிலே அதிகமாக விற்கிறது. முனிசிபாலிட்டி பஸ் ஸ்டாண்டுகளில் பிக் பாக்கெட் நடப்பதைப்போல எங்கும் நடக்கவில்லை. மதுவிலக்கு என்பது ஃப்ளாரிஷிங் புரொஹிபிஷன் என்ற முறையில் நடந்தாலும், பிக் பாக்கெட் நகரத்திலே மிக முக்கியமான வருமானம் உள்ள தொழிலாக இருக்கிறது. திருவிழாக்காலங்கள், சந்தை கூடும் நேரங்கள் ஆகியவைகளில் நடக்கும் பிக் பாக்கெட்டுகளைப் பார்த்தால், பணத்தைப் பறிகொடுத்தவர்கள் ஐயோ ஐயோ என்று வயிற்றில் அடித்துக் கொள்வதைப் பார்த்தால் அது வேதனையாக இருக் கிறது. அதைத் தடுக்க முடியாதா? நிச்சயமாகத் தடுக்க முடியும். முதல் தடவை தவறு நடந்தால் போலீஸ்காரருக்குத் தெரியாமல் நடக்கிறது என்று பொருள். ஆனால் அதே தவறு இரண்டு தடவை, மூன்று தடவை, நான்கு தடவைகள் நடை பெறும் என்றால் போலீசாருடைய அனுமதியோடுதான் நடக்

கிறது என்று பொருள். ஆகவே, பஸ் ஸ்டாண்டுகளிலே பிக்
பாக்கெட் நடக்கிறது என்றால், போலீசாரின் அனுமதியோடுதான்
நடக்கிறது. போலீசாருக்குப் பங்கு உண்டு என்ற நிலைதான்
உள்ளது. ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுத்து இதைத்
தடுக்க வேண்டும். புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்டில் வெள்ளிக்
கிழமை சந்தைக்குச் செல்லும் விவசாயிகள், இரண்டாயிரம்
மூவாயிரம் என்று ரூபாய்களை வைத்திருக்கும்பொழுது பிளேடி
னால் அறுத்து எடுத்துக்கொண்டு போகிறார்கள். அப்பொழுது
பணத்தைப் பறிகொடுத்தவர்கள் அழுகின்ற அழுகை இருக்கிறதே
அதைப் பார்க்க நமக்குப் பொறுக்காது. அந்த நிலையை
மாற்ற வேண்டும்.

துப்பாக்கிச் சூட்டைப் பொறுத்தவரையில், முதலமைச்சர்
அவர்கள் உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்க
ளுடைய தொகுதியிலே உங்களைக் கேட்காமலே நடந்திருக்கிறது.
அப்படியென்றால் உங்களை அவர்கள் மதிக்கிறார்களா?
சாதாரணமாக என்னுடைய ஊரிலே ஒரு சிறு சம்பவம் நடந்து
விட்டது என்றால் அது என்னுடைய பிரிஸ்டீஜ் பிரச்னை,
கவுரவப் பிரச்னை. ஆனால் அருப்புகோட்டையிலே முதலமைச்
சரின் சொந்தத் தொகுதியிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்று;
ஐந்து பேர் செத்திருக்கிறார்கள், இரண்டு பேர் தலையிலே
குண்டடிபட்டு இறந்திருக்கிறார்கள் என்றால் அது ஒரு கவுரவப்
பிரச்சினை, ஒயர் மெசேஜ் மூலம் முதலைமச்சரோடு தொடர்பு
கொண்டு, உங்கள் தொகுதியிலே கலவரம் நடக்கிறது.
துப்பாக்கிச் சூடு நடத்தப்போகிறோம். அனுமதி தருகிறீர்களா?
என்று கேட்கக்கூட யோக்கியதை இல்லையா?
கேட்டிருக்கக் கூடாதா? என்ன காரணத்தினால் கேட்கவில்லை
முதலமைச்சரைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லையா?
முதலமைச்சர் ரேட்டிபிகேஷன் கொடுத்து விடுவார் என்று
நினைக்கிறார்களா? அல்லது முதலமைச்சருக்கும் இந்தத்
தொகுதிக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறார்களா?
எனவே, இதையொரு கவுரப்பிரச்னையாகப் பார்க்கவேண்டும்
தவிர சாதாரணப் பிரச்னையாக நினைக்கக் கூடாது. என்
ஊரிலே ஒரு சம்பவம் என்றால் எனக்கு அது கவுரவப் பிரச்னை,
முதலமைச்சருடைய தொகுதியிலே நடக்கிறது என்றால்.
அரசாங்கத்தைவிட, தனிப்பட்ட திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
அவர்களுடைய பிரச்னை. அதைப்பார்க்க வேண்டாமா?
எப்படி பார்க்கவேண்டும்? துப்பாக்கிச் சூட்டிலே, 'தலையிலே
சுடச் சொல்கிறார்களா? காலிலேதானே சுட வேண்டும்.
"பிலோ தி நீஸ், ஓய் ஆன் ஹெட்ஸ்". தலையிலே ஏன் குண்டு
விழுந்தது. அதுவும் பெண்கள் தலையிலே இப்படி நடக்கலாமா?
தலையிலே குண்டு இருக்கலாமா? அது எவ்வளவு அவமானம்.

இரண்டாவதாக, மிக முக்கியமான பிரச்னை, நக்சல்பாரி
நக்சல்பாரி என்று சொல்கிறார்களே, யார் அதை நிர்ணயிப்பது?
திருச்சி ஜில்லாவிலே சாதாரண ஒருவர்—பெயர் அடைக்கலம்
ஐயாக்கண்ணு என்று பெயர். கொலை வழக்கிலே கொண்டுபோய்

எஸ்.பி. யிடம் சாப்பாடு நல்லதாகக் கொடுங்கள் என்று சொல்லி
யிருக்கிறார். அவ்வளவு தான், இவன் நக்சல்பாரி என்று
சொல்லி, சேலத்திற்கும் கோயம்புத்தூருக்கும் ஈரோட்டுக்கும்
அனுப்பி இருக்கின்ற ஜெயில்கள் எல்லாவற்றிலும் கண்டம்ட்
செல்லிலே போடச்சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது.

அதேபோல, அருணாசலம் என்பவர், காங்கிரஸ் கட்சியிலே
இருக்கிறவர். முன்பு பிளவுபடாத கம்யூனிஸ்ட் கட்சியிலே
இருந்தவர். அவரை நக்சல்பாரி என்று சொல்லிவிடுகிறார்கள்.
நக்சல்பாரி யார் என்று கண்டு பிடிப்பதற்குத் திறமையில்லையா?
அவர் எப்படி இருப்பார் என்று தெரியாதா? 75 வயதானவரா
நக்சல்பாரியாக இருப்பார்? அதுவும் காங்கிரஸ் கட்சிக்கு
வந்தபிறகா? நாங்கள் அமைதியைக் கடைப்பிடித்துக்
கொண்டிருப்பவர்கள், காந்திய வழி என்று சொல்லிக் கொண்
டிருப்பவர்கள். இப்படியிருக்கும்பொழுது அவரை எப்படி
நக்சல்பாரி என்று சொல்லிவிடுகிறார்கள் என்று தெரிய
வில்லை. ஆகவே, நக்சல்பாரி யார் யார் என்று தெரிந்து
கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—மணி 12—45
ஆகிறது. இன்றைக்கு இந்த டிமான்டை முடிக்க வேண்டும்.
சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டை நகரத்திலே ஏற்பட்ட
வெடிவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித்தொகை
சரியாக வழங்கப்படவில்லை. 30 பேர் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். 13 பேர் செத்து விட்டார்கள். ஆனால் இரண்டு
பேருக்குத்தான் உதவித்தொகை கிடைத்திருக்கிறது; முதலமைச்
சரிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். போன வருஷம்
ஆனால் ஒவ்வொரு ஆளுக்கும் என்று இரண்டு மூன்று பேருக்கு
ரூ. 1,000 வீதம் கொடுத்திருக்கிறார்கள். தயவு செய்து செத்த
13 பேர்களுக்கு 7 பேர்களுக்கோ 13 பேர்களுக்கோ நேற்று
ரூ. 2,500 வழங்கியதைப்போல். எல்லாருக்கும் முதலமைச்சர்
சொந்த நிதியிலிருந்து உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இரண்டாவது நகரத்தில் ஒரு பிரச்சினை இருக்கிறது. அது
உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியவில்லை. முதல
மைச்சர்தான் விளக்கம் தர வேண்டும். காரணம்.
இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனிலே ஒரு 4(1) (ஜே) கேஸ்
புக் ஆகியிருக்கிறது. அந்தப் பகுதியிலே போனவர் முதலமைச்
சருடைய உறவினர் ஒருவர் அங்கே போய் பார்த்து அவரும்
நல்ல நிலையில் இல்லையாம். அவரும் போய் அந்த ஸ்டேஷனில்
தகராறு பண்ணியிருக்கிறாராம். அந்தப் பக்கத்திலே ஏ. சி.
ஒருவர் போயிருக்கிறார். அது என்ன ஒரே கூட்டமாக இருக்கிறது
என்று அங்கே இருந்த இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு விசாரித்துப்
பார்த்ததிலே அந்த இன்ஸ்பெக்டர் விசாரித்துச் சொல்லியிருக்

[திரு. நா. சுந்தர்ராஜ்] [1979 ஏப்ரல் 18

கிறார். அவர் போய் உடனே நடவடிக்கை எடுத்து கமிஷனருக்கு
விவரங்கள் தந்திருக்கிறார். அது சி. எம். முக்கு வந்து
சி. எம். சம்பந்தப்பட்ட நபரை தன்னுடைய அலுவலகத்திற்கு
கிட்டத்தட்ட 20 நாட்கள் வரவிடாமல் தள்ளிவைத்திருப்பதாகத்
தெரிகிறது. ஆக நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம்
மதுவிலக்குக் குற்றங்கள் என்று சொல்லுகிற நேரத்திலே
முதலமைச்சருடைய இலாக்காவிலே இருக்கக்கூடியவர்களே
அதை மீறக்கூடிய நிலைமை இருக்குமானால் மக்கள் மத்தியிலே
நாம் எப்படி அதை அமுல்படுத்தப் போகிறோம்? ....

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
துணைத் தலைவரவர்களே, என் சம்பந்தப்பட்ட நபர் என்று
குறிப்பிடுகிறார்கள். அப்படி யாரையும் 20 நாட்களாக வர
வேண்டாம் என்று சொல்லவில்லை. யார் என்று சொன்னால்
எனக்கு உதவிகரமாக இருக்கும்.

திரு. நா. சுந்தரராஜ் : எனக்குக் கிடைத்த தகவல் பிரகாரம்
திரு இராமதாஸ் என்பவரால் இதுபோன்ற சம்பவம் நடை
பெற்றதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : அவரைப்
பதவியிலிருந்து நீக்கி இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

திரு நா. சுந்தரராஜ் : அதற்காக நன்றி. ஆனால் இது போன்ற
சம்பவம் நடைபெற்றதாக மக்கள் மத்தியிலே பேசிக்கொள்
கிறார்கள். உண்மை. நான் இங்கே வேண்டுமென்றோ அல்லது
விவாதத்துக்கு இழுக்க வேண்டுமென்றோ அந்த நோக்கத்தோடு
சொல்லவில்லை. ஆனால், முதலமைச்சரோடு சம்பந்தப்பட்டவர்
களே, 4 (1) (ஜே) விலே ஆகிறார்கள், அவர்களே மது
விலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள் என்ற நிலைமை ஏற்படு
மானால் நாட்டு மக்கள் மத்தியிலே நாம் அந்தச் சட்டத்தை
கடுமையாக அமுல் படுத்தப் போகிறோமா என்ற அச்சம் தான்
வரும். ஆகவே நான் சொல்வதெல்லாம் முதலமைச்சர்
அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் படுத்த
வேண்டும். அதிலே ஓரவஞ்சனை இல்லாமல் நடுநிலைமையோடு
அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்த
விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி..

திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே இன்றைய தினம் தமிழக முதலமைச்சரவர்
களால் கொண்டு வரப்பட்டுள்ள காவல்துறை, தீயணைப்புத் துறை
மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைக்
கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றியை முதற்கண் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் கள்ளச் சாராய
குற்றங்கள் இந்த அரசு ஏற்பட்ட பிறகு அதிகம் உள்ளதாக
பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஒன்றை மட்டும் இந்த
நேரத்தில் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். நாம்
சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 32 ஆண்டுகள் ஆகின்றன.
மூதறிஞர் இராஜாஜி காலத்திலே இருந்து பேரறிஞர் அண்ணா

1979 ஏப்ரல் 18] [திரு. பொ. சிகாமணி]

காலம் வரையில் காந்திய முறையிலே மதுவிலக்கு நல்ல முறை
யிலே இயங்கி வந்ததை நாட்டு மக்களும் எதிர்க்கட்சியிலே
இருக்கிற பெரியவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால்
இடையிலே வந்தவர்கள் 30 ஆண்டுக்காலம் இல்லாத வகையில்
ஒரு நல்ல தலைமுறையைப் பாழாக்கியதால் தமிழக அரசின்
பொறுப்பை அண்ணா வழியில் ஏற்றிருக்கிற புரட்சித் தலைவர்
தலையில் பழி விழுந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரியவர்கள் சொல்வார்கள்
தகப்பன் செய்த பாவம் அவனுடைய மகன் தலையில் விழுந்தது
என்று. அதனால்தான் சொல்கிறேன் இடையில் வந்தவர்கள்
செய்த பாவத்தினால் தான் இந்த ஆட்சிக்குப் பெயர் ஏற்பட்
டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்
டிருக்கிறேன். அந்தப் பாவத்தைக் களைய ஒரு நிலை ஏற்பட்
டிருக்கிறது. அதற்குத் தமிழக புரட்சித் தலைவர் அவர்கள்
எடுத்திருக்கிற தீவிர முயற்சிக்கு எல்லா எதிர்க்கட்சித் தலைவர்
களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒன்றையும் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். முழுமையாகக் களைய சில தடைக்
கற்கள் இருப்பதை இந்த அரசு உணராமல் இல்லை. புரட்சித்
தலைவர் குறிப்பிட்டதைப் போல சில அதிகாரிகள் பழைய
உணர்வு நிலையிலே இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி
யதை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின் வாயிலாக
நானும் நினைவு படுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட
பழைய நினைவு உணர்வு உள்ளவர்களை இன்னும் தாமதிக்கா
மல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று தமிழக
முதல்வர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.
இன்றைக் காணுகின்ற பொழுது தமிழகத்தில் ஏற்படுகின்ற கலவரம்
துப்பாக்கிச் சூடு போன்ற அசம்பாவிதங்கள் நடைபெற்று வரு
வதைக் காணும்போது முதல்வர் அவர்களே குறிப்பிட்டதைப்
போல் பழைய நினைவு உள்ளவர்கள் ஓயாமல் இருக்கிறார்களோ
என்று நான் சந்தேகிக்கின்றேன்.

(பிற்பகல் 12.50)

ஆனால் சில குறிப்பிட்ட நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள்
என்பதை நாம் உணர வேண்டும். குறிப்பாக சென்னை போலீஸ்
கமிஷனர் அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டியேத்
தீரவேண்டும். சென்னையில் பல இடங்களிலே ஏற்பட்டி
ருக்கிற பிரச்சினைகளை அவர்கள் தீர்த்திருக்கிறார்கள். தகராறு
களை தீர்த்திருக்கிறார்கள். அமைதியை நிலை நாட்டியிருக்கி
றார்கள். குறிப்பாக ஓட்டேரி சம்பவத்தை இந்த நேரத்திலே
குறிப்பிட விரும்புகிறேன். அங்கே எவ்வாறு சூழ்நிலை இருந்
தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்தச் சூழ்
நிலையை காப்பாற்றிய அத்தகைய அதிகாரிகளைப் போல
மற்ற அதிகாரிகளும் செயல் பட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அப்படிச் செயல்பட அதிகாரிகள் முன் வர
வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பொ. சிகாமணி] [1979 ஏப்ரல் 18

தமிழக முதலமைச்சர் அவர்கள் மூன்று அடிஷனல் ஐ. ஜிக்
களைப் போட்டு அமுல் நடத்தப் போவதாக குறிப்பிட்டிருந்
தார்கள். அதை உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டிய
முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

காவல் துறையில் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள்,
அவர்கள் நேரம் முறைபடுத்தப்படவில்லை என்று சொல்கிறார்
கள். உடனடியாக அவர்களை எல்லாம் முறைப்படுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் நிலையங்களும் குறைவாக இருக்கின்றன. அதனுடைய
எண்ணிக்கையை உடனடியாக இந்த நேரத்திலே உயர்த்தி
யேயாக வேண்டும். குறிப்பாக என்னுடைய திருவொற்றியூர்
தொகுதியிலே அதைப்பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.
அங்கே இருக்கின்ற போலீஸ் நிலையத்தில் போதுமான போ
லீஸ்காரர்கள் இல்லை. 30 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி
இருந்ததோ அதே நிலையில் தான் இன்றைக்கும் இருந்து வருகிறது
என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கடுத்
துள்ள பெரம்பூர் காவல் நிலையங்களில் இருப்பது போல
போலீஸ் நிலையங்களை அதிகரிக்க வேண்டும். போலீஸ்காரர்
கள் எண்ணிக்கை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அத்தோடு பக்கத்தில் இருக்கிற மாதவரம் பால் பண்ணை
யில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அங்கே தொலைபேசி
கிடையாது. அந்தப் பகுதியில் முக்கியப் பிரச்சினைகள் அடிக்கடி
எழுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது என்ற காரணத்தினால்
உடனடியாக அங்கே தொலை பேசி அமைப்பதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு.
உமாநாத் அவர்கள் எண்ணூர் காவல் நிலையத்தில் கமலவேணி
என்ற பெண் கொடுத்த புகாரில் எந்தவித நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அது
சரியல்ல புகாரின் அடிப்படையிலே ஸ்பெஷலாக 5 6 போலீஸ்
காரர்களை போட்டு புலன் விசாரணை செய்து தீவிரமாக
செயல்பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவ
தோடு விரைவில் இதில் முடிவு தெரியும் என்பதை மாண்புமிகு
உமாநாத் அவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்தில் குறிப்பிட்டு
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக தீயணைப்பு படையைப்பற்றி ஒரு சில
கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். தீயணைப்புப்
படை பணியாளர்களுக்கு, சிறப்பாக வேலை செய்யும் பணி

1979 ஏப்ரல் 18] [திரு. பொ. சிகாமணி]

யாளர்களுக்கு தங்கப்பதக்கம் அளிப்பதோடு அவர்களுக்கு
ரொக்கப் பரிசும் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே
கேட்டுக் கொள்கிறேன். எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்
காக நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே. இந்தக் காவல்துறை மானியத்தின் மீது எனக்குப்
பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காவல் துறை
யானது இரண்டு பக்கமும் அடி வாங்குகிற மத்தளத்தைப் போன்
றது. நாட்டு மக்களின் நன்மதிப்பையும் பெற முடியாது.
ஆளுகிறவர்கள் கூட குறைகாணுகிற அளவுக்கு இருக்கிற துறை
அப்படிப்பட்ட அந்தக் காவல் துறை நாட்டிலே சட்ட ஒழுங்
கனை, கடுமையாக கடைப்பிடிக்க வேண்டுமென்றால் அந்தத்
துறை தன்னிச்சையாக, யாருக்கும் அஞ்சாமல் இயங்கக்கூடிய
அளவிற்கு இடம் அளிக்கவேண்டும்.

குறிப்பாக சீராளன் கொலை வழக்கில், குற்றம் சாட்டப்
பட்ட சீராளனை காவல் துறையினர் தற்காப்பு நடவடிக்கை
எடுப்பதற்காக தாக்கியதை எதிர்த்து அந்த அதிகாரிகள் மீது
வழக்கு தொடரப்பட்டு, இன்று வழக்கு மன்றத்திலே அவர்கள்
குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.
ஆனாலும் இன்றுவரை அவர்கள் பணியிலே சேர்த்துக் கொள்ளப்
படவில்லை. இப்படிப்பட்ட குற்றவாளியை கைது செய்வதற்
கான நடவடிக்கையில் அவர்கள் தற்காப்பு பிரயோகத்தை
செய்வதற்கும் அஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
அவர்களுக்கு அவர்கள் பணிகளுக்கு பாதுகாப்பு இல்லை. இப்படிப்
பட்ட நிலைமையில் காவல் துறையில் பணியாற்றுகிறவர்கள் எந்த
அளவிலே பணியாற்றுவார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கிறது.

திருப்பத்தூர் பக்கத்திலே சென்ற வெள்ளிக்கிழமை அன்று
தச்சூர் என்ற கிராமத்திலே ஒருவர் நக்ஸலைட்டுகளால்
கொலை செய்யப்பட்டிருக்கிறார். அங்குள்ள மற்றவர்களுக்
கும் கொலை செய்யப்படுவார்கள் என்று பயமுறுத்தி கடிதங்
கள் வந்திருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட நிலைமையை
தடுப்பதற்கு அங்குள்ள போலீஸ்காரர்கள், போலீஸ் அதிகாரி
கள் அஞ்சுகிறார்கள். அப்படி அஞ்சுகின்ற நிலைமை ஏற்
பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் காவல் அதிகாரி
களுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையில் இப்படிப்பட்ட
குற்றங்கள் ஏன் அதிகரிக்காது? காவல் துறையைப் பொருத்த
வரையில் தன்னிச்சையாக, சுதந்திரமாக நிர்ப்பயமாக
யாருக்கும் அஞ்சாமல் தங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இடம்
அளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

[திரு. ப. சந்திரன்] [1979 ஏப்ரல் 18

அவர்கள் குற்றவாளிகள் மீது சிறிது கடுமையாக நடவடிக்கை
எடுக்க அனுமதி அளிக்கவேண்டும். இல்லையென்றால் அவர்
களுடைய பணியை அவர்கள் செவ்வனே செய்ய முடியாது என்று
சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு காவல் துறைதான் மதுவிலக்குக் குற்றவாளிகளை
பிடிக்கிறது என்பதை அத்தனை பேரும் உணர்கிறோம். அப்படிப்
பார்க்கிறபோது அந்த மது விலக்குக் குற்றவாளிகளை கோர்ட்
டுக்கு அழைத்துச்செல்வதும் அந்தக் காவல் நிலைய பொறுப்பில்
தான் இருக்கிறது. ஆகவே, காவல் நிலைய அதிகாரிகளுக்கு
இந்த வேலை தான் முழு நேர வேலையாக இருப்பதால், மற்ற
குற்றங்களை கண்டுபிடிக்க அவர்கள் கவனம் செலுத்த முடி
யாத நிலை இருக்கிறது. ஆகவே, காவல் நிலையத்திற்கு அதிக
மான காவலர்களை நியமிக்க வேண்டும். அதோடு அந்த மது
விலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க செல்கிற அந்த காவல்
துறை அதிகாரிகளுக்கு தற்காப்புக்காக கைத்துப்பாக்கிகளை
எடுத்துச்செல்ல அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஏனென்றால், என்னுடைய பகுதியில் இருக்கும், பெரண
மல்லூரில் ஒரு காவல் அதிகாரி இருக்கிறார். அவர் மிகவும்
திறமை வாய்ந்தவர். வயதில் இளைஞர். நேர்மையான உள்ளம்
படைத்தவர். அந்தக் காவல் நிலைய அதிகாரி பல முறை
மதுவிலக்குக் குற்றவாளிகளை பிடிக்கச் சென்ற நேரத்தில்
தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் கூடச்
சொன்னேன், தனியாகச் செல்லாதீர்கள், போலீஸ் ஸ்டான்
டிங் ஆணைபடி 10 பேரை தாங்கள் கூட அழைத்து செல்
லாம். அந்த மாதிரி அழைத்துச்செல்ல வேண்டும் என்று
சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர் தனியாகவே, அவருக்கு
கொடுக்கப்பட்டு இருக்கும் மோட்டார் சைகிளை வைத்துக்
கொண்டு சென்று அந்த மது விலக்குக் குற்றவாளிகளைப் பிடிக்க
துணிச்சலான முறையில் பணியாற்றிவருகிறார். அப்படி அவர்கள்
சென்ற நேரத்தில் 2-3 தடவை அவர் தாக்கப்பட்டு, பல்
உடைக்கப்பட்டு இருக்கிறது. செருப்பால் அந்த குற்றவாளிக
ளால் தாக்கப்பட்டு இருக்கிறார். அவர் இன்று மருத்துவ
மனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார். அப்படி அவர் குற்ற
வாளிகளைப் பிடிக்கச் சென்ற நேரத்தில் அவர்கள் ரூ. 500
கொடுத்து விடுகிறோம் விட்டு விடுங்கள் என்று லஞ்சம் கொடுக்க
முயன்றும் அவர்கள் நேர்மையாக நடந்து, அந்தக் குற்ற
வாளிகளை கையைக் கட்டி அழைத்து வந்ததால் இப்படி
தாக்கப்பட்டு இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளில்
பணியாற்றும் காவல் துறையினரை நாம் பாராட்டியாக வேண்டும்.

காவல் துறையில் செயல்படுகின்ற கடைசி நிலை[illegible]
உள்ள காவலர்கள் மீது தான் ஒழுங்கு நடவடிக்கைகள் அதிக[illegible]
எடுக்கப்படுகின்றன. மற்ற அதிகாரிகள் மீது நடவடிக்கைகள்
எடுப்பது இல்லை. ஆனால் அதே நேரத்தில் காவல் நிலை
யத்தில் இருக்கிற அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுப்ப[illegible]

1979 ஏப்ரல் 18] [திரு. ப. சந்திரன்]

அபிலாட்சை
இல்லை. அந்தக காவல்துறை அதிகாரிகளின் தேவையான
களை நிறைவேற்றுவதற்கு, அவர்களுக்குத் மூலம்
வசதிகளை செய்து தருவதற்கு, அந்தக் காவலர்கள் மறந்து விடக்
தான் பணம் செலவழிக்கப்படுகிறது என்பதை சோதனை
கூடாது. ஒரு அதிகாரி ஒரு காவல் நிலையத்திற்கு நேரத்தில்
யிட வருகிறார்கள் என்றால் அவர்கள் வருகிற என்ன
அந்த அதிகாரிக்கு என்னென்ன வசதிகள் தேவையோ செய்யவேண்டும்
சௌகரியங்கள் தேவையோ அதையெல்லாம் போவார்கள். மக்களி
என்றால் அவர்கள் பணத்திற்கு எங்கே வேலையைச் செய்யமுடியும்
டையே லஞ்சம் பெற்றுத்தான் அந்த அப்படிப்பட்ட முறை
என்பதை நாம் மறந்து விடக்கூடாது. விசிட்டிங்
யில் காவல் துறை அதிகாரிகள் காவல் நிலையத்திற்கு சலுகைகளை,
செய்கிற நேரத்தில் இப்படிப்பட்ட வசதிகளை, கொள்கிறேன்.
எதிர்பார்க்கக்கூடாது என்று நான் சொல்லிக்

அதோடு மட்டுமல்லாமல், காவல் துறையைப் பொறுத்த
வரையில், சொத்துரிமை வழக்குகளில் சொத்துரிமை குற்றங்
கள் என்று இருக்குமானால், அந்தக் குற்றங்களில் காவல்
துறை கவனம் செலுத்தக்கூடாது என்று விதி இருக்கிறது.
அப்படிப் பார்க்கிற போது 2 பேருக்கிடையேயும் சொத்து தகராறு
ஏற்பட்டு அடிதடி ஏற்பட்டதால் அந்தப்புகார் காவல் நிலை
யத்திற்கு எடுத்துச்சென்றால், இது சிவில் குற்றம் நாங்கள்
எடுத்துக்கொள்ள முடியாது என்ற அளவில் பிரச்சனைகள் புறக்
கணிக்கப்படுகின்றன. இது சிவில் கேஸ் என்று தள்ளுபடி செய்
யாமல் அவர்கள் அந்தப் பிரச்சனைகளை எடுத்துச் செயல்
படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
அப்போது தான் நீதிமன்றங்களில் தீர்ப்பு வருகிறபோது
அந்தத் தீர்ப்பை நிறைவேற்ற காவல் துறையால் முடியும்.
ஆகவே சிவில் நேச்சர் என்ற காரணம் சொல்லிப் புறக்கணிக்கக்
கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஏங்களுடைய தொகுதியான தேசூரில் புறக்காவல் நிலை
யம் இருக்கிறது. குறிப்பாக, குற்றங்கள் மது விலக்குக் குற்றங்
கள் அதிகமாக இருப்பதால், தன்னிச்சையாக செயல்படும்
காவல் நிலையமாக அதை ஆக்கவேண்டும என்று கேட்டுக்
கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

இடிந்து
ஆற்காட்டிலே இருக்கின்ற காவல் நிலையம் சொன்னார்கள்.
விழக்கூடிய நிலையிலே இருக்கிறது என்று காவல்துறையினர்
அப்படிப்பட்ட நிலையிலே அங்கே உள்ள போட்டு பணி
வராண்டாவிலே சேர்களையும் பெஞ்சுகளையும் எண்ணிப்பார்த்து அங்கு
யாற்றிக்கொண்டிருக்கின்ற நிலைமையை செய்து தரவேண்டும் என்று
வேண்டிய எல்லா வசதிகளையும் விரும்புகிறேன்.
நான் சொல்லிக்கொள்ள

அடுத்து குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலே சினிமாத் திரையரங்குகள் இருக்கின்றன. அங்கே மக்கள் நெருக்கமாக இருக்கின்ற நேரத்திலே ஜேப்படி கள், பிக்பாக்கெட்டுகள் அதிகமாக ஏற்படும் என்ற கார ணத்தால் அந்தப் பகுதிகளிலே காவலர்கள் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் திரையரங்குகளில் டிக் கட் ஒழுங்காக விற்கப்படுவதில்லை. இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் கூட என்னுடைய சகோதரர் ஒருவரோடு சினிமாவுக்கு சென்ற காலத்திலே அங்கே டிக்கெட்டுகள் எல்லாம் ப்ளாக் மார்க்கெட்டுக்கு வந்துவிட்டது. திரையரங்கிலே டிக்கெட் கொடுக்கப்பட வில்லை. அப்போது அங்கே இருந்த காவலர்கள் சென்று ப்ளாக் மார்க்கெட்டில் டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்து எனக்குத் தந்திருக்கிறார்கள். ஆகவே படங்கள் புதிதாக திரையிடப்படுகின்ற நேரங்களிலே சென்னை நகரிலுள்ள திரையரங்குகளிலே டிக்கெட்டுகள் பிளாக் மார்கெட்டுக்கு வந்துவிடுகின்றன. இதனை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவல் துறையினரிடம் சில குறைகளை எடுத்துச் சொல்வதாக இருந்தால், குறிப்பாக மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற நாங்கள் ஏதேனும் குறைகளை எடுத்துச் சொல் வதாக இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதே இல்லை. சென்ற ஆண்டு கூட நெடுங் குணம் என்ற ஊரில் இரண்டு சிலைகள் கிடைக்கப்பட்டது பற்றிக் கூறினேன். கிடைத்த இரண்டு சிலைகளில் ஒன்றை ஒருவர் எடுத்துக் கொண்டு சென்று விட்டார். அதன் பிறகு அதனை விற்று விட்டார். அதனை வெளி நாட்டிற்கு விற்றிருக்கிறார்கள். அது பற்றிய விவரங்கள் எல்லாம் டேப் ரிக்கார்டரில் இருக்கின்றது. அந்த டேப் ரிக்கார்டர் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒப்படைக் கப்பட்டிருக்கிறது என்ற வகையிலே விளக்கமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். அந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி நாங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு புகாரையும் பரி சீலித்து அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள பலர் ஆவலாக இருக்கிறோம். ஆகவே நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட வேண்டும். ஒரு பஞ்சாயத்து யூனியன் என்று சொன்னால் அங்கே உள்ள பணியாளர்களுக்கு தங்கள் பணிகளை ஆற்று வதற்கு ஜீப் வழங்கப்படுகிறது. அதே போல் காவல் துறைக்கும் ஜீப்புகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக மதுவிலக்குக் குற்றங்கள் சம்பந்தமாகச் செல்கின்ற போது பத்து பேர்களுக்கு மேல் செல்ல வேண்டும் என்று போலீஸ் ஆர்டர் இருக்கிறது. அந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்று அந்தப் பணியைச்

செய்ய முடியாது. ஆகவே அவர்கள் செம்மையாக பணியை ஆற்றுவதற்கு வசதியாக அவர்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்த வரையில் அங்கே பணியாற்றுகின்ற காவல் துறையினருக்குரிய உடைகளிலே மாற் றங்கள் செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு சரியான உடை கிடையாது. சில நேரங்களிலே அவர்கள் ரோந்து சுற்றிக் கொண்டு வருகின்ற போது காலிலே ஒரு உறையை மட்டும் சுற்றிக் கொண்டு செருப்பு கூட இல்லாமல் வருகிறார்கள். காவல் துறையினர் என்றால் அவர்கள் கம்பீரமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தங்கள் பணியைச் செவ் வனே செய்ய முடியும். ஆகவே அந்த வகையில் நம்து அரசாங் கம் எண்ணிப் பார்த்து கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். சென்னை நகரத்திலே இருக்கின்ற தெருக்களிலே நடந்து செல் வதற்கு முடியாத அளவில் கடைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். அது மட்டுமல்ல, தெருக்களிலே பிச்சைக்காரர் கள் அதிகமாக இருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, தொழு நோயாளிகள் அதிகமாகத் தெருக்களிலே அமர்ந்து கொண்டு மிகவும் கோரமான நிலைமையிலே இருந்து வருகிறார்கள். சென்னை நகரிலே இருக்கின்ற சுரங்கப் பாதைகள் அனைத்தும் பிச்சைக்காரர்களின் அடைக்கல இடமாக இருக்கிறது. அப்படிப் பட்ட இடங்களில் பிச்சைக்காரர்கள் இருப்பதை அப்புறப் படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அத்தோடு காவல் துறையினர் பொருளாதார நிலையினை எண்ணிப் பார்த்து அந்த நிலைகளை எல்லாம் சீர் செய்யுமாறு கேட்டுக்கொண்டு மற்றும் அவர்களுக்குரிய வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

*திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் துணைத்தலைவர் அவர் களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக் களைக் கூற கடமைப் பட்டுள்ளேன். தமிழக போலீஸார் நல்ல திறமையும், நேர்மையும் உள்ளவர்கள் என்று எல்லோராலும் பாராட்டப் பெற்றவர்கள். ஆனால் கொள்ளைக் கூட்டத்தையோ, சாராயம் காய்ச்சுபவர்களையோ, குடிப்பவர்களையோ விரட்டிப் பிடிக்கின்ற வேளையில் அவர்களுக்கு மேல் அதிகாரி களிடமிருந்து எந்தவித பாதுகாப்பும் இல்லை. சில சமயங்களில் அவர்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் வேலைக்கு இடையூறு ஏற்பட்டு விடுகிறது என்று அந்த கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் கூறுகிறார்கள். கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் எவ்வளவோ திறமையாகத் தங்கள் பணியைச் செய்தாலும் மேல் மட்ட அதிகாரிகளிடமிருந்து கீழ் மட்ட

போலீசாருக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. என்று அவர்கள் கூறுகிறார்கள். மேல் மட்ட அதிகாரிகள் கீழ் மட்ட அதிகாரிகளுடைய கஷ்டத்தை எண்ணி அவர்களுக்குச் சில பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் அநேக போலீஸ் நிலையங்களில் தொலை பேசி இணைப்பு கொடுக்கப்பட வில்லை. அதன் காரணமாக அவசரமாக சில காரியங்களைச் செய்ய வேண்டும் எனறால் அந்தப் போலீஸ் நிலையங்களுடன் தொடர்பு கொள்ள முடிய வில்லை. அதனால் சில காரியங்கள் பாதிக்கப்படுகின்றன; என்னுடைய தொகுதியில் வடக்கு விஜயநாராயணம், திருக் கரங்குடி, மூலைக்கரைப்பட்டி போன்ற ஸ்டேசன்களுக்கு தொலை பேசி இணைப்பு இல்லாது சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் தொடர்பு கொள்ள மிகவும் கஷ்டமாக உள்ளது. ஆகையால் அப்படிப்பட்ட ஸ்டேஷன்களுக்கு விரைவில் தொலை பேசி இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

தீவிரமாக நாட்டுப் பற்றுடனும், திறமையுடனும் பணி புரியும் போலீஸ்காரர்களுக்கு திறமைக்குத் தகுந்தவாறு, தகுந்த பதவி உயர்வும், பரிசுகளும் வழங்கப்பட வேண்டும், அவர்களை மேன் மேலும் ஊக்குவித்தால் அவர்களது பணி நல்ல முறையில் இருக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னையில் உள்ள போலீஸ் பயிற்சி கல்லூரியில் சிறந்த திறமையான விளையாட்டு வீரர்கள் இருக்கின்றனர். அவர் களை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த கோச்சர்களும், இருக் கின்றனர். ஆனால் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால் திறமை படைத்த வீரர்களை முன்னணியில் கொண்டு வர முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால் நல்ல ஒதுக்கீடு இந்த அரசு செய்து தமிழக போலீஸாரை ஊக்கப் படுத்தினால் ஆசிய விளையாட்டு அரங்கிலே தமிழக போலீஸ் முதல் இடத்தை பிடிப்பதற்கு வழிவகை செய்யும். ஆகையால் போதுமான அளவு விளையாட்டு வீரர்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

கீழ் மட்டத்தில் உள்ள தலைமை போலீஸ்காரர்களையோ அல்லது சப் இன்ஸ்பெக்டர் பற்றியோ பொது மக்கள், மேல் மட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் புகார் மனு எழுதி சட்ட மன்ற உறுப்பினர்களும் அனுப்பும் சமயங்களில் சட்ட மன்ற உறுப்பினர் இது குறித்த புகாரை மேல் மட்ட அதிகாரிகளுக்கு கொடுக்கும் சமயங்களில் மேல் மட்ட அதிகாரிகள், எஸ். பி., நேரடி விசாரணை செய்யாது கீழ் மட்டத்தில் உள்ளவர்களையே விசாரணை செய்யும் போது, மக்களுக்கு சரியான நீதி கிடைப்ப தில்லை. ஆகையால் மாவட்ட போலீஸ் அதிகாரியே, எஸ்.பி., நேரில் விசாரணை செய்ய் வேண்டும். இதனால் பல கிரிமினல் கேஸ்கள் தடுக்கப்படும்.

சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். உதாரணத்திற்கு நடந்த நெல்லை மாவட்டம், நாங்குனேரி தொகுதியில் மூலைக்காரைப் பட்டி போலீஸ் சரகத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் பால சுப்பிரமணியம் என்பவர், சாராயம் காய்ச்சுபவர்களையும், குடிப்பவர்களையும், ரவுடிகளையும், தன் கைக்குள் வைத்துக் கொண்டு ஏழை மக்கள் மீது ஒரு சாராரை வைத்து மனு எழுதச் செய்து ஒரு சாராரிடம் பணம் வாங்கிக் கொண்டு மறு சாராரை இம்சிப்பதுடன் ஒவ்வொரு ஊர்களிலும் பிளவு ஏற்படுத்தி வருகிறார். மேலும் இந்து அரிசன, கிருத்துவர் மத்தியில், மத வெறி, போன்ற வெறிகளை ஏற்படுத்தி பிரச்னையை வலுவடையச் செய்தும் சில அரிசனங்கள் மத்தியில் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மத்தியில் துவேஷத்தையும் தகராறு களையும் வலுப்படுத்தி தகராறுகள் ஏற்படுத்தியும் வருவதால் இது குறித்து பொது மக்களில் சிலர் மேல் மட்ட, போலீஸ், அதிகாரிகளுக்கு பல முறை மனு கொடுத்தும் எந்தவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை.

இது குறித்து மாவட்ட போலீஸ் அதிகாரி நேரில் சென்று அதே போலீஸ் ஸ்டேஷனில் வைத்து இரு சாராரையும் சப் இன்ஸ்பெக்டரையும் விசாரணை செய் தால்தான் உண்மை நிலை தெரியும். ஆனால் அதற்கு மாறாக சர்க்கிள் இன்ஸ்பெக்டரை வைத்து விசாரிக்கச் செய்தால் அவர் சப் இன்ஸ்பெக்டர் மீது அன்பு கூர்ந்து அவருக்கு சாதகமாகத் தான் எழுதுவார். இப்போதும் மூலைக்காரைப்பட்டி சப் இன்ஸ் பெக்டர் பாலசுப்பிரமணியம் என்பவர் விஷயத்திலும் அப்படி தான் நடந்து வருகின்றது. சமீபத்தில் அதே சப் இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியத்திடம் நேரில் சென்று 14—3—79-ல் குறை களை நேரில் அவரிடம் நான் கூறியதற்காக அவர் என் மீது கூட ஒரு புகார் மனு எழுதிக் கொடுக்கும்படி சில நபர்களிடம் கேட்டுள்ளார். இது குறித்து மாவட்ட போலீஸ் அதிகாரி அதே ஸ்டேஷனில் வைத்து விசாரணை செய்தால் மக்களுக்கு நீதி கிடைப்பதுடன் அவர் மீதுள்ள புகார்களை நிரூபிக்கவும் வழி வகை செய்யும். சில நபர்களை அவர் அவருக்குப் பணம் வாங்கிக் கொடுக்க தரகர்களாக நியமித்துள்ளார். இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து ஸ்டேஷனில் வைத்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் அவரது தூண்டுதலால் கொலை முயற்சி கூட நடைபெறும் என்பதனையும் கூறிக்கொள்கிறேன் இது குறித்தும் நான் புகார் கொடுத் துள்ளேன்.

[பிற்பகல் 1-10]

சில சமயங்களில் மக்கள் களவு போய்விட்டது என்று போலீஸ் ஸ்டேஷனில் போய் ரிப்போர்ட் கொடுக்கப்போகும்போது, அதைப் பற்றி விசாரிக்க வருவதற்கு கார் வசதியில்லை என்று சொல்லி விடுகிறார்கள். 100 ரூபாய் மதிப்புள்ள பொருள் களவு போய் விட்டது என்றால், அதற்கு 200 ரூபாய் 300 ரூபாய் என்று செலவு

செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்களை
நிவர்த்தி செய்வதற்கு, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு
ஜீப் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்
கிறார். அவரிடம் ஏதாவது புகார் மனு கொடுக்கச் சென்றால்,
மனு கொடுக்க போகிறவரின் ஜாதியின் பெயரைச் சொல்லி
அவதூறான வார்த்தைகளை சொல்லி திட்டுகிறார். அந்த
இடத்தில் போலீஸ் ஆட்சி தான் நடைபெற்றுக்கொண்டிருக்
கிறதோ என்று மக்கள் எண்ண வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.
சாதாரணமாக நெல்லை ப ஸ்டாண்டுகளில் களவுகள் நடை
பெறுகின்றன. போலீஸ் அதிகாரிகள் இதற்கு எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கவில்லை. கேட்டால் பெரிய போலீஸ்
அதிகாரிகளிடம் கூறச் சொல்கின்றனர். ஆனால் நமது முதல
மைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்த நேரத்தில்,
அங்கு வந்திருந்த கன்னியாகுமரி மாவட்ட கலெக்டரிடமிருந்து
500 ரூபாய் களவு போய்விட்டது. சட்டமன்ற உறுப்பினர்
விடுதியில் உறுப்பினருடைய ஷர்ட் பாக்கெட்டிலிருந்து களவு
செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி இங்கே சொல்லும்
போது சபாநாயகர் அவர்களுடைய வீட்டிலேயே களவு போயிருக்
கிறது என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்
போது, தமிழ்நாட்டில் சாதாரண மக்களுக்கு எந்தவிதமான
பாதுகாப்பும் இல்லையோ என்று தோன்றுகின்ற எண்ணத்தை
நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி வழங்குகின்ற விஷயத்தில்
சில கட்சிகளுக்கு 10 மணி, 10½ மணி வரை என்றும், இல
கட்சிகளுக்கு 12 மணி வரையிலும் அனுமதி வழங்குகிறார்கள்.
இதைப்பற்றி ஏன் இவ்வாறு பாகுபாடு செய்து அனுமதி வழங்கு
கிறீர்கள் என்று கேட்டால், இது தான் எங்களுக்கு உத்தரவு
என்று போலீசார் கூறுகிறார்கள். இப்படி எந்த அடிப்படையில்
கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. பாகுபாடற்ற முறை
யில், எல்லோருக்கும் பொதுவாக 10 மணி அல்லது 11 மணி
என்று ஒரே விதமாக அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிலையில் தமிழகத்தின் சாதாரண ஒரு
தொழிலாளியினுடைய சம்பளம் தான் போலீஸ்காரர்கள் வாங்கு
கிறார்கள். கடந்த காலத்தில் இவர்களுடைய ஊதியத்தைப்பற்றி
தேசீயக்குழு ஒரு விவரமான அறிக்கையை கொடுத்திருக்கிறது.
மாநில அரசு தான் இதைச் செய்ய வேண்டுமென்றிருந்தாலும்
இந்த அறிக்கையைப் பரிசீலித்து அதற்குத் தகுந்தவாறு
சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்குநேரி வட்டத்தில் களக்காடு சரகத்தில் சாதாரண
விவசாயி, பால் எடுக்கும் தொழிலாளி போலீஸ் ஸ்டேஷனில்
சென்று புகார் மனு பணவற்றை கொடுத்திருக்கிறார். ஆனால்,

விசாரிக்கவில்லை.
அதைப்பற்றி அதிகாரிகள் உடனடியாக வெட்டப்
சிறிது நாட்களுக்குப் பின்னால் அவரது கை துண்டாக
பட்டிருக்கிறது. அவர் கொடுத்த மனுவின் மீது நடவடிக்கை
எடுத்திருந்தால் இந்த நிலை மாற்றப்பட்டு சூழ்நிலை அவருக்கு
உதவியாக இருந்திருக்கும்.

போலீஸ்காரர்கள் சில நேரங்களில் கிராமங்களுக்குச் செல்லு
கிறார்கள். லஞ்சம் கேட்கின்ற முறையில் பனைமரமும் ஏறும்
தொழிலாளிகளிடம் ஒவ்வொருவரிடம் இரண்டு கிலோ பனை
வெல்லம் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படி கொடுக்க
வில்லையென்றால், அவர்கள் மீது களங்கம் கற்பிக்கின்ற வகை
யில், கள் வைத்திருந்ததாக பொய் கேஸ் போடுகிறார்கள். இப்
படி பனையேறும் தொழிலாளிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கி
றார்கள். இதை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான்குனேரி மருத்துவ மனையில் போஸ்ட்மார்ட்டம் நடத்தக்
கூடிய இடம் ஊருக்கு மத்தியில் இருக்கிறது. இதனால் ஊருக்
குள் சுகாதாரம் கெடுகிறது. இதை இரண்டு பர்லாங் தூரத்
திற்கு அப்பால் இதற்கென்று ஒரு கட்டிடம் கட்டி மாற்றவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்பு நிலையத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட
தலைநகரத்தில் தான் அமைத்திருக்கிறார்கள். கிராமங்களில்
தீ விபத்து ஏற்பட்டால் மாவட்ட தலைநகரிலிருந்து 20, 25
மைல் கடந்து உரிய நேரத்தில் வண்டிகள் வந்து சேர
முடியாத நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தாலுகா
அளவில் — யூனியன் அளவுக்கு இல்லாவிட்டாலும் யூனியன்
அளவுக்குக்கூட வைத்துக்கொள்ளலாம் — உடனடியாக ஒவ்வொரு
வட்ட தலைநகரிலும் ஒவ்வொரு தீயணைப்பு அலுவலகம்
ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில், சுத்தமல்லி என்ற இடத்தில் அங்
குள்ள விவசாயிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும் இடையில் சிவில்
கேஸ் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் போலீஸ்
காரர்கள் அங்குள்ள மிட்டா, மிராசுதார்களுக்கு ஆதரவாக
இருந்துகொண்டு வருகின்றனர். இதுபோல் நாங்குநேரி, தோட்
டக்குடி கிராமத்தில் அங்குள்ள மிராசுதார்களுக்குச் சொந்த
மான 200 ஏக்கர்களை 150 விவசாயிகள் பயிர் செய்து கொண்டி
ருக்கிறார்கள். இந்தப் பயிரை எடுப்பதற்கு சிவில் கேஸ்
மூலமாக இன்ஜெக்ஷன் ஆர்டர் எடுப்பதற்கு முன்னால, விவசாயி
களுடைய பயிரை எல்லாம் குண்டர்களை விட்டு அறுத்தெடுப்ப
தற்கு போலீஸ் உதவியாக இருந்திருக்கிறது. இதன்மீது அங்
குள்ள விவசாயிகள் அதிகாரிகள் மத்தியில் சென்று அவர்கள்
அனுகினாலும் கூட அவர்களுக்கு அங்கு எந்தவிதமான பாது
காப்பும் இல்லை.

சில நேரங்களிலே ரோடுகளில் ஆக்சிடெண்ட் நடைபெறுகிறது.
கார் ஆக்சிடெண்ட் நடை பெறுகிறது; அதேபோல் வண்டி,
சைக்கிள் ஆக்சிடெண்ட் எல்லாம் நடக்கிறது. அப்படி நடக்கும்
போது, காவல் துறையினரால் உடனடியாக அவர்கள்
உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆனால், இன்
றைக்கு அப்படி போலீசார் வந்து சந்திக்கும்போது, ஸ்டேட்மெண்ட்
வாங்குகிறார்களே தவிர, அவர்கள் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்
கும் வகையிலே அவர்களை உடனடியாக மருத்துவ மனைக்குக்
கொண்டு போவதில்லை ஸ்டேட்மெண்ட் வாங்குவதற்கு முன்பு
அவர்கள் உயிர் ஊசலாடிக்கொண்டு பிரிந்துவிடக்கூடிய ஒரு
சூழ்நிலைதான் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நேரங்களில்
போலீசார், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே
உதவ முன்வரவேண்டும். அதே சமயத்தில, அரசும் அவர்களுக்கு
ஓரளவு ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை
பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இன்றைக்கு அவையிலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்
கின்ற காவல்துறை, தீயணைப்பு மானியங்களின் மீது பார்வேர்ட்
பிளாக் கட்சியின் சார்பாக கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்
படுகிறேன். இந்தியாவிலேயே புலன் விசாரணை நிர்வாகத்தில்
பெயர் பெற்றது, தமிழக போலீஸ் நிர்வாகம். இன்று ஓரளவு
திறமையைக் காத்து வருகின்ற நிலைமையிலே இருந்தாலும், மிக்க
வேதனையோடு உண்மையைக் குறிப்பிட்ட கடமைப்பட்டவனாக
இருக்கிறேன். காரணம், எங்களைப் போன்றவர்கள் ஆட்சியை
யார் ஆளுகின்றனார்கள் என்பதைப்பற்றிக் கருதாமல், யார்
மக்களுக்கு அதிகமாக நன்மை செய்வதில் அக்கறை கொண்டு
ஆட்சி புரிகின்றார்களோ அத்தகையவர்களுக்கு, முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி இருக்கவேண்டாம் என்ப
திலே அக்கறையுள்ளவர்கள் இந்த நாட்டிலே இருந்தாலும்,
எங்களைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களுக்கு
கிடைக்கவேண்டிய அடிப்படைத் தேவைகளைச் செய்யக்கூடிய
கட்சிக்கு பெருந்த அளவிலே ஆதரவைத் தந்து, ஆலோசனை
கொடுத்து, அதே நேரத்தில் கருத்து வேறுபாடு ஏதாவது
இருந்தால், அந்த அளவிலே அரசியலிலேயும் செயல்படுகின்ற
நிலைமையிலே செயல்பட்டு வருகின்றோம் என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

இந்தக் கண்ணோட்டத்தோடு நான் சொல்லுகின்றபோது
இன்று லஞ்ச லாவண்யமற்ற, ஊழலற்ற நிர்வாகம் நடத்தப்படு
கின்றது என்பதற்காக சந்தோஷப்படுகிறேன். தமிழகத் தாய்
மார்களிடம் அதிகமாக வாக்களியுங்கள் என்று உறுதிமொழி
களைக் கொடுத்தார்கள். அந்த உறுதிமொழி எதிர்
காலத்திலும் இருக்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு முதலமைச்
மைச்சர் அவர்கள் வெள்ளை உள்ளத்தோடு உண்மையை
சொன்னார்கள்,

அதிகாரிகள் உதவித் தொகை வேண்டும் என்று கேட்டபோது,
கொடுக்கத் தயாராக இருக்கிறேன், ஆனால் ஏழை எளிய மக்கள்
வாழ வசதியில்லாமல், உண்ண உணவு இல்லாமல், பேசிக் நெசசிடி
basic necessity கூட இல்லாமல், அடிப்படை வசதிகூட இல்லாமல்
பல லட்சக்கணக்கான குடிமக்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு
வசதிகள் செய்யவேண்டும். இன்னும் நீங்கள் பேராட்டத்தில்
செயல்படுவீர்கள் என்று சொன்னால், மக்கள் இடத்தில் எடுத்
துச் சொல்லப்போகிறேன். வருகின்ற வரிப் பணத்தில்
முக்கால் பங்கு உங்களுக்கு ஊதியமாக தரவேண்டியிருக்கின்றது
என்பதை அவர்கள் வெளிப்படையாக எடுத்துச் சொன்னார்
கள் அதனால், அவர்களுக்கு அதிகாரிகளுக்கு உதவக் கூடாது
என்றல்ல. அதிகாரிகளால தான் நிர்வாகம் செயல்படுகின்றது
என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் ஏழை
எளிய மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்
தோடுதான், இந்த உண்மையை எடுத்துச் சொன்னார்கள்.

இந்தப் புனிதமான நிர்வாகத்திலே மிக முக்கியமான பங்கு
மக்களின் உடமைகளுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் நாட்
டில சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டுவது போலீஸ்
நிர்வாகம், இதிலெ லா அண்டு ஆர்டர்பிரச்னை குறிப்பிடத்தக்கது.
அடிக்கடி வன்முறைச் சம்பவங்கள் அரசியல்வாதிகளால் தூண்டி
விடப்படுகின்ற நிகழ்ச்சியாக இருக்கின்றது என்பது இங்கே அதி
காரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு பழைய காலத்
திலே சேர, சோழ, பாண்டியன் காலத்திலே ஒற்றர்கள் என்று
சொல்லப்படுபவர்கள் இருந்தார்கள். அதையே தான் இந்த
இலாகாவில் இன்டலிஜன்ஸ் விங் என்று வைத்திருக்கிறார்கள்.
இந்த இன்டலிஜென்ஸ் விங் என்பது ஒரு முக்கியமான எந்திர
மாகும்.

[பிற்பகல் 1-20]

அப்படி ஒற்றர்களாக இயங்குகிற சி.ஐ.டி. இலாகாவில் செயல்
படுகிறவர்கள் சரிவர செயல்படவில்லை என்று குற்றம் சாட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சரிவரக் செயல்பட்டிருப்
பார்களானால் விவசாயிகள் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தி
யிருக்க முடியும். உதாரணத்திற்காகக் குறிப்பிடுகிறேன். பெரு
மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேவை செய்த
ஆசைத்தம்பி அவர்கள் மறைந்தார்கள். வெளி நாட்டிலிருந்து
பிரேதம் வருகிறது. இறுதி மரியாதை செலுத்த கட்சி சார்பற்ற
முறையில் தமிழகத்தில் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள்
செல்லுகிறார்கள். அங்கே அசம்பாவிதம் வந்திடக்கூடாது
என்று முதல்நாளே அறிக்கை விடப்படுகிறது. அந்த அளவுக்கு
''ப்ரவோகேடிவ்-சர்கம்ஸ்டென்சஸ்'' நிறைய இருந்தது. எடுத்த
தற்கெல்லாம் ரிவால்வர் இருக்கிறது, துப்பாக்கி இருக்கிறது என்று
சுடுவது எளிது. மெம்பர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.
செல்ப் டிபென்சுக்காகச் சுடுவதற்கு வழிவகை இருக்கிறது. என்

பதை கிரிமினல் லாயர் என்ற முறையில் நன்கு அறிவேன்.
பொது உடைமைகளைப் பாதுகாக்க, தற்காப்புக்காக சுடுவது
நியாயம், சட்டம் இருக்கிறது என்பதை அறிவோம். அந்த
நிலை வந்தபோதும் பல அமைச்சர்கள் தாக்கப்படுகிறார்கள்
மாண்புமிகு மேலவைத் தலைவர், பெரியவர், நம் அத்தனை
பேரின் மரியாதைக்குரியவர், கட்சி எப்படி இருந்தாலும் தமிழ்
உள்ளத்தோடு வாழ்கின்ற பெரியவர், சுதந்திரப் போராட்டத்
தில் விடுதலைக்காகப் பாடு பட்டவர் அவமானப்படுத்தப்படு
கிறார், முரட்டுத் தனமாகத் தாக்கக் கூடிய அளவுக்கு உயிருக்கு
ஆபத்து விளைவிக்கக் கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்
கிறது. அவர்கள் என் கையைப் பிடித்துக்கொண்டு மிக்க
வேதனையோடு கண்ணீர் மலகக் கூறினார்கள். அந்த அள
வுக்கு ஆபத்தான நிலை இருந்தும் கூட

"Maximum Self-restraint was exercised by the Police Department".

துப்பாக்கி இருந்தது. வெடி குண்டுகள் இருந்தன. சுட்டிருக்
கலாம், அடித்திருக்கலாம். அதெல்லாம் ஒன்றும் செய்யாமல்
அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து ஒத்துழைக்கிற அளவுக்கு
அமைதியை நிலைநாட்டினார்கள் என்றால் இது மகோன்னத
மான கடமையுணர்வைக் காட்டுகிறது.

அதே நேரத்தில ராமநாதபுரம் வாகைகுளம் முதலமைச்சர்
அவர்கள் தொகுதியில் இருக்கிறது. ஆப்பிரிக்கா கண்டத்தி
லுள்ள இருண்ட கண்டம் போல் அது பரம்பரையாக இருளில்
இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் அந்நியர்கள்
ஆட்சிக்காலத்திலும் அந்தப் பகுதி ஒதுக்கப்பட்டு வந்தது.
முந்தைய ஆட்சியாளர் காலத்திலும் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்
தது. இப்போது இரவில் இருளை கிழித்துக்கொண்டு ஒளிவீசப்
பாய்ச்ச மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பகுதிக்கு
பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதி
முதல் அரசை எதிர்த்துப் பழக்கப்பட்ட மக்கள், வேதனைக்குள்
ளாக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையில் கடைநிலையில் இருப்பவர்கள்
உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று வித்தியாசம் பார்க்காத
வர்கள் முன்னேறவேண்டுமென்ற அடிப்படையில காரியங்களைச்
செய்ய முனையும்போது இப்படிப்பட்ட சம்பவம் அங்கே நடை
பெற்றிருக்கிறது. கடலாடிக்குக் திட்டம் குடிநீர் உருவாக்கப்பட்
டிருக்கிறது. நல்ல திட்டம், அவசியம்தான். முதல்வர் அவர்கள்
தேர்தலின்போது வந்தபோது குடிநீரைக் கொடுங்கள் என்றுதான்
கேட்டார்கள். அவர்களும் மேடைகளில் அந்தப் பிரச்சினையைப்
பற்றி வலியுறுத்திப் பேசி வந்தார்கள். குடி தண்ணீர் கொடுக்க
வேண்டுமென்பதில் வேறுபட்ட கருத்து இல்லை. ஆனால்,
வேலியே பயிரை மேய்வதுபோல் அந்தப் பகுதியில் இத்தகைய
சம்பவம் நடந்துவிட்டது. மிக்க வேதனையான சம்பவம் நடந்த
அந்த இடத்திற்கு எங்கள் கட்சித் தலைவர்கள், ஏ. ஆர். பெரு
மாள் ஆகியோர் சென்று பார்த்தார்கள். பல இராமங்களில்
மோட்டாரை உடைத்திருக்கிறார்கள். வீட்டை கட்டப்பாறையை
வைத்து நொறுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர்

சென்று பார்த்து உடனடியாக
அவர்கள் மின்னல் வேகத்தில் வேறு இடத்திற்கு மாற்றியிருக்கி
தவறு செய்த அதிகாரிகளை மீது கிரிமினல் வழக்கு
றார்கள். சஸ்பெண்ட் செய்து அவர்கள் ராஜசேகரன் நாயர் மிகவும்
பதிவு செய்யப்பட்டிருக்கிறது. டி. ஐ. ஜி எடுத்திருக்கிறார்கள் பாராட்டு
நேர்மையானவர். நடவடிக்கை நின்று இருக்கிறார், துரதிருஷ்ட
கிறேன். அதே டி. ஐ. ஜி. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன
வசமாக. அங்கு இருக்கிற டி. ஐ. வும் ஒருவாரமாக கேம்ப்
செய்தார்? டி. எஸ். பியும் ஆர். வெள்ளையாட்கள் அங்கே வர
பண்ணியிருக்கிறார்கள் அங்கே. மதுரையிலிருந்து
வேண்டாம் என்று தடுத்திருக்கிறார்கள், தடுத்து இருக்கிறார்கள். ஏன்
யாரும் வரக்கூடாது என்று எவ்வளவு பணம் செலவு செய்து
உடனே தெரிவிக்கவில்லை. செட் எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்
அவர்களுக்கு வயர்லஸ் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து
கிறோம், அங்கே சிலருடைய செய்துகொண்டிருந்தார்கள்? அதுவும்
என்கிறபோது என்ன தொகுதிப் பிரச்சினையில் தலையிலே
முதல்வர் அவர்களுடைய உடலுக்குத் தெரியும், உலகத்திற்கும்
ஒரு ஒச்சம் என்றால் அது தொகுதியிலே நல்லது ஆயிரம்
நன்றாகத் தெரியும். முதல்வர் ஆனால் தீயது நடந்தால்
நடந்தாலும் வெளியே தெரியாது. பொதுமக்கள் கொந்தளிப்
இந்தியா முழுவதற்கும் தெரியுமே. என்ற நிலை இருக்கிறபோது
பான நிலைமையிலே இருக்கிறார்கள் என்ன செய்தார்கள்? இதை
கேட்டார்களா? ஐ. ஜி. அவர்கள் சுமத்துகிறேனா? மக்க
எல்லாம் நான் சொன்னால் குற்றம் பாதுகாப்புத் தர வேண்
ளுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் அவர்கள் சட்டமன்றத்
டாமா? மாண்புமிகு முதலமைச்சர் அந்தச் செய்தி கேள்விப்
திற்கு வரவில்லையென்று சொன்னபோது போய்க் கொண்
பட்டவுடனே அவர்கள் அருப்புக்கோட்டைக்கும் மின்சாரத் துறை அமைச்சர்
டிருக்கிறார்கள் என்று நம்முடைய மின்னல் வேகத்திலே
அவர்கள் இங்கே பதில் சொன்னார்கள். விசாரித்து நடவடிக்கை
அவர்கள் அங்கே சென்று பிரச்சினையை மேற்கொண்டு அந்த
எடுப்பதாக அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, எடுக்கவேண்டுமோ அதை
பற்றி பரிசீலனை செய்து எந்த முடிவு தெரிவித்திருக்கிறார்கள்.
எடுக்கலாம் என்ற முறையிலே ஆறுதல் அங்கே உள்ள நிலை
இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதாக, தெரிவித்திருந்தால் இப்படிப்
ழையைப் பற்றி அவர்களுக்குத் தடுத்திருக்க முடியும். முதலமைச்
பட்ட விளைவுகளை ஏற்படாமல் தெளிவாக இருக்கிறது. அங்கே இருக்கிற
சர் அவர்களுடைய தொகுதியாக ஏன் அதைப்பற்றித் தெரிவிக்க
சி. ஐ. டி. என்ன செய்தார்? அவர் அவர்களை நம்பித்தான் பல
வில்லை. முன்னால் பிரதமர் அதற்குக் காரணமாக இருந்த
விதமான விளைவுகள் ஏற்பட்டு வருகிறது. போலீஸ்
வர்களே அதிகாரிகள் தான் என்ற தகவல் தந்திருப்பார்களானால் வேறு
அதிகாரிகள் சரியான தகவலைத் தகவல் வருகிறது. இன்றைக்கு
முடிவை எடுத்திருப்பார்கள் என்ற நிலைமையை மாற்றக்கூடிய
ஒரு கோடி மக்களுடைய இருக்கிறது. தப்பித்தவறி
நிலைமையிலே நிலைமை ஏற்பட்டு இன்றைக்கு இங்கே ஆட்சிக்கு வந்திருக்கிறார்
முதல்வர் அவர்கள்

கள். ஆகவே அது அவர்களுடைய நிலைமை என்றாலும் நான்
அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன். மக்கள் வரிப்
பணத்தைச் சம்பளமாக நாம் வாங்குகிறோம், கடமையை நீங்கள்
சரிவர செய்ய வேண்டும். அரசன் அன்று தண்டனை அளிப்பான்
தெய்வம் நின்று தண்டனை அளிக்கும் என்று சொல்வார்கள்,
அந்த முறையிலே அவர்கள் இன்றைக்கு அந்த உயிரிழந்த அந்த
உயிர்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும். நீங்கள் உங்கள்
கடமையைச் செய்யுங்கள், நாங்கள் அதற்கு உறுதுணையாக இருப்
போம், எங்கு பார்த்தாலும் எழுதிவைத்து இருக்கிறீர்கள். உங்
கள் நண்பன் என்றும் மே ஐ ஹெல்ப் யு என்றும் எழுதிவைத்திருக்
கிறீர்கள், ஆனால், அப்படியா செயல்படுகிறீர்கள். மக்களுக்கு
உதவிச் செய்வது உங்கள் கடமையல்லவா ? பணம் வரும்
போகும், ஆனால் நீங்கள் ஆற்றுகிற கடமை, நேர்மை உங்கள்
சந்ததியினர் வரைக்கும் இருக்கும் அல்லவா ? அவனியாபுரம்
குட்டை முனுசாமி, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வருகிறார் இரண்டு
கைகளையும் கட்டிப்போட்டுக் கொண்டுபோகிறார். சம்பந்தப்
பட்டவரின் மனைவியை கொலை செய்தார் என்பதற்காக நட
வடிக்கை எடுக்கப்பட்டது, ஆனால் இரவு 3 மணிக்கு பிடித்துக்
கொண்டு போய் இருக்கிறார்கள் எங்களுக்கு மத்தியானம் தெரிந்
தது. டாக்ஸியில் 7 பேர்கள் அவனிடமிருந்து அரிவாளை
வாங்கிக் கொண்டு பின்னால் கைகளை கட்டிவைத்துக் கொண்டு
போய் இருக்கிறார்கள். இடையிலே ஒன்றுக்கு வருகிறது என்று
சொன்னானாம், ஆனால் அவன் அரிவாளைப் பிடுங்கி வெட்டப்
போனானாம், தற்காப்புக்காக சுட்டானாம்.

Very wonderful and fantastic. I have never come across such a foolish statement like this. Am I to belive this statement?

முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மையை புரிந்து
கொள்ள வேண்டும், போலீஸ் அதிகாரிகளை நான் கேட்டுக்
கொள்கிறேன், முதல்வர் அவர்களுக்கு, இப்படிப் பொய் சொல்லி
அவர்களுடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்று விரும்பமாட்டார்
கள். அவர்கள் தார்னி பெட்டிலேதான் இருந்து கொண்டிருக்
கிறார்கள் என்று கருதுகிறேன். எம். ஜி. ஆர். அவர்கள் இன்
றைக்குத் தான் பார்க்கிறார்கள் என்பதல்ல. அவர்கள் வருகிறார்
கள் என்றால் ஆண்களும் பெண்களும் அன்றைக்கு தேனியிலே
தேர்தல் காலத்திலே எப்படி இருந்ததோ அந்தக் கூட்டத்தை
நாங்கள் பார்த்தோம், ஆகவே மக்கள் அவரைப் பார்த்துக்
கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தப் பதவியிலிருந்து தான்
வாழவேண்டும் என்ற நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே
அவர்களுக்கு நீங்கள் ஒத்தாசை செய்யுங்கள். அவர்கள் வேறு
படுகிறபோது எங்களைப் போன்றவர்கள் கண்டிக்கிறோம் அது
வேறு அதற்காக நாசமாகப் போகவேண்டுமென்று சொல்ல வேண்
டாம்.

[பிற்பகல் 1-30]

நமக்கு அந்த நிலை வருவதற்கு அதிக நாள் ஆகாது. குட்டை
ராமசாமி விஷயம் சம்பந்தமாக ஆர். டி. ஓ. விசாரணை போட்
டிருக்கிறார்கள், அடிஷனல் கலெக்டர் விசாரணை வேண்டு

மென்று கவர்னரிடத்திலும், முதலமைச்சர் இடத்திலும் தந்தி
கொடுத்தோம், ஐ. ஏ. எஸ். ஆபீசர் வேண்டுமென்பதற்காக,
ஆனால் நடப்பது என்னவென்றால், டி. எஸ். பி. டிக்டேட் செய்ய
ஆர். டி. ஓ. கையெழுத்துப் போடுகிற நிலைமை இருக்கிறது.
இப்படிப்பட்ட விசாரணையை எத்தனையோ நாங்கள் கண்டிருக்
கிறோம். ஆங்கிலேயர்கள் காலத்திலேயிருந்து நடத்தியிருக்
கிறோம். இப்படி அரசியல் காரணத்திற்காக நடத்தலாமே
தவிர தயவு செய்து அதிகாரிகள் இப்படி ஈடுபடுத்தப்பட வேண்டா
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ உங்களுக்கு இன்
னும் எவ்வளவு நேரம் வேண்டும் ?

__திரு. கே. கந்தசாமி :__ இன்னும் பத்து நிமிடங்கள் வேண்டும்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ பேரவையின்
அனுமதியோடு பேரவையின் கூட்ட நேரத்தை இன்னும் சிறிது
நீட்டிக்கிறேன்.

__திரு. கே. கந்தசாமி :__ அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்
கையைப் பொறுத்தவரையில், அதைத் தங்களது அடிப்படை
நோக்கமாகக் கொண்டு, அதை நிறைவேற்ற வேண்டும். ஏழை
எளிய மக்களைத் திருத்த வேண்டும். தாய்மார்களின் கண்ணீ
ரைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அண்ணா, தேவர்
திருமகன், காந்தியடிகள் போன்றவர்கள் சொன்ன நல்ல கருத்துக்
களைக் கருத்திற் கொண்டு இன்றைக்குச் செயல்படுகிறார்கள்.
இதனால் சுமார் 100 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. முந்
தைய ஆட்சியில் இருந்தவர்கள் முதலில் இதை அரசுக்கு இலாப
மாக வைத்து, பிறகு இதை எடுத்துவிட வேண்டும் என்ற முறையில்
செய்தது தெரியாமல் இல்லை. இந்த நூறு கோடி ரூபாய் இருந்
தால் ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவோ செய்யலாம் என்பதை
நாம் அறியாமல் இல்லை. மதுவிலக்கை அமல் நடத்தப் போகி
றோம் அதனால் ஓட்டுப் போடுங்கள் என்று தேர்தல் பிரகடனத்
திலும் சொல்லவில்லை. எனவே, அப்படிச் சொல்லாத ஒன்றை,
ஏழை எளிய மக்களின் நலனைக் கருதி, " ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம் " என்று சொன்னார்களே, அதற்
கேற்ப இதில் ரிஸ்க் எடுத்திருக்கிறார்கள். இந்த மதுவிலக்குக்
கொள்கை வெற்றி பெறவில்லை என்றால் என்னவாகும் ? என்ன,
முதலமைச்சர் எம். ஜி. ஆர். என்ன திட்டத்தைக் கொண்டு
வந்தார், தோற்றுப் போய் விட்டதே என்று நானும், லத்தீப்
அவர்களும் மேடையிலே பேசுவோம். அதைத் தெரிந்தும் அவர்
கள் இதைச் செய்கிறார்கள். இப்படி, ஆபத்து இருக்கிறது என்று
தெரிந்தும் அதைச் செய்தால் என்ன பொருள் ? அவர்கள் நன்மை
செய்ய முயற்சிக்கிறார்கள், அதில் வெற்றி தோல்வி எது வந்
தாலும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற நிலையில் இருந்து செய்கிறார்
கள். அது வெற்றிபெறாமல் போனால் என்னவாகும் ? மாண்பு

மிகு உறுப்பினர்கள் வேதனையோடு சொன்னார்கள், இலஞ்சம்
ஊழல் என்று, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதை ஒழுங்காக
ஆக்க வேண்டும் இல்லாவிட்டால் வழியில்லை.

As a criminal lawyer, as a legislator, as a 'Samsari'
நான் பேசுகிறேன். ஏறக்குறைய 30 வருஷங்களாக நான்
பார்க்கிறேன். போலீஸ் அதிகாரிகளில் அடி மட்டத்திலேயே
இருப்பவர்களை மாற்றுவது தவறு என்று மாண்புமிகு முதல்வ
ரவர்கள் கருத்து வைத்திருக்கலாம். அப்படி மாற்றினால் தீர்ந்து
விடும் என்று கருதாமல் இருக்கலாம். ஆனால் மாற்றுவதன்
மூலம் குறிப்பாக மூன்றாண்டுகளுக்கு மேல் ஓரேயிடத்தில் இரு
பவர்கள் பல பொதுமக்களையும் அங்கிருக்கும் அதிகாரிகளை
யும், வேறுபடக் கூடிய கருத்து உடையவர்களையும் நண்பர்க
ளாக்கிக் கொள்கிறார்கள். மாமூல் வாங்குகிறார்கள். அங்கு
புதிதாக வருகின்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கும் ...
களுக்கும் ஆசைக் காட்டி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சகவா
சம் காரணமாக இப்படிப்பட்ட சூழ் நிலையின் காரணமாக
நல்லவர்களையும் தீயவர்களாக மாற்றுவதற்குத் துணையாக
இருக்கிறார்கள். இது உண்மை என்பதைத் தங்களின் மேலான
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே அருள்
கூர்ந்து கான்ஸ்டபிள்கள் ஹெட் கான்ஸ்டபிள்கள் சப்
இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களை மூன்று வருடங்களுக்கு மேல்
ஒரு தாலுக்காவில் வைக்காமல் வேறு மாவட்டத்திற்கு என்று
இல்லாவிட்டாலும் (குறுக்கிடு) வேறு ஜில்லாவிற்கே மாற்ற வேண்
டுமென்று திரு. எஸ். ஜே. ஆர். அவர்கள் சொல்கிறார்கள். முடிந்
தால் அப்படிச் செய்யுங்கள் வேறு தாலுக்காக்களுக்காவது
மாற்றினால் ஒத்தாசையாக இருக்கும். இதற்கு உதாரணமாக
ஒன்றைச் சொல்கிறேன். தலைவரவர்களே, தங்களுடைய அனு
மதியோடு சொல்கிறேன். எங்களுடைய பகுதி அமைப்பாளர்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விவசாயச் சங்க அமைப்
பாளரே குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். கடிதம் அதைப்
படிக்க நேரமில்லை. மதுவிலக்கு வெற்றி பெற்ற இடத்தில்,
அதுவும் மலைப் பகுதியான இடத்தில் குடிசை இண்டஸ்ரீஸ்
போன்று இருந்ததை விட்டுவிட்டோம். இனி மதுவைக் குடிப்ப
தில்லை என்று கொண்டிருந்த நிலை ஏற்பட்டிருந்த இடத்தில்
வேறு அதிகாரிகள் வந்து மீண்டும் அதற்குப் புத்துயிர் கொடுத்
திருக்கிறார்கள். எம்பளாய்மெண்ட் எக்சேஞ்சில் கார்டை
ரென்யூ செய்வதைப் போல் அங்கே நடந்திருக்கிறது என்று
கூறியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வரவர்களின்
மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை நான்
முன் உதாரணத்திற்காகக் குறிப்பிடுகிறேன். ஆகவே இதை
நீங்கள் நீக்கவேண்டும். இதில் அதிகாரிகளே தவறு செய்தால்
மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போல் கரப்ஷனை ரூட் அவுட் பண்ண வேண்டுமென்று
சொன்னால் போதாது. அவர்களுக்கு வயிறார சாப்பாடுபோட
வேண்டும். மற்ற டிபார்ட்மெண்ட்காரர்கள் சங்கம் வைத்துப்

போராடுகிறார்கள். போலீஸ்காரர்களுக்குச் சங்கம் வைக்க
உரிமை கொடுப்பதை வன்மையாக எதிர்க்கிறேன் எங்கள் கட்சி
யின் சார்பாக. பழைய மாண்புமிகு மூதறிஞர் அவர்கள், இராஜாஜி
அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இவர்
களே ஊர்வலமாகப் போனால், இவர்களுக்குப் பாதுகாப்பு
கொடுப்பது யார்? ஆகவே, வேண்டியதில்லை. ஆனால்,
அவர்களுக்குக் கேட்காமலேயே கொடுக்க வேண்டும். கேட்
காமலேயே அவர்களை வாயில்லா பிள்ளைகளாக விட்டுவிடக்
கூடாது. அழுதால்தான் பால் கொடுக்கிற தாய் மாதிரி, அவர்
களும் கேட்டால்தான் கொடுக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்து
விட்டார்கள். அவர்களுடைய உணர்வுகளை மதித்து, தேவை
களை, விட வேண்டும், படிகளை உயர்த்த வேண்டும். உதாரண
மாக இங்கேயிருக்கிற டியூட்டிக்கு வருகிறவர்கள் கூட சிலர்
எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். யாராவது பார்த்துவிடப்
போகிறார்கள், என்று பயந்து கொண்டே கொடுத்தார்கள். நாள்
ஒன்றுக்கு ரூ. 2.50 படி என்கிறார்கள், அவர்களுக்கு ரூ. 5,
ரூ. 7.50 கொடுத்தால் என்ன? டியூட்டிக்கு வருகிறபோதாவது
கொஞ்சம் வயிறார சாப்பிடட்டுமே; சாப்பிட்டு, கொஞ்சம்
திறமையாக வேலை செய்யட்டுமே. பெண் போலீசார் வார்டர்
களாக இருப்பவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கூறுகிறார்
கள், அவர்களுக்கெல்லாம் படியை உயர்த்த வேண்டும். ஆகவே
அவர்களுடைய குறைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹையர் ஆஃபீசர்ஸ் இருக்கிறார்கள்.
I am seeing more D.I. Gs and higher officers. காலேஜ்
அவர்களுக்கு இருக்கிற வேலையைப் பார்த்தால் ரொம்ப சும்மி என்
ப்ரொஃபசர்களுக்குத்தான் வேலை பார்க்கும்போது.
நினைத்தேன். ஆனால் டி.ஐ.ஜி.க்களைப் தெரிகிறது. I am
அதைவிட ரொம்ப சும்மி மாதிரி எனக்குத் residential-cum-office
seeing them always sitting in their bungalows நல்ல வசதியோடு கொடுத்திருக்
ஆகக் கொடுத்திருக்கிறார்கள். வசதிகளும் வேண்டுமென்று ஒத்துக்
கிறார்கள். நான் அத்தனை உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால்,
கொள்கிறேன். ஆஃபீஸிலே பங்களாவில் என்றால் ஆஃபீஸில்
பங்களாவில் என்கிறார்கள். இரண்டும் ஒரே ரூம் தான். அவர்கள் ஏன்
என்கிறார்கள். ப்ராக்டீஸ் செய்யக் கூடாது. இழே
பிரீச் செய்யக் கூடாது. 3, 4 வட்டங்களுக்கு அவர்கள்
இருக்கிற அதிகாரிகளுக்கு திடீர் திடீரென்று விசிட் பண்ணக்
பொறுப்பு. அவர்கள் ஏன் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் பண்ணக்
கூடாது. அவர்கள் ஏன் திடீரென்று ஆஸ்பத்தி
கூடாது. மாண்புமிகு அமைச்சர்களே திடீரென்று பிடிக்கிறார்கள் என்கிற
ரிக்கும் பஸ்ஸுக்கும் விஜயம் செய்து செய்கிறவர்கள்
போது, ரியாக்ஷன் இருக்கிறது. அங்கு தவறு டி.ஐ. ஜிக்கள் ஏன்
குறைகிறார்கள். அப்படியிருக்கும்போது வாரத்திற்கு 2 நாளாவது குறைந்தது
விசிட் செய்யக் கூடாது. சர்க்கிள் அளவுக்கு விசிட்
விசிட் பண்ணட்டுமே.
பண்ணட்டுமே...... ....

let there be frequent, surprising, periodical checks to check their work and investigate their work and let these higher officers teach the subordinates social morals.

இந்த அரசினுடைய திட்டங்கள் எப்படி செயல்பட வேண்டும்.
மதுவிலக்கு திட்டம் மனுநீதி திட்டம் என்று வைத்திருக்கிறோம்.
மாவட்ட ஆட்சியாளர்கள் வருகிறார்கள். மாதத்திற்கு வாரத்
திற்கு இன்ன இன்ன நேரங்களில் வருகிறார்கள் என்று பொது
மக்களுக்கு அது அறிவிக்கப்படுகிறது. மக்கள் திரளாக திரள்
கின்றார்கள். மக்கள் பிரதிநிதிகளும் கூடுகிறோம். அங்கே
யிருக்கிற குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. திப்பு சுல்தான்
காலத்தில் கொடுக்கப்படாத பட்டா கொடுக்கப்படுகிற நிலை
இப்பொழுது இருக்கிறது. பாக்கி புறம்போக்கு ஊர் காரியக்
காரன் உழுது கொள்ள வேண்டுமென்று மறுநாள் காலி பண்ணிக்
கொண்டு போகிறான். காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர்
அப்பொழுதே உத்தரவு போடுகிறார். அதேபோல் டி.ஐ.ஜி.
போன்றவர்கள் அந்த வட்டங்களில் சர்க்கிளில் போய் உட்காரும்
போது நிச்சயமாக அந்தத் தவறுகள் நீங்கும். பொதுமக்கள்
'கிரிவன்ஸ் டே' என்று போடட்டுமே என்ன தவறு?
போட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள் போவோம். அங்கே
யிருக்கக் கூடிய பல கட்சித் தலைவர்கள் வருவார்கள், பிரதிநிதிகள்
வருவார்கள். சாராயங் காய்ச்சுவதற்கு நியமிக்கப்பட்ட
கமிட்டி சர்வ கட்சிகளும் சேர்ந்து அரசினுடைய திட்டத்தை,
கட்சி சார்பற்ற முறையில் அரசியல் சார்பற்ற முறையில் மது
விலக்கு திட்டத்தை நிறைவேற்றியிருக்கும்போது அதைத்
தோற்கடிப்பதற்கு 'என்ஃபோர்சிங் ஏஜன்ஸி' செயல்படுமே
யானால் எங்கு போய் சொல்வது? ஆகவே டி.ஐ.ஜி.
அவர்கள் நிச்சயமாக வாரத்திற்கு ஒருமுறை காம்ப்
செய்ய வேண்டும். வேலை செய்யும்போது மது விலக்கு
சம்பந்தமாக என்ன வேலை செய்திருக்கிறீர்கள், எங்கெங்கே
குற்றங் குறைகள் வருகின்றன, ஏன் மனுக்களை விசாரணை
செய்யக் கூடாது என்று கேட்கலாம். தவறு செய்தவர்கள்மீது
நடவடிக்கை எடுக்கட்டும். சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்
கிறோம். ஆகவே அப்படிப்பட்ட ஒரு முறையை நீங்கள்
கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மிக துரதிருஷ்டம் நான் அதைச் சொல்ல
வேண்டாமென்று நினைத்தேன். ஆனால் இன்றைக்கு முதல்வர்
இருப்பதாலே சொல்கிறேன். ஒரு ஸ்டேஜிலே பேசுகிறபொழுது,
பொய் கேசு திடீரென்று போடுகிறார்கள். மதுரையிலே நடக்
கிறது இது. நான் நம்பவில்லை. இப்படி போடுவார்களா?
எம்.எல்.ஏ. மேலேயா என்று நான் நம்பவில்லை. ஆனால் என்
மேலேயே போட்டார்கள். பி 4 ஸ்டேஷனிலே. அப்பொழுது
தான் நான் நம்பினேன். இரு குழந்தைகள் சண்டை விட்டிலே
உட்கார்ந்து பஞ்சாயத்து செய்து காஃபி சாப்பிட்டு விட்டுவந்
தேன்.

[பிற்பகல் 1-40.]

அது சம்பந்தமாக குழந்தையினுடைய தந்தையாரே என்னிடம்
தொலைபேசியில் மன்னிப்பு கேட்கிறார். மன்னிப்புக்
கேட்டு சாயந்திரம் வந்து உங்கள் முன்னாலேயே உதைக்
கிறேன் டிஸ்மிஸ் செய்கிறேன் என்று சொன்னார். வேண்டாம்
பிரதர் அவருடைய ஒய்ப்புக்கு மெட்னஸ் இருக்கிறது. குடும்பத்
தில் துக்கம் இருப்பதினால் நான் இதை விரும்பவில்லை என்று
சொல்லி விட்டு பையனைத் திருத்துங்கள் என்று சொல்லி விட்டு
வந்து விட்டேன். ஒரு வாரம் கழித்து கந்தசாமி கைது கந்த
சாமியை போலீஸ் தேடுகிறது என்று பத்திரிகையில் பத்தி பத்தி
யாகச் செய்து வந்திருக்கிறது. என்னவென்று போய்ப் பார்த்தால்
டி.எஸ்.பி. வீடு வீடாக தேடுகிறார் உங்களை கைது
செய்வதற்காக என்று சொல்கிறார்கள். பிறகு ஸ்டேஷனுக்குப்
போனேன். அங்கே இருந்த எஸ்.ஐ. நல்லவர். என்னிடம்
மரியாதையாக நடந்து கொண்டார். காபி வாங்கி கொடுத்தார்.
இந்தப் பைலிலே கையெழுத்துப் போட்டு விட்டு போங்கள்
உங்களை கைது செய்யாமல் விட்டு விடுகிறோம் என்று சொன்னார்.
எதற்கு சொல்கிறேன் என்றால், நீங்கள் என்ன
கேஸ் வேண்டுமானாலும் போடுங்கள், கொலை கேஸ் வேண்டு
மானாலும் போடுங்கள், தூக்கு மேடைக்குப் போக தயாராக
இருக்கிறோம், ஆனால் பொய்க் கேஸ் போடாதீர்கள், உண்மை
யான கேஸாகப் போடுங்கள். இப்படிப்பட்ட நிலைமை எங்க
ளுக்கே ஏற்பட்டால் மற்றவர்கள் கதி என்னாவது? காற்றில்
ஆலமரமே பறக்கும்போது துளசி செடி என்ன செய்யும்?
அதன் நிலை என்னவாகும்? ஆகவே இப்படிப்பட்ட முறை
கேடுகளை மாற்றியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
நல்ல நம்பிக்கையான நேர்மையான அதிகாரிகள் இருக்கிறார்கள்
இல்லை என்று சொல்லவில்லை, நல்லவர்களும் இருக்கிறார்கள்,
பொல்லாதவர்களும் இருக்கிறார்கள். பொல்லாதவர்கள் சிலர்
இருந்தாலும் பலரை கெடுக்கக்கூடிய சூழ்நிலையில்
நடந்துக் கொண்டிருக்கிறார்கள்...................

(மணியடிக்கப்படுகிறது.)

முடித்து விடுகிறேன். ஆகவே முதலமைச்சர் அவர்களுக்கு
நம்பிக்கையான அதிகாரிகளைப் போட்டு உடனடியாக எல்லா
விஷயங்களைப்பற்றியும் ரிப்போர்ட் கொடுக்க சொல்ல வேண்டும்.
உடனடியாக ரிப்போர்ட் கிடைத்தால் சம்பந்தபட்டவர்கள்மீது
ஆக்ஷன் எடுக்க உதவியாக இருக்கும். இப்படிப்பட்ட முறைகேடு
கள் தவிர்க்கப்படும் என்று சொல்லி நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4 மணிக்கு பேரவை
மீண்டும் கூடும். ஒத்தி வைக்கப்

(பின்னர் பேரவை பிற்பகல் 1.42-க்கு
பெற்றது.)

[1979 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு தலைமையில் பேரவை மீண்டும் மாலை 4·30 மணியளவில் கூடியது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது
பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் முதலில் என்னுடைய
நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்
தின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் ஏறத்தாழ ஒரு 20—22
ஆண்டுகாலமாக நான் பல்வேறு நேரங்களில் காவல் துறை
மானியம் இந்தச் சட்டமன்றத்தில் நடைபெறுகிற நேரத்தில்,
நான் சட்டமன்றத்தில் இல்லையென்றாலும், இந்த மானியத்திலே
எப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறுகிறது என்பதைப் பார்ப்
பதற்காக முயற்சிகளை எடுத்துக் கொண்டு இருக்கிறேன்.
அப்படிப்பட்ட நேரங்களில் இந்த மானியங்களில் பேசக்கூடிய
பேச்சுக்களையும், இருக்கின்ற நிலைமைகளையும் பார்க்கிற நேரத்
தில் இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே எனக்கு மிக்க வேறுபாடு
காணப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாக
வேண்டும். இதற்கு முன்னாலே நடைபெற்ற பல்வேறு விவாதங்
களில் பல்வேறு ஆண்டுகளில் காவல் துறை மானியங்களில் பேசுகிற
நேரத்தில் மிகுந்த பரபரப்பும், மிகுந்த சூடான வாதங்களும்
மிகுந்த காரசாரமான பேச்சுக்களும் இருந்து கொண்டு வந்தி
ருக்கின்றன என்பதை நான் சொல்லியாக வேண்டும். ஆனால்
இன்றைக்கு இந்த விவாதத்தில் பேசுகிற அத்தனைக் கட்சி
உறுப்பினர்களும் அவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே
சொன்னாலும் கூட இந்த மானியத்தில் அவர்களுடைய கருத்துக்
களை எடுத்துச் சொல்கிற நேரத்தில் அவர்கள் காட்டுகிற அந்த
ஆர்வத்தையும் பொறுமையையும் பார்க்கிறபோது இன்று இந்தக்
காவல் துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது
என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும்.

நான் இதைச் சொல்கிற நேரத்தில் அதற்கு அடிப்படைக்
காரணம், இன்றைக்கு காவல் துறையைக் கையிலே வைத்து
இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த
இரண்டாண்டு காலத்தில் இந்தக் காவல்துறையை எந்த அளவிற்கு
திருத்த வேண்டும், மாற்ற வேண்டும் என்பதற்காக என்னென்ன
முயற்சிகளை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எல்லா
அரசியல் கட்சியில் இருக்கும் எல்லாத் தலைவர்களும் உணர்
வார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்வேன். மதிப்பிற்
குரிய முதலமைச்சர் கையில் இருக்கும் இந்தக் காவல் துறை
ஒரு 5 ஆண்டு காலத்திற்கு முன்னாலே எப்படி இருந்தது, 7 ஆண்டு
காலத்திற்கு முன்னாலே எப்படி இருந்தது. இந்தக் காவல் துறை
எப்படி பணியாற்றியது என்பதை பலர் மறந்து இருக்க மாட்டார்
கள் என்று நான் நினைக்கிறேன். இன்று அவர்கள் என்ன தான்
பேசினாலும் கூட இந்தக் காவல்துறை 7 ஆண்டு காலத்திற்கு
முன்னால், 5 ஆண்டு காலத்திற்கு முன்னால் எப்படியெல்லாம்

1979 ஏப்ரல் 18] [திரு. எஸ். ஆர். இராதா]

செயல்பட்டது என்பது இன்றைக்கு எல்லா எதிர்க்கட்சிக்காரர்
களும் நிச்சயமாக மறந்து இருக்க மாட்டார்கள் என்று நான்
நம்பிக் கொண்டு இருக்கிறேன். காலத்தாலே, நிலைகளினாலே
ஒரு சில காரணங்களால் மாறுபாடுகள் கொண்டு இருந்தாலும்,
அந்தக் காலத்தில் இருந்து அந்த காவல் துறையையும், அன்றைய
நிர்வாகத்தையும் நிச்சயமாக நம்மால் மறக்க முடியாத ஒன்றாக
இருக்கிறது என்பதை நான் நிச்சயமாக சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கிறோம். இந்தக் காவல்
துறையை கையில் வைத்து இருக்கும் முதலமைச்சர் அவர்களின்
நெஞ்சிலே அவர் வைத்திருக்கும் நேர்மையின் காரணமாக, அவர்
நியாயத்திற்குக் காட்டுகின்ற ஆர்வம் காரணமாக, யார் எங்கே
தவறு செய்தாலும் அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்
தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
காட்டுகிற ஆர்வத்தின் விளைவாகத்தான் காவல்துறையில்
இன்றைக்கு மிகப் பெரிய சீர்திருத்தம் ஏற்பட்டு இருக்கிறது
என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும்.

அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அதை
ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பதை நான் இந்த
நேரத்திலே சொல்வேன். இங்கே பேசுகிற எல்லா கட்சிகளையும்
நான் பார்க்கிறேன். ஒரு கட்சியைப் பொறுத்தவரையில் இந்த
மன்றத்திலே நம்பிக்கையில்லாமல மக்கள் மன்றத்திற்குப் போயி
ருக்கிறார்கள் என்றாலும் மக்கள் மன்றத்தில் பேசப்படுகிறபோது
அந்த வாதங்களைப் பார்த்தால் கூட காவல் துறையைப் பற்றி
அதிகம் காணப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

இந்த மன்றத்திலே பேசுகிற எல்லா கட்சிகளையும் பொறுத்த
வரையில் யாரும் இலேசாகப் பேசிவிட முடியாது. ஏனென்றால்
அவரவர்களுக்கென்று சில பொறுப்புகள் இருக்கின்றன. த[illegible]
நாட்டை ஆளுகிற பொறுப்பு அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கின்றது. இந்த அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே
இன்றைக்கு காவலர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழ்
நாட்டிலே இந்த நிலை இருந்தாலும் மற்ற எதிர்க்கட்சிகளைப்
பொறுத்தவரையிலே, ஜனதாக் கட்சியிலே இருப்பவர்கள்
இன்றைக்கு இந்த மாநிலத்திலே ஆளும் கட்சியாக இல்லை என்று
சொன்னாலும் அவர்கள் இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலும்
மத்திய அரசிலும் ஆளும் கட்சியாக இருக்கிறார்கள். அதே
போல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக் கொண்டால்
அவர்களும் ஒரு மாநிலத்தை ஆளுகின்ற கட்சியாக இருக்கின்
றார்கள். அவர்களும் எங்கள் ஆட்சி இருக்கிறது. ஒரு
முதலமைச்சர் இருக்கிறார் என்று பெருமையோடு பேசிக் கொண்டி
ருக்கிறார்கள். அதேபோல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
மேற்கு வங்காளத்திலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் சிங்கள [illegible] அழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
நாங்கள் போக முடி[illegible]லை என்று சொன்னாலும் அவர்கள்
பேச்சில் [illegible] கேட்பதற்குரிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்
பட்டிருக்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1989 ஏப்ரல் 18

அதேபோல காங்கிரஸ் கட்சியை எடுத்துக்கொண்டால்
அவர்கள் பல்வேறு மாநிலங்களிலே ஆண்டுகொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் கையிலேயும் போலீஸ் இருக்கிறது. ஆகவே இப்படிப்
பட்ட மாநிலங்களில் இருக்கின்ற ஆட்சியாளர்களும், இன்னும்
இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களின் ஆட்சியாளர்
களும், குண்டாந்தடியைப் பயன்படுத்தவே மாட்டோம் என்று
சொல்ல முடியாது. கேரளாவிலே குண்டாந்தடியை பயன்படுத்த
மாட்டோம் என்று சொல்லவில்லை. அதேபோல் துப்பாக்கிப்
பிரயோகம் தமிழ் நாட்டில் மட்டும்தானா நடைபெறுகிறது என்று
பார்த்தால் மற்ற மாநிலங்களிலும் நடைபெறுகிறது. இங்கே
துப்பாக்கிச் சூடு கிடையாது என்று எந்த மாநிலத்தவரும் சொல்ல
முடியாது. கேரளாவானாலும் மேற்கு வங்காளமானாலும், வேறு
எந்த மாநிலமானாலும் துப்பாக்கிச் சூடு என்பது போலீஸ் இருக்
கிற வரையில் நடந்தே தீரும். அந்த முதலமைச்சர்கள் எல்லாம்
துப்பாக்கிச் சூடு தவிர்க்க முடியாத ஒன்று என்று சொல்வதை
நாம் இன்றைக்குப் பார்த்துக்கொண்டிருகின்றோம். ஆனால்
அவர்கள் எல்லாம் இங்கே தமிழ்நாட்டுக்கு யோசனை சொல்கிற
நேரத்தில் அது தவிர்க்கப்படவேண்டும் அது தேவையில்லாத
ஒன்று என்று சொல்கிற நேரங்களிலே கூட அங்கே கேரளா
வானாலும் மேற்கு வங்காளமானாலும் அதைத் தவிர்க்கின்ற
நிலைமை இல்லாமல் வேறு வழி இல்லாத காரணத்தால் அதைச்
செய்தோம் என்று சொல்லப்படுகிறதே தவிர துப்பாக்கிப்
பிரயோகமே நடத்தப்படவில்லை என்றும் போலீஸ் கையிலே
இருந்த குண்டாந்தடிகளை நாங்களே வாங்கி வைத்துக்
கொண்டோம் என்று சொல்கிற அளவுக்கு எந்தக் கட்சிக்கும்
துணிவு கிடையாது என்பதை இந்த மன்றத்தில் சொல்லியாக
வேண்டும்.

இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவுக்கு தமிழ்
நாட்டிலேதான் இன்றைக்குக் காவல்துறை சீராகச் செயல்படு
கிறது என்பதை நான் மிகுந்த துணிவோடு சொல்வேன். அதற்
கான புள்ளிவிவரங்கள் வேண்டுமென்றால் நான் புள்ளிவிவரங்
களைக் காட்டுவதற்கு தயாராக இருக்கிறேன். கேரளாவிலே
நடைபெறவில்லை, தமிழ்நாட்டிலேதான் நடைபெற்றது என்று
சொன்னால் எத்தனை ஆதாரங்களைக் காட்டவேண்டும் ? காட்ட
முடியும் ? அதுபோல் மேற்கு வங்காளத்திலே நடைபெறவில்லை,
தமிழ்நாட்டிலேதான் நடைபெறுகிறது என்று சொன்னால்,
அதற்கும் நான் ஆதாரங்களைக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் காவல்துறையைப்
பொறுத்தவரையில் இந்த இரண்டாண்டு காலத்தில் நம்முடைய
முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்துக்
கொண்ட மிகப்பெரிய முயற்சியின் காரணத்தால் காவல்துறை
சிறப்பாக மாற்றப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள்
முயற்சியை மேற்கொண்டார்களோ அந்த அளவுக்கு மாற்றப்
பட்டிருக்கிற நேரத்தில், இந்தியாவிலேயே உள்ள எல்லா மாநிலங்
களையும் ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டால் தமிழ்நாடு ஒன்று

1979 ஏப்ரல் 18] [திரு. எஸ். ஆர். இராதா]

தான் இந்தக் காவல்துறையைப் பொறுத்தவரையில் சிறப்பாகச்
செயல்படுகிறது என்பதை மிகத் தெளிவாகவும் தைரியமாகவும்
சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் இங்கே யோசனை சொல்கிறார்கள். வெளியிலே
பேசுகிறவர்கள் இன்றைக்கு நீதிக்காகவும் நேர்மைக்காகவும் பேசு
வதை நான் பார்க்கிறேன். பழைய காலங்களிலே நீதியைக்
சொலைக்கூடத்திற்கு அனுப்பியவர்கள் இன்றைக்கு ஆட்சி மாறி
விட்டது என்ற காரணத்தினால் பதவி பறிபோய்விட்டது என்ற
காரணத்தினால் இன்றைக்கு நீதிமான்கள் போல் வெட்ட வெளி
யிலேயும், மீன் மார்க்கெட் பக்கத்திலேயும் கறிக்கடைக்குப் பக்கத்
திலேயும் நின்றுகொண்டு பேசுகிறார்கள். அப்படிப் பேசுகின்ற
கட்சி இன்றைக்கு இருக்கிறது. ஆனால் நான் நிச்சயமாகச்
சொல்வேன். நீதியைப் பற்றி நேர்மையைப் பற்றி பேசவேண்டும்
என்று சொன்னால் அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்
தாலும் அவர்கள் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பேச
வேண்டும். எங்கள் முதலமைச்சரவர்களைப்பொறுத்தவரையில் நீதி
யிலே தவறிவிட்டார், நியாயங்களிலிருந்து தவறிவிட்டார், அநி
யாயத்திற்கு உடந்தையாகப் போனார் என்று சொல்கிறவகையில்
ஒரு ஆதாரத்தைக்கூட யாராலும் காட்ட முடியாது என்பதை
மிகுந்த தைரியத்தோடு சொல்வேன். அப்படிச் சொல்கிற நேரத்
திலே நான் ஒன்றை இந்த மன்றத்திலே சொல்லியாகவேண்டும்.

[மாலை 4—40].

இந்த ஆட்சியில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்மீது உளி
வீசப்பட்டது பற்றி கடுமையாகப் பேசபட்டது. போலீஸ்காரர்
கள்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். அப்படிச்
சொல்கிற நேரத்தில் அவர்களுக்கு வந்த உணர்ச்சி, உத்வேகம்
இருக்கிறதே அதைப் பார்த்து நானே ஆச்சரியப்பட்டேன். இடம்
மாறுகிறபோதுதான் இந்த வேகம் வருகிறது. அந்தக் காரணத்
தால் உளி வீசியவனை பைத்தியக்காரனாக ஆக்கிவிட்டீர்களே
என்று பேசியது என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இப்போது எதிர்க்கட்சித்
தலைவராக இருக்கின்ற கருணாநிதி அவர்கள் முதல் அமைச்
சராக இருக்கின்ற நேரத்தில் ஒரு பேராசிரியர், அவருடைய
பெயர் வெள்ளையன் என்று நினைக்கின்றேன், அவர் செய்த
ஒரு பாபம், தாழ்த்தப்பட்ட ஒரு குடிமகன், அன்றைக்கு தி.மு.க.
விலிருந்து விலகிய சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களை
பார்ப்பதற்காக தஞ்சைக்குப் போகிறார். தஞ்சையில் சத்திய
வாணிமுத்து அம்மையாரைப் பார்த்த ஒரே காரணத்திற்காக,
அந்தப் பேராசிரியர் தஞ்சையிலிருந்து திருச்சிக்குப் போவதற்குள்
கைது செய்யப்படுகிறார். அந்தப் பேராசிரியர் வெள்ளை
யன் நேராக எங்கே அனுப்பப்படுகிறார் தெரியுமா ? இன்றைக்கு
நீதிக்கும், நேர்மைக்கும் வக்காளத்து வாங்கிப் பேசிக் கொண்
டிருக்கின்ற இதே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உத்தர

விட்டு, அவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதை என்னால் நிரூபிக்க முடியும். நான் அவரை அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சந்திக்கின்றேன். அவர் கண்ணீர்விட்டு அழுதார். சத்தியவாணிமுத்து அவர்களைப் பார்க்கச் சென்றேன் என்ற ஒரே காரணத்திற்காக என்னை முதல் அமைச்சர் அவர்கள் பழிவாங்கி இங்கே அனுப்பிவிட்டார் என்று சொன்னதை, அந்தக் காட்சியை நான் இன்னும் மறக்கவில்லை. இரண்டாண்டு காலத்திற்கு அவரைப் பைத்தியக்காரனாக மாற்றினார்கள். திரும்ப திரும்ப கேள்விகள் கேட்க, அவரும் மிரண்டு பதில் சொல்ல, அவரை முழுப் பைத்தியக்காரனாகவே மாற்றிவிட்டார்கள். எல்லோரும் சேர்ந்து அப்படி முடிவு செய்துவிட்டார்கள். ஆனால், இதைச் செய்தது யார்? இன்றைக்கு வெட்ட வெளியிலே நியாயத்திற்காக வக்காளத்து வாங்குவதாக, நீதிக்காகப் போராடுவதாக சொன்னவர் தான் அன்றைக்கு செய்தார். அவர் சொல்லலாம். அவருக்கு சில பேர்கள் துணை போகிறார்களே என்பதிலேதான் எங்களுக்குக் கவலை. நீதி, நேர்மை எங்களுக்குத் தெரியும். ஆனால் அவர் இன்றைக்கு செய்திருக்கின்ற அக்கிரமங்களை மறைத்துவிட்டு, செய்திருக்கின்றபடுகொலைகளை மாற்றி விட்டு, இன்றைக்கு எது வேண்டுமானாலும் பேசலாம் என்ற தைரியத்தில் பேசுகிறார் என்று சொன்னால், நாடு இன்றைக்கு நம்பப் போகிறதா என்றால் நிச்சயமாக நம்பாது என்பது எனக்குத் தெரியும்.

நீதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் எந்த நீதியைக் குறிப்பிடுகிறார்கள். யார் யார் என்று ஆதாரம் வைத்திருக்கிறார்களா? நாங்கள் இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்ல வேண்டுமா? எங்கள் இயக்கத்திலே இருந்த பூராவாரி சுகுமாரனையும், அவர் தந்தையையும் படுகொலை செய்தது தெரியாதா? ஓராண்டு, இரண்டாண்டு வழக்கு விசாரணையில் இருந்தது. பிறகு இதிலே சம்பந்தப்பட்ட போலீசை மாற்றிய நிலைமை எங்களுக்குத் தெரியும். அன்றைக்கு ஐ.ஜி. அருள் அவர்கள் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதால், நாங்கள் துப்புத் துலக்குவதில் காலதாமதம் ஆகியது என்று அவர்கள் சொன்னது பத்திரிகையிலே வந்திருக்கிறது. இன்றைக்கு நியாயம் பேசுகிறார்கள், நாங்கள் நீதியில் குறுக்கிட்டு விட்டோம் என்று. நீதியில் குறுக்கிடுவதாக இருந்தால், இந்த வழக்கில் நீதியில் தலையீடு என்று சொல்லி, நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், நேர்மையில் உறுதியோடும், நியாயம் எங்கள் பக்கத்திலே இருக்க வேண்டும் என்பதற்காக, இன்று வழக்குமன்றத்திற்குப் போனாலும், பல பேர்கள் தப்புகின்ற நிலைமை இருந்து வருகிறது. ஆனால் இன்று சொல்கிறார்கள் — நீதித் துறையிலே தலையிடுகிறோம் என்று. எங்கே தலையிட்டோம். யாராவது எந்த விவகாரத்திற்காவது தலையிட்டிருக்கிறோம் என்பதற்கு என்ன ஆதாரம்? ஏதாவது நேரடியாக கேட்டால், விசாரணை வைத்தால் நிரூபிக்கிறோம் என்கிறார்கள். யார் விசாரணை

நான் சொல்ல முன் வரவில்லை. கொலைகளைப் பற்றிய புள்ளி
விவரத்தை மாற்றம் செய்ய முடியாது. போலீஸ் தயாரிக்கின்ற
புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டால், பழைய ஆட்சியில்
இந்த வழக்கை போடாதே என்று சொன்னால் போடாமல்
இருந்து விடுவார்கள். இந்த ஆட்சியில் நிலைமை அப்படியல்ல,
என்ன நடந்திருந்தாலும், நியாயமான முறைப்படி செய்யுங்கள்
என்று சொல்லப்பட்டிருப்பதால், நியாயமான நடவடிக்கைகளில்
காவல்துறை ஈடுபடுகிறது. அப்படியென்றால் எதிர்கட்சியினர்
மீதெல்லாம் எத்தனையோ வழக்குகள் வரவில்லையா எதிர்க்
கட்சியிலுள்ளவர்கள் கேட்கக்கூடும். அவர்களுக்கு நான் சொல்
லிக்கொள்வேன், அண்ணன் கந்தசாமி அவர்கள் கூட, என் மீது
கூட வழக்கு போட்டு விட்டார்களே, என்ன போலீஸ் துறை
என்று குற்றஞ்சாட்டினார்கள். அவர்களுக்கு என்னென்ன
நெருக்கடி இருக்கிறது. அவர்கள் வேலை செய்கிற நேரத்தில்—
அவர்கள் சப்-இன்ஸ்பெக்டர்களாக இருந்தாலும் சரி டெப்டியாக
இருந்தாலும் சரி அவர்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள்
இருக்கின்றன. நாம் இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி,
அரசியல் வாதிகளாக இருந்து பல விஷயங்களைப் பேசுகிறோம்.
நான் உள்ளபடியே சொல்லுகிறேன். இந் ஆட்சியில் ஆளும்
கட்சியினர் எவரும் தலையிடவில்லை என்பதற்கு ஒரு உதார
ணத்தை சொல்லுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கும்பகோணத்திலிருந்து 30
ஆண்டுகளுக்குப் பிறகு. நான் எம்.எல்.ஏ.வாக வந்திருக்கிறேன்.
நான் இங்கே சட்டமன்றத்திற்கு வந்திருக்கும் நேரத்தில், அங்கே
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஒன்றிய
அமைப்பாளர் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டார். போலீஸ்
அதிகாரிகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சார்ந்தவர் ஆயிற்றே என்றோ அல்லது ஆளும் கட்
சிக்காரர் ஆயிற்றே என்றோ வழக்கில் கைது செய்யாமல் இருக்க
வில்லை. நான் அங்கே போனதற்கு பிறகு எதற்காக அவரை
கைது செய்தீர்கள் என்று கேட்டேன், அதற்கு போலீஸ் அதி
காரிகள், ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள், ஆதாரத்தோடு
வழக்கை தந்திருப்பதால, அதில் இவர் சம்பந்தப்பட்டிருக்கிறார்
என்று சொலலப்பட்டிருக்கிறது, ஆகவே அவரை விசாரணை
செய்வதற்காக கைது செய்தோம் என்று சொன்னார்கள். அவர்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய
அமைப்பாளராக இருந்தாலும் அவரை விட முடியாது என்று
என்னிடம்சொன்னார்கள்,நான்ஒன்றும்சொல்லிக்கொள்ளவிலலை.
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, நான் வட்டச் செய
லாளராக இருந்த காலம் எல்லாம் என் நினைவுக்கு வருகிறது.
அன்றைக்கு எங்கள் மீது வழக்குப் போட்டால், அந்த சப்-இன்ஸ்
பெக்டரோ, அல்லது டெப்டியோ அங்கு வேலையில் இருக்க
முடியாது. அவர்கள் வேலையில சேருவதற்கு முன்னாலேயே
எங்களை வந்து பார்த்துவிட்டுத்தான் போலீஸ் ஸ்டேஷனுக்கே
போகவேண்டும். அப்படி எங்களை வந்து பார்க்கவில்லை என்று
அடுத்தநாளே கருணாநிதி அவர்களுக்கு எழுதிவிட்டால்

ஒரேயடியாக அவர்கள் அந்த இடத்திலிருந்து தூக்கி எறியப்படு-
வார்கள். என்ன வட்டச் செயலாளரைப் போய் பார்க்காமல்
போனாயா என்று கேட்பார்கள், அப்படி கேட்கும்போது, அந்த
சப்இன்ஸ்பெக்டர் ஒரு சலாம் அடித்துவிட்டு, அப்படியா விஷயம்.
இனிமேல் டெப்டிக்கு சலாம் அடிப்பதை விட வட்டச் செய
லாளருக்கு அடிக்கிறோம் என்று சொல்லிவிட்டு சலாம் அடிப்
பார்.

[மாலை 4-50]

எதிர்க் கட்சியிலே அன்றையதினம் இருந்தவர்களுக்கு நன்
றாகத் தெரியும். ஆனால், இன்றைக்கு இதெல்லாம் பழைய
குற்றமாக மாறப்படுகிறது. ஆனால், பழைய குற்றத்தைச்
சொல்லிவிட்டு, புதிய குற்றங்களைக் கோடிட்டு காட்டினால்
அதைகூட அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம்.....

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, அன்று
அத்தகைய ருசி கண்ட தாங்கள், இப்போது அதை எப்படி
மறந்து இருக்க முடியும் என்று அறியவிரும்புகிறேன்?

திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே,
நாங்கள் அந்த ருசி கண்டவர்கள் அல்ல. ருசி கண்டிருந்தால்
அந்த இடத்திலே இருந்து இந்த இடத்திற்கு வந்திருக்க மாட்
டோம். இந்த ருசியை எதிர்த்து அன்றைக்குப் போராட வேண்
டிய எங்களுக்கு, திரு. சிவசாமி அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளத்
தயாராக இல்லை. என்றாலும், இந்த வரிசையிலே இருக்கின்த்
வர்களுக்கு அன்றைக்கும் தெரியும், இன்றைக்கும் தெரியும்,
அத்தனை பேர்களுக்கும் தெரியும். எங்கள் குரலுக்கு ஆதரவு
வராதா என்று காத்துக் கொண்டிருந்தோம். புரட்சித் தலைவர்
அவர்கள் ஒரு குரல் கொடுத்ததினால் தான் இன்றைக்குத் தமி
ழகத்தில் நியாயம் நிலைத்து நிற்கின்றது. (பலத்த கைதட்டல்)
இந்த ஒரு குரல்தான் எடுபட்டதே தவிர, வேறு யாருடைய
குரலும் எடுபடவில்லை. அவருடைய ஒரு குரல் தான் இன்றைக்கு
தமிழ்நாட்டிலே பலரை வெட்ட வெளிக்கு அனுப்பியிருக்கிறது.
அனுப்ப முடியும். வெட்ட வெளிதான் அவர்களுக்கு ஏற்றஇடம்
இந்த மன்றம் அல்ல, அப்படி வெட்ட வெளிக்கு அனுப்புகின்றதை
எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தான் உண்டு
என்பதையும் நான் தைரியமாகச் சொல்வேன்.

அந்த அளவிற்கு அக்கிரமங்கள் நடக்கின்றன. அந்த அக்கிர
மங்கள் நடைபெற்ற நேரத்தில், அதை எதிர்த்து வாதாடி இருக்
கிறோம். இன்றைக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.
சாது செல்வராஜ் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதிலே
யாராவது கைது செய்யவேண்டாம் என்று போலீசுக்கு உத்தர
விட்டார்களா? அப்படி சொல்ல முடியுமா? எத்தனை வழக்கு
கள் இன்றைக்கு போடப்படுகிறது. எம்.எல்.ஏ. வாக இருக்கி
றோமே தவிர, தனிப்பட்ட முறையில் கேட்டால், எங்களுக்கு
மரியாதை இல்லை: வருத்தம்தான். எங்களுக்கு
இருக்கின்ற மகிழ்ச்சியெல்லாம், ஊரிலே இருக்கின்றவர்கள்
பாராட்டுகிறார்கள். அந்த பாராட்டிலே நாங்கள் ஒட்டிக்

கிறார். காரியம் முடிந்துவிட்டது. பைல் திருட்டிலே எப்படி
துப்புத் துலக்க முடியும்? இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட
காரியம். இதை யாராவது கண்டு பிடிக்க முடியுமா?

இந்திரா காந்தி அவர்கள் இங்கு வந்த நேரத்தில் எவ்வளவு
அக்கிரமங்கள் நடைபெற்றன என்பதை இந்த நாடு மறந்திருக்
காது. எவ்வளவு அக்கிரமங்களைச் செய்தார்கள்? அன்று
போலீஸ்காரர்கள் எவ்வளவு நியாயத்தோடு, நேர்மையோடு
நடவடிக்கை எடுத்தார்கள்? அதற்காக எவ்வளவு பாடுபட்டார்
கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மன்றத்தில் என்ன
சொன்னார்கள்? போலீஸ்காரர்கள் அக்கிரமங்கள் செய்தார்கள்
பார்த்தீர்களா?என்று பேசினார்கள்.எனக்குப் பின்னால் அண்ணன்
ஜேம்ஸ் அவர்கள் பேசப் போகிறார்கள். எவ்வளவு பேர்களைத்
தாக்கினார்கள் தெரியுமா என்று முன்னாலேயே பேசினார்கள்.
அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன்—இந்திரா காந்தி
யைக் கைது செய்த நேரத்தில் கும்பகோணத்தில் எங்கோ ஓர்
கடையை அடித்தார்கள் என்பதற்காக ஜனதா கட்சியைச் சேர்ந்த
20 பேர் அதற்கும் சம்பந்தமே இல்லாத, அரசியலுக்கு அப்பாற்ப்
பட்ட நிலையில் உள்ள யாரோ ஒருவருடைய பையன் அந்தக்
கட்சியில் இருக்கிறவனுக்கு வேண்டியவன் என்று சொல்லி ஒரு
முஸ்லீம் வீட்டில் இரவு 12 மணிக்கு அடித்தார்கள். வீட்டுக்
கண்ணாடியை உடைத்தார்கள். கார் கண்ணாடியை உடைத்
தார்கள். அன்றைக்கு குறிப்பிட்டுச் சொல்லியிருப்பேன்—ஜனதா
கட்சியினர் கும்கோணத்தில் அராஜகம் என்று. அங்கே சில
பழைய நண்பர்கள் இருந்தார்கள். அதனால் அதைச் சுட்டிக்
காட்ட வில்லை.

[மாலை 5-00]

அந்தத் தவறுதான் காரணமே தவிர, நிச்சயமாக அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த
வரையில் நியாயங்களுக்காக, நேர்மைக்காக நாங்கள் எந்த
வகையிலும் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் எதிராக
இருப்போம் என்று நிச்சயமாக யாரும் நம்ப மாட்டார்கள் என்
பதை இந்த நேரத்திலே சொல்வேன்.

அதைப்போல போலீஸ்காரர்களுக்குப் பல்வேறு சலுகைகள்
வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். நான் உள்ளபடியே,
திரு உமாநாத் போன்றவர்களும் திரு. கூத்தகுடி சண்முகம்
போன்றவர்களும் சொல்கிற நேரத்திலே எங்களுக்குக் கூட
மகிழ்ச்சி. திரு. உமாநாத் அவர்கள் சொல்கிற நேரத்திலே
நீங்கள் இப்படியே போனால் நாளைக்கு அவர்களும் இப்படிப்
பட்ட சங்கத்தை ஆரம்பித்து போராட ஆரம்பிப்பார்கள் என்று
சொல்கிற நேரத்திலே சொன்னார், அது சி.ஐ.டி.யு சங்க
மாக வந்தாலும் வரும் என்று.......

திரு ரா. உமாநாத் : சி.ஐ.டி.யு. சங்கம் வரும் என்று
நான் சொல்லவில்லை. பிரச்சினையைத் தீர்க்காமல் அடக்குமுறை
யைக் கையாண்டால் நாங்கள் அதில் அவர்களுக்கு பாதுகாப்
பாக இருப்போம் என்று தான் சொன்னேன்....

திரு. எஸ்.ஆர். இராதா : பரவாயில்லை, நான் பாராட்ட
வேண்டியது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பாராட்ட
வேண்டியது இல்லை, தவறாகச் சொன்னார், ஆகவே மன்னிப்புக்
கேட்க வேண்டும், வேண்டுமானால் குறிப்பைப் பாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : திரு. உமாநாத் அவர்கள்
விளக்கம் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்
முதலிலே அவர் அப்படித்தான் சொன்னார்.....

திரு. ரா. உமாநாத் : நான் அப்படிச் சொல்லவில்லை
வேண்டுமானால் ரிக்கார்டை பாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : நானும் சொல்கிறபோது சி.ஐ.
டி.யு. சங்கம் வந்தாலும் வரும் என்று தான் சொன்னார்கள்
என்று தான் சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : ரிக்கார்டை வேண்டுமானால்
பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் காலை
யில் இருந்தேன். அப்படிச் சொல்லவில்லை அவர். ஆரம்
பிக்கப்பட்டால் நாங்கள் துணை நிற்போம் என்று தான் சொன்
னார்.

திரு. எஸ். ஆர். இராதா : நானும் அந்தக் கருத்தில்
தான் சொன்னேன். நிச்சயமாக சி.ஐ.டி.யு. ஆரம்பித்து விட்
டார் என்று சொல்லவில்லை. அது நடக்கப்போகிறதில்லை
என்று எனக்குத் தெரியும். சங்கம் வேண்டுமா வேண்டாமா
என்பதிலே அவர்களும் சங்கம்வைத்து, அவர்களும் ஊர்வலம்
விட்டு, மறியல் செய்து, போலீஸ் ஸ்டேஷன் முன்னாலே கோஷ
ங்கள் போட்டால் என்ன என்றால் கொஞ்சம் ஆசையாகத்
தான் இருக்கிறது. ஆனால் எல்லா மாநிலங்களிலேயும் இப்படி
ஆரம்பித்து, இந்தக் கொள்கையை மேற்கு வங்காளத்திலே அனு
மதித்து, கேரளத்திலே அனுமதித்து அதற்குப் பின்னாலே மை
சூருக்கு வந்து அது தமிழ்நாட்டுக்கு வரப்போகிறதா என்று
எனக்குத் தெரியவில்லை.. . . . . . .

திரு. ரா. உமாநாத் : மேற்கு வங்காளத்தில் போலீஸ்
காரர்கள் சங்கம் என்று ஆரம்பிக்கப்பட்டு
டட்டு இருக்கிறது. திரிபுராவிலே இல்லாத அது அங்கீகரிக்கப்
கேட்டு அங்கே சங்கம் அங்கீகாரம் இடத்திலே முதல்வர்
பையர் சர்வீஸஸ்க்கு 2 மாதத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே அங்கீகாரம்

திரு. செ. சிவசாமி : மேற்கு வங்காளத்திலேயும் உண்டு,
கேரளாவிலேயும் உண்டு.

திரு. எஸ். ஆர். இராதா : கேரளத்திலே இருக்கிறதா
இல்லையா என்பது, இல்லை என்று ஏகோபித்து எல்லோரும்
சொல்கிறார்கள். வந்துகொண்டிருக்கிறது என்று சொல்ல
லாம். ஆனால் சங்கம் வைப்பது தேவையான ஒன்றா என்பது
அகில இந்திய அரசாங்கத்தினுடைய அடிப்படையிலே யோ
சிக்கவேண்டிய ஒன்று. போலீஸ்காரர்களுக்கு ஒரு சங்கம் வேண்டு
மென்று சொல்கிற நேரத்திலே நாம் மேலும் சிந்தனையை வேக
மாகச் செலுத்திப் பார்க்கிற நேரத்திலே இராணுவத்திற்கும்
சங்கம் வேண்டும், இராணுவ அதிகாரிகளுக்கும் ஒரு சங்கம்
வேண்டும், இராணுவப் படையிலே உள்ள ஜவான்களுக்கும்
சங்கம் வேண்டுமென்று சொன்னால் சங்கங்கள் தான் நடக்கு
மே தவிர காரியங்கள் நடக்காது. அது அகில இந்திய ரீதியிலே
செய்ய வேண்டிய ஒன்று. இன்றைக்கு சாதாரண நிலையில்
போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள், அன்றாட வாழ்க்கையை
அவர்கள் நடத்தமுடியாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்
பது இந்த மாமன்றத்திலே இருக்கிற அத்தனை பேர்களும் நிச்சய
மாக அவர்களுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்பதை நாம்
அத்தனை பேர்களும் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அவர்
களுடைய வசதிகளைப் பெருக்கித் தரவேண்டுமென்று,
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்த
வரையில் நிச்சயமாகக் கண்காணிப்பு ஆக இருக்கிறார்கள் என்
பதை நான் சொல்ல விரும்புகிறேன். பெண் போலீஸ் படை
களைப் பொறுத்தவரையில் சென்னையில் மட்டுமல்ல மதுரை,
கோவை, திருச்சியிலேயும்ஏற்படுத்தப்படுகிறது பாராட்டக்கூடிய
ஒன்று. திருச்சி, மதுரை, கோவையிலே மட்டும் நிற்காமல் அது
மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுகிற வகை
யில் தமிழ்நாடு பெண் போலீஸ்படை சிறப்பாக நடைபெறு
கின்றது என்பதை தமிழ்நாடு எடுத்துக்காட்டுகிற வகையிலே
இந்தியாவிலே நாம்தான் வழிகாட்டுகிறோம் என்ற அளவிற்கு
நிச்சயமாக சிறப்பாகச் செயல்பட முடியும். அதை புரட்சித்
தலைவர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.
அதே போன்று துப்புத் துலக்குவதற்குப் புதிய கருவிகள் வாங்கப்
பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள்
அமெரிக்காவிற்குச் சென்றபோது [illegible]
அங்கே எப்படித் திருட்டு நடக்கிறது, களவு [illegible]
எப்படிப் போலீஸ்காரர்கள் கண்டு பிடிக்கிறார்[illegible]

என்னென்ன கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று காணப் போகிறேன் என்று சொன்னார்கள். இங்கே ஒரு அரசியல் தலைவர் சொன்னார் அவருக்கே வாடிக்கையான குரலிலே சொன்னார், அவர் ஏன் போகிறார் என்றால் அங்கே எப்படித் துப்பாக்கிச் சூடு நடக்கிறது என்று பார்ப்பதற்காக என்று சொன்னார். காரணம் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற நேரத்திலே பத்து பதினைந்து நபர்களை வைத்துக்கொண்டு மகிழ்ந்து பழக்கப்பட்டவர். ஆனால் எங்கள் புரட்சித் தலைவரவர்கள் துப்பாக்கிச் சூடு நடந்ததாகக் கேள்விப்பட்டதற்குப் பின்னால் யாரும் அவரிடத்தில் நெருங்கிக்கூடப் பேசமுடியாத அளவிற்கு யாரும் வேதனைப் பட முடியாத அளவிற்கு அவர்கள் வேதனைப்பட்டு கண்ணீர் சிந்திய காட்சி எனக்கு நன்றாகத் தெரியும். துப்பாக்கிச் சூடு ஏதோ வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதுகிற கொள்கையிலே இருப்பவர்கள் நாங்கள் அல்ல என்பது இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேருக்கும் தெரியும்.

அதேபோல் செய்தித் தொடர்பு இருக்கிறது அதைப் பொறுத்தவரையில் பல்வேறு நல்ல பணிகள் ஏற்பட்டிருக்கிறது. அது இன்னும் தீவிரத் தன்மைபெற்று சிறப்பான முறையில் நடக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்ல ஆசைப் படுகிறேன். ஊர்க்காவல்படை இருக்கிறது. அதில் எல்லா அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கண் காணித்து போலீஸ் இலாக்காவிலே இருப்பவர்கள் ஊர்க்காவல் படையிலே எந்த அரசியல் இயக்கத்திலேயும் தொடர்பு இல்லாத வர்களாகப் பார்த்து அந்தப் பணியைப் பயன்படுத்த முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைப்பு இலாக்கா முக்கியமான இலாக்கா. பல்வேறு இடங்களிலேயும் தீயணைப்பு நிலையங்களைத் துவக்க வேண்டும். அதை நவீனப்படுத்த வேண்டும். அந்த வாகனங் களை எல்லாம் நவீனப்படுத்த வேண்டும்.

ஆம்புலன்ஸ்களைப் பொறுத்தவரையில் பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்தவை இன்றைக்கும் இருக்கிறது என்ற நிலைமாறி காலத்தின் வேகத்திற்கேற்ப காலத்தின் தேவைக்கேற்ப இதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானி யங்களை வரவேற்று துணைத் தலைவரவர்களுக்குத் தனியாக நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

__திரு. ஒ. சுப்பிரமணியம் :__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அமைச்சு ஏற்பட்டாலும் காவல்துறை இன்றியமையாதது. அந்தப் பொறுப்பு வகிக்கின்றவர்கள் சாதாரண அமைச்சராக இருந்தாலும் முதலமைச்சராக இருந் தாலும் எல்லாக் குற்றச் சாட்டுகளையும் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

[திரு. ஓ. சுப்பிரமணியம்] [1979 ஏப்ரல் 18

இந்தத் துறையில் பரவலாக இருக்கக்கூடிய குறைபாடுகள்
என்ன என்பதைக் கூர்ந்து பார்த்து இங்கு கூறப்படும் குறை
பாடுகளை ஏதோ வேண்டுமென்று சுமத்துகிறார்கள் என்று
எண்ணாமல் அதில் அடிப்படை என்ன என்று ஆராய்ந்து பார்த்து
அதற்கான பரிகாரம் காண ஆவலுடன் முயற்சி செய்தால் நலம்.
அந்த வழியில் முதலமைச்சர் பாடுபடுவார் என்று நான் நம்பு
கிறேன்.

எந்தக் குற்றவாளியாக இருந்தாலும் அவர்களை மனிதாபி
மானத்துடன் நடத்தப் பழக வேண்டும். போலீஸ் ஸ்டேஷ
னுக்கு ஒருவரை அழைத்து வந்துவிட்டால் என்ன வேண்டுமானா
லும் செய்யலாம் யார் நம்மைக் கேட்பது என்ற மனோபாவத்து
டன் சிலர் நடக்கிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும்.
சில குற்றங்களில் உண்மையை வரவழைக்க சித்திரவதை
முறைகள் பல ஆண்டுகாலமாகக் கையாளப்பட்டு வருகிறது.
அவைகளைத் தவிர்த்து பிற நாடுகளில் இச்சந்தர்ப்பங்களில் என்ன
முறைகள் கையாளப்படுகிறது என்பதை அறிந்து இந்தக் கால
மாறுதலுக்கேற்ப நடந்தால் அது நாகரீகமாக இருக்கும் என்று
நான் நம்புகிறேன்.

" உறியூமன் ரிலேஷன்ஸ் " " மனித இயல் உறவுகள் "
பயிற்சிக்குக்கூட வெளிநாட்டிற்குச் சில அதிகாரிகள் அனுப்பப்
பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பு இருக்கிறது. அவர்களுடைய
பயிற்சி நமக்கு உதவும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து எல்லோரும்—முதலமைச்சர் உள்பட விரும்பாத சில
நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாமல் நடக்கின்றன. அவைகளை
ஆராய்ந்து பார்க்கிறபொழுது வருங்காலத்தில் அதைத் தவிர்க்க
எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டுமென்று பார்க்க வேண்டும்.
நடந்த கால நிகழ்ச்சிகளை முன்மாதிரியாக வைக்காமல் தவிர்க்கப்
பாடுபட வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்லப் போனால்* * *

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> பேரவைத்
துணைத் தலைவரவர்களே நீதிபதி நியமிக்கப்பட்ட ஒரு
வழக்கைப்பற்றி அவரிடம் என்னென்ன நிலைமைகளைப் பற்றி
எல்லாம் விசாரித்துக் கருத்துக் கூற வேண்டும். தீர்ப்புக்கூற
வேண்டுமென்று கேட்டிருக்கிறோமோ அதைப்பற்றி மாண்புமிகு
உறுப்பினரவர்கள் கருத்துச்சொல்வது பொருத்தமில்லை. ஆகவே
அது குறிப்பேட்டிலே இருப்பது நியாயம் அல்ல என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஓ. சுப்பிரமணியம் :</u> பேரைத் துணைத் தலைவரவர்
களே எனக்கு முன் பேசிய பல நண்பர்கள் இதைப்பற்றிக்
குறிப்பிட்டுவிட்டார்கள். இருந்தாலும் முதலமைச்சர் வேண்டு
கோளுக்கிணங்க.................

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின்
ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 18] [திரு. ஓ. சுப்பிரமணியம்]

(மாலை 5-10).

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> துணைத் தலைவர
அவர்களே அதுபற்றிய 'ஃபாக்ட்ஸ்'' சொல்லலாம். ஆனால்,**
என்று சொன்னீர்கள். அதைத்தான் மாண்புமிகு முதல்வர்
அவர்கள் சொன்னார்கள்.

<u>திரு. ஓ.சுப் பிரமணியம் :</u> இந்தத் துப்பாக்கிச் சூடு * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்று
துவங்கிப் பேசிய அந்த இரண்டு மூன்று வாக்கியங்களையும்
சபைக் குறிப்பேட்டிலிருந்தும், பத்திரிக்கைக் குறிப்பேடுகளில்
இருந்தும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. ஓ. சுப்பிரமணியம் :</u> அதைப்பற்றி நண்பர்கள் எல்
லாம் பேசிவிட்டார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்த
நேரத்தில் நான் இல்லாததால் அந்தச் சந்தர்ப்பம் எனக்குக்
கிடைக்கவில்லை. முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கி
றேனே தவிர குறை காணவில்லை என்று முதலாவதாகச் சொன்
னேன். சில நிகழ்ச்சிகளை நாம் கொஞ்சம் சாவகாசமாக
ஆராய்ந்து பார்த்தோமானால் அந்த துக்ககரமான நிகழ்ச்சிகள்
நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதற்காக நான் சொல்கிறேன்.

அடுத்து இங்குள்ள காவல் துறையிலே ஒரு தாலூகா அள
விலுள்ள பல அலுவலகங்களுக்கு டைப்ரைட்டர் கிடையாது. அது
இல்லாததனால் அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்
படுகின்ற நேரத்திலே அவர்கள் தேவையில்லாமல் அங்கு தங்க
வேண்டியிருக்கிறது என்பது சமீபத்திலே நாங்கள் கைது செய்யப்
பட்ட நேரத்திலே நாங்கள் அறிந்துகொண்ட உண்மை. ஆகவே,
அந்த அத்தியாவசிய சாமான்களை வழங்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இருப்புப் பணம் போலீஸ்
ஸ்டேஷனிலே குறைவாக இருக்கிற காரணத்தால் கைது செய்யப்
படுகிறவர்களுக்கு சாப்பாடு வசதி போன்றவைகளுக்குப் பணம்
பற்றாக்குறை ஏற்படுகிறது.

மேலும் இன்னொன்று நான் கேள்விப்பட்டேன், கைது
செய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்புவதற்கு முன்னால் ரிமாண்ட்
கைதியாக இருக்கிறவரை அவர்கள் செலவு செய்கிற பணம்
அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்
படாவிட்டால் அந்தச் செலவை சர்க்கார் ஏற்றுக்கொள்ளாது
என்று கூறுகிறார்கள். அது எந்த அளவு உண்மை என்று
தெரியவில்லை. அப்படியிருந்தால் அந்த நிலைமையை மாற்றி
அவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் செலவு செய்யும் நிலை
மையை மாற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின்
ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மது விலக்கை அமுல் செய்வதில் போலீஸ் கொஞ்சம் மெத்தன
மாக இருப்பதால்தான் அது வெற்றி பெறத் தடையாக உள்ளது
என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
நண்பர்கள் பேசும்பொழுது அங்கே பணம் புரளுகிறது இலஞ்சம்
தாண்டவம் ஆடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். பல
மாக மதுவிலக்கை அமுல்படுத்தாததால் சர்க்காருக்கு செல்ல
வேண்டிய பணம் வேறு வழியிலே தகாதவர்களுக்குப் போய்ச்
சேருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். சர்க்காரும்
நஷ்டப்பட்டு மக்களுக்கும் நாம் எதிர்பார்க்கிற நன்மை கிடைக்க
வில்லை என்றால் அதை நிவர்த்திக்க அரசாங்கம் உடனடியாக
ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக
சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திலே சேந்தங்குடி என்ற
ஊரிலே அந்த மதுவிலக்கு கமிட்டி தலைவர் ஒருவர் கள்ளத்தன
மாக சாராயம் காய்ச்சியவரையும்,
உடந்தையாக இருந்த பலரையும் அவர்களுக்கு
ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று போலீசாரிடம் போலீஸ்
கேஸ் எழுதினார்கள். ஆனால் ஒப்படைத்துத் ஒப்படைத்து
நேரத்திலே அங்கு ஸ்டேஷனிலிருந்து ஏ.எஸ்.ஐ. திரும்புகின்ற
லேயே தங்கச்சாமி என்ற மது விலக்குகமிட்டி முன்னிலையி
கன்னத்தில் அடித்து வாயில் வரக்கூடாத பேச்சுக்களை தலைவரை
பேசியிருக்கிறார்கள் என்றால் எந்த அளவுக்கு மது எல்லாம்
குற்றங்களுக்கு போலீசார் உடந்தையாக இருக்கிறார்கள் விலக்குக்
சந்தேகப்படும் அளவிலே காரியங்கள் நடக்கின்றன. என்று
இது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால் ஆகவே
யினர் நிச்சயமாக பொது மக்களால் காவல் துறை
புகார்களுக்கு உடந்தையாக இருக்க வேண்டும். கொண்டு வரப்படுகிற
டன் உடந்தையாக இருந்தால் அதைத் தவிர்க்க முடியும். பொது மக்களு
என்றால் பொதுமக்கள் ஆர்வத்துடன் இதை எடுத்துச் இல்லை
முன்வர மாட்டார்கள் என்று நான் எடுத்துச் சொல்ல சொல்ல
கிறேன். ஆசைப்படு

தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி என்ற ஊரில்
2 வருஷ காலமாக அங்கே ஒரு கேஸ் ஒன்று நடந்து வந்திருக்கிறது.
அங்கே வேலையில்லாத பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்
என்று சொல்லப்படுகிற சில இளைஞர்களை ஒரு கற்பழிப்புக்
கேசில் போட்டு அந்தக் கேஸ் நடந்து முடிந்து அவர்கள் விடுதலை
செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக உண்மைக்கு மாறாக அவர்
களை வேண்டுமென்றே வேண்டப்படாதவர்கள் என்பதற்காக
அந்தக் கேஸை நடத்தினார்கள். அப்படிக் கேஸ் நடத்திய
காரணத்தால் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களும் ஒரு
வருக்கு கல்லூரி படிப்பும் இழப்பு ஏற்பட்டதாகச் சொல்லப்படு
கிறது. இதை ஏன் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்
என்றால், இதைப் போன்ற கேஸ்கள், ரேப் கேஸ்கள் போடப்
பட வேண்டுமென்றால் பல நிரூபணங்கள் எல்லாம் காட்டப்பட
வேண்டியிருக்கும். அப்படி இருந்தும் வேண்டாதவர்கள் என்ற

காரணத்தால் கேஸைப் போட்டு நடத்தியிருக்கிறார்கள். இது மாதிரியான நடைமுறைகள் இனிமேலாவது மாற்றப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குளித்தலை தலைநகரில் ஒரு தீ அணைப்புப் படை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த இடத்தில் சுமார் 6,000 ஏக்கர் கரும்பு பயிரிடுகிறார்கள். அவைகள் அடிக்கடி தீப்பிடித்து பாதிக்கப்படுகின்றன. அதற்காக அந்த இடத்திலே ஒரு தீயணைப்புப் படை அவசியம் நிறுவப்பட வேண்டும் என்று கூறுகிறேன். இது போன்ற பல காரியங்களை எதிர்க்கட்சியில் இருக்கிறபோதும், ஆளும் கட்சியில் இருக்கிற போதும் யாரும் சிறப்பாக பெருமைப்படக்கூடிய அளவிலே நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள முடியாது. ஆகவே இதை யெல்லாம் டிபார்மெண்டிலே ஏற்படுகிற இன்னல்களை எடுத்துச் சொல்லப்படுகிறது என்ற எண்ணத்திலே அதிலே உள்ள உண்மைகளை எடுத்துக் கொண்டு இந்தத் துறையை எந்த அளவுக்கு திருத்தியமைக்க முடியும் என்று பார்த்து அந்த அளவுக்கு திருத்தியமைக்க உதவ வேண்டும் என்ற முறையில் தொடர்ந்து பணிகளைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது இந்தத் துறையிலே கவனம் செலுத்தி பல விஷயங்களை உணர்ந்துக் கொண்டதாக அறிந்தோம். அவர் அங்கேயிருந்து பெற்று வந்த உயர்ந்த அனுபவங்களை இங்கே இதிலே அமுல் செய்வார்களேயானால், இந்தத் துறையை எல்லோரும் போற்றக் கூடிய வகையிலே சிறப்பான துறையாக மாற்றி அமைக்க அவருடைய சகல சக்தியையும் உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அரசின் மீது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற தீர்மானத்தை முன் மொழிந்து பல கருத்துக்களைக் கூறியிருக்கிறேன். ஆகவே மீண்டும் ஏற்கெனவே எடுத்துக் கூறிவற்றையே நான் இங்கே கூறவிரும்பவில்லை. இங்கே இந்தத் துறையின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற ஆய்வு உரையின் சம்பந்தமாக பல கருத்துக்களை இங்கே எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்தத் துறை எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறை, அனைத்து மக்களுக்கும் அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, அத்தியாவசியமான ஒரு துறை என்பதை உண்மையிலேயே அனைவரும் ஒத்துக் கொள்வோம். ஆகவே தான் இந்தத் துறைக்கான எந்த அளவுக்கு பணம் ஒதுக்கீடு செய்வதாக இருந்தாலும்கூட, இப்பொழுது ஒதுக்கீடு செய்திருக்கிற 38 கோடி ரூபாய் போதாது மேலும் ஒதுக்க வேண்டும் என்று சொன்னால் கூட, அதற்கு ஆதரவு அளிப்பதற்காகத்தான் இருப்போமே தவிர அந்த முறையில் நாங்கள் எதிர்ப்பதாக

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 18

இல்லை. காரணம் என்னவென்றால், அனைவருக்கும் பாது
காப்புக் கொடுக்கக்கூடிய, அனைத்து மக்களின் உயிருக்கும் உட
மைகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய தேவையான ஒரு
துறை சிறப்பாக செயல்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.
ஆகவே இந்த துறைக்கு சிறப்பாக செயல்பட வேண்டும் என்று
சொல்லி எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்தா
லும் நிச்சயமாக அது முறைகேடாக இருக்காது என்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 5-20]

இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்றன ஆய்வுரையில் பல்வேறு
புள்ளி விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்
றையெல்லாம் இங்கே கூறுகின்ற போது எனக்கு முன்பாக ஆளும்
கட்சியைச் சேர்ந்த நண்பர் ராதா அவர்கள் எடுத்துக்கூறி அந்தப்
புள்ளிவிவரங்களை இந்த தேசத்தில் இருக்கின்ற மற்ற மாநிலங்
களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு, இதர மாநிலத்
தில் இருக்கிற புள்ளி விவரங்களை ஒப்பிட்டு, இங்கே எடுத்துக்
கூறினார்கள். ஆக, அதன் பொருள் என்ன என்று சொன்னால்
இங்கே இந்த மன்றத்தில் பல்வேறு அங்கத்தினர்கள் எடுத்துக்
கூறிய கருத்துக்களை சந்திப்பதற்கு இந்த அரசு ஒரு திக்கற்று
நிற்கிறது. ஆகவே, இந்த ஆட்சியில், அதற்கு பதில் கூறுவதற்கு
தகுதி இல்லை. ஆகவே, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு இந்த
ஆட்சியில் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கூறுகிறார்கள் என்று
நான் எண்ணுகிறேன்.

இங்கே கடந்த பல ஆண்டுகளில் நான் பல்வேறு குற்றங்களை
இங்கே கொடுத்து இருக்கின்ற ஆய்வுரையில் காண்கிறோம். 1977
1978 ஆம் ஆண்டுகளில் உள்ள குற்ற வழக்குகளை ஒப்பிட்டு
இங்கே பல புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.
ஆதாயத்திற்காக கொலை செய்தல் — 1977—ல் 49, 1978—ல் 40
ஆகவும் குறைந்து புள்ளி விவரங்கள் காணப்படுகிறது. ஆனால்
அதற்கு முந்திய ஆண்டு பார்த்தால் 1976-ம் ஆண்டு பார்த்தால்
30 ஆக இருந்த கொலை 1978-ல் 40 ஆக உயர்ந்து இருக்கிறது.
அதே போல் கொள்ளை 1976-ம் ஆண்டில் 20 ஆக இருந்தது.
1979-ஆம் ஆண்டில் 21 ஆக உயர்ந்து காணப்படுகிறது. வழிப்பறி
1977-ல் 130, 1978ல்- 192 ஆக உயர்ந்து காணப்படுகிறது.
அதேபோல் கன்னக்களவு 1976-ம் ஆண்டு 7,759 ஆக இருந்தது.
1977 ஆம் ஆண்டு 10,305 ஆக உயர்ந்தது. 1978-ஆம் ஆண்டு
10,499 ஆக உயர்ந்து இருக்கிறது. அதேபோல் பெரிய திருட்டு
1977 ஆம் ஆண்டு 24,589 ஆக இருந்தது. 1978-ஆம் ஆண்டு
26,915 ஆக உயர்ந்து காணப்படுகிறது. இது அரசுத் தரப்பில்
கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள். இதைப் பார்க்கிறபோது
ஆண்டுதோறும் நாம் இந்த இலாகாவிற்கு நிதி கூடுதலாக ஒதுக்கித்
தருகிறோம். அது இதற்காக என்று சொன்னால் இந்த நாட்
டில் நிலைமைகள் சரியாக வேண்டும் என்ற நிலைமையில் செய்கி
றோம். ஆனால் அதற்கு மாறாக குற்றங்கள் அதிகரித்து வருகி

1979 ஏப்ரல் 18] [திரு. ஜே. ஜேம்ஸ்]

றது என்று சொன்னால் இந்த நாட்டிலே இருக்கிற போலீஸ்
இலாகாவை நிச்சயமாக குறை சொல்ல முடியாது. காரணம்
போலீஸ் இலாகா சிறப்பாக செயல்பட்டதால் தான் இந்த அள
விற்கு குற்றங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவர்
களை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆனால்
குற்றங்கள் எண்ணிக்கையில் கூடுவதற்குக் காரணம் என்ன என்
பதை இன்றைய அரசியல் சமுதாய அமைப்பு இவற்றையெல்
லாம் ஒப்பிட்டு எண்ணிப்பார்க்கிறபோது இந்த நாட்டில் இருக்கிற
முறை கேடுகள் வளர்ந்து கொண்டே வருகிறது. அதற்கு இந்த
அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். ஆகவே நாட்டில் குற்றங்களை
வளர்க்கின்ற அரசாக அரசு இருக்கிறதே தவிர நாட்டிலே
நிம்மதியான நிர்வாகத்தை நடத்திகுற்றங்களை குறைப்பதற்கும்
வழிவகைகளை காண்பதற்கும் இந்த அரசு தவறி விட்டது என்று
நான் கூறவிரும்புகிறேன்.

அடுத்து, இங்கே இவற்றிற்கெல்லாம் இந்த இலாகா ஒரு
காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள். அவசர நிலை காலத்தில்
துப்பு துலக்குகிற முறை ஒன்றாக இருந்தது. ஆனால் அவசர
காலம் முடிந்த பின்பு அந்த முறையைக் கைவிட்டு அறிவியல்
சார்ந்த துப்பு துலக்கும் முறைகளை கைக்கொண்டதன் காரண
மாக துப்பு துலக்குகையில் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது
என்ற விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள்.

இன்று துப்பு துலக்கிய எண்ணிக்கையைப் புள்ளி விவரங்களைப்
பார்க்கிறபோது 1976-ம் ஆண்டு 52 சத விகிதம் இருந்த நிலைமை
மாறி 1977-ம் ஆண்டு 41.8 ஆகவும் 1978-ம் ஆண்டில் 30.1
சதவிகிதமாகவும் இந்த ஆய்வில் குறைந்து இருக்கிறது என்று
சொன்னால் இந்த இலாகா செயலற்று இருக்கிறது என்பதை
நான் கூற விரும்புகிறேன். செயலற்று இருக்கிறது என்று நான்
கூறுகிறபோது ஏற்கெனவே நான் சொன்னேன் இந்த இலாகா
இது வரையிலும் தமிழ் நாடு போலீஸ் என்று சொன்னால் எந்த
அளவிற்கு திறமையான போலீஸ் என்பதை நாடு நன்றாக அறிந்து
இருக்கிறது, அதை பாராட்டியிருக்கிறது.

ஆனால் துப்பு துலக்குவதில் எந்த அளவுக்கு நாளுக்கு நாள்
குறைந்து கொண்டு வருகிறது, குறைந்து காணப்படுகிறது என்று
சொன்னால் நிச்சயமாக அந்த இலாகாவிலே பணியாற்றுகின்ற
அதிகாரிகளை நான் குறை கூற நிச்சயமாகத் தயாராக இல்லை.
ஆனால் ஆளுகின்றவர்கள் சரிவரக் கவனிக்காத காரணத்தினால்
துப்பு துலக்குவது இப்போது குறைந்து கொண்டு காணப்படுகிறது
என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அடுத்து தண்டனை பெற்றவர்களுடைய புள்ளி விவரம்
கொடுக்கப்பட்டிருக்கிறது. 1977-ம் ஆண்டு 57 சதவீதமாக
இருந்த நிலை மாறி இன்றைய தினம் 1978-ம் ஆண்டு 47 சத
வீதமாக குறைந்து காணப்படுகிறது என்று சொன்னால்

போலீஸ் இலாக்கா அதிகாரிகள் இந்த வழக்குகளை எல்லாம் பதிவு செய்கிறார்கள். ஆனால் நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக தண்டனை பெறாத நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் யார் இதற்குப் பொறுப்பு என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நன்றாகச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த வழக்குகள் நடக்கிறபோது அதில் ஏதோ அரசியல் தலையீடு இருக்கிறது என்ற குறைபாடும் சந்தேகமும் நாட்டு மக்களுக்கு உண்டாகக் கூடிய நிலை இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது இவ்வாறு இருக்க, அடுத்தநாக பல கொலைக் குற்றங்கள் கொலைகள் இது வரையிலும் துப்பு துலக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்த அளவில் சிலவற்றை நான் கூறுகிறேன். ஆனால் எண்ணற்ற கொலைக்குற்றங்கள் இந்த மாநிலத்தில் கடந்த ஆண்டு போலீசாரால் துப்பு துலக்காமல் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறது என்ற நிலை நிச்சயமாக வரவேற்கத்தக்கதல்ல. இதற்கு முன்னால் எல்லாம் இந்த மாநிலப் போலீஸ் எந்த அளவுக்கு சிறப்பு வாய்ந்த போலீசாக இருந்தது என்பதை கள்ள நோட்டு அடித்த வழக்குகளைப்பற்றி எல்லாம் துப்பு துலக்குவது போன்றவற்றின் மூலமாக நாமும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவற்றை எல்லாம் கண்டுபிடித்து போலீஸ் இலாக்கா இன்றைய தினம் இந்த மாநிலத்தில் நடைபெற்ற கொலை வழக்குகளைக் கூட கண்டுபிடிப்பதற்கு லாயக்கு இல்லாத அளவுக்கு மாறிவிட்டது என்று சொன்னால் உண்மையிலேயே நிலைமை மோசமாகி இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ராயபுரத்தில் நடந்த சம்பவம் பற்றி பல நண்பர்கள் இங்கே ஏற்கெனவே கூறி யிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ராயபுரத்தைச் சேர்ந்த கிருபாகரன் என்ற பாலன் தனது அடுத்த வீட்டுக்காரரோடு ஏதோ மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பிறகு அவரை வீட்டிலிருந்து அவர் அழைத்துச் சென்றிருக்கிறார். அப்படி அழைத்துச் சென்ற அன்றைய தினத்திலிருந்து இன்றைய தினம் வரையிலும் அவர் எங்கே போனார் என்ற செய்தியே இல்லாமல் இருக்கிறது. நிச்சயமாக அவர் கொலை செய்யப்பட்டிருப்பார் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால் இது வரையிலும் அவருக்கு என்ன நேர்ந்தது என்ன ஆனார், எங்கே போனார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை. அவரைப்பற்றிய செய்தி இது வரையிலும் அவருடைய மனைவிக்கு கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தநாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பளுகல் வில்லேஜில் துளசி என்பவருடன் வியாபார சம்பந்தமாக தாணுநாதன் பணிக்கர், மனைச்சி நாராய பணிக்கர், சதானந்தம் ஆகியோர்களுக்குள் ஏதோ தகராறு இருந்திருக்கிறது. ஆனால் துளசி என்ற அவரை வெகுநாட்களாகக் காணவில்லை. அந்த வியாபார

சம்பந்தமான தகராறுகள் ஏற்பட்டதால் அவன் சொலை செய்யப்
பட்டிருப்பான் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால்
கடந்த ஓராண்டு காலமாக இது வரையிலும் ஒரு செய்தி கூட
கிடைப்பதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல.

டி. என். சிவராம குருக்கள் என்பவர் திருச்செங்கோடு அர்த்த
நாரீஸ்வர மலைக் கோவிலில் 7—11—77 அன்று இரவு கத்தியால்
குத்தி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அது சம்பந்தமாக இது
வரையிலும் எந்த தகவலும் இல்லாமல் இருக்கிறது. குற்றவாளி
கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

அடுத்து என்னுடைய தொகுதியாகிய திருவெட்டாறு என்ற
பகுதியில் ஒரு பெண்மணி ஒரு இளம் குழந்தையோடு வந்து
கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டிருக்கிறாள். மக்கள்
அந்தக் குழந்தையை மட்டும் உயிரோடு காப்பாற்றி
இருக்கிறார்கள். அந்தத்தாய் பிணமாகியும் ஓராண்டுக்
காலமாகியும் இதுவரையிலும் துப்பு துலக்கப்படவில்லை. இது
எவ்வளவு வேதனை தரத்தக்கதாக இருக்கிறது.

அது மட்டுமல்ல ராஜா குணசேகரன் என்ற மாணவன்
பாளையங்கோட்டை சதக் அப்துல்லா கல்லூரியில் படித்துக்
கொண்டிருந்தபோது காணாமல் போய்விட்டான். அந்த மாணவ
னுடைய வீட்டார் அந்த மாணவனைப் பற்றி கேட்டுக்கொண்டி
ருக்கின்றனர். 26—3—78-லிருந்து இது வரையிலும் எங்கே
சென்றான் என்ற விவரமே தெரியவில்லை. கல்லூரி விடுதியில்
தங்கிப் படித்த மாணவன் யாராலேயோ அடித்துக் கொல்லப்பட்
டிருக்கிறான் என்ற தகவல் அந்தப் பெற்றோருக்குக் கிடைத்
திருக்கிறது. ஆனால் இது வரையிலும் போலீஸ் இலாக்கா இது
சம்பந்தமாக எந்தப் புலன் விசாரணையும் செய்யவில்லை. இது
சம்பந்தமாக எந்த வழக்கும் பதிவு செய்யப்படவும் இல்லை.
இதை எல்லாம் கூறுகிறபோது எந்த அளவுக்கு மனிதர்களுடைய
உயிர் நிசாரமாக இந்த அரசால் எண்ணப்படக்கூடிய நிலை
ஏற்பட்டிருக்கிறது? ஆகவே நிச்சயமாக இது நல்ல நிலைமை
இல்லை என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-30)

அடுத்து, இங்கே பல துப்பாக்கிச் சூடுகள் நடந்ததாக இந்த
ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த ஓராண்டு
காலத்தில் 14 துப்பாக்கிச் சூடுகள் நடந்ததாகவும், அதிலே
12 பேர்கள் இறந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு
வேளை பெரிய கலவரங்கள் ஏற்பட்டு அல்லது சமூக விரோத
சக்திகளால் ஏதோ நிகழ்ச்சிகள் நடைபெற்று அவர்களை அடக்க
முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது, அதனால் அங்கே போலீசார்
வேறு வழியின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று
சொன்னால், நிச்சயமாக அது மன்னிக்கக்கூடிய நிகழ்ச்சி.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 18

வாகைக் குளம் துப்பாக்கிச் சூடு, மிகவும் வருந்தத்தக்க
நிகழ்ச்சி என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். தண்ணீர்
பஞ்சத்தைப் போக்குவதற்காக வாதாடிக் கொண்டிருந்த அங்
குள்ள மக்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்காக
சென்னைக்கு வந்திருக்கிறார்கள்..........

. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஓ.
சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போதுகூட குறிப்பிட்ட சில
பகுதிகளை—இது பற்றி விசாரணை நடந்து கொண்டிருப்பதால்
அவற்றை நீக்கும்படி உத்தரவிட்டிருக்கிறேன். ஆகவே அதற்குத்
தகுந்தபடி உங்கள் பேச்சை குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : காலையில் கூட இதைப்பற்றி எல்லோரும்
பேசியாய்விட்டது. இதுபற்றிய பேச்சும் வந்தாய்விட்டது.
அதையொட்டித்தான் நான் இப்போது பேசுகிறேன். வாகைக்
குளம் நிகழ்ச்சி மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி. குடிதண்ணீர்
பிரச்னையையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக அங்குள்ள
மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தார்கள். அந்த வேலையை
கான்டிராக்டருக்கு வேகமாக கொடுப்பதற்காக, அதி வேகமாக
இந்த வேலையை முடித்துதீர வேண்டும் என்பதற்காக தீவிரமாக
நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அங்குள்ள மக்கள் எதிர்ப்பு
தெரிவித்தும், அதைப் பொருட்படுத்தாது, பைப்பை பதிக்க
வேண்டும் என்பதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டபோது
தான் அங்குள்ள மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்
கள். இதைத் தெரிந்த பிறகு, இந்த அரசு இந்தத் திட்டத்தை
கைவிட்டு இருக்கவேண்டும். அங்கு பைப் அமைத்தால், குடி
தண்ணீர் பஞ்சம் ஏற்படும் என்று அந்த கிராம மக்கள் தெரி
வித்திருக்கிறார்கள்.

இருந்தும் இம்மாதிரியான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. *
* * என்று எங்களுக்கு தகவல் வந்திருக்கிறது.
* * * நடந்ததை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சிந்
திக்க கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து திருப்பரங்குன்றம் வழக்கறிஞர் சம்பந்தமாக, இப்
போது நீதிபதியை நியமித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது
கூட அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. அவர்களது
கோரிக்கை, வழக்கறிஞரை தாக்கிய அந்த போலீஸ் அதிகாரியை
சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை
வைத்திருந்தார்கள். இல்லை என்று சொன்னால், தூரமான
ஒரு மாவட்டத்திற்காவது மாற்ற வேண்டும் என்பது, அதைக் கூட
இந்த அரசு செய்ய விலலை. ஆகவே என்ன நடைபெறப்
போகிறது என்றால்—நிச்சயமாக இதில அரசியல் இல்லை—
இப்போது அவர்கள் முடிவு செய்திருப்பது வருகிற 20-ம் தேதி

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 18] [திரு. ஜே. ஜேம்ஸ்]

முதல் அவர்கள் கோர்ட்டுகளை பாய்க்காட் செய்யப்போவதாக
முடிவு செய்திருக்கிறார்கள். இதையும் இந்த அரசு சிந்தித்துப்
பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் இலாகாவைப் பொறுத்தவரையில் நல்லமுறையில்
செயல்பட்டு வந்தாலும், காவல் துறையில், ஆளும் கட்சியினரின்
தலையீடு இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டை சொலல விரும்பு
கிறேன். பல சந்தர்ப்பங்களில் இந்த அரசு டபிள் ஸ்டான்டர்டு
முறையைத்தான் கையாள்கிறது என்று கூற விரும்புகிறேன். பல
நண்பர்கள் பல விஷயங்களைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்
கள். லாரியில் தொழிலாளர்களை ஏற்றிச் செல்கின்ற நிகழ்ச்சி
களைப்பற்றி பலரும் சொன்னார்கள. மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் மதுரை தேர்தல் நிதிக்காக நடத்தப்பட்ட
எ.டி.எம்.கே. பொதுக்கூட்டத்திற்கு பல இடங்களிலும் இருந்து
லாரியில வந்திருக்கிறார்கள். இந்திராக் காங்கிரஸ் மாநாட்டிற்
கும் லாரியில் சென்றிருக்கிறார்கள். கோவையில் நடந்த இந்தி
எதிர்ப்பு மாணவர் மாநாட்டிற்கும் லாரியில் சென்றிருக்கிறார்
கள். இவற்றுக்கெல்லாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்
படவில்லை, எந்த வழக்கையும் எந்த நபர்மீதும் பதிவு செய்யப்
படவில்லை. ஆனால் கோவையில் நடந்த ஜனதா கட்சி
மாநாட்டிற்கு லாரியில் வந்தார்கள் என்ற காரணத்திற்காக அந்த
லாரிகளை எல்லாம் மடக்கி பல வழக்குகள் பதிவு செய்து
ஒவ்வொரு லாரிக்கும் 75 ரூபாய் பைன் விதிக்கப்பட்டிருக்கின்றது.

[மாலை 5-40.]

இது அரசு தலையீடு இல்லையா? 'டபுள் ஸ்டாண்டர்டு'
இல்லையா என்பதை அறியவிரும்புகிறேன். அதேபோல் சி.பி.எம்.,
சி.ஐ.டி.யூ., மகாநாட்டிற்காக லாரிகளில் சென்றபோது, அந்தத்
தொழிலாளர்கள் சென்ற லாரிகள் வழியிலே நிறுத்தப்பட்டு,
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஆளும் கட்சி
யினர் சென்றால், நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை; எதிர்க்
கட்சிகள் சென்றால்தான் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்
றால், இது 'டபுள் ஸ்டாண்டர்டு' ஆக்ஷன் இல்லையா என்பதை
தான் இங்கே கூற விரும்புகிறேன்.

அதோடு, எதிர்க் கட்சித் தலைவர்மீது உளி வீசிய நிகழ்ச்சி
குறித்து, இங்கே பல தடவைகள் விவாதித்து இருக்கிறோம்.
* * என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
இம்மாதிரியான நிலைமை நிச்சயமாக இருக்கக்கூடாது. போலீஸ்
எல்லோருக்கும் பொதுவானது. அந்தச் சக்தி எல்லோருக்கும்
பாதுகாப்புக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதிலே எந்த
விதமான முயற்சிகளோ, அரசியல் காழ்ப்புணர்ச்சிகளோ தலை
யிடக் கூடாது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறுக்கிட வேண்டும் என்று கருதினேன். வாகைக்குளம் சம்பந்தமாக அவர்கள் ஒரு மாதிரியான கருத்தை வெளியிட ஆரம்பித்தார்கள். ஆனால், அவர்கள் இப்போது புதிதாக ஏதேதோ உளி சம்டந்தப் பட்ட விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இது வழக்கு மன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், இப்படிப் பேசுவது முறையா என்பதைத் தாங்கள் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமான கருத்தைச் சொல்லவில்லை, அதை மறைப்பதற்கு பல முயற்சிகள் செய்யப்பட்டது என்று சொன்னேனே தவிர, I will not go into the merits of the matter.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலிலேயே உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள்.*** என்று சொன் னார்கள். இது நீதி விசாரணையில் இருக்கிறது. எனவே, அவர் இப்படிப் பேசியதை சபைக் குறிப்பிலே இருந்தும், பத் திரிகைகளிலே வராமல் இருக்கும்படியும் உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நண்பர் இராதா அவர்கள் கருத்துக்கள் கூறுகின்றபோது, திருமதி இந்திரா காந்தி அவர்கள் வந்தபோது, நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப் பட்டபோது, இந்த மாநிலத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை விரிவாகச் சொல்வதற்கு இப்போது நேரம் போதாது. அது மட்டுமல்ல. ஏற்கெனவே நான் விரிவாக இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்போது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைய பிரதம மந்திரி அவர்களுடைய கொடும்பாவி கட்டப்பட்டு, அதிலே செருப்பு, துடைப்பக்கட்டை போன்றவைகள் கட்டப்பட்டு, ஊர்வலமாகச் சென்று, எந்தெந்த இடங்களில் கொளுத்தப்பட்டது, எந்தெந்த போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையிலேயே கொளுத்தப்பட்டது என்பதை ஏற்கெனவே எடுத்துக் சொல்லியும், இந்த அரசு இது வரையிலே எந்த அளவுக்குப் பரிசீலித்திருக்கிறது? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு சர்வசாதாரணமாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனதா கட்சிக் காரியாலயத்தில் கட்டப்பட்டிருக்கும் கொடிகள், மற்றும் கொடிக் கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் கொடிகள் ஆகியவற்றை யார் தாக்கினாலும், சுட்டாலும் இந்த அரசு எந்தவிதமான நடவடிக் கையும் எடுப்பதில்லை; எடுக்கத் தயாராகவும் இல்லை. போலீஸ்

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

அதிகாரிகளிடம் பல முறை சொல்லியும் கூட அதாவது அப்போது ஸ்தாபன காங்கிரசிடம் இருந்த அத்தனைக் கட்டிடங்களிலும் கொடிக் கம்பங்களிலும் எங்கள் ஜனதாக் கட்சிக் கொடிகள் இருக்கின்றன என்று சொல்லும்போது, அந்த அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் ஜனதாவைச் சுட்டாலும் இந்த அரசு பார்த் துக் கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைச் செய்வதற்கும் தயங்க மாட் டார்கள் என்று இப்போது நீங்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. அதற்காக நான் வருத்தப்படவில்லை.

தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரிகளிடம் நாங்கள் எடுத் துக் கூறுகின்றோம். ஸ்தாபன காங்கிரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள், காரியாலயங்கள் இன்றையதினம் ஜனதாவுக்குமாறி யிருக்கின்ற காரணத்தைச் சொல்லி, வேறு யாருக்கும் இதிலே உரிமை இல்லை என்று நாங்கள் சொல்வதை போலீஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அதற்கு மாறாக ஏதாவது ஒரு அரசியல் கட்சி இந்தக் கொடிக் கம்பங்களை வெட்டி வீழ்த்துவோம், கொடி களைச் சுடுவோம் என்றால் அதன்மீது இதுவரையில்....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஸ்தாபன காங்கிரஸ் அப்படியே ஜனதாவுக்குப் போய்விட்டது என்று சொல்வது தப்பு. ஸ்தாபன காங்கிரஸ், முழுக்க முழுக்க காங்கிரசில் இருக்கிறது. ஏதோ தவறுதலாக சத்தியமூர்த்தி பவன் அவர்கள் கைக்குப் போய் விட்டது. கொடிமரங்களைப் பொறுத்தவரை பல இடங்களில் காங்கிரஸ் கட்சியின் கொடிகள் இருக்கும் இடத்தில் ஜனதா கட்சி போய் வம்பு பண்ணி ஏற்றுகிறார்கள். அது எப்படி அவர்களுக்குச் சொந்தமானது என்று தெரியவில்லை. தாய் ஸ்தாபனம் காங்கிரஸ் கட்சி. அதிலிருந்து சிலர் ஜனதாவுக்குப் போனவர்கள். ஆகவே, கொடிக் கம்பங்கள் ஜனதா கட்சிக்குச் சொந்தமானது என்று சொல்வதை ஆட்சேபிக்கிறேன். அவர் களுக்கு சொந்தம் உரிமை கிடையாது.

திரு. நா. சுந்தரராஜ் : சத்தியமூர்த்தி பவன் உரிமை வழக்கில் இருக்கிறது. வழக்கு முடியவில்லை. அது அவர்களுக்குச் சொந்தம் என்று சொல்ல முடியாது. எல்லாம் அவர்களுக்குச் சொந்தம் என்று சொல்ல முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் நண்பர் மாரிமுத்து அவர்களுக்கு இது சம்பந்தமாக எதைக் கூறவும் உரிமை இல்லை. இந்தப் பிரச்சினை எழுவதற்கு முன் னால் எங்களை விட்டுப் போனவர்கள். ஸ்தாபன காங்கிரசில் உரிமை கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை என்பதை கூறி கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைந்
துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறுக்கிட
வேண்டும் என்று கருதினேன். வாகைக்குளம் சம்பந்தமாக
அவர்கள் ஒரு மாதிரியான கருத்தை வெளியிட ஆரம்பித்தார்கள்.
ஆனால், அவர்கள் இப்போது புதிதாக ஏதேதோ உளி சம்டந்தப்
பட்ட விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இது வழக்கு
மன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், இப்படிப் டேசுவது
முறையா என்பதைத் தாங்கள் முடிவு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமான
கருத்தைச் சொல்லவில்லை, அதை மறைப்டதற்கு பல முயற்சிகள்
செய்யப்பட்டது என்று சொன்னேனே தவிர, I will not go into
the merits of the matter.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலிலேயே
உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள்.*** என்று சொன்
னார்கள். இது நீதி விசாரணையில் இருக்கிறது. எனவே,
அவர் இப்படிப் பேசியதை சபைக் குறிப்பிலே இருந்தும், பத்
திரிகைகளிலே வராமல் இருக்கும்படியும் உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நண்பர் இராதா
அவர்கள் கருத்துக்கள் கூறுகின்றபோது, திருமதி இந்திரா
காந்தி அவர்கள் வந்தபோது, நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப்
பட்டபோது, இந்த மாநிலத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை
விரிவாகச் சொல்வதற்கு இப்போது நேரம் போதாது. அது
மட்டுமல்ல. ஏற்கெனவே நான் விரிவாக இந்த மன்றத்திலே
எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்போது அரசாங்கத்தின் கவனத்
திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைய பிரதம மந்திரி
அவர்களுடைய கொடும்பாவி கட்டப்பட்டு, அதிலே செருப்பு,
துடைப்பக்கட்டை போன்றவைகள் கட்டப்பட்டு, ஊர்வலமாகச்
சென்று, எந்தெந்த இடங்களில் கொளுத்தப்பட்டது, எந்தெந்த
போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையிலேயே கொளுத்தப்பட்டது
என்பதை ஏற்கெனவே எடுத்துச் சொல்லியும், இந்த அரசு இது
வரையிலே எந்த அளவுக்குப் பரிசீலித்திருக்கிறது ? அதன்மீது
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு சர்வசாதாரணமாக
இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனதா கட்சிக்
காரியாலயத்தில் கட்டப்பட்டிருக்கும் கொடிகள், மற்றும் கொடிக்
கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் கொடிகள் ஆகியவற்றை யார்
தாக்கினாலும், சுட்டாலும் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்
கையும் எடுப்பதில்லை ; எடுக்கத் தயாராகவும் இல்லை. போலீஸ்

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

அதிகாரிகளிடம் பல முறை சொல்லியும் கூட அதாவது அப்போது
ஸ்தாபன காங்கிரசிடம் இருந்த அத்தனைக் கட்டிடங்களிலும்
கொடிக் கம்பங்களிலும் எங்கள் ஜனதாக் கட்சிக் கொடிகள்
இருக்கின்றன என்று சொல்லும்போது, அந்த அவர்கள்
ஏற்றுக் கொள்கிறார்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு ஜனதா கட்சித்
தலைவர் அவர்கள் ஜனதாவைச் சுட்டாலும் இந்த அரசு பார்த்
துக் கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைச் செய்வதற்கும் தயங்க மாட்
டீர்கள் என்று இப்போது நீங்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது.
அதற்காக நான் வருத்தப்படவில்லை.

தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரிகளிடம் நாங்கள் எடுத்
துக் கூறுகின்றோம். ஸ்தாபன காங்கிரசுக்குச் சொந்தமான
கட்டிடங்கள், காரியாலயங்கள் இன்றையதினம் ஜனதாவுக்குமாறி
யிருக்கின்ற காரணத்தைச் சொல்லி, வேறு யாருக்கும் இதிலே
உரிமை இல்லை என்று நாங்கள் சொல்வதை போலீஸ்
அதிகாரிகள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அதற்கு மாறாக ஏதாவது ஒரு அரசியல் கட்சி
இந்தக் கொடிக் கம்பங்களை வெட்டி வீழ்த்துவோம், கொடி
களைச் சுடுவோம் என்றால் அதன்மீது இதுவரையில்....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஸ்தாபன காஸ்கிரஸ் அப்படியே
ஜனதாவுக்குப் போய்விட்டது என்று சொல்வது தப்பு. ஸ்தாபன
காஸ்கிரஸ் முழுக்க முழுக்க காங்கிரசில் இருக்கிறது. ஏதோ
தவறுதலாக சத்தியமூர்த்தி பவன் அவர்கள் கைக்குப் போய்
விட்டது. கொடிமரங்களைப் பொறுத்தவரை பல இடங்களில்
காங்கிரஸ் கட்சியின் கொடிகள் இருக்கும் இடத்தில் ஜனதா
கட்சி போய் வம்பு பண்ணி ஏற்றுகிறார்கள். அது எப்படி
அவர்களுக்குச் சொந்தமானது என்று தெரியவில்லை. தாய்
ஸ்தாபனம் காங்கிரஸ் கட்சி. அதிலிருந்து சிலர் ஜனதாவுக்குப்
போவார்கள். ஆகவே, கொடிக் கம்பங்கள் ஜனதா கட்சிக்குச்
சொந்தமானது என்று சொல்வதை ஆட்சேபிக்கிறேன். அவர்
களுக்கு ஒன்றும் உரிமை கிடையாது.

திரு. நா. சுந்தரராஜ் : சத்தியமூர்த்தி பவன் உரிமை வழக்கில்
இருக்கிறது. வழக்கு முடியவில்லை. அது அவர்களுக்குச்
சொந்தம் என்று சொல்ல முடியாது. எல்லாம் அவர்களுக்குச்
சொந்தம் என்று சொல்ல முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர்
நண்பர் மாரிமுத்து அவர்களுக்கு இது சம்பந்தமாக எதைக்
கூறவும் உரிமை இல்லை. இந்தப் பிரச்சினை எழுவதற்கு முன்
னால் எங்களை விட்டுப் போனவர்கள். ஸ்தாபன காங்கிரசில்
உரிமை கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை என்பதை கூறி
கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : ஸ்தாபன காங்கிரசில் உரிமை
இல்லையென்று சொல்லுகிறார்கள். ஸ்பாக்டைச் சொல்ல,
உண்மையைச் சொல்ல எல்லோருக்கும் உரிமையுண்டு.
அன்றைக்கு நான் ஸ்தாபன காங்கிரசில் இல்லையென்று
சொன்னாலும் உண்மையைச் சொல்ல உரிமையுண்டு.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நண்பர் மாரிமுத்து அவர்கள் இன்று
ஒரு பொழுதுபோக்காக, அகடமிக் இண்டரஸ்டாகச் சொன்
னாலும் கூட, எங்கள் ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை, கட்சி
யைப் பொறுத்தவரை, இந்த அரசு எங்களுக்கு அநீதி
விளைவிக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
நியாயத்திற்கு இந்த அரசு துணை செய்யவில்லை.
எங்களுக்கு எதிராக அநீதி விளைவிக்கின்றவர்களுக்கு
ஆதரவாக இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

காந்தி சிலை உருக்குலைக்கப்பட முயன்றதைத் தடுக்க
போலீஸ் எந்த அளவுக்கு அக்கறை எடுத்திருக்கிறது என்று அறிக்
கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன்.
காந்தி சிலையானாலும் சரி, மக்களால் மதிக்கப்படுகிற எவ
ருடைய சிலையானாலும் சரி உருக்குலையச் செய்வது பொருத்த
மாகாது. அவ்வாறு ஏற்படுவதைத் தடுக்க தக்க நடவடிக்கை
களை அரசு எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

பொதுக்கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக ஒன்று நான்
கூற விரும்புகிறேன். அரசுத் தரப்பில் பொதுக்கூட்டங்கள் நடத்து
கிறபோது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற
அமைச்சர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். மற்ற மாநில முத
லமைச்சர்கள் வருகிறார்கள். பாரதப் பிரதமர் வருகிறார், குடி
யரசுத் தலைவர் வருகிறார், மத்திய அமைச்சர்கள் வருகிறார்கள்.
நான் ஒரு வருந்தத்தக்க நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
கன்னியாகுமரியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ரயில்வே
திறப்பு விழாக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் இருந்தார்கள். தமிழக அமைச்சர்கள் இருந்தார்கள்.
கேரள முதலமைச்சர் இருந்தார், பாரதப் பிரதமரும் மத்திய
அமைச்சர்களும் இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் வந்தார்கள். வந்தவுடன் பேசுகிறபோது அவர்கள்
சாதாரணமாகக் கூறுகிற முறையில் ரத்தத்தின் ரத்தமே என்று
பேசத் தொடங்கி பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்காக கூட்
டத்தில் இருந்த மக்களில் ஒரு பகுதியினர் ஆங்காங்கு இருந்து
விசில் அடித்தார்கள், மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். முத
லமைச்சர் பேசும்போது அமைதியாக இருந்தார்கள். பாரதப்
பிரதமர் எழுந்து பேசத் தொடங்கியவுடன் அங்கே அமைதி
குலைந்த நிலை காணப்பட்டது. ஆங்காங்கே இருந்தவர்கள்

முதலமைச்சர் பேசி முடித்தவுடன் எழுந்து புறப்படத் தொடங்கி
னார்கள். முதலமைச்சர் பேசுகிறபோது இருந்த அமைதி பிரதமர்
பேசும்போது இல்லை.

[மாலை 5–50].

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : துணைத் தலைவர் அவர்களே,
அண்ணன் ஜேம்ஸ் அவர்கள் சொல்கிற நேரத்திலே தவறாக
எதையும் சொல்வது சரியல்ல. மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்களும் பாரதப் பிரதமர் அவர்களும் குடந்தைக்கு அரு
காமையில் உள்ள திருவிடை மருதூரிலே ஒரு நிகழ்ச்சியிலே கலந்து
கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு எப்படி
அது நடக்கிறது என்று பார்ப்பதற்காக நான் போயிருந்தேன்.
அங்கே வந்திருந்தவர்கள் எல்லாம் எவ்வளவு அமைதியாக இருந்
தார்கள், எவ்வளவு பொறுமையாக இருந்தார்கள். பிரதமர்
அவர்கள் ஆங்கிலத்திலே பேசிய பேச்சை கேட்டார்கள் என்பது
மட்டுமல்ல, அன்றைக்கு எங்களைப் போன்றவர்கள் மெய்சிலிர்க்
கத்தக்க வகையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காட்டிய
பண்பாடு இருக்கிறதே அது எங்களையெல்லாம் மெய்
சிலிர்க்க வைக்கத்தக்க அளவிலே இருந்தது, பாரதப் பிரதமர்
அவர்களும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள் என்பதை
நான் திரு.ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தவறாகப் புரிந்துகொண்டார். நான்
குழப்பத்திற்குக் காரணம் என்று
முதலமைச்சர் நான் பேசுகின்றபோது அமைதி
சொல்ல வரவில்லை. முதலமைச்சர் பேசுகின்ற
யாக கூட்டம் இருந்தது. ஆனால் பாரதப் பிரதமர் பேசுகின்ற
போது கூட்டத்திலே இருந்தவர்கள் கலைய தொடங்கினார்கள்.
மக்கள் அமைதியாக இருக்கவில்லையென்றால் போலீஸ்காரர்கள்
தான் அந்தக் கூட்டத்தை அமைதியாக நடத்துவதற்குத் தேவை
யான நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுத்திருக்கவேண்டும்.

<u>திரு. கே. கந்தசாமி</u> : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பாரதப் பிரதமர்
பேசுகின்றபொழுது கூட்டத்தினர் அமைதியாக இல்லை, அமைதி
யில்லாத நிலை இருந்ததாகச் சொன்னார்கள். இதற்கும்,
முதலமைச்சர் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரிய
வில்லை, ஒரு வேளை இந்தி திணிக்கப்படுவதற்கு அவர்களும்
உடந்தையாக இருப்பதாக நினைத்து மக்கள் கொதித்து எழுந்து
அதன் காரணமாக அவர்கள் உணர்வுகளைக் காட்டியிருந்தால்
என்ன செய்ய முடியும்?

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்
கிறார், அது அவருடைய கருத்து. பிரதமர் அவர்கள் பேசுகின்ற
போது ஏற்பட்ட சலசலப்பு தவிர்க்கப்படுகிற வகையில் ஏற்
கெனவே போலீஸ்காரர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 18

அதுமட்டுமல்ல, ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன் போலீ
சார் ரிசர்வ் கேம்பில் நிலம் ஆர்ஜிதம் செய்து வீடு கட்டும்
திட்டம் இருக்கிறது. ஆனால் இதுவரையில் வீடுகட்டிக்
கொடுக்கப்படவில்லை. இந்த அரசு அதைச் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, போலீஸ் நிலையங்களில் போலீஸ்காரர்
களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அது போதாது.
2,000 போலீஸ்காரர்களை நியமனம் செய்யப்போவதாக,
அறிக்கையில் காணப்படுகிறது. அது உடனடியாகச் செய்யப்
பட்டு, எங்கெங்கு ஹெவி ஸ்டேஷன்களாக இருக்கின்றனவோ
அங்கெல்லாம் அவர்களை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த போலீஸ் இலாக்காவில் பணியாற்றும் சப்-இன்ஸ்பெக்
டர்கள், ஹெட் கான்ஸ்டபிள்கள் போன்ற போலீஸ்கார்களுக்கு
வேலைப் பளு மிகவும் அதிகம் என்பதை நிச்சயமாக அரசு
உணர்ந்திருக்கும். ஆகவே, அதிகச் சிரமத்தோடு பணியாற்றும்
இந்தக் கீழ் மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்குத் தேவை
யான வசதிகளையும், சலுகைகளையும் செய்து கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் நிச்சயமாகப் போன்
அவசியம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். ஏதோ அரசு அதற்
கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இதுவரையில்
எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அது அமைக்கப்படவில்லை
என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அனைத்துப் போலீஸ்காரர்களுக்கும் வீட்டு வசதி இதுவரை
யில் செய்து கொடுக்கப்படவில்லை. அதையும் உடனடியாகச்
செய்து கொடுக்க அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, மதுவிலக்கு சம்பந்தமாக ஒன்றைக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். நாம், அனைத்துக் கட்சிகளும் ஏக
மனதாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு திட்டம் இது. இந்தத்
திட்டத்தை நல்ல முறையில் செயல் படுத்துவதற்குப் போலீஸ்
காரர்கள் பொறுப்பு என்று குறை கூறுகிறோம். ஓரளவு அது
உண்மைதான். ஆனால் அதைவிட ஒன்றை நான் கூற விரும்பு
கிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு நல்ல திட்டம் என்று
ஏற்றுக் கொண்டிருக்கிறபொழுது, நம் கட்சிகளுக்குள்ளேயே
இந்தத் திட்டத்தை உண்மையிலேயே அமல் படுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். நான் எந்தத் தனிப்பட்ட
கட்சியையும் கூறவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர
வர்கள், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் இந்தத்
திட்டத்தை உண்மையாக நம்புகிறோம். நிச்சயமாக 100-க்கு
100 வெற்றி பெற வேண்டுமென்று நம்புகிறோம்.

1979 ஏப்ரல் 18] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அங்கத்தினர்களானாலும், பொதுவாக எங்கள் கட்சியைச் சேர்ந்
தவர்களானாலும்—பொதுவாக என்று கூறுகிறேன், விதிவிலக்கு
இருக்கலாம், அதை நம்புகிறோம், அந்தத் திட்டம் செவ்வனே
நடைபெறவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதைப்போல
ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், மாண்புமிகு முதலமைச்சர
வர்கள் கட்சிக்குள்ளேயே இந்தத் திட்டத்தை அமல் படுத்து
வதற்கு முயற்சிக்க வேண்டும். கட்சியில் இருப்பவர்கள் பதவி
களைக் கேட்கிற பொழுது அல்லது அமைச்சர்கள் நியமிக்கப்படு
கிறபொழுது இந்தத் திட்டத்தில் நம்பிக்கை உள்ளவர்களா
என்று கேட்டு, அப்படிச் சில விதிமுறைகளை வைத்துக் கொண்டு
செய்ய வேண்டும். உண்மையிலேயே அனைத்துக் கட்சிகளும்
இந்த நிலையை எடுத்தால் தவிர, போலீஸ்காரர் மட்டும்
இந்தத் திட்டத்தை அமல் படுத்த முடியாது என்று கூறிக்
கொள்ள நான் விரும்புகிறேன்.

[மாலை 6—00]

ஆக போலீசுக்கு உறுதுணையாக அரசியல் கட்சிகளும்
அரசும் துணைபோனால் முதலமைச்சர் விரும்புகின்ற முறை
யில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வாய்ப்பு
இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்
றைக் கூறுகின்றேன் இப்பொழுது இருக்கும் நிலையில்
போலீஸ்காரர்கள் சில பெரிய மனிதர்கள் அந்தக்
குற்றத்தைச் செய்தால் அவர்கள் பக்கத்தில் போகக்கூடிய
சூழ்நிலை இருக்கிறதா? அவர்கள் மீது வழக்கு போட
முடியுமா என்பதைக் கேட்டு உண்மையிலே இந்தத் திட்டத்தை
முழுமையாகச் செயல்படுத்தவேண்டும். அதற்கு அரசு
முழு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு விடை
பெற்றுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு
சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை
மானியத்தின்மீதும் தீயணைப்புத் துறை மானியத்தின்மீதும்
கலந்துகொண்டு பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்களும்
பிரதிநிதிகளும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் நல்ல
நல்ல கருத்துக்களை எடுத்துக்கூற முன்வந்திருக்கிறார்கள்.
நல்ல நல்ல கருத்துக்கள் என்று சொல்லும்போது, இவ்வளவு
நேரம் கூறியதை எல்லாம் நல்ல கருத்துக்கள் என்று
ஏற்றுக்கொள்கின்றீர்களா? அப்படியானால் அவைகள் எல்லாம்
உண்மைதானா என்ற கேள்வியும் உடன் தொடரும் என்பதும்
எனக்குத் தெரியாதது அல்ல. நல்ல நல்ல கருத்துக்கள்
என்பதற்கு நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி
அவரவர்கள் கோணத்திலேயிருந்து பார்க்கும்போது, எப்படிஎப்படி
அவர்கள் உணர்கின்றார்களோ, அந்த வகையில் இங்கே
கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

தொடக்கத்திலேயிருந்து ஓரளவிற்கு நான் குறித்துக்கொண்ட

வகையில், மாண்புமிகு கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் தன் உள்ளத்தில் பட்டதை அப்படியே திட்டவட்டமாக, வெளியே சொல்லமுயன்றார்கள். அரசு எப்படி செயல்படுகிறதோ அதற் கேற்பத்தான் காவல் துறை அதிகாரிகள் எல்லாம் செயல்படு கின்றார்கள். ஆகவே, அரசு தன்னுடைய முறையைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது நல்ல கருத்து என்று நான் நினைத்துக் கொள்வதற்குக் காரணம், நாங்கள் இதுவரையில் அமைச்சர்களாக இருக்கிற முறையில், அல்லது முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிற நான் நடந்துகொள்கின்ற முறை சரியல்ல என்று அவர் சொல்லும்போது இரண்டு மூன்று கருத்துக்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒன்று, காவல் துறையினருக்கு அதிக அதிகாரம் கொடுத்து விட்டீர்கள் என்கிற குற்றச்சாட்டு. இன்னொரு புறத்தில், அதிகாரிகள் செயல்பட முடியாவாறு தடுக்கப்படுகிறார்கள்என்கிற குற்றச்சாட்டு. இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் அவர் மட்டும் வெளியிடவில்லை. இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர் களும்அ தேகுறையைச் சொன்னார்கள். இறுதியாகப் பேசிய ஜனதா கட்சி தலைவர்களிலே ஒருவரான ஜேம்ஸ் அவர்கள் கூட அதைப் போலவே பேசினார்கள்........

<u>திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :</u> நான் பேசும்பொழுது அதிகாரம் அதிகமாகக் கொடுத்து விட்டார் களென்று சொல்லவில்லை; அதிகாரம் அதிகமாக வேண்டு மென்றுதான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கம் சொன்னால், பெரியவர் அதைத் தப்பாக நினைக்க மாட்டார் என்று கருதுகின்றேன். ஏதோ ஒரு வழக்கில், வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டிய நிலையிருக்கும் போது இரு தரப் பாரையும் கூப்பிட்டு, சமாதானமாகப் போங்கள் என்று ஒருவர் சொன்னதாக, ஒரு அதிகாரி சொன்னதாக, இங்கே கூறப்பட்டு, அப்படியெல்லாம் அவர்கள் நடப்பது நியாயமா என்று எல்லாம் கேட்டார்கள். இது ஒருவேளை, அந்த அதிகாரியினுடைய நோக்கமாக இருந்திருக்கலாம். ஏன், எதற் காக, சண்டை போட்டுக் கொண்டு, வழக்குமன்றத்திற்குச் சென்று யாராவது ஒருவர் தோல்வி பெற்று, யாருக்காவது ஒருவருக்குத் தண்டனை கிடைக்கப்பெற்று, மாறாக, இன்னொரு வர் தண்டனை பெறாமல் தப்பி விடக்கூடும்.

அப்படியானால் தோற்றவர்களுக்கு எவ்வளவு ஆத்திரம் இருக்கும். ஆகவே அந்த நிலைமை ஏற்படாமல் இருசாரரும் ஒருமனதோடு சமாதானமாகப் போகலாம் என்ற எண்ணத்தில் அந்த அதிகாரிகள் அப்படிச் செய்தது சரியல்ல என்று சொல்கிறநேரத்தில், இந்த அரசு அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுத்துவிட்டது என்று கூற

கூறினார்கள். நான் ஒன்றை பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டில் அமைதி காப்பது என்பது வெறும் சட்டத்தினால் மட்டும் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல என்று பன்முறை சொல்லியிருக்கிறேன். அதை பலரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேப்போல ஒரு சாரருக்குத் தண்டனை வாங்கிக்கொடுத்து சிறைக்கு அனுப்புவதினால் மட்டுமே எந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது என்று கருத முடியாது.

எனக்குக் கிடைத்த ஒரு செய்தியை நான் இங்கே கூறியாக வேண்டும். மாண்புமிகு உமாநாத் அவர்கள் குறிப் பிட்டார்கள் என்று கருதுகிறேன். ஒருவரைப்பற்றி வந்த செய்தி. ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற நிலைமை யிலே வழக்கு மன்றத்திலே, ஒருவரைக் கொலை செய்தவராக கருதப்பட்டு காவலில வைக்கப் பட்டிருந்தார். அதற்குப் பிறகு அவர் வெளியேவந்த பிறகு அவர் கொலை செய்யப் பட்டார் என்று செய்தி வந்திருக்கிறது. நான் பிறகு சட்டமன்றத்தில் அவை வேண்டுமானால் படித்துக் காண்பிக் கிறேன். இப்போது நேரம் இல்லை. அதை விளக்கமாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. அதேபோல எதுவாக இருந்தாலும், வெற்றி தோல்வி என்று பார்ப்பதை விட்டு உள்ளத்தின் ஒற்றுமை, அமைதியான சூழ்நிலையில் அவைகளைத் தீர்ப்பதற்குத்தான் இந்த அரசு விரும்புகிறது என்று சொல்லிக் கொள்ள நான் வெட்கப்படவில்லை.

இங்கே பல நண்பர்கள் அபிப்பிராயங்களை வெளியிடும் போது நீங்கள் துப்பாக்கியை நம்பிக் கொண்டு இருக்காதீர்கள், தடியடி கொடுத்தெல்லாம் எதையும் தடுத்துவிட முடியும் என்று எண்ணி விடாதீர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டபோது, நான் எந்தக் கருத்தை வெளியிட்டேனோ அந்த அடிப்படையில்தான் அவர்களும் தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளார்கள் என்று நம்புகிறேன்.

பேச்சின் மூலம் விவாதத்தின் மூலம் கருத்துக்களை எடுத்து வைத்து பகிர்ந்துக் கொள்வதன் மூலமே நல் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டு அதன் வாயிலாக சுமூகமாக உறவு ஏற்பட்டு, சண்டை சச்சரவுகள் தீரும், அது தான் நல்லதொரு முறையாக இருக்கும் என்ற கருத்து அதிலே உள்ளிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த வகையிலே இந்த அரசு கூடுமான வரையில் வழக்கு மன்றத்திற்கு சென்று அவர்கள் மீது வழக்குகள் போட்டு அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை என்று பன்முறை சொல்லியிருக்கிறேன். இன்னொரு முறையும் மீண்டும் இன்றையதினம் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இன்றைக்கு ஒரு பிரச்னையை இங்கே குறிப்பிட்டார்கள். அவர் ஏன் அதைச் சொன்னார் என்று நான் எவ்வளவுநான் சிந்தித்துப் பார்த்தும் பதில் கிடைக்க வில்லை. இருந்தாலும் எனக்கு தெரிந்த அளவில் ஒரு விளக்கம் சொல்ல நான் விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [ஏப்ரல் 1979 18

பிரதம மந்திரி அவர்கள் வந்தபோது ஒரு கூட்டத்தில்
கலந்துக் கொண்டார் என்றும், அந்தக் கூட்டத்தில் நானும்
கலந்துக் கொண்டேன் என்றும், அப்படிக் கலந்துக்கொண்டு
பேசிவிட்டு நான் வெளியே வந்த பிறகு அங்கே கொஞ்சம்,
அவர்கள் குறிப்பிட்டது போல் அங்கே நடந்திருக்கலாம்.
குழப்பம் ஏற்பட்டு, மக்கள் எழுந்துச் செல்ல ஆரம்பித்தார்
கள் என்றும், அதிலே முன்னதாகவே போலீசைக் கொண்டு
தடுத்து நிறுத்தியிருக்கலாம், அப்படி ஏன் செய்யவில்லை
என்றும் கேட்டார்கள். சில கருத்துக்களை குறிப்பிடும்
போது கவனத்தோடு கூறவேண்டும். இந்தச் செய்தி
மக்களுக்குத் தெரியவேண்டுமா? இந்தியப் பிரதமர் வந்திருக்
கிற நேரத்தில் அவர் ஒரு கூட்டத்தில் கலந்துக் கொள்ளும்
போது ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் பேசியவுடன்,
மக்கள் கலைந்து சென்றார்கள், எழுந்துச் சென்றார்கள்
என்றும், அப்படிச்செல்லும்போது அவர்களை ஏன் போலீசைக்
கொண்டு தடுக்கவில்லை என்றும், அவருடைய கட்சியைச்
சேர்ந்த ஜேம்ஸ் அவர்கள் வெளியிட்டு அவை ஏன் பத்திரிகை
யில் வெளிவர வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று
என்னால் அவருடைய நோக்கத்தைப் புரிந்துக் கொள்ள முடிய
வில்லை. போலீசைக் கொண்டு உட்கார வைத்து கூட்டத்தை
நடத்திப் பேச்சை முடிப்பது என்ற வழக்கம் இப்போது இல்லை.
அந்த நிகழ்ச்சிகளும் நடைமுறைகளும் 1971-ம் ஆண்டு முதல்
1976ம் ஆண்டு ஜனவரி 31ம் தேதியோடு முடிவடைந்துவிட்டன.
அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அதற்கு முன்னாலும் இல்லை, பின்னா
லும் ஏற்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மட்டியில் போலீசை வைத்து அவர்களை உட்கார வைத்து,
கூட்டத்தில் அதிகமாக மக்கள் இருப்பது போல் காட்டுவதும்,
மக்கள் எழுந்து போகாதபடிசுற்றி போலீசை நிற்கவைத்து
கூட்டத்தை முடிப்பது, இப்படியெல்லாம் நடந்து வந்ததைப்
பார்த்திருக்கிறோம். அந்த நிலைமைக்கு பாரதப் பிரதமர் வந்து
விட்டார் என்ற நிலைமையில் செய்தியை வெளியிடுவது மிக மிக
வேதனையாக எனக்கிருக்கிறது. அதற்காக நான் மிக மிக
வருத்தப்படுகிறேன். அங்கே நாடாளும் மன்ற உறுப்பினர்கள்,
அமைச்சர்சர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.

[மாலை 6-10]

ஏன் நமது மேதகு ஆளுநர் அவர்களும் இருந்தார்கள்.
முதலில் திருவள்ளுவர் சிலை அமைப்பு விழாவில் கால்கோள்
விழா முடிந்து திரும்புவதற்கு முன்னால் சிலர் எழுந்து நட
மாடத் தொடங்கிய பிறகு முறையோடு நான் பேச வேண்டிய
சட்டம் வந்ததும், ரயில்வே நிலையத்தில் ரயிலை ஓட விடுகின்ற
அந்தத் தொடக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அழைத்து
இருந்த மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது என்
பேச்சில் நான் பகிரங்கமாகக் குறிப்பிட்டேன். என் பேச்சில்

1979 ஏப்ரல் 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

முடிவின்போது ஒரு கருத்தினை வெளியிட்டேன் என்று சொல்லும்போது என் பேச்சு முடிந்த பிறகும் அந்த விழா இனிது முடிந்து, நாட்டு வணக்கப் பாடல் முடிகிற வரையில் யாரும் தயவு செய்து கூட்டத்தை விட்டு எழுந்து செல்வதோ அல்லது கூட்டத்தில் இருந்து எழுந்து நிற்பதோ, அங்கும் இங்கும் நடந்து கொண்டு இருப்பதோ, இவைகளெல்லாம் கூடாது ; விருந்தினர்களை மதிக்கிற வகையில் கன்னியாகுமரி மக்கள் எத்தகைய பண்புள்ளவர்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் ஒத்துழைப்புத் தர வேண்டும், என்னை ஏமாற்றாதீர்கள் என்று கையொலி ஒலிக்கச் செய்து அதற்குப் பிறகு நான் உட்கார்ந்தேன் என்பதையும், அப்போது மத்திய ரயில்வே துறை அமைச்சர் மொழி பெயர்ப்பு மூலம் அதைத் தெரிந்து கொண்டதன் விளைவாகப் பாராட்டினார்கள் என்பதையும், கவர்னர் பாராட்டினார் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுக்கு யாரோ வேண்டுமென்றே சில தவறான தகவல்களைக் கொடுத்து, அவர்களும் அவருக்கு நண்பர்போல் இருந்து கொண்டு, பாரதப் பிரதமர் அவர்களை அவமானப்படுத்தும் செய்தியைச் சொல்லி அவரைப் பழி வாங்கி இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். பாவம், ஏதோ அவர் அவருடைய கட்சியின் தனிப்பெரும் தலைவராக இருக்கிற, அதுவும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற மாபெரும் பிரதம அமைச்சர் அவர்களை ஒரு சாதாரணப் பேச்சால் அவமானப்படுத்திவிட்டார் என்று வேதனையாக இருக்கிறது. நான உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். ஆனால் பிரதம அமைச்சர் அவர்கள் எத்தகைய மகிழ்ச்சியோடு திரும்பினார்கள் எனபதும், அங்கே காவல்துறையினரும் அங்கே ஒழுங்காக அமைதியோடும் பக்குவத்தோடும் அந்தப் பகுதியில் பணியாற்றினார்கள் என்றும், பாராட்டிச் சென்றார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேல்.

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். முன்பும் குறிப்பிட்டார்கள். அதே வார்த்தை, அதே கோணத்தில், அதே கட்டத்தில், அதே முற்றுப்புள்ளி, சில இடத்தில் கமா எல்லாம் வைத்து திரும்ப ஒப்பித்தார்கள். அதாவது ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு விதமாக நடக்கிறீர்கள். ஜாவதா கட்சிக்குச் சாதகமாக இலலை, பாதகமாக இருக்கிறீர்கள் அதே சமயத்தில் தேசிய காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாக இருக்கிறீர்கள் என்று குறை கூறி ஆளும் கட்சிக்காரர்களுக்கு விட்டுக்கொடுக்கிறீர்கள் என்று கூறினார்கள். அதே குற்றச்சாட்டு, லாரிகளில் வருகிற குற்றச்சாட்டை மதிப்பிற்குரிய என் மரியாதைக்குரிய, அன்புக்குரிய உடன்பிறப்பு உமாநாத் அவர்கள் இன்று பேசினார்கள். லாரிகளுடைய எண்களை எல்லாம் சொல்லி அவைகளையெல்லாம் நான் அங்கே பார்த்தேன். என்ன நடவடிக்கைகளை எடுத்தீர்கள் என்று நீங்கள் கேட்ப

தற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும் என்று எண்ணுகிற
போது எந்தெந்த லாரிகளின் மீது, யார் யார் மீது நடவடிக்கை
எடுத்தோம் என்பதைச் சொல்லியாக வேண்டியவனாக இருக்
கிறேன்.

.. குறிப்பாக, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத் தோழர்கள் கொண்டு வந்த லாரிகள் என்னென்ன
லாரிகள் என்று குறிப்பிடுகிறார்களோ அவைகளின் மீது வழக்கு
போடப்பட்டு இருக்கிறது. சில வழக்குகள் போடப்பட்டு
25 ரூ. அபராதம் கட்டியிருக்கிறார்கள். சில லாரிகளுக்கு
இப்படி வழக்கு போட்டதன் விளைவாக சில இடங்களில்
50 ரூ. கட்டியிருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் நடவடிக்கை
எடுக்காமல் இல்லை என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன். அதேபோல் தேசீய காங்கிரஸைச் சேர்ந்தவர்
களும் எப்போதாவது அந்தந்தக் காரியங்களைச் செய்து இருந்
தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கத் தயங்குவது
இல்லை. ஆனால் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு
நாங்கள் ஏதாவது விட்டுக் கொடுத்து இருந்தோம் என்றால்
சில சமயம் தவறு செய்து விட்டார்கள் முதல் முறையாக என்று
சொல்லி ஒரு வேளை விட்டுக் கொடுத்து இருக்கிறோம்.
அவர்களுக்கு வேண்டுமானால் இருந்து இருக்கலாம். மற்றவர்
களுக்கு துரோகம் செய்துவிட்டோம் என்று அவர் குற்றம்
சாட்டுவதற்கு அது காரணமாக இருந்து இருக்கும். அப்படி
இருந்தாலும் நான் ஒன்றைச் சொல்கிறேன். இந்த அரசைப்
பொறுத்தவரையில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேறு
பாடு பார்த்து எந்த காரியத்தையும் செய்யத் தயாராக இல்லை
என்பதையும் அதே நேரத்தில், லாரிகளில்........

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அக்டோபர் 23-ம் தேதி பந்த் நடந்தபோது
திருநெல்வேலியில் லாரிகளில் போலீசை வைத்துக் கொண்டு
ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார்களே, அவர்கள் மீது எப்படி
நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
துணைத்தலைவரவர்களே, நான் பின்னால் பேசுவதற்கு முன்பே
அவர்களே கேள்வி கேட்டுவிட்டார்கள், மீண்டும். காவல் துறை
யைச் சார்ந்தவர்கள் லாரியைப் பயன்படுத்த வேண்டிய அவசி
யம் நேரும்போது பாதுகாப்போடும், இத்தனை மைல் வேகத்
தில் தான் ஓட வேண்டும் என்ற நிலையிலேயும், எத்தனை ஆட்
களை அதிலே ஏற்றிக்கொண்டு வரலாம் என்கிற கணக்கோடும்
அங்கே லாரியிலே வந்திருக்கிறார்கள்.

அதே போன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்
அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கைது செய்
கிறவர்களை வேனிலே ஏற்றிச்செல்கிற போது அவர்களுடைய
உயிருக்குப் பாதுகாப்பு இல்லையா என்று கேட்டார்கள்.
உயிருக்குப் பாதுகாப்புத் தேவை என்பது மட்டுமல்ல;
அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு மாநாடு நடத்

தப்படும்போது வெளியிலிருந்து வரவேண்டியவர்கள் வருவதற்கு
வாய்ப்பிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் முன்னால் அது
அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் போகப்போக குழப்பத்
பத்தை விளைவிப்பதற்கு ஆட்களைக் கொண்டுவருவது என்கிற
நிலைமை நாட்டில் உருவாகிவிட்டதன் விளைவாக ஆபத்து
உண்டாகக் கூடிய நிலைமை ஏற்பட்டு அதன் பிறகு இவைகளை
எலலாம் தடுப்பதற்காகத்தான் லாரிகளை அவ்வாறு பயன்
படுத்தக் கூடாது என்று சொன்னோமே தவிர உண்மையிலேயே
கொள்கைக்காக பாதுகாப்போடு ஒரு மாநாட்டுக்கு வருவது
என்றிருந்தால் அந்த நிலைமை இருக்கும்போது உத்தரவாதமும்
இருந்தால், பாதுகாப்போடு இரவு வேளையில் டிரைவர்கள்
தூங்குகின்ற நிலைமை இல்லாமல் நல்ல ஓய்வு எடுத்த பிறகு
பாதுகாப்போடு ஓட்டிக்கொண்டு வருவார்கள் என்ற உத்தர
வாதம் எல்லாம் இருக்குமேயானால் இதைப்பற்றி இந்த அரசு
மீண்டும் பரிசீலிக்கத் தயங்காது. ஆனால் நிலைமை என்ன என்
பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு லாரியிலே
வரும்போது எத்தனை பேர்கள் இறந்தார்கள், எத்தனை
பேர்கள் காயம் அடைந்தார்கள், எத்தனை பேர்கள் குழப்பத்தை
விளைவிப்பதற்காகவே கொண்டுவரப்பட்டார்கள் என்பதை
எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பெரியவர் அல்லது யாராவது ஒருவர், நாட்டின் தலைவர்
மறைந்திருக்கிறார் என்று வைத்துக் கொண்டால் அவருடைய
விழாவுக்காகப் பல்வேறிடங்களிலிருந்தும், சிற்றூர்களிலிருந்தும்,
தாலுக்காக்களிலிருந்தும் வருவதற்கு மக்கள் வர விரும்புவதும்
அந்த விழாவிலேயும், ஊர்வலங்களிலேயும் கலந்து
கொள்ள வேண்டும் என்று விரும்புவது இயற்கை. அது
தவிர்க்க முடியாதது.

ஆனால் அப்படி வருகின்றவர்களுக்கு பாதுகாப்பு
அளிக்கக்கூடிய வகையில் எல்லா வசதியும் செய்திருக்
கிறோம் என்றால் அதை இந்த அரசு பரிசீலிக்கத் தயாராக
இருக்கிறது என்று மீண்டும் சொல்லிக்கொள்கிற அதே நேரத்தில்
எப்படிப்பட்டவர்கள் வருகிறார்கள் என்பதையும் பார்த்துச்
செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே குற்றம் சாட்டியவர்கள் பொதுவாக ஒரே ஒரு குற்றச்
சாட்டைத் தான் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் கூறி
இருக்கிறார்கள். அதிலே போலீஸ் அதிகாரிகளுடைய அட்டூழியம்
என்கிற வார்த்தையை நான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
அந்த அட்டூழியம் என்ற வார்த்தையை யாரும் உபயோகப்
படுத்தவில்லை. ஆனால் அந்த வார்த்தையை நான் சேர்த்து
விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அதுதான் உண்மையான
வார்த்தையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவ்வளவு
பெரிய கொடுமைகள் செய்கிறார்கள் என்பதை பற்றிக் கூறினார்
கள். பொய் வழக்குகள் போடுவது, வேண்டுமென்றே வழக்குகள்
போடுவது பற்றிச் சொன்னார்கள். அதோடு காணோம் என்
கிறவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதில்லை என்றெல்லாம்
சொன்னார்கள். அதற்குரிய விவரங்களை எல்லாம் பின்னால்
படித்துக் காண்பிக்க இருக்கிறேன்.

ஆனாலும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். காவல்
துறையைப்பற்றி எவ்வளவு மோசமாக விமர்சனம் செய்தார்
களோ அதேபோல அந்தத் துறையிலே உள்ளவர்களின் வரு
மானத்தையும் பெருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேசி
னார்கள். அதிலிருந்து எனக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது.
காவல் துறையைப்பற்றி அவர்கள் பலவற்றைச் சொன்னாலும்
ஏதோ அந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கு உத்தரவாத
மான வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும் என்கிற எண்ணம்
இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் இருக்கிறது என்பதைப் பார்க்
கின்றபோது மகிழ்ச்சி கொள்கிறேன்.

(மாலை 6-20)

தவறுகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவில்லை.
இங்கே புள்ளி விவரத்தை திரு. ஜேம்ஸ் படித்துக் காண்பித்தார்.
ஒன்றை அழுத்தந்திருத்தமாக நான் சொல்ல வேண்டும். கண்டு
பிடித்து தண்டனைக்கு ஆளாக்கப்படுகிற வழக்குகள் , பதிவு
செய்யப்பட்ட வழக்குகள், இப்படி நாம் பிரித்துப் பார்க்க வேண்
டும். பதிவு செய்யப்படுகிற வழக்குகள் எத்தனை என்பதை,
கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகள் எத்
தனை என்பதை, சிந்தித்துப் பார்த்தால், இந்த வழக்குகள் வரும்
போது இந்தப் புள்ளிவிவரங்கள் சரியாக இருக்குமா என்பதைப்
புரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு உறுப்பினர்கள், சிலர் மன்றத்தில பேசும்போது
அவசரக்கால சட்டத்தில் என்னென்ன நன்மைகள் ஏற்பட்டன.
என்னென்ன தீமைகள் ஏற்பட்டது என்பதைப்பற்றிச் சொல்லும்
போது அன்றைக்கு என் மீது ஆத்திரப்பட்டது உண்டு. அந்த
வேதனையை வார்த்தைகளால் கொட்டினார்கள். ஆனால்
இன்றைய தினம் புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது 1976-ம்
ஆண்டுக்கு வரும்போது கொலைகள் மிக மிகக் குறைந்திருப்பதை
யும் கொள்ளைகள் மிக மிகக் குறைந்திருப்பதையும் கலவரங்கள்
மிகக் மிக குறைந்திருப்பதையும் பார்க்கிறார்கள். அந்த 1976
ஆம் ஆண்டில் ஏன் குறைந்திருக்கிறது என்று கேட்பார்கள் என்று
எண்ணினேன். ஆனால் கேட்கமாட்டேன் என்கிறார்கள். அதற்கு
என்ன காரணம்? மன்றத்தில உள்ள உறுப்பினர்களுக்கும் தெரியும்
எனக்குத் தெரியும்

திரு ரா. உமாநாத் : அந்த ஆண்டு போலீஸ் ரெவியூ
நோட்டைப் படித்துப் பார்த்தால் அந்த ஆண்டில்
குற்றங்கள் சில ஐடெம்களில் அதிகமாக இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: குற்றங்களைப்
பிரித்துப் பார்க்கும் போது அது குற்றமா, இல்லையா என்பது
அந்த அந்த நேரத்திற்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டி இருக்கிறது.
இத்தனை மணிக்கு வர வேண்டும் என்று சொல்லி வராமல் இருந்து
வழக்குப் போட்டால் அது குற்றம். இத்தனை மணிக்கு
வர வேண்டும் என்று சொல்லி ஒழுங்காக வந்து அன்றாட வேலை
செய்து முடித்து, ஓ.டி. கேட்டதாகச் சொல்லி அவர் மீது வழக்கு
போட்டால் அது குற்றம் அல்ல.

குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள்.
எந்தப் பிரிவில் அதிகமாகக் குற்றங்கள் இருக்கின்றன என்பதைப்
பரிசீலித்துப் பார்த்தால், எந்தெந்த இடங்களில் குற்றங்கள்
அதிகம் ஆகின்றன, எந்தெந்த இடங்களில் குற்றங்கள் குறைந்து
வருகின்றன என்பதைப் பார்க்க முடியும்.

எதையோ ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுவதாகக்
கருத வேண்டாம். எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணமும்
இல்லை. ஆசையும் இல்லை. அப்படி அவசர காலச் சட்டத்தின்
மூலமாக தமிழகத்தில் நல்ல ஆட்சி நடைபெற வேண்டும், மக்கள்
ஒழுங்காகப் பணியாற்றுவார்கள் என்று நினைத்து இருப்போ
மேயானால், அது நியாயமான எண்ணமும் இல்லை. ஒத்துக்
கொள்ளவும் முடியாது. தவிர்க்க முடியாத நிலையில்
அவசரச் சட்டம் கொண்டு வரும் அவசியம் ஏற்படு
கிறது. நாங்கள் கூட ஒரு ஆர்டினன்ஸ் தொழிலாளர்
வகையில் கொண்டு வர வகுத்தோம். எது எது அத்தியாவசிய
மானது என்கிற சில பகுதிகளைக் கொண்டு வந்து அந்தச் சட்
டத்தைப் பயன்படுத்தாமல் பேச்சுவார்த்தை மூலமாகத் தொழி
லாளர்களுடனும், தொழிலாளர் தலைவர்களுடனும், சுமுகமான
முறையில் பேசி, இந்தச் சட்டப் பேரவையில் கொண்டு வருவதற்கு
முன்னால் அது காலாவதியாகக் கூடிய முறையில் இந்த அரசு
நடந்தது என்றால் இந்த அரசை தொழிலாளர்களுக்கு விரோத
மான அரசு என்று வெளியிலே சொல்கிறார்கள் என்பதை
எண்ணிப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

இந்த அரசு போலீஸாரை வைத்துக் கொண்டு தொழிலாளர்
களைப் பழி வாங்குகிறது என்று சொல்கிறார்கள். மாணவர்கள்
பிரச்னையைப் பற்றி இந்தத் தொடர் கூட்டத்தில யாரும் பேச
வில்லை. அதற்காக என நன்றி. ஒரு வேளை முன்பு பேசியதைச்
சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் நான் ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன். அடிப்பது, சுடுவது, கைது செய்வது,
சிறைச்சாலைக்கு அனுப்புவது ஆகியவற்றில் எங்களுக்கு நிச்சய
மாக மகிழ்ச்சி இல்லை என்பதை அங்கத்தினர்களுக்கு மீண்டும்
சொல்லிக் கொள்கிறேன. அப்படி இருக்குமேயானால் சுடப்பட்ட
இடங்களில் எப்படிப்பட்ட நிலையில் மக்கள் இருப்பார்கள்,
அங்கு சென்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படும், அந்த
நிலையில் அந்த இடத்திற்குப் போக முடியாது என்று தெரிந்தும்
நான் போக முடிந்தது என்பதை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்
கொள்வார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

மற்றவர்களுக்கு வந்த விபத்து எனக்கு வந்தாலும் பரவா
யில்லை என்று நினைத்து, அந்த மக்களைச் சந்திப்பதற்காகப்
போயிருந்தேன். இதைத்தான் நான் அடிக்கடி சொல்லுவேன்.
மக்களை சந்திப்பேன், மக்களை சந்திப்பேன் என்று நான் சொல்
லும்போது, வேறு சிலருக்கு அச்சம் வருகிறது. மக்களைப் பார்த்து
தூண்டி விடுவார்களோ, மக்களிடம் போய் என்ன சொல்லு
வார்களோ என்று வேறுவிதமாக நினைக்கிறார்கள். நான் மக்களை
சந்திப்பேன் என்பது, மக்களை சந்தித்து, அவர்களுக்கு இருக்

கின்ற கஷ்டத்தைத் தீர்ப்பதற்கும், அவர்களுடைய குறைகளைக்
கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கும், அவர்களுக்கு ஏதாவது
சந்தேகங்கள் சொல்லப்பட்டிருந்தால், அதைப்பற்றி என்ன என்று
விளக்குவதற்கும், தெளிவு படுத்துவதற்கும், அதைப்பயன்படுத்திக்
கொண்டு செல்வேனே தவிர, மக்களை அச்சுறுத்தி, அதைப் பயன்
படுத்தி, அடிமைகளை விலைக்கு வாங்குவது போல் மக்களை
பயன்படுத்தி, ஆட்சியை இன்னும் கொஞ்ச காலம் கையில்
வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மக்களை
சந்திப்பதில்லை என்பதை இங்கே சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே; துப்பாக்கிச்
சூட்டை யாரும் வரவேற்க மாட்டார்கள். எனக்கு தோன்று
கிற கருத்து, நீண்டகாலமாக இந்தப் பிரச்சினை அங்கு நடந்து
கொண்டிருக்கிறது. இருந்தும் அங்கு குழாய் போடுவதற்கு
அனுமதித்ததால் தான் இந்த தகராறு வந்திருக்கிறது. முதல்
அமைச்சர் அவர்களை அங்குள்ள மக்களை சந்தித்தோ அல்லது,
அதிகாரிகள் மூலம் பார்த்தோ இதற்கு உரிய பரிகாரத்தை தேடி
யிருந்தால், இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்திருக்காது அல்லவா?
முதலமைச்சர் அவர்களே, நேரில் கவனம் செலுத்தியிருந்தால்,
இதை தடுத்திருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
எனக்கு நல்ல ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதிகாரி
களைப் பொறுத்த வரையில் அடிக்கணக்கு எல்லாம் போட்டு
புள்ளிவிவரங்கள் எடுத்துப் பார்த்து எந்தக் காரணத்தைக்
கொண்டும் தண்ணீர் குறையாது என்ற உறுதி தரப்பட்ட நிலையில்
அவர்கள் அந்தப் பணியைத் தொடங்கியிருக்கிறார்கள் என்
பது சொல்லப்பட்டிருக்கிறது என்பதும், இந்த விவரங்களை
அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே சொல்லிக்
கொள்கிறேன். ஆனாலும் நான் மக்களை மதிப்பவன் என்
கின்ற நிலையில் உறுதி தந்திருந்தாலும் கூட, சந்தேகத்திற்கு
ஆளாக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களுக்கு இப்படிப்பட்ட துன்
பங்கள் நேர்ந்து விட்டதற்குப் பிறகு, நிலைமையை சீர் படுத்த
வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தப் பணியை நிறுத்தச் சொல்லி
யிருக்கிறேன். அப்படியே அது ரத்து செய்யப்பட்டு விடவில்லை.
இதன் தொடர்பான விசாரணையின் தீர்ப்புக்குப் பிறகு, அந்த
மக்கள் கேட்டுக் கொள்ள நானே சென்று மூன்று நான்கு மணி
நேரம் அங்கேயேயிருந்து தண்ணீர் இறைக்கச் செய்து, அங்கே
யிருக்கின்ற தண்ணீர் குறைகிறதா என்பதைப் பார்த்து, அப்படிக்
குறைகிறது என்றால் மேற்கொண்டு எடுக்க வேண்டிய
நடவடிக்கை என்ன என்பதையும், இதன் மீது எப்படி முடிவு
செய்யலாம் என்கின்ற முறையையும் தெரிவித்து அல்லது அதற்
கான உத்தரவாதம் தந்தால் அங்குள்ள மக்கள் விரும்புகிறபடி
இந்தப் பணியைச் செய்யலாம் என்பதை நேரில் ஒத்துக் கொண்ட
பிறகுதான் நான் திரும்பி வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்

இதற்கான திட்டம் இடப்பட்டு ஓராண்டுக்கு மேல் ஆகிறது.
உங்களைப் போன்ற மாமன்ற உறுப்பினர்கள் எங்களைப் பார்த்து
கேட்கிறார்கள், அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கிறார்கள். குடி
தண்ணீர் கிடைக்கும் என்று சொன்னீர்களே, எங்கே என்று கேட்
கிறார்கள், கடலாடி மக்கள் வாக்கு அளிக்கவில்லை என்றாலும்
அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும். இந்தப் பகுதி
யிலுள்ள மக்கள் வாக்கு அளித்தார்கள் என்பதற்காக துன்பப்
படுத்தவும் முடியாது. எதுவாக இருந்தாலும் காரியம் ஆற்றக்
கூடிய வகையில், எந்த இடத்தில் எங்கெங்கு குடிதண்ணீர் இல்
லையோ அங்கெல்லாம் குடிதண்ணீர் கொடுத்தாக வேண்டிய
நிலையில் இந்தப் பணியை அங்கே மேற்கொள்ளுகின்றோம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: இது பற்றிய நீதி விசாரணை
முடிகிற வரையில் இந்தப் பிரச்னையை இங்கு இழுக்க
வேண்டாம் என்று கருதினேன். தண்ணீரை இறைப்பதின் மூலம்
எந்த விதத்திலும் அங்கு தண்ணீர் குறையாது என்று
அதிகாரிகள் சொல்லியிருந்தால், அது சரி தானா? ஏனென்றால்,
கிரௌன்ட் வாட்டர் சிஸ்டத்தில் இதைப்பற்றி வேறு விவகாரம்
நடந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, தண்ணீரை
இறைத்தாலும் அங்கே தண்ணீர் குறையாது என்று
சொல்வதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே,
இது பற்றிய விசாரணை முடிவது வரையிலும் இந்தப் பிரச்னையை
கிளப்பாமல் இருப்பது நல்லது என்பதை மிகவும் அடக்கத்தோடு
முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திரு. கூத்த
குடி சண்முகம் அவர்களும் எனக்கு நல்ல வாய்ப்பைத் தருகிறார்
கள். நானாக இதை ஆரம்பித்துப் பேசவில்லை. மாமன்ற
உறுப்பினர்கள் கேள்விகள் கேட்டார்கள். நான் பதில் சொல்ல
வேண்டியிருக்கிறது. அந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்ட
தற்கு நான் காரணம் அல்ல. எந்த அளவுக்கு இந்தப் பிரச்னை
களை எடுத்து வைக்காமல் வழக்கு மன்றத்தில் இருப்பதாலும்,
இதைப்பற்றியும், வேறு நீதிமன்றங்களிலும் இருக்கின்ற
பிரச்னைகளைப் பற்றியும் பேசாமல் ஒதுங்கிப் போக வேண்டும்
என்று நினைத்து இதைப் பற்றி பேச வேண்டாம் என்று
கருதினேன்.

[மாலை 6-30]

அந்த வகையில் நான் என்னுடைய பேச்சைத் தொடர்ந்து
பேசிக் கொண்டிருக்கிறேன். என்னிடமும் இந்தக் குறிப்பைக்
காட்டினார்கள். ஆனால், அவர்களிடம் சொன்னேன். இது
போதாது ; நான் நேரிலே பார்க்க வேண்டும் என்று சொல்லி
விட்டு வந்திருக்கிறேன். அதைத்தான நான் இப்போதும்
சொல்கிறேன்.

இதுபோல் பல விவகாரங்கள், பல கேள்விகளுக்கு மாமன்ற
உறுப்பினர்கள் பதில் கேட்கும்போது, எனக்குக் கொடுக்கப்படு
கின்ற பதில்கள் திருப்தி இல்லை என்றால், பதில்கள், சரியாக
இல்லாமல் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பதில்களாக இருக்
கின்றது என்று நான் உணர்ந்தால், அவைகளைத் திருப்பி
அனுப்புவதால், கேள்விகளுக்குப் பதில் தருவதில் தாமதம் ஏற்படு
கின்றது. இப்படி உண்மையான மனச்சாட்சி இருக்கின்ற
காரணத்தினால்தான், அங்கே சென்று மக்களைச் சந்திக்க
முடிந்தது. அவர்களும் என்னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்
வதாகச் சொல்லி, அந்த அளவில் என்னால் செய்ய முடிந்தது.

இங்கே காவல் துறையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு
இன்ஸ்பெக்டரைப் பற்றியும், எஸ். பி.யைப் பற்றியும் தனிப்பட்ட
முறையிலே குற்றம் கூறுகிறார்கள். நான் பலமுறை சொல்லி
யிருக்கிறேன். அவர்கள் எல்லாம் புதிதாக வந்தவர்கள் அல்ல.
முன்பு இருந்தவர்கள்தான. எங்களை எல்லாம் என்ன
பாடுபடுத்தினார்களோ, அவர்கள்தான இன்னும் இங்கே
இருக்கிறார்கள். எப்படியெல்லாம் கிளைவ் ஆஸ்டல் சம்பவம்
நடந்தது என்பது தெரியும். அதற்குத் தொடர்புள்ளவர்கள் சிலர்
அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். நெய்வேலியில் வீட்டுக்குள்
புகுந்து அங்கே யிருக்கின்ற பணியாளர்கயையும், அலுவலர்
களையும் தாக்கினார்கள். தொழிலாளர்கள் என்று சொன்னால்,
தொழிலாளர்கள் வேகமாக இருப்பார் ; ஆகவே, படித்துப்
பட்டம் பெற்ற பணியாளர்களையும், அலுவலர்களையும்
வீட்டிற்குள் நுழைந்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அது
மட்டுமல்ல. பாலசுந்தரம் என்ற இளைஞன், ஆஸ்டலிலே தங்கி
யிருந்தபோது, ஆஸ்டலிலே துரத்தித் துரத்தி, வெட்டி வெட்டிக்
கொன்றார்களே, அப்போது இருந்த அந்த போலீசார்தான்
இப்போதும் இருக்கிறார்கள். ஒருவேளை இடமாற்றம் பெற்
றிருக்கலாம். ஆனால், மன மாற்றம் பெறவேண்டும் என்று
தான் நான் சொல்கிறேன. மன மாற்றம் கொண்டு வரவேண்டு
மென்பதற்காகத்தான், நியாயமாக, உண்மையாக குறைகளை
வெளிப்படுத்தினால், எச்சரிக்கையாக இருந்தாலும் கூட, நல்லவர்
களுக்கு வேறுவிதமான அச்சத்தை ஏற்படுத்தி விடக்கூடாது
என்பதிலே எனக்கு ஒரு அச்சம் இருக்கிறது. காரணம், தவறு
செய்கிறவர்களை நேரிடையாகத் தெரிந்து, அவர்கள் மீது
நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறது இந்த அரசு
என்று சொன்னால், அது நடைபெறுகிறதா, எங்கே
நடைபெறுகிறது என்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அதிலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்
ஒரு பிரச்னையை எழுப்பி, திரு அப்துல்லா, டி.ஐ.ஜி. காவல்
துறையிலே சீனியர் என்றும், அவரை காவல் துறையின்
தலைவராக நியமிக்காமல் கேரளாவிற்கு அனுப்பி விட்டார்
கள் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களின் நல்லெண்ணத்தில் சந்தேகம் வைக்கவில்லை. யாரோ
அவர்களுக்குத் தவறாகத் தகவல் கொடுத்திருக்கின்றார்கள்.

எதற்காக இப்படிக் கொடுத்திருக்கின்றார்கள் என்று
புரியவில்லை. இனிமேலாவது மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தேகம் வந்தால், தொலைபேசி
மூலம் என்னோடு பேசலாம் அல்லது அதிகாரிகளைக் கேட்கலாம்.
கேட்டால் இவ்வளவு பிரச்னைகள் வந்திருக்காது. அப்படியெல்
லாம் இல்லை என்று நான் பதில் சொல்லும்போது, அது பத்தி
ரிகைகளிலே வரும்போது, பொதுமக்கள் தவறாக எண்ணாமல்
இருப்பதற்கு மிகமிக நல்லதாக இருக்கும் என்ற எண்ணத்திலே
சொல்கிறேன்.

ஸ்ட்ரேசி, ஐ.ஜி. அவர்களுக்கு ஏன் மீண்டும் பதவி நீட்டிப்பு
என்றும், வேறு ஆட்களே கிடைக்கவில்லையா என்றும் கேட்
டார்கள். ஆட்கள் இருக்கிறார்கள். அதற்காக ஒருவருக்கு பதவி
நீட்டிப்பு கொடுப்பதில்லை. இன்னொருவர் பதவிக்கு வரக்
கூடாது என்பதற்காகப்பதவி நீட்டிப்பு இல்லை. இந்த அரசைப்
பொறுத்தவரையில் நீட்டிப்பு கூடாது என்று கொள்கை கொண்
டிருக்கிறது ; அதைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. ஆனால்,
கட்சிக்கு அப்பாற்பட்ட, சாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட
ஒருவர் தலைமையில் இத்துறை இருக்க வேண்டும். ஏற்றுக்
கொள்ளவேண்டும் என்பதை நான் இங்கே மனம்விட்டுச் சொல்ல
விரும்புகிறேன். அப்படியானால், மற்ற அதிகாரிகளுக்கு ஜாதி
உணர்வு இருக்கிறதா, மத உணர்வு இருக்கிறதா, அவர்கள்
கட்சிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்று
கேட்கலாம். நான் அதற்கு பதில் கூறத் தயாராக இல்லை.
ஆனால், கொஞ்சம் எச்சரிக்கையாக, நாங்கள் ஆட்சிக்குப் புதிய
வர்கள் என்பதற்காக எந்தக் கட்சியையும் சேராத, யாருக்கும்
விட்டுக் கொடுக்காத, தனனுடைய எண்ணத்தில் எது நியாயம்
என்று கருதுகிறார்களோ, அதை யாரிடமும் எதிர்த்துச் சொல்லக்
கூடிய துணிவுள்ள ஒரு அதிகாரியாக இருக்கின்ற காரணத்தால்,
அவருக்கு பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டது என்பதை நான்
இங்கே துணிந்து கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு லத்தீப் அவர்களுக்குச் சொல்லுகிறேன்
ஐ.பி.எஸ். சீனியாரிடி கீழ்க்கண்டவாறு இருக்கிறது—

திரு. ஸ்ட்ரேசி, நியமிக்கப்பட்ட வருடம் 1943 திரு. கா. ரா.
ஷெணாய் 1944 ; திரு டி.பி.டி. அப்துல்லா 1947 ; திரு சி. வி.
நரசிம்மன் 1948 ; திரு என். கிருஷ்ணசாமி 1948 :; திரு டி. எம்.
சுப்பிரமணியம் 1949 ; திரு கே. ராமமூர்த்தி 1949. ஆகவே,
திரு. அப்துல்லா என்பவர் சீனியர் என்பது சரியல்ல. தற்போது
அவர் மாற்றுப் பணியில் கேரள அரசின் " வெளிநாட்டுப் பணி
அபிவிருத்திக் கழகத்தின் " தலைவராகப் பணிபுரிகிறார். அங்கு
அவரது பணிக் காலம் 27—11—1979 வரை இருக்கிறது.

ஆகவே, இந்தச் சேதியை அவருக்குச் சொல்லியனுப்பியவர்கள்
யாரோ வேண்டுமென்றே மற்றவர்கள் முன்னால் இப்படிப்
பேசிப் பதிலைப் பெற்றுக்கொள்ளட்டும் என்று மனப்பான்மையில்
தகவல் கொடுத்திருக்கிறார்களோ என்று ஐயுறுகிறேன். அவர்

கள் நிச்சயமாக ஏமாறமாட்டார்கள் என்று தெரிந்திருந்தால்
சொல்லியிருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட தகவலைக்
கொடுக்கிறவர்கள் அவரிடம் வரும்போது எச்சரிக்கையாக
இருப்பது நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு லத்தீப் அவர்கள், வாணியம்பாடி மற்றும்
ஆம்பூர் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள தோல்
பொருள்கள் களவு போனதாகப் புகார் ஒன்று சொன்னார்கள்.

ஐந்து கோடி ரூபாய் அளவிலான தோல்கள் களவு போக
வில்லை. ஆம்பூரிலும் ஒமராபாதிலும் ரூ. 5,000 மதிப்புள்ள
தோல்கள் களவு போயின. இது சம்பந்தமாக ஆம்பூர் நகர
காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணையில்
இருக்கிறது.

திரு எம். ஏ. லத்தீப் : ஐந்து கோடி ரூபாய்க்குத் திருட்டுப்
போயிருக்கிறது, ஆனால் ஐயாயிரம் ரூபாய்க்குத்தான் பதிவு
செய்திருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, ஐந்து கோடி ரூபாய் பொருளை இழந்த
வர்கள் எவ்வளவு பெரிய கடைச் சொந்தக்காரர்களாக இருப்
பார்கள் ? ஐந்து கோடி ரூபாய் அளவுக்குத் திருடு போயிருக்கும்
போது ஐயாயிரம் ரூபாய்க்குத்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது
என்று சொன்னால் அதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடிந்
தது ? நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஐந்து
கோடி என்பதை வெளியில் சொல்ல முடியவில்லையா ? இதைப்
பற்றி மறுபடியும் கடிதம் எழுதி எங்களுக்கெல்லாம் ஏன்
தெரிவிக்கவில்லை, என்பது தெரியவில்லை.

திரு. ஹபிபுல்லா, திரு. முகமது இக்பால் ஆகிய முஸ்லிம்
இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்
டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு லத்தீப் அவர்கள்
கூறினார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்—
13—10—1978 அன்று பிராந்தி புட்டிகளுடன் கைப்பற்றப்பட்ட
காரிலிருந்து எல்லா புதுப்பாகங்களையும், விருத்தாசலம் காவல்
துறை டெபுடி சூப்பிரண்டெண்டாகப் பணியாற்றிய திரு.
ஹபிபுல்லா தம்முடைய சொந்தக் காருக்கு மாற்றி விட்டார்
என்ற குற்றச்சாட்டின்மீது விரிவான விசாரணை நடத்த ஒழுக்கக்
கண்காணிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்
பட்டுள்ளார். ஹபிபுல்லா தாற்காலிக வேலை நீக்கத்தில் வைக்
கப்பட்டுள்ளார். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்தது, திரு முகமது இக்பால் பற்றியது. தென்னார்க்
காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி நாகம்மாள் என்பவர்
தொழுதூர் காவல் நிலைய அலுவலர்களுக்கு எதிராக தாக்கல்
செய்த குற்றச்சாட்டுகளின் பேரில் நெருக்கடிகால அத்து
மீறல்களைப் பற்றி விசாரணை செய்த அதிகாரி, விசாரணை

செய்து அரசுக்குப் பரிந்துரைகள் அனுப்பியுள்ளார். அப்பரிந்
துரைகளை ஆய்வு செய்து அக்காவல் நிலையத்திலுள்ள அனைத்து
அலுவலர்களையும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களையும்
பொது நலனைக் கருதி தற்காலிக வேலை நீக்கம் செய்ய
அரசு முடிவு செய்தது. அதன்படி முன்பு விருத்தா
சலத்தில் டெபுடி சூப்பிரண்டெண்டாகப் பணியாற்றிய திரு
முகமது இக்பால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
இதுதான் உண்மை.

திரு எம். ஏ. லத்தீப் : ஐந்து கோடி ரூபாய் திருட்டுப்
போய்விட்டது என்று சொல்வதற்கு ஏன் தயங்கினார்கள்,
ஏதாவது உள்ளர்த்தம் இருக்கிறதா என்ற வகையிலே மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் சொன்னேன்—
கடந்த இரண்டாண்டுகளாக தொடர்ந்து 500 தோல் ஷாப்பு
களில் நடைபெற்றது ; தொடர்ந்து அதற்கான கம்ப்ளெயின்ட்
கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுக்குக் கூடத் தனியாக கம்ப்ளெயின்ட் அனுப்பியிருக்கி
றார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் எங்க
ளுடைய குறையே தவிர வேறல்ல. நடக்காத ஒன்றை நடந்தது
என்று சொல்லும் அளவுக்கு அரசின்மீது எந்தக் குற்றமும் நான்
சொல்லவில்லை.

இரண்டாவது, சஸ்பெண்ட் பற்றிச் சொன்னார்கள். உண்மை
யாகத்தவறு இருக்குமானால், அது எல்லோர் மீதும், எந்தெந்தச்
சூழ்நிலையில் எந்தெந்தக் குற்றங்களைச் செய்திருந்தாலும்
அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலை இருக்கு
மானால், அவர்கள் யாராக இருந்தாலும் குற்றம் செய்தவர்கள்
முகமது இக்பாலாக இருந்தாலும் சரி, முனுசாமியாக இருந்தாலும்
சரி, நடவடிக்கை எடுப்பதைப் பற்றிக் கவலை இல்லை.

ஆனால் இந்த விஷயத்தில் பாரபட்சம் காட்டப்பட்டிருக்
கிறது என்பது எங்களுடைய குற்றச் சாட்டு. அதற்கு எங்களிடத்
திலே ஆதாரம் இருக்கிறது.

(மாலை 6—40).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைக் தலை
வர் அவர்களே, இந்த மன்றத்தில் இப்போது எல்லாம் அடிக்கடி
ஆதாரம் இருப்பதாகச் சொல்வது ஒரு வாடிக்கையாக இருக்கிறது
ஆனாலும் பரவாயில்லை, ஆதாரத்தை உங்களிடம் தரட்டும்,
நான் நடவடிக்கை எடுக்கிறேன். அந்தப் பொறுப்பைத் துணைத்
தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்
டுக் கொள்கிறேன். ஏனெனில் இது மாதிரி பல்வேறு வழக்குகளில்
ஆதாரத்தைத் தருகிறேன் என்று சபாநாயகரிடம் சொன்னவர்கள்
பேசாமல் இருக்கிறார்கள், வழக்குகள் தொடரமுடியவில்லை.
அது எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்,
அதிகாரிகள் ஏமாந்து போகிறார்கள், குற்றச்சாட்டுக்கு ஆளாகி
வருகிறார்கள். இதுவும் அப்படி இருக்கக்கூடாது என்பதற்காகத்

தான் சொல்கிறேன். அவர் எப்போதும் உண்மையைப் பேசு
கின்றவர், தெரிந்ததைத் தைரியமாகச் சொல்கின்றவர், விரும்
பியதை உள்ளத்திலே வைத்துக் கொள்ளாமல் வெளியே சொல்
கிற நல்ல உள்ளம் படைத்தவர், ஆகவே ஆதாரம் அவர்களிடத்
திலே கண்டிப்பாக இருக்கும், அதை துணைத் தலைவர் அவர்கள்
பெற்று, எனக்குத் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: துணைத் தலைவர் ஏன்? முதலமைச்
சர் அவர்களையே நான் சந்தித்துப் பேசுகிறேன். முதலமைச்சர்
அவர்களுக்கும் எனக்கும் வயா மீடியா தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்குக் கஷ்
டம் இல்லை. இங்கேயே சொல்லிவிட்டால் வசதியாக இருக்கும்.
எல்லோருக்கும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலை
வர் அவர்களே, இப்படி நீங்கள் ஒதுங்கிவிட நாங்கள் அனுமதிக்க
முடியாது. ஏனெனில் துணைத் தலைவர் யாராக இருந்தாலும்
தலைவர் தான் எங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். இங்கே
சொல்கிறவர்கள் உத்திரவாதத்தோடு ஆதாரத்தோடு சொல்
கிறார்களா என்பதைச் சரிபார்த்து சரியா தவறா என்று தீர்ப்
புக் கூறவேண்டியவர் நீங்கள். உங்களிடம் தரவேண்டுமென்று
நிலைமையை நான் கேட்கும்பொழுது என்னிடம் தனியாகத் தரு
கிறேன. யாரும் சொரிக வேண்டாம் என்றால் அது நியாயமில்ல.
அது தனியாகப் பேசியிருக்கலாம், சட்டமன்றத்திலே சொன்ன
பிறகு சபாநாயகரிடம்தான் தரப்படவேண்டும். ஆகவே அப்
படியே செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் இங்கே சொன்னாரே
லாரிகள் எங்கள் ஆட்களை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்
களை ஏற்றிவந்தால் நாங்கள் விட்டு விடுகிறோம் என்று சொன
னார்கள், எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த வகையில் ஒன்
றிரண்டை நான் சொல்ல விரும்புகிறேன். 3—2—79 அன்று
16 அ.இ.அ.தி.மு.க. நபர்களை ஏற்றிச் சென்ற எம்.எஸ்.க்யூ.
2360 எண் உள்ள லாரியின் உரிமையாளரும் ஓட்டுநரும் குற்றம்
சாட்டப்பட்டு ஒவ்வொருவரும் மாஜிஸ்ட்ரேட்டால் ரூ. 50
அபராதம் விதிக்கப்பட்டார்கள். உரிமம் பெற்றுள்ள உரிமை
யாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மண்டலப்
போக்குவரத்து அதிகாரிக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதேபோல் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள்.
9—12—78 அன்று அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களையும்,
ஆதரவாளர்களையும் ஏற்றிச் சென்ற 9 லாரிகள் பரங்கிமலை
போலீஸ் நிலையத்தாரால் பிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு
வழக்குகளில் ஓட்டுநர்கள் ஒவ்வொருவரும் 25 ரூபாய் அபராதம்
விதிக்கப்பட்டனர். மற்ற வழக்குகள் விசாரணையில் உள்
ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் தக்கலை
தபால் நிலையம் தீ வைப்பு வழக்கில் காவல் துறை நடவடிக்கை
எடுக்கவில்லை என்று கூறினார். இந்தச் சம்பவம் தக்கலை குற்ற
எண் 1132/78—ல் வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை
முடிந்து 21—2—79 அன்று இரணியில் இரண்டாம் நிலை
குற்றவியல் நீதிபதி முன்பு குற்றப் பத்திரிகை 10 பேர் மீது தாக்
கல் செய்யப்பட்டிருக்கிறது. ஒன்பது பேர் கைது செய்யப்பட்டி
ருக்கிறார்கள், ஒருவர் தலைமறைவாகியிருக்கிறார். இதற்காக
விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், எத்திராஜ்
என்பவர் காணவில்லை எனபதைப் பற்றி இங்கே கூறினார்கள்.
எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை நான் சொல்ல விரும்பு
கிறேன். எத்திராஜ் என்பவருக்கும் அவரது அடுத்த நிலக்காரருக்
கும் இடையே சிறிது மனக்கசப்புக்கள் தோன்றின. இதன் காரண
மாக இ.பி.கோ. 323, 324 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்
யப்பட்டது. இதன் பிறகு எத்திராஜ் என்பவர் தலைமறைவா
னார்.

இவரது மனைவி ஜோதியம்மாள் தனது கணவர் காணவில்லை
என்று கொடுத்த புகாரின்மீது மற்றொரு வழக்கு ... புலன் விசாரணை ...
[illegible] செய்யப்பட்டு ... சென்ற 10 தினங்களுக்கு
பெற்று வருகிறது. இதற்கிடையே மற்றொரு கணக்குப் பிள்ளையும்
முன்னர், மேலப்பாக்கம் சென்னை சென்டிரல் இரயில்
வரும் எத்திராஜ் என்பவரை பார்த்ததாகத் தகவல் வந்தது. அவர் தற்
நிலையம் அருகே பார்த்ததாகத் தெருவில் உள்ள பால்கார முனு
சமயம் பூந்தமல்லி பால்காரத் தெருவில் அவரது சகோதரர் சுப்ரமணியம் என்
சாமி என்பவர் இல்லத்தில் அவரது தலைமறைவாக இருந்து வருவதாகத்
பவர் மேற்பார்வையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து காவல்
காவல் துறைக்குத் தெரிய வந்துள்ளது. கண்டுபிடிக்க நடவடிக்கை
துறையினர் எத்திராஜ் என்பவரைக்
கள் எடுத்து வருகின்றனர்.

திரு. ரா. உமாநாத்: சமீபத்தில் சென்ட்ரல் ஸ்டேஷன்
அருகே பார்த்ததாக ரிப்போர்ட் வந்திருப்பதாகச் சொன்னார்
கள். மாதக் கணக்கில் அந்த அம்மாள் போலீசை அணுகும்
பொழுது அந்த ஊரிலே மார்க்கெட்டிலே பார்த்து வந்திருக்
கிறேன் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். காணாமல் போனது
அல்ல, பட்டப் பகலில் லேண்ட் லார்ட் இழுத்துச் சென்றார்
என்று ருசுவாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலை
வரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்
இப்படிச் சொல்கிறார்கள். பக்கத்திலே, வீட்டிலே இருந்தவர்
வெளியிலே சென்றவர் வரவில்லை என்று பேசியிருக்கிறார்கள்.
நான் இதைச் சொல்லக் காரணம், கோபால் சன்னியாசி வழக்
கைபற்றி மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு திரும்ப வந்தார், திரும்ப
வந்தபொழுது ஒத்துக் கொள்வதற்காக எவ்வளவு பெரியவழக்கு
நடந்தது என்பதையும் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருது
கிறேன். வேண்டுமென்றே தலை மறைவாகிக் கொண்டால் அவ்
வளவு எளிதாகக் கண்டு பிடித்து விட முடியாது என்பதையும்
மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.
காணவில்லை எனறு திரும்பத் திரும்பச் சொல்கிறபொழுது, குறிப்
பிட்ட இடத்தையும், பெயரையும் சொல்லியும் கண்டு பிடிக்
கிறார்களா இல்லையா என்று பார்ப்போம். அதற்குப் பிறகும்
செய்யவில்லை என்றால் எனன நடவடிக்கை என்பதை......

திரு. ரா. உமாநாத்: பக்கத்து வீட்டிலே என்று மாண்புமிகு
ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர், கிருபாகரன் பற்றி ஃபர்ஸ்ட்
இன்ஸ்டன்ஸ் பற்றித்தான் சொன்னாரே தவிர, இப்பொழுது
சொன்ன சம்பவத்தைப் பற்றிப் பக்கத்து வீடு என்று அவர்
சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: துணைத்
தலைவரவர்களே, திருத்தத்திற்கு நன்றி.

'பெல்' தொழிலாளர்கள் மீதான வழக்குகள் பற்றிக் குறிப்
பிட்டிருக்கிறார்கள். பெல் தொழிற்சாலைக்கு வந்த விசுவாச
ஊழியர்களைத் தடுத்தும், தொழிற்சாலைக்குச் சேதம்
விளைவிக்க முயன்ற ஊழியர்கள் மீது 11 வழக்குகள் பதிவு செய்
யப்பட்டு 9 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்கள் 6,
7 மற்றும் 16—4—79 தேதிகளில், காவல் நிலையத்திலேயே
ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இந்தச் செய்தியைப் பற்றிச்
சொல்லும்பொழுது நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்
பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விசாரணைக்குப் பிறகு நிரபராதி
யாக இருந்தால் விடுவிக்கப்படுவார்கள். ஜாமீனிலே வெளியே
வந்திருக்கிறார்கள்.

வெங்கடாசலம் காணவில்லை என்பதைப் பற்றிச் சொன்
னார்கள். வெங்கடாசலம் காணவில்லை என்ற புகாரின் மீது
காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை
செய்தனர். இவ் வழக்கு 'க்யூ' பிரிவு அதிகாரிகளால் மேல்
விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவரது சடலத்தைத்
தேடும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தியது. இதற்கிடையே
வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும்
இதற்குக் காரணமாக பெருமாள் என்பவர் மீது சந்தேகம்
ஏற்பட்டது. 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ம் நாளன்று
இப் பெருமாள் என்பவர் கொலை செய்யப்பட்டார். இவ்
வழக்கும் புலன் விசாரணையில் உள்ளது. வெங்கடாசலத்தின்
தற்போதைய இருப்பிடம் பற்றித் தேடப்பட்டு வருகிறது.
விசாரணைகள் மிகவும் தீவிரமாகச் செய்யப்பட்டு வருகின்றன.
காவல் துறையினர் இவ் வழக்கு பற்றி மிகவும் அக்கறையோடு
முயன்று புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இன்
னொரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். மதுர
வாயல் காவல் நிலையத்தைச் சார்ந்த நெற்குன்றம் கிராமத்தில்
மகாலிங்கம் என்பவர் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23-ம்
நாளன்று சாராயம் காய்ச்சும் சமயம் கைது செய்யப்பட்டார்
என்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நெற்குன்றம் கிராமத்
தில் மகாலிங்கம் என்பவர் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள்
23-ம் நாளன்று சாராயம் காய்ச்சும் சமயம் பிடிபட்டு கைது
செய்யப்பட்டார். அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.
அவ்வழக்கின் குற்ற எண் 161/79 பிரிவு 4 (1) (பி) டி. என்.பி.
சட்டம் ஆகும். இவ்வழக்கு இன்னும் விசாரணையில் இருந்து
வருகிறது. இது குறித்து இரசாயன சோதனை அறிக்கை இன்னும்
வர வேண்டியுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த விவசாயிகள்
வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது பற்றி மாண்புமிகு உமாநாத்
அவர்கள் குறிப்பிட்டார்கள். வெளியிலே வர முடியாமல் தடை
செய்து விட்டார்கள். என்ற கருத்தைக் கூறினார்கள். 1979-ம்
ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று ஆக்கூர் கிராம பஞ்
சாயத்துத் தலைவர் திரு. இராமலிங்க முதலியார் தேசீய
காங்கிரஸ் அனுதாபி தன்னுடைய நிலத்தில் அறுவடை செய்ய
பக்கத்து கிராமத்தில் இருந்து சில ஆட்களைக் கொண்டு
வந்தார்.

(மாலை 6—50)

இதற்கு அவ்வூரைச் சார்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் விவ
சாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இராமலிங்க முதலியாரின்
மேஸ்திரி தங்கராஜ் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் ஒரு
வழக்கு செம்பனார் கோவில் காவல் நிலைய குற்ற எண் 92/79
பிரிவு 141, 341, 323, 506. 379 இ.பி.கோ. வின் கீழ் பதிவு
செய்யப்பட்டது. இவ்வழக்கு குறித்து 1979-ம் ஆண்டு ஏப்ரல்
திங்கள் 13-ம் நாளன்று 4 மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் விவசாயி
களும் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாளன்று 10
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் விவசாயிகளும் (திருமேனி என்பவரும்
இதில் அடங்குவார்) கைது செய்யப்பட்டார்கள். இதற்கிடை
யில் கூலிப் பிரச்சினை குறித்து நடைபெறும் பேச்சு வார்த்தையில்
முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சார்ந்த விவசாயிகள் வீட்டில் காவல் வைக்கப்
பட்டனர் என்று கூறுவது அல்லது தடைப்படுத்தப்பட்டார்கள்
என்று கூறுவது உண்மைக்கு மாறானது என்ற தகவல் எனக்கு
வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எவ்வளவு
உணர்ச்சியோடு சொன்னார்களோ அந்த உணர்ச்சியோடும் அந்த
உணர்வோடும் நான் இதைப் பற்றி மீண்டும் பரிசீலிப்பேன்
என்பதையும் அவர்கள் அரசு நிர்ணயித்த கூலியைக் கொடுக்காத
காரணத்தால் இந்நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள்; கூலி

கேட்டதன் விளைவுதான் இது என்றால் அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் ஒரு மானியக் கோரிக்கையைப் பற்றிக் கூறி ரூ. 38 கோடி எந்த, எந்த இனத்திற்கு என்ற விவரம் தெரியவில்லை என்று சொன்னார்கள். அதற்காகக் குறிப்பிட விரும்புகின்றேன். காவலர் சம்பளம் ரூ. 27,77,51,000. இப்பொழுது கூத்தகுடி சண்முகனார் அவர்களுக்குக் கொஞ்சம் மனம் திருப்திகரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, புதிதாக சேர்க்க இருக்கிற 10,000 பேருக்கும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இது பழய கணக்கு. இனி இன்னும் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது. திருத்தப்பட்ட பட்டியல் வரும்போது அது இன்னும் அதிகமாக வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : இதுகாரும் 10,000 பேரை சேர்க்க வேண்டாமென்று கருதிச் சொன்ன காரணத்தால்தான் 10,000 பேரைச் சேர்த்த கணக்கு வருகிறதா என்பதற்காகக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே 10,000-தோடு நிற்க வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. ஆனாலும் எந்த அளவிற்கு எந்த, எந்த வகையில் அவைகளையும் எல்லாம் சேர்த்து அவைகளையும் கணக்கிட்டு வருமோ, அந்தத் திருத்தப் பட்டியல் கண்டிப்பாக வெளியிடப்படும்.

நண்பர் மாண்புமிகு கோவிந்தராசன் அவர்கள் இங்கே சில குற்றங்களைக் கூறினார்கள், கைவிலங்கிட்டு இழுத்துச் சென்ற வழக்கைப் பற்றியெல்லாம். அது அவருக்கே தெரியும். வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் ஒத்துழைத்தால்தான் வழக்கே நடைபெற முடியும். வழக்கு சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைக்காமல், அதிலே கலந்துகொள்ள மாட்டேன் என்று சொல்வதும் பிறகு கலந்து கொள்ள வருவதும், பிறகு வழக்கு மன்றத்திற்குப் போகும்போது அதை நிறுத்திவிட்டு, இங்கேயே வழக்கை நடத்தலாம் என்று சொல்கின்ற நிலைமை எல்லாம் ஏற்படும்போது அரசுக்கு எவ்வளவு நெருக்கடி ஏற்படுகிறது என்பதைத் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கே, அவர்கள் இருந்திருந்தால் முழு விவரத்தையும் கொடுத்திருப்பேன் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.
கை விலங்கு போட்டது தவறு என்பதிலே எனக்கு ஆட்சேபணை
இல்லை, எனக்கு அபிப்பிராய பேதமும் இல்லை, மாற்றுக்
கருத்தும் இல்லை. அப்படி நடந்ததா என்பதைத் தெரிந்துக்
கொள்ள வேண்டியது நமது முதல் கடமையாகிறது. அதைத்
தெரிந்து கொள்வதற்கேற்ற வாய்ப்பே அரசுக்கு இன்னும்
கிடைக்கவில்லை. அந்த நிலையில்தான் வழக்கு இன்னும்,
நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ள
முடிந்தால், இனி அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் தடுப்
பதற்கு எந்த, எந்த வழி முறைகளைக் கையாள வேண்டுமோ
அவைகளை நாங்களே செய்து முடிப்போம். உங்களுக்கும்
பயன்படும்படியாக அந்த வாய்ப்பும் தருவோம் என்பதைச்
சொல்லிக் கொள்கிறேன். இது போன்ற பிரச்சினைகள் ஒவ்
வொன்றிற்கும் சொல்லிக் கொண்டிருப்பதை விட, ஒட்டு
மொத்தமாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சிவகிரி சரகத்
தைச் சேர்ந்திருக்கக் கூடிய ஒரு கிராமத்தில் ஒருவர் எஸ். ஐ.-யை
அடித்துவிட்டு, சட்டை எல்லாம் கிழித்திருக்கிறார்கள் என்று
சொன்னேன். அதைப்பற்றி ஜாயிண்டாக மகஜர் கொடுத்தும்
டி. எஸ். பி. டாட்ஜ் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விவரம்,
கொடுக்கப்படவில்லை. விரைவிலே நான் இன்னும் இந்தத்
தொடர் முடிவதற்குள், அதைப்பற்றிய பதிலைத் தெரிவிக்கின்
றேன்.

தொழிலாளர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்குவது
பற்றி மாண்புமிகு உமாநாத் அவர்கள் கருத்து வெளியிட்டார்கள்.
நான் பரிசீலித்த வகையில் தொழிற்சாலைகளில் கலகங்கள்
உண்டாக்காமலும், வேறு எந்தவிதமான சச்சரவுகளையும் உண்
டாக்காமலும் எப்படியெல்லாம் நியாயமான வழியில் ஒரு
தொழிற் சங்கத்தை சேர்ந்தவர்கள் தங்களுடைய எண்ணத்தை
வெளியிட முடியுமோ அந்த வகையில் நடந்திருக்கக் கூடியவர்கள்
அனைவரையும் விடுதலை செய்து விட்டோம் என்று எனக்குக்
கொடுத்திருக்கிற கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி
இல்லாமல் எனக்குத் தவறாக கணக்கு கொடுத்திருக்கிறார்கள்
என்று நிரூபிப்பீர்களேயானால் நான் எனக்கு கணக்கு கொடுத்
தவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் துணைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கைது
செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்வதாகச் சொன்
னார்கள். அது என்னவாயிற்று, நடந்திருக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் விடுதலை செய்வதாக
அவரிடம் தனிப்பட்ட முறையில் சொன்னேனா, அல்லது இந்த
அவையில் சொன்னேனா என்று தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பரிசீலனை செய்து விடுதலை
செய்வதாக சொல்லியிருக்கிறீர்கள்— அவையில்தான் சொல்லி
யிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, பரிசீலனை செய்து விடுதலை செய்வதாகச் சொல்
லியிருந்தால் அப்படி பரிசீலனை செய்ததில் விடுதலை செய்ய
இயலாமல் நேர்ந்ததற்கு வேதனைப்படுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்'
தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு தடவை இந்த வழக்கு
களை வாபஸ் வாங்குவதைப் பொறுத்தவரையில் வன்முறையில்
எல்லாம் ஈடுபட்டவர்களை அதில் எடுத்துக்கொள்ள முடியாது
என்று சொன்னீர்கள். பொதுவாக வழக்குப் போடும் போது
ஒன்றைப் போட்டு 147, 348, 341 இப்படி ஏதாவது போட்டுத்
தான் செய்வார்கள். அப்படிப் போட்டு அவர்கள் வன்முறையில்
ஈடுபட்டவர்கள் என்று சொல்வதற்கு வாய்ப்பு உள்ளது. குறிப்
பாக ஸ்ரீரங்கத்தில் கூட அப்படி ஒரு வழக்கு இருந்து வருவதாகத்
தெரிகிறது. ஆனாலும் எந்தவிதமான.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, ஏதாவது வைத்துத்தான் வழக்குப் போடு
வார்கள். ஒரு சம்பவம் நடைபெற்றது என்றால் சம்பவம்
நடந்தது எப்படி, யாரால, அதற்கும் இவர்களுக்கும் சம்பந்தம்
இருக்கிறதா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்த பிறகுதான்
அவர்களுக்கு இதில் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று
தீர்மானிக்க முடியும். ஆனால் வன்முறையில் ஈடுபட்டவர்
களையும் மன்னித்து விடுதலை செய்யும் போது அது அவர்களை
ஊக்குவிக்கும் செயல் என்று அவர்கள் கருதுவதற்கு வாய்ப்பு
என்பதை நாம் அண்மையில் உணர்ந்திருக்கிறோம். ஏனென்றால்
சில வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஊர்வலம்
நடத்தி சுற்றி வந்தபோது, அப்படியே வாபஸ் வாங்கி அவர்களை
வெளியே விட்டு விட்டு, மீண்டும் அவர்கள் அதே பணியைச்
செய்யலாம் என்ற முறையில் பேசுகிறார்கள் என்று கேட்கும்
போது உண்மையிலேயே மனம் வேதனைப்படுகிறது. சூழ்நிலை
ஏற்படும், அந்தக் காரணமாக அவர்கள் கேட்கலாம். ஆனால்
திரும்ப திரும்ப வெளியே வந்தும் அப்படித்தான் செய்வோம்
என்று நல்ல பேச்சில்லாமல் பேசுவதைப் பார்க்கும்போது
அரசியல் தலைவர்கள் சொன்னாலும் கேட்பதில்லை, பெரிய
வர்கள் சொன்னாலும் விடுவதில்லை, இருப்பவர்கள் சொன்
னாலும் கேட்கவில்லை என்று இருந்துவிட்டால் இந்த நாடு

துர்ப்பாக்கிய வசமான நிலைக்கு ஆளாகிவிடும் நிலை ஏற்பட்டு
விடும். எந்த அரசு எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் பொது
வாக தேவையானவைகளை, உரிமையானவைகளை, நியாய
மானவைகளை உரிமையோடு கேட்பதற்கு முடியும். அதைத்
தவறு என்று சொல்ல முடியாது. ஏன அப்படிக் கேட்கிறார்கள்
என்று சொல்ல முடியாது. உரிமைகளைப் பெறுவதற்கு நியாய
மான நன்முறை வேண்டும். வரையறையில்லாமல் தவறுகள்
செய்தபோதும் மன்னித்து அவர்களுக்கு விடுதலைக் கொடுக்க
லாம். ஆனால் அப்படி விடுதலை கிடைத்ததும், வெளியே வந்த
வுடன் மீண்டும் அதைப் பயன்படுத்தி, திரும்பவும் அதே மாதிரி
செய்ய வேண்டும் என்று பேசுவதை அண்மையில் பார்த்துக்
கொண்டு வருகிறோம். பெரியவர்கள், படித்தவர்கள் சிலர்
கூட அப்படியெல்லாம் சொலகிறார்கள் என்பதைப் பார்க்கும்
போது உண்மையில் மனம் வேதனையடைகிறது. சில அரசியல்
வாதிகள் கூட அப்படிப் பேசுவதைக் கேட்கும்போது மனம் வேத
னையடைகிறது. அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை.
ஆனால் இவைகளையெல்லாம் நாம் மன்னிக்க வேண்டும் என்பது
பொருத்தமாக இருக்கலாம்; உள்ளபடியே இனிமேல் தவறு செய்ய
வில்லை என்று யாராவது முன் வருவார்களேயானால், உத்தர
வாதம் கொடுப்பார்களேயானால் மன்னித்து விடலாம்: ஆனால்
அப்படி யாராலும் உத்தரவாதம் கொடுக்க முடியவில்லை.

(இரவு 7—00)

இங்கே உத்தரவாதம் கொடுத்தவர்களே கூட சிலர் பின்னால்
அவமானப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்பதை அறிவேன்.
நாங்கள் உத்தரவாதம் கொடுத்தவர்களையும் கேள்வி கேட்க
வில்லை என்பதை இந்த மன்றத்தில இருப்பவர்கள் மறந்து
விடக் கூடாது.

இங்கே திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் 13 கொலை
களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஒன்று திருப்பூர்
வடக்கு காவல் நிலைய குற்ற எண் 1149/78— 302 ஐ.பி.சி.,
தேதி 9—12—1978, நேரம் பகல் 11—30 மணி தகவல் கொடுத்த
நேரம் பகல் 12—30 மணி. 25 வயதுள்ள அண்ணபூரணி என்ற
பெண்மணியை அவளது கணவன் கிட்டு என்கிற கிருஷ்ணசாமி
என்பவர், அவளது நடத்தையில் சந்தேகப்பட்டுக் கொலை
செய்தார். குற்றவாளி உடனடியாகக் கைது செய்யப்பட்டார்.
வழக்கு 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ம் நாளில் தாக்கல
செய்யப்பட்டு, இப்போது நீதிமன்றத்தில் உள்ளது.

இரண்டு திருப்பூர் வடக்குக் காவல்நிலைய குற்ற எண் 245/79-.
302 ஐ.பி.சி., தேதி 5—3—1979, நேரம் காலை 5—15 மணி-
தகவல்கொடுத்த நேரம் காலை 7—30 மணி. திருப்பூர் தனலட்சுமி
மில்லில் எழுத்தராகப் பணி புரியும் ராமலிங்கம் என்பவர் தமது
இரண்டாவது மனைவி மங்கையர்க்கரசியையும், 11 மாதக்
குழந்தையையும் அவரது இல்லத்தில் குடும்பத் தகராறு காரண
மாகக் கத்தியால் குத்தினார். குற்றவாளி காவல் நிலையத்தில்

சரணடைந்ததும் கைது செய்யப்பட்டார். வழக்கை தாக்கல் செய்ய ரசாயன பரிசோதனை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. குற்றவாளி தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மூன்று, திருப்பூர் தெற்கு காவல் நிலைய குற்ற எண் 225/79-302 மற்றும் 308, ஐ.பி.சி. 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 26-ம் நாளன்று காலை சுமார் 6—30 மணியளவில் 54 வயதுள்ள நாச்சி முத்து முதலியார் மனைவி அன்னம்மாள், தனது வீட்டில் சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரது கணவர் மளிகை சாமான் வாங்க வெளியே சென்றிருந்தார். அவரது கணவர் மணி, வீட்டில் தனியாக இருந்தார். அப்பெண் தெரியாத ஒருவன் சமையல் அறையில் நுழைந்து, அந்தச் சமயம் இளைந் கத்தியால் குத்தி, ரூ. 6,000 மதிப்புள்ள அவரைக் தங்கத் தாலியைப் பறித்துக் கொண்டு சென்று விட்டான். அவரது 11 சவரன் அரசியல் குறுக்கீடு ஏதும் இல்லை. இதில் பிடிக்க ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டது. குற்றவாளியைக் கண்டு வாளிகள் விசாரிக்கப்படவில்லை. வழக்கமான குற்ற அவரது குடும்பத்தாருக்கும், இறந்து போனவருக்கும், விசாரணையில் தெரிய வந்தது. குடும்பத் தகராறு இருந்ததாக குமாரன் முத்துக் குமாரசாமி, கணவர் நாச்சி முத்து முதலியார், ஆகையால் அப்பெண்மணியின் உறவினர் வாசுதேவன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். சம்பந்தப்பட்ட குறிப்பு ஏதும் கிடைக்காததால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். குற்றம் வழக்கு தற்போது புலன் விசாரணையில் உள்ளது.

இப்படி குற்றச்சாட்டுக்கள் சொல்லும்போது, மேலெழுந்த வாரியாகக் கொலைகள் நடந்து இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். ஆனால் நிலைமைகள் என்ன என்று ஊன்றிப் பார்த்தால்தான் சில விவரங்கள் நமக்குக் கிடைக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சேலம் ஆறுமுகம் அவர்கள் வேலூர் செஷன்ஸ் வழக்கு மன்றம். டெபுடி சூப்பிரண்டுகளான திரு வாளர்கள் ஏ. ஆர். வீரபாண்டியன் மற்றும் ஜனார்தனன் ஆகியோரைக் குற்றவாளிகள் அல்லவென்று தீர்ப்புக் கூறியிருப்பதால் தற்காலிக வேலை நீக்கத்திலுள்ள அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டால் காவல் துறையின் நல்ல பேர் காப்பாற்றப்படும் என்பதாகக் கூறினார்.

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சீராளன் என்பவரின் மரணத்திற்குக் காரணம் என்று தனி நபர் விசாரணைக் குழுவால் கருதப்பட்ட காவல் துறையினரின் பேரில் கிரிமினல் வழக்கு ஒன்று தொடரப்பட்டது. இதற்கிடையில் பொது நலனைக் கருதி ஏ. ஆர். வீரபாண்டியன் மற்றும் ஜனார்தனன் ஆகிய இரு டெபுடி சூப்பிரண்டுகளும் மற்றும் சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர், காவலர்கள் ஆகியோர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டனர். வேலூர் செசன்ஸ் நீதி மன்றம் காவல் துறையினர் குற்றவாளிகள் அல்ல என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. காவல் துறையினர் குற்றவாளிகள் அல்ல என்று நீதி மன்றம் தீர்ப்புக்

கூறியதால் இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்களுடைய தற்காலிக வேலை நீக்க ஆணையை காவல் துறைத் தலைவர் ரத்து செய்து விட்டார்.

மேற்படி வழக்கில் ஏ. ஆர். வீரபாண்டியன் குற்றவாளி அல்ல என்று தீர்ப்புக் கூறியிருந்த போதிலும், அவர்மீது வேறு சில குற்றச்சாட்டுக்கள் பேரில் துறை நடவடிக்கை இருப்பதன் காரணமாக அவரின் தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. திரு. ஜனார்த்தனனுடைய தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்வது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. இதுதான் நிலைமையே தவிர வேண்டுமென்றே சில அதிகாரிகளைப் பழி வாங்குவதற்கு அப்படிச் செய்து இருக்கிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்க வேண்டியது இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் காவல் துறையில் 8 மணி நேர வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டோம் அது பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை என்று சொல்கிறார்கள். பத்தாயிரம் பேர்களைச் சேர்க்க வேண்டுமா என்று ஒரு பக்கம் கேட்கிறவர்கள், இருக்கின்ற காவல்துறையினர் அதிக மணிநேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேவையான அளவிற்கு காவல்துறையில் ஆட்களைச்சேர்க்க முடிந்த அளவிற்கு, வருமானத்தைப் பெற்று அவர்களுக்குச் சம்பளமும் கொடுப்பதற்குத் தேவை ஏற்படும் காலத்தில நிச்சயமாக இதைப்பற்றி எல்லாம் இந்த அரசு சிந்திக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் 8 மணி நேர வேலை என்பதல்ல என்னுடைய கேள்வி. போன பட்ஜெட்டின்போது போலீஸ் கிராண்ட் டிஸ்கஷனிலே கனம் முதலமைச்சரவர்கள் கூறினார்கள், அது ரிக்கார்டிலே இருக்கிறது. நீங்களே அஷ்யூர் பண்ணினீர்கள். அதாவது சப்-இன்ஸ்பெக்டர்கள் வரைக்கும் 8 மணி நேர வேலை கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள். அந்த அஷ்யூரன்ஸை ஏன் இன்னும் இம்ப்ளிமென்ட் பண்ணவில்லை என்றுதான் கேட்கிறேன். ஒரு டெசிஷனாக அனவுன்ஸ் பண்ணினீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாற்றிச் சொல்ல விரும்பவில்லை. இப்போது 10 ஆயிரம் பேர்கள் இன்னும் சேர்க்கப்படவில்லை. இப்போது தான் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்க்கப்படுவார்களேயானால் இதைப்பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு செய்தியையும் மாண்புமிகு உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் மீதான வழக்குகள், கொலை
முயற்சி வழக்குகள் தவிர மற்ற எல்லா வழக்குகளும் ஜி. ஓ. 614,
தேதி 29—3—1979-ல் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.

அடுத்து, காவல்துறையில் முஸ்லீம்களுக்குச் சரியாக வேலை
கொடுப்பது இல்லை. ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என்ற குற்றச்
சாட்டுக்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள்
இங்கே சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்கள்
கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். காவல்துறையில் ஒரு
சமூகத்தினர் 2,320 பேர் உள்ளனர். முஸ்லீம் பணியாளர்களுக்கு முஸ்லீம்
5.3 சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் குறிப்பிட
விரும்புகிறேன்.

அடுத்து இங்கே தீயணைப்புப் பற்றி பேசியவர்களில் பலர்
புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று
குறிப்பிட்டார்கள். அதிலே ஒருவர் குறிப்பிட்டு போளூரிலே
தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று மிக மிக அவசரமாகப்
பேசினார்கள். முதலிலே அவர்களுக்குச் சொல்கிறேன். போளூ
ரிலே தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. அங்கு
மட்டுமல்ல, அறந்தாங்கி, வேப்பூர், கரூர், முசிறி, கூடலூர்
(நீலகிரி) ஒட்டன்சத்திரம், மேலூர், உசிலம்பட்டி, நாங்குனேரி,
வத்தலகுண்டு, சாத்தூர், இராமேஸ்வரம், அம்பாசமுத்திரம்,
திருச்செந்தூர், கன்னியாகுமரி, காங்கயம், ஒரத்தநாடு,
கும்மிடிப்பூண்டி, போளூர் (ஏற்கெனவே சொல்லிவிட்டேன்)
சங்ககிரி இப்படி 20 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் இந்த
ஆண்டு நிறுவப்பட இருக்கின்றன என்பதை இங்கே நான கூறிக்
கொள்ள விரும்புகிறேன். அடுத்து காவல்துறையை மூனறு பிரிவு
களாகப் பிரிக்கும் செயற் குறிப்புபற்றி.......

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நான் ஏற்
கனவே பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன்.
மலைப்பகுதியைச் சுற்றி கிராமங்கள் இருக்கின்றன. ஜவ்வாது
அங்கே ஆலங்காயத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டு
மென்று ஆண்டாண்டு காலமாகச் சொல்லியும் முதலமைச்சரின்
கனிவுப்பார்வை விழவில்லையே, அது ஏன் என்று தெரியவில்லை,
ஆகவே இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் உண்மை
யிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்காக
இரங்குகிறேன். அனுதாபத்தோடு பார்க்கிறேன். ஆனால்
ஆண்டாண்டு காலம் கேட்டோம், நடக்கவில்லை என்று எங்
களுக்கு முன்னால் பல ஆண்டுகாலம் ஆண்டுகொண்டிருந்த,
அவருடைய நண்பர்கள் இதைச் செய்யவில்லை என்று சுட்டிக்
காட்டியதன் மூலம் எனக்குக் கொஞ்சம் எச்சரிக்கை விடுகிறார்கள்
என்று கருதுகிறேன். நாங்கள் வந்து இரண்டாண்டுகள் தான்
ஆகின்றன. பல ஆண்டுகள் ஆகவில்லை. இருந்தாலும் "பரவா
யில்லை, நான் அதைப்பற்றிக் கவனிக்கிறேன் என்று சொல்ல

வேண்டி இருக்கிறது. பணத்தை வைத்து அதாவது எவ்வளவு
நிதி இருக்கிறது என்பதைக் கணக்குப் போட்டு செய்ய
வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆயிரக்கணக்
கான ரூபாய் செலவாகும். அந்த அளவில் மொத்தமாகப் பார்த்
தால் இலட்சக்கணக்கில் செலவு ஏற்படுகிறது என்பதைப் பார்க்க
வேண்டும். ஆகவே அந்த வகையில் எவ்வளவு விரைவில் நாங்கள்
அதைப்பற்றி சிந்தித்து சேர்க்க முடிந்தால் சேர்த்து இல்லா
விட்டால திருத்தப்பட்டியலில் சேர்க்க முயற்சி எடுப்போம் என்ப
தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து காவல் துறையை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளாகப்
பிரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது........

திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார் : துணைத் தலைவர்
அவர்களே, குழித்துறையில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்
படவேண்டும் என்று நீண்ட நாளாகச் சொல்லி வருகிறேன். 3
தடவைகள் சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறேன்.

(இரவு 7-10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, மாமனற உறுப்பினர் அவர்களுடைய
கோரிக்கை நியாயமானது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.
இத்தனை ஆண்டுகளாக 1, 2, 3 ஆண்டுகளாக வைத்துக்கொண்டு
இருப்பவர்கள் யார் யார் என்பது மன்ற உறுப்பினர்களுக்குத்
தெரியும். எங்களால் முடிந்ததை செய்து கொண்டிருக்கிறோம்.
செலவு அதிகமாகிறது எனற நிலைமையில் இருக்கிறோம் என்று
சொல்லும்போது இங்கே இன்னொரு திட்டத்தை நாங்கள்
அறிவித்து இருக்கிறோம். அதன் மூலமாக எங்கெங்கே காவல்
துறை இருக்கின்றனவோ அங்கெல்லாம் தொலை பேசி இருக்கும்
என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ள வேண்டும். இந்த
ஆண்டில் இப்படிப்பட்ட முடிவை எடுத்தது மட்டுமல்லாமல் பிரை
மரி ஹெல்த் சென்ட்டர்ஸ் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
பொதுமக்களும் கட்டணம் செலுத்தி அதைப் பயன்படுத்திக்
கொள்ளலாம், அதற்கு அனுமதி தரப்படுகிறது என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

இப்படிச் செலவு அதிகம் ஆகிற போது நீங்கள் ஒரு வகையில்
எவ்வளவு பணம் அதிகமாக செலவழிக்கப்படுகிறது என்பதை
தெரிந்து கொண்டிருக்கிற உறுப்பினர்கள் எனக்குக் கொஞ்சம்
அவகாசம் கொடுத்தால் முழுமை ஆக்கப்படும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். அதை மறுத்து விட்டேன் என்றோ, இல்லை
என்று சொல்லிவிட்டேன் என்றோ கருதக் கூடாது. உத்திரவாத
மாகச் சொல்லவில்லையே என்று இருந்தாலும் முயல்வேன்
என்ற கருத்து அதிலே இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள
வேண்டும்.

[1979 ஏப்ரல் 18

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, பொன்னமராவதி 5-வது இடத்தில் இருக்கிறது
என்றும், விரைவில் அது செயல்படுத்தப்படும் என்று அன்று
சொன்னார்கள். இப்போது 20 இடங்களை முதல் அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். நான் சொன்ன 5-வது இடத்தைப்
பெற்ற பொன்னமராவதி அதிலே இடம் பெறவில்லை. அது
எந்த வரிசையில் இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள்
அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்
களே, நாங்கள் வரைப் படத்தை வைத்துக் கொண்டு எத்தனை
மைல்களுக்கு அருகாமையில் இருந்தால் ஒரு நிலையத்தை வைக்க
வேண்டும்; 15, 20, 30 மைல்களுக்கு உள்ள வசதிகளைப் பார்த்து
இந்த மாதிரி இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். அந்தப் பகுதி
குறிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதி
பொன்னமராவதிக்கு வரும்போது, அதற்கு அருகாமையில் ஒரு
நிலையம் ஏற்பட்டிருக்கலாம். அதை பற்றி பிரச்னை எழுப்பி
னால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் இதுபோன்ற பிரச்னைகளை
எழுப்ப முன்வருவார்கள். தயவுசெய்து நண்பர்கள் அவசரப்
படாமல், இந்த 20 இடங்களைச் சொன்னேனே, அதைக்
கொண்டு வந்ததற்கு மகிழ்ச்சி கொண்டு அடுத்த வாய்ப்பு
உங்களுக்கு முதலில் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.
காவல் துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைப்பற்றி
கூத்தகுடி சண்முகம் அவர்கள்.........

திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்: தலைவர் அவர்களே,
40 மைல் பக்கத்தில் எங்கள் பகுதியில் அப்படிப்பட்ட ஒரு நிலை
யம இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி அடிக்கடி
குறுக்கே பேச வேண்டாம். கடைசியில் கேட்கலாம். குறுக்கே
கேட்டால் பதில் சொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கூத்தகுடி
சண்முகம் அவர்கள் இந்தக் காவல் துறையைப் பற்றிக் கேட்டார்
கள். எப்படி இயங்கும், அதற்கு என்ன பெயர், அது எப்படி
இருக்கும் என்றெல்லாம் கேட்டார்கள். இன்று காவல்துறையை
கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்க திட்டமிடப்
பட்டுள்ளது:—

1. காவல் துறைத் தலைவர் நிறைவேற்றுப் பணி (I.G.
Enforcement).

2. காவல துறைத் தலைவர் அவசரப் பணி (I.G.
Emergency).

3. காவல் துறைத் தலைவர் காவல் பணி (I.G. Services).

1979 ஏப்ரல் 18] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இன்றைய காவல்துறைத் தலைவர் பணி, காவல்துறை
டைரக்டர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டு, அந்த டைரக்டர்
ஜெனரல் காவல் துறையின் தலைவராக இருப்பார்.

காவல்துறைத் தலைவர் நிறைவேற்றுப் பணி (ஐ.ஜி. ஆப்
என்போர்ஸ்மெண்ட்) கடமைகள் —

1. மதுவிலக்கை அமல்படுத்துதல்.

2. விபச்சார ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல்.

3. சமூக உரிமைப் பாதுகாப்புச் சட்டங்களை அமல்
படுத்துதல் (சிவில் ரைட்ஸ் ஆக்ட்).

4. சூதாட்டங்கள் ஒழிப்பைக் கண்காணிப்பது (கேமிங்
ஆக்ட்.)

தலைமையிடத்தில் ஒரு (டி.ஐ.ஜி.) துணைக் காவல் தலை
வரும், ஒரு கண்காணிப்பாளரும் (எஸ்.பி.) மூன்று துணை சூப்பி
ரண்டெண்டுகளும் (டி.எஸ்.பி.) அவருக்கு உதவி புரிவர்.

காவல் சரகங்களில் எட்டு கண்காணிப்பாளரும் (எஸ்.பி.)
இருபது கூடுதல் சூப்பிரண்டெண்டுகளும் (ஏ.டி.எஸ்.பி.) பணி
யாற்றுவர்.

மதுவிலக்குக்கென்று தனியாக 145 காவல் நிலையங்கள்
இந்தப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும், மதுவிலக்குக்
குற்றங்களும், சமூகக் குற்றங்களும் அதிகமாக இருக்கின்ற இடங்
களாகத் தேர்ந்தெடுத்து இந்த 145காவல்நிலையங்கள் அமைக்கப்
படும். மாவட்ட அளவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட
அளவில் குற்றங்களில் எண்ணிக்கையைப் பொறுத்து, துணைக்
கண்காணிப்பாளர்கள் (டெபுடி எஸ்.பி.) நியமிக்கப்படுவார்கள்
இவ்வாறு மொத்தம் 37 துணைக் கண்காணிப்பாளர்கள் (டெபுடி
எஸ்.பி.) மாநிலத்தில் செயல்படுவார்கள்.

இதற்கு மொத்தம் 8,368 சார்பு நிலைக் காவலர்கள்
தேவை, அதில் இப்போது மதுவிலக்குப் பணிபுரியும் காவலர்
நீங்கலாக புதிதாக 7,671 காவலர்கள் நியமனம் செய்ய வேண்டும்.
கூடுதலாக 7 கார்கள், 42 ஜீப்கள், 364 பிக்கப் வேன்கள் (பிக்-
அப் வேன்ஸ்) 7 மோட்டார் சைக்கில்கள் வேண்டியிருக்கும்.

39 பேரைக் கொண்ட குழுக்களாக, 30 குழுக்கள் மாநிலத்தில்
இயங்கும் படையாக (ப்ரொகிபிஷன் மொபைல் ஸ்குவாட்)
பணியாற்றும்.

சென்னையில் உள்ள தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல்
ஆய்வகமும், வேலூர், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை
ஆகிய சரகங்களிலுள்ள ஆய்வகங்களும் இந்தப் பிரிவின் கீழ்
செயல்படும்.

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 18

இப்பணி மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்படும். சென்னை செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு 1979-80-லும் சேலம், தர்மபுரி கோவை, மாவட்டங்களில் தஞ்சை மாவட்டங்களில் 1980-81-லும் நீலகிரி, திருச்சி 1981-82-லுமாக மூன்று மற்றைய பகுதிகளில் கட்டங்களில் நிறைவேற்றப்படும்..

இதற்குப் பின்வருமாறு செலவாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஆண்டு.	தொடர் செலவு.	தொடராச் செலவு.
	ரூ.	ரூ.
1979-80	58,34 000,	1,13,28,000
1980-81	1,48,31,000	2,27,42,000
1981-82	1,13,82,000	87,46,000
	3,20,47,000	4,28,16,000

மொத்த செலவு—ரூ. 7,48,63,000.

அடுத்து, காவல்துறைத் தலைவர் அவசரப்பணி (ஐ.ஜி. எமர் ஜென்ஸி)-இங்கு சிலர் கூறினார்கள். ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நீல நிறத்தில் சட்டைகள் கொடுத்தால், அவர்கள் வரும்போதே அவர்கள் எதற்காக வருகிறார்கள் என்பதை அறிந்து பொதுமக்கள் அச்சத்தோடு, தவறான செயலகளில் ஈடுபடுவதை நிறுத்திக்கொள்வார்கள் என்று. அதே போல் இது செயல்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புக் காவல்படை, ஆயுதம் தாங்கிய காவல் படை இவருடைய நிர்வாகத்தில் வரும். இவருடைய பணிகள் : 1. காவலர் தேர்வு, (2) காவலர்பயிற்சி, (3) ஒழுங்குக் கட்டுப் பாடு, (4) நிர்வாகம், (5) பணித்திறன் ஆகியவற்றை இவர் கவனித்துக்கொள்வார். இது தவிர, மாவட்ட அளவிலும் சென்னையிலும் உள்ள ஆயுதம் தாங்கிய காவலர்க்கும் பயிற்சி பணித்திறன் பொறுப்பை ஏற்பார். காவலருக்கான நலப்பணிகள் வீட்டுவசதி ஆகியவற்றையும் இவர் ஏற்பார். இயற்கை சீற்றங்களால் ஏற்படும் நிவாரணப் பணிகள் இவரைச் சாரும் சிவில் பாதுகாப்பு இவருடைய நிர்வாகத்தின் கீழ் வரும்.

சட்டம் ஒழுங்கு பணிகளைத் திறம்பட செய்ய இப்பிரிவு உறுதுணையாக இருக்கும். சாதாரண நிலையில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பை அடுத்த பிரிவான காவற்பணி (சர்வீஸ்ஸஸ்) பிரிவு கவனித்துக் கொள்ளும்.

1979 ஏப்ரல் 18] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நிலைமை கட்டுமீறிப் போகும் காலங்களில் மட்டும் இந்த ''அவசரப் பணிப் பிரிவு'' காவல் பணிப் பிரிவுக்கு உறுதுணையாக வந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும்.

கூடுதலாக ஆண்டொன்றுக்கு எட்டு அணிகள் வீதம், இரண்டு ஆண்டுகளில் பதினாறு அணிகள் (பிளாட்டூன்ஸ்) ஏற்படுத்தப் படும். ஏற்கனவே 158½ அணிகள் (பிளாட்டூன்ஸ்) உள்ளன.

தேவையான இடங்களுக்கு மாவட்ட வாரியாக இவ்வணிகள் பிரித்தளிக்கப்படும். இவ்வணிகள் சென்னை போலீஸ் கமிஷனர். சரக துணைக் காவற் துறைத் தலைவர்களின் (ரேஞ்சு டி.ஐ.ஜிஸ்) கீழ்பணியாற்றும்.

கூடுதலான இப்பதினாறு அணிகள் இரண்டாண்டுகளில் நிறுவ ஆகும் செலவு—

	ரூ.
முதலாண்டு—	28,98,000
தொடர்ச் செலவு	20,41,000
தொடராச் செலவு	
இரண்டாம் ஆண்டு—	28,55,000
தொடர் செலவு	19,79,000
தொடராச் செலவு	

ஆக, முதாலண்டுக்கு மொத்தம் ரூ. 57,53,000 இரண்டாம் ஆண்டுக்கு ரூ. 40,20,000. ஆகமொத்தம் செலவு ரூ. 97,73,000 வேண்டியிருக்கும்.

[இரவு 7-20]

1. துணைக் காவல் தலைவர் (D.I.G., Armed Reserve) ஆயுதப் படை.

2. துணைக் காவல் தலைவர் (பயிற்சி) (D.I.G., Training).

3. துணைக் காவல் தலைவர் சிவில் பாதுகாப்பு (D.I.G. Civil & Defence) ஆகியோர் இப்பிரிவின் கீழ் வருவார்கள்.

இது தவிர, நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு ஒன்று வீதம் 4 படைக் கலன்கள் (Battalions) ஏற்படுத்தப்படும். இதற்கு 3,560 காவலர்கள் தேவைப்படுவார்கள்.

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன்] [1979 ஏப்ரல் 18
ஆண்டொன்றுக்கு தொடர் செலவு ரூ. 71,60,600-ம்,
தொடராச் செலவு ரூ. 52,40,000-ம் ஆக நான்காண்டுகளில்
ரூ. 5.93 கோடி செலவாகும். இப்படைக் கலன்கள் துணைக்
காவல் தலைவர் (D.I.G. Armed Reserve) கீழ்ப் பணிபுரியும்.
இந்தப் பிரிவுக்கு 112 லாரிகள், 28 பிக்கப் வேன்கள் (Pick up
Vans), 23 ஜீப்புகள், 8 மோட்டார் சைக்கிள்கள்.

காவல் துறைக் தலைவர் காவல் பணி (I.G. Service)
இவருடைய பணிகள் :—

1. சென்னை நகரிலும், மற்ற மாவட்டங்களிலும் ஒழுங்
கைப் பராமரித்தல்.

2. குற்றங்களைத் தடுத்தல்.

3. புலனாய்வு செய்தல்.

4. போக்குவரத்தை நெறிப்படுத்துதல்.

5. மக்களுக்கான சேவைகள்.

6. உணவுப் பொருள் வழங்கு துறைப் பணிகள்.

7. ரயில்வே காவல் பணி.

சரகங்கள் துணைக் காவல் தலைவர்கள்
மாவட்டக் கண்காணிப்பாளர்கள் (Range D.I.G.s.)
காவல் நிலையங்கள் ஆகியவை இப்பிரிவின் கீழ் வரும். (District S.P.s.)
திருப்பது போல அன்றாட ஒழுங்குப் பராமரிப்புக் இப்போ
தடுப்பு புலனாய்வு ஆகிய பணிகள் இப்பிரிவின் கீழ் செயல்படும். குற்றத்

மக்களுக்கு உதவி புரியும் பணிகளை இப்பிரிவு ஆற்றும்.
மக்கள் மீது வலிவைப் பயன்படுத்தி செயலாற்ற வேண்டிய சில
சட்டங்களை அமுல் நடத்த தனியான பிரிவு என்ற முறையில்
காவல் துறை நிறைவேற்றுப் பணி (Enforcement)
துறை அவசரப் பணி (Emergency) காவல்
வாக்கப்படுகின்றன. என்ற பிரிவுகள் உரு

இதையெல்லாம் நான் கூறுகின்றபோது நாட்டிலே ஆங்
காங்கே மதுவிலக்கு சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்ற
குற்றச்சாட்டும் சூதாட்டம் போன்றவைகள், சட்டத்தை மீறி
நடத்துகின்றார்கள் என்றும், வன்முறையிலே சிலர் ஈடுபடு
கின்றார்கள் என்றும், அந்தச் சிலர் செய்வது பலராக மாறுகின்ற
நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.
இந்த அரசு நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து நன்மை பெறக்
கூடிய பணிகளைச் செய்ய உத்தேசித்திருக்கிறது. அந்த
வகையிலே இன்னொன்றையும் நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

1979 ஏப்ரல் 18] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]
ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் ஆங்காங்கே நகரப்
பகுதிகளாக இருந்தாலும், ஊராக இருந்தாலும் ஒன்றிரண்டு
தெருக்களை எடுத்துக் கொண்டு, ஆங்காங்கே 2, 3 ஓய்வுபெற்ற
இராணுவ வீரர்களை காவலர்களாக நியமிப்பது என்று
உத்தேசித்திருக்கிறோம். ஊர்க்காவல் படை இருப்பது
போல், அவர்கள் பணிபுரிவார்கள். ஒவ்வொரு வீட்டாரும்,
இந்தத் திட்டம் பயன்படுகின்ற வகையில் ஏதாவது ஒரு
குறைந்த தொகை, அதாவது ஒரு ரூபாய் மாதத்திற்கு அவர்கள்
கொடுக்க வேண்டிவரும். எப்படியும் இவர்களுக்கு ரூ. 250
மாதச் சம்பளம் தரப்படும். மிகுதியை அரசு கொடுக்கும்.
வீடுகளிலே இருக்கின்றவர்கள் தங்கள் வீட்டிலுள்ள ஆண்களை,
இளைஞர்களை ஆங்காங்கே காவலுக்கு வைப்பது என்பது
முன்பு இருந்தது. ஆனால் இப்போது அது இல்லை. எனவே,
வேலை இல்லாது இருக்கின்ற, ராணுவப் பயிற்சி பெற்றிருக்கின்ற
உடல் வலிவோடு இருக்கின்ற ராணுவ வீரர்களை, தகுதியுள்ளவர்
களாகப் பார்த்து நியமிப்பது என்று இந்த அரசு கருதுகின்றது
என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு, காவல் துறையைப் பற்றி எந்த அளவிற்கு இந்த
அரசு அக்கறை காட்டுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்
கள் இங்கே கூறினார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்
களுக்கு ஓரளவு வசதி செய்ய வேண்டும் என்று இந்த அரசு
கருதுகிறதே தவிர, அலட்சியப்படுத்தவில்லை. இந்த அரசு
ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக சொல்லப்பட்ட கருத்தின்
அடிப்படையிலே, இந்த விவாதத்திற்குத் தொடக்கமாக இப்
போது சில சலுகைகளை வெளியிட விரும்புகிறேன்.

பந்தோபஸ்து பணிக்காக அனுப்பப்படும் காவல் துறை
இன்ஸ்பெக்டர், டெபுடி இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்,
உதவி சப் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு தற்போது வழங்கப்
பட்டுவரும் உணவுப்படி நாளொன்றுக்கு ரூ 4.50 லிருந்து
ரூ 6 ஆக உயர்த்தப்படுகிறது).

அது போல காவலர், தலைமைக் காவலர் ஆகியோருக்கும்
தற்போது நாளொன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ. 3-
லிருந்து ரூ. 4½ ஆக உயர்த்தப்படுகிறது.

ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர், லான்ஸ்நாய்க், நாய்க்,
அவில்தார் ஆகியோருக்கு மாதம் ரூ 35 வழங்கப்பட்டு
வருவதும் ரூ 60 ஆக உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சி
யோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுப்பு நாட்களில் பணி செய்தமைக்காக அளிக்கப்படும்
படி—காவலர், தலைமைக் காவலர் ஆகியோருக்கு விடுப்பு
நாட்களில் பணிபுரிந்தமைக்காக நாளொன்றுக்கு ரூ 7 வீதம்
படியாகக் கொடுக்கப்படும். இப்போது கொடுப்பது 2 ரூபாய்.
இந்த ஆண்டு முதல் ரூ 7 காவலர்களுக்கு—இரண்டாம் நிலைக்
காவலர், முதல்நிலைக் காவலர், தலைமைக் காவலர் ஆகி
யோருக்குக் கொடுக்கப்படும்.

[மாண்புமிகுதிரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 18

காவலர் சிறப்பு நிவாரணத் திட்டம்—காவல் துறையில்
பணிபுரிபவர்கள் ஆபத்துக்களை எதிர் நோக்கிப் பணிபுரியும்
நேரத்தில் வீரமரணம் அடைய நேரிட்டால் அவரது குடும்பத்
திற்கு ரூபாய் 10 ஆயிரம் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)
உடல் உறுப்புகளுக்கு நிரந்தர சேதமோ அல்லது காயமோ ஏற்
பட்டால் ரூ 1000 லிருந்து ரூ. 3,000 வரை சேதம் அலலது
காயத்தின் தன்மை கருதி, அத்தகைய நேரங்களில் நஷ்ட
ஈடாகத் தரப்படும். வேலையே செய்ய இயலாத நிலைக்கு
ஆளாகின்றவர்கட்கு ரூ. 5,000 வழங்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : பேட்டா சீலிங்—அதிகபட்சம் 33
ரூபாய்தான் என்று இருந்தது எடுத்தாகிவிட்டதா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : 35 ரூபாய்
என்று இருந்தது தற்போது 60 ரூபாயாக மாற்றப்பட்டிருக்
கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கெனவே அரசு ஊழியராகப்
பணிபுரிகின்றவர்கள் இறந்துவிட்டால பத்தாயிரம் ரூபாய்
கொடுக்கப்படுகிறது. அது அல்லாமல் இப்படி வீர மரணம்
அடைகின்றவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படு
கிறதா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, பணியாற்றும்போது வீரமரணம் அடைந்து
விட்டால் உடனடியாகப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : சாதாரணமாக பணியில இருப்பவர்
கள் இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய் உண்டு.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசு ஊழியர்
கள் பணியாற்றும்போது உயிர்விடுவது என்பது ஒன்று. பணி
யாற்றும்போது ஏற்படுகின்ற ஆபத்துகளின் விளைவாக உயிர்
விடுவது என்பது மற்றொன்று. உதாரணமாக, மதுவிலக்கு
சம்பந்தமாக கைதியைப் பிடிக்கப்போய் தண்ணீரில் இறங்கி
நீந்தத் தெரியாமல் இறந்து போனால். அப்படிப் பட்டவர்
களுக்கு உடனடியாகப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கிறது.

திரு. கே. கந்தசாமி : ஏற்கெனவே குடும்ப சேம நல நிதி
என்று அரசு ஊழியர்கள இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய்
கொடுக்கப்படுகின்றது. இப்போது வீர மரணம் அடைந்தவர்
களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று முதல்வர்
அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது வேறு, இது வேறா?
தனித் தனியாக இரண்டும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அது தனி;
இது தனி. அது அல்லாமல் இது கொடுக்கப்படும்.

1979 ஏப்ரல் 18]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : வீர மரணம் அடைந்தால் பத்தா
யிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள்
கூறுகிறார்கள். சாதாரணமாக அரசு ஊழியர் இயற்கையாக
இறந்துவிட்டால பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது.
ஆகவே, வீர மரணம் அடைந்தவர்களுக்கு அந்தப் பத்தாயிரம்
ரூபாயோடு இந்தப் பத்தாயிரத்தையும் சேர்த்துக் கொடுப்பார்
களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, அந்தப் பத்தாயிரத்தோடு. இந்தப்
பத்தாயிரத்தையும் சேர்த்து இருபதாயிரம் ரூபாய் கொடுக்கப்
படும்.

மாண்புமிகு உமாநாத் அவர்கள் சிவகிரி வட்டத்தில் தேனி
பட்டனம் கிராமத்தில் 24-3-1979 அன்று சி.பி.எம் செய
லாளர் செல்லபாண்டியன் காவல் துறையினரால் தாக்கப்பட்டு
சட்டை கிழிக்கப்பட்டது பற்றிக் கூறியிருக்கிறார்கள்

24-3-1979 அன்று சிவகிரி காவல் துறையினர் மதுவிலக்குக்
குற்றங்களைக் கண்டுபிடிக்க தேவிபட்டனம் கிராமத்தில்
சாராய வேட்டை நடத்தினர். அதில் ராஜு, துரைராஜ்
இருவரும் குடித்திருந்ததாகவும் (குற்ற எண் 109, 110/79)
மற்றும் கோவிந்தராஜ், கோட்டையப்பன் ஆகியோர் மீது
சாராயம் வைத்திருந்ததாகக் கைது செய்து இரு வழக்குகள்
(குற்ற எண் 112 மற்றும் 113/79) பதிவு செய்யப்பட்டு அவர்கள்
காவல் நிலையம் அழைத்து வரும் சமயம் செல்லபாண்டி,
சம்மனசு மற்றும் பலர் காவல் துறை வண்டியை மடக்கி
கைதானவர்களை விடுவிக்க முயன்றனர்

[இரவு 7-30]

காவல் துறையினர் எச்சரித்தும் அதைப் பொருட்படுத்தா
மல் செல்லபாண்டி மற்றும் சம்மனசு ஆகியோர் காவல்துறை
யினரை கீழ்த்தரமாகத் திட்டினர். அதனால் அவ்விருவர்களையும்
கைது செய்து இ. பி. கோ. 186 பிரிவின் கீழ் வழக்குப் பதிவு
செய்தனர். டி. எஸ் பி. தென்காசி இதுபற்றி விசாரணை
செய்கிறார். அவர் தற்சமயம் அலுவல் காரணமாக வெளியூர்
சென்றிருப்பதால் அவர் திரும்பியவுடன் விசாரணை தொடர்
ந்து நடத்தி தக்க முடிவு எடுக்கப்படும். ஆகவே இந்த அளவிற்கு
தமிழக அரசு தன்னால் இயன்ற அளவிற்கு நிதிநிலை
பற்றாக்குறை இருந்தால்கூட இதையெல்லாம் செய்ய முன்
வந்திருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.
என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டதாக இருப்பதால்
காவல் துறையினர் லாரியை மறித்ததாகச் சொன்னார்கள். போலீஸ் ரிப்
போர்ட்டை அப்படியே வாசித்து இருக்கிறார்கள். நிர்ப்பந்தம் ஆகிவிட்டது.
கேட்க வேண்டிய என்று கருது
கிறேன். பொதுவாக அந்தப் பகுதியில் நான் நேரடியாகச்
சென்று விசாரணை செய்திருக்கிறேன்.

[1979 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு.
உறுப்பினர் எனக்கு வந்த ரிப்போர்ட்டை அப்படியே படித்தேன்
என்று சொல்கிறார். வேறு எதைப் படிப்பேன் என்று எதிர்
பார்க்கிறார்கள்? நான் அங்கே நேரிலே போனவனும் அல்ல;
நிகழ்ச்சியைப் பார்த்தவனுமல்ல; நீங்கள் கேட்டதற்கு அதிகாரி
களிடமிருந்து என்ன பதில் வருகிறதோ அதை உங்களிடம்
வைக்கிறேன். விசாரணைக்குப் பிறகு அது தவறான முடிவு வேண்டு
மென்றே செய்து இருக்கிறார்கள் என்றால் மேல் நடவடிக்கை
எடுக்கப்படும். இல்லையென்றால் நீதிபதி என்ன தீர்ப்பு
கொடுக்கிறார்களோ அந்த வகையிலே நடக்கும். அதுதானே
தவிர வேறு எந்த வகையிலேயும் இல்லை என்பதை நான் தெரி
வித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளின் மீது கொடுத்
திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக் கொண்டு
இதை நிறைவேற்றித் தருமாறு உங்கள் மூலமாக நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ரைட் ஆப் அசோஷியேஷன் என்று
போலீஸ்காரர்களுக்குள்ளேயே அது பிரச்சினையாக வந்து
இருக்கிறது. அதைப்பற்றி என்ன என்பதையும் ரீஜினல்
இஞ்சினியரிங் காலேஜ் சம்பந்தமாகவும் விஜிலன்ஸ் ஆபீசர்
சம்பந்தமாகவும் கரப்ஷன் சம்பந்தமாகவும் சொன்னேன்.
இரண்டையும் பற்றிச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுக்களை நாங்கள்
கவனிக்கிறோம். அதிலே நாங்கள் பின்வாங்க மாட்டோம்.
அசோஸி யேஷன் வேண்டுமென்று ஓய்வு பெற்ற
போலீஸ்காரர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். எங்களைக் கேட்க வேண்டிய
அவசியமே இல்லை. போலீஸ் அதிகாரிகளோ காவல்
துறையைச் சேர்ந்தவர்களோ எங்களை இதுவரையில்
கேட்கவே இல்லை. எந்த விண்ணப்பமும் அனுப்பவில்லை.
கோரிக்கையும் அனுப்பவில்லை. அந்தத் தேவைகளைப் பூர்த்தி
செய்வதற்கு நாங்கள் இருக்கிறோம். அவர்கள் கேட்காமலேயே
எல்லாம் நடக்கும். ஆகவே அவர்களுக்கு அசோஸியேஷன் தேவை
இருக்காது இந்த ஆட்சியில் என்பதை நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத்
தலைவர் அவர்களே, பணியாளர்களைப் பற்றி கமிஷனுடைய
ரிப்போர்ட் வந்து 5, 6 ஆண்டுகளாகிவிட்டன. கமிஷனுடைய
ரிப்போர்ட் அமலாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சுப்
பணியாளர்களைப்பற்றிய கமிஷன் ரிப்போர்ட் அமலாக்கப்பட
வில்லை. அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது.
அவர்களை அதிகப்படியான அளவிற்கு நியமனம் செய்ய வேண்டு
மென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமலாக்குவது பற்றி
அரசு என்ன நிலையை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவரவர்களே, நான் இங்கே ஒரு கருத்தை வெளியிட்டாக
வேண்டும். கமிஷன் சொன்னதிலே தங்களுக்கு எது எது சாதக
மோ அதை ஏற்றுக் கொள்வதும், எது எது தங்களுக்குப் பாதக
மாக இருக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதும்
முறையல்ல; அது நியாயமல்ல. நான் ஒன்றைச் சொல்ல விரும்பு
கிறேன். அரசுப் பணியாளர்களுக்கு உண்மையிலேயே இப்போது
பணி அதிகம் என்று எங்களுக்குச் செய்தி கிடையாது. இன்னும்
சொல்லப் போனால் அரசுப் பணியாளர்கள் வேலையைச் சரிவர
செய்தால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபாடுகளை
குற்றச்சாட்டுகளை சொல்வதற்கான நிலைமை இருக்காது
என்பதை நான் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : நான் காலையிலே பேசுகின்றபோது
தெள்ளத் தெளிவாகச் சொன்னேன், மக்களுடைய நலனுக்காக
அரசுக்குக் களங்கம் ஏற்படாமல் மக்களுக்குப் பாதுகாப்பு
இருக்க வேண்டும் என்பதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள்
தங்களுக்குப் பலவிதமான பொறுப்புகள் இருந்தும் மனுநீதி
நாள் நடத்துவதைப் போல் டி. ஐ. ஜீ. அவர்களும் ஐ. ஜி.
அவர்களும் முடிந்தால் வாரத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு
ரெவின்யூ டிவிஷனிலும் அந்த டிவிஷனைச் சேர்ந்த பொதுமக்க
ளுக்கு அறிவிப்புக் கொடுத்துவிட்டு பொதுமக்களுடைய கோரிக்கை
களைப்பற்றி அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் வர
வழைத்து விசாரணை நடத்தினால் மதுவிலக்குப் போன்ற
குற்றங்களைக் களைவதற்கு வழி பிறக்கும் என்று தெரிவித்தேன்.
இன்னும் கீழ்மட்டத்திலே இருக்கிற போலீஸ் அதிகாரிகள்,
காவலர்கள், தலைமைக் காவலர்கள், எஸ். ஐ. உட்பட மூன்று
வருஷங்களுக்குமேல் ஒரு இடத்தில் இருக்கக் கூடாது. இருந்தால்
இலஞ்சம் வாங்குவதற்கும் நிர்வாக ஊழலுக்கும் இடமளிக்கும்
என்ற கருத்தைத் தெரிவித்தேன். இது குறித்து மாண்புமிகு
முதலமைச்சரவர்கள் அறிக்கை தந்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவரவர்களே, பொதுவாக அதிகாரிகள் வீட்டில் ஆர்டர்லி
இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி இந்த அரசு யோசித்து
வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அது
மாற்றப்பட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டாலுங்கூட அந்தப்
பணியாளருக்குரிய அலவன்சைக் கொடுக்கச் செய்து அதை
எடுத்துவிடச் செய்ய வழி இருக்கிறதா என்பதை
அரசு பரிசீலித்து வருகிறது. இங்கு கூறப்பட்ட எல்லாக்
கருத்துக்களுக்கும் பதில் சொல்லவில்லை என்றால் அலட்சியப்
படுத்திவிட்டோம் என்று கருத வேண்டாம் நேரமில்லை என்ப
தால் குறைத்துக் கொண்டேன்.

அதிகாரிகள் ஆங்காங்கு சென்று குற்றங்குறைகளை நேரில்
தெரிந்து கொள்வது என்பது அதிகாரிகள் சென்று கேட்டுத்
தெரிந்து அவர்கள் சொல்வதை நம்புகிற அளவிற்கு இங்கே

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 18

இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் திடமாக இருக்கிறார்களா
என்பதை முதல் கேள்வியாக வைத்துக் கொள்ள வேண்டியதாக
இருக்கிறது. பிறகும் சொல்வார்கள், குற்றத்தைச் சொல்வ
தற்கு விட வே இல்லை. அதிகாரிகளைப் பார்த்துப் பயந்து
விட்டார்கள், என்று வரும். அதைவிட முன்புபோல அமைச்
சர்கள் வரவேண்டும் அவர்களோடு சட்டமன்ற உறுப்பினர்கள்
யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உடன்
சென்று அந்தந்தப் பகுதி மக்களை நேரடியாகச் சொல்ல வைப்
பதும் ஆகிய அண்ணா கற்றுத்தந்த வழியைப் பின்பற்றுவது
நல்லது என்று கருதுகிறேன்.

(திரு. செ. சிவசாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்,
நான் சொல்லிவிடுகிறேன். அமைச்சர் பேசியதற்குப் பிறகு
அவர்கள் பேசியதிலிருந்து ஏதாவது விளக்கம் கேட்கலாமே
தவிர தாங்கள் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால்
விடிய விடிய நடத்தினாலும்கூட மன்றத்தை முடிக்க முடியாது.
ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம். பேசியதற்கெல்லாம்
பதில் என்ன என்று கேட்டுக்கொண்டிருக்க முடியாது.

திரு. அ. சுவாமிதாஸ்: துணைத் தலைவரவர்களே,
முதலமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது எல்லாக் காவல்
நிலையங்களிலும் தொலைபேசி வசதி கொடுக்கப்படும் என்று
சொன்னார்கள். பொது மக்களும் கட்டணத்தைச் செலுத்தி
விட்டுப் பேசுவதற்குரிய வசதி அளிக்கப்படும் என்று சொன்
னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள்—மக்கள் பிரதிநிதிகள்
அங்கே போய் இலவசமாகப் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்
படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்
தலைவர் அவர்களே, இந்த அளவிற்கு நமக்குப் பேராசை வரக்
கூடாது, என்னையும் சேர்த்தே சொல்கிறேன். முதலிலேயே
உங்களுக்கு இவ்வளவு தொலைபேசி பேசலாம், இத்தனை ஆயிரம்
கால் பேசலாம் என்ற கணக்கு இருக்கிறது. தயவு செய்து
இதற்கு அந்த உரிமையைக் கேட்காமல் விட்டுக் கொடுத்து
விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: ஒரு முக்கியமான விஷயம். ஓரளவாவது
முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் சொல்லுவார்கள்
என்று எதிர் பார்த்தேன். ஆனால் சொல்லவில்லை. இன்று
காலையிலே ஒரு கடிதம், மந்திரி அவர்களைத் தலையை வெட்டு
வேன், காலை வெட்டுவேன், கையை வெட்டுவேன் என்ற கடிதம்
வந்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் கடிதத்தில்

1979 ஏப்ரல் 18] [திரு. செ. சிவசாமி]

கையெழுத்துப் போட்டு வந்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த மந்திரி? தமிழ்நாட்டு மந்திரியா?

திரு. செ. சிவசாமி: தலையை வெட்டுவேன், கையை வெட்டு வேன் என்று கடிதம் கையெழுத்துப் போட்டு வந்திருப்பதாகக் காலையிலே கேள்விப்பட்டேன். அது சம்பந்தமாக என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபையிலே சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்படிப்பட்ட முக்கியமான விஷயங்கள்கூட சொல்லப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, எனக்கு இன்னும் அந்தச் செய்தி வரவில்லை. வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை-15

திருவாளர்கள் அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் சி. கோவிந்தராசன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 38,59,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இரவு 7—40)

மானியக் கோரிக்கை எண் 16-க்கு

திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் அ. ப. பழனியப்பன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,88,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7—41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(3) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் எதுவுமில்லை.

இணைப்பு I.

[286ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு காவல் துறை.

1978-79 ஆண்டு ஆய்வுரை.

தமிழ்நாடு காவல் துறை, சட்டம் ஒழுங்கு அமைதியை நிலை
நாட்டல், குற்றங்கள் நடைபெறாத வண்ணம் தடுத்தல், குற்றங்
களைத் துப்பு துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு
ஆற்றும் பொதுவான பணி ஆகியவற்றைத் தொடர்ந்து
செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இப்பணிகளை ஆற்றிவரும்
போது எதிர்நோக்க வேண்டியிருந்த சவால்களை சமாளித்ததுடன்,
இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டபோது அவற்றுக்கு ஈடு கொடுத்தும்
தங்கள் கடமையை நிறைவேற்றி வந்தனர்.

2. தற்போது காவல் படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. படைக் கலந்தாங்கிய காவற்படை அணிகள்.—இம்மாநி
லத்தில் அய்ந்து படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள்
உள்ளன. ஒவ்வோர் அணியும், ஆறு இயங்கும் பிரிவுகளாகவும்
ஒரு தலைமையிடப் பிரிவையும் கொண்டுள்ளது. 30 இயங்கும்
காவற்படை பிரிவுகளில் 3 பிரிவுகள், தற்போது உணவுப் பொருள்
வழங்கல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

4. பயிற்சியும் தேர்வும்.—தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட
இந்தியக் காவல் பணிப் பதவிகள் 114 ஆகும். மாநில அரசு
காவல் படையில் பணியாற்றும் ஏழு அதிகாரிகள், 1978-ல்
''பதவியுயர்வு ஒதுக்கீட்டில்'' இந்தியக் காவல் பணிப் பதவிகளில்
நியமிக்கப்பட்டனர். 1977-ல் தமிழ்நாடு காவல் பணியில்
அய்.பி.எஸ். பதவி தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஆறு அய்.பி.எஸ்.
அதிகாரிகள் (இவர்கள் அய்.பி.எஸ். அதிகாரிகளாக நேரடியாகத்
தெரிந்தெடுக்கப்பட்டனர்), மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்
காக 1978, டிசம்பரில் சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரியில்
சேர்ந்தனர். காவல் துறை உதவி சூப்பிரண்டுகள் நான்கு பேர்,
1978—ல் தங்களது செயல் முறைப் பயிற்சி முடித்த பின்னர்,
காவல் துறை துணைக் கோட்டங்களின் பொறுப்பை தனித்
தனியாக மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. இந்நாண்டில், ஒரு அய்.பி.எஸ். அதிகாரி, பம்பாய்,
தொழில் பொறியியலில் பயிற்சி பெறுவதற்கான தேசிய
நிறுவனத்தில் ''மனிதயியல் உறவுகள்'' என்ற பாடமுறையில்
இருவார பயிற்சி பெற்றார். மூன்று அய்.பி.எஸ். அதிகாரிகள்,
புதுடில்லியில் உள்ள புலனாய்வுக் கழகத்தில் ''தொழில் பாது
காப்பு'' குறித்து இருவார கருத்தரங்கு பயிற்சி பெற்றனர். ஒரு
அய். பி. எஸ். அதிகாரி, இந்தியாவிலும் அதன் அண்டை நாடு
களிலும் ''பெருமக்கள் (V. I. P.), பாதுகாப்பு உட்பட
புலனாய்வு'' குறித்து மேற்சொன்ன நிறுவனத்தில் இருவார
பயிற்சி பெற்றார். ஒரு அய். பி. எஸ். அதிகாரி, புதுடில்லி, காவல
துறை புள்ளி விவர கணக்கீட்டுப் பிரிவு, ஒருங்கிணைப்பு
இயக்குநர் அலுவலகத்தில், ''முறை பகுப்பாய்வும
வடிவமைப்பும்'' குறித்து இருவார பயிற்சி பெற்றார். ஒரு
அய்.பி.எஸ். அதிகாரி, மவுண்ட் அபுவிலுள்ள மத்திய ரிசர்வ்
காவல் துறைப் பணி, உள்நாட்டுப் பாதுகாப்பு அகாடமியில்
''காவல் துறை சூப்பிரண்டுகளுக்கான உள்நாட்டுப் பாதுகாப்புப்
பாடமுறையில் 11 நாள் பயிற்சி பெற்றனர். ஒரு அய். பி. எஸ்.
அதிகாரி நாக்பூரிலுள்ள தேசிய சிவில் பாதுகாப்புக் கல்லூரியில்
சிவில் பாதுகாப்பு'' என்பதில் இருவார பயிற்சி பெற்றார்.
ஒரு அய். பி. எஸ். அதிகாரி ஹைதராபாத்தில் உள்ள இந்திய
நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 'முதுநிலை அதிகாரிகளுக்
கான பொதுநிர்வாகம்'' என்பதில் இரு மாத பயிற்சி பெற்றார்.
ஒரு அய். பி. எஸ். அதிகாரி, புதுடில்லியிலுள்ள இந்திய குற்ற
வியல்-குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் நிறுவனத்தில் நடைபெறும்
''குற்றவியல் மேல் படிப்புப் பாடத்தில்'' ஒரு மாத பயிற்சி
பெற்றார். இரு அய். பி. எஸ். அதிகாரிகள், அதே நிறுவனத்தில்

[1979 ஏப்ரல் 18

நடைபெறும் "Behavioral Orientation" பாட முறையில் இருவார
பயிற்சி பெற்றனர். ஒரு அய்.பி.எஸ். அதிகாரி, புதுடில்லியிலுள்ள
இந்திய பொது நிறுவனத்தில் நடைபெறுகின்ற நிர்வாகத்
தகவல் முறையில் புதுமுகக்கல்வி என்பதில் இரு வார பயிற்சி
பெற்றார். ஒரு அய்.பி.எஸ். அதிகாரி, முசூரியில் உள்ள
லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் நடைபெறு
கின்ற "நிர்வாக வளர்ச்சித் திட்டத்தில்" ஒரு மாத பயிற்சி
பெற்றார். ஒரு அய்.பி.எஸ். அதிகாரி, "போக்குவரத்து காவல்
துறை நிர்வாகம்" குறித்த கருத்தரங்கில் கலந்து கொள்ளவேண்ம.
"கொழும்பு திட்டத்தின் கீழ்" 12—10—1978 முதல்
4—12—1978 வரை ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார்.

6. நேரடியாக நியமிக்கப்பட்ட காவல்துறை டெபுடி
சூப்பிரண்டுகள் (வகை I) இருவர், சென்னையில் உள்ள காவலர்
பயிற்சிக் கல்லூரியில் நிறுவனப் பயிற்சியையும், மாவட்டங்களில்
களப் பயிற்சியையும் முடித்த பின்னர், காவல் துறை துணைக்
கோட்டங்களின் தனி பொறுப்பினை மேற்கொள்ள அங்கு
நியமிக்கப்பட்டனர். நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துறை
டெபுடி சூப்பிரண்டுகள் (வகை I) மூவர், சென்னையில் காவலர்
பயிற்சிக் கல்லூரியில் தங்களது பயிற்சியை முடித்தனர்.
இந்த மூவருள் இருவர், வெலிங்டனில் உள்ள "சென்னை
ரிஜிமெண்டல் நிலையத்தில்" 7—2—1979 முதல் 6 வார
காலத்திற்கு இராணுவப் பயிற்சியை தற்போது பெற்று வருகின்
றனர். முன்னாள் இராணுவ அதிகாரியாகிய எஞ்சிய
மற்றொரு காவல் துறை துணை சூப்பிரண்டு 7—2—79
முதல் மாவட்டம் ஒன்றில் ஆறு மாத நடைமுறைப்பயிற்சியைத்
தற்போது பெற்று வருகின்றார். இவ்வாண்டில், காவல்
துறை டெபுடி சூப்பிரண்டு (வகை III) ஒருவர், பூனாவில்
உள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் "வெடிக்கப்படாத
வெடிகுண்டு (Unexploded Bomb)" குறித்து பயிற்சி பெற்றார்.

7. ஹைதராபாத்தில் உள்ள மத்திய துப்பறியும் பயிற்சிப்
பள்ளியில் "அறிவியல் சாதனங்களை பயன்படுத்துவதிலும் மேம்
படுத்தப்பட்ட புலனாய்வு முறைகளிலும்" 14 வாரப் பயிற்சி
பெறுவதற்காக, 3 சப்-இன்ஸ்பெக்டர்களும், இன்ஸ்பெக்டர்
ஒருவரும் அனுப்பப்பட்டனர்.

8. சப்-இன்ஸ்பெக்டர்களையும், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்
களையும் நேரடியாக நியமனம் செய்யும் பொறுப்பு, தற்போது
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிடம்
கொடுக்கப்பட்டுள்ளது. 343 சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கும்
29 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்குமானத் தேர்வு,
தற்போது நடந்தேறி வருகிறது. எழுத்துத் தேர்வு, ஏற்கனவே
முடிந்து விட்டது. இத்தேர்வில் வெற்றியடைந்தவர்கள் உடல்
வலிமைத் தேர்வில் கலந்து கொண்டனர். தேர்வாணைக்
குழுவால், இறுதியில் சப்-இன்ஸ்பெக்டர்களாகத் தெரிந்தெடுக்கப்

1979 ஏப்ரல் 18]

படுபவர்கள், சென்னையில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில்
பயிற்சி பெறுவர்; ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களாகத் தெரிந்
தெடுக்கப்பட்டவர்கள், ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு
காவல் துறை II பிரிவின் ரெஜிமெண்டல் நிலையத்தில் பயிற்சி
பெறுவர்.

9. பெண் காவலர் பிரிவு.—1973 டிசம்பரில், பெண் சப்
இன்ஸ்பெக்டர் ஒருவரும் பெண் காவலர் 21 பேரும் உள்ள
காவல் பிரிவு ஒன்று சென்னை மாநகரில் ஏற்படுத்தப்பட்டது.
செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், மீனம்பாக்கம் விமான
நிலையத்தில், பாதுகாப்பு, கடத்தலைத் தடுக்கும் அலுவல்
தொடர்பான பணிக்காக 1975-ல் 8 பெண் காவலரை நியமிக்க
அரசு அனுமதி வழங்கியது. மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்
பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் பெண் சப்-இன்ஸ்
பெக்டர் ஒருவர், பெண் தலைமைக் காவலர் ஒருவர், பெண்
காவலர்கள் 12 பேர் அடங்கிய பெண் காவலர்கள் பிரிவுகளை
ஏற்படுத்தவும் அரசு, 1976 -ல் அனுமதி வழங்கியது, புதிதாக
ஏற்படுத்தப்படவிருக்கும் பெண் காவலர் பிரிவுகளுக்குத் தேவைப்
படும் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களை சென்னை
யில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியிலும், சென்னை சமூகப்
பணிப் பள்ளியிலும் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.
அவர்கள் வரையறுக்கப்பட்ட கால அளவில் தங்களது
பயிற்சியை முடித்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவுகளில்
பணியாற்றி வருகின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சி
ராப்பள்ளி ஆகிய இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட
பெண் காவலர் பிரிவுகள், 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல்
செயல்படத் தொடங்கியுள்ளன.

10. துப்பறியும் நாய்ப்படை.—சென்னை மாநகரிலும்,
மதுரையிலும், கோயம்புத்தூரிலும் ஒவ்வொன்றுமாக இம்மாநிலத்
தில் மூன்று நாய்ப்படை பிரிவுகள் உள்ளன. இவை, மன
நிறைவு அளிக்கும் வகையில் செயலாற்றி வருகின்றன. திருச்சி
ராப்பள்ளியில் நாய்ப்படை பிரிவு ஒன்று புதிதாக ஏற்படுத்த
அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு பட்டிகள் கட்டும் பணி
முடிவடையும் நிலையில் உள்ளது. இப்பிரிவு திருச்சிராப்
பள்ளியில் வெகுவிரைவில் தொடங்கப்படும். 1978 டிசம்பர்
வரையில் 627 வழக்குகளில் துப்பறியும் நாய்கள் பயன்படுத்தப்
பட்டன; இவற்றுள் 208 வழக்குகளில் அவை துப்புத் துலக்கியவை
பயனளித்தன.

11. குற்ற வழக்குகள்.—1977, 1978 ஆம் ஆண்டுகளில்
சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பு நோக்குப்
புள்ளி விவர அறிக்கை பின்வருமாறு:—

குற்றத் தன்மை. (1)	1977. (2)	1978. (3)
ஆதாயத்திற்காகக் கொலை செய்தல்		
கொள்ளை	49	40
வழிப்பறி	22	21
கன்னக் களவு	130	192
பெரிய திருட்டுகள்	10,305	10,499
சிறிய திருட்டுகள்	24,589	26,915
கால்நடைத் திருட்டுகள் ..	3,244	2,737
..	1,359	1,336
மொத்தம் ..	39,698	41,739
குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில், துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது.	41·8	30.1
தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை நடைபெறுகின்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கையில் துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது.	57.7	47.2

12. 1978ல் சொத்து குறித்துப் பதிவான குற்ற வழக்கு
களின் எண்ணிக்கை 41,739 ஆகும்; அவ்வகையில், 1977—ல்
பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 39,698
ஆகும்; 1977 ஆம் ஆண்டைவிட 1978-ல் இந்த வகைக் குற்றங்
களின் எண்ணிக்கை 2,041 உயர்ந்துள்ளது, அல்லது 5.1 சத
வீதம் உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் குற்ற வழக்குகளின்
எண்ணிக்கை ஓரளவு உயர்ந்ததற்கு முக்கிய காரணங்கள்
யாதெனில், அவசர நிலை தளர்த்தப்பட்டபின் துப்பு துலக்கு
வதில் அறிவியல் சார்ந்த முறைகளை மட்டும் பின்பற்றுவதால்
ஏற்படும் தாமதமும் அனைத்து குற்ற வழக்குகளும் பதிவு
செய்யப்பட்டதும் ஆகும்; இம் மாநிலத்தில் குற்ற நிகழ்வுகளின்
உண்மை நிலையை இது எடுத்துக் காட்டியது.

13. குற்றங்களைத் துப்பு துலக்குதல்.—குற்றப் பிரச்
சினையைச் சீரிய முறையிலும் திறமையாகவும் சமாளிப்பதற்கு
தமிழ்நாடு காவல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்
கொண்டுள்ளது. தீர்த்து வைப்பது மிகக் கடினம் என்று வெளிப்
படையாகத் தெரிய வருகின்ற வழக்குகளும் பதியப்படுவதால்
துப்பு துலக்கப்படுகின்ற வழக்குகளின் சதவீதம் புள்ளி
விவரப்படி குறைந்துள்ளது. துப்பு துலக்கப்பட்ட வழக்குகளின்
சதவீதம் 1977-ல் 41·8 ஆக இருக்க, ஆய்வு ஆண்டில் 30·1 சத
வீதமாக உள்ளது. 1977-ல் தண்டனை முடிந்த வழக்குகள்
விசாரணை முடிவடையாத வழக்குகளின் மொத்த எண்ணிக்கை
யில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் சதவீதம் 57·7 ஆக
இருக்க, ஆய்வு அறிக்கை ஆண்டில் இது 47·2 சதவீதமாக
உள்ளது. அறிவியல் சார்ந்த துப்பு துலக்கும் முறைகளைப்
பின்பற்றுவதன் மூலமும் பெருமளவில் பதிவாகியுள்ள குற்றங்
களைத் துப்புத் துலக்க, துப்புத் துலக்கும் அதிகாரிகளை மேலும்
அதிக அளவில் நியமிப்பதன் மூலமும் இந்தச் சவாலை ஏற்க
வேண்டியுள்ளது. எனினும், புள்ளிவிவரங்கள் இம் மாநிலத்தில்
நிகழும் குற்றங்கள், அவை துப்புத் துலக்கப்படுதல் குறித்த
உண்மை நிலைமையினைப் புலப்படுத்துகின்றன.

14. திருட்டுச் சொத்துக்களை மீட்டல்.—1977 ஆம்
ஆண்டில் திருட்டுச் சொத்துக்களில் 47·2 சதவீதம் மீட்கப்
பட்டிருக்க, அறிக்கையாண்டில் 41·2 சதவீதத் திருட்டுச்
சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. துப்பு துலக்கப்பட்ட வழக்கு
களின் எண்ணிக்கை குறைந்ததற்காகக் கொடுக்கப்பட்டுள்ள
காரணங்கள் சொத்துக்களை மீட்பதில் ஏற்பட்ட சரிவிற்கும்
பொருந்தும். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்ட
வர்கள் செய்யும் குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்
கொள்வதற்காக அறிவியல் சாதனங்கள். மாநில விரல் ரேகைப்
பதிவுக் கழகம், மாவட்டங்களிலுள்ள ஒற்றை விரல் ரேகைப்
பதிவு நிலையங்கள், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல்
இரசாயன ஆய்வுக் கூடம், மாவட்டங்களிலுள்ள குற்றஞ்
சார்ந்த சட்ட அறிவியல் நடமாடும் ஆய்வுக் கூடங்கள் போன்ற
அமைப்புகள், காவல்துறை வான்தந்தி அமைப்புகள். துப்பறியும்
நாய்ப்படைகள், காவல்துறை கணக்கிடும் பொறிப் பிரிவு ஆகிய
வற்றைப் புலனாய்வும் பணியாளர்கள் பெருமளவில் பயன்
படுத்துவர்.

15. கலவரங்கள்.—1978 ஆம் ஆண்டில் எங்கெங்கு கலவரங்
கள் நடைபெற்றனவோ அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கை நிலை
நாட்டக் காவலர்கள், உரிய நேரத்தில் செம்மையாக நடவடிக்கை
எடுத்தனர். விழுப்புரத்தில் (தென் ஆற்காடு மாவட்டம்) வன்
முறையில் 12 அரிசனங்கள் கொல்லப்பட்ட இந்த துரதிருஷ்ட
மான கோர நிகழ்ச்சி 1978 ஜூலையில் ஏற்பட்டது. இந்த
கோர நிகழ்ச்சியின்போது தீ வைத்தல், சொத்துக்களைச் சூறை
யாடுதல், திடீர் தாக்குதல், கலவரம் முதலியவைகளும்
ஏற்பட்டன. நீதிபதி ஆர். சதாசிவம் இதைப்பற்றி விசாரணை
செய்தார். அவரது அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

[1979 ஏப்ரல் 18

(2) 1978 ஜூலையில் பேரணாம்பட்டில் (வட ஆற்காடு மாவட்டம்)
மசூதியின் முன்னால் இந்துக்கள் காவடி ஊர்வலம் ஒன்றை
எடுத்ததன் விளைவாக முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும்
ஏற்பட்ட மோதலில் 10 பேர் காயமடைந்தனர். கடைகளுக்கும்
சில குடிசைகளுக்கும் தீ வைக்கப்பட்டது.

16. தீவிர வாதிகளின் நடவடிக்கை.—1978 ஆம் ஆண்டில்
தீவிரவாதிகள் தீவிரமாகச் செயல்பட்டனர். 21—4—1978
அன்று ஐந்து தீவிரவாதிகள், நாட்டு வெடிகுண்டு முதலிய
வற்றுடன் சிறைச்சாலை வார்டனை தாக்கியபிறகு, திருச்சிராப்
பள்ளி மத்திய சிறையிலிருந்து தப்பித்து ஓடினர். 3—5—1978
ஆம் நாள் அன்று வட ஆற்காடு மாவட்டத்தில் கூடப்பட்டு
கிராமத்தில் தீ வைத்தல், சில நபர்கள் தாக்கப்பட்டமை போன்ற
சம்பவங்களுக்கு தீவிரவாதிகளே காரணமாவார்கள். இதன்
விளைவாக 2 நபர்கள் இறந்தனர். 16 நபர்கள் காயமடைந்தனர்.
11—5—1978 ஆம் நாளன்று, செஞ்சி (தென் ஆற்காடு
மாவட்டம்) காவல் துறை இன்ஸ்பெக்டர் தலைமறைவாகியிருந்த
ஒரு தீவிரவாதியை மற்றொரு தீவிரவாதியுடன் கைது செய்கை
யில், இவர்களில் ஒருவர் அந்த காவல் துறை இன்ஸ்பெக்டரை
கத்தியால் குத்தினார். இந்தச் சம்பவத்தில் நாட்டு வெடிகுண்டு
களும் தீவிரவாதிகளால் பயன்படுத்தப்பட்டன. தீவிரவாதிகள்
ஈடுபட்ட கொலை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட முக்கிய அரசு
தரப்பு சாட்சி ஒருவர், 19—11—1978 ஆம் நாளன்று வட
ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்ட காவல் நிலைய
எல்லைக்குள் தீவிரவாதிகளால் வழியில் மறைந்து நின்று கொலை
ஆயுதங்களால் தாக்கப்பட்டார். மாநிலத்தில் பல்வேறு இடங்
களில் காந்தி சிலையை உருக்குலைத்த [illegible] சம்பவங்கள்
நிகழ்ந்தன. தீவிரவாதிகள், வன்முறையையும் ஆயுதப்புரட்சி
யையும் தூண்டும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டுதல், கையேடு
கள் வெளியிடுதல் ஆகியவை குறித்த எண்ணற்ற சம்பவங்கள்
நிகழ்ந்தன.

17. உழவர்கள் நிலைமை.—வேளாண்மை விசையேற்றங்
களுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் மின்சாரக் கட்டணங்களை ரத்து
செய்தல், வேளாண்மை உற்பத்தி பொருள்களுக்கு ஆதாயந்தரும்
விலையை நிர்ணயித்தல் கடன் நிவாரணம் முதலிய கோரிக்கை
களுக்காக மாநிலத்தில் விவசாயிகள் போராட்டம் நடத்தி
வந்துள்ளனர், விவசாயிகளை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு
நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, அரசு உயர்நிலைக்
குழு ஒன்றை அமைத்தது. அதில், அரசுப் பிரதிநிதிகள்,
விவசாயிகள் சங்கங்கள், வேளாண்மை வல்லுநர்கள்,
பொருளாதார வல்லுநர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.
கடன் முதலிய நிலுவைத் தொகைகளை (சில விதி விலக்குடன்)
கட்டத் தவறியதற்காக விவசாயிகளின் சொத்துக்களை ஜப்தி
செய்வதில்லையெனவும், அத்தகைய கடன் தொகைகளை
தவணைகளில் வசூல் செய்வதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

1979 ஏப்ரல் 18]

மின்சார வாரியமும் தவணை முறைகளில் நிலுவைத் தொகை
களை வசூல் செய்வதில் தாராள முறை ஒன்றை மேற்
கொண்டுள்ளது. இந்தச் சலுகைகள் கொடுத்திருந்தும், மாநிலத்
தில் உள்ள விவசாயிகள் 1978 பிப்ரவரியிலிருந்து "வரி கொடா
இயக்கம்" "மின் கட்டணத் தொகை கொடா இயக்கம்" முதலிய
வற்றை மேற்கொண்டனர். கடன்கள், வரிகள் முதலிய நிலுவைத்
தொகைகள் வசூலிக்க கிராமங்களுக்கு, மின்சார வாரியம்,
வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் அதிகாரிகள்
சென்றபோது விவசாயிகளின் தலைவர்கள் அவர்களைத்
தடுத்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் இருபெரும் பிரிவு
களின் தலைவர்களின் பேச்சு வன்முறையைத் தூண்டும் வகையில்
இருந்ததற்காக 8—4—1978 ஆம் நாளன்று அவர்கள் கைது
செய்யப்பட்டனர். மாவட்டங்களின் பல்வேறு பாகங்களில் வன்
முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

போராட்டக்காரர்கள் மரம், கல் முதலிய பொருட்களைப்
போட்டு சாலைப் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தினர்; பாலங்
களைத் தகர்த்து எறிந்தனர்; பொது உடைமைகளுக்குத்
தீ வைத்தனர். காவலர்களும் தாக்கப்பட்டனர். பேருந்துகளையும்
ஏனைய போக்குவரத்து வண்டிகளையும் செல்லமுடியாதபடி
தடுத்தனர். இந்த வன்முறைச் செயல்களின் காரணமாக, மதுரை
வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வேடசந்தூரில் 9—4—1978
அன்றும் (மதுரை வடக்கு மாவட்டம்) நொச்சியோடைப் பட்டியில்
10-4-1978 அன்றும் வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒடுகத்
தூரிலும் குப்பத்திலும் 11-4-1978 அன்றும் காவலர்கள்
துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியதாயிற்று. இதில் 8 பேர்
இறந்தனர்; 13 பேர் காயமுற்றனர். வன்முறைக் கூட்டத்தை
கலைக்கும் பொருட்டுக் காவலர்கள் இராசிபுரத்திலும் (சேலம்
மாவட்டம்) திருப்பத்தூரிலும் (வடாற்காடு மாவட்டம்) தடியடிப்
பிரயோகம் செய்யவேண்டியதாயிற்று. இப்போராட்டத்தின்
போது சுமார் 3,500 உழவர்கள் கைது செய்யப்பட்டனர். அரசு
தீவிர நடவடிக்கை எடுத்ததின் காரணமாக, வன்முறைப்
போராட்டம் ஓரளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டது. உழவர்கள்
போராட்ட முறையை மாற்றிக் கொண்டனர். இரண்டாவது
கட்டமாக, அவர்கள் தங்களது கோரிக்கைகளை மீண்டும் வலி
யுறுத்தும் பொருட்டு பல்வேறு இடங்களிலுள்ள வருவாய்த்
துறை அலுவலகங்கள்முன் மறியல் போராட்டம் நடத்தினர்.
1978 ஜூன் திங்களில் வருவாய்த்துறை அலுவலகங்கள் முதலிய
இடங்களின் முன்பாக, மறியல் போராட்டம் நடத்தினர்;
அதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள்
விடுதலை செய்யப்பட்டனர். பொதுவாக நல்லெண்ணத்திற்கு
அடையாளமாக அரசு உழவர்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்
பட்ட பெரும்பாலான வழக்குகளை திரும்பப் பெறும்படி
14—8—1978 அன்று ஆணையிட்டது.

18. தொழிலாளர் அமைதியின்மை.—1978 ஆம் ஆண்டில், [1979 ஏப்ரல் 18
தொழிலாளர்களின் பல்வேறு பிரிவினர் ஊதிய உயர்வு,
பணி நிலைமை, ஊதியக்கொடை முதலியன உயர்வு, மேலான
பொதுவாக கோரிக்கைகள் எழுப்பினர். ''தரும்படி கேட்டுப்
தீர்ப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ''பதிலிங்கம் குழுவின்''
யமையாப்பணிகளில் வேலை நிறுத்தத்தை வகையிலும், இன்றி
தடை விதிப்பதற்காக மாநில அரசு மேற்கொள்ளுவதற்குத்
பிட்ட அவசரச் சட்டத்திற்கும் அதிகாரமுறையில் வெளி
சட்ட முன்வடிவிற்கும் எதிர்ப்பு உத்தேச தொழில் உறவுகள்
லாளர்கள் போராட்டங்களை நடத்தினர். தெரிவிக்கும் வகையில் தொழி
1978 ஆம் ஆண்டு தொடக்கத்திலும் 1977 ஆம் ஆண்டிலும்
அமைதியின்மைக்கு முக்கிய இடமாக தொழிலாளர்களின்
தொழிற்சாலை விளங்கியது. ஆனால் பாடியிலுள்ள டி.வி.எஸ்.
சிக்கல்கள் எதுவும் ஏற்படவில்லை. பின்னர் அங்கு இக்கட்டான
தொழிற்சங்கம் (C.I.T.U.) அங்கு பணியாற்றும் இந்திய
காங்கிரஸ் (I.N.T.U.C.) இந்தியத் தேசிய தொழிற்சங்கக்
இங்கொன்றுமாகக் பணியாளர்களிடையே அங்கொன்றும்
மூடப்பட்டிருந்த கைகலப்பு ஏற்பட்டது. 10-1-1978 முதல்
இருந்த அம்பத்தூர் பல வன்முறை நிகழ்ச்சிகளின் நிலைக்களனாக
16-10-1978 அன்று டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை,
சங்கங்கள் சிலவும் திறக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளும், தொழிற்
அரசின் கொள்கை தொழிலாளர் நலக் கொள்கைக்கு எதிராக
அன்று மாநிலம் இருப்பதாகக் குற்றஞ்சாட்டி 23-10-1978
செய்தன. அமைதியை முழுவதிலும் கடையடைப்பு நடத்த ஏற்பாடு
ஒழுங்கு முறையை நிலைநாட்டும் பொருட்டும், சட்டம்—
களும், சமூக விரோத நிலைநாட்டும் பொருட்டும் 1,215 தீவிரவாதி
காவலில் வைக்கப்பட்டனர். சக்திகளும் தடுப்புக் காவல் பிரிவின்கீழ்
மீறுதல், கல்லெறிதல், அச்சுறுத்தல், தடை ஆணைகளை
கடையடைப்பு நாளன்று குறிப்பிடத்தக்க பிற குற்றங்களுக்காகக்
இவர்கள் அனைவரும் 3,337 பேர் கைது செய்யப்பட்டனர்.
பட்டுள்ளனர். 30-11-78-க்குள் ஜாமீனில் விடுவிக்கப்

19. காவலர் துப்பாக்கிச் சூடு.—காவலர்கள் 11 நிகழ்ச்சி
களின் போது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அது பற்றிய விவரம்
வருமாறு:—

( ) வேடசந்தூரைச் சேர்ந்த (மதுரை வடக்கு மாவட்டம்)
ழவர்கள் அரிவாள், கடப்பாரை முதலிய பயங்கர ஆயுதங்
கூட்டம், விவசாயிகள் சங்கத்தில் உயர் பதவியிலுள்ள தலைவர்
களைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்
9-4-1978 அன்று திண்டுக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலையில்
போக்குவரத்துக்கு முட்டுக்கட்டையிட்டு போக்குவரத்தை ஸ்தம்
பிக்க செய்தனர். போராட்டத்தில் கலந்து கொண்ட பெருங்
கூட்டம் காவலர்களைத் தாக்கியது; காவல்துறை வண்டிகளுக்கும்
பொது உடமைகளுக்கும், சேதம் விளைவித்தனர். கூட்டத்தைக்
கலைக்கும் பொருட்டுக் காவலர்கள் மேற்கொண்ட தடியடிப்

பிரயோகமும், கண்ணீர்ப்புகை வீச்சும் பலன்தருவதாக இல்லை.
32 காவல் துறைப்பணியாளர்கள் காயமுற்றனர். ஆதலின்,
கூட்டத்தைக் கலைக்கும் பொருட்டு காவலர்கள் துப்பாக்கிச்
சூடு நடத்தவேண்டியதாயிற்று. 6 பேர் கொல்லப்பட்டனர்;
5 பேர் காயமுற்றனர். வருவாய் துறை வாரிய உறுப்பினர் திரு.
எஸ். பி. அம்புரோஸ் இதுகுறித்து விசாரணை நடத்தினார்.
துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று முடிவு செய்யப்பட்டது.

(ii) சானார்ப்பட்டி காவல் நிலைய விசாரணை எல்லைக்
குள் (மதுரை வடக்கு மாவட்டம்) வருகின்ற நொச்சியோடைப்
பட்டி கிராமத்தைச் சேர்ந்த போராட்டத்தில் ஈடுபட்ட
உழவர்கள் 9-4-1978—ல் வேடசந்தூரில், காவலர்கள் நிகழ்த்திய
துப்பாக்கிச் சூட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில்,
சாலைக்கு குறுக்கே பாறைக்கல் முதலியவற்றைப் போட்டு
வைத்து நொச்சியோடைப்பட்டி கிராமத்தில் வண்டிப் போக்கு
வரத்தைத் தடுத்தனர். இவ்வாறு போக்குவரத்தைத் தடுத்து
நிறுத்திய செய்தி கிடைத்தும் திண்டுக்கல் தாசில்தாருடன்,
காவலர் படை ஒன்று அவ்விடத்திற்குச் சென்றது. எச்சரிக்கை
செய்த பின்னரும், போராட்டக்காரர்கள் கலைந்து செல்ல
வில்லை. மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்களால் காவலர்
படையைத் தாக்கினர். 14 காவலர்களுக்குக் காயம் ஏற்படுத்தினர்.
போராட்டக் கூட்டம் மிகவும் வன்முறையில் ஈடுபட்டுத்
தாக்கியது; காவலர்கள் மீது தொடர்ந்து கல்லெறிந்தது.
கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகம் முதலியன பலனளிக்க
வில்லை. எனவே காவலர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய
தாயிற்று. ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் காயமுற்றனர்.
வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. எஸ். பி. அம்புரோஸ்
விசாரணை நடத்தினார். துப்பாக்கிச்சூடு நியாயமானதே என்று
முடிவு செய்யப்பட்டது.

(iii) வேப்பங்குப்பம் காவல் நிலையத்தின் விசாரணை
எல்லைக்குள் (வடாற்காடு மாவட்டம்) வருகின்ற ஒடுக்கத்தூரில்
11-4-1978-ல் போராட்டத்தில் ஈடுபட்ட உழவர்கள் கூட்ட
மொன்று பொது உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தது.
காவலர்படை அவர்களைக் கலைக்க முயற்சி செய்தது. ஆனால்
அவர்கள் போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டனர். 2 காவலர்
கள் காயமுற்றனர். கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகம்
பலனேதுமளிக்கவில்லை; ஆதலின் காவலர் துப்பாக்கிச்சூடு
நடத்த வேண்டியதாயிற்று. இந்த நிகழ்ச்சியின்போது ஒருவர்
கொல்லப்பட்டார். வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த
மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி விசாரணை நடத்தினார்.
துப்பாக்கிச்சூடு நியாயமானது என்று முடிவு செய்யப்பட்டது.

(iv) K. V. குப்பம் காவல் நிலைய விசாரணை எல்லைக்குள்
(வடாற்காடு மாவட்டம்) வருகின்ற கீழ்ப்புதூர் கிராமத்தில்
[illegible]-1978 அன்று பயங்கர ஆயுதங்கள் தாங்கிய போராட்டத்தில்
ஈடுபட்ட உழவர்கள் 2,000 பேர் கொண்ட ஒரு கூட்டம்

சாலையில் போட்டிருந்த போக்குவரத்துத் தடைகளை காவலர்கள்
அகற்றுவதில் ஈடுபட்டிருந்தபோது, காவலர் படையைத்
தாக்கியது; 9 காவல் துறை அதிகாரிகள் காயமுற்றனர். கண்ணீர்ப்
புகை, தடியடிப் பிரயோகங்கள் பலனற்றுப் போயின. காவலர்
துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியதாயிற்று. உயிர்ச்சேதம் ஏது
மில்லை. திருப்பத்தூர் மாவட்ட உதவி ஆட்சியர் விசாரணை
நடத்தினார். துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று முடிவு
செய்யப்டட்டது.

(v) இராணிப்பேட்டையில் 26-6-1978 அன்று அரிசன
வகுப்பைச் சேர்ந்த ஒருவர், சாதி இந்துப் பெண் ஒருத்தியிடம்
குறும்பு செய்ததைத் தொடர்ந்து, இராணிப்பேட்டை காவல்
நிலைய எல்லைக்குள் (வடாற்காடு மாவட்டம்) வருகின்ற
முத்துக்கடை சாலை சந்திப்புக்கு அருகில் அரிசனங்களுக்கும்,
சாதி இந்துக்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. கைகலப்பை
விலக்கும் பொருட்டு காவலர் தலையிட்டனர். சிறிது கண்ணீர்ப்
புகை வீச்சு நடத்தி காவலர் அரிசனக் கூட்டத்தைக் கலைத்தனர்.
ஆனால் கலைய மறுத்து எதிர்த்து நின்ற இந்துக் கூட்டம் ஈட்டி
முதலிய பயங்கர ஆயுதங்களுடன் காவலரைத் தாக்கியது. 3
காவலர்கள் காயமடைந்தனர். கண்ணீர்ப்புகை, தடியடிப்
பிரயோகம் முதலியவை பயனற்றுப் போகவே எதிர்த்து நிற்கும்
கூட்டத்தைக் கலைப்பதற்காக காவலர் துப்பாக்கிச்சூடு நடத்
தினர். இருவர் காயமுற்றனர். இராணிப்பேட்டை கோட்டாட்
சியர் விசாரணை நடத்தினார். அவரது அறிக்கை அரசின்
பரிசீலனையில் இருக்கிறது.

(vi) 7-8-1978 ஆம் நாளன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
டால்மியாபுரம் சிமெண்டு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்
செய்து வந்த தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு, தொழிற்
சாலையின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தினர். காவல்
துறையினர் இதில் தலையிட்டு வேலை நிறுத்தம் செய்த தொழி
லாளர்களைக் கலைந்து போகுமாறு கூறியபோது, அவர்கள்
காவல் துறையினரைத் தாக்கி, 37 காவலர்களுக்கு காயங்களை
ஏற்படுத்தினர். தடியடி, கண்ணீர்ப்புகை ஆகியவை பயனற்றுப்
போயிற்று. வேலை நிறுத்தம் செய்தவர்களைக் கலைந்துபோகச்
செய்ய காவல் துறையினர் 6 சுற்று ஊமைக்காயம் ஏற்படுத்தும்
தோட்டாக் கொண்டு சுட்டனர். 3 பேர் காயமுற்றனர். முசிறி
கோட்டாட்சியர் விசாரணை நடத்தினார். அவரது அறிக்கை
கிடைக்கப்பெற்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(vii) காவல் துறையின் பாதுகாப்பிலிருந்த இப்ராகிம் என்பவர்
இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டைத்
தொடர்ந்து, பழனியிலுள்ள காவலர் பழைய குடியிருப்புகள்,
காவல் துறை டெபுடி சூப்பிரண்டு அலுவலகம்—வீடு, நகரக்
காவல் நிலையம், காவல்துறை இன்ஸ்பெக்டர்களின் குடியிருப்பு
ஆகியவற்றை 14-8-1978 ஆம் நாளன்று கட்டுக்கடங்காத வன்,

முறைக் கும்பல் ஒன்று தாக்கி. சொத்துக்களுக்கு சேதத்தை
விளைவித்தது. வன்முறைக் கும்பலைக் கலைந்து போகச் செய்ய
காவல் துறையினர் முயற்சித்தபோது, அவர்களைத் தாக்கி,
18 காவலர்களுக்கு காயத்தை ஏற்படுத்தினர். தடியடியும்,
கண்ணீர்ப் புகையும் பயன் அளிக்காது போகவே, கூட்டத்தைக்
கலைந்து போகச் செய்ய காவல் துறையினர் மும்முறை ஊமைக்
காயம் ஏற்படுத்தும் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் 3 பேர்
களுக்கு காயம் ஏற்பட்டது. மதுரை மாவட்ட கூடுதல் மாவட்ட
ஆட்சித் தலைவர் விசாரணை நடத்தினார். விசாரணையில்
துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று முடிவு செய்யப்பட்டது.

(viii) 28-9-1978 ஆம் நாளன்று, நீலகிரி மாவட்டம்,
மசனக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, சிங்காரா
எஸ்டேட்டிற்கு, சந்தன மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டுகிற
20 பேர் அடங்கிய கும்பலைப் பிடிக்க, வனத்துறை அதிகாரிகள்
7 பேருடன் காவல் படையினர் சென்றனர். அவர்களை அக்
கும்பல்காரர்கள் பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு தாக்கினர்.
தங்களுக்கு ஆபத்து ஏற்படுமோ என்றஞ்சி, காவல் படையினர்
தற்காப்பிற்காகச் சுட்டார்கள். இரண்டு பேர் காயமுற்றனர்.
மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளரால் விசாரணை
செய்யப்பட்டு, துப்பாக்கிச்சூடு நியாயமானது என்று முடிவு
செய்யப்பட்டது.

(ix) 10-10-1978 ஆம் நாளன்று, மதுரை தெற்கு
மாவட்டத்தில் அவனியாபுரம் காவல் நிலையத்தின் ஒரு குற்ற
வழக்கு சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குட்டை முனு
சாமியை காவல் படையினர் கைது செய்து, அரிவாள் ஒன்றை
அவரிடமிருந்து கைப்பற்றினர். குற்றஞ்சாட்டப்பட்டவரை
மெய்க்காவலுடன் கொண்டு செல்லும்போது சப்-இன்ஸ்பெக்டர்
மீது திடீரென்று குற்றஞ்சாட்டப்பட்டவர் பாய்ந்து, அவரிடம்
இருந்த அரிவாளைப் பறித்து அவரைக் தாக்கினார், சப்-இன்ஸ்
பெக்டரின் இடது கையில் காயம் ஏற்பட்டது. காவல் படை
யுடன் வந்த இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டபோது, குற்றம் சாட்டப்
பட்டவர் அவரையும் வெட்ட முயற்சித்தார். தற்காப்பிற்
காகவும், சப்-இன்ஸ்பெக்டர் உயிரைக் காப்பதற்காகவும் இன்ஸ்
பெக்டர் அவருடைய கைத்துப்பாக்கியால் (ஒரு சுற்று) சுட்டதால்
குற்றஞ்சாட்டப்பட்டவர் கொல்லப்பட்டார். மதுரை கோட்
டாட்சியர் விசாரணை நடத்தினார். அவருடைய அறிக்கை
அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(x) [illegible]-10-1978 ஆம் நாளன்று, தஞ்சாவூர் மேற்கு
மாவட்டம் மன்னார்குடியில், எதிர்க்கட்சிகள் மாநில அளவில்
நடத்திய கடையடைப்பின்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்
தொண்டர்களுக்கும் அ. இ. அ. தி. மு. க. தொண்டர்களுக்கும்
இடையே மோதல் ஏற்பட்டது. காவல் படையினர் அவ்விடத்
திற்கு வந்தபோது, அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் கலைந்து

சென்றனர். ஆனால் சுமார் 4,000 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தி,மு.க. தொண்டர்கள் கலைந்து செல்ல மறுத்து, கற்களாலும், சோடாபுட்டிகளாலும், காவல் படையினரைத் தாக்கி, 8 காவலர் களுக்கு காயம் ஏற்படுத்தினர். காவல் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். தடியடியும் நடத்தினர். அவை பயனற்று போனதும் கூட்டத்தைக் கலைக்க காவல் துறையினர் சுட்டனர். இதில் 42 பேர் காயமுற்றனர். தஞ்சாவூர் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி விசாரணை நடத்தினார். அவருடைய அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(xi) பல்லாவரம் காவல் துறையினர் அஜ்மத் என்கிற ஒரு ரௌடிக்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொண்டதைத் தொடர்ந்து அவருடைய சகோதரர் இஸ்மாயில் மற்றும் 200 பேர் 27–11–1978 ஆம் நாளன்று பல்லாவரம் காவல் நிலையத்தை (செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம்) கற்கள், சோடாபுட்டிகள் வீசித் தாக்கினர். காவல் படையினர் பலமுறை எச்சரிக்கை செய்தும் பயன் இல்லாது போகவே, காவல் படையினர் தடியடி செய்து, 22 வெத்துத் தோட்டாக்களைச் சுட்டு கட்டுக்கடங்காத கூட்டத்தைத் துரத்தினர். உள்ளூர் அங்காடித் தெருபக்கம் நோக்கிச் சென்றதும் வன்முறைக் கும்பல் கட்டுக்கடங்காமல் வன்முறைச் செயல்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தது. அதன்பேரில் காவலர்கள் மேலும் இரண்டு வெத்துத் தோட் டாக்கள் கொண்டு சுட்டனர், 19 கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர். கூட்டத்தினர் யாரும் காய முறவில்லை. 7 காவலர்கள் மட்டுமே காயம் அடைந்தனர். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கை அரசுக்குக் கிடைக்கப் பெற்று பரிசீலனையில் இருந்து வருகிறது.

20. கண்ணீர்ப் புகைக் குண்டுகளை பயன்படுத்தியமை :—

இவ்வாண்டில், சட்டம் ஒழுங்கினை நிலைநாட்ட சென்னை மாநகரில் 13 முறையும், செங்கல்பட்டு (கிழக்கு), சேலம். மதுரை (தெற்கு) மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு முறையும், வடாற்காடு, மதுரை (வடக்கு) மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் மூன்று முறையும், திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் ஒரு முறையும் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு நடத்தப் பட்டது.

21. காவல் துறை வானொலிப் பிரிவு :—

தமிழ்நாடு காவல் துறை மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னை வானொலிப் பிரிவில் இணைக்கப் பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், செங்கற்பட்டு சரகங்கள் ஆகிய ஆறு செய்தித் தொடர்பு நிலையங்கள் மேற்சொன்ன பிரிவின் கட்டுப் பாட்டில் உள்ளன. அவை தவிர, சென்னை மாநகரக் காவற் படை வானொலித் தொடர்பு அமைப்பு, தமிழ்நாடு சிறப்பு காவற் படை

வானொலி தொடர்பு அமைப்பு ஆகியவையும் உள்ளன சென்னை மாநகரம், கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக் கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. 18 நிலையான வானொலி அமைப்பு நிலையங்கள், 6 உட்கோட்ட வானொலி அமைப்பு நிலையங்கள், 24 இயலூர்தி வானொலி அமைப்பு நிலையங்கள். 19 மீவுயர் அதிர்வலைச் செய்தி அஞ்சல் நிலையங்கள், 19 மாநகரச் செய்தித் தொடர்பு நிலையங்கள், 10 வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் ஆகியவை தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. முக்கியமான திருவிழாக்கள், புயல், வேலை நிறுத்தங்கள், பெருமக்கள் வருகை, மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் இந்நிலையங்கள் பயன்படுத்தப்பட்டுவருன்றன: சென்னை, காஞ்சீபுரம். கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் வானிலை அறிவிப்பு நிலையங்கள் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

22. தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்துதல்.—

காவல் படையை நவீனப் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இதற்கான நிதி உதவியையும் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வண்டிகள், கம்பி இல்லாத்தந்திச் சாதனங்கள், அறிவியல் சாதனங்கள் இவற்றை வாங்குவதற்காக 1969–70 முதல் 1977–78 வரை ரூ. 400·79 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் இவற்றை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக ரூ. 48·50 இலட்சம் தொடரினச் செலவாகவும் அரசு வழங்கியுள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் 55 மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்காக ரூ. 4·40 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

23. செய்தித் தொடர்பு.—

உயர் அதிர்வலை, மீவுயர் அதிர்வலைச் செய்தித்தொடர்பு மூலம் காவல் நிலையங்களை மாவட்டத் தலைமையிடங்களுடனும் மாநிலத் தலைமையிடத்துடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும். ஒலி வடிவிலும் வரி வடிவிலும் வானொலி மூலம் அனுப்புவதற்கு வகை செய்ய மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைமையிடத்துடன் ஏற்கெனவே மீவுயர் அதிர்வலைச் செய்தித் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. 873 காவல் நிலையங்களில் 690 காவல் நிலையங்கள் தவிர, சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப் பதிவுகள், நிழற்படங்கள், அய்யத்திற்கிடமான ஆவணங்கள் ஆகியவற்றின் படிகளை புகைப்பட ஒளிபரப்பு முறையில் அனுப்பும் வசதிகள், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் உள்ள சரகத் தலைமையிடங்களில் தற்போது உள்ளன.

[1979 ஏப்ரல் 18

24. மாநிலத் தலைமையிடத்திற்கும் மாவட்டத் தலைமை
யிடங்களுக்கும் இடையே போக்குவரத்து அதிகரித்து வருவதால்,
தற்போதுள்ள ஒருவழி மீடியர் மின்னலைச் செய்தித் தொடர்ப
வசதி போதுமானதாயில்லை. எனவே, ரூ. 100 இலட்சம்
செலவில் நுண்ணலைப் பல்வழிச் செய்தித் தொடர்பு.
வசதி ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தப்பல்
வழிச்செய்தி தொடர்பு அமைப்பு சுமார் 540 கிலோ மீட்டர்
தொலைவுக்குச் செய்தியை அனுப்பக்கூடியது. இத் தொலைவு
ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது' இந்த அமைப்பின்
கீழ் மிக உயரமான இடங்களில் 5 மறு ஒலி பரப்பு வானொலி
நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த அமைப்பின்
மூலம் விரல்ரேகைப் பதிவுகள் குற்ற வழக்குகள்
குறித்த புள்ளி விவரங்கள் தேவைப்படும்பொழுது
மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் அறிந்து கொள்வதற்கு
முடியும் என்பதோடு மாவட்டத் தலைமையிடங்கள
அனைத்திலிருந்து டெலி பிரிண்டர்கள், உருவ நேர்படி
தொடர்பு (Facsimile circuits) ஆகியவற்றின் மூலம் ஒரே
நேரத்தில் குற்ற வழக்குகள் குறித்த தகவல்களை விரைவாக
அனுப்பவும் முடியும். இந்த அமைப்பை நிறுவும் பணியை
காஜியாபாத்திலுள்ள திருவாளர்கள் பாரத் எலக்ட்ரானிக்ஸ்
லிமிடெட் நிறுவனம் 1978 அக்டோபரில் செய்து முடித்தது.
இந்த அமைப்பு செயல்படத் தொடங்கிவிட்டது.

25. மாநிலத்தில் 873 காவல் நிலையங்களும், 185 புறக்
காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 855 காவல்
நிலையங்களுக்கும் 137 புறக்காவல் நிலையங்களுக்கும் தொலை
பேசி வசதி செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்கனவே அனுமதி
வழங்கியுள்ளது. எஞ்சிய 18 காவல் நிலையங்களிலும் 48
புறக்காவல் நிலையங்களிலும் தொலை பேசிகள் அமைக்க
அரசு 1979-80 ல் அனுமதி வழங்கக் கருதியுள்ளது. 855
காவல் நிலையங்களிலும் 137 புறக்காவல் நிலையங்களிலும்
தொலைபேசிகள்அமைக்கஅரசு அனுமதி வழங்கிவிட்டபோதிலும்
தொலை பேசித்துறை, இதுவரை, 747 காவல் நிலையங்களிலும்
91 புறக்காவல் நிலையங்களிலும் மட்டுமே தொலை பேசிகள்
அமைத்துள்ளது. தொலைபேசித் துறை அதிகாரிகளுடன்
கலந்தாலோசித்து எஞ்சிய 108 காவல் நிலையங்களிலும்
புறக்காவல் நிலையங்களிலும், கூடிய விரைவில் தொலை
பேசிகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

26. காவல் துறையினருக்கு அறிவியல் தொழில் நுட்ப
சாதனங்கள்,—

சட்டத்தையும் ஒழுங்கையும் திறம்படப் பேணி வரவும்,
குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் கண்டு பிடிக்கவும்
எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை அமைப்ப
தென அரசு முடிவு செய்துள்ளது. மாநிலக் குற்றஞ்சார்ந்த

1979 ஏப்ரல் 18]

அறிவியல் ஆய்வுக் கூடத்தில் நவீன கருவிகள் அமைக்கப்பட்டு
வருகின்றன. காவல் துறை மாவட்டங்கள் அனைத்திலும்,
எல்லா வசதிகளும் நிறைந்த, குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்
கூடப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள், புலனாய்
விற்கு நன்கு பயன்பட்டு வருகின்றன. 19 காவல் துறை மாவட்டங்
களிலும் நிழற்படப் பிரிவுகளும் ஒருவிரல் ரேகைப் பிரிவும்
செயல்பட்டு வருகின்றன. குற்றம் நடைபெற்ற இடத்தில்
காணப்பெறும் தடயங்களையும் கைரேகைகளையும் விரைவாக
அடையாளம் கண்டு கொள்வதற்காக ரூ. 11·2 இலட்சம்
செலவில் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் "கோடக் மிரா
கோடு" (Kodac Mira Code) மைக்ரோ பிலிம் என்னும் சாதன
அமைப்பு நிறுவப்பட்டது. நுண்படச் சுருளில் கைவிரல்
ரேகைப் பதிவேடு வைத்துவரும் முறை ஏற்கனவே தொடங்கப்
பட்டுவிட்டது. இது, 1979 இறுதிக்குள் முடிவடையக் கூடும்.

காவல் துறைப் புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவு.

27. காவல் துறைப் புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவிற்கு அரசு
அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 இலட்சம் குற்ற நிகழ்வுகள்
3 இலட்சம் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு,
பதிவு செய்யப்பட்டு குறியீடு இடப்பட்டுள்ளன, மூன்று
இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகளும் கணக்
கீட்டுப் பொறி முறையில் கணக்கு வைத்து வரப்படுகின்றன.
குற்ற நிகழ்வுகள், குற்றவாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள்,
விரல் ரேகைப் பதிவுகள் ஆகியவற்றைக் கணக்கீட்டுப் பொறி
முறையில் வைத்து வரும் பணி முடிவடைந்துள்ளது. இம்
மாநிலத்திலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திற்கும்
அன்றாடம் செய்தி வழங்கும் நடைமுறை 1— 2—1975 முதல்
தொடங்கப்பட்டது. குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும்
விரைவில் கண்டுபிடிக்க இது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.
தேசிய காவல் துறைக் கணக்கீட்டுப் பொறி கணிப்புமுறைத்
திட்டத்தின்கீழ் ரூ. 74 இலட்சம் செலவில் டி.டி.சி. (T.D.C.)
316 கணக்கீட்டுப் பொறியை பெறவிருக்கும் மாநிலக் காவல்
படை முதல் அணியில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது.
திருவாளர்கள் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
லிமிடெட் என்னும் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஓர் உடன்
பாட்டின்படி, அந்த நிறுவனம் கட்டங்கட்டமாக கணக்கீட்டுப்
பொறியினை வழங்கி வருகிறது. முதல் கட்டம் தொடர்பான
இயந்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இவை சோதனைக்குட்
படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரம் விரைவிலேயே
தொடங்கி வைக்கப்படவிருக்கிறது. இரண்டாவது கட்டம்
தொடர்பான இயந்திரங்கள் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில்
வழங்கப்படலாம்.

போக்குவரத்துப் பணிக்களரி-பயிற்சிப்பள்ளி, ஆவடி.

28. தமிழ்நாடு காவல் துறை ஆணைக்குழுவின் பரிவுரையின்
அடிப்படையில்' சென்னை மாநகரக் காவல் படைக்கும் ஆயுதந்
தாங்கிய காவல் அணிக்கும் பயன்படும் விதத்தில் ஆவடியில்

போக்குவரத்துப் பணிக்களரி—பயிற்சிப்பள்ளி ஒன்று திறக்கப்
பட்டது. இப் பள்ளி 1975, டிசம்பர் திங்கள் 20 ஆம் தேதியிலி
ருந்துஇயங்கி வருகிறது.

29. தமிழ்நாடு காவலர் நல நிதி.

காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறாப் பணி
யாளர்களுக்கு, நிதி உதவி, படிப்புதவி, நல உதவி, பொழுது
போக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக ஏற்
படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி தொடர்ந்து செவ்விய
முறையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறையில் பணி
புரியும் அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் மனமுவந்து
கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற
அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்
நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது, 1971-72 ஆம் ஆண்டில்
இருந்து ஒவ்வொரு நிதி ஆண்டும் ஒரு மொத்த மானியமாக
ரூ. 1·5 இலட்சம் ரூபாயை அரசு இந்நிதிக்கு வழங்கி வருகிறது.

30. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித்
தொகை நிதி.

தமிழ்நாடு காவலர் நல நிதியைத் தவிர தமிழ் நாட்டுக்
காவல்துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதியும்
உள்ளது. காவல் துறை அரசிதழ்ப் பதிவிலா நிர்வாக அதிகாரி
களின் பிள்ளைகளில் தகுதியுடையோர்க்குக் கல்லூரிகளில் மேல்
படிப்பும், தொழில் நுட்பக் கல்வியும் கற்க ஆண்டுதோறும் இந்
நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனிப்
பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்
நிதிக்கு தொகை திரட்டப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டில்
படிப்புதவித் தொகை வழங்குவதற்காக இந்நிதியிலிருந்து ரூபாய்
28,000 செலவிடப்பட்டது.

31. தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம்.

தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம் தொடர்ந்து நற்
பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு வகுத்த பல்வேறு
திட்டங்களின்கீழ் நூற்பு. தையல் வேலை, பாய் முடைதல்,
ஜமுக்காளம் நெசவு, தீக்குச்சி செய்தல், பட்டாசு வெடி மருந்து
வைப்பதற்கான உறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகிதஉறை
செய்தல், புத்தகம் கட்டுதல். பாற்பண்ணை, கோழிப்பண்ணை,
கைவினைத் தொழில்கள், பனியன்கள் தயாரித்தல் முதலிய பல்
வேறு தொழில்கள காவலர் குடும்பங்களின் வருவாயை உயர்த்து
வதில் தொடர்ந்து துணை புரிந்து வருகின்றன.

32. ஊர்க்காவல் படை.

இந்தத் தொண்டு நிறுவனம் காவல் துறையினருக்குத்
தொடர்ந்து துணைப் படையாகத் திறம்படச் செயல்பட்டு
வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 96 அணிகளில் 32 அணிகள்

சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 64 அணிகள் மாவட்டங்
களில் 52 இடங்களில் அமைந்துள்ளன. 5 ஊர்க்காவல் படை
மகளிர் அணிகள் உள்ளன. அவற்றில் 3 அணிகள் சென்னை
நகரிலும், 2 அணிகள் அணியில் பாதி பேர் வீதம் நான்கு
மாவட்டத் தலைமை இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை,
கோயம்புத்தூர், நாகர்கோயில் ஆகிய இடங்களிலும் அமைந்து
உள்ளன. இந்த அறிக்கை ஆண்டில், போக்கு வரத்தை
முறைப்படுத்தல், இரவு நேரத்தில் ரோந்துப்பணி, வெள்ள
நிவாரணப்பணி, சமூகப்பணி ஆகியவை தொடர்பான கடமை
களைக் கவனிப்பதுடன் திருவிழாக்கள் ஏனைய பொது நிகழ்ச்சி
களில் பாதுகாப்புப்பணி இவற்றில் ஊர்க்காவல் படையினரின்
பணி பயன்படுத்தப்பட்டது. முதலுதவி, தீயணைப்புப் பணி
உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளிலும அவர்களுக்குப்
பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த அறிக்கை ஆண்டில் இம்
மாநிலத்தில், புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருச்சிராப்பள்ளி,
குளித்தலை, நாகப்பட்டினம், வேதாரண்யம், இராமநாதபுரம்,
மண்டபம், சிதம்பரம், மதுராந்தகம், பெரம்பூர், சைதாப்
பேட்டை போன்ற வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 12 இடங்களில்
கிராமப் பகுதி ஊர்க்காவல் படையை அமைப்பதற்கு அரசு
அனுமதி வழங்கியது. தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில்
புயல் வீசியபோதும் இதற்குமுன் கண்டிராத அளவிற்குப் பெரு
மழை பெய்தபோதும் இந்த கிராமப்பகுதி ஊர்க்காவல் படை
யினர் குறிப்பாக நற்பணி புரிந்தனர்.

33. போக்குவரத்து நெறிக் காவல் அமைப்பு.

“சென்னை நகரக் காவலர் போக்குவரத்து நெறிக்காவலர்
அமைப்பு” 1978ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது
முற்றிலும் தன் விருப்பத்தில் செயல்படும் அமைப்பாக உள்ளது.
சென்னையில் 20-9-78ல் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்
தலைமை வகித்த ஒரு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களால் இந்த அமைப்பு தொடங்கி வைக்கப்பட்டது. இந்த
அமைப்பில் முதன்மை பாதுகாவலர் ஒருவர் துணை முதன்மை
பாதுகாவலர் ஒருவர், போக்குவரத்துப் பாதுகாவலர்கள் 70பேர்
ஆகியோர் உள்ளனர். உடற்பயிற்சி, போக்குவரத்துச் சட்டங்கள்,
போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றில் 10 நாட்
களுக்கு அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது.
போக்குவரத்துப் பாதுகாப்பைப் பராமரிப்பதில் காவலர்களுக்கு
உதவி செய்தல், பொது மக்களுடனும், அதிகாரிகளுடனும்
ஒத்துழைத்தல், விபத்துக்கள் தடுப்பது, போக்குவரத்தைக் கட்டுப்
படுத்துவது குறித்துச் சிறந்த திட்டம் ஒன்றை வகுப்பதும்,
சாலையில் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு பற்றி எடுத்துரைப்
பதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். முக்கியப்
பிரமுகர்களின் வருகையின் பொழுது ஏற்படும் பெருங்கூட்டங்கள்
கிரிக்கெட் விளையாட்டின் பொழுது பாதுகாப்பு ஏற்பாடு
செய்தல் போன்ற சமயங்களில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்து
வதில் அவர்கள் இதுவரை மிகச் சிறந்த முறையில் பணியாற்றி
யுள்ளனர்.

[1979 ஏப்ரல் 18

34. காவலர் வீட்டு வசதித் திட்டம்.

காவல் துறை சார் நிலைப்பணியாளர்களில் 80 சதவீதத்
தினருக்கு வீட்டு வசதி அளிக்கும் நோக்கத்தோடு 1955-56 ஆம்
ஆண்டில் காவலர் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டது.
முதலாவதாக, இது திட்டம் சாராத ஒரு முக்கியமான திட்ட
மாகக் கருதப்பட்டது. பின்னர் இது திட்டப் பணியில்
சேர்க்கப்பட்டது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் 80
சதவீதத்தினருக்கு வீட்டு வசதி அளிப்பதும் இத்திட்டத்தில்
அடங்கும் 80. சதவீதத்தினருக்கு வீட்டு வசதியளிக்க இதுவரை
திட்டமிடப்பட்டதில் 60 சதவீதத்தினருக்கு வீட்டுவசதி அளிக்கப்
பட்டு விட்டது. இந்திய அரசு 1978-79 ஆம் ஆண்டுக்குக் கடன்
உதவித் திட்டத்தின் கீழ் 34·68 இலட்சம் ரூபாய் அனுமதித்து
உள்ளது. இந்திய அரசின் ஏழாவது நிதி ஆணைக்குழு காவலர்
வீட்டுவசதித் திட்டத்திற்காக 1979-84ஆம் ஆண்டில் 675
இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. வரும் ஆண்டுகளில் காவலர்
வீட்டு வசதித் திட்டம் விரைவுபடுத்தப்படும்,

35. பதக்கங்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 காவல் துறை அதிகாரிகளுக்கும்,
காவலர்களுக்கும் 1978 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின்
காவலர் பதக்கங்களும், காவல்துறையினரின் பதக்கங்களும்
வழங்கப்பட்டன.

36. 1978 ஆம் ஆண்டில் 30 காவல் அதிகாரிகளுக்கும், காவலர்
களுக்கும் சிறந்த சேவைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் காவல்
பதக்கங்கள் வழங்கப்பட்டன. காலஞ்சென்ற திரு. ஒ. முருகன்,
காவலர் 1980 (தமிழ் நாடு சிறப்புக் காவல்படை IV அணியைச்
சேர்ந்தவர்) துணிவுடைமையைப் பாராட்டி அவரது மரணத்
திற்குப் பின் முதலமைச்சரின் காவலர் பதக்கத்துடன் ரொக்கப்
பரிசு 3,000 ரூபாயும் வழங்கப்பட்டன.

37. விளையாட்டுப் போட்டிகள்.

இந்த ஆண்டு மாநிலக் காவல் உடற்பயிற்சி நீச்சல் போட்டி,
மாநிலக் காவல் பணிப்போட்டி சரகங்களுக்கு இடையேயான
விளையாட்டுப் போட்டி ஆகியவை தமிழ்நாடு காவல்
துறையினரால் நடத்தப் பட்டன. புதுடில்லியில் 18-8-1978
முதல் 29-8-1978 வரை நடைபெற்ற 27ஆவது அனைத்து
இந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டியில்
தமிழ்நாட்டைச் சேர்ந்த காவலர் பங்கு கொண்டனர். இது
தவிர அரியானா மாநிலத்தில் கெர்னல் மாவட்டத்தில் மதுபன்
என்ற இடத்தில் 2-12-1978 முதல் 10-12-1978 வரை நடை
பெற்ற பணிப்போட்டியில் தமிழ்நாடு மாநிலக் காவல் பணிப்
போட்டிக் குழுவினர் பங்கேற்றனர். 1978ஆம் ஆண்டில் நடை
பெற்ற அனைத்து இந்திய காவலர் பணிப்போட்டியில் தமிழ்
நாடு காவல் துறையினர் 7 தங்கப் பதக்கங்களையும். 4
வெள்ளிப பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும்

1979 ஏப்ரல் 18]

பெற்று வெற்றி வாகை சூடினர். அறிவியல் சாதன ஆய்வு
அணி அனைத்தும் தெரிந்த விளையாட்டு வீரர் கேடயத்தைப்
பெற்றதோடு மூன்றாவது இடத்தை வகித்தது. இது தவிர
உருவப்படம் வரைதல் போட்டியில் முதலாவது, இரண்டாவது
பரிசுகளைப் பெற்றன. கைவிரல் ரேகைப் பதிவுக் குழு
முதலாவது, மூன்றாவது பரிசுகளைப் பெற்றது. காவல் துறை
யினர் வைத்து வரும் நாய்ப்படையில் இரண்டு நாய்கள் ஒவ்
வொன்றும் நன்கு வளர்ப்புச் சோதனையில் முதல் பரிசைப்
பெற்றன.

38. சுற்றுக் காவல் படைகள்.

மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதித் துறை
களை மீறி நடப்பவர்களைக் கண்டு பிடிக்கவும், குற்றவாளிகளைக்
கைது செய்யவும் தமிழ்நாட்டிலுள்ள 19 காவல் மாவட்டங்களில்
6 மாவட்டங்களில் அதாவது கோயம்புத்தூர் (நகர்ப்புறம்),
மதுரை (கிழக்கு), தென்னார்க்காடு, தஞ்சாவூர் (மேற்கு),
திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுற்றுக்
காவற் படையினர் செயல் பட்டு வருகின்றனர். ஏனைய
காவலர் மாவட்டங்களில் கூடுதலாக ஏழு சுற்றுக் காவல்
படைகளை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

39. காவலர்—பொது மக்கள் நல்லுறவு.

"பொது மக்கள் தொடர்பு" என்பது இன்று அதிக நாட்டம்
செலுத்தப்பட்டுவரும் சிறப்புத் துறையாகும். 47,000 பேரையும்
ஏராளமான அதிகாரங்களையும் சமூகத்தின் மூலைமுடுக்கு
களிலெல்லாம் ஊடுருவியுள்ள அதன் பிணைப்பும் கொண்ட காவல்
துறையைப் போன்ற பெரிய துறை எதுவும் வல்லுநரின்
ஆலோசனை இன்றி செயல்பட முடியாது. பொது மக்கள்
தொடர்பு வல்லுநர் ஒருவரை காவல் துறையில் நியமிப்பது
குறித்து அரசு இப்போது பரிசீலித்து வருகிறது.

40. காவல் துறையினரின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

1978 ஆம் ஆண்டில் பல்வேறு வகை நிர்வாகப் பணி
அலுவலகப் பணிகளில் கூடுதலாக 435 பதவிகளை ஏற்படுத்த
அரசு அனுமதி வழங்கியது. சட்ட மன்றத்தில் அளித்த உறுதி
மொழிக்கிணங்க காவல் துறைப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்
படும் 10,000 காவலர்களில் முதல் கட்டத்தில் 2,000 காவலர்
களை வேலைக்கமர்த்தும் வகையில் கீழ்க்காணும் கூடுதல் பணி
யாளர்களுக்கு அனுமதி வழங்கும்படி கேட்டு காவல்துறை இன்ஸ்
பெக்டர் ஜெனரல் அனுப்பியுள்ள செயற் குறிப்பை அரசு பரி
சீலித்து வருகிறது :—

அலுவலகப் பணியாளர்கள்.

	..	..	3
நேர்முக உதவியாளர்கள்	..	..	2
கண்காணிப்பாளர்கள் (தேர்வுத்தரம்)	..	..	12
கண்காணிப்பாளர்கள்	..		

அலுவலகப் பணியாளர்கள்—தொடர்ச்சி.

உதவியாளர்கள்	79
இளநிலை உதவியாளர்கள்	89
தட்டச்சர்கள்	10
பதிவேட்டு எழுத்தர்கள்	3
கடைநிலை ஊழியர்கள்	28
தனிப்பிரிவு உதவியாளர்கள்	2
சிறுவர் காவலர்கள்	8

கைவிரல் ரேகை பதிவு செய்யும் பணியாளர்கள்.

இயக்குநர்	2
கைவிரல் ரேகைப் பதிவு கண்காணிப்பாளர்.	6
கைவிரல் ரேகைப் பதிவு வல்லுநர்கள் ..	31
கைவிரல் ரேகை தேடுபவர்கள்	39
புகைப்பட உதவியாளர்	1

நிர்வாகப் பணியாளர்கள்

காவல் துறை உதவிக் கமிஷனர்	1
இன்ஸ்பெக்டர்கள்	25
ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள்	2
டெபுடி இன்ஸ்பெக்டர்கள்	13
சப்—இன்ஸ்பெக்டர்கள்	163
ரிசர்வ் சப்—இன்ஸ்பெக்டர்கள்	8
உதவி சப்—இன்ஸ்பெக்டர்கள்	13
ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்	6
தலைமைக் காவலர்கள்	246
காவலர்கள் (முதல் நிலை)	87
காவலர்கள் (இரண்டாம் நிலை)	1,153
பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள்	3
பெண் தலைமைக் காவலர்கள்	29
பெண் காவலர்கள்	118

தொழில் நுட்பப் பணியாளர்கள்.

காவல் துறை வானொலி அலுவலரின் தொழில் நுட்ப உதவியாளர் (அரசிதழ் பதிவு பெற்றவர்).	5
காவல் துறை வானொலி அலுவலரின் தொழில் நுட்ப உதவியாளர்கள் (அரசிதழ் பதிவு பெறாதவர்).	8

தொழில் நுட்பப் பணியாளர்கள்— தொடர்ச்சி.

வானொலி மேற்பார்வையாளர்கள் ..	8
வானொலித் தொழில் நுட்பப் பணியாளர்கள் ..	1
கம்பியில்லாச் செய்திக் கருவி இயக்குபவர்கள் ..	4
கம்பியில்லாச் செய்தி கருவி தொழில் நுட்பப் பணியாளர்கள் ..	2
குற்றேவலர்கள்	5

மேற்சொன்ன கூடுதல் பணியாளர்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டால் காவல் துறையின் பல்வேறு பிரிவுகள் பெருமளவிற்கு வலுப்பெறும். இதனால், காவல் துறையின் பல்வேறு பிரிவுகளும், சட்டம் ஒழுங்கினைப்பேணுதல், குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல், மது விலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கான செயல்திறன் மேம்படும். நிர்வாகப் பணியாளர் களின் எண்ணிக்கையை உயர்த்தினால் அலுவலக நிர்வாகத்திறன் உயரும். 1979-84 ஆம் ஆண்டுகளில் காவல் துறை வலுப் பெறுவதற்காக ரூ.443 இலட்சம் தொகையை அளிக்க, ஏழாவது நிதிக்குழு வகை செய்துள்ளது, இதில் ரூ. 80 இலட்சம் தொகை 1979—80—ல் விடுவிக்கப்படும்.

41. காவல் துறையில் உள்ள எழுச்சி.

காவல் துறையில் உள்ள எழுச்சி, கட்டுப்பாடு, ஆகியவை தொடர்ந்து நல்ல நிலையில் இருந்தன; அவர்கள் தங்கள் கடமைகளை சிறப்புடன் ஆற்றினர்; காவல் துறையைச் சேர்ந்த எல்லாப் பதவித் தரத்தினரும் எழுச்சியுடனும், ஆர்வத்துடனும் தொடர்ந்து பணியாற்றுகின்றனர்.

இணைப்பு.

31—12—1978 அன்றுள்ளபடி காவல் படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை.

பதவித்தரம்.	பதவிகளின் எண்ணிக்கை.
(1)	(2)
காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்	1
கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ..	1
காவல் துறை ஆணையாளர் ..	1
துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்	15
சூப்பிரெண்டெண்ட்/இணை சூப்பிரெண் டெண்ட்.	27
கூடுதல் சூப்பிரெண்டெண்ட் ..	3

[1979 ஏப்ரல் 18

தளவாய்	5
துணைத் தளவாய்	3
உதவி சூப்பிரெண்டெண்ட்/துணை சூப்பிரெண்டெண்ட் (தரம் 1)	203
துணை சூப்பிரெண்டெண்ட் (தரம் 2)	
துணை சூப்பிரெண்டெண்ட் (தரம் 3)	27
காவல் துறை இன்ஸ்பெக்டர்	22
ரிசர்வ் இன்ஸ்பெக்டர்	656
டெபுடி இன்ஸ்பெக்டர்	79
சப்-இன்ஸ்பெக்டர்	204
ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்	2,010
உதவி சப்-இன்ஸ்பெக்டர் ..	296
ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர் ..	696
தலைமைக் காவலர் (அவில்தார்) ..	159
நாயக்	4,813
லான்ஸ் நாயக்	388
காவலர் (முதல் நிலை)	345
காவலர் (இரண்டாம் நிலை) ..	4.419
பெண் சப்-இன்ஸ்பெக்டர் ..	32,705
பெண் தலைமைக் காவலர் ..	4
பெண் காவலர்	4
..	65
மொத்தம் ..	47,161

இணைப்பு II.

[286 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு தீயணைப்புத் துறை

1978–79

ஆய்வுரை.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை 1967 ஆம் ஆண்டு
அக்டோபர் முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது. மக்களின்
உயிரையும் உடமையையும் தீ விபத்துக்களிலிருந்தும் மற்றும்
இதர இயற்கை இடர்களிலிருந்தும் காப்பாற்றுவதே தீயணைப்புத்
துறையின் குறிக்கோளாகும். தமிழ்நாடு தீயணைப்புத்
துறை அதன் அமைப்பிலே நாட்டிலேயே பெரியது எனவும்,

1979 ஏப்ரல் 18]

மிகத் திறமை வாய்ந்த தீயணைப்புத் துறைகளில் ஒன்று
எனவும் பெயர் பெற்றுச் செயல்பட்டு வருகிறது. பொது
மக்களுக்கு இத்துறையின் பணி எந்நேரத்திலும் கிடைக்கிறது.

2. தீ விபத்தைத் தவிர்ப்பதும், தீயை அணைப்பதும்,
இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்
காக அது வேறு பல வகைகளிலும் செயலாற்றுகிறது. உதாரண
மாக சந்தைகள், திருவிழாக்கள் நடைபெறும் பொழுது
தீத்தடுப்புப் பணிகளை மேற்கொள்வதும், கிணறுகளில் விழுந்து
விட்ட மற்றும் இடிந்த கட்டிடங்களில் ஏற்பட்ட இடிபாடு
களிலும், வெள்ளத்திலும் மற்ற விபத்துக்களிலும் சிக்கிக்
கொண்ட மனிதர்களையும் மிருகங்களையும் காப்பாற்றிச்
செயலாற்றி வருகிறது. மேலும், பெரிய நகரங்களில் நோயுற்
றவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவ
மனைக்கு அகற்ற நோயாளி வண்டிகள் பராமரிக்கப்படு
கின்றன. கொள்ளை நோய்கள் தோன்றிப் பரவும் காலங்களில்
சுகாதாரத் துறைக்கு இத்துறை உதவுகிறது. தேர்தல் மற்றும்
கலவரங்களின் பொழுது காவல் துறையினருக்கு பந்தோபஸ்து
வேலைகளில் உதவியளிப்பது போன்ற இதரப் பணிகளையும்
ஆற்றி வருகிறது. மனிதாபிமான வகையில் அமைந்த மேற்
கண்ட பணிகளைத் தவிர, தமிழ்நாடு பொது மக்கள் கூடும்
இடங்கள் சட்டத்தின் கீழும், பஞ்சாயத்துச் சட்டம், நகராட்
சிச் சட்டம், மாநகராட்சிச் சட்டம், படைக்கலச் சட்டம்
ஆகிய சட்டங்களின் கீழும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட
விதிகளின் கீழும், மற்றும் தொழிற்சாலை விதிகள் முதலிட
வற்றின் கீழும் உரிமங்கள் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட
உள்ள இடங்களை ஆய்வு செய்வதிலும், இத்துறை ஈடுபடு
கிறது.

3. 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாளில்
தீயணைப்புப் படையின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்
பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

4. தீயணைப்பு நிலையங்கள்.

நமது மாநிலத்தில் 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள்
1 ஆம் நாள் நிலவரப்படி சென்னை மாநகரில் 14 தீயணைப்பு
நிலையங்களும் மற்றவை வெளி நகரங்களிலுமாக மொத்தம்
103 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும்,
1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 16 ஆம் நாளில் ஒரு புதிய
தீயணைப்பு நிலையம் தூத்துக்குடி அனல் மின்சார பிரிவில்
திறக்கப்பட்டுள்ளது. இத்துடன் மொத்தம் 104 நிலையங்கள்
இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரில்
வட சென்னைக் கோட்டத்தில் தண்டையார்பேட்டை மற்றும்
வ.உ.சி. நகர் ஆகிய இடங்களிலும், வடார்க்காடு கோட்
டத்தில் ராணிப் பேட்டையிலும், சேலம்—தருமபுரி கோட்

டத்தில் உள்ள ஹோசூரிலும் அமைந்துள்ள தொழிற்பேட்டை
களிலும் ஆக நான்கு தீயணைப்பு நிலையங்கள் திறக்க
அரசினரால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு
நிலையங்களுக்குத் தேவையான இடங்கள் ஒதுக்கப்பட்டு,
கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதும் இத்தீயணைப்பு நிலை
யங்கள் திறக்கப்படும். இந்நான்கு நிலையங்களையும் கூடிய
விரைவில் திறக்க, எல்லா முயற்சிகளும் முழு மூச்சுடன் செய்யப்
பட்டு வருகின்றன.

5. தீயணைப்பு அழைப்புகள்.

1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய, இம்மாநிலத்தி
லுள்ள தீயணைப்பு நிலையங்கள் 8,680 அழைப்புகளைப்
பெற்றுச் செயல்பட்டன. இவற்றில், 7,170 தீ விபத்து
அழைப்புகளும், 1,361 அவசர மீட்பு அழைப்புகளும், 149
போலி அழைப்புகளும் ஆகும். தீ விபத்துக்களில் 3,464
நகர்புறங்களிலும் 3,706 நாட்டுப் புறங்களிலும் ஏற்
பட்டன. இவற்றில் 94 தீ விபத்துக்கள் உயிர்
இழப்பு அல்லது ரூ. 50,000–க்கு மேற்பட்ட சொத்துக்
களுக்கு சேதம் சம்பந்தப்பட்ட பெருந் தீ விபத்துக்களாகும்.
தீயினால் அழிக்கப்பட்ட உடமைகளின் மதிப்பு ரூ. 263.6
இலட்சமாகும். அழிவின்றி தீயணைப்புப் படையினரால் மீட்கப்
பட்ட உடமைகளின் மதிப்பு ரூ. 1,268.9 இலட்சமாகும்.
தீயணைப்புப் படைகள் வருமுன் தீ விபத்துக்களில் 111 பேர்
உயிரிழந்தனர், காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 696.

6. அவசர, மீட்பு அழைப்புகள்.

1978-ம் ஆண்டில் 1,361 அவசர அழைப்புகள் பெறப்
பட்டன. நவம்பர் திங்களில் புயல் பெருமழையால் கன்னியா
குமரி, நீலகிரி, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும்
தஞ்சாவூர் முதலிய மாவட்டங்கள் தாக்கப்பட்ட பொழுதும்,
நீலகிரி மாவட்டத்தில் பெரிய அளவில் நிலச்சரிவுகள் ஏற்பட்ட
பொழுதும், மற்றும் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெரு மழை
யின் பொழுதும் மீட்புப் பணிக்காக தீயணைப்புப் படையினர்
மேற்கண்ட மாவட்டங்களில் நாள் பூராவும் அயராமல் மக்கட்
சேதத்தையும், பொருள் சேதத்தையும் தவிர்க்க அரும்பாடு
பட்டனர். இப்பணி பொது மக்களாலும் மற்றும் பத்திரிகை
களாலும் பெரிதும் போற்றப்பட்டது.

7. நோயாளி வண்டி அழைப்புகள்.

ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப, ஒவ்வொரு
தீயணைப்பு நிலையத்திலும், தீயணைப்பு ஊர்திகளுடன்,
நோயாளி வண்டிகளும் உள்ளன. இத்துறையில் மொத்தம் 66
நோயாளி வண்டிகள் உள்ளன. 1978–ம் ஆண்டு டிசம்பர்
திங்கள் முடிய 9,063 முறை நோயாளி வண்டிகளுக்கான

அழைப்புகள் வரப்பெற்றன. அவற்றில், விபத்து மற்றும்
இலவச அழைப்புகள் 525 ஆகும். நோயாளிகளைச் சிகிச்சைக்
காக மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்ற அழைப்புகள் 8,538
ஆகும். அதற்காக வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட
தொகை ரூ. 2.23 இலட்சமாகும்.

8. தீத் தடுப்பு, இதர பாதுகாப்பு மற்றும் நீர் இறைத்தல்:

தீ விபத்து ஏற்படக்கூடிய கட்டுமானங்களுக்கருகே இருந்து,
தீ விபத்துக்கள் ஏற்படாமல் அவற்றைப் பாதுகாக்கும்
ஏற்பாடாக தீயணைப்பு ஊர்திகள் மூலம் ஆயத்தப்பணி மற்றும்
நீர் இறைக்கும் பணிகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. 1978–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 232
ஆயத்தப்பணிகள் மற்றும் நீர் இறைக்கும் பணிகள் மேற்
கொள்ளப்பட்டு, ரூ. 74,331·80 வாடகைக் கட்டணமாக
வசூலிக்கப்பட்டது;

9. விபத்துக்கால அவசரப் பணி வண்டி:

இத்துறையில் ஒரே ஒரு அவசரப் பணி வண்டி மட்டும்
சிறப்பு இணைப்புத் தளவாடங்கள் கொண்டுள்ளது. இது தென்
சென்னைக் கோட்டத்தில் இருக்கிறது. இவ்வண்டி, கவிழ்ந்த
வண்டிகளை தூக்கி அகற்றவும், இடிந்த கட்டிடங்களில் மீட்பு
வேலைகளின் பொழுது இடிபாடுகளை அகற்றவும், பயன்
படுத்தப்படுகிறது. 1978–ல் இவ்வண்டி 42 அழைப்புகளை
சமாளித்தது. மற்றும் வாடகைக் கட்டணமாக ரூ. 6,658–ம்
தனியாரிடம் வசூலிக்கப்பட்டது.

10. மாநிலப்பட்டறையும். நடமாடும் பழுதுபார்க்கும்
குழுக்களும்:

இத்துறையிலுள்ள வாகனங்களை பெரிய அளவில் பழுது
பார்ப்பதற்கான பட்டறை ஒன்று சென்னையில் இத்துறையால்
பராமரிக்கப்பட்டு வருகிறது. கோட்டங்களில் உள்ள ஊர்தி
களின் சாதாரண பழுதுகளை உடனுக்குடன் செப்பனிட
நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் செயல்படுகின்றன.
1978–ம் ஆண்டில் ரூ. 86,312.55 மதிப்புள்ள 185 பழுது
பார்க்கும் வேலைகளை மாநிலப் பட்டறையும், ரூ. 67,697
மதிப்புள்ள 789 பழுது பார்க்கும் வேலைகளை நடமாடும்
பழுதுபார்க்கும் குழுக்களும் செய்திருக்கின்றன.

11. வெகுமதிகள்:

(1) இவ்வாண்டில் சிறப்பாக பணியாற்றிய 3 பணியாளர்
களுக்கு ''தீயணைப்பு சேவை பதக்கம்'' சுதந்திர தினத்தன்று
வழங்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 18

(2) இரண்டு நிலைய தீயணைப்பு அலுவலர்கள், ஒரு தீயணைப்பாளர்– ஓட்டுநர் ஆகியோருக்கு ''பாராட்டத் தக்க பணிக்காக'' ''முதலமைச்சர் பதக்கம்'' வழங்கப்பட்டது. இது தவிர 341 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் அவர்களின் சிறந்த பணிக்காக தொகை ரூ. 2,642 வெகுமதியாக வழங்கப்பட்டது.

12. தீயணைப்புத் துறை பணியாளர் நல நிதி:

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் நன்மைக்காக 1962-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நல நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுது போக்கு வசதி, ஆகியவற்றை அளிக்கிறது. காச நோய், தொழு நோய், புற்று நோய் போன்ற நோய்களால் அவதிப்படுகின்ற இத்துறைப் பணியாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் சத்துணவு வாங்குவதற்காக அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மற்றும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விச் செலவை ஈடு கட்டுவதற்கும், பணியாளர்களில் இறந்துபோனவர்களுடைய குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கவும், அவர்களைச் சார்ந்தவர்களுடைய ஈமச் சடங்குகளுக்கு ஆகும் செலவிற்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் இப்பணியாளர்களில், பணிக்காலத்தில் இந்த நிதியிலிருந்து எவ்வித நிதியுதவியும் பெறாதவர்களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் பொழுது அடையாள மானியத் தொகை அளிக்கவும் இந்த நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. இத் துறையில் பணிபுரியும் 3,290 பணியாளர்கள் இதில் சேர்ந்துள்ளனர். 1978-ம் ஆண்டில் சந்தாவாக ரூ. 8,670.50 வசூலிக்கப் பட்டது. ரூ. 18,802.26 உதவித் தொகையாக பணியாளர் களுக்கு வழங்கப்பட்டது. 1978–ம் ஆண்டிற்கு அரசு கொடையாக ரூ. 10,000 ஒப்பளித்துள்ளது.

13. பயிற்சி:

தீயணைப்புத் துறைக்கென ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி சென்னையில், 2 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் 2 தலைமைத் தீயணைப்போர்கள் உதவியுடன் ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின்கீழ் செயல்படுகின்றது. இங்கு புதிதாகச் சேர்க்கப்படுகின்ற அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது; மேலும் மறுபயிற்சி வகுப்பும் வேறு பல வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இப்பள்ளியில் இவ்வாண்டு பலதரப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் 4 பயிற்சிக் காலங்களில் பயிற்சி வகுப்புகள் தீயணைப்போர் களுக்கு நடத்தப்பட்டது. மொத்தம் இப்பயிற்சி வகுப்பு களில் 180 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 18]

14. பொது:

சென்னை மாநகரைச் சுற்றிலும் அநேக இடங்களில் பரவி வரும் உயரமான பல மாடிக்கட்டிங்களில் தீ விபத்துக் கள் பரவாமல் தடுக்கவும், விபத்தில் சிக்கியவர்களை மீட்கவும் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட ''ஸ்நார்க்கல்'' (Snorkel) என்னும் சிறப்புப் பொறியை சுமார் ரூ.18 இலட்சம் செலவில் வாங்க அரசு ஒப்பளித்துள்ளது. இப்பொறியை இறக்குமதி செய்ய புது டில்லி பொருள் வழங்கல் — ஒரு வகை செய்தல் துறைத் தலைமை இயக்குநர் மூலம் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வழங்கும் நிலையில் உள்ளது. இச்சிறப்புப் பொறி இறக்குமதியாகி உபயோகத்திற்கு வந்தவுடன், பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் எந்த விபத்துக் களானாலும், பயன் விளைவிக்கத் தக்க வகையிலும், திறமையுடனும் சமாளிக்கலாம். எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குள்ளும், அதைச் சுற்றிலும் உள்ள இடங்களிலும் ஏற்படும் பலதரப்பட்ட தீ விபத்துக்களை அணைப்பதற்கு சிறப்பு அமைப்புகளைக் கொண்ட ''க்ராஷ் டெண்டர்' (Crash tender) எனப்படும் சிறப்புச் சாதனம் ரூ. 2.79 இலட்சம் செலவில் பம்பாயில் கட்டுமானம் செய்யப்பட்டு எண்ணூர் தீயணைப்பு நிலையத்தில் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள் முதல் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதே போன்ற சாதனம் ஒன்றைத் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் அமையும் தீயணைப்பு நிலையத்திற்கு வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பிற்சேர்க்கை:

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1–ம் நாள் அன்றைய நிலவரப்படி உள்ள தீயணைப்புத் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை :—

I. அரசிதழ் பதிவு பெற்றவர்கள்—	
1. இயக்குநர்	1
2. துணை இயக்குநர்கள்	2
3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். ..	9
II. அரசிதழ் பதிவு பெறாதவர்கள் —	
1. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்	8
2. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து) ..	1
3. நிலைய தீயணைப்பு அலுவலர்கள் ..	114
4. நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து)	7
5. தலைமை தீயணைப்பாளர்கள் ..	389

6.	ஓட்டுநர்—இயந்திரக் கம்மியர்கள்	
7.	பற்ற வைப்பாளர்	.. 117
8.	தீயணைப்பு—கம்மியர்கள்	 1
9.	தீயணைப்பு தச்சர்	 8
10.	தீயணைப்பு—ஓட்டுநர்கள்	 1
11.	தீயணைப்பாளர்கள்	 619
		 2,403
	மொத்தம்	.. 3,680

வியாழக்கிழமை 1979 ஏப்ரல் மாதம் 19-ம் தேதி.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழ்சீஷமங்கலம் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் துண்டிப்பு.

குறுகிய கால வினா எண். 48. திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், கீழ்க்கொடுங்காலூர் சப்-
ஆபீஸ் மூலம் கீழ்சீஷமங்கலம் பம்பு செட்[illegible]வசாயிகளுக்கு 1979
சனவரி முடிய பாக்கியின்றி கட்டியிருந்தும் பிப்ரவரியில் கட்ட
வேண்டிய பில்லை 5—3—1979-ல் கொடுத்து அந்த பாக்கிக்காக
மட்டும் 16—3—1979-ல் மின் துண்டிப்பு செய்யப்பட்டது என்பது
உண்மையா ?

(ஆ) ஆமெனில் அரசு அறிவிப்புக்கு விரோதமாக நடந்துள்ள அதிகாரிகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பிப்ரவரி மாதத்திற்கான கட்டணத்தை செலுத்தாமைக்கு இப் பகுதியில் மின் துண்டிப்பு செய்யப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அது போல்
மின் துண்டிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். ஆனால் அது போல் அரசு உத்தரவு போட்டும்
கூட மீண்டும் மீண்டும் துண்டிக்கிறார்களே அதைத் தடுக்க அரசு
நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே
மீண்டும் எங்கே நடந்தாலும் அதை அரசுக்கு தெரிவிக்கலாம்.
நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'பல்லவர்-மேடு' கிராமத்தில் தொல்பொருள் ஆய்வு.

*வினா எண். 721— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கக்கு விடையளிப்பாரா:

(அ) காஞ்சிபுரத்தை அடுத்த பல்லவர்-மேடு என்ற இடத்தை ஆய்வு செய்து தொல் பொருள் ஆய்வு துறையினரால் அரசுக்கு ஏதேனும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—(அ) ஆம்.

(ஆ) * விவர அறிக்கை அவை முன்னே வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் நன்கொடை வசூல்.

*வினா எண். 722—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டத்தில் தனியார் பள்ளிகள், கல்லூரி களில் பெரும் தொகை நன்கொடைகள் வற்புறுத்தி வாங்கி வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இதனைத் தடுக்க அறிக்கைகள் விடுவதோடு நில்லாமல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—

(அ) & (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் நன்கொடைகள் வசூலிக்கப்படுவதாகப் பொதுவான குற்றச்சாட்டுக்கள் ஏதும் பெறப்படவில்லையெனினும், கோவை மாவட்டம் ஈரோடு கல்வி மாவட்டம் நசியனூர் பாரதி கல்வி நிலைய உயர் நிலைப் பள்ளியில் மட்டுமே நன்கொடைகள் வசூலிக்கப்படுவதாகப் புகார் பெறப்பட்டதென்றும் பள்ளிக்

* 638 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றது.]

கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இப்புகார் போலியானது என்பதால் இதன் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லையென பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். கோவை மாவட்டத்திலுள்ள தனியார் கல்லூரிகளில் நன் கொடைகள் வற்புறுத்தி வசூலிக்கப்படுவதாக குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் ஏதும் தம்மால் பெறப்படவில்லையென கல்லூரி கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி களில் நன்கொடைகள், தாங்க முடியாத அளவிற்கு பல ஸ்தா பனங்களில் வசூலிக்கப்படுகிறது என்பது எல்லா ஜனங்களிடை யேயும் காணப்படுகிற பேச்சாகவும், நடைமுறையாகவும் இருக்கிறது. பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்களுடைய சம்பளத் தில் இருந்துகூட வசூலிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறபோது குற்றச்சாட்டுகள் வரவில்லை என்று எதிர்பார்க்காமல் அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக ஏதாவது பரிசீலனை செய்து, அல்லது விசாரணை வைத்து, குற்றச்சாட்டுகள் வந்திருந்தாலும், வராவிட்டாலும் அரசே இப்படிப்பட்ட குற்றங்களுக்கு பொது மக்களுக்கு அதிருப்தி ஏற்படுத்துகிறது என்ற முறையில் விசாரித்து ஆய்வு நடத்த முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத்தலைவர் அவர்களே, நன்கொடைகள் வசூலிப்பது என்பதெல்லாம் இன்றைக்கு அரசு தருகிற மானியம் போதாது என்ற நிலையில் இருந்து வருகிறது. ஆனால் பள்ளியில் சிறுவர்களை அனுமதிக்கும் போது கட்டாயப்படுத்தி, அனுமதிக்கும் காலத்தில், அட்மிஷன் நேரங்களில், கட்டாயப்படுத்தி யாரும் நன்கொடை கள் வசூலிக்கக் கூடாது என்கிற தடையை நாங்கள் போட்டி ருக்கிறோம். அதற்குப் பிறகு அவர்கள் வேறு எந்த வழியி லாவது நன்கொடைகள் வசூலிக்க வேண்டும் என்று விரும்பி னால் அவர்கள் அரசினுடைய அனுமதி பெற்று அதைச் செய்ய வேண்டும். அதற்கும் அவர்கள் முறையாக கணக்குகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அரசு அவர்களுக்கு ஆணை போட்டிருக்கிறது. அதை மீறி யாராவது நன்கொடை கள் வசூலித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மானி யத்தை நிறுத்தவும் அரசு தயாராக இருக்கிறது. குற்றச் சாட்டை கொடுப்பவர்கள், குற்றச் சாட்டை மட்டும் தான் அனுப்புகிறார்கள். ஆனால், விசாரணை என்று வருகிற போது அதை நிரூபிக்க, சாட்சி சொல்ல யாரும் முன் வருவது கிடையாது என்ற காரணத்தால் தான் இப்படிப்பட்ட நிலைகள் உருவாகி யிருக்கின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம் நல்ல அம்சங்களை கொண்டவை என்று நான் கருதுகிறேன். அதே சமயத்தில் கடுமையாக நடவடிக்கை தொடர்ந்து நடக்க வேண்டும் என்றால் அந்தப்

[1979 ஏப்ரல் 19

பள்ளிக் கூடங்களினுடைய வரவு செலவு கணக்குகளை பரிசோதனை செய்து கண்டு பிடிப்பதற்கு வழி வழி இருக்கிறது என்றால் இது வரையில் அரசு இல்லையா? பிடித்துள்ளதா ? இனிமேலாவது அதை கையாள அரசு அதை கடை வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ அரசு உத்தரவை மீறி அவர்கள் நன்கொடை வசூலிக்கக் கூடாது என்பது நம் முடைய விருப்பம், ஆனால், அதனை அவர்கள் மீறுகின்றகாலத் திலே நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். அதை கண்டு பிடிக்க அவர்களுடைய வரவு செலவுக் கணக்கை பரிசோதனை செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை நல்லது தான். அதை இனிமேல் ஏற்றுக் கொள்ளலாமா என்று அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கொங்குநாடு ஆர்ட்ஸ் காலேஜ் என்றும், சி.பி.எம். காலேஜ் என்றும் இரண்டு இருக்கின்றன. அங்கே மாணவர்களை அட்மிஷன் செய்கிறபோது நன்கொடை என்கிற அளவில் ரூ. 1,000, ரூ. 2,000 வாங்குவதாக என்னைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களிடத்திலே புகார் மனு கொடுத்து இருக்கிறார்கள். அந்த மனுக்களை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினால் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, புகார் மனுக்களைத் தந்தால் நிச்சயமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளி, கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பது மட்டு மல்ல, ஆசிரியர்கள் நியமனத்திலும் பொருள் பெறுவதும், அது போல் ஊதியம் பெறுவதிலும் சிக்கல் ஏற்பட்டு ஆசிரியர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். தனியார் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தவும், அரசே நேரடியாக ஊதியம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிகளை, கல்லூரிகளை அரசே எல்லா நிலைகளிலும் ஏற்று நடத்துவது என்பது முழுவதும் ஏற்று நடத்தக் கூடிய அதிகாரம் நிச்சயமாக இருக்குமானால் நிச்சயமாக பரிசீலிக்கவேண்டிய தொன்றுதான். இன்றைய தினம் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளை, கல்லூரிகளை எடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, எடுப்பதாக இருந்தால் பெரும்பான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களைத்தான் எடுக்க முடியும். அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்படும் நிலைமை எப்படி இருக்கும் என்றால் சிறுபான்மையாக இருக்கும் மக்களுக்கு இருக்கும். உரிமை பெரும்பான்மை மக்களுக்கு இல்லை என்ற மோசமான நிலைமை

1979 ஏப்ரல் 19]

ஏற்படும் நிலை இருக்கிறது. ஆனால் அங்கே நடைபெறும் தவறுகளை போக்குவதற்கு, நேரடியாக ஊதியம் வழங்கும் முறையில என்ன திட்டங்களை வகுப்பது என்ற முறையில் ஆசிரியர்களோடு கலந்து பேசி அரசு முடிவு எடுக்க பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது ?

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஹையர் செகண்டரி பள்ளிகள் ரூ. 25,000 கட்ட வேண்டும் என்று அரசு சுற்றறிக்கை விட்டு இருந்தது. அதன் அடிப்படையில் கல்வி இயக்குனரும், மற்ற அதிகாரிகளும், ரூ. 25,000 கட்ட வேண்டும் என்று கேட்பதால், பல்வேறு கல்வி நிலையங்களில இவ்வாறு வசூலிக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அப்படி வசூலிக்கக் கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த ரூ. 25,000 கட்டு வதற்காக நன்கொடை வசூலிக்க அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி பள்ளிகளில் நன்கொடை வசூலித்துகட்ட வேண்டும். 25,000 ரூபாய் கட்ட வேண்டும் என்பது நீண்ட காலமாக இருந்து வரும் நடை முறை. கல்லூரிகளோ, பள்ளி களோ ஆரம்பிக்க வேண்டும் என்றால் இந்த முறை இருந்து வருகிறது. இப்போது தான் ரூ. 25,000 வசூலிக்கிறோம். இதற்கு முன்பு ரூ. 50,000 என்று இருந்தது. அதை ரூ. 25,000 என்று குறைத்து இருக்கிறோம். அதை மாணவர்களிடம் வாங்கக் கூடாது. என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். தலைமை ஆசிரியர் வசூலிக்கக் கூடாது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். அங்கே இருக்கிற கரெஸ்பான்டெண்ட் வசூலிக்கக் கூடாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நம்முடைய நோக்கம் எல்லாம் பெற்றோர்-ஆசிரியர்கள் சங்கம் அமைக்கப்பட வேண்டும், பெற்றோர்கள் வசூலித்துக் கொடுக்க வேண்டும், அந்தப் பள்ளியோடு தொடர்பு பெற்றோர்களுக்கு தொடர்ந்து இருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குப் பள்ளியின் வளர்ச்சியில் நேரடியாக ஒரு தொடர்பு ஏற்படவழி யேற்படும் என்று கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த ஹையர் செகன்டரி பள்ளிகள் ஏற்படுகின்றபோது ரூ. 25,000 கட்ட வேண்டும் என்று இருக்கிற காரணத்தால் தான், இப்படிப் பட்ட முறைகேடுகள் நடைபெறுகின்றன என்று அதைப்பற்றி எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் திருச்சி பகுதியில் இப்படி வசூலித்து இருப்பதாகச் செய்தி வந்து இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது புகார்கள் கொடுக்கிறவர்கள் விசாரிக்கப் படுகிறபோது, நிரூபிப்பதற்குத் தயங்குகிறார்கள் என்று சொல் கிறார்கள். ஆகவே, உண்மை அதுதான். பெயில் ஆக்கி விடு வார்களோ என்று பயந்து அப்படிச் செய்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட புகார்களை விஜிலென்ஸ் போட்டு, அப்படிப் பட்ட முறைகேடான வசூலைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

தொகையை குறைந்தது 5 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் என்ற அளவிற்காவது உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? பல விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும் என்றும் ஸ்வீட் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் எனறும் சொன்னார்கள். இந்தக் தொகையை உயர்த்திக் கொடுத்தால் நாங்கள் ஸ்வீட் வாங்கித் கொடுப்பதற்குத்தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கிராமப் புற வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக கடன்கள் தருவது என்ற முறை, ஏற்கெனவே கிராமப் புற வீட்டு வசதிச் சங்கங்களில் இருக்கின்றன. அவைகள் மூலமாகத் தருவது ஒன்று. அபெக்ஸ் சொசைட்டியில் கொடுத்து அதன் பிறகு பிரைமரி சொசைட்டி களின் மூலமாக கொடுக்கப்பட இருக்கின்றது. இவைகளை எல்லாம் அறிவித்து மேலும் என்னென்ன கொடுக்கப் போகி றோம் என்பதை விளக்கி மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கின்றபோது சொல்கிறேன்.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒரே ஒரு வீடுதான் கட்டப்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. இது அநியாயம் இல்லையா ? அந்த இடம் என்ன பாவம் செய்தது ? ஆகவே மேலும் அதிகமான அளவிலே அங்கே உள்ள மக்களுக்கு வீடு கட்டித்தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நிதியாதாரங்களை வைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதிகமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கை. ஆகவே, உண்மையாகவே அது பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 3 மணிக்குச் சொல்வதாகச் சொல்கிறார்கள். 3 மணி வரையில் இங்கே உட்கார வைப்பது என்பது மிகச் சிரமமாக இருக்கும். மேலும் ஒரு முக்கியமான பிரச்சினை. அதாவது ஒரே காலனியாக, பத்து, பதினைந்து வீடுகள் என்று சேர்த்துக் கட்டினால்தான் கடன் கொடுப்போம் என்று கின்ற நிலை இருக்கின்றது. அப்படி என்றால் இந்தத் திட் டத்தைச்செயல்படுத்தவே முடியாது. ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக எங்கெங்கோ இடம் இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தைத் தயவு செய்து கைவிட்டுவிட்டு, இன்றைய தினம் தமிழ்நாட்டிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது துணைக் கேள்வியா? துணைக் கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும். விளக்கம் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, ஆகவே மீண்டும் பழைய திட்டத்தை அமல் படுத்தி அதாவது தனித்தனியாக

வீடுகள் கட்டுவதற்குக் கடன் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்க வேண்டியது மிக முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவனந்தம் : தலைவரவர்களே, கேள்வியே கிராமப் புறங்களில் தனித்தனி வீடுகள் கட்டுவது பற்றித்தான்.

கன்னியாகுமரி மாவட்டத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண். 724— திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குமரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்கு குறைந்த பட்சர் கூலி அமுலாக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

ஆம்.]

திரு. தே. ஞானசிகாமணி பேரவைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கிற தேயிலைத் தோட்டங்களில் காரைமடை, பால் மோர், தேவகிரி ஆகிய தோட்டங்களில் டெண்டர் ரூ. 3.50 சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. அங்கே பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் அமுலாக்கப்படுவதில்லை. ஆகவே இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே குறைந்த பட்ச சம்பளம் 18—11—76ல் கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. 1—12—76 முதல் அது அமுலில் வந்திருக்கிறது. அதை செயல் படுத்துவதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அதைச் செயல்படுத்துவதில் தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஏற் பாடு செய்யும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.—பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதில் தரும் போது குறைந்த பட்சம் சம்பளம் அமுலில் இருப்பதாகச் சொன்னார் கள். குறைந்த பட்சம் சம்பளம் எவ்வளவு? அந்தக் கூலி எல்லாத் தோட்டங்களிலும் கொடுக்கப்படுகிறதா? கொடுக்கப் படாத தோட்டங்கள் பற்றி புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் முதலில் சொன்னேன். 18—11—76ல் கெஜட்டில் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் வாங்கிப் படிக்கலாம். இல்லை என் றால் இன்னும் 2, 3 நாட்களுக்குள் எல்லா அங்கத்தினர்களுக்கும் அச்சிட்டுக் கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதைத் தருவதற்கு தயாராக இருக்கிறேன். அதைப் படிப்பது என்றால் நேரமாகும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே! அந்தத் தோட் டங்கள் குறைந்த ஏக்கரேஜ் இருந்தால் இந்த பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் நாட் அப்ளிகபல் என்று இருக்கிறது. அதனால் ஏற்கனவே நிறைய ஏக்கரேஜ் வைத்திருப்பவர்கள் அதைக் கொஞ்சம் கொஞ்சம் ஆக பிரித்து பினாமியில் வைத்து இந்தச் சட்டத்தை மோசடி செய்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்துவது அவசியம். இந்த மன்றத்தின் மூலமாக ஒரு தீர்மா னத்தை போட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். பேரவைத் தலை வர் அவர்களே சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அதற்காக எந்த எந்த தோட்டத்தை கொண்டு வந்து அமுல்படுத்த முடியும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். சி.ஐ.டி.யு. வைச் சேர்ந்த தொழிலாளர்கள் பிரதிநிதியும் கொண்ட அந்தக் குழு பரிந்துரை வழங்க பரிசீலனை செய்து சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி: ஆன் ஏ பாயின் ஆப் ஆர்டர் குறுகிய கால வினா என்று 1978–79, 1979–80ல் தமிழ்நாடு அரிசனங்களுக்காக வீடுகள் கட்டப்படும் திட்டத்தைப் பற்றி கேட்டிருந்தேன். அதை நீங்கள் சாதாரண கேள்வியாக எடுத்துக்கொண்டதாக கேள்விப்படுகிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி என்னிடம் கேளுங்கள். நான் பார்த்துச் சொல்கிறேன்.

வடதலைக்குளத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

*வினா எண். 725—திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வடதலைக்குளம் அரிசன காலனியில் 'தாட்கோ' மூலம் புதிய கல் வீடுகள் கட்ட அனுமதித்து கடந்த 20—10—76-ல் கடலூர் நெடுஞ்சாலை பணித்துறை மூலம் டெண்டர் விடப்பட்டு இது நாள் வரை வீடுகள் கட்டப் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வடதலைக்குளம் அரிசனக் காலனியில் தாட்கோ மூலம் புதிய வீடுகள் கட்ட 24—10—75-ல் கடலூர் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் டெண்டர் விடப்பட்டு இதுவரை அங்கு வீடுகள் கட்டப் பெற வில்லை.

(ஆ) வடதலைக்குளம் அரிசனக் காலனியில் வீடுகள் கட் டுவது தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் வீடுகள் கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். உண்மை யிலே நான் வருத்தப்படுகிறேன். அந்தத் திட்டத்தை அந்த நபர்களிடமே ஒப்படைத்தால், பணத்தைத் தந்தால், அவர் களே சொந்தமாக வீடுகளை கட்டிக் கொள்வார்கள். அதைப் பரிசீலிப்பார்களா?

அப்படிச் செய்தால் அவர்கள் வீடுகள் ஒழுங்காகக் கட்ட முடியும். குடியிருப்புகளை காண்ட்ராக்டர் கட்டுவது என் றால் அது ஒழுங்காக இருக்காது.

(முற்பகல் 9–20.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த வீடுகட்டும் திட்டம் 1974–76ஆம் ஆண்டுகளில் டெண்டர் விடப்பட்டது. இப்போது அதற் காக உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட்டு பயன் இல்லை. அப் போது மொத்தமாக ஒதுக்கியதில் அந்த மாவட்டத்திற்கு ஒதுக் கியிருந்ததை மாற்றி அமைத்ததின் காரணத்தினால்தான் எண்ணிக்கை குறைந்ததே தவிர வேறு காரணம் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன்: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி டெண்டர்கள் விடப்பட்டதற்குப் பிறகு ஏன் கட்டப்படவில்லை என்பது தான். அதற்குரிய காரணத்தை அறிந்து கொள்வதற் குத்தான் இந்த கேள்வி போடப்பட்டிருக்கிறது. 1974–76 ஆம் ஆண்டுகளில் டெண்டர்கள் போடப்பட்டும் இன்னும் வீடுகள் கட்டப்படவில்லை என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். மாற்றி அமைத்ததால்தான் வேறு விதமாக போய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள். அப்படியானால் டெண்டர்கள் போடப் பட்டதின் அடிப்படையில் வீடுகளை கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974–76ஆம் ஆண்டுகளில் 35,117 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 35,117 வீடுகளில் தென்னார்காடு

மாவட்டத்திற்கு 5,102 வீடுகள் ஒதுக்கப்பட்டன. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வடதலைக்குளம் இதில் இடம் பெறாததற்கு காரணம், பின்னால் 31—12—75-ல் 30 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கே அரசு ஆணையிட்டது. அதில் தென்னாற்காடு மாவட்டத்திற்கு 3,121 வீடுகள் மட்டும் தான் கிடைத்தது, அதனால் தான் இந்த ஊரில் வீடு கட்டப்படவில்லையே தவிர வேறு எந்தவிதமான காரணமும் இல்லை.

திரு. துரை முத்துசாமி: இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெண்டர்கள் விடப்பட்டதாக சொன்னார்கள். இந்த டெண்டர்கள் யார் யாருக்கு விடப்பட்டிருக்கிறது, அந்த விவ ரம் என்ன? இந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக்கி கிறதா? அதற்குப் பிறகு 76-ல் விட்ட டெண்டர்களுக்கு இப் போது ஃபாலோ அப் ஆக்ஷன் இருக்கிறதா? மேலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக் கிறதா என்று கேட்டார்கள். அது செத்து விட்டது என்பது தான் இங்கு இருக்கிற விவரங்களிலிருந்து தெரிகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதினால்தான் வடதலைக் குளம் இடம் பெறவில்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை.

அணைக்கரைப் பட்டியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 726—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வ. புதுப்பட்டி பஞ்சா யத்தில் உள்ள அணைக்கரை பட்டி கிராமத்தில் அரிசனங் களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை தனியார் ஆக்கி ரமித்து விவசாயம் செய்வது அரசுக்குதெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட் டம், வ. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள அணைக்கரைப்பட்டி யில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை திரு. வடக்குத்திய தேவர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) திரு. வடக்குத்திய தேவரின் ஆக்கிரமிப்பை வெளி யேற்ற திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்தார். இந்த நடவடிக்கையை எதிர்த்து திரு. வடக்குத்திய தேவர் திருவில்லிபுத்தூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 688/78 எண்ணிட்ட உரிமையியல் வழக்கு மற்றும் 1117/78 எண்ணிட்ட உறுத்துக் கட்டளை மனு தொடர்ந்துள்ளார். வழக்கை எதிர்த்து எதிர் ஆணையுறுதிப் பத்திரம் மற்றும் எழுதிய வாக்குமூலம் 24—1—79 அன்று தாக்கல் செய்யப்பட்டன. வழக்கு முடிந்து தீர்ப்புரை கிடைத்த பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இயற்றுகிற சட்டமும், நீதித் துறையும் பணக்காரர் களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு ஆதரவாக இல்லை. ஆதலால் இந்த அரசாங்கம் ஏழை எளிய வர்களின் அரசாங்கமாக இருப்பதால், ஏதாவது ஒவர் ஓக் பண்ணி சுடுகாட்டுக்கு நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும். ஆனால் நீதிமன்றம் அனுதாபம் தெரிவிக்காது.

மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த் தேக்கம்.

*வினா எண் 727—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள மேல சோழங் குப்பம் கிராமம் அருகில் மிருகண்டா நதியின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) வேலை எப்போது துவங்க உத்தேசம் ?

(ஈ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) இலலை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) : இக் கேள்விகளுக்கு இடமில்லை.

[1979 ஏப்ரல் 19

பருத்தி உற்பத்தி.

*வினா எண் 728—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு, வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பருத்தி உற்பத்தியில் புதிதாக வளர்ச்சிப் பெற்று வரும் மாவட்டம் எது?

(ஆ) உற்பத்தியான பருத்திகள் அனைத்தும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தால் மட்டுமே விற்பனையாகிறதா அல்லது தனிப்பட்டவர் வணிகமும் நடந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) தென் ஆற்காடு, வட ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்கள்.

(ஆ) மேற்கண்ட மாவட்டங்களில் உற்பத்தியாகும் பருத்திகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனியார் வர்த்தகம் மூலம் விற்பனையாகின்றன.

திரு. ரா. வெங்கிடு என்கிற வெங்கிடுசாமி: தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்தி கோவை மாவட்டத்திலே கோவை, பல்லடம், அவிநாசி போன்ற தாலுக்காக்களில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு மகசூல் குறைந்திருப்பதற்கான காரணம் என்ன? ஏக்கருக்கு 12 பொதி விளையக்கூடிய இடத்தில் இப்போது 2, 3 பொதிகூட விளையவில்லையே, அதற்கு அடிப்படையான காரணம் என்ன? இதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், 75,000 ஹெக்டேர் நிலத்தில் பல்வேறு வகையான பருத்திகள், சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 'வரலட்சுமி' 'சுவின்', எம்.சி.யு.-5, எம்.சியு-7 என்று பல்வேறு வகையான பருத்திகள் அங்கே சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால், பல்வேறு இடங்களில் 'புருடோனியா' என்ற புழுவினால், பருத்தி உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. அதற்காக, துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது விளைச்சல் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே பருத்தி விளைச்சலில் தர்மபுரி மாவட்டமும் ஒன்று என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்பேர்ப்பட்ட மாவட்டத்திலே, பருத்தி அறவை அல்லது நூற்பாலை அமைக்கமுன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.,

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்தியைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறை. ஆனால் இதற்காக ஆலை அமைப்பது, ஏற்படுத்துவது தனித் துறை.

திரு. மு. அண்ணாமலை: தலைவர் அவர்களே, தரமான பருத்தியை தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு, இதிலே ஏற்பட்ட நோயையும் கட்டுப்படுத்தியதாக அமைச்சர். அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டு அதிகப்படியான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான அலுவலகங்களிலே வாங்கிய விதைகளிலேகூட சரியான முளை விடவில்லை. இதைப் பரிசீலிப்பதற்கும், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கும். தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, விதைகளைப் பொறுத்த அளவில், நல்ல விதைகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, விதைச் சான்றிதழ் இயக்ககம் ஒன்று துவக்கப்பட்டது இந்த ஆண்டிலிருந்து. ஆகவே, நல்ல தரமான விதைகளை வழங்க முடியும். மேலும், உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி இந்த விதைப் பொட்டலங்களிலேயே எவ்வளவு 'ஜெர்மினேஷன்' ஆகும், எவ்வளவு முளைக்கும், எவ்வளவு 'பர்சென்டேஜ்' கிடைக்கும் என்ற விவரங்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள். இதிலே குறைவு இருந்தால், இது போன்ற எண்ணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்வள நிறுவனத்தில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள்.

*வினா எண் 729—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் கால்நடை மருத்துவர்கள் இந்நிறுவனத்தில் பணியில் அமர்ந்து சில மாதங்களுக்குள் மாற்று துறைகளுக்கு (Departments) மாறுதல் கேட்டுப் போவதன் காரணம் என்ன?

(ஆ) அவர்களுக்கு இந்த நிறுவனத்தில் பதவி உயர்வு இல்லையா?

(இ) இந்த நிறுவனத்தில் சேர்ந்து, இந்த நிறுவனத்திலேயே தொடர்ந்து பணியாற்ற அரசு பரிசீலனை ஏதேனும் செய்துள்ளதா?

[1979 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்பதிலிருந்து கூட்டுறவு இணையமாக மாறும் ஒரு நிலை உருவாகியிருப்பதாலும், அரசுத் துறை நிறுவனங்களுக்கு அரசுப் பணியில் இவ்வளவு காலமிருந்து, நிறுவனங்களில் பணியில் சேருவதற்கான ஈட்டு ஊதியம் (Terminal Benefits) வழங்குவதில் முடிவு ஏதும் எடுக்கப்படாததாலும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணி புரியும் கால்நடை உதவி மருத்து வர்கள் சிலர் அரசுத் துறைகளில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக் கும்போது சென்று விட விரும்புகின்றனர் என்பது தெரிய வருகிறது.

(ஆ) பதவி உயர்வு பெறுவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

(இ) அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த பால்வளத் துறையிலே ஒரு மாவட்டத்திற்கு ஒரு கால்நடை அதிகாரி தான் இருக்கிறார். அவர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அவருக்கு வெகிகிள் கிடையாது. ஒரு வாடகைக் காரை எடுத்துக் கொண்டு அவரும், புரொகியூர்மென்ட் ஆபீசரும் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, மாவட்டம் பூராவும் வசதியாகப் போக முடியவில்லை. எனவே, இந்த வெகிகிளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றியம் அமைக்கப்பட்டு வருகிறது. இப்படி ஒன்றியங்கள் அமைக்கப் பட்டு முடிந்தவுடன், அந்தந்த ஒன்றியங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அப்போது அவர்களுக்குத் தேவையான வாகன வசதிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஒன்றியங்கள் அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் இந்த ஒன்றியங்கள் அமைக்கப்பட இருக் கின்றன ? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை ஒன்றியங்கள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, பால்வளத் துறையைப் பொறுத்தவரையில் மாவட்டத் திற்கு ஒரு ஒன்றியம்தான் பால் பெருக்குவதற்காக அமைக்கப் படுகிறது. 8 மாவட்டங்களில் ஒன்றியங்கள் அமைக்கும் வேலை கிட்டத்தட்ட முடிந்து விட்டது ; ஒரு ஒன்றியத்திற்குத் தான் இன்னும் முடியவில்லை. ராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர்,

1979 ஏப்ரல் 19]

திருநெல்வேலி மாவட்டங்களுக்கு முதன்மை முனைவர் (சீப் புரொமோட்டர்) நியமிக்கப்படுவர். அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, பின் ஒன்றியங்கள் அமைக்கப்படும். அப்போது இந்த ஒன்றியங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அப்போது அவர்களுக்குத் தேவையான வாகன வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

[முற்பகல் 9-30]

திரு. இரா. முத்தையா : சீரமைக்கப்பட்டு வரும் ஒன்றி யங்களின்கீழ் இத்தகைய கால்நடை மருத்துவர்களும் ஏனைய பால்வளத்துறை அலுவலர்களும் அந்த ஒன்றியத்தின்கீழ் பணியாற்றக்கூடிய அளவில் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அவர்கள் இந்த ஒன்றியங்களிலோ ஒன்றியங்களின் மையமாக வரக்கூடிய இணையத்திலோ பணியாற்றலாம் என்பதைப் பற்றித்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதில் சங்கடங்கள் இருக்கின்றன, சட்டத்திட்டம் அப்படி இருக்கிறது என்ற வகையிலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கால்நடை மருத்துவர்கள் தொடர்ந்து அங்கேயே பணியாற்றக்கூடிய அளவுக்கு ஏதேனும் பரிசீலனை செய்யப் பட்டிருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சட்டதிட்டங்கள் காரணமாக அங்கு பணிபுரிகிற கால்நடை மருத்துவர்களுக்கு இடர்ப்பாடு இருப்ப தாக நான் கூறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்திருக்கிறார். நான் சொன்னது, தமிழ்நாடு பால்வள நிறுவனம் கூட்டுறவு இணையமாக மாற இருக்கிறது. அப்படி வருகிறபோது தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறவர்களுக்கு 'டர்மினல் பெனிபிட்ஸ்' கொடுக்கக்கூடிய வாய்ப்பைக் கொடுத்து இங்கேயே பணிபுரியச் செய்யவேண்டுமெனபதைப் பற்றித்தான் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். இருக்கிற சட்ட திட்டங்கள்படி முழுப் பாதுகாப்பு கால்நடை மருத்துவர் களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. பதவி உயர்வைப் பொறுத்தவரைகூட கால்நடைப் பராமரிப்புத் துறையில் உள்ள வாய்ப்பைவிட தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் அதிக வாய்ப்பு [illegible]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : கால்நடை மருத்துவர்கள் கொடிய விலங்குகளுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். பொது மருத்துவம், பல் மருத்துவம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்கும் இவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத் திற்கும் வித்தியாசம் இருப்பது ஏன்? அது நியாயமா? பால் மாடுகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்களை நிர்வகிக்கும் துறை ஒருவரிடமும் பசுப் பராமரிப்புத் துறை ஒருவரிடமும் இருக்கிறது. இரண்டு துறைகளையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க அரசு முயற்சிக்குமா? பாலையும் பசுவையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பால் கொடுக் கிற கால்நடைகளை கொடிய விலங்குகளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா? தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணி புரியக்கூடிய மருத்துவர்களுக்கு பணிப் பாதுகாப்பு, தேவையான ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஈட்டுதியம் தர முடிவு எடுத்துவிட்டால் அவர்கள் அங்கேயே பணியாற்ற விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாயூரம் வட்டத்தில் சிறு தொழில்கள்.

*வினா எண். 730.— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

1976-77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறுதொழில்களைத் துவங்குவதற்கான உரிமங்கள் எத்தனை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1976-77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறு தொழில்களைத் துவங்குவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை மொத்தம் 36.

Post of head nurse in Kallakurichi Hospital

* Q. No. 731—Thiru Durai Muthusamy : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether the Government Order No. 1127, Public Health, dated 27th April 1945 regarding the appointment of head nurse in Government Hospital is still in practice ;

(b) If so, such appointment of a head nurse has been made to the Government Hospital, Kallakurichi, South Arcot district, which has provision for 56 beds ;

(c) If not why : and

(d) How long is it remaining without such appointment ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஆ, இ & உ, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் ஒரு தலைமைச் செவிலியர் பதவி ஏற்படுத்த அரசு ஆணை எண். 333, சுகாதாரம் நாள் 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ம் தேதியில் ஒப்பளிக்கப்பட்டது.

திரு. துரை முத்துசாமி : அரசாணை எண். 1127, தேதி 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் தேதி படி தலைமைச் செவிலியர் போடப்படுவது அமலில் இருந்தும் அவ்வாறு போடப்படாமல் காலதாமதமாகிக் கொண்டிருந்த தற்குக் காரணம் என்ன? கள்ளக்குறிச்சி மருத்துவ மனையில் ஹெட் நர்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இதைப்போல் தமிழகம் முழுவதும் ஹெட் நர்சுகள் எவ்வளவு பேர் போட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அதிகப்படி பணி இடங்களை ஏற்படுத்த பொதுக் கட்டுப்பாடு உள்ளதால் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் துறை இயக்குநர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ மனையில் தலைமைச் செவிலியர் பதவி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை ஏதும் இதற்கு முன்னால் எடுக்கவில்லை. இந்த அரசு வந்த பிறகு அந்தத் தன்மையை உணர்ந்து 50 படுக்கைகளுக்கு ஒரு தலைமைச் செவிலியர் இருக்கவேண்டுமென்ற காரணத்தை முன்னிட்டுத்தான் இனறைக்கு அங்கு தலைமைச் செவிலியரை நியமிக்க அங்கீகாரத்தை வழங்கி அதற்கான ஆணை 1979-ம் வருடம் பிப்ரவரி திங்கள் 24-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் பொடுவாரானால் பதில் சொல்லப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள பெரிய மருத்துவ மனையிலே ஷிப்டு முறையில் பணியாற்றி வருவதைப்போல் மற்ற மாவட்டங் களிலேயும் உள்ள அரசு மருத்துவ மனைகளிலேயும் நர்ஸ்கள் ஷிப்டு முறையில் பணி ஆற்றச் செய்தால் நோயாளிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலேயும் ஷிப்டு முறையைக் கொண்டுவர அரசு முனவருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலை வர் அவர்களே, பணியாற்றுகின்ற செவிலியர்களை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல் ஷிப்டு முறையிலே பணியாற்ற வைக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்றாலும் தேவையான அளவிற்கு நமக்கு இன்னும் செவிலியர்கள் பெறவில்லை என்ற காரணத்தால் சில இடங் களிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற நிலை மைகள் இருந்தாலும் அதைச் சீர்படுத்துவதற்கு அரசு வழிவகை செய்துகொண்டிருக்கிறது.

[1979 ஏப்ரல் 19

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மருத்துவ மனை பெரிய மருத்துவ மனையாக இருக்கிறது. அதே நேரத்திலே ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ் பிட்டில் கடலூரிலே இருப்பதால் அங்கிருந்து 60 மைல் தூரம் செல்லவேண்டுமென்ற நிலமை இருக்கிறது. அருகாமையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவசர நிமித்தமாக ரத்தம் தேவைப் பட்டால் அங்கே பிளட் பாங்க் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, கள்ளக்குறிச்சி மருத்துவ மனையிலே பிளட் பாங்க் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இப்போது ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

இளையாங்குடி மருத்துவமனைக் கட்டிடம்

* வினா எண். 732—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முகவை மாவட்டம், இளையாங்குடியில் 40 படுக்கைகள்கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்கான டிபாசிட் ரூபாய் ஒரு லட்சம் கட்டி 3 வருடங்கள் ஆகியும் இன்னும் எந்த வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில், ஏன் வேலை துவக்கப்படவில்லை ?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) & (இ) இம்மருத்துவ மனைக்காக ரூ. 3.00 லட்சம் செலவில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஒரு ஆண்டுக்கு முன்னாடிப் போடப்பட்டது. நாங்கள் டெபாசிட் செய்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டது. வருமா வராதா என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். இந்த அரசு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு சாங்ஷன் ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால், எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதைச் சொல்லமுடியுமா ?

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனை கட்டப்பட வேண்டுமென்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாக 74 ஆம் ஆண்டிலே வழங்கினார்களென்றும் இதற்கு முன்னாலே இருந்தவர்கள் என்ன காரணத்தினாலோ அதைப் புறக்கணித்தாலும் இந்த அரசு கிராமப்புற மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளைத் தரவேண்டுமென்று உணர்ந்து இப்போது அதை எடுத்திருக்கிறது என்பதை நான் சொல்லி மிக விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மருத்துவ மனை அமைப்பதற்காக 74 ஆம் ஆண்டிலே ஒரு லட்சம் தரப்பட்டிருக்கிறது. ஆனால், 79 ஆம் ஆண்டிலே தான் அது கட்டப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறதே, இவ்வளவு காலம் தேங்கியதற்கு அரசு பொறுப்பா அல்லது அதிகாரிகள் பொறுப்பா அல்லது அமைச்சர்கள் பொறுப்பா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்ததற்கு மகிழ்ச்சி அடையுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் இதுபோன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு இதுவரையில் இரண்டாம் பகுதித் திட்டத்திற்கு மிகக் குறைந்த அளவிலேதான் தொகை ஒதுக்கப்பட்டன. ஆனால், இந்த அரசு வந்ததற்குப் பிறகு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் இது மிக அத்தியாவசியமானது என்று உணர்ந்து மிக அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிற காரணத்தால் இன்றைக்குப் பல மருத்துவ மனைகளைக் கட்டுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : மருத்துவ மானியக் கோரிக்கையின் போது அந்த அறிக்கையிலே இந்த ஆஸ்பத்திரிக்கு 3 லட்சம் ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது 2 லட்சம் என்று சொல்கிறார்களே எது சரி ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நான் இரண்டு லட்சம் என்று சொல்லவேயில்லை. மாண்புமிகு உறுப்பினர் எங்கேயோ எதையோ கேட்டுவிட்டு இங்கே சொல்கிறார்கள். 3 லட்சம் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 733-ம், 734-ம் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

[1979 ஏப்ரல் 19

வீரச் செயல்களுக்குப் பாராட்டு.

*வினா எண். 735—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வாருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971 டிசம்பர் மாதத்தில் மதுரையில் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்ட 20 பேர்களைக் காப்பாற்றிய மதுரையைச் சேர்ந்த நீச்சல் வீரருக்கு உதவிகள் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மதுரையைச் சேர்ந்த திருவாளர்கள் பி. காத்தான், கே. செல்லையா அவர்களின் வீரச்செயலை பாராட்டும் வகையில் இந்தியக் குடியரசுத் தலைவரின் '' ஜீவன்ரக்ஷா '' உயிர் காக்கும் பதக்கமும், ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பணமாக ரூபாய் 500-ம் வழங்கப்பட்டது. மேலும், அரசு தீயணைப்புத் துறையில் விதிமுறைகளைத் தளர்த்தி தீயணைப்பாளர்களாக இவ்விருவரும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மதுரையைச் சேர்ந்த திருவாளர்கள் பி. காத்தான், கே. செல்லையா அவர்களின் வீரச்செயலை பாராட்டும் வகையில் இந்தியக் குடியரசுத் தலைவரின் '' ஜீவன்ரக்ஷா '' பதக்கமும், ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பணமாக ரூபாய் 500-ம் வழங்கப்பட்டது. மேலும், அரசு தீயணைப்புத் துறையில் விதிமுறைகளைத் தளர்த்தி அவர்களைத் தீயணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது என் தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் ; தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் மதுரையில் வைகை ஆற்றில் பெருவாரியான வெள்ளம் வந்து மக்களும் பொருட்களும் அடித்துச் செல்லப்படுவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், பல உயிர்களைக் காப்பாற்றத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்த மதுரை நீச்சல் வீரர் காத்தான், மாவட்ட ஆட்சியரிடம் கேட்டு ஒரு சைக்கிள் டியூபை வாங்கி தனனுடைய இடையிலே கட்டிக்கொண்டு வெள்ளத்தில் சென்று 20 பேர்களைக் காப்பாற்றியிருக்கிறார். அவருக்கு யாதொரு உதவித் தொகையும், பாராட்டும், பரிசும் கிடையாது. நத்தம் தீயணைப்பு நிலையத்தில் அவர் பணியாற்றுகிறார். அந்த வீரருக்கு உதவி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகத்திலே வேலை செய்ய வேண்டுமானால் கல்வியைப் பார்க்க வேண்டும். வயதைப் பார்க்க

1979 ஏப்ரல் 19]

வேண்டும், உடல்வலிமையைப் பார்க்க வேண்டும். இவைகளெல்லாம் அவர்களுக்குத் தளர்வுபடி செய்து, தீயணைப்பு அலுவலகத்தில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 500 ரூபாய் ரொக்கப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் பதக்கம் என்பது உயர்ந்த பதக்கம். அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம், வீடு குறித்த பத்திரப் பதிவு.

வினா எண் 736,—*திரு. டி. ஆர். ராஜாராம் ரெட்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

போட்டி முதலான காரணங்களால் எங்கே ஓரிடத்தில் கூடுதலான விலைக்கு நிலமோ வீடோ விற்கப்படும்போது பக்கத்தில் உள்ளவைகளுக்கும் அதே விலைக்குச் சரியான அளவு பத்திரங்களில் எழுதி வருமாறு கூறி ரிஜிஸ்தரார் பதிய மறுத்து கூடுதல் பத்திரங்கள் சேர்க்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பதிவு அலுவலர்கள் யாரும் அப்படிக் கட்டாயப்படுத்தி அதிகமாகக் கட்டணம் கேட்கவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இப்பொழுது கிராமங்களில் ரெஜிஸ்தார் ஆபிசிலே—நான் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் பல தவறுகள் நடக்கின்றன. ரெஜிஸ்தர் செய்வதில் பல தவறுகள் நடக்கின்றன. அந்த முறையை மாற்றி வேறு விதமாக அரசு பரிசீலனை செய்து அல்லது நடவடிக்கை எடுத்து, ஏதாவது ஒன்றைச் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ''ஏதாவது ஒன்றை'' விரைவாகச் செய்ய இந்த அரசு என்றைக்கும் முன் வராது. நல்லது எது என்று சொன்னால் அதைச் செய்ய முன்னுக்கு வரும். தவறு நடக்கிறது என்றால் என்ன தவறு என்று சொன்னால் அதைப் போக்கடிக்க இந்த அரசு ஆவன செய்யும். தவறு என்று பொதுவாகச் சொல்வது, அதுவும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வது சரியல்ல.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் ஒரு பத்திரப் பதிவுக்குக் கூடுதலான அளவு முறை வைத்திருக்கிறார்கள். அந்த அளவு முறைகளை மீறிச் சில குறும்புகாரர்கள் அதிகப்படியாக 100 ரூபாய்க்குப் பதில் 1,000 ரூபாய்க்குப் பதிந்து விடுகிறார்கள். அதேபோல் பக்கத்திலே உள்ளவர்களும் பதிய வேண்டுமென்று சொல்லுகின்ற

நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க நிலையான ஆய்வு செய்து முறையான அளவுக்குச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குறும்புக்காரர்கள் எதைச் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சில நேரங்களில் நிலங்களை விற்பதில் ஏற்படுகின்ற போட்டியின் காரணமாக விலை ஏறுகிறது. அப்படி விலை ஏறும்பொழுது, அதற்குப் பத்திரச் செலவு அதிகம் ஆகிறது. அப்படி அதிகம் ஆனதற்குப் பிறகு மற்றவர்களும் பத்திரம் பதிவு செய்யும்பொழுது அதைப்போல பணம் கட்ட வேண்டுமென்ற முறை இருந்தது. அப்படியெல் லாம் செய்யாமல், சந்தை விலை (Market Value) என்று அதைப்பற்றிப் பார்த்து வாங்க வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வாங்குபவர்களும், விற்பவர்களும் எந்த விலை என்று சொல்லிப் பத்திரம் வாங்குகிறார்களோ அதையே அவர்களால் அதில் எழுதப்படுகிறது. எங்கேயாவது சந்தேகம் ஏற்பட்டால் வருவாய்த் துறைக்கு அதைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்கள்:

வினா எண். 737—

*திரு. கோ. இளங்கோவன், திரு. என். கிட்டப்பா: மாண்பு மிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டினையொட்டி 17–9–1978, 18–9–1978 ஆகிய நாட்களில் எடுத்த விழாக் களுக்குச் செலவிடப்பட்ட தொகை யாது ?

(ஆ) அதுபோது அரசு ஏதேனும் தீர்மானங்கள் நிறை வேற்றியது உண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவ ரவர்களே,—

(அ) ரூபாய் 4,46,492.

(ஆ) மற்றும் (இ) : அரசு தீர்மானமெதுவும் நிறைவேற்ற வில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் சில கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

*வினா எண். 738— திரு. நா. பழனிவேல்— திரு. வி. கே. கோதண்டராமன் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சமீபத்தில அரசு நடத்திய பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு இதுவரை அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கோயம்புத்தூர், மதுரை, வடஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 6,84,304·73.

	ரூ.	பை.
1. கோயம்புத்தூர் ஈரோடு	4,46,491	85
2. மதுரை	1,00,000	00
3. வேலூர்	63,071	11
4. திருநெல்வேலி	74,741	77
மொத்தம் ..	6,84,304	73

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, பெரியா ருடைய நூற்றாண்டு விழாவினுடைய செலவைச் சொன்னார்கள். மொத்தச் செலவைக் குறிப்பிட்டுச் சொன்னால் உதவியாக இருக்கும் என்பதோடு, பெரியார், அவருடைய வாழ்க்கையில் மிகவும் சிக்கனமானவர். ஆகவே, அவருடைய விழாவுக்கு இப்படிச் செலவழிப்பது, அவருடைய இலட்சியத்திற்கு கொஞ்சம் களங்கம் ஏற்படுத்தாதா என்பதை அமைச்சரவர்கள் அறி விப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பெரியாரவர்கள் வாழ்க்கையில் சிக்கனமானவர் என்பது உண்மைதான. எவை களிலே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது, சிக்கனம் என்பது என்ன என்பதற்கெல்லாம் அளவுகோல், இலக்கணம், அவரவ ருடைய மனத்தைப் பொறுத்தது. தந்தை பெரியாருக்கு, இந்த நாட்டினுடைய இருளை அகற்றுகின்ற சூரியனாக விளங்கிய அந்த பகுத்தறிவுப் பகலவனுக்குச் செய்த செலவு சிக்கனமான செலவுதான் என்று அரசு கருதுகிறது.

திரு. போ. கோபாலன் : பேரவைத் தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் பெரியாருடைய நூற்றாண்டு விழா நடத்தப்படுவதாக அறிகிறேன். ஆனால், சில மாவட்

டங்களில் நடத்தப்படவில்லை. விரைவில் அதற்கான ஏற்பாடு
செய்யப்படுமா? குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் நூற்
றாண்டு விழா நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தொடர்ந்து நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முறையாக, முடிந்த
அளவு மாவட்டங்களிலே நடத்தப்படும்.

Sub-Court at Tiruvellore

* Q. No. 739—Thiru N. KITTAPPA ; Will the Hon. the Minister
for Law be pleased to state ;

(a) whether any representation for the location of a Sub Court
at Tiruvellore ; has been made to the Government by the local
association about 24th May 1978 ; and

(b) if so, the action taken thereon?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூரிலே ஒரு துணை நீதி மன்றம் ஏற்படுத்த
உயர் நீதி மன்றம் சிபாரிசு செய்துள்ளது, அதனுடைய முன்
னுரிமைப் பட்டியலிலே உள்ளது. நிதிநிலைமையைப் பொறுத்து,
1979–80 ஆம் ஆண்டிலே துவக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. சே. ஜே. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வட
ஆற்காடு மாவட்டம பொளூரில் முன்சிப் சப்கோர்ட்
ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா? அது எந்த
நிலையில் உள்ளது என்பதை அறிவிப்பார்களா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செய:
லர்): தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்
ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி சிறைக் கைதிகள் விடுதலை.

*வினா எண். 740—திரு. சே. பண்ணை சேதுராம்,

திரு. மு. அம்பிகாபதி,

திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்
சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி
சிறையில இருக்கும் அரசியல் மற்றும் சிறு குற்றங்களுக்காக
தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் செயற்
குறிப்பு அரசிடம் உள்ளதா?

திரு எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவை செயலர்):
அரசு அதைப் பற்றி பரிசீலனை செய்தது. எந்த, எந்த வழி
யிலே, அதனுடைய தரத்தைப் பார்த்து, தண்டனையைக் குறைக்
கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு
கின்ற நாம் பெரியாருடைய தத்துவங்களுக்கு விரோதமாக,
சிலர் குற்றங்களைத் செய்து உள்ளே போயிருக்கலாம். குறிப்
பாக, தீண்டாமைக் குற்றங்கள், இது போன்ற குற்றங்களுக்
கெல்லாம் நாம் விடுதலை செய்யவேண்டுமென்று நான் அரசை
விரும்பிக் கேட்கவில்லை. இருந்தாலும், சிறுசிறு குற்றங்கள், திருட்
டுக் குற்றம் போன்ற குற்றங்களுக்கும், அரசியல் காரணங்களுக்
காகவும் உள்ளே சென்றவர்களையெல்லாம் பெரியார்
நூற்றாண்டு விழாவிலே விடுதலை செய்ய முடியுமா என்று
அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவை செயலர்):
இதைத்தான் அரசு பரிசீலனை செய்தது. மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் கூறியதைப் போல், அந்த எண்ணத்தை ஏற்று
அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, தந்தை
பெரியாருடைய நூற்றாண்டு விழாவையொட்டி, இந்த
ஆண்டில் மரண தண்டனை பெற்றிருக்கிற கைதிகளின் மரண
தண்டனையைத் தள்ளுபடி செய்து, ஆயுள் தண்டனையாக
மாற்ற ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை
அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவை செயலர்):
தலைவரவர்களே, இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகி
றேன.

தஞ்சையிலுள்ள இராசராசச் சோழன் சிலை.

*வினா எண். 741—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு
கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்
பாரா?

தஞ்சை நகரில் நிறுவப்பட்டுள்ள இராசராசச்
சோழன் உருவச் சிலையை கோயிலுக்குள் வைக்க நடவடிக்கை
எடுக்கக் கோரி அரசுக்கு பொது மக்களிடமிருந்து இது பற்றி
வேண்டுகோள் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—இல்லை. பொது
மக்களிடமிருந்து இது பற்றி வேண்டுகோள் ஏதும்
இதுவரை வரவில்லை.

[1979 ஏப்ரல் 19

(முற்பகல் 9-50)

திரு. பொ. கோபாலன் : தலைவர் அவர்களே, பொதுவாக
கோயில்களிலே இருக்கக்கூடிய சிலைகள் சிலருடைய வீடுகளிலே
காணப்படுகிறதாக அறியமுடிகிறது. எனவே கோயில்களில்
இருக்கக் கூடிய சிலைகளுக்கு, மற்றும் சில அரசு பாதுகாப்பு
இடங்களில் இருக்கக் கூடிய சிலைகளுக்கு அரசு காவல் போட
முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
அதை தனிக் கேள்வியாகப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தஞ்சையிலே
இருக்கக் கூடிய இராஜராஜ சோழனுடைய சிலையை கோயி
லுக்குள்ளே வைப்பதற்கு ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டில்
அனுமதிக்கவில்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா?
அந்தக் கோயிலையே நிர்மாணம் செய்த இராஜராஜன் சிலையை
உள்ளே வைக்க அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னால்
அதை இந்த அரசு பார்த்துக் கொண்டு இருப்பதா? அதற்கு
ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா, இருந்தால் அதை எடுப்ப
தற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்
களே, இராஜராஜனுடைய சிலையை கோவிலுக்குள்ளே வைப்ப
தற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதற்குக் காரணம் தொல்
பொருள்களை பாதுகாப்பதற்கான முறையில் புதிய சிலைகளை,
பொருள்களைக் கொண்டு வந்து வைத்தால் பாதுகாப்பு முறை
பாதிக்கப்படும் அப்படி வைக்கக் கூடாது என்கின்ற முறையின்
அடிப்படையில்தான் அவர்கள் அதை செய்திருக்கிறார்கள்.
அப்படி நாம் அனுமதி வேண்டி அந்த மாதிரி காரியங்களை
ஊக்குவிப்போமானால், தொல் பொருளை பாதுகாப்பது
என்கின்ற நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாம் நம்முடைய நாட்டிற்கு நல்லது செய்தவர்களை
கௌரவிப்பதற்காக இது மாதிரி சிலைகளை வைக்கிறோம்.
அப்படிப்பட்ட சிலைகளை பொது இடங்களில் வைக்கும்போது
பறவைகளினால் எச்சம் இடப்பட்டு பார்ப்பதற்கு விகாரமாக
இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை போக்குவதற்காக
அந்தச் சிலைகளுக்கு நிழற்குடைகள் கட்டுவதற்கான நிலை
மையை உருவாக்க அரசு முன் வருமா என்று கேட்க ஆசைப்படு
கிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
அது இராஜராஜன் சிலையே தவிர இராஜராஜனே அல்ல.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே என்ன காரணத்
தினாலோ தஞ்சையிலே ராஜராஜன் அவர்கள் தெருவிலே பாது

1979, ஏப்ரல் 19]

காப்பற்ற நிலையிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அதை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இராஜராஜன் சிலை வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் எந்தவிதமான பாதுகாப்புக்கும் இடமில்லை. தனியாக சிலை நின்றுக் கொண்டிருப்பது எங்களுக்கும் மகிழ்ச்சித் தரக்கூடியதாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே அது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராஜராஜனுடைய சிலையை தஞ்சை பெரிய கோயிலுக்குப் பக்கத்திலேயே வைத்திருக்கிறார்கள். அது இருக்கிற இடம் அழகு படுத்தப்படாமல், சுத்தமாக இல்லாமல் இருக்கிறது. அதைப் பார்ப்பவர்கள் அந்தச் சிலைக்குரிய மரியாதையையும், அந்தஸ்தையும் கொடுக்கக் கூடிய வகையில் அழகு படுத்தி சுத்தம் செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசியல் அல்லாத வேறு பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக் கொண்டவர்களுக்கும் அவர்களுடைய சிலையை வைப்பது முறையாக இருக்கிறது. இராஜராஜ சோழனுடைய சிலையை வைக்கும்போதும், அவர் காலத்தில் அவர் என்னென்ன சாதனைகளைச் செய்தார், நாட்டிற்கு என்னென்ன நன்மைகளைச் செய்தார் என்கிறவற்றையெல்லாம் மக்களுக்குப் புரியும் முறையில் சிலையைச் சுற்றி எழுதி வைத்து அவருக்கு ஒரு அந்தஸ்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவர் செய்த மிகப் பெரிய சாதனை அந்தச் சிலைக்குப் பக்கத்திலேயே இருக்கிற பெரிய கோவில்தான். ஆனால் இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பரிசீலிக்கும்போது கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, ராஜராஜ சோழனுடைய சிலையை அந்தக் கோயிலினுள்ளே வைப்பதற்கு மைய அரசு அனுமதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதுபோலவே இந்தக் கோட்டையைச் சுற்றி இருக்கக் கூடிய புல்தரையை வெட்டுவதற்கும் மைய அரசினுடைய அனு

மதியைப் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள்.
பணிகளையெல்லாம் மாநில அரசே செய்வதற்கு மத்திய அரசி இந்தப்
டம் இந்த அரசு அனுமதி வாங்குமா என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
இராஜராஜன் சிலையைப் பொறுத்தவரையில் அது இந்தக்
காலத்தில் செய்யப்பட்ட சிலை ஆகும். ஆனால் பெரிய கோயில்
அவர் காலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டது. தொன்மையான
வரலாற்றுச் சிறப்பும் தொல்பொருள் மதிப்பும் உள்ளது.
அந்த இடத்தில் புதிய சிலைகளை கொண்டு வந்து வைத்தால்
பிற்காலத்தில் சரித்திர சம்பவங்களில் தவறான மதிப்பீடுகள்
ஏற்பட வாய்ப்பு உண்டு. அந்த மாதிரி தொல் பொருள்களை
பாதுகாக்கின்ற இடங்களில் புதிய பொருள்களை வைக்கக்
கூடாது, வைத்தால் வரலாற்றுத் துறையிலேயும் பிற்காலத்தில்
படிப்பவர்களுக்கு சிக்கல் ஏற்படும் என்றுதான் அவை வைக்க
அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள
வேண்டும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த இராஜராஜ சோழன் சிலையை வைப்பதற்கு விழா
நடந்தது. அந்த விழாவிற்கு செலவான மொத்த தொகை
எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம்
என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரமுடியும்.

திரு. துரை முத்துசாமி : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசியதை எல்
லாம் நீக்கிவிட உத்தரவிடுகிறேன். மூலக் கேள்விக்கு சம்பந்தப்
பட்ட கேள்விகளைத்தான் அனுமதிக்க முடியும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்
கள். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

திரு. துரை முத்துசாமி : என்னை ஏன் மிரட்டுகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மிரட்டவில்லை.
உங்கள் குரல் தான் அவையையே மிரட்டுகிறது. நான் குறிப்
பிட்ட கேள்விக்கு தொடர்பில்லாத கேள்விகளை அனுமதிப்பது
இல்லை. அனுமதிப்பது இல்லையென்றால் ஒப்புக் கொள்ள
வேண்டும். அதுதான் மரபு. என்னை வற்புறுத்தக் கூடாது.
திரு. துரை முத்துசாமி இப்படி நடந்து கொள்வது அவைக்கு
நல்லது அல்ல.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க,
அகற்றப் பெற்றது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இராஜராஜ
சோழன் பெருமையைப் பற்றிக் கேட்கிறபோது பக்கத்திலே
இருக்கிற கோவிலே அதற்கு ஆதாரமாக இருக்கிறது என்று
சொல்லப்படுகிறது. நான் கேட்பது, அந்தப் பெரிய கோயிலைக்
கட்டுவதற்கு எத்தனை ஆயிரம் பேர்கள் சிரமப்பட்டார்கள்,
எப்படி எப்படி சிரமப்பட்டார்கள் என்பதைப் பற்றியும் அந்தக்
கோவிலிலே குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, அந்த இராஜராஜ சோழன் சிலையைப் பொறுத்த
வரையில் நாம் அதற்கான பாதுகாப்புகளையும் சிறப்புகளையும்
பற்றிப் பரிசீலிக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன
கருத்தும் பரிசீலிக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நான் இந்தக்
கேள்வி கேட்பதற்கு முன்னால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
என் பக்கத்திலே உட்கார்ந்து இருக்கிற சக உறுப்பினர் திரு. துரை
முத்துசாமி அவர்கள் அவர்களுடைய உணர்வுகளை வெளிப்
படுத்துகிற வகையில், காமராஜர் சிலைக்கு லைட் போட
வேண்டும் என்று கேட்டு விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரராஜ், நீங்கள்
எனக்கு அறிவுரை தரவேண்டியது இல்லை. அந்தக் கேள்விக்கு
அப்போதே முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. இப்போது
அவை முன்னுள்ள கேள்வி இராஜராஜ சோழன் சிலை பற்றியது.
உங்களுக்கு அக்கறை இருக்குமானால் குறுகிய கால வினாவா
கவோ, அல்லது வினாவாகவோ காமராஜரைப் பற்றி ஆயிரம்
கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள். எனக்கும் காமராஜரிடம் மரி
யாதை உண்டு. ஆனால், அதைப் பற்றி இப்போது வேண்டாம்.

திரு. நா. சுந்தரராஜ் : நான் இப்போது அந்தக் கேள்விக்கு
வரவில்லை. சாதாரணப் பிரச்சினையைப் பெரிய பிரச்சினையாக்
ஆக்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைப் பெரிய
விவகாரமாக வளர்க்க விரும்பவில்லை. இப்படிப்பட்ட முறை
களை உற்சாகப்படுத்துவதன் காரணமாகத்தான் சம்பந்தம்
இல்லாத வகையில் துணைக் கேள்விகள் கேட்கப்பட்டு, கேள்வி
நேரம் வீணாகிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இங்கே நான்
கேட்க விரும்புகிற முக்கியமான கேள்வி, ஒன்று. அந்த இராஜ
ராஜ சோழன் சிலை இராஜராஜனைப் போல் தான் இருக்கிறதா
என்பதற்கு அரசு சான்றிதழ் கொடுக்குமா ? இரண்டு. அங்கே

நிறுவப்பட்டு இருக்கும் சிலை எத்தகைய உலோகத்தால் செய்யப்
பட்டது? உண்மையான வெங்கலச் சிலையா நல்ல வெங்கலமா
போலி வெங்கலமா, இல்லை பித்தளையா? என்று தெரிய
வில்லை. அது இராஜராஜனைப் போல் இருப்பதாக யாரும்
சொல்லவில்லை. இஅந்த இடம் ஒரு டூரிஸ்ட் சென்டராக
இருக்கிறது. அந்த ராஜராஜ சோழனுக்காக நிறுவப்பட்ட
அந்த மாபெரும் அமைப்பு இன்று கேட்பாரற்ற நிலையில்
இருப்பது தமிழ் நாட்டிற்கு அவமானமாக இருக்கிறது. ஆகவே,
அரசாங்கம் உடனடியாக அந்தச் சிலையைச் சுற்றி பூங்கா,
அமைத்து அதை ஒரு எழில் கோட்டமாக அமைக்க முன் வருமா?
எவ்வளவு லட்ச ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, அதைச்
செய்ய முன் வருமா? செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,
கேள்வி கேட்டவரும் அதை இராஜராஜன் சிலை என்றுதான்
கேட்டிருக்கிறார்கள். பதில் சொல்கின்ற நானும் அப்படித்தான்
சொல்லிக்கொண்டிருக்கிறேன். துணைக் கேள்வி கேட்ட
மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் பாதுகாப்பு தர முடியுமா
அந்த இராஜராஜன் சிலைக்கு என்றுதான் கேட்டிருக்கிறார்கள்.
இதிலிருந்து அந்தச் சிலை இராஜராஜன் போல்தான் இருக்
கின்றது என்றும், அது இராஜராஜனின சிலைதான் என்றும்
அனைவரும் ஏற்றுக்கொண்டதாகத்தான் நான் கருதுகிறேன்.
மற்றபடி அதைப்பற்றிப் பரிசீலிக்கும் போது மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுடைய கருத்துக்களும் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே,
இந்த இராஜராஜ சோழனுடைய சிலையைத் தஞ்சைப் பெரிய
கோயில் உள்ளே வைக்க அனுமதி தர மறுத்த மத்திய அரசிடம்
மீண்டும் இந்த மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,
மத்திய அரசைக் கேட்பதோ அல்லது மத்திய அரசோடு எதிர்த்து
நிற்க வேண்டும் என்பதோ பிரச்சினையைப் பொறுத்துத்தான்
இருக்கிறது. ஆனால் இப்போது நம் முன்னால் இருக்கின்ற பிரச்
சினையைப் பார்க்கின்றபோது அது தொல்பொருள் ஆராய்ச்சி
யாளர்கள், தொல்பொருள்களைப் பாதுகாக்கின்ற நாம் அந்தக்
கோயிலில் இந்தக் காலத்து சிலை ஒன்றைக் கொண்டு வந்து
வைப்பது சரிதானா என்று கேட்கின்ற அடிப்படையிலே அந்தப்
பிரச்சினையைப் பார்க்கின்றோம் என்று மத்திய அரசினர் சொன்ன
கருத்தை ஏற்றுக்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி
இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்
பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) உரிமைப் பிரச்சினைகள்

(அ) 'மன்றம்' இதழில் கட்டுரை எழுயுள்ள திரு. நெடுஞ்செழியன்மது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல்
குறித்த பிரச்சினை. பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் அவை உரிமை மீறிய
செயல் குறித்து பிரச்சினை ஒன்றை பேரவையில் எழுப்ப அனுமதி
கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. சுருக்க
மாகச் சொல்லும்படி திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, நான்
எப்போதும் சுருக்கமாகத்தான் பேசுவேன்.

மார்ச் மாதம் 6-ம் தேதி அன்றைக்கு சிம்கோ மீட்டர் விஷய
மாக அவையில் நடந்தது உங்களுக்கும் தெரியும். அப்போது
அவையும் இரண்டு தடவை ஒத்தி வைக்கப்பட்டது. அது சம்பந்த
மாக வெளியிலே பத்திரிகைகளோ, பிரஜைகளோ விமர்சனம்
செய்தார்கள். அத்தகைய விமர்சனம்.

It should be with in fourwalls of fair comments

ஃபேர் காமென்ட்ஸ்-க்கு ஒரு கோட்பாடு இருக்க வேண்டும்.
* அவையில் நடந்த ப்ரொசீடிங்ஸை திருத்திக் கூற யாருக்கும்
உரிமை இல்லை. நாங்கள் அவையில் நடந்துகொண்டதற்கு
உள்நோக்கம் கூற யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் திரு.
நெடுஞ்செழியன் அவர்கள்தான் கையெழுத்திட்ட (சைன்ட்)
ஆர்ட்டிகிள் ஒன்றை எழுதி இருக்கிறார்கள். இரண்டு தரம்,
இந்த அவை ஒத்திவைக்கப்பட்டது தெரிந்தது. நாங்கள் அன்
றைக்கு கோஷம் போட்டோம். அதற்கு நான் தலைமை
தாங்கினேன். ஆனால் நானே மற்றவர்களோ வன்முறை என்ற
முறையிலே அவையில் ஈடுபடவில்லை. ஆனால் மன்றம் பத்தி
ரிக்கை 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் தேதி அன்று
ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையில் அவர்
கூறுகிறார், தோழர் உமாநாத்தும் அவரைச் சார்ந்தவர்களும்
குடியாட்சி பண்புகளையும் மரபுகளையும் கடைப்பிடிப்பதில்லை

திரு. ரா. உமாநாத்

என்ற முடிவோடும் தடியாட்சி தன்மைகளையே கைக்கொள்வது என்ற முடிவோடும்தான் அன்று சட்டமன்றப் பேரவைக்கு வந்திருக் கின்றனர் என்பது, அவரது கூற்றுக்களில் இருந்தே தெள்ளத் தெளிவாகத் தெரியவரும்.

அடுத்து மேலும் சொல்கிறார். " தமிழக சட்ட மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கையாண்டுவரும் தடியாட்சித் தன்மைகளுக்கு இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சி, வலதுசாரிக் கம்யூ னிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி, காந்தி காமராஜர் தேசிய காங்கிரஸ் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் உடந்தையாக இருந்து வருகிறார்கள் " என்று கூறி இருக்கிறார்கள்.

This is a distortion of fact to what has happened within the House. It is for the House to take action against us and not for him.

ஸ்லேண்டராகவோ இல்லை ப்ளாக்மைல் பண்ணுவதற்காகவோ உரிமை யாருக்கும் இல்லை. திரு நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் சில விவரங்களைக் கொடுத்து கீழ்க்கண்டவாறு கூறி யுள்ளார்கள். " ஆதாயம் தேடும் நோக்கத்தோடு அரசியல் நடத்தி வரும் தோழர் உமாநாத் போன்றவர்கள் சட்ட மன்றப் பேரவையை போர்க்களமாகப் பயன்படுத்திக்கொண்டு, அன்று வன்முறை ஆர்ப்பாட்ட கிளர்ச்சியை நடத்தி இருக்கிறார்கள்." ஆதாயம் தேடுவதற்காக நாங்கள் அரசியல் நடத்தவில்லை. ஆதாயம் என்றால் ஊழல் செய்வது மட்டுமா ?

That is a most important portion of it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததைப் படித்து சுருக்கமாக விளக்குங்கள்.

திரு. ரா. உமாநாத் இந்த அவையை நான் கன்வின் பண்ண வேண்டும். நான என் ஆதாயத்திற்காக அரசியல் நடத்துகிறேன் என்பது அந்த சென்ட் டென்ஸ் அர்த்தம், வருகிறது. அது தான் என்று சொன்னால் நண்பர் நெடுஞ்செழியன் போயிருக்க வேண்டும். அப்படி நான் போகவில்லை. 'தட் சுட் நாட் பி டன்' என் ஆதாயத்திற்கு அரசியல் நடத்துகிறேன் என்று சொன்னால் ....

மான்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் எப்படி என்று மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, சட்டமன்றத்தில் இல்லாத, வெளியில் இருக்கிறவரைப் பற்றி குறிப்பிடக் கூடாது. அது உங்கள் கருத்தாக இருக்கலாம். பேரவையில் நான் அனுமதிக்க இயலாது. அப்படிப் பேசாதீர்கள். பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. ரா. உமாநாத் : என்னைப் பற்றி ஆதாயத்திற்கு அரசியல் நடத்துகிறேன் என்று நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னால் நான் பதில் சொல்ல வேண்டாமா ?

மான்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பற்றி பேச உரிமை உண்டு. ஆனால் அதற்குப் பதில் அவர்களுக்கு வெளியில் தரலாம். இங்கே அவை உறுப்பினருடைய மரியாதை எப்படி மீறப்பட்டது என்பதைப் பற்றி பேசுங்கள். அவரைப் பற்றி இங்கே பேசவேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : ஆதாயத்திற்கு அரசியல் நடத்து கிறேன் என்று சொன்னதால்தான் நான் சொல்கிறேன். அந்த முறையில்தான் அவர் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாயத்திற்காக நடத்த வில்லை எனறு நீங்கள் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் விளக்கங்கள் இங்கே வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : ஆதாயத்தைத் தேடிக்கொண்டு எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும், நான் போனதில்லை. நான் அமைச்சராகவும் இருந்ததில்லை. ஆதாயம் தேடி கட்சி விட்டு மாறவில்லை. ஆதாயத்தைத் தேடி அவர் இருக்கலாம். கோர்ட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆளுங்கட்சியிடம் என்றைக்கும் ஓடினதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்னைக்கு வாருங்கள். முடியுங்கள்.

திரு. ரா. உமாறாத் : முதல் அமைச்சர் அவர்கள் எனனைப் பற்றி இந்த அவையில் பேசியிருக்கிறார்கள். அதை நான் படிக்கிறேன். அதாவது " ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி என்று வைத்துக்கொண்டாலும் அல்லது சாதாரண போலீஸ்காரர் என்று வைத்துக்கொண்டாலும் ஏழ்மையில் இருக்கிறவர் லஞ்சம் வாங்காமல் என்ன செய்வார் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அதனால் அவர்கள் லஞ்சம் வாங்குவதை ஆதரிக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. லஞ்சம் வாங்குவதை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். அவர் கள் பணத்தை விரும்பினால் இப்போது எப்படியெல்லாமோ இருந்திருப்பார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஒரு லட்சியவாதி. அந்த லட்சியத்திற்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்." எனறு நண்பர் நெடுஞ்செழியன் காரியதரிசியாக இருக்கக்கூடிய அந்தக் கட்சியின் பெரும் தலைவர் 'பிராங்காக' சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கிறபோது இவர்கள் இப்படி நடந்துகொண்டால், அது 'சிலாண்டர்' பண்ணுவதுபோல் இருக்கும். அதுதான் உரிமை மீறல் என்று சொல்கிறேன்.

மான்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்பப்பட்ட பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால் அதன் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்ட பிறகு நான் எனது தீர்ப்பைக் கூறுகிறேன்.*

* தேதி தீர்ப்பு அளிக்கப்பெற்றது.

3. தகவல்கோரல்.

(அ) அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர் குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ராமபத்திரன் அதிகாரிகள் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் அந்தஸ்தை பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸர் காலரி பற்றிய பிரச்னை குறித்து இந்த அவையில் எழுப்பக் கூடாது. அது ஒரு மரபாக இருக்கிறது. இது ஒரு அவசர பிரச்னையும் அல்ல, உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதி யோடு (குறுக்கீடு).

மான்புமிகு பேரவைத் தலைவர் : அடிக்கடி இப்படி எழுந்திருக்க வேண்டாம். ஆபீஸர்ஸ் காலரி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நியாயமும் இல்லை.

(முற்பகல் 10. 10)

(ஆ) காமராஜ் சிலை விலக்கு இல்லாமல் இருப்பது குறித்து,

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதி யோடு ஒன்றைக் கூற விரும்புகிறேன். திரு. துரைமுத்துசாமி அவர்கள் எடுத்துக் கூறியது, அதாவது எல்லோரும், அனைத்து அரசியல் கட்சிகளும் மதிக்கின்ற மரியாதை காட்டுகின்ற பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய............

மான்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது இதைத்தான் நான் சொன்னேன். இராஜராஜ சோழன் சிலை பற்றிய கேள்வி வரும்போது, அதையொட்டிய கேள்வியை கேட்க வேண்டுமே தவிர, காமராஜ் அவர்களுடைய சிலையைப் பற்றிய கேள்வியை அனுமதித்தால், அதுபோன்று இன்னும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலையைப் பற்றி, பின்னால் கலைஞர் அவர்களுடைய சிலையைப்பற்றி, பெரியார் அவர்களுடைய சிலையைப்பற்றி எல்லாம் கேள்விகள் வரும். அதனால்தான் காமராஜ் அவர்களின் சிலைபற்றிய கேள்வியையும் அனுமதிக்க வில்லையே தவிர வேறு எதுவும் இல்லை.

திரு. ஜே ஜேம்ஸ் கேள்வியை ஏன் அனுமதிக்கவில்லை என்ப தைப்பற்றி நான் கேட்கவில்லை: அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு பிரச்னையை கொண்டு வருவதற்காக இதைச் சொல்ல

விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய சிலையில் கடந்த சில நாட்களாக விளக்கு இல்லாமல் இருக்கிறது. பொதுமக்கள் இதைப் பற்றி மிகவும் வருத்தப்படுகிறார்கள். இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அதைத்தான் நானும் கூற விரும்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, தயவுசெய்து உட்கா ருங்கள், அதைத்தான் அவர்கள் சொல்லிவிட்டார்களே........

(இ) முரசொலிப் பத்திரிக்கையை அவையில் விநியோகித்தவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே நேற்றைய தினம் இங்கு சபையில் ஒரு பத்திரிக்கையை கொடுத்த தற்காக சம்பத்குமார் என்பவர் சம்பந்தமாக நீங்கள் சொல்லும் போது. நாங்கள் குறுக்கிட்டு பேசும்போது, தாங்கள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை, அதைப்பற்றி விசாரிப்பதாக இருக் கிறேன், விசாரணை நடத்தி முடிவு எடுக்கிறேன் என்று தாங்கள் சொன்னீர்கள், ஆனால் இன்றைக்கு வேறுவிதமாக முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. நாங்கள் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் தவறான செய்தியை தருகிறீர்கள். நீங்கள் சொல்லுகின்ற கருத்துக்களையும் நான் ஆய்வில் வைத்துக்கொண்டு இறுதியில் முடிவு எடுக்கிறேன் என்றுதான் சொன்னேன். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், எனக்குள்ள சங்கடங்களை போக்குவதற்கு நான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்...

திரு. என். சங்கரய்யா : நாங்கள் கருத்துக்களை சொல்லும் போது, அதைப்பற்றி பரிசீலனை செய்கிறேன் என்று சொன்னீர் கள், ஆனால் 18-4-79 காலையில் அவரை வேலையிலிருந்து நீக்சி விட்டதாக தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நிர்வாகப் பிரச்னை, அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதையெல்லாம் என்னுடைய அறையில்—என்னுடைய சேம்பரில் வந்து கேளுங்கள். இங்கே கேட்பது சரியல்ல.

திரு. என். சங்கரய்யா : எங்கள் கட்சியின் சார்பாக ஒரு அபிப்பிராயத்தை தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தி னுடைய நடவடிக்கைகளை எல்லாம் நாம் இங்கே விமர்சிக்கும் போது. இதைப்பற்றி இங்கு கேட்பதில் என்ன தவறு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரின் நிர்வாக விஷயங்களில் நடவடிக்கை எடுக்க தலைவருக்கு உரிமை இருக்கிறது. அந்த நடவடிக்கையில் ஏதாவது தவறுகள் இருக்கு மானால் அதைப்பற்றி எனது சேம்பரில் வந்து சொலலலாம். இங்கு எழுப்ப முடியாது. நிர்வாகம் சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளை எல்லாம் எடுக்க எனக்கு உரிமையிருக்கிறது. அதில் இன்ன முடிவுதான் எடுக்க வேண்டும் என்று என்னை வற்புறுத்தக் கூடாது.

திரு. என். சங்கரய்யா: நாங்கள் கூறுவது அவரை வேலை யிலிருந்து நீக்கியிருப்பது சரியல்ல என்பதைத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய முடிவை கண்டித்துக் கருத்து சொல்வது சரியல்ல..........

திரு. என். சங்கரய்யா: வேலை நீக்கம் செய்த உத்தரவில் டெப்யூடி செக்ரட்டரி தான் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக் கிறார். தாங்கள் கையெழுத்துப் போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் போட்டால் என்ன, டெப்யூடி செக்ரட்டரி போட்டால் என்ன?

திரு. என். சங்கரய்யா சட்டமன்றம் என்று ஒரு மான்யக் கோரிக்கையையே நாம் இங்கு விவாதிக்கிறோம், ஆகவே இதைப் பற்றி இங்கு கூறுவது வரம்பு மீறியது என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மான்யக் கோரிக்கைவரும் போது வேண்டுமென்றால் பேசுங்கள். ஆனால் நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, அதை ஒரு ஒழுங்குப் பிரச்னையாக கருதிக்கொண்டு பேசுவது சரியல்ல என்று தான் சொன்னேன். என்னுடைய நிர்வாசத்தை சீராக நடத்துவதற்கு தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

திரு. என். சங்கரய்யா: நாங்கள் கேட்டுக் கொள்வது, ஏற் கனவே எடுத்த முடிவை மறு பரிசீலனை செய்யுங்கள். இப்போது கொடுக்கப்பட்டிருப்பது கடுமையான தண்டனையாக இருக் கிறது. பத்திரிகையை கொடுத்தார் என்பதற்காக 'தென்னகம்' பத்திரிகை கொடுத்திருந்தால் இந்தப் பிரச்னையே வந்திருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அனுமதித்தால் நாளைக்கு 'ஜனசக்தியையும்' கொடுக்கலாம் என்று வரலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தங்கள் நிர்வாகத்தில் உள்ளே போவதாக தாங்கள் இதை எடுத்துக் கொள்ளக் கூடாது. ரெகுலராக பல பேப்பர்களை கொண்டு வந்து தரக்கூடியவர்கள், இந்த விஷயத்தில் அவர்கள் இன்னோ ஸண்ட்டாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஆகவே இதை ரீ-கன்ஸிடரேஷன் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எடுத்திருக்கின்ற முடிவுக்கு ஏதாவது ஆதாரங்கள் இருக்கிறதா என்பதை கோப்பு களைப் பார்த்தால் தெரியும். ஆனால் அதையெல்லாம் இங்கே சொல்ல முடியாது. நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதை அவையில் ஒரு பிரச்னையாக ஆக்கக் கூடாது என்பதைத் தான் நான் சொல்லுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் நேற்றைய தினம் இங்கே வேலை நீக்கம் செய்யப் பட்ட சம்பத்குமார் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்னிக்க வேண்டும். இந் தப் பிரச்னை குறித்து நான் ஏற்கனவே என் முடிவை சொல்லி விட்டேன்.

திரு. துரை முத்துசாமி: இது ஒரு அவை மீறல் குறித்த பிரச்னை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங் கள். இப்படி ஒவ்வொருவரும் எழுந்து நின்றால், நான் எப் படிப் பேசுவதற்கு அனுமதிக்க முடியும். அனுமதிக்க இயலாது. உட்காருங்கள். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார். இப்படி ஒவ்வொரு கட்சித் தலைவரும் எழுந்து நின்றால் நான் என்ன செய்வது? உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தாங்கள் அளிக்கின் கின்ற முடிவானது இந்த அவையின் சார்பாகவும், அங்கத்தினர் கள் சார்பாகவும் எடுக்கப்படுகின்றது. நான் ஒன்றை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பிரச்னை யில் தாங்கள் எடுக்கின்ற இந்த முடிவானது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்ற சிப்பந்தி தவறு செய்தால், நடவடிக்கை எடுக்கப்படு கின்றது. அதற்கு இந்த அவையின் அனுமதி வேண்டுமென்று எந்த விதியின் கீழ் இருக்கிறது?

[1979 ஏப்ரல் 19

திரு. ரா. உமாநாத்: இது ஒரு பிரிவிலெஜ்:.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ, நோ. அப்படி கிடையாது. உமாநாத் அவர்கள் பாராளுமன்றத்திலே இருந் திருக்கிறீர்கள். இதைப்பற்றித் தெரியும். எனக்குத் தெரிந்த வரையில், இது ஒரு பிரிவிலெஜ் ஆப் தி அவுஸ் இல்லை.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் ஆக்ஷன் எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரத்தை வீணாக்க வேண் டாம். நான் அப்படி அனுமதிக்க முடியாது. என்னுடைய நிர்வாகத்தின்கீழ் உள்ள சிப்பந்தி மீது நான் நடவடிக்கை எடுக் கக் கூடாது என்று சொன்னால், பிறகு நிர்வாகம் எப்படி நடக் கும்? நான் எடுத்த நடவடிக்கையைப் பற்றி கருத்து சொல்ல முடியாது. நான் இருக்கின்ற முறைகளைச் சொன்னேன்.

திரு. ரா. உமாநாத்: The Charge is acting on behalf of the House. The Charge is not to bring anything unreleted to the House. Therefore, the Charge must reconsider.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா சொன்ன தற்கு நான் முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன்.

திரு. என். சங்கரய்யா: சட்டமன்றத்திலே இந்த மானியம் கோரிக்கை வரும்போது இதைப்பற்றி சொல்லலாம் என்று கூறினீர்கள். இப்போது அந்தப் பிரச்னையைப் பற்றி ஏன் பேசக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதை நான் உணர்கிறேன். இன்றைக்கு இந்தப் பிரச் னையில் பேரவையின் நேரத்தை வீணாக்க நான் அனுமதிக்க

[பேரவைத் தலைவர்]

முடியாது. அதைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புண்டு. ஆனால், என் நிர்வாகத்தை செம்மையோடு நடத்துவதற்கு, என் நிர் வாகத்தின் கீழ் உள்ள சிப்பந்திகள் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு உரிமையுண்டு. அதைப்பற்றி நீங்கள் கருத்து சொல்ல லாம். ஆனால், என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. என். சங்கரய்யா: நேற்றைய தினம் சொன்னீர்கள், பரிசீலிப்போம் என்று. ஆனால், இன்று முடிவெடுக்கப்பட்டு விட்டது.

1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று என்று சொன்னால், 24 மணி நேரம் இருக்கிறது. அதை நன்றாகப் பரிசீலித்துப் பார்த்து, ஆய்வு செய்து முடிவெடுத்திருக்கிறேன். இந்தப் பிரச்னையை எந்த விதியின் கீழ் கொண்டு வர முடியும், எந்த விதியின்கீழ் செய்யலாம் என்று எழுதிக் கொடுங்கள், நான் கவனிக்கிறேன்.

(2) உரிமைப் பிரச்னைகள் (தொடர்ச்சி).

(ஆ) 'மக்கள் செய்தி', 'மாலை முரசு' நாளேடுகள் மீது.—

மாண்புமிகு பேரவைத் தலைவர். : பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு திருப்பூர் ஆர். மணி மாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 10—20)

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியிட்ட ''மக்கள் செய்தி''ப் பத்திரிகையில் ''தமிழ் நாட்டில் மேலும் இரண்டா யிரம் போலீஸ் ; எம்.ஜி.ஆர். தகவல்'' என்ற தலைப்பில் மற்றச் செய்திகளையும் திரித்து வெளியிட்டதை நான் அவைக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''காவல் துறை தீயணைப்புத் துறை மானியக் கோரிக் கையை முதல்வர் எம்.ஜி.ஆர். சட்டசபையில் தாக்கல் செய்தார்'' என்ற தலைப்பில் மக்கள் செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட் டுள்ளது.

அதே போல் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியிட்ட 'மாலை முரசு' பத்திரிகையில் ''கடந்த ஆண்டு துப்பாக்கி சூட்டில் பலியானது 9 பேர்—எம்.ஜி.ஆர். தகவல்—போலீஸ் தீ அணைப்புப் படை பற்றிய மானியக் கோரிக்கை மீது இன்று விவாதம் நடந்தது'' என்ற வகையில் செய்தி வெளியிட்டிருக் கிறது.

[திரு. ஆர். மணிமாறன்]

இந்த இரண்டு பத்திரிகைகளும் இந்த அவையில் நடை பெறாத ஒரு கருத்தை நடந்ததாகக் குறிப்பிட்டு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். போலீஸ் தீ அணைப்புப் பற்றிய மானியக் கோரிக்கைகள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம்

நாளன்று பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட
வில்லை. எனவே இந்தப் பத்திரிகைகளில் அவையில் நடக்காத
நடவடிக்கை ஒன்றை நடந்ததாக வேண்டுமென்றே பிரசுரித்
துள்ளது. இது அவையின் நடவடிக்கைகளைத் தவறாகப்
பிரசுரித்தது மட்டுமல்லாமல் அவையின் களங்கம் கற்பிக்கிற முறையில் அமையப் பெற்றிருக்கிறது என்
பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவைக்கென்று ஒரு
மரபு இருக்கிறது, ஒரு பாரம்பரியம் இருக்கிறது, ஒரு கடமை
இருக்கிறது, கண்ணியங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம்
உடைத்தெறிகிற பாங்காக மாலை முரசு பத்திரிகையும் மக்கள்
செய்திப் பத்திரிகையும் இம்மாமன்றத்தில் நடக்காத ஒன்றை
நடந்ததாக ஏதோ ஒரு கற்பனை ஓட்டத்தில் செய்தியை வெளி
யிட்டிருப்பது அவையைக் களங்கப்படுத்துவதாக அமைகிறது.
உண்மை நிலைகளை மக்கள் முன்னால் படம் பிடித்துக் காட்டும்
பொறுப்பு பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறது. ஆனால் தவறான
செய்தியை வெளியிட்டு குழப்ப நிலையை உருவாக்க வழி
வகுக்கும் தன்மையில் இந்தப் பத்திரிகைகள் தங்கள் கடமைகளை
சரிவரச் செய்யாமல் ஏதோ மாறுபட்ட திசையில் மக்களை
அழைத்துச் செல்லும் பாங்கில் இந்தத் தவறான வேண்டாத
நடைபெறாத அவையில் நடக்காத இந்தச் செய்திகளைத்
திரட்டி வெளியிட்டிருப்பது இந்தச் சபையை மாசுபடுத்து
வதாகும் என்று சொல்லி வீதி ஓரத்தில் நடக்கின்ற மானியங்
களைக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்
இந்தப் பத்திரிகைகள் இந்த அவையில் நடைபெறாத நிகழ்ச்சி
களைத் தங்களுடைய கருத்தோட்டத்திற்குக் கொண்டுவர
முடியாமல் இப்படிப்பட்ட மரபுகளை எடுத்தெறியும் தன்மை
யில் ஆளாக்குகின்ற நிலைமையை வளர்க்க வேண்டாம் என்று
சொல்லி இது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருப்பதால்
உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்பப்பட்டுள்ள பிரச்
சினை பத்திரிகைகள் மீது இருப்பதால் அந்தப் பத்திரிகை
யாசிரியர்களிடமிருந்து விளக்கம் பெற்ற பிறகு தீர்ப்பளிக்
கிறேன்.*

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
திரு உமாநாத் அவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள்
26-ம்நாளன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
அவர்கள்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை
எழுப்பினார்கள். 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ம்
நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம்
அளித்தார்கள்.

* தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

[பேரவைத் தலைவர்]

1978-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20-ம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையையும் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8-ம் நாளன்று அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தையும் கூர்ந்து கவனித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அளித்த விளக்கத்தையும் நன்கு கவனித்தேன்.

அமைச்சர் அவர்கள் முதலிலிருந்தே சில தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனவும் அதனால் நிர்வாகத்தினர் தம் சம்மதத்தைத் திரும்பப் பெற்றனர் என்றும் கூறியிருக்கிறார். எனவே தொழிலாளர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்றோ அல்லது தொழிலாளர்களைப் பற்றி எந்தவிதமான தவறான கருத்தையும் தெரிவித்தார் என்று கூறுவதற்கோ எந்தவிதமான ஆதாரமும் காட்டப்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஈ) உணவுத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்து அவையில் விளக்கம் அளித்தார். அவர் கொடுத்த அறிவிப்பிலும் அவையில் அளித்த விளக்கத்திலும் மாண்புமிகு அமைச்சர் எந்தெந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்தார் என்பதைப் பற்றி விளக்கமான கருத்து எதுவும் கூறவில்லை.

அதற்கு மாறாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் மற்றக் கழகங்களின் ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் கொடுத்து விளக்கியுள்ளார். மேலும் பொது நிறுவனங்களில் சில லாபத்திலும் சில நட்டத்திலும் நடைபெறுகின்றன என்பதையும் விளக்கியுள்ளார்.

ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலை அளித்தார் என்பதைக் கூறாமல் நுகர் பொருள் வாணிபக் கழகம் நட்டத்தில் இயங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்தை எடுத்துக் கொண்டு அந்த நட்டம் எதனால் ஏற்பட்டது என்பதை விளக்க முற்பட்டார். இது இப்பிரச்சினைக்குத் தேவை இல்லாதது. அமைச்சர் கொடுத்த தகவல் சரியா, தவறா? தவறு என்றால் எப்படித் தவறு என்பதைத்தான் விளக்க வேண்டும்.

எனவே திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1979–80-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1979–80-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ், 1979–80-ம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1979–80-ம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(உ) அவைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 221 (1)-வது விதியின் கீழ் 1979–80-ம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(5) அறிவிப்பு.

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பொதுக் கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), உரிமைக் குழு (கமிட்டி

ஆப் பிரிவிலேஜஸ்), அவைக் குழு (ஹவுஸ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3—00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாள், வியாழக்கிழமை, பிற்பகல் 3—00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாள், வெள்ளிக்கிழமை பிற்பகல் 3—00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள், சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1—00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, 25-ம் தேதி என்று குறிப்பிட்டார்கள். மரபுப்படி பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. இங்கே இல்லை. அவர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய வாய்ப்பு இல்லை. அவர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைத்து பின்னாலே சேர்ப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமா? தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கூத்தகுடி சண்முகம், நான் தங்களை நன்றாக உணர்ந்தவன். அவர்கள் செயலாளர் அறையிலே சென்று வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன். அந்த வாய்ப்பு உண்டா என்று கேட்டேன், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்ற முறையில் அந்தத் தேர்தல்கள் எந்த எந்தத் தேதியில் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறேன். வேட்பு மனுக்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். உங்களுக்குள்ளே அவரவர்கள் முடிவு எடுக்க வேண்டுமே தவிர பேரவைத் தலைவர் செய்ய முடியாது. உங்களுடைய சட்சித் தலைவர்கள் செய்ய வேண்டிய முடிவு. ஆனால் செயலாளர் அறையிலே வேட்பு மனுக்களை அளிப்பதற்கு உரிமை உண்டு. அதை அவர்கள் போடலாம்.

(முற்பகல் 10·30)

(அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,94,50,000 மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் தொழிலாளர்களுக்கு முறையான வைத்திய வசதி கிடைக்காதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,94,50,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, காண்டிராக்ட் முறையை கட்டுப்படுத்தி ஒழிப்பதற்கு மாறான அநேகமாக சகல தொழில்களிலும் காண்டிராக்ட் முறை புகுத்தப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்ட—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,94,50,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கொள்கைப் பற்றி விவா ,க்க—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,94,50,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்", என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,94,50,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

THIRU SALEM M. ARUMUGAM : Sir, " to discuss the need to appoint Government auditors in Factories ", I move

" That the allotment of Rs. 4,94,50,000 under Demand No. 29, Labour Welfare including Factories be reduced by Rs. 100 ".

கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்
களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட
தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற
தலைப்பின்கீழ் ரூ. 9,65,92,000—க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, கிராமப்
புற வீட்டு வசதி திட்டத்தில் இப்போது உள்ள நடைமுறைகளை
குறைத்து ஏழைகள் உடனடியாக வீட்டு வசதி கடன் பெற ஏற்பாடு
செய்வது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,65,92,000—இல் ரூ. 100
குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, ஊராட்சி
ஒன்றியத்தின்கீழ் பணிபுரியும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு
வீடுகள் கட்டிக் கொடுக்கும்படி வற்புறுத்தி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 9,65,92,000-இல்
ரூபாய் 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 9,65,92,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இளையான்குடி, ஆர். எஸ். மங்களம் பகுதியில் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது போல பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 9,65,92,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

THIRU SALEM M. ARUMUGAM : Sir, "To discuss the need to build a housing complex for the unmarried working women in Madras City and elsewhere" I move :—

" That the allotment of Rs. 9,65,92,000 under Demand No. 33—Housing be reduced by Rs. 100 ".

கோரிக்கை எண் 49.

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

[1979 ஏப்ரல் 19

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, தூத்துக்குடி, ஆவடி ஆகிய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கும் திட்டம் சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,78,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, புளியங்குடி மேல் நிலை நீர்த் தொட்டி அடிக்கடி கழுவிய தண்ணீரை அருகில் உள்ள ஜின்னா நகர் வலையர் ஊரணியில் விடுவதால், அப்பகுதியில் தண்ணீர் ஏராளம் வெள்ளமாகி விடுவதால், சிறு குழந்தைகளை அடித்துச் செல்வதும், கூறை வீடுகளை சேதப்படுத்தும் நிலையை பாதுகாக்காமலிருப்பதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,78,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,78,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, பரமக்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவருவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,78,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 4,78,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மானியக் கோரிக்கைகளைப் பற்றிய கொள்கை விளக்க அறிக்கைகள்* அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் படித்ததாகப் பதிவேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கும்படி பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நலத் துறையும், குடிதண்ணீர்த் திட்டமும், வீட்டு வசதி வாரியமும் அடங்கிய மூன்று மிக முக்கியமான மானியங்களின் மீது இப்போது நான் இங்கே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நீர் நிலை என்பது நாலா பக்கமும் அடைக்கப்பட்டுவிட்ட மிகப் பெரிய செயலாகும். மேற்கேயிருந்து வரும் தண்ணீர் அனைத்தையும் இன்று கேரளாவும், கர்நாடகமும் பகிர்ந்து கொள்கின்றன. நமக்கு வருவதைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வடக்கே ஆந்திரப் பிரதேசத்திலிருந்து நமக்கு நீர் வரத்துக்கள் இல்லை. கிழக்கே பார்த்தால் கிழக்கேயும், தெற்கேயும் கடலால் சூழப்பட்ட பகுதி. ஆகவே, இங்கேயிருக்கின்ற மக்கள் குடி தண்ணீருக்காகக் கூட அல்லல்படுகின்ற ஒரு துயரமான சூழ்நிலை இன்று நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக தென் மாவட்டங்களில் குடி தண்ணீர்ப் பிரச்னை என்பது மிகப் பெரிய பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது. எங்கள் பகுதியில், நம்முடைய அரசாங்கம் நல்லெண்ணத்தோடு பல அரிய திட்டங்களைத் தீட்டினார்கள். இப்பொழுது நமக்கெல்லாம் இது ஒரு பெரிய சோக நிகழ்ச்சியாக இருக்கிறது. கீழ்க்குடி துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சி குடி தண்ணீர் திட்டத்தால் ஏற்பட்டதுதான். ஆனால், நம்முடைய அரசாங்கம் நல்ல திட்டங்களைத் தீட்டினார்களேயொழிய விவேகத்தோடு அங்கே இருக்கிற மக்களை அணுகி, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் அணுகி, சுமுகமான முறையிலே அணுகி தீர்வு காணுகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கியிருப்பார்களானால், இப்படிப்பட்ட கடுமையான துப்பாக்கிச் சூடு கூட நடைபெற்றிருக்க முடியாது.

** 642, 738, 756-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

நம்முடைய குடி நீர் வடிகால் வாரியத்திலேயிருந்து அங்கே இருக்கிற அதிகாரிகள், 'வாட்டர் போர்ட்' இன்ஜினியர்கள், கிராமப் புறங்களிலே எங்கே தண்ணீர் இருக்கிறது என்று ஆராய்கிறார்கள். குறிப்பாக, கிழக்கு இராமநாதபுரம், மேற்கு இராமநாதபுரம் எல்லாம் எப்போதுமே வறட்சியான பகுதிகள். அங்கே ஒரு சில மணல் பாங்கான இடங்களில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் ஏற்படுவது இயற்கை. அந்தத் தண்ணீரை எடுத்து விவசாயத்திற்கு, முக்கியமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நாமும் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைப்போட்டு, ஏழை, எளிய மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று திட்டத்தைப் போடுவது என்பது அவ்வளவு நல்ல காரியம் அல்ல என்பதை அங்கேயிருக்கிற அதிகாரிகளிடம் நானே பல முறை சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற கடலாடிக்கு ரூ. 1–3/4 கோடியிலே ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். கீழ்குடியிலிருந்து தண்ணீர் எடுத்து, கடலாடிக்குக் கிட்டத்தட்ட 84 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப் போகிறோம். முதுகுளத்தூருக்கு அச்சன்குளம் கிராமத்திலிருந்து தண்ணீர் எடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். இவை இரண்டும் வறண்ட பகுதி. ஆழ் குழாய் போட்டால்கூட, நிரந்தரமான பரிகாரம் ஏற்படாது என்று சொன்னேன். ஆனால், அவர்கள் ஆழ் கிணறுகள் போடுவதால் தண்ணீர் எடுத்து மக்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி அச்சம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதிகாரிகளிடம் நன்றாக வேலை வாங்குகிற, சுறுசுறுப்பாக இயங்குகிற அமைச்சராக இருந்தாலும் அந்தத் துறையிலே கொஞ்சம் தவறி விட்டார்கள் என்று குற்றம் சுமத்துகிறேன். மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி, எத்தனையோ திட்டங்களுக்காக, நேரடியாக எங்களை அணுகினார்கள். ஒவ்வொரு திட்டத்தையும் பார்வையிடுகின்ற நேரத்தில், திட்டம் நிறைவேற்றுகிற இடத்திற்கு நேரடியாகச் சென்று, அங்குள்ள மக்களை அணுகி, எங்களைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி, பேசியிருந்தால், இவ்வளவு பெரிய கடுமையான துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்காது.

(மாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை.)

இந்தத் திட்டம்—ரூ. 2½ கோடி திட்டம், தோல்வித் திட்டமாக அமையும் என்ற அச்சத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வைகை என்பது கை வைத்தால் தண்ணீர் வரக் கூடிய ஆறு. இப்பொழுது அதிலிருந்து அருப்புக் கோட்டைக்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பரமக்குடிக்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இராமநாதபுரத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போன்று சிறு சிறு திட்டங்களுக்குக் கூட தண்ணீர் எடுக்கப்படுகிறது.

அது போன்று இந்த இரு திட்டங்களையும் வைகையோடு இணைத்திருந்தால் இந்தப் பிரச்னை சுமுகமாக அமைந்திருக்கும். வைகையிலே தண்ணீர் இல்லையென்று சொல்வார்கள். 20, 25 அடிதானே மணல். அதற்குக் கீழே, தண்ணீர் இல்லையென்று சொல்வார்கள். வைகை என்பது நிரந்தரமாகத் தண்ணீர் ஓடக்கூடிய ஆறு இல்லையென்றாலும் கூட, ஊற்று உள்ள ஆறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சிக் காலங்களில் தண்ணீர், வைகையிலே இல்லாவிட்டாலும், நாம் கேரளாவிலிருந்து குடி தண்ணீருக்காவது கேட்டு, ஓரளவுக்கு ஒரு பருவத்திற்கு, கோடை காலத்திற்குத் தண்ணீர் பெறக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினால், குடி தண்ணீர்த் திட்டம் வெற்றிகரமாக அமையக்கூடிய வாய்ப்பிருக்கும். வைகை எந்த நேரத்திற்கும் தண்ணீர் கொடுக்காவிட்டாலும், ஒரே ஒரு பருவத்திற்கு மட்டும், கோடை காலத்திற்கு மட்டும், தண்ணீர் பெற ஏற்பாடு செய்தால் போதும். நம்முடைய அமைச்சரவர்களும், அதிகாரிகளும், இந்த அரசும் அதிலே அதிகமாகக் கவனம் எடுத்து, உடனடியாக, இரண்டு குடி தண்ணீர் திட்டங்களையும், வைகையிலிருந்து தண்ணீர் எடுத்துச் செயல்படுத்துகிற வகையில், இந்த வைகைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–40]

அதற்கான முயற்சிகளை செய்யுமாறு நம்முடைய அரசை நான் வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன். அது போலத்தான் எங்களுடைய கட்சி துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதியிலே கூட அங்கேயிருந்த அமராவதி நதியிலே கூட ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இப்படி இந்தியாவிலே இருக்கிற எல்லா நதிகளிலும் இத்தகைய திட்டங்கள் போட்டு நிறைவேற்றினால், குடி தண்ணீர் தட்டுப்பாடே இல்லாது போய்விடும். அண்டை மாநிலங்களில் இருக்கிற அரசோடு தொடர்புக் கொண்டு அவர்களுடைய மாநிலங்களின் வழியாக தண்ணீர் கொண்டு வந்து நம்முடைய மாநிலத்திலே இருக்கிற மிகப் பெரிய பிரச்னையான குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்க வேண்டும். குடி தண்ணீர் என்பது இப்பொழுது கோடைக் காலமாக இருக்கிற காரணத்தினால் எல்லா இடங்களிலேயும் மிகப் பெரிய பிரச்னையாக இது உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வீடு கட்டும் திட்டம். இப்பொழுது கிராமங்கள் தோறும் வீடு கட்டும் திட்டம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த திட்டத்திற்காக அங்கே போடப்பட்டிருக்கிற அதிகாரிகள் எத்தனை பேர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பணிகள் என்ன, அதற்கெல்லாம் எவ்வளவு செலவாகிறது என்றெல்லாம் தெரியவில்லை. அதற்கான நடவடிக்கைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன்

அதற்கு மூன்றாயிரம், 4 ஆயிரம், 5 ஆயிரம் செலவில்
வீடு கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மூவாயிரம்
ரூபாயை வைத்து வீடு கட்ட முடியுமா ? மூவாயிரம் ரூபாயை
வைத்துக் கொண்டு வீடு கட்டுவது கனவில் கூட நடக்க முடியாது
என்று கருதுகிறேன்.

செங்கல் 1500 செங்கல்கள் சேர்ந்த ஒரு லோடு அதன்
விலை இப்பொழுது 150 ரூபாய். முன்பு ஆயிரம் செங்கல்
விலை 40 ரூபாய் 50 ரூபாய் என்று இருந்தது. அது இப்
பொழுது 150 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதேப் போலத்
தான் சிமெண்ட் விலையும் மற்ற வீடு கட்டும் பொருட்களின்
விலையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சிறு
ஏழை எளிய மக்கள் கூட 5 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக
வீடு கட்ட முடியாது என்று கருதுகிறேன். ஆகவே இந்த மானியத்
திட்டத்தை 3,000 லிருந்து 5,000 ஆக உயர்த்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர்கள் பிரச்னை என்று பார்க்கிற
போது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழி
லாளர்கள் பிரச்னை மிகப் பெரிய பிரச்னையாக இந்தச் சட்ட
மன்றத்தையே ஒரு உலுக்கு உலுக்கிய பிரச்னை இந்த தொழி
லாளர்கள் பிரச்னை. அதே நேரத்தில் நம்முடைய அரசாங்கம்
அவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சில சலுகைகளை
செய்து தராமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக
இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் இருக்கிற தொழி
லாளர்கள் எங்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை, நிர்ண
யிக்கப்படவில்லை என்று பெரிய குறையைச் சொன்னார்கள்.
நம்முடைய அரசு அதற்காக தனி நீதிபதியை போட்டு விசா
ரணை நடத்தினார்கள். விசாரணை செய்து அந்தத் தனி
நீதிபதி 32 லட்சம் ரூபாய் போனஸ் கொடுக்க வேண்டும் என்று
உத்தரவிட்டார்கள். ஆனால், அங்கே இருக்கிற ஒரு சங்கம்
சி.ஐ.டி.யு. சங்கம் என்று நினைக்கிறேன், அந்தச் சங்கத்தைச்
சேர்ந்தவர்கள் அந்த நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு
நம்முடைய தனி நீதிபதியினுடைய தீர்ப்புக்கு எதிராக 14
லட்சம் ரூபாய்க்கு போனஸ் கொடுத்தாலும் போதும் என்று
ஒப்பந்தத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்த 14 லட்சம்
ரூபாயானது இன்று அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைத்ததா
என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த
14 லட்சத்திலும் 2 லட்சம் ரூபாய் குறைத்துக் கொடுத்திருக்
கிறார்கள். அந்த 2 லட்சம் ரூபாய் என்னவாயிற்று என்றே
தெரியவில்லை. மர்மமாக இருக்கிறது. அதிலும் நன்கொடை
கள் என்ற பெயரில் ஆளுக்கு 20, 30 ரூபாய்கள் கொடுக்கப்
பட்டதாக தெரிகிறது. அதற்கு காரணம் என்ன ? இதுபோன்ற
குறைபாடுகளை இனிமேலாவது இல்லாமல் நமது அமைச்சர்
அவர்கள் தலையிட்டு நமது தனி நீதிபதி அவர்கள் உத்தரவு
போட்ட 32 லட்சம் ரூபாயை வழங்குவதற்கான ஏற்பாட்டை
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று நம்முடைய நாட்டில் காங்கிரஸ் அரசாங்கம்
இருந்த நேரத்தில் பீடி தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் போட்
டது. அதன் மூலமாக பீடி தொழிலாளர்கள் நன்மை அடைந்
திருக்கிறார்கள். இதுபோன்று நம்முடைய கைத்தறித் தொழி
லாளர்களுக்கும் ஒரு சட்டம் போட்டு, அவர்களுக்கும் உதவ
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று இதர தொழிலாளர்களுக்கும் சட்டங்கள்
போட்டு ஊதிய நிர்ணயம், போனஸ், மருத்துவ வசதி, குடிதண்
ணீர் வசதி முதலியவைகளை செய்து கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் குரோம் பேட்டைப் பக்கத்தில் ஒரு லெதர்
கம்பெனி 10 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது. 500—க்கு
மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டினிகிடக்கிறார்கள். அதற்
காக நம்முடைய அரசு, நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடி
யாக முயற்சி செய்து அந்த குரோம்பேட்டை லெதர் கம்பெனியை
உடனடியாக . திறப்பதற்கு நடவடிக்கை செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இப்போது நம்முடைய முதல-
மைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில்
தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் வேலைக்கு மேல் போகாமல்
பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். நான் ஒரு இரண்டு
மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய ஊரில் இருந்து
சென்னைக்கு வருகிற நேரத்தில் இரவு 1 மணிக்கு அந்த துரித
வண்டியில் ஏறிய டிரைவர் காலை 11 மணிக்கு சென்னை வந்து
சேருகிறார். அந்த வண்டியில் பயணம் செய்வதற்கே நமக்கு
அச்சமாக இருந்தது. 11 மணி நேரம் ஒரு டிரைவர் வேலை
செய்கிறார், வண்டி ஓட்டுகிறார் என்றால் இது தான் இந்த அரசு
தொழிலாளிக்குச்செய்யும் நன்மையா என்று கேட்டுக்கொள்கி-
றேன். தொழிலாளியை எந்த நிலையிலும் 8 மணி நேரத்திற்கு
மேல் வேலைக்கு இல்லாமல் இருக்கும் நிலையை ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களின் சேசுவல் லேபர் என்று வைத்திருக்கி
றோம். இந்த முறை கொத்தடிமை முறை. அதை ஒழித்து
தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக பணியாற்றும் சூழ்நிலையை ஏற்
படுத்த வேண்டும். அதிகாரிகள் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும்
சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து தொழிலாளர்
களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே நல்ல உறவு ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு எஸ். செல்வராஜ்: மாண்புமிகு பேரவை தற்காலிகத்
தலைவரவர்களே, தொழிலாளர் நலன், வீட்டு வசதி மானியத்
தின் மீது பேசும் நல்வாய்ப்பு கிடைத்தமைக்கு என் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாய்ந்து, அதனை அவன் கண் விடல்—என்னும் வள்ளுவரின்

[திரு. எஸ். செல்வராஜ்] [1979 ஏப்ரல் 19

வாக்கிற்கொப்ப யார் யாருக்கு என்னென்ன பொறுப்பைக்
கொடுத்தால் அந்தப் பொறுப்பைச் சீராக, சிறப்பாக செம்மை
யாக செயல் படுத்த முடியும் என்றாய்ந்து, தொழில ளர்களுக்
காகப் பாடுபட்டு, தன் வாழ்வில் முதலில் தொழிலாளியாக
வாழ்வைத் துவங்கி தொழிலாளர் தலைவராக தன்னை உயர்த்தி
தொழிலாளர்களுக்காக வாதாடி போராடி, வழக்காடி தந்தை
பெரியாரின் புகழ்பாடி, பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும்
தம்பியாக அண்ணாவின் தம்பியாக புரட்சித் தலைவரின் அமைச்
சரின் அங்கமாக தொழிலாளர்களுடன் சங்கமமாகியுள்ள மாண்பு
மிகு அமைச்சர் அவர்களைத் தொழிலாளர் நலத்துறைக்கு
புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சராக ஆக்கியுள்ளார்
என்றால், தொழிலாளர்கள் மேல் எந்த அளவிற்கு அக்கறையும்
ஆர்வமும் கொண்டு உள்ளார் என்பது வெள்ளிடை மலையாகும்.
அதே போல் அந்தக் காலத்திலேயே ஆயுதம் செய்வோம், நல்ல
காகிதம் செய்வோம், கல்விச் சாலைகள் அமைப்போம், தொழிற்
சாலைகள் அமைப்போம் என்று பாரதியார் சொன்னது போல்
கிராமப் புறங்களில் எல்லாம் தொழிற்சாலைகள் அமைப்ப
தற்கு, தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு எல்லாம் திட்டங்
கள் தீட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல திறமையாக
வும், சிறப்பாகவும் பணியாற்றி தொழிலாளர் நலனைக் காக்கும்
வகையில் பணியாற்றி வருகிறார்கள்.

முந்தைய ஆட்சியில் எல்லாம் டாட்டா, பிர்லா, டால்மியா
போன்றவர்களுக்கும் அவர்களைப் போன்ற குபேரர்களுக்கு
பல நல்ல சட்டங்களை, அவர்களுக்கு சாதகமான சட்டங்களை
உருவாக்கிக் கொடுத்து வந்தார்கள். மேலும் முன்னைய ஆட்சி
யாளர்கள் செல்வந்தர்கள் பின்னும் அரசியல் வலையில் சிக்கித்
திணறி, அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்
படுத்தினர். அதன் காரணமாக தொழிலாளர்கள் வாழ்விழந்து
வாடி வதங்கி, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, வறுமையின்
எல்லைக் கோட்டில் நிற்கும் சூழ்நிலை ஏற்படும்படி செய்தார்கள்.
இந்த புரட்சித் தலைவர் ஆட்சியில் குபேரர்களுக்கு சலுகைகள்
அளிக்காமல் சாதாரண பாட்டாளிகளுக்கும், தொழிலாளர்களுக்
கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்கள் உழைத்து
முன்னேறுவதற்கு நல்ல பல சட்டங்களை ஏற்படுத்தி, ஏழைத்
தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை அமைச்சர்
அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் பொறுப்பேற்றபிறகு தமிழகத்தில் அமைதி
பூக்காடு மலர்ந்து விடுமோ என்றஞ்சி "உலகத் தொழிலாளர்களே
ஒன்றுபடுங்கள்—உள்ளூர் தொழிலாளர்களே இரண்டுபடுங்கள்"
என்று சொல்லாவிட்டாலும்— உள்ளூர் நந்தனைப்பற்றிக்
கவலைப்படாவிட்டாலும், அமெரிக்காவில் அடைபட்டு இருக்
கும் ஆஞ்சலோ டேவிட்சைப்பற்றி கவலைப்படும் தொழிற்சங்க
வாதிகளும் தமிழகத்தில் இருக்கிறார்கள். தமிழகத்தை அலங்கோல
மாக்க தொழிற்சாலைகளை தொல்லைசாலைகளாக்க, தொழி
லாளர்களைப் பட்டினி போட அவர்கள் மத்தியில் போராட்டத்
தையும் புரட்சியையும் உருவாக்கி, தங்களது அரசியல்

1979 ஏப்ரல் 19] [திரு. எஸ். செல்வராஜ்]

காழ்ப்புணர்ச்சியையும் கசப்புணர்ச்சியையும் போக்கிக் கொள்ள
முயற்சிக்கின்றனர். இதன் மூலம் ஆட்சியைக் கவிழ்க்க ஒத்திகை
யையும் ஓரங்கநாடகத்தையும் அரங்கேற்றப் பார்க்கின்றனர்
என்று நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தினந்தோறும்
மேடைகளிலும் பத்திரிகையின் வாயிலாகவும் சொல்லம்புகளின்
ஊர்வலத்தையும் சுடு மொழிகளின் கோர தாண்டவத்தையும்
தாம் காணமுடிகிறது.

நான் அவர்களைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன்.
இதற்கு முன்னால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழி
லாளர்கள் நலன் பேணும் அரசாக இந்த அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஈடாக இணையாக எந்த
அரசாவது இருந்தது உண்டா? மாறாக கூலி கேட்டான்
அத்தான், குண்டடிபட்டு செத்தான் அத்தான் என்று பூவிழந்து
பொட்டிழந்து, தன் வாழ்விழந்து நிற்கும் தாய்க்குலத்தின்
சாபக்கேட்டிற்கு அன்றைய தமிழகம் ஆளானதோடு மட்டுமல்ல
அலங்கோலமான நிலையிலும் இருந்தது. அதோடு மட்டுமல்ல;
துப்பாக்கி முனையில் தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு கண்டார்
கள். அன்றைக்கு தமிழகத்தின் தெருவோரங்களில் எல்லாம்
சவங்களை இமயங்களாக்கி, ரத்தக் கங்கைகளை உற்பத்தி
செய்து அதில் மனித உடல்களை சடலங்களாக்கி படகுபோல்
மிதக்கவிட்டவர்கள், இடி அமீனை விட கீழ்த்தரமாக நடந்து
கொண்டவர்கள், இன்று சாத்தான் வேதம் ஓதுவதைப்போல
உபதேசமழை பொழிகின்றார்கள். அவர்களுடைய ஆட்சிக்காலத்
தில்படிந்த இரத்தக்கறைகளை அரேபியாவிலுள்ள அத்தனை
வாசனைத் திரவியங்களை இங்கே கொண்டுவந்து கொட்டிக் குவித்
தாலும், அந்தக் கறை நீங்காது. அந்த அளவிற்கு தொழிலாளர்
கள் பிரச்சினை மாசு நீக்கமற நிறைந்து இருந்தது என்பதைச்
சொல்ல வேண்டும்.

[முற்பகல் 10—50]

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளை
சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் நினைக்
கிறேன்.

மேலூரில் அரசு கூட்டுறவு நூற்பாலை ஒன்றுண்டு. அந்த
கூட்டுறவு நூற்பாலை அந்தப் பகுதி மக்களுக்கு எப்படி வேலை
வாய்ப்பளிக்கிறதோ அதே போன்று சமயநல்லூரும் பின்தங்கிய
பகுதியாகும், அந்த சமயநல்லூருக்கும் தேனூரில் தனியார் நூற்
பாலை ஒன்று இருந்த போதிலும் அரசு நூற்பாலை மேலூரில்
இருப்பதைப் போன்று ஒன்று அமைக்க வேண்டும். சமயநல்லூ
ரில் ஏற்கனவே ஒரு மின் நிலையம் இருந்தது. அது வேறு
இடத்திற்கு சென்றுவிட்டது. அதனால் அந்தப் பகுதி மக்கள்
வேலை இழந்துவிட்டார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே
கூட்டுறவு நூற்பாலையாவது அமைத்தால் அந்தப் பகுதி மக்க
ளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனை இந்த அரசு
கவனிக்க வேண்டும் என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாக
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர் பிரச்சினை. என்னுடைய தொகுதியிலே வண்டியூர், அநுமார்பட்டி, சௌராஸ்டிராபுரம், உடச்சனேந்தல், திருவள்ளுவர் காலனி, செல்லூர், கிருஷ்ணாபுரம் காலனி ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் மிகச் சிரமப்படுகிறார்கள். 'மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி "மாஸ்டர் வீவருக்கு' நாலுபக்கமும் இடி என்ற அளவில் அவர்கள் துன்பப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அந்த நெசவாளர்கள் தாங்கள் வசிப்பதற்கு வீட்டு வசதி கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீடுகட்டுவதற்கு ஆவனசெய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே வீட்டுவசதி வாரியம் இப்போது எந்த அளவிற்கு திறமையாகச் செயலபடுகிறது என்பதை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமயநல்லூர் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியிலே வீடுகட்டும் திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் நன்மை அடையக் கூடிய வகையிலே வீட்டு வசதி வாரியம் செயல்படுகின்றது. அதில் அதிகாரிகளாக முன்பெல்லாம் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்தான் இருந்தார்கள். ஆனால் இப்போது சாதாரணப் பட்டதாரிகள் அந்த வீட்டு வசதி வாரியத்தின் தலைவர்களாக நியமிக்கப்பட்டு எந்த அளவிற்கு அடக்க உணர்வோடும், அமைதியோடும் வீடு தேடிச்சென்று வீடில்லாதவர்களுக்கு வீடு கிடைக்க உரிய காரியங்களைஆற்றிக் கொண்டிருக்கின்ற நல்லதிட்டமாக இருக்கிறதுஇன்றைக்கு என்பதைப் பாராட்டுகிறேன்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருந்த இடத்தில் இன்றைக்கு ஒரு பி. எஸ், ஸி, பட்டதாரி இருக்கிறார்கள். அரிஜனங்களுக்கு வீடு பெறுவதற்கு வீட்டின் முழுத் தொகையில் 1-ல பாகம் கட்டினால் போதும் என்று இருந்ததை 1-ல் 10 என்று ஆக்கி இப்போது 1-ல 10 என்று உத்திரவு இட்டது அரிசனங்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு பெறுவதற்கு எளிதான நிலையை ஏற்படுத்தி உள்ளது. இது அரிசன மக்களுக்கு இது வரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையாகும். இதை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் செய்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து அரிசனங்களுக்கு வீடு கட்டும் கடன் வழங்குவதில் வட்டி இல்லாமல் ரூ. 2 கோடி கொடுத்திருக்கிறார்கள் இது பெரிய சாதனை அல்லவா? ரூ. 350- க்கு குறைந்த வருமானம் உடையவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பதை மனமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து திருநகரிலுள்ள ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையில் ஒரு வேன் இருக்கிறது. அந்த வேன் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. அதைப் பழுது பார்க்க வேண்டும். ஏறத்தாழ 24 கிலோமீட்டர் தூரத்திலிருந்து தொழிலாளர்கள் அங்கு வர வேண்டியிருக்கின்றது. வந்து சிகிச்சை பெற சிரமமான சூழ்நிலை உள்ளது.

அடுத்து சிலைமானில் ஒரு ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சிலைமானில் ருக்குமணி நூற்பு ஆலையில் சுமார் 2000 தொழிலாளர்கள் வேலைபார்க்கிறார்கள். அவர்கள் திருநகருக்கு போய் சிகிச்சை பெறும் சிரமத்தைப் போக்க திருநகரில் இருப்பதைப் போன்று சிலைமானில் ஈ. எஸ். ஐ. மருத்துவமனை அமைக்க அவசியம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அடுத்து குடிநீர்ப்பிரச்சினை. என்னுடைய தொகுதியில் அதிகமான இடங்களில குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்றது. அரிசன்குளம், செங்கோட்டை, வெள்ளாங்குளம், உறங்கான்பட்டி போன்ற பல இடங்களில் கைப்பிடிக்குழாய் அமைத்திருக்கிறார்கள். அவை எல்லாம் பழுதுபட்டநிலையில் இருக்கின்றன. ஆகவே போதிய குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரெயிலார் நகர், சாந்தி நகர், அஞ்சல் நகர், கூடல் நகர் போன்ற பகுதிகளில் வீடுகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கவேண்டும். அங்கே இப்போது வெளியிடங்களில் வந்து தண்ணீர் பெற்றுக் செல்லக்கூடிய நிலை இருக்கின்றது. அங்கே படித்தவர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்கள் எல்லாம் வெளியிலே வந்து தண்ணீர் பிடித்துச் செல்கின்ற அவல நிலை இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கெல்லாம் வீட்டுக்கே குழாய் மூலம் தண்ணீர் சப்ளை செய்து ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

அடுத்து என். எஸ். கே. நகரிலுள்ள வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளுக்கு இன்னும் விலை நிர்ணயிக்கப்படவில்லை. அதாவது ஃபைனல் காஸ்ட் நிர்ணயிக்கப்படவில்லை. அதைக் குறிப்பிட்டு அந்த மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு ஃபைனல் காஸ்ட் நிர்ணயம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீடுகளுக்கருகில் மதுரை மாநகர் உரக்கிடங்குகள் இருக்கின்றன. அந்த உரக்கிடங்கு அருகில் இருப்பதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு சுகாதார கேடாக இருக்கிறது. ஆகவே உரக்கிடங்குகளை வேறு இடத்துக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்த உரக்கிடங்குகள் நாய்களை அடித்துக்கொல்கின்ற இடமாக இருக்கின்றது. அப்படி நாய்களை அடித்துக் கொல்கின்றபோது சில நாய்கள் தப்பித்து ஓடிவிடுகின்றன. அதனால் அந்தப் பகுதி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த இடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

அடுத்து கரிசல்குளம், களிமங்கலம், வரிச்சியூர், அனைஞ்சியூர் போன்ற ஊர்களில் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குதல் வேண்டும்.

கொட்டகைமேடு, கீழவடக்கூர், தட்டாங்குளம், நரசிங்கம், மூலக்குறிச்சி, மீனாட்சிபுரம்புதூர், திருமணப்பதி, அனைஞ்சியூர் ஆகிய இடங்களில் மேல்நிலைத்தொட்டி கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிவகெங்கை சாலையையும், மேலூர் சாலையையும் இணைக்கின்ற வண்டியூர் கண்மாயை ஒட்டியுள்ள சாலையை அமைக்கவேண்டும். என். எஸ். கே. நகரில் புறக்காவல் நிலையம் ஒன்றும் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் அங்கே இருக்கக்கூடிய வீட்டுவசதி வாரிய வீடுகளில் அடிக்கடி திருட்டுப்போகிறது.

என். எஸ். கே. நகரிலுள்ள வீட்டுவசதி வாரியப் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் அமைத்து நியாயமான விலையில் அப்பகுதி மக்களுக்கு பொருள்கள் கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்மேலும், கோடைகாலத்திலும், கொளுத்தும் வெயிலிலும் என். எஸ். கே. நகரில் பள்ளி இல்லாது நீண்ட தூரம் சென்று பள்ளி மாணவர்கள் படிக்கும் அவல நிலை உள்ளது. ஆகவே, அப்பகுதி மாணவர்கள் கல்வி கற்க உடனடியாக தொடக்கப்பள்ளி ஒன்றினை அவசியம் திறந்திட அவசர முடிவு எடுத்து பள்ளி அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும், என். எஸ் கே. நகரில் நூலகமும், வானொலியும் அமைத்திட வேண்டுவதோடு, அங்குள்ள மாட்டுச்சந்தையினையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

* <u>திரு. கு. ரமணி :</u> அவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர் நலம், வீட்டு வசதி, பொது சுகாதாரம், குடிதண்ணீர் ஆகிய மானியங்களின்மீது மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். சுருக்கமாக, ஆனாலும் நான் தொழிலாளர் நலன்பற்றி அதிகமாக பேசவேண்டியிருப்பதால், வீட்டு வசதி, பொது சுகாதாரம் ஆகியவைகளைப் பற்றி முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

குறைந்த வாடகையில் வசிப்பதற்காக இந்த அரசு பல இடங்களில் நிறைய வீடுகளைக் கட்டி, மாடி வீடுகளைக் கட்டிக் கொடுப்பது ஒரு நல்ல முயற்சி. முதலிலேயே அவர்கள் வசிக்கக் கூடிய இடத்தையே சுத்தப்படுத்தி, அந்த இடத்திலேயே ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது அவசியம். ஆனால்,

அந்த வீடுகளில் அவர்கள் வசிப்பதற்கு குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் வீடுகளை மட்டும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, விளக்கு வசதி இல்லாமல், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி இல்லாமல், அந்த வசதிகளையெல்லாம் பின்னால் முனிசிபாலிடிகளே செய்து கொள்ளட்டும், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களே செய்து கொள்ளட்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. அந்த அடிப்படைத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்துவிட்டு, அந்த வீடுகளைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு நல்ல நடவடிக்கை. முன்பிருந்த அரசின் பக்கத்திலிருந்து ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, வளர்ந்து வருகின்ற திட்டம், மேலும் பணம் செலவழித்து, விஸ்தரிக்கப்பட வேண்டும். அது தான் ஏழை எளிய மக்களுக்கு செய்யக்கூடிய ஒரு முக்கியமான திட்டம் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட வரையில், பல இடங்களில் தண்ணீர் வசதி நிறைய கிடைக்கச் செய்தால்தான், சாக்கடை ஒழுங்காக இருக்க முடியும். தண்ணீர் வசதி இல்லாவிட்டால், அந்த சாக்கடைகள் சரியாக இருக்காது. பல இடங்களில் தண்ணீர் இல்லாத குறையிருக்கிறது. இதை நிவர்த்திப்பதற்கு இன்னும் அதிகப்படியான பணம் செலவுசெய்து, ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். சேரிகளிலும், ஏழை மக்கள் வசிக்கும் பகுதிகளிலும், தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளிலும் அதிகப்படியான தண்ணீர் வசதியை செய்துகொடுக்க வேண்டும். துப்புரவு சரியாக நடக்கக்கூடிய அளவுக்கு வேண்டிய ஊழியர்களை நியமிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதுமாதிரி கழிவு நீர் போவதற்கு பாதாள சாக்கடைத் திட்டங்களை நகரங்களிலும், மற்றும் பாக்கியிருக்கக்கூடிய பகுதிகளிலும் அமுலுக்கு கொண்டு வரவேண்டும். அதுவும் குறிப்பாக, நல்ல முறையிலே அதிகப்படியாக செலவுசெய்து, இன்னும் சிறந்த திட்டங்களை கொண்டுவர வேண்டும்.

அடுத்து, தொழிலாளர் நலனைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் நலனில் இந்த அரசின் கொள்கை நடைமுறையில் எப்படி சென்று கொண்டிருக்கிறது என்பதை கிட்டத்தட்ட இரண்டு வருஷ அனுபவத்தைக் கொண்டு நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு உரைகல்லாக, தொழிலாளர் நலனில் இந்த அரசு எடுக்கும் தொடர் நடவடிக்கைகளை, தந்திரங்களை பார்க்கின்றபோது, ஏதோ திசை திருப்புகின்ற முறையில் தந்திரத்தைக் கையாண்டு வருகிறதே தவிர, கொள்கையை நிறைவேற்றுவதாக இல்லை. அடுத்தது, இந்த அரசு சில கொள்கைகளை வெளியிட்டிருக்கிறது. அவர்கள் அரசாங்கத்திற்கு வந்த காலத்திலேயே வெளியிட்டிருக்கிறார்கள். சொன்ன கொள்கைகளை நிறைவேற்றியிருக்கிறார்களா, அல்லது நடைபெற்றிருக்கிறதா என்று பார்த்தால், அந்தக் கொள்கைகளுக்கு நேர் மாறான திசையில் சென்றிருப்பார்களோ என்பதைப் பரிசீலிக்க

[திரு. கு. ரமணி] [1979 ஏப்ரல் 19

வேண்டியிருக்கிறது. தொழிலாளர் வர்க்கத்திற்கு சாதகமான
முறையில் ஆரம்பித்து, பிறகு அந்தத் தொழிலாளர் வர்க்கத்
திற்கு விரோதமான செயலாக அந்தக் கொள்கை போய்க்
கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-00]

இதை நாங்கள் அனுபவத்திலிருந்து சொல்லுகிறோமே
தவிர, அரசியல் ரீதியாக உங்கள் மீது குற்றஞ்சாட்ட
வேண்டும் என்ற எண்ணத்தோடு இதைச் சொல்லவில்லை.
வேறு விதமான கண்ணோட்டத்துடனும் சொல்லவில்லை
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும்
புரிந்து கொள்ளவேண்டும் என்பதை தாழ்மையோடு தெரிவித்
துக்கொள்கிறேன்.

இதே சட்டமன்றத்தில், அமைச்சர் அவர்கள் 1977
ஆகஸ்டு 11-ம் தேதி என்ன கூறியிருக்கிறார்கள்? அவர் கூறினது
...... "வேலை நிறுத்தம் செய்கிற உரிமையை பறிக்க
வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை, தொழி
லாளர்கள் போராடிப் பெற்ற அந்த உரிமையில் இந்த
அரசு தலையிடாது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்
கொள்கிறேன்...." என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால்
என்ன நடக்கிறது, அரசாங்கத்தின் இந்தக் கொள்கை
நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் நேர் மாறாகத்தான்
நடந்து கொண்டிருக்கிறது. இது முக்கியமாக பரிசீலிக்க
வேண்டிய விஷயமாகும். எங்களைப் பொறுத்தவரையில் இந்த
அரசு இந்தக் கொள்கையிலிருந்து மாறிச் சென்று விட்டார்கள்
என்பது தான் எங்களுடைய கருத்து, அதற்கான உதாரணங்கள்
பலவற்றையும் நான் அடுக்கிச் சொல்லிக்கொண்டிருக்க முடியும்.
தமிழ்நாடு தொழிலாள வர்க்கப் போராட்டங்கள் அனைத்தி
லிருந்தும் உதாரணங்கள் கொடுக்க முடியும். அவற்றை
யெல்லாம் சொல்ல நேரம் இருக்காது. ஒரு சில உதாரணங்களை
மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு அரசாங்கத்திற்கு வருவதற்கு முன் கோவை
யில் 2,000-க்கு மேல் தொழிலாளர்கள் உள்ள லட்சுமி
மெஷின் ஒர்க்ஸில், 1977, ஜூன் 2-ம் தேதி போராட்டம்
ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமான சில கோரிக்கைகளின்
அடிப்படையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே
பத்து சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் கம்பெனியில்,
ஆளுங்கட்சியைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
வைச் சேர்ந்த தொழிலாளர் சங்கம் உட்பட 7 சங்கங்கள் ஒன்று
சேர்ந்து அவர்கள் எல்லோரும் ஒன்றாக சில கோரிக்கை
களை முன்வைத்தார்கள். அதே நேரத்தில் மைனாரிட்டியாக
இருக்கின்ற 3 சங்கங்கள் சேர்ந்து, தொழிலாளர்களுக்கு பிரதி
நிதித்துவம் வகிப்பதாக கருதிக்கொண்டு கம்பெனி நிர்வாகம்
அவர்களோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, அதை
அமுலுக்கு கொண்டு வர முயற்சித்தார்கள். ஆனால் 7 சங்கங்கள்

1979 ஏப்ரல் 19] [திரு. கு. ரமணி]

ஆளுங்கட்சியைச் சேர்ந்த சங்கம் உட்பட 7 சங்கங்கள் அதை
எதிர்த்தார்கள். போராட்டத்தையும் தொடர்ந்தே நடத்தினார்
கள். இந்த அரசு ஜூன் 30-ம் தேதி வந்தது. ஆனால் அதற்கு
முன்பே இந்தப் போராட்டம் 2-ம் தேதியிலிருந்தே ஆரம்பிக்கப்
பட்டது. இந்த அரசு வந்ததின் பின்னால், இந்த அரசின் துணை
யோடு அங்கு கதவடைப்பு செய்ய திட்டமிட்டது. பட்டினி போட்டு
எப்படியாவது இந்தப் போராட்டத்தை முறியடிக்கவேண்டும்
என்று இந்த நிறுவனம் முயற்சி செய்தது. ஆனால் அரசு என்ன
நடவடிக்கை எடுத்தது? அங்கே உள்ளிருப்பு வேலைநிறுத்தம்
செய்த 1,600 தொழிலாளர்களை, போலீசார் உள்ளே
புகுந்து கைது செய்தார்கள். கம்பெனியில் யாரும் உள்ளே
யில்லாமல் சுத்தமாக்கவேண்டும் என்ற எண்ணத்தில், இரவும்
பகலுமாக அங்கிருந்த 1,600 தொழிலாளர்களை கைது
செய்து முடிந்த பின்னால், கம்பெனியின் உள்ளே காலியான
பின்னால் கதவடைப்பு செய்கிறார்கள். ஆனால் அடுத்த
நாள் கைது செய்தவர்களை விடுதலை செய்கிறார்கள்.
இது என்ன தந்திரம்? உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்த
தொழிலாளர்கள் வெளியே போகவேண்டும். அந்தக் காரி
யத்தை போலீஸ் மூலமாக செய்து முடிக்கப்படுகிறது.
இது எப்படி சரியாகும்? இது சட்டத்திற்கு உட்பட்டதா?
நீதிக்கு உட்பட்டதா என்பதை அரசாங்கம் பார்க்கவேண்டும்.
தொழிலாளிகளுக்கு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ய
உரிமை அனுமதிக்கப்பட்டுள்ளதாகும். அதை அனுமதிக்க மாட்
டோம் என்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். வேலை
நிறுத்த உரிமை அளிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால்
நடைமுறையில் நேர் மாறாக இருக்கிறது. இப்படி கைது
செய்யப்பட்ட பின்னால் மூன்று மாதங்களுக்குப் பின்னால்
தொழிலாளர்களை எல்லாம் பட்டினி போட்டு விட்டு பின்னால்
ஒன்பதாவது மாதம் 4-ம் தேதி பழைய மூன்று சங்கங்களையும்
சேர்த்து அத்துடன் ஆளுங் கட்சியைச் சேர்ந்த சங்கத்தையும்
சேர்த்துக்கொண்டு 4 சங்கங்களோடும் ஒப்பந்தம் செய்கிறார்கள்.
இதெல்லாம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குத்தெரி
யும். அவரிடம் நேரிலும் எடுத்துச் சொன்னேன். இதை
எப்படி அனுமதித்தீர்கள் என்று கேட்டேன். தொழிலாளர்
களுக்கு விரோதமாக இடமளிக்க மாட்டோம். இதை அனு
மதிக்க மாட்டோம் என்று என்னிடம் சொன்னார்கள். இப்படி
ஆளும் கட்சி சங்கம் உட்பட நான்கு சங்கங்களிடம் ஒப்பந்தம்
செய்து கொண்டதற்கு பிறகு 5-ம் தேதியன்று கம்பெனியை
திறக்கிறார்கள். திறப்பதோடு மட்டுமல்ல, அந்த கம்பெனி
யின் முதலாளி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துத்
தந்தியும் அனுப்பியிருக்கிறார், இது தான் தொழிலாளர்
நலக் கொள்கையா? தொழிலாளர்களுக்கு நேர் விரோதமான
கொள்கையாகும் இது என்பது தான் எங்கள் கருத்து. மேலும்
அங்குள்ள மீதியுள்ள தொழிற் சங்கங்கள் போராட்டத்தைத்
தொடர்ந்தார்கள். கடைசியில் 5 மாதம் 12 நாள் வரைக்கும்
அந்தப் போராட்டம் நடத்த வேண்டி வந்தது. நான் ஒரு
விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கு. ரமணி] [1979 ஏப்ரல் 19

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சரி,
இந்தத் தொழிற் சங்கப் போராட்டங்களில் ஈடுபடுகின்ற
தொழிற் சங்க வாதிகளானாலும் சரி எங்களுக்குள் போராட்டம்
என்ற இந்த விஷயம் எப்படி நடந்தது என்பது தான் தெரியும்.
12 (3) அக்ரிமெண்ட் சட்டம் இங்கே — குட்டிச்சுவராக்கப்
பட்டிருக்கிறது. அதே போன்று இந்த 12 (3) அக்ரிமெண்ட்,
பற்றி சிம்கோ மீட்டர் விஷயத்தில் அரசு பிடிவாதமாக இருந்தது.
அந்த ஒப்பந்தத்தை புனர் பரிசிலனை செய்ய வேண்டும்
என்றது, இல்லா விட்டால் 12 (3) கெட்டு விடும் என்று கூறி
தொழிலாளர்களின் பின்பலமற்ற அதே பழைய சங்கங்கத்தைக்
கொண்டே ஒப்பந்தத்தை ரீ-ஓபன் பண்ண வேண்டும் என்றது.
இந்த 12 (3) அக்ரிமெண்ட் சட்டத்தை குப்பைத் தொட்டியிலே
போடுவது சரியல்ல என்று கூறப்பட்டது. அப்படியானால்
இது எப்படி அரசின் சரியான கொள்கையாக இருக்க முடியும் ?
ஆகவே இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை அங்கே லட்சுமி
மிஷின் ஒர்க்ஸில் கையாண்டு இதற்கு அரசு அளித்த போலீஸ்
ஆதரவை வைத்துக் கொண்டு முதலாளிகள் அங்கேயுள்ள
தொழிலாளர்களை பிளவு படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டார்கள்.
1,291 பேர்களை முதலாளிகள் சஸ்பெண்ட் செய்தார்கள்.
நிரந்தரமான மொத்தத் தொழிலாளர்கள் 1600 பேர்கள்,
அப்போது தொழிலாளர்களின் மெஜாரிட்டி அங்கே மைனா
ரிட்டி சங்கங்களுக்கு எப்படி இருக்கமுடியும் ? இந்த ஒப்பந்தத்
திற்கு, அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் ஆதரவாக
இருக்கிறார்கள் என்பதற்காக சரியான சட்டமாகி விடுமா ?
ஆகாது. ஆகவே, இது தவறு என்று சொல்கிறேன். டாக்டி
கலாக, கொஞ்சம் தந்திரமாக அரசு இருந்திருக்க வேண்டும்.
இப்படி தவறு செய்யக் கூடாது. இந்த அரசாங்கத்தின் பெயர்
கெடக் கூடாது. ஆகவே, அந்த நிலைமையிலே இந்தத்
தொழிலாளர்கள் சட்டத்தை நியாயமாக அமுலாக்க வேண்டும்.
தொழிலாளர்கள் நலனையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

தொழிலாளர்கள் இளிச்சவாயன்கள் அல்ல. தொடர்ந்து
5 மாதங்கள் 12 நாட்கள் போராட்டம் 600 தொழிலாளர்கள்
சிறையில் என்றால், பல குடும்பங்கள் பட்டினி போடப்பட்
டார்கள். 1396 தொழிலாளர்கள் மேல் இ.பி.கோ. 19
செக்ஷன்களின் கீழ் 25 குருப்புகளில் பல விதமான கேஸ்களைப்
போட்டு, அவர்களை வாட்டி வதைத்தார்கள். அப்போதும்
அவர்கள் ஒற்றுமையோடு நின்று போராடினார்கள். இறுதி
யாக அந்தத் தொழிலாளர்களும், தொழிற் சங்கமும் எடுத்துக்
கொண்ட நடவடிக்கை என்ன ? அப்போதும் நாங்கள் 'பேலன்ஸ்'
தவறவில்லை. முதல் அமைச்சர் அவர்களின் தீர்ப்புக்கு விடு
கிறோம் என்று சொன்னோம். இந்தப் பிரச்னையில் அவரே
முடிவெடுக்கட்டும், அவருடைய மனசாட்சிக்கு, கொள்கைக்கு
எது சரியோ அப்படி அவரே முடிவுக்கு வரட்டும் என்ற அளவிலே
தொழிலாளர்கள் மிகவும் அடக்கமாக, உறுதியாக, கொண்ட
கொள்கையை விடாமல், ஒற்றுமையாக இருந்தார்கள்

1979 ஏப்ரல் 19][திரு. கு. ரமணி]

தப்பைத் திருத்துவதற்காக அல்ல, பழிவாங்கவே அந்தத்
தொழிலாளர்களின் மீது முதலாளியினால் நடவடிக்கை எடுக்கப்
பட்டது. முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, ஆர்பிட்ரேஷன்
தீர்ப்புக்குக் கொடுத்தார்கள். அதனால் ஒரு பைசா உயர்வுகூட
முதலாளிகள் தொழிலாளர்களுக்கு அனுமதிக்கவில்லை.
இதிலே நம்மிடையே தொழிலாள நல அமைச்சர் அவர்களுக்கும்
முக்கிய பங்கு உண்டு என்று நான் கருதுகிறேன். தப்பானால்
அவர் திருத்தட்டும். ஆனால், வேலையில் இருந்து நீக்கப்
பட்டத் தொழிலாளர்கள் அண்ணா தி.மு.க. கழகத்தைச்சேர்ந்த
சில பேர்களை திரும்ப வேலைக்கு எடுத்தார்கள், சி.ஐ.டி.யு.
தொழிலாளர்களையும் எடுத்தார்கள். அவர்களையும் எடுக்கும்
போது யாரையும் பழிவாங்கக் கூடாது என்ற நல்ல நோக்கத்
தோடு உத்தரவாதம் தரப்பட்டது. அதை நாங்கள் ஏற்றுக்
கொண்டோம். இப்படி செய்ததால் அந்த கம்பெனியின்
உங்கள் சங்கத்தின் பாலன்ஸ் ஷீட்டை இன்றைக்குப் பார்த்துக்
கொள்ளுங்கள், நீங்கள் வளர்ந்தீர்களா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத்
மாற்றுத் தலைவர் அவர்களே, நான் உண்மையிலேயே யாரும்
பேசும் போது குறுக்கிடுவதாக இல்லை. கடைசியாகவும்,
முதலாவதாகவும் ஒன்று மட்டும் குறுக்கிட்டுச் சொல்ல விரும்பு
கிறேன். அந்தப் போராட்டம் முடிந்த பிறகு, சி.ஐ.டி.யு.
வில் மிக முக்கியமான தோழர்கள், நல்ல லீடர்கள் என்று
சொல்லக் கூடிய நடராஜன், கருப்பையா அல்லது கருப்பசாமி
ஆகிய இரண்டு பேர்களுக்கு வேலை போய் விட்டது. வேலை
வாங்கித்தர வேண்டும் என்று மதிப்பிற்குரிய ரமணி அவர்கள்
சொன்னபோது, இந்த அரசின் செல்வாக்கைப் பயன்படுத்தி
நாங்கள் வேலை வாங்கித் தருவதற்கு முயற்சி எடுத்து, போடி
யிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதாவது
பாராட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

<u>*திரு. கு. ரமணி</u> : அமைச்சர் அவர்கள் செய்திருக்கின்ற
எந்த நல்ல காரியத்தையும் நான் என்றைக்கும் மறுப்பதில்லை.
நான் சொன்னேன். அண்ணா தி.மு.க. கழகத்தைச் சேர்ந்த
தொழிலாளர்களையும் திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும்
என்றும், அண்ணா தி.மு.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்
பக்கத்திலே போய் நின்றாலும், ஒப்பந்தப்படி அந்தத் தொழி
லாளர்களையும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் சொன்ன
நல்ல எண்ணத்தை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மறந்து
விடக்கூடாது.

[முற்பகல் 11-10].

அமைச்சர் உதவி செய்தாரா என்றால் செய்திருக்கிறார்.
இல்லையென்று சொல்லவில்லை. அது வரவேற்கத்தக்க
விஷயம்.

[திரு. கு. ரமணி] [1979 ஏப்ரல் 19

முதலமைச்சருடைய இப்படிப்பட்ட நடவடிக்கைக்குப்பிறகு
தான் அந்தப் போராட்டம் முடிந்தது. 1396 பேர் மீது
போடப்பட்ட வழக்கு ஒன்று கூட வாபஸ் வாங்கப்படவில்லை.
இரண்டு தரம், மூன்று தரம் முதலமைச்சர் அவர்களிடத்தில்
நேரிலேயே சொன்னேன். ஆனால் அத்தனை கேஸ்களிலும்
வாதிட்டு பிறகு தான் முடிவுக்கு வந்தது. அவர்கள் அதற்குப்
பிறகு தான் விடுதலை பெற்று வந்தார்கள். இது நடந்தது.
இது மதிப்பு மிக்க போராட்ட சரித்திரம்.

ஈரோட்டில் ஸ்ரீ கிருஷ்ணா ரிஃபைனரி மில்ஸ் என்று இருக்
கிறது. இது ஒரு மில் அல்ல. ஐந்து கம்பெனிகள், இரண்டு
முதலாளிகள், அண்ணன், தம்பி, மனைவிமார் சேர்ந்து நான்கு
பேர் டைரக்டர்கள். ஒரு காம்பவுண்டுக்குள் 12 ஏக்கர் நிலத்தில்
5 கம்பெனிகள், இது 1969-ல் ஆரம்பிக்கப்பட்டு 9 வருஷ
காலமாக பதிவே செய்யப்படவில்லை. பாக்டரி இன்ஸ்பெக்டர்
என்ன செய்தார்? அந்தக் கம்பெனியில் 298 தொழிலாளர்கள்,
117 பெண்கள் உட்பட வேலை செய்திருக்கிறார்கள். ரிஜிஸ்டர்
கிடையாது, ரிக்கார்டு கிடையாது. தொழிலாளர்களுக்குக்
குறிப்பிட்ட கூலி கிடையாது. கேட்டால் தொழிலாளர்களே
வைக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்தத் தொழி
லாளர்கள் சங்கம் வைத்த உடனே அந்த முதலாளி லைசென்ஸ்
துப்பாக்கி வைத்திருக்கிறார், துப்பாக்கியைக் காட்டி மிரட்டி
யிருக்கிறார். நானே ஈரோடு போலீஸ் ஸ்டேஷனிலே ரிப்
போர்ட் கொடுத்திருக்கிறேன். அவர்கள் இது வரை எந்த
நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன், துப்பாக்கி வைத்திருப்
பவர் பணக்கார முதலாளி. பாக்டரி இன்ஸ்பெக்டரோ
வேறு யாருமோ கிட்டே நெருங்க முடியாது. அவர்கள் பணத்தின்
செல்வாக்கில் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்
களிலே 298 பேர் சங்கம் வைக்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது,
எங்களை மிரட்டக் கூடாது என்று போராடினார்கள். அதனால்
அந்த 298 பேர்களை வெளியே அனுப்பினார்கள். தஞ்சையி
லிருந்து அக்ரிகல்சுரல் ஒர்க்கர்ஸ் 150 பேரைக் கொண்டு
வந்து அங்கே வேலை செய்ய வைத்தார்கள். இதைப் பற்றி
அமைச்சர் அவர்களிடம் ரிப்போர்ட் கொடுத்தேன். முத
லமைச்சர் எம்.ஜி. ஆர். அவர்களிடம் 7—12—1978-ல் ரிப்
போர்ட் கொடுத்தேன். பிறகு இரண்டாவது ரிப்போர்ட்
கொடுத்தேன். 23—2—1979 அன்று கடைசி ரிப்போர்ட் கொடுத்
தேன். இன்று வரை எந்த விசாரணையும் இல்லை. அந்த
முதலாளி அந்த 298 பேரை வேலைக்கு வரக் கூடாது என்று
சொல்லி விட்டார். கலெக்டர், தாசில்தார், கோட்டாட்சித்
தலைவர், போலீஸ் சூப்பரின்டென்டென்ட், டெபுடி லேபர்
கமிஷனர் யாவரும் தலையிட்டும் பயன் இல்லை. நான் வேதனை
யோடு சொல்லுகிறேன். இந்த அரசாங்கத்தில் அமைச்சர்
களுக்கும் அடுத்தபடியாக உச்ச பதவியில் இருக்கிற டெனின்யூ
போர்டு அங்கத்தினர்களைக் கூட அந்த முதலாளிகள் வசீகரித்து

1979 ஏப்ரல் 19] [திரு. கு. ரமணி]

வைத்திருக்கிறார்கள் என்பது செய்தி. நானே முதலமைச்சர் அவர்களிடத்தில் இதைப் பற்றியெல்லாம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். இன்று வரை சுண்டு விரலைக் கூட அசைக்க முடியவில்லை. 298 தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. பணம் வென்றது என்று சொல்லலாமா? நான் சொல்ல மாட்டேன். தொழிலாளர்கள் வெல்வார்கள், அரசு தோற்றது என்று சொல்வேன். இது அங்கே நடைபெறுகிறது. இதைப் பற்றி இன்டஸ்ட்ரீஸ் விவாதத்தில் மேலும் பேசிக் கொள்ளலாம்.

டி.வி.எஸ். கம்பெனியில் நடைபெற்ற போராட்டங்கள் பற்றிப் பேசப்பட்டது. தொழிலாளர்கள் விரும்புகின்ற சங்கத்தில் சேரக் கூடாது என்பது தான் உள்ளுக்குள் அடங்கியிருக்கும் சத்தான காரியம். அந்த ஏகபோக முதலாளிக்கு, பணக்கார திமிர் பிடித்த முதலாளிக்கு தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறீர்களா இல்லையா? என்ன கண்ணோட்டம் இது? தொழிலாளிதான் தகராறு செய்வான் என்பது கண்ணோட்டமா? இது எப்படி சரியாகும்? ஒரு விஷயத்தைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். டில்லியில் சென்று வாதிடுகின்ற நேரத்தில் 'இப்படி ஒரு முதலாளி ரவுடிகளை வைத்துக் கொண்டு தொழிலாளிகளைத் தாக்குகிற முறை சரிதானா?' என்று முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பிரயோசனப் படவில்லை. இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்திலே எத்தனை தரம் விவாதித்திருக்கிறோம், அப்போது எல்லாம் தொழிலாளர் நல அமைச்சர் என்ன பதில் சொன்னார் நமக்கு. அவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கிற முறையில் அக்ரிமென்ட் கிடையாது என்று சொன்னார். There is no agreement under the Industrial D'spates Act.

பின்னாலே என்ன நடந்தது? அந்த முதலாளியுடன் ஏற்பட்டது ஒரு அக்கார்ட், என்றார்கள். அக்கார்ட் என்றால் ஏமாற்று என்று அகராதியிலே அர்த்தம் கொள்ளலாமா? மாண்புமிகு முதலமைச்சர் உட்கார்ந்து பேசி அக்கார்ட் பண்ணினார்கள் என்று சொன்னார்கள், அது ஏமாற்று என்று அர்த்தமா? அப்படியானால் முதலமைச்சரை ஏமாற்றுகிறார் என்று தான் அர்த்தம். பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் மீது விசாரணை நடத்தி முடிவு எடுப்பதற்கு முன்னதாக முதலமைச்சரிடத்திலே ஆலோசனை வைக்க வேண்டும் என்பது தான் அந்த முடிவு. ஆனால் முதலமைச்சர் முன்னாலே வைக்கப்படவில்லை. என்ன நடைபெற்றது? 12 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் முதலமைச்சரை மதிக்கவில்லை. உங்களை மதிக்கவில்லை, உங்களைப் பற்றியே கவலைப்படாமல் அவர்கள் இந்த மாதிரி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த விஷயம் தொழிலாளர் அமைச்சர் முன்னால் வந்திருக்கிறது. அவர் என்ன செய்யப் போகிறார்? அவருக்கு அது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் சீராக விசாரணை நடத்தப் போகிறார்களா?

[திரு. கு. ரமணி] [1979 ஏப்ரல் 19

அதே மாதிரி அம்பத்தூர் சைக்கிள் பேக்டரியில் நடந்த
போராட்டம். ஏற்கெனவே அமைச்சர் சொன்னார், நாங்கள்
சொல்வது இந்த மாதிரியான விஷயங்கள் தான் என்று.
ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு தானே பதம் பார்க்கவேண்டும்.
பானைச் சோற்றை முழுவதையும் கீழே போட்டு காலாலேயா
மிதிப்பார்கள் ? ஒரு சோறு தான் பதம் பார்ப்பார்கள். அம்
பத்தூர் சைக்கிள் பேக்டரியிலே என்ன நடை பெற்றது ?
அந்தக் கம்பெனி மூடப்பட்டு, டி.ஐ. சைக்கிள்ஸ் தான், அந்தத்
தொழிலாளர்களை பட்டினி போட்டு அவர்கள் பட்டினி
பொறுக்க முடியாமல் குடும்பங்களோடு ஊர்வலமாக கிளம்பி
வந்தால் நீங்கள் என்ன பாதுகாப்புக் கொடுத்தீர்கள் ? தடி
யடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், நல்ல காலம் உயிர்
போகவில்லை, தடியடி செய்தால் எங்களுடைய தொழி
லாளர்கட்கு சிந்துவதற்கு ரத்தம் இல்லை. உள்ள ரத்தத்தை
யும் சிந்த வைக்கிறீர்கள். அந்தக் காரியத்தைத்தான் நீங்கள்
செய்தீர்கள்; அந்தத் தொழிலாளர்கள் பட்டினி பற்றிக் கவலைப்
படவில்லை. அந்த முதலாளி இதையே சாக்காக வைத்து
ஒரு தொழிலாளர் ஒன்றே கால் சைக்கிள் உற்பத்தி செய்தால்
தான் பஞ்சப்படி என்றார். பஞ்சப் படிக்கும் உற்பத்திக்கும்
இணைப்புக் கொடுக்கிற நிலைமையை எந்த இடத்திலே தொழி
லாளர் வர்க்கம் ஏற்றுக் கொண்டது ? தொழிலாளர் அமைச்சர்
ஏற்றுக் கொள்வாரா ? உண்மையிலேயே அவருக்கு அவக்
கேடான சொல் ஏற்பட்டு விட்டது. அப்படி அதை அமலாக்கி
சங்கத்தை ஒழிக்கத் திட்டம் தீட்டப்பட்டது. கம்பெனித்
தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் என்று ஒரு சில கையாட்
களைப் பொறுக்கி எடுத்து தொழிற் சங்கத்தை அழித்து விட்டு
அவர்களோடு மேனேஜ்மெண்ட் ஒப்பந்தம் செய்கிறது. எந்த
சட்டம் இது ? சட்டம் எல்லாம் இன்றைக்கு மண்ணைத் தின்கிறது.
ஒரு சட்டமும் இல்லை. அற்புதமான நூதனமான முறை
இது. மறுபடியும் நீங்கள் 12(3) என்று சொன்னால் எங்களுக்கு
ஆச்சரியமாக இருக்கிறது.

அடுத்து, பொள்ளாச்சியிலே குவாலிடி மில் தொழிலாளர்
போராட்டம், அந்த முதலாளி என்ன சொன்னார், அங்கே
வேலையிலிருந்து ஒரு சில தொழிலாளர்கள் வெளியே இருந்தார்
கள், அவர்களாகவே உள்ளே பிரவேசித்து வேலை செய்தவர்
களை அடித்தார்கள், நொறுக்கினார்கள், பலாத்காரத்திலே
ஈடுபட்டார்கள். என்று சொல்லி கைது செய்யப்பட்டார்கள். அது
உண்மையா ?

உண்மையல்ல. இன்றைக்கும் அந்த மில் மூடப்பட்டிருக்கிறது.
முன்பு முதலாளி சங்கங்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தில்
உற்பத்தித்திறனை அடிப்படை சம்பளத்துடன் இணைத்திருந்தார்.
prusic wake linked with productivity) அதை தொழிலாளர்கள்
எதிர்த்தார்கள் ஆயினும் ஒப்பந்தக் காலம் முடியும் வரை பொறுத்
திருந்தார்கள். இப்போது அவர்கள் எதிர்க்க காரணம் புரட்டுவும்

1979 ஏப்ரல் 19] [திரு. கு. ரமணி]

கூட அல்ல புரடக்டிவிடியோடு இணைக்கப்பட்டுள்ளது. உற்பத்தித்
திறனோடு அடிப்படைச் சம்பளத்தை இணைக்கும் முறையில் அது
செய்யப்பட்டது. தொழிலாளர்கள் அதை ஒத்துக்கொள்ள
வில்லை. நாளாவட்டத்தில் தொழிலாளி உணர்ந்து மாறு
கிறான். இன்றைக்கு அவர்கள் போராடுகிறார்கள். இப்படிப்
பட்ட சூழ்நிலை இருப்பதை அரசாங்கம் கவனித்து இருந்தால்
அதிலே உண்மையிலேயே உள்ள பிரச்சினை என்ன என்று
தெரிந்து அதைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருந்தால்
இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆனால்,
அரசு அதைச் செய்யவில்லை. உள்ளிருப்பு வேலை நிறுத்தம்
செய்யும் உரிமையைக் கூடப் பிடுங்கிக் கொண்டு இன்றைக்கு
அவர்கள் கைது செய்யப்பட்டு கண்டிஷன் ஜாமீனிலே வெளியே
விடப்பட்டு இருக்கிறார்கள். முதலாளிகள் ஆளை வைத்து
அடிக்கலாம், தொழிலாளர்களை நொறுக்கலாம், ரௌடிகளை
வைத்துக் கொள்ளலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம்,
ஆனால், பல வருடங்களாக அந்த மில்லிலே வேலை செய்த
தொழிலாளர்கள் அந்த மில் பக்கம் வரக்கூடாது கண்டிஷன்
பெயில் என்ன அர்த்தம் ? இப்படிப்பட்ட சூழ்நிலையை
அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பதில் சொல்வார்கள் என்று
நினைக்கிறேன். இன்னும் பல விஷயங்களைப்பற்றிச் சொல்ல
வேண்டும். அவை எல்லாவற்றிற்கும் நான் போகவில்லை.

(திரு. எஸ். ஜே. இராமசாமி—தலைமை)

[மூற்பகல் 11—20]

அமைதியான நமக்கு இந்தக் காலத்திலே எதைக் காட்டுகிறது?
சொன்ன சொன்னைகள் நடக்கவில்லை, தொழிலாளர்கள்
போராட்டங்களுக்கு—நாங்கள் அதிலே தலையிடமாட்டோம்,
அந்த உரிமையைப் பறிக்க மாட்டோம் என்று சொன்னது இன்
றைக்கு அமலாக்கப்படவில்லை. அதற்குப் பதிலாகப் போராட்
டத்தை உடைக்கப் பல காரியங்கள் நடக்கின்றன.
போலீஸ் அடக்குமுறை தொழிலாளர்களுக்கு எதிராகச்
சீறிப் பாய்கிறது. முதலாளிகளின் ரௌடித் தனத்தை கட்டுப்
படுத்துவதற்குப் போலீஸ் போகவில்லை. இதனைக்
கண்டு தொழிலாளர்கள் வேதனைப்படுகிறார்கள். தொழி
லாளர்கள் உங்களுடைய இந்த மாதிரிக் கொள்கைகளை
நிராகரிக்கிறார்கள். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.
அதுமட்டுமல்ல, இதை சப்ளிமெண்ட் செய்து கொண்டு போவ
தற்காக இன்னொரு லயனை ஆரம்பிக்கின்ற அபாயகரமான
நிலைமை இருக்கிறது. அது எந்த அரசாங்கத்திற்கும் ஆபத்
தாகத் தான் முடியும். அதாவது, போட்டிச் சங்கங்களை வைக்
கின்ற முறை ஆரம்பித்து இருக்கிறது. அது நடக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கள்ளக் குறிச்சியில் [illegible]க்கரை ஆலைத் தொழிற்சாலையில், அங்கேயிருக் கின்ற அத்தனை கட்சிகளையும், சார்ந்த சகல கட்சிகளையும் சார்ந்த தொழிலாளர்களுக்கு ஒரேயொரு சங்கம் இருந்தது. அந்தச் சங்கத்திற்கு எதிராக முதலாளியே ஜனவரி மாதத்தில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தத் தூண்டிவிட்டு, அதோடு ஒப்பந்தமும் செய்கிறார்கள். பிறகு, பிப்ரவரி மாதத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்னொரு சங்கத்தை உண்டாக்குகிறார்கள். இப்படிச் சங்கங்களைத் தோற்றுவிப்பதற்கு உரிமை உண்டா இல்லையா என்ற பிரச்னைக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால், எப்படி இந்தச் சரித்திரம் உருவாகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு சங்கத்தை ஆரம்பிக்கி றார்கள். அதோடு ஒப்பந்தம் செய்கிறார்கள். அது எப்படிப் பட்ட ஒப்பந்தம் என்று பார்த்தால், ஏற்கனவே செய்த ஒப் பந்தத்தின்படி கிடைத்த சலுகைகளை இரண்டரை மாதங்களுக்கு முன்னால் இருந்தே கேட்டு முன்பணம் வாங்குவது. அதைச் செய்யத் தயாராக இருக்கிறார்களா என்பது இந்த விவாதம் நடப்பதைப் பார்த்து பிறகு அதைச் செய்யப் போகிறார்களா இல்லையா என்பது தெரியாது. இப்படிச் செய்கிறார்கள். இது எப்படிச் சரியாகும்? கோரிக்கைகளைக் கிளப்பிய சங்கம் இருக்கிறது. மெஜாரிட்டி தொழிலாளர்கள் உள்ள சங்கம் அங்கே இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, டெபுடி லேபர் கமிஷனர், லேபர் ஆபீசர் புதிய சங்கத்துக்காக தலையிடுகி றார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் தனக்குத் தானாகவே செய்ய விரும்புகிறார்கள் என்று நினைக்கவில்லை. நல்ல ஆபீசர்களும் சிலர் இருக்கிறார்கள். ஆனால், தயவு செய்து நான் கேட்கிறேன், தொழிலாளர் நல அமைச்சர், என் னுடைய மதிப்பிற்குரிய நண்பர், அவர் நல்ல அதிகாரிகளையும் கெட்ட பாதையிலே செல்ல வழி காட்டக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதற்கு முயற்சியெடுக்கக்கூடாது. இங்கே சட்டப் பிரச்னை வருகிறதா இல்லையா என்பது அல்ல. நேற்றைக்கு உண்டான சங்கத்துக்கு இன்றைக்கு ரெப்ரசென்டேட்டிவ் கெபாசிட்டி எப்படித் தெரியும், வெரிஃபிகேஷன்களா [illegible] வேண்டும். உள்ளபடியே நீங்கள் திறந்த உள்ளத்தோடு செயல்பட வேண்டும்.

ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையிலும் அல்லது பி.எச்.இ.எல்-லிலும் நடந்ததைப் போல சீக்ரெட் பேலட் மூலமாக தொழிலாளர்கள் எந்தச் சங்கத்தை தேர்ந் தெடுக்கிறார்கள் என்ற உரிமையைக் கொடுத்து முடிவு செய்யச் சொல்லுங்கள். அதேமாதிரி சிம்கோ மீட்டர் தொழிற்சாலை யிலும் போராட்டம் நடக்கும்பொழுது [illegible] [illegible] தொழிலாளர்களுக்கிடையே [illegible] [illegible],

சி.ஐ.டி.யு.விடம் அவர்களாகவே வந்து, சங்கத்தை உருவாக்கச் சொல்லி அந்தச் சங்கம் அத்தனை தொழிலாளர்களையும் திரட்டியபிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சங்கம் இருந்தது, ஆனால் அவர்கள் பிரதானமான சக்தியாகச் செயல்படவில்லை. அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சங்கத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆகவே, இந்த முறையில் போட்டிச் சங்கங்களை ஊக்குவிப்பது என்ற கொள்கைக்கு நீங்கள் போனால், இது முடியாவிட்டால் மாற்றுச் சங்கங்களோடு, தங்களுக்குப் பிடித்தமான சங்கங்களோடு, அரசியல் உறவு முளைத்து வருகின்ற சங்கங்களோடு சேர்ந்துகொள்ளும் போக்கில் போனால் இது எப்படிச் சரியானதாக ஆகும்? இதைத் தொழிலாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோடிக்கால் பூதம். ஒரு கோடித் தொழிலாளர்களுக்கு இரண்டு கோடிக் கண்கள் உண்டு. அந்தக் கண்களால் அவர்கள் உங்கள் தந்திரங்களைப் பார்க்கிறார்கள். ஆகவே, அவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதைத்தான் சிம்கோ மீட்டரில் பார்த்தோம்.

அடுத்து, ஆரோ புட் பேக்டரியைப் பொறுத்தவரையில் தென்னார்க்காடு ஜில்லாவிலே இருக்கிறது. அங்கே ஒரு போராட்டம் நடக்கிறது. அங்கே லேபர் கமிஷனர் தலையிட்டு தகராறுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சித்தால் முடிவு காணலாம். ஆனால் அந்தப் போராட்டத்தில் அந்தச் சங்கம் வெற்றி பெற்று விடக்கூடாது என்று அமைச்சரவர்கள் நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் தலையிட்டு ஒப்பந்தம் செய்வது தடுக்கப்பட்டது என்பதாகக் கேள்விப்படுகிறேன், எனக்குக் கிடைத்த தகவல் அப்படி. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் நீடித்தால் என்னவாகும் என்றால், ஒரு சில நல்ல அதிகாரிகளாக இருப்பவர்களும் கெடுவார்கள். நல்ல அதிகாரிகள் என்று சொல்லும்பொழுது அவர்கள் தொழிலாளர்களுக்காகத் தனியாக சேவை செய்து விட்டார்கள் என்று அல்ல, அவர்கள் சேவை சட்டபூர்வமாக, பார்ஷியாலிட்டி இல்லாமல் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற முறையில் அந்த சட்டங்களை விளக்கிச் சொல்ல முடியும். இந்தத் தொழிலாளர் நலச் சட்டத்தை தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சரவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அதுகூட இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு, அதிகார வர்க்கமே, அதிகாரிகளே பெரும் தொல்லையாக மாறி, இந்த மன்றத்திலேயே விவாதம் நடந்து கொண்டிருப்பது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இது சரி அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கு. ரமணி] [1979 ஏப்ரல் 19

(முற்பகல் 11-30)

தைரியம் இருக்கிறது, அவருக்கு இல்லாத தைரியமா. அவர்
தான் சிலம்பம் விளையாடுபவர் ஆயிற்றே. ஆகவே அவர்
அதைச் செய்வார். எதற்குச் சொல்கிறேன் என்றால் அது
அந்த கவர்ன்மென்ட் அப்ரோச். பர்டிகுலர் அப்ரோச்;
டாக்ட்டிக்கல் லைன்; பொலிட்டிக்கல் கன்விக்ஷன் அன்டு
பேசிக் பிலாசபி. அது இல்லாமல் எதுவும் சாத்தியம்
இல்லை. ஆகவே மேற்கு வங்காள அரசோடு நீங்கள் போட்டிப்
போட்டு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.
நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டியதும் கேட்டுக் கொள்ள
வேண்டியதும் நிறைய இருக்கிறது
வங்காள அமைச்சரும் நீங்களும் மேற்கு
ஆகியோர் சேர்ந்து மகாராஷ்ட்டிர அரசு திரு. பவார்
நாட்டிலே ஒரு புதிய பாதையை இந்திய
டைய உருவாக்க வேண்டும். மத்திய சர்க்காரு
வேண்டும் தவறான கொள்கைகளை மாற்றுவதற்கு முன் வர
வங்காள என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் மேற்கு
அப்ரோச்சும் அமைச்சரின் டேக்டிக்ஸ் தனி உங்களுடைய
எல்லாம் டேக்டிக்ஸ் பேசிக் அன்டர்ஸ்டேன்டிங்
வேறுபட்டது. என்டையர்லி டிபரண்டு. முற்றிலும் மாறானது,

ஒருமுறை நமது தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்.
புரட்சித் தலைவரின் சீரான தலைமையின்கீழ் சர்க்கார்
அமைந்து விட்டதால் தமிழ்நாட்டிலே சோஷலிஷம் வந்துவிட்டது
என்று இந்த அவையிலே பேசினார்கள். அது தவறான
கருத்து. தயவு செய்து புரிந்துக்கொள்ளுங்கள். சோஷலிசம்
என்பது பல வரைட்டிகளை உடையது அல்ல. இந்தியாவிற்கு
சைன்டிபிக் சோஷலிசம் தேவை. இந்தியாவில் சோஷலிசம்
பல வரைட்டிகளில் விற்பனையாகிறது. அதில் நீங்கள்
தப்பான வரைட்டியை வாங்கி விட்டீர்கள். ஆனால்
நமக்கு சைன்டிபிக் சோஷலிசம் தான் தேவை. அது இங்கே
எப்படி ஏற்பட முடியும்? உற்பத்திக் கருவிகள் உற்பத்தி
செய்யவேண்டிய சாதனங்கள் பொருள்கள். மற்றும்
உற்பத்தி செய்வதற்கான அமைப்புகள் ஆகிய எல்லாவற்றை
யும் சமூகச் சொத்தாகச் செய்து முடித்தால்தான் சோஷலிசம்
வந்து விட்டது என்று பொருளாகும். அதைத்தவிர வேறு
எந்தவிதத்திலும் சோஷலிசம் வந்துவிட்டது. சோஷலிசத்தை
அடைந்துவிட்டோம் என்று சொல்வது தவறாகும். அதை
யெல்லாம் நீங்கள் செய்து முடிக்கத்தான் வேண்டும் என்று
சொல்லவில்லை. அப்படி உங்களால் செய்யவும் முடியாது.
அது எங்களுக்குத் தெரியும். ஆனால் அதற்கான முதல்
நடவடிக்கைகளிலாவது இறங்கவேண்டும். முதல் முயற்சி
களையாவது செய்ய வேண்டும்.

1979 ஏப்ரல் 19] [திரு. கு. ரமணி]

தொழிலாளர்கள் வர்க்கம் உயரவேண்டும்; அவர்களுடைய
சக்தி வளர்ந்து அதன் மூலம் ஒரு நல்ல புதிய சமுதாயம்
வெளிவரவேண்டும். ஒரு நல்ல புதிய சமுதாயம் என்பது இன்
றுள்ள சமுதாயத்தின் கர்ப்பத்தில் இருக்கக்கூடிய ஒரு சிசு.
அந்தக் குழந்தை என்னும் புதிய சமுதாயம் பிரசவம் ஆக வேண்
டும். பாதுகாப்பாக வெளிவர வேண்டும். அதற்கு நமது
அமைச்சர் அவர்கள் மருத்துவச்சியாக செயல்பட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன். இந்த அரசு வந்தபின் ஒரு புதிய சட்டத்தை
யாவது தொழிலாளர்களுக்காக கொண்டு வந்ததா ஓட்டல்
தொழிலாளர்களுக்கான சட்டத்தில் ஒரு சின்ன திருத்தம்
கொண்டு வந்தீர்கள் For summoning records and witnesses
if necessary என்று அதை வரவேற்கிறேன். அதில் மேலும்
அவசியமான திருத்தங்களைக் கொண்டு வந்தால் நல்லது. அவை
களை விரைவில் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த பவர் லூம் தொழிலாளர்களுக்கு இன்னும்
கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. அவர்களுக்கு பாது
காப்பே இல்லை அதற்கு ஒரு சட்டம் தேவை. ராஜா சுப்பிர

மண்யம் கமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் கைத்தறி
நெசவாளர்களுக்கு சட்டம் கொண்டு வரப்போவதாய் இந்த
சபையில் பலதரம் கூறப்பட்டது. ஆனால் அது என்ன
வாயிற்று என்று தெரியவில்லை. அந்த ரிப்போர்ட்டினுடைய
மூஞ்சியையும் பார்க்கவில்லை. முகரக் கட்டையையும் பார்க்க
வில்லை. பலமுறை அப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்
போவதாகச் சொன்னார்கள். அது என்னவாயிற்று என்றே
தெரியவில்லை. நாங்கள் எதையும் பார்க்க முடியவில்லை.
அமைச்சரைத்தான் பார்க்கிறோம். நம்முடைய அமைச்சர்
அவர்களின் முகத்தைத்தான் பார்க்கிறோம். சொல்வீர்கள்
செய்வீர்கள்; தெரியும் ஆனால் நான் என்ன சொல்கிறேன்
என்றால் ஆயிரம் சொல்வதைவிட அரைச் செய்கை மேலா
னது. அந்தச் சட்டத்தைக்கூட கொண்டு வரமுடியவில்லை.

நான் இன்றைக்கு இங்கே ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.
எனக்கு எம். ஜி. ஆர் மன்றத்திலிருந்து தந்தி வந்திருக்கிறது.
"Police joined alliance powerloom owners-Sankarankoil Police
unlawful action with labourers-Immediate action requested" என்று
தந்தியில் உள்ளது.

நான் சட்டத்தைப் பற்றிப் பேச வருகிறேன்.
தொழிலாளர்களுக்காக இந்த இலாக்கா எந்தவிதப் புதிய
சட்டத்தையும் கொண்டு வரவில்லை.

தொழிலாளர்கள் ஆலோசனை போர்டில் 2 வருடங்கள்
சர்வீஸ் ஆன தொழிலாளர்களை நிரந்தரமாக்கப்பட வேண்டும்
என்று ஒரு நகல் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் கதி
என்னவாயிற்று என்றே தெரியாது. இப்படிப்பட்ட நிலைமையில்
இருக்கிற சட்டத்தையாவது அமுலாக்குவதற்கான முயற்சியி
லாவது ஈடுபடவேண்டும். சட்டமே அமுலாக்கப்படவில்லை
என்றால் என்ன செய்வது.

பீடித் தொழிலாளர்களைப் பொருத்தவரையில், பீடித்
தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை அந்த முதலாளிகள்
சுக்குநூறாக உடைத்துப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.
பண பலத்தைக் கொண்டு எதையும் அவர்கள் செய்ய முடிகிற
போது, இந்த நாட்டில் உள்ள கோர்ட்டுகள் என்ன செய்யும்
என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அரசாங்கம் வெறும்
சட்டம் கொண்டு வந்தால் மட்டும் போதாது. தொழி
லாளர்களுடைய நம்பிக்கையை பெற்று, அரசும் தொழிலா
ளர்களும் சேர்ந்து கொடுக்கிற நிர்ப்பந்தம்—பிரஷர்—அதிலே
அந்த முதலாளிகளை வளைத்து அதை அமல் செய்யவேண்டும்.
அது நடக்கமாட்டேன் என்பது தான் எனக்கு வருத்தம்.

அடுத்து, கான்டிராக்ட் அபாலிஷன் அன்டு ரெகுலெஷன்
ஆக்ட் இப்போது எப்படி இருக்கிறது என்றால், கான்ட்ராக்ட்
எக்ஸ்பேன்ஷன் அன்டு டெவலப்மென்ட் ஆக்ட் என்ற முறையில்
இருக்கிறது. நாங்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறபோதுதான்
அதைப் பற்றி விவாதித்து, அதைச் சட்டமாக நிறைவேற்றி
னோம். இன்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது.
அதன் முடிவு பற்றி அமைச்சர் அறிக்கை வைக்கிறேன் என்று
சொன்னார்; வைக்கவில்லை. நான் எதற்காகச் சொல்கிறேன்
என்றால் கான்டிராக்ட் இன்றைக்கு பெரிய பூதம் மாதிரி சகல
தொழிலுக்கும் பரவியிருக்கிறது. பாக்டரிக்குள்ளே போய்
இருக்கிறது. அதை மாற்றவேண்டும். இதற்கு நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு என்பது இப்போது ஒரு முக்கியமான
விஷயமாக இருக்கிறது. நேற்று இரவுதான் இந்தக் கொள்கை
விளக்கக்குறிப்புகள் எங்களுக்கு வந்தது. இந்தப் பழக்கத்தை
மாற்றியாகவேண்டும். கொள்கை விளக்கக்குறிப்புகள், மானியக்
கோரிக்கைகள் மீது கருத்துரைகள் விவரங்கள் எங்களுக்கு 3
நாளைக்கு முன்னால் கொடுக்கப்படவேண்டும். இல்லாவிட்
டால், அது இரவுக்குள் ''மெட்மார்போசிஸ்'' உருவம் மாறி
எங்கள் மண்டைக்குள் புகுந்து விடுமா? ஆகவே முன்னதாக
அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் நிலையைப் பாருங்கள்.
குமரி மாவட்டத்தில், பனை வெல்லம் தயாரிக்கும் தொழிலா
ளர்கள் விலை வீழ்ச்சியின் காரணமாக சுமார் ஒரு லட்சம்
பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதேபோல்,
முந்திரித் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் சுமார் 75,000 பேர்
கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தால் வேலையிழந்து இருக்கி
றார்கள். தமிழ்நாடு அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு
எந்த வகையில் பாதுகாப்பு தர இருக்கிறது. மத்திய அர
சோடு தொடர்பு கொண்டு உடனடியாக அந்த மூலப்பொருளை
வாங்கிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வலை பின்னும் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள்,
இன்றைக்கு அந்த வலைபின்னும் தொழிலில் இயந்திரம் வந்து
விட்ட காரணத்தால் 6,000 பெண்கள் வேலையற்றுக் கிடக்கி
றார்கள். அதைப்போல் வேலை இல்லாமல் எத்தனையோ
பேர் இன்றைக்கு வீதி வீதியாக திரிகிறார்கள். அவர்களுக்கு
வேலை கிடைக்குமா என்ற சந்தேகத்தோடு மிக மோசமான
நிலையில் அவர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள்.
அதிலே படித்தவர்களும் இருக்கிறார்கள். படிக்காதவர்களும்
இருக்கிறர்கள். ஆகவே, கூடிய சீக்கிரத்தில் இந்த வேலை
யில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேலத்தில் இருக்கிற மேக்னசைட் தொழிற்சாலை
யில் 3000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் 20 வருட சர்வீஸ்,
25 வருட சர்வீஸ் என்று இருக்கிறார்கள். அரசு எடுத்தவுடன்
எத்தனை பேரை நிறுத்தியிருக்கிறது தெரியுமா அரசு எடுத்த
உடனே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால இந்தத்
தொழிலாளிக்கு சர்வீஸ் இல்லை சர்வீஸ் குறைவாக
இருக்கிறது என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அரசாங்க
கமே இப்படி செய்தால், முதலாளிக்கு இது ஒரு வழிகாட்டியாக
இருக்காதா. அவர்கள் உங்கள் அரசாங்கமே இப்படிச்செய்
கிறார்களே என்று கேட்பார்கள். ஏன் இந்த நிலை அந்த
நிலைமை நீடிப்பது சரியல்ல. அதை மாற்றவேண்டும்.
மேலும், அங்கே கிராஜுட்டிக்கு குருப் இன்ஷுரன்ஸ் செய்யப்
பட்டுள்ளது. அதற்கு பணம் கட்ட அங்கே, யாரும் இல்லை.
ஒவ்வொரு தரமும் முதலாளி 25,000 ரூபாய் வரை கட்டியிருக்
கிறார்கள். இன்று நீங்கள் எடுத்து இருக்கிறீர்கள். நீங்கள்
தானே கட்டவேண்டும். அது தான் சரியான முறை. அதைச்
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள குரோம் லெதர் கம்பெனி—இந்த சௌத்
ஈஸ்ட் ஆசியாவிலேயே பெரிய கம்பெனியாக இருக்கிறது.
அங்கே 400 தொழிலாளர்கள் 9 மாதகாலமாக சம்பளம் இல்லா
மல் இருக்கிறார்கள். அங்கே உற்பத்தியில்லை. மூடிக்கிடக்

கிறது. அதைப் பற்றி திரு. பாலகிருஷ்ணன் எடுத்துச்சொன்னார்.
திரு. மாரிமுத்து எடுத்துச்சொன்னார். பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்ட் படி சம்பளம் கொடுக்கவேண்டும்
என்று முடிவு இருந்தாலும் அதை ஏன் இன்னும் அமுலாக்கவில்லை.
முதலாளிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது.
சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க
விரும்புகிறேன். தொழிலாளிக்குப் பாதுகாப்பாக அந்தச்
சட்டம் அமலாக்கப்படவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட
நிலையில் இந்த அரசாங்கத்தின் கொள்கை சம்பந்தப்பட்டவரை
யில் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1977 ஆகஸ்ட் 11-ல்
பிரகடனப்படுத்திய கொள்கையை, நிறைவேற்றுவதில் வெற்றி
பெறுவதில்லை, வெற்றிபெறவேண்டும் என்று நாங்கள்
எதிர்பார்த்தோம். கொஞ்சகாலம் பார்த்துக்கொண்டு இருந்
தோம். அதற்காக ஒத்துழைத்தோம். தொடர்ந்தும் ஒத்து
ழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்கள் எதிர்
பக்கம் போய் விட்டீர்கள். தொழிலாளர்கள் போராட்டம்
என்றால் வன்முறை வந்து விடும் என்று சொல்கிறீர்கள். நண்டு
கொழுத்தால் வங்கில் இருக்காது என்பதைப்போல் தொழிலாளி
தின்று கொழுத்து திமிர் பிடித்து தெருவில் அலைகிறானா, வன்
முறையில் ஈடுபடவேண்டும் என்று விரும்புகிறானா, இல்லை. வன்
முறையின் பிறப்பிடமே முதலாளிதான். அவர்கள் தான் ரூபாய்
கொடுத்து ஆட்களைச் சேர்த்து வன்முறையில் ஈடுபடுகிறார்கள்.
நாங்கள் நிரூபிக்கத் தயார். ஆகவே, தொழிலாளிகளைப் பற்றி
அந்தக் கருத்துக்கு வரவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

(முற்பகல் 11-40)

முதலாளிகளுக்குச் சாதகமாக........(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜே. இராமசாமி)
உங்களுக்குக் கொடுக்கப்பட்டது 40 நிமிடங்கள் 39; நிமிடங்கள்
பேசி விட்டீர்கள்; இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. மற்ற
வர்களும் பேச வேண்டி இருக்கிறது. சீக்கிரம் முடித்துக்
கொள்ளுங்கள்.

*திரு. கு. ரமணி : ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளிலே
தொழிலாளர்கள் போராடுகிறபோது அவர்கள் நியாயத்திற்காக
போராடுகிறபோது அவர்களுக்குத்தான் ஊக்கம் அளிக்க வேண்
டுமே தவிர அவர்களை அடக்க நினைக்கக்கூடாது. உங்கள்
தலைமையிலே இருக்கக்கூடிய சங்கங்களைக் கூட ஊக்குவிப்ப
தில்லையே. எப்படியோ தொழிலாலர்களின் நியாயமான
போராட்டங்களுக்கு ஊக்கம் தரவேண்டும். அப்படிப்பட்ட நட
வடிக்கை எடுப்பதாக இருந்தால், நாங்கள் வரவேற்கிறோம்.
அந்தமாதிரி அச்சமின்றி தொழிலாளர்கள் போராட்டம் நடத்து

1979 ஏப்ரல் 19]

[திரு. கு. ரமணி]

வதற்கு பாதுகாப்பு வேண்டும். முதலாளிகளுக்கு முதலிலே போலிஸ் பாதுகாப்பு கொடுப்பது கைவிடப்பட வேண்டும். அச்சமின்றி அடக்குமுறை ரவுடித்தாக்குதல் பயமின்றி தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்த அவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டும். தொழிலாளர்களின் போராட்டங்களைப் பலவீனப் படுத்தும் காரியங்களை அரசு செய்யக்கூடாது. தொழிலாளர்கள் பிரச்சினைகள் என்று வருகின்றபோது அரசு தலையிட்டு தொழிலாளர்களுக்குச் சாதகமாக தீர்வு காண சலியாது தொடர்ந்து முயற்சி செய்யப்படவேண்டும். போராட்டத்தை நீடிக்கவிட்டு பலவீனப்படுத்தி தோற்கடிக்கும் தந்திரம் செய்யக் கூடாது. போராட்டங்கள் நடக்கும்போது போட்டி சங்கத்தை ஏற்படுத்தும் காரியத்தை அரசாங்கம் செய்யக் கூடாது. அதிகாரத்தில் இருக்கிறோம் என்ற காரணத்தால் அப்படி எல்லாம் செய்யக் கூடாது. முன் காலத்தில் அதிகாரத்தில் இருந்து அப்படி எல்லாம் செய்தவர்கள் போட்டி சங்கத்தை உண்டாக்கியவர்கள் இப்போது அனுபவிக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் அவர்கள் ஆட்சியை விட்டு இறங்கியவுடன், அந்தச் சங்கமும் முடிந்துவிடும்.

அடுத்து 12 (3) என்ற ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றவதுதான் இந்த அரசினுடைய ஒரே கொள்கை.... (மணியடிக்கப்பட்டது) இப்போது முடித்துவிடுகிறேன். அதாவது 12 (3) என்ற ஒப்பந்தத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லி அதனால் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளைக் கிடைக்காமல் செய்வது கூடாது. ஒரு ஒப்பந்தம் என்று சொன்னால் அந்த ஒப்பந்தத்தை மெஜாரட்டி தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அதற்காக ரகசிய ஓட்டெடுப்பு நடத்தியபின் தான் கையொப்பமிட வேண்டும். ஆகவே நல்ல முறைகளைக் கையாண்டால் இந்த அரசுக்கு நல்லது என்று சொல்லிக் முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவை மாற்றுத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் மிகவும் நல்ல முறையில் வேகமாகப் பேசினார்கள். ஆனால் கடைசியாக ஒன்று சொல்லும்போது இப்படி சங்கத்தை உண்டாக்கியவர்கள் கீழே இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று சொன்னார்களே. அது யார் என்பதை விளக்கமாகக் சொல்லவில்லை. அதைக் கொஞ்சம் விளக்கமாக சொல்லிவிட்டால் நல்லது.

<u>திரு. கு. ரமணி :</u> நமது மதிப்பிற்குரிய திரு. ராதா அவர்கள் கேட்கின்ற கேள்விக்குரிய அர்த்தம் அவர்களுக்குத் தெரியும்; நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் எந்தக் கட்சியாக இருந்தாலும் அதிகாரத்தில் இருக்கும்போது அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி போட்டி சங்கத்தை ஆரம்பித்தால் அவர்கள் கீழே இறங்கும்போது அந்தச் சங்கமும் மறைந்துவிடும் என்பதுதான். ஆகவே அந்த அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. ப. குருசாமி : இந்த மாமன்றத்தின் மாண்புமிகு
தற்காலிகத் தலைவரவர்களே தொழிலாளர்களுடைய நலனை
நல்ல அறிவாற்றல் கொண்டு இந்தத் தொழிலாளர்களுடைய
பிரச்சினைகளைப் போக்குகின்ற அளவுக்கு எங்களுடைய தொழி
லாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்த இந்த
மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த
மைக்கு நான் முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாடு நல்ல நாடாகவும் சிறந்த நாடாகவும் விளங்க
வேண்டும் என்றால் அந்த நாட்டிலுள்ள தொழிலாளர்கள் நல்ல
முறையிலே பணியாற்ற வேண்டும். தொழிலாளர்கள் நல்ல
முறையிலே செயலாற்றவேண்டும். அப்படி செயலாற்ற வேண்டு
மென்றால் அந்தத் தொழிலாளர்கள் நல்ல முறையிலே இயங்க
வேண்டுமென்றால் தொழிலாளர்களுக்குண்டான சலுகைகளும்
அவர்களுக்கு தேவையான வசதிகளையும் செய்து கொடுத்தாக
வேண்டும். அப்படிப்பட்ட அந்த தொழிலாளர்கள் நல்ல
முறையிலே செயலாற்றுகிற முறையிலே எங்களுடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்களுடைய
முன்னேற்றத்திற்காக அவர்கள் அரும்பாடு பட்டுக்கொண்டிருக்
கிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினைகளை தங்களுடைய பிரச்
சினைகளாக ஏற்றுக் கொண்டு, எங்களுடைய தொழிலாளர் நல
அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் முன்னேற்றத்தைக் கருதி
பிரச்சினைகள் நடக்கும் இடத்திற்கு விரைந்துசென்று
தொழிலாளர்கள் பிரச்சினைகளை முடிக் கிறார்கள்.
அப்படிப்பட்ட அந்தத் தொழிலாளர் நல அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்த இந்த மானிய கோரிக்கையின்
மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் மீண்டும்
அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரு சில
கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்கள் பொதுவாக கிராமப் புறங்களிலும் நகரப்
பகுதிகளிலும் சுத்தம் செய்கின்ற துப்புரவு தொழிலாளர்கள்
அவர்களில் இரண்டு பகுதியினராக இருக்கிறார்கள். ஒரு பகுதி
யினர் நகரப்புறங்களில் இருக்கிற பாதாளச் சாக்கடைகளில்
அவர்கள் பணி புரிகிறார்கள். மோசமான பணி என்று
அவர்கள் கருதாமல் மக்களுக்குச் சுகாதார வாழ்க்கையில் நல்ல
முறையில் இருக்க வேண்டும். அந்த நோக்கத்துடன் அந்த அரி
சனத் தொழிலாளர்கள் நகரச் சுத்தித் தொழிலாளர்கள் சிறந்த
முறையில் பணியாற்றுகிறார்கள். அந்தத் தருணத்தில் பாதாளச்
சாக்கடைகளில் இறங்கி பணியாற்றுகின்ற நேரங்களில் அவர்கள்
தங்கள் உயிரை இழக்கின்ற நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.
அப்படி உயிரை இழக்கும் தொழிலாளர்கள் குடும்பத்தினருக்கு
அரசுஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அதிகப்படியான சலுகைகளை
கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே கிராமப் புறங்களிலும் நகர்ப் பகுதிகளிலும்
ஸ்வீப்பர்ஸ் வேலை செய்கின்ற அந்தப் பகுதி
யினரும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அசுத்தமான வேலை
செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே
கிராமப் பகுதிகளிலே விவசாயத் தொழிலாளர்கள் கூலி வேலை
செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில்
அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அந்தச் சலுகைகளும்
கொடுக்க வேண்டும் ;ஏன் என்றால் அவர்கள் பணியாற்றுகின்ற
போது அந்தப் பணியாளர்கள் தாங்கள் கொடுக்கும் ஊதியத்தை
வாங்க வேண்டும்? கட்டளையிடுகிறார்கள் அப்படி செய்யும்போது
அந்த விவசாயி என்று கூலி ஆட்கள் அவர்களை விட்டு பிரியமுடி
என்று சொல்கிறார்கள். அதனால்தான் அந்த விவசாயக் கூலி
ஆட்களுக்கு சரியான சம்பளம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட
ஏழை கூலி விவசாய கூலி ஆட்களுக்கு ஏழை அரிசனங்களுக்கு
அரசு ஊழியர்களுக்குத் தரப்படுவதுபோல் கொடுக்க வேண்டும்
என்று என்னுடைய பணிவான வேண்டுகோளை விடுக்கிறேன்.
அதைப் போலவே என்னுடைய ஆண்டியூர் தொகுதியில்
காவிரி ஆற்றிலிருந்து குடி தண்ணீர் கிடைக்க வசதி செய்ய
வேண்டும் என்று அந்தப் பகுதி ஒன்றியத் தலைவர் அவர்கள்
கேட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நிறைவேற்றித் தர
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு
தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.
வணக்கம்.

(முற்பகல் 11–50.)

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே!
முதலாவதாக சமுதாயத்தில் நலிந்த மக்களுக்காக ஒரு துறை
அமைத்து அந்த நலிந்த மக்களின் வாட்டத்தைப் போக்குகின்ற
வகையில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சிறப்பான பல
நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக
அவரை பாராட்டுகிறேன். ஆனால் அதே மாதிரி சட்டங்களை
அவர்களுடைய பாதுகாப்புக்காகப் போட்டுவிட்டு இந்தச் சட்டங்
களை எல்லாம் அவர்களுக்காகப் போடுகின்றோம் என்று சொல்லி
விட்டு அந்த சட்டங்களை அமுலாக்காமல் இருந்தால் அதைவிட
பெரிய கஷ்டம் ஒன்றும் இருக்க முடியாது. தொழிலாளர்களின்
நலன்களுக்காக ஏற்கனவே இந்த மன்றத்தில் பேசப்பட்டவைகள்
Minimum Wages Act. Catering Establishment Workers Act.
என்கின்ற முறையில் பலவிதமான சட்டங்கள் இருந்துக் கொண்
டிருக்கின்றன. அந்தச் சட்டங்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி
ஒரே காம்பரஹன்ஸிவ் லெஜிஸ்லேஷனாக கொண்டு வரவேண்டும்
என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

There must be comprehensive legislation covering all the workers
(குறுக்கீடு) இதற்காக போடப்பட்டிருக்கின்ற குழுவில் நானும்
மெம்பராக இருக்கிறேன். இதைப் பற்றி அங்கேயும் பேசிக்
கொண்டிருக்கிறோம். குறிப்பாக அந்தச் சட்டங்களிலே பல
திருத்தங்களை கொண்டு வரவேண்டும் என்று அங்கே சொல்லு
கிறோம். அந்த திருத்தங்களைச் சொல்லுகிறபோது
ஒவ்வொரு சட்டத்திலும் இருக்கின்ற விதிகள் மற்றொரு
சட்டத்திலும் இருக்கின்ற நிலைமைகளை பார்க்கின்றோம். சில
நேரங்களில் .. it over laps each other
முறையில் இருக்கின்ற காரணத்தால்.. என்கின்ற

There must be a codified and uniform legislation for all the workers
என்கின்ற முறையில் சட்டத்தை நீங்கள் திருத்த வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தொழிலாளர்களுடைய
நலன்களை பற்றி சொல்லுகிற போது என்னுடைய
மாவட்டத்தைப்பற்றி குறிப்பாக சொல்ல வட ஆற்காடு
கருதுகிறேன். பெருவாரியாக அங்கு பீடித் என்று
இருக்கிறார்கள். அந்த பீடித் தொழிலாளர்கள்
பாதுகாப்புக்காக இரண்டு மூன்று சட்டங்கள் தொழிலாளர்களுடைய
கின்றன. ஆனால் அந்த சட்டங்கள் போடப்பட்டிருக்
படுகின்றனவா என்று பார்த்தால், இல்லை என்று அமல் நடத்தப்
வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எந்த தான் சொல்ல
இல்லாத நிலையில் அந்தச் சட்டத்தில் விதமான வசதிகளும்
அந்த ஓட்டைகளைப் பயன்படுத்திக் ஓட்டைகள் இருக்கின்றன
தப்பித்துக் கொண்டிருக்கின்ற கொண்டு அந்த முதலாளிகள்
கின்றன. பல அவார்டுகள் நிலைகள் இருந்து கொண்டிருக்
தீர்ப்புகள் வழங்கப்பட்டு பாஸ் பண்ணப்பட்டன. அந்தத்
சொல்லப்படுகிறபொழுது, நஷ்ட ஈடு தர வேண்டும் என்று
செல்லுகிறார்கள். அந்த முதலாளிகள் நீதிமன்றத்திற்கு
பொழுது, ஸ்டே ஆர்டர் நீதிமன்றங்களில் செல்லுகின்ற
என்று அந்த முதலாளி வாங்குகிறார்கள். as against the workers.
எதிர்த்து, நீதிமன்றங்களில் விடுவார்களேயானால் அதை
காலங்கள் அங்கே ஏங்கி சென்று வாதாடி பல ஆண்டு
தின் பலனை அவர் தவித்து நின்று பின்னால் அந்தச் சட்டத்
தான் இருந்து அனுபவிப்பதற்கு சக்தியில்லாத நிலைமை
தீர்ப்பு வழங்கப்படுமானால் கொண்டிருக்கிறது. இப்படி ஒரு கடவை ஒரு
காலத்திற்குள்ளாக அமல் அந்தத் தீர்ப்பை ஒரு குறிப்பிட்ட
படுத்தப்படவில்லை என்று நடத்தியாக வேண்டும். அப்படி அமல்
அந்த முதலாளிகள்மீது சொன்னால அப்படி அமல் படுத்தாத
கடுமையான நடவடிக்கை இந்த அரசாங்கம் எந்த விதத்திலாவது
பண்ணினால் தான் அந்த எடுக்கும் என்ற அச்சத்தை உண்டு
தொழிலாளிகளுக்கு நீதி நீதிமன்றங்களை நாடிச் சென்ற அந்த
நீதிமன்றங்களில் தீர்ப்பைப் கிடைக்கும். அது இல்லாத போனால்
மன்றங்கள் மற்றவர்களுக்கு பெற்ற பிறகும்கூட, வேறு நீதி
இருக்கலாம். as against workers'......
is the workers intimat the concerned authorities, there must be a

provision. என்ற முறையில் அன்றாடம் உழைத்து சம்பாதித்து
சாப்பிட வேண்டும் என்கின்ற நிலையில் இருக்கின்ற அந்த தொழி
லாளிக்கு நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலையை உருவாக்க
வேண்டும். அப்படி நிலைமை ஏற்படுகிறபொழுது, அவர்களுக்கு
அரசாங்கமே சட்ட உதவியைக் கூட தருவதாக ஒரு நிலைமையை
இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்று
சொன்னால், இதுவரைக்கும் இந்த உதவியை நாடி வந்தவர்கள்
யாரும் இல்லை என்கிற ஒரு குறிப்பும் காணப்படுகிறது. இப்படி
எவ்வளவோ தீர்ப்புகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன.
அப்படி வருகிறபோது, if the workers desire, the Government should
help the
அவர்களாகவே—அதாவது அரசாங்கமே அந்த வழக்கை எடுத்து
நடத்த வேண்டிய அளவுக்கு இந்த அரசாங்கம் இருக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று பீடித் தொழிலாளர்கள் சட்டத்தையும்
திருத்தியமைத்து அமுல்படுத்த வேண்டும். இதை உடனடியாக
அரசாங்கம் திருத்தி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத்
தொழிலிலே சிறுவர்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.
சுகாதாரம் இல்லாத இடங்களிலே இந்தத் தொழில்கள் நடத்து
கிறார்கள். அதன்மூலம் சுகாதார வசதி கெட்டு, நோய் ஏற்படு
கிறது. குறிப்பாக டி.பி. வியாதியால் பெருவாரியாக பாதிக்கப்
படுகிறார்கள். இவர்களுக்கு பிரத்தியேகமாக வைத்தியச் சலுகை
களோ அல்லது மற்ற வசதிகளோ, சவுகரியங்களோ செய்து
கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்லிஷ்மெண்ட் ஆக்ட்
என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே வேலை செய்கின்றவர்
களுக்கு இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு செய்து வருகிறோம்.
ஆனால், இந்தச் சட்டத்தை யார் அமுல்படுத்துகிறார்கள்
அமுல்படுத்த முடிகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.
ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்லிஷ்மெண்ட் ஆக்ட் இருக்கிறது. அதே
போல் மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று பலவிதமான சட்டங்கள்
தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக போட்டிருக்கிறோம்.
இதையெல்லாம் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்ற
தொழிற்சாலைகளில் ஓரளவுக்கு அமுல்படுத்த முடிகின்றது.
ஆனால், தனியார் துறையிலே வேலை செய்கின்றவர்களுக்கு
குறிப்பாக, எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள திருமகள்
மில்ஸ், ராஜேஸ்வரி மில்ஸ் போன்ற தனிப்பட்டவர்களுடைய
நூற்பாலைகளில், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் தொழிற்
சாலைகளில் வேலை செய்கின்றவர்களிடையே அமுல்படுத்த
முடியவில்லை.

They will have to act according to their whims and fancics· அந்த முதலாளிகள் தொழிலாளர்களுக்கு விரோதமாகத் தான் செயல்படுகின்றார்கள். அவர்களுடைய உரிமைகளை நிலை நாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

They are subject to victimisation. என்கிற நிலைமையில் இருக்கிறார்கள். அதையும் பாதுகாத்தாக வேண்டும். அந்த முறையிலே 'ஆர்கனைஸ்ட் இன்டஸ்ட்ரீஸ்' அதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலையில் தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் வேலை செய்கின்றவர்களை பாதுகாக்கின்ற முறையில் இந்த அரசாங்கம் சட்டங்களை இயற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்தத் தொழிலிலே குழந்தைகளுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் தந்தாக வேண்டும். வேலை செய்கின்றபோது, இந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு, அந்தக் குழந்தைகளை பராமரிக்கின்ற தன்மை, அவர்களுக்கு பள்ளிப் படிப்பு போன்ற வசதிகளை செய்து கொடுக்கும் வகையில் இந்தச் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, துப்புரவை எடுத்துக் கொண்டால், இங்கே பொதுச் சுகாதாரத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொது சுகாதாரத்தைப் பற்றி இந்த அரசாங் கத்திடம் அடிக்கடி கூறி வருகிற ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். எங்களுடைய பகுதியிலே தோல் பதனிடும் தொழிற் சாலை ஆம்பூர், வேலூர், ராணிப்பேட்டை ஆகிய இடங்களிலே இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளிலே இருந்து வெளியேற்றப் படும் கழிவு நீர் பல மைல்கள் தொலைவிற்கு தண்ணீரைக் கெடுத்து விடுகிறது. குடிப்பதற்கு லாயக்கில்லாத தண்ணீராக மாற்றி விடுகிறது. அந்த நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதைக் குடிகின்ற போது, சொறி சிரங்குகளால் பாதிக்கப்படு கின்றார்கள். அதை மாற்றியமைக்கும் நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சேலத்திலே மேட்டூர் பகுதியிலே கெம்பிளாஸ்ட் என்ற தொழிற்சாலை இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் உப்பை அதிகமாக ஓபன் ஏரில் வைத்திருக்கிறார்கள். அங்கே கழிவுநீர் விடப்படுவதன்மூலம், குடிநீரெல்லாம் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அதையும் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பகுதிகளிலே குடிநீர் பிரச்னைக்காக மக்கள் அணுகுகின்ற போது, இந்த அரசாங்கம் தாராளமாக இந்தப் பிரச்னைகளை அணுக வேண்டும். அதேபோல் வீட்டு வசதியைப்பற்றி வருகின்ற

போது, அதுவும் இந்த அமைச்சரின்கீழ் வருகின்றது. செல்வாக்குப் படைத்தவர்களுக்குத் தான் இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கிடைக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி, ஒவ்வொரு தொகுதியிலும் பரவலாக வீடுகள் கட்டப்பட வேண்டும்.

There must be uniform distribution of construction of houses இந்த முறையை ஏற்படுத்த வேண்டும்.

[நண்பகல் 12·00.]

அதே நேரத்தில் மலைசாதி மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து அந்தச் சலுகைகளைத் தர வேண்டும். பின்தங்கிய மக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களுக்கும் சலுகைகள் தர வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தாற்காலிகத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு பற்றிய இந்த மான்யத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூறிக் கொள்ள முன வருகிறேன். இந்த அறிக்கையினுடைய முதல் பக்கத்திலேயே 'தமிழ்நாட்டில் 1978 ஆம் ஆண்டில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவியது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1978ஆம் ஆண்டில் நல்லுறவு நிலவி யது என்பது உண்மைதானா எனபதைப் பற்றித்தான் நாம் பரிசீலிக்கப் போகிறோம். நல்லுறவு நிலவ அரசாங்கம் செய்த பணிகள் என்ன? எந்தப் பக்கத்தில் சர்க்கார் நின்றிருக்கிறது? தொழிலாளிகளுக்கு ஆதரவாக நின்றிருக்கிறதா? முதலாளிக்கு ஆதரவாக நின்றதா? இதைப்பற்றி சில முக்கியமான விவரங் களைக் குறிப்பிட முன்வருகிறேன்.

இந்த அறிவிப்பில் கூறியிருப்பது மாதிரி நிலை இல்லை. 1978ஆம் ஆண்டில் கடும் போராட்டங்கள் வெடித்துள்ளன. 100 நாட்களுக்கு மேல், திரைப்படம் ஓடுவது மாதிரி தொழிற் சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றன. டி.ஐ. சைக்கிள் போராட்டமானாலும், சிம்கோ போராட்டமானாலும், டி.வி.எஸ். போராட்டமானாலும், எந்தத் தொழிற்சாலை போராட்டமானாலும் 100 நாட்களுக்கு மேல் நீண்ட நாட்கள் நடந்துள்ளன. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் குடும்பங் கள் பல நாட்கள் பட்டினி கிடந்துள்ளனர் எனபதையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. 'தொழிற்சாலையை மூடிய முதலாளிகள் தொழிலாளர்கள் வீட்டு அடுப்பையும் அணைத்திருக் கிறார்கள். அதற்கு அரசாங்கம் துணை போயிருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, சக்தி பைப்ஸ் எவ்வளவு காலமாக மூடப்
பட்டிருக்கிறது? அந்தத் தொழிலாளர்கள் எங்கே இருக்கி
றார்கள் ? இருக்கிறார்களா ? இறந்து போய் விட்டார்களா?
அதைப்பற்றிச் சர்க்காருக்கும் கவலை கிடையாது. டி.வி.எஸ்.
டி. ஐ. சைக்கிள், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சிம்கோ
மீட்டர்ஸ், நாகை உருக்கு உருட்டுத் தொழிற்சாலை ஆகியவற்றில்
தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசாங்கத்தின் கொள்கை
இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் உரிமைக்கு எதிராக போலீஸ் ஏவப்பட்டுள்ளது.
போலீசார் அத்துமீறி தொழிலாளர்கள்மீது பொய் வழக்குகள்
போட்டிருக்கிறார்கள். கரூரில் எல்.ஜி.பி., பாடி தொழிலாளர்கள்
போராட்டத்தின்போது தொழிற்சாலைக்குள்ளே போலீஸ் போயி
ருக்கிறது. தொழிலாளர் பிரச்னையில் போலீஸ் தலையிடக்
கூடாது என்று நாங்கள் கேட்டுக் கொண்டும், சொல்லியிருந்தும்
அரசாங்கம் மீறி நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள்
என்பதைத்தான் கூறிக்கொள்கிறேன.

டி.வி.எஸ். தொழிலாளர்களுக்காக அரிபட் உண்ணாவிரதம்
இருந்தார். அந்தப் பந்தல் தாக்கப்படுகிறது. கொளுத்தப்
படுகிறது. டி.ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர்களுக்காக
ஊர்வலத்தில் தோழர் ஏ.எம் கோபுவும், கே.டி.கே. தங்கமணியும்
சென்றார்கள். அங்கே போலீசார் புகுந்து தாக்குகிறார்கள்.
அவர்கள் வன்முறைக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாகிறார்கள்.
இந்த நாட்டில் உண்ணா விரதம் இருக்கிற, ஊர்வலம் போகிற
ஜனநாயக உரிமைகள் கூட பறிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்
தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

டி.ஐ. சைககிள் பாக்டரியில் மோகன் குமாரமங்கலம்,
ஜானகிராமன், அந்தோணிப் பிள்ளை, சிந்தன ஆகியோர் மட்டு
மல்ல, இன்றைய தொழிலாளர் நல அமைச்சர் கூட தலைவராக
இருந்திருக்கிறார். அங்கு நல்ல முறை இருந்ததாகத் தெரிகிறது.
அப்படி இருந்த நிறுவனத்தில் பாரம்பரியம் மிக்க நிறுவனத்தில்
கே.டி.கே தங்கமணி, கோபு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள்.
உள்ளே நடந்த சிறிய தகராறு காரணமாக சேதப்படுகிறது.
ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அழைத்துப்
பேசுவதற்குப் பதிலாக அரசே ஒரு பஞ்ச பாண்டவர்களை
அழைத்து அவர்களோடு பேசியிருக்கிறார்கள். யார் அந்த பஞ்ச
பாண்டவர்கள் ? டி.வி.எஸ். நிறுவனத்தின் செல்லப்பிள்ளை
ஐ.என்.டி.யூ.சி. தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்
சங்கத் தலைவர்களை தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்தாலும்
நிர்வாகம் அங்கீகரிக்க வேண்டுமாம்; அப்படி அங்கீகரித்தால்தான்

அந்தச் சங்கத்தின் தலைவராக இருக்க முடியுமாம். நாடு
சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படிப்பட்ட நிலை
நாட்டில் இருப்பது வருந்தத்தக்கது. வெட்கக் கேடானது.

ஒரு நிறுவனம் சர்க்காருக்கு சவால் விடுகிறது. போலீஸ் பாது
காப்பு அளிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் தாக்கப்பட்டால்
அங்கே போலீஸ் போவது கிடையாது என்பது யதார்த்தமான
நிலையாக இருக்கிறது. தொழிற் சங்கங்களை உடைப்பது ஆளுங்
கட்சிக்கு ஆதரவாக சங்கங்களை அமைப்பது. இங்கே தோழர்
ரமணி அவர்கள் கேட்டார்கள் எத்தகைய சங்கமாக இருந்
தாலும் என்.ஜி.ஓ. சங்கமாக இருந்தாலும் சிம்கோ மீட்டர்
சங்கம் ஆகட்டும்— சிம்கோ மீட்டரில் ஏ.டி.எம்.கே. சங்கம் எந்
தத் தேதியிலே ரிஜிஸ்டர் செய்யப்பட்டது— அங்கே நடந்த
சர்வ கட்சி கூட்டத்திலே நானும் கலந்துகொண்டேன்
ஏ.டி.எம்.கே. சார்பிலே ஒருவர் வந்திருந்தார். எப்போது அமைக்
கப்பட்டது அந்த சங்கம் ? ஆளுங் கட்சியினுடைய சங்கங்களை
அமைப்பதற்காக இருக்கின்ற சங்கங்களை உடைப்பது என்பது
சரியல்ல. எ.ஐ.டி.யு.சி. சங்கத்தை உடைத்து அங்கே
ஐ.என்.டி.யு.சி. ஆக்கினார்கள். சங்கமும் உடைந்தது. ஆட்சியும்
உடைந்தது. சிம்சனிலே சங்கமும் உடைந்தது, கட்சியும்
உடைந்தது, ஆட்சியும் உடைந்தது. அதைப்போலவே நீங்கள்
உடைக்கிறீர்கள். நீங்களும் உடைவீர்கள் என்பதை நான் எச்
சரிக்கையாக நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
குறிப்பாக சங்கங்களை உடைப்பது என்பது நியாயமல்ல தர்ம
மல்ல, முறையல்ல. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்
தொழிலாளர்கள் வர்க்கத்தைக் கண்ட பெரிய ஆசான் உலகத்
திலே உள்ள அத்தனை தொழிலாளர்களும் ஒன்றுபடவேண்டு
மென்று உரைத்த கார்ல் மார்க்ஸினுடைய ஓர்க்கிங்கிளாஸ்
யூனிட்டி என்ற சித்தாந்தத்திற்கு மாறாக வேறு சித்தாந்தத்தை
நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாளில்
டி.ஐ. சைக்கிள்ஸ் திறக்க முடிவு செய்யப்பட்டது. 1978 ஆம்
ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளில் கே.டி.கே., கோபு
ஆகியோர் தலைமையில் 2 ஆயிரம் பேர்கள் ஊர்வலம். அந்த
ஊர்வலத்திற்கு இந்த அரசும் போலீஸும் என்ன பாதுகாப்பைக்
கொடுத்தார்கள். தொழிலாளர்களை சரணடைய வைத்தார்கள்.
வெள்ளைக் காகிதத்திலே தொழிலாளர்களுடைய கையெழுத்தை
நிர்வாகம் வாங்கியிருக்கிறது என்பது கண்ணுக்கு முன்னால் உள்ள
விஷயம். டி.ஐ. சைக்கிள்ஸில் 60 பேர்கள் வேலை இழந்
திருக்கிறார்கள். 56 பேர்கள் மீது வழக்குகள் இருக்கிறது. அந்த
வழக்குகள் எந்த பிரிவுகளின் கீழ் எல்லாம் போடப்படுகிறது.
147, 148, 326, 328 என்று என்ன என்ன செக்ஷன்கள் இருக்
கின்றனவோ அத்தனை செக்ஷன்களையும் போட்டு பல வழக்கு
களாகப் பிரித்துப் போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை

[திரு. மு. அம்பிகாபதி] [1979 ஏப்ரல் 19

எல்லாம் வாபஸ் வாங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.
ஆனால் செங்கற்பட்டு கலெக்டரிடத்திலே கேட்டால் அவர்
அதைப் பற்றி எனக்குத் தகவல் இல்லை என்று கூறுகிறார்.
இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது.

டி.வி.எஸ்.-இல் 60 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்
டார்கள். பிரேக்ஸ் இண்டியாவில் 109 பேர்கள் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். சிலர் சரண் அடைந்திருக்கிறார்கள். குண
சேகரன் என்பவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். பி.டி.சி.
யிலிருந்து வெளியே மாற்றப்பட்டு இருக்கிறார்கள். வியாசர்
பாடியில் பழிவாங்கப்படுகிறது. டி.வி.எஸ்.-இல் டி. அய்
சைக்கிள்ஸ்-இல் சிம்கோ மீட்டர்ஸ் இல் மன்னார்குடியில் உள்ள
கூட்டுறவு பால் வள நிறுவனத்திலே ஒன்றரை ஆண்டுக் காலம்
பணியாற்றிய பிறகு 12 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்
கிறார்கள். அவர்கள் அந்த வேலையை நம்பி திருமணம் செய்து
1 வருடத்தில் பிள்ளை பிறந்துவிட்டது. இன்றைக்கு வேலை
போய்விட்டது என்றால் அவர்கள் தெருக்களிலே நின்று கொண்
டிருக்கிறார்கள். நீங்கள் புதிதாக வேலை தராவிட்டாலும் இருக்
கின்றவர்களை வேலையிலிருந்து வெளியேற்றாமலிருந்தால்
போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழு 3 மாதத்திற்கு
ஒரு முறை கூடினால் நல்லது. 1978ஆம் ஆண்டு சனவரி திங்கள்
25ஆம் நாளில் கூடியது. அது தான் கடைசி கூட்டம். வருகிற
மேயிலே கூடும் என்று தகவல் சொல்லப்படுகிறது. இவ்வளவு
காலதாமதமாக கூட்டப்படுகிறது. 1978 ஆம் ஆண்டு சனவரி
திங்கள் 25 ஆம் நாளில் கூட்டப்பட்ட கூட்டத்திலே கருப்பு
மசோதாவை வாங்கவேண்டுமென்று காட்டூர் கோபால் தீர்மானம்
கொடுத்தார், கே.டி.கே., கே. எஸ். நாராயணன், நல்லசிவம்,
இராமச்சந்திரன் ஆகியோர் அதை ஆதரித்தார்கள். ஆனால் வலி
யுறுத்தவேண்டாம் என்று கூறியிருக்கிறீர்கள், ஏன் கருப்பு மசோ
தாவை வாபஸ் பெறவில்லை, தொழிலாளர் வர்க்கத்திற்கு
எதிரான உங்கள் கருப்பு மசோதா கருவிலேயே சிதைந்து விச்த்
தது. தொழிலாளர் வர்க்கத்தின் சாதனையால் கருப்பு மசோதா
என்ன ஆனது என்று உங்களுக்குத் தெரியும்.

மத்திய அரசு இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் பில் கொண்டு
வருகிறது, அதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன? கேரளா
விலே சட்டமன்றத்திலே அதைக் கண்டித்து தீர்மானம் நிறை
வேற்றப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வேறு மசோதாவைக்
கொண்டுவந்தால் நீங்கள் ஒரு கருப்பு மசோதாவைக் கொண்டு
வருகிறீர்கள். மத்திய அரசினுடைய சட்டத்தைக் கண்டித்து
எதிர்த்து இங்கே தீர்மானம் நிறைவேற்றபட வேண்டும்.
டெல்லியிலே 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ஆம்

1979 ஏப்ரல் 19] [திரு. மு. அம்பிகாபதி]

நாளில் மாபெரும் பேரணி தொழிலாளர் வர்க்கம் தொழிலாளர்
உறவு மசோதாவை எதிர்த்து ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி,
எச்.எம்.எஸ்., யு.பி.யு.டி., டி.எம்.கே. சங்கம் உட்பட மாபெரும்
பேரணி நடந்தது.

[பிற்பகல் 12—10]

உங்களுக்குச் சங்கம் இருப்பதாகச் சொல்கிறீர்களே, ஏ.டி.
எம்.கே. சங்கம்' அது ஏன் அங்கே வரவில்லை? தொழில் உறவு
மசோதாவை எதிர்ப்பதில் உங்களுக்கு அக்கறை இல்லை. நீங்கள்
தொழிலாளர்களுக்கு எதிராக இருக்கிறீர்கள் என்பதுதான்
இதனுடைய அடையாளம் ஆகும். டெல்லிக்கு வர
உங்களுக்கு நேரம் கிடையாது. அந்தப் பேரணியிலே
கலந்து கொள்ள வேண்டுமென்பதிலே உங்களுக்கு ஆவல் இல்லை
என்பதைத் தான் இது எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் பாம்புக்குத்
தலையைக் காட்டுகிறீர்கள் மீனுக்கு வாலைக் காட்டுகிறீர்கள்.
மத்திய அரசு கொண்டு வந்த பில்லை எதிர்த்து மோதுவதற்கு
உங்களுக்கு வலுவில்லை. ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்த
அவையிலேயே கொண்டு வருவதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்
பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல் நடத்தப்படு
கிறது. நம் நாட்டு மக்கள் தொகை 66 கோடி. வேலை செய்து
வாழ்வோர் 26 கோடி, சுய சம்பாத்தியம், அதாவது டாக்டர்கள்,
வக்கீல்கள் போன்றவர்கள் 16 கோடி, சம்பளம் வாங்குவோர்
10 கோடி. இந்த 10 கோடியில் தொழிலாளர்கள் கூட்டாக
வேலை செய்வோர் 2½ கோடி. இந்த இரண்டரை கோடியைச்
சிதற அடித்தால் அனைத்துப் பகுதியையும் ஒடுக்கலாம் என்று
மத்திய அரசு கருதுகிறது. நீங்களும் எண்ணுகிறீர்கள். எனவே
தான் ஐ.ஆர். பில்லை எதிர்க்க உங்களுக்கு மனம் வரவில்லை.

இன்றைக்குப் பல சட்டங்கள் முறையாக அமல்படுத்தப்பட
வில்லை. குறிப்பாக இந்த மாநிலத்தில் நம்முடைய அறிக்கையில்
இருப்பதைப்போல, 6,61,245 தொழிலாளர்கள், 10,541 நிறு
வனங்கள் உள்ளதாக அறிவித்திருக்கிறீர்கள். 1977 ஆம் ஆண்டுக்
கான கதவடைப்புகள் உள்ளிட்ட வேலை நிறுத்தங்கள் 298,
1978 ஆம் ஆண்டில் அது 378 ஆக உயர்ந்து உள்ளது. வேலை
நிறுத்தங்களும், கதவடைப்புகளும், உயர்ந்துள்ளது என்றால்
காரணம் என்ன? இது தொழில் அமைதி குலைந்துள்ளது
என்பதைக் காட்டவில்லையா? முதலாளிகள் தொழிலாளர்
களின் மீது தாக்குதலை நடத்துகிறார்கள். வளர்ந்து வரும்
நாடுகளில் இன்றைக்கு இப்படிப்பட்ட தாக்குதல் கடுமையாக
உள்ளது. அதைப்போல துணி ஆலை பொறியியல் இவற்றில்
1977 ஆம் ஆண்டில் 111 என்றால், 1978-இல் 153, அதைப்
போல பிற விவரங்களும் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. தொழில்

துறையில் தகராறு அதிகமாக உள்ளது என்பதற்கு உதாரண
மாகத்தான் இவ்வளவும் இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்
காட்ட விரும்புகிறேன்.

1977 ஆம் ஆண்டில் 6,775 தகராறுகள் இருந்தது, 1978
ஆம் ஆண்டில் 8,209 ஆக உயர்ந்துள்ளது. எனவே தொழிற்
சாலைகளில் அமைதி குலைவதற்குக் காரணங்களை இன்றைக்கு
உள்ளாக்கி உள்ளது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல வடிகட்டும் குழு — ஸ்கீரினிங் கமிட்டி —
அந்தக் குழுவில் கூட்டுறவுத் துறையில், பொதுத் துறைகளில்
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு அரசுக்கு எழுதினால் இந்தக்
கமிட்டிக்கு அது போகும். அங்கே முதலாளியைச் சேர்ந்தவர்கள்
இருக்கலாம் தொழில் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்க
லாம், ஆனால் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இல்லாத
இந்தக் கமிட்டியை — ஸ்கீரினிங் கமிட்டியை, வடி கட்டும் குழு
வைக் கலைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்பு
மிகு அமைச்சரவர்கள் கூறுவார்கள், கமிட்டி இருந்தால் என்ன,
ரெஃபரென்ஸ் கொடுப்பது அங்குதானே என்று கேட்பார்கள்.
ரெபரன்ஸ் கொடுக்க ஒரு அமைச்சரின் தயவு தேவை. எனவே,
இந்த ஸ்கீரினிங் கமிட்டியைக் கலைக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல விபத்துக்களைப் பொறுத்தவரையில் 1978 ஆம்
ஆண்டு அதிகரித்திருக்கிறது. 1977 ஆம் ஆண்டு 27,965 விபத்
துக்கள், மரணம் 28. ஆனால் 1978 ஆம் ஆண்டு விபத்துக்கள்
30,507, மரணம் 39. எனவே 1977-க்கும் 1978-க்கும்
பார்க்கும்போழுது விபத்துக்களும் மரணமும் அதிகரித்திருக்கிறது
என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல், ' உழைப்போர் உலகம் ' என்கிற ஒரு பத்திரிகை
வருகிறது. ஆசிரியருக்கு என்னுடைய வாழ்த்துக்கள், நன்றாக
இருக்கிறது, விவரங்கள் இருக்கிறது. அனைத்துப் பதிவு செய்த
சங்கங்களுக்கும் முதல் பிரதியை இலவசமாக அனுப்புங்கள்.
அடுத்து வருகிற பத்திரிகைகளுக்கு சந்தா அனுப்புங்கள் என்று
எழுதுங்கள். " உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே "
என்பது முதுமொழி. அதில் கூறி இருக்கிறார்கள், ' உலகம்
என்பது உழைப்போர் மாட்டே ' — புது மொழி என்று கூறி
இருக்கிறார்கள் சிறப்பாக. " எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு " என்றானே பாரதிதாசன்.
அதையே " எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத உழைப்
பேயென்று சங்கே முழங்கு " என்று மாற்றுவோம். இந்த உலகம்
உழைப்பவர்களின் அற்புத சக்தியால் வளர்கிறது என்ற முறையில்
....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்பொழுது
மாண்புமிகு அம்பிகாபதி பாடிய பாட்டை எழுதிக் கொடுத்தால்
அடுத்த ' உழைப்போர் உலகம் ' இதழில் வெளியிட நான் ஏற்
பாடு செய்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : எனவே இந்த உழைக்கின்ற மக்
களுடைய உலகமாக இது உண்மையிலே மாற்றப்பட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் குடிசை மாற்று வாரியம் கட்டியிருக்கிற
4 அடுக்கு 5 அடுக்கு வீடுகளில் தண்ணீர் வசதி எலெக்ட்ரிக்
வசதி இரண்டும் செய்து கொடுத்து நீங்கள் வாடகையை உயர்த்
தினால் கூடப் பரவாயில்லை என்று நான் கூறிக்கொள்கிறேன்.
4 அடுக்கு 5 அடுக்குக்குத் தண்ணீர் தூக்கிக் கொண்டு ஏறமுடியாத
நிலைமையிருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தைச் சேர்ந்த அதி
காரிகளும் அமைச்சர்களும் அதைக் கவனித்துக் கொள்ள
வேண்டும்.

அடுத்து அண்மையில் அறிவிக்கப்பட்ட மூன்றாவது ஊதியக்
குழுவின் முடிவுகளின் அடிப்படையில் அடிப்படை சம்பளம். பஞ்
சப்படி (பேசிக் பே, டியர்னஸ் அலவன்ஸ்) இவையிரண்டும்
இணைக்கப்பட்டதால் என்.ஜி.ஓக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்
கள். அரசு வீடுகளில் குடியிருக்கிற என்.ஜி.ஓக்களது அடிப்படை
ஊதியத்தின் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
தற்போது மூன்றாவது ஊதியக் குழுவின் முடிவுகளால் அடிப்
படை சம்பளமும் பஞ்சப்படியும் சேர்க்கப் பட்டிருப்பதால்
அடிப்படை சம்பளம் உயர்த்தப்பட்டு அந்த ஊதிய அடிப்படை
யில் வீட்டு வசதி வாரிய வீடுகளில் குடியிருக்கும் என்.ஜி.ஓக்கள்
மற்றும் பலரிடமிருந்து அதிக வாடகை வசூலிக்கப்பட்டிருக்கிறது.
எனவே இவை கவனித்து வாடகையைக் குறைக்க அரசு தகுந்த
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்
கிறேன்; வணக்கம்.

*திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, குடிநீர்,
பொதுச் சுகாதாரம் மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய
காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்பு
கிறேன். 200 ஜனத் தொகைக்கு மேலுள்ள கிராமங்களுக்கு
மேல் நிலைத் தண்ணீர் தொட்டி அவசியம் தேவை. அதேபோல்
100-லிருந்து 200 ஜனத் தொகைக்கு உட்பட்ட கிராமங்களிலே
தரை மட்ட நீர்த் தொட்டி கட்டிக் கொடுக்கவேண்டுமென்று
இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால். ஏழை எளிய
மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிற மக்கள் காலை 6 மணிக்குக்
கூலி வேலைக்குப் போகிறார்கள். மாலை 6 மணிக்குத்
தான் வீடு திரும்புகிறார்கள். அப்பொழுது. தண்ணீர் இல்லாமல்

[திரு. மெ. ஆண்டிஅம்பலம்] [1979 ஏப்ரல 19

சிரமப்படுகிறார்கள். ஏனென்றால் 6 மணிக்குப் பிறகு. வெகுதூரம் சென்று தண்ணீர் எடுந்து வர அவர்களால் முடிய வில்லை. ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால். 5. 6 ஊர் கள் இருக்கின்றன. அதில். 2. 3 ஊர்களில்தான் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியோ. தரைமட்ட நீர்த்தொட்டியோ கட்டப் பட்டிருக்கிறது. மற்ற ஊர்களில் ஏதுவும் இல்லை. ஆகவே. சாயந் திரம் 6 மணிக்கு வீடு திரும்பி. வெளியிடங்களுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வரமுடியவில்லை........

அடுத்து, எனது நத்தம் தொகுதியிலே, சி. எஸ். பைனான்ஸ் மினிஸ்டராக இருந்தபொழுது, ரூ. 20 இலட்சத்திலே தண்ணீர் தொட்டிக் கட்டிக் கொடுத்தார். ரூ. 20 இலட்சம் ஆகிறது. இன்னும் வேலை முடியவில்லை. ரூ. 20 இலட்சத்திற்கு ரூ. 1 இலட்சம் வட்டி வருகிறது. ரூ. 21 இலட்சத்திற்கு அந்த மக்களால் வரி கட்ட முடியவில்லை. ஆகவே, தண்ணீர் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

அதை இந்த அரசு மானியமாகக் கொடுக்க வேண்டும். 0 இலட்சம் ரூபாய்க்கு 1 இலட்சம் ரூபாய் வட்டி கிடைக் கிறது. வீட்டுவரி கூட கட்ட முடியாத சூழ்நிலையில், இதை வசூல் பண்ண வேண்டும் என்று சொன்னால் எப்படி அவர்களால் முடியும். அரசாங்கத்திலிருந்து அதை மானியமாகக் கொடுக்க வேண்டும். சென்னை மதுரை திருச்சி ஆகிய இடங்களில் தண்ணீர் வரி கிடையாது. ஆனால் பஞ்சாயத்துக்களுக்கு தண்ணீர் வரி போட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது குறிப்பாக கிராமங்களில் சுகாதாரமுறை கேடுகள் இருக்கின்றன. அவைகளை நீக்க வேண்டும். அங்குள்ள பெண்கள் மல ஜலம் கழிப்பதற்கு ஒரு கக்கூஸ் கட்ட வேண்டும். வெகுதூரம் போகிறார்கள். பெண்களால் போக முடிவதில்லை ஆண்கள் ரோடுகளிலும், பாதை ஓரங்களிலும் மல ஜலம் கழிக்கிறார்கள். அதனால் அப்படிப்பட்ட கிராமங்களுக்கு ஒரு கழிவு நீர் அறை கட்டிக் கொடுத்து, அங்கு சுத்தம் செய்பவரை போட்டு, அந்த கிராமங்களில் சுகாதார முறையை காப்பாற்றி, நோய்கள் வரா மல் தடுத்து நிறுத்த வேண்டியது நம்முடைய அரசாங்கத்தின் கடமை. அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்களுக்கும் குக்கிராமங்கள், 5, 6 இருக்கின்றன. எல்லா கிராமங்களுக்கும் சுகாதாரக் குறைவி னால், குப்பை கூளங்கள் அதிகமாக இருப்பதினால், சுகாதார முறை சீர்கேடாக அமைகிறது. எனவே, ஒவ்வொரு கிராமத்திற்

1979 ஏப்ரல் 19] [திரு. மெ. ஆண்டிஅம்லம்ப.]

கும் ஒரு ஸ்வீப்பர்களைப் போட்டு கைவண்டிகள் மூலம் குப்பை களை அப்புறப்படுத்தி கிராமங்கள சுத்தமாக, சுகாதாரமாக, நோய்கள் இல்லாமல் இருப்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சானார்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த வேம்பார்பட்டி, பஞ்சாயத்துக்கு குடி நீர் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமாக 25—11—74 அன்று சுமார் 4 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து வேலைகள் துவங்கப்படுவதாக இருந்தது. அதற்கு வடிகால் வாரியத்தின் பரி சோதனை செலவாக ரூ. 10,000 அரசு அனுமதித்தது. அந்த 10,000 ரூபாய் வேம்பார் பட்டி பஞ்சாயத்து மூலம் கட்டப்பட் டுள்ளது என்றும் வேலை இன்னும் துவங்கப்படவில்லை என்றும் அறியப்படுகிறது. அங்கு ஹைஸ்கூலும், மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. ஆகவே, இந்த திட்டத்தை சீக்கிரமாக துவக்கி முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேம்பார் பட்டி பஞ்சாயத்து தீர்மானம் போட்டது. ரூபாய் 4 இலட்சத்திற்கு தீர்மானம் போட்டது. அதனால் கோபால் பட்டியை விட்டுவிட்டு வேம்பார்பட்டிக்கு மட்டும் 71 ஆயிரத்திற்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக எஸ்டிமேட் போடப்பட் டுள்ளதாக தெரிகிறது. சானார்பட்டி யூனியனிலே பெரிய பஞ் சாயத்து வேம்பார்பட்டிதான். 4 இலட்ச ரூபாய் மதிப் பீட்டில் கோபால்பட்டியையும் இணைத்து அதற்குள்ள பங்குத் தொகையை கட்ட முன் வருகிறார்கள். சானார்பட்டி பஞ்சா யத்து கனவாய் பட்டி, இந்த கிராமங்களிலும் தண்ணீர் டாங்கி கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர் களிடத்திலே மனு கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் 2 தான். முடித்து விடுகிறேன். ஆகவே இந்த கிராமங்களுக்கு தண்ணீர் டாங்க் கட்டிக் கொடுத்து குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்து, தண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

நடமாடும் மருத்துவ மனை இருக்கிறது. நத்தம் கிராமத்தில், அதற்கான வண்டி-வேன் வசதி சரியாக இல்லை. வண்டி ஒரு பக்கம் போகிறது. சக்கரங்கள் வேறு பக்கம் போகிறது. இரண் டும் தனித்தனியாக வருகிறது. ஆகவே அந்த வண்டிகளை மாற்றி புது வண்டிகளாக மாற்றிக் கொடுத்து அங்குள்ள ஏழை கிராம மக்களுடைய, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உதவ அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மெ. ஆண்டிஅம்பலம்] [1979 ஏப்ரல் 19

அடுத்து நத்தம் தொகுதியில கோசு குரிச்சி என்னும் கிராமத்தில்
முஸ்லீம் மக்கள் அதிகமாக உள்ளனர். அவர்களுடைய பெண்கள்
கோஷா ஸ்திரிகள் ஆஸ்பத்திரிக்கு போக வேண்டும் என்றால் பத்து
மைலுக்கு அப்பால் உள்ள நத்தம் ஆஸ்பத்திரிக்குத்தான் செல்ல
வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு தனியாக ஒரு ஹெல்த்
சென்டர் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

நத்தம் தொகுதியிலே காரைசநகர், பண்ணைவார்ப்பட்டி,
சானார்பட்டி யூனியன் கணவாய்ப்பட்டி ஆகிய கிராமங்களில்
வசிக்கும் அரிசனப் பெருங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க
வேண்டும். அவர்களும் மனு கொடுத்திருக்கிறார்கள் என்று
நினைக்கிறேன். இந்த கிராமங்களில் உள்ள அரிசன மக்களுக்கு
மானியமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

நத்தம் நகர பஞ்சாயத்து, அது தாலூகாவாக ஆக்கப்பட்டது.
அங்குள்ள ஜனத் தொகை கூடுதலாக உள்ளது. அதனால் ஸ்வீப்
பர்கள் மற்றும் துப்புறவாளர்கள் போதுமானதாக இல்லை.
அங்கு சுகாதார வசதியை முன்னிட்டு பொது ஜனங்களின் நன்
மையைக் கருதி கூடுதலாக ஸ்வீப்பர்கள் மற்றும் துப்புறவாளர்
களை அதிகப்படுத்தி சுகாதார வசதிக்காக நத்தம் நகரை அபி
விருத்தி செய்ய வேண்டுமாய் கேட்டுக் சொள்கிறேன். புதுக்
கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்காவில் காட்டுப்
பார் எனமேட்டில் ஒரு பெரிய குடி-தண்ணீர் திட்டம் தீட்டி
செயல்படுத்தினால் பல கிராமங்களில் குடிநீர் வசதி ஏற்பட்டு,
குடிநீர் பஞ்சம் தீரும்.

அடுத்து கிராமப்புற வீட்டு வசதி திட்டம் தற்பொழுது மாற்
றப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஆனால் தனி வீடுகள் அமைக்கும்
திட்டத்தை நல்ல முறையில செயல்படுத்தப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் மிகவும்
பின்தங்கிய மாவட்டம். அதற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு
செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்ற, சட்ட மேலவை உறுப்பினர்கள் சுமார் 300
பேர்கள் உள்ளனர். அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்திட்டத்
தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுத்தால் நாங்கள் நிம்மதியாக
எங்கள் சட்ட மன்ற பணிகளை செய்ய முடியும். அதை தயவு
செய்து நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 19] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

அடுத்து குளித்தலை தொகுதி. அந்தத் தொகுதியில் மணப்
பாறை-மணப்பாறையா, எமப்பாறையா என்று சொல்வார்கள்.
அங்கே அப்படி தண்ணீர் பஞ்சம். அங்கே குடிதண்ணீர் வசதி
செய்துக் கொடுக்க வேண்டும் என்றால் காவேரியில் இருந்து
தண்ணீர் எடுத்துக் கொண்டு வர வேண்டும். அந்த மக்களுடைய
தண்ணீர் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.
வணக்கம்.

திரு. அ. பாலுச்சாமி : மதிப்பிற்குரிய மாமன்ற தற்காலிகத்
தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற மானியக் கோரிக்கை மீது
நான் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க அனுமதி தந்தமைக்கு
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசிய மாற்றுக்
கட்சிகாரர்கள் பேசுகின்ற நேரத்தில் முதலாளிகளை தட்டிக்
கொடுத்து தொழிலாளர்களை நசுக்கி விட்டுக்கொண்டு இருக்கி
றார்கள் என்று மாற்றுக் கட்சிக்காரர்க்கள் பேசினார்கள். ஆனால்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அமைச்ச
ரவையை நடத்திக் கொண்டு இருக்கும் புரட்சித் தலைவர் அவர்
கள் இன்றும் சரி, என்றும் சரி, முதலாளிகளுக்கு துணை போன
வர் இல்லை என்றும், அந்தப் பாடத்தை பேரறிஞர் அண்ணா
அவர்கள் கற்றுக்கொடுக்கவில்லை என்பதையும் இந்த மாமன்றத்
தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். புரட்
சித் தலைவர் அவர்கள் முதலாளியாக இருந்தாலும் சரி, தொழி
லாளியாக இருந்தாலும் சரி யார் குற்றம் செய்தாலும் அதைத்
தட்டிக்கேட்டு இன்று ஒரு சரித்திர நாயகனாக விளங்கிக் கொண்டு
இருக்கிறார் என்பதை இந்த நாடு அறிந்து இருக்கிறது என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்று புரட்சித்
தலைவர் நல்லதொரு ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்.
புரட்சித் தலைவரின் அன்பு பெற்று இருக்கிற அமைச்சர் அவர்கள்
தொழிலாளி வர்க்கத்தை காத்துக்கொண்டு இருக்கிறார். புரட்சித்
தலைவர் அவர்கள் கிராமப் புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய
மக்களுக்கும் குடிநீர் பிரச்சினையைப் போக்க வேண்டும் என்றும்,
தொழிலாளர்களுக்கு மேலும் வேலை தேடி தவித்துக்கொண்டு
இருக்கும் சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்றும் தொழிலாளர்
களுக்கு நல்ல பாதுகாப்பு தரவேண்டும் என்கிற வகையில் தொழி
லாளர் நல அமைச்சராக ஒரு நல்ல அமைச்சரை நியமித்து இருக்
கிறார் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதை இந்த நாடும் அறிந்து இருக்கிறது.

அதே நேரத்தில் என்னுடைய நிலக்கோட்டை தொகுதி மிக
வும் வறட்சியான தொகுதி. மேலூர் பகுதியில் கூட்டுறவு சர்க்
கரை தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அதே
போல் ஒன்று நிலக்கோட்டையிலும் ஆரம்பிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்த வரையில், சுதந்திரம்
அடைந்து இன்றைந்கு 32 ஆண்டுகள் ஆனபின்பும் சுகாதாரமாக
குடிநீர் இல்லாமல் மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட கிராமக்களில் குடிநீர் பிரச்னையைப் போக்க
வேண்டும் என்று புரட்சித் தலைவர் ஒரு நல்ல எண்ணத்தோடு,
குடிநீர் பிரச்னையால் தவித்து கொண்டு இருக்கும் தொழிலாளர்
களின் அவல நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காக கிராமப்
புறங்கள் அனைத்திலும் குடிநீர் திட்டத்தை ஏற்படுத்தி, அந்த
குடிநீர் திட்டமானது நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டும்
என்ற நோக்கத்தோடுதான் இன்று வாரியங்கள் மூலமாக அந்தத்
திட்டங்களை நிறைவேற்றிவருகிறார்கள். அதற்காக புரட்சித்
தலைவர் அவர்களுககு என் நன்றியைத தெரிவித்துக் கொள்
கிறேன்.

என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதியில், நிலக்கோட்டை
பஞ்சாயத்து யூனியனுக்கும், வத்தலகுண்டு பஞ்சாயத்து யூனிய
னுக்கும் இடையே உள்ள பகுதிகளிலும் குடிநீர் வசதி ஏற்படுத்து
வதற்கு, மேல் நிலை தொட்டி கட்டி, நல்ல திட்டங்களை அமைச்
சர் அவர்கள் ஏற்படுத்தவேண்டும். அந்தப் பகுதியில் மழை
பெய்தாலும் தண்ணீர் தேங்குவது இல்லை. ஆகவே அதைச்
செய்துதர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டி
விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய நிலக்கோட்டை தொகுதியைப்
பொறுத்த வரையில், கிராமப்புறங்களில் மக்கள் அதிகமாக வாழ்
கிறார்கள். அவர்கள் வீடுகள் கூட இல்லாமல் வாழ்கிறார்கள்.
நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில் புரட்சித் தலைவர்
அவர்கள் ஒரு 5 ஆண்டு காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்ட
வேண்டும் என்று தீர்மானித்து இருக்கிற காரணத்தால், மிக
வும் தீவிரமாக அதில் செயல்பட்டு, அந்தத் திட்டத்தை எங்கள்
பகுதியிலும் செயலாற்றி, கிராமப் புறத்தில் உள்ள ஏழை எளிய
மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கின்றேன்.

மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் முதலாளிக்கும், தொழி
லாளிக்கும் முடிச்சுப்போட்டு, அதன் மூலம் ஆட்சி நடத்த
வேண்டும் என்று நினைக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள்
தொழிலாளர் பிரச்னையில் நல்ல கவனம் செலுத்தி, அதற்காக
அவர்கள் நலன் காக்க ஒரு அமைச்சரை நியமித்து, அதன் மூலம்

அவர்களுக்கு நன்மை செய்து, இன்றைக்கு ஒரு சரித்திர நாய
கனாக புரட்சித் தலைவர் காணப்படுகிற காரணத்தால் அனை
வரும் நல்லதொரு எண்ணத்தோடு நல்ல நோக்கத்தோடு
ஒத்துழைத்து, அமைச்சர் அவர்களும் திட்டங்களைத் தீட்டி அதன்
மூலம் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு தந்து கொண்டு இருக்
கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இத்துடன் என் சிற்றுரையை
முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12–30]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாற்றுத் தலைவரவர்களே,
இன்றையதினம் தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதி வாரி
யம், பொதுச்சுகாதாரத்துறை ஆகிய மானியக் கோரிக்கை
களின் மீது ஒருசில வார்த்தைகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்
தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய தமிழகத்தில இருக்கின்ற
தொழிற்சங்கங்கலில் நெடுங்காலமாகப் பணிபுரிந்த, ஒரு பழம்
பெரும் தொழிற்சங்கத் தலைவராக இருந்து பல போராட்டங்
களை நடத்தி அதன்மூலம் தொழிலாளர்களுக்குப் பல உரிமை
களையும் சலுகைகளையும் வாங்கிக்கொடுத்த ஒருவர்தான்
இன்றைக்கு அந்தத் துறையை நிர்வகித்து வருகிறார் என்று
எண்ணும்போது உண்மையிலேயே இந்தத்துறையில் அவர் மிக
வும் திறமையாக செயல்பட்டு வருகிறார் என்பதில் எந்தவித
மான ஐய்யமுமில்லை. ஆனால் அதே நேரத்தில், அதாவது தொழி
லாளர் நலத் தலைவராக இருக்கக்கூடிய நேரத்தில் அதிலே
உள்ள சில தவறுகளை சுட்டிக்காட்டுவது தவறில்லை என்று
கருதுகிறேன். ஆகவே அப்படி சுட்டிக்காட்டப்படுகிற தவறு
களை, தொழிலாளர்கள் படக்கூடிய இன்னல்களைக் கவனிக்க
வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய சில தனியார்
ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் தொழிலதிபர்கள்
போட்ட மூலதனம் 10 சதவீதம் கூட இருக்கவில்லை. ஆனால்
அதேநேரத்தில அவர்கள் சிப்காட், டி.அய்.சி., மத்திய அரசு,
ரிசர்வ் பாங்க் போன்றவற்றிடம் இருந்து மட்டுமல்லாமல்
பொதுமக்களின் பங்குத்தொகையாகவும் ஏராளமான தொகை
யைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் தனியார் நிறு
வனங்களின் கணக்குகளை சரி பார்ப்பதற்கு ஆடிட்டர்களை
அனுப்புகின்ற சூழ்நிலையில் தனிப்பட்ட ஆடிட்டர்கள் அந்தக்
கணக்குகளை பரிசீலனை செய்கின்றனர். இதன் காரணமாக
அந்தத் தொழிற்சாலைகளின் உண்மையான நிலை பரிசீலிக்கப்
படாமல் உண்மையான கணக்கு கிடைப்பதில்லை. அதனால்
அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழி
லாளர்களுக்கு லாபத்திலே சரியான பங்குகள் கொடுக்கப்படாமல்

மறைக்கப்படுகின்றன. ஆகவே அரசாங்கத்தினுடைய
உதவி பெறக்கூடிய எந்த ஒரு நிறுவனமாக இருந்த போதிலும்
அதில் அரசாங்கத்தினுடைய ஆடிட்டர்களைத்தான் நியமிக்க
வேண்டும் என்றும் அதன்மூலம் அந்த வரவு செலவுக் கணக்கு
ஒழுங்காகப் பரிபாலிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்
கிறேன்.

கோயம்புத்தூர் போன்ற இடங்களில் சில தனியார் நிறு
வனங்கள், அங்கே வேலை செய்யக்கூடிய பெண்கள் தங்கள்
ஆடைகளை முழங்காலுக்கு மேல்தான் அணிய வேண்டும் என்று
வற்புறுத்துகிறார்கள். ஆனால் அந்தப் பெண்கள் லேபர் கோர்ட்
டுக்குச் சென்று முறையிட்ட பின்னர் அது வற்புறுத்தப்பட
வில்லை. இதைச் சொல்வது சிரிப்பதற்காகச் சொல்ல வில்லை,
சிந்தித்துப்பார்ப்பதற்காகத்தான் சொல்கிறேன். பெண்கள்
சிறுமைப்படுத்தப் படக்கூடாது. சிறுமைப்படுத்தப்படக்கூடிய
காரியங்களை அனுமதிக்கக்கூடாது (குறுக்கீடு).

அடுத்து பல தனியார் நிறுவனங்கள் ரெடிமேட் ஆடைகள் தயா
ரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற சில பெரிய பெரிய
நிறுவனங்கள் இருக்கின்றன. அங்கே ஏராளமான பேர் வேலை
செய்கிறார்கள். அவர்களுக்கு இந்த லேபர் ஆக்ட் அமலாக்கப்
படுவதில்லை. இதை ஏற்கெனவே கடந்த இரண்டு மூன்றாண்டு
களுக்கு முன்பு இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் அவர்கள்
எக்ஸாம் செய்து ஒரு அறிக்கையைக்கூட அரசுக்குக் கொடுத்
திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்களுக்கு அந்த லேபர்
ஆக்ட் அமல்படுத்தப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு சென்னையிலே உள்ள பலதனியார்
நிறுவனங்களில் ஏராளமான பெண்கள் வேலை செய்கிறார்கள்.
உதாரணமாக இன்றைக்கு கிண்டியிலுள்ள இங்லீஷ் எலக்ட்ரிக்
கம்பெனி, லண்டன் ரப்பர் கம்பெனி, டி.டி.கே. ஸ்தாபனம்
போன்ற கம்பெனிகளில் பல பெண்கள் பணிபுரிகிறார்கள். ஆனால்
நம்முடைய தமிழகத்தில் உள்ள லேபர் ஆபீஸர்களில் ஒரு பெண்
மணி கூட நியமிக்கப்படவில்லை. இன்றைக்கு லேபர் ஆபீஸராக
இருக்கக்கூடியவர்கள் எல்லாருமே ஆண்கள். ஆகவே பெண்
களின் நலனைக் கருதக்கூடிய அளவில் ஏன் ஒரு பெண் லேபர்
ஆபீஸர் ஒருவரை நியமிக்கக்கூடாது? ஆகவே அப்படி நிய
மிக்கவேண்டும் என்ற என்னுடைய கருத்தை இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

சென்னை சோட்டூர்புரத்தில் இன்றைக்கு தமிழ்நாடு குடிசை
மாற்றுவாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட குடியிருப்புகள் 1976
ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக சேதம்
அடைந்து புவைகளை மீண்டும் மராமத்து செய்வதற்காக 1976-ம்

ஆண்டிலே திரு. கே. கே. நம்பியார் அவர்கள் தலைமையில்
ஒரு உயர் மட்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு 1977-ம்
ஆண்டு மே மாதத்தில் இந்த அரசுக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்
பித்தது. ஆனால் இதுவரைக்கும் அந்த அறிக்கையின் மீது எந்த
விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மீண்டும் தற்
போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தலைமை பொறி
யாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இப்படி
ஆண்டுக்கு ஆண்டு குழுவை அமைத்துக் கொண்டு போனால் எப்
போது அந்தக் குடியிருப்புகளை மராமத்து செய்யப்போகிறார்கள்.
இன்றைக்கு தமிழகத்தில் வீட்டு வசதி வாரியம் ஏழை மக்களுக்
காக வீடுகட்டிக் கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்
நாட்டில் உள்ள அத்தனை மக்களுக்கும் அந்த வாரியம் வீடு
கட்டிக் கொடுக்க சாத்தியமாகாது. பொருளாதார ரீதியில்
கட்டடம் கட்டுவதற்கான சாமான்கள் விலை ஏற்றத்தின்
காரணமாக அந்தத் திட்டத்தை முழுஅளவில் நிறைவேற்ற
முடியாது. ஆகவே கட்டட நிபுணர்களை கொண்ட குழுவை
அமைத்து எப்படியெல்லாம் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக்
கொடுக்க முடியும் என்பதற்கான ஆலோசனை பெற்று அதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்தினுடைய வீட்டு வசதி
வாரியத்தால் கட்டப்பட்ட கட்டடங்களை மராமத்து செய்
வதன் மூலம் அந்தக் கட்டடங்களுக்கு ஆயுட்காலத்தை நீட்
டிக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சென்னைக்கு எந்த நீர் கொடுக்கப் போகிறார்கள் என்று
தெரியவில்லை. வீராணம் நீரா அல்லது கிருஷ்ணா நீரா என்று
தெரியவில்லை. இன்றைக்கு வீராணத்திலிருந்து தண்ணீர்
கொண்டுவரமுடியாது என்பதனால் அந்தத் திட்டம் கைவிடப்
பட்டதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்திற்காக ரூபாய் 25
கோடி விரயமாக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் அரசாங்கம்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். காலஞ்சென்ற பெரும் தலை
வர் காமராஜ் அவர்கள் தீர்க்க தரிசனமாக கிருஷ்ணா நதியி
லிருந்து தண்ணீர் கொண்டு வரலாம்; அது பொருளாதாரத்
திற்கு நலமாக இருக்கும் என்று கூறினார்கள். அதை அந்த
அரசு சிந்தித்து இருந்தால் சென்னை மக்களுக்கு நலமாக
இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.ஜே. இராமசாமி) :
உங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. இரண்டு
நிமிடம் தருகிறேன். முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலத்
தில் மேட்டூர் அணைத் தண்ணீர் தஞ்சை திருச்சி மாவட்டங்
களுக்கு சென்றாலும் கூட சேலத்திலுள்ள மக்கள் அனுபவிக்க

முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே சேலத்தில் இருந்து
மேய்ச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய ஊர்களுக்கு தண்ணீர்
கிடைக்க குடிநீர் திட்டத்தை தயாரித்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சேலத்திலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள பனை
மரத்துப் பட்டியிலிருந்து குடிநீர் சேலத்திற்கு வருகிறது. இந்தத்
திட்டம் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களால்,
அவர்கள் நகரசபை தலைவராக இருந்த போது 1917-ல் போடப்
பட்ட திட்டம். 60■ 62 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட
திட்டமாகையால் அந்தக் குழாய்கள் பழுதடைந்து விட்டன.
அதனால் நாள் ஒன்றுக்கு 8 லட்சம் காலன் தண் ணீர் கிடைப்
பதற்குப் பதிலாக 2 லட்சம் காலன் தண்ணீர்தான் கிடைக்
கின்றது. 6 லட்சம் காலன் தண்ணீர் வீண்விரையம் ஆகிறது.
அந்தக் குழாய்களைப் புதுப்பிக்கும் திட்டத்தோடு சேலத்தில்
பாதாள சாக்கடைத் திட்டத்தையும் இந்த அரசு அமுலாக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பட்டது) ஆகவே நான் கூறிய இந்தக் கருத்துக்களை எல்லாம்
நமது அமைச்சர் அவர்கள் செவிசாய்த்து இதற்கும் சேர்த்து
பதில் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்
பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறு
கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12–40]

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்
களே. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால்
வைக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு மான்யக் கோரிக்கைகளின்
மீது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். நீண்டகால
மாக தொழிலாளர் தலைவராக இருந்து பணியாற்றியவர்.
இன்றைய தினம் தொழிலாளர் நல அமைச்சர் பதவியை ஏற்
றிருக்கின்ற மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்
இப்போது இரண்டும் கெட்டான் நிலையில் மாட்டிக்
கொண்டு ஒரு சிக்கலில் அமர்ந்து கொண்டிருக்கின்றார் என்று
நான் எண்ணுகிறேன். காரணம் என்னவென்றால் ஏற்கனவே
தொழிலாளர்கள் பால் உள்ள அனுதாபம் ஒருபுறம். இப்போது
முதலாளிகளுடைய தொடர்பு ஒரு பக்கம். ஆக இந்த நிலையில்
இவற்றையெல்லாம் எப்படி செய்வது என்று தெரியாமல் தான்
வகிக்கின்ற தொழிலாளர் நலத்துறையில் ஒரு நிலையான
கொள்கை இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தால் இப்படிப்
பட்ட நிலமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கு கூறிக் கொள்ள
விரும்புகிறேன். விரிவாக இதையெல்லாம் குறிப்பிடவேண்டும்
என்று நான் நினைக்கவில்லை.

பல்வேறு உதாரணங்களை நான் எடுத்துக்கூற முடியும்.
குறிப்பாக கரூர் எல்.ஜி.பி. தொழிற்சாலையில் நடந்த நிகழ்ச்சி
களைப்பற்றி எனக்குமுன் பல நண்பர்கள் விரிவாக எடுத்துக்
கூறியிருக்கிறார்கள் அங்கே அமைதியாக நடைபெற்ற போ
ராட்டத்தின் போது போலீஸ்காரர்கள் எந்த அளவுக்கு அத்து
மீறி செயல்பட்டார்கள். அதன் மீது இந்த அரசு எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் உண்மை
யிலேயே அது வருந்தத்தக்கது என்பதை சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். நியாயமான பிரச்னைகளுக்காக போராட்டங்கள்
நடைபெற்ற போது அமைதியான முறையில் நடைபெற்ற
போது தொழிலாளர்களுக்கு அந்தப் பிரதேச மக்கள் ஆதரவு
கொடுத்ததின் காரணமாக அது பிரதேசப் பிரச்னையாக
மாறிய போதிலும் கூட இந்த அரசு தொழிலாளர்கள் பால்
ஆதரவு காட்டாமல் பிரச்சினையை தீர்ப்பதற்கு காலம் தாழ்த்
தியதோடு மட்டுமில்லாமல் அந்தத் தொழிலாளர்களுக்கு விரோத
மாக சென்றது என்பதை நான் கூற கடமைப்பட்டிருக்கி
றேன்.

அடுத்து டி.வி.எஸ். கம்பெனி நிர்வாகத்தில் கூட கொள்கை
நிரந்தரமாக அமையவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். ஆரம்பத்தில் நியாயமாக நிலைமைகள் எல்லாம்
இருந்து வந்தன. பின்னால் நாட்கள் போகப் போக அந்த
நிர்வாகத்திலுள்ள தொழிலாளர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்
படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது இந்த அரசாங்கத்தின் கொள்
கை எப்படியிருந்தது என்பதையெல்லாம் இந்த நாடு நன்றாக
அறிந்து இருக்கிறது. அதன் பயனாக ஏற்பட்டிருக்கின்ற விளைவு
என்ன என்று சொன்னால் நிர்வாகம் இங்கே இருக்கின்ற,
தொழில்களை எல்லாம் எடுத்துக்கொண்டு போய் வேறு நகரங்
களில் மாற்றி அமைப்பதற்கு (குறுக்கீடு) அப்படியில்லை என்று
அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக நன்றி
கூறிக்கொளகிறேன். ஒருவேளை அப்படி மாற்றக்கூடிய நிலை
மை ஏற்படும் என்று சொன்னால் நிச்சயமாக தொழிலாளர்
களின் நிலைமை, அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்
நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள் என்பதை சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து இம்மாதிரி தனியார்களுக்கு ஒரு நீதியும் அரசு
நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு இன்னொரு நீதியும்
காட்டுவது என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வரு
கிறது. இந்த போக்கு நிச்சயமாக வரவேற்கக் கூடியதல்ல
என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு என்.ஜி.
ஓ.க்கள் அவர்கள் நீண்டகாலமாக தங்கள் கோரிக்கைகளை முன்
வைத்து அதற்காக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்
என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசுக்கு
அவர்களோடு பேசி பிரச்னைகளை தீர்ப்பதற்கு இதுவரையில்

வசதி ஏற்படவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அது
வருந்தத்தக்கது. ஒருவேளை நாளையதினம் முதலமைச்சர்
அவர்களோடு பேசுவதற்கு இருக்கிறார்கள் என்று நினைக்கி
றேன். அவர்களோடு சுமுகமாக பேசி பிரச்னைகளை தீர்க்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. அரசு நிறுவனங்களில் இருக்கின்றசிவில்
சப்ளை கார்ப்பரேஷன், டூரிஸம் கார்ப்பரேஷன், டயரி டெவல
மென்ட் கார்ப்பரேஷன், போன்ற நிறுவனங்களில் பணியாற்று
கின்ற தொழிலாளர்களுக்கு உரிய நீதியை இந்த அரசு வழங்க
வில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கூற விரும்புகிறேன்.
சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் உள்ள தொழிலாளர்களுக்கு மூன்
றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தப்பட
வில்லை என்கின்ற காரணத்திற்காக அவர்கள் நீண்ட நாட்களாக
போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த அரசு
இந்தப் பிரச்னையின் மீது இன்னும் ஒரு தெளிவான முடிவுக்கு
வரவில்லை. அதே போல் டூரிஸம் கார்ப்பரேஷனில் உள்ள
தொழிலாளர்கள் கூட, மிகவும் நியாயமான கோரிக்கைகளை
வைத்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை வைத்து போ
ராட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களில்
பலரை பழி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தொழி
லாளர்களின் நலனை காப்பாற்ற வேண்டும் என்று சொல்லுகின்ற
இந்த அரசு, எந்த அளவுக்கு தனியார் துறை நிறுவனங்களுக்கு
ஒரு நீதியையும், அரசுக்கு ஒரு நீதியையும் கையாளுகிறது என்பதை
நாம் பார்க்க முடிகிறது.

அடுத்து யூனியன் செயல்படுகின்ற முறைகளைப் பார்க்கின்ற
போது, இப்போது நியாயமாக அரசு எந்த தொழில் துறையிலும்,
தனது அதிகாரத்தை பயன்படுத்தி ஆளும் கட்சியைச் சேர்ந்த
சங்கங்களுக்கு வலு தேடிக்கொள்கின்ற முயற்சியில் ஈடுபடுவது
நியாயமாக இராது. ஆனால், இன்றைய தினம், நடைமுறைகளை
பார்க்கின்றபோது, எங்கேயாவது ஒரு தொழிற்சங்கத்தில்—ஒரு
நிறுவனத்தில் ஒரு பிரச்னை ஏற்படுகின்றது என்று சொன்னால்,
அங்கே அரசு தரப்பில் ஒரு யூனியனை ஆரம்பித்து. இது தான்
நல்ல வாய்ப்பு என்று சொல்லி ஏற்கெனவே தொழிலாளர் களுக்
கும் முதலாளிக்கும் ஏற்பட்டிருந்த பிரச்னையில் ஊடுருவி ஏதாவது
இலாபம் தேடுவதற்கு முயற்சிப்பது வரவேற்கத் தக்கதல்ல என்று
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருந்த சங்கங்களோடு
பேச்சுவார்த்தைகள் நடத்தி, பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்
டுமே தவிர, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆளும்
கட்சிக்கு ஒரு யூனியன் அமைப்பது நிச்சயமாக நியாயமா
முறையா என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதா

ரணமாக, சிம்கோ தொழிலாளர்கள் சங்கத்தில் பல பிரச்னைகள் எழுப்பப்பட்டு, பல போராட்டங்கள் நடைபெற்றது. கடைசியாக அரசு எடுத்த................

திரு. இரா. தாமரைக்கனி : மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் ஜேம்ஸ் அவர்கள் இந்த அரசு தொழிலாளர்களுக்கு விரோதமான அரசு என்று சொல்கிறார்கள். இப்போது மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ள இரயில்வே தொழிலாளர்கள் ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிரார்களே, அதை ஆதரிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே இந்த அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைத் தெரிந்து சொன்னால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இதுபோல் பல்வேறு தொழிற்சாலைகளில் இப்படி பிரச்னைகள் ஏற்படும் போதெல்லாம், ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்களே தவிர, இந்தப் பிரச்னைகளை நல்லமுறையிலே தீர்த்து வைத்து; தொழிலாளர்களுக்கு நன்மை செய்து தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் ஏற்கெனவே டெக்ஸ்டைல் மில் தொழிலாளர்களுக்கு இருந்து வந்த அக்ரிமெண்டானது காலாவதியாகி இருக்கின்றது. அதேபோல், சுகர் தொழிற்சாலையிலே உள்ள பணியாளர்களுக்கும் இந்த அக்ரிமெண்ட் முடிவடைந்திருக்கிறது. ஆனால், இதுவரையிலும் புதிய அக்ரிமெண்ட் போடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. ஏற்கெனவே, உள்ள அக்ரிமெண்ட் முடிந்தவுடன் புதிய அக்ரிமெண்ட் நடப்பில் வர வேண்டும். அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் சேலம், கிளாஸ் பாக்டரி, கடந்த ஆண்டு கூட இந்த மன்றத்தில் பல அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினார்கள். ஏறத்தாழ $1\frac{1}{4}$ ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. இதனால் 600 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான குடும்பங்கள் இன்றைக்கு பட்டினி கிடக்கின்றன. இதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் கால்நடையாகவே சென்னைக்கு வந்து, அமைச்சரைக் கண்டு இதற்காக மனு கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்துவதற்கு இந்த அரசு இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், மாண்புமிகு எனது நண்பர்

[திரு. ஜே. ஜேம்ஸ்] 1979 ஏப்ரல் 19]

தாமரைக்கனி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உள்ள
படியே இந்த அரசு தொழிலாளர்கள் நலனில் அக்கறை உள்ள
அரசு என்று கூற முடியுமா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் குரோம்பேட்டைத் தொழிற்சாலை ஏறத்தாழ
9 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு சம்
பளம் கொடுக்கப்படவில்லை. இது இந்தியாவிலேயே ஒரு தனி
சிறந்த ஒரு தொழிற்சாலையாக செயல்பட்டுக் கொண்டிருந்தது.
அரசிடமிருந்து ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் இந்த நிறுவனம்
கடன் பெற்றிருக்கிறது. அரசின் முதலீட்டைப் பெற்று நடத்தக்
கூடிய இந்தத் தொழிற்சாலையிலே ஏறத்தாழ 400 தொழிலாளர்
களுக்கு 9 மாத காலமாக சம்பளம் இல்லாமல் இருக்கின்றார்கள்
என்று சொன்னால், இந்தத் தொழிற்சாலையை அரசு மேற்
கொண்டு நடத்துவதற்குப் பதிலாக, இந்தத் தொழிற்சாலை,
மூடப்பட்டிருப்பது மிகவும் வேதனையாக இருக்கின்றது என்
பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்
கடந்த ஆண்டு வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த வேலை
நிறுத்தம் இப்போது சமரசம் ஏற்பட்டு, மீண்டும் வேலையில்
அமர்த்தப்பட்டார்கள். ஆனால், இன்றைய தினம் அந்தப்,
போராட்டத்திலே கலந்து கொண்ட தொழிலாளர்கள் பழி
வாங்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக, பலர் சென்னை
யிலிருந்து தூத்துக்குடி போன்ற பல்வேறு தூர இடங்களுக்கு
மாற்றப்பட்டிருக்கிறார்கள. அந்தத் தொழிலாளர்கள் மீண்டும்
சென்னைக்கு மாற்றம் அளிக்கப்படாமல் சித்திரவதை செய்யப்
படுகிறார்கள. ஆகவே, இந்த அரசு இனிமேலாவது அவர்கள்
போராட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்பதற்காக பழி வாங்
காமல், அவர்களுக்கு இடமாற்றம் அளிக்க வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

பரவலாக இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் போதுமான மருந்து
கள் இல்லை. அதனால், தொழிலாளர்களுக்கு நல்ல முறையில்
சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற குறைபாடு இருந்து கொண்
டிருக்கிறது. சினிமா தியேட்டர்களில் பணியாற்றுகின்ற தொழி
லாளர்களுக்கு, குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் சினிமா தியேட்
டர்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் பிரச்
சினை நீண்ட நாட்களாக தொழிலாளர் நல இலாகா அதிகாரி
களின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இதுவரை
அதற்கு ஒரு முடிவு ஏற்படவில்லை. அந்த உரிமையாளர்கள்
எந்த நியாயமான சலுகைகளையும் வழங்க முன் வரவில்லை.
இந்த அரசு தயவு கூர்ந்து அவர்கள் பிரச்னையை மேலும் கால
தாமதம் இல்லாமல் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 19 [திரு. ஜே. ஜேம்ஸ்]

எங்கள் மாவட்டத்தில் நாகம்மாள்மில் என்று இருக்கிறது. கடந்த
சில நாட்களாக தொழிலாளர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டு
மென்ற கோரிக்கை வைத்து ஜனதா கட்சித் தொழிலாளர்கள்
உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். முதலாளி இது
வரை செவி சாய்க்கவில்லை. அரசு தேவையான நடவடிக்கை
எடுக்க வேண்டும். அங்கு அரசு ஒரு ரப்பர் பிளாண்டேஷனை
நடத்துகிறது. தனியார் நடத்துகிற பிளாண்டேஷன் நிறுவனங்
களில் 20 சதவீதம் போனஸ் கொடுக்கப்படுகிறது. அரசு நடத்து
கிற பிளாண்டேஷனில் இதுவரை பல கோடிக்கணக்கான ரூபாய்
இலாபம் வந்தும் போனஸ் என்ற இடமே இல்லை. மத்திய
அரசாங்கத்தின் சட்டத்தைக் காட்டி இந்த அரசாங்கம் தப்பித்
துக் கொண்டிருக்கிறது. அரசு போனஸ் என்ற பெயரில் இல்லா
விட்டாலும் எக்ஸ்கிரேஷியா கிராண்ட் என்று சில இடங்களில்
கொடுத்து வருகிறார்கள். அதே போன்று இங்கே பணியாற்று
கின்ற ஊழியர்களுக்கும் அரசு கொடுக்க முன் வரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அங்கே பணியாற்றுகின்ற வாச்சர்களை
அரசு கடைநிலை ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாள் கோரிக்கையாக
அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை அந்தப்
பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. உடனடியாக இதனைத்
தீர்த்து வைக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கு அரசுக்குச் சொந்தமான பாக்டரி இருக்கிறது. அங்கு
போதுமான வேலை இருந்தும்கூட தொழிலாளர்களை நிரந்தர
மான தொழிலாளர்களாக மாற்றுவதற்குப் பதிலாக காஷுவல்
ஒர்க்கர்ஸாக, 14 நாட்கள் வேலை கொடுத்தால் உடனே மூன்று
நாட்கள் பிரேக் கொடுத்து விடுகிறார்கள். இது நியாயமா ?
தனியார் இந்த மாதிரி முறைகளைக் கையாளலாம். சோஷ
லிசத்தைப் பற்றிப் பேசுகிற அரசு இவ்வாறு முன்மாதிரியாக
இருக்கலாமா ? நிச்சயமாக அரசு இந்தக் கொள்கையை மாற்றிக்
கொள்ள வேண்டும். அவர்களுக்கு நிரந்தரமாக வேலை அளிக்க
வேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் அதிகமாக பனையேறும் தொழிலாளர்
கள் இருக்கிறார்கள். பனை வெல்லத்திற்கு விலை இல்லாத
காரணத்தால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கி
றார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும்
முறையில் லேபர் டிப்பார்ட்மெண்ட் இவர்களுக்குச் சட்டம்,
கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஏதோ
கூலி கொடுக்கிறார்கள். சில இடங்களில் முதல் நாள் பதனியை
தொழிலாளி எடுத்துக் கொள்கிறான், மறு நாள் பதனியை மரத்
திற்குச் சொந்தமானவர் எடுத்துக் கொள்கிறார். நெல் பயிரிடும்
குத்தகைதாரர்களுக்கு 60—40 என்ற விகிதம் மாறி 75—25
என்று வந்திருப்பது போல் பனையேறும் தொழிலாளர்களைப்

பொறுத்தும் 75 பங்கு தொழிலாளர்களுக்கும் 25 பங்கு உரிமை
யாளர்களுக்கும் என்ற முறையில் சட்டம் இயற்ற வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மால் முடிகின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
திரத்தால் மால் முடிய தனி நபர்களுக்கு லைசன்ஸ் கொடுத்த இயந்
காரணத்தால் கடலோரங்களில் வசிக்கின்ற ஏழைகள் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை பல்லாயிரக்கணக்கான
ஏழைத் தாய்மார்கள், குழந்தைகள் காட்டேஜ் இண்டஸ்ட்ரிஸ்
என்ற முறையில் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு
நிவாரணம் அளிக்கும் முறையில் இந்த லைசென்ஸ்களை அரசு
வாபஸ் வாங்க வேண்டும். காட்டேஜ் இண்டஸ்ட்ரிசுக்கு ஆதரவு
அளிக்கும் முறையில் இந்தக்காரியங்களைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையில் கன்னியாகுமரி மாவட்டத்தைப்
பொறுத்தமட்டில் இருக்கின்ற விதிமுறைகளை மாற்றவில்லை.
அங்குள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க தண்ணீர் இல்லை
போதுமான மழையிருந்தும் குடி தண்ணீர்ப் பஞ்சம் எல்லாக் கிரா
மங்களிலும் இருக்கிறது. மாங்குடி, வாவரை, உசரவிளை
போன்ற ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டம் செயல்பட
வில்லை.

கருங்கல், கப்பியறை, பேரூராட்சிகளிலே அந்தத் திட்டம்
இனிமேல் தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதையும்
கவனிக்கவேண்டும், வேர்கிளம்பி பேரூராட்சியில் பூவங்கோடு
கிராமத்திலே ஒரு குடிநீர் திட்டம் வேண்டுமென்று ஒரு மனு
அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதையும் பரி
சிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக வீட்டு வசதி, ஏற்கனவே ஜர்னலிஸ்ட்களுக்கு
பீட்டர்ஸ் ரோடிலே 35 வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.
ஆனால் ரிப்போர்ட்டர்களுக்கு இப்போது வீடுகள் கிடைப்ப
தில்லை, அவர்கள் அந்த வகுப்பிலே முக்கியமானவர்களாக இருக்
கிறார்கள், ஆகவே ரிப்போர்ட்டர்களுக்கு வீட்டு வசதி செய்து
கொடுக்க இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அவர்
களுக்கு மேலும் 15,20 வீடுகளை அமைத்துக் கொடுத்தால் அவர்
களுக்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு
அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்
களே, தொழிலாளர் நல மானியத்தின் பேரிலே என்னுடைய
கருத்துக்களைச் சொல்கிறேன். இன்றைக்கு நாட்டிலே தொழி
லில் அமைதி வேண்டும், தொழில் அமைதி இருந்தால் ஒழிய
உற்பத்தி பெருக முடியாது தொழில் அமைதி என்ற பெயரால்

தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறித்துவிடக் கூடாது.
அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் தொழில் அமைதி
இருப்பதற்கான முயற்சியை அரசு ஏற்படுத்தியாகவேண்டும்.

இன்றைக்கு ஒவ்வொரு தொழிற்சாலையிலேயும் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருக்கின்ற காரணத்தால் தொழிற்சங்கங்களுக்குள்ளே போட்டாபோட்டி ஏற்பட்டு அதனால் பல இடங்களிலே தொழில் அமைதியின்மை ஏற்படுகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். தொழிலாளர்களுடைய நலன்கள் பாதிக்கப்படாமல் தொழில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு அமுலாக்கவேண்டும். அப்படி அதை அமலாக்குவதிலே அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இருக்கமுடியாது. முன்னாலே இருந்த தி.மு.க. அரசு இந்த அவையிலே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றாமல் விட்டுவிட்டது. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டால் 100க்கு 100 தொழில் அமைதி வந்துவிடும் என்று நான் சொல்ல வரவில்லை, ஆனால் பெருமளவிற்கு தொழில் அமைதியின்மை குறையும். தொழிற்சங்க போட்டா போட்டிகள் குறையும் என்பது என்னுடைய ஆழ்ந்த கருத்து. அந்த மசோதாவை அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றமுடியாததற்குக் காரணம் அந்தந்த தொழிற்சாலையிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் தான் சங்கத்திற்கு தலைவர்களாக இருக்கலாம் என்று அதிலே ஒரு ஷரத்து இருந்தது, அதனால் நிறைவேற்றமுடியவில்லை. முதலமைச்சர் அவர்கள் கூட அந்த மாதிரியான முறையிலே தொழிற்சாலைகளிலே இருக்கிறவர்கள் தான் தலைவர்களாக இருக்கவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது தவறான கருத்து. அந்தக் கருத்திலே ஒரு மசோதாவைக் கொண்டுவருவதிலே பிரயோஜனம் இல்லை. ஒரு தொழிற்சாலையிலே வேலை செய்கிறவரைத் தான் சங்கத்திற்குத் தலைவராகக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் அது அவர்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களைக் கொண்டுவர முடியாத அளவிற்கு அவர்களுடைய உரிமையைப் பயன்படுத்த முடியாத முறையில் போகும். ஆகவே அந்தத் தலைவரைத் தான் தேர்ந்து எடுக்கவேண்டுமென்று நாம் அவர்களைக் கட்டுப்படுத்துவது சரியல்ல, வெளியார் வருவதைத் தடை செய்யாமல் அந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றப்படுமானால் தொழிலாளர்களுக்கு தகுந்த நன்மையும் தொழிற்சாலைகளிலே அமைதி இருக்கக்கூடிய நிலைமையும் ஏற்படும். சீக்ரட் பேலட் வைத்து அவர்கள் யாரை வேண்டுமானாலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம், தேர்ந்து எடுக்கப்படுகிறவர் தான் மேனேஜ்மெண்டோடு நெகோஷியேட் பண்ணி முடிக்கலாம், வேறு யாரும் செய்ய முடியாது, போட்டி என்பதே வராது. இங்கே பேசிய உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் பேசிய போது உங்கள் மேல் ஒரு

சார்ஜை சொன்னார்கள். ஏ.ஐ.டி.யு.சி.யை உடைத்துத்தான்
ஐ.என்.டி.யு.சி. வந்தது, அப்புறம் காங்கிரஸ் கட்சி ஆட்சி
போய்விட்டது, அதனால் தான் போய்விட்டது என்று சொன்
னார்கள், பின்னாலே டி.எம்.கே.யும் அப்படிச் செய்தார்கள்,
ஆட்சி போனதற்கு அதுதான் காரணம் என்று சொன்னார்கள்.
சி.ஐ.டி.யு. ஆரம்பித்து 9 வருடங்கள் தான் ஆகின்றன, அவர்கள்
தோற்றார்கள், யாரால் தோற்றார்கள் என்று தெரியவில்லை.
நீங்கள் இப்போது தொழிற்சங்கம் ஆரம்பிக்கவேண்டுமென்று
விரும்புகிறீர்கள் என்று அவர்கள் சொன்னார்கள், இருக்கலாம்,
ஆளுங்கட்சியாக இருக்கிறவர்களுக்கு அப்படி ஒரு தனி அமைப்பு
தனக்கு இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கலாம்.
அப்படித்தான் காங்கிரஸ்க்கும் அந்த எண்ணம் இருந்தது. டி.எம்
கே.க்கும் அப்படிப்பட்ட எண்ணம் இருந்தது, உங்களிடத்தி
லேயும் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கலாம்.

(பிற்பகல் 1—00 மணி)]

ஆனால் அந்த எண்ணத்தை நிறைவேற்றும்பொழுது தொழி
லாளர்களின் நலன்கள் பாதிக்கப்படாமல் செய்ய வேண்டும்.
இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி விட்
டால் அந்தக் குற்றச் சாட்டுக்கள் எல்லாம் உங்கள் பேரில்
சொல்ல வேண்டிய அவசியமில்லாமற் போய்விடும் என்பதால்
மாண்புமிகு அமைச்சரவர்கள் தொழிலாளர்கள் பற்றி ரொம்ப
அக்கறை உள்ளவர்கள், தொழிற் சங்கத்திலே இருந்து பணியாற்
றியவர்கள் என்ற முறையில் இந்த மாதிரி சட்டத்தைக்கொண்டு
வந்து நிறைவேற்ற முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன.

சிம்கோ மீட்டர் விஷயமாக 12(3)—ஐ அப்படியே காப்
பாற்றி கூடுமான வரையில், எதிர்த்துப் போராடியவர்களுக்கும்
மனச் சங்கடம் இல்லாமல் நடுநிலையிலே இருந்து செய்த தொழி
லாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்கு நன்றி செலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன், நன்றியைத் தெரிவித்துக் கொள்கி
றேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூட,
அவருடைய கோரிக்கையையும் ஓரளவிற்கு நிறைவேற்றி விட்டு—
முழுதும் நிறைவேற்ற வில்லை என்றாலும், ஓரளவிற்கு நிறை
வேற்றி, 12(3) அக்ரிமெண்ட்டை ரொம்ப நல்ல முறையிலே,
தீர்த்து வைத்த அமைச்சரவைக்கு, குறிப்பாக தொழிலாளர் நல
அமைச்சரவர்களுக்கு எனனுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் மேக்னசைட்டை அரசு எடுத்திருக்
கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால்
அந்த பேக்டரியை ஜாயின்ட் செக்டராக வைத்திருப்பது நல்ல
தல்ல, அதை அரசாங்கமே நடத்த வேண்டும். ஏனென்றால்

மைனிங் நடத்துவதை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்
கிறது, ஆனால் அந்த பேக்டரியை ஜாயின்ட் செக்டராக
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மைனிங்கில் நஷ்டம் வரும்,
இது இலாபம் வரும் ஒன்று, எனவே இரண்டையும் அரசாங்
கமே எடுத்து நடத்த வேண்டும். அரசுப் பணத்தைப் போட்டு
[அவர்கள் கொஞ்சம் போடுகிறார்கள்] அந்த முதலாளி
கையில் கொடுத்துச் செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே,
அதை அரசே எடுத்து நடத்தக்கூடிய முடிவை அரசு எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் கண்ணாடித் தொழிற்சாலையை எடுத்துக் கொண்
டால், அதைப்பற்றி இண்டஸ்ட்ரியில் பேச வேண்டும், இருந்தா
லும் தொழிலாளர் நல அமைச்சரவர்களிடத்தில் பல்வேறு
தடவை சொல்லியிருக்கிறோம், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
திரு. நாராயணன் அவர்களோடு சென்று சொல்லியிருக்கிறோம்.
சுமார் 500 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய அந்தத்
தொழிற்சாலையை மூடிய காரணத்தால் அவர்கள் வாழ வழி
யில்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காந்தி—
காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு
இதில் ரொம்ப இன்டரஸ்ட். அவர்களுக்கும் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி சொல்வதற்கு
முன்னால், இது கிடைத்தால்தானே நன்றி சொல்ல முடியும்.
இந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டால் அமைச்சருக்கு ஐந்து
தடவை வேண்டுமானாலும் நன்றி சொல்வேன், 50 தடவை
வேண்டுமானாலும் நன்றி சொல்கிறேன். இந்தத் தொழிற்
சாலையை நடத்த முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிற்சாலை போனஸ் சம்பந்தமாக பேச்சு
வார்த்தை முறிந்து எல்லாத் தொழிற் சங்கங்களுமே பாகுபாடு
இல்லாமல் கூட்டு முயற்சியாக ஸ்ட்ரைக் செய்யப் போவதாக
அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சங்கத்தின் கோரிக்
கையை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள், ஸ்ட்ரைக், பெரிய
போராட்டம் நடத்தப் போவதாகக் கேள்விப்படுகிறேன்.

மேற்கு வங்கத்திலும், மகாராஷ்டிராவிலும் ஒப்பந்தம்
முடிந்து விட்டது, தொழிலாளர்களுக்குச் சாதகமாக நல்ல
முறையிலே முடித்திருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் கம்
யூனிஸ்ட் கட்சி சர்க்கார். மகாராஷ்டிரத்தில் ஜனதா சேர்ந்த
சர்க்கார், கூட்டு சர்க்கார், பவார் சர்க்கார் அங்கேயெல்லாம்
அவர்கள் முன்னின்று முயற்சி செய்து முடிவுக்குக் கொண்டு வந்ததா
கச் சொல்கிறார்கள். உங்களுக்கு என்ன தகவல் என்று தெரிய
வில்லை. இங்கேயும் நீங்களும் முன்னோடியாக இருந்து செய்ய

வேண்டுமென்று தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொழிலாளர் பிரச்னையைத்
தீர்த்து வைக்க அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே பஞ்சாலைத் தொழில், மிக அதிகமான
தொழிலாளர்கள் இருக்கின்ற பிரதான தொழில். அவர்களுக்
குச் சங்கடங்களும், தொழில் அமைதியின்மையும் ஏற்பட்டு விடக்
கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு அதைச் செயல்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை குரோம் லெதர், இந்தியாவிலேயே நல்ல தோல்
தயாரிக்கின்ற தொழிற்சாலையாகும். அந்தத் தொழிற்சாலை
யில் நடக்கும் போராட்டமே விநோதமாக இருக்கிறது. முத
லாளி லாக் அவுட்டும் செய்யவில்லை, தொழிலாளர்களுக்குச்
சம்பளமும் கொடுக்கவில்லை. தொழிலாளர்கள் தொழிற்சாலைக்
குப் போகிறார்கள், ஒன்பது மணி என்றால் சைரன் ஒலிக்கிறது,
ஒன்பது மணிக்கு உள்ளே போகிறார்கள். உள்ளே வேலை இல்லை,
உட்கார்திருந்து விட்டு வெளியே வருகிறார்கள். பத்து மாதங்
களாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. அவர்கள்
உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்
கிறார்கள். பேங்கிலே இரண்டு கோடி ரூபாய் கொடுத்து அது
போய்விட்டதே என்று அவர்கள் இருக்கிறார்கள். அரசு முன்
அனுமதி கொடுத்து, அந்தப் பேங்கே எடுத்து நடத்த முன் வரு
வதற்கு உத்தரவாதம் கொடுத்தால் பேங்கே எடுத்து அதை
நடத்தத் தயாராக இருக்கிறார்கள். அதில் ஏன் காலதாமதம்
காட்டவேண்டும்? அந்த முதலாளியும் நடத்தவும் மாட்டேன்
என்கிறார். யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்
குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறார். என்றைக்கு, யார்
வந்து அந்தத் தொழிற்சாலையை அதிக விலைக்கு வாங்குவது?
என்றைக்கு அவர் விற்பது? என்றைக்கு அத்தொழிற்சாலை
நடப்பது? இதெல்லாம் சாத்தியமே இல்லை. பாங்குக்கு
உத்தரவாதம் கொடுத்து அந்தத் தொழிற்சாலையை நடத்த
முயற்சிக்க வேண்டும். இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கி
றார்கள். தொழிலாளி சாப்பிடாமல் எப்படி இருப்பான்?
இதை எப்பொழுதோ அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும்
அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் உங்களுக்கு
அதிகாரம் இல்லையா? இந்த மாதிரி தொழிற்சாலைகளை
எல்லாம் ஒழுங்காக நடக்கக்கூடிய வகையில் நீங்கள் நடவடிக்கை
எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு சாப்பிட வழி ஏற்படுத்த
வேண்டும். நீங்கள், சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்
டும், தெரியும். ஆகவே, ஒன்று அரசு எடுத்து நடத்த வேண்டும்.
இல்லாவிட்டால், பாங்க் மூலமாக, அதனை நடத்த முயற்சிக்க
வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பீடி தொழிலாளர்கள், பீடி தொழிலாளர்களுக்கு
பல்வேறு சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சட்டம் இருக்
கிறது. ஆனால், அவர்களுக்கு ஒழுங்காகப் கொடுப்பதில்லை.
அந்த ப்ரமிசுஸ்ஸீ—க்குள்ளே, செயல்படாமல், காட்டேஜ்
இன்டஸ்ட்ரீஸ் மாதிரி, வீட்டிலே செய்யச் சொல்லி, தொழிலாளர்
களுக்குச் சரியான சலுகை கொடுக்காமல் இருக்கிறார்கள். திருச்சி
யிலே ஹாட்டின் பீடி முதலாளி, எந்தச் சலுகையும் கொடுப்ப
தில்லை. அங்கு சங்கமே வைக்க விடாமல், முதலாளி அதை
உடைத்து, யார் சங்கம் வைத்தார்களோ, அவர்களுக்கு வேலை
இல்லையென்று தள்ளிவிடுகிறார். அதன்மீது அரசாங்கம்
நடவடிக்கை எடுக்கப் போனால், அந்த முதலாளி, ஏ.ஐ.ஏ.டி.
எம்.கே.யில் சேர்ந்தேன் என்று சொன்னார். எந்தக் கட்சியில்
சேர்ந்தால்என்ன? நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே.
இது ஒரு கோர்வை. அவர்களைப் பொறுத்த வரையில், எந்த
அரசாங்கம் வந்தாலும் அந்தக் கட்சி. அந்த மாதிரி சில பேர்
இருப்பார்கள். அடுத்த கட்சி வந்தால், உங்கள் கட்சியில் பேச
மாட்டார். உங்களைக் காலை வாரிவிட்டு அவர் போய் விடுவார்,
தொழிலாளர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பீடி தொழிலாளர்களுக்கு சில உதவிகள் கொடுத்திருக்கிறது
மத்திய அரசு. செஸ்ஃ பண்டிலிருந்து தொழிலாளர்கள் பிள்ளை
கள் படிக்க ஸ்காலர்ஷிப், சென்ட்ரல் கவர்ன்மென்டிலே கொடுக்
கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்டிலே அதிகமாகக் கொடுத்தும்
நம் ஸ்டேட்டிலே அதைப் பயன்படுத்தவே இல்லை, அல்லது
பயனடுத்தியது ரொம்பக் குறைவாக இருக்கிறது. கேரளாவிலே
6,000 மனுக்கள் போயிருக்கின்றன. நம் ஸ்டேட்டிலேயிருந்து
100 தான் போயிருக்கின்றன. ஏன்? தொழிலாளர்களுக்கு
அறிவித்து, அதை உருப்படியாகப் பயன்படுத்தினால், மத்திய
சர்க்கார் கொடுக்கிற மானியத்தை முழுமையாகப் பயன்படுத்த
முடியும். அதிலே, கவனம் செலுத்தி, தமிழ்நாட்டுக்கு உரிய
பங்கு கிடைக்கும் வகையிலே அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு, இந்தச் சம்பளப்
பிரச்னை இருக்கிறது. முதலாளிகள் என்ன சொல்வார்கள்
எனறால், சர்க்கரைக்கு விலை கிடையாது, கரும்புக்கு விலை
கிடையாது, அது, இது என்று சொல்வார்கள். இதர மாநிலங்
களில், அந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் கிடைக்கிறது.
அதே மாதிரி சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு, இங்கும்,
ஊதியம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, லாரி டிரான்ஸ்போர்ட். அவர்கள் ஆர்கனைஸ்ட் ஆக
சங்கம் வைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், ஒரு முதலாளி
1 லாரி, 2 லாரி என்று வைத்திருப்பார்கள். அரசு கூட லாரி

டிரான்ஸ்போர்ட் வைத்திருக்கிறது. லாரி தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. சேர்ந்தாற்போல் 7 நாட்கள் ஓட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். அதனால்தான், லாரிகளால் தான் அதிகம் ஆக்சிடெண்டுகள் ஆகின்றன. மெட்ராசிலேயிருந்து, இருச்சிக்கு டிரங்க் ரோடிலே போனால், ஒரு நாளைக்கு 3, 4 லாரி ஆக்சி டெண்ட் பார்க்கலாம். ஏனென்றால், லாரி தொழிலாளர்கள் சேர்ந்தாற்போல், கண் விழித்து, சம்பளம் போய் விடுமோ, வேலை போய் விடுமோ, என்று லாரி ஓட்டுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க, இவ்வளவு நேரம் வேலை செய்யவேண்டுமென்ற வகையில் பாதுகாப்பு அளிப்போமானால், இந்த லாரி ஆக்சிடெண்ட்டுகளைக் குறைக்க நம்மால் முடியும் என்று நான கருதுகிறேன்.

இது தவிர, சிறு சிறு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அரசுத் தரப்பிலேயும் இது மாதிரி பல்வேறு வகையிலே இருக்கின்றன. கும்பகோணத்திலே சேக்ரட் ஹார்ட் லெப்ரசி சென்டர் என்று ஒன்று இருக்கிறது: அவர்கள் தர்மத்திலே அதை நடத்துகிறார்கள். அதிலேயிருக்கிற எம்பிளாயிசுக்கு சம்பளம் குறைச்சலாக இருக்கிறது. ஆகவே, வேலை நிறுத்தம் செய்தார்கள். அதனை உடனடியாகக் கவனித்து, அவர்களது குறைகளைக் களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[பிற்பகல் 1.10.]

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் மூட்டைத் தூக்கும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதற்காக அவர்கள் உண்ணாவிரதம்கூட இருந்தார்கள். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. மனு கொடுத்து கேட்டுப் பார்த்தார்கள். ஒன்றும் கொடுக்கவில்லை. அந்த மனுவை அப்படியே தூக்கிப் போட்டுவிட்டார்கள். உண்ணாவிரதம் இருந்து பார்த்தார்கள். உண்ணாவிரதமும் போச்சு. அவர்கள் கதி என்ன ஆவது? அவர்கள் என்ன செய்வார்கள்? எப்படி வாழ் வார்கள்? அறிவித்த சம்பளம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதுகூட அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்று சொன் னால், இங்கே ஒரு லேபர் அமைச்சர் எதற்கு? இது எவ்வளவு பெரிய குறை தெரியுமா? நியாயமான கோரிக்கையா என்று பாருங்கள். பார்த்து அதை கொடுப்பதற்கு எந்தவித தடையும் இல்லாமல் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் நிச்சயமாக செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேட்டூர் அலுமினியம், மால்கோ. அங்கே 61-ல் பெரிய போராட்டம் நடந்தது. ஏதோ சில தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள் அப்போது. ஒரு 100 பேர்கள் இருக்கும், அவர்களை பணியிலிருந்து வீட்டுக்கு டிஸ்மிஸ் செய்து

விட்டார்கள். அப்போது அது தனியார் நிறுவனமாக ஜாயிண்ட் செக்டாராக இருந்தது. இப்போது அந்த நிறுவனத்தை அரசு ஏற்றுக் கொண்டது. அந்த வேலையை இழந்தவர்கள் இப்போது மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் பாதி போர் செத்துக்கூட போய்விட்டார்கள். ஒரு முப்பது, நாற்பது பேர்கள் இருக்கிறார் கள். அவர்களுக்கு திரும்பவும் அங்கே வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மனு கொடுத்திருக்கிறார்கள். அவர் களுடைய பிரச்னையை அனுதாபத்தோடு கவனித்து அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அன்-ஆர்கனைஸ்டு லேபர்கள். இவர்கள் தான் பெரிய அளவில் இருக்கிறார்கள். சில விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், கடைகளில் வேலை பார்ப்பவர்கள், இப்படி ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போராட்டம் செய்ய முடியாது. ஒரு கடையில் 4 பேர் இருப்பார்கள், இன் னொரு கடையில் 2 பேர்கள் இருப்பார்கள், அவர்கள் எப்படி போராட்டம் நடத்த முடியும்? அவர்களுக்கு சரியான ஊதியம் கிடையாது. அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுடைய வேலை நேரங்கள் இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்பட்டது கிடையாது. அப்படி அவர்கள் வேலை நேரத்தை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று ஒரு முறை உத்தர விடப்பட்டது. அந்த உத்தரவு வந்த காலத்தில் சும்மா இடை வேளையின் போது 2, 3 மணிநேரம் கடையை மூடிவிட்டு பிறகு திறந்தார்கள். இப்போது அது சரியாக அமுல்படுத்தப்படுகிறதா கிடையாது. அவர்கள் எல்லா இடங்களிலும் ஒரு நாளைக்கு 12 மணி நேரம், 15 மணி நேரம் வேலை செய்கிறார்கள். காலையில் 8 மணிக்கு ஆரம்பித்தால் இரவு 10 மணி வரையில் அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான சட்டங்கள் இல்லை. இருப்பதையும் சரியாக அமுல் படுத்தப்படுவதில்லை.......

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி)</u> : மணியடித்து, 15 நிமிடங்கள் ஆகிவிட்டன, சீக்கிரம் முடிக்கப்பாருங்கள்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : அவர்களுக்கு நாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இத்தகைய தொழிலாளர்களுக்காகத்தான் சட்டம் போடப்படுகிறது. போடப்பட வேண்டும். போட்டிருக்கும் சட்டங்களே சரியாக அமுல் ஆக்கப்படவில்லை என்றால், இத்தகைய சட்டங்கள் போடப்படத்தான் வேண்டுமா என்ன? அந்தச் சட்டங்களினால் பிரயோஜனம் இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு, 5 ரூபாய், பெண் தொழிலாளர்களுக்கு $3\frac{1}{2}$ ரூபாய். ஆனால், உண்மையில் கொடுக்கப்படுவது ஆண் கூலியாளுக் $2\frac{1}{2}$ ரூபாய்

பெண் கூலியாளுக்கு 1½ ரூபாய். இப்படி இந்த நாட்டிலே 2½யம், 1½ யும் வாங்கிக் கொண்டிருந்தால், அவர்கள் எப்படி வாழ முடியும். அப்புறம் எதற்காக இங்கே நாமெல்லாம் இருக்க வேண்டும், சட்டங்களைப் போட வேண்டும்.

கேரளா ஆக்ட் பார்த்தேன். அவர்களுடைய லேபர் ஆக்ட் சட்டம் ரொம்ப நல்ல சட்டம். நல்ல பாதுகாப்புக் கொடுத்திருக் கிறார்கள். அது மாதிரியான சட்டத்தை நீங்கள் இங்கே போட வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

பெயரளவிலே சட்டத்தைப்போட்டுவிட்டோம் என்றிருக்க கூடாது. அந்தச் சட்டத்தை சரியாக அமுல் ஆக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்படி எப்படியெல்லாம் சட்டம் போட்டு அவர்களை பாதுக் காப்பது என்று அரசு ஆலோசிக்க வேண்டும். யோசனை செய்ய வேண்டும்-சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவுவதற்கான வழிகளில் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் திட்டம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இது குறித்து எனக்கு முன்னால் மதிப்பிற்குரிய உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். சேலம் மாவட்டம், மேச்சேரி யூனியனில் நிரந்தரமாக தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. அந்த மேச்சேரி மேட்டூரில் இருந்து 8 மைல் தூரத்தில்தான் இருக்கிறது. மேட்டூரில் தண்ணீர் நிறைய இருந்தாலும் அந்த இடத்திற்கு தண்ணீர் கிடைப்பது இல்லை. அங்கே குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, குடிப்பதற்கு, தண்ணீர் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் திட்டம் பூராவும் குடிநீர் வடிகால் வாரியம் தற்போது செய்து கொண்டு வருகிறது. குடிநீர் திட்டம் ஒரு கிராஷ் ப்ரோக்கிராம் என்ற முறையில் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் அந்தத் திட்டத்தை அந்த வாரியத்திடம் ஒப்படைத்தார்கள். தற்போது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னிலும் சிறிய வேலைகள் எங்காவது செய்ய வேண்டும் என்றால் கூட அதற்கும் அந்த குடிநீர் வாரியம் தான் செய்ய வேண்டி யிருக்கிறது. அது பல்வேறு இடங்களில் சரியாக அமையவில்லை. அப்படிப்பட்ட சிறிய வேலைகள் பஞ்சாயத்து யூனியன்கள் செய்வது என்று இருந்தால், அவர்களுக்கு ஏற்பாடாக எந்தெந்த இடத்தில் எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரியும். அவர்கள் ஒவ்வொரு கிராமத்தையும் முறையாக எடுத்துக் கொண்டு, தேவைக்கு ஏற்ற வகையில் செய்வார்கள். ஆகவே, சிறிய வேலைகளைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்து யூனியன்

களுக்கு அந்த வேலைகளைச் செய்ய அனுமதி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால், அந்த சேர்மன், அங்கேயுள்ள ஆணையர் போன்றோர் தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். அதிகமான அளவிற்கு செலவு செய்து செய்யக்கூடிய—உதாரண மாக 40,000, 50,000 ரூபாய் என்கிற அளவிற்குச் செய்யும் வேலைகளை வாரியத்திடம் விட்டு விடலாம். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், ஒரு குடிநீர் திட்டம் வேண்டும் என்று இரண்டு ஆண்டு காலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். குடிநீர் வாரியத்திற்கு இரண்டு மூன்று முறை எழுதி இருக்கிறேன். இன்னும் எனக்கு ஒரு பதில் கூட வரவில்லை. என்னுடைய தொகுதி கடற்கரை பகுதி. அதனால் எங்கே தோண்டினாலும் உப்புத் தண்ணீர் வருகிறது. அதனால், அவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று வசதியுள்ளவர்கள் தண்ணீர் வண்டியில் கொண்டு வர வேண்டியிருக்கிறது. வண்டியில்லாதவர்கள் ½ நாள் அதற்காக செலவழித்து, கஷ்டப்பட்டுக் கொண்டு இருக் கிறார்கள். குறிப்பாக, தம்பிக் கோட்டை, வடகாடு, மேலக்காடு, மறவைக்காடு, தாமரைக்கோட்டை ஒரு பகுதி, பழஞ்சூர் ஒரு பகுதி ஆகிய இடங்களில் கிணறு போட்டால் பூமியில் உப்புத் தண்ணீர்தான் வருகிறது. கிட்டத்தட்ட 20,000 மக்கள் இந்த நிலையால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த 20,000 மக்கள் பயன் அடையும் வகையில் ஒரு குடிநீர் திட்டத் தைப் போட்டு, நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நடந்த விவாதத்தில் மாண்பு மிகு உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், செல்வராஜ், ரமணிகுருசாமி, மார்க்கபந்து, அம்பிகாபதி, ஆண்டி அம்பலம், பாலுச்சாமி, ஆறுமுகம், ஜேம்ஸ், மாரிமுத்து, சேலம் ஆறுமுகம், கா.கா. தே. கா. கட்சி ஆக எல்லோரும் கலந்து கொண்டு, இதிலே அரசியல் கட்சிக் கொள்கைகளுக்கு ஏற்ப இந்த அரசின் கொள்கையை விமர்சனம் செய்தார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் ஒரு 15 தினங்களுக்கு முன் னால் என்னால் மிகவும் மதிக்கப்படுகிற மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தோல் ரொம்பத் தடித்துப் போய் விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் எதற்காகச் சொன்னார்கள் என்றால் அவர் ஏதோ சொன்ன ஒன்றை உடனே செய்ய முடிய வில்லை என்பதால் சொன்னார்கள். இப்போது எல்லாம் கோபம் வருவது இல்லை—முன்பெல்லாம் போல். அமைச்சராகியிருக் கிறீர்கள் என்று சொன்னார்கள். எப்போதுமே He is noted for his blunt speech. அதற்கு முன் காரணமே பல்லாண்டு காலத்திற்கு முன்பாகவே எங்களுடைய ஒப்பற்ற புரட்சித் தலைவர் அவர்கள்

பதவி வரும்போது பணிவு வரவேண்டும் தோழா என்று சொல்லி
யிருக்கிறார்கள். எனவே, பதவி வந்த பிறகு in Raghavanandam's
life தொழிலாளர்கள் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கக்
கூடாது. தனிப்பட்ட கோப தாபங்கள் இருக்கக் கூடாது,
என்கிற அடிப்படையில் மாறி அமைதியின் மொத்த சொரூபமாக
இருக்க வேண்டும், இருக்கக்கூடிய பதவிக்கு ஏற்ப கண்ணியமாக
நடந்து கொள்ள வேண்டும். அதைத்தான் பதவி வரும் போது
பணிவு வரவேண்டும் தோழா என்று புரட்சித் தலைவர்
கூறினார்கள். நாம் ஒரு நாளைக்கு பதவிக்கு வரப்போகிறோம்
என்பதை he was able to see far beyond his nose அறிந்து
அவர்கள் அவ்வாறு சொல்லியிருக்கிறாகள். எனவே தான் நான்
அமைதியாக கேட்டுக் கொண்டு இருந்தேன.

(பிற்பகல் 1-20).

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்ற
வர்கள் எல்லாம் எங்களுடைய கொள்கையை நீண்ட காலமாக
கவனித்து வருவதாகவும் அது தங்களுடைய கொள்கைக்கு ஏற்ற
வகையில் வரவில்லை என்றும் நல்ல நோக்கிலே தொழிலாளர்
களைப் பார்த்து தொழிலாளர்களுக்கு நல்லது செய்யவில்லை
என்ற காரணங்கள் கூறி விமர்சனம் செய்தார்கள். ஆனால்
எல்லோருமே மிகக் கண்ணியமாக வார்த்தையை உபயோகித்
தனர். The discussion was of very high order. அதற்காக
நான் முன்னாலே இந்த அரசின் சார்பாக உங்களுக்கு
நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு
என்னுடைய பதில் இதுதான்.

1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3-ம் நாளன்று திரு உமாநாத்
அவர்கள் நிதியமைச்சருக்குப் பதில் சொல்லும்போது சொன்
னார்கள். "இன்றைக்கு புத்தி ஏற்பட்டிருக்கிறது என்று
சொல்கிறார். கரெக்டாக நடந்தால் நாங்கள் வரவேற்போம்'
இல்லாவிட்டால், நாங்கள் அப்போஸ் பண்ணுவோம். டிபேட்டில்
அவர்கள் எதிர்பார்க்கிற மாதிரி அவர்கள் சொல்கிற எல்லா
வற்றையும் பின்பற்றி நடப்போம் என்று எதிர்பார்ப்பது தவறு''.
இது எங்கள் கட்சிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்
அவர்கள் சொன்னது. அதை இப்போது திருப்பி அவர்களுக்குச்
சொல்கிறேன். டிபேட்டில் நீங்கள் சொல்கிறபடியே நாங்கள்
நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. நீங்கள்
பின்பற்றுவது மார்க்ஸிஸம். நாங்கள் பின்பற்றுவது அண்ணா
யிசம்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, நாங்கள்
சொல்வதைப் பின்பற்றச் சொல்லவில்லை, அவர்கள் பிரகடனப்
படுத்தியதைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று திரு. ரமணி
அவர்கள் சொன்னார்கள். நீங்கள் சொல்கிற மாதிரி அவர்கள்
சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மார்க்ஸிஸத்தைப் பற்றி நானும் படித்திருக்கிறேன். பல மார்க்ஸிஸ்ட்கள் பிறப்பதற்கு முன்னதாகவே நான், வயது அதிகமாக ஆகிவிட்டதன் காரணத்தால் அவற்றைப் படித்துவிட்டேன். நான் கிழவன், 63 வயது ஆகிறது. ripe old age. அந்த மார்க்ஸிஸத்தை நீங்கள் புரிந்து கொண்டு வேலை செய்வது ஒரு பாணி. நாங்கள் புரிந்து கொண்டு வேலை செய்வது ஒரு பாணி.

LABOUR AND MONOPOLY CAPITAL—THE DEGRADATION OF LABOUR IN 20TH CENTURY.

அந்தப் புத்தகத்தில் 20-ம் நூற்றாண்டில் தொழிலாளர்கள் எப்படி பாதிக்கப்பட்டார்கள் என்பதைப் படித்துப் பார்த்து, அவர்களை அதிலிருந்து விடுதலை செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்ற வழிவகைகளை வகுத்து என்ன எல்லாம் செய்தார்கள் என்பதை நான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு புத்தகத்தை என்னிடத்தில் கொடுத்து படிக்கச் சொல்லி இருக்கிறார் முதலமைச்சரவர்கள். பதவி வந்த பிறகு பழைய இராகவானந்தம் புதியவராக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் யாருக்கும் ஏற்படக்கூடாது. பதவி வந்தவுடன் மாறிவிடக் கூடாது என்பதற்காக அப்படி அந்தப் புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

To be abundantly cautious என்பதற்காக ஒவ்வொரு ஒரு சில புத்தகத்தைக் அமைச்சருக்கும் கொடுத்து இருக்கின்றார்.

திரு. கு. ரமணி: 'Imperialism is the highest stage of Monopoly Capitalism' என்ற புத்தகத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராவானகந்தம் : தலைவரவர்களே, அந்தப் புத்தகத்தைப் படிக்கத் தயாராக இருக்கிறேன் என்னிடம் பணம் வாங்காமல் புரட்சித் தலைவரவர்கள் கொடுத்து போல் அவர்களும் கொடுத்தால் படிக்கத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குடிதண்ணீர் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பகுதி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது என்று வல்லுநர்கள் சொன்ன காரணத்தால் அங்கிருந்து தண்ணீர் எடுக்க வில்லை. இந்தத் தண்ணீர் கொடுப்பதைபற்றி நான் ஒன்று சொல்ல வேண்டும். அதுபற்றி விவரம் எல்லாம் பின்னால் தருகிறேன். லேபர், வாட்டர் சப்ளை, ஹவுஸிங் என்று எடுக்கும்போது விவரம் கூறுகிறேன. நான் இப்போது அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல

விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிடுகின்ற வைகை ஆற்றில் அந்தப் பகுதியில் தண்ணீர் எடுக்க வசதி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு இருந்தால் மட்டும் தண்ணீர் எடுத்துவிட முடியாது. இருபது கிலோ மீட்டர் தூரம் வரை சென்று அதன் பின்னர் ஒரு சின்ன கிளை அங்கே இருக்க வேண்டும். அப்போதுதான் அங்கிருந்து தண்ணீர் எடுக்க முடியும். இந்த பதிலை நான அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. செல்வராஜ் சொன்னதை எல்லாம் கவனித்து ஆவன செய்ய முயற்சி எடுக்கிறேன்.

அடுத்து அருமைச் சகோதரர் திரு. ரமணி அவர்கள் வழக்கம் போல் எல்.எம். டபிள்யூ., டி.வி.எஸ்., சிம்கோ, டி.ஐ. சைக்கிள்ஸ் பற்றி எல்லாம் பேசினார்கள். அவைகளுக்கெல்லாம் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம், கால் அட்டென்ஷன், ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின், லாங் நோட்டீஸ் கொஸ்டின் என்றெல் லாம் கொடுத்து அதற்கு பதில் சொல்லி இருக்கின்ற காரணத் தால் அதிலே அதிகமாகப் இப்போது பேசவிரும்பவில்லை. நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். இவைகளில் ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை ஏற்றுக் கொண்டு, திருந்த வேண்டிய நிலை இருக்குமேயானால் திருத்திக் கொள்ள வும் தயாராக இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் எங்க ளுடைய கருத்தை உங்களுக்குச் சொல்லும்போது, அப்போது நீங்கள் சொன்னது தவறாக இருக்கிறது என்று நீங்கள் நினைத் தால் அப்போது அந்த மாறுபட்ட அப்ரோச் செய்வதற்கு எங்களுக்குத் துணையாக இருந்தால் நல்லது.

[மாண்புமிகு துணைத் தலைமை]

டி. ஐ. சைக்கிள்சைப் பொறுத்தவரையில் 5 பேர்கள் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். 'பியர்ட்செல்' பற்றிச் சொன்னார்கள். நான் நிறைய அனவுன்ஸ்மென்ட் பண்ண வேண்டியிருக்கிறது. எனவே, இதைச் சுருக்கமாகச் சொல்லி, அதை அதிகமாகச் சொல்லலாம் என்று இருக்கிறேன். 'பியர்ட் செல்' லில் 10 தொழிற் சங்கங்கள் இருப்பதாகச் சொன் னார்கள். செட்டில்மென்ட் அதிகாரத்தைப் பற்றிச் சொன் னார்கள். இந்த அரசுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

டி. வி. எஸ். சைப் பற்றிச் சொன்னர்கள். ஜாடையாகச் சொன்னார்கள். He is highly intelligent. அதில் சந்தேகமில்லை.

In general Marxists are very intelligent. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தியாகம் செய்துவிட்டு கடைசிவரையில் இருப்பது என்பது சாமான்யம் அல்ல, மதிப்பிற்குரிய அனந்தன் நம்பியாரும் நானும்

நீண்ட நாட்களாக 194-0லே இருந்து தலைவர்களாக இருந்தோம் இப்போது இருக்கின்ற தலைவர்கள் பின்னால் வந்தவர்கள், ஏ., கே. ஜி. அவர்களோடு பாதுகாப்பு கைதியாக நாங்கள் சிறையில் இருந்தோம், ஆனால் இப்போது பேசிய எல்லாம் உறுப்பினர்களுக்கும் மதிப்பு உண்டு, நாமினேட்ட் உறுப்பின ரையும் சேர்த்து இங்கே 235 உறுப்பினர்கள் இருக்கின்றார் கள், அதாவது 234 பிளஸ் 1, நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக மன்ற உறுப்பினர்களாக இங்கே வந்திருக் கிறார்கள். அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லு கின்றார்கள். அந்த உணர்வோடு அவர்களுக்கு மதிப்பு கொடுத்து அவர்கள் சொன்ன கருத்துக்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன்,

டி. வி. எஸ், என்பது ஒரு தனி நிறுவனம், தொழிற் சங்கத்தில் நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும், நாங்கள் ரெபரெஸ்ன்ஸ்' செய்திருக்கிறோம்

Payment of wages for the period of the lockout of the factory of M/s. Brakes India Limited, Madras—Industrial Tribunal-க்கு அனுப்பியிருக்கிறோம்,

Payment of wages for the period of the lockout of the factory of Lucas T.V.S. Limited அதையும் டிரிபியூனலுக்கு அனுப்பியிருக் கிறோம், நூறு பேர்களுக்கு மேல் இருந்தால் டிரிபியூனலுக்கு அனுப்பவேண்டும்.

Paym6nt of wages for the period of lock out of the factory of Sundaram Claytons Limited. Madras. அதையும் Industrial Tribunalக்கு அனுப்பியிருக்கிறோம்,

Unemployment of 12 workmen in Sundram Claytons Limited அதையும் Labour Court-க்கு அனுப்பியிருக்கிறோம், Unemployment of P. Selvaraj in M/s. Brakes India Limited அதையும் Labour Court-க்குஅனுப்பியிருக்கிறோம்,

நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படி அனுப்பும் போது பாராட்டுதல், ஆனால் ஏதோ ஒன்றிரண்டு காரியங்களில் தவறு செய்துவிட்டால், நீங்கள் கோபித்துக் கொள்வது நல்லதா என்பதை உங்கள் முடிவுக்கு விட்டு விடுகிறேன், பின்னால் பிகர்ஸ் பற்றிச் சொல்கிறேன், இந்த ஆட்சியிலே அதிகமான அளவுக்கு, இரண்டு பங்கு அளவிற்குச் ரெபரென்ஸ் கொடுத்திருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லியாக வேண்டும்,

நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால்,
நான் அதற்கு இறுதியாக பதில் சொல்வதற்குத் தயாராக
இருக்கிறேன். ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா ரிபைனரீஸ் பற்றி
மாண்புமிகு உறுப்பினர் ராணி சொன்னார், நான் அவரோடு
தோளோடு தோள்நின்று 55, 56 நாட்கள் போராடினேன்
நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும்,

He shcwed extra emphasis. இந்த ஸ்ரீ கிருஷ்ணா ரிபைனரீஸ்
காம்பவுண்ட் எல்லைக்குள்ளே கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள்
இருக்கின்றன,

Erode Sri Krishna Refineries.
Sri Shunmugham Sundaram Traders.
Durai Krishna Rice & oil Mills.

முதல் நிறுவனத்தில் இருபது தொழிலாளர்கள் வேலை
செய்கிறார்கள், பெண்கள் யாரும் இல்லை, இரண்டாவது
நிறுவனத்தில் ஐம்பது தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்,
மூன்றாவது நிறுவனத்தில் பெண் தொழிலாளர்கள் இருப்ப
தாகத் தெரிய வருகிறது, இந்த மூன்று தொழிற்சாலை
களில் கடந்த ஜூன். ஜூலை மாதங்களில் தொழிற்சாலை

[பிற்பகல் 1-30]

ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டது, இந்த மூன்று தொழிற்
சாலைகளுக்கும் உரிமம் வழங்குவதற்காக அங்கே அதிகாரிகள்
சென்றிருக்கிறார்கள், ஆய்வின்போது அங்கு சட்டவிதிகளுக்கு
முரண்பாடாக இருப்பவைகள் குறித்து, தொழிற்சாலை
உரிமம் வழங்குவதற்கான காரணம் கேட்டு. ஷோ காஸ்
நோட்டிஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

So, the Government is not sitting pretty idle என்பதை இந்த
நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

இன்னொன்று. இந்த நேரத்தில் மனமுவந்து எல்லா
மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தொழிற்
சங்கத்தில் முழு நேரமாக ஈடுபட்டு உழைக்கின்ற முழு நேர
தொழிற்சங்க தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக
இருக்கின்றவர்கள் இங்கே இருப்பவர்களுக்கும், வெளியே
இருப்பவர்களுக்கும், இந்த அரசின் சார்பாக இருகரம்
கூப்பி, அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்
களையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் 19-ம் தேதி
அதாவது இன்று வரை தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய........

திரு, ரா, உமாநாத் : கை கூப்புகிற என்றாலே இரு
கரம்கொண்டு கூப்புகிறது என்பது தான். ஒரு கையால்
முடியாது........

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : ஒரு கை
என்றால் அடிப்பதாக ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின்
அனுமதியோடு அவையின் நேரத்தை இன்னும் சிறிது நேரம்
நீட்டிக்கிறேன்,

மாண்புமிகு திரு, எஸ், இராகவானந்தம் : தமிழ்நாட்டில்
ஸ்டிரைக் 8. லாக்அவுட் 2 இவ்வளவு தான் தமிழ்நாட்டில், Affe-
cted workers பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 4,611 தான், இந்த
சுமூகமான நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக இருக்கின்ற
ஏ. ஐ. டி. யு. ஸி. ஐ. என். டி. யு. ஸி. ஸி. டி. ஐ. யு எச். எம்.
எஸ்., ஏ. டி. யு. ஸி. டி. என். யு. ஸி. ஜனதாக்கட்சியைச்
சேர்ந்தது, இவர்கள் எல்லோருக்கும் என் நன்றியை அரசின்
சார்பில் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்
கொள்கிறேன். தொடர்ந்து இந்த ஹெல்தி கோப்ரேஷன்,
இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்,

ஒன்று, 12 (3) செட்டில்மென்டைப்பற்றி சொன்னார்கள்,
ஒரே வரியில் அதைப்பற்றி சொல்லிவிடுகிறேன், நானும்
அருமை சகோதரர் மாண்புமிகு ரமணி அவர்களும் சேஷசாயி
போர்டில் போராட்டம் நடத்தியபோது. 1974-ம் ஆண்டு
மே திங்கள் 28-ஆம் நாள் அன்று சமரச முறிவு அறிக்கை
ஏற்பட்டு இது 12 (3) செட்டில்மென்ட், இதில் ஒரு கமாவைக்
கூட மாற்றக்கூடாது என்று அப்போது இருந்த அரசு
சொல்லிவிட்டது, அதற்கடுத்தாற்போல். 1974-ம் ஆண்டு
மே திங்கள் 11-ம் தேதியன்று அதை ரெபரன்ஸ்க்கும் அனுப்ப
முடியாது...... Because all issues are covc ed by settlement என்று
சொல்லி விட்டார்கள். ஆனால் என்னால் பல ஆண்டுகளாக
மதிக்கப்பட்டு பல முறை சோஷியலிஸத்தைப் பற்றி அடிக்கடி
விவாதித்து, எனக்கு ஆசானாகவும் அந்த காலத்தில் 68-69-ல்
இருந்த மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் பேசும்போது. அவர்
களுக்கே உரிய கண்ணியமான முறையில் அந்தப் பிரச்னையை
அணுகினார்கள்...... நீங்கள் என்ன தான் சொன்னாலும்,
பத்தினித்தன்மை கெட்டுவிட கூடாது. பத்தினித்தன்மை
கெடக்கூடாது. எதை இழந்தாலும் திரும்பப் பெற்றுக் கொள்ள
லாம். பத்தினித் தன்மையை இழந்துவிட்டால் திரும்ப
பெற முடியாது, உலகத்திலேயே திரும்பப் பெற முடியாத
ஒன்றே ஒன்று இதுதான், அதனால் தான் பத்தினித் தன்மை

என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அதை மிக
அழகாக சொன்னார்கள். He is noted for that sobriety—sophiscated
type of gentleman, என்று சொன்னால் அது திருவாளர் மாரிமுத்து
அவர்களுக்குத் தான் பொருந்தும், அவர்கள் அந்த ஒப்பந்தத்தைக்
காப்பாற்றியதையும் பெருமையாக சொல்லி. புரட்சித் தலைவரின்
அணுகும் முறையையும் சொல்லி இந்தப் பெருமை எல்லாம்
என்னைச் சேர்ந்தது அல்ல. நான் எல்லாம் இன்றைக்கு
மனிதனாக உலாவுகிறேன் என்றால். மந்திரியாக வந்திருக்
கிறேன் என்றால். எல்லாவற்றிக்கும் முழு முதற் காரணம்
புரட்சித் தலைவரை சார்ந்தது என்பதை நான் சொல்லியாக
வேண்டும். என்னுடைய அரசியல் வாழ்கையை அழித்துவிட
முயற்சி செய்தவர்கள் எல்லாம் உண்டு. ஆனால் என்னை
இங்கு கொண்டு வந்து அமைச்சராக உட்காரச் செய்து பார்த்துக்
கொண்டு. என்கரேஜ் செய்து கொண்டிருப்பவர் புரட்சித்
தலைவர் என்பதை இந்த மாமன்றத்தில் நான் சொல்ல
வில்லை என்று சொன்னால். நான் நன்றி கொன்றவன்
ஆவேன், சொல்வதற்கு எனக்கு வாய்ப்பும் கொடுத்திருக்
கிறார்கள்.

மாண்புமிகு மாரிமுத்து அவர்கள்
சொன்னார்கள். அதையும் செய்தார்கள். சொல்லும்போது.
அவர்கள் தொழிலாளர்களுக்கு புரட்சித்தலைவர்
அந்தச் சட்டத்தில் எப்படியாவது கிடைக்கக்கூடிய அளவில்
பார்த்து ஒப்பந்தத்தை காப்பாற்றினார். பொந்துகளைப்
நன்மையும் செய்தார் என்று தொழிலாளர்களுக்கு
பட்ட உத்தமர் ஆட்சிதான் இப்போது சொன்னார்களே. அப்போ
கிறது என்பதை திருவாளர் ரமணி நடந்து கொண்டிருக்
தலையாட்டுவதிலிருந்து இதை ஏற்றுக்கொள்கிறார் அவர்களுக்கு, அவர்கள்
நான் மனதார நம்புகிறேன. என்பதை
எத்தனையோ ஒப்பந்தங்கள். இந்த அரசு ஏற்பட்ட பிறகு

நான் இன்னும் சொல்கிறேன்,
அவர்களுக்கு எவ்வளவு மரியதை நான் மாண்புமிகு ரமணி
ஒரு உதாரணத்தின் மூலம் வைத்திருக்கிறவன் என்பதை
தேக்கம், 16 கோடி 16 சொல்லுகிறேன், சிறுவாணி நீர்த்
என்னுடைய சக அமைச்சர், லட்சத்திலுள்ள ஒரு திட்டம்
உயிரை விடக்கூடியவர், அண்ணன் அண்ணன் என்று
உட்கார்ந்திருக்கிறார். அந்தக் கல்வி அமைச்சர் இங்கே
காண்பிக்கவில்லை. அவரை அழைத்துக்கொண்டு போய்
என்னைப்பார்த்து மருதாச்சலம், அண்ணே அண்ணே என்று
அவரை அழைத்துக்கொண்டுபோய் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பவர்,
மிகு உறுப்பினர் திரு. ரமணி காண்பிக்கவில்லை, மாண்பு
அழைத்துக்கொண்டுபோய் அவர்களை நானே வலிய
விட்டு, அவர் வீட்டிலேயே அந்தத் திட்டத்தைக் காண்பித்து
களோடு பேசிவிட்டு, சாப்பிட்டுவிட்டு, அவர் குழந்தை
அங்கு அவருடைய பெண் குழந்தையோடு

'அப்பாவை மாதிரி பாலிட்டிக்ஸில் போகாமல் நல்லா படித்து
முன்னுக்கு வாருங்கள்' என்று நான் சொல்லவேண்டிய
அறிவுரையும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்............
(சிரிப்பு)........ எனவே இங்கு சூடாக பேசுவதனாலேயோ,
அரசைக் கண்டித்து பேசுவதினாலேயோ, நாங்கள் எல்லாம்
இந்த அரசை எதிர்க்கிறோம் என்றோ எடுத்துக்கொள்ளக்
கூடாது........ (குறுக்கீடு)...... (திரு. நா. சுந்தரராஜ்
எழுந்திருந்தார்......) தயது செய்து உட்காருங்கள், டிரன்ட்
போய்விடும்.

என்ற
இந்த அரசு எந்தெந்த விஷயங்களில் தலையிட்டது
புகார்ப் பட்டியலுக்குள் நான் போக விரும்பவில்லை.

We have done:
I will give you all respect. Don't worry. இருக்
இதுவரையிலே இந்த அரசு செய்த சாதனைப் பட்டியல் சிலவற்றை
கின்றது. அதை பூராவையும் படிக்காவிட்டாலும், சட்டத்
நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் அமைத்
தைத் திருத்த வேண்டும் என்பதற்காக, ஒரு குழுவை தொழில்
திருக்கிறோம். அந்தக் குழுவிலே தொழிலாளர்கள், ஒரு
அதிபர்கள், மற்றும் சட்டமன்ற பிரதிநிதிகள் கொண்ட சட்டத்தை
உயர்மட்டக் குழுவை அமைத்து, தொழிலாளர்கள்
திருத்தி அமைத்திருக்கிறோம்.

I do not think any States—any one of the 21 States in India
except the Government of Gujrat has done it.

இந்தியாவில் 22 மாநிலங்கள் இருக்கின்றன. எந்த மாநிலம்
மும் செய்யவில்லை. இந்த அரசுதான், கீழ்க்கண்ட சட்டங்களை
திருத்துவதற்கு பரிந்துரை செய்திருக்கிறது.

(1) தமிழ்நாடு கடைகள், மற்றும் நிறுவனங்கள் சட்டம்.
(2) தமிழ்நாடு உணவு விடுதிகள் சட்டம்.
(3) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள், தேசிய மற்றும்
பண்டிகை விடுமுறைகள் சட்டம்.
(4) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம்.
(5) ஊதிய பட்டுவாடா சட்டம், 1976.
(6) தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களை
நிரந்தரமாக்கும் தகுதி வழங்குவது பற்றிய மசோதா.

அந்தக் குழுவின் பரிந்துரையை அரசு பரிசீலித்து சட்டமாகக்
கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

லேபர் வெல்பேர் ஆபீசர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

Labour Welfare officers are paid by the management. They are on the PayRoll of the Management.

அவர்கள் லேபரர்ஸ்களுக்கு வெல்பேர் செய்ய இல்லை. மானேஜ
மென்ட், முதலாளிகளுக்குத்தான் சாதகமாக இருக்கிறார்கள்.
ஸ்டிரைக்கை உடைப்பதற்கும், தொழிலாளர்களை மேல் விசா
ரணைக்கு அனுப்பி, அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கும் அவர்
கள் ஆலோசனை கூறுகிறார்கள். அவர்களையெல்லாம் அரசு
ஊழியர்களாக—அதாவது டெபுடேஷனாக அனுப்புவது குறித்து
மத்திய அரசாங்கத்திற்கு எழுதினோம்; அவர்கள் ரெபியூஸ்
பண்ணிவிட்டார்கள். இருந்தாலும், மறுபடியும் ஒரு கடிதம்வர்
எழுதியிருக்கிறேன். அங்கே இந்தப் பொறுப்பை வகிக்கக்கூடிய
மதிப்பிற்குரிய ரவீந்திர வர்மா. என்மேல் மதிப்பு வைத்
திருப்பவர், அவருக்கு கடிதம் எழுதி, நேரில் சென்று ஒப்புதல்
பெற்று வரலாம் என்று எண்ணியுள்ளேன் என்பதை இந்த நேரத்
தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கு டைம் கார்டு வழங்குதல். ஒவ்வொரு
தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும், அவர் வேலை செய்
கின்ற நாட்கள், அவருக்கு வழங்கப்படும் ஊதியம் போன்ற
விவரங்கள் அந்தடைம் கார்டிலே பதிவு செய்து,வி திருப்பி அதை
அந்தத் தொழிலாளர்களுக்கே கொடுக்க தியொன்று தமிழ்
நாடு தொழிற்சாலை விதிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
அதனால், அந்தத் தொழிலாளர்களுக்கு பின்னால் தாற்காலிக
மாக வேலைக்கு வைத்துக் கொண்டேன், ஊதியம் கொடுக்க
வில்லை என்று சொல்ல முடியாத அளவில், அவர்களுக்கு உரிமை
வழங்கப்பட்டிருக்கிறது. தகராறு ஏற்பட்டால், இதை ஆதார
மாகக் காட்டலாம்.

இன்னும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவோ
நன்மைகள் செய்ய இருக்கிறது. ஒன்று ஊதிய விடுப்பு. ஒரு
ஆண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் வேலை செய்தால்,
அடுத்த ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்ப
தில்லை.

One day for every 20 days.

என்பதை எல்லோரும் அறிவார்கள். அதைக் குறித்து, முதல்
ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்தால், தொடர்ந்து வரும்
ஆண்டில் 240 நாட்கள் இருக்கவேண்டும் என்ற பிரிவை,
சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும் என்று மத்திய
அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதை வலியுறுத்துவதாக
இருக்கிறோம்.

அடுத்து குறைந்தபட்சக் கூலி. பெஸ்டிவல் ஹாலிடேஸ் 5, நேஷனல் ஹாலிடேஸ் 4. இதைக் குறைந்தபட்ச கூலி சட்டத்தின்கீழ் சேர்க்கப்பட இருக்கிறது. எல்லாத் தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு நிறுவன சட்டத்தின்கீழ் அமுலுக்கு கொண்டு வந்தாக வேண்டும்.

அதேபோன்று தமிழ்நாடு தொழிலாளர் நிறுவனங்கள், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள் சட்டத்தையும் மாற்றப் பெற ஏதுவாகிறது.

பீடி சுற்றும் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். உங்களுக்குத் தெரியும். அது நீண்ட பட்டியல்; அதைப் படிக்க நான் விரும்பவில்லை. பிரிவு 3, 4, 2 (ஜி) ஆகியவைகளை மாற்றினால் ஒழிய, இந்தத் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்காது. அதை மாற்றுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

ரமணி அவர்கள் சொன்னார்கள்.

Removal of liability of beedi workers to pay copy stamp paper under the Beedi and Cigar Workers (Conditions of Employment) Rules, 1958.

இதற்கு முன்னால் காப்பி வேண்டுமென்றால், ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். இதை சென்ற ஆண்டு அறிவித்தோம். சட்ட சிக்கல்கள் காரணமாக இந்த பீடி தொழிலாளர்கள் சலுகைகள் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆனால், இதற்கு இப்போது விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயக் கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களே இருக்கிறார்கள். அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக இந்தப் பரிந்துரைகளை வழங்குகிறீர்களோ அதற்கேற்றபடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். நீங்கள் அன்றைக்கே சொல்லியிருக்கிறீர்கள்—எந்த மாற்றமும் நீங்கள் செய்யக்கூடாது என்று. கூடுமான வரையில் அந்த வார்த்தையைக் காப்பாற்றுகிறோம். அதைக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இங்கே மேற்கு வங்கத்தைப் பற்றிச் சொன்னார்கள்—
That is a healthy compensation.

அது வேண்டும். அதே நேரத்தில் மேற்கு வங்க முதல்வர் சொன்னதையும் இங்கே படிக்க விரும்புகிறேன்—

' The West Bengal Chief Minister, Mr. Jyoti Basu, today asked the workers in factories to keep an eye on productione specially after achieving their demands. (Hindu, dated 15th April 1979. அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற்று—அது நல்ல மார்க்சிஸ்ட் சித்தாந்தம். தலைசிறந்த தலைவர் என்ற முறை யில் கூறுகிறார்—கோரிக்கைகளைப் பெற்ற பிறகு அதற்குப் பின்னால் அந்த நிறுவனம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், கோவாப்ப ரேட்டிவ் ஹவுசிங் சொசைடி ஆகியவற்றைப் பற்றிச் சொல்லு கிறேன். நீங்கள் எல்லாம் பேசினீர்கள்—நான்கு தவணைகள், மூன்று தவணைகள் வரிசையாகக் கொடுக்க வேண்டுமென்றெல் லாம் பேசினீர்கள். அதைப் பற்றிப் படித்து விடுகிறேன்.

கிராமப் பகுதிகளில் வீடில்லா ஏழை மக்களுக்கு அரசே வீட்டு மனை வழங்குவதுடன், கிராமங்களைச் சீராக அமைக்கும் வகை யில் குடிநீர், வடிகால் வசதி, தெரு விளக்கு, குடிசைத்தொழில் முதலியவைகளை அமைப்பதுடன், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் அக்கிராமங்களில் வாழ இருக்கும் மக்களை அங்கத் தினர்களாக்கி அவர்களுக்கு மேற்படி சங்கங்கள் மூலம் வீடுகள் கட்ட குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு ஒருங்கிணைந்த ஊரமைப்புத் திட்டங்கள் தீட்டுவதன் மூலம் கிராமங்கள் மிளிரவும், அங்கு வாழும் மக்களின் பொருளா தார நிலை உயரவும் அரசு இந்த ஆண்டு தீவிர நடவடிக் கைகள் எடுக்கும்.

புதிதாக வீடு கட்ட வரைபடம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். கிராம வீட்டு வசதி திட்டத்தின்கீழ், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் பெற்று வீடு கட்டுவோருக்காக வெவ்வேறான மூன்று வகை மாதிரி வரை படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றை அங்கத்தினர் தேர்ந்தெடுத்துக் கொண்டால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தில் ஒப்புதல் தேவையில்லை.

வில்லங்க சான்றிதழ் வழங்க பதிவுத்துறை இதுவரை ஒரு மாதத்திற்கு மேல் காலதாமதமாக்கிக் கொண்டிருந்தது. இப் போது அங்கத்தினர்களுக்கு ஐந்து நாட்களுக்குள்ளாகவே கிடைக் கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக நிபந்தனை பட்டா வைத்துள்ளோர் பத்தாண்டு களுக்குள் வீட்டு மனையை அடமானம் செய்ய இயலாது. கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் கடன் பெறுவதற்கு

வசதியாக இப்பட்டாதார்கள பத்தாண்டுகள் முடியும் முன்பே சங்கங்களுக்கு அடமானம் செய்யலாம் என்ற மாற்றத்தை அரசு செய்துள்ளது.

நத்தம் நிலத்தைப் பொறுத்தவரை தொலை தூரத்திலுள்ள தாசில்தாரிடம் சென்று உரிமைச் சான்றிதழைப் பெறுவதற்குப் பதிலாக தற்போது கிராம கர்ணமே உரிமைச் சான்றிதழ் வழங்கலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

வீடு கட்டுவதற்கான நிலத்தின் பரப்பளவு குறைந்தபட்சம் இரண்டு சென்ட் இருக்க வேண்டுமென்று முன்பு சொல்லியிருந் தோம். அதைக் குறைத்து $1\frac{1}{2}$ சென்ட் இருந்தாலே கடன் வாங்குவதற்குப் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பலர் பயனடைவர். இதுவரை தாசில்தார் அளிக்கும் வருவாய்ச் சான்றிதழ்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் கிராமக்கர்ணங்கள், கூட்டுறவுத்துறை மேற்பார்வைப் பணியாளர் களால் அளிக்கப்படும் வருவாய்ச் சான்றிதழ் போதுமானது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் கிராம மக்கள் தாலுக்கா தலைநகருக்கு அலைந்து திரியும் நிலை அகற்றப் பட்டுள்ளது.

சாதாரணமாக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிலிருந்து கடன் வாங்க விண்ணப்பிக்கும் பொழுது கடன் தொகையில் பத்து சதவீதம் பங்குத் தொகையாக கொடுக்க வேண்டும். கிராம வீட்டு வசதிச் சங்கங்கள் பொருத்தவரை, இப்பங்குத்தொகை 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைந்த பங்குத் தொகையும் கிராமத்தில் வசிப்பவர்களால் தர இயலாது என்ப தால், கடன் விண்ணப்பத்தோடு அவர்கள் பத்து ரூபாய் பங்குத் தொகை செலுத்தினால் போதும். பங்குத் தொகைக்கான மீதிப் பணத்தை கடன் தொகையில் முதல் தவணையில் பிடித்தம் செய்யப்படும்.

தற்போது கடன்தொகை 4 தவணைகளுக்குப பதிலாக 3 தவணைகளில் பட்டுவாடா செய்யப்படுகிறது. அதாவது வீடுகட்ட ஆரம்பிக்கையில் முதல் தவணையும், கடைக்கால் முடிந்ததும் இரண்டாவது தவணையும், கூரை மட்டம் வந்த தும் மூன்றாவது தவணையும் கொடுக்கப்படுகிறது. இதனால் கட்டிடங்கள் துரிதமாகக் கட்டி முடிக்கப்படுகிறது.

வீடு கட்டுபவர்கள் சிமெண்டு விற்பனையாளர்களிட மிருந்து பல தொல்லைகளுக்குட்பட்டு தாமதமாக சிமெண்டு வாங்க வேண்டியிருந்தது. இக் கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டு, கிராம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களையே சிமெண்டு சில்லரை விற்பனையாளராக நியமிக்கப்பட்டு, கடன் வாங்குபவர்களுக்கு சுலபமாக சிமெண்டு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. எஸ். இராகவனந்தம்] [1979 ஏப்ரல் 79

இதுவரை பிரதம சங்கங்களிலிருந்து கடன் கோரும் விண்ணப்பங்கள் தலைமைச் சங்கத்திற்கு ஒப்பளிப்பிற்கு அனுப்பப்பட்டன.

கடன் தவணைகளை தலைமைச் சங்கமே உறுப்பினர்களுக்கு பிரதம சங்கத்தின் மூலம் வழங்கி வந்தது. கடன் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க 3 தவணைகளில் தலை மைச் சங்கம் அளித்து வந்த பட்டுவாடா ஆணைகளை, பிரதமச் சங்கங்களே பிறப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தலை மைச்சங்கம் ஆரம்ப ஒப்புதல் அளித்தால் போதுமானது. கோட்ட, தாலுக்கா சங்கங்களுக்குத் தேவையான நிதியைத் தலைமைச் சங்கம் அவ்வப்போது தாமதமின்றி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களுக்கு வீடுகள் கட்டும் பணிகளை மேலும் துரிதப்படுத்தும் வண்ணம், 1978–79 ஆம் ஆண்டில் தொடங்கும் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கிராமப் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென அரசு முடிவெடுத்துள்ளது. 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்களோடு முடியும் கூட்டுறவு ஆண்டில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 10 ஆயிரம். நடப் பாண்டில் (1978–79) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக 9,948 உறுப்பினர்களுக்கு ரூ. 475 இலட்சம் மதிப்புள்ள கடன் தொகைக்கு இதுவரை ஒப்புதலளித்துள்ளது.

1978–79 ஆம் ஆண்டில் அரசு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு ஒரு கோடி ரூபாய் கடனும், ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதனமும் வழங்கியுள்ளது. இதனைத்தவிர, தலைமைச் சங்கம் ஆறு கோடி ரூபாய் ஆயுள் காப்புறுதிக் கழகத்தினிடமிருந்தும், ஒரு கோடி ரூபாய் பொதுக்காப்புறுதிக் கழகத்திடமும் (ஜெனரல் இன்ஸ்ஷுரன்ஸ்) அரசு பொறுப் புறுதியின் பேரில், கடனுதவியைப் பெற்றுள்ளது.

1979–80 கூட்டுறவு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் வீடுகளைக் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்புதிதாக அமைக்கப்பட்டுள்ள 60 கோட்ட/ வட்ட அளவிலான திட்டத்தின் கீழ் புதிதாக ஊரக/வீட்டு வசதி சங்கங்களைத் தவிர இம்மாநிலத்தில் 371 நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும், 119 கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும் இயங்கி வருகின்றன. நகர்ப்புற சங்கங்கள் மூலம் அங்கத்தினர்களுக்கு வீடு கட்ட ரூ. 30,000 வரை கடன் வழங்கப் பட்டு வந்தது. மேற்படி உச்சவரம்பை இந்த அரசு ரூ. 40

1979 ஏப்ரல் 19] (திரு. எஸ். இராகவானந்தம்)

ஆயிரமாக உயர்த்தி யுள்ளது. 1977–78லிருந்து அமலிலுள்ள புதிய திட்டத்தின் கீழ் வராத கிராமக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் அங்கத்தினர்களுக்கு வீடுகட்ட ரூ. 10 ஆயிரம் வரை கடன் கொடுக்கப்படுகிறது. அனைத்துக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் கடன் பெற்று கட்டப்பட்டுள்ள வீடு களின் எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது. எண்ணிக்கையைத் தர விரும்பவில்லை. தரப்படுகிறது என்பதோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். இப்போது இங்கே பேசியவர்கள் மாண்புமிகு திரு. அம்பிகாபதி என்று நினைக்கிறேன், வீட்டு வசதி வாரிய. வாடகை வீட்டிற்கு அவர்களுக்கு ஊதிய உயர்வின் காரணமாக அதிக வாடகை கொடுக்க வேண்டி வரும் என்று சொன்னார்கள் அதைப்பற்றிப் பரிசீலிக்க ஒரு குழுவை அமைத்திருக்கிறோம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

I request the Hon. Members to sharpen their ears, because it is a most important announcement. இப்போது கூர்மையாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். It is a most important announcement for the benefit of my Press Colleagse. I shall read slowly,

மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை புரட்சித் தலைவர் அவர் களின் ஆட்சியில் நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தின் ஊர்புறங்களில் தமிழக அரசின், குடியிருப்புச் சட்டம், நில ஆர்ஜித சட்டம், கிராம கைவினைஞர்கள் குடி யிருப்புச் சட்டம் என்ற பல்வேறு சட்டங்கள் இருந்தும் இன்னும் பல இடங்களில் குடிசை வாசிகளுக்கு தாங்கள் குடிசை போட்டுள்ள மனையிடம் சொந்தமாக்கப்படவில்லை. அதே போல தமிழகத்தின் நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழுகின்ற ஏழை, எளிய மக்களுக்கும் தாங்கள் போட்டுள்ள குடிசை இடம் சொந்தம் இல்லை. இதை அரசு பரிசீலித்து தமிழகம் முழுவதும் உள்ள குடிசை வாசிகள் வசிக்கின்ற வீட்டு மனையை அவர்களுக்குச் சொந்தமாக்குவதென்று முடி வெடுத்துள்ளது. இதற்கு ஏற்கெனவே அமலில் உள்ள சட்டங்களைத் திருத்தியும், தேவைப்பட்டால் புதிய சட்டம் கொண்டுவரவும் அரசு தீர்மானித்துள்ளது.

முதல் கட்டமாக சென்னை மாநகராட்சி குடிசை பகுதி களில் வாழும் மக்களுக்கு இத்திட்டம் அமல் செய்யப்படும். மேலும் சென்னையில் உலக வங்கித் திட்டத்தின்கீழ் பயனடை யும் குடிசைப்பகுதிகளில், குடிசைவாழ் மக்கள் வீடுகளை ட்டிக்கொள்ளவும் அரசு உதவி செய்யும்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 19

[பிற்பகல் 1·50]

Are you satisfied ? I will proceed furher இந்த அறிவிப்பு களை நான் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகச் சொல்கிறேன். ஸ்லம் கிளியரன்ஸ் -ஐப் பொறுத்தவரையில் முன்பைவிட அதிகமாகக் கட்டியிருக்கிறோம். (குறுக்கீடு) நான் சொன்னது மேஜர் அனவுன்ஸ்மெண்ட். மீண்டும் படிக்க வேண்டுமென்றாலும் படிக்கிறேன். ஆனால் படிக்க வேண்டிய அவசியமில்லை, நிதானமாகத்தான் படித்திருக்கிறேன். தமிழ் நாடு பூராவும் இருக்கிற குடிசை வாழ் மக்களுக்குப் பட்டா வழங்குவது என்றால், It is not a small achievement. It is a major achievement.

திரு. கு. ரமணி : அமைச்சரவர்கள் சொன்னதை வர வேற்கிறேன். ஆனால் பலயிடங்களில் அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலம், அது முன்சிபாலிட்டியாக இருக்கலாம், பஞ்சாயத்தாக இருக்கலாம், அங்கே சாதாரண உழைப்பாளிகள் தங்கள் ஙகயிலே கிடைத்த ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்களைச் சேர்த்து வீடு மாதிரி, குடிசை மாதிரி கட்டிக் கொண்டிருக்கும் வீடுகள் இருக்கின்றன. அந்த இடங்களையும் அவர்களுக்குக் கொடுப்பதற்கு நீங்கள் சொன்ன அனவுன்ஸ் மெண்டின் கீழ் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்கீமை அனவுன்ஸ் செய்துவிட்டோம். டீடெயில்ஸ் எல்லாம் பிறகு ஒர்க்-அவுட் செய்து கொள்ளலாம்.

அதைப் போல, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் (குறுக்கீடு) உட்கார்ந்து பேசுவோம், சட்ட மன்றமே எல்லோரும் உட் கார்ந்து பேசுவதற்குத்தானே,

அடுத்து, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் — ஒரு அசீவ் மெண்டை ஸ்பெஷலாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

The performance of Emyl yment Exchange in Tamil Nadu in the placement of apprentices is the best in the Southern States. 9875 apprentices have been placed in various industrial establis- ments. It is a big aceievment.

மற்றபடி கர்நாடகத்தில் 5,468, ஆந்திரத்தில் 5,402, கேரளா வில் 4,190. ஆனால் தமிழ்நாட்டிலே அப்ரன்டீஸ் டிரெயினிங் கொடுக்கப்பட்டு வேலை வாங்கித் தருவதில் கல்வித் துறை

1979 ஏப்ரல் 19]

அமைச்சரவர்கள், அருமைச் சகோதரர், நண்பர், அவர் இந்த இலாக்காவில் சிறப்பான முறையில் வேலை செய்து, 9,876 பேர்களுக்கு வேலைவாங்கித் தருகிறார்கள் அப்ரன்டீஸ்களுக்கு என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொருத்தமட்டில், கிராமக் குடிநீர்த் திட்டத் திற்காக 1971-லிருந்து , அய்ந்தாண்டுக் காலத்தில் செலவு செய்தது 13 கோடி ரூபாய்தான். நாங்கள், இந்த அரசைப் பொறுப்பேற்ற பிறகு,—கூர்மையாக இருந்து கவனித்து நல்லது இருந்தால் கை தட்டுவோம் என்று மார்க்சிஸ்ட் நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் — இந்த அரசு பொறுப்பேற்று கடந்த இரண்டாண்டுகளில் 15·53 கோடி ரூபாய் செலவு செய்திருக் கிறோம். சரி, இந்த ஆண்டு என்ன ? இம்ப்ரூவ்மெண்ட் வேண் டாமா ? 16 கோடி ரூபாய் குடிநீர் வழங்க. இதற்காகத்தான் அவருக்கு ரெவல்யூஷனரி லீடர் என்று பெயர் வைத்தார்கள். ஏதாவது புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வருகிறவர். 16 கோடி ரூபாய் கொடுக்கிறோம். இதுவே ஒரு ரெவல்யூஷன் இல்லையா ? கேடகிரி 1, 2 போக, மற்ற கேடகிரிகளில் தண் ணீர் இருக்கும், ஆனால் அது போதுமானதாக இருக்காது. சித்திரை, வைகாசி மாதங்களில் நின்றுவிடும். அந்த மாதிரி கேடகிரிகளைச் சேர்க்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன் னும்கூட, எத்தனை பஞ்சாயத்துக்களில் கொடுக்க இருக்கிறோம், எத்தனை சிறிய பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்க இருக் கிறோம் என்ற பட்டியல் எல்லாம் இருக்கிறது. ஆனால் அவை களைச் சொல்ல விரும்பவில்லை. காரணம் காலதாமதமாகி விடும்.

என்னமோ தெரியவில்லை, இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரி கைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டு நான் ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். அதனால் அந்த முதலாளிக்கு என்பேரில் உள்ளூரக் கோபமோ என்னவோ தெரியவில்லை. 'Water surply to Madras is bleak' என்று எழுதியிருக்கிறார்கள். It is a distorted version.

நான் வரும்பொழுது அவசரமாகப் படித்துக் கொண்டு வந் தேன். இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைக்குத் தொழிலாளர்களுக்காக மறியல் செய்து பாடுபட்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஒவ்வொருவரும் என்னைவிட அதிகத் தியாகம் செய்தவர்கள் எதிரிலே இருக்கிறார்கள்.

அந்தக் கோபம் அவர்களுக்கு இருக்கிறது, ஆனால் இந்த ரிப்போர்ட்டர்களுக்கு கோபம் இருப்பதற்கு நியாயம் இல்லை, The Reporters are all my very good friends.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 19

ஏதோ வருகிறார்கள், யாரோ சொல்கிறார்கள் என்று
போட்டு விடுகிறார்கள் போல் இருக்கிறது. கொஞ்சம் இதைப்
பற்றி நான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இது சென்னை
சம்பந்தப்பட்ட விஷயம். என்னை மன்னிக்க வேண்டும்,
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேப்பரிலே வந்து
விட்டதாலே, சென்னையிலே உள்ள மக்கள் ஐயோ, தண்ணீர்
கிடைக்காது போல் இருக்கிறதே என்று ஏங்குவார்கள். கிராமங்
களுக்கு 16 கோடி ரூபாய் என்றெல்லாம் சொல்லி விட்டேன்.

There need not be any fear about getting sufficient supply of drinking water for the people who are residing within the City of Madras.

சென்னைப் பகுதியில் குடியிருக்கக்கூடிய மக்களுக்குக் குடி
தண் ணீர் கிடைக்காமல் போய் விடுமோ, குறைந்து விடுமோ
என்ற அச்சம் தேவையில்லை. இதையும் இந்தியன் எக்ஸ்
பிரஸ்' அந்த மாதிரி - காப்ஷன்' கொடுத்து போட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இப்பொழுதே
சென்னை நகரில் பல்வேறு இடங்களில் குடி நண்ணீர் பிரச்னை
இருந்து கொண்டே இருக்கிறது. ஏழைகள் வாழ்கின்ற பல
பகுதிகளில் தண்ணீர் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்
கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக்
கொண்டு வர விரும்புகிறேன்.

The Hon. Thiru S. Raghavanandam: I hope you will share with me.

மிக மதிப்பிற்குரிய வழக்கறிஞர் நீங்கள். வீராணம் திட்டத்
தைப் பற்றி நேற்று ராத்திரி படித்துக் கொண்டே இருக்கும்
போது மயக்கம் வந்து விட்டது. என் 'ஒய்ப்' கூப்பிட்டு,
என்னங்க, இது மாதிரி மயக்கமாக இருக்கிறீர்கள். (குறுக்கீடு)
Let me complete sentence.
நாளைக்கு டிமாண்ட் ஆயிற்றே, 'டல்' லாக இருந்தால் எப்படி
என்று அவர்கள் 'சூப்' பண்ணி, சமாதானம் பண்ணி அனுப்பி
னார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பணம் போகும்போது, அமைச்சர்
அவர்கள் அந்தக் கட்சியிலேதான் இருந்தார்கள், இப்பொழு
துள்ள கட்சியிலே இல்லை,

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கட்சியிலே இருந்
ததாக வைத்துக் கொள்வோம். அமைச்சரவை செய்கிற குற்றத்
தையெல்லாம் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா? நீங்கள்
கோபமாகப் பேசினால், ஆறுமுகத்திடம் கோபித்துக் கொள்ள
முடியுமா?

வீராணம் திட்டத்திற்காக, ரூ, 22,66,39,000 பாழாகி
யிருக்கிறது. ஆலந்தூரிலே குடி தண் ணீர் திட்டத்திற்காக,
ரூ. 2,65,00,000 செலவாகியிருக்கிறது. எல்லாம் இருக்கிறது,
ஓவர்ஹெட் டாங்க் இருக்கிறது. 53 கிலோ மீட்டர் தூரத்திற்கு
பைப் போடப்பட்டிருக்கிறது. ஆனால், தண்ணீர் விட்டால்,
it is oozing out
தண்ணீர் தானாகவே வந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம்
போட்ட இன்ஜினீயர்களுக்கே சந்தேகம் வந்து விட்டதாம், நாம்
போட்ட திட்டம், குடிநீர் திட்டமா, நீர்ப்பாசனத் திட்டமா,
என்று. இப்படியெல்லாம் போயிருக்கிறது. அப்படியிருந்தும்
புரட்சித் தலைவர்' ஆட்சியிலேமறுபடியும் கொண்டு வரவேண்டு
மென்றால், if my memory serves me right.
ரூ. 495 இலட்சம் செலவு செய்தால்தான் ஆலந்தூர் திட்டம்
வரும். பஞ்சாயத்து என்ன சொல்கிறார்கள்? நாங்கள் ஏற்
கனவே பணம் கொடுத்து விட்டோம், திரும்பித் திரும்பிக் கேட்
கிறீர்கள்? கேட்காதீர்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே,
இவ்வளவு கஷ்டத்திலே you must appreciate our difficulties.
You must appreciate the predicament in which we are placed.

இப்படியே விட்டு விட்டு, எங்களைக் பார்க்கிறீர்கள். புரட்சித்
தலைவர் எவ்வளவு கஷடப்படுகிறார். (திரு. நா. சுந்தரராஜ்
குறுக்கீடு) கடைசியிலே சொல்லுங்களேன். டிரென்டைக்
கெடுத்து விடாதீர்கள். I am an old man, good old man
எனக்கு ஞாபகம் மறதி அதிகம், கடைசியிலே சொல்லுங்களேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே், வீராணம் திட்டம் விஷயத்திலே பல கோடி ரூபாய்
அரசுக்கு நஷ்டம் என்று சொல்லி, அதை விளையாட்டாக இந்த
அவையிலே பேசினால், என்னைப் போன்றவர்களோ, அல்லது
நம்மைப் போன்றவர்களோ, எப்படி எண்ணுவது? கோடிக்
கணக்கான ரூபாய் செலவாகியிருக்கிறது—முக்கியமான பிரச்னை.
அவ்வளவு பணம் பாழாகக் காரணமாக இருந்தவர்கள் மேல்
நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக செயல்
படுமா? அல்லது இன்னும் பரிசீலனை செய்யுமா? இல்லை
போன பிறகு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இங்கே பொது
நிறுவனங்கள் குழு கொடுத்த அறிக்கை இருக்கிறது, எல்லோரும்
படித்திருக்கிறார்கள். அதில், என்ன, என்ன செய்ய வேண்டு
மென்று சொல்லியிருக்கிறார்கள், செய்கிறோம்.

(பிற்பகல் 2-00)

1. தென் சென்னையில் (இந்திரா நகர், பெசன்ட் நகர்,
பகுதிகளில்) நாளொன்றுக்கு சுமார் 1 மில்லியன் லிட்டர் குடிநீர்
வழங்கப்பட்டு வந்ததை, நிலத்தடி நீரை (கிணறுகளிலிருந்து)
எடுத்து 2 மில்லியன் லிட்டராக அதிகப்படுத்தப்பட்டது. இன்
னும் 1 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீரை இந்தப் பகுதிகளுக்கு
வழங்குவதற்காக மற்றொரு கிணறு அமைக்கப்பட்டு வருகிறது.

2. வட சென்னைக்கு, ரூ. 121 இலட்சம் செலவில், நாமரைப்
பாக்கத்தில் உள்ள குழாய்க் கிணறுகளிலிருந்து கிடைக்கும்
நிலத்தடி நீரைக் கொண்டு வந்து அண்ணா பூங்காவிலுள்ள
(Robinson Park) நிலமட்ட குடிநீர்த் தொட்டிகளில்
நிரப்பி, வழங்குவதற்கு திட்டம் செயலிலுள்ளது. இது இவ்
வாண்டு முடிவிற்குள் செயல்படுத்தப்படும். இதனால் நாளொன்
றுக்கு சுமார் 18 மில்லியன் லிட்டர் அதிகப்படி குடிநீர் கிடைக்கும்.

3. சென்னை நகரிலுள்ள 73 குடிசைப் பகுதிகளுக்கு
குடிநீர் வழங்க ரூ. 29.6 இலட்சத்தில் வேலைகள் துவங்கப்பட்
டுள்ளன.

4. சென்னை நகரில் புதிதாக சேர்க்கப்பட்ட 12 ஊராட்சி
பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வழங்க சுமார் ரூ. 206 இலட்
சங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனை
யில் உள்ளன. மேலும், இப்பகுதிகளில் ஒன்றான திருவான்மி
யூரில் ஏற்கனவே வாரியத்தின் ஆய்வின் மூலம் தகுந்த அளவு
நீர் கிடைக்கக் கூடிய கிணறுகள் தோண்டுவதற்கு விஞ்ஞான
முறையில் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்
திலேயே இவ் வேலைகள் துவங்கப்படும்.

5. இது தவிர புதிதாக சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சிகளில்
ஒரு முழு அளவு கழிவு நீர் அகற்றும் திட்டம் செயல்படுத்த
நீண்ட காலம் ஆகும் என்பதால் தற்காலிகமாக கழிவு நீரை
அகற்ற தகுந்த அளவு ஊர்திகள் (Sewage Vans) வாங்க
இவ்வருடத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சென்னை நகரில் குடிநீர், கழிவு நீர் அமைப்புகளை
மேலும், சென்னை நகரில் குடிநீர், கழிவு நீர் வந்த பணி
சீரமைக்கும் நோக்கத்துடன் மாநகராட்சி செய்து வந்த பணி
களை மேற்கொண்டு நடந்த இவ்வா டில் சுமார் ரூ. 296
இலட்சங்கள் செலவிடப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர், கழிவு நீர் அபிவிருத்திக்கான
சென்னைப் பெருநகர் குடிநீர், கழிவு வளர்ச்சித் திட்டம். உலக
திட்டங்களை வகுக்க ஐக்கிய நாடுகள் கலந்தறிஞர்களால் (Consul-
சுகாதார இயக்கம் உதவியின் கீழ் கலந்தறிஞர்களால் முப்புதாண்டு
tants) விரிவான ஆய்வு செய்யப்பட்டு அடுத்த
களுக்குத் தேவையான இட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

[illegible] இலட்சங்கள் மதிப்பீட்டில் சில
[illegible]யாக ரூ. 954 இலட்சங்கள் மதிப்பீட்டில் செயல்
[illegible] நிறைவேற்ற உலக வங்கி கடனுதவியுடன் செயல்
[illegible] அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இவ் [illegible]டித் திட்டத்தின் கீழ் நகரின் குடிநீர் அமைப்பில்
இவ் [illegible]டித் திட்டத்தின் கீழ் இவற்றைத் தடுத்து கிடைக்
ஏற்படுகின்ற நீர்க்கசிவு, வீணாக்குதல் இவற்றைத் தடுத்து கிடைக்
கும் நீரைப் பாதுகாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கழிவு
நீரேற்றும் இயந்திரங்களைப் புதுப்பிக்கவும், திட்டமிடப்பட்டுள்
ளது. இதனால் கூவம் ஆறு [illegible] இதர நீரோடைகளில் கழிவு
நீர் கலப்பதை பெரும் அ[illegible]த்த இயலும். இத்திட்டத்தின்
மற்றொரு முக்கிய [illegible] நீர்க் குழாய்களில் ஏற்படும்
அடைப்புகளை [illegible]கந்த இயந்திரங்கள் ரூ. 42
இலட்சம் செலவில் [illegible]தேசிக்கப்பட்டுள்ளது. இதன்
மூலம் மனிதனின் [illegible] மனிதனே மூழ்கி அடைப்பை
நீக்கும் அவலத்தன்[illegible]போ[illegible]படும். இத்திட்டத்தின் கீழ்
[illegible]ள்ள எல்லா செயல்[illegible] ஆண்டுக்குள் நிறைவேற்ற
[illegible]த்தேசிக்கப்பட்டுள்ளன.

[illegible] துரையின் பேரில் இரண்டு
மேலும், கலந்தறிஞர்களின் [illegible] முதலாவது, இப்பொழுது
இட்[illegible]ள் பரிசீலனையி[illegible] கழிவு நீரை சுத்தப்படுத்தி,
கட்[illegible] வீணாக செ[illegible]படும் கழிவு நீரை சுத்தப்படுத்தி,
[illegible] தொழிற்சாலைகளுக்கு வழங்கி, அத் தொழிற்சாலை
[illegible] தற்போது வழங்கப்படும் நிலத்தடி நீரை சென்னை
நகர் மக்களின் குடிநீர்த் தேவைக்கு வழங்குதல், இதன் மதிப்பீடு
சுமார் ரூ. 600 லட்சம். இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு
40 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும்.

இரண்டாவது, செங்குன்றம், சோழவரம், பூண்டி, இம்
மூன்று நீர்த் தேக்கங்களில் உள்ள நீர் தற்பொழுது சுமார்
50 சதவிகிதம் முதல் 60 சதவிகிதம் வரை (பத்திரிகையில் 30 ச
விகிதம் [illegible] சதவிகிதம் என்று போட்டிருந்தார்கள்
வெப்பத்தினால் ஆவியாகவும், கசிவுற்றும், நீரிழப்பு ஏற்ப
கிறது. நீர் ஆவியாக மாறிக் குறைவதைத் தடுக்கும் நோக்கோ
நில மட்ட நீரை [illegible] பாதுகாத்து நிலத்தடி

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இங்கே பொது நிறுவனங்கள் குழு கொடுத்த அறிக்கை இருக்கிறது, எல்லோரும் படித்திருக்கிறார்கள். அதில், என்ன, என்ன செய்ய வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள், செய்கிறோம்.

(பிற்பகல் 2-00)

1. தென் சென்னையில் (இந்திரா நகர், பெசன்ட் நகர், பகுதிகளில்) நாளொன்றுக்கு சுமார் 1 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்ததை, நிலத்தடி நீரை (கிணறுகளிலிருந்து) எடுத்து 2 மில்லியன் லிட்டராக அதிகப்படுத்தப்பட்டது. இன் னும் 1 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீரை இந்தப் பகுதிகளுக்கு வழங்குவதற்காக மற்றொரு கிணறு அமைக்கப்பட்டு வருகிறது.

2. வட சென்னைக்கு, ரூ. 121 இலட்சம் செலவில், நாமரைப் பாக்கத்தில் உள்ள குழாய்க் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நிலத்தடி நீரைக் கொண்டு வந்து அண்ணா பூங்காவிலுள்ள (Robinson Park) நிலமட்ட குடிநீர்த் தொட்டிகளில் நிரப்பி, வழங்குவதற்கு திட்டம் செயலிலுள்ளது. இது இவ் வாண்டு முடிவிற்குள் செயல்படுத்தப்படும். இதனால் நாளொன் றுக்கு சுமார் 18 மில்லியன் லிட்டர் அதிகப்படி குடிநீர் கிடைக்கும்.

3. சென்னை நகரிலுள்ள 73 குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ரூ. 29.6 இலட்சத்தில் வேலைகள் துவங்கப்பட் டுள்ளன.

4. சென்னை நகரில் புதிதாக சேர்க்கப்பட்ட 12 ஊராட்சி பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வழங்க சுமார் ரூ. 206 இலட் சங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனை யில் உள்ளன. மேலும், இப்பகுதிகளில் ஒன்றான திருவான்மி யூரில் ஏற்கனவே வாரியத்தின் ஆய்வின் மூலம் தகுந்த அளவு நீர் கிடைக்கக் கூடிய கிணறுகள் தோண்டுவதற்கு விஞ்ஞான முறையில் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வருடத் திலேயே இவ் வேலைகள் துவங்கப்படும்.

5. இது தவிர புதிதாக சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சிகளில் ஒரு முழு அளவு கழிவு நீர் அகற்றும் திட்டம் செயல்படுத்த நீண்ட காலம் ஆகும் என்பதால் தற்காலிகமாக கழிவு நீரை அகற்ற தகுந்த அளவு ஊர்திகள் (Sewage Vans) வாங்க இவ்வருடத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சென்னை நகரில் குடிநீர், கழிவு நீர் அமைப்புகளை சீரமைக்கும் நோக்கத்துடன் மாநகராட்சி செய்து வந்த பணி களை மேற்கொண்டு நடந்த இவ்வாண்டில் சுமார் ரூ. 296 இலட்சங்கள் செலவிடப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர், கழிவு நீர் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுக்க ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் உலக சுகாதார இயக்கம் உதவியின் கீழ் கலந்தறிஞர்களால் (Consul- tants) விரிவான ஆய்வு செய்யப்பட்டு அடுத்த முப்பதாண்டு களுக்குத் தேவையான திட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

உடனடியாக ரூ. 954 இலட்சங்கள் மதிப்பீட்டில் இவ திட்டங்கள் நிறைவேற்ற உலக வங்கி கடனுதவியுடன் செயல் படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இவ் உடனடித் திட்டத்தின் கீழ் நகரின் குடிநீர் அமைப்பில் ஏற்படுகின்ற நீர்க்கசிவு, வீணாக்குதல் இவற்றைத் தடுத்து கிடைக் கும் நீரைப் பாதுகாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கழிவு நீரேற்றும் இயந்திரங்களைப் புதுப்பிக்கவும், திட்டமிடப்பட்டுள் ளது. இதனால் கூவம் ஆறு மற்றும் இதர நீரோடைகளில் கழிவு நீர் கலப்பதை பெரும் அளவு [illegible]த்த இயலும். இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய பகுதியா[illegible]வு நீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை [illegible]வத[illegible]கந்த இயந்திரங்கள் ரூ. 42 இலட்சம் செலவில் [illegible]தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதனின் க[illegible] நீ[illegible] மனிதனே மூழ்கி அடைப்பை நீக்கும் அவலத்தன்மை போக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் [illegible]ள்ள எல்லா செயல்களும் இரண்டு ஆண்டுக்குள் நிறைவேற்ற [illegible]த்தேசிக்கப்பட்டுள்ளன.

மேலும், கலந்தறிஞர்களி[illegible]ந்துரையின் பேரில் இரண்டு திட்டங்கள் பரிசீலனையில் உள்ள[illegible]. முதலாவது, இப்பொழுது கடலில் வீணாக செலுத்தப்படும் கழிவு நீரை சுத்தப்படுத்தி, அத் தொழிற்சாலை ஆதனை தொழிற்சாலைகளுக்கு வழங்கி, களுக்கு தற்போது வழங்கப்படும் நிலத்தடி நீரை சென்னை நகர் மக்களின் குடிநீர்த் தேவைக்கு வழங்குதல், இதன் மதிப்பீடு சுமார் ரூ. 600 லட்சம். இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 40 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும்.

இரண்டாவது, செங்குன்றம், சோழவரம், பூண்டி, இம் மூன்று நீர்த் தேக்கங்களில் உள்ள நீர் தற்பொழுது சுமார் 50 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை (பத்திரிகையில் 30 சத வீதம் 40 சதவீதம் என்று போட்டிருந்தார்கள்) வெப்பத்தினால் ஆவியாகவும், கசிவுற்றும், நீரிழப்பு ஏற்படு கிறது. நீர் ஆவியாக மாறிக் குறைவதைத் தடுக்கும் நோக்கோடு நில மட்ட நீரை நிலத்திற்கடியில் பாதுகாத்து நிலத்தடி

[திரு எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 19

நீருடன் இணைந்து உபயோகிக்க (Conjunctive use) திட்ட
மிடப்பட்டுள்ளது. இம்முறை மற்ற நாடுகளில் வெற்றிகரமாக
செயல்படும் திட்டமாகும். இது பற்றிய ஆய்வினை மேற்கொள்ள
ஐக்கிய நாடுகள் மேம்பாடுத் திட்டக் குழுவினை உதவிக்கு அணுகப்
பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றி பெற்றால், நகருக்கு நீர்
வழங்கும் வழிமுறைகளுக்கு ஓர் சிறந்த சிக்கனமான மாற்றுத்
திட்டம் ஆக முடியும்.

வாரிய அமைப்பின் மூலமாகவும், உலக சுகாதார நிறுவனம்
உலக வங்கி போன்ற நிறுவனங்களின் தொழில் நுட்ப மற்றும்
பண உதவியினுடனும் சென்னைப் பெருநகரில் குடிநீர், கழிவுநீர்
அமைப்புகளை சீரிய முறையில் திருத்தி விரிவாக்க மாண்புமிகு
முதல்வரின் தலைமையில் இவ்வரசு தீவிர முயற்சி எடுத்து
வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு நான்
சொன்ன பதில்கள் அவர்களுக்கு திருப்தியளிக்கும் என்று கருதி,
அத்தோடு நான் சிலர் சொன்ன குறைகளையெல்லாம் குறித்து
வைத்திருக்கிறேன். இன்னும் திரு. ஆறுமுகம் போன்றவர்
களுக்கு கூட பதில் எழுதி ரெடியாக வைத்திருக்கிறேன்.
நாளைக்கோ அல்லது வேறு எப்பொழுதோ தனியாகக் கேட்டால்
அவர்களுக்குத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். கன்னியா
குமரி மாவட்டத்தில் ரூரல் ஏரியாவை மாற்றம் செய்வது பற்றி
கேட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலித்து ஒரு சர்வே
செய்து அரசு முடிவு எடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.
இப்பொழுது எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல நேரம் இல்லை.
அதனால் மணி இரண்டாகிவிட்ட காரணத்தினால் மாண்புமிகு
அம்பிகாபதி போன்றவர்கள் கை தூக்கினாலும், கையை இறக்
கும்படி கேட்டுக்கொண்டு எனது இந்த மூன்று மானியங்களையும்
நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது
இடையிலே நான் ஒரு விஷயம் கேட்க எழுந்திருந்த போது,
கடைசியில் கேட்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்
பொழுது மணியாகிவிட்டது என்கிறார்கள். இப்பொழுது இங்கே
கொடுத்த வாக்குறுதியையே நிறைவேற்ற முடியவில்லை அவர்
களால். அனைத்திந்திய அளவிலே உள்ள கட்சி மற்றும் தொழிற்
சங்கத் தலைவர்களுக்கு சென்னையில்—வசிக்கிறார்கள். அவர்
களுக்கு வீட்டு வசதி கொடுப்பதில், வீட்டு வசதி வாரியத்தின்
மூலம் வீடுகள் கொடுக்க முன் உரிமை கொடுக்க அரசு முன்வருமா
என்பதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர்
அவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

1979 ஏப்ரல் 19]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது
கைத்தறி, விசைத் தறி நெசவாளர்களுக்கு சட்டங்கள் அமலாக்
கப்படுவது இல்லை. குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்க
ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும், சட்டங்கள் போட்டாலும்
போதாது, அதை அமல் நடத்த வேண்டும் என்று இயக்கம்
நடத்துகிறபோது, அங்கே போலீஸ் தலையிட்டு, அதைத் தடுக்
காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே வாக்குறுதி கொடுத்தது போல் திரு.
ராஜா சுப்பிரமணியம் கொடுத்த பரிந்துரை அடிப்படையில்,
சட்டங்கள் உருவாக்கப்பட்டு, அது அநேகமாக இங்கே இந்தக்
கூட்டத் தொடருக்குள்ளாகவே அறிமுகப்படுத்தப்படும். (குறுக்
கீடு) அவர்கள் அறிக்கையை இங்கே வைப்பதாக இல்லை. நமக்கு
வேண்டியது சாப்பாடு. எப்படி சமைத்தீர்கள், எங்கே சமைத்
தீர்கள் என்று பார்க்க வேண்டாம். (குறுக்கீடு) நாம் சமைத்து
இருப்பது கோப்ரா கேஸ்ஸில் அல்ல. எப்போதும் சமைக்கிற
இடத்தில் சமைக்கிற முறையில் தான் சமைத்து இருக்கிறோம்.
அந்தச் சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்
படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்,
இந்தச் சட்டங்களை இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்
ளாகவே அமல் படுத்த முடியுமா என்பதைக் குறித்தும் இந்த
அரசு புரட்சித் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு ஆலோசித்
துக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : துணைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே எங்கள் கட்சியைச் சேர்ந்த
திரு. ரமணி அவர்கள் பேசியிருக்கிறார்கள். மதுரா கோட்ஸ்
மில்லில் 20,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் 1975—76-ம்
ஆண்டு போனஸ் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்
கிறார்கள். அது இன்னும் பட்டுவாடா செய்யப்பட வில்லை.
அது சம்பந்தமாக கோர்ட்டுக்கு விடப்பட்டு இருக்கிறதா,
பலமுறை வற்புறுத்தியும் அரசு தரப்பில் இருந்து ரெபரன்ஸ்
கொடுக்கவில்லை. ரெபரன்ஸ் கொடுக்க வற்புறுத்தினால் ரெப
ரன்ஸ் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு, துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாதிரி கேள்விக்கு இந்த அரசு பதில்
சொல்வது இல்லை. ஏனென்றால், ஒரு தொழில் தகராறு நடந்த
பிறகு ஒப்பன் ரிப்போர்ட் என்று அந்த அறிக்கையை அனுப்பி
விடுவார்கள். கான்பிடன்சியல் ரிப்போர்ட் என்கிற ஒன்றையும்
கமிஷனர் மூலமாக அரசு செயலாளருக்கு சென்று, அரசு செய
லாளர் அமைச்சருக்கு அதை அனுப்புவார்கள். அவர்கள் கார
ணங்களை எல்லாம் எழுதி

This may be referred for adjudication. Adjudication may be denied..........
என்று எழுதி அனுப்புவார்கள். அதையெல்லாம் படித்துப்
பார்த்து அமைச்சர் முடிவு எடுப்பார். முடிவு எடுப்பது அமைச்சர்
தான். கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொல்வதும் அமைச்சர்
தான். அவருக்குத் தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அதி
காரிகளுக்கு இல்லை. அதை படிக்க நேரம் இல்லாததால்
படிக்கவில்லை. இதுவரையிலும் இருந்த அரசு அவர்கள் காலத்
தில் அனுப்பி இருந்ததை விட இரண்டு மடங்கு வழக்குகளை
கிட்டத்தட்ட 700 வழக்குகளை இந்த ஆட்சி வந்த பிறகு நீதி
மன்றத்திற்கு அனுப்பி இருக்கிறோம். நாங்கள் ஒரு முறை நீதி
மன்றத்திற்கு அனுப்பவில்லை என்று எழுதி விட்டால், நீங்கள்
திரும்பவும் ரீகன்சிடரேஷன் கொடுத்து இருக்கலாம். அதையும்
பரிசீலனை செய்ய ஹைக்கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. அதிலே
ஒரு கஷ்டம் இருக்கிறது. மறு பரிசீலனை செய்ய வேண்டும்
என்று சொன்னால் முதலாளிக்கு ஹியரிங் கொடுக்க வேண்டும்
என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது. அவர்களைக்
கேட்டு, அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். நான் ஏற்கனவே
தெரிவித்ததைப்போல் டி.வி.எஸ். பிரச்னையை அனுப்பி இருக்
கிறோம். அதிகமாக அனுப்பியிருக்கிறோம். மறுத்து சொல்லி
யிருக்கிறோம் என்றால் சில வழக்குகளில் நியாயம் இல்லை
என்று கருதி தள்ளி இருப்போம் என்று எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்
னையிலும், மாவட்டங்களிலும் உள்ள அரசு தனியார் நிறுவனங்
களில் பணிபுரியும் மணமாகாத தன்னிச்சையாக தங்கும்
பெண்களுக்கு பாதுகாப்பான வசதியில் தமிழ்நாடு வீட்டு
வசதி வாரியம் வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத்தலைவர்
அவர்களே, 5,6 தினங்களுக்கு முன்னால் தான் அந்த வாரியத்
தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, பிரதம அமைச்ச
ரோ, குடியரசுத் தலைவரோ அடிக்கல் நாட்டியிருக்கிறார்
என்று நினைக்கிறேன். எனக்கு சரியாக நினைவில்லை. கால்
கோள் விழா செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்
பினர் ஆறுமுகம் மகிழ்ச்சி அடையலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, குரோம்
லெதர் பாக்டரி தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்
கள். அது பற்றி ஏதாவது சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, கிளாஸ் பாக்டரி, குரோம் லெதர் பாக்டரி பற்றி
நான் எழுதி வைத்துக் கொண்டு இருக்கிறேன். நேரம் அதிக
மானதால் அது பற்றி பேசவில்லை. நான் எழுதி வைத்துள்ளதில்
3/4-ல் பகுதி. நீங்கள் சொன்னது தான் 1 1/2 பக்கம் வந்து
இருக்கிறது. அலட்சியமாக இல்லை. கவனித்துக் கொண்டு
தான் இருக்கிறேன். அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதற்கு
நடவடிக்கை எடுக்கிறேன். ஒரு தொழிற்சாலை நடத்தும்
போது லாபம் வருகிறது என்கிற வரையில் நடத்திக் கொண்டு
இருக்கிறார்கள். நஷ்டம் வர ஆரம்பித்த பிறகு, ஒவ்வொரு
கடனாக லெண்டிங் இன்ஸ்டிடியூஷனிடம் வாங்கி, 5-6 ஆண்டு
களுக்கு தொடர்ந்து நஷ்டம் வந்தால் மூடிவிட்டுப் போய்
விடுகிறார்கள்.

[பிற்பகல் 2-10]

That is what is happening now.

ஆக அது பர்ஸ்ட் இயர் ஆப் லாஸ் என்று வந்த உடனே
மானிட்டரிங் பண்ண வேண்டும். அதைப் பற்றி பரிசீலனை
பண்ண வேண்டும். அதெல்லாம் இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்
மெண்டில் வருகிறது. அந்த இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்ட்
மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருக்கின்றது. அவர்
களும், அரசின் லேபர் டிப்பார்ட்மெண்ட், செயலாளரும்,
நானும் அதைப் பற்றி எல்லாம் கலந்து பேசுகிறோம். ஒரு
தொழிலை கொஞ்ச நாள் நடத்துகிறார்கள். பிறகு 67 லட்சம்
70 இலட்சம் நஷ்டம் வருகிறது என்று சொல்லி திடீரென்று
அரசிடம் கொடுத்துவிட்டு தப்பித்து ஓடிச் செல்லப் பார்க்கி
றார்கள். அதிலே இருந்து அவர்களையும் விட்டுவிடாமல்
தொழிலாளர்களும் நடுத் தெருவில் நின்று விடாமல் அரசு
ஒரு தந்திரமான முறையில் அதாவது டேக்ட்புல்லாக டீல்
பண்ண வேண்டி இருக்கிறது. அந்த முறையில் அரசு ஆவன
செய்யும். அவ்வாறு மூடிவிட்டு ஓடாமல் பார்த்துக் கொள்
வதற்கும் சட்டங்கள் ஏதாவது கொண்டு வர முடியுமா என்றும்
பரிசீலிக்க வேண்டும் என்று புரட்சித்தலைவரவர்கள் சொல்லி
இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு ; தலைவரவர்களே, தர்மபுரி
மாவட்டத்தில் 400 இலட்ச ரூபாயில் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்
பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லி
இருந்தார்கள். ஆகவே அதைப் பற்றி சொல்வார்கள் என்று
எதிர் பார்த்தேன். ஒன்றுமே சொல்லவில்லை. ஆகவே அதைப்
பற்றி ஏதாவது சொல்வார்களா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை அமைச்சரின் அறையில் சென்று கேளுங்கள். சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 29

திருவாளர்கள் கு. ரமணி. மு. அம்பிகாபதி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் சோ. பாலகிருஷ்ணன், அ. சுவாமிதாஸ் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,[illegible]50,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 33

திருவாளர்கள் ஏ. கோவிந்தராசன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் சோ. பாலகிருஷ்ணன், அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,65,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 49

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி, ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

143. தமிழ் நாடு 1968 ஆம் ஆண்டு காதி-கிராமத் தொழில் வாரிய விதிகளில் திருத்தமொன்றுசெய்வது குறித்து துறையின் 4—1—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 19-ல் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1959ஆம் ஆண்டு காதி-கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது).

144. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்
கீழ் தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ள பாண்டியன் கிராம
வங்கிகளின் கிளைகள் அனைத்தையும் அங்கீகாரம் (ஏற்பளிக்கப்
பட்ட) பெற்ற வங்கியாக சேர்த்துக் கொள்வது குறித்து வணிக
வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 23—2—1979 ஆம் தேதி
யிடப்பட்ட அரசாணை எண். 199-ல் வெளியான அறிவிப்பு
[தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின (தமிழ்
நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப்பட்டது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*170. கோரிக்கை எண். 49-பொதுச் சுகாதாரம் மற்றும்
குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய கொள்கை விளக்கக்
குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

குறிப்பு : தேவையிருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

கோரிக்கை எண்கள். 29, 33, 49-க்கான வெட்டுத் தீர்மானங்
களின் பட்டியல் 18—4—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்
பப்பெற்றன.

*18—4—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்
பெற்றன.

இணைப்பு I.

[498 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 721-க்
கான விடையைக்காண்க].

பல்லவமேடு தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்
துறையால் 1970–71 ஆம் ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப்
பெற்றது. மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால்
இதே பகுதியில் 19[illegible]3–54 ஆம் ஆண்டுகளில் சில இடங்களில்
அகழ்வாய்வு செய்யப்பெற்றது.

பல்லவமேடு காஞ்சிபுரத்தில் ஒரு மேடான பகுதியாக
விளங்குகிறது. பல்லவ மன்னர்களுடன் தொடர்பு கொண்டு
விளங்கியது என கூறப்படுகிறது. இந்த இடத்தில் தொன்மை
யான வரலாற்றை அறிவதற்காக அகழ்வாய்வு செய்யப்
பெற்றது. மூன்று குழிகள் தோண்டப்பட்டன. அகழ்வாய்
வில் கிடைத்த பொருட்கள் பல்லவமேடு பகுதியின் வரலாற்றை
அறிய உதவுகிறது. மூன்று வரலாற்றுக் காலத்தில் இங்கு
மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று அச்சான்றுகள் கூறுகின்றன.

முதற் காலத்தில் (Period I) சிகப்பு நிற பானை ஓடுகள்
அதிக அளவிலும் சுடுமண்பொம்மைகளும், [illegible]
கிடைத்தன. அகழ் வாய்வுக் குழியின் [illegible]

இருந்தது. முன்பு வேகவதி ஆறு இங்கு ஓடிக் கொண்டிருந்தது. என்பதை காட்டுகின்றது. பல்லவர் காலத்தில் கி.பி. 6 முதல் 9-ம் நூற்றாண்டுகளில் காஞ்சி நகரை ஒட்டி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். பின்பு ஆற்றின் போக்கு மாறிவிட்டது. தற்பொழுது காஞ்சிபுரத்திலிருந்து 2 கி. மீ. தொலைவில் ஓடுகின்றது. இக்குழியில் 6 மீட்டர் ஆழத்தில் மண் ஜாடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

(Period II) இரண்டாவது காலத்தின் மனிதன் வாழ்ந்ததற்கும் இரு பிரிவான கட்டிட அமைப்புகள் (Two structural phases) இருந்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. முதல் பிரிவில் களிமண் மேடையும் எரிந்ததற்கும் அடையாளங்கள் காணப்பட்டன. அதிலிருந்து கரித்துண்டுகள் சேகரிக்கப்பட்டன. குறியீடுகள் உள்ள (graffite) பானை ஓடுகள் கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், வர்ணம் தீட்டப்பட்ட பானை ஓடுகள், பச்சை நிறமணிகள் கிடைத்துள்ளன.

(Period III) மூன்றாவது காலத்தில் மண் குவியல் (debris) அதிக அளவில் காணப்பட்டது. உடைந்த செங்கற்கள் (சுண்ணாம்புடன்) சில கருங்கற் பலகைகள் ஆகியவை சேர்ந்து காணப்பட்டன. இது உடைந்த கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். கட்டிடத்திற்கு ஏற்பட்ட அழிவு மிகவும் அதிகமானது. பல்லவ மன்னர்களின் ஆட்சி முடிவு காலமாகிய கி.பி. 8–9 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சண்டைகளினால் அழிந்திருக்கலாம். இப்பகுதியில் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப் பெற்ற மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இக்காலத்தில் மஞ்சள் நில கண்ணாடி மணிகள், புதை உருவங்கள், சுடு மண்ணால் ஆகிய சிவலிங்கம் சிவப்பு நிற பானை ஓடுகள், கறுப்பு நிற பானை ஓடுகள் கிடைத்தன.

இணைப்பு II.

[502 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 723-க்கான விடையைக் காண்க.]

பதில் : இல்லை.

ஆனால் கிராமப்புறங்களில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் கடன் வசதிகள் பற்றிய முழு தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கிராம கூட்டுறவு வீட்டு வசதி.

கிராம மக்களுக்குச் சீரான முறையில் வீடுகள் கட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, 1950-ம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதி சங்கங்கள் துவக்கப்பட்டன. தற்போது கிராமப்பகுதிகளிலுள்ள உறுப்பினர்களின் தேவையை நிறைவு செய்ய 365 கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன

[1979 ஏப்ரல் 19

இந்த சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கென
உச்ச நிலைக் கடனாக (Maximum Loan) ரூ. 10,000
அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்
துடன் 119 சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து
ஆண்டுகளில் இந்தச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் வாழும் உறுப்
பினர்களுக்கு ரூ. 130.00 லட்சம் கடன் வழங்கி, 1,635 வீடுகள்
கட்டியுள்ளன. இணையாத எஞ்சிய சங்கங்கள், அவற்றின் உறுப்
பினர்களுக்கு 1973 மார்ச்சு திங்களுக்கு முன்பு வழங்கிய கடன்
களைத் திரும்பப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன. புதிதாக
கடன் வழங்குவதில்லை.

கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்ட அரசே ரூ. 5,000 நேரடி
யாக வழங்கி வந்தது. இத்திட்டம் 1966-ம் ஆண்டு முதல் கிராம
வீட்டு வசதி பிரிவின மூலமும், வட்டார வளர்ச்சி அதிகாரிகள்
மூலமும், செயற்படுத்தப்பட்டு வந்தது. இதுகாறும் இத்திட்டத்
தின் கீழ் கிராமப்பகுதி மக்களுக்கு ரூ.359 லட்சம் கடன் வழங்கப்
பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறாததால்,
1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு
வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு மாற்றப்
பட்டது. அவ்வாறு கூட்டுறவுத் துறையோடு இணைக்கப்பட்ட
பிறகு 1976-77ம் ஆண்டில் கிராமப்பகுதிவாழ் மக்களுக்கு பயனளிக்
கும் வகையில் 10 வட்ட அளவிலான (Taluk level) ஊரக
கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துவங்கப்பட்டன. இந்தச்
சங்கங்களின் பணி போதுமானதாகத் தோன்றாததால் 1977-78-ம்
ஆண்டில் 50 கோட்ட அளவிலான ஊரக கூட்டுறவு வீட்டு
வசதிச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சங்கங்களை அமைக்கச்
சற்று காலதாமதமானதால் 30—6—78 வரை ஒப்பளிக்கப்பட்ட
தொகை சுமார் ரூ. 24 லட்சம் மட்டுமேயாகும்.

மக்கட் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில்
வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தீ முதலிய
வைகளால் பாதிக்கப்படும் கூறை வீடுகளில் குடியிருந்து வரு
கின்றனர். இக்கிராமப்புற மக்கள் இம்மாதிரி அபாயங்களால்
பாதிக்காதவாறு ஓட்டு வீடுகள் கட்டும் டணியினை மேலும்
உயர்த்தும் வண்ணம், 1978-79 ஆம் ஆண்டில் தொடங்கும்
ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், கிராமப்பகுதிகளில்
ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக '' ஒரு
லட்சம் வீடுகள் '' கட்டப்பட வேண்டும் என்று அரசு முடிவெடுத்
துள்ளது. ஆண்டு தோறும் கட்டப்படவிருக்கும் வீடுகளின்
எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை.
1978-79	10,000
1979-80 ..	20,000
1980-81 ..	20,000
1981-82 ..	25,000
1982-83 ..	25,000

1979 ஏப்ரல் 19]

இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு வெவ்வேறான மூன்று வகை வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

'எ' வகை வடிவமைப்பு ஒரு வீடு 3,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டுவதற்கு விழையும் உறுப்பினர்களுக்கு உகந்ததாகும்.

'பி' வகை வடிவமைப்புக்கு ஆகும் மதிப்பீட்டு செலவு ரூபாய் 4,000.

'சி' வகை வடிவமைப்புக்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 5,000.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களிடையே பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினராய் உள்ளவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அதிக அளவில் வீடுகள் கட்ட கடன் பெறுவதை ஊக்குவிக்கும் வண்ணம், அரிசனங்களுக்கும் அரிசனங்கள் பெருமளவு வாழுமிடங்களில் வீடுகள் கட்ட முன் வரும் பல்வேறு வகுப்பினருக்கும் மானியும் தரப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 600 ரூபாய் அல்லது வீட்டின் மதிப்பீட்டிச் செலவில் 20 சதவீதம் இவற்றில் எது குறைவோ, அந்த அளவுக்கு மான்யம் வழங்கப்படும். இந்த மானியத்தை பெறுபவருக்கு வீட்டின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 3,000-க்குள் (''எ'' வகை) இருக்க வேண்டும். இம்மானியத்தைப் பெற விழைவோரது ஆண்டு வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 4,200-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். '' பி '', '' சி '' வகை வீடுகளைக் கட்ட விரும்புவோருக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட மாட்டாது. ஊரக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் கடன் பெற விழையும் உறுப்பினர்கள், எவ்வகை வடிவமைப்பு உள்ள வீடாக இருந்தாலும், உழைப்பாகவோ அல்லது வீடு கட்ட பயன்படும் பொருள்களாகவோ அல்லது பணமாகவோ வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 20 சதவீதத்தை தங்கள் பங்காக செலுத்த வேண்டும். அரிசனங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைகளுக்காகும் வட்டியைத் தொடர்ந்து அரசு ஏற்கும்.

இத்திட்டத்தின் கீழ் '' லட்சம் வீடுகள் '' கட்ட வேண்டியுள்ளதால் நிதி நிலை வசதிக்குட்பட்டு, ஒரு வீட்டின் மதிப்பீட்டை ரூ. 5,000க்குள் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. உச்சவரம்பை ரூ. 10,000 ஆக உயர்த்தினால், பல ஏழை மக்கள் இதனால் பயன் அடைய முடியாது. கட்டும் வீடுகளின் எண்ணிக்கையும் குறையும். இது அரசின் கொள்கையல்ல.

[1979 ஏப்ரல் 19

இணைப்பு III.

[547-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன் பற்றிய குறிப்பு.

தமிழ்நாட்டில் 1978 ஆம் ஆண்டில் தொழில் அதிபர்களுக்கும்
தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவியது. தொழிலா
ளர்களின் நலனுக்கென உள்ள சட்டங்கள் அனைத்தின் விதிமுறை
களை கண்டிப்பாகச் செயல்படுத்தி தொழிலாளர்களின் நலனைப்
பாதுகாப்பதே அரசின் தலையாய கொள்கையாகும். தொழி
லாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அரசு
ஏற்றுக் கொள்ளும். அதே சமயத்தில், வேலை நிறுத்தங்கள்
நிகழ்வதைத் தடுக்க அல்லது அத்தகைய வேலை நிறுத்தங்கள்
நீடித்துக்கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண
வேண்டி, தொழில் தகராறுகளில் தலையிட்டு, செவ்விய முறை
யில் இணக்கம் செய்வதன் மூலமும், சுமுகமாக அவற்றிற்குத்
தீர்வு காண்பதன் மூலமும் உரிய காலத்தில் அவற்றைத் தீர்த்து
வைப்பதென்னும் நடைமுறையை அரசு மேற்கொண்டது.

1978 இல் இம்மாநிலத்தில் 6,61,245 தொழிலாளர்களை
வேலைக்கமர்த்தியுள்ள 10,541 தொழிற் பிரிவுகளில், 27-1-79
தேதி நிலவரப்படி 11 நிறுவனங்களில் மட்டுமே தொழில் தகராறு
கள் எழுந்தன; அவற்றின் மூலம் 2,775 தொழிலாளர்கள்
பாதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்
சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்த
வரையில் அவர்களுக்கு குறைந்தளவு ஊதியமும், நல்ல வாழ்க்
கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்ட
வழி பெற்ற அறிவிப்பின் மூலமும், சிறப்பு நடவடிக்கைகள்
மூலமும் ஏற்பாடுகள் செய்வதில் இந்த அரசு சிறப்பு நாட்டம்
செலுத்தியது. அத்தகைய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு
அளிக்கவும், அவர்களது நலனை மேம்படுத்தவும் வேண்டி அவர்
களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை அறிவிக்கவும், தொழி
லாளர் நல சட்டங்களை செயல்படுத்தவும் அரசு சிறப்பு நட
வடிக்கையை மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கை
களின் விளைவாகவும், தொழிலாளர் நலத்துறை தொழில்
தகராறுகளில் தலையிட்டு இணக்க ஏற்பாடு செய்ததன் விளை
வாகவும் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில்
சுமுகமான நல்லுறவு நிலவியதுடன், தொழிலாளர்களில் நலிந்த
பிரிவினர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.

மாநிலத்தில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில்
கீழ்க்காணும் வகைப்பாடுகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(i) தொழில் தகராறுகள் சட்டம்.

1979 ஏப்ரல் 19]

(ii) நிறுவனங்கள் சட்டம்.

(iii) ஊதியங்கள் சட்டம்.

(iv) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

(v) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

(vi) எடை அளவைகள் சட்டம்.

இவற்றோடு வேலைவாய்ப்புப் பணி, கைவினைஞர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் பற்றிய பணி குறித்து தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

I. தொழில் தகராறுகள் சட்டம்.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும், அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	1977.	1978.
(a) வரப்பெற்ற புகார்கள், தகராறு ஆகியவற்றின் எண்ணிக்கை ..	6,775	8,204
(b) புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை.	7,174 (முன்னரே முடிவு செய்யப்படாமல் உள்ளவைகள் உட்பட.)	8,741
(c) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை ..	1,978	2,184
(d) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை.	690	722
(e) சமாசத்திற்கு விடப்பட்ட தகராறு	34	31

மேற்சொன்ன (c), (d), (e) பிரிவுகளின் கீழ் வராதவை தனிப்பட்ட இணக்கமுறையில் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு, தகுந்த ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும்; அல்லது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதோ அல்லது வழக்குமன்றத் தீர்ப்புக்கு விட வேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவையாகும்.

வேலையை நிறுத்தி விடுதல்.

இவ்வாண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு :—

	1977.	1978.
(a) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை ..	298	378
(b) இழந்த உழைப்பு நாட்கள் ..	26,16,963	21,55,675 (பணியாற்றிய மொத்த உழைப்பு நாட்களில் 1 சதவீதத்திற்கும் குறைவு.)

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த தொழில் வாரியான விவரங்கள் வருமாறு :—

தொடர் எண்ணும், தொழிலும். (1)	வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. (2)	ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3)	இழந்த உழைப்பு நாட்கள். (4)
1977—			
1. துணி ஆலைகள் ..	111	65,771	5,27,657
2. பொறியியல் ..	61	19,930	9,25,835
3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.	6	716	20,783
4. புகையிலை, பீடித் தொழில் ..	4	10,774	2,02,293
5. மலைத் தோட்டத் தொழில்கள் ..	21	7,994	1,41,262
6. ஏனையவை ..	95	76,181	7,99,133
மொத்தம் ..	298	1,81,366	26,16,963
1978—			
1. துணி ஆலைகள் ..	153	74,719	9,38,367
2. பொறியியல் ..	75	36,897	6,15,968
3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.	5	654	11,496
4. புகையிலை, பீடித் தொழில் ..	5	3,327	7,591
5. மலைத் தோட்டத் தொழில்கள் ..	19	12,871	1,13,648
6 ஏனையவை ..	121	41,197	4,68,605
மொத்தம் ..	378	1,69,665	21,55,675

1978ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு:-

(a) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம்	62
(b) தாமாகவே முன்வந்து வேலை தொடங்கப்பட்டது.	29
(c) தொழிலாளர் நலத்துறை அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை	265
(d) காலவரையறை அற்றவை	..
(e) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை	..
(f) மூடப்பட்டவை	6
(g) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை	16
மொத்தம் ..	378

1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் திருத்தச் சட்டம்.

இச்சட்டத்தின்படி, சராசரி 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழிலதிபர்கள், வேலை முடக்கத்தின்போது ஒரளவு ஆட்களை நிறுத்திவைக்கவோ, ஆட்குறைப்பு செய்வதற்கோ நிறுவனங்களை மூடுவதற்கோ கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் முன்அனுமதியைப் பெறவேண்டும்:—

(1) 25-M பிரிவின் கீழ் வேலை முடக்கத்தின் போது ஒரளவு ஆட்களை நிறுத்தி வைக்க அனுமதி பெறுவதற்கு, 60-B விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(2) 1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்தச்) சட்டத்தின் 25-N பிரிவின்கீழ் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி பெறுவதற்காக, 61-A விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(3) நிறுவனத்தை மூடுவதற்கு, அனுமதி பெறுவதற்காக 61-B விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மாநில அரசுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

வரப்பெற்று, முடிவு எடுக்கப்பட்ட, முடிவெடுக்கப்படாமலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருமாறு :—

(1)	வேலை முடக்கத்தின் போது ஆட்களை நிறுத்தி வைத்தல். (2)	ஆட்குறைப்பு (3)	நிறுவனத்தை மூடுதல். (4)
(a) வரப்பெற்ற விண்ணப்பங்கள்.	3	1	2
(b) முடிவெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள்			
(1) அனுமதி மறுக்கப்பட்டவை.	1	1	1
(2) விண்ணப்பங்கள் திரும்பப் பெறப்பட்டதாக தள்ளுபடி செய்யப்பட்டவை ..	2	..	..
(3) அனுமதி வழங்கப்பட்டவை.	..	..	..
(4) குறைபாடுள்ளதாகத் திருப்பி அனுப்பப்பட்டவை ..	..	..	**
(5) இன்னும் முடிவெடுக்கப் படாமல் உள்ளவை ..	..	..	..

** உச்ச நீதி மன்றத்தினால் தொழில் தகராறுகள் (திருத்தச் சட்டத்தின் 25 (0) பிரிவு நீக்கிவிடப்பட்டதால் ஒரு விண்ணப்பம் பயனற்றதாகிவிட்டது.

மதுரை ஸ்ரீ மீனாட்சி மில்ஸ், தங்களுடைய துறையின் ஒரு பகுதியில் ஆட்குறைப்புச் செய்ய அனுமதி கேட்டபொழுது தொழிலாளர் நல ஆணையாளர் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். சென்னை உயர்நீதி மன்றத்திற்கு இந்த விவகாரம நிர்வாகத்தினரால் கொண்டுவரப்பட்டது. உயர்நீதி மன்றம்,

தொழிலாளர் நல ஆணையாளரின் ஆணையை சரியானது என்று
தீர்மானித்து ரிட் மனுவை தள்ளுபடி செய்தது. ஆணைக்கு
எதிராக செய்துகொள்ளப்பட்ட ஒரு மேல் முறையீடு உயர்நீ
மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு, டியூப் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா
லிமிடெட்டின் டி. ஐ. சைக்கிள் பிரிவை மூட அனுமதி தர மறுத்து
விட்டது. இந்த கம்பெனி தொடர்பு கொண்டுள்ளதாக உச்ச
நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்ட ரிட் மனு ஒன்றின்மீது
அந்தகைய அனுமதிகளை மறுக்கும் அதிகாரத்தை மாநில அரசு
க்கு அளிக்கும் தொழில் தகராறு சட்டத்தின் 25 (o) பிரிவை,
உச்சநீதிமன்றம் நீக்கிவிட்டது.

நடப்பு ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.

(1) தமிழ்நாடு குரோமேட் கெமிக்கல்ஸ் லிமிடெட், ராணிப் பேட்டை.

ஐநூறு தொழிலாளர்களைக் கொண்ட இந்நிறுவனம், தோல்
பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் இரசாயனப்
பொருட்களைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. இந்
நிறுவனத்தில், ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலியவைகள்
அடங்கிய கோரிக்கைப் பட்டியல் குறித்துத் தகராறு ஏற்பட்டதன்
விளைவாக, முறையே 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
18 ஆம் நாள், 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம்
நாள் அன்றும் வேலை நிறுத்தம், கதவடைப்பு ஏற்பட்டன.
தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட நன் முயற்சியின்
பேரில், சென்னை தொழிலாளர் நல ஆணையாளரால் 1978 ஆம்
ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாள் அன்று இந்த தகராறு
தீர்த்து வைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள்
9 ஆம் நாள் அன்று பணி மறுபடியும் துவங்கப்பட்டது.

(2) நேஷனல் கார்பன் கம்பெனி, சென்னை - 19.

எண்ணூறு தொழிலாளர்களைக் கொண்ட மேற் சொன்ன நிறு
வனம் உலர் பாட்டரி செல் தயாரிக்கிறது. ஊதிய திருத்தம் முதலி
யவைகள் அடங்கிய கோரிக்கைப் பட்டியலைக் குறித்து கம்பெனி
யின் தொழிலாளர்கள் தகராறு ஒன்றை எழுப்பியதன் விளைவாக,
1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இரண்டாம் நாள் அன்று
தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட நன் முயற்சியின்
பேரில், சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரால் 1978 ஆம்
ஆண்டு பிப்ரவரி திங்கள் 9 ஆம் நாள் அன்று தகராறு தீர்த்து
வைக்கபபட்டது. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள்
10 ஆம் நாள் அன்று பணி மீண்டும் துவங்கப்பட்டது.

— —

(3) என்ஃபீல்டு இந்தியா லிமிடெட், சென்னை.

மோட்டார் சைக்கிள் உதிரி பாகங்களைத் தயாரிக்கும்
தொழிலில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம், நிதி நெருக்கடியினாலும்,
தொழிற் சம்பந்தப்பட்ட பதட்ட நிலையினாலும் 1977 ஆகஸ்ட்
டிலிருந்து மூடப்பட்டது. இந்நிறுவனத்தில் 1,500 தொழிலாளர்
கள் உள்ளனர். தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக்கொண்ட
நன் முயற்சியின் பேரிலும், சென்னை தொழிலாளர் நல துணைத்
துணை ஆணையாளரின் முன் நடைப்பெற்ற விவாதத்தின் பேரிலும்
தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே ஓர் உடன்
பாடு செய்து கொள்ளப்பட்டது. தொழிற்சாலை 1978 ஆம்
ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் அன்று மீண்டும் திறக்கப்
பட்டது.

(4) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், கொதிகலன் கருவி
களையும், ஏனைய துணைப்பாகங்களையும் தயாரிக்கிறது. நிர்
வாகத்தினர், தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச்
செய்து கொடுக்க வேண்டி, சுமார் 10,500 எண்ணிக்கையுள்ள
இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித்
திங்கள் 21 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.
சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் இரு தரப்பினருட
னும் விவாதங்களை நடத்தினார். அதன் விளைவாகவும், தொழி
லாளர் நல அமைச்சர் தலையிட்டதன் விளைவாகவும், தொழி
லாளர் நல ஆணையாளர் முன்பு உடன்படிக்கை ஒன்று ஏற்பட்ட
தோடு, 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 2-ம் நாள் அன்று
வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

(5) டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை, டால்மியாபுரம்.

இத் தொழிற்சாலை 1,200 தொழிலாளர்களை வேலைக்
கமர்த்தியுள்ளது. சில பண அனுகூலங்களைக் கேட்டு இத்
தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978 ஆம்
ஆண்டு ஜுலைத் திங்கள் இரண்டாவது வாரம் முதல் வேலை
நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல ஆணையாளர்
தொழிலாளர் நல வட்டார ஆணையாளர் (மத்திய) ஆகியோர்
முன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. தொழிலாளர்களிடையே
நிலவிய தகராறைத் தீர்த்துவைக்க தொழிலாளர் நல
அமைச்சரும் தனது நன் முயற்சியை எடுத்துக் கொண்டார்.
இதன் விளைவாக உடன்பாடு ஒன்று 1978 ஆம் ஆகஸ்டுத்

திங்கள் 11 ஆம் நாள் அன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்
நிபந்தனைகளின்படி, நிர்வாகம் அதற்கென தனிப்பட்ட முறை
யில் மானியமாக தொழிலாளர் அனைவருக்கும் 3.5 இலட்சம்
ரூபாயைக் கொடுக்க ஒப்புக் கொண்டது. இவ்வாறாக, கல்
உடைக்கும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும், தனிப்பட்ட
முறையில் ரூ. 300-ம் அவர்களுக்கு நாளொன்றுக்கு கொடுக்கப்
படுகின்ற ஊதியத்தில் ரூ. 2 உயர்வும் கொடுக்கப்பட்டது.
இந்த வேலை நிறுத்தம், 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள்
12 ஆம் நாள் அன்று வாபஸ் பெறப்பட்டது.

(6) மெட்டல்பாக்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட், சென்னை.

இந்த நிறுவனத்தில் சுமார் 700 தொழிலாளர்கள் பணியாற்றி
வருகின்றனர். 'இது கொள்கலன்களைத் தயாரிக்கிறது. பல
கோரிக்கைகள் குறித்து, சென்னை 'மெட்டல்பாக்ஸ் கம்பெனி
ஆஃப் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு எதிராக
'மெட்டல் பாக்ஸ்' பணியாளர் சங்கம் தொழில் தகராறு ஒன்றை
எழுப்பியது. தொழிலாளர் நல ஆணையாளர் 1978 ஆம்
ஆண்டு சூலைத் திங்கள் 11 ஆம் நாள் அன்று இத்தகராறைத்
தீர்த்து வைத்தார். இந்த உடன்பாடு சம்பளம், அகவிலைப்படி
மற்றும் ஏனைய சிறிய அளவிலான அனுகூலங்கள் ஆகியவற்றினை
இருத்தியமைப்பதற்கு வகை செய்கிறது.

(7) இ. ஐ. டி. பாரி லிமிடெட், இராணிப்பேட்டை.

இராணிப்பேட்டையில் உள்ள இ. ஐ. டி. பாரி லிமிடெட்,
உரங்கள் முதலியவற்றைத் தயாரித்து வருகிறது. இதில் 1,200
தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். நாட்கூலி
பெறும் தொழிலாளர்களை தகுதிகாண் பருவப்பட்டியல் தொழி
லாளர்களாக தரம் உயர்த்தி, நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பு
ஒன்றை எதிர்த்து இந்நிறுவனத் தொழிலாளர்கள் 1978 ஆம்
ஆண்டு சூலைத் திங்கள் 24 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம்
செய்தனர். இந்நிர்வாகம், 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள்
1 ஆம் நாள் முதல் கதவடைப்பு செய்தது, தொழிலாளர்
நல ஆணையாளர் மூலம் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தின
ருக்குமிடையே இணக்கம் ஒன்று உருவாகி உடன்படிக்கை
யும் ஏற்பட்டது. அதனால் வேலை நிறுத்தமும் கதவடைப்பும்
1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26-ம் நாள் அன்று முடி
வடைந்தது.

(8) இங்லீஷ் எலக்டிரிக் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை.

இந்த நிறுவனம், மின்சாரப் பொருட்களைத் தயாரித்து
வருகிறது. இதில் 2,000 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்
பட்டுள்ளனர். இக்கம்பெனித் தொழிலாளர்கள். பல கோரிக்
கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை அனுப்பினர். 1978 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 16 ஆம் நாளன்று சென்னையில்
உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் முன் நிர்வாகத்தினருக்கும்
தொழிலாளர்களுக்குமிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.
இந்த உடன்பாடு, உற்பத்தித்திறனுக்கேற்ப மாதமொன்றுக்கு
ரூ. 160அய் ஊதிய உயர்வு கொடுக்கவும் முன்பு கதவடைக்கப்
பட்டிருந்த காலத்திற்கான ஊதிய பாக்கிகள், ஊதியங்கள்
போன்ற கோரிக்கைகள் முன்னிட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும்
ஒரு மொத்தமாக ரூ. 1,600 தொகை வழங்கவும் வகை
செய்கிறது.

(9) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் வாரியம்.

தொழிலாளர்கள் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்குதல்
அவர்களுக்கு ஏனைய சில அனுகூலங்களைக் கொடுத்தல் போன்ற
பல கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பு
ஒன்றைக் கொடுத்தனர் அவர்கள் தங்களுடைய கோரிக்கை
களை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, 1978 ஆம் ஆண்டு நவம்பர்
திங்கள் 3 ஆம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்
கொண்டனர் தொழிலாளர்கள் மேற்கொண்ட தொடர்
உண்ணா விரதத்தை விட்டுவிட்டு தொழில் தகராறைத் தீர்த்து
வைப்பதில் ஒத்துழைக்குமாறு தொழிலாளர் நல அமைச்சர், அவர்
களைக் கேட்டுக் கொண்டார், இதன் பின்னர் சென்னையில்
உள்ள தொழிலாளர் நல துணை ஆணையாளர் (குறைந்தளவு
ஊதியங்கள்) முன் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக,
1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று நிர்வாகத்
தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஓர் உடன்படிக்கை
ஏற்பட்டு தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த தொடர்
உண்ணா விரதத்தை அந்நாள் மாலையில் அவர்கள் விட்டு
விட்டனர்.

(10) கார்போரண்டம் யூனிவர்சல் லிமிடெட், சென்னை.

இக்கம்பெனி தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகின்ற
மெருகூட்டும் அரைக்கும் (Polishing and Grinding) பொருட்களைத்
தயாரிக்கிறது. தொழிலாளர் ஒருவரை வேலையிலிருந்து தற்கா
லிகமாக நீக்க கொடுக்கப்பட்ட ஆணை ஒன்றை ரத்து செய்யுமாறு
கேட்டுக் கொண்டு இந்நிறுவனத்தைச் சேர்ந்த 900 எண்ணிக்கை
யுள்ள தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
6 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னையில்
உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் முன்பாகவும் தொழி
லாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்பாபகவும் நடை

பெற்ற விவாதங்களின் விளைவாக தொழிலாளர் நல சிறப்புத்
துணை ஆணையாளர் தொழிலாளர்களுக்கு 1978 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 23 ஆம் நாள் அன்று ஆலோசனை நல்க,
அவர்கள் அதன்படி 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம்
நாள் முதல் வேலைக்குத் திரும்பினர்.

(11) சன் பேப்பர் மில்ஸ், திருநெல்வேலி.

தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல். நாட்கூலி பெறும்
தொழிலாளர்களைப் பணியில் பயன்படுத்துதல் முதலியவைக்
குறித்து 'சன் பேப்பர் மில்ஸ் லிமிடெட்' ஆலையின் நிர்வாகத்
திற்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே 1978 ஆம் ஆண்டு
சனவரித் திங்கள் 27 ஆம் நாளன்று சென்னை, தொழிலாளர்
நல இணை ஆணையாளர் முன்பாக தொழில் தகராறுகள்
சட்டத்தின் 12(3) ஆவது பிரிவின்கீழ் ஓர் உடன்படிக்கை
ஏற்பட்டது.

1976-77 ஆம் ஆண்டுக்கான ஊதியங்களையும் அகவிலைப்
படிகளையும் திருத்தியமைத்தல், தற்காலிக நாள் கூலி பெறும்
தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தல் முதலியவை
போன்ற பிற பிரச்சினைகள் தொடர்பாக. மொத்த வருமானத்தில்
12 சதவீத ஊதியக் கொடையை முன்பணமாகத் தொழிலாளர்
களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருப்பி வசூலிக்கத்
தக்க தொகை ரூ. 175 சேர்த்துக் கொடுக்கப்பட்டது. இந்த உடன்
பாட்டின்மூலம் சுமார் 800 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(12) கூட்டுறவு சர்க்கரை ஆலை.

ஆம்பூர், மோகனூர், படாளம் ஆகிய இடங்களில் உள்ள
கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் சுமார் 3,300 தொழிலாளர்கள்
பணியாற்று வருகின்றனர். 1977-ல் ஊதியக் கொடை வழங்கல்
சட்டத்தின் திருத்தம் ஒன்று செய்தது தொடர்பாக 1977-78 ஆம்
ஆண்டுக்கு ஊதியக் கொடை வழங்குமாறு, இந்த ஆலைகளின்
தொழிலாளர்கள், தொழில் தகராறுகளை எழுப்பினர். தொழி
லாளர் சங்கங்கள் நிர்வாகத்துடனும் சர்க்கரைத் துறை இயக்கு
நருடனும் நேரடியாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளை
வாகவும் சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை
ஆணையாளர் முன் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தை
களின் விளைவாகவும், 1977-78, 1979-79 ஆகிய கணக்கு ஆண்டு
களுக்காக ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாட்டின் அடிப்படை
யில் உற்பத்திக்கு ஏற்ப ஊதியக் கொடையை தொழிலாளர்களுக்கு
வழங்குவதென ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

(13) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை (லிமிடெட்), ஆம்பூர்.

1976-77 ஆம் ஆண்டுக்கான ஊதியக் கொடையைக் கொடுக்கு
மாறு இவ்வாலை நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 800
தொழிலாளர்கள் 1978 சனவரியில் வேலை நிறுத்தம் செய்த
ளர். சென்னை, தொழிலாளர் நல சிறப்புத் துணைக ஆணையா
ளர்முன் ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக தொழிலாளர்,
1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் அன்று வேலைக்கு
திரும்பினர். 1977-78, 1978-79 ஆகிய இரு கணக்கு
ஆண்டுகளுக்கு ஒப்புக்கொண்ட கோட்பாட்டின் அடிப்படையில்
உற்பத்திக்கேற்ப ஊதியக்கொடையை தொழிலாளர்களுக்கு
வழங்கவும் 1976-77 கணக்கு ஆண்டிற்காக, கிடைத்த மொத்த
வருமானத்தில் 12 சதவீத ஊதியக் கொடையை முன்பணமாகத்
தொழிலாளர்களுக்கு வழங்கவும் இந்த உடன்படிக்கை வகை
செய்தது. அத்துடன் திருப்பிச் செலுத்தப்படத்தக்க தொகை
ரூ. 175 சேர்த்து வழங்கப்பட்டது. இந்த உடன்பாட்டின் மூலம்
தொழிலாளர் அனைவரும் பயன் அடைந்தனர்,

(14) கோத்தாரி சர்க்கரை ஆலை, காட்டூர்.

இந்த சர்க்கரை ஆலையைச் சேர்ந்த சுமார் 1,100 தொழி
லாளர்கள். அவர்களால் எழுப்பப்பட்ட பல கோரிக்கைகள்
குறித்து 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாளன்று வேலை
நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல சிறப்புத்
துணை ஆணையாளர் முன்பாக நடைபெற்ற விவாதங்களின்
விளைவாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு தொழிலாளர்கள்
1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் அன்று வேலைக்குத்
திரும்பினர். இந்த உடன்பாடு, ஏனையவற்றுடன் முறையான
மற்றும் குறிப்பிட்ட பருவங்களில் அமர்த்தப்படும் தொழிலாளர்
களுக்கு ஊதியக் கொடை, பணிக்கொடை வழங்கவும், நாட்கூலி
பெறும் தொழிலாளர்களை முறையான வகைகளில் சேர்த்துக்
கொள்வதற்கும் வகை செய்கிறது.

(15) கரூர் ஆலை லிமிடெட், கரூர்.

இந்த நெசவாலை 475 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி
யுள்ளது. சில கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்கள்
1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று வேலை
நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல சிறப்புத்
துணை ஆணையாளர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று,
1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் அன்று உடன்
படிக்கை ஒன்று ஏற்பட்டது. உடன்படிக்கை ஏற்பட்ட நாளன்று
தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.
இந்த உடன்பாடு நிரந்தரமான காலியிடங்களைப் பூர்த்தி செய்ய
வும் தொழில் பழகுநர்களுக்கு உயர் ஊதியத்தைக் கொடுக்கவும்
வகை செய்தது.

(16) பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட் (துணைப்பிரிவுகள்) திருச்சிராப்பள்ளி.

பல கோரிக்கைகள் குறித்து, திருச்சியில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டின் சுமார் 100 துணைப் பிரிவுகளில் பணியாற்றும் சுமார் 4,000 தொழிலாளர்கள், 1978 ஆம் ஆண்டு சூலை திங்கள் 1 ஆம் நாளன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். பிறகு அனைத்துப் பிரிவுகளும் மூடப்பட்டன. சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் தலையீட்டின் பேரில் 1978 ஆம் ஆண்டு சூலை திங்கள் 5 ஆம் நாளன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு 1978 ஆம் ஆண்டு சூலை திங்கள் 5 ஆம் நாளன்று அனைத்துப் பிரிவுகள் மீண்டும் திறக்கப்பட்டன.

(17) மேட்டூர் பியர்ட் செல் லிமிடெட், மேட்டூர் அணை.

இந்த நெசவாலையில் 2,000 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புதிய துணி வகைகளை நெய்வதனால் கிடைத்த வருமானத்தில் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக, இவ்வாலையைச் சேர்ந்த சுமார் 750 தொழிலாளர்கள் 1978ஆம் ஆண்டு சூன் திங்கள் 26ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். இவ் வாலை முழுவதும் இயங்காத காரணத்தால் 2,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் அன்று தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2ஆம் நாளன்று மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.

(18) மதுரா கோட்ஸ் லிமிடெட், அம்பாசமுத்திரம்.

இந்த நெசவாலையில் சுமார் 5,600 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். சில தொழிலாளர்களின்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுமாறும், 8 நாட்கள் ஊதியத் தொகையைக் குறைக்க வேண்டி நிர்வாகத்தினர் எடுத்த முடிவை வாபஸ் பெறுமாறும் கேட்டுக் கொண்டு 'மதுரா கோட்ஸ் லிமிடெட்' ஆலையைச் சேர்ந்த நூற்பாலையில் (நூல் சுற்றும் பிரிவு) பணியாற்றி வருகின்ற சுமார் 1,500 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள், 1978ஆம் ஆண்டு சூலை திங்கள் 5ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ஆம் நாளன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். இரு தொழிலாளர்களின்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுவ

தற்கும், 8 நாட்கள் ஊதியத்தைக் குறைக்க வேண்டி எடுத்த முடிவை வாபஸ் பெறுவதற்கும் நிர்வாகம் ஒப்புக்கொண்டது. சில தொழிலாளர்களின்மீது விதிக்கப்பட்ட தண்டனையை மறு ஆய்வு செய்வது தொடர்பாக தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் எடுத்த முடிவினை இரு கட்சியினரும் அனுசரிக்க ஒப்புக்கொண்டனர். இந்த உடன்பாட்டினையொட்டி நிர்வாகத்தினரால் விதிக்கப்பட்ட தண்டனையை மறு ஆய்வு செய்து சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் ஆலோசனை நல்கினார்.

(19) புல்லிக்கார் ஆலை லிமிடெட், திருச்செங்கோடு.

இந்த ஆலையைச் சேர்ந்த 900 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள், ஆலைக்குள் நடைபெறும் பணியாற்றும் முறையை ஒழிக்கவும், ஏனைய சில கோரிக்கைகளுக்காகவும் 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள் அன்று சென்னையில் உள்ள தொழிலாளர்நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றின் விளைவாக 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது.

(20) தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், திருநெல்வேலி.

இந்த நூற்பாலையில் 3,500 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பல கோரிக்கைகள் குறித்து, இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். திருநெல்வேலியில் உள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை லிமிடெட் நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கு மிடையில் 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் அன்று சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆவது பிரிவின்கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைக் கிணங்க, தொழிலாளர்கள் 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ஆம் நாள் முதல் வேலைக்குத் திரும்ப ஒப்புக்கொண்டனர்.

(21) சென்னை திருவல்லிக்கேணி நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிடெட், காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடி, லிமிடெட்.

திருவல்லிக்கேணி நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார்
950 தொழிலாளர்கள் பணியாற்றிவருகின்றனர். ஊதிய உயர்வு,
சில தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி
வைத்தது முதலியவை தொடர்பாக இந்நிறுவனத்தில் தொழில்
தகராறு ஒன்று ஏற்பட்டது. தொழிலாளர் நலத் துணை ஆணை
யாளர் (குறைந்தளவு ஊதியங்கள்), இத்தகராறு குறித்து இணக்
கப் பேச்சு வார்த்தை நடத்தி 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்
14ஆம் நாளன்று, 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்
தின் 12 (3)ஆவது பிரிவின் கீழ் நட்பிணக்க முறையில் உடன்
படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார்.

(22) இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ், லிமிடெட் சென்னை.

ஊதிய வீதங்கள், அகவிலைப்படி, ஏனைய நலன்கள் ஆகிய
வற்றைத் திருத்தியமைப்பது குறித்து 1978ஆம் ஆண்டு ஜூன்
திங்கள் 14ஆம் நாளன்று சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை
நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். சென்னை தொழிலாளர் நலத்
துணை ஆணையாளர்-1 இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி
1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19ஆம் நாளன்று ஓர் உடன்பாடு
ஏற்பட்டது. அதனையடுத்து தொழிலாளர்கள் 1978ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை
மேற்கொண்டனர். சென்னை, தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர்-1 நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக
வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(23) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.

இந்த நிறுவனத்தில் 18,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்
றனர். ஊதிய வீதங்களை மாற்றியமைப்பது உட்பட சில
கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும்
இடையே ஏற்பட்ட தகராறு குறித்து 1978ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 17ஆம் நாளன்று சென்னை தொழிலாளர்
நலத் துணை ஆணையாளர்-2 முன், 1947ஆம் ஆண்டு தொழிற்
தகராறுகள் சட்டத்தின் 12 (3)ஆவது பிரிவின் கீழ் உடன்பாடு
ஒன்று ஏற்பட்டது.

(24) சேஷசாயி தொழிற்சாலை லிமிடெட், வடலூர்.

மின்சார தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் மட்பாண்ட
பீங்கான் பொருட்களை இந்த நிறுவனம் தயாரிக்கிறது இதில்
1,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 1977ஆம் கணக்

காண்டிற்கு அதிகப்படியான ஊதியக்கொடை (Bonus) கேட்டு.
தொழிற்சங்கங்கள் தொழிற் தகராறு ஒன்றை எழுப்பின. நிர்
வாகத்திற்கும் சங்கங்களுக்கும் இடையே உடன்பாடு ஏதும் ஏற்
படாததால், 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27ஆம் நாளி
லிருந்து நிர்வாகம் கதவடைப்பு செய்தது. ஆனால் பின்னர்
இருதரப்பினர்களுக்குமிடையே தொழிற் தகராறுகள் சட்டத்தின்
12 (3)ஆவது பிரிவின்கீழ், 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
5ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நலத்துறை ஆணை
யாளர் 2-ன் முன் உடன்பாடு ஏற்பட்டது. நிர்வாகம் 1978ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாளிலிருந்து கதவடைப்பினை
நீக்கியது. ஊதியக்கொடை வழங்குவது. முன்பணத் தொகையை
வசூலிக்கும் முறை ஆகியவை குறித்து தீர்ப்பு அளிக்கப்படும்
வரையில், இந்த உடன்பாட்டிற்கு இணங்க, குறைந்தளவு ஊதியக்
கொடை 8.33 சதவீதத்திற்கு சமமான ஊதியக்கொடை
பணமும் அத்துடன் ஒரு முன்பணமும் கொடுப்பதென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(25) சவுத் இந்தியா விஸ்கோஸ், லிமிடெட், சிறுமுகை.

சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் செயற்கை பட்டு
துணிகளைத் தயாரிக்கிறது. இந்த நிறுவனத்தில் 200 தொழி
லாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த நிறுவனத்தில் பணிபுரியும்
தொழிலாளர்களின் பிரதிநிதியாகவுள்ள சுமார் 10 சங்கங்கள்,
1977 கணக்காண்டிற்கு தொழிலாளர்களின் மொத்த வருமானத்
தில் 50 சதவீதத் தொகையை ஊதியக் கொடையாகக்கேட்டு
1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20ஆம் நாளன்று வேலை
நிறுத்த அறிவிப்பு ஒன்றை கொடுத்தனர். கோயம்புத்தூர்
தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், சென்னை தொழி
லாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வு) ஆகியவர்களின் முன்
நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பயனாக 1978ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 25ஆம் நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்
பட்டது. 1977-ம் கணக்காண்டிற்கு ஊதியக் கொடையாக
தொழிலாளர்களின் மொத்த வருமானத்தில் 20 சதவீதம்
தொகையை வழங்க உடன்பாடு வகை செய்கிறது. இவற்றோடு
1979ஆம் ஆண்டில் உயர்ந்தளவு உற்பத்தியினையும் தங்கு
தடையற்ற பணியையும் பராமரிப்பதில் நிர்வாகத்துடன்
ஒத்துழைப்பு தருவதாக தொழிலாளர்கள் அளித்த உறுதிமொழி
யினைக் கருத்தில் கொண்டு கருணை மானியமாக 10 சதவீதம்
தொழிலாளர்கள் பெறுவர். தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த
அறிவிப்பை திரும்பப் பெற்றனர். மேற்சொன்ன உடன்பாட்டி
னால் சுமார் 2,200 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

[1979 ஏப்ரல் 19

தொழிற்சாலை வாரியாக

துணி ஆலைகள்.

11·33 சதவீத ஊதியக்கொடை
கொண்டு, துணி ஆலைகள் நிர்வாகத்தினருக்கு எதிராக, சுமார்
70,000 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களின் பல்வேறு
தொழிற் சங்கங்கள் தகராறு ஒன்றை எழுப்பின. தொழிலாளர்
நல அதிகாரிகள் நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தையின் பய
னாக 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாளன்று
உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. ஊதியக்கொடை தொகை
வழங்கும் விதி முறைகளுக்கு இணங்க ஊதியக் கொடை வழங்கு
வதற்கும் 3 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரை கூடுதல்
தொகை வழங்குவதற்கும் இவ்வுடன்பாடு வகை செய்கிறது.

தேசிய துணி ஆலைக் கழகத்தைச் சேர்ந்த ஆலைகள்.

அதிகப்படியாக ஊதியக் கொடை கேட்டு, தேசிய துணி
ஆலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 10 துணி ஆலைகளின்
சுமார் 10,000 தொழிலாளர்கள் (தமிழ்நாடு, புதுச்சேரி)
1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12ஆம் நாளிலிருந்து
வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சுகளின் விளைவாக
1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ஆம் நாளன்று ஓர்
உடன்படிக்கை ஏற்பட்டது. அது 8·33 சதவீதம் குறைந்தளவு
ஊதியக்கொடையினை வழங்குவதற்கும், 3 சதவீதம் கூடுதல்
தொகை வழங்குவதற்கும் வகை செய்கிறது. 1978ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று வேலை நிறுத்தம்
கைவிடப்பட்டது.

தோல் பதனிடும் தொழிற்சாலை

ஊதியத் திருத்தம், அகவிலைப்படி, ஊதிய உயர்வு, வீட்டு
வாடகைப்படி, சீருடை இவற்றைக் கேட்டு தமிழ்நாட்டிலுள்ள
அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணி புரியும்
சுமார் 40,000 தொழிலாளர்கள், 1978 மே திங்கள் 17ஆம
நாளிலிருந்து காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதாக
கருத்துத் தெரிவித்து வேலை நிறுத்த அறிவிப்பைக் கொடுத்தனர்.
1978 மே திங்கள் 16, 17-ந் தேதிகளில் சென்னை தொழிலாளர்
நல துணை ஆணையாளர் (ஆய்வு) முன் நடைபெற்ற இணக்க
நடவடிக்கைகளின்படி, ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.
அதற்கிணங்க 1978 மே திங்கள் 2-ம் நாளிலிருந்து ரூ. 1·80
ஊதிய உயர்வும் 1979ஆம் மே திங்கள் 2-ம் நாளிலிருந்து ரூ. 2
ஊதிய உயர்வும் அளிக்கப்படும்.

1979 ஏப்ரல் 19]

மலைத் தோட்டங்கள்

தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு மலைத் தோட்ட தொழி
லதிபர்கள் சங்கம், நீலகிரி மலைத் தோட்டத் தொழிலதிபர்கள்
சங்கம், நீலகிரி வயநாடு மலைத் தோட்டத் தொழிலதிபர்களின்
சங்கம் ஆகிய எஸ்டேட்டு உரிமையாளர்களின் நிர்வாகிகளுக்கும்
இடையே ஊதியம், தேசிய பண்டிகை விடுமுறைகள் ஆகிய
வற்றுடன் ஊதியக்கொடை, பணிக் கொடை, விடுப்பு ஆகிய
வற்றை சேர்த்துக் கணக்கிடுவதற்காக ஊக்க ஊதியத்தை
(plucking incentives) சேர்ப்பது குறித்த பிரச்சினைகளுக்கு
1947ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின் 18(1) பிரிவின்
கீழ் 1978 அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் அன்றும் 1978
அக்டோபர் திங்கள் 9ஆம் நாளன்றும் தீர்வுகள் காணப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள தேயிலை-காபி எஸ்டேட்டுகள் (சேர்வராயன் மலைத் தொடர் நீங்கலாக

ஊதிய உயர்வு, அகவிலைப்படி, விடுமுறை வசதிகள் முத
லியவை அடங்கிய கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்களுக்கும்,
தமிழ்நாட்டிலுள்ள தேயிலை-காபி எஸ்டேட்டின் நிர்வாகத்தின
ருக்குமிடையே (சேர்வராயன் மலைத் தொடர்கள் நீங்கலாக)
ஏற்பட்ட தகராறு குறித்த தொழில் தகராறுகள் சட்டத்தின்
12(3) பிரிவின்கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை
ஆணையாளரின் முன் 1978 சனவரித் திங்கள் 2-ம் நாள் அன்று
ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்பாடு தமிழ்நாடு
மலைத் தோட்ட தொழிலதிபர்களுக்கும், அவர்களின் கீழ் வேலை
பார்க்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட உடன்
பாடாகும்.

மூடப்பட்டிருந்த ஆலைகளைத் திறத்தல்.

செயலற்றுப்போன கீழ்க்கண்ட நிறுவனங்கள் அரசு எடுத்துக்
கொண்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு தற்
போது செயல்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்.

சுமார் 101 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976
அக்டோபர் திங்கள் 25-ம் நாளிலிருந்து செயல்படவில்லை.
ஆலையினைத் திறப்பது தொடர்பாக கோயம்புத்தூர் தொழி
லாளர் நல துணை ஆணையாளர், சம்பந்தப்பட்ட தரப்பினர்
களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். தரப்பினர்களிடையே,
(அதாவது குத்தகைதாரர்களான ஸ்ரீ சென்கோ நிறுவனங்களுக்
கும் தொழிலாளர்களுக்குமிடையே) 1978 பிப்ரவரித் திங்கள்

6-ம் நாள் அன்று ஏற்பட்ட உடன்பாட்டினைத் தொடர்ந்து 1978 பிப்ரவரித் திங்கள் 20-ம் நாளன்று ஆலை மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.

2. இராஜா மில்ஸ், மதுரை.

125 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976 நவம்பா திங்கள் 20-ம் நாளிலிருந்து செயல்படவில்லை. இந்த ஆலை ஏல விற்பனையில் திரு. ஏ. ஆர். பாலகிருஷ்ண முதலியாரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆலை 1978 மே திங்கள் 19-ம் நாளிலிருந்து மதுரை ஸ்ரீ அங்கப்பா ஸ்பின்னிங் மில்ஸ் என்ற பெயரால் செயல்பட்டு வருகிறது.

துணி ஆலைத் தொழிலில் சிக்கன சீரமைப்பு.

1978ஆம் ஆண்டில் தொழிலலாளர் துறையின் உதவியுடன் துணி ஆலைகளில் சிக்கன சீரமைப்பு தொடர்பாக 52 தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டன. நேரடி பேச்சு வார்த்தை மூலம் 32 தகராறுகள் தீர்க்கப்பட்டன.

நடுவர் தீர்ப்பு.

1978ஆம் ஆண்டில் 31 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் —

1978ஆம் ஆண்டில் 1978 அக்டோபர் திங்கள் 23-ம் நாளும், 1978 நவம்பர் திங்கள் 30-ம் நாளும் ஆகிய நாட்களில் இக்குழு இரு முறை கூடியது. உறுப்பினர்கள் தொழில் அதிபர்களின் மத்திய அமைப்புகள் தொழிலாளர்கள் ஆகியவர்களின் கருத்தைக் கேட்ட பிறகு நடுவர்களின் பெயர்ப் பட்டியலை மாற்றியமைக்க குழு தீர்மானித்தது.

நீதிமன்றத் தீர்ப்பு.

1977-78 ஆம் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம் தொழிலாளர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப் பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பினவருமாறு :—

	தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை.		தீர்ப்பளிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	
	1977.	1978.	1977.	1978.
தொழில் நடுவர் மன்றம், சென்னை.	73	80	47	77
தொழிலாளர் நீதி மனறங்கள்.	617	642	552	945

மேற்சொன்ன வழக்குகளைத் தவிர தொழிலாளர் நீதிமன் றங்கள் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-C (2) ஆவது பிரிவின்கீழ் தாக்கல் செய்த, 2,112 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்புக் கூறியுள்ளன.

வசூல்.

1978 ஆம் ஆண்டில், 103 தகராறுகளில் 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-C (1) ஆவது பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய (ரூ. 3,92,355.17) தொகையை வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது.

வழக்குகள்.

1978 ஆம் ஆண்டில் வழக்குகள் தொடர அனுமதி வழங்கப் படவில்லை.

தொழிற் சங்கங்கள்.

1978 சனவரித் திங்கள் 1-ஆம் நாளன்று நிலவரப்படி 2,550 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 466 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 244 தொழிற் சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டன. மூன்று சங்கங்களின் பதிவு ரத்து நீக்கிவிடப்பட்டன. 5 சங்கங்கள் கலைக்கப்பட்டன. இவ்வாண்டு இறுதி நிலவரப்படி பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 2,770 ஆகும்.

தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதி.

தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதியைச் செயல்படுத்தும்
பணியும், தொழிற்சங்கங்களை அங்கீகாரமளிக்கும் பணியும்
மாநில மதிப்பீட்டு செயல்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்
பட்டுள்ளது. இக்குழு 1978 சனவரித் திங்கள் 18 ஆம் நாள்,
1978 சூன் திங்கள் 28 ஆம் நாள், 1978 டிசம்பர் திங்கள் 2 ஆம்
நாள் ஆகிய நாட்களில் மூன்று முறை கூடியது; தொழிற்சாலை
யில் ஒழுங்கு முறை மீறிய 10 வழக்குகளை விசாரித்தது. 23
தொழிற்சங்கங்களை அங்கீகரிக்க பரிந்துரைத்துள்ளது.

எவ்வித மத்திய அமைப்பையும் சேராத பல்வேறு தொழிலதி
பர்கள், தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள், உள்ளாட்சி
மன்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தொழிற்சாலை
ஒழுங்கு முறை விதிகளைப் பின்பற்ற ஆலோசனைகள் கூறுமாறு
தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும், தொழிற்சாலை ஆய்வாளர்
களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்
நலத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக
1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி
2,770 தொழிற்சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி
மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒப்புக்கொண்டு
கையெழுத்திட்டுள்ளன.

1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.

1977-78 கணக்காண்டிற்கான வருமானத்தில் 8.33 சதவீதம்
என்ற குறைந்த அளவு ஊதியக் கொடைக்கு வகை செய்து,
இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம் ஒன்
றின் மூலம் 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்
திருத்தப்பட்டுள்ளது.

சிறு நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல்.

தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மை
யோர் ஊதியக் கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக்
கொடை வழங்குவதை கடைகள், நிறுவனங்கள், மோட்டார்
போக்குவரத்து நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகள் ஆகிய
வற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சட்டப்படி நீட்டிக்
கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்தது. எனவே,
தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறையின் 1978 ஆகஸ்டு
திங்கள் 2 ஆம் நாளிட்ட 833 ஆம் எண்ணுள்ள அரசாணையின்
மூலம் அரசு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதன் வாயிலாக
20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும், ஆனால் 10 தொழி
லாளர்களுக்கு குறையாமலும், அல்லது 1977 ஆம் கணக்காண்டில்
எந்த ஒரு நாளிலும் இருபது தொழிலாளர்களுக்குக் குறைவாகவும்

ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு
அமர்த்தியுள்ள பின்வரும் வகுப்புகளைச் சேர்ந்த நிறுவனங்
களுக்கு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள்
பொருந்தச் செய்யப்பட்டுள்ளன.

1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்
(மத்திய சட்டம் 63/1948) 2-வது பிரிவு (m) பகுதியைச் சேர்ந்த
(1) உட்பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் தொழிற்
சாலைகள்;

2. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 2-வது பிரிவைச்
சேர்ந்த (6) உட்பிரிவின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறு
வனங்கள்;

3. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழி
லாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 2-வது பிரி
வைச் சேர்ந்த (g) பகுதியில் பொருள் விளக்கத்திற்குள் வரும்
மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்; மற்றும்

4. மலைத் தோட்டங்கள், அதாவது தேயிலை, காப்பி,
இரப்பர், சின்கோனா அல்லது ஏலக்காய் ஆகியவற்றைப்
பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக்
கருதப்பட்டுள்ள எந்த ஒரு நிலம்.

இந்த ஆண்டில், 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை
வழங்கல் சட்டத்தின் 2(1) பிரிவின்கீழும், 1965 ஆம் ஆண்டு
ஊதியக் கொடை வழங்கல் விதிகளின் 3(b) விதியின்கீழும் வகை
செய்யப்பட்டுள்ளவாறு, நிர்வாகத்தினர் தங்களது கணக்கிடு
ஆண்டை மாற்றிக் கொள்ள அனுமதித்து இரண்டு நேர்வுகளில்
தொழிலாளர் நல ஆணையாளர் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

1978-ல் 81 நேர்வுகளில், இச்சட்டத்தின் 19-வது பிரிவின்
கீழ் ஊதியக்கொடை வழங்குவதற்கான அவகாசத்தை தொழி
லாளர் நல ஆணையாளர் அளித்துள்ளார்.

தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களைக் கூறுவதற்காக முத்தரப்புக் குழு.

சட்டத்திலேயே விதித்துறைக்கு வகை செய்து தொழிலாளர்
களுக்குப் பயனும் பாதுகாப்பும் அளிக்க உறுதி செய்வதே அரசின்
கொள்கையாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள
தொழிலாளர் நல சட்டங்களுக்குத் திருத்தங்களை எடுத்துரைக்க
தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,
அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை
அரசு அமைத்துள்ளது. இக் குழு இதுவரையில் எட்டு முறை கூடி,

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம்
தொடர்பாகவும், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள்
சட்டம் தொடர்பாகவும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில்
நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்
தொடர்பாகவும் திருத்தங்கள் குறித்து இக் குழு விவாதித்து
முடித்துள்ளது.

சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டம்.

இத் திட்டத்தின்கீழ் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்
கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வா
கத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில்
உறவைப் பராமரிக்கவும் அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும்
ஊக்குவிப்பதற்காக 1978-ல் தமிழ்நாடு அரசு, சிறந்த தொரு
நடவடிக்கையை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியோரைத்
தெரிந்தெடுக்க, உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி
ஒருவரைத் தலைவராகக் கொண்டு, முறையே தொழிலதிபர்கள்,
தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர் அடங்கிய தேர்வுக்
குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. பரிசு வழங்குவதற்கான
இத்திட்டம் 1978 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட உள்
ளது. இக் குழு 28–11–1978-ல் கூடி, இத்திட்டத்தின் கீழ்ப்
பரிசுகளைப் பெற தொழிலதிபர்கள்/தொழிற்சங்கங்கள் தாக்கல்
செய்ய வேண்டிய விண்ணப்பப் படிவத்தை முடிவு செய்த
தோடு, விளம்பரம் முதலியவை போன்ற ஏனைய பொருட்களையும்
கருதிப் பார்த்தது. திட்டம், விண்ணப்பம் ஆகியவை
செய்தித்தாள்களில் வெளியிடப்பட வேண்டுமெனக் குழு
முடிவு செய்தது.

மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு முதல் நிலை
ஆலோசனைக் குழுவாகும், தொழிலாளர் சம்பந்தப்பட்ட
எல்லாப் பொருட்களும், அவை குறித்து அறிவுரை பெறுவதற்கு
அவற்றிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக் குழு 1978
பிப்ரவரியில் மீண்டும் அமைக்கப்பட்டது. அதற்கு, தொழிலாளர்
நல அமைச்சர் தலைவர் ஆவார். இதில், தொழிலதிபர்கள்,
தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநிலச் சட்டமன்ற
உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு
1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள், 1978 ஆம் ஆண்டு
மே திங்கள் 25 ஆம் நாள், 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள்
4 ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்த
மான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்தது.

துறை அதிகாரிகள் கூட்டம்.—தொழிலாளர் நலத்துறை அதி
காரிகளின் 16 ஆவது ஆண்டுக் கூட்டம் சென்னையில் 1978
டிசம்பரில் கூடியது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர்

கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், தொழிலாளர் நல நிர்
வாகம் தொடர்பான பல்வேறு பொருட்கள் குறித்தும், தொழி
லாளர் நல தொழிற்சாலைச் சட்டங்களைச் செயல்படுத்துவது
குறித்தும், எடைகள்-அளவைகள் சட்டத்தை செயல்படுத்துவது
குறித்தும் விவாதிக்கப்பட்டதோடு, நிர்வாகத்தை முடுக்குவதற்கும
அதிகப்படியான தொழிலாளர்களுக்கு நல நடவடிக்கைகளை
நீட்டிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்
என்று அரசுக்கு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. நிறுவனங்கள் சட்டம்.

1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் பாதுகாப்புக்
கும், நலத்துக்கும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்
வகை செய்கிறது. இச்சட்டத்தில் அடங்கியுள்ள நல நடவடிக்கை
களைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கான ஆய்வுகளைத்
தொழிலாளர் நலத்துறை அடிக்கடி மேற்கொண்டுள்ளது
இதற்காக, இச்சட்டம் விதிகளின் விதித்துறைகளைக்
கண்டிப்பாகச் செயல்படுத்த நிர்வாகத்தினருக்கு அறிவுரை வழங்கு
வதன் மூலம் ஆய்வுகள் மிகவும் உன்னிப்பாக மேற்கொள்ளப்பட்டு
பின்பற்றப்படுகின்றன. மீண்டும் மீண்டும் நிர்வாகத்தினர் தவறும்
போது அவர்கள் மீது வழக்குத் தொடர்வதன் மூலம் அது தடுத்து
நிறுத்தப்படுகிறது என்பதோடு, இந்நடவடிக்கை தண்டனை
வழங்கி திருத்துகின்ற நடவடிக்கையாக அமைகிறது.

1978-ன் ஆரம்பத்தில் 8,508 தொழிற்சாலைகள் இருந்தன.
இவ்வாண்டு இறுதியில் 8,767 தொழிற்சாலைகள் இருந்தன.
கூடுதலாக 699 தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. அதே
நேரத்தில் 440 தொழிற்சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவை குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

	1977.	1978,
பிரிவு 2m (i)	7,969	8,224
பிரிவு 2m(ii)	539	542
பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	5,23,233	5,60,976

1978-79 ஆம் ஆண்டில், 1978 டிசம்பர் வரையில் உரிமக்
கட்டணமாக ரூபாய் 47,82,299.55 வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆய்வாண்டில், தொழிற்சாலை ஆய்வாளர்களால் 3,422 தொழிற்சாலைகள் ஒரு முறை சோதனை இடப்பட்டுள்ளன. 5,227 தொழிற்சாலைகள் இரு முறை சோதனை இடப்பட்டுள்ளன. 368 தொழிற்சாலைகள் மும்முறை சோதனை இடப்பட்டுள்ளன. தொழிற்சாலைக் கண்காணிப்பு ஆய்வாளர்களால் 3,990 சோதனை ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,035 ஞாயிறு ஆய்வுகளும் 2,123 சிறப்பு ஆய்வுகளும் 461 திடீர் ஆய்வுகளும் 835 இரவு ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

1978 ஆம் ஆண்டில் தொழிற்சாலைச் சட்டவிதித்துறைகளை மீறியதற்காக தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 4,109 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த ஆண்டில் 3,882 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 1,87,437 ரூபாய், அதாவது, வழக்கு ஒன்றுக்கு சராசரி 48 ரூபாய் என்னும் வீதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது.

1977, 1978 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு. (1)	உயிர் இழப்பில் முடியாத விபத்துக்கள். (2)	உயிர் இழப்பில் முடிந்த விபத்துக்கள். (3)
1977 ..	27,965	28
1978 ..	30,507	39

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், முந்திய ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, 1978 ஆம் ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்காக 21 நாட்களும், அதற்கு மேலும் தொழிலாளர்கள் பணிபுரிய இயலாமல் போகச் செய்யும் கடுமையான விபத்துக்கள் அனைத்தும் குறித்து தொழிற் சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்களும் உடனடியாகப் புலனாய்வு செய்து, அது போன்ற விபத்துக்கள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு தகுந்த பரிகார நடவடிக்கை களை நிர்வாகத்தினருக்கு எடுத்துரைத்தனர். அவற்றிற்கிணங்க நடந்துள்ளனரா என்பதைக் கண்டறியத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரிய தொழிற்சாலைகள், 50 தொழிலாளர்களும் அதற்கு மேலும் பணிபுரியும் தொழிற்சாலைகள் ஆண்டொன்றுக்கு 10 விபத்துக்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கும் தொழிற்சாலைகள் ஆகிய அனைத்தும் "பாதுகாப்புக் குழுக்களைத்" தங்களது தொழிற்சாலைகளுக்குள் ஏற்படுத்துமாறு அவற்றிற்கு எடுத்துரைக் கப்பட்டது. 381 தொழிற்சாலைகள் அது போன்ற பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன. அவை திறம்பட செயலாற்றி வருகின்றன.

சிரமவீர் பரிசுகளும், மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளும்.

மிகுந்த பாதுகாப்பு, அதிக உற்பத்திக்குறைந்த செலவு, இறக்குமதி செய்ய வேண்டிய பொருளுக்கு பதிலாக வேறு பொருளை உற்பத்தி செய்தல் முதலியவற்றிற்கு உறு துணை புரியும் சிறந்த கருத்தை நல்குவதன் மூலம் பொதுவாகத் தொழிற் சாலைத் திறனை மேம்படுத்துவதில் சிறந்த பணிபுரிந்த தொழி லாளர்களை மாநில அளவில் அங்கீகரித்துப் பரிசு வழங்குவதே "சிரமவீர்" பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும். விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பதில் நிர்வாகத்தினரிடையே சுமுகமான போட்டியை உருவாக்கும் நோக்கோடு, விபத்துக்கள் ஏற்படு வதைக் குறைக்கும் பணியில் தன்னிகரற்று பணிபுரியும் தொழிற் சாலைகளுக்கு மாநில பாதுகாப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

சாதனை ஆண்டுகளான 1976, 1977 ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுகள், சென்னை, இராஜாஜி மண்டபத்தில் 1978 சனவரித் திங்கள் 22 ஆம் நாள், 1979 சனவரித் திங்கள் 19 ஆம் தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் வழங்கப்பட்டுள்ளன.

பரிசுத் திட்டத்தில் போட்டியிடுவதற்காக, 1978 ஆம் ஆண் டிற்கான மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரமவீர் பரிசுகள் ஆகியவற்றைப் பெறுவதற்குப் போட்டியிடுவதற்கான விண்ணப் பங்கள், தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புப் பாடமுறைகள்.

1978-ல் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து ஆறு பாட வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பாட வகுப்புகளால் 173 பேர் பயனடைந்துள்ளனர்.

உற்பத்தித் திறன்.

தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு ஆண்டுதோறும் முந்திய ஆண்டில் இக்குழுக்கள் சந்தா தொகை யாக வசூலித்த தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான தொகை ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் என்ற உயர் அளவிற்கு உட்பட்டு பொது மானியத்தின் மூலம் இக்குழுக்களுக்கு நிதி உதவி வழங்கப் படுகிறது. மேற்சொன்ன மானியத்தோடு, இக் குழுக்களால் நியமிக்கப்படும் தொழிற்சாலைப் பொறியாளர்களுக்குரிய செலவில் 50 சதவீதத் தொகைக்கு நிகரான தொகை, ஒவ்வோராண்டும் இக்குழுக்களுக்குத் தொழிற்சாலைப் பொறியாளர் மானியம் என்ற முறையில் அளிக்கப்படுகிறது.

1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய பொது மானிய மாக, இக்குழுக்களுக்கு 34,090 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக்குழுக்களால் நியமிக்கப்பட்ட தொழிற்சாலைப் பொறியாளர்களுக்கு ஒரே சீரான சம்பள வீதத்தை வரை

யறுப்பதற்கான செயற் குறிப்பை அரசு ஆய்வு செய்து வருவதால், அடுத்த ஆண்டில் இக்குழுக்களுக்கு தொழிற் சாலைப் பொறியாளர் மானியும் எதுவும் வழங்கப்படவில்லை.

மேற்சொன்ன நிதி உதவியோடு, உற்பத்தித் திறனை அதிகரித்தல், என்னும் கொள்கையை வளர்ப்பதற்காக, 'தரம் நம்பத்தகுந்த தன்மை' என்னும் பொருள் குறித்து 1970 ஆம் ஆண்டு ஆசிய உற்பத்தித் திறன் பற்றி இத் துறையால் செய்தித் திரைப் படம் ஒன்றும் எடுக்கப்பட்டது.

திரைப் படங்கள்.

உற்பத்தித் திறன் குறித்த திரைப் படங்களைக் கொண் டுள்ள திரைப்பட நூலகம் ஒன்றும் உள்ளது. தொழி லாளர்களின் பயனுக்காகத் திரையிட்டுக் காட்டுவதற்குத் தேவைப்படுகின்ற தொழிற்சாலைகள், உற்பத்தித் திறன் குழுக்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச் செய்தித் திரைப் படங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரம்.

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலைச் சுகாதாரம்–ஆரோக்கிய ஆய்வுக் கூடம் இணைந்த பிரிவை ஏற்படுத்துவதற்காக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதோடு, தொழிற்சாலைகளில் மருத்துவ ஆய்வாளரையும் நியமித்துள்ளது. தொழிற்சாலை ஆரோக் கியப் பிரிவு, தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் போதிய அளவிற்குப் பணியாளர்களை நியமித்ததன் மூலமும், ஆய்வுக் கூடத்தை நிறுவியதன் மூலமும் தற்போது இப் பிரிவு நல்ல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைத் தொழி லாளர்களிடையே காணப்படும் சயத்தால் ஏற்படும் நோய், மண்ணால் ஏற்படும் நோய், சரும நோய், ஏனைய நோய்கள் போன்ற தொழில் சார்ந்த நோய்கள் ஏற்படுவதைக் கண்டறிவதே இப் பிரிவின் நோக்கமாகும். தொழிற்சாலை ஆரோக்கியப் நிலைமைகள் குறித்து கருத்து வழங்குவதும் தகுந்த பாதுகாப்பான பணி சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையில் ஏற்படுகின்ற தொழிற் சாலை தூய்மைக்கேடு பற்றி மதிப்பிடுவதும் தொழில்–பொதுச் ஆரோக்கியப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். தொழிற்சாலை.

உள்ளூரிலேயே கிடைக்கப் பெறுவதும் தொழிற்சாலை ஆரோக்கியப் பிரிவுக்குத் தேவைப்படுவதுமான எல்லாக் கருவிகளும் பெரும்பாலும் வாங்கப்பட்டுள்ளன. அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய கருவிகளுக்காக இசைவு பெற்ற உடனேயே அப்பொருட்களும் விரைவில் வாங்கப்படும்.

தொழிற்சாலைகளில் அபாயகரமான பல்வேறு பணி களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறித்து தொழிற் சாலை மருத்துவ ஆய்வாளரால் விரிவாக மருத்துவ ஆய்வு செய்யப்பட்டது. தொழில் சார்ந்த பல்வேறு நோய்களுக்கான காரணங்களை அவர் கண்டறிந்துள்ளார். நமது மாநிலத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலைத் தொழிலாளர்களிடையே ஏற்படும் தொழில் சார்ந்த ஆபத்து குறித்த சிறப்பு ஆய்வுப் பணி எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

முந்திரி எண்ணெயில் நச்சுத் தன்மை இருப்பதால், அது வறுத்த முந்திரிக் கொட்டைகளை உடைக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடையே எண்ணெயினால் ஏற்படும் தோல் வியாதியை விளைவிக்கின்ற காரணத்தால் (Cronic oil dermatitis) முந்திரி எண்ணெய் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அந்த எண்ணெயில் 'கார்சினோஜெனிக்' (Carcinogenic தன்மை கலந்திருப்பதாகக் காணப்பட்டது. இது குறித்து ஆழ்ந்த ஆய்வு ஒன்று நிகழ்த்தவும் பரிகார முறைகளை எடுத்துரைக்கவும். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து வல்லுநர்கள் குழு ஒன்றை அமைப்பதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் தற்போது தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்யும் முறையில் திறமைக் குறைவு இருப்பதாகக் காணப்பட்டது. எனவே, தொழிற்சாலை களில் காணப்படும் தொழில் சார்ந்த நோய்களின் நிலவரம் தெரிந்து கொள்ளப்படவில்லை என்பதோடு அவை பற்றி தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரின் கவனத்திற்கும் கொண்டுவரப் படவுமில்லை. ஆகவே, தொழிற் சாலைகளில் குறித்த கால ஆய்வும், மருத்துவப் பரிசோதனையும் திறம்பட நடைபெற உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்கூட வசதி களுடன், வட்டாரச் சான்றளிக்கும் மருத்துவர்களை நியமனம் செய்தலும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

1978 ஆம் ஆண்டில் அச்சகங்களில் விரிவான பரிசோதனை கள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர்களின் இரத்தமும், சிறுநீரும் குறித்து சோதனை செய்ய 453 மாதிரிகள் சேகரிக்கப் பட்டன. பயனுள்ள கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை மேற் கொள்ளவும், பாதுகாப்பான பணிச் சூழ்நிலையை உறுதி செய்யவும் நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தொழில் சார்ந்த நோய்களையும் தொல்லைகளையும் விளக்குவதற்காக பல்வேறு தொழிற்சாலைகளில் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு அட்டவணைகள்–திரைப்படத் துண்டு விளம்பரங்கள் ஆகியவற்றின் துணைக்கொண்டு, மருத்துவ ஆய்வாளர்கள் விளக்கவுரைகள் நிகழ்த்துகின்றனர்.

தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம், 1947.

1978 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள், நிறுவனங்கள் இவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை இவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை	2,21,642
வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை ..	3,28,644

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில் எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறிவிப்பினைக் கொடுத்து அதன் வாயிலாக தொழிலாளர் களின் உரிமைகளைப் பற்றியும் நிர்வாகத்தின் கடமை களைப் பற்றியும் கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத் துரைத்து அறிவுறுத்துவது என்னும் போக்கினை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி தனது குறைபாட்டைத் திருத்துவதற்கு கவனம் செலுத்துவாரானால் அவர்மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களின் நிறுவனங்களின்மீது அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டு, தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக் கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடிக்கடி வழக்குகள் தொடரப்படும். இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய் வாளர்கள் 3,24,365 முறையான சோதனைகள், 6,053 திடீர் சோதனைகள், 32,779 விடுமுறைச் சோதனைகள், 3,915 சிறப்புச் சோதனைகள், மற்றும் 6,619 இரவுச் சோதனைகள் நடத்தினர்.

1978 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 2,590 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன. 7,952 வழக்குகள் இவ்வாண்டில் அனுமதி பெற்றன. 10,542 வழக்குகள் 6,865 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 37 வழக்குகளில் விடுதலையில் முடிந்தன. 22 வழக்குகள் திரும்பப் பெறப் பட்டன. 1978 ஆம் ஆண்டில் அபராத தொகையாக ரூ. 2,11,006 வசூலிக்கப்பட்டது. அதாவது வழக்கு ஒன்றிற்கு சராசரியாக ரூ. 31 அபராதம் விதிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டிருப்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை ..	268
இவ்வாண்டில் வரப் பெற்ற மேல் முறையீடு களின் எண்ணிக்கை	198
மேல் முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை ..	466
இவ்வாண்டில் முடிவு பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	243
இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் உள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	223

1978ஆம் ஆண்டில் நிலையான விதிவிலக்கு ஒன்றும் தற்காலிக விதி விலக்குகள் 4-ம் அரசு வழங்கியது. (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக.)

(பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக) 22 தற்காலிக விலக்குகளையும், ஒரு இனத்தைப் பொறுத்த மட்டில் பொருட் காட்சிகள், திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கினையும் தொழி லாளர் நலத்துறை ஆணையாளர் வழங்கியுள்ளார். துணை ஆணையாளர் 131 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித் துள்ளார். 24 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக தள்ளி வைக்க அனுமதித்துள்ளார். சட்ட விதித் துறைகள் பொருந்துதலைக் குறித்து அல்லது பணியாளர்கள் அனுபவித்து வந்தகூடுதல் அனுகூலம் உடைய சிறப்புரிமைகளுக்குப் பாதுகாப்புக் கேட்டு சட்டத்தின் 51-வது பிரிவின் கீழ் தொழிலாளர் நல ஆணையாளரது முடிவைக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒருவிண்ணப்பம் 1978ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிக்கப் பெறாமல் இருந்தது. இவ்வாண்டில் இரண்டு விண்ணப்பங்கள் வரப் பெற்றன. ஒரு விண்ணப்பம் இவ்வாண்டில் தொழிலாளர் நல ஆணையாளரால் முடிவு செய்யப்பட்டது. ஆண்டு முடிவில் இரண்டு விண்ணப்பங்கள் முடிவுறாமல் இருந்தன.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

1979 சனவரி 1-ம் நாளன்றுள்ளபடி 68,922 தொழி லாளர்களைக் கொண்ட 21,730 உணவகங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவைகளில் 10,326 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. 11,404 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1978-ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 2,64,559 பெறப்பட்டது. இந்த ஆண்டில் ஆய்வாளர்கள் இச்சட்டத்தின்கீழ் 32,417 முறையான ஆய்வுகளையும், 430 திடீர் ஆய்வு களையும், 783 விடுமுறை நாள் ஆய்வுகளையும், 282 தனி ஆய்வு களையும் 209 இரவு நேர ஆய்வுகளையும் செய்தனர்.

1978ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இச்சட்டத்தின் விதித்
துறைகளையும் விதிகளையும் மீறியது குறித்த 1,273 குற்ற
வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 1,493 வழக்குகள்
இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 1,528 வழக்கு
களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. 16வழக்குகள் விடுதலையில்
முடிந்தன. 11 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.
1978-ஆம் ஆண்டில் 71,215 ரூபாய் அபராதத் தொகையாகப்
பெறப்பட்டது. ஆண்டு தொடக்கத்தில், உணவகங்களின் தொழி
லாளர்களை வேலையிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்பட்டதை
எதிர்த்து இச்சட்டத்தின் 19ஆவது பிரிவின்கீழ் செய்யப்
பட்ட 66 மேல் முறையீடுகள் மேல்முறையீட்டு அதிகாரிகள் என்று
அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளிடம் முடிவு
செய்யப்படாமலிருந்தன. இந்த ஆண்டில் 74 மேல் முறையீடுகள்
தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 97 மேல் முறை
யீடுகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில் 43 மேல்
முறையீடுகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.

1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 92,141 தொழிலாளர்
களை வேலைக்கமர்த்திக் கொண்ட 412 மலைத் தோட்டங்கள்
இருந்தன. 1978ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல்
1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் 1,300
தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 12 புதிய மலைத்
தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 28 தொழிலாளர்களை
வேலைக்கமர்த்தியிருந்த ஒரு மலைத் தோட்டம் இந்த ஆண்டில்
பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் 423
மலைத் தோட்டங்கள் இருந்தன. 1978ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 31ஆம் நாளன்றுள்ளவாறு தோராயமாக 93,413 தொழி
லாளர்கள் பணியாற்றி வந்தனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் 38 வழக்குகள் நீதிமன்றத்தில்
முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 80 வழக்கு
கள் அனுமதிக்கப்பட்டன. 99 வழக்குகளுக்குத் தண்டனை
அளிக்கப்பட்டது. ரூ. 10,710 அபராதம் விதிக்கப்பட்டது,
அதாவது வழக்கு ஒன்றுக்கு ரூ. 18 சராசரியாக அபராதம் விதிக்கப்
பட்டது. இரண்டு குற்ற வழக்குகள் விடுதலையில் முடிந்தன.
1978-ஆம் ஆண்டு இறுதியில் 17 குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில்
முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பை
பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத்
தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் விரிப்புக் கம்பளிகளும்
கம்பளங்களும் வழங்கினர்.

மலைதோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்
பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ வசதிகளுக்கு வகை செய்ய
வேண்டியது மலைத்தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாக
மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ்
வரையறுக்கப் பட்டுள்ளது.

மலைத் தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவ மனைகளிலும்
மருந்தகங்களிலும் சட்டம், விதிகளின்கீழ் சுகாதாரம்
குறித்த விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்கு மலைத்
தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இரண்டு
மருத்துவ அதிகாரிகள் உதகமண்டலம், நாகர்கோவிலைத்
தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

1951ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர்கள் சட்டத்
தின் கீழ் அறிக்கை ஆண்டில் இவர்கள் 370 மலைத் தோட்டங்
களை ஆய்வு செய்தனர்.

உதக்மண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு,
திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடங்க
ளாகக் கொண்ட ஏழு ஆய்வாளர்களும், மலைத் தோட்டத்
தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்றனர்
அவர்கள் இச் சட்டத்தையும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள வீதி
களையும் செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் 1,357 முறை
யான ஆய்வுகளையும், 119 தனி ஆய்வுகளையும், 112 திடீர்
ஆய்வுகளையும், 101 ஞாயிற்றுக்கிழமை ஆய்வுகளையும் நடத்
தினர்.

மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.

மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு, தொழி
லாளர் நல-வேலை வாய்ப்புத் துறையின் 1978ஆம் ஆண்டு
ஆகஸ்டு திங்கள் 21ஆம் நாளிட்ட அரசாணை எண் 930-ல்
புனரமைக்கப்பட்டது. இதற்குத் தொழிலாளர் நல ஆணையாளர்
தலைவராக உள்ளார். இக் குழு 1978ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 17-ஆம் நாளில் கோயம்புத்தூரில் கூடி, ஏனைய
வற்றுடன், கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்தது :—

1. மருத்துவ உதவி.— சிறப்புச் சிகிச்சை தேவைப்படுகின்ற
வகைப்பட்ட நோய்களால் துன்புறுகின்ற தொழிலாளர்கள் பொது
வாக அத்தகைய சிறப்பு மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்படு
வதற்கு அனுப்பப்படவில்லை.

2. தொழிலாளர்கள், மருத்துவ மனைகளுக்குச் செல்வதற்
கான போக்குவரத்து வசதிகள்.

3. மலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சார்ந்தவர்கள்
முதலியோரைச் சிகிச்சை பெறுவோர் பட்டியலில் சேர்த்துக்
கொள்ளுதல்.

[1979 ஏப்ரல் 19

தனி அதிகாரி மலைத் தோட்டங்கள்.

தமிழ்நாட்டில் உள்ள தேயிலை, காப்பி எஸ்டேட்டுகளின்
நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் 1977 ஆம்
ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாளன்று தொழிற் தகராறுகள்
சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஏற்பட்ட உடன்பாட்டில் நிபந்
தனைகளை அடிப்படையாகக் கொண்டு புரிந்துரைகளுக்கு
இணங்க, துணைப் பணியாளர்களுடன், தனி அதிகாரி (மலைத்
தோட்டங்கள்) பதவி ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.
காப்பி, தேயிலை ஆகியவற்றை பயிரிட்ட பல்வேறு எஸ்டேட்டுகளில்
வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட வேண்டிய தொழிலாளர்களின்
உரிய எண்ணிக்கையை மதிப்பிடும் நோக்கத்துடன் மலைத்
தோட்டங்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு கூறுகளை ஆய்வு
செய்வதே, அந்த தனி அதிகாரியின் (மலைத் தோட்டங்கள்) பணி
யாகும். தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் பதவித்
தரத்தில் உள்ள ஒரு அதிகாரி 1978 ஆம் ஆண்டு நவம்பர்
திங்கள் 18 ஆம் நாள் முற்பகல் முதற்கொண்டு தனது பணி
யைத் தொடங்கியுள்ளார்.

1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள்.

பணி நிலைமைகள் சட்டம்.

செயற்படுத்தும் பணியாளரமைப்பு.

பீடி—சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி நிலைமை
கள்) படி, தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ், தொழிலாளர்
நலத் துறை துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொழிலாளர்
முதன்மை ஆய்வாளராகப் பணியாற்றினார். தொடர்ந்து
11 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் மாநிலத்தில்,
ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், துணை
அனைத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயற்படுத்தும் மற்ற
பணிகளையும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடை அளவை
(செயற்படுத்தல்) சட்டத்தினை செயற்படுத்தும் பணியையும்
கவனிப்பதோடு இச் சட்டத்தைச் செயற்படுத்தும் பணியையும்
கவனித்து வருகின்றனர்.

தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், உரிமம் வழங்குதல்,
உரிமத்தைப் புதுப்பித்தல், அல்லது ரத்து செய்தல் போன்ற
வற்றிற்குப் பொருத்தமான அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ள
னர். பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்)
சட்டத்தின் 5 ஆவது பிரிவில் 7 வது விதியின்படி, அவர்கள் பிறப்பிக்
கும் முடிவுகளை எதிர்த்து, வட்டாரத் தொழிலாளர் நலத்துறை
ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்யலாம். பணியாளர்
கள் எவரேனும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டால் அல்லது பணி
நீக்கம் செய்யப்பட்டால் அல்லது பணியிலிருந்து நிறுத்தப்பட்டால்

1979 ஏப்ரல் 19]

சட்டத்தின் 31 ஆவது பிரிவின் கீழ், தொழிலாளர் நல அதிகாரிக்கு
மேல் முறையீடு செய்யலாம். இவ் வேளைகளில், தொழில்
அதிபர்களால் மூலப் பொருட்கள் வழங்குவது தொடர்பாக
தகராறுகள் ஏதாவதேனும் ஏற்பட்டால், இத்தகைய சில வழக்கு
களில் தொழிலாளர் நல ஆய்வாளருக்கு, முடிவெடுக்கும் அதிகாரம்
வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத்
தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளில், 32 ஆவது
விதியின் கீழ், தொழிலாளர் நல ஆய்வாளரின் முடிவிற்கு எதிராக
வட்டாரத் தொழிலாளர் நலத் துறை ஆணையாளருக்கு மேல்
முறையீடு செய்யலாம்.

பதிவு செய்தல்.

தமிழ்நாட்டில் இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள
தொழில் வளாகங்கள் 1,736 ஆகும்; அவற்றில் 677 வளாகங்கள்
வணிகக் குறி உரிமையாளர்களுடையதாகும், 1978 ஆம் ஆண்டு
இந்தத் தொழில் வளாகங்களில் 16,157 பணியாளர்கள் பணிக்கு
அமர்த்தப்பட்டுள்ளனர். பீடி அல்லது சுருட்டுகளைத் தயாரிக்க
கும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் 2 இலட்சம் பேர் வீடுகளில்
இருந்தவாறே பணிபுரிந்து, பயனடைந்து வருகிறார்கள். 1978
ஆம் ஆண்டு உரிமக் கட்டணமாக ரூபாய் 23,544.50 வசூலிக்கப்
பட்டுள்ளது.

ஆய்வுகள்.

1978 ஆம் ஆண்டு, ஆய்வாளர்களால், 1,783 முறையான
ஆய்வுகளும், 11 மறுமுறை ஆய்வுகளும், 171 திடீர் ஆய்வுகளும்,
95 தனி ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

வழக்குத் தொடர்தல்.

வழக்குத் தொடர்தல் தொடர்பான புள்ளி விபரங்களுடன்
மன நிறைவு அடைந்துவிடாமல், சட்டத்தின் விதிகளின் அனு
கூலங்கள் தொழிலாளர்களைச் சென்றடையக்கூடிய முறையில்
இச் சட்டத்தை செயல்படுத்துவது இயலும் வகையில், ஆய்வாள
ரகும் சீரமைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் அனுகூலங்கள்,
தொழிலாளர்களுக்குக் கிடைக்குமாறு நீட்டிக்கப்பட்டிராத
இடங்களில் காணப்படுகின்ற தவறுகளை ஆய்வு ஆணை மூலமாக
வும் அல்லது காரணம் காட்டுமாறு கேட்கும் அறிவிப்புகள் மூல
மாகவும், தொழில் அதிபர்களுக்குச் சுட்டிக்காட்டி, ஆணையில்
கண்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு அத் தொழில் அதிபர்
களுக்கு 2 வார கால அவகாசம் தருமாறு ஆய்வாளர்களுக்கு
கட்டளை இடப்பட்டுள்ளது. அப்படியும் கூட, தொழில் அதிபர்
கள் சட்டத்திற்கும், விதிகளுக்கும் இணங்கி நடக்க தவறுவார்
களானால், அப்போதுதான் அவர்கள் மீது வழக்கு தொடர்வ
தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 1978 ஆம் ஆண்டில்
பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்,

விதிகளை மீறியதற்காக தொழில் அதிபர்கள் மீது 183 வழக்குகள்
தொடரப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில்
80 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன.
இந்த 263 வழக்குகளில், 177 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட
வர்கள், குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை
வழங்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு இறுதியில், 76 வழக்குகள்
முடிவுறா நிலையில் இருந்தன. தண்டனையில் முடிவுற்ற
177 வழக்குகளில் விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை
ரூபாய் 18,325 ஆகும். அதாவது, ஒவ்வொரு வழக்கிலும் சரா
சரியாக சுமார் 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் நகல் முத்திரைத் தாள்களுக்கு தொழிலாளர்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற பொறுப்பு நீக்கப்பட்டது.

தமிழ் நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள்
(பணி நிலைமைகள்) விதிகளின் 31 (5) விதிகளின்கீழ், மேல்
முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர்
தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்து
வதின் பேரிலேயே, மேல் முறையீட்டு அதிகாரியின் ஆணை
நகலைப் பெற இயலும், முத்திரைத் தாள்களை வழங்க வேண்டும்
என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு விதி விலக்கு
அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்
பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி,
தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

முத்தரப்புக் குழு.

சட்டத்தையும், விதிகளையும், செயற்படுத்தும்பொழுது,
தொழில் அதிபர் துன்புறுத்தப்படாத வகையில் அவர்களுக்கு
எடுத்துரைத்து வற்புறுத்துகின்ற முறையில் அவற்றைச் செயற்
படுத்துவதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆகவே
சட்டத்தையும், விதிகளையும் செயற்படுத்தும் பொழுது எழக்
கூடிய பிரச்சினைகளைக் குறித்து விவாதித்து அவற்றை வகைப்
படுத்துவதற்காக இவ்வரசு தொழிலாளர்களின் பிரதிநிதிகளும்
தொழில் அதிபர்களின் பிரதிநிதிகளும் கொண்ட முத்தரப்புக்
குழு ஒன்றை அமைத்துள்ளது. இச்சட்டத்தின கீழ், தலைமை
ஆய்வாளராக உள்ள தொழிலாளர் நலத்துறை, துணை
ஆணையாளர் (ஆய்வுகள்) இக்குழுவிற்கு தலைமை வகிக்கிறார்
1978 ஆம் ஆண்டில்அது மூன்று முறை, அதாவது 25—2—1978,
18—10—1978, 20—12—1978 ஆகிய நாட்களில் கூடியது.

தொழிலாளர்களுக்கு ஊதியங்கள்.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஊதியங்களை
உயர்த்தி வரையறுக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்பிக்
கொண்டிருந்தனர். எனவே, துறை அதிகாரிகள் அதிக் [illegible]யீட்ட

உடன்பாடுகள் ஏற்படச் செய்தனர். அதன்மூலம், அவர்களுடைய
கூலி, 1,000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு ரூபாய் 4·50 என்று
இருந்த அளவு ரூபாய் 5·25 ஆக உயர்த்தப்பட்டது. ஜாடி
பீடிகள் 1,000 சுற்றுவதற்கு ரூ. 4·75 என்று இருந்த கூலி
ரூ. 5·50 ஆக உயர்த்தப்பட்டது. சென்னை, செங்கற்பட்டு,
வட ஆற்காடு, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய
மாவட்டங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தொடர்பான இந்த
உடன்படிக்கைகள் பல்வேறு நாட்களில் செய்துகொள்ளப்பட்டன.
ஆனால் சேலம் போன்ற சில பகுதிகளில் உடன்பாடு ஏற்பட
வில்லை. எனவே, இவ்வாறு உயர்த்தப்பட்ட ஊதிய அளவை
யே குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ், குறைந்த
அளவு ஊதியம் என, அறிவிப்பின்மூலம் அறிவிப்பது பொருத்த
மாகும் என அரசு கருதியது. தற்போது, தமிழ் நாட்டிலுள்ள பீடி
சுருட்டுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மேற்குறித்தவாறு
திருத்தப்பட்ட ஊதியம் பொருந்துவதாகும்.

தேசிய பண்டிகை விடுமுறை நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளித்தல்.

ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்பட வேண்டுமென்று
சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள போதிலும், பல தொழில்
அதிபர்கள் இந்த விதிமுறையைச் செயல்படுத்தாமல் ஏய்த்து
வந்தனர். துறை அதிகாரிகள் இது குறித்து இணக்கப் பேச்சு
வார்த்தைகள் நடத்தி உடன்பாடுகளைச் செய்துள்ளனர். அதன்
படி ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க தொழிலதிபர்கள்
ஒப்புக்கொண்டுள்ளனர்.

இச்சட்டம், விதிகளைச் செயல்படுத்துவதற்குரிய பொறுப்புகள்.

வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள், இச்சட்டம்,
விதிகளைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ள
வேண்டுமென அரசு விரும்புகிறது. இதனைக் கருத்தில் கொண்டு
ஒப்பந்தக்காரர்கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்கள் தொழி
லாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் போதும்கூட இச்
சட்டத்தின் கீழ் வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள்
உரிமங்கள் வாங்கச் செய்யும் வகையில் இச்சட்டத்தை திருத்த
வேண்டுமென அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது,
கோயம்புத்தூரில் வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள்
சென்னை தொழிலாளர் நல துணை ஆணையர் (ஆய்வுகள்)
முன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வதன் பேரில் உரிமங்களை
வாங்கிக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் நலன்

பீடித் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின்கீழ் மேல் வரி
விதிக்கப்பட்டிருந்தும் கூட தமிழ்நாட்டில் அந்தத்தொழிலாளரி
களுக்கு நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை என்பது இந்த

தொழிலாளர்களின் குறையாகவும் தொழிலதிபர்களின் குற்ற
யாகவும் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் இந்தத்தொழிலாளர்
களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய
அரசுடன் இந்த அரசு 1978-ல் தீவிரமாக பேச்சு வார்த்தை
நடத்தியது. பீடித் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட நடவடிக்கை
களுக்கு வகை செய்யும் காரியத்திற்காக பல்வேறு பீடித் தொழி
லாளர்கள் நிலையங்களுக்கு தொழிலாளர் நல ஆணையரை
பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்)
சட்டத்தினபடி தலைமை ஆய்வாளர் பெங்களூருக்கு அழைத்துச்
சென்றார். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அதிகாரிகளுடன்
இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தினார், நலத் திட்டங்களைச்
செயல்படுத்துவதற்காக பல்வேறு ஆலோசனைகளையும்
வழங்கினார். அவை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வரு
கின்றன, 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாள்
நிலையான இயங்கும் மருந்தகம் ஒன்று மேலப்பாளையத்தில்
தொடங்கி வைக்கப்பட்டுள்ளது, மேலப்பாளையத்திலும் அதைச்
சுற்றியுள்ள இடங்களிலும் பீடித் தொழிலாளர்களின் மருத்துவத்
தேவைகளை இந்த மருந்தகம் நிறைவு செய்கிறது.

பெருந்துறை, பெண்ணாத்தூர். தாம்பரம், திருச்சி, ஆசாரி
பள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள
காசநோய் மருத்துவமனைகளில் பீடித் தொழிலாளர்களுக்காக
படுக்கைகளை ஒதுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பீடித்தொழி
லாளர்களுக்காக பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்
துவமனையில் 10 படுக்கைகளை ஒதுக்கவும் அரசு ஒப்புதல்
அளித்துள்ளது.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள்
சட்டத்தைச் செயற்படுத்தும் பணியாளர்கள்,

தமிழ்நாட்டில் தொழிலாளர் நல ஆணையரின் கீழ் தொழி
லாளர் நலத்துறை ஆணையர் (ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு
மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படித்
தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்து வருகிறார், இம்
மாநிலத்தில் இச்சட்டம் 11 தொழிலாளர் நல ஆய்வாளர்களா
லும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் நிறை
வேற்றப்பட்டு வருகிறது.

பத்திரப்பதிவு.

ஐந்து தொழிலாளர்களுக்குப்மேற்பட்டு வேலை பார்க்கின்ற
மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ்பதிவு
செய்யப்படுகின்றன, 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 1,472
பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்
இருந்தன, 171 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிய
தாகப் பதிவு செய்யப்பட்டன, இதனால் பதிவு செய்யப்பட்ட

நிறுவனங்களின் எண்ணிக்கை 1,643 ஆக உயர்ந்தது. இந்த
1,643 நிறுவனங்களில் 104 நிறுவனங்கள் இந்த ஆண்டில் பதிவி
லிருந்து நீக்கப்பட்டன, பதிவு செய்யப்பட்ட மோட்டார்
போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில்
1,539 ஆக இருந்தது, ஆண்டின் இறுதியில் பணியில் அமர்த்தப்
பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 51,170, ஆக இருந்தது.

1978 ஆம் ஆண்டில் உரிமக் கட்டணங்கள் வகையில் ரூ.82,787
வசூலிக்கப்பட்டது.

சீருடைகளும் ஏனைய நல வசதிகளும் அளித்தல்.

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் சீருடை
கள் வழங்கப்பட்ட போதிலும், தனியார் நிறுவனங்களில் விதி
களுக்கிணங்க பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்படவில்லை
யென புகார்கள் நிறைய வந்துள்ளன. இன்னும் பல இடங்
களில் சலவைப்படியும் வழங்கப்படவில்லை, எனவே சீருடை
கள், ஓய்வு அறை முதலியவை போன்ற அடிப்படை வசதிகள்
தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்று கவனிப்பதற்
காகஇந்த ஆய்வகம் சிறப்பாக முயற்சி எடுத்துக் கொண்டது.

வழக்குகள்.

தொழிலதிபர்கள், இச்சட்டம் விதிகளின்பயன்களைமுழுமனது
டன் தொழிலாளர்களுக்கு வழங்குகின்றனராஎன்பதைக்கவனிப்ப
தில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது, அதனால்தான் ஒருவர்
மீது வழக்குத் தொடர்வது கடைசியாக மேற்கொள்ளும்ஏற்பா
டாக மட்டுமே வைத்துக் கொள்ளப்படுகிறது, எனினும். இந்தச்
சட்டம் விதிகளைப் பின்பற்றி நடக்காததற்காக 1978 ஆம்
ஆண்டில் தொழிலதிபர்கள் மீது 284 வழக்குகள் தொடுக்கப்
பட்டன. 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 138 வழக்குகள்
முடிவுறாமல் இருந்தன, 1978 ஆம் ஆண்டு ரூ. 30,245அபராதத்
தொகையுடன் 323 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது,
அதாவது ஒவ்வொரு வழக்குக்கும் சராசரியாக ரூ. 93 அபராதம்
விதிக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆறு வழக்குகளில்
சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மூன்று
வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன, 1978 ஆம் ஆண்டின்
இறுதியில் 100 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

முத்தரப்புக் குழு.

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்
விதிமுறைகளைச் செயல்படுத்தும் ஏற்பாடுகளைப் பரிசிலனை
செய்வதற்கான முத்தரப்பு நிலைக்குழு, 1978 செப்டம்பரில்
அரசால் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 19

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர், (பணி நிலைமை களும் பல்வேறு விதித் துறைகளும்) சட்டம்.

இச்சட்டத்தின் கீழ் 'ஆய்வாளர்கள்' என அறிவிக்கப்பட்ட
11 தொழிலாளர் நல ஆய்வாளர்கள். 28 தொழிலாளர் நல
துணை ஆய்வாளர்கள்,206 தொழிலாளர் நலஉதவி ஆய்வாளர்கள்
இச்சட்டத்தின் விதித் துறைகளைச் செயல்படுத்தி வரு
கின்றனர். 1978 ஆம் ஆண்டின் இறுதியில் 3,495 தொழிலா
ளர்களைப் பணிக்கமர்த்தியுள்ள 47 நிறுவனங்கள் இருந்தன.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாடு பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்க
ளுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் 1976 ஆம்
ஆண்டு மார்ச்சு 6 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.
தொழிலாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத்துணை ஆணை
யர் (ஆய்வுகள்) தொழிலாளர் நல வட்டாரத்துணை ஆணையர்,
தொழிலாளர் நல ஆய்வாளர்கள். தொழிலாளர் நலத் துணை
ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர்
இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் ''ஆய்வாளர்களாக'',
அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத் தலும் நீக்கலும்) சட்டம்.

இச்சட்டத்தின்கீழ் தொழிலாளர் நலத்துணை ஆணையர்கள்
அலுவலகத்துடன் இணைந்துள்ள தொழிலாளர் நல உதவி
ஆணையாளர்கள் பதிவு அதிகாரிகளாகவும், தொழிலாளர் நல
ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும் அறிவிக்கப்
பட்டுள்ளனர், இச்சட்டத்தின் 15 (1) ஆவது பிரிவின் கீழ்,
தொழிலாளர் நலத் துணை ஆணையர்கள் மேல் முறையீட்டு
அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றுள்ளனர், ஆய்வு செய்யும்
அதிகாரிகள் யாவரும். அதாவது தொழிற்சாலை ஆய்வாளர்கள்,
மலைத் தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நலஆய்வாளர்
கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர்
நல உதவி ஆய்வாளர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தின் கீழ்
ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், வட்
டாரங்களில் உள்ள தொழிலாளர் நல துணை ஆணையர்களும்.
தொழிலாளர் நல உதவி ஆணையர்களும். தொழிற்சாலை மேற்
பார்வை ஆய்வாளர்களும் தலைமையிடத்தில் தொழிலாளர் நல
ஆணையரும் தொழிற்சாலை தலைமைஆய்வாளர்களும்தொழிற்
சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களும், தொழிலாளர்
நலத்துணை ஆணையரும் (ஆய்வுகள்) இச்சட்டத்தின்கீழ்
ஆவா ார்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1979 எப்ரல் 19]

தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் உள்ள தொழி
ளர் நல உதவி ஆணையர் (ஒப்பந்தத் தொழிலாளர்கள்) 1970-ம்
ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்)
சட்டம் தொடர்புடைய பணியைக் கவனித்து வருகிறார்.

ஒப்பந்த அடிப்படையில் எந்தத் தொழிற்சாலைகளில் தொழி
லாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனரோ அந்தத் தொழிற்
சாலைகளில் இச்சட்டத்தைச் செயற்படுத்துமாறு தொழிற்சாலை
ஆய்வாளர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைச்
சட்டத்தின்கீழ் வராத நிறுவனங்களில் தொழிலாளர் நல ஆய்வா
ளர்கள் இந்தச் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தி
வருகின்றனர். தொழிற்சாலைகள் உட்பட எல்லா வகைப்பட்ட
நிறுவனங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்
களைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள்
உரிமம் வழங்கும் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் 7 (1) பிரிவின்கீழ் 292
தொழிலதிபர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 274 ஒப்பந்தக்
காரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. (சார்நிலை
அதிகாரிகள் மொத்தம் 1,551 இனங்களில் ஆய்வு செய்தனர்.)

இச்சட்டத்தை, நிர்வகிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை நல்
கும் பொருட்டு. அரசு தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத்
துறைச் செயலாளர் தலைமையின் கீழ், மாநில ஒப்பந்தத் தொழி
லாளர் ஆலோசனை வாரியம் ஒன்று இச்சட்டத்தின் 4-ஆவது
பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில்
தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் நால்வரும், தொழிலாளர்களின்
பிரதிநிதிகள் நால்வரும், அரசின் பிரதிநிதிகள் இருவரும் உறுப
பினர்களாக உள்ளனர். 1978 ஆம் ஆண்டு ப்ரல் மாதம்
13-ம் தேதி, ஜூலை மாதம் 13-ம் தேதி டிசம்பர் மாதம் 8-ம்
தேதி ஆகிய நாட்களில் அதாவது மொத்தம் மூன்று முறை இந்த
வாரியம் கூடியது. மேற்சொன்ன வாரியத்தின் பரிந்துரைகளின்
அடிப்படையில், சிமிண்ட், காகிதம், பொறியியல், துணி ஆலை
ஆகிய தொழில்களில் ஒப்பந்த தொழிலாளர் அமைப்பு முறை
யைக் கொண்டு வருவதற்காக துணைக் குழுக்கள் அமைக்கப்
பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் நாள்
அன்று நடைபெற்ற கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி பாரத் கனரக
மின் இயந்திரத் தொழிற்சாலையில் (BHEL) ஒப்பந்தத் தொழி
லாளர் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் பொருட்டு துணைக்
குழு ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தத் தொழிலாளர் அமைப்பு முறையை ஒழிப்பதற்குப்
பதிலாக, 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்
படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின் விதித் துறைகளை முறையாக
முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்
கப்பட வேண்டுமென அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1978 ஆம் ஆண்டில் 30 தொழில் நிறுவனங்களின் நிலை
ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன.
12 இனங்களைப் பொருத்த மட்டில் இந்த நிலை ஆணைகளில்
திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல்
முறையீட்டு அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல
நீதி மன்றங்கள் இந்த ஆண்டில் இந்தச் சட்டத்தின்கீழ் 8 மேல்
முறையீடுகளை முடிவு செய்துள்ளன.

திருத்தம்.

(1) 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல.

தற்போது 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்
களைக் கொண்ட நிறுவனங்களுக்கு 1946 ஆம் ஆண்டு தொழில்
நிறுவன வேலை (நிலை ஆணைகள்)சட்டத்தின் விதித் துறைக்
களை 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக்
கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்க அரசு ஆணைகள்
பிறப்பித்தது.

(2) 7 (2), 7 (3)ஆம் எண் மாதிரி நிலையாணைகளை நீக்குதல்.

தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல்
வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவ
தற்கான மாதிரி நிலையாணைகளில் அல்லது சான்றிட்ட நிலை
யாணைகளில் உள்ள விதித் துறை நீக்கப்பட வேண்டுமென்றும்,
அவர் வேலைக்கு வராது இருந்த நாட்கள் தவறான நடத்தை
என்று மட்டுமே கருதப்பட்டு, தன்னிலை விளக்கம் அளிக்க அவ
ருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண்
டும் என்பதே அரசின் கருத்தாகும். இக்கருத்துக்குச் செயல்
வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளைத்
திருத்தி வெளியிட்டுள்ளது. இது, 1979 சனவரித் திங்கள் 27-ம்
நாளிட்ட தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறையின்
அரசாணை எண். 143-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய விழாக்கால விடுமுறை நாட்கள்) சட்டம்.

இந்தச் சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 ஆவது
பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்
பட்டுள்ள "தொழிற்சாலைகள்" அனைத்திற்கும் பொருந்து
கின்றது; அல்லது அந்தச் சட்டத்தின் 85-வது பிரிவைச் சேர்ந்த

(2) உட்பிரிவின்கீழ் ஒரு தொழிற்சாலையாகக் கருதப்படுகின்ற
எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. மலைத் தோட்டத் தொழி
லாளர் நலச் சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில்
பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்கும்
பொருந்துகிறது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறு
வனங்கள் சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (6) பகுதியில்
பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள்-நிறுவனங்
கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும் 1966 ஆம் ஆண்டு
பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்
தின் 2 (h)-வது பிரிவின்கீழ் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள
நிறுவனங்கள் அனைத்திற்கும்கூட இச்சட்டத்தின் விதித்
துறைகளை அரசு நீட்டித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்
கீழ், மாநில அரசு பொருத்தமான அதிகாரியாகவுள்ள அட்ட
வணையிடப்பட்ட வேலைகளுக்கும் இச் சட்டத்தின் விதித்
துறைகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது.

இச் சட்டத்தின் விதித் துறைகளை மீறியமைக்காக ஆய்
வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 2,820 வழக்கு
கள் தொடரப்பட்டுள்ளன. இவற்றில், 2,355 வழக்குகள் தண்
டனையில் முடிந்தன, 21 வழக்குகள் விடுதலையில் முடிந்தன.
6 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இந்த ஆண்டில்
ரூ. 66,072 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இந்த
ஆண்டில் 1,23,541 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

III. ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம், 1948.

கீழ்க்காணும் வேலைகளுக்காக குறைந்த அளவு ஊதிய விதங்
களை 1978 ஆம் ஆண்டில் அரசு வரையறுத்துள்ளது/திருத்தி
யமைத்துள்ளது.

(1) தோல் பதனிடும் தொழிலிலும், தோல் தயாரிப்புத்
தொழிலிலும் வேலை.

(2) அச்சகங்களில் வேலை.

(3) அங்காடிகள், சந்தைகள் இவை போன்ற பிற இடங்
களில் சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல் வேலை.

(4) மோட்டார் வண்டி (ஆட்டோமொபைல்) பணியகங்
களில் வேலை.

வேளாண்மை, வேளாண்மைத் துணைத் தொழிலில் ஈடுபட்
டுள்ளவர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தி
யமைக்கும் நோக்கத்துடன், அரசு குறைந்த அளவு ஊதியங்கள்
ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவிற்கு
வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினர் ஒருவர் தலைவராவார்.
இக் குழுவில் தொழிலதிபர் ஒருவரும், தொழிலாளர் பிரதிநிதி
களும் உள்ளனர்.

கீழ்காணும் வேலைகளுக்கான, குறைந்த அளவு ஊதியங்களை
நிர்ணயித்தல்/திருத்தியமைத்தலில் அரசுக்கு ஆலோசனை
நல்கும் பொருட்டு, குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக்
குழு அமைக்கப்பட்டுள்ளது :—

(1) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை.

(2) பருத்தியாடை சலவை நிலையங்களிலும், வெளுப்
பகங்களிலும் வேலை (கம்பளித் துணிகள் உட்பட).

(3) எண்ணெய் ஆலைகளில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய
வீதங்களை நிர்ணயிக்க அல்லது திருத்தியமைக்கக் குறைந்த அளவு
ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான செயற்
குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(1) திரைப்படத் தொழிலில் தயாரிப்பு, விநியோகம்,
விளம்பரம் உட்பட வேலை.

(2) செயற்கை வைரம் பட்டை தீட்டுதலில் வேலை.

(3) தேயிலை வாங்கி, தேயிலைத் தூள் தயாரிக்கும்
தொழிற்சாலைகளில் வேலை.

(4) வெட்டு மரத்தொழிலில் வேலை.

(5) கைத்தறி துணி நெய்யும் தொழிலில் வேலை.

(6) கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்
களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் நோக்கத்
துடன் அரசு அவற்றை குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்
விவர அட்டவணையில் சேர்த்துள்ளது :—

(1) அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் காப்புறுதி
மருத்துவ மனைகள், மருந்தகங்கள் அல்லாத ஏனைய மருத்துவ
மனைகள், தனியார் மருத்துவ மனைகளில் வேலை.

(2) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள்
செய்தல்.

(3) வெளுத்தல், சாயம் தோய்த்தல் முதலிய பணிகள்.

(4) தையல் தொழில்.

காப்பிக் கொட்டைப் பதப்படுத்துதல் வேலையையும் சேர்த்
துக் கொள்ளும் பொருட்டு, அரசு மறுப்புரைகள் அல்லது கருத்
துரைகளைக் கேட்டு வரைவு அறிவிப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இந்த
ஆண்டில், 32,910 ஆய்வுகளை மேற்கொண்டனர். இச்சட்டத்தை
யும் விதிகளையும் மீறியதற்கான வழக்குகள் பற்றிய விவரங்கள்
வருமாறு :—

(1) ஆண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றத்தின் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகள்.	409
(2) இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்.	714
(3) தண்டனை விதிக்கப்பட்டு முடிந்த வழக்குகள்.	693
(4) விடுதலையில் முடிந்த வழக்குகள் ..	9
(5) ஆண்டு முடிவில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.	421
(6) வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை	ரூ. 23,550

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20-வது பிரிவின் கீழ்
"அதிகாரிகள்" என்று அறிவிக்கப்பட்ட தொழிலாளர் நீதி
மன்றங்களில் தலைமை தாங்கும் அதிகாரிகள், இந்த ஆண்டில்
குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படாதது பற்றித் தாக்கல்
செய்த 23 கோரிக்கை மனுக்களை தீர்த்து வைத்தனர்.

1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தொழிற்சாலை ஆய்
வாளர் அலுவலகமும், பிற தொழில் நிறுவனங்களைப் பொறுத்த
வரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச்சட்டத்
தைச் செயற்படுத்தி வருகின்றன.

இச்சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 814 வழக்கு
களில் தொழில் அதிபர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்
கப்பட்டது. 1978-ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட வழக்கு
களில் 893 வழக்குகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.
(ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த
வழக்குகளும் இதில் அடங்கும்) ஒரு வழக்கு விடுதலையில்
முடிந்தது. 727 வழக்குகள் விசாரணை முடிவாகாமல் உள்ளன.
ரூ. 29,593 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ஊதியங்கள் கொடுப்பது குறித்த 351 கோரிக்கைகள் ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்தன. ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கு வதற்காக உதவி ஆணையாளர் முன்பாக 451 உரிமைக் கோரிக்கை கள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் இந்த ஆண்டில் 482 உரிமைக் கோரிக்கைகள் குறித்துத் தீர்ப்பளிக்கப் பட்டன. 1978-ஆம் ஆண்டு இறுதியில்320 உரிமைக் கோரிக்கை கள் விசாரணை முடிவாகாமல் இருந்தன.

இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர் கள் 38,827 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்.

இச்சட்டம், ஆண், பெண் இருபாலருக்கும் ஒரே விதத்தில் சம்பளம் வழங்குவதற்கும் வேலை வாய்ப்பில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகை செய்கின்றது.

அரசு, இச்சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் ஆய்வாளர்களை யும் மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ் அதிகார மன்றங் களையும் நியமித்துள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7 (a) பிரிவின் கீழ் தொழி லாளர் நல அதிகாரிகளுக்கு 26 விண்ணப்பங்கள் அனுப்பப்பட் டுள்ளன. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு விண்ணப்பம் விசாரணை முடிவாகாமல் இருந்தது. 3 விண்ணப்பங்கள் தொழி லாளர் நல அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டன.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7 (b) பிரிவின் கீழ் 5 முறை யீடுகளைத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் தீர்த்து வைத்தார்.

IV. சமூகப் பாதுகாப்பு.

1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, பல்வகை விதித் துறைகள் சட்டம்.

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி வடிவில் ஓய்வு கால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும்போது இறந்து விட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு நிதியுதவியும், திங்கள் தோறும் குடும்ப ஓய்வூதியத் தொகையும் கிடைக்க 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்—பல்வகை விதித் துறைகள் சட்டமும் அதன் மூன்று திட் டங்களும் வகை செய்கின்றன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதித் திட்டம்,

தொழிலாளர் வைப்புத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் முதலிய திட்டங்கள் இந் நாட்டிலுள்ள தொழிற்சாலைத் தொழி லாளர்களுக்குப் பெரிதும் தேவைப்படும் சமூகப் பாதுகாப்பை அளிக்கின்றன.

இவற்றுடன், சில நிபந்தனைகளுக்குட்பட்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் பணியில் இருக்கும்போது மரணமடைந்தால், அவர்களது கணக்கில் கடைசி 36 மாதங் களில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமானதொரு தொகை, அதாவது 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்குவதன் மூலம் அண்மையில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டம் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்படுவது அவர் களுக்குக் காப்புறுதி அளிக்கிறது.

இச்சட்டத்தை நீட்டித்தல்.

ந்த ஆய்வாண்டில், இச்சட்டம், புதிய தொழில்களுக்கு நீட்டிக்கப்படவில்லை இருப்பினும், "கால்நடைத் தீவனம்" தயாரிக்கும் நிறுவனங்கள்/தொழிற்சாலைகளுக்கும், செங்கல் தொழிற்சாலைகளுக்கும், "வைரம் வெட்டியெடுக்கும் சுரங்கங் களுக்கும்", வழக்குரைஞர்கள் நூலகம்/மன்றம்/வழக்குரைஞர்கள் சங்கம், தையல் தொழில், சிறிய சுரங்கங்கள், "கல்வி நிறுவனங்கள்.", ஆகியவற்றுக்கும் இச்சட்டத்தை நீட்டிப்பது பரிசீலனையில் உள்ளது.

1977–78 ஆம் ஆண்டில், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் கள் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தின் கீழ் வருகின்ற தொழிற்சாலைகள்–தொழில் நிறுவனங்களின் வகை கள் மொத்தம் 154 ஆகும்.

இச்சட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள் / சந்தாதாரர்கள்.

இச் சட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்களைச் சேர்ப்பதில் இந்த ஆய்வாண்டு உயர்வு கண்டுள்ளது. கடந்த 6 திங்களில் (1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை) மொத்தம் 144 புதிய தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின் செயல் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன. கூடுதல் நிறுவனங்கள் சேர்க்கப்பட்டதன் காரணமாக, இத் திட்டத்தின்கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அறிக்கை ஆண்டில் 0.55 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1978 செப்டம்பர் 30-ம் நாள் இறுதியில் வருங்கால வைப்பு நிதி சந்தா தாரர்கள் 14.43 இலட்சம் பேர் கொண்ட 10,817 நிறுவனங்கள் இச் சட்டத்தின் செயல் வரம்பின்கீழ் வந்தன.

இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின்கீழ் கொடுக்கப்பட்ட தொகைகளின் கேட்பு/வசூல்/நிலுவைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் 1978ஆம் ஆண்டு மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி அமைந்தவை.)

நிலுவையின் தன்மை. (1)	30–9–78-ம் நாள் நிலவரப்படி நிலுவைகள் (2)	1–4–78முதல் 30–9–78வரை வசூல். (3)	30-9-78 ஆம் நாள் நில வரப்படி. (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. சேர்ந்து வந்த பழைய தொகைகள்.	7.59	0.18	7.41 (7·42)
2. தொழிலாளர் வருங் கால வைப்பு நிதிக்கு தொகைகள்.	835.98	738.66	117.32* (117.52)
3. நிர்வாகச் செலவுகள்.	20.96	18.50	2.46 (2.46)
4. ஆய்வுச் செலவுகள் ..	3.90	3.57	0.33 (0.82)
5. குடும்ப நல ஓய்வூதிய நிதிக்குத் தொகைகள்.	100.14	99.09	1.05 (1.40)
6. தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகையுடன் கூடிய ஆயுள் சட்டுறுதித் தொகைகள்.	41.15	33.23	7.92 (8.53)
7. தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகையுடன் கூடிய ஆயுள் சட்டுறுதி நிர்வாகச் செலவுகள்.	8.60	6.96	1.6 (1·67)

வட்டி வீதம்.

1978–79ஆம் நிதி ஆண்டிற்கு தொழிலாளர் வருங்கால வைப்புநிதியில் சந்தாதாரர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வட்டிவீதம் 8.25 சதவீதமாகும். கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வட்டிவீதம் 8 சதவீதமாகும். இந்நிறுவனம், அதன்

வெள்ளிவிழா ஆண்டின் நினைவாக, வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்துபவர்கள் தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் வரை அத்தொகையிலிருந்து முன்பணம் பெறாமல் இருந்தால், அவர்களுக்கு கூடுதலாக ஊக்க (போனஸ்) வட்டி 0·5 சதவீதம் கொடுத்து வருகிறது.

வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாக முடித்தல்.

1977–78 ஆம் ஆண்டில் 32,359 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதி கணக்குகள் இறுதியாக முடிக்கப்பட்டு, அவற்றிற்காக ரூ. 9·63 கோடி வழங்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி பெறப்பட்ட/இறுதியாக முடிக்கப்பட்ட/திருத்தப்பட்ட/எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்த விவரங்களை காட்டும் விவர அட்டவணை பின்வருமாறு :—

1. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் நிலவரப்படி இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள்.		4,958
2. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரையுள்ள காலத்தில் பெறப்பட்ட கோரிக்கைகள்.		23,403
மொத்தம் ..		28,361
3. இறுதியாகத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	16,331	
4. திருத்தப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	7,171	23,502
5. 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி தீர்த்து வைக்கப்படாதுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை.		4,859

இந்த கோரிக்கைகள் அடுத்து வந்த மாதங்களில் முடிக்கப்பட்டன. கோரிக்கைகள் இறுதியாகத் தீர்த்துவைக்கப்பட்டதன் பேரில் வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்தியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகைகளின் விவரம் வருமாறு :—

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு.	இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை.	கொடுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1. இறப்பு	1,257	49.31
2. வயது முதிர்வு பெற்றமை ..	2,524	212.00
3. நிரந்தரமாக இயலாமையுற்றமை	392	31.00
4. பதவி விலகல்	9,754	183.62
5. இடம் பெயர்தல்	11	0.77
6. ஆட் குறைப்பு	2,305	42.08
7. பல்வகை	88	1.82
மொத்தம் ..	16,331	520.60

ஆண்டு கணக்குகள் விவர அறிக்கையை வெளியிடுதல்

1975–76 ஆம் ஆண்டு வரைக்கும் உரிய ஆண்டுக் கணக்குகள். முழுமையாக வெளியிடப்பட்டுள்ளன. 1976–77 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 9,249 நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப் பட வேண்டிய ஆண்டு கணக்குகளின் எண்ணிக்கையின் படி ரூ. 7,25,486 ஆகும். இவற்றில் 8,674 நிறுவனங்கள் தொடர்பாக மொத்தம் 6,93,700 கணக்குக் குறிப்புச் சீட்டுகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டன. இன்னும் எஞ்சியுள்ள கணக்கு விவரங்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், 1977–78 ஆம் ஆண்டிற்கு 9,919 நிறுவனங்கள் தொடர்பான 7,84,864 கணக்குகளும் 1978 செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக உள்ளன. நடப்பு ஆண்டில், 1,037 நிறுவனங்கள் தொடர்பான 76,151 கணக்குகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கணக்குகள் குறித்த விவரங்களுக்கு குறிப்புச் சீட்டுகள் வெளியிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

வட்டாரக் குழு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தமிழ்நாடு வட்டாரம்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசு ஆகிய மூன்று தரப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய வட்டாரக் குழு அமைக்கப்பட்டது. இக் குழுக்கள் அந்தந்த வட்டாரங்களில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி. குடும்ப ஓய்வூதிய நிதி, தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் திட்டங்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது தொடர்பாக ஆலோசனை கூறி மத்திய நம்பகர் வாரியத்திற்கு (Central Board of Trustees) உதவி புரிகிறது, அரசு தொழிலாளர் நலன்–வேலை வாய்ப்புத் துறையின் செயலாளர் இந்த வட்டாரக்குழுவின் தலைவராவர். இக் குழு முறையே 1978 ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள், 1978 ஜூலை திங்கள் 10 ஆம் நாள், 1978 நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடிற்று. இக் குழு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டம். அதன் திட்டப் பணிகள் இந்த வட்டாரத்தில் செயல்படுவது தொடர்பான பல் வேறு முக்கியத்துவம் வாய்ந்த அவசரத் தன்மையுடைய பொருட்கள் குறித்து விரிவாக விவாதித்தது. அவ்வாண்டில் அதன் பரிந்துரைகளில் முக்கியமானதொன்று, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் வட்டாரத் துணை, வட்டார அலுவலகங்களை ஏற்படுத்துவதாகும். கோயம்புத்தூரில் வருங்கால வைப்பீட்டு நிதிக்குப் பணம் செலுத்துபவர்களின் தேவைகளை நிறைவு செய்ய, மத்திய நம்பகர் வாரியத்தின் (Central Board of Trustees) ஒப்புதல் பெற்ற பின்னர் துணை வட்டார அலுவலகம் 1978 நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் ஏற்கனவே செயல்படத் தொடங்கியது. மதுரையில் துணை வட்டார அலுவலகம் ஏற்படுத்துவது குறித்த பிரச்சினை மத்திய நம்பகர் வாரியத்தின் (Central Board of Trustees) பரிசீலனையில் உள்ளது.

குடும்ப ஓய்வூதியம்— ஆயுள் ஈட்டுறுதித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்காக மொத்தம் 16,568 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் ரூ. 12.11 இலட்சம் தொகைக்குரிய 7,564 விண்ணப்பங்கள் தீர்க்கப்பட்டுள்ளன. 6,969 விண்ணப்பங்கள் அவற்றிலுள்ள குறைபாடுகளைச் சரி செய்வதற்காக அவை மீண்டும் விண்ணப்பதாரர்களுக்கே அனுப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள விண்ணப்பங்களை விரைவாகத் தீர்க்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் திட்டம், 1976.

தொழிலாளர் குடும்பங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை
கள் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்ட
பயன்கள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்
பட்டுள்ளன. (இது 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978
செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையான கால அளவில்
கோரிக்கைகள் தீர்க்கப்பட்டமை குறித்த நிலையை காட்டுகிறது.)

(a) 1978 மார்ச் திங்கள் 31-ம் நாளன்று தீர்க்கப்படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை ..	232	
(b) 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் 30-ம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கைகள்.	1,029	
(c) மொத்தம்	1,261	
(d) பல்வேறு காரணங்களினால் திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள்	494	
(e) 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை தீர்க்கப்பட்ட கோரிக்கைகள்	457	951
(f) 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் இறுதியில் தீர்க்கப்படாமலிருந்த கோரிக்கைகள்		310
(g) தீர்க்கப்பட்டவை தொடர்பாகக் கொடுக்கப்பட்ட தொகை ..	ரூ. 16.35 இலட்சம்.	

எஞ்சியுள்ள கோரிக்கைகளை விரைவில் தீர்த்துவைக்க அவசிய
மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்ட
விதித் துறைகளையொட்டி, தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு
சனவரித் திங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டம்
செயல்படுத்தப்பட்டது, இத்திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி
மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்

பட்டு வருகின்றது, இத்திட்டம் மின் விசையைப் பயன்படுத்தி
இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்ற
வர்களையும் மின் விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்
களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும் கொண்ட
தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்
படாமல் ஊதியம் வழங்குகின்ற தொழிற்சாலைகளுக்கும் பொருந்
தும்.

இத்திட்டத்தின் கீழ்க்காணும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

1. மருத்துவ உதவி (மருந்துப் பொருள்) வடிவில்,
2. நோய்க்கால உதவி,
3. பேறுகால உதவி (பணமாக).
4. இயலாமையுற்றோருக்கு உதவி,
5. சார்ந்துள்ளவர்கள் நல உதவி,
6. இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை.

தற்போது சென்னை நகரில் அயனாவரம், கலைஞர் கருணா
நிதி நகர் ஆகிய இடங்களிலும் மதுரையிலும், கோயம்புத்தூரிலும்
நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்
ளன. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிலை
யான மருந்தகங்கள் 104-ம் நடமாடும் மருந்தகங்கள் ஒன்பதும்
பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும் பகுதி நேர மருந்தகங்கள்
இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளில்
உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு:—

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை
— 625.

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, மதுரை—
202.

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கோயம்
புத்தூர்.— 500,

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கலைஞர்
கருணாநிதி நகர், சென்னை— 206.

கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள தொழிலாளர் நலக் காப்
புறுதி மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை
206-லிருந்து 500 ஆக உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கி
யுள்ளது. கட்டுமானப் பணி நிறைவு பெறும் நிலையிலுள்ளது.

[1979 ஏப்ரல் 19

சென்னை வட்டாரத்தில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின்
குழந்தைகள் ஒரு இலட்சம் பேருக்கு ஆண்டொன்றுக்கு 1,38,500
ரூபாய் செலவில் முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டம் தொடங்கப்
பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் நிதியுதவியுடன் எட்டு முதல்
வகுப்பு குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்கள் 1976 ஆம்
ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் முதல் தொடங்கப்பட்டுள்ளன.
மூன்று தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளிலும்,
சைதாப்பேட்டையிலுள்ள இரண்டாவது தொழிலாளர் நலக்
காப்புறுதி மருந்தகத்திலும் 1977-78 ஆம் ஆண்டில் குடும்ப
நல அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

கோயம்புத்தூரிலும், சென்னையிலும் உள்ள தொழிலாளர்
நலக் காப்புறுதி மருத்துவ மனைகளில் 6 படுக்கை வசதிகளுடன்
சித்த மருத்துவப் பிரிவு 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
20 ஆம் நாள் முதல் தொடங்கப்பட்டது. 4 தொழிலாளர்
நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் 104 நிலையான மருந்தகங்
கள் ஆகியவற்றில் 4 மருத்துவ மனைகளும் 42 மருந்தகங்களும்
கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வரு
கின்றன. எஞ்சியவை தனியார் வாடகைக் கட்டிடங்களில்
செயல்பட்டு வருகின்றன.

தாம்பரம், வேலூர், மணப்பாறைக்கருகிலுள்ள உசிலம்பட்டி,
திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள மருந்தகங்கள் தனியார்
வாடகைக் கட்டிடங்களில் இப்போது செயல் பட்டு வருகின்றன,
இவற்றிற்கு கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.
தாம்பரத்திலும். வேலூரிலும் உள்ள மருந்தகங்களைப் பொருத்த
மட்டில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. மணப்பாறை
அருகிலுள்ள உசிலம்பட்டியிலும் திண்டுக்கல்லிலும் கட்டுமானப்
பணி முடிவடைந்து விட்டது. அவ்விரண்டு மருந்தகங்களும்
விரைவில் புதிய கட்டிடங்களில் செயல்படத் தொடங்கும்.
தற்போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவர்
களுடன் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுவரும் 51 தொழி
லாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாகக்
கட்டிடம் கட்டுவதற்கு தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகம்
ஒப்புக் கொண்டுள்ளது.

தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ள மருந்தகங்
களுக்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தும் பணியை
விரைவுபடுத்த தனி மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்
ஒருவரையும் இதர துணைப் பணியாளர்களையும் நியமிக்க அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பகுதிகளி
லெல்லாம் உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள்,
திரையரங்குகள், பத்திரிகை நிறுவனங்கள் முதலிய புதிய வகை
நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்
நலக் காப்புறுதித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

979 ஏப்ரல் 19]

அரக்கோணம், சங்ககிரி, தஞ்சாவூர், குமாரபாளையம்,
துவக்குடி, திருவரம்பூர், ஆகிய இடங்களுக்கும் தொழிலாளர் நலக்
காப்புறுதித் திட்டத்தை நீட்டிப்பதற்கான செயற்குறிப்புகள்
அரசின் பரிசீலனையில் உள்ளன. மாநிலத்தில் இத்திட்டம்
செயல்படுத்தப்பட்ட பகுதிகளில் காப்புறுதி செய்து கொண்ட
குடும்பங்களுக்கு முழு மருத்துவ உதவி அளிப்பது குறித்தும்
அரசு பரிசீலித்து வருகிறது.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்,
கீழ்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை
செய்கிறது :—

(a) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும், வேலை
செய்யும் போதும் ஏற்படுகின்ற விபத்துக்கள்.

(b) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற
இயலாதவண்ணம் செய்துவிடுகிற தொழில் சார்ந்த சில நோய்
கள். இது தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்
கள், போக்குவரத்து கட்டுமானப் பணிகள், இரயில்வே, அபாயம்
விளைவிக்கிற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி
புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிபம்
அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்
பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக ஏனைய
தொழிலாளர்களுக்கு) இது பொருந்தும்.

1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்றுள்ளபடி
658 வழக்குகள் முடிவுறாத நிலையிலிருக்கின்றன. இந்த
ஆண்டில் 978 வழக்குகள் வரப்பெற்றன. மொத்தம் 1,636
வழக்குகளில் 1,047 வழக்குகள் மீது முடிவெடுக்கப்பட்டன.
இவ்வாண்டு இறுதியில் 589 வழக்குகள் முடிவுறா நிலையில்
இருக்கின்றன.

தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர்மானியத்துடன்
அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல்,
கிணறு தோண்டுதல் அல்லது வெடி வைத்துத் தகர்த்தல்,
பிற தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால்
என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு
அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு
இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு
இழப்பீடு வழங்கும் சட்டத்தின்கீழ் இழப்பீடு
தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நிதி வசதி இல்லாத தொழிலதிபர்களின்
தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அல்லது
வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத தொழி
லாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இ

நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப்போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந் நிதியிலிருந்து தொகை பெறுவர். 1978 ஆம் ஆண்டில் இந் நிதியிலிருந்து ஐந்து பேருக்கு 4,000 ரூபாய் துயர் துடைப்பு நிதி அனுமதிக்கப்பட்டது.

பணிக்கொடை வழங்கல் சட்டம்.

இச்சட்டத்தின்கீழ், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நல துணை ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் மேல் முறையீட்டதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகள் 1,141 வழக்குகளை முடிவு செய்துள்ளனர். மேல் முறையீட்டதிகாரிகள் இவ்வாண்டில் 217 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளனர்.

V. தொழிலாளர் நலத் திட்டங்கள்.

அரசு உதவிபெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் (தனியார் தொழிலதிபர் திட்டம்).

மாநில சமூக நலக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பெருகி வரும் தொழிலாளர்களுக்குப் பாங்குடைய வசதியான வீடுகள் கட்டிக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில் பெரும்பாலோருக்குச் சொந்தமான வீடுகள் வைத்துக்கொள்ள வசதியிருக்காது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கின்றனர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதி அளித்துள்ளனர். ஆனால் இது பிரச்சினையைச் சிறிது கூட தீர்ப்பதாக இல்லை. எனவே பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உதவித் தொகை பெறும் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்ட பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும் இரு சிறிய அறைகள் கொண்ட

வீடு (இரண்டு அடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும் வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (இரண்டு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்குக் கடன் தொகையாக 7.50 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக 2.50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் தொகையில் 1,60,500 ரூபாயும் உதவித் தொகையில் 80,250 ரூபாயும் இதுவரை செலவிடப்பட்டுள்ளன.

1977-78 ஆம் ஆண்டில் புதிய வீட்டு வசதித் திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், 1976-77 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பாலக்கோடு, ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வட புதுப்பேட்டை ஆகியவற்றின் திட்டங்களுக்குக் கடனாக 1,33,750 ரூபாயும், உதவித் தொகையாக 1,84,750 ரூபாயும் வழங்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. சுந்தரம் நெசவு ஆலை, நம்பிநகர், நாங்குநேரி.
2. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாலம்.
3. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர் (நிலை II).

1978-79 நிதி ஆண்டு இறுதிக்குள் மேலே கூறப்பட்டுள்ள வீட்டு வசதித் திட்டங்கள் தரை மட்டம் வரை கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கட்டப்பட்டால் 1978-79 இல் முதல் கடன் தவணை கொடுக்க இயலும்.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டதாகும். ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ரூ. 4,000 உச்சவரம்புச் செலவில் கட்டப்படுகின்றன. அத் தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37·5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். இம் மாநிலத்தில் மலைத் தோட்டங்களிலேயே இருந்துகொண்டு பணிபுரியும் தொழிலாளர்களில் சுமார் 94 சதவீதத்தினருக்கு வீட்டு வசதி அளிக்கப் பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 19

1. வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள்
உட்பட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை—35,997.

2. வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை
—34,475.

3. வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த
எண்ணிக்கை—1,522.

4. இருக்கக்கூடிய தரமற்ற வீடுகளின் மொத்த
எண்ணிக்கை:—3,496.

1978 நவம்பர் திங்களில், கீழ்க்கண்ட எஸ்டேட்டுகளுக்கு
வீடுகள் கட்டுவதற்காகக் கடனும் உதவித் தொகையும் வழங்க
அரசு அனுமதித்தது.

எஸ்டேட்டின் பெயர்.	கடன்.	உதவித் தொகை.	கட்டுவதற்கான வீடுகள்.
1. பிளென்டிவேலி எஸ்டேட், பிளென்டிவேலி அஞ்சல், கோயம்புத்தூர் மாவட்டம்.	ரூ. 50,000	ரூ. 37,500	25
2. கழுகுமலை தேயிலை எஸ்டேட், போடிநாய்க்கனூர், மதுரை மாவட்டம்.	24,000	18,000	12

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதி ஆலோசனைக் குழு.

இக்குழு 1978 மே திங்கள் 20-ம் நாள் அன்று உதகமண்டலத்
தில் கூடி கீழ்க்கண்டவைகள் குறித்து முடிவு செய்தது:—

1. தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி
அளித்தல்.

2. மலை சாதியினருக்கு வீட்டு வாடகைப்படி அளித்தல்.

3. தொழிலாளர் வீடுகளின் கூரையில் கூடுதல் விதானம்
அமைத்தல்.

தமிழ்நாடு தொழிலாளர் சஞ்சிகை.

இது ஒரு மாதாந்திரப் பத்திரிகை ஆகும். தொழில் தகராறு
கள், வேலை முடக்கம், தொழிற்சங்கங்களின் முக்கியமான
ஒபந்தங்கள், தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை

1979 ஏப்ரல் 19]

தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றுன் தீர்ப்புகள்,
உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், ஆகியவற்றின் தீர்ப்புகள்,
தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறியீட்
டெண் முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்களையும், புள்ளி
விவரங்களையும் இது தருகிறது. அத்துடன் தொழிலாளர்
கள் பிரச்சினைகள், தொழிலாளர் நிர்வாகம் பற்றிய கட்டுரை
களையும் அனைத்து நாடுகள் தொழிலாளர்கள் நிறுவன அறிக்கை
கள், முக்கூட்டு அமைப்புகளான இந்தியத் தொழிலாளர் மாநாடு
தொழிலாளர் நிலைக் குழு மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்
குழு முதலியவற்றின் தீர்மானங்கள், பரிவுரைகள் ஆகியவற்
றையும் இது வெளியிடுகிறது. இச் சஞ்சிகையின் முக்கியப்
பகுதியாகிய புள்ளி விவரப் பகுதி தமிழில் அச்சிடப்பட்டு
வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு 1972 ஆம்
ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது.
இதில் தொழிலாளர் நல அமைச்சர் தலைவராகவும், அரசு,
தொழிலதிபர், தொழிலாளர் சங்கங்கள் ஆகியோரின் பிரதி
நிதிகள் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு சார்பற்றவர்கள்
ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவ்வாரியத்தை
தமிழக அரசு அமைத்தது. தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நல
நலனுக்காக இந்த வாரியம் அநேக நலத் திட்டங்களை மேற்
கொண்டது. தற்போது உள்ள நலத் திட்டங்கள் சில கீழே
கொடுக்கப்பட்டுள்ளன.

1. தொழிலாளர் நல நிலையங்கள்.

இவ்வாரியம் தற்பொழுது, (1) அம்பத்தூர் (சென்னை),
(2) செம்பியம் (சென்னை), (3) கோயம்புத்தூர், (4) மதுரை,
(5) திண்டுக்கல், (6) கோவில்பட்டி, (7) திருப்பூர், (8) குடியாத்தம்,
(9) வாணியம்பாடி, (10) சிவகாசி ஆகிய இடங்களில் 10 தொழி
லாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றில் தொழி
லாளர்களின் குழந்தைகளுக்கு மழலையர் வகுப்புகளும் பெண்
தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் மனைவியருக்கும்
தையல் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தையல் வகுப்
பில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30
பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 'கேர்' நிறுவனத்
தின் உதவியுடன் குழந்தைகளுக்கு பலகாரமும் சத்துள்ள உணவும்
இவ்வாரியம் வழங்குகிறது.

(2) தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்.

இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றாலம், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏற்காட்டில் விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 20 நபர்கள் தங்கலாம். நபர் ஒருவருக்கு ரூ. 1·50 வீதம் இயல் பான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. பிற இடங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் தொடங்கப்படும்.

(3) தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர் களுக்குக் காசநோய் வார்டுகள்.

இவ் வாரியம் தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டைக் கட்டியுள்ளது.

(4) படிப்பகங்கள்.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை), தண்டையார்பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காக செய்தித்தாள்கள், வார மாதாந்திர இதழ்கள் வழங்கப்படு கின்றன.

(5) பல மாடிக் கட்டிடங்கள்.

இவ்வாரியம், தேனாம்பேட்டையில் ரூ. 38 இலட்சம் செலவில் பல மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டியுள்ளது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் நலத்துறையின் அலுவலகங்கள் இந்தக் கட்டிடத்தில் செயல்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கும் வாடகை இவ்வாரியத்தின் நிதிவசதிகளைப் பெருக்க உதவும்.

(6) குழந்தைகள் காப்பு நிலையம்.

சென்னையில் திரு. வி. க. நகரிலுள்ள ஒரு மகளிர் மன்றம் குழந்தைகள் காப்பு நிலையம் ஒன்றினை நடத்தி வருகின்றது. இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதோடு பால், ரொட்டி போன்றவையும் இலவச மாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு வாரியம் ஆண் டொன்றுக்கு ரூ. 8,000 மானியம் வழங்குகிறது.

பின்வரும் திட்டங்களும் வாரியத்தின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன :—

1. தொழிலாளர் நலனுக்காக திரைப்படம் காட்டும் கருவி ஒன்று வாங்குதல்.

2. திருமணம், காதணி விழா இதர சமூக நிகழ்ச்சிகளை இயல்பான கட்டணத்தில் நடத்துவதற்கு சென்னை நகரில் ஒரு சமுதாய நிலையத்தை தொடங்குதல்.

3. தேனாம்பேட்டையில் அலுவலகக் கட்டிடத்தில் நூலகம் ஒன்றினைத் தொடங்குதல்.

4. தொழிலாளர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகச் சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் தங்குவதற்குக் குறைந்த செலவில் போதுமான வசதி மிக்க அறைகள் கட்டுதல்.

5. பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன்தரும் வகையில் சென்னை, திருச்சி, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புத்தக வங்கிகள் தொடங்குதல்.

6. மாவட்ட, வட்டார, மாநில அளவில் தொழிலாளர் களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.

7. தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக் கெழுத்து கற்றுத் தேர்வு எழுத மேற்படி வகுப்புகளை நடத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துதல்.

8. திறந்த வெளியிலும் வீட்டினுள்ளும் விளையாடும் விளை யாட்டுகளுக்காக வட சென்னையில் விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

தையல் பயிற்சி நிலையம், கூடலூர்.

கூடலூரில் மலைத்தோட்ட தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்தின் வளாகத்திற்குள் தையற் பயிற்சி நிலையம் ஒன்று இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இத் தொழிலில் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் இந்நிலையத் திற்குப் பொறுப்பு வகிக்கின்றார். மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உடைகள் தைப்பதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 30 வழங்கப்படுகிறது. இப் பயிற்சிக் காலம் 18 திங்களாகும்.

சட்ட உதவி,

தொழிற் சங்கங்கள் உயர் நீதி மன்றத்தில் ஓரிரு ரிட் மனு
அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக
ஏற்படும் சட்டம் சம்பந்தமான செலவுகளுக்காக குறிப்பிட்ட
நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி
வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது,
சட்ட உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையா
ளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது, நடப்பு ஆண்டில்
இப்படிப்பட்ட நிவாரணம் கோரி பாதிக்கப்பட்ட எந்த
நபரிடமிருந்தும் கோரிக்கை எதுவும் வரவில்லை.

தொழிலாளர் இழப்பீட்டுச்சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும்
தொழிலாளர்களில் உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏழைத்
தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு
அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஓராண்டிற்கு
ரூ. 1,000 ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர்
இழப்பீடு கோரி அது குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த
ஆணைகளை எதிர்த்து நிர்வாகத்தினர் உயர் நீதி மன்றத்தில்
மேல்முறையீடு செய்து கொள்ளும் போது அத் தொழிலாளர்களும்
உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பில் வாதாட சட்ட உதவி
பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவராவர், ஆனால், தொழி
லாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின் முன் உள்ள
நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு இந்த சட்ட உதவி அளிக்கப்
பட்டிருக்க வேண்டும். நடப்பாண்டில் சட்ட உதவி அளிப்ப
தற்காக ரூ.-90 க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள்.

தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகச்
சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று
குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும்,
ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரியாலும் ஒய்வு பெற்ற ஓர் தொழி
லாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய
நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவது
குறித்து திட்டமொன்றினை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும்
பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட
பரிவுரைகளை ஒட்டி அரசால் இக்குழுக்கள் அமைக்கப்பட்
டுள்ளன. இக்குழுக்கள் தொழிலாளர்களின் முறையீடுகளை
கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து அவர்கள் தம் குறைகளைக்
களைவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து கருத்
துரை நல்கி தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட பல்வேறு
சட்டங்கள் அவை சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றின்
கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகளை அவர்
களுக்கு எடுத்துக் கூறுகின்றன. 1978 ஆம் ஆண்டில் இந்த மூன்று
குழுக்களும் 380 முறையீடுகளை விசாரித்து ஆலோசனை நல்கி
யுள்ளன.

தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக "கேர்"
நிறுவனத்தின் உதவியுடன், தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத்
திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது, தொழிலாளர்களின்
குடும்பங்களிலுள்ள பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளும்.
கருவுற்ற மகளிரும். பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தி
னால் பயனடைகின்றனர் இத்திட்டத்திற்குட்பட்ட (தமிழ்
நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிலையங்கள் உட்பட
77 நிலையங்களின் மூலம் தற்போது 27,900 பேர் பயன் அடை
கின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்
துடன் ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச்
செயற்படுத்த வேண்டியது அவசியம் என ஏற்றுக்கொள்ளப்பட்
டுள்ளது. இதன்படி ஏற்கனவே வழங்கப்படும் சத்துணவுடன்
மருத்துவப் பாதுகாப்பும் பெற்று இத் தொழிலாளர்கள் பயன
டைவர்.

குழந்தைகளுக்கு சத்துணவு,
பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்கு தாய் சேய்
மருத்துவப் பணிகள், சுகாதாரக் கல்வி இவற்றுடன் தாய் சேய்
நலப் பாதுகாப்பும் அளிப்பதே ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி
முனைப்புத் திட்டத்தின் நோக்கமாகும், கருவுற்ற மகளிருக்கும்
பாலூட்டும் தாய்மார்களுக்கும் கூட இத் திட்டத்தின் கீழ்
உதவி அளிக்கப்படும், எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்
களது குடும்பங்களும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து
கொள்ள வசதி அளிப்பதே இதன் குறிக்கோளாகும். குடும்பத்தின்
மிகவும் பாதிப்புக்குள்ளாக்கக் கூடிய உறுப்பினருக்குத் தாய் சேய்
நலப்பணியை முனைப்பாக அளிப்பதையே நோக்கமாகக் கொண்ட
இத்திட்டம் அளவான குடும்பமே மகிழ்வான குடும்பம் என்ற
கோட்பாட்டை தொழிற்சாலைத் தொழிலாளர்களிடையே
வளர்க்க உதவும்.

ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தில்
பயன்படுத்தப்படுவதற்குத் தேவையான சுகாதார விளக்கப
படங்கள் அச்சிட்டு பல்வேறு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
சென்னை, தமிழ்நாடு மாநில குழந்தைகள் நல இந்திய அகடமி
யைச் சேர்ந்த டாக்டர் சி, திருஞானசம்பந்தம் அவர்களின்
ஆலோசனையுடன் விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன,
இதில் (1) பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்கு ஒரு
பட்டியும், (2) கருவுற்ற மகளிருக்கு/பாலூட்டும் தாய்மார்
களுக்கு ஒன்று. (3) குடும்பத்தினருக்கு அடையாள அட்டை
ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் கீழ் பயனடைபவர்
களின் உடல் நலத்தை மதிப்பிட இந்த அட்டைகள் உதவுகின்றன.
மேலும் அவர்கள் குடும்பநலம் பற்றிய விவரக் குறிப்பாகவும்
இவை பயன்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம்.

பின்வரும் நோக்கங்களுக்காக தமிழ்நாடு தொழிலாளர் கல்வி
நிறுவனம் தொடங்கப்பட்டது:—

1. பொதுத் துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்
களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு (உடலுழைப்பாளர்கள்.
எழுத்தர்கள். தொழில் நுட்பப் பணியாளர்கள்). தொழிலாளர்கள்
சட்டம். தொழிலாளர் கொள்கைகள் தொடர்பான எல்லா
அம்சங்களும் கற்பிக்கப்படுகின்றன. அவ்வாறு கற்பிக்கையில்.
தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்களிடையே இருந்து தலைவர்
களைத் தெரிந்தெடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் வலியுறுத்திக்
கூறப்படுகின்றன.

2. பொதுத் துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்
களிலுள்ள நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

3. தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல். செயல்படுத்து
தல். ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிக்கின்ற தொழிலாளர் நலத்
துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

4. கூட்டுறவுச் சங்ககளிலும். உள்ளாட்சி மன்றங்களிலும்
தொழிலாளர்களுடனும் பணியாளர்களுடனும் தொடர்புள்ள அதி
காரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

உழைப்பவர் உலகம்

தொழிலாளர் நல ஆணையாளரின் பொறுப்பின் கீழ் இயங்கி
வந்த இந்த நிறுவனத்தை அரசு, ஒரு தனித் துறையாக அமைத்
தது. அவ்வாறு இந்த நிறுவனத்தின் தரத்தை உயர்த்துகையில்
இது தற்போது ஆற்றிவரும் பணிகளுடன், தொழிலாளர்களுக்கு
பயனளிக்கும் வகையில் தொழிலாளர் சட்ட நூலை தமிழில்
வெளியிடும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்றும்
அத்துடன் பல்வேறு தொழிலாளர்கள் சட்டங்களையும் நீதி
மன்ற முடிவுகளின் மீதான குறிப்புரையுடன் தமிழில் வெளி
யிடும் பொறுப்பையும் இந்த நிறுவனம் மேற்கொள்ள வேண்டும்
என்றும் அரசு உத்தரவிட்டது. தொழிலாளர் சட்ட நூல்,
'உழைப்பவர் உலகம்' என்னும் பெயரில் தமிழில் வெளியிடப்
படுகிறது. இந்நூலை முதலமைச்சர் அவர்கள் அறிஞர்
அண்ணாவின் பிறந்த நாளான 1978 செப்டம்பர் திங்கள் 15ஆம்
நாளன்று வெளியிட்டார்.

பயிற்சி வகுப்புகள்

இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து கீழ்க்
கண்ட பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது:—

வரிசை எண்ணும், பயிற்சி வகுப்புகளின்/கருத்தரங்கின் விவரமும்.	பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை.	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. தொழிற்சங்கத் தலைமைத் திட்டம், மூன்று மாதப் பயிற்சி.	1	34
2. தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், பொதுத் துறை, தனியார் துறை நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்குமான பயிற்சி.	14	286
3. பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் மலைத் தோட்ட நிர்வாகிகளுக்குமான கருத்தரங்குகள்.	2	319
4. மக்கள் தொகை குடும்ப நலம் குறித்து சென்னை தொழிலாளர் கல்வி நிலையம், குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றி ர உடனுழைப்புடன் நடத்தப்பட்ட கருத்தரங்கு.	1	116
5. கிராமப்புற தொழிலாளர்களுக்கு கோயம்புத்தூர். தொழிலாளர் கல்வித் துறையின் வட்டார இயக்குநர் அலுவலகத்தின் உடனுழைப்புடன் நடத்தப்பட்ட பயிற்சி.	1	40

இந்த 1978-79 ஆம் நிதிஆண்டு முடிவடைவதற்கு முன்னர்
தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த
100 அதிகாரிகளுக்கு 5 பயிற்சி வகுப்புகள். கூட்டுறவுச் சங்கங்
களைச் சேர்ந்த 20 அதிகாரிகளுக்கு
உள்ளாட்சி மன்றங்களைச்

ஒரு பயிற்சி வகுப்பு, பொது தனியார் துறை தொழில் நிறு
வனங்களைச் சேர்ந்த 20 தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு
ஒரு பயிற்சி வகுப்பு, பொதுப் பணித் துறையைச் சேர்ந்த
சுமார் 40 நிர்வாகப் பொறியாளர்களுக்கு ஒப்பந்தத் தொழி
லாளர் சட்டம் குறித்து ஒரு பயிற்சி வகுப்பு, தமிழ்நாடு மின்
சார வாரியத்தைச் சேர்ந்த 25 பொறியாளர்களுக்கு ஒரு
பயிற்சி வகுப்பு ஆகியவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2)

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது :—

வரிசை எண்ணும், பயிற்சி வகுப்பின் பெயரும்.	நடத்தப்பட விருக்கும் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை.
(1)	(2)
1. துறை அதிகாரிகளுக்கான (தொழிலாளர்—நலன் வேலை வாய்ப்புத் துறையைச் சேர்ந்த சார்புச் செயலாலர்கள். அலுவலர்கள். தொழிலாளர் நலத் துறை பிரிவு யைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள், தொழிலாளர் நல அதிகாரிகள், தொழி லாளர் நலத் துறை ஆய்வாளர்கள்) நினை வூட்டுப் பயிற்சி,	4
2, தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த தொழி லாளர் நல உதவி ஆய்வாளர்கள், கண் காணிப்பாளர்கள் ஆகியோருக்கான நினை வூட்டுப் பயிற்சி,	4
3, கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி மன்றங் களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மறு பயிற்சி.	8
4, தொழிற்சங்கத் தலைமைத் திட்டம்	2
5 பொது, தனியார் துறை தொழில் நிறுவனங் களைச் சேர்ந்த தொழிலாளர் நல அதிகாரி களுக்கான மறு பயிற்சி,	2
6, தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள்,	2
7, தொழிலாளர் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுப்பதில் துறை அதிகாரி களுக்குப் பயிற்சி வகுப்புகள்,	2

VI எடைகள்—அளவைகள் சட்டம்,

தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம்

தொழிலாளர் நலத் துறையின் துணை ஆணையாளரே
(ஆய்வு) எடைகள் அளவைகள் (செயல்படுத்துதல்)
சட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். இவருக்கு உதவியாக
தொழில் நுட்பம் சாரா நேர்முக உதவியாளர் ஒருவர், தொழி
லாளர் நல துணை ஆய்வாளர் ஒருவர் (தலைமையிடம்), 11
தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நல துணை
ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள்
ஆகியோர் உள்ளனர். இவர்கள் இச் சட்டத்தையும் ஏனைய
தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயல்படுத்துகின்றனர்,

பதிவு.

எடைகள், அளவைகள், உற்பத்தி செய்வோர், விற்பனை
யாளர்கள். பழுதுபார்ப்போர் ஆகியோர் அதற்கான உரிமங்
களைப் பெறவேண்டும், 1978 ஆம் ஆண்டில் 71 உற்பத்தி
யாளர்கள், 646 விற்பனையாளர்கள், 353 பழுதுப்பார்ப்போ
ஆகியோருக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. அவ்வாண்டில்
உரிமக் கட்டண வகையில் ரூ. 35,887·90 வசூலாகியது.

சரிபார்த்தல், முத்திரையிடுதல்.

தொழிற்சாலைகள், சுரங்கங்கள், ஆபரண உலோகத்
தொழில் முதலியவற்றில் பயன்படுத்தப்படுகின்ற எடைகள்,
அளவைகள் அல்லது எடை போடும், அளக்கும் கருவிகள்
குறைந்தது 12 மாதத்திற்கொருமுறையேனும் சரிபார்க்கப்பட
வேண்டும், வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படுபவை 2
ஆண்டுகளுக்கொரு முறை சரிபார்க்கப்பட வேண்டும், அவ்வாறு
சரிபார்ப்பதற்காக ஒரு முத்திரைக் கட்டணம் வசூலிக்கப்படு
கிறது, 1978ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டணமாக ரூ.
25,75,286·83 வசூலிக்கப்பட்டது. தற்போது முத்திரையிடும்
பணியை உதவி ஆய்வாளர்கள் கவனிக்கின்றனர். இவர்கள் பல்
வேறு நிறுவனங்களைச் சோதனையிடுவதுடன் முத்திரையிடும்
பணியையும் கவனிக்கின்றனர். அதன் விளைவு வணிகர்கள்
விரும்பும்போது சரிபார்த்தல் பணியைச் செய்ய முடிவதில்லை,
கீழ்மட்டத்தில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது
பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சரிபார்த்தல் பணி துல்லிய
மாக இருக்க வேண்டும் என்பதும் முத்திரையிடும் பணி சுமுகமாக
நடைபெற வேண்டும் என்பதுமே அரசின் விருப்பமாகும்,

அளவைக் குறைவையும் எடைக் குறைவையும் ஒழித்தல்.

எந்த ஒரு வணிக நடவடிக்கையிலும் அளவுக் குறைவோ
எடைக் குறைவோ இல்லாதவாறு பார்த்துக்-கொள்வதும் நுகர்
வோருக்கு நியாயமான அளவில் பொருள்கள் விநியோகிக்கப்பட
வும் அரசு முயற்சி எடுத்து வருகிறது. தரமில்லாத முத்திரை
யிடப்படாத எடைகள், அளவைகளையும் எடை போடுவதிலும்
அளப்பதிலும் நடைபெறும் முறைகேடுகளையும் ஒழிப்பதன்
மூலமே இதனைச் செய்து முடிக்க இயலும். இத்துறை 1978ஆம்
ஆண்டில் 1,336 கூட்டுத் திடீர்ச் சோதனைகள் நடத்தியது.
இதற்கு அடுத்து நடத்தப்பட்ட சோதனைகளில் 5,931 வணிகர்
கள் கைது செய்யப்பட்டனர். 19,872 தரமில்லாத அல்லது
முத்திரையிடப்படாத எடைகள், 20,109 தரமில்லாத அல்லது
முத்திரையிடப்படாத அளைவகள், 4,676 தரமில்லாத
முத்திரையிடப்படாத எடைபோடும் கருவிகள், 1,032 தரமில்லாத
முத்திரையிடப்படாத அளவைக் கருவிகள் முதலியன கண்டு
பிடிக்கப்பட்டன. ஆய்வாளர் அலுவலகத்தினரால் செய்யப்படும்
வாலாயமான ஆய்வுகளுக்கும் மேலாக இந்தத் தனி சோதனைகள்
நடத்தப்பட்டன. 1978ஆம் ஆண்டில் ஆய்வுப் பணியாளர்கள்
9,296 கிராமங்களுக்குச் சென்று 54,675 வணிக நிறுவனங்களில்
ஆய்வு செய்தனர்.

பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் அளவு குறைத்து
விநியோகிக்கப்படுகின்றன என்று கூறப்பட்ட புகார்கள் குறித்து
விசாரிக்கப்பட்டது. பெட்ரோல் பங்குகளில் அவ்வாறு அளவு
குறைத்து விநியோகிக்கப்படுவதைத் தடுக்க ஆய்வாளர் அலுவ
லகம் சிறப்பு நடவடிக்கை எடுத்தது. மதுரை, கோயம்புத்தூர்,
சென்னை மாநகர்களில் இந்நடவடிக்கைகளுக்கு நல்ல பலன்
கிட்டியது.

எடை குறிப்பிடப்படாத சிப்பமிடப்பட்ட பொருள்களை
கைப்பற்றுவதிலும் ஆய்வாளர் அலுவலகம் நாட்டம் செலுத்தி
யுள்ளது.

சிமிண்டின் அளவு குறைவு பற்றிய புகார்கள் வரும்போ
தெல்லாம் ஆய்வாளர் அலுவலகம் சிமிண்ட் ஆலைகளிலும் சில
லறை விற்பனை நிலையங்களிலும் பல சோதனைகள் நடத்தியது.

இணைப்பு.

தொழிலாளர் சட்டங்களின்கீழ் வரும் நிறுவனங்கள் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

ஆண்டு. (1)	நிறுவனங்களின் எண்ணிக்கை. (2)	வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3)
1. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்—		
1977	8,508	5,23,23[illegible]
1978	8,766	5,60,976
2. தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.		
1977	2,17,685	2,21,860
1978	2,21,642	3,28,64[illegible]
3. தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்—		
1977	21,731	68,356
1978	21,730	68,922
4. 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்—		
1977	412	92,141
1978	423	93,413
5. 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்—		
1977	1,454	45,871
1978	1,539	51,170
6. 1962ஆம் ஆண்டு தொழிற் சங்கங்கள் சட்டம்—		
1977	2,550	..
1978	2,770	..

[19 ஏப்ரல் 1979

தேசிய வேலை வாய்ப்புப் பணி.

1. வேலை வாய்ப்புகள்.—தமிழ்நாட்டில் திண்டுக்கல், ஈரோடு காஞ்சிபுரம், அம்பத்தூர், நாகப்பட்டினம், மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம், தூத்துக்குடி, கரூர் ஆகிய பத்து ஊர்களில் உள்ள துணை வேலை வாய்ப்பகங்களும், சென்னையிலுள்ள இரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உடல் ஊனமுற்றோர்க்கு ஒன்றும், தொழில் நிர்வாகத் தகுதி பெற்றவர்களுக்கு ஒன்றும் ஆக இரண்டு சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் உட்பட மொத்தம் 32 வேலை வாய்ப்பகங்கள் செயல்படுகின்றன. இவற்றில் சென்னை, மதுரை, அண்ணாமலைநகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் வழிகாட்டு நிலையங்களும் இதில் அடங்கும்.

1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியுடன் முடிந்த காலப் பகுதியில் தமிழகத்தில் வேலை வாய்ப்பகங்களின் பணிகள் குறித்த புள்ளி விவரங்கள், ஒப்பு விவரங்கள் (சென்ற ஆண்டின் இதே காலப் பகுதியைச் சார்ந்தவை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடர் எண்ணும், விவரங்களும். (1)	அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால அளவில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி வரை. (2)	1977—78-ல் அதே கால அளவில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் 1977-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி வரை. (3)
1. வேலைக்காக பதிவு செய்தவர்கள்	2,98,550	2,96,831
2. வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்	22,816	16,318
3. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள்	34,571	26,793
4. வேலை வாய்ப்பகங்களை உபயோகப்படுத்திய வேலை அளிப்போரின் சராசரி எண்ணிக்கை—		
(அ) அரசுத்துறை ..	1,030	728
(ஆ) தனியார் துறை ..	323	234
5. 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம்தேதி அன்றுள்ளபடி பதிவேட்டில் (செல்திறனுள்ள) உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை ..	9,70,532	9,26,109

1979 ஏப்ரல் 19]

2. உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.

சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் தமிழ்நாட்டிலுள்ள (கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்கள் தவிர) பார்வையற்றோர், காது கேளாதோர், இதர உறுப்புகள் பாதிக்கப்பட்டோர் ஆகிய உடல் ஊனமுற்றவர்களின் பெயர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு உதவியளிக்கிறது. இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்ட பல்வேறு வகைப்பட்ட உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களுக்கு ஏற்ற பதவிகள் எங்கு உள்ளன என்பதைக் கண்டறிய தனி முயற்சிகள் எடுக்கிறது. இதற்காக அரசுத் துறை தனியார் துறை நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது. மதுரை, கோவை, திருச்சி, சேலம் மாவட்ட வேலை வாய்ப்பகங்களிலுள்ள சிறப்பு வேலை வாய்ப்பகம் ஊனமுற்றோர்களுக்கென இயங்கி வருகின்றது. அவர்களை வேலையில் அமர்த்த முயற்சிகள் எடுத்தல், அவர்களின் மறுவாழ்வினை மேற்கொள்ள உதவுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பகமும் மாநிலத்திலுள்ள பிற வேலைவாய்ப்பு அலுவலகங்களும் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் முடிய 999 ஊனமுற்றோர்களை (139 பார்வையற்றோர், 114 காது கேளாதோர், 746 உறுப்பு குறைந்தோர்) பதிவு செய்துள்ளது. அத்துடன் 146 ஊனமுற்றோர்களை (8 பார்வையற்றோர், 6 காது கேளாதோர், 132 உறுப்பு குறைந்தோர்) வேலையில் அமர்த்தியுள்ளது. 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியன்று உள்ளபடி 4,092 ஊனமுற்றோர் (581 பார்வையற்றோர், 423 காது கேளாதோர், 3,088 உறுப்பு குறைந்தோர்) வேலைக்காக இம்மாநிலத்திலுள்ள இத்தகைய அலுவலகங்கள் அனைத்திலும் உள்ள நடப்புப் பதிவேடுகளில் காத்திருந்தனர்.

3. தொழில் நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம்.

இவ்வேலை வாய்ப்பகம் தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிர்வாகம், மேற்பார்வை கல்வி, அறிவியல், பொறியியல், போன்றவற்றில் உயர் தகுதி பெற்றவர்களின் வேலைவாய்ப்புத் தேவைகளை நிறைவு செய்கிறது. அவர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புகளைக் கண்டறிய இவ்வலுவலகம் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்கிறது.

இவ்வேலை வாய்ப்பகத்தில் 5,571 பேர் இவ்வறிக்கைக்
காலப் பகுதியில் பதிவு செய்துள்ளார்கள். ,778 பேர் வேலை
யில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். 1978-ம் ஆண்டு நவம்பர் 30-ம்
தேதி அன்று உள்ளபடி 14,426 பேர் இவ்வேலை வாய்ப்பகத்
தின் நடப்புப் பதிவேட்டில் வேலைக்காக காத்திருந்தார்கள்.

4. பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டும் நிலையங்கள்.

தமிழ்நாட்டில் அண்ணாமலைநகர், சென்னை, மதுரை
ஆகிய இடங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல்
வழிகாட்டும் நிலையங்கள் உள்ளன. இவை பல்கலைக் கழகங்
களில் படித்த பட்டதாரிகளுக்கும் படித்துக் கொண்டிருக்கும்
மாணவர்களுக்கும் வேலை விவரங்களின் வழி முறைகளை எடுத்
துரைப்பதற்கும் வேலை தேடுபவர்களின் பெயர்களைப் பதிவு
செய்வதற்கும் இந்த நிலையங்கள் செயல்படுகின்றன. 1978-ம்
ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி அன்றுள்ளபடி 3,148 பேர்
இவ்வேலை வாய்ப்பக நடப்புப் பதிவேட்டில் வேலைக்காகக் காத்
திருந்தார்கள்.

5. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டியும் வேலைவாய்ப்பு ஆலோசனையும்.

தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகள் தமிழ்நாட்டில்
நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் தவிர
மற்ற ஏனைய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.
வேலை வாய்ப்பகங்களில் உள்ள இப்பிரிவுகள் தொடர்ந்து
தொழில் பற்றிய செய்திகள், வேலைவாய்ப்பு பற்றிய செய்தி
கள், பயிற்சி பெறுவதற்கான வசதிகள் ஆகிய விவரங்களை
வேலை தேடுவோரிடையேயும்/மாணவர்களிடையேயும்/விண்ணப்ப
தாரர்களிடையேயும் பரப்பி வருகின்றன. பதிவு செய்தவர்கள்
மற்றும் இளைஞர்களுக்கான வழி காட்டுதல் சம்பந்தமாகக் கூட்
டங்கள் நிகழ்த்தப்பட்டன. காலாண்டு தோறும் வாழ்க்கை
நெறி செய்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பள்ளிகள் மற்றும்
நூலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 வரையிலான தொழில்
முறை வழிகாட்டும் பிரிவுகளால் பயனடைந்தவர்களின் விவரம்
கீழே தரப்பட்டுள்ளது :—

1	மேற்கொள்ளப்பட்ட (வழிகாட்டுதல்) கூட்டுக் கூட்டங்கள் எண்ணிக்கை ..	2,279
2	பதிவு செய்யும்போது வழிகாட்டும் தகவலைப் பெற்றவரது எண்ணிக்கை ..	13,616

3	கூட்டு வழிகாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை ..	58,705
4	வேலை, பயிற்சி மற்றும் தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் .. .. எண்ணிக்கை	420
5	பள்ளிகள்/கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கை நெறி சொற்பொழிவுகளின் எண்ணிக்கை.	179
6	தொழில் பழகுதல், உதவித்தொகை மற்றும் மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை ..	6,411

சென்னை வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநர் அலுவலகத்
தில் உள்ள மாநிலத் தொழில் (State V. G. Unit) வழிகாட்டிப்
பிரிவு, மாவட்டங்களில் உள்ள தொழில் வழிகாட்டிப் பிரிவு
களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது ; மேற்பார்வை
யிடுகின்றது ; சீரமைக்கின்றது ; ஆய்வு செய்கின்றது. 31
தொழிற் பயிற்சி நிலையங்களிலும் கிண்டியில் உள்ள மாதிரிப்
பயிற்சி பள்ளியிலும் திறனாய்வுத் தேர்வுகள் நடத்தப்பட்டது.
30,753 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்
பட்டது. ஆவடியில் உள்ள கனரகத் தொழில் சாலையில் பயிற்
சிக்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்க திறனாய்வுத் தேர்வுகள்
நடத்தப்பட்டன. சென்னை-12-ல் உள்ள செயின்ட் ஜோசப்
தொழில் பயிற்சி நிலையத்தில் திறனாய்வுத் தேர்வு 251 விண்
ணப்பதாரர்களுக்கு நடத்தப்பட்டது. மாநிலத் தொழில் வழி
காட்டிப் பிரிவினால் தொழில் முறை வழிகாட்டிப் பிரிவு அலுவலர்
களுக்கான வழிகாட்டிப் பணிக்கு உறுதுணையாக சமூகவியல்
பட்டதாரிகளுக்கு உள்ள தொழில், கல்வி, பயிற்சி வசதிகள்
குறித்த வாழ்க்கை நெறிப் புத்தகம் ஒன்று தயாரித்து வெளி
யிடப்பட்டது.

மாநில தொழில் முறை வழிகாட்டிப் பிரிவு அரிசன தாழ்த்
தப்பட்ட விண்ணப்பதாரர்களை வேலை வாய்ப்பகங்களில் பதிவு
செய்யுமாறும், அதனால் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஒதுக்
கீடு செய்யப்பட்ட காலியிடங்களில் அவர்களை வேலையில் அமர்த்
துவதற்காகவும் அறிவுரை வழங்கப்பட்ட ஓர் விளம்பர சுவ
ரொட்டி தயாரித்து எல்லா வேலை வாய்ப்பகங்களுக்கும் அனுப்பி
வைத்தது. இது தவிர மேலும் நான்கு வாழ்க்கை நெறி விளம்
பரச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு எல்லா வேலைவாய்ப்
பகங்களுக்கும் விளம்பரப்படுத்த அனுப்பப்பட்டது.

இராஜா வணிகக் கல்வி பள்ளியினால் நடத்தப்பட்ட கருத்
தரங்கு தொடர்பாக சென்னையில் உள்ள "குட் ஷெப்பர்டு"
பள்ளியில் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ம் தேதியன்று
வாழ்க்கை நெறி கண்காட்சி நடத்தப்பட்டது.

6. வேலை நிலவரத் தகவல் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், மூன்று மாதத்திற்கும் ஒருமுறை அரசுத் துறையில் எல்லா நிறுவனங்களிலிருந்தும், தனியார் துறையில் (வேளாண்மைத் துறை தவிர) பத்தும் அதற்கு மேற்பட்ட பேர்களை வேலையில் அமர்த்திக் கொண்டுள்ள நிறுவனங்களில் இருந்தும் வேலை நிலவரத் தகவல் சேகரிக்கப்படுகிறது. இத்தகவல்கள் (Organised Sector) முறையான அமைப்புகள் உள்ள துறைகளிலிருந்து மட்டுமே சேகரிக்கப்படுகிறது.

இரண்டு காலாண்டுகளுக்கான வேலை நிலவரத் தகவல் திட்ட புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

காலாண்டு.	தகவல் கேட்கப் பட்ட நிறுவனங் களின் எண் ணிக்கை.	தகவல் அளித்த நிறுவனங் களின் எண் ணிக்கை.	விழுக் காடு (%).	வேலையில் இருப்பவர் கள் எண்ணிக்கை.
அரசுத் துறை—				
(1)	(2)	(3)	(4)	(5)
31 மார்ச் 1978	7,449	6,787	91.1	11,19,174
30 ஜூன் 1978	8,896	7,042	79.1	11,30,098
தனியார் துறை—				
31 மார்ச் 1978	9,610	8,622	89.7	6,04,428
30 ஜூன் 1978	9,763	8,460	86.6	6,14,999

7. ஆழ்ந்த ஆய்வுக்குழு (Depth Study Cell.)

கீழ்க்காணும் பொருள் பற்றிய ஆய்வுகள் முடிவு பெற்று அறிக்கைகள் மேற்கூறிய காலப் பகுதியில் வெளியிடப்பட்டன.

(1) தமிழகத்திலுள்ள வேலை வாய்ப்பகங்களின் நடப்புப் பதிவேட்டில் முதல் வகுப்பு பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள் தொழில் நுட்பமுள்ளவர்கள் உள்ளார்களா என்று அறிய விரைவான ஆய்வு.

(2) நேரிடையாக வேலையில் அமர்த்தப்பட்டோர்களில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தோர்களின் விகிதம் அறிவதற்கான ஆய்வு.

(3) வேலை வாய்ப்புகள் பற்றி பத்திரிகையில் வெளியான விளம்பரங்களால் அறியப்பட்ட காலியிடங்களின் நிலவரங்களைப் பற்றிய விரைவான ஆய்வு.

வேலை வாய்ப்புப் பயிற்சி தலைமை இயக்குநரால் இயந்திரவியல் பொறியாளர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தொழில் ஆய்வு குறித்து களப்பணி ஒருங்கிணைக்கப்பட்டது.

8. புள்ளி விவரக் கணிப்பு பிரிவு.

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 முடிந்த காலப் பகுதியில் புள்ளி விவரக் கணிப்பு பிரிவு 70 அட்டவணைப் பட்டியல்களை (Tabulation) தயார் செய்ய மேற்கொண்டு முடிந்தது. அவைகளில் மிகவும் முக்கியமான சில பட்டியல்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) மத்திய அரசு நிறுவனங்கள், மாநில அரசு நிறுவனங்கள், மத்திய அரசைச் சார்ந்த நிறுவனங்கள். மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்கள் உள்ளாட்சி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்திலும் மார்ச் 1978, ஜூன் 1978 உடன் முடிந்த காலாண்டுகளில் உள்ள வேலை நிலவரங்களில் உள்ள மாற்று நிலைகள் பற்றிய பட்டியல்கள்.

(ii) தனியார் துறை (பெரிய நிறுவனங்கள்) தனியார் துறை (சிறிய நிறுவனங்கள்) தனியார் துறை நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள 31 மார்ச் 1978, 30 ஜூன் 1978 ஆகிய காலாண்டுகளுக்கு வேலை நிலவரங்களில் ஏற்பட்டுள்ள மாற்று நிலைகள் பற்றிய பட்டியல்கள்.

(iii) அறிவிக்கப்பட்ட காலியிடங்கள், நிரப்பப்பட்ட காலியிடங்கள் நிலுவையில் உள்ள காலியிடங்கள் ஆகியவைகள் குறித்த வேலை வாய்ப்பகங்களின் கால முறை அறிக்கைகள்.

(iv) தேசியத் தொழில் வகைப் பாட்டுப் பட்டியலின்படி (என். சி. ஓ.) நடப்புப் பதிவேட்டில் உள்ள தாழ்த்தப்பட்டோர் மலை ஜாதியினர் குறித்த வேலை வாய்ப்பகங்களின் கால முறை அறிக்கைகள்.

செப்டம்பர் 1975 முடிந்த காலப் பகுதிக்கான தனியார் துறையில் உள்ள தொழில் விவரங்கள் பற்றிய அறிக்கையிலிருந்து தொழில் புள்ளி விவரங்கள் பூர்வாங்கத் தொகுப்பு அட்டவணை பட்டியலை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. அதனைச் சரிபார்க்கும் பணி நடந்தேறி வருகிறது.

[1979 ஏப்ரல் 19

9. வேலை வாய்ப்பகங்களின் பணியினை கணக்குப் பொறி மூலம் செய்வது.

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது
வேலை வாய்ப்பகங்களில் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்
வதற்கு அரசு அனுமதி அளித்தது. அதன்படி வேலை வாய்ப்
பகங்களின் வேலைகளைத் துரிதப்படுத்தி செவ்வனே செய்யவும்,
முக்கியமாக வேலை வாய்ப்பகங்கள் மீது வரும் புகார்களைக்
களைவதற்கும் மேலும், தனியார் துறையில் வேலை அளிப்
போரை ஊக்குவிப்பதற்கும், சரியான விவரங்களை நிலைப்
படுத்துவதற்கும் ஏதுவாகிறது. இத்திட்டத்தின்கீழ் மனுதாரர்
களின் படிப்பு, வயது ஆகிய உண்மை விவரங்களை மனுதாரரின்
பதிவட்டையிலிருந்து ஏற்கனவே வகுக்கப்பட்ட படிவங்களின்
பலவித குறியீட்டு எண்களைக் கொண்டு மாற்றப்பட்டது.
இவ்வாறு படிவங்களில் மாற்றப்பட்ட மனுதாரரின் விவரங்களை
அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் கம்ப்யூட்டர் நாடா
வில் பதிவு செய்யப்பட்டு அங்கு பாதுகாப்பில் வைக்கப்படும்.
மனுதாரரின் இப்படி தயாரிக்கப்பட்ட நாடாக்கள் பிறகு வேலை
வாய்ப்பகங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களை பூர்த்தி
செய்ய கம்ப்யூட்டர் மூலம் மனுதாரர்களை தேர்ந்தெடுக்க
உபயோகிக்கப்படும். 31 மார்ச் 1978 அன்றைய நிலவரப்படி
நடப்புப் பதிவேட்டில் கம்ப்யூட்டர் முறையில் உள்ள ஒன்பது
வேலை வாய்ப்பகங்களில் 2,50,000 மனுதாரர்களைச் சார்ந்த
அடிப்படைத் தகவல் படிவங்கள் (Input forms) தயாரிக்கப்
பட்டன. முதலில் சென்னையில் உள்ள தொழில் நிர்வாக
வேலை வாய்ப்பகத்தைச் சார்ந்த அடிப்படை தகவல் படிவங்கள்
கம்ப்யூட்டர் முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி
2,000 மாதிரி அடிப்படை தகவல் படிவங்கள் வேலை வாய்ப்பகங்
களின் பல பணிகளை கம்ப்யூட்டர் மூலம் பரிசோதிக்கும்
பொருட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொழில் நிர்வாக
வேலை வாய்ப்பகத்தை சார்ந்த 2,000 அடிப்படைத் தகவல்
படிவங்களை சரி செய்த பட்டியல் "அரசு புள்ளி விவரக்
தொகுப்பு நிலையத்திலிருந்து" கிடைக்கப் பெற்று அதை
மீண்டும் சரி பார்த்து அனுப்பப்பட்டது. தமிழகம் முழுவதும்
தற்போது ஏறத்தாழ ஒரு மில்லியன் மனுதாரர்கள் பதிவு செய்
துள்ளனர். அதில் ஏறத்தாழ 2·83 லட்சம் பேர்களுக்கு முதற்
கண் கம்ப்யூட்டர் திட்டம் புகுத்தப்படும். இவர்கள் சென்னை,
செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்
பகங்களில் பதிந்துள்ளனர். கம்ப்யூட்டர் திட்டம் தமிழகத்தில்
உள்ள எல்லா வேலை வாய்ப்பகங்களுக்கும் நீட்டிக்கப்படும்
போது மனுதாரர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைக் காட்டி
லும் அதிகரிக்கும். இது போன்று பெரு எண்ணிக்கையிலுள்ள
மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட அடிப்படைத் தகவல்
படிவங்களை வேலை வாய்ப்பகங்களில் மிகவும் கவனமாகவும் அறி
வியல் ரீதியாக கம்ப்யூட்டர் முறையில் தயாரிக்கப்படவிருக்கின்றன.

1979 ஏப்ரல் 19]

10. மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் பிரிவு.

வாழ்க்கை தொழில் தகவல் பிரிவு தன் பணியான வாழ்க்கை
தொழில் முறை ஆராய்ச்சி பகுப்பாய்வு, வாழ்க்கை தொழில்
குறித்த சிற்றேடுகளைத் தயாரித்தல், திருத்தியமைத்தல், அச்சிடு
தல் ஆகிய பணிகள் புதுடில்லியிலுள்ள வேலை வாய்ப்பு-பயிற்சி
தலைமை இயக்குநரிடமிருந்து வரப் பெற்ற வாழ்க்கைத் தொழில்
வழிகாட்டிக் கையேடுகளின் வெளியீடுகளைத் திருத்தி அமைத்தல்
வெளியிடப்பட்ட சிற்றேடுகளை சார்நிலை அலுவலர்களுக்கு
அனுப்பி அதன் மூலம் பொது நூலகங்கள், கல்விக் கூடங்கள்
போன்றவைகளுக்குப் பகிர்ந்தளித்தல், கேட்பவர்களுக்கு
விற்பனை செய்தல் போன்ற பணிகளை தொடர்ந்து மேற்
கொண்டது.

தொழில்கள் தொடர்பான சிற்றேடுகள் அச்சிடும் பணி
முடிக்கப்பட்டது. அவை அனைத்தையும் சார்நிலை அலுவலர்
களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த
சிற்றேடுகளின் வழங்கல், விற்பனை, கையிருப்பு, எதிர்காலத்
தேவை முதலியவைகள் குறித்து ஒரு ஆய்வு செய்யப்பட்டது.

வேலைவாய்ப்பு-பயிற்சி தலைமை
புதுடில்லியிலுள்ள "பாறை துளையிடு
இயக்குநர், அவர்களின் அறிவுரைகளின்படி தொழில்களுக்கான
பவர்" "அம்மை குத்துபவர்" போன்ற அவைகள்
தகவல்களை திருத்தி அமைக்கும் வேலை முடிவுற்று
அனுப்பி வைக்கப்பட்டன.

பேருந்து போக்குவரத்துத் துறையில் தொழில் தகவல்
சேகரிக்கும் சிறப்பு ஆய்வுத் திட்டம் முடிவுறும் நிலையிலிருக்கிறது.

தொழில் தகவல்-கல்வி பயிற்சி வசதிகள் பற்றிய திருத்தப்
பட்ட விவரங்களை மாநில அளவில் சேகரிக்கும் பணி 1979–80
ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

11. இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.

வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில்
வேலை வாய்ப்புப் பிரிவில் இயங்கி வரும் பணியாளர் பயிற்சிப்
பிரிவு, பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பகக் கொள்கைகளில்
வேலைப் பணி விதிமுறைகள் சம்பந்தப்பட்ட பயிற்சி அளித்தல்,
பொது அலுவலக நடை முறைகளில் பயிற்சி அளித்தல் ஆகிய
பணிகளை ஆற்றி வருகிறது. பணியாளர் பயிற்சி வகுப்புகளில்
அலுவலர்களால் தேசிய வேலை வாய்ப்பு பணி சம்பந்தப்பட்ட
பொருள்கள் பற்றியும், நடைமுறை விதிகள் பற்றியும் விரிவுரை
கள் நடத்தப்படுகின்றன.

அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால அளவில் பணியாளர் பயிற்சிப் பிரிவால் 2 பணியாளர் பயிற்சி வகுப்புகள் நிர்வாகப் பணியாளர்களுக்காக நடத்தப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் 22 நிர்வாகப்பணியாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

12. துறையின் வேலை வாய்ப்புப் பிரிவில் ஆய்வுப் பிரிவு.

வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தின் வேலை வாய்ப்பு பிரிவில் சார்நிலை அலுவலகங்களை வருடாந் திர ஆய்வு செய்யும் பணியினை கவனிக்க ஒரு தனி ஆய்வுப் பிரிவு இயங்கி 20—6—1969 முதல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது, இப்பிரிவு இயக்குநரின் ஒப்புதலோடு மாநிலத் திலுள்ள சார்நிலை அலுவலகங்கள் அனைத்திலும் ஆண்டு ஆய் வுகள் நடத்த திட்டங்களை வகுக்கின்றது. வகுக்கப்பட்ட திட்டத்திற்கிணங்க துறையின் சார்நிலை அலுவலகங்களான கீழ்க்காணும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இந்த இயக்குநர் அலுவலகத்தின் அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டன:-

1. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தஞ்சாவூர், உதகமண்டலம், சேலம், கோவை, மதுரை. — இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு).

2. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், இராமநாதபுரம். நாகர்கோயில், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, தொழில் நுட்பப் பணி), சென்னை-35, பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் வழிகாட்டும் நிலையம், மதுரை, துணை வேலை வாய்ப்பு அலுவலகம். தூத்துக்குடி, ஈரோடு, திண்டுக்கல், அம்பத்தூர், காஞ்சிபுரம். — துணை இயக்குநர் (வேலை வாய்ப்பு).

3. துணை வேலை வாய்ப்பு அலுவலகம், நாகப்பட்டினம். — உதவி இயக்குநர் (வே.தொ.அ).

மேற்கண்ட ஆய்வுகளை நிறைவுறச் செய்ய உதவும்பொருட்டு இவ்வலுவலக ஆய்வுப் பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் சார்நிலை அலுவலகங்களில் பூர்வாங்க ஆய்வு அறிக்கைக்குறிப்பு களைத் தயார் செய்துள்ளனர். தவிரவும் ஆய்வு செய்து முடிக் கப்பட்ட அறிக்கைகள் மீது சார்நிலை அலுவலர்கள் சமர்ப்பிக் கும் இணக்க அறிக்கைகளை ஆராய்ந்து மேல் நடவடிக்கைக் கான பணியும் கவனிக்கப்பட்டது.

மேலும், இப்பிரிவு., தொடர் நடவடிக்கையாக 1979-80 ஆண்டிலும் சார்நிலை அலுவலகங்களை ஆய்வு செய்யவும், அவ்வாய்வு அறிக்கைகளின் மீதான இணக்க அறிக்கைகளை பரிசீலிக்கவும் தொடர்ந்து பணியாற்றும்,

13. துறையின் வேலை வாய்ப்பு பிரிவில் வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகத்தின் பணிகள்.

இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகப் பிரிவு, பர்மா, ஸ்ரீலங்கா, அகதிகளின் மறுவாழ்வுக்காக செயல்பட்டு வருகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுக்காக மண்டபத்தில் துணை வேலை வாய்ப்பகம் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த அகதிகளின் மறுவாழ் வுக்காக இராமநாதபுரத்தில் மத்திய அரசின் வேலைவாய்ப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

ஆய்வுக்காலத்தில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு தொடர்பாக புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

தொடர் எண்ணும், விவரமும்.	அகதிகள். பர்மா.	அகதிகள். ஸ்ரீலங்கா.
(1)	(2)	(3)
1 வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள்.	933	3,879
2 வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்கள்.	180	178
3 வேலைவாய்ப்பிற்காக உயிர் பதி வேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை (30—11—78 அன் றைய நிலவரப்படி).	2,534	11,828

கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் இப்பிரிவால் மேற் கொள்ளப்பட்டன:—

1. 203 அகதிகள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கைவினை பயிற்சி பெற சேர்க்கப்பட்டனர்.

2. 44 அகதிகள் திருச்சியிலும், கும்மிடிபூண்டியிலும் உள்ள முன்மாதிரி கைவினை பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டனர், இந்தப் பயிற்சியை முடித்ததும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டனர்,

3. ஆகஸ்டு 1978 முதல் தொடங்கிய கும்மிடிபூண்டியி லுள்ள கனரக மோட்டார் ஓட்டுநர் பயிற்சியில் 110 ஸ்ரீலங்கா அகதிகளும். 44 பர்மா அகதிகளும் சேர்க்கப்பட்டனர்.

4. இரண்டு பெண் அகதிகள் தையல் பயிற்சிக்கு வேலூரி லுள்ள அரசு உள்ளாடைகள் தயாரிப்பு பயிற்சிப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

5. ஒரு பர்மா அகதி கடல்தொழில் பயிற்சிக்கு 'பத்திரா பயிற்சிக் கப்பலில்' சேர்க்கப்பட்டுள்ளார்.

6. அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 5 இடங்களுக்காக மண் டபம், கடலூர். நாகப்பட்டினம், கொளச்சல், ஆகிய இடங்களி லுள்ள மீனவர் பயிற்சி நிலையங்களில் அகதிகளைச் சேர்க்க ஆவன செய்யப்பட்டது.

7. 1977 ஆம் ஆண்டு தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கப்பட்டு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பயிற் சியில் சேரமுடியாமற்போன ஒரு இலங்கை அகதியின் மனு கும்மிடிப் பூண்டி மாவட்டத்துணை ஆட்சித் தலைவருக்கு (தனி) முன் மாதிரி கைவினைப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ள அனுப்பப் பட்டது.

8. தகுதியான தினசரிகளில் வெளியான கீழ்க்கண்ட வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தும்படி எல்லா வேலை வாய்ப்பு அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்:—

1. ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிடெட். ஐதரா பாத்.

2. பாரத கனரக மின்சார நிறுவனம், திருச்சி.

3. மருத்துவ பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்காக இயக்குநர் மறுவாழ்வு இயக்கம், சென்னை-5.

4. மூன்று வருட டிப்ளமா பயிற்சிக்காக சென்னை-20, அடையாற்றிலுள்ள சமையற்கலை செயல் ஊட்டச் சத்துணவுப் பயிற்சி, ஓட்டல் நிர்வாகம்.

5. தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கார்ப்பரேஷன், குன் னூர், ஓட்டுநர் வேலைக்கான பதினொரு காலியிடங்களுக் காக.

6. நர்ஸ் பயிற்சிக்காக நர்ஸ் மாணவிகள் தேர்வுக் குழுவிற்கு.

9. மறுவாழ்வுத் துறை இயக்குநரின் ஆணைப்படி தேசிய தொழிற்சாலைகளிலும் வைத்துள்ள 313 அகதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு அனுப் பப்பட்டது.

(1) சேர்மன், நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன்.

(2) கூடுதல் செயலர் (நிர்வாகம்), இரயில்வே துறை, புதுடெல்லி.

(3) நிர்வாக இயக்குநர். அகதிகள் கூட்டுறவு நிதி முன் னேற்ற வங்கி, சென்னை-4.

10. இரண்டு அகதிகள் ஓட்டுநர் பணிக்காகவும், நான்கு அகதிகள் துப்புரவு உதவியாளர்கள், வாசனைப் பொருட்களின் பராமரிப்பு பணிக்காகவும், உதவி நிர்வாக அலுவலர் சென்னை அணுசக்தி நிறுவனம், கல்பாக்கம், அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு பணியிலமர்த்தப்பட்டனர்.

11. மூன்று அகதிகள் கணக்காளர் பணிக்காக புனலூர் மறு வாழ்வு தோட்ட நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியி லமர்த்தப்பட்டனர்.

12. அகதிகளிடமிருந்து வேலை பயிற்சியில் சேருதல் வேண்டி பெறப்பட்ட மனுக்கள் அரசு மற்றும் தனியார் நிறு வனங்களுக்குத் தேவையான பரிந்துரைகள் செய்யப்பட்டு அனுப் பப்பட்டன.

13. உடல் ஊனமுற்றோர்க்கான மாநில வாரியம்.

(i) புள்ளி விவரங்கள்—

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 உடன் முடிவடைந்த காலப் பகுதியில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கான வாரியத் தின் முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. வேலையில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை (பார்வையற்றோர்—4, காது கேளாதோர் 17, மற்றும் உறுப்பு குறைந்தோர் 279)—300.

2. தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—23.

3. அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற் சிக்கு அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை —141.

4. செயற்கை உறுப்பு மற்றும் இதர கருவிகள் வாங்கும் பொருட்டு நிதி உதவி வழங்கப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—33.

5. புத்தகம் கட்டும் பயிற்சிப் பிரிவில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—23.

6. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலையில் ஈடுபடும் பொருட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து கடனுதவி பெற உதவி செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—82.

7. நிதி உதவி வழங்கும் பொருட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட வேண்டி ஊனமுற்றோர்க்கான நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு மாநில அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் எண்ணிக்கை—3.

(ii) ஏனைய இனங்கள் :—

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் அன்று ஊனமுற்றோர் மாநில வாரியத்தின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முக்கியமான தீர்மானங்கள் பின்வருமாறு :—

(a) வாரியத்திற்கு நிதி திரட்டுவது.

(b) ஊனமுற்றோர் மறு வாழ்வுக்காக காலவரையறைக்குட்பட்ட நிபுணர் குழு நிறுவுதல்.

(c) காது கேட்கும் கருவி, சக்கர நாற்காலிகள் மற்றும் இதர கருவிகளை மிகவும் ஏழ்மையான தகுதி வாய்ந்த ஊனமுற்றோருக்கு வழங்குதல்.

(d) இந்துஸ்தான் வர்த்தக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட தனியார் நிறுவனங்களை அணுகி அவர்களால் முடிந்தவரையில் எத்தனை அதிகமான ஊனமுற்ற நபர்களை வேலையில் அமர்த்த முடியுமோ அத்தனை ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்த தூண்டுதல்.

2. வாரியத்தின் துணைக் குழு கூட்டம் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் மற்றும் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் நாள் ஆகிய இரு நாட்களில் கூட்டப்பட்டு, ஊனமுற்றோர்க்கான நிலையங்கள் மற்றும் ஊனமுற்ற மனுதாரர்களுக்கும் நிதி உதவி வழங்க சிபாரிசு செய்தது.

(a) நிதி உதவி வழங்க சிபாரிசு செய்யப்பட்ட ஊனமுற்றோர்க்கான நிலையங்களின் எண்ணிக்கை—

(b) சுய வேலை அல்லது செயற்கைக் கருவிகள் வாங்கும் பொருட்டு நிதி உதவி வழங்க சிபாரிசு செய்யப்பட்ட ஊனமுற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை—22.

3. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரிமா சங்கம்/சுழற் சங்கம்/வட்டமேஜை பிரதிநிதிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி எல்லா மாநில வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த ஊனமுற்றோர்களின் விபரங்கள் அடங்கிய ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு ஊனமுற்றோர்களுக்கான தங்கள் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்படி வேண்டுகோளுடன் அரிமா சங்கங்கள்/சுழற் சங்கங்கள்/வட்ட மேஜை தலைவர்களுக்கு அனுப்பப்பட்டது.

4. பார்வையற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோ மன நோய்வாய்ப்பட்டோர் மற்றும் தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் ஆகிய பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் மிகச் சிறந்த ஆசிரியருக்கு தனித்தனி விருதுகள் வழங்கும் கருத்து அரசுக்கு அனுப்பப்பட்டது.

5. எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்திருக்கும் தகுதி வாய்ந்த ஊனமுற்றோர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு விரிவான பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஊனமுற்ற மனுதாரர்களை தங்கள் நிறுவனங்களில் முடிந்தளவு வேலையில் அமர்த்தும்படி ஒரு வேண்டுகோளுடன் இந்துஸ்தான் தொழில் வர்த்தக நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.

6. தமிழகத்திலுள்ள எல்லா அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஊனமுற்றோர்களுக்காக 3 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன.

7. அரசு அலுவலகங்களிலுள்ள நாற்காலிகளுக்கு பிரம்பு, பிளாஸ்டிக் இழை பின்னும் வேலைகள் அனைத்தும் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு சங்கத்தினரிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதற்காக அரசு ஆணை பெறப்பட்டது.

8. தமிழ் நாட்டிலுள்ள ஊனமுற்றோர்களுக்கான நிறுவனம் பயிற்சி நிலையங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு புத்தகமாக 1978 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

14. வேலை பயிற்சி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தனிக் குழுவும் அதன் வளர்ச்சியும்—

இப்பிரிவு பயிற்சியாளர் சட்டம், 1961 ன் கீழும் விரிவாக்கப் பட்ட பயிற்சியாளர் சட்டம், 1973-ன் கீழும் தொழில் பழகுநர் பயிற்சி தொழில் திட்டத்தைக் குறித்து முதன்மையாக பங்கு கொள்கிறது. பயிற்சியாளர் காலியிடங்களைப் பயிற்சி பிரிவு வகுத்து கிடைக்கப் பெற்ற விவரங்களை எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும், பயிற்சித் தொழிலில் அமர்த்து வதற்காக அனுப்பப்படுகிறது. இதனால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் பழகுநர் பயிற்சி அறிவுரையாளர்களுக்கு மிடையே ஒருங்கிணைப்பு உண்டாகிறது. பயிற்சியாளர்கள் தொழிலில் அமர்த்திய புள்ளி விவரங்கள் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி முடிய கீழே குறிக்கப்பட்டுள்ளது:—

1. தொழில் பழகுவோர் சட்டம், 1961.

காலப் பகுதி.	கண்டறிந்த பயிற்சியிடங்கள்.		
	அரசுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள்.	2,394	7,143	9,537
1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள்	3,131	7,359	10,490

காலப் பகுதி.	பயன்படுத்தப்பட்ட பயிற்சியிடங்கள்.			
	அரசுத் துறை.	தனியார் துறை.	மொத்தம்.	சதவீதம்.
	(5)	(6)	(7)	(8)
1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் ..	2,328	7,548	9,876	103·56
1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள் ..	2,483	7,069	9,552	91.06

15. மாநில இயக்குநர் அலுவலகத்திலுள்ள பொதுமக்கள் தொடர்பு விளம்பரப் பிரிவு—

இத்துறையின் விளம்பர-பொதுமக்கள் தொடர்புப் பணி குறித்த முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

1. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தஞ்சை பற்றி அகில இந்திய வானொலி திருச்சியில் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் இரவு 8 மணிக்கு தமிழில் ஒலி பரப்பப் பட்டது.

2. " கிராமத்தில் தன்னிறைவும் வேலை வாய்ப்பும் " என்ற இணை இயக்குநரின் கலந்துரையாடல் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் இரவு 9—15 மணிக்கு அகில இந்திய வானொலி நிலையத்தாரால் ஒலி பரப்பப்பட்டது.

3. 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ந் தேதி வரை பதினொரு நாட் களுக்கு திருக்கோகர்ணம் ஸ்ரீ கோகர்ணேஸ்வரர் பிரகதாம்பாள் கோவில் ஆடிபூரம் விழாவையொட்டி நடந்த கண்காட்சியில் கலந்து கொள்ள புதுக்கோட்டை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

4. திரு. இராமையா, உதவி இயக்குநர் (பொறுப்பு) மதுரை அவர்களின் உரை " வேலை இழந்தோர்க்கு வேலை வாய்ப்பு ஆலோசனைகள் " என்னும் தலைப்பில் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி இரவு 9—15 மணிக்கு அகில இந்திய வானொலி, திருச்சியில் ஒலி பரப்பப்பட்டது.

5. தஞ்சாவூரில் வேளாங்கண்ணி மாதாகோவில் விழாவை யொட்டி 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ந் தேதி வரை நடை பெற்ற கண்காட்சிக்கான உதவி இயக்குனர், தஞ்சாவூர், பங்கேற் கவும் கண்காட்சிக்கான செலவினங்களுக்காக ரூ. 410 வரை அனுமதியும் அளிக்கப்பட்டது.

6. "கேளுங்கள் சொல்கிறோம் — வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் " என்னும் தலைப்பில் இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) அவர்களின் உரை அகில இந்திய வானொலி நிலையத்தாரால் சென்னை 'பி' அலையோசையில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந்தேதி அன்று ஒலிபரப்பப்பட்டது.

7. "The unemployment quesion towards fuller employment"
என்ற தலைப்பில் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்
துறை அவர்களின் உரை 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்
16-ம் தேதி இரவு 8-45 மணிக்கு அகில இந்திய வானொலி
நிலையத்தாரால் 10 நிமிடம் ஒலிபரப்பப்பட்டது.

8. பல்வேறு தொழில் அதிபர்களிடமிருந்து வரப்பெற்ற
காலியிடங்கள் பற்றிய அறிவிப்புகள், மாநிலத்திலுள்ள வேலை
வாய்ப்பு அதிகாரிகளுக்கு உரியவாறு விளம்பரம் கொடுக்கப்
பட்டன.

16. வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்கும் சட்டம், 1959.

வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாகத் தெரி
விக்க வேண்டுமென்ற 1959 ஆம் ஆண்டு சட்டமும் அதன் கீழ்
உள்ள விதிமுறைகளும் 1960 ஆம் ஆண்டின் மத்தியில் அமுலுக்கு
வந்தன. 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதியன்று
இச்சட்டத்தின் கீழ் மொத்தம் 11,654 நிறுவனங்கள் இருந்தன.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நவம்பர், 1978
முடிய தெரிவிக்கப்பட்ட காலியிடங்களும், நிரப்பப்பட்ட காலி
யிடங்களும் பின்வருமாறு:—

தெரிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள். நிரப்பப்பட்ட இடங்கள்.

ஏப்ரல், 1978 முதல்
நவம்பர், 1978 முடிய 32,698. 21,606

இதுவரை எந்த நிறுவனத்தின் மீதும் இச்சட்டத்தின் ஷரத்துக்களை
மீறியதாக குற்றச்சாட்டு தொடரப்படவில்லை. சட்டத்தின்
பல்வேறு ஷரத்துக்களைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு
வருவதற்கென்று சட்டத்தை அமுலாக்கும் அமைப்பு ஒன்று தனியே
இருப்பின் அது பயனளிக்கும்.
நடவடிக்கைகள் ஏதும்

17. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலை வாய்ப்புப் பணித் திட்டம்.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1978-79-ம் ஆண்டு
முடிய) கீழ்க்காணும் திட்டங்களுக்கான அரசு அனுமதி வழங்கப்
பட்டு அவைகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

(1) மாவட்டங்கள் 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பகங்
களின் (கண்டிப்பாக காலியிடங்களை அறிவித்தல்) சட்டத்தை
செயற்படுத்துவதற்காக பணியாளர் அமைப்பு.

(2) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பணி

யாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதலும் பதிவு பேட்டி
யாளர்களை நியமித்தலும்.

(3) மாவட்டங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலக
களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

(4) பெரிய மாவட்டங்களில் ஆறு மாவட்ட வேலை வாய்ப்பு
அதிகாரிகள் பதவிகளை உதவி இயக்குநர்களாக உயர்த்துதல்.

(5) தொழில் நுட்ப வகைகள் தவிர ஏனையவற்றைக்
கவனிப்பதற்கு சென்னை நகரத்தில் ஒரு வேலை வாய்ப்பு
அலுவலகம் அமைத்தல்.

(6) மாநில இயக்ககத்தில் பொது மக்கள் தொடர்பு—
விளம்பரப் பிரிவு அமைத்தல்.

(7) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 32 இளநிலை உதவி
யாளர்கள் பதவிகளை உதவியாளர்களாக உயர்த்துதல்.

(8) மாவட்டங்களில் இருக்கின்ற வாழ்க்கைத் தொழில் வழி
காட்டும் பிரிவுகளை ஆற்றல்படுத்துதல்.

(9) சங்கராபுரம், ஆலங்காயம் ஆகிய இடங்களில் துணை
வேலை வாய்ப்பு அலுவலகங்களும் ஆய்வுப் பிரிவும் அடங்கிய
அமைப்பை மலை சாதியினருக்காக நிறுவுதல்.

(10) திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரில் ஓர் துணை வேலை
வாய்ப்பகம் நிறுவுதல்.

(11) வேலை வாய்ப்புத் துணை இயக்குநர் பதவியைக்கூட்டி
மாநில இயக்ககத்தை ஆற்றல்படுத்துதல்.

(12) திருச்சி, சென்னை மாவட்டங்களில் ஊனமுற்றோர்க்கான
சிறப்பு வேலை வாய்ப்பகம் நிறுவுதல்.

18. ஏனைய முக்கிய இனங்கள்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseer Manpower Corporation Limited) (தமிழக அரசைச் சார்ந்தது) 1956 ஆம் ஆண்டின் வணிக நிறுவனச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி அன்று ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிறு வனம் பங்கிற்கு ரூபாய் 1,000 வீதம் 5,000 சம பங்குடன் கூடிய ரூபாய் 50 இலட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனப் பங்காக கொண்டுள்ளது. தொடக்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு ரூபாய் 5,00,000. முதலில் உருவாக்கப்பட்ட இந்நிறுவன வாரிய இயக்குநர்கள் பின்வருமாறு :—

1. திரு. சி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ். தலைவர்,
அரசுச் செயலர்,
தொழிலாளர் நல வேலைவாய்ப்புத்துறை.

2. திரு. ஏ.எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ்., இயக்குநர்,
அரசு இணைச் செயலர்,
நிதித்துறை,

3. திருமதி லத்திகா டி. பட்டாலக்கர், ஐ.ஏ.எஸ். இயக்குநர்,
இயக்குநர்,
வேலைவாய்ப்புப்-பயிற்சித் துறை.
சென்னை-600 005.

4. திரு. அ. உமாமகேஸ்வரன், பி.காம்., நிர்வாக
(ஆனர்ஸ்), இயக்குநர்.
இணை இயக்குநர். (வேலை வாய்ப்பு).

அனுபவம் பெற்று, வெளிநாடுகளில் வேலை தேடக்கூடியவர் கள் குறித்த விபரங்களுடன் புள்ளி விவரத் தொகுப்பு ஒன்றை இக்கழகம் அமைத்துள்ளது. மையக் கிழக்கு நாடுகளிலுள்ள தொழிலதிபர்களுடன் இதுகுறித்து இக்கழகம் தொடர்பு கொண் டுள்ளது.

19. இத்துறையின் வருங்கால திட்டங்கள்.

1. பார்வையற்றோருக்காகப் பணிப்பட்டறை/கூட்டுறவு நெசவு நிலையம் நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்க பரிசீலனை யில் உள்ளது. இப்பிரிவு துவங்கும் போது 120 பார்வையிழந் தோருக்கு ஆண்டுக்கு 60 பார்வையிழந்தோர்களுடன் நெசவுத் கார்க பயிற்சி அளிக்க வகை செய்யப்படும். இப்பயிற்சிக் காலத் திற்கு பின், பயிற்சி பெற்ற 120 பார்வையற்றோர்களை உறுப் பினராகக் கொண்டு ஒரு கூட்டுறவுச் சங்கம், இயக்குநர், கைத் தறி—ஆடைகள் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்படும். ஊன முற்றோரின் மாநில வாரியத்திலுள்ள நிதியிலிருந்து இலவச மானி யமாக பார்வையிழந்த 120 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அந்த மொத்தத் தொகையாகிய ரூபாய் 12,000-யை மூலதன மாகக் கொண்டு இக்கூட்டுறவுச் சங்கம் செயல்படும்.

2. கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், மாவட்ட வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் குறைக் கும் பொருட்டும், வேலை வாய்ப்பகங்களின் பணிகளைச் செவ்வனே செய்யும் பொருட்டும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியிலும் மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் முறையே ஒவ்வொரு துணை வேலை வாய்ப்பகங்களைத் துவக்கும் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. ஒதுக்கப்பட்ட பிரிவினர்களால் ஒதுக்கப்பட்ட காலியிடங் களை நிரப்பப்படுவதை கவனிக்கும் பொருட்டும், தாழ்த்தப்பட் டோர்/மலைச் சாதியினர்க்கு பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டும் மாநில இயக்ககத்தில் 1979-80 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர்/மலைச் சாதியினருக்கான சிறப்புப் பிரிவு துவக்கப்பட அரசு பரிசீலனையில் உள்ளது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

தொழிற் பயிற்சி நிறுவனங்கள்.

விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான முன் தேவை பயிற்சி பெற்ற தொழில் நுட்ப பணியாளர்களாகும். தொழில் வளர்ச்சி அடைவதற்கு தொழில் நுட்பப் பயிற்சி

பெற்ற கைவினைஞர்களை உருவாக்குவதற்கு இந்தியாவின் பல பகுதிகளிலும், முதலாம் ஐந்தாண்டுத் திட்டகாலம் முதற்கொண்டு மூன்றாம் ஐந்தாண்டு, திட்டகால முடிவு வரை தொழிற் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. பயிற்சியை செம்மையாக அளிப்பதற்கு இந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிமனை சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. பயிற்சித் திட்டத்திற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் நாட்டின் முழுமையும் உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் பொறுப்பில் இயங்குகின்றது. மாநில அளவில் எல்லா தொழிற் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:—

1. தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப்பயிற்சி.

2. 1961-ம் ஆண்டு வேலைபழகுநர் சட்டத்தின் கீழ் வேலை பழகும் பயிற்சி.

3. தொழிற்சாலை ஊழியர்களுக்காக மாலைநேர வகுப்புகள்.

4. தொழிற் பள்ளிகளுக்கான முறைப்படுத்துதல் விதித் தொகுப்பின் கீழ் மாநில உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. வேலையிழந்த பெருந்தொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள் கைத்தறி நெசவாளர்கள் (பகுதிநேரம்) ஆகியோருக்காக குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி.

6. உயர்நிலைத் தொழிற் பயிற்சி பாடப் பிரிவு

தொழிற்பயிற்சி நிலையங்கள்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் ஆண் பெண் இருபாலாரும் பயிலத்தக்க முப்பத்தொரு தொழிற் பயிற்சி நிறுவனங்களும், பெண்களுக்கென ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் 12,731 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 29 பொறி இயல் பிரிவு களிலும், 6 பொறி இயல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதில் 16 தொழிற் பயிற்சியின் கால கால அளவு ஓராண்டாகவும் 19 தொழிற் பயிற்சியின் கால அளவு ஈராண்டாகவும் உள்ளது. நிலைய பயிற்சியின் இறுதி யில் அகில இந்தியத் தொழில் தேர்வில் மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு தேசிய தொழில் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் பயிற்சியாளர்கள் சேர்க்கையில் தகுதி அப்படைய லான வகுப்புவாரி ஒதுக்கீடு மிகக் கவனத்துடன் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. வகுப்பு வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய புள்ளி விவரங்களும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அனுமதிக்கப்பட்ட பயிற்சி யாளர்களின் புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக் கின்றன:—

	ஒதுக்கீடு சதவீதம்.	பயிற்சியில் சேர்க்கப் பட்டவர்கள் சதவீதம்.
அரிசன வகுப்பு ..	18	19
பிற்பட்ட வகுப்பினர் ..	31	59
அகதிகள் ..	5	2.7

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒதுக்கீடு இல்லை எனினும் பயிற்சி பெறத் தகுதியுடைய 141 மாணவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

4. உதவிபெறும் தனியார் தொழிற் பள்ளிகள்.

தற்சமயம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின ரால் வரையறுக்கப்பட்ட தொழிற் புள்ளிகளின் விதிமுறைக் கொள்கைகளின்கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 71 தனியார் தொழிற் பள்ளிகள் தமிழ் நாட்டில் உள்ளன. இந்தப் பள்ளிகள் தச்சுத் தொழில், கருமாரத்தொழில், பொருத்துப்வர், பற்று வைப்பவர், பின்னல்வேலை, பூவேலை, துணிவெட்டுதல்-தைத்தல் முதலிய பயிற்சிகளை அளிக்கின்றன. இந்தப் பள்ளிகளில் ஏறக் குறைய 5,000 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அங்கீகரிக் கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும், பயிற்சியின் தரத்தை முறைப்படுத்த பொதுவான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, எல்லா தொழிற் பள்ளிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜூனிலிருந்து பொதுவான இறுதி ஆண்டுத் தேர்வு நடத்தப்பட்டு வருகின்றது. தொழிற் பள்ளிகளுக்கான விதிமுறைக் கொள்கைகளின் விதித்துறைகளின்படி மானியம் பெற இப்பள்ளிகள் தகுதி பெறுகின்றன.

5. சிறப்புத் திட்டங்கள்.

வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் (பகுதி நேரம்) ஆகியவர்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழிற் நுட்பப் பயிற்சிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமும், குறிக்கோளுமாகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துபவர், செப்பு மற்றும் தகர வேலைப்பாடு ஆகிய இரட்டைத் தொழில்களில் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபாய் 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 160 ஆகும்.

6. உயர்நிலை தொழில் பயிற்சிப் பாடப் பிரிவு.

நுண்ணிய கருவிகள் மற்றும் புதிய தளவாடங்கள் உப யோகிப்பதில் அடைந்துவரும் வளர்ச்சி மற்றும் தொழிலியலில் அடைந்துவரும் மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டம்/அகில உலகத் தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் அம்பத்தூரிலுள்ள அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் உயர்நிலைத் தொழிற் பயிற்சிப் பாடப் பிரிவு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இந்தியத் தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபடங் களைப் படித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை பல்வேறு நிறுவனங்களிலிருந்து பயிற்சிக்கென அனுப்பப் பட்ட 112 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கூடிய விரைவில் பற்றவைப்போர், கம்மியர் மற்றும் மின்சாரப் பரா மரிப்பு கருவிகள் செய்வோர், அச்சு வார்ப்பவர் போன்ற மூன்று தொழிற் பிரிவுகளில் உயர்நிலைப் பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

கிராமப் பகுதிகளிலிருந்து சமுதாயத்தில் மிகவறிய நிலையி லுள்ள மக்களின் நலனுக்காக கூடுதல் வேலை வாய்ப்பை அளிக் கும் நோக்கத்துடனும் சுயவேலை வாய்ப்பிற்கு வகை செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் கிராமப்புற கலைஞர்களுக்கு தாராபுரம், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் மூலம், குழாய் வேலை, மின்சார மோட்டார் கள் ரீவைண்டிங் செய்தல், வேளாண் கருவிகளைப் பழுது பார்த்தல் ஆகிய தொழில்களில் குறுகிய காலப் பயிற்சி வகுப்பு (பகுதி நேரம்) தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த கிராமக் கைவினைஞர் பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டத னால், அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறன்கள் மேம்படுத்தப் பட்டு கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் ஆதாயம் தரத்தக்க வகையில், பயன்படுத்தத் தக்க திறமைகளை அவர் களுக்கு எடுத்து விளக்குவதன் மூலம் கிராம மக்கள் பெருமளவில் பயனடையச் செய்வதற்கு இந்தக் கிராமப் பயிற்சித் திட்டத்தை நீட்டிக்கவும் கருதப்பட்டுள்ளது.

ஆய்வுரை.

கோரிக்கை 57 : பல்வகை மூலதனச் செலவு—495A—ஏனைய சமூக சமுதாயப் பணிகள் குறுத்த மூலதனச் செலவு—a. b. வேலை வாய்ப்பு.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்—தொடர்பான மூலதனச் செலவு குறித்து மானியக் கோரிக்கை “மானியக் கோரிக்கை 57-பல்வகை மூலதனச் செலவு” என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் கீழ்க்காணும் துணைத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக 1979–80 ஆம் ஆண்டு மாநில வரவு செலவுத் திட்டத்தின் பகுதி 1-ல் ரூபாய் 7,97,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களுக்கான செலவிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(i) சிறப்புத் திட்டத்தின்கீழ் (பகுதி நேரம்) கருவி—
தளவாடங்கள் வாங்குதல்.

வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும், மாதிரி அமைப்புச்
செய்பவர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே
இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், சேலம், திருச்சி,
பேட்டை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்
பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைமுறையில் உள்ளது.
இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்குடன் கருவிகள் மற்றும்
தளவாடங்கள் வாங்குவதற்காக இந்நிதியாண்டில் ரூபாய் 1,000
அடையாள நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் திட்
டத்தில் சேராத பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) தொழில் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்
விடுதிக் கட்டிடம் கட்டுதல்:

இம்மாநிலத்திலுள்ள 24 தொழிற் பயிற்சி நிலையங்களில்
நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. இந்த
மாணவர் விடுதிகளில் உள்ள உணவு அறைகளில் பெஞ்சுகள்
மற்றும் பல்வகை வசதிகளைப் பெருக்கும் செலவினங்களுக்காக
ரூ. 13,000 நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) நிலம் வாங்குதல் மற்றும் கட்டுமானம் (சாட்டியச் செலவு)

தொழிற் பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்காக கையகப்
படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயரிய ஈட்டுத் தொகையை நிலச்
சொந்தக்காரர்களுக்கு அளிக்க ரூபாய் 1,000 அடையாள நிதி
ஒதுக்கீடு சாட்டியச் செலவு வகையில் வகை செய்யப்பட்டுள்ளது.

(iv) தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக 1979–80
ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய்
1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(v) தொழில்களைப் பலதிறப்படுத்துதல் :

இத்திட்டத்தின்கீழ் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த
தொழில்களாகக் கருதப்படுகின்ற நடைமுறையிலுள்ள தச்சர்,
அச்சு வார்ப்போர், கருமார் போன்ற தொழில் பிரிவுகள் முற்றிலு
மாக நீக்கப்பட்டும் அல்லது இத்தொழில் பிரிவுகளிலுள்ள இருக்கை
கள் குறைக்கப்பட்டும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக்
கருதப்படும் கம்மியர் (பொது மின் அணுவியல்) இயந்திரப் பட

வரைவாளர் மற்றும் கம்மியர் (குளிர்ப் பதனம் மற்றும் தட்ப
வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) போன்ற புதிய தொழில்
பிரிவுகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான இயந்திரங்கள்
மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக 1979–80 ஆம் ஆண்டுக்
கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,11,000 நிதி
ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமான வேலைக்கென ரூபாய் 1,000
அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(vi) புதிய சாதனங்கள் வாங்குதல் :

மத்திய அரசினரால் பல்வேறுபட்ட தொழில் பிரிவுகளுக்
கான கருவிகள் மற்றும் தளவாடங்கள் தரப் பட்டியலில் செய்யப்
பட்டுள்ள திருத்தத்தின் விளைவாக கம்மியர் (மோட்டார்
வாகனங்கள்), கம்மியர் (குளிர்ப் பதனம் மற்றும் தட்ப வெப்ப
நிலையைக் கட்டுப்படுத்துதல்), கம்மியர் (கருவிகள்) போன்ற
தொழில்களுக்குக் கூடுதலாகக் கருவிகளும் தளவாடங்களும்
வாங்கப்படவிருக்கின்றன. இவ்வகைக்கென 1979–80 ஆம்
ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய்
1,56,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(vii) தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல் :

உயர் மின் அழுத்தம், தொழிற்சாலைகளின் கட்டுமானம்,
பராமரிப்பு, தொழிற்கூட வகுப்பறைகள் கட்டுமானம் மற்றும்
இதர பல்வகைப் பராமரிப்புப் பணிக்கென 31 தொழிற் பயிற்சி
நிலையங்களின் தேவைகளின் அடிப்படையில் 1979-80 ஆம்
ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய்
2,00,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கருவிகள், தள
வாடங்கள் வாங்குவதற்கென ரூபாய் 5,000 நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்காக கையகப்
படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயரிய ஈட்டுத் தொகையை நிலச்
சொந்தக்காரர்களுக்களிக்க 1979-80 ஆம் ஆண்டுக்கான வரவு-
செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம்
சாட்டியச் செலவினத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

(viii) கம்மியர் (பொது மின் அணுவியல்) பிரிவில் தொழிற் பயிற்சி
அளித்தல் :

அடையாறு தொழிற் பயிற்சிப் பகுதியில் புதிதாக துவக்கப்
பட்ட கம்மியர் மற்றும் பொது மின அணுவியல் பிரிவிற்கென
தேவைப்படும் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக
1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ix) தற்பொழுதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை காலத்திற் கேற்ப மாற்றி அமைத்தல்:—

ஏற்கனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்
களின் தேவைக்கேற்ப, மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த
தொழிற் கல்வி வகுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முதல்
படியாக அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ''இந்தியத் தர
நிர்ணயம் மற்றும் பொறி இயல்'' ஆய்வு வகுப்புகள் நடத்தப்
படுகின்றன. இவ்வகுப்பின் பயிற்சிக் காலம் 3 முதல் 4 வாரங்
களாகும். பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்
பட்ட 112 தொழிலாளர்கள் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர்.
இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென இயந்திரங்கள்
மற்றும் கட்டுமானத்திற்கென 1979-80 ஆம் ஆண்டுக்கான
வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,07,000 நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு IV.

547ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் வீட்டு வசதி, 1979-80.

கொள்கைக் குறிப்பு.

உணவு, உடைக்குப் பிறகு வீட்டு வசதி மக்களின் முக்கிய
அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும், நீண்ட
நெடுங்காலமாக வீட்டு வசதித் துறையில் முதலீடு செய்வ
தென்பது, உற்பத்தித் திறனில்லாதது என்ற தவறான எண்ணப்
போக்கை பொருளாதார திட்ட வல்லுநர்கள் கொண்டிருந்தனர்.
எல்லா குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டு வசதியை
அளிக்காதவரை, மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும்
வலுப்படுத்த இயலாது. வீட்டு வசதிப் பணிகள் தீவிரப்படுத்தப்
பட்டாலொழிய, கட்டிடத் தொழிலினைச் சார்ந்த ஆக்கப்
பொருள்கள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் வளர்ச்சியடை
யாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்க நிலை ஏற்படும்.
மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில்
துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில்
மெலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான சேமிப்பின்
மூலம் வீடுகளைக் கட்ட இயலாது. எனவே, மாநிலத் திட்டம்
இதனைக் கருத்தில் கொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டங்
களில் மிக முக்கியமான இச் சமூக நல முதலீட்டில் ஏற்படும்
பற்றாக்குறையை நிரப்ப வேண்டும்.

நகர்ப்புற வீட்டு வசதி.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

2. மாநிலம் முழுவதும் வீட்டு வசதித் திட்டங்களை செய
லாற்றுவதில் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில்
சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்
புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப்
பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியம், 1961 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில்
அமைக்கப்பட்டது. பின்னர், வேலூர், சேலம், ஈரோடு ஆகிய
இடங்களிலும் வீட்டு வசதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவ்
வாரியம் சட்டப்படி அமைந்த பல்வேறு அரசுத் துறைகளும்
பிரதிநிதித்துவம் பெற்றியங்கும் நிறுவனமாகும். இது மாநிலத்
தின் வீட்டு வசதி நடவடிக்கைகளைக் குறித்து திட்டமிட்டு,
அவற்றை ஒருங்கிணைத்து, வீட்டு வசதித் திட்டங்களை மிக
விரைந்து செயல்படுத்துவதற்கு உறுதி செய்கிறது.

3. கீழ்க்காணும் விவரப்பட்டி இம்மாநிலத்தில் வீட்டு வசதி
இருப்பைப் பெருக்குவதில் வீட்டு வசதி வாரியம் அடைந்துள்ள
நிலையான வளர்ச்சியையும், வீட்டு வசதித் திட்டங்களின் கீழ்
செய்யப்பட்ட செலவினத்தையும் ஒரு மேலோட்டப் பார்வை
யில் காட்டும் :—

வீட்டு வசதி வாரியம்.

ஆண்டு.	குறைந்த வருவாய்த் தொகுதியினர் திட்டம்.	நடுத்தர வருவாய்த் தொகுதியினர் திட்டம்.	அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.	வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டம்.	பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர் திட்டம்.
	திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1974-75 ..	300	298	353	640	898
1975-76 ..	1,038	645	1,306	492	2,322
1976-77 ..	1,966	766	718	474	1,487
1977-78 ..	1,368	1,238	636	..	1,866
1978-79(இலக்கு)	4,104	2,226	1,299	600	1,643
1979-80(இலக்கு)	4,500	2,400	1.400	650	1,800

வீட்டு வசதி வாரியம்—தொடர்ச்சி.

ஆண்டு.	குறைந்த வருவாய்த் தொகுதியினர் திட்டம்.	நடுத்தர வருவாய்த் தொகுதியினர் திட்டம்.	அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.	வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டம்.	பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர் திட்டம்.	பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான முழு வசதி கொண்டிய மனைகள் மேம்பாடு திட்டத்துடன் சேர்ந்த மற்ற திட்டங்கள்.	மொத்தம்.
	திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.						
	(ரூபாய் இலட்சங்களில்)						
(1)—தொடர்ச்சி.	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1974-75 ..	183.65	238.51	156.59	55.99	87.73	296.63	1,019.10
1975-76 ..	258.94	226.23	154.70	35.28	227.21	375.54	1,277.90
1976-77 ..	242.21	272.10	128.98	40.00	176.00	339.44	1,198.73
1977-78 ..	251.68	478.57	172.47	63.66	84.78	689.21	1.740.37
1978-79 (இலக்கு).	337.02	363.60	201.40	60.00	55.61	935.47	1,953.10
1979-80 (இலக்கு).	395.93	432.35	250.00	60.00	83.28	1,701.52	2,924.08

பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டம்.

4. வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கு
மேற்படாத, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான
திட்டத்தின் கீழ், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின்
கடன் உதவியுடனும், தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்தும்
வீடுகளைத் கட்டித் தருகிறது. இவ்வீடுகளுக்கு செலவு வீடு
ஒன்றுக்கு ரூ. 8,000. இவ்வீடுகள் ஒதுக்கப்பெற்றவர்கள் வீட்டின்
செலவுத் தொகையில் 10 சதவீத அளவிற்கு முன்பணமாக
அளிக்க வேண்டும். மீதமுள்ள தொகை 240 மாதத் தவணை
களில் வசூலிக்கப்படுகிறது. இதற்கான தவணை முறை வட்டி
வீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம். 1978-79ஆம் ஆண்டில்
வீட்டு வசதி வாரியத்தால் 1,643 வீடுகள் இத்திட்டத்தின் கீழ்
கட்டப்படும். ரூ. 55·61 இலட்சம் செலவில் இவ்வீடுகள் கட்டப்
படும். 1979-80ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் 1,800
குடியிருப்புகளை ரூ. 83·28 இலட்ச செலவில் இத்திட்டத்தின் கீழ்
கட்டும்.

குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

5. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருவாய்
ரூ. 4,200-க்கும், ரூ. 7,200-க்கும் இடைப்பட்ட வருவாயினரின்
நலனுக்காக இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்
தின் கீழ் கட்டப்படுகின்ற வீட்டின் தற்போதைய உச்ச வரம்புச்
செலவு ரூ. 18,000. வீட்டின் செலவினத்தில் 25 சதவீதத்தை
உடனடியாக முன்பணமாக செலுத்தும்படியான விதி இத்
திட்டத்தில் உள்ளது. மீதியுள்ள தொகை 20 ஆண்டுக் காலத்தில்
மாதத் தவணைகளாக, ஆண்டொன்றுக்கு $8\frac{1}{2}$ சதவீத வட்டியுடன்
வசூலிக்கப்படும். 1955-56-ஆம் ஆண்டு முதற்கொண்டு இது
வரை இத்திட்டத்தின் கீழ் 9,684 வீடுகளை, வீட்டு வசதி வாரியம்
கட்டி முடித்துள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் ரூ. 337·02
இலட்ச மதிப்பில் 4,104 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்
பார்க்கப்படுகிறது. 1979-80-ஆம் ஆண்டில், வீட்டு வசதி
வாரியம் 4,500 வீடுகளைக் கட்ட ரூ. 396·93 இலட்சம் நிதி
ஒதுக்கீடு செய்துள்ளது. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக்
கழகத்திடம் பெறும் கடன் தொகையும், வீட்டு வசதி வாரியத்
தின் சொந்த நிதியாதாரங்களும் இத்திட்டத்தை செயற்படுத்த
பயன் படுத்தப்படும்.

நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

6. இத்திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கும்
ரூ. 18,000-க்கும் இடைப்பட்ட வருமானம் உள்ள நடுத்தர
வருவாய்த் தொகுதியினருக்கு பொருந்துவதாகும். நடுத்தர
வருவாய்த் தொகுதியினரில் பயனடைவோரின் பணவசதியை
கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டுக்

கான விலை உச்சவரம்பு ரூ. 42,000 என நிர்ணயிக்கப்பட்
டுள்ளது. மொத்தச் செலவினத்தில் 25 சதவீதம் முன்பண
மாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணையாகவும் 15
ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டி விகிதத்தில்
வசூலிக்கப்படுகிறது. 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதற்
கொண்டு இதுவரை, 6,383 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால்,
கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1978-79-ஆம் ஆண்டில் 2,226
வீடுகள் ரூ. 363·60 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது.
1979-80 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தின்
கீழ் தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், மற்றும் வீட்டு
வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும்,
2,400 வீடுகளைக்கட்ட ரூ. 432·56 இலட்சம் செலவிட உத்
தேசித்துள்ளது.

நிலம் கையகப்படுத்தல்—வீட்டுமனை மேம்பாட்டுத் திட்டம்.

7. நிலத்தின் விலைகளில் ஊக வாணிகத்தைத் தடுக்கும்
பொருட்டும், நிலத்தின் விலையை குறைக்கும் பொருட்டும், வீடு
கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் இடைக்கச் செய்யும்
பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெருக்க
நிலங்களைப் பெருமளவில் முன்ன
லைத் தவிர்க்கும் பொருட்டும், இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டு
தாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டு
வசதி வாரியம் நகரங்களிலும், வெளியூர்களிலும் பெருமளவு
நிலங்களைக் கையகப்படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள
சிறிய ஊர் வட்டாரங்களாக அல்லது நகர அண்மைப் பகுதிக
ளாக மேம்படுத்துகிறது. அப்பகுதியில் நல்ல சாலைகள்,
தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், கழிவு நீர்க்கால்வாய்கள்,
விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள்
மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள்
போன்ற ஏனைய பொது வசதிகளையும் அமைத்துத் தரு
கின்றது. 1956-ஆம் ஆண்டு முதல் இதுவரை 1900 ஹெக்
டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது
1979-80-ஆம் ஆண்டிற்கான குறியிலக்கு 150 ஹெக்டேர்
நிலத்தை கையகப்படுத்துவது.

8. 1978-79 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்
படுத்துவதற்கு ரூ. 50·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979-80
ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 25·00 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை வீட்டு வசதி வாரியத்திற்கு
கடனாக அளிக்கப்படும். வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு வீட்டு
வசதி வாரியம் இத்திட்டத்திற்கென ஒதுக்கியுள்ள நிதிக்கு துணை
ஒதுக்கீடாக அமையும். வீட்டு வசதி வாரியம் 1979-80 ஆம்
ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் தனது சொந்த நிதி ஆதாரத்தை
யும் மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவி
யையும் ஒருங்கிணைத்து ரூ. 620·81 இலட்சம் செலவிட உத்தே
சித்துள்ளது.

வீட்டு வசதி வாரியத்தின் தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம்.

9. இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி வாரியம், மாத வரு மானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிலாளர்களுக்கென குடியிருப்புகளைக் கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. மதுரை மாவட்டம் பசுமலையில் ரூ. 20·00 இலட்சம் செலவில் 150 குடியிருப்பு களைக் கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான 1978 79-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 20·00 இலட்சம். 1979-80-ஆம் ஆண்டிற்கும் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 100 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும். 1979-80 ஆம் ஆண் டில் 110 குடியிருப்புக்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டம்.

10. ஒருங்கிணைக்கப்பட்ட நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர்ப்புற பகுதிகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் "முழு வசதிகளடங்கிய மனை கள்" திட்டமாகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் பணி வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

11. இத்திட்டத்தின் கீழ், சென்னை நகரை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில், 13,467 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன. இதற்காக ரூ. 932·88 இலட்சம் செலவில், மொத்தம் 168 ஹெக் டேர் நிலம் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டு மனைகளைத் தவிர, வாணிபத்திற்காகவும் சிறு கைத்தொழி லுக்காகவும் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தில் சுகாதார வசதிகளுடன் கூடிய ஒவ்வொன்றும், 40 சதுர மீட்டர் பரப்பளவிலான பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 6,228 மனைகளும், 47 சதுர மீட்டர் பரப்பளவிலான சுகாதார வசதி மற்றும் கூரையுடன் கூடிய பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 2,742 மனைகளும், 47 சதுர மீட்டர் அளவி லான சுகாதார வசதி மற்றும் குடியிருப்புடன் கூடிய பொருளா தாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 792 மனைகளும் வழங்கப் படும். மேலும், ஒவ்வொன்றும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும்; ஒவ்வொன்றும் 223 சதுர மீட்டர் பரப்பளவிலான 421 மனைகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு வழங்கப்படும்.

12. இத்திட்டத்தின் கீழ், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொது மக்களுக்கான வசதிகள், வாணிபக் காரியங் கள், சமுதாயக்கூடங்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவை களின் தேவைகளுக்கும் போதுமான வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

13. ரூ. 932.88 இலட்சம் மதிப்பீடுள்ள இத்திட்டம், 1977-78 ஆம் ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 350.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 250.00 இலட்சம் ஆகும்.

14. கீழ்க்காணும் விவரப்பட்டி சென்னை நகரின் அண்மையி லுள்ள மூன்று பகுதிகளில் இந்த முழுவசதிகளடங்கிய மனைகள் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டும்:—

இடம்.	கையகப் படுத்த திட்ட மிடப்பட்டுள்ள பரப்பளவு (ஏக்கரில்).	இது வரை கையகப் படுத்தப் பட்டு விட்ட பரப்பளவு (ஏக்கரில்).	திட்டத்திற் கான செல வினம்.	இதுவரை செலவிடப் பட்ட தொகை.	தற்போதைய நிலை.
			(ரூ. இலட்சங்களில்.)		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அரும்பாக்கம்	78.41	75.49	184.20	118.50	மேம்படுத்துதல் மற்றும் கட்டு மான பணிகள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.
வில்லிவாக்கம்	198.67	126.12	294.26	65.98	பணிகள் தற்போது துவக்கப் பட்டுள்ளன.
கொடுங்கையூர்	212.32	..	454.43	49.19	பணிகள் இதுவரை துவக்கப் படவில்லை.

[1979 ஏப்ரல் 19

காவலர் வீட்டு வசதித் திட்டம்.

15. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே
காவல் துறை சார் நிலைப் பணியாளர்களில் 80 சதவீதத்
தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்
என்பதாகும். இத்திட்டத்தினை வீட்டு வசதி வாரியமும்,
பொதுப்பணித் துறையும் செயல்படுத்தி வருகிறது.

16. வீட்டு வசதி வாரியத்தால், கோவைப்புதூர் மற்றும்
ராஜா அண்ணாமலைபுரம் பகுதிகளில் முறையே 1973
மற்றும் 1974 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 480 குடியிருப்புகள்
கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1978–79 ஆம் ஆண்டில் 50 குடி
யிருப்புகள் கட்டப்படும். இத் திட்டத்திற்காக 1978–79 ஆம்
ஆண்டில் ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

17. இத்திட்டம் மாவட்ட மற்றும் வட்டத்தலைமையகங்
களில் ரூ. 200 முதல் ரூ. 750 வரை அடிப்படைச் சம்பளம்
பெறும் அரசு ஊழியர்களுக்கு சலுகை வாடகை அடிப்படையில்
வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்
டத்தை அரசு சார்பில் வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது.
மேலும் கட்டிய வீடுகளைப் பேணி பாதுகாக்கவும் செய்கிறது.
இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டிடங்கள் அரசு உடைமை
களாகும். பொதுவாக இத்திட்டத்தின் கீழ் அரசுக்கு சொந்த
மான நிலங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன.

18. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தி
லிருந்து இதுவரை வீட்டு வசதி வாரியத்தால் 9,324 வீடுகள்
கட்டப்பட்டுள்ளன. 1978–79 ஆம் ஆண்டில் 1,299 வீடுகள்
கட்டி முடிக்கப்படும். பணியிடம் மாறுதலுக்குள்ளாகும் அலு
வலர்களுக்கு வீட்டு வசதி கிடைப்பதில் உள்ள பற்றாக் குறையைப்
போக்கும் வண்ணம் இத்திட்டத்தின் கீழ்போதைய ஒதுக்கீட்டை
ரூ. 200 இலட்சத்திலிருந்து 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 250
இலட்சமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு
மேலும் 1,400 வீடுகளைக் கட்ட துணை புரியும்.

19. இத்திட்டத்தின் கீழ், வருவாய் ஆய்வாளர்களுக்கு, அவ
களது பணியின் சிறப்புகருதி அவர்களை ஊக்குவிக்க அவர்கள்
தங்களின் உள் வட்ட தலைமையகங்களிலேயே (Firka Head
Quarters) தங்கும் வண்ணம், 500 குடியிருப்புகளைக் கட்ட
அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்ட வீடுகளின் வடிவமைப்
பில், வருவாய் ஆய்வாளர்களின் அலுவலுக்கென ஒரு அறையும்
இடம் பெற்றுள்ளது. இத்திட்ட கட்டுமானப் பணி மூன்று
ஆண்டுகளில் முடிக்கப்படும்.

1979 ஏப்ரல் 19]

20. இவ்வாடகைக் குடியிருப்புகள், விண்ணப்பங்களின் மூன்
னுரிமைப்படி முறையாக ஒதுக்கப்படுகின்றன. ஐந்து காலி
இடங்களில் முதல் மூன்று காலி இடங்கள் பணியிடம் மாற்றத்திற்
குள்ளான அலுவலர்களுக்கும், புதிதாகத் திருமணம் ஆன அலு
வலர்களுக்கும் தரப்படுகின்றன. மீதி இரண்டு இடங்கள் உள்
ளூர்வாசியான அரசு அலுவலர்களுக்கு தரப்படுகின்றன.

21. அரசு அலுவலருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்
தின் கீழ், சென்னை நகரில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை
குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, அரசு (ஒருவர் தங்கு
வதற்கான குடியிருப்புகள் தவிர) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்
தால் பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கும், குறைந்த
வருவாய்த் தொகுதியினருக்கும் மற்றும் நடுத்தர வருவாய்த்
தொகுதியினருக்கும், சென்னை நகரில் கட்டப்பட்டுள்ள
வாடகை குடியிருப்புகளில் 30 சதவீதக் குடியிருப்புகளை அரசு
அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கென ஒதுக்கி வைக்கப்பட
வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பித்துள்ளது.

வெளியூர்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

22. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெளியூர்களில் குடிசைப்
பகுதி மாற்றும் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்து
கிறது. 1961 முதல் இதுவரை மாவட்டத் தலை நகரங்களான
கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர்
மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள குடிசைப் பகுதி
களில் 6,690 குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறது. தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியம் 1976–77 ஆம் ஆண்டில், மதுரை, திருச்சி
ராப்பள்ளி, மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள
குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை அளிக்கும்விரைவு
படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை
செயற்படுத்தியது. இத்திட்டத்தினை மேற்கண்ட மூன்று
இடங்களிலும் செயற்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
ரூ. 25 இலட்சத்தை செலவிட்டது. வெளியூர்களில் குடிசைப்
பகுதி மாற்றும் திட்டப்பணிகளுக்கென 1978–79–ம் ஆண்டில்
ரூ. 60 இலட்சமும் 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 60 இலட்சமும்
வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1978–79
ஆம் ஆண்டில் 600 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும் என
எதிர்பார்க்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டில் 650 குடியிருப்பு
கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

23. 1970 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், குடிசைப்
பகுதி மாற்று வாரியத்தினை அரசு அமைத்து அதனிடம் சென்னை
மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கும் பணியை

ஒப்படைத்தது. இப்பணி இதுவரையிலும் தமிழ்நாடு வீட்டு
வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1971 ஆம்
ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/நீக்கம்) சட்டம்
என்ற சட்டத்தினை இயற்றி, குடிசைப் பகுதி மாற்று வாரியத்
திற்கு சட்டபூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

24. குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும்,
உடனடியாக குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளின் அள
வினை கணக்கிடும் பொருட்டு, சமூகப் பொருளாதார ஆய்வுப்
பணி ஒன்று நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் 7,37,531
மக்கட் தொகையடங்கிய, 1,63,804 குடும்பங்கள் வாழும் 1,202
குடிசைப் பகுதிகள் உள்ளதாக ஆய்வுப் பணி புலப்படுத்தியது.
ஆக நடைமுறையில் சென்னை மாநகரத்தின் மக்கட் தொகையில்
ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்
கின்றனர். உடனடி நடவடிக்கையாக, மிகவும் மோசமான
குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் குறுகிய காலத் திட்டம்
ஒன்றை வாரியம் வகுத்து, குடிசைப் பகுதிகளில் வேலையைத்
தொடங்கியது.

25. குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கும் முன்பு,
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், 7,384 குடியிருப்புகளைக் கட்டி
முடித்திருந்தது. இக்குடியிருப்புக்கள் குடிசைப் பகுதி மாற்று
வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குடிசைப் பகுதி
மாற்றுவாரியம் துவக்கப்பட்ட 1970ஆம் ஆண்டிலிருந்து 1978ஆம்
ஆண்டு, நவம்பர் திங்கள், 30ஆம் தேதி முடிய இவ்வாரியம்
ரூ. 2,650.56 இலட்சம் செலவில், 25,355 குடியிருப்புகளை கட்டி
யுள்ளது.

26. 1978–79ஆம் ஆண்டில், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக்
கழகத்தின் கடன் உதவியான ரூ. 120 இலட்சம் தவிர அரசு
ரூ. 155 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டில்
குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1978ஆம் ஆண்டு நவம்பர் முடிய
3,368 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1977–78 மற்றும்
1978–79ஆம் ஆண்டுகளில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக்
கழகம், 21 குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களுக்கு கடனுதவி
அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களின் கீழ் 5,356
குடியிருப்புகளை கட்டுவதற்காகும் மொத்த செலவினம்
ரூ. 411.64 இலட்சமாகும். இந்த நீண்ட கால கடன் தொகை
12 ஆண்டுகளில் ஆண்டுக்கு 5 சதவீத வட்டியுடன் திருப்பிச்
செலுத்தப்பட வேண்டும்.

27. 1979–80ஆம் ஆண்டில், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி
கழகத்தின் நிதியுதவி பெறும் திட்டங்களுடன் கூட 4,000
குடியிருப்புக்கள் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் கட்டி
முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி
மாற்று வாரியம் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தி
லிருந்து ரூ. 225 இலட்சத்தைப் கடனாக பெறும். அரசின்
மானியமாக ரூ. 150 இலட்சம் இருக்கும் (மொத்தச் செலவினம்
ரூ. 375 இலட்சம்).

சென்னை மாநகரில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாடு திட்டம்.

28. 1976–77ஆம் ஆண்டு முதல் குடிசைப் பகுதி மாற்று
வாரியத்தால் விரைவு படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாடு
திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடிப்படை வசதிகள்
அறவேயில்லாத அல்லது போதிய அளவிற்கு இல்லாத சென்னை
மாநகர குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர்
வழங்கல், தெரு விளக்குகள் பொதுக்கழிப்பிடங்கள் முதலியன
செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1977–78
ஆம் ஆண்டு அரசு; அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு சொந்த
மான நிலங்களிலுள்ள 125 குடிசைப் பகுதிகளில் (இப்பகுதிகளில்
முந்தைய குடிசைப் பகுதி சுற்றுப் புற மேம்பாடு திட்டத்தின் கீழ்
சில வசதிகள் செய்து தரப்பட்டன) உள்ள 32,993 குடும்பங்கள்
பயனடையும் வண்ணம் இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்
பட்டுள்ள தரத்தின் அளவுக்கு வசதிகள் செய்து தரப்பட்டன.

29. 1978–79ஆம் ஆண்டில் அரசு ரூ. 100 இலட்சத்தை
இதற்கென ஒதுக்கீடு செய்தது. குடிசைப் பகுதி மக்களின்
எதிர்ப்பு, திட்டத்திற்கு தேவையான நிலங்கள் கிடைக்காமை
தனியாருக்குச் சொந்தமான குடிசைப் பகுதிகளை கையகப்படுத்து
தல் போன்ற தடங்கல்களால் இத்திட்டத்திற்கு ஒதுக்கிய முழுத்
தொகையினையும் செலவிட இயலவில்லை. இந்த விரைவு
படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாடு திட்டத்திற்கென
1979–80ஆம் ஆண்டிற்கு ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

உலக வங்கி திட்டத்தின் கீழ் உதவி பெறும் சென்னை மாநகர குடிசைப் பகுதி மேம்பாடு திட்டம்.

30. உலக வங்கியின் உதவி பெற்ற "சென்னைப் பெருநகர்
வளர்ச்சித் திட்டத்தில்" ஒரு முக்கியமான பகுதி குடிசைப்பகுதி
மேம்பாடாகும். இத்திட்டத்தின் கீழ், கீழே குறிக்கப்பட்டுள்ள
வசதிகள் செய்து தரப்படுகின்றன.

(அ) புதிய மேம்பாடு செய்யப்பட்ட சாலைகள், நடை
பாதைகள், சாக்கடை வசதி (வெள்ள நீர் மற்றும் கழிவு நீர்
வடிகால்கள்).

(ஆ) பத்து குடும்பங்களுக்கு ஒரு பொது குடிநீர்க்குழாய்
கள் வீதம் குடிநீர் வழங்கல்;

(இ) பத்து குடும்பங்களுக்கு ஒரு பொதுக்கழிவிட அறை,
ஒரு பொதுக் குளியல் அறை என்ற விகிதத்தில் வசதிகள்;

(ஈ) சமுதாயக் கல்வி வசதிகள், மற்றும்,

(உ) குடிசைத் தொழில் மையங்கள்.

[illegible] தருவதற்கு, சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 1,300 செலவாகும். குடிசைப்பகுதி மேம்பாட்டிற்கு ஆகும் செலவு, அந்தப் பகுதிகளிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டுமின்றி, அக்குடிசைப் பகுதியின் குடிதண்ணீர் [illegible] பாதாளச் சாக்கடை குழாய்களின் அமைமையை பொறுத்திருக்கும். இத்திட்டத்திற்கான நிதி மாநிலத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

32. இத்திட்டத்தின் முதலாவது ஆண்டான 1977–78ஆம் ஆண்டில் 20 குடிசைப் பகுதிகளில் 4,137 குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ரூபாய் 27.80 இலட்சம் செலவில் செய்து தரப்பட்டன. 1978–79ஆம் ஆண்டில் ரூபாய் 100.00 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூபாய் 17.42 இலட்சம் செலவாகும். 20 தொடர்ந்து செயல்படுத்தப்படும் திட்டங்களும் அடங்கும். 1978–79ஆம் ஆண்டில் 15,349 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூபாய் 294.53 இலட்சம் செலவிலான 8 புதிய மேம்பாட்டுத் திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

33. 10,881 குடிசைவாழ் குடும்பங்கள் பயனடையும் வண்ணம் 1979–80ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனியார் துறையிலுள்ள தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதி திட்டம்.

34. தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் பொது மற்றும் தனியார் துறை நிர்வாகிகளால் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூபாய் 350-க்கு மேற்பட வில்லையென்றால் மலிவான வாடகையிலும் மாத வருவாய் ரூபாய் 350-க்கு மேற்பட்டு ஆனால், ரூபாய் 500-க்கு உட்பட்டு இருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. அரசு, தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கு இக்குடியிருப்புகள் கட்டுவதற்காகும் உச்சவரம்புச் செலவில் 50 சதவீதம் கடனாகவும், 25 சதவீதம் ஆதரவுத் தொகையாகவும் [illegible] உதவி வழங்குகிறது. இந்தச் செலவு உச்சவரம்பில் எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டு வரும் செலவும் அந்தந்த தனிப்பட்ட நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறான நிதி உதவி பெறுவதற்கு பின்வரும் செலவு உச்சவரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரட்டை மாடிக் கட்டிடங்களில் இரண்டு சிறிய அறைகள் கொண்ட குடியிருப்பு ஒன்றுக்கு உச்சவரம்பு செலவு

ரூபாய் 5,350 ; பல மாடிக்கட்டிடங்களில் இரண்டு அறைகள் கொண்ட சிறிய குடியிருப்புக்கு உச்சவரம்பு செலவு ரூபாய் 6,050. இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீட்டிற்கு உச்சவரம்பு செலவு ரூபாய் 7,600. பலமாடிக் கட்டிடத்தில் முறையான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு உச்சவரம்பு செலவு ரூபாய் 8,500.

35. இத்திட்டம் செயல்படுத்த துவங்கிய காலம் முதல்—1977–78ஆம் ஆண்டு வரையிலும் 17 தனியார் துறை நிர்வாகிகள் ரூபாய் 26.81 இலட்சம் கடனும், ரூபாய் 11.58 இலட்சம் ஆதரவுத் தொகையும் பெற்று 890 வீடுகளை கட்டி முடித்துள்ளனர்.

36. இத்திட்டத்திற்கு 1978–79ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 10.00 இலட்சம். இத் தொகையினைக் கொண்டு கட்டப்பட வேண்டிய வீடுகளின் குறிப்பிடப்பட்ட இலக்கு 200. இதுவரை 60 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 188 வீடுகள் கட்டுவதற்கான மூன்று வீட்டு வசதித் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

37. 1979–80 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 9.19 இலட்சம். கட்டப்பட வேண்டிய வீடுகளுக்கு குறிப்பிடப்பட்ட இலக்கு 236 வீடுகள்.

நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி.

38. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மாநிலத்தில் உள்ள முதல் நிலை வீட்டு வசதிச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கின்ற தலைமைச் சங்கமாக உள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரே வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராக உள்ளார். தலைமைச் சங்கம் இந்திய [illegible] காப்புறுதிக் கழகத்திடமிருந்து, அரசு பொறுப்புறுதியின் [illegible] நிதி ஆதாரங்களைப் பெறுகிறது. இவ்வாண்டு [illegible] வீட்டு வசதி திட்டத்தின்கீழ் கிராம மக்களுக்கு கடன் வழங்குவதற்கென பொது காப்புறுதிக் கழகம் ஒரு கோடி ரூபாய் கடன் தொகையினை வழங்கியுள்ளது.

39. இம்மாநிலத்தில் 1922ஆம் ஆண்டு முதல் பல்வேறுபட்ட கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் இயங்கி வந்துள்ளன. இது [illegible] உறுப்பினர்களுக்கு [illegible] சங்கங்கள் [illegible] தொகையினை வழங்கியுள்ளன. ரூபாய் [illegible] இலட்சம் கடன் [illegible] வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

கிராம கூட்டுறவு வீட்டு வசதி.

40. 1950 ஆம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதி சங்கங்கள்
துவங்கப்பட்டன. தற்பொழுது கிராமப்பகுதிகளிலுள்ள உறுப்
பினர்களில் தேவையை நிறைவு செய்ய 365 கிராம கூட்டுறவு
வீட்டு வசதி சங்கங்கள் உள்ளன. இந்தச் சங்கங்களின் உறுப்
பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கென பெருமக் கடனாக
(Manimum) ரூபாய் 10,000 அளிக்கப்படுகின்றது. தமிழ்
நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துடன் 119 சங்கங்கள் இணைக்
கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தச் சங்கங்கள்
கிராமப் பகுதிகளில் வாழும் உறுப்பினர்களுக்கு ரூபாய் 130
இலட்சம் கடன் தொகையினை வழங்கி, 1,635 வீடுகள் கட்டி
யுள்ளன. இணையாத எஞ்சிய சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்
களுக்கு 1973 மார்ச் திங்களுக்கு முன்பு வழங்கிய கடன்களைத்
திரும்பப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன.

41. கிராமப்பகுதிகளில் வீடுகள் கட்ட அரசாங்கமே
ரூ. 5,000 நேரடியாக வழங்கி வந்தது. இத்திட்டம் 1966 ஆம்
ஆண்டு முதல் கிராம வீட்டு வசதிப்பிரிவின் மூலமும், வட்டார
வளர்ச்சி அதிகாரிகள் மூலமும் செயற்படுத்தப்பட்டு வந்தது.
இதுகாறும் இத்திட்டத்தின்கீழ் கிராமப்பகுதி மக்களுக்கு
ரூ. 359 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. 8,584 வீடுகள்
கட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் வெற்றிகரமாக நடை
பெறாததால் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிவுக்கு
கொண்டு வரப்பட்டு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின்
பதிவாளருக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு கூட்டுறவுத் துறை
யோடு இணைக்கப்பட்ட பிறகு 1976–77-ம் ஆண்டில் கிராமப்
பகுதி வாழ் மக்களுக்கு பயனளிக்கும் வண்ணம் 10 வட்ட ஊரக
கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துவக்கப்பட்டன. இந்தச்
சங்கங்களின் பணி போதுமானதாகத் தோன்றாததால், 1977–
78-ம் ஆண்டில் 50 கோட்ட அளவிலான ஊரக கூட்டுறவு வீட்டு
வசதிச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச் சங்கங்களை அமைக்க
சற்று காலதாமதமானதால் 30–6–1978 வரை ஒப்பளிக்கப்
பட்ட தொகை சுமார் ரூ. 24 இலட்சம் மட்டுமேயாகும்.

42. மக்கட் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்
புறங்களில் நிலைபெற்றுள்ளனர். இக்கிராமப்புற மக்களுக்கு
வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும் வண்ணம்,
1978–79 ஆம் ஆண்டில் தொடங்கும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட
காலத்தில் கிராமப்பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச்
சங்கங்கள் வாயிலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படவேண்டும்

என அரசு முடிவெடுத்துள்ளது. ஆண்டுதோறும் கட்டப்பட
விருக்கும் வீடுகளின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு. (1)	கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை. (2)
1978–79 ..	10,000
1979–80 ..	20,000
1980–81 ..	20,000
1981–82 ..	25,000
1982–83 ..	25,000

43. இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு வெவ்வே
றான மூன்றுவகை வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
'ஏ' வகை வடிவமைப்பு, ஒரு வீடு 3,000 ரூபாய் மதிப்பீட்டுச்
செலவில் கட்டுவதற்கு விழையும் உறுப்பினர்களுக்கு உகந்த
தாகும். 'பி' வகை வடிவமைப்புக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு
ரூ. 4,000. 'சி' வகை வடிவமைப்புக்காகும் மதிப்பீட்டுச்
செலவு ரூ. 5,000.

44. கிராமப் பகுதிகளில் உள்ள மக்களிடையே பொருளா
தாரத்தில் நலிந்த பிரிவினராய் உள்ளவர்கள், கூட்டுறவுச் சங்
கங்கள் வாயிலாக அதிக அளவில் வீடுகள் கட்ட கடன் பெறுவதை
ஊக்குவிக்கும் வண்ணம், அரிசனங்களுக்கும், அரிசனங்கள்
பெருமளவில் வாழுமிடங்களில் வீடுகள் கட்ட முன்வரும் பல்வேறு
வகுப்பினருக்கும், மானியம் தரப்படும் என அரசு ஆணை
யிட்டுள்ளது. 600 ரூபாய் அல்லது வீட்டின் மதிப்பீட்டுச் செல
வில் 20 சதவீதம் இவற்றில் எது குறைவோ, அந்த அளவுக்கு மானி
யம் வழங்கப்படும். இந்த மானியத்தைப் பெறுவதற்கு வீட்டின
மதிப்பீட்டுச் செலவு ரூ. 3,000 க்குள் (ஏ வகை) இருக்க வேண்டும்
இம்மானியத்தைப் பெற விழைவோரது ஆண்டு வருமானம்
எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 4,200-க்கு மேற் படாமலும்
இருக்க வேண்டும். 'பி', 'சி' வகை வீடுகளைக் கட்ட விரும்பு
வோருக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட மாட்டாது. ஊரக
கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் கடன் பெற விழை
யும் உறுப்பினர்கள், எவ்வகை வடிவமைப்பு உள்ள வீடாக

இருந்தாலும், உழைப்பாகவோ அல்லது வீடு கட்டப் பயன்படும்
பொருள்களாகவோ அல்லது பணமாகவோ, வீட்டின் மதிப்
பீட்டுச் செலவில் 20 சதவீதத்தை தங்கள் பங்காகச் செலுத்த
வேண்டும். அரிசனங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை
களுக்காகும் வட்டியை தொடர்ந்து அரசு ஏற்கும்.

45. பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினராய் உள்ள
கிராம மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் இத்திட்டம் சிறந்த
முறையில் செயல் படும் வண்ணம், ஒவ்வொரு மாவட்டத்திலும்
மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்டு, அந்தந்த
மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட
மன்ற உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், துணை
மாவட்ட ஆட்சியாளர்/கோட்ட வருவாய் அதிகாரி, கூட்டுறவு
வீட்டு வசதிச் சங்கங்களின் துணைப்பதிவாளர் இன்னபிற உறுப்
பினர்கள் கொண்ட 'மாவட்ட வீட்டு வசதிக் குழு' ஒன்று
அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர் மூன்று மாதங்
களுக்கு ஒரு முறை குழுவின் கூட்டத்தினை கூட்டி இத்திட்டத்
தின் செயற்பாட்டில் நிதி வழங்கல், வீடுகள் கட்டுதல் ஆகிய
பணிகள் குறித்த முன்னேற்றங்களைக் கூர்ந்து ஆய்வு செய்யும்
படியும், இத்திட்டத்தினை செயற்படுத்தும் [illegible]
களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை அகற்ற வழி வகை செய்யும்
படியும், சிறப்பான உடனடி நடவடிக்கைகள் எடுக்கும் படியும்
கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம்
வழங்கல்.

46. அரசு அலுவலர்களுக்கு, வீடு கட்டவும், வீட்டு மனைகள்
வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள்
வாங்கவும் முன்பணம் வழங்கப்படுகிறது. 6 ஆண்டுகள்
தொடர்ந்து அரசின் கீழ் பணியாற்றிய அலுவலர்கள் இக்கடன் உதவி
பெற தகுதி யுடையவர்கள் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொ
ருவருக்கும் அவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய அடிப்படைச்
சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000
இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத் தொகை முன்பணமாக
வழங்கப்படுகிறது. கடன் தொகை அலுவலர்கள் தங்கள்
அலுவல் காலத்திற்குள், அவர்களது சம்பளத் தொகையில் மூன்றில்
ஒருபங்கு வீதம் மாதம் தோறும் திருப்பிச் செலுத்துவதற்குரிய
திறன் மற்றும் அவர்களின் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்
கொடையின் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது.

47. 1978–79 ஆம் ஆண்டில், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு
ரூ. 150,00 இலட்சத்திலிருந்து ரூ. 155,00 இலட்சமாக உயர்த்தப்
பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படும் நிலை
களின் அடிப்படையில் படிப்படியாக கடன் தொகை தரப்படுகின்ற
காரணத்தினால், ஒரு வருடத்தில் ஒப்புதல் அளிக்கப்படும் மொத்
தக் கடன் தொகை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட
50 சதவீதம் அதிகமாக இருக்கும். இம் முறைப்படி 1978–79 ஆம்
ஆண்டில் ரூ. 225.00 இலட்சம் தொகைக்கு சுமார் 1,200
விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் கிடைக்கும்.

48. 1979–80 ஆம் ஆண்டிற்கான இத்திட்டச் செலவில்
மாநில அரசு அலுவலர்களுக்கென ரூ. 175 இலட்சமும்,
அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளுக்கென ரூ. 7.50 இலட்சமும்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு V

[547-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 42

பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான

மூலதனம், 1979–80

ரூ. 4.78 லட்சம்.

தாங்களாகவே ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள முடியாத நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கமே சில திட்டங்களை நிறைவேற்றி அவற்றிற்கு தேவைப்படும் தண்ணீரை வழங்கி வருகிறது. இத்திட்டம் ஏப்ரல் 1971-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பயன்பெறுவோரிடமிருந்து இந்த முதலீட்டுக்கு ஈடு செய்யும் வகையில் முறையான விகிதத்தில் தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பின்வரும் திட்டங்கள் இப்போது நடைமுறையில் உள்ளன.

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்.
1.	பாதுகாப்புத் தொழிற்சாலை ஆவடி, குடிநீர் வழங்கு திட்டம்.
2.	தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் குடிநீர் திட்டம்.
3.	திருச்சிராப்பள்ளியிலுள்ள சிறு ஆயுதங்கள் தொழிற்கூடத்திற்கான நீர் வழங்கு திட்டம்.
4.	தூத்துக் குடியில் 20 மில்லியன் காலன் குடிநீர் வழங்கு திட்டம்.
5.	வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி நீர் வழங்கு திட்டம்.

இவ்வகளில் முக்கிய திட்டமான 20 மில்லியன் காலன் நீர்
வழங்கும் தூத்துக்குடி திட்டம் ஏறத்தாழ முடிக்கப்பட்டு பயன்
படுத்தப்பட்டு வருகிறது. (அ) அனல் மின் நிலையத்திற்கும்,
தூத்துக்குடி இரசாயனக் கலவை நிலயத்திற்கும் முக்கிய கிளை
குழாய்கள் நிறுவுதல்; (ஆ) பிளாஸ்டிம் க் செ. ன் இரசாயன
தொழிற்சாலைக்கு முக்கிய கிளை குழாய்கள் நிறுவுதல் மற்றும்
(இ) பணியாளருக்கான இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகள்
நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்ட நிறைவேற்றத்
திற்காக 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 4.77
இலட்சத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆவடியிலுள்ள பாது
காப்பு தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கு திட்டத்திற்காக
1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 1,000 அடை
யாள ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

*வினா எண்.745—திரு. துரை முத்துசாமி, திரு.நா.பழனிவேல்
மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–79, 1979–80–ம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன
வீட்டு வசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்ட திட்ட
மிடப்பட்டுள்ளது?

(ஆ) அது எங்கெங்கு கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) 1978–79–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டு
வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 1660 வீடுகள் கட்ட இத்திர
விடப்பட்டுள்ளது. 1979–80–ம் ஆண்டில் வீடுகள் கட்டுவது
குறித்து 1979–80-நிதி ஆண்டில் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

(ஆ) விவரப்பட்டியல் * இப்பேரவை முன் வைக்கப்
பட்டுள்ளது.

*வினா எண்.746—திரு.மொ.பெரியசாமி: மாண்புமிகு அரிசன
நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979–ஆம் ஆண்டு பிப்ரவரி வரை தமிழ்நாடு அரிசன
வீட்டு வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மொத்த
எண்ணிக்கை என்ன? ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

1979–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தமிழ்நாடு
அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக்கழகத்தால் கட்டப்பட்டுள்ள
வீடுகளின் மொத்த எண்ணிக்கை 38,211.

ஆண்டு வாரியான விபரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.—

ஆண்டு.	கட்ட அனுமதியளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1974–75	10,000	2,892
1975–76	20,000	27,130
1976–77	5,045	3,021
1977–78	5,000	1,850
1978–79	1,660	3,318
மொத்தம்	41,705	38,211

* 891 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 20

திரு. மொ. பெரியசாமி : இதே போல் மாவட்ட வாரியாக தமிழ்நாடு வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வீடு கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாவட்ட வாரியாகத்தான் தற்போது கட்டிக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த ஊரில் என்ற விவரம் கேட்டால் பிறகு வேண்டு மென்றால் சொல்லுகிறேன்.

திரு. கு. ரமணி : பல்லாயிரக்கணக்கான வீடுகளை அரி சனங்களுக்குக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியேற் றப்பட்டுள்ள அரிசனங்கள் அந்த வீடுகளில் குடியேறி ஒரு வருஷம் அல்லது 2 வருஷத்திற்குள்ளாக இடபாடுகள் ஏற்படுகின்றன. கதவு நிலைகள் பெயர்ந்து போகும் நிலைமை ஏற்படுகின்றது. பல வீடுகள் உபயோகத்திற்கு லாயக்கற்றவையாக ஆகிவிட் டிருக்கின்றன. ஆகவே, அரசே தன்னுடைய செலவில் ரிப்பேர் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வீடு கட்டிக் கொடுக்கப்படுகின்ற திட்டந்தான் தற்போது செயல்படுத்தப் பட்டு வருகிறது. கட்டப்படுகிற வீடுகள் தரமாக இருக்கும் வகையில் கண்காணிக்க முயற்சி எடுத்துக் கொள்வது பொருத்த மாக இருக்கும். ஒரு வீட்டைக் கட்டி முடித்து ஒப்படைத்த பிறகு அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகிவிடுகிறது. அது அரசாங்கத்திற்குச் சொந்தமல்ல. ஆகவே, அதிலே குறைபாடு கள் இருக்குமானால் அவர்களாகவே செய்து கொள்வதுதான் நியாயமாக இருக்கும், பொருத்தமாகவும் இருக்கும்.

திரு. மொ. பெரியசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுத்த வீடுகளின் பட்டியலைக் கொடுத்திருக் கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசால் கட்டப்பட்ட வீடுகள் பல இடங்களில் குடிபோக முடியாத அளவிற்கு இடிந்து போய் தரை மட்டமாக இருக்கிறது. அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அப்படிப்பட்ட பட்ட புகார்கள் வருகிற நேரத்தில் அலுவலரை அனுப்பி பரி சீலனை செய்து அப்படித் தரம் இல்லாமல் கட்டப்பட்டது என் பதற்கான அறிக்கையைப் பெற்று இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் அவர்களுக்கு அங்கே வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

1979 ஏப்ரல் 20]

திரு. வீ. சின்னையா : 1978–79 ஆம் ஆண்டு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1660 வீடுகள் தான் மாநிலம் முழுவதும் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட வாரியாக எத்தனை வீடுகள்? தாலுகா வாரியாக எத்தனை வீடுகள்? தாலுகாவில் இருக்கும் யூனியன்களில் எத் தனை வீடுகள்? இந்த எண்ணிக்கை மிகக் குறைவானது என்ற நிலையில் அரிசன மக்கள் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி யிருக்கிறார்கள். ஆகவே, பத்து கோடி ரூபாய் ஒதுக்கி பத்தா யிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாநிலத் திற்கே மொத்தம் 1660 வீடுகள் கட்டப்படும் என்றுதான் சொன் னேன். மாவட்டத்திற்கு, ஒன்றியத்திற்கு எவ்வளவு வீடுகள் என்பதற்கு அதை வகுத்துக் கொள்ள வேண்டியதுதான். இந்தத் துறையைப் பொருத்த வரை இருக்கிற நிதியை வைத்துத்தான் செய்ய முடியும். வேறு எங்காவது கடன் வாங்க முடியுமா என்பது பற்றி இப்போதுதான் பரிசீலித்துக் கொண்டிருக்கி றோம்.

(முற்பகல் 9-20).

திரு. சோ. அழகர்சாமி : இந்த வீடு கட்டக் கூடிய திட்ட மானது கடந்த காலத்திலே கொஞ்சம் அதிகமாக அமைச்சர் சொன்னதைப் போல் ஆண்டுக்கு அப்போது 37 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது ஆண்டுக்கு 1,850 என்றும் 2,450 என்றும் 1979–80க்கு ஒன்றுமே இதுவரையில் திட்டமிடப்படவில்லை என்று இருக்கிறது. கிராமப் புறங்களி களிலே உள்ள வீடு இல்லாத அரிசன மக்கள் எந்த விதமான நம்பிக்கையும், எதிர்காலத்திலே வீடு கிடைக்கும் என்ற நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள், ஒரு யூனியனுக்கு 4 வீடுகள் என்றால் 40 கிராமங்களுக்கு 4 வீடுகள் என்ற முறையிலே தான் வருகின்றது, ஆகவே அதிகமான எண்ணிக்கையில் எப்படியாவது நிதியைப் பெறுங்கள், பட்ஜெட்டிலே ஒரு பகுதியை ஒதுக்கி, தி.மு.க. அரசாங்கமே செய்தது என்றால் நீங்கள் ஏன் செய்ய மறுக்கிறீர்கள்? ஆகவே அதிகமான வீடுகளை குறைந்த வரு மானம் உள்ள ஏழைகளுக்குக் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு ஆண்டும் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் தான் வீட்டு வசதிக்காக ஒதுக்கப்படுகிறது. ஆகவே, கிடைக்கிற தொகையைக் கொண்டு தான் இந்த வீடுகளைக் கட்ட வேண்டிய நிலையில் இந்த துறை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மற்ற எல்லா மாநிலங்களிலேயும் இது போன்று இலவசமாக வீடுகள் கட்டுகிற

[1979 ஏப்ரல் 20

திட்டம் நடை முறையில் இல்லை. மத்திய அரசாங்கம் கூட ஏன் தமிழ்நாடு மட்டும் இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது என்று கேட்டிருக்கிறது. ஆகவே எல்லா மக்களுக்கும் வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்றால் கடன் திட்டத்தில் அதைக் கொண்டு வரலாமா என்று அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. ரா. அய்யாச்சாமி : தமிழகத்திலே கோவை மாவட்டம் பெரிய மாவட்டம். கோவை மாவட்டத்திலே அரிசனங்களுக்காக எத்தனை வீடுகள் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? குறிப்பாக என்னுடைய தொகுதியிலே தாராபுரம் தொகுதியிலே எத்தனை வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்த ஆண்டு என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கோவை மாவட்டத்திற்கும் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. எத்தனை வீடுகள் என்கிற விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தொகுதிக்கு எதிர் காலத்தில் அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு. எம். அண்ணாமலை : அரிசனங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளிலே நிறைய முறைகேடுகளும் பழுதும் ஏற்பட்டிருக்கின்றன என்று பரவலாகப் புகார் வந்திருக்கிறது. ஒரு சிமிண்டுக்கு 8 மணல் என்றால் மேலும் சேர்த்து 12 ஆகப் போடுகிறார்கள் என்ற காரணத்தால் தான் பழுது அடைகிறது என்று சொல்லப்படுகிறது. அதை பரிசீலித்து மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் ஒரு சட்டி சிமிண்டுக்கு எத்தனை சட்டி மணல் போட வேண்டுமென்று ஆணையிடவில்லை. அந்த அந்தப் பகுதியிலே உள்ள கண்ட்ராக்டர்கள் செய்கின்ற வேலையைக் கண்காணிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. தீவிரமாக அதைக் கண்காணித்து தற்போது தரமான வீடுகள் கட்டப்படுகின்றன.

1979 ஏப்ரல் 20]

திரு. வ. மு. சுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது — [illegible] இலவசமாகக் கட்டிக் கொடுப்பதற்கு அதிக சாத்தியம் இல்லை. கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வட்டியில்லாத கடன் தருகிறார்கள். ஆனால், அதைப் பெறுவதில் சிக்கல்கள் இருப்பதால் அதைப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் கடன்களைப் பெற்று அவர்கள் வீடுகளைக் கட்டிக் [illegible] செய்வார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் முறையிலிருந்து கடன் எழுப்பி அதன் மூலமாகப் பரவலாக ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டலாமா என்று இப்போது தீவிரமாக யோசிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுக்கிற இந்த வீடுகள் சின்னமாக கோழிக் கூண்டுபோல் இருக்கின்றன. ஆனால் நல்லவிதமாக குடியிருக்க லாயக்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதை மனதிலே கொண்டு பெரிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு 207 சதுர அடியில் வீட்டினைக் கட்டினார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மனது வைத்து அதை 237 சதுர அடியாக மாற்றியிருக்கிறார். — தற்போது — [illegible] பெரிய வீடாகத்தான் கட்டிக் கொடுக்கிறோம்.

பக்கிங்காம் கால்வாய் சீரமைப்பு.

*வினா எண் 747—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1898 ஆம் ஆண்டில் ரஸ்ஸல் என்ற இன்ஜினியர் பக்கிங்காம் கால்வாயைப் பற்றி எழுதியுள்ள நூலின் பிளானுடன் பக்கிங்காம் கால்வாயைச் சீரமைக்க அரசு உத்தேசித்துள்ளதா.

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

கீழ்பவானி பாசனத் திட்டம்.

*வினா எண் 748—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கீழ்பவானி பாசனத் திட்டத்தில் ஒரு போகம் நஞ்சை, ஒரு போகம் புஞ்சை என்றிருப்பதை முழுவதும் புஞ்சை என்று மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பயிர் கட்டுப்பாடு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

திரு மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல பகுதிகளிலுள்ள குளங்களில் மராமத்து சரியாக செய்யப்படாது மண் பெருக்கு இருக்கிறது. அதனால் தண்ணீர் ஊற்று, பிடிப்புக் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட குளங்களில் புல்டோசர் வைத்து, மண்ணை அப்புறப்படுத்தி, நீர்ப்பெருக்கை அதிகப்படுத்த அந்த அரசு முன்வருமா? அது குறித்து ஏதேனும் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கீழ்பவானி திட்டத்தைப் பற்றியது.

திரு. க. நாச்சிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு ஏக்கர் இத் திட்டத்தின்மூலம் பாசன வசதி பெற்று வருகிறது ? அத் திட்டத்தின்மூலம் அவினாசி, பல்லடம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு பாசன வசதியை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் ஏதாவது உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி திட்டத்தின் மூலமாக 207,000 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்கு—கீழ்பவானி மூலமாக, பாசன வசதியளிக்க—எந்தப் புதிய திட்டமும் இதுவரையில் அரசிடம் இல்லை. ஆனால், அவினாசி, பல்லடம் போன்ற வறட்சிப் பகுதிகளை வளம் உள்ள பகுதிகளாக மாற்றத்தான் இன்று மேற்கு நோக்கிப் போகின்ற நதிகளை, கிழக்கு நோக்கித் திருப்பிவிட வேண்டுமென்ற திட்டம்—அதேபோல், பாண்டியாறு புன்னம்புழா திட்டம்—இந்தத் திட்டங்களால் நிரந்தரமாக, அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகள் பாசன வசதி பெறும்.

திரு. ரா. அய்யாச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, உப்பாறு அணைக்கு தண்ணீர் அதிகமாக வருகிற காரணத்தால், உப்பாறு அணையை, இடது புறத்தை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, உப்பாறு பற்றி, தனிக் கேள்வி போட்டால், தனியாகப் பதில் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது கீழ் பவானி பிராஜக்ட் மூலம் 207,000 ஏக்கர் பாசனம் பெறும் என்று குறிப்பிட்டார். இந்த 207,000 ஏக்கர் பாசனம் ஏற்பட்டது என்றால், இது புஞ்சைப் பாசனத்திற்குப் போட்டிருக்கிற திட்டம் தானே ? எவ்வளவு நஞ்சையாக இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி நஞ்சைப் பிரதேசமாக, அதிகம் அதிகமாக மாற்றிக் கொண்டிருப்பதனால், ஆயக்கட்டின் கடைக் கோடியிலிருக்கிற..................
(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி போடுங்கள். விளக்குவதற்கே 5 நிமிடங்கள் ஆகிறது. நேரம் இல்லை எல்லோருக்குமே சந்தர்ப்பம் தர வேண்டும்.

திரு கு. ரமணி : கடைக்கோடியிலான விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்காத கஷ்டமான நிலை வந்திருக்கிறதா, இல்லையா ? அப்படி வராமல் தடுத்து, 207,000 ஏக்கருக்கும் தண்ணீர் வர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கீழ்பவானி திட்டம், It was commissioned in the year 1953.

[1979 ஏப்ரல் 20

207,000 ஏக்கர்களுக்குப் [illegible]
கின்ற திட்டம்தான் இந்தத் திட்டம். ஆனால், அதன் பின்
னாலே, 1964-லே கீழ்பவானி திட்டத்தை ஒரு போகம் நஞ்சை
யாகவும், ஒரு போகம் புஞ்சையாகவும் மாற்றி மாற்றி
விடுகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்
மூலமாக Turn system என்றும் Zonal system என்றும்
இரு பகுதிகளாக மாற்றி, Odd years என்றும் Even
years என்றும் அதன் மூலமாகப் பாசன வசதி கொடுக்கப்
பட்டு வருகிறது. Tail end-ஐப் பொறுத்தவரையில்,
கடைமடைப் பகுதிகளிலே எப்போதும் தண்ணீர் கிடைப்ப
தில்லை என்பது பொதுவாக எல்லா இடங்களிலுமே இருக்கிற
குறைபாடு. ஆகவே, கடைமடைப் பகுதிகளிலே தண்ணீர்
கிடைக்கவில்லையென்றால்—மேலே இருக்கிற ஆயக்கட்டுதாரர்
கள், அவர்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டிய நீரை உபயோ
கித்தால், கண்டிப்பாக கடைமடைப் பகுதிகளிலே இருக்கிற
விவசாயிகளுக்கும் தட்டுப்பாடில்லாமல் தண்ணீர் கிடைக்கும்.
ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்காகத்
தான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. [illegible] பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே
கீழ்பவானி திட்டத்தை கீழ்பவானி பகுதி விவசாயப் பெருங்
குடிமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அங்கே
யுள்ள குளம் குட்டைகளில் தண்ணீர் நிரப்புவதற்கு ஒரு ஸ்கீம்
போட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே,
இது வரையிலும் இல்லை. இனிமேல் வேண்டுமானால்
மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கலாம்.

திரு. பொ. [illegible]வேலு கவுண்டர்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, போரூர், கலசப்பாக்கம் பகுதியில் சென்று
கொண்டு இருக்கும் ஆற்றில் இருந்து மேல்மலையனூர் பெரிய
ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வர ஏற்கனவே இருந்த அரசு முடிவு
செய்து இருந்தது. அந்தக் கால்வாயை வெட்டினால்
அந்தப் பகுதியில் உள்ள விவசாய மக்களுக்கு—அது மிக
அனுகூலமாக இருக்கும். ஆகவே, அந்தக் கால்வாயை உடனடியாகச்
செய்ய அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர்
அவர்களே, கீழ பவானியில் இருந்து மேல் மலையனூர் போக
வேண்டுமானால் நீண்ட நாள் பிடிக்கும். தனிக் கேள்வி
போடவும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்
களே, பவானி சாகர் அணை புளியம்பட்டி, நம்பியூர் வட்டாரங்
களை மிகவும் பாதித்து இருக்கிறது. அந்தப் பகுதிகளில்
தண்ணீர் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனை நல்ல
யோசனையாக இருந்தாலும், இப்போது இருக்கக்கூடிய நிலை
யில் காவிரி நீர்ப்பிரச்னை நம்முடைய தலைமேல் இருந்துகொண்டு
இருக்கிறது. அந்தப் பிரச்னை தீர்ந்து போனால் பின்னர்
யோசிக்கலாம்.

திரு. கா. வே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,
ஆளியாறு, திருமூர்த்தி நகர் அணையில் இருந்து தண்ணீர்
எடுத்துச் சென்று சென்ற ஆண்டு 1 லட்சத்து 19 ஆயிரம்
ஏக்கருக்குப் பயன்பெறும் வகையில் கால்வாய் அமைக்க 3 கோடி
ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அரசு அறிவித்தது. ஆனால் இது
வரைக்கும் அந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை ஏன்
என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர்
அவர்களே, ஏன் என்ற கேள்விக்குப் பதில் அவருக்குக் கிடைக்கும்
என்று நினைக்கிறேன். பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத்திற்கு
இப்போது தான் ஸ்டாஃப் சாங்ஷன் ஆகி இருக்கிறது. உடனடி
யாக நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, கீழ் பவானி
திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உண்டா? அதோடு கீழ்
பவானியின் வாய்க்கால் கடைப்பகுதி திருச்சி ஜில்லாவில் செல்
கிறது. அந்தப் பகுதியில் பெரும்பாலும் தண்ணீர் இல்லாமல்
போய்விடுகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில் அணையில்
தண்ணீர் நிரம்பி இருப்பதால் பிரச்னை இல்லை. கடைகோடிப்
பகுதிக்குத் தண்ணீர் வராமல் இருப்பதால், அந்தக் கால்வாய்
முழுவதையும் ஒழுங்குப்படுத்தி சரியான முறையில் தண்ணீர்
விட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கீழ் பவானி திட்டம் கோவை, திருச்சி போன்ற மாவட்டங் களுக்குப் பயன்படுகிற திட்டம். கரூர் பகுதி கடைப்பகுதியாக இருப்பதால் அவர்களுக்கு காலாகாலத்தில் தண் ணீர் கிடைக் காமல் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்க ஆலோசித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எம். எம். ஏ. ரசாக்; தலைவர் அவர்களே, கேரள ஆற்று தண்ணீர் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வர பேச்சு வார்த்தை நடப்பது எந்த நிலையில் இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின் பயனாக நெல்லை மாவட்டம் பயன்பெற வாய்ப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அய்யன்குளம் வாய்ககால் மராமத்துப் பணிகள்.

* வினா எண் 749.—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி வட்டம் ஆயக்குடி பகுதியில் உள்ள அய்யன்குளம் மற்றும் அதை ஒட்டிய வாய்க்கால் மராமத்து வேலைகளுக்கான தொகை 1978 சனவரியிலேயே சாங்ஷன் செய்யப்பட்டும் இது வரை வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாணபுமிகு திரு. ப. குழந்—சவேலு: திட்டத்தின் துவக்க வேலைகள் முடிவடைந்து பின் டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டபின் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

கருப்புக் கற்கள் ஏற்றுமதி.

*வினா எண் 750—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேசிய மயமாக்கப்பட்ட கருப்புக் கற்கள் ஏற்றுமதி (Granite Stone) பற்றி ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இதற்கென ஆய்வுக்குழு அமைக்கும் எண்ணம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு சி. பழனிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட இந்தக் கறுப்புக் கற்கள் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. அதனுடைய விலை யானது தங்கத்தின் விலையை விட அதிகமாக வெளிநாடுகளில் இருக்கிறது. அந்த மாதிரியான சிறப்பு அம்சத்தை மனதில் கொண்டு இந்த அரசு குழு அமைத்தால், அவர்கள் கற்களைப் பற்றி தேர்வு செய்து, அறிவுரை கூற முடியும் என்பதால், குழு அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல கறுப்புக் கற்கள் ஏற்றுமதிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே ஏற்றுமதிக்கென்று ஒரு தனி குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போது இருக்கின்ற மார்க்கெட்டின் அடிப்படை யிலேயே நாம் ஏற்றுமதி செய்தாலே போதுமானது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, இந்தக் கற் களை அரசு வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு என்று இந்தக் கழகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் பல பேர் பல்லாண்டு களாக இந்தக் கற்களை வைத்துக் கொண்டு, வெளிநாட்டிற்கு அனுப்புவதாகச் சொல்லி இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளை அடித்து பல தவறுகள் செய்திருப்பதாக பத்திரிகை களில் செய்தி வந்தது. அவர்கள்மீது எல்லாம் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு செயற்குறிப்பு ஏதேனும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
தனியார் பலபேர் அதிலே ஈடுபட்டு செல்வாக்கைப் பயன்படுத்தி
செல்வத்தைச் சேர்த்தார்கள் என்பது உண்மை. அதை எல்லாம்
தடுக்கின்ற வகையில் 7—12—1977 அன்று அரசு ஒரு உத்தரவு
பிறப்பித்து கறுப்புக் கற்களை அகல்வதற்குரிய உரிமம் தனி
யாருக்கு வழங்கப்பட மாட்டாது என்று முடிவு எடுத்திருக்கிறார்
கள். நடைபெற்றிருக்கின்ற தவறுகளைச் செய்தவர்களைப்
பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இப்போது
அரசாங்கமே அந்தத் தொழிலில் ஈடுபடலாம் என்ற நோக்கத்
தோடு இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுவதாகத் தெரி
கிறது. ஆனால் இதுவரையிலே ஒரு கல்லைக்கூட வெளி
நாட்டிற்கு ஏற்றுமதி செய்யவில்லை. ஆகவே பணியாளர்
களுக்குச் சம்பளம்தான் இலட்சக்கணக்கான அளவில் கொடுக்கப்
பட்டு வருகிறதே தவிர பணி உண்மையிலேயே தொடங்கப்பட
வில்லை என்ற குற்றச்சாட்டு கூறப்படுவது உண்மையா? அப்படி
யானால் அரசு நடவடிக்கை எடுத்து இந்தக் கற்களை அர
சாங்கமே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற இந்தப் பணியை
துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
தமிழ்நாடு கனிவள நிறுவனம் அமைக்கப்பட்டு 1979—80 ஆம்
ஆண்டில் சுமார் 1½ கோடிக்கு இந்தக் கல்லை ஏற்றுமதி செய்ய
லாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவிற்குக் கற்கள்
வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே நிகர
லாபம் 65 இலட்ச ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவரவர்களே,
இந்தக் கறுப்புக்கல் வெட்டுகின்ற தொழிலைப் பொறுத்தவரை
யில் அதனைத் தேசியமயமாக்கிய பிறகும் தனியார் பலருக்கு
அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தேசிய மயமாக்கப்பட்ட
பிறகு அவர்கள் கற்களை ஏற்றுமதி செய்திருக்கிறார்களே, அது
அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனியார் எத்தனை
பேர்கள் என்ற விவரம் இல்லை. ஆனால் தேசியமயமாக்கப்
பட்டு உத்தரவு பிறப்பித்ததை எதிர்த்து சிலபேர் அதாவது 34
பேர் ரிட் மனு ஹைக்கோர்ட்டிலே தாக்கல் செய்திருக்கிறார்கள்.
வழக்கு விசாரணையில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே,
இந்த கறுப்புக் கற்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன்
மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணியை
நாம் பெற முடியும். அப்படி இருந்தும் அரசாங்கத்தினுடைய
7—12—1977 அன்றைய உத்தரவுக்குப் பிறகும் தொடர்ந்து
தனியார்கள் குன்னம் போன்ற பல இடங்களில் வெட்டி எடுத்துக்
கொண்டிருக்கிறார்களே, அந்தக் கல்லைப் பொறுத்தவரையில்
ஒரு சதுர அடியை எடுத்து அனுப்பினால் கூட 4 ஆயிரம் ரூபாய்
கிடைக்கிறது என்றும், பாலிஷ் பண்ணி அனுப்பினால் 6 ஆயிரம்
ரூபாய் கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அப்படிப்
பட்ட கற்களை வெளிநாட்டிற்கு அரசாங்கமே ஏற்றுமதி செய்யக்
கூடிய நிலைமை வந்தால் அன்னியச் செலாவணி நிறையக்
கிடைக்கும். ஆகவே தேசியமயமாக்கப்பட்ட உத்தரவை
மட்டும் போட்டுவிட்டதோடு நின்றுவிடாமல் அரசே ஏற்று
நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமா? மேலும் அவர்களுக்கு ஏற்
கனவே இருக்கின்ற காண்ட்ராக்டர்களை ரத்து செய்ய அரசு
முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
தென்னார்காடு மாவட்டத்தில், உடையாநத்தம், குனனம், வி.
பரங்கினி போன்ற கிராமங்களில் தமிழ்நாடு கனிவள நிறுவனம்
இந்தக் கறுப்புக் கற்களை வெட்டி எடுக்க வேண்டும் என்று
அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே வெட்டி
எடுக்கின்றவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்
கின்ற காரணத்தால் அவர்களுக்கு இன்னும் அந்த அனுமதி
இருக்கின்றது. சில இடங்களில் லீஸ் இன்னும் முடியவில்லை,
ஆகவே அந்த லீஸ் முடிந்த பிறகுதான் எடுக்க வேண்டும்.
அத்தோடு நீதிமன்றத்தின் தீர்ப்பையும் எதிர்பார்த்திருக்க
வேண்டும்.

25 கன மீட்டர் அளவுள்ள இந்தக் கல் 400, 600 அமெரிக்க
டாலர்கள் விலை மதிப்புள்ளது. ஆகவே உண்மையிலேயே
அன்னியச் செலாவணி கணிசமாகப் பெறுவதற்கு இது ஒரு நல்ல
வாய்ப்பு.

திரு. எம். எம். ஏ. ரசாக்: தலைவரவர்களே, வெளி
நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற இந்தக் கறுப்புக் கற்கள் எந்
தெந்த இடங்களில் கிடைக்கின்றன. அவைகள் அனைத்தையும்
இந்த அரசு தேசியமயமாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
தற்போது தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், தென்னார்காடு,
செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் தமிழ்நாடு
கனி வள நிறுவனம் குத்தகை உரிமம் வழங்கியிருக்கிறது.

[1979 ஏப்ரல் 20

[முற்பகல் 9-40.]

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இந்தக் கற்களை அன்னிய நாடுகளுக்கு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதினால் நமக்கு அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கிறது. அந்தக் கற்களை ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது, முறையாக மெருகேற்றப்பட்டு நல்ல முறையில் வகுக்கப்பட்டு அந்த மூலப் பொருள் அதிக விலைக்கு விற்கப் படுகிறது என்று தெரிகிறது. அதனால் நம்முடைய நாட்டிலேயே அந்த மூலப் பொருள்களை மாற்றுப் பட்டைதீட்டி வியாபாரம் செய்தால் அதிகமாகத் தொகை கிடைக்கும் என்பதை அரசு உணர்ந்து தமிழகத்திலேயே அந்த கனிவளத்தை மாற்றக் கூடிய தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செப்பனிடா பாளங்களாக நம்மிடத்திலே பெற்று ஜப்பான் நாட்டினர் அதை மெருகேற்றி அதிக விலைக்கு விற்கின்றனர். மெருகேற்றும் வேலையை இங்கேயே மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் பரிசீலித்துக் கொண்டு வருகிறோம். திரு. சுந்தரராஜ் அவர்கள் கேட்கிறபோது எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று கேட்டார், 1—4—78 முதல் 31—1—79 முடிய நமது டான்சி நிறுவனம் மூலமாக 22.45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 527 க. மீ. கருப்புக் கற்களை ஏற்றுமதி செய்துள்ளது.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதியிலே இந்தவித சிறு கற்கள் இருப்பதாகவும், அதை ஏற்கனவே எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டிருக்கும் காண்டிராக்ட்களில் ஏதோ முறைகேடுகள் இருப்பதாகவும் தெரிய வருகிறது. அதைப்பற்றி அரசு அறியுமா? அப்படி முறைகேடுகள் இருந்தால் அதைத்தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கையெடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முறைகேடுகள் இருப்பின் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருப்புக் கற்கள் தேசிய மயமாக்கப்படுவதைப் பற்றி நமது அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் தேசிய மயமாக்கப்பட்ட பிறகு, அதிகமாக கற்கள் நமது ஆர்பரில் கப்பல்கள் மூலமாக ஏற்றுமதி செய்து வருகிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அதனுடைய விலை என்ன பாரஸ்டு

1979 ஏப்ரல் 20]

டிபார்ட்மென்ட், வனத்துறையிலிருந்து எவ்வளவு போடப்படுகிறது, ரெவின்யூ டிபார்ட்மென்ட்டில் எவ்வளவு போடப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் சொந்த பட்டா நிலங்களில் இருக்கிற கற்களை எடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வலை விவரம் ஏதும் என்னிடம் இல்லை. தனியார் நிலங்களில் இருக்கும் கற்களை எடுக்கும் உரிமையும் கனி வள நிறுவனத்திற்குத்தான் உண்டு என்பது அரசு உத்தரவு.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கணக்குகள் தணிக்கை.

* வினா எண். 751—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கணக்குகள் ஆண்டு தோறும் உரிய காலத்தில் தணிக்கைகள் செய்யப்படுகின்றனவா?

(ஆ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் உப விதிகளின்படி நிர்வாகக்குழு கணக்காண்டு முடிந்த ஒன்பது மாதங்களுக்குள் தணிக்கை சான்றிதழைப் பெற்று பேரவைக் கூட்டத்தின் முன் வைக்க வேண்டுமென உள்ளது. இதன்படி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கணக்குகள் ஆண்டுதோறும் பொதுவாக கணக்காண்டு முடிந்த 9 மாதங்களுக்குள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், சில கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தணிக்கை சான்றுகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

(ஆ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தணிக்கைகள் கூட்டுறவு சங்கப்பதிவாளரால் பட்டயத்தணிக்கையாளர் மூலமாக முடிக்கப்பட்டு வருகின்றன. பட்டயத் தணிக்கையாளர்கள் ஒவ்வொரு ஆண்டுக்கும் நியமனம் செய்யப்படுகிறார்கள். தணிக்கையாளர் நியமனம் செய்வதில் அதற்கு முன் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை தணிக்கையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று வழிமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஏதாகிலும் ஒரு ஆண்டில் தணிக்கை சான்றிதழ் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் அது பின்வரும் ஆண்டுகளிலும் தாமதம் ஏற்பட வழியேற்படுகிறது.

தணிக்கையில் காலதாமதம் ஏற்படாமலிருக்க கூட்டுறவு சங்கப் பதிவாளர் தணிக்கையாளர்களை நியமனம் செய்யும் பொழுது ஒரே தணிக்கையாளரை 2 ஆண்டுகளுக்கு தணிக்கை

யாளராக நியமக்கும்படி 17—11—78 அன்றைய அரசின் ஆணை யின் மூலம் கோரப்பட்டுள்ளார். 6 மாத காலத்திற்குள் தணிக்கை சமர்ப்பிக்காவிட்டால் தணிக்கையாளர்களின் நியமனம் ரத்து செய்யவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் : பேரைவத் தலைவர் அவர்களே, 2, 3 சர்க்கரை ஆலைகளில் தணிக்கை கணக்குப் பார்ப்பதற்காக, குறிப்பாக கள்ளக்குறிச்சியில் உள்ள சர்க்கரை ஆலையில் 3 ஆண்டு காலமாக ஒவ்வொரு முறையும் தள்ளி தள்ளிப் போடப் பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது 1979 நடந்து கொண்டு இருக்கிறது. கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தணிக்கை கணக்கு 1976 ஆம் ஆண்டுதான் முடிந்திருக்கிறது. 9 மாதங் களுக்குள் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு இருப்பினும் இத்தகைய நிலை ஏன் ஏற்படுகிறது. இதனால் தொழிலாளர்களுக்கு அந்தந்த வருடத்திற்குரிய போனஸ் கொடுப் பதிலும், கரும்பிற்கான நிதி ஒதுக்கீடு செய்வதிலும் சிக்கல்கள் ஏற்படுகிறது என்பதை அறிந்து இதை முறைப்படுத்த அரசு ஏதர்வது செய்ய முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் 1975–76 ஆண்டு வரையில்தான் தணிக்கை நடந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் அதுபோல் எல்லா ஆலைகளிலும் நடைபெறுவது இல்லை. கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலும், மதுராந்தகம் சர்க்கரை ஆலையிலும்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அரசு அதுபற்றி ஆராய்ந்து இந்த தணிக்கை செய்யும் வேலையை அரசே ஏற்று, தனி தணிக்கை துறையை ஏற்படுத்தலாம் என்று அரசு விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணைசேதுராம் : கூட்டுறவு சர்க்கரை ஆலை களில் உள்ள கணக்கைத் தணிக்கை செய்ய வேண்டும். அதற்காக தணிக்கையாளர்களை நியமனம் செய்வோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் போனஸ் விவகாரத்தில் தகராறு ஏற்பட்டு ட்ரிப்யூனலுக்குச் சென்று ரூபாய் 47 லட்சம் தரவேண்டும் என்று தீர்ப்பு அளித்தும் கூட தொழிலாளர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு போகும் இடைத்தரகர்கள் ரூ. 14 லட்சம்கிடைத்தால் போதும் என்று அங்கே பேரம் பேசி 14 லட்சம் ரூபாய் வாங்குவதற்குப் பதிலாக 12 லட்சம் ரூபாய் வாங்கி, 2 இலட்சம் ரூபாய் கையாடல் செய்து தொழிலாளர் களுடைய வயிற்றில் அடித்திருக்கிறார்கள் அந்த இடைத்தரகர் கள்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேளுங்கள். இப்படியே பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

திரு கே. பண்ணைசேதுராம்: அப்படி இடைத்தரகர்கள் செய்வது அரசுக்குத் தெரியுமா. அப்படிப்பட்ட கணக்குகளை தணிக்கைசெய்ய தணிக்கையாளர்களைப் போட இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இந்தக் கேள்விக்கும் தனியார் சர்க்கார் ஆலைக்கும் சம்பந்தம் இல்லை.

திரு என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியை கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள். இப்போது எந்த அடிப்படையில மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தொடர்பு இல்லாத கேள்வியைக் கேட்க, அனுமதிக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு க.உரா. எட்மென்ட்: அனுமதி கொடுக் கின்ற அதிகாரம உங்களுக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்பது முறையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா அவர்கள் பாராளுமன்ற முறையை நன்கு தெரிந்தவர். அவர் துணைக் கேள்வி பேசும் போது பிரச்சினையொட்டிய கேளுங்கள் என்று சொல்லி மணி அடித்தேன். அவர்கள் என்னை சங்கரய்யா அவர்கள் ஒரு கட்சித் தலைவர். அவர்கள் எப்படி அனுமதி கொடுக்கலாம் அந்தக் கேள்வியைக் கேட்க முறைக்கு சரியல்ல. என்று கேட்பது பராளுமன்ற விதி

திரு என். சங்கரய்யா: இங்கே இரண்டு விதமான முறை களில் சொல்லப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அப்படிச் சொல்ல மாட்டேன். அவர்கள் கேட்டது சம்பந்தம் இல்லாத கேள்வி தான். அதற்காகத்தான் மணியடித்து அப்படி கேட்கக் கூடாது என்று சொன்னேன்.

திரு கு. ரமணி : உங்கள் பெயருக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் அல்ல. கேள்வியே இம்புடேஷனில் வருகிறது. தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்குப் பிறகு, வேறு ஒரு நோக்கத்தோடு

[1979 ஏப்ரல் 20

அந்த இடைத் தரகர்களும், மற்றவர்களும், அதை ஒரு விவகார
மாக ஆக்கி வழக்குப் போடுவதற்குரிய நிலையை சர்க்கார்
உருவாக்குகிறது என்றால் அது இம்புடேஷனில் வருகிறது.
அது சரியா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்க இயலாது
உட்காருங்கள். தாங்கள் கேட்கும் கேள்விக்கும் இந்த
பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை.

கூடலூர் தாலுக்காவில் அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 752— திரு கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூடலூர் தாலுக்காவில் அரசுக்கு சொந்தமான
ரெவின்யூ, காட்டு இலாகா நிலங்களை தோட்ட முதலாளிகள்
ஆக்கிரமித்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த நிலங்களை மீட்டு நிலமில்லாத
தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: (அ) நீலகிரி
மாவட்டம, கூடலூர் வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான
வருவாய்த்துறை காட்டு இலாகா நிலங்களில் தோட்ட
முதலாளிகள் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்
களே, கடலூர் தாலுக்காவில் தோட்ட முதலாளிகள் எந்த
நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று அமைச்சர் அவர்
கள் பதில் சொன்னார்கள். சென்ற ஆண்டு கடலூர் தாலுகா
வில் விவசாயிகள் பரவலாக நிலத்தை கையகப்படுத்தக்கூடிய
இயக்கத்தில் இறங்கியதற்கான காரணம் என்ன?

ஓாயிஸ் என்ற விவசாயி இந்தக் கொடுமை தாங்காது கோட்
டாட்சி அலுவலகத்திற்கு முன்னால் தற்கொலை செய்துகொண்ட
தற்கான அடிப்படை காரணம் என்ன? அங்கே, விவசாயிகள்
ஏராளமான காட்டிலாகா நிலமிருந்தும், ரெவின்யூ நிலமிருந்தும்
பங்கிட்டுக் கொடுக்க முடியாத காரணத்தால் இந்த நிலைமை
ஏற்பட்டிருக்கிறது என்று நான் உங்களுக்கு கூறக் கடைமைப்
பட்டிருக்கிறேன்.

1979 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவ
ரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் கொஞ்சமும் தொடர்
பில்லை; என்றாலும் உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். மூலக் கேள்வி தோட்ட முதலாளி
கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் ஆக்கிர
மிப்புச் செய்தார்களா என்பது. ஆக்கிரமிப்பு செய்யவில்லை
என்று பதில் சொல்லிவிட்டேன். நாங்கள் நிலமற்றவர்கள்
பலருக்கு நிலம் கொடுக்கிறோம். அப்படி நிலமற்றவர்களுக்கு
கொடுப்பது என்றாலும் கூட, 1968ம் ஆண்டு சட்டத்தைப்
பார்க்கின்ற போது. அதற்கு முன்னால் 3 ஆண்டுகளுக்கு முன்னால்
யாரவாது ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவர்களுக்கு அந்த நிலம்
பட்டா செய்து கொடுக்கப்படும் என்று சட்டம் செய்யப்பட்டி
ருக்கிறது. சட்டத்தை இந்த அவைக்குக் கொண்டு வந்தது
1968-ல், இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர வேண்டும் என்று
முயற்சி எடுத்தது, 1966-ல்; இதை நடைமுறைப் படுத்தியது
1974-ல், இந்தச் சட்டம் வருவதற்கு மூன்று ஆண்டு
களுக்கு முன்னால் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்களோ அவர்
களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில்
சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ஆக்கிரமிப்பு
செய்தவர்களுக்கு இப்போது சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்
கலாம். மேலும் காடுகளில் ஆக்கிரமிப்பு செய்து நல்ல விலை
யுயர்ந்த மரங்களை வெட்டிச் செல்கிறார்கள். அங்குள்ள தேக்கு
மரங்கள், சந்தன மரங்கள் இவைகளை எல்லாம் வெட்டி
யெடுக்கிறார்கள். ஆகவேதான் இதன் மீது கடுமையான
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9-50]

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, கூடலூர்
மாவட்டம் மைசூர் மாநிலத்திற்கும் கேரளா மாநிலத்திற்கும் உள்ள
எல்லையோரத்தில் இருக்கின்றது. அங்கே ஆயிரக்கணக்கான
ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருப்பது உண்மை
தான். ஆனால் இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால்
இந்த நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து
நான்கைந்து ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டிருப்பவர்
களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் பட்டா
செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்
களே, இந்த மூலச் சட்டத்தில் திருத்தம் வருவதற்கு மூன்று
ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பவர்
களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், அதை தளர்த்தி

1969-க்கு முன்னால் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இருக்
கின்ற சங்கடங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர
வேண்டும், பெரும்பாலானவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது விவ
சாயம் செய்வதற்காக இல்லை. காட்டுக்குள் ஆக்கிரமப்பு
செய்து விலையுயர்ந்த மரங்களை வெட்டி எடுக்கின்றார்கள்.
இதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

புயல் காலங்களுக்கான காப்பு விடுதிகள்

*வினா எண். 753— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை-
யளிப்பாரா ?

(அ) கடும் புயல் தாக்கும்போது புகலிடம் தரும் காப்பு
விடுதிகள் அமைத்திட அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) & (ஆ) அவை முன், விவர அறிக்கை * வைக்கப்
பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த
புயல் பாதுகாப்பு விடுதிகள் அமைப்பதற்கு அரசுக்கு எந்தெந்த
நிறுவனங்கள் உதவி செய்திருக்கிறது என்கின்ற விவரங்களையும்,
அந்த நிறுவனங்களின் பெயர்களையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, மராட்டிய மாநில மக்கள் புயல் நிவாரணக்
குழு 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதேபோல்
இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை இங்கு
கட்டப்படுகிற புயல் பாதுகாப்பு இல்லத்திற்காக 28·12 லட்சம்
ரூபாய் கொடுத்திருக்கிறது. அதே போல் கானடா நாட்டு
அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (கன்னடியன் இன்டர்
நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்ஸி) 29 ஆயிரம் டாலர்
தந்திருக்கிறார்கள். அதேபோல் ஐரோப்பிய பொருளாதார
சமுதாய நிறுவனம் இங்கு 50 புகலிடம் கட்டுவதற்கு அவர்கள்
பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் கொடுக்
கப்பட்ட பணத்திலிருந்து இதுவரை இரண்டு இடங்கள் கட்டி
முடிக்கப்பட்டிருக்கின்றன. 17 இடங்களில் கட்டப்பட்டு
வருகின்றன. இன்னும் 11 இடங்களில் கட்டுவதற்கு அனுமதி

* 894-896ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் ஐரோப்பிய பொருளாதார
நிறுவனம் மூலமாக 50 கட்டிடங்கள் கட்டுவதாக இருக்கிறது.
மராட்டிய மாநிலத்திலிருந்து அந்த நிவாரண நிறுவனம் தந்த
உதவியிலிருந்து கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. ஆக 85 கட்
டிடங்கள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கை
யில் நாகப்பட்டினத்தில் ஒரு விடுதி கட்டியதாகவும் அது திறக்கப்
பட்டிருப்பதாயும் சொல்லப்பட்டுருக்கிறது. அது திறக்கிறபோது,
சாதாரணமாக மந்திரிகள் யாராவது வந்துதான் திறப்பார்கள்.
இதற்கு மந்திரிகள் கிடைக்கவில்லையோ என்னவோ தெரிய
வில்லை; இந்த திறப்பு விழாவிற்கு ஸ்தல எம். எல். ஏ யையோ
அல்லது எம்.பி.யையோ அஸோஸியேட் பண்ணவில்லை. எம்.எல்
ஏ. என்றிருப்பது நான்? வேறு கட்சியைச் சேர்ந்தவன்; எம்.பி யாக
இருந்தவர் முருகையன், அவரும் வேறுகட்சியைச் சேர்ந்தவர்.
சுத்தமாக அபிஷியல்களை வைத்தே திறந்திருக்கிறார்கள். எங்
களைப் போன்றவர்களை அஸோஸியேட் செய்யவில்லை.
அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு ஏன் இப்படி நடந்திருக்
கிறார்கள், கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் இப்படி நடந்திருக்
கிறார்களா என்பதை விசாரித்து முடிவு சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலை-
வர் அவர்களே, யாரையும் கூப்பிடவில்லை என்றால், கட்சி
நோக்கம் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
வெளிப்படையாகத் தெரிகிறது. புயல் புகலிடம் கட்டுவதில்
காலதாமதம் ஆகக் கூடாது என்பதற்காக விரைவாகக் கட்டப்படு
கிறது. இதைச் சொல்வதற்கு அவைத் தலைவர் அவர்கள் அனு
மதிக்க வேண்டும். புயல் எப்போது ஆரம்பித்தது? நாடு விடுதலை
அடைந்தது 1947-ல்; ஆனால், 1977, 1978 ஆம் ஆண்டு வரையில்
புகலிடம் கட்டப்படவில்லை. இன்றைக்கு 85 புயல் புகலிடங்கள்
வேகமாமாகக் கட்டுவதற்கு செயல்படுகின்றபோது கால்கோள்
விழா என்றால் காலதாமதம் ஆகும் என்பதற்காக அப்படி
யில்லாமல் கட்டப்படுகிறது. இரண்டாவது, இதைத் திறப்பதற்கு
திறப்பு விழா என்றாலும் காலதாமதம் ஆகும். அதற்காக நீங்கள்
காத்துக் கொண்டிருக்க வேண்டாம். கட்டி முடிந்தால், திறக்கச்
சொல்லியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுக் காடுகளில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கான கட்டணம்

*வினா எண் 754—திரு. என். லட்சுமிநாராயணன் :
மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசுக்குச் சொந்தமான காடுகளில் ஆடு மாடுகள் மேய்ச்
சலுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது ?

(ஆ) அக் கட்டண விகிதத்தைக் குறைக்க அரசுக்கு கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அரசுக்கு சொந்தமான காடுகளில், ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு 1—7—78 முதல் ஆண்டு ஒன்றுக்கு தலைக்கு, கீழ்க்கண்டவாறு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கால்நடை இனம்.	ஆண்டு ஒன்றுக்கு தலைக்கு மேய்ச்சல் கட்டணம்.
	ரூ. பை.
ஆடு ..	1 00
பசுமாடு ..	2 00
எருமை மாடு ..	4 00
கழுதை அல்லது குதிரை	4 00
யானை ..	30 00

(ஆ) ஆம்.

(இ) கட்டணத்தைக் குறைக்கத் தேவையில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். லட்சுமிநாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, ராமநாதபுரம், நெல்லை, மாவட்டங்களிலே இருந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த ஆடு, மாடுகளை மந்தையாக வளர்த்து, பல நூற்றுக்கணக்கான பேர்கள் தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டங்களிலே வறட்சிக் காலங்களில் மேய்ச்சலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். வருஷத்திலே அவர்கள் ஒருசில மாதங்களே இப்படிப்பட்ட பகுதிகளுக்கு வருகிறார்கள். எனவே, இவர்களுக்கு இந்தக் கட்டணத்தை முழுதும் ரத்து செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆடு, மாடுகளை..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைத் கேள்வியாகக் கேளுங்கள். விளக்கமாகப் பேசிக் கொண்டு போக வேண்டாம்.

திரு. என். லட்சுமிநாராயணன் : இந்தக் கட்டணம் முழுவதும் ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளை விரிவாக இந்த அரசு பரிசீலித்து. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1, 2 என்றுதான் விதிக்கப்பட்டிருக்கிறது; இது அதிகம் இல்லை என்பதால், இதைக் குறைக்கத் தேவையில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, செம்மறி ஆடு என்பது தரையிலே உள்ள புல்லைத் தவிர வேறு எதையும் தொடாது. அதற்கு இந்த கண்டிஷன் இல்லாமல், எல்லா இடங்களிலும் செம்மறி ஆடுகள் மேய்வதற்கு எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் இருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, செம்மறி ஆடு போகிறதா, வெள்ளாடு போகிறதா என்று சரியாக கவனமாகப் பார்க்க முடியாது. இருந்தாலும்கூட, தரையிலே உள்ள புல்லைத் தின்னும்போது, அதுவும் வன வளத்திற்குப் பாதகம் ஏற்படுத்துகின்ற ஒன்றுதான்.

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாடுகள் முந்திரிக்காடுகளில் மேயும்போது, முந்திரிகளைச் சாப்பிடுவதில்லை. அதனால், இந்த வெள்ளாடுகளுக்குக் கட்டணம் வசூலிக்காமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி காடுகளிலே முந்திரி சாப்பிடுகின்றதா இல்லையா என்பதை யெல்லாம் பார்த்து, கட்டணம் வசூலிப்பதற்கு வழிவகை செய்ய முடியாது. இந்தக் காடுகளில் மேய்ச்சலின்போது, கட்டணம் இன்றி அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, காடுகளில் மேய்ச்சலுக்குக் கட்டணம் வசூலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், மலைவாசிகள் இலவசமாக இந்தக் காடுகளில் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

தற்போது அவர்கள் 2 ரூபாய் கட்ட வேண்டுமென்பதால், பெரிய
அதிருப்தி அடைந்து, அரசுக்குப் புகார் தெரிவித்திருக்கிறார்கள்.
இதைப் பரிசீலித்து, இந்தத் தொகையை வசூலிப்பதை தள்ளுபடி
செய்வார்களா? அடுத்து கழுதைமேல் மூட்டையைத் தூக்கிக்
கொண்டுபோகும்போது, அதற்கும் கட்டணம் வசூலிக்கப்படு
கின்றது. அதற்குள்ள இந்த வரியை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்
களே, மூட்டை தூக்கிக் கொண்டு போகின்ற கழுதைகளுக்கு கட்
டணம் கேட்க மாட்டார்கள். அங்கே இருக்கின்ற புல்லை, மற்ற
வற்றைச் சாப்பிட்டால்தான் கேட்பார்கள். குறிப்பாக ஒன்றை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,
தர்மபுரி மாவட்டத்தில், அங்கே இதற்காக இருக்கும் மேய்ச்சல்
நிலத்தில் புல்லைத் தின்பதற்காக ரூ. 5 வசூலிக்கப்பட்டது. அங்கே
இருக்கின்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாவட்ட ஆட்சித்
தலைவர் பரிந்துரைக்கிணங்க இது குறைக்கப்பட்டு ஒரு ரூபாயாக
மாற்றப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10·00]

திரு. கே. பண்ணை சேதுராம்: கால்நடைகள் வாயில்லா
ஜீவன்கள் என்று அடிக்கடி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.
ஏழை எளிய மக்கள் வைத்திருக்கும் ஆடுமாடுகள் பாரஸ்ட்
நிலங்களில் மேய்கிறது. அதனால் அது போடுகிற எரு பாரஸ்ட்
நிலங்களுக்கு உரமாகிறது. உயர்ந்த சாதி மாடுகளை பெரிய
பணக்காரர்கள் வீட்டில் வைத்து வளர்க்கிறார்கள். ஏழை எளிய
வர்கள் வைத்திருக்கும் கால்நடைகள் பாரஸ்ட் நிலங்களில்
மேய்வதற்கு அனுமதி கொடுத்து கட்டணங்களைக் குறைக்க
அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள், 'அமைச்சர் அவர்கள் ஆடுமாடுகளை
வாயில்லா ஜீவன்கள் என்று குறிப்பிடுகிறார்' என்று சொன்னார்
கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'வாயுள்ள ஜீவன்' என்று
கருதுகிறாரா என்று தெரியவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ஒரு
ரூபாய் இரண்டு ரூபாய் சில நிர்வாகச் செலவுகளுக்காக வசூலிக்கப்
படுகிறது. பணக்காரர்கள் வீட்டிலே கால்நடைகளை வீட்டிலே
வைத்து வளர்க்க வேண்டுமென்றால், பாதுகாக்க வேண்டு
மென்றால் சாதாரணமாக பசுவுக்கு 1,095 ரூபாய்; எருமைக்கு
2,090 ரூபாய், ஆட்டுக்கு 550 ரூபாய் செலவாகும். ஏழைகள்
என்ற காரணத்தால் தான் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று
வசூலிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

குறிப்பு.—(ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.)

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர்மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979ஆம் ஆண்டு மார்ச்
மாதம் 24ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு
அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
அவர்கள்மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப
அனுமதி கோரி அறிவிப்பைக் கொடுத்து 1979ஆம் ஆண்டு மார்ச்
மாதம் 27ஆம் நாள் அன்று அதைப் பேரவையில் எழுப்பி,
திரு. சுப்பு அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும்
கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பொள்ளாச்சி குவார்லிடி மில்லில் நடந்த நிகழ்ச்சிகளுக்குக்
கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்பு மேற்கோளாகக் காட்ட முடியாது
என்று தெரிந்திருந்தும், அத்தீர்ப்பின் ஒரு பகுதியை மட்டும்
அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்பது உறுப்பினர்
அவர்களின் குற்றச்சாட்டு: இது அவைக்குத் தரப்பட்ட தவறான
தகவல் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வாதம்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்
விளக்கம் அளிக்கும் வகையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசும்போது அந்த
மில்லில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் காரணமாக இருந்த
80 தொழிலாளர்களைக் கைது செய்யும்படி ஏற்பட்ட
சூழ்நிலையைத்தான் குறிப்பிட்டேன். அமைதியாக உள்ளிருப்பு
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 24 தொழிலாளர்கள் கைது
செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். தொழிலா
ளர்கள் சத்தியாக்கிரகம், வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருக்கும்
போது எந்தெந்த சந்தர்ப்பங்களில் போலீசாரைத் தலையிட
அழைக்கலாம் என்பதுபற்றி குறிப்பிட்டிருந்த கேரள உயர்நீதி
மன்றத் தீர்ப்பு ஒன்றினையும் இது சம்பந்தமாக எடுத்துக் காட்டி
னேன். உயிர் அல்லது உடைமைகளுக்கு உடனடியாக

[பேரவைத் தலைவர்] [1979 ஏப்ரல் 20

ஆபத்து விளையும் என்ற சூழ்நிலையில் அவைகளைத் தவிர்க்கும்
பொருட்டு வேண்டிய அளவு போலீசார் தலையிடலாம். இதே
நியதிதான் குவாலிடி மில் விஷயத்திலும் பின்பற்றப்பட்டது"
என்று விளக்கமாகக் கூறியுள்ளார்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முதலில் திரு. சுப்பு
அவர்கள் கொடுத்தபோது அது சட்டம் ஒழுங்கு பற்றியது
என்பதால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால்
திரு. சுப்பு அவர்கள் மீண்டும் என்னிடம் வந்து, இது தொழிலாளர்
கள் பற்றியது என்றும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்கள் பதில் கூறினால் போதுமென்றும், தொழி
லாளர் நலத்துறை அமைச்சரும் இதற்கு இசைந்திருப்பதாகவும்
தெரிவித்த பிறகே, மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டது.
தொழிலாளர் பிரச்சினை என்று கூறிவிட்டுப் பிறகு, சட்டம்,
ஒழுங்கு குறித்து எழுப்பியதனால் இந்த நிலை ஏற்பட்டது.

ஒரு உயர்நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு ஏற்பத்
தான் அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் கூறு
கிறார். அந்தத் தீர்ப்பு இந்தத் தொழிற்சாலையிலுள்ள
நிலைக்குப் பொருந்தாது என்று திரு. சுப்பு கூறுகிறார். இது
அவரவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாக இருக்கலாம்.
மேலும் ஒரு சாராரின் சட்ட உரிமைகள் பாதிக்கப்படுகிறது
என்று யாரேனும் கருதுவார்களேயானால் அச்சாராருக்கு நமது
அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவர்களது அடிப்படை உரிமை
களைக் காத்துக் கொள்ள நீதிமன்றங்களை அணுகுவதற்கு இடம்
இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் இந்த அவையின் மூலமாகத்
தீர்வு காண இயலாது.

மேலும் இதுபோன்று கருத்து வேறுபாடு எழக்கூடிய பொருள்
பற்றி உரிமை மீறல் பிரச்சினை என்று எடுத்துக் கொள்வோ
மானால், உரிமை பிரச்சினையின் முக்கியத்துவம் குறைந்து விடும்.
எனவே, இந்தக் கருத்தில் கொண்டு மிக முக்கியமான பிரச்சினை
களையே உரிமை மீறல் பிரச்சினைகளாகக் கொண்டு வர வேண்டு
மென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் எந்தவிதமான
அவை உரிமைப் பிரச்சினையும் எழவில்லை என்பது எனது
முடிவு.

1979 ஏப்ரல் 20]

ஆ. மின்சாரத்துறை அமைச்சர்மீது—(தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-ம் ஆண்டு மார்ச்சு
மாதம 31ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு.
அம்பிகாபதி அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
அவர்கள் அவைக்குத் தவறான தகவலை அளித்தார் என்று கூறி
உரிமை பிரச்சினை ஒன்றை அவையில் எழுப்பினார். மாண்புமிகு
மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தனது விளக்கத்தைக்
கொடுத்துள்ளார்.

1979ஆம் ஆண்டு மாரச் மாதம் 17ஆம் நாள் அன்று
அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விளக்கம்
அளிக்கையில், 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10ஆம் நாள்
அன்று இருந்த நிலவரத்தைப் பற்றிய தகவல் அவைக்கு
அளிக்கப்பட்டது என்று கூறியுள்ளார். உறுப்பினர் 1979ஆம்
ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் நாள் அன்று சிலர் கைது செய்யப்
பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனவே, 17ஆம் தேதி
அவைக்குக் கொடுக்கப்பட்ட தகவல் 10ஆம் தேதி இருந்த
நிலையைப் பற்றியதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
வேண்டுமென்றே அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த அறிவிப்புக் கொடுக்கப்பட
வில்லை என்பது தெளிவாகிறது. எனவே, இதில் அவை உரிமை
மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

இம்மாதிரியான நிலைகளில், அவைக்கு எந்தத் தேதியில்
என்ன நிலை
தகவல் கொடுக்கப்படுகிறதோ, அந்தத் தேதியில் என்ன நிலை
என்பதை அரசு விளக்குவது நல்லது. இல்லை என்றால்,
அளிக்கப்படும் தகவல் எந்தத் தேதி நிலவரப்படி என்பதை
அவைக்கு அறிவிப்பது பொருத்தமாக இருக்கும். அவ்வாறு
செய்திருந்தால் இப்பிரச்சினை எழுந்திருக்காது. எனவே, கவன
ஈர்ப்பு அல்லது வேறு பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கும்போது
அத்தகவல் எந்தத் தேதி நிலவரப்படி என்பதையும் சேர்த்துக்
கூறுவது நலமாக இருக்கும் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

சிமெண்ட் தட்டுப்பாட்டினால் லட்சக் கணக்கான கட்டிடத் தொழிலாளர்களின் வேலை இழப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு
உறுப்பினர்கள் திரு. மு. அம்பிகாபதி, திரு. கூ. ச. முருகேசன,
திரு. செ. இராமலிங்கம் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்
துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத்
துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்
திரு. மு. அம்பிகாபதி..

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாட்டில் சிமெண்ட் தட்டுப்பாட்டால் பல லட்சம் கட்டிடத் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள அபாயகரமான நிலையைப்பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை'' க்குறித்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம் மாநிலத்தில்
1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள்வரை சிமெண்ட்
உற்பத்தியாளர்களால் நியமிக்கப்பட்ட விற்பனையாளர்கள்
மூலமே மக்களுக்கு சிமெண்ட் வழங்கப்பட்டு வந்தது. அவ்வப்
போது சிமெண்ட் கலப்படம் செய்வதுபற்றியும் அரசு நிர்ணயித்த
விலைக்கு மேல் அதிகமாக விற்பது குறித்தும் பொது மக்களிட
மிருந்து எண்ணற்ற புகார்கள் வந்தன. தவிர பல்வேறு பகுதி
களிலிருந்தும் சிமெண்ட் போதிய அளவு கிடைக்கவில்லை என்று
அரசுக்குத் தகவல்கள் வந்தன. எனவே சிமெண்ட் பொது
மக்களுக்குத் தாராளமாக, கலப்படம் இன்றி, நிர்ணயித்த
விலையில் கிடைக்க வழிசெய்யும் பொருட்டு சிமெண்ட் விற்பனை
மற்றும் விநியோகத்தை உரிமம் மற்றும் பர்மிட் முறை மூலம்
ஒழுங்குபடுத்துவதற்காக 1955ஆம் ஆண்டு அத்தியாவசியமான
பொருட்கள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்
பட்டு மத்தியஅரசின் அனுமதியுடன் 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு
சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்கு படுத்துதல்)
ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம்
தேதி முதல் அது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

(2) இந்த ஆணையின்படி 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிவரை சிமெண்ட் உற்பத்தியாளர்களால் நியமிக்கப்பட்டு சிமெண்ட் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த விற்பனையாளர்கள் மட்டும் உரிமம் பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். இவர்கள் தவிர, புதிதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொது மக்கள் விநியோக இனத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட தாசில்தார்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் போன்ற அதிகாரிகள் அனுமதி வழங்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(3) ஐந்து மூட்டைகள் மற்றும் அதற்குக் குறைவான
சிமெண்ட் தேவைகளுக்கு அனுமதிச் சீட்டு ஏதுமின்றி தமிழ்நாடு
நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள்
மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. ஐந்து மூட்டை
களுக்கு மேலும் 20 மூட்டைகள் வரையும் தேவைப்படுகின்ற
வர்கள் சொத்து வரி ரசீது அல்லது கிஸ்தி ரசீது போன்றவை
களைக் காண்பித்து அனுமதிச் சீட்டு பெற்று சிமெண்ட்டை
பெறலாம். 20 மூட்டைக்கு மேல் சிமெண்ட் தேவைப்
படுவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பி.இ. (சிவில்) பட்டம் பெற்ற
பொறியாளர் அல்லது சிவில் டிப்ளமோ பொறியியல் தகுதி
யுள்ளாரின் சான்றிதழுடன் கட்டிடத்தின் அங்கீகரிக்கப்பட்ட
வரைப்படத்தின் நகல், கட்டிடத்தின் திட்ட மதிப்பீட்டுகள்
மற்றும் சிமெண்ட் தேவைபற்றிய விவரங்களுடன் விண்ணப்பித்து
அனுமதி சீட்டு மூலம் சிமெண்ட்டை வாங்கிக் கொள்ளலாம்.

(4) இப்புதிய முறையினை அமுல்படுத்துவதில் ஆரம்பக்
கட்டத்தில் சில குறைகள் இருந்தாலும், தற்போது அவைகள்
நீக்கப்பட்டு விநியோக முறை நன்கு செயல்பட்டு வருகின்றது.
சிமெண்ட் அங்காடியில் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டு
டுள்ளதுடன், வெளிச்சந்தையிலும் சிமெண்ட்டின் விலை கணிச
மாகக் குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பர்மிட்டுகள்
காலதாமதமின்றி உடனுக்குடன் வழங்கப்படுவது தான். எல்லா
மாவட்டங்களுக்கும் போதுமான அளவு சிமெண்ட் ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு 1979ஆம் ஆண்டு முதல்
காலாண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த அளவான
3.50 இலட்சம் டன்கள் சிமெண்ட்டில் 2.22 லட்சம் டன்கள்
பொதுமக்கள் விநியோகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி நிலவரப்படி
சிமெண்ட் விற்பனை செய்ய மொத்தம் 4,691 உரிமங்களும்,
49,063 அனுமதி சீட்டுகளும் வழங்கப்பட்டும் உள்ளன. இந்த
இரு மாதங்களில் தமிழ்நாட்டில் எல்லா தேவைகளுக்குமாக
மொத்தமாக வழங்கப்பட்ட சிமெண்டின் அளவு 2 லட்சம்
டன்களாகும்.

(5) சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை சிமெண்டுக்கு
பர்மிட் வேண்டிவரும் பல விண்ணப்பங்கள் மாநகராட்சியால்
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் முதலியவை
இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்ய வேண்டியதாகிறது.
தள்ளுபடி செய்யப்படும் அறிவிப்பின் நகல் ஒன்றினை பர்மிட்
வழங்கும் அதிகாரி மாநகராட்சிக்கும் அனுப்ப வேண்டும் என
மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது
மேற்கொண்டு மாநகராட்சி வரைபடத்திற்கு தனது ஒப்புதலை
வழங்க துரிதமான நடவடிக்கை எடுக்கவும், மாநகராட்சியின்
அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களைத் தடுக்கவும் உதவும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 20

(6) மேற்கூறிய சூழ்நிலையில் நம் மாநிலத்தில் சிமெண்ட் தட்டுப்பாடு ஏதும் இல்லை. ஆகையால் கட்டிடத் தொழிலாளர் கள் அதிக அளவில் வேலையிழந்திருக்கிறார்கள் என்ற கூற்றுக்கு இடமில்லை.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(5) அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஆ பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு பொது விற்பனை வரி(திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மாநகரச் சிறுவழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே 1979ஆம் ஆண்டு மாநகரச் சிறுவழக்கு, நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(6) வரவு-செலவுத் திட்டம், 1979—80—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் : 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 20

'நிதிக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,88,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.'

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யும் நெல்லின் விலையை, கோதுமைக்கு விலை உயர்த்தியதைப் போல் விலை நிர்ணயம் செய்வது குறித்து விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,88,41,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, 500 குடும்பத்திற்கு ஒரு மலிவு விலை கடைகள் வீதம் திறந்து அனைத்து பொருள்களும் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்வது பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,88,41,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

Thiru P. VIJAYARAGHAVAN: Sir, to discuss the need to reduce the wastages in Civil Supplies Corporation godowns, I move

'That the allotment of Rs. 4,88,41,000 under Demand No. 35—Civil Supplies— be reduced by Rs. 100/-'

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கொள்ளை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,88,41,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

1979 ஏப்ரல் 20]

(ஆ) மானியக் கோரிக்கை எண். 21—மீனளம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,44,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

(முற்பகல் 10-10)

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே. வறண்ட பகுதியாகிய திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கே. பரமத்தி, அரவக்குறிச்சி ஆகிய பஞ்சாயத்து யூனியன்களுக்குள் உள்ள மீனவர்களுக்கு இலவச வீடு கட்டி கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 2,44,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, இறாலினை வெளிநாட்டு வியாபாரத்திற்கு மட்டுமின்றி உள் நாட்டிலும் மக்களுக்குக் கிடைக்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,44,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

Thiru P. VIJAYARAGHAVAN: Sir, to discuss the need to construct a Fishing Harbour at Chinna Muthom in Kanyakumari district, I move

'That the allotment of Rs. 2,44,02,000 under Demand No. 21—Fisheries be reduced by Rs. 100/-'

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே. கொள்கை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,44,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே: இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதுண்டான கொள்கை விளக்கக் குறிப்புகள்* ஏற்கனவே மாண்பு மிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகளுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை நல்ல முறையிலேயே முழுமையாகப் படித்திருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது, அவற்றின் மேல், இங்கே நடைபெற இருக்கிற விவாதங்கள் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைக்கின்ற பல்வேறு கருத்துக்களுக்கும் பதில் அளிக்கின்ற வகையில் நான் அரசின் சார்பில் என்னுடைய பதிலை இறுதியில் தருவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே. நுகர் பொருள் வழங்கல், மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நுகர் பொருளில் முக்கியமானது அரிசி. இந்த அரிசியை நாம் உணவாகக் கொள்கிறோம். இதைப் பயிர்செய்யும் விவசாயிகள் அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லையென்று நாடு பூராவும், போராட்டமும், எழுச்சியும் கொண்டிருப்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அரசுக்கும் விலையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது. இருந்த போதிலும் அவர்களால் நெல்லின் விலையை அதிகரித்துக் கொடுக்க முடியவில்லை. காரணம், அவர்கள் மத்திய அரசின் அனுமதியின்றி விலையை அதிகரித்துக் கொடுக்க முடியாது. என்று கொள்கை விளக்கப் புத்தகத்திலே போட்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு எப்படி நடக்கிறது என்றால், மாற்றாந்தாய் மனப் பான்மையுடனும், ஒர வஞ்சனையுடனும் நடக்கிறது என்பது

(*897 947 ஆம் பக்கத்தில் இணைப்பு III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

கொள்கை விளக்கப் புஸ்தகத்தைப் பார்க்கும் போது நன்றாகத் தெரிகிறது. காரணம், சென்ற 1978—79-ல் நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 85-யும், அதே நேரத்தில், கோதுமைக்கு ரூ. 112.50 யும் விலை நிர்ணயம் செய்தது. நமது அரசு நெல்லின் விலையை அதிகரிக்கவேண்டுமென்று பல முறை மத்திய அரசுக்குக் கோரிக்கை விட்டும், அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கிறது..........

திரு. ர. ஜெபமணி : பாய்ண்ட் ஆப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, ஏதோ மத்திய அரசு நெல் விலையைக் குறைத்து நிர்ணயித்து விட்டது. ஆகவே, மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டுகிறது என்று சொன்னாரே, இதற்கு முன்னாலிருந்த மத்திய அரசு நிர்ணயித்திருந்ததை, இப்பொழுதுள்ள மத்திய அரசு குறைத்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : அன்றைக்கிருந்த நிலைமையிலே விலைவாசிகள் என்ன, இன்றுள்ள நிலைமையிலே விலைவாசிகள் என்ன என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லை ஜெபமணி அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இது பேரவை. என் அனுமதியில்லாமல் பேசுவது முறை அல்ல. தயவு செய்து பேசுபவரைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

* திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : இந்த விலையை நிர்ணயிக்க விவசாய விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக்குழு என்ற ஒன்றிருக்கிறது. இதே ஆணைக்குழு 1979—80-க்கு கோதுமைக்கு குவிண்டாலுக்கு ரூ. 115 விலை நிர்ணயம் செய்திருப்பதாக இங்கே நமக்கு கொடுக்கப்பட்ட புஸ்தகத்தில் காணப்படுகிறது. நெல்லின விலையை அதிகப்படுத்தாததற்கு மாத்திரம் என்ன காரணம் என்று புரியவில்லை. இதிலிருந்து நமது அரசு தப்பித்துக் கொள்ள முடியும் என்று நினைக்கக்கூடாது. நெல்லின் விலையை அதிகரித்தால்தான் விவசாயிகள் வாழ்வு நன்றாக இருக்க முடியும். அது இந்த அரசுக்கும் நன்றாகத்தெரியும்.

மேலும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய அரசு நடந்துக் கொள்கிறது என்று குறிப்பிட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். அதே

கோதுமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆண்டொன்றுக்கு 300கோடி ரூபாய் மானியம் வழங்கியிருக்கிறது, ஆனால் நமது அரசுக்கு நெல்லுக்கு எந்த விதமான மானியமும் வழங்கப்பட வில்லை.

அரிசியின் விலை இப்பொழுது கிலோ 1·60; நெல்லுக்கு அதிக விலை கொடுத்தால், இந்த அரிசியின் விலையும் அதிகமாகும். அதனால், அப்படி அதிகமாவதை மக்களுடைய தலைமேல் ஏவக் காமல் மானியம் ஆக மத்திய அரசிடம் இருந்து பெற்றுக்கொண் டிருக்க வேண்டும். ஆண்டுதோறும் 42 கோடி ரூபாய் மானிய மாக மத்திய அரசு கொடுத்தால்தான் நெல்லின் விலையை அதிகப் படுத்த முடியும் என்று சொல்லப்படுகிறது. அந்த 42 கோடி ரூபாயை ஏன் மத்திய அரசு தமிழகத்திற்கு கொடுக்க மறுக்கிறது என்பதற்கான காரணம் தெரியவில்லை. ஆனால் கோதுமைக்கு 300 கோடி ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த நேரத்தில் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேறு எந்தப் பொருளாக இருந்தாலும் சரி அந்தப் பொருளை உற்பத்தி செய்பவன் தான் அதற்கான விலையை நிர்ணயம் செய்கிறான். குண்டூசி, ஊசி முதல் வேறு எந்தப் பொருள்களை வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், அவைகளை உற்பத்தி செய்பவன்தான், அதற்கான விலையை நிர்ணயம் செய்கிறான், ஆனால் விவசாயிக்கு மாத்திரம், அவன் உற்பத்தி செய்கிறபொருள் களுக்கு நெல்லாக இருந்தாலும் சரி, கரும்பாக இருந்தாலும் சரி, வாழையாக இருந்தாலும் சரி, தேங்காயாக இருந்தாலும் சரி, அத னுடைய விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரமோ பொறுப்போ விவசாயியிடம் இருப்பதில்லை. விலைநிர்ணயம் செய்யும் பொறுப்பு வேறு ஒருவரிடம் இருக்கிறது. என்றைக்கு தான் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கிற உரிமை விவசாயிகளுக்கு கிடைக்கின்றதோ அன்றைக்குத்தான் அவன் வாழ்க்கையும் இந்த நாட்டினுடைய வாழ்க்கையும் நல்லவிதமாக அமையும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவர்கள் அவைகளை எந்த முறையிலே விலை நிர்ணயம் செய்வது என்பதை அரசு முடிவு எடுக்க வேண்டும். ஆனால், அரசோ நாங்கள் அதிகமாக கொடுத்துவிட்டால் ரிசர்வு பாங்கி லிருந்து பொருள்களை கொள்முதல் செய்வதற்காக கடனாக கொடுக்கப்படும் 110 கோடி ரூபாயை கொடுக்கமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். நெல்லின் விலையை தமிழ்நாடு அரசே அதிகப்படுத்தினால், தமிழ்நாடு அரசுக்கு கொள்முதல் செய்யப் படுவதற்காக கொடுக்கப்படும் மானியத்தை மத்திய அரசு கொடுக்காமல் நிறுத்தி விடும்; இதனால்தான் நாங்கள் நெல்லின் விலையை அதிகரிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்கு எப்படித்தான் முடிவு செய்வது என்னதான் செய்வது என்பது பற்றி ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா

ஏதாவது முடிவு அவசியம் செய்யத்தான் வேண்டும். நெல்லின் விலையை அதிகரிப்புச் செய்தால்தான் இந்த அரசு ஓரளவாவது நீடிக்க முடியும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன.

மேலும் விவசாயிகளைப் பொருத்த வரையில் சிறு விவசாயிகள் பெருவிவசாயிகள் என்று பாகுபாடு செய்திருக்கிறார்கள். இதிலே பாகுபாடு எதற்கு? இதிலே பாகுபாடு செய்ய வேண்டிய அவசியம் என்ன? சிறு விவசாயிகள் சிறு அளவில் கடன் வாங்கு கிறார்கள், பெரிய விவசாயிகள் பெரிய அளவில், அதிக அளவில் கடன் வாங்குகிறார்கள். உண்மையிலேயே பெரிய விவசாயி யார் எனறால் கடன் வாங்காமலேயே யார் விவசாயம் செய்கி றார்களோ அவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்று சொல்வேன்.

சிறிய விவசாயிகளுக்கு கொஞ்ச நஷ்டம் ஏற்பட்டால் பெரிய விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. அதைக் கருத்தில் கொண்டு சிறிய விவசாயியாக இருந்தாலும், பெரிய விவசாயி யாக இருந்தாலும் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சலுகைகளை கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த அரசு வந்தபிறகு ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்வதற்கு இருந்த தடையை எல்லாம் நீக்கியிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கிவிடுவதினால் விவசாயிகளுக்கு என்ன லாபம் என்று தெரியவில்லை. வேண்டு மானால் வியாபாரிகள் லாபம் அடைவார்கள். வியாபாரிகள் அதிக அளவில் கொள்முதல் செய்து வைத்திருந்தால் தடையை நீக்கி விட்டதினால் அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று அதிக லாபத்திற்கு விற்பார்கள். அதிக லாபம் அடைவார்கள். அவர்கள் வாங்கியதை விட பன்மடங்கு லாபம் கிடைத்ததே என்று அதில் ஒரு பகுதியை விவசாயிகளுக்கு கொண்டு வந்து கொடுக்கவா போகிறார்கள்? ஆகையினால் லாபம் வியாபாரிகளுக்குத்தான்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் தலைமை)

[முற்பகல் 10-20]

கோதுமையை உபயோகிக்கவேண்டும் என்று அறிவுரை சொல் கிறார்கள், எல்லாருமே கோதுமையை, கோதுமைப் பொருள் களை உபயோகிக்க முடியாது. ஏழை எளிய மக்கள் அரிசியைத் தான் நம்பி இருக்கிறார்கள். கோதுமைப் பொருள்களை அவர்கள்

கண்டிப்பாக உபயோகிக்க முடியாது. வசதி உடையவர்கள் தான்
அதை உபயோகிக்க முடியும். அந்த வசதி அவர்களுக்கு இல்லை
என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.
ஆகவே, அரிசி அதிகம் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

இங்கே இப்போது அதிகமாக வாட்டி வதைத்துக்
கொண்டு இருக்கும் பிரச்னை மண்ணெண்ணை தான், ஏழை
களாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி
அனைவரும் அதன் தேவையை நம்பியிருக்கிறார்கள். அந்த
விநியோகத்தில் அரசாங்கம் சரியான கவனம் செலுத்தவில்லை
என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில் போளூர்
பஸ் விபத்தில் 13 பேர் இறந்து இருக்கிறார்கள். அதற்குக்
காரணமே மண்ணெண்ணையை அந்த பஸ்ஸில் இருந்தவர்கள்
வைத்து இருந்தார்கள் என்பதாகும். அந்த மண்ணெண்ணெய்
அந்த பஸ்ஸில் எடுத்துச் செல்லவில்லையென்றால் அந்த 13 பேர்
இறந்து இருக்க மாட்டார்கள். மக்கள் எங்கேயாவது சென்று,
கிடைக்கிற இடத்தில் இருந்து மண்ணெண்ணை வாங்கி வந்து
விடவேண்டும் என்ற ஆர்வத்தில் இப்படி பஸ்ஸில் வருகிறபோது
விபத்து ஏற்பட்டதால் தீப்பிடித்து அவர்கள் இறந்து இருக்
கிறார்கள்.

நகரங்களில் 6 லிட்டர் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்
கள். இப்போது சென்னையில் இருக்கும் பெண்கள் சங்கம் கூடி
கிட்டத்தட்ட 23 லிட்டர் அவர்களுக்கு தேவை என்று சொல்லி
யிருக்கிறார்கள், கிராமங்களிலே விளக்கு எரியத்தான் அதிக
மான அளவில் உபயோக்கிறார்கள். உணவு தயாரிக்க அவர்கள்
கிராமங்களில் பயன்படுத்துவது இல்லை. கிராமங்களில் வாரத்
திற்கு 1/2 லிட்டர் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 1/2
லிட்டர் எப்படிப் போதும் என்று எனக்குத் தெரியவில்லை. நகரில்
கார்ட் சிஸ்டத்தில் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். கிராமங்
களிலும் அதுபோல் உடனடியாகக் கொடுக்கவேண்டும். காரணம்
என்னவென்றால், கிராமங்களில் இந்தச் சமயம் போய் இருந்த
போது பார்த்தேன்—ஏராளமான பேர் கியூ வரிசையில்
நிற்கிறார்கள். அவர்கள் 1/2 லிட்டர் வாங்க மணிக்கணக்கில் நிற்க
வேண்டியிருக்கிறது. ஆகவே, தான் கார்ட் சிஸ்டத்தில் கொடுக்க
வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

டீசலைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது—
என் வீட்டிற்குப் பக்கத்திலே பெட்ரோல் பங்க் இருக்கிறது. நான்
போய் இருந்தபோது என்னிடத்தில் வந்து எல்லோரும்
கேட்டார்கள்......

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேர
வைத் மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த அவையில் டீசல்
தட்டுப்பாடு பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசப்பட்டு இருக்
கிறது. ஏதோ டீசல் வழங்குகின்ற அதிகாரம் உணவுத் துறையின்
கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது என்ற தவறான எண்ணம்
மாண்புமிகு உறுப்பினர்களின் மத்தியில் இருக்கிறது என்று நான்
நினைக்கிறேன். டீசல் விநியோகிக்கும் உரிமை உள் துறையில்—
ஹோம் டிப்பார்ட்மென்டில்—இருக்கிறது. உணவுத் துறையில்
இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். ஆகவே, டீசல் தட்டுப்பாடு பற்றி இங்கே
அவர்கள் எடுத்துச்சொல்வதன் மூலமாக எந்த விதமான பதிலை
யும் நான் அளிக்க வசதியில்லை என்பதை நான் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருவது நலமாக இருக்கும் என்று கருது
கிறேன்.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: நன்றி. நீங்கள் அதற்கு
பொறுப்பு இல்லையென்றாலும். வேறு ஒரு அமைச்சர் அதற்குப்
பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிறார். ஆகவே, நிலைமையை
எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை.
அவர்கள் 5 லிட்டர் டீசல் வேண்டும் என்று கேட்டால் 1/2 லிட்
டர் எண்ணை வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதற்கு
தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

நியாய விலைக் கடைகள் திறந்துள்ளது பற்றி அவர்கள்
பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள், ஆனால் சில இடங்
களில் வியாபாரமே நடப்பதாக தெரியவில்லை. சும்மா உட்
கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அதை எப்படி ஆரம்பித்து
இருக்கவேண்டும் என்றால். எந்தக் கிராமத்தில் தேவை என்று
சொல்கிறார்களோ அந்தக் கிராமத்தில் நியாயவிலைக்கடைகள்
ஆரம்பித்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும். பாபநாசத்தில்
23 நியாயவிலைக் கடைகள் திறந்து இருக்கிறார்கள். அங்கே
விற்கும் விலையை விடக் குறைவாக வேறு இடங்களில் கிடைப்
பதால் ஜனங்கள் அங்கே போய் சாமான் வாங்குகிறார்களே தவிர,
நியாயவிலைக்கடைகளில் வந்து யாரும் வாங்குவது இல்லை.
மேலும் சிறப்பங்காடிகளில் எல்லாம் விலை குறைவாக
சாமான் கிடைக்கிறது என்று சொல்கிறார்களே தவிர அது உண்
மையாக இல்லை. அது இந்த அமைச்சரின் கண்காணிப்பில்
இல்லை என்றாலும், எதற்காக அங்கே சிறப்பங்காடி திறக்கப்
பட்டு இருக்கிறது என்றால், பொதுமக்களுக்கு சகாயமான விலை
கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் அதைவிட சாமான்கள் விலை குறை
வாக வாங்கலாம் என்றால் சிறப்பங்காடி தேவை இல்லை என்
பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்,

எங்கள் ஊரிலே சந்திரசேகரன் கூட்டுறவுப் பண்டகசாலை
என்று ஒன்றிருக்கின்றது. அது ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ
35 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் அங்கே ஒரு பத்து,
பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஸ்டோரிலே சாமான்கள்
நல்லவிதமாகவும் விலை செளகரியமாகவும் கிடைக்கும். அங்கே
விற்கின்ற விலைக்கு வெளியிலே வாங்க முடியாது. அந்த அள
விற்கு விலை சகாயமாகக் கிடைக்கும். ஆனால் இப்போது
அது என்ன நிலைமையில் இருக்கின்றது என்றால் அங்கே
சாமான்கள் வாங்குவதைவிட விலை குறைவாக வெளியே சகாய
மாக வாங்க முடிகிறது. நான் அரசாங்கத்தை ஒன்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்......

__மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):__
சீக்கிரம் முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

__திரு. நா. சுந்தரராஜ்:__ சார். பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த
அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருந்து விவாதத்தை ஆரம்
பிக்கின்றபோது அதிகமான நேரம் எதிர்க்கட்சிக்குக் கொடுக்க
வேண்டும்.

__மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்):__
15 நிமிடம் கொடுக்கப்பட்டது. முடிந்துவிட்டது.

__திரு. நா. சுந்தரராஜ்:__ தலைவரவர்களே. நாங்கள் 25
பேர் இருக்கிறோம். ஆகவே எங்களுக்கு அதிகமான நேரம்
கொடுக்கப்படவேண்டும்,

__மாண்புமிகு மாற்றுத்தலைவர்:__ கொடுத்த நேரம் முடிந்து
விட்டது. உட்காருங்கள்,

__திரு. நா. சுந்தரராஜ்:__ தலைவரவர்களே. தாங்கள் அவை
யிலே புதிதாக வந்து உட்கார்ந்துகொண்டு ஏதோ செய்வது
நன்றாக இருக்காது,

__மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்):__
15 நிமிடம் தான் அவருக்கென்று நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு
மேல் 2 (இரண்டு) நிமிடம் கொடுத்தாகிவிட்டது. இன்னும்
நிறையப்பேர் பேச வேண்டி இருக்கிறது. சரி 1 நிமிடத்தில்
முடித்துவிடுங்கள்.

__திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:__ தலைவரவர்களே, நான்
இந்தச் சந்தர்ப்பத்திலே அரசைக் கேட்டுக்கொள்வது கண்டிப்
பாக இந்த நுகர்ப்பொருள் கழகக் கடையில் மற்ற இடங்களை

விடக் குறைவான விலை இருக்க வேண்டும். மற்ற கடைகளை விடக்
குறைவாக இருந்தால்தான் அங்கு சென்று சாமான்களை வாங்க
முடியும். ஆகவே குறைவான விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடு
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீனவத்தைப் பொறுத்தவரையில் கடலில் மீன் பிடிப்
பது, என்ற ஒருவகையும், உள்நாட்டிலே மீன் பிடிப்பது என்ற
ஒரு வகையும் ஆக இரண்டு வகையிலே இந்த மீன்பிடித் தொழில்
நடைபெறுகிறது. ஆகவே, கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்
களுக்கு எந்தெந்த வகையிலே செளகரியங்கள் செய்து கொடுக்
கிறீர்களோ அந்தமாதிரி உள்நாட்டிலே மீன் பிடிக்கின்ற மீனவர்
களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். அவர்
களுடைய குழந்தைகள் படிப்பதற்கு வசதி, வீட்டு வசதி, மற்ற
நிதி வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

__மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):__
இன்று காலையில் கேள்வி நேரத்தில், கேள்வி எண். 743-க்குத்
துணை வினா கேட்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு.
உமாநாத் அவர்கள் கூறிய கீழ்க்கண்ட வாக்கியம் அவைக் குறிப்
பிலிருந்து நீக்கப்பெறுகிறது. பத்திரிகைகளிலும் வரக்கூடாது
என்று அறிவிக்கிறேன்.

* * * என்ற வாக்கியம்
நீக்கப்பெறுகிறது.

*__திரு. ந. தனசேகரன்:__ மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, உணவு, மீனவம் ஆகிய மானியங்களின்மீது
என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு எனக்கு அளிக்
கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு நான் முதற்கண் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுத் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய
ஆட்சிப் பொறுப்பை புரட்சித்தலைவரவர்கள் ஏற்ற பிறகு
எந்த ஒரு சங்கடமான நிலைமையும் இல்லாத நிலைமையில்,
அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு உணவு அமைச்
சர் திரு. எட்மண்ட் அவர்கள் உணவுத்தட்டுப்பாடு இல்லாத நிலை
மையிலே கடந்த இரண்டாண்டுகாலமாக பார்த்து வருகிறார்.
எந்த ஒரு பகுதியிலேயும் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டாலும்
அதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கு எந்த நேரமும் ஆயத்
தமாக இருக்கின்ற ஒரு நிலைமையிலே ஆட்சியை நடத்திக்கொண்
டிருப்பதை நான் உள்ளபடியே மெத்த பெருமையோடு பாராட்
டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(*) மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க
பக். 759-ல் அகற்றப்பெற்றது.

[திரு. ந. தனசேகரன்] [1979 ஏப்ரல் 20

அதேநேரத்தில் மீனளத் துறையைப் பொறுத்தவரை பாராட்டுவது எந்த அளவிற்கு இருக்கிறதோ, எந்த அளவிற்கு பாராட்டு பெறக்கூடிய அளவிற்கு மீனளத்துறை அமைச்சரவர் கள் நடத்திக்கொண்டிருக்கிறார்களோ அந்தப் பாராட்டு கிடைக் கின்ற அதேநேரத்தில் ஒன்றிரண்டு குற்றச்சாட்டுக்களையும், குறைபாடுகளையும் மீனவப்பெருங்குடி மக்களின் சார்பாக எடுத்து வைப்பது இந்த நேரத்தில் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10-30]

மீன் பிடித்தலைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 30 ஆண்டுக் காலமாக பல்வேறு வகையான முன்னேற்றங்களைச் செய்ய வேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மேடைதோறும் பேசினார்களே தவிர, முறை யாக மீனவப் பெருங்குடி மக்களுக்கு மீன் பிடிப்பதற்கு நவீன முறைகளைக் கற்பித்தார்களா என்றால், இல்லை. இதுவரையும் இல்லை என்று சொல்லித்தான் ஆகவேண்டும்.

இன்றையதினம் நமது புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, புதிய முறைகளை கையாள வேண்டும் என்ற எண்ணத்தை மனதிலே தேக்கி, அந்த முறைகளைக் கையாள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு, கண்ணாடிப் படகுகள் என்ற நூதனப் படகுகள், விசைப் படகுகள் ஆகியவைகளை அறிமுகம் செய்வதற்கு முயற்சி களை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கண்ணாடிப் படகுகளை அளிப்பதன் மூலமாக விசைப் படகுகளுக்கும், கட்டு மரப் படகுகளுக்கும் இடையே நடைபெற்ற தகராறுகளைத் தீர்க்கும் முறையில் சாதாரண ஏழை எளிய மக்கள் உபயோகப் படுத்தும் கட்டுமரப் படகுகளை உபயோகப்படுத்தும் மீனவர் களுக்கு ரூ. 20,000. ரூ. 22,000 பெறுமானமுள்ள கண்ணாடிப் படகுகளையும், விசைப் படகுகளையும் உபயோகப்படுத்தக்கூடிய அளவுக்கு இன்றைக்கு புதியதோர் திட்டத்தை இந்த தமிழக அரசு, புரட்சி தலைவர் அவர்கள் தலைமையில் தீட்டியிருக்கிறது. அப்படி வழங்கப்படுகின்ற படகுகளுக்கு இந்த தமிழக அரசு ரூ. 10,000 மான்யமாகவும் அதே நேரத்தில் மீதமுள்ள ரூ. 10,000 கடனாகவும் தருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மான்யமாகக் கொடுக்கின்ற பணத்தை ஏற்றுக்கொண்டு, அந்த மீனவர்கள் இதுவரையிலே முறையாகச் செயல்பட்டார்களா என்றால், அது சந்தேகத்திற் குரிய விஷயமாக இது வரையிலே இருக்கிறது. எனவே, மான்ய மாக அளிப்பதைவிட, அந்தத் தொகைக்கு செகியூரிடியாக நாம் வங்கிக்குச் செலுத்தி, மீதமுள்ள பணத்தை அவர்கள் செலுத்தி விட்டப் பிறகு அந்தப் படகுகளை அவர்களுக்கு உரிமையாக்க

1979 ஏப்ரல் 20] [திரு. ந. தனசேகரன்]

வேண்டும். அந்த அளவுக்கு ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கும் படகுகள் எல்லாம் ஒரு காலத்திலே கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைவராக இருந்தவர் 7, 8, 10 படகுகள் தலைக் குச் சொந்தமாக்கிய விந்தையை கடந்த ஆட்சி காலத்தில் பார்த் தோம். நமது அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே மீனவப் பெருங்குடி சந்ததியினர் மேல் அக்கறை எடுத்துக்கொண்டு, அவர்கள் நல்ல முறையிலே வாழவேண்டும் என்கிற காரணத்தால் கூட்டுறவு சங்கங்களிலும் உண்மையான முறையிலே மீனவர்களை ஈடுபடுத்த வேண்டும். உண்மையான மீனவர் கூட்டுறவு சங்கங் கள் இருந்தால்தான், அந்த மீனவர்கள் தங்களுக்கு நன்மையை உண்டாக்கிக் கொள்ள முடியும், தங்களுக்கான சலுகைகளை எதிர்பார்க்க முடியும். அப்போதுதான் பெரும்பாலான இந்த சாமான்ய மீனவர்களுக்கு அந்த நன்மைகள் போய்ச் சேரக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஏறத்தாழ 42,000 படகுகள், கட்டுமரங்கள் மூலமாக கிடைக்கக் கூடிய மீன்கள் 65 சதவீதம். விசைப் படகுகளின் மூலமாக கிடைக்கக்கூடிய மீன்கள் 35 சதவீதம். நாட்டுப் படகு கள் மூலமாக அதிகமான மீன்கள் பிடிக்க வசதியிருந்தாலும், இன்றையதினம் அவர்களுக்கு சலுகைகளை அதிகமாக செய்ய வேண்டுமென்று எண்ணினாலும், அந்தச் சலுகைகள் அவர்களுக்கு முறையாகப் போய்ச் சேரவில்லை.

மீன்பிடி சாதனங்களைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே உள்ள கடலோரப் பகுதிகளில் நவீன மயமாக்கப்பட்டிருக்கின்றதா என்றால், இல்லை என்று சொல்லவேண்டும். ஒரு அறிஞன் சொல்லியிருக்கிறார். ஏறத்தாழ 70 சதவீதம் தமிழகக் கடலிலே வயோதிக மீன்கள் வயோதிகம் காரணமாக செத்து மடிந்து விடுகின்றன என்ற உண்மையை சொல்லியிருக்கிறார். 30 சதவீதம் மீன்களைத் தான் தமிழக கடலோரங்களிலே உள்ள மீனவர்கள் கொண்டு வரக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். 70 சதவீதம் மீன்களை யும் கொண்டு வரக்கூடிய அளவில் நாம் முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும்.

சமீபத்திலேகூட, ஜப்பான் நாட்டிலிருந்து விசைப் படகு களிலே வந்து தமிழக கடலோரப் பகுதிகளிலே மீன் பிடித்த தாகச் சொல்லப்பட்டது. அந்த ஜப்பான் நாட்டு மக்கள் அந்த 70 சதவீதம் மீனைப் பிடிப்பதற்காகத் தான் இங்கே வருகின்றார் கள். அந்த மீன்களைத் தமிழக மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு, நவீன முறைகளை நாம் கையாள வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

[திரு. ந. தனசேகரன்] [1979 ஏப்ரல் 20

மீன் வலைகளைப் பொறுத்தவரையில், இரண்டு வகையான
மீன் வலைகளை உபயோகித்து வருகிறார்கள். கட்டுமரத்தில்
போகின்றவர்கள் ஒரு வகையான மீன் வலையையும், ஆழ்கடலில்
போய் மீன் பிடிக்கின்றவர்கள் மடி என்ற ஒரு வகை மீன் வலை
யையும் உபயோகித்து வருகிறார்கள். ஜப்பான் நாட்டை எடுத்
துக் கொண்டால், 27, 30 வகையான மீன்பிடி வலைகளை உபயோ
கித்து வருகிறார்கள். அதன் மூலம் அதிகமான அளவில் மீன்
பிடித்து வருகிறார்கள். அதேபோன்று அதிகமான வகை வலை
களையும் நாம் பயன்படுத்த வழிவகை செய்யவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று உள்நாட்டு மீன் பிடிக்
கின்ற முறையில், அரசு குளங்களிலிருந்து மீன் பிடிப்பதற்கு
மீனவர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கிறார்கள். அப்படி குத்த
கைக்கு கொடுக்கிற போது, குளங்களை குத்தகைக்கு மீனவர்
கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று அரசு ஆணை
இருக்கிறது. ஆனால் இதில் விந்தை என்ன தெரியுமா? குளங்
களில் மீன் பிடிக்கின்ற குத்தகை விடுவதை எடுத்துக்கொண்டால்
அதுவும் அந்தக் குத்தகை பெரிய புள்ளிகள் இருக்கின்ற மீனவ
கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் போய் சேருகின்றது. அரசாங்
கத்திலிருந்து மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த குத்தகை
கொடுக்கப்படுகிறது என்று மீனவர்களுக்கு தம்பாசை காட்டுவது
போல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பல
வேறு இடங்களில் சுட்டிக்காட்டி பேசி, இவற்றையெல்லாம்
மாற்றி புதிய சங்கங்களை அமைக்கவேண்டும் என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். இதை துரிதமாக செயல்படுத்தி, புதிய
மீனவ கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நீர்த்தேக்கங்களைப்
பொறுத்தவரையில், இந்த ஆண்டு 18 லட்சத்து 14 ஆயிரம்
ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீர்த் தேக்கங்களி
லிருந்து மீன் பிடிப்பதில் உள்ள வருமானத்தைப் பார்த்தால்
கடந்த காலங்களில் கேவலமான முறையில் மிக குறைந்த அளவில்
தான் விற்பனை செய்யப்பட்டு வந்தது. பஞ்சாயத்து மூலம்
ஏலங்கள் மூலமாக மீன்களை விற்பனை செய்கிறார்கள். இப்
போது நல்லமுறையில் வருமானம் வந்து கொண்டிருக்கிறது.
அதிலும் கூட, இன்னும் நல்ல முன்னேற்றம் காண வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி
திட்டத்தின் மூலமாக உள்நாட்டு மீனவர்களுக்கு வலைகள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்
டிருக்கின்றன. இப்படிப்பட்ட பல உதவிகள் வழங்கப்பட்டிருக்
கின்றன. இதற்காக பாராட்டுதலை தெரிவிப்போம். இப்
போது முக்கியமாக தர்மபுரி மாவட்டத்தில் மீன் குஞ்சுகளை
வளர்ப்பதற்காக 1 லட்சத்து 32 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியிருப்பது
பாராட்டுதற்குரியது. இதை நல்ல முறையில் செயல்படுத்த
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 20] [திரு. ந. தனசேகரன்]

மீனவர்கள் தங்கள் வாழ்வை வளமாக வைத்துக்கொள்வதற்
பல திட்டங்களைப் போடுகின்ற நேரத்தில் பெரும் முதலாளிகள்
நல்ல லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். உயர் ர
மீனாக இருக்கின்ற இறால் இன்று கிலோவுக்கு 96 ரூபாய் என்ற
விலை இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இதன் விலை
கிலோவுக்கு 32 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை என்ற அளவில்
இருந்து வந்தது. 32 ரூபாய் அளவுக்கு இருந்தது இன்றைக்கு 96
ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று சொன்னால் இந்த ஆட்சி
பொறுப்பேற்ற பிறகு தான் மீனவ பெருங்குடி மக்களுக்கு
உண்மையிலே நல்ல வழிவகையை வகுத்து கொடுத்திருக்கிறது
என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
அதேபோல், இறால் மீன்களை ஏற்றுமதி செய்யப்பட்டு வரு
வதைப்பற்றி இந்த மாமன்றத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்
கிறது. நல்ல அன்னிய செலாவணியை ஈட்டித் தரக்கூடிய அள
வுக்கு இறால் மீன் ஏற்றுமதி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே
இதை அரசே இதை ஏற்றெடுத்துக்கொள்ள வேண்டும் என்றக்
கருத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இயந்திரப் படகுகளைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ
இன்றைக்கு இதுவரை அரசாங்கம் பதிவு செய்யவேண்டும் என்று
சொல்லப்பட்டிருப்பதற்கு இணங்க இதுவரை 253 படகுகள் பதிவு
செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக கடலோரப் பகுதி
களில் செல்லுகின்ற இயந்திரப் படகுகளின் எண்ணிக்கையில்
இது 20 சதவீதம் தான் இருக்கும் என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக முக்கியமான பிரச்னை சங்கு, முத்து
சங்கைப் பொறுத்த வரையில் முதல் சட்டமன்றத் தொடர்
கூட்டத்திலே அமைச்சர் அவர்கள், இதை நாட்டுடைமையாக்கும்
முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாக சொன்னார்கள். இன்
றையதினம் அங்கு சங்கு குளிக்கும் தொழிலாளர்களின் கோரிக்
கைக்கு ஏற்ப நமது அமைச்சர் அவர்களும் புரட்சித் தலைவர்
அவர்களும் அவர்களது வேண்டுகோளை ஏற்று அதற்கேற்ற விலை
களை சங்குகளுக்கு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். மேலும்
சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு தேவைப்படும் காலணிகள்,
முகமூடி போன்றவைகள் தரப்படவேண்டும் பல முறை எடுத்துச்
சொல்லியிருக்கிறோம். அதை உடனடியாக செய்து தரவேண்டும்
என்று இப்போது மீண்டும் ஒரு முறை வற்புறுத்திக் கூற நான்
ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 10-40]

சங்கு குளிக்கும் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள்
சுறா மீன்களாலும், இன்னும் பெரிய மீன்களாலும் கடிப்பதற்கு
ஆளாகி, கால்களை இழந்தவர்களாகவும், கைகளின் பகுதிகளை

இழந்தவர்களாகவும், இத்தகைய விபத்துக்களுக்கு ஆளாகியிருக்
கிறார்கள். எப்படி பேருந்துகளிலே செல்லுகின்றபோது, ஓட்டு
நர்களும், நடத்துனர்களும் ஒரு அபாயத்திற்கு ஆளானால், அவர்
களுக்கு உதவித் தொகை தருகின்றார்களோ, அதேபோல் இந்த
சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை தரப்பட
வேண்டும். அதேபோல், அவர்கள் உயிரிழந்தால் சர்க்கார்
ரூ. 10,000 அவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுப்பதாக அறி
வித்திருக்கிறார்களோ, அந்த உதவியை இந்தத் தொழிலாளர்
களுடைய குடும்பத்திற்கும் அளிக்க வேண்டும் என்று நான் இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், வலம்புரி
சங்கை கொண்டுவரும் மீனவர்களை உற்சாகப்படுத்தும் வகை
யிலே, எப்படி அரசாங்கத்திலே லாட்டரி சீட்டின் மூலம் ஒரு
பெரிய தொகை கிடைக்கின்றதோ, அதைப்போல் அந்தச் சங்கின்
மொத்த விலை என்ன விலைக்கு விற்கப்படுகின்றதோ, என்னவோ
அதிலே 75 சதவீதம் இந்த மீனவர்களுக்குத் தரவேண்டும்.
அப்படித் தரவேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்த நேரத்
திலே எடுத்துவைக்க ஆசைப்படுகிறேன்.

செயற்கை முத்து தொழிற்சாலை எத்தனை மாவட்டங்களிலே
தயாரிக்கின்றார்கள், எப்படி அந்தத் தொழிற்சாலை வளர்ச்சி
யடைகின்றது என்பதையெல்லாம் கண்கூடாகப் பார்க்க முடிய
வில்லை. செயற்கை முத்துத் தொழிற்சாலை அந்த அளவிற்கு
அது மத்திய சர்க்காரோடு இணைந்திருக்கின்ற காரணத்தினால்
இந்த முறையை மாற்றியமைத்து, தமிழகத்திலேயே செயற்கை
முத்து தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்து நடத்த வேண்
டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்பு
கிறேன். இயற்கை முத்துக் குளிப்பு 1961 ஆம் ஆண்டு கடைசி
யாக கடலில் முத்துப் சிப்பி எடுக்கப்பட்டு, அதற்குப் பின்
இதுவரையிலும் எந்தப் பகுதியிலும் முத்து வளரவில்லை என்று
சொன்னால், அது விந்தையாக இருக்கிறது. எனவே, இதிலே
அரசு முறையாக ஆய்வு நடத்தி, எந்தப் பகுதியிலே இந்த
முத்துச்சிப்பி வளருகின்றது என்பதை மனதிலே தேக்கி, இதிலே
முறையாக ஆய்வு நடத்தி, முத்துச்சிப்பி எடுத்தால், தமிழகத்
தின் பொருளாதார வளர்ச்சி அடையும், அடையச் செய்ய
வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் பகுதியில் மீனவர்களுக்கு குடியிருப்பு
வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்ற சட்டமன்ற உறுப்
பினர் அண்ணன் சிகாமணி அவர்களின் கருத்தைச் சொல்லி
அவைகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். வட சென்னையில் அமைக்க இருக்கும் சமுதாய நல
கூடத்தை எண்ணூரிலோ அல்லது திருவொற்றியூரிலோ அமைக்
கப்பட வேண்டும் என்ற அவரது கோரிக்கையையும் எடுத்து
வைக்க விரும்புகிறேன். கடலோர அரிப்பைத் தடுப்பதற்காக,
திருவொற்றியூரிலிருந்து எண்ணூர்வரை தடுப்புச் சுவர் கட்டும்
வேலை காலதாமதமாகி வருவதால், அதையும் உடனடியாக
அமைத்துத் தர வேண்டும் என்பதை அவர் இந்த நேரத்திலே
சுட்டிக்காட்ட வேண்டுமென்று கேட்பதால், அதையும் செய்ய
வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் 4 இடங்களில் பட
மீன் வளர்ச்சிக் கழகத்தில் இந்தத் தொழிற்
குக் கட்டும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. முடியும் என்று
சாலைகள் ஒவ்வொன்றிலும் 170 படகுகள் கட்ட உள்ள படகுகள்
சொல்லப்படுகிறது. ஆனால், 30 அடி, 32 அடி தான் இன்
ஏறத்தாழ 25 படகுகள் அல்லது 50 படகுகளைத் அதிகப்படுத்துவதற்
றையதினம் கட்டியிருக்கிறார்கள். அதை வேண்டும் என்று
கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள கடமைப்பட்டிருக்
நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள
கிறேன்.

பணிக்கட்டித் தயாரிக்கும் நிலை
பதப்படுத்தும் நிலையங்கள், அல்லது கார்ப்பரேஷனோ
யங்கள் ஆகியவைகளை இந்த அரசோ விடுவதன் மூல
நடத்த வேண்டும். தனியார்களுக்கு குத்தகை இந்த நஷ்டத்
மாக அரசுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. நேரத்திலே
தைத் தவிர்க்க வேண்டும் என்று நான் இந்த
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலையை தமிழகத்தில் அதிகப்படி
மீன் தூள் தயாரிக்கும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஏறத்
யான பணத்தைப் போட்டு செய்யக்கூடிய தரமுள்ளதாக
தாழ 3,000 டன்கள் உற்பத்தி ஆனால் 1977-78 ஆம்
இந்த ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.
ஆண்டிலே 203 டன்கள்தான் கடலோரத்தில் அதிகமாக
அதற்கான காரணம், தமிழகத்தில் அதிக விலை கொடுத்து
கிடைக்கக்கூடிய இந்த மீன்களை வாங்கிச் செல்கிறார்கள் என்ற
கேரள மாநிலத்தில் உள்ளவர்கள் அதிகாரிகள் கூறுகிறார்கள். அப்படி
குற்றச்சாட்டை நமது அதிகப்படியாக செல்கின்ற
கேரள மாநிலத்திற்கு இந்த மீன்கள் உற்பத்தி குறைகின்ற
காரணத்தினால், இங்கே மீன் தூள்

காரணத்தினால், இந்தத் தொழிலுக்கு அதிகப் பணம் போட்டு
ஆரம்பித்தும் நசுக்கப்படுவதன் காரணமாக, இதற்கு முறையான
திரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு
இன்னும் இதிலே அதிகம் பேச வேண்டுமென்றாலும், இந்த
அளவுக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி
விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

(7) ஒழுங்குப் பிரச்சினை

நீக்கும் குறித்து.

திரு. ரா. உமாநாத்: பாயிண்ட் ஆப் ஆர்டர், 'ராகிங்'
என்பது கண்டிக்கத்தக்கது. இந்த 'ராகிங்' சம்பந்தமாக நான்
சொன்ன வார்த்தைகளை 'எக்ஸ்பஞ்ச்' செய்ததாகக் கேள்விப்
பட்டேன். எனக்குத் தெரியும், 'ரேப்பிங்' என்ற வார்த்தை
இங்கே சொல்லப்பட்டிருக்கிறது ; 'பிராஸ்டிடியூஷன்' என்ற
வார்த்தை 'யூஸ்' பண்ணப்பட்டிருக்கிறது. அப்படி 'யூஸ்'
பண்ணப்பட்ட ஒரு மெடிகல் டெர்ம் ஆப் பினாமினன் தான்
இது. வேறு ஒன்றும் இல்லை. அதை எப்படி எக்ஸ்பஞ்ச்
செய்யலாம் ? அண்டர் வாட் ரூல்ஸ் ? இது எப்படி 'இர்
ரிலவனட்' ஆகும் ? 'ராகிங்' என்பது ஒரு சீரியசான விஷயம்.
அது எப்படி 'அன்-பார்லிமெண்டரி' ஆகும் ? 'இர்-ரிலவனட்'
ஆகும் ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :
'ராகிங்' என்ற வார்த்தையோடு, இன்னும்சில வார்த்தைகள்
கம்டிவ்சரி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, தான்
நீக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : It is a medical term and phenomenon.
Majority of students are victimised by a minority of students.
ஸ்டுடெண்ட்சைக் கம்பெல் பண்ணி (* * *
பண்ணுகிறார்கள். ஜெயிலுக்குள் கூட இம்மாதிரி (* *)
நடக்கிறது. Are we not entitled to discuss that phenomenon.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (பி. எச். பாண்டியன்) :
பார்த்து முடிவு சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : Better do it early. Press correspondents
have to go to press.

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக் கிணங்க
அகற்றப்பெற்றது.

இப்படி எடுத்துவிடுவது என்று சொன்னால் இங்கு நடப்பதைப்
பற்றி பிரஸ் ரிபோர்ட் கொடுத்துவிட்டால் போதுமே. அவர்கள்
இங்கு இருக்க வேண்டிய அவசியமில்லையே. சீக்கிரம் முடிவு
பண்ண வேண்டும்.

~~திரு. நா. சுந்தரராஜ் : உறுப்பினர்~~ அவர்களுக்கு இது
முக்கியமாக பிரஸ்சுக்குப் போக வேண்டுமென்பதிலே அக்கறை
யாக இருப்பதாகத் தெரிகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): "'ராகிங்'
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது
என்பது லா அண்டு ஆர்டர் பிராப்ளமாக மாறிக் கொண்டு
மிகவும் 'மோஸ்ட் இன்-ஹ்யூமன்' ஆக மிருகத்தனமாக பல
கல்லூரிகளில் நடந்து வருகிறது" என்று சொல்லிவிட்டு பிறகு
தஞ்சை மெடிகல் காலேஜில் போன வருஷம் சொல்ல முடியாத
முறைகள் பற்றி—'சொல்ல முடியாத முறைகள்' என்று
நீங்களே சொல்லுகிறீர்கள். அவ்வளவு கம்பல்சரியாக நடந்
திருக்கிறது. இம்மாரல் ஆக்ட் என்று தாங்களே கருதி
சொல்லியிருக்கிறீர்கள்—

* * * * *

That is what the hon. ~~Member has stated.~~
கம்பல்சரி என்ற வார்த்தை வரும்போது— It means there is some-
thing, some super power behind it என்பதை அறிவார்கள்.

திரு. ரா. உமாநாத் : ராகிங் என்று மைனாரிடி செக்ஷன்ஸ்
ஆப் தி ஸ்டுடெண்ட்ஸ், விரும்பாத ஸ்டுடெண்ட்சைத் துன்புறுத்து
கிறார்கள். அதிலே ஒரு ஃபார்ம் இது என்று சொன்னேன்.
விரும்பாத ஸ்டூடண்ஸ்சைப் பொறுத்து இப்படிச் செய்துவிடு
கிறார்கள். மைனாரிட்டி ஸ்டுடெண்ட்ஸ் மேல் கம்பல்சரியாக
செய்யும் நிலை இருக்கிறது. அதிலே ஸ்டூடெண்ஸ் விக்டிம்ஸ்
ஆகி இருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லி ஹவுசில்-
'ரிலிப்' கிடைக்கவில்லையென்று சொன்னால் வேறு எங்கு
கிடைக்கும் ?

I am saying this so that the minority group boys who are victimised
by this may get relief at the hands of Government. Whereelse can I say
this except in the House ? How can that be expunged ?

[* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக் கிணங்க
அகற்றப்பெற்றது.]

தயவுசெய்து அதை நீக்கக்கூடாது. எந்த ரூலின் கீழ் அதை எக்ஸ்பஞ்ச் பண்ணுகிறீர்கள்? எக்ஸ்பஞ்ச் பண்ணுவதற்கென்று ரூல்ஸ் இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (பி. எச். பாண்டியன்): நீங்களே சொல்லும்போது 'சொல்லமுடியா முறைகள்' என்று சொல்லியிருக்கிறீர்கள். அது வெளியே பரவி மற்றக் கல்லூரிகளுக்கும் தெரிய வேண்டாம் என்ற காரணத்தால்தான் நீக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: I said so because I felt sentimenta ரூல்சுக்கு விரோதமாக நீக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரிச் சொல்ல முடியாது என்றால் வேறு எந்த மாதிரிச் சொல்வது! அந்த நிகழ்ச்சி நடப்பதை கோட் பண்ண வேண்டுமென்று சொன்னால் எப்படிச் சொல்வது?—Minority group of students are victims. கம்பல்ஷன் நடக்கிறது. That is what I said. It is a medical phenomenon. Ragging is taking place. Ragging involves compulsion. Students are compelled into this.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசிய சில வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து பேரவைத் தலைவர் நீக்கிவிட உத்தரவிடப்பட்டதன் பேரில் எந்த விதிமுறையின் பேரில் நீக்கியிருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு சட்டமன்ற விதிமுறைகளிலுள்ள விதி 235-ன் கீழ்தான் அது நீக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது பொருத்தமாக இருக்கும்.

விதி 235—

If the Speaker is of the opinion that a word or words has or have been used in debate which is or are defametory or indecent...... என்றுதான் இருக்கிறது.

ஆகவே, பேரவைத் தலைவர் டெஃபமேட்டரி, இன்டீசன்ட் ஆக இருக்கிறது என்று அவர்களே முடிவுக்கு வந்தால் நீக்கலாம்—

He has got the right to expunge whole or a portion of the words used by the Hon. Member on the floor of the House.

திரு. ரா. உமாநாத்: இன்டீசன்ட், டெபமேட்டரி என்று இதை எப்படிச் சொல்ல முடியும்? It is a scientific term. It may be that a particular person feels that the term is scientific. அது நடக்கிறது. வேறு எந்தப் பெயரால் அதைச் சொல்வது? It is being done. Students are compelled. அதற்கு ஸ்டூடெண்ட்ஸ் ஆளாக்கப்படுகிறார்கள். அதற்கு வேறு வார்த்தை என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) I am not yielding. I am on my legs. நான் என்ன சொல்லுகிறேன் என்றால்— இதிலே இன்டீசன்சி கொஸ்டியன் வரவில்லை; இவ்வாறு நடப்பதை இங்கே சொல்லக் கூடாதா? அப்படி ஜெயிலுக்குள் நடக்கிறது. அந்தச் சங்கடங்களைப் போக்க வேண்டுமென்பதற்காக கேள்வி கேட்பது எப்படி? Where else except this House can I canvass for the minority students who are thus victimised?

[முற்பகல் 10-50]

அந்த வார்த்தைக்கு அந்த பினாமினனுக்கு வேறு எந்த வார்த்தையை யூஸ் பண்ண வேண்டும் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): நீங்கள் பேசிக்கொண்டு வரும்போது ரேக்கிங் என்று சொன்னீர்கள். இரண்டாவதாகச் சொல்லுகிறபோது அருவருக்கத்தக்கதாக என்று எல்லாம் தாங்களே சொல்லியிருக்கிறீர்கள். அந்த மாதிரியான வார்த்தை வெளியே வந்தால் வேறு மாதிரியாகப் போகும். ஆகவே அதை நீக்குவதற்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அவையிலே ஒரு வார்த்தையைப் பேரவைத் தலைவர் நீக்குவதற்கு உரிமை இருக்கிறது.

No member has a right. We have no right to question his ruling. Not at all. We are making to challenge the ruling given by the Chair. now a bad precedent of challenging the ruling of the Chair.

THIRU N. SUNDERRAJ: We are not challenging.

THE HON. THIRU G. R. EDMUND: You are challenging. The Chair has already given a ruling. If a Member were to question under what rule it has been done, it means the ruling of the Chair is challenged.

THIRU R. UMANATH : I am sorry. The Hon. Minister is treating the Hon. Speaker as though he is above the House. No. The Hon. Speaker is part of the House. He is not above the House. செக்தாருடைய பார்லிமெண்டரி புரசீஜர் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள், நேற்று கூட நான் படித்தேன். The Speaker is part of the House and not above the House.

My only request is under what rules, the medical term I have used to describe a phenomenon has been expunged.

ஆகவே எக்ஸ்பஞ்ஜிங் கொஸ்டியன் வரும்போது I have a right to request him to clarify, under what rule it is has been done. Is it irrelevant என்பது தான். அதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார். அதற்கு மேல் விவாதம் என்பது நடக்கக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் — தலைமை.)

திரு. ரா. உமாநாத் : It is a democratic set-up of the House. The Speaker is part of the House.

ஆகவே ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னால் அது சரியல்ல.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசிய அந்தக் குறிப்பை நானே பார்த்தேன். திரு. உமாநாத் அவர்களே அதைப் பேசியிருக்க முடியாது என்று நானே சொன்னேன். அந்தக் குறிப்பைப் பார்க்கிறபோது அந்த வாசகங்கள் அவ்வளவு நன்றாக இல்லை என்ற காரணத்தால் பேரவைத் தலைவர் அவரோடு நானும் இருந்தேன் — திரு. உமாநாத் அவர்கள் அப்படிப் பேசியிருக்க மாட்டார்கள் என்று கருதினோம். ஆனால் அவர் அப்படியே இருக்க வேண்டுமென்று . . .

திரு ரா. உமாநாத் : வேறு எப்படி இருக்க வேண்டும் சொல்லுங்கள், உங்களுடைய சஜ்ஜெஷன் என்ன?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : ரேக்கிங் என்று
பொருளிலே வருகிறது. இது குறிப்பாக மாணவர்களைப் பற்றி
யும் நல்ல டேஸ்ட்டில் இல்லை, ஒரு பேட் டேஸ்ட் என்று
நிலையிலே வருகிற அந்த அளவிற்கு விளக்கமாகப் போக வேண்டிய
அவசியமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
கண்ணியத்திற்கே அது ஏற்றதாக இருக்காது என்ற அடிப்படை
யிலேதான் முடிவு எடுக்கப்பட்டது. நிச்சயமாக, பார்த்மாக
நீக்க வேண்டுமென்ற முறையிலே அல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு ரா. உமாநாத் : மாணவர்களுக்கு இதில் என்பதுவை
மாணவர்களைக் காப்பாற்றுவதற்கு சர்க்கார் தலையிட வேண்டு
மென்றுதான் கேட்டேன். மெஜாரிட்டி மாணவர்கள் அல்ல.
அந்த முறையினால் மைனாரிட்டி மாணவர்கள் பாதிக்கப்
படுகிறார்கள். அவர்கள் தான் விக்டிமைஸ் செய்யப்படுகிறார்கள்;
அவர்கள் தங்கள் கஷ்டத்தை எடுத்துச் சொல்லவே முடியவில்லை
ஆகவேதான் நான் இங்கே அவர்களுக்கு ரிலீப் கொடுக்க
வேண்டுமென்ற முறையிலே சொன்னேன். அந்த நிகழ்ச்சிகளைப்
பற்றி வேறு என்ன வார்த்தைகள் போடலாம் என்று நீங்கள்
சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு தரப்பிலேயும்
இங்கே விவாதித்தார்கள். இரு தரப்பிலேயும் எப்படிப்பட்ட
சொற்களைச் சேர்க்கலாம் என்ற பிரச்சினையைப் பற்றியெல்
லாம் எழுப்பினார்கள். பேரவைத் தலைவர்தான் இவ்வளவையும்
பார்த்து அவை இருக்கலாமா வேண்டாமா என்பதை முடிவு
செய்ய வேண்டியது. அது என்னுடைய முடிவு தான். எந்த விதி
யின்கீழ் தலைவர் செய்கிறார் என்ற புதிய மரபை உருவாக்கி
னால் பேரவையிலே எந்தப், பிரச்சினையையும் சுமுகமாகத்
தீர்த்துவிட முடியாது. அந்த [illegible] எல்லாம்
உங்களுக்கு எடுப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று
கேட்க கூடாது. என் அனுபவத்திலே கூட அப்படிக் இடையாது.
எந்த விதியின்கீழ் என்று கேட்டு ஒரு புதிய மரபை உருவாக்க
வேண்டாம், பார்ட் ஆப் தி ஹவுஸ் என்று சொன்னார்கள்,

இருக்கலாம். நீங்கள் தேர்ந்தெடுத்து அமர வைத்திருக்கிறீர்கள். சில அதிகாரங்களைக் கொடுத்து விதிகளைக் கொடுத்து நடத்தச் சொல்லியிருக்கிறீர்கள். உறுப்பினர்கள் அதையே கேள்வி கேட்க ஆரம்பித்தால் எப்படி பிரச்சினைகளை நான் தீர்க்க முடியும் என்று சிந்திக்க வேண்டும். நீங்கள் விரும்புவதைக் கேட்கலாம், ஆனால் எடுக்கக்கூடாது என்ற முறையிலே கேள்வி எழுப்பப் படுமானால் இந்த அவையையே சுமுகமாக நடத்த முடியாது.

ஆகவே, உமாநாத் அவர்கள் நன்மைக்காக, அதை நானும் மின்சாரத் துறை அமைச்சரவர்களும் பேசிவிட்டு, அதை எடுத்தால் அவருக்கும் நல்லது என்ற கருத்திலே எக்ஸ்பஞ்ச் பண்ணினேனே தவிர, திரு. உமாநாத் அவர்களுடைய பேச்சினைக் கட்டாயம் நீக்க வேண்டுமென்ற நிலையிலே பேரவைத் தலைவர் எடுக்கவில்லை. எக்ஸ்பங்ஷன் செய்யச் சொன்னதை திரு. உமாநாத் அவர்கள் ஏற்று, மூலப் பிரச்சினைக்குப் போக அனுமதிக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : ஸ்பீக்கர் சார், நீங்கள் சொல்கிறீர்கள். நம்முடைய அமைச்சரவர்கள் விதி 235-ஐ, உங்களுக்குச் சாதக மாக அவர்கள் எடுத்துக் காட்டி,

If the Speaker is of the opinion that a word or words spoken are indecent. . . . . . .

. . . . என்று சொல்கிறார். நீங்கள் உங்களுடைய அபிப்பிரா யம் என்ற முறையில் அந்தப் பரிசீலனையைச் செய்யவில்லை. அந்தக் குறிப்பிட்ட வார்த்தை 'இன்டீசன்ட்' வார்த்தை என்ற முடிவுக்கு வந்தால், அந்த உங்களுடைய முடிவைத் தெரிவித்தால், அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று பிடிவாதமாக அங்கத்தினர் எதிர்த்தால் நீங்கள் சொல்வது சரி. இது அப்படி யல்ல. அங்கத்தினர் பேசுகின்ற பேச்சு நடவடிக்கைகள் குறிப் பேட்டில் ஏறுவதில் என்ன தவறு? அவர் குறிப்பிட்டுள்ள வார்த்தை சாதாரணமாக, எல்லோரும் உபயோகப்படுத்தக் கூடிய வார்த்தை, பயன்படுத்தப்படுகிற வார்த்தை, பத்திரிகை களிலே வெளியாகிற வார்த்தை. ஜட்ஜமென்டிலே கூட வார்த் தைகள் வரலாம், அப்படி கேஸ் போனால் அப்படி வரும்போது நீங்கள் அதை எடுக்க வேண்டுமென்று சொன்னால், விதிகளுக்கு உட்பட்டுதானே, எடுக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தையைப் பற்றிய கருத்திலே, மிக ஆபாசமாகவோ, தவறானதாகவோ என்ற விளக்கத்திற்கு நான் போகவில்லை. நான் என்னு டைய அபிப்பிராயத்திலே இது இருக்க வேண்டுமா, தேவை யில்லை என்று முடிவெடுத்தான பிறகு, நீங்கள் எந்த விதியின் கீழ் எடுத்தீர்கள் என்று கேட்க ஆரம்பித்தால் நான் இந்த அவையை எப்படி நடத்துவது?

மாண்புமிகு திரு. க. உ.ரா. எட்மண்ட் : திரு. ரமணி, உங்களுக்கு உதவியாக நான் ஒன்றைச் சொல்கிறேன் . . . .
(திரு. கு. ரமணி நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை மேற்கொண்டு நான் அனுமதித்துக்கொண்டே போனால், நேரம்தான் வீணாகும்.

திரு கு. ரமணி : நான் கேட்பது, ஒரே ஒரு விஷயம். அவை அங்கத்தினர் என்ற முறையிலே எங்களுடைய உரிமை என்ன என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அவையினுடைய இந்த விதிகளுக்கு உட்பட்டுத்தான் உங்களுடைய தீர்ப்புகள் வருகின்றன. அப்படியானால், எந்த விதியின்கீழ், எப்படி அந்தத் தீர்ப்பைக் கொடுத்தீர்கள் என்று நாம் கேட்கக் கூடாதா? அது எப்படி உங்களுடைய தீர்ப்பை எதிர்த்துக் கேட்பதாக ஆகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்ச நேரம் ஆனாலும் பரவாயில்லை. நான் இதைப் படிக்கிறேன்.

It is the right of the Speaker to interpret the Constitution and rules, so far as matters in or relating to the House are concerned, and no one, including the Government, can enter into any argument or controversy with the Speaker over such interpretation. His ruling constitutes precedents by which subsequent speakers, members and officers are guided. Such precedents are collected and in course of time formulated as rules of procedure or followed as conventions. The Speaker's rulings, as already stated cannot be questioned except on a substantive motion. A Member who protests against the ruling of the Speaker commits contempt of the House and the Speaker. The Speaker's decision is equally binding whether given in the House or on a departmental file.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் சொல்வது ஜெனரலாக எல்லோ ருக்கும் தெரிந்த விஷயம். அதாவது, சபாநாயகருடைய ரூலிங்கை குவஸ்டியன் பண்ணக் கூடாது.

Mr. Speaker : You are questioning now.

திரு. ரா. உமாநாத் : As a Member whereelse can I exercise my right மறுபடியும் இந்தச் சபையிலே பேசும்பொழுது, நாட்டிலேயிருக் கிற பிரஜைகள் சில கொடுமைகளுக்கு ஆளாகும்போது, கவர்ன் மென்டினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தலையிட வைக்க வேண்டும் அல்லவா? அப்படியிருக்கும்போது இப்படி நீங்கள்

சொன்னால், நாங்கள் எப்படி கவர்ன்மென்டுக்குத் தெரிய
வைப்பது என்பது எங்களுக்குத் தெரிய வேண்டும் அல்லவா?
நான் சொல்கிறேன், குவஸ்டியன் பண்ணுவது இல்லை,
கிளாரிஃபிகேஷன் கேட்கிறேன். எந்த ரூலிலே என்று கேட்
கிறேன். அதையாவது, இந்த ரூலுக்கு உட்பட்டு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்பீக்கர்ஸ் ஒப்பீனியன்
தான் ரூலிங்கே........

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : எந்த விதிமுறை
களிலே என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு
உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்த அவையிலே உறுப்பினராக
வருகிற ஒவ்வொரு உறுப்பினரும் இந்த அவையினுடைய விதி
முறைகளைத் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும்.
விதிமுறையில் என்பது கேட்பது நியாயம் இல்லை. எந்த
இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் நாட்டிலே இருக்கிற சட்டங்
களைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று எப்படி
சட்டத்துறை எதிர்பார்க்கிறதோ அவ்வாறே இந்த அவையிலே
உறுப்பினராக இருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் இந்த அவை
யின் விதிமுறைகளைத் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும். நமது
ரமணி ** அவர்கள் சொன்னார்கள்.......

திரு. கு. ரமணி: அதுவே தப்பு, **இல்லை ரமணிதான்....

திரு. ரா. உமாநாத் : அந்த** என்பதையே எடுத்துவிட
வேண்டும். பேசியது யார் என்று கூட தெரிந்துகொள்ளாமல்
பதில் சொல்லிவிடுகிறீர்களே........

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : நமது மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இன்றைக்கு சொன்னார்கள்.
''defamatory or indecent or unparlimentary or undignified''.
என்றெல்லாம் வரும் முறையில் பேசக்கூடாது. நம்முடைய
உமாநாத் அவர்களுடைய டிக்னிட்டுக்கு குறைவு வந்து விடக்
கூடாதே என்று கூட நீக்கச் சொல்லியிருக்கலாம். நீக்குவதற்
கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது. '' He may, in his
discretion'' .... என்று கூட இருக்கிறது.
'discretion' என்ற அதிகாரத்தை யாரும் கேள்வி கேட்க
கூடாது. (குறுக்கீடு)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்கா
ருங்கள். நீங்கள் சொல்வது, பிறகு அவர் பேசுவது, மறுபடியும்
நீங்கள் பதில் சொல்வது இப்படியே நீண்டுகொண்டே போகிறது
....

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, · ''discretion''
என்று சொன்னால் ..

''It is not arbitrary Legally I am saying. Diseretion is a thing which has got to be excercise judiciously, and not unrelated to judicious exercised.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் என்ற
முறையில் உங்களுக்குப் பேச உரிமை இருப்பது போலவே உங்க
ளால் இந்த இடத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் நான் என்
னுடைய நடைமுறைகளைக் கண்ணியத்தோடு கடைப்பிடிக்க
வேண்டியதும் அவசியம் ஆகும். விளக்கங்கள் விவாதங்கள் என்ற
அடிப்படையில் போய்க் கொண்டிருந்தால் அந்தப் பிரச்னைக்கு
முடிவே இருக்காது. ஆகவே உமாநாத் அவர்கள் நான் சொல்
லியதை நல்ல எண்ணத்தோடு சொல்வதாக எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மேலும் அவையை நடத்திக்
கொண்டுபோக அனுமதிக்க வேண்டுகிறேன்.

இப்போது நடந்த டிஸ்கஷனில் நீக்கப்பட்ட வார்த்தைகள்
மீண்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தால் அவற்றையும் ***
என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதையும் குறிப்பேட்டிலிருந்து
நீக்கிவிடவேண்டும் என்று உத்தரவு இடுகிறேன்....

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த விவாதத்
தையே முழுமையாக நீக்கிவிடப் போகிறீர்களா, அப்படியென்
றால் அது முறையாக இருக்குமா? விவாதத்தையே வேண்டாம்
என்று சொன்னால் எப்படி, நீக்கப்பட்ட வார்த்தைகளைத் திரும்ப
வந்தால் நீக்கும்படிதான் இருக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொன்னேன்.
நீக்கப்பட்ட வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருந்தால் அவை
களை நீக்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கு
இணங்க (ப. 816)ல் அகற்றப் பெற்றது.

(6) வரவு செலவுத் திட்டம், 1979–80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல்
கோரிக்கை எண். 21—மீன்வளம்.

*திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு சிவில் சப்ளை கார்ப்பரேஷன், மீன் வளம் ஆகிய இரு மானியங்கள் இந்த அவையின் முன்னாலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த வருடத்திலே இந்த சட்டமன்றத்திலே முதல் அமைச்சர் அவர்கள் நாடு பூராவிலும் 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்றும், அந்தக் கடைகள் திறக்கப் படும்போது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் கூறியிருக்கிறார். இப்பொழுது 13,000 நியாய விலைக் கடைகள் திறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நியாய விலைக் கடை என்று இருப்பது சரியாக இருக்காது என்பது அபிப்பிராயம். ஏனென்றால், ஒரு கிராமத்திலே 200 வீடுகள் இருக்கும். இன்னொரு கிராமத்திலே 500 வீடுகள் இருக்கும். இன்னொரு கிராமத்திலே 1,000 வீடுகள் இருக்கும். ஆகவே, அந்த முறை அவ்வளவு சரியாக இருக்காது. ஆகவே, 500 குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை திறக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அப்படி நியாயவிலைக் கடைகள் திறந்தால் மட்டும் போதாது. வெறுமனே அதில் அரிசி மட்டும் கொடுக்க ஏற்பாடு செய்தால் போதாது. இன்றைக்கு மக்களுக்குத் தேவையான எல்லாவித பொருட்களையும் அந்த நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை, கருப்புக்கட்டி இல்லை, புளி இல்லை. இப்படிப்பட்ட பல்வேறு பொருள்களையும், அங்கே கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண் டும். டீசலுக்குக்கூட மனிதன் பல்வேறு பெட்ரோல் பங்குகளில் காத்துக்கிடக்கிறார்கள். மண்ணெண்ணெய்க்காக தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளையும் எடுத்துக் கொண்டு கியூவில் நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, எந்தெந்த சமயங்களில் எந்தெந்த அத்தியாவசியமான பொருட்கள் தேவையோ அவையெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இதையெல்லாம் சொல்கிறபோது, முதலில் இந்த நாட்டில்
இருக்கும் உற்பத்தி திட்டமிட்ட உற்பத்தியாக இருக்க வேண்டும்.
திட்டமிட்ட உற்பத்தி, கொள்முதல், வினியோகம் இதை மூன்றும்
நல்ல முறையில் செய்தால் அதை நடைமுறைப்படுத்த முடியும்.
இந்த திட்டமிட்ட உற்பத்தி கொள்முதல், வினியோகம் என்று
சொல்கிறபோது அதைக் கொண்டுவருவதற்குப் பல கொடோன்
ஏற்பாடு செய்ய வேண்டும். அதை ஒரு ஆண்டுக் காலத்தில்
கட்டாயமாகச் செயல்படுத்த முடியாது. ஆகவே, அந்தத் திட்
டத்தை வகுத்துக்கொண்டு, அதை ஒரு 2-3 ஆண்டுக் காலத்தில்
செய்து முடிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

நம்முடைய மாநிலத்திலே சில பொருள்கள் திடீரென்றுக்
குறைந்து விட்டால் அது அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச்சென்று
அந்த விலையைச் சீர்படுத்த இந்தக் கழகம் பொறுப்பெடுத்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது
கருப்பட்டிக்கு விலை குறைந்து விட்டது. அதன் காரணமாக
1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பனைமரத் தொழிலாளர்கள்
பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, கருப்பட்டிக்கு நல்ல
விலை கிடைக்க அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும். உதாரண
மாக, சிலோனுக்கு அனுப்பலாம். ஏற்கெனவே அனுப்பி இருந்
தால் இந்த நிலைமை வந்து இருக்காது. இப்போதாவது சிலோ
னுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தால் அந்த நிலைமையில்
மாற்றம் ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பருப்பு, பயிறு வகைகள் பற்றாக்குறை இருக்கின்றன. இப்படி
அடிக்கடி பற்றாக்குறை ஏற்படும் பொருள்களை அரசு, உற்பத்தி
யாகும் காலங்களில் அதிகமாகக் கொள்முதல் செய்து ஸ்டாக்
வைக்க வேண்டும். எந்தெந்தப் பகுதியில் அந்தப் பொருள்கள்
உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ அங்கேயிருந்து எல்லாம் கொள்
முதல் செய்து, ஸ்டாக் வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்
டும். அந்த ஸ்டாக் வைப்பதற்கு வேண்டிய கொடோன் வசதிகள்
ஆங்காங்கு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட பல்வேறு காரியங்
களைச் செய்வதற்கு ஏராளமான பணம் தேவையேற்படும்.
அதேபோல், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் எந்தப்
பொருளாக இருந்தாலும் அதற்கு விலை நிர்ணயம் செய்ய வேண்
டும். அப்படி அரசு விலை நிர்ணயம் செய்கிறபோது, விவசாயி
களை அணுகியும், வேளாண்மைத் துறை மூலமும், இன்னும் பல்
வேறு கழகங்களின் மூலமும் அரசு உற்பத்தி விலையை அறிந்து,
எந்த அளவிற்கு விலை வைத்தால் இலாபம் வரும் என்பதை
அறிந்து, அந்த விவசாயிகளின் உற்பத்திப்பொருள்களுக்கு நஷ்டம்
ஏற்படாத வகையில் ஒவ்வொரு விவசாய பொருளுக்கும் விலை
நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரில் நியாய விலைக் கடைகள் முன்னால் இருந்தது
போலவும், எல்லாப் பொருள்களும் கொடுப்பது போலவும் சொன்
னார்கள். ஒரு பொருள் மட்டும் தான் கொடுக்கிறார்கள். அதா
வது, அரிசி மட்டும் தான் கொடுக்கிறார்கள். கே.யு.சி.எம்.எஸ்.
—ல் எல்லாப் பொருள்களும் வைத்து இருக்கிறார்கள். அங்கே
ஒரு சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. ஒரு அக்ரிகல்சுரல் டிப்பார்
மென்ட்டைச் சேர்ந்த கழகம் சில கடைகளை வைத்து இருக்கி
றார்கள். இப்படிப் பல்வேறு விதமான முறைகளில் பொருள்கள்
விற்பதால், எந்தத் துறை, எந்தப் பொருளை, எந்த விலையில்
விற்கிறது என்று புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது.
எல்லாமே ஒரு கார்ப்பரேஷன் கீழ், ஒரு கழகத்தின் கீழ் கொண்டு
வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். உணவுப்
பொருள் சம்பந்தப்பட்டதுதான். கே.யு.சி.எம்.எஸ். சங்கத்தின்
கீழ் மக்களுக்குப் பிரயோசனமாக ஒரு பாக்டரி இருக்கிறது. அந்
தப் பாக்டரியில் அன்னாசி பழத்தில் இருந்து ஜாம், ஜூஸ்
தயாரித்தார்கள். பப்பாளி, மாங்கோ பழத்தில் இருந்து ஜாம்,
ஜூஸ் தயாரித்தார்கள். அதன் மூலம் அந்தப் பாக்டரிக்கு ஏராள
மான இலாபம் வந்தது. அதுவும் இந்த சீசனில் பழம் அதிகமாகக்
கிடைக்கும். அந்தத் தொழிற்சாலையில் நல்ல முறையில் 40
தொழிலாளிகள் பணியாற்றி வந்தார்கள். அவர்களுக்கு 2½
ரூபாய், 3½ ரூபாய் என்று கொடுத்து, இரவு நேரங்களிலும்
வேலை வாங்கிக் கொண்டு இருந்தார்கள். அதை எதிர்த்து
அவர்கள் தொழிற்சங்கம் அமைத்ததால், அதை லாக் அவுட்
செய்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் நடப்பது
நாட்டுக்கு நல்லதல்ல. அந்த தொழிற்சாலை அதிகமான இலாபம்
ஈட்டிய பிறகு இப்படி லாக்கவுட் செய்வது சரியல்ல. அதையெல்
லாம் அந்தக் கார்ப்பரேஷன் கழகத்தின் கீழே கொண்டு வர
வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

ஆகவே, அதை எல்லாம் தவிர்த்து எல்லாமே இந்தக் கார்ப்ப
ரேஷனுக்குக் கீழே கொண்டுவர வேண்டும் என்று நான் மீண்டும்
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக அரிசியைத் தலையில் தூக்கிக்கொண்டு கேரளா
பார்டர் பக்கங்களிலே செல்லும்போது உடனே போலீஸ் வந்து
பிடித்துவிடுகிறார்கள். இப்போது அரிசியின் விலை குறைவாக
இருக்கின்ற காலத்திலும் அவ்வாறு பிடிக்கப்படுகிறது. அது
போன்று சைக்கிளில் கொண்டு சென்றாலும் பிடித்துவிடுகிறார்
கள். இவ்வாறு பிடிக்கப்பட வேண்டும் என்ற நிலை 15 ஆண்டு

கஞக்கு முன்பு இருந்தது. ஆனால், இப்போது பற்றாக்குறை
இல்லை. அரிசி ஏராளமாகக் கிடைக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்
நிலையில் அரிசியை விவசாயிகள் அங்கே கொண்டு சென்றால்
அவர்களுக்கு நல்ல விலையும் கிடைக்கும். ஆகவே, அவ்வாறு
கொண்டு செல்வதைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை நிறுத்த
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

அடுத்ததாக, எங்கள் பிரதேசத்தில் தோட்டக் காடுகள் அதிக
மாக இருக்கின்றன. ஆகவே, நியாய விலைக் கடைகளை அங்கே
அதிகமாகத் திறக்க வேண்டும். ஒரு சில இடங்களிலே மட்டும்
திறந்தால் போதாது. அது போல் தமிழகத்தில் தோட்டக்காடு
பிரதேசம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கே எல்லாம் ஒவ்வொரு
தோட்டத்திலேயும் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு
வசதியாக நியாய விலைக் கடைகளை ஆரம்பிக்க வேண்டும்.
அப்படி ஆரம்பித்தால் அது மிக்க நன்மையாக இருக்கும். இப்
போது அப்படி இல்லாத காரணத்தால் அவர்கள் பல மைல் தூரம்
சென்று வாங்க வேண்டி இருக்கிறது. மேலும், அவர்களுக்குச்
செலவும் அதிகமாகிறது. ஆகவே, இந்த மாதிரி நியாய விலைக்
கடைகளை தோட்டக்காடு இருக்கக்கூடிய எல்லா பிரதேசங்களி
லும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக மீனளத்தைப் பற்றி ஒன்றிரண்டு சொல்ல விரும்பு
கிறேன். இன்றைக்கு ஏராளமான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்
கின்றன. கடலில் இருக்கின்ற மீன் வளத்தை அபிவிருத்தி செய்
யும் நோக்கத்தில் இன்றைக்குப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்
கின்றன. நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
அதாவது எந்தக் காரணத்தைக் கொண்டும் கடலில் கரையி
லிருந்து மூன்று மைலுக்கு படகுகள் செல்லக்கூடாது என்று உத்
தரவிட வேண்டும். கண்டிப்பாக்க வேண்டும்

திரு. ரா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப்
ஆர்டர். கோரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரம் இருக்
கின்றது.

திரு. தே. ஞானசிகாமணி: அப்படிப் படகுகள் இயந்திரப்
படகாக இருந்தாலும், மற்ற படகுகளாக இருந்தாலும் கரை
யோரங்களில் அதாவது கடலின் கரையிலிருந்து மூன்று மைலுக்குள்
வரக்கூடாது என்று உத்தரவு விட வேண்டும். ஏனென்றால்
பெரும்பாலும் மீன்கள் கரையோரங்களில்தான் முட்டையிடுவ

[திரு. தே. ஞானசிகாமணி] [1979 ஏப்ரல் 20

தாகச் சொல்கிறார்கள். அதாவது ஊாலந்து பத்திரிகையிலே அப்
படி ஒரு குறிப்பு வந்தது. அதிலிருந்து எடுத்து ஒரு மலையாளப்
பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்கள். அதை நான் பார்த்தேன்.
கரையோரப் பகுதிகளில் தான் மீன்கள் முட்டையிடுவதும், குஞ்சு
பொறிப்பதும் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. அப்படி
இருக்கின்றபோது படகுகள் செல்வதால் அங்கே கருச்சிதைவு
ஏற்பட்டு மீன்களின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இப்போது
உதாரணமாகச் சொல்வதாக இருந்தால் கன்னியாகுமரி மாவட்
டத்தில் குதிப்பு என்ற ஒருவகை மீன் இனம் முழுவதும் அழிந்து
போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. கடற்கரையிலிருந்து மூன்று
மைல் சுற்றளவுக்குள் படகுகள் வரக்கூடாது என்ற நிலையை
ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை
யில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி சிற்றாறு அணைகளில் வளர்க்
கப்படுகிறது. சிற்றாறு அணையில் கட்லா, மிருகால் போன்ற
மீன் இனங்கள் வளர்க்கப்படுகின்றன. ஆனால், சமீப காலங்
களிலே பெய்த மழையின்போது அணைகளிலே அதிக நீர் பெருகு
கின்றபோது அணைகளைத் திறந்து விட்டதால் மீன்கள் ஆறு
களில் கலந்துவிட்டன. சாதாரணமாக அங்கே மீன் பிடித்தால்
25 ரூபாய் என்ற அளவிலேதான் கிடைக்கும். அதிகப்படியான
அளவில் மீன்கள் இந்தப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற
அணைகளிலே இப்போது பிடிக்க முடியாது. ஏனென்றால்,
நிறைய மீன்கள் தண்ணீரைத் திறந்து விடுகின்ற போது சென்று
விட்டன. அப்படி திறந்து விடுகின்றபோது வலைகள் இருந்தால்
அவை சென்றிருக்காது. அதுமட்டுமல்ல. தண்ணீர் பெருகுகின்ற
போது சிறிது சிறிதாகத் திறந்துவிடப்பட வில்லை. மொத்தமாகத்
திறந்துவிட்டார்கள. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.
பெருஞ்சாணி அணையிலே 40 அடி நீளம், 4 அடி உயரம் உள்ள
4 ஷட்டர்கள் இருக்கின்றன. இந்த நான்கு ஷட்டர்களையும்
ஒரே நேரத்தில் திறந்துவிட்டார்கள். இப்படித்தான் எல்லா
அணைகளையும் மழைக்காலத்தில் திறந்துவிட்டார்கள். ஆகை
யால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீன்கள் ஆற்றி
லேயும், கடலிலேயும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. ஆகவே,
அப்படித் தண்ணிரைத் திறந்து விடுகின்றபோது மீன்கள் போகாத
அளவிலே தக்க பர்துகாப்புகள் செய்யப்பட வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக இந்தக் கடல் பிரதேசத்தில்
வீடு கட்டும் • திட்டங்களைப் பற்றிச் சொல்ல விரும்பு
கிறேன். அங்கங்கே சில வீடுகளைக் கட்டுவது மட்டும் போதாது.

1979 ஏப்ரல் 20] [திரு. தே. ஞானசிகாமணி]

கடந்த ஆண்டு கூட தீப்பிடித்து பல ஓலைக் குடிசைகள்
எரிந்து போய்விட்டன. அதனால் அந்த ஓலைக் குடிசைகளில்
உள்ள 10,000 ரூபாய் பெறுமானம் உள்ள வலைகள் எரிந்து
போய் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே கடலோர பிரதேசங்களில்
கூறை ஓலைகள் இல்லாமல், மாற்று வீடுகளைக் கட்டுவதற்காக
ஒரு திட்டம் முன்பு இருந்தது. அந்தத் திட்டம் சில இடங்களில்
அமலாக்கப்படுகிறது. ஒரு கிராமத்திற்கு 5 அல்லது 10 வீடுகள்
கட்டினால் தமிழகத்தில் அத்தனை கிராமங்களிலும் வீடுகளைக்
கட்ட முடியும். இப்படி 10, 15 ஆண்டுகளில் எல்லா கிராமங்
களிலும் வீடுகளைக் கட்டி முடித்து விடலாம்.

அடுத்து, கூட்டுறவு சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்டுவது
பற்றி. இரயுமன் துறையில் 200 வீடுகள் கட்டுவதாக முன்பு
திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை முடிக்க முடியாமல்
போய்விட்டது. பங்கீட்டின் முறையில் வீடுகள் கட்ட ஏற்பாடு
செய்யப்பட்டது. அந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஒரு
பங்கும். மத ஸ்தாபன தலைவர்களுக்கு இரண்டு பங்கும்,
'பிஷரீஸ்' இலாகாவிற்கு ஒரு பங்கும் என்ற முறையில் ஏற்
பாடு செய்யப்பட்டது. அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள்
அவர்கள் பங்குத் தொகையான ரூபாய் 1,200 கட்டிவிட்டார்கள்.
'பிஷரீஸ்' இலாகா அந்தத் தொகையை கட்டவில்லை. 'பிஷரீஸ்'
இலாகா அந்தத் தொகையைக் கட்டாததனால் மத ஸ்தாபன
தலைவர்களும் தங்கள் பங்குத் தொகையைத் கொடுக்கவில்லை.
ஆகவே 'பிஷரீஸ்' இலாகா அந்த 1,200 ரூபாயைக் கொடுத்
திருந்தால் இந்த 200 வீடுகள் கட்டி முடிந்திருக்கும். அங்கு
பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால்
அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவருடைய கோஷ்டிக்கும்,
இன்னொரு கோஷ்டிக்கும் தகராறு ஏற்பட்டு, ஒரு கோஷ்டி
யினர் 'நீங்கள் தான் அந்தப் பணத்தைத் திருடிக் கொண்டு
போய் விட்டீர்கள்' என்றும், இன்னொரு கோஷ்டி இல்லை
இல்லை நீங்கள் தான் திருடிக் கொண்டு போய்விட்டீர்கள் என்று
தகராறு ஏற்பட்டு ஒரு பெரிய மோதல் ஏற்படக்கூடிய நிலை
இருக்கிறது. ஆகவே, 1,200 ரூபாயை அந்த பிஷரீஸ் இலாகா
கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து விட்டால் அந்த 200
வீடுகளைக் கட்டி முடிக்க முடியும். ஆகவே இதற்கு அரசு
ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குளைச்சல் பக்கமிருந்து ராமனாடு கடலோரத்தில்
இரால் மீன்பிடிக்கச் சென்றபோது அந்த மின்பிடித் தொழிலாள
ர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். பின்னால் அங்கே நடந்த

[1979 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்கும்
வேறு எந்த உறுப்பினருக்கும் அவையில் அப்படி காரசாரமான
விவாதம் ஒன்றும் நடக்க வில்லை. அதனால் மரியாதைக்குறைவு
எதுவும் ஏற்பட்டு விடவில்லை. திரு. பண்ணை சேதுராம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : மதிப்பிற்குரிய பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வழங்கல்,
மீனளம் சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்ப
தற்கு வாய்ப்புத் தந்தமைக்கு உள்ளபடியே நான் பெருமகிழ்ச்சி
அடைகிறேன். இங்கு தமிழகத்தினுடைய உணவு நிலைமை
எந்த அளவுக்கு கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை
கொள்கை அறிக்கை குறிப்பு ஏடுகளின் மூலம் தெரிந்து
கொள்வதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கின்ற 4½
கோடி மக்களும் இதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை
நாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக
எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு
ஆண்டுகளுக்கு முன்னால், நமது தமிழகத்தில் அரிசிக்கு தட்டுப்
பாடு இருந்த நிலைமையையும் மறந்து இருக்க மாட்டோம்.
அப்போதும் அரிசி கிடைத்துக் கொண்டிருந்தது என்று
சொன்னால் அதனுடைய விலை விஷம்போல் உயர்ந்திருந்ததையும்
நாம் மறந்து இருக்க மாட்டோம். அப்படிப்பட்ட ஒரு நிலை
மையை மாற்றி ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்கி விலை
யையும் கட்டுப் படுத்தி எளிதாக 4½ கோடி தமிழர்களுக்கும்
அரிசி கிடைக்கின்ற வகையில் கட்டுப்பாடு செய்த உணவு
அமைச்சர் அவர்களை நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.
இந்த விலை கட்டுக்குஅடங்கியதற்கு இரண்டு காரணங்கள்
உண்டு. தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் உணவு
உற்பத்தியைப் பெருக்கினார்கள் என்பது குறிப்புகளிலிருந்தும்
தெரியவருகிறது......

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர்கள் வரிசையில், இருக்கையில்
ஒருவர் கூட இல்லையே. ஏதாவது ஒரு மந்திரியையாவது
இருக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்வீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்கள்
இல்லாவிட்டாலும் அமைச்சர் செயலர்கள் இருக்கிறார்கள்.
இப்போது அமைச்சர் அவர்களும் வந்து விட்டார்கள்.

1979 ஏப்ரல் 20]

திரு. கே. பண்ணை சேதுராம்: தமிழகத்திலே உணவு உற்பத்தி
பெருகியிருக்கிறது. அந்த நேரத்திலே அரசு விழிப்பாக இருந்து
நடவடிக்கை எடுத்ததன் மூலம், விலைவாசி கட்டுக்கடங்கி இருப்
பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல்
லுக்கு இன்னும் கொள்முதல் விலை நியாயமாகக் கிடைக்கவில்லை
என்பதற்காக மெத்த வருத்தம் அடைகிறேன். விவசாய விளை
பொருள்களின் விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது.
தென் மாநிலங்களில் விளைகின்ற நெல்லையும், வடமா
நிலங்களிலே விளைகின்ற கோதுமையையும் ஒப்பிட்டுப்
பார்த்தால், கோதுமைக்குக் கிடைக்கின்ற அந்த அதிக அளவு
விலையை மத்திய அரசு அரிசிக்குக் கொடுக்கவில்லை. இந்த
மாற்றாந்தாய் மனப்பான்மை போக்கு ஏன் ஏற்பட்டது
என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். நெல்லுக்கு
குவிண்டால் 85 ரூபாய் என்றும், அதே நேரத்தில் கோதுமைக்கு
குவிண்டால்ரூ. 122.50 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏன்
இந்த ஓரவஞ்சனை. இதை இந்த மாநில அரசின் மூலமாக
நாம் மத்திய அரசுக்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.
கோதுமைக்கு கொடுப்பதுபோல் நெல்லுக்கும் கொடுக்க
வேண்டும் என்று நாம் வற்புறுத்தவேண்டும் என்று நான்
ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு 120 ரூபாய் கொடுக்க
வேண்டும் என்று விவசாயப் பெருங்குடி மக்கள், நெல்லை
உற்பத்தி செய்கின்ற பெருங்குடி மக்கள், வேளாண்மைப்
பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்
சொல்லியும், மத்திய அரசு ஒரு காதில் வாங்கி, மறு காதில்
விட்டுவிடுகிறது.

நெல்லைக் கொள்முதல் செய்யும் அணுகு முறையினால்,
அரிசி விலையைக் குறைக்கவேண்டும்; குறையும். இந்த அணுகு
முறையைப் பின்பற்றுவதால், நெல் உற்பத்தி தமிழகத்திலே
குறையும். நெல் உற்பத்தி குறைகின்றது என்று சொன்னால்,
அரிசி தட்டுப்பாடு ஏற்படும். அரிசி தட்டுப்பாடு ஏற்படுகிறது.
என்று சொன்னால், விலை உயரும். எனவே,
நெல்லின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயப் பெருங்குடி
மக்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கவேண்டும். இதை இந்த
அரசு செய்யவேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

நெல் உற்பத்தியைப் பெருக்கினால்தான், இந்தியாவில்
உணவுப் பொருளாதாரம் சீராக நடைபெறமுடியும் என்பதை
இந்த அரசு மட்டுமல்ல; மத்திய அரசும் புரிந்துகொள்ள
வேண்டும். எனவே, நெல் கொள்முதல் விலையைக் கண்டிப்பாக
உயர்த்தவேண்டும். அது அவசியம் இல்லை என்று

சொன்னால், கோதுமையின் விலையைக் குறைத்தாக வேண்டும். கோதுமைக்கு அங்கே ஒரு பக்கம் கூடுதலாகவும், நெல் கொள்முதலுக்கு குறைவாகவும் கொடுத்தால், இந்த இந்தி யாவிலே, பாரத மணிக் கண்டத்திலே ஒரு பக்கத்திலே இருக் கிறோமா என்ற உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற குற்றச் சாட்டிற்கு மத்திய அரசு ஆளாகக்கூடாது என்பதை நான் இந்த மன்றத்தின் மூலம் அவர்களுக்கு எச்சரிக்க விரும்பு கிறேன்.

நெல் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும் அதே நேரத்தில், அரசு விநியோகிக்கின்ற நெல்லுக்கு விலையை உயர்த்தக் கூடாது. அதற்கு வழிவகை செய்யவேண்டும். அதற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு மானியம் கொடுக்க முன்வரவேண்டும். அப்படி மானியம் கொடுத்தால்தான், ஏழை எளிய மக்கள் நிச்சயமாக அதை வாங்கிச் சாப்பிட முடியும். எனவே மத்திய அரசு பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்கின்றது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல் இருக்க, நெல்லுக்கு மானியம் கொடுத்தாக வேண்டும்.

அடுத்து, நெல்லுக்கு குவிண்டாலுக்கு 100 ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்த மன்றத்தில் வைக்கிறேன். கரும்புக்கு டன் 140 ரூபாய் கொடுத்தாக வேண்டும். வட மாநிலங்களில் கரும்புக்கு 135 ரூபாய், 140 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால், தமிழகத்திலே மாற்றாந்தாய் மனப் பான்மையோடு 110 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அணுகுமுறையை நான் வன்மையாகக் கண்டிக்க முன்வருகிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்றுக் கொண்ட பின்பு, தமிழகத்திலே இருக்கக்கூடிய ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலேயும் ஒரு நியாயவிலைக் கடை திறக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில், திறந்துகொண்டு வருகிறோம். அப்படி இருந்தாலும்கூட, இன்னும் 10 குக்கிராமங்கள் சேர்ந்து ஒரு தாய் கிராமத்தில் ஒரு நியாயவிலைக் கடை என்று இருக்கிறது.

(முற்பகல் 11-30.)

பத்து குக்கிராமங்களில் நியாய விலைக் கடை இல்லையென்று சொன்னார்கள். எவ்வளவோபேர் பாரபட்சத்தோடு ஓரவஞ்சனையோடு பாதிக்கப்படுகிறார்கள். குக்கிராமங்களில்கூட 500 பேர்கள் கொண்ட கிராமத்திலேகூட ஒரு நியாயவிலைக் கடையைத் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் — டாக்டர் கலைஞர் இங்கே இல்லை. இருந்தாலும் இந்த மானியக்கோரிக்கை களின் மீது வீதிகளிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளின் விலைப்பட்டியலையும், தனியார் கடைகளின் விலைப் பட்டியலையும் ஒப்பிட்டுக்காட்டி நியாய விலைக்கடை களில் விலை உயர்வாகவும், தனியார் கடைகளில் விலை குறை வாகவும் இருப்பதாகவும் அவர்கள் வீதிகளிலே பேசுகிற பேச்சு மட்டுமல்லாது இந்த மாமன்றத்திலேயே அவ்வாறு பேசியதைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி விலைகளை ஒப்பிடுகின்றபோது பொருள்களின் தரத்தை ஒப்பிடுவதில்லை. நியாயவிலைக் கடைகளில் தரமான சரக்குகள் கிடைக்கின்றன. நியாயமான முறையில் அளவுக இருக்கின்றன. வெளியார் கடைகளில் தரமான சரக்குகள் இருப்பதில்லை. கலப்படமான சரக்குகளை விற்கிறார்கள். அளவுகளும் சரியாக இருப்பதில்லை. இதெல்லாம் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய கண்ணுக்குத் தெரியவில்லை என்பதை அவருக்குப் பதிலாக அவர் வீதியிலே பேசினாலும் இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

விவசாயி உற்பத்தி செய்கிற உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்றால் இடைத்தரகர்களை ஒழிக்கவேண்டும். அவர்களை ஒழிக்கா விட்டால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காது. விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்கிற காலங்களில் மொத்த மாக தனியார் வாங்கி கொடவுன்களில் பதுக்கி வைத்துவிட்டு விலை உயருகிற நேரத்தில் கலப்படம் செய்து வெளிக்கொண்டு வந்து விற்கிற நிலை தமிழகத்தில் இன்றைய தினம் இல்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட கலப்படக் கொள்ளைக்காரர்களுக்கு இந்த அரசு இடம் கொடுத்து விடக்கூடாது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அப்படிப் பட்ட சமூக விரோதிகளை ஒழித்தாக வேண்டுமென்ற நியாய உணர்வோடு இருக்கவேண்டும்.

வெளியார் கடைகளில் அரிசி, கோதுமை, பயறு வகைகள், குழந்தைகள் உணவு போன்றவை தடையின்றி மக்களுக்குக் கிடைப்பதுபோல் நியாய விலைக்கடைகளிலும் கொடுத்தாக வேண்டும். பல நியாய விலைக் கடைகளில் குழந்தை உணவு கிடைப்பதில்லை. குழந்தை உணவு நியாயமான விலையில் கிடைக்கவும் தரமான சரக்குகளாக, கலப்படம் இல்லாத சரக்கு களாகக் கொடுக்கவும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. பண்ணை சேதுராம்] [1979 ஏப்ரல் 20

இன்றைய தினம் மண்ணெண்ணெய்க்கு இருக்கின்ற கிராக்கி
பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும்
எந்த அளவுக்கு வேதனைப்படுகிறார்கள் என்பதை இந்த மா
மன்றம் மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கும் நாலரைக் கோடி
மக்களும் புரிந்து வைத்திருக்கிறார்கள். சென்னையிலும் மற்றப்
பகுதிகளிலும் பெரிய பணக்காரர்கள் வீடுகளில் காஸ் அடுப்பு
வைத்து எரிக்கிறார்கள். ஏழைகள் விறகு வைத்து அடுப்பை எரிக்கி
றார்கள். பெரிய பெரிய பணக்காரர்களின் வீடுகளில் மின்விளக்கு
இருக்கிறது. ஏழைகளின் வீடுகளில் மண்ணெண்ணெய் விளக்கு
இருக்கிறது. உணவுப் பொருள்களைச் சமைப்பதற்கு உபயோகப்
படுத்தப்படும் விறகின் விலை ஏறியிருக்கிறது. அதைக் கட்டுப்
படுத்த வேண்டும். மண்ணெண்ணெய் கிடைக்காமல் இருக்கிறது.
கிடைக்க வழி வகை செய்யவேண்டும்.

விறகு விலை ஏறியிருக்கிறது என்று சொல்லும்போது
தம்முடைய அரசு பலவிதமான சட்டங்களை இயற்றவேண்டும்.
குறிப்பாக வன இலாக்காவை அழித்துவிடக்கூடாது. 'ஹில்
பிரிசர்வேஷன் ஆக்ட்' என்று கொண்டுவந்து வனங்களில் மரங்களை
வெட்டுவதைத் தடுக்கவேண்டும். வனங்களில் அனுமதியின்றி
மரங்களை வெட்டுகிற காரணத்தால்தான் ஏழைகளுக்கு விறகு
கிடைக்கவில்லை. அந்த ஏழைகள் எரிபொருளுக்கு விறகு
கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை
உணர்ந்து அதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டும்.

மண்ணெண்ணெய் கிடைக்க வேண்டுமென்பதற்காக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சர் பகுகுணா
அவர்களை டில்லியில் சென்று பார்த்தார்கள். அவர்கள் பத்து
நிமிஷம் கூடப் பேசியிருப்பார்களா என்ற அச்சம் இருக்கிறது.
மத்திய அரசை இவ்வாறு அணுகுகின்ற நேரத்தில் மத்திய அரசு
மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்ளக்கூடாது
என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு சேமிப்புக் கிடங்குகளில் நெல், மற்ற உணவு தானியங்
கள் சேமித்து வைக்கப்படுகின்றன. மாண்புமிகு எதிர்கட்சித்
தலைவர் முதலமைச்சராக இங்கே இருந்த நேரத்திலே தென்
ஆற்காடு மாவட்டத்திலே அரசுக் கிடங்கு ஒன்றில் 7,500 நெல்
மூட்டைகள் காணாமற்போன செய்தியை தமிழக மக்கள்
அத்தனை பேரும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று
கருதுகிறேன். 7,500 நெல் மூட்டைகள் எங்கே என்று இங்கே
கேட்ட நேரத்திலே அங்கே காவலாளியாக இருந்த ஷேக்நாஹுத்
பெருச்சாளிகள் சாப்பிட்டுவிட்டது என்று கூறிய அந்தச் சோகக்
கதைகளை நாம் மறந்துவிடவில்லை. 7,500 நெல் மூட்டைகளை
பெருச்சாளிகள் சாப்பிட்டுவிட்டது என்று சொன்னால்

1979 ஏப்ரல் 20] [திரு. கே. பண்ணை சேதுராம்]

அதனுடைய உமி எல்லாம் கிடங்கிலே இருக்கவேண்டுமே? எங்கே
உமி என்றுகேட்டால் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.
என்று சொன்ன அந்தக் கதைகளை எல்லாம் உணவு அமைச்சர்
அவர்கள் தெரிந்து வைத்துக்கொண்டு அந்தப் பழம் பெருச்சாளி
களையெல்லாம் பிடிப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனள மானியக் கோரிக்கையின் மீதும் என்னுடைய
கருத்துக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த
மீனளம் என்பது அயல்நாட்டுச் செலாவணியைப் பெருக்குகின்ற
முக்கியமான துறையாகும். தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி
பகுதியிலே அயல்நாட்டு மீன்பிடி படகுகள் திருட்டுத்தனமாக மீன்
பிடித்து கோடிக்கணக்கான ரூபாய்களை நமக்கு இழப்பு
ஏற்படுத்தக்கூடிய வகையிலே வெளி நாட்டுக்காரர்கள்
தமிழகத்தின் கடல் எல்லைக்குள்ளேயே வந்து மீன்களைப்
பிடித்துச் சென்று அயல்நாட்டிலே விற்றுவிடுகிறார்கள்,
மிகவும் குறிப்பாக, தூத்துக்குடி கடற்கரைப்
பகுதியில் நடைபெறுகிறது. அது அமைச்சர் அவர்களுக்குத்
தெரியும், அந்தச் செயல்களை உடனடியாகத் தடைசெய்ய
தகுந்த வழிவகைகளைக் காணவேண்டும்.

இறால் மீன்களை பிடிப்பவர்களிடமிருந்து அரசே கொள்
முதல் செய்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும். அந்தத் தொழிலிலே உள்ள தனியார்கள் இன்றைக்
குக் கோடி கோடியாகக் கொள்ளையடித்துக்கொண்டு வருகிறார்
கள். எனவே இதில் தனியார் துறையை ஊக்குவிக்காமல் இறால்
மீன்களைக் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்வதற்கான ஏற்
பாடுகளைச் செய்யவேண்டும்.

மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் சுலபமான தவணை
களில் கிடைக்கச் செய்வதற்கு வழிவகைகளைச் செய்ய
வேண்டும். தமிழ்நாட்டில் மீனளத் துறையால் தயாரிக்கப்படுகிற
விசைப்படகுகள், குஜராத் மாநிலத்திலே தயாரிக்கப்படுகிற
விசைப்படகுகளைவிட தரத்திலே குறைந்தனவாக இருக்கின்றன.
தரத்திலே குறைந்துள்ள படகுகளின் விலைவாசிகள் உயர்ந்
திருக்கின்றன. அந்த விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு
அரசு முன்வரவேண்டும்.

மீன்பிடி தொழிலில் எவ்வித அனுபவமும் இல்லாதவர்
களுக்கு அரசு சலுகைகள் அளித்து அவர்கள் அந்தச் சலுகை
களைப் பெற்றுக்கொண்டு மீனவர்களுக்குப் போட்டியாக இருந்து

கொண்டிருக்கிறார்கள். அதை அரசு கண்டுபிடித்து உண்மை
யான மீனவர்களுக்கு அந்த மீனவ நண்பர்களுக்குச் சலுகைகளை
அளிக்க வேண்டும். போலியாக வந்தவர்களுக்கு அவர்களைக்
கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்க வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் குளிர் சாதனங்கள் ஏற்படுத்தி,
மீன்களைப் பக்குவப்படுத்தி வைப்பதற்கான முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டும்.

கடலோரப் பகுதிகளிலே வாழுகின்ற மீனவர்களுக்கு பாது
காப்புத் தேவை. ஆகவே அந்த மீனவர்களுக்கு பாதுகாப்பு
இல்லங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும்.

சென்னை, தூத்துக்குடி போன்ற கடலோரப் பகுதிகளில்
ஆண்டு முழுவதும் மீன்கள் சுலபமாகக் கிடைக்கின்றன. அந்த
மீன் உணவு அங்கே மட்டுமல்லாமல் தமிழகத்தில் உள்ள பல
வேறு கிராமங்களிலே உள்ள கிராம மக்களுக்கும் தினம் தினம்
கிடைப்பதில்லை. கிராம மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்
டும், அவர்கள் மீன் வேண்டுமானால் கருவாட்டைத் தான்
பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே எல்லாக் கிராமங்களி
லுள்ள மக்களுக்கும் மீன்கள் குறிப்பாக நியாயவிலைக் கடைகள்
மூலமாகக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு
உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு
முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த நுகர்பொருள் வழங்கு துறை, மீன்வளத்துறை
சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல முன்
வருகின்றேன். நமது அமைச்சர் இங்கே கொடுத்துள்ள குறிப்பிலே,
தமிழகத்திலே இன்றைக்கு உணவு நிலைமை மிக திருப்திகரமாக
இருப்பதாகவும், எல்லா கிராமங்களுக்கும் மிக நியாயமான
முறையிலே அத்தியாவசியமான பொருள்களை விநியோகிப்பதற்கு
வேண்டிய எல்லா ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் சொல்லி
யிருக்கிறார்கள். அதே நேரத்திலே, விவசாயிகள் சம்பந்தமாக
இந்த நுகர்பொருள் வழங்கு கழகம், விவசாயிகளுடைய அந்த
உற்பத்திக் காலங்களிலே, நெல்லோ அல்லது மற்ற பயறு போன்
றவைகளையோ, வாங்கி வைத்துக்கொள்ள வேண்டிய நட
வடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் சொல்லி

யிருக்கிறார்கள். அதே நேரத்திலே, இந்தக் காரியங்களெல்
லாம் கடந்த காலத்திலோ அல்லது இப்பொழுதோ எப்படி
நடைபெற்று வருகின்றன என்பதை எல்லாம் பரிசீலனை செய்து
பார்க்க வேண்டியது அத்தியாவசியமாகும் என்று கருதுகிறேன்.

இன்று உணவு நிலைமைகள் திருப்திகரமாக இருப்பதற்கு
இந்த நுகர்பொருள் வழங்கு துறையோ, அல்லது வேறு தீவிரமான
அரசாங்கத்தினுடைய முயற்சியோ மட்டும் காரணம் அல்ல
என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக
தமிழகத்திலே உள்ள விவசாயிகள், கடந்த காலங்களிலே,
நாம் பலவிதமான கடன்களைக் கொடுத்த காலத்திலே, அதைப்
பயன்படுத்தி, உற்பத்தியைத் தீவிரமாகப் பெருக்கியதனால்,
உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பது உண்மை.

அது மட்டுமல்ல, விவசாயத் துறை சம்பந்தமாக, இன்று
நவீனமான வித்துக்கள், சரியான தொழில் நுட்பங்களை
எல்லாம் அவர்கள் கடைப்பிடித்ததன் காரணமாக, உற்பத்தி கூடி
இருக்கிறது. ஆனால், இந்த வருஷம் 65 இலட்சம் டன் அரிசி
உற்பத்தி என்றால், ஏறக்குறைய 90 இலட்சம் டன் நெல்
உற்பத்தியாகியிருக்கிறது என்று நீங்கள் கணக்குச் சொல்கிறீர்
கள். இப்பொழுது போதுமான விளைச்சல், உற்பத்தி இருக்
கிறது.

இன்றைக்கு, தமிழகத்திலே, விவசாயிகளிடத்தில் கொள்
முதல் பண்ணக்கூடிய காலத்தில், அவர்களுக்கு நியாயமாக
விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால்
மத்திய அரசுதான் அதற்கு முழு காரணமாக இருக்கிறது, எங்
களாலே ஒன்றுமே செய்யமுடியவில்லை என்று சொல்லும்போது
நியாயமான விலையிலே நெல்லைக் கொள்முதல் செய்து,
குறைந்த விலையிலே அரிசியை விநியோகம் செய்ய ஏறக்குறைய
ரூ. 42 கோடி மத்திய அரசு மானியம் கொடுக்கவேண்டும். அப்
பொழுதுதான், இப்பொழுதுள்ள விலையிலேயே அரிசியை விநி
யோகம் செய்ய முடியும் — நெல் கொள்முதலையும் செய்ய முடி
யும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் விலைக்கும்
விநியோக விலைக்கும் இடைவெளி மிக அதிகமாக இருக்கிறது
என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குவிண்
டாலை ரூ. 85-க்கு கொள்முதல் செய்து — நெல்லைக் கொள்
முதல் செய்து, அரிசியாக கிலோ ரூ. 1–60-க்கு அரசாங்கம் விற்
றால் நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். குவிண்டால்
ரூ. 85 என்று சொன்னாலும், ரூ. 100 என்று சொன்னாலும்,
$1\frac{1}{2}$ குவிண்டால் நெல் ஒரு குவிண்டால் அரிசியாகிறது. அரை
வைக் கூலி தவிடுக்குச் சரியாகப் போகிறது. ஆகவே, $1\frac{1}{2}$
குவிண்டால் நெல் ஒரு குவிண்டால் அரிசியாகிறது.

ஆகவே, ரூ. 100க்கே வாங்கினாலும், ரூ. 1-50 தான்வரும்.
ஆகவே, 10 சதவிகிதம். 12 சதவிகிதம் தான் இலாபம் இருக்க
வேண்டும். ஆகவே, அதிகமான லாபம் மட்டுமல்ல, அதிக
மாக விரயம் ஆகிறது. அமைச்சர் கூடக் கடந்த கூட்டத்திலே
சொன்னார்கள். அன்றைக்கு வெளிச் சந்தையிலிருந்து இறக்குமதி
செய்கிற காலத்திலே அங்கேயே அனுப்பக்கூடிய
தவறா, அல்லது வரவழைக்கக்கூடிய முறையிலே முறையிலே
தெரியவில்லை. அங்கேயே ரெயிலிலே கிடந்தது. தவறா என்று
திலே எடுக்காமல் இருந்ததால், 'டெமரேஜ்' காலாகாலத்
ரூ.30 இலட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏறக்குறைய
அதிகாரிகள் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய பெரிய,பெரிய
இருந்தும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதிகாரிகள்
முடியவில்லை, கண்டிக்க வேண்டியிருக்கிறது. அதைப்பாராட்ட

கொள்முதல் விலைக்கும், விநியோக விலைக்கும் பெருத்த
இடைவெளி இருக்கிறது. ரூ. 100-க்குக் கொள்முதல்
செய்தாலும்கூட, இலாபமாக 20 சதவிகிதம் வைத்தாலும்,
ரூ, 1-80க்கு விற்கலாம். ரூ. 120க்குக் கொள்முதல் செய்தாலும்,
20 சதவிகிதம் இலாபமாக வைத்தாலும், ரூ. 2க்கு விற்கலாம்.
அதைத் திறமையாகச் செய்ய அமைச்சரவர்கள் ஏன்
ஆலோசிக்கவில்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தமிழகத்திலே நெல் நன்றாக
விளைகிறது. அதே போல், பருப்பு வகைகளை எடுத்துக்கொண்
டால், தேவை 6 இலட்சம் டன். ஆனால், விளைச்சல் 1 இலட்சம்
டன். விளைகிற காலத்திலே இருக்கிற விலைக்கும் விற்
பனை காலத்திலே விற்கிற விலைக்கும் பெருத்த இடைவெளி
இருக்கிறது. உதாரணமாக உளுந்து ஒரு குவிண்டால் ரூ. 180-க்கு
விளைகிற காலத்திலே விற்கிறது. அப்படியென்றால், ஒரு கிலோ
ரூ. 1-80 ஆகிறது. ஆனால், ரூ. 2, ரூ. 3, ரூ. 4 வரை கூட விற்
கிறது. உற்பத்தியாகிற விலை ரூ. 2-க்கும் குறைவு. கடைசியிலே
விற்பனை விலை ரூ. 4. இந்த இடைவெளியாலே, இடைத்தட்
டிலே இருப்பவர்களுக்கு கொள்ளை இலாபமாக இருக்கிறது.
இடைத்தரகர்களுக்கு எப்படி போய்ச் சேருகிறது? பல இடங்
களிலே சிவில் சப்ளைஸ் கழகம் மூலமாகக் கடை வைத்திருக்
றோம். அங்கு எப்படி விற்கிறோம்? முழுமையாக வாங்கி,
விற்கிற திட்டமும் கிடையாது. விவசாயிக்கு நியாயமான விலை
கொடுத்து, வாங்கி, மக்களுக்கு நியாயமான விலையில் விற்கிற
ஏற்பாடும் கிடையாது. இன்றைக்குக் குறிப்பிலே சொல்
கிறார்கள், விற்பனை குறைந்திருக்கிறது என்று, காரணம்என்ன?
வெளியிலே உள்ள விலையைவிட,நியாய விலைக் கடைகளிலே,
விலை அதிகமாக இருக்கிறது. என்ன காரணம்? கொள்முதல்
செலவு. மற்ற செலவுகள் அதிகமாக இருக்கின்றன. விளைகிற

காலத்திலே, நியாயமான விலை கொடுத்து, கொள்முதல் செய்
யாமல், எப்பொழுது, எப்பொழுதோ கொள்முதல் செய்கிறார்
கள்; எப்படி, எப்படியோ கொள்முதல் செய்கிறார்கள். அத
னாலே,............

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: எப்பொழுது,
எப்பொழுதோ கொள்முதல் செய்கிறார்கள்; எப்படி, எப்படியோ
கொள்முதல் செய்கிறார்கள் என்றெல்லாம் ஒரு கட்சியி
னுடைய தலைவராக இருக்கிற மாண்புமிகு பொறுப்புள்ள உறுப்
பினர் திரு.அழகர்சாமி பேசுவது நல்லதல்ல. தவறுகள் நடக்க
வில்லையென்றுதான் நான் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்
சார்பிலே மாண்புமிகு உறுப்பினருக்கு உத்தரவாதமாகச்
சொல்ல முடியும். கொள்முதல் செய்வதிலே வரைமுறைகள்
கடைப்பிடிக்கப்படுகின்றன. சட்ட விதிகளுக்கு உட்பட்டுத்தான்
கொள்முதல் நடைபெறுகிறது. தவறுகள் நடந்து அதைச் சுட்
டிக்காட்டினால், நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இப்பொழுது கொள்முதல் எப்படி
நடைபெறுகிறது? பெரிய வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள்.
உற்பத்தி பண்ணுகிற விவசாயிகளிடம் வாங்குவதில்லை. கிராம
கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன, மார்க்கெட்டிங்
சொசைட்டிகள் இருக்கின்றன. அங்கு வாங்கலாமே? நெல்
சம்பந்தப்பட்ட வரையிலும் சொல்கிறார்கள், வெளியே விற்க,
லாபகரமாக விற்க நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் என்று
சொல்கிறார்கள். இன்னொரு பக்கம் சொல்கிறார்கள், நியாய
மான விலையை, மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையை
விடக் குறைந்த விலை வெளியிலே இருக்கிற தன்மையில், நம்
மால், நியாய விலைக் கடைகளில், குறைந்த விலையில் விற்க
முடியவில்லையென்று சொல்கிறார்கள். ஒரு பக்கம், விவசாய
விளைபொருளுக்கு விலையைக் கூட்டிக் கொடுக்க வழி பண்ணி
இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, இன்னொரு இடத்திலே,
மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையை விடக் குறைந்
திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நாங்கள்
மத்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைக்குக் கொள்முதல் செய்
திருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, போன வருஷம்
எவ்வளவு கொள்முதல்? இங்கே சொல்லியிருப்பது ரூ. 85 நெல்
லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு. ஆனால், கொடுத்தது ரூ. 70
ஒரு மூட்டையிலே ரூ. 40, 45-க்கு மேல் கிடைக்கவில்லை. நான்
விசாரித்தேன், தஞ்சாவூரிலே, வட ஆற்காடிலே இந்த நிலைதா
னிருக்கிறது. நெல்லுக்கு அதிக விலைக் கொடுக்கவேண்டும்.
ஆகவே, எந்தக் காரணத்தை முன்னிட்டும் கோதுமைக்குக்
கிடைக்கிற விலை நெல்லுக்குக் கொடுக்க வேண்டும், நாங்கள்
மத்திய சர்க்காரோடு சண்டை போடுகிறோம் என்று சொல்கிறார்
கள். நாங்கள் வெளியே இருக்கிறோம், சண்டை போடலாம்,

[திரு. சோ. அழகர்சாமி] [1979 ஏப்ரல் 20

அரசாங்கத்திலே இருக்கிற நீங்கள், நாங்கள் இந்த விலை
கொடுக்கப்போகிறோம், இதை நாங்களே செய்யப்போகிறோம்,
ரிசர்வ் பாங்கி கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, நாங்களே
செய்யப் போகிறோம் என்று சொல்லுங்களேன், அதை ஒத்துக்
கொள்கிறீர்களா?

விவசாயிக்கு ரூ. 120 ஆகிறது, உற்பத்திச் செலவு. ஆகவே,
நாங்கள் ரூ. 85 தான் கொடுப்போம், என்கிறார்கள். மத்திய
சர்க்கார் ரூ. 85தான் நிர்ணயம் பண்ணியிருக்கிறது. அந்தத்
தொகையாவது கிடைக்கிறதா? விவசாயிக்குக் கொடுப்பது
ரூ. 70 குவிண்டாலுக்கு. ரூ. 85-வது கிடைக்க, எல்லா இடங்
களிலும் சென்ற ஆண்டு ஏற்பாடு இருந்ததா? அதற்கு வேண்டிய
நடவடிக்கைகள் எடுத்தீர்களா? கிடையாது.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:</u> கூடுதல் விலை
கொடுக்க நடவடிக்கை எடுத்தீர்களா என்று மாண்புமிகு உறுப்பி
னர் திரு அழகர்சாமி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு ஞானசிகாமணி
அவர்கள் பேசுகிற நேரத்தில், கேரளாவிற்குப் போகிற நெல்லைத்
தடை செய்யாதீர்கள். அப்படித் தடை செய்யாமலிருந்தால்
விளைபொருளுக்கு, உற்பத்தியாளருக்கு நல்ல விலை கிடைக்கும்
என்று இந்த அவையிலே சொன்னார்கள். இந்திரா காங்கிரஸ்
கட்சியின் அருமை உறுப்பினர் திரு சவுந்திரராஜன் அவர்கள்
என்ன தான் செய்தாலும் இந்த அதிகமான விலையால், வியா
பாரிக்குத்தான் அந்த லாபம் போய்ச்சேருகிறதே ஒழிய, விவசாயி
களுக்குக் கிடைப்பதில்லை என்று இந்த மன்றத்திலே பேசியிருக்
கிறார்கள்.

ஆகவே, இப்படி பல்வேறு வேறுபாடான கருத்துக்கள் இந்த
அவையிலேயே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
கள் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். ஆகவே, திரு அழகர்சாமி
சொல்வதைப்போல் அரசாங்கத்தாலே, அதிகமாகக் கொள்முதல்
செய்ய முடியாத இக்கட்டான நிலைமை இப்பொழுது இருக்கிறது.
காரணம் தேவைக்கேற்ற கையிருப்பு இன்றைக்கு இருக்கிறது.
ஆகவே, அதிகமாக வாங்க முடியவில்லை. அப்படி வாங்க முடியாத
காரணத்தாலே விவசாயிகளுக்கு கூடுதல்விலை கிடைக்க ஏதாவது
வழி செய்யலாமா என்று தான் கடந்த குறுவையிலே, தஞ்சை
மாவட்டத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்குக் கொண்டு
போகவேண்டுமென்றால், லெவி கொடுக்க வேண்டுமென்ற
லெவி முறையெல்லாம் நீக்கப்பட்டது என்பதை இந்த நேரத்
திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

1979 ஏப்ரல் 20]

(முற்பகல் 11-50)

<u>திரு. சோ. அழகர்சாமி:</u> தலைவர் அவர்களே, எந்த உறுப்
பினர் சொன்னாலும், அது திரு. ஞானசிகாமணியோ, அல்லது
காங்கிரஸ் கட்சி உறுப்பினரோ யார் சொல்லியிருந்தாலும்
எங்களுடைய கருத்துக்களில் வேறுபாடு இருக்க முடியாது.
நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு
கட்டுப்படியாகக் கூடிய அளவில் அதன் விலையை உயர்த்த
வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். 120 ரூபாய்
உற்பத்தி செலவு என்று சொல்கிறார்கள். நிர்ணயித்திருக்கிற
விலை 85 ரூபாய். ஆனால் கொடுப்பது 70 ரூபாய். மத்திய
அரசு விலையை உயர்த்தினால் அன்றி இந்தப் பிரச்னைக்கு
மாநில அரசு தீர்வு காண இயலாது என்ற அளவுக்கு எங்களால்
முடியாது என்று சொல்கிறீர்கள். இப்படி நீங்கள் சொல்லிக்
கொண்டிருந்தால் அடுத்த வரும் வருடங்களில் ஒரு போகம்
கூட விவசாயிகள் விளைவிக்க மாட்டார்கள். வேண்டுமென்றே
என்று இல்லை, அவர்களால் முடியாது. கட்டுபடியாகாது.
வேண்டுமென்றால் பாருங்கள் அடுத்த வருடம் ஒரு போகம் கூட
விளையாமல் போய் அதனால் அரிசியின் விலை அதிகரித்து.
வாங்குபவர்களுக்கு உணவுப் பொருள் கிடைக்காத சூழ்நிலை
ஏற்பட்டு விடுகிறதா இல்லையா என்று பாருங்கள். நமது
உணவுப் பொருள் பற்றாக் குறைக்காக அண்டை மாநிலங்களி
லிருந்து எதிர்பார்க்க வேண்டிய மிக மோசமான பரிதாபகர
மான, அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டு விடும். அதை இந்த
அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. 85 ரூபாய் நிர்ணயிக்கப்
பட்டு 70 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால்
வேறு என்ன நிலைமை ஏற்படும்? ஏழை விவசாயிகள் வேறு
என்ன செய்ய முடியும்?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:</u> இதைத்தான்
நான் ஏற்கனவே சொன்னேன். திரு. ஞானசிகாமணி அவர்கள்
பேசிய போது கன்னியாகுமரியிலிருந்து கேரளாவிற்கு அரிசியை
வண்டிகளில் வைத்துக் கொண்டு போகிறார்கள். சைக்கிளில்
வைத்துக் கொண்டு போகிறார்கள். தலையில் வைத்துக்கொண்டு
போகிறார்கள். இவர்களெல்லாம் இரகசியமாக நெல்லை அங்கே
கொண்டு போய் விற்கிறார்கள். அதனால் அவர்களைத் தடுக்
காதீர்கள்; அவர்களுக்கு லாபம் கிடைக்கட்டும். கேரள மாநிலத்
தில் கொண்டு போய் அதிக விலைக்கு கொடுக்கட்டும் என்று
பேசியிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட சலுகைகளை
செய்து அதன் மூலம் அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா
என்று அரசு ஆலோசனை செய்கிறது. இதன் மூலம் ஏராளமான
நெல் கேரளாவிற்குக் கொண்டு போக முடியும். இங்கே அரசு
கொள்முதல் செய்யாவிட்டாலும், அவர்களுக்கு இந்தவித சலுகை
யினால் பலன் ஏற்படும் என்று கருதுகிறோம்.

[1979 ஏப்ரல் 20

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு
அரசு இப்பொழுது கையாண்டு வருகிற உணவுப் பொருள்
கொள்கையின் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் நெல்லுக்கு
நியாயமான விலை கிடைக்கவில்லை என்று கூறுகிறேன்,
உதாரணத்திற்குச் சொல்கிறேன். தடையின்றி கேரளாவிற்கு
தஞ்சாவூரிலிருந்து நெல் போகும் என்று சொன்னால் நிச்சயமாக
தஞ்சாவூர் விவசாயிகள் பயன் அடைவார்கள். அங்கே நெல்லுக்கு
விலை ஏறும். கேரளாவிற்குத் தடையின்றி அனுப்புவதற்கு முடி
யாத காரணத்தினால்தான் கேரள அரசு பஞ்சாப் மாநிலத்தி
லிருந்து நெல்லை கொள்முதல் செய்கிறது. ஆக தமிழக அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு
ஒரே வழி தடையை நீக்குவதுதான். அந்தக் கொள்கையை
ஏற்று தடையை நீக்கினால் தமிழக விவசாயிகள் பயன் அடை
வார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, யாரோ
சிலர் இரகசியமாகக் கொண்டுபோவதைத் தடுக்காமல் இருப்பதில்
அக்கறை காட்டுவதை விட அரசாங்கமே விவசாயிகளிடமிருந்து
கொள்முதல் செய்து கேரளாவிற்குக் கொடுத்தால், கேரளாவிற்கு
அனுப்பினால் நமது விவசாயிகளுக்கு எவ்வளவு பயனாக இருக்
கும். ஆனால் இப்பொழுது இந்தப் பலன் விவசாயிகளுக்குக்
கிடைக்கவில்லை, வியாபாரிகளுக்கு, இடைத் தரகர்களுக்குத்
தான் போய்ச் சேருகிறது, ஏற்கெனவே கொள்முதல் செய்த
வியாபாரிகள் தடையை நீக்கி விட்டால் அதிக விலையில் விற்று
விடுவார்கள். இதனால் விவசாயிகளுக்கு என்ன பலன்? என்ன
லாபம்? வியாபாரிகளுக்குத்தான் லாபம் கிடைக்கும்........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்
களே, அரசாங்கம் வாங்குவதற்குப் பதிலாக இந்திய உணவுக்
கழகம் நம்முடைய விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து
கேரளாவிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பிக் கொண்டிருக்
கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு லாபம் உண்டு.......

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம்முடைய
அரசாங்கம் நமது தமிழக விவசாயிகளுக்கு நெல்லுக்கு நியாய
மான அதிக விலை கிடைப்பதற்கு, அதிக விலை கொடுப்பதற்கு
எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை என்பதுதான் என்
னுடைய குற்றச்சாட்டு. வரக்கூடிய ஆண்டில் மிகப் பெரிய
ஆபத்து இருக்கிறது. நான் சொல்வதை நீங்கள் வேண்டு
மானால் அடுத்த ஆண்டில் பாருங்கள். உற்பத்தி குறையக்
கூடிய விதத்தில் பாதிக்கப்பட்டு, அண்டை மாநிலத்திலே நாம்
உணவுப் பொருள்களுக்காக அலைய வேண்டிய நிலை ஏற்படும்
என்று — — —

1979 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் அடிக்கடி குறுக்கீடு செய்வதை
மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப்
பிரச்சினையை முடித்து விட்டால் பதில் சொல்லும்போது
பொதுவாக சொல்லிக் கொள்ளமுடியும் என்றுதான் சொல்கிறேன்,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த ஆண்டு நெல் விளைச்சல்
குறைந்து விடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
இன்னமும் எவ்வளவு விவசாயிகள் அதிகமாக விவசாயம் செய்ய
தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்
பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்,

திரு. சோ. அழகர்சாமி : தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு இருப்பது வேறு விஷயம். அவர்கள் நெல்லுக்குப்
பதிலாக இன்றைக்கு வாழை, சவுக்கு போட்டுக் கொண்டு
இருக்கிறார்கள், சென்ற இடத்தில் எல்லாம் விவசாயிகளைப்
பார்த்துக் கேட்கிற நேரத்தில் போன ஆண்டை விட இந்த
ஆண்டு குறைத்து செய்யப் போகிறோம். இரண்டு போகம்
போட்டால் 1 போகம் தான் போடப் போகிறோம். மேலும்
நெல்லை விட்டு விட்டு வேறு ஏதாவது போடலாமா என்றும்
பார்த்துக் கொண்டு இருக்கிறோம். புஞ்சை பூமியில் பயிர்
செய்பவர்கள் கூட ராகி, கம்பு, போடுவதற்குப் பதிலாக வேலிக்
காப்பான் விவசாயம் செய்கிறார்கள், அதற்கு உரம் போட
வேண்டாம். நாற்று நட வேண்டாம். களை எடுக்க வேண்டாம்.
தண்ணீர் அதிகம் விட வேண்டாம். விலையும் நல்ல விலைக்குப்
போகிறது என்று சொல்கிறார்கள். அதைப் போலவே, வட
ஆற்காடு. தென்னாற்காடு. செங்கற்பட்டு மாவட்டங்களில்
சவுக்கு போடுகிறார்கள். சவுக்கு இன்றைக்கு டன் ஒன்றுக்கு
300 ரூ. விற்கிறது. கரும்பு போட்டால் ரூ. 120 கூட சரியாகக்
கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர்
அவர்களே, இந்த மாதிரி செய்வது விவசாயிகளுக்கே நல்லது
அல்ல என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
இந்த அவையின் மூலம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
நிலைமை எழுந்தால் அது ஒரு நிலையான முறையை ஏற்படுத்
தாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நெல்லை
மாவட்டத்தில் வாழைக்கு அதிகமாக கிராக்கி இருக்கிறது
என்று போட்டார்கள். இன்றைய தினம் வாழை வாங்குவதற்கு
ஆள் இல்லை, ஒரு பொருளின் உற்பத்தி அதிகமாக இருக்கிற
நேரத்தில் அதன் விலையும் குறையும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : ஒப்புக் கொள்கிறேன். நெல்லை
மாவட்டத்தில் நெல்லை விட்டு விட்டு வாழை வைத்து இருக்
கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள்,
இப்போது வாழைக்கு நல்ல கிராக்கி இருக்கிறது, சில
வட்டாரங்களில் சவுக்கு போடுகிறார்கள். ஒரு டன் 300, 350
ரூபாய் என்று அது விலை போகிறது, 5 ஆயிரம், 6 ஆயிரம்
ரூபாய் லாபம் வருகிறது. உற்பத்தி செய்யக் கஷ்டப்படவும்
தேவையில்லை. நல்ல விலையும் கிடைக்கிறது என்பதால்
விவசாயிகள் அந்தப் பயிரைச் செய்கிறார்கள், இந்த பயிர்
மாற்றம் செய்கிற காரணத்தால் விவசாயக் கூலிகள் பாதிக்கப்
படுகிறார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் அரிசன விவசாயக்
கூலிகள் சவுக்கு மரம் நட்டு விட்டதால் எங்களுக்கு கிடைத்து
வந்த நியாயமான கூலியும் போய்விட்டது என்று சொல்லி
அழுதார்கள். இந்தக் கழகத்திற்கு தற்போது 4 கோடி நஷ்டம்
என்று சொல்கிறார்கள். 10 கோடி நஷ்டம் ஆனாலும்
பரவாயில்லை, நெல்லுக்கு சரியான, நியாயமான விலைகொடுத்து
கொள்முதல் செய்து, அந்த விவசாயிகளை அரசு காப்பாற்ற
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 6 லட்சம் டன்
அளவிற்கு உற்பத்தி உயர்ந்து இருக்கிறது, 1 லட்சம் டன் கூட
கொள்முதல் செய்ய முடியவில்லை என்றால் எதற்காக அந்த
சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்க வேண்டும்? அது
மக்களுக்குத் தேவையில்லாத ஒரு அமைப்பாக இருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் இருக்கிற காரணத்தால் தான் இன்றைக்கு அரிசிப்
பஞ்சம் இல்லை. போதுமான அரிசியை சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷன் வைத்து இருக்கிற காரணத்தால்தான் வெளிச்சந்தையில்
விலை அதிகரிக்காமல் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
6 லட்சம் உற்பத்தியில் 1 லட்சம் கொள் முதல் செய்யவில்லையே
என்று கேட்டார். ஏற்கெனவே சேமிப்பிலே இருக்கும் அரிசி
விற்பனை ஆகாமல் இருப்பது மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே,
அந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்க வேண்டும்.
வாதத்திற்காக வேண்டாம் என்று சொன்னேன். ஏதோ
அது இன்னும் சிறப்பாக செயலாற்ற வேண்டும் என்பது தான்
என் விருப்பம். விளைகிற நேரத்தில் பொருள்களை வாங்கிக்
கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், உளுத்தம்
பருப்பு 3 ரூபாய்க்கு மேல் போகாமல் இருக்கும். இருக்கட்டும்.
இன்றைக்கு அந்தப் பருப்பின் விலை உயர்ந்து இருக்கிறது.
நமக்கு வேண்டிய அளவிற்கு—சுமார் 1 இலட்சம் டன் பருப்பு ஆனால்,

வகைகளை அரசு கொள்முதல் செய்து வைத்தால்—விலையையும் கட்டுப்படுத்த முடியும். நியாயமான விலையையும் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். ஆகவே, அந்தப் பொருளகளைக் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கடைகள் மூலமாகவும் கொடுக்க வேண்டும்....

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுதான் கிராமப்புறங்களில் கடைகளை ஆரம்பித்து இருக்கிறோம். முன்னாலே நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்து வந்த பண்டங்கள், அரிசி கோதுமை சர்க்கரை மட்டும் தான். கடந்த ஆண்டில் இருந்து தான் சில கிராமப் புறங்களில் நியாயவிலைக் கடைகள் ஆரம்பித்து இருக்கிறோம். ஏற்கெனவே இருக்கும் சிவில் சப்ளைஸ் கடைகளை பல பொருள் விற்கும் நிலையங்களாக மாற்றி இருக்கிறோம். ஆகவே, இப்போதுதான் சில பொருள்களை அரசாங்கம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்கி, விநியோகம் செய்ய ஆரம்பித்து இருக்கிறது. ஆகவே, காலக்கட்டத்திலே பல்வேறு பொருள்களை அந்தக் கடைகளில் விற்கிற நேரத்தில் வெளியே இருப்பதைவிட குறைவாக விலை இருக்கும் என்று நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அந்த நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்த அத்தியாவசியப் பொருள்களை விளைகிற நேரத்திலேயே கொள் முதல் செய்யும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக பருப்பு வகைகளை தேவையான அளவிற்குக் கொள் முதல் செய்து வைக்கலாம். நெல் சம்பந்தப்பட்ட வரையில் ஏக போக கொள்முதல் எடுத்து சிறு விவசாயிகளை பாதுகாக்கலாம். அந்த மாதிரி செய்தால் சிறு விவசாயிகளைப் பாதுகாத்ததுபோல் இருக்கும். மக்களுக்கும் நியாயமான விலையில் பொருள்களை விநியோகித்ததுபோல் இருக்கும். அரசாங்கம் கொள் முதல் செய்து சிறு இலாபம் வைத்து விற்கலாம். ஆகவே, மொத்த கொள்முதலை அரசு எடுத்துக் கொண்டால், நல்ல விலையைக் கொடுக்க முடியும் என்று சொல்லி, எதிர்காலத்திலாவது இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12—00]

விவசாயிகளுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்று சொன்னால் நெல்லை வாங்கி அரைத்து அரிசி

யாக்கி இது மாதிரி காரியங்கள் செய்கின்ற போது சேதாரம் எல்லாம் வருகிறது. அதாவது சிறு வியாபாரிகள் நெல்லை வாங்குகிறார்கள் அதை அரைக்கின்ற கூலி போன்றவை குவிண் டால் ஒன்று கிட்டத்தட்ட 20 ரூபாய் அதிகமாகிறது. ஆகவே, குவிண்டால் ஒன்றுக்கு அரிசி 150 ரூபாய் என்ற அளவுக்கு வந்து விடுகிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, வியாபாரிகளுக்கு அவர்களுக்கு ஆகின்ற செலவுகள் நியாயமான தாக இருக்கலாம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல்லை வாங்கி அதை அரைத்து அரிசியாக்கி விற்பனை செய்கின்ற வகையிலே ஏற்படுகின்ற செலவு, தனிப்பட்ட வியாபாரிகளுக்கு ஏற்படுகின்ற செலவை விட அதிகமாகத்தான் இருக்கும். காரணம் என்னவென்றால், நெல்லை வாங்குவதற்காக வாங்குகின்ற கடனுக்கு நாம் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதேபோல தேவையான கையிருப்பு நம்மிடம் எப்போதும் இருக்க வேண்டும். அதற்காக நாம் அதிகமான நெல்லைக் கொள்முதல் செய்து சேமிப்புக் கிடங் குகளிலே வைத்திருக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது அந்த சேமிப்புக் கிடங்குகளுக்கு வாடகை கொடுக்க வேண்டும். பிறகு, நெல்லை அரைக்க எடுத்துச் செல்ல வேண்டும். பிறகு அங் கிருந்து மீண்டும் சேமிப்பு கிடங்கிற்கு எடுத்து வர வேண்டும். அதுமட்டுமல்ல. தேவையான நேரத்தில் அங்கே இருந்து விற்பனை நிலையங்களுக்கு கொண்டுவர வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால் செலவு அதிகமாக ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அதே மாதிரி பிரைவேட் வியாபாரிகளுக்கும் செலவு ஏற்படத்தான் செய்யும். அவர்களும் வாடகை கொடுக்க வேண்டும், இன்னும் பல செலவு களும் அவர்கள் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் இவற்றிலே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய வழிகளைக் காண வேண்டும்.

அடுத்து, மிளகாய் போன வருடம் 8 ரூபாயிலிருந்து 11 ரூபாய் வரைக்கும் விற்றதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு 7 ரூபா யிலிருந்து 10 ரூபாய் வரைக்கும் விற்றதாகச் சொல்கிறார்கள். ஆனால், விவசாயிகளுக்கு ஒரு குவின்டால் ஒன்றுக்கு 500 ரூபாய்

தான் கிடைக்கிறது. யாரோ ஒரு சில விவசாயிகள் மிளகாயை வைத்திருந்து கொஞ்ச காலம் கழித்து விற்கின்ற போது குவிண் டாலுக்கு 1,000 என்ற அளவில் கிடைக்கிறது. ஆகவே, இவற்றை எல்லாம் காலாகாலத்தில் கொள்முதல் செய்வது போன்ற காரி யங்களில் ஈடுபட்டால் வெளியிலே விலையைக் குறைக்க முடியும். அதேசமயத்தில் விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் விலை குறைவாக இருக்கிறது. கொஞ்ச நாட்கள் கழித்தவுடன் இரண்டு மடங்காக மிளகாயின் விலை ஏறி விடுகிறது. ஏன் இந்த நிலை? அங்கே விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைப்பதில்லை, வெளியேயும் விலை ஏறிவிடுகிறதே, அப்படியானால் இதனுடைய உண்மையான இலாபம் இடையிலே உள்ளவர்களுக்குச் சென்று விடுகிறது. ஆகவே, இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மண்ணெண்ணெய் பிரச்சனை. அதாவது 31 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெ தமிழ் நாட்டிற்குப் போன ஆண்டு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டும் அதே அளவுதான் மண்ணெண்ணெ கொடுக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது ஏன் இங்கே தட்டுப்பாடு வருகிறது. இன் றைக்கு மண்ணெண்ணெயின் விலை 3 ரூபாய் வரை விற்கிறது. பல இடங்களிலே மண்ணெண்ணெ கிடைப்பதே இல்லை. இன்றைக்கு மண்ணெண்ணெ உபயோகித்து நடுத்தர மக்கள், உத்தியோகத்திற்குச் செல்பவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். விறகு வாங்குவதாக இருந்தால் கூட அதனுடைய விலையும் 300 ரூபாய் ஆகிவிட்டது. பல இடங்களில் ஏழை மக்கள் வீடுகளில் விளக்கு எரிப்பதற்குக் கூட மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. ஆகவே, நமது தமிழக அரசிற்குக் கிடைக் கின்ற மண்ணெண்ணெயை சரியான நிலையில் விநியோகம் செய் வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு தவறிவிட்டது. உண்மையான நிலை என்ன? மத்திய அரசினுடைய பட்ஜெட்டின் போது மண்ணெண்ணெயின் விலையில் 10 பைசா அதிகமாக்கி விட்டார்கள். அப்படி விலை ஏறிவிட்டதன் காரணத்தால் மண் ணெண்ணெ ஏன் இல்லாமல் போக வேண்டும். ஆகவே, அந்த நிலையில் நீங்கள் விசேஷ முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

அடுத்து, இந்த மண்ணெண்ணெ விநியோகிப்பதற்காக கார்டு கள் கொடுக்கப்படுவது பற்றிச் சொல்கிறேன். அதாவது பலரிடம் இன்று கார்டுகளே கிடையாது. அதாவது வெளியே தான் பொருட்களின் விலை குறைந்திருக்கின்றதே என்ற காரணத்தால் கார்டுகளை யாரும் கவனிக்காமல் போட்டு வைத்து விட்டார்கள். இப்போது தேடுகின்றபோது அது எங்கே இருக்கின்றது என்று தெரியாத சூழ்நிலையில் கார்டுகள் இல்லாத நிலை இருக் கிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே,
மக்கள் செய்கின்ற தவறை அரசின் மீது போட மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் நினைப்பது நல்லதல்ல. என்னிடம் கூட
சிலர் கார்டைத் தொலைத்து விட்டதாக வந்து சொன்னார்கள்.
அப்படித் தொலைத்துவிட்டார்கள் என்றால் அவர்கள் குறித்த
காலத்தில் அதற்காக விண்ணப்பம் செய்து கார்டுகளைப் பெறு
வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு கார்டு
இல்லாதவர்களுக்கெல்லாம் மண்ணெண்ணெய் கொடுப்பது என்று
ஏற்பட்டால் அதிலே எவ்வளவு சிக்கல் ஏற்படும் என்பதை மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அரசு செய்த
தவறு என்று நான் சொல்லவில்லை. மக்களுக்கு கார்டு அவ
சியம் இல்லாத நிலை ஏற்பட்டது. ஆகையால் அதைக் கவனிக்
காமல் போட்டுவிட்டார்கள். அதாவது வெளியிலே பொருட்களை
குறைந்த விலையில் வாங்கலாம் என்ற நிலை ஏற்பட்டதுதான்
அதற்குக் காரணம். ஆகவே, உடனடியாக இந்த மண்ணெண்
ணெய் பிரச்சினை வந்த உடன் 4 நாட்களுக்குள் கார்டு விநி
யோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே,
குடும்பக் கார்டை 4 நாட்களுக்குள் கொடுக்க முடியும் என்பது
முடியாத காரியம். முதலிலே அவர்கள் கார்டுகளுக்கு விண்ணப்
பம் செய்ய வேண்டும். பிறகு அந்த விண்ணப்பதாரர்கள் உண்
மையிலேயே அந்த இடத்தில்தான் வசிக்கின்றார்களா அல்லது
வேறுஇடத்தில் வசித்துக் கொண்டு இங்கே கார்டு கேட்கிறார்களா
அல்லது அவர்கள் உண்மையிலேயே மண்ணெண்ணெயை உபயோகிப்
பவர்கள்தானா அல்லது மின்சாரம் போன்றவற்றை உபயோகிக்
கிறார்களா போன்ற விவரங்களை எல்லாம் அதிகாரிகள் அங்கே
சென்று விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு
100 கார்டுகள் என்றிருந்தால் பரவாயில்லை. ஆயிரக்கணக்கான
கார்டுகள் என்று வருகின்ற போது நான்கைந்து நாட்களுக்குள்
விநியோகித்து விட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் உணருவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இப்போது கார்டுகள்
என்று சொல்லும்போது, ஒரே ஆள் 7, 8, 10
கார்டுகள்கூட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான்
சொல்லுகிறேன். வீடு வீடாகப் போய் கார்டுகள் கொடுக்கலாம்.
அப்படிக் கொடுப்பதற்கு நம்மிடத்திலே சரியான மெஷினரி இருக்
கிறது. டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அதற்கு ஏற்பாடு பண்ண
லாம். ஓட்டர் லிஸ்ட் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு
வீடு வீடாகப் போய் கொடுக்கலாம். சிக்கல் வராது. மண்

ணெண்ணெய் எல்லோருக்கும் கிடைக்கவில்லை என்ற குறை அப்
போது இருக்காது. இந்த வேலையை ரெவின்யூ டிபார்ட்மெண்டி
டம் கொடுத்தால் நான்கு ஐந்து நாட்களில் செய்வார்கள்.
கஷ்டம் இல்லை. மண்ணெண்ணெய் கிடைக்காத சங்கடம் இருக்கும்
போது, இதை ஒழுங்காக செய்ய முடியாது என்று சொன்னால்
என்ன அர்த்தம்?

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அறுவடை
காலத்தில் உற்பத்தி செய்கின்ற இடத்தில் வாங்கி, தரமான
பொருள்களை நியாயமான விலையில் விற்க வேண்டும். கட்டா
யக் கொள்முதல் இப்போது நடக்காத சூழ்நிலையிலும், மத்திய
அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்கும் கீழாக
விலைகள் சரிந்துவிட்டால், விலை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்
கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கு
வதற்கு இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சரியாக,
முறையாக வரவேண்டும். ஆனால் வரவில்லை. காலாகாலத்தில்
நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி எடுத்துவந்தால் பரவா
யில்லை.

விசைப் படகுகளுக்கும் கட்டுமரப் படகுக்காரர்களுக்கும்
கட்டுமரப் படகுக்காரர்களுக்கு நாம் பாது
காப்புத் தர வேண்டும். ஆனால், விசைப் படகுக்காரர்கள்
யார் என்று சொன்னால், செல்வாக்குள்ளவர்கள்; அரசியல்
செல்வாக்குள்ளவர்கள். அவர்கள் மீன்பிடிக்கச் செல்வதில்லை.
இடைத்தரகர்களாக பணியாற்றுகிறார்கள். இன்னும் சொல்லப்
போனால் அங்கே குடிசையிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு
பணம் கொடுத்து, அவர்கள் மூலமாக அந்த
வேலையை வாங்குகிறார்கள். அவர்களுக்கு அதற்காக
சாப்பாடு போடுகிறார்கள். ஆகவே அவர்கள் இன்னும்
குடிசைகளிலேயேதான் இருக்கிறார்கள். அந்த இடைத்தரகர்கள்
தான் இன்றைக்கு நிலப் பிரபுக்களாக அங்கே இருக்கிறார்கள்.
மீன்பிடித் தொழிலாளர்களுக்காக கொடுக்கப்படும் சலுகைகள்
அந்த இடைத்தரகர்களாக இருக்கும் முதலாளிகளுக்குத் தான்
போகிறதே தவிர, இந்தச் சாதாரண மீன்பிடித் தொழிலாளர்
களுக்குப் போய்ச் சேருவதில்லை. அவர்களுக்கு இந்த உதவிகள்
பூராவும் நேரடியாகக் கிடைக்கக்கூடிய நடவடிக்கைகளை
எடுக்கவேண்டும்.

விவசாயிகள் இன்றைக்கு கடனைத் திருப்பிக் கொடுக்க முடி
யாத ஒரு சூழ்நிலையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
எனவே, அவர்கள் நெல்லுக்குப் பதிலாக, கரும்பு, விறகு போன்ற
பயிர்களை பயிரிடுகிறார்கள். காரணம், நெல்லுக்குச் சரியான
விலை கிடைப்பதில்லை. அவர்களுக்கு சரியான விலை கிடைப்ப
தற்கு மத்திய அரசோடு போராட வேண்டும். அப்படி போராட

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், உங்களுக்கு உதவியாக நாங்க
ளும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். அது மட்டுமல்ல.
இந்த விவசாயிகளுடைய நிலைமை திருப்திகரமாக இருக்க வேண்டு
மானால், 10 லட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்யவேண்டும்.
நம்முடைய தேவையை கருத்தில் கொண்டு, மொத்தமான கொள்
முதல் செய்து வைத்துக் கொண்டு, எதிர்காலத்திற்கு பயன்படக்
கூடிய வகையில் செய்வீர்களா, அதற்கான நடவடிக்கை எடுப்பீர்
களா என்ற சந்தேகத்தோடு என் உரையை முடித்துக் கொள்
கிறேன்.

*திரு. க. நாச்சிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவு மானியத்தின்மீது,
இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய சில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சர்க்கரை, அரிசி போன்ற
உணவுப் பொருள்கள் தமிழகத்தில் ஓரளவுக்கு விலை குறைந்திருக்
கிறது. ஏழை எளிய மக்கள் வாங்கக்கூடிய அளவில் இந்த
அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்த உணவுத் துறை அமைச்சர்
அவர்கள் தீவிர கவனம் செலுத்தி, குறைந்த விலையில் கிடைக்க
ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

விலைவாசி என்று வருகின்ற நேரத்தில், நான் ஒன்றைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வட மாநிலங்களில்
கோதுமைக்கு விலை நிர்ணயம் செய்ய, மானியம் கொடுப்பது
போல், மத்திய அரசு தென் மாநிலங்களில் உற்பத்தி ஆகின்ற
அரிசிக்கும் மானியம் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு
வற்புறுத்தி வருகிறது. அப்படி வற்புறுத்தி வந்தாலும், மத்திய
அரசு அதற்கு சிறிதும் செவி சாய்க்காமல் இந்த அரசுக்கு மானியம்
கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். நமக்
கெல்லாம் வருத்தம் ஏற்படுகிறது.

மண்ணெண்ணை, டீசல் பொருள்கள் இப்போது தமிழகத்திலே
தட்டுப்பாடு இருக்கிறது. அதுவும், கிராமங்களில் மிகவும்
கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அதற்குக் காரணம் மத்திய
அரசு ஆரம்பத்திலேயே தீவிரமாக கவனம் செலுத்தியிருந்தால்,
இந்த மண்ணெண்ணை, டீசல் தட்டுப்பாடு வந்திருக்காது. நம்
முடைய அரசு இதிலே தீவிரமாக கவனம் செலுத்தி, கிராமங்
களுக்கு மண்ணெண்ணை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.10]

இப்போது வெளி மாநிலங்களுக்கு அரிசி, நெல் இவைகளை
எடுத்துச் செல்வதற்கு 20 சதவிகிதம் லெவி தரவேண்டும் என்று
சொல்லப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக,
விவசாயிகளுக்கு இப்போது ஓரளவு கணிசமான விலையும்

கிடைத்து வருகிறது. இந்த 20 சதவிகித லெவி கொடுப்பதில்
கோவை மாவட்டத்திலுள்ள பெரிய அரிசி ஆலை அதிபர்கள்
சிறிய ஆலை உரிமையாளர்களை லெவி கொடுத்து வியாபாரம்
செய்து கொள்ள முடியாத அளவுக்கு நசுக்கி வருகின்ற சூழ்நிலை
கோவை மாவட்டத்தில் இருந்து வருகின்றன. காரணம் நகரத்தி
லுள்ள பெரிய அரிசி ஆலை அதிபர்கள் ஆங்காங்கே அரிசி இறக்கும்
போது கூட அங்குள்ள குடவுன்களிலுள்ள அதிகாரிகளை சரிக்
கட்டிவிடுகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதன்
மூலம் தங்களுடைய தரமில்லாத அரிசியைக் கூட அங்கே இறக்கி
விடுகிறார்கள். அதே சமயத்தில் கிராமங்களிலுள்ள சிறிய ஆலை
உரிமையாளர்கள் நல்ல தரமுள்ள அரிசியைக் கொண்டுவந்தாலும்
இறக்க முடியாது என்று சொல்லுகின்ற நிலைமையும் இருந்து
வருகிறது. இதற்குக் காரணமாக இருக்கின்ற அதிகாரிகள் மீது
அரசு தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இப்படிப்பட்ட தவறு
செய்கின்ற பெரிய ஆலை அதிபர்களின் உரிமங்களை கூட ரத்து
செய்வதற்கு இந்த அரசு தயங்கக்கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன். இப்போது சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம,
மொத்தமாக அரிசியை கொள்முதல் செய்தாலும் அதை வைப்ப
தற்கு போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது. எங்கு பார்த்
தாலும் தமிழகத்தில் குடவுன் வசதியில்லாமல் பரவலாக பல
இடங்களிலும் வைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கோவை
மாவட்டத்தில் திருப்பூர் வட்டாரத்தில், அதிகமான அரிசி
ஆலைகள் இருப்பதால், அங்கு கொள்முதல் செய்கின்ற அரிசியை
இறக்கி வைப்பதற்கு வேண்டிய குடவுன் வசதியில்லாமல்
இருப்பதால், நாற்பது, ஐம்பது மைல்களுக்கு அப்பால் போய்
அரிசியை இறக்க வேண்டியிருக்கிறது. ஆகவே குடவுன்களை
வாடகைக்கு அமர்த்தி அங்கே அரிசியை இறக்க ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரிலிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக
50கிலோ வீதம் எடைபோட்டு பேக் செய்து கொண்டிருந்தார்கள்.
அப்படி இந்த குடவுனில் பேக் செய்வது எடை குறை
கிறது என்ற காரணத்தால் இப்போது அப்படி பேக் செய்வது
நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதில் அரசு தீவிர கவனம்
செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசி ஆலைகளைப் பொறுத்தவரையில் நவீனப்படுத்த
வேண்டும் என்ற திட்டம் அரசிடம் உள்ளது. எல்லா ஆலை
களையும் நவீனமாக்க தேவையில்லை என்பது என்னுடைய
கருத்து. ஏனென்றால் ஒரு ஹல்லர் வைத்திருப்பவர்கள் ஒரு
நாளைக்கு 50 குவிண்டால் முதல் 100 குவிண்டால் வரை
குறைந்த அளவில் நெல் அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இட வசதி, பண வசதி, போன்ற வசதிக்குறைவின் காரண மாக அவர்கள் பெரிய அளவில் வியாபாரம் செய்ய முடியாத சூழ்நிலையின் காரணமாக இருப்பதால் இந்த நவீனமயமாக்கும் திட்டத்திலிருந்து ஒரு ஹல்லர் வைத்திருக்கின்றவர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும இரண்டு ஹல்லரும் அதற்கு மேலும் ஹல்லர் உள்ள அரிசி ஆலை களை உடனடியாக அரசு இந்த ஆண்டிலிருந்தே நவீனமயமாக்க உத்தரவிடவேண்டும். இரண்டு ஹல்லரும் அதற்கு மேலும் வைத் திருப்பவர்களுக்கு நல்ல இட வசதியும் நல்ல பண வசதியும் இருப்பதால் இந்த ஆலைகளை எல்லாம் நவீனமயமாக்குவதற்கு அரசு தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். அரசு இதற்கான உத்தரவிட்ட பிறகும், அதை மேற்கொள்ளாதவர்களின் அரிசி ஆலைகளின் உரிமங்களை கூட ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நுகர்பொருள் வழங்கல், மீனளம் ஆகிய மானியக் 'கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதா கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இன்றைக்கு இந்த அறிக்கையில் சொல்லி யிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் இருக்கின்ற உணவுப் பொருட்கள் அதிகமாக கையிருப்பு இருக்கின்ற காரணத்தால் மீண்டும் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நல்ல முறையில், அவர்களுக்கு கட்டுப்படியான விலையில் விலை கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, மத்திய அரசு நிர்ணயித்துள்ள 85 ரூபாய் வரை கூட விவசாயிகளுக்கு சேர வழி யில்லாமல் இருக்கிறது என்கின்ற ஒரு நிலையை சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

இந்த நிலைமையைப் பார்க்கின்றபோது. இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கேரள மாநிலத்தில் அரிசி அவர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே, கேரள அரசு பஞ்சாப் மாநிலத்தில் வாங்குவதாகச் சொல்லப்படு கிறது. இங்கே இருக்கக்கூடிய அதிகப்படியான கையிருப்பை கேரள மாநிலத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களுக்குக் அப்படி கொடுப்பதன் மூலம் இங்கே விவசாயிகளுக்கு அதிகப்படி யான நெல் கொள்முதல் செய்கின்ற வாய்ப்பு ஏற்படும். எனவே, அந்த வகையிலே இந்த அரசு ஏதேனும் முயற்சி எடுத்திருக் கிறதா ? கேரள அரசோடு அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பதையும் நான் இந்த அரசிடம் அறிய விரும்பு கிறேன்.

இன்றைக்கு விலைவாசி குறைந்திருப்பதாகச் சொல்லப்படு கிறது. விலைவாசி கட்டுக்குட்பட்டு குறைந்த விலையில் பொருள் கள் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை இங்கே குறிப் பிட்டிருக்கிறார்கள். அரிசி, சர்க்கரை, கடலை எண்ணை போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை மிகவும் அடக்கத்தோடு, கட்டுக்கடங்கிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது என்று சொல் லும்போது, என்னால் ஒன்றைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடி யாது. அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைந்திருக்கின்ற அதே நேரத்தில், ஓட்டல்களில் விற்கின்ற உணவுப் பொருள்களின் விலை குறைந்திருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்ல முடியும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பேருந்து நிலையங்களில் இருக்கின்ற உணவு விடுதிகளை எடுத்துக் கொண்டால், விழுப்புரம் பேருந்து நிலையத்தில் ஒரு உணவு விடுதி இருக்கிறது. அங்கே உணவுப் பொருள்களின் விலை மிக வும் அதிகமாக இருக்கின்றது. ஒரு வடையின் விலை 50 காசு என்று விற்கப்படுகின்றது. அப்படி விற்றாலும். தரக்குறைவான நிலையிலே இருக்கின்றது. அதை வாங்கிச் சாப்பிடுவோர், குறிப் பாக ஓட்டலிலே சாப்பிடுகின்ற பிரம்மச்சாரிகளுக்கு இதிலே ஒரு வழிவகை செய்ய வேண்டும். ஓட்டல்களிலே விற்கப்படுகின்ற உணவுப் பொருள்களின் விலைகளில் ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காய்கறி, இறைச்சி, விறகு ஆகியவற்றின் விலை உயர்ந்திருப்பதாகச் சொல் லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். இதற்கு முன்னால் இந்த அரசே வீடுதோறும் சென்று காய்கறி விற்கக்கூடிய திட்டத்தை கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள். அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று ? என்று கேட்டுக்கொள்ள விழைகிறேன். வெறும் அறிவிப்புச் சர்க் காராக இருக்கக்கூடாது. நடைமுறைக்கு கொண்டுவரக்கூடிய சர்க்காராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன, நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பற்றி பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். சிக்கனமாக இருக்க வேண்டும் என்று சொன் னார்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு பணம் அதிகம் செலவழித்தாலும். மற்ற மார்க்கெட்டுகளில் உள்ள விலையைவிட குறைந்த விலையில் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு மூன்றாவது ஆண்டறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை எடுத்துப் பார்க்க வேண்டும் என்று தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு அதிகமான செலவில் அதை அச்சடிக்க வேண்டுமா ? ஆர்ட் பேப்பரில் போடப்பட்

படுக்கிறது, குறைந்தது இதன் விலை ரூபாய் 4 அல்லது 5 செலவாகியிருக்கும், ஆனால், இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா? சிக்கனத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில்....

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அறிவுரைக்கு நன்றி. அடுத்த முறை வெளியிடும்போது, மிகவும் சிக்கனமான முறையில் அது வெளியிடப்படும்.

திரு. பொ. விஜயராகவன் : எங்களுக்குப் பார்க்கக்கூடிய அளவில் ரிப்போர்ட்டு இருந்தால் போதும், சிக்கனத்தைப் பற்றி சொன்னதற்கு, அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி.

இன்னொன்று, இந்த நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் ஒரு சில பிரச்சனைகள் காரணமாக, போராட்டம் ஏற்பட்டது. அந்தப் போராட்டம் இன்றைக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, அதற்குப் பிறகு ஏறத்தாழ 19 ஊழியர்கள் இன்றைக்கு பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-20]

அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பேசித் தீர்த்து சுமுகமான முடிவு ஏற்படும் நேரத்தில் பழிவாங்குதல் போன்ற நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பழிவாங்கப்பட்ட ஊழியர்களை விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடன் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அரசு மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வது நல்ல வழிவகைகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கும்.

மீனளத் துறையைப் பொறுத்தவரை ஒரு சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்களிடம் பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்—இரண்டு மூன்று முறை இந்த மாமன்றத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஒருபுறம் சொல்லு கிறார்கள். மத்திய அரசு வழங்கவில்லை என்று சொல்லி மத்திய அரசின் போக்கைக் குற்றம் சாட்டுகிறார்கள், குறைபட்டுக் கொள் கிறார்கள். மத்திய அரசு செய்கிற நன்மைகளை இவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்று பார்த்தால் நான் ஆணித் தரமாகச் சொல்வேன்— சில உதாரணங்களைச் சுட்டிக்காட்ட

முடியும், பிஷரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு மானியமாக வழங்கப்பட்ட, மத்திய அரசு மானியமாக வழங்கப்பட்ட 120 இலட்சம் ரூபாயை வங்கிகளிலே பிக்செட் டெபாசிட்டாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். ஆக்கப் பணிகளுக்காகச் செலவிடப்பட வேண்டிய..........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை இந்த அவையில் சொல்ல வேண்டாம். மீனளத்துறைக்கு மத்திய அரசு மானியமாகத் தொகை கொடுத்திருக்கிறது. இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், எதற்காகக் கொடுத்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. பொ. விஜயராகவன் : அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெற வேண்டுமென்பதற்காக நான் கூறுகிறேன். எதற்காக, எந்த ஆக்கப் பணிக்காக என்பது போன்ற தகவல்களை நாங்கள் பெற முடியாது, அமைச்சர் அவர்கள்தான் அவற்றைத் தரவேண்டும்,

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதால் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சில ஃபிரீசிங் பிளாண்ட்ஸ் அமைப்பதற்காக டிசம்பர் மாதத்தில் கொடுத்ததாக நினைவு. அதற்கான மெஷினரிஸ் வாங்க வேண்டியிருக்கிறது. அதுவரையில் பணத்தை பையில் வைத்திருக்கொண்டிருக்க முடியாது. அதனால் வங்கிகளிலே போட்டிருக்கிறார்கள்.

திரு. பொ. விஜயராகவன் : நல்ல வேளை. திருப்பிக் கொடுக்காமல் இருந்தால் சரி.

''மரைன் பிராடக்டஸ் எக்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் அதாரிடி ஆப் இந்தியா'' என்ற நிறுவனம் இந்திய அளவில் இருந்து கொண்டிருக்கிறது, அதில் 30 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அந்த 30 பேர் உறுப்பினர்களிலே 7 பேர் அந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் அவர்களில் தமிழகத்தில் இருந்து இரண்டு உறுப்பினர்கள் இருந்தார்கள், கேரளத்திலிருந்து 4 உறுப்பினர்கள் இருந்தார்கள், இந்த முறை பார்த்தால் தமிழகத்திற்கு ஒரு உறுப்பினர் தான் இருக்கிறார், அவரும் தமிழகத்தைச் சேர்ந்தவரா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து இங்கு வியாபாரம் செய்கிற ஒருவர் தமிழகத்தின் சார்பாக அதிலே உறுப்பினராக இருக்கிறார், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர் அதிலே இல்லாத நிலையில் பிரச்சினைகள் வரும்போது

தமிழகத்தைப் பாதிக்கும் பிரச்சினை வரும்போது குரல் கொடுக்க
அந்த நிறுவனத்தில் யார் இருக்க முடியும்? மற்ற மாநிலத்தைச்
சேர்ந்தவர் தமிழகத்திற்குக் குரல் கொடுப்பார்கள் என்று எண்ணு
கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 34 ப்ரீசிங் யூனிட்டு
கள் இருக்கின்றன. சரியான கச்சாப் பொருள்கள் இல்லை
என்ற காரணம் சொல்லுகிறார்கள். வெளி மாநிலங்களுக்கு
குறிப்பாக கேரளத்திற்கு இங்கிருந்து மீன்களைக் கொண்டுபோய்
விடுகிறார்கள். இங்குள்ள ஃப்ரீசிங் பிளாண்டுகள் கச்சாப் பொரு
ளான மீன்கள் இல்லாத காரணத்தால் சரியாக நல்ல முறையில்
செயல்பட முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று
சொன்னார்கள். ஆகவே, அவ்வாறு மீன்கள் எடுத்துச் செல்லப்
படுவதைத் தடை செய்கிற அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. க. உ. பொ. எ. மண்டி : மாண்புமிகு
உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்களுக்கு இந்த அரசின்
சார்பில் உண்மையில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். கேரள மாநிலத்திலிருந்து ரா-காஷ்யூ-நட்சை-முந்
திரிப் பருப்புகளை வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகக்கூடாது
என்ற சட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அந்தச்
சட்டத்தின் அடிப்படையில் இங்கிருக்கும் இறால் மீன்களை கேரள
மாநிலத்திற்கோ வேறு மாநிலத்திற்கோ கொண்டு போகக்கூடாது
என்று சட்டம் கொண்டுவர அனுமதி கேட்ட நேரத்தில் இப்
போது மத்தியில் இருக்கும் அரசு மறுத்துவிட்டது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் மத்திய அரசோடு பேசி இந்தச் சட்டத்தை
நிறைவேற்ற அனுமதி பெற்றுத் தந்தால் அரசு மெத்த நன்றி
யுடையதாக இருக்கும்;

திரு. பொ. விஜயராகவன் : துணைத் தலைவர் அவர்களே,
நாங்கள் நேரடியாக மத்திய அரசோடு பேசுகின்ற முறையில்
ஆட்சியில் இல்லை. நீங்கள்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள்.
ஆட்சி செய்து வருகிற நீங்கள் மத்திய அரசோடு பேச்சு நடத்தி
முடிக்க வேண்டும். அது உங்களுடைய பொறுப்பு. எங்கள் துணை
வேண்டுமென்று தமிழக அரசு கேட்டால் அதிலே அவர்களோடு
வருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இதுபோன்ற
நிலைமைகளையெல்லாம் நீக்கி மீனவர்களை வாழ்வில் வளமடைய
செய்வதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி முனையிலிருந்து ஏறத்
தாழ 30, 34 மைல்களுக்கு அப்பால் மீன்பிடி கிரவண் வெட்ஜ்
பாங்க் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே இன்றைக்குத்
தமிழக மீனவர்களாக இருந்தாலும் அல்லது இந்திய மீனவர்களாக

இருந்தாலும் மீன்பிடிக்கச் செல்வதில்லை. ஆனால் ஜப்பா நாட்
டு காரர்களும். சைனா நாட்டுக்காரர்களும் அங்கே சென்று மீன்
பிடித்து பல கோடிக்கணக்கான ரூபாய்களை பெறக்கூடிய சூழ்
நிலை இருக்கிறது. அதை நாம் பெறுவதற்கான சூழ்நிலை இப்
போது இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே சின்னமுட்
டத்தை ஒரு மீன்பிடி துறைமுகமாக ஆக்குவதற்கு சர்வே எல்
லாம் முடியப்பெற்று அது மத்திய அரசாங்கத்தின் கரங்களிலே
இருந்துகொண்டிருக்கிறது. அதை இந்த அரசு முயற்சியெடுத்து
வாதாடிப்பெற்று வெகு விரைவில் அதை நிறைவேற்றி அந்தப்
பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு வழிசெய்கிற முறையிலே மற்ற
நாட்டுக்காரர்கள் அந்த மீன்வளத்தை எடுத்துச் செல்வதைப்
போல நாமும் அந்த மீன்வளத்தைப் பெறுகின்ற அளவிற்கு
ஆவன செய்ய, வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இரால் மீன் போன்றவைகளுக்கு பர்ச்சேஸ் டாக்ஸ் என்ற
முறையிலே சாதாரண மீனவர்களிடமிருந்து வசூலிக்கிறார்கள்.
ஆனால் அதை எக்ஸ்போர்ட் பண்ணுகிறவர்களிடமிருந்து வாங்
கினால் ஒப்புக்கொள்ளலாம், ஆனால் சாதாரண மீனவர்களிட
மிருந்து அதை வாங்குவதை இந்த அரசு தடை செய்து அது ஒரு
பெரிஷபிள் ஆர்டிகிள் என்ற முறையிலே எடுத்துக் கொண்டு
அந்த வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,
அப்படி நீக்குகின்ற பொறுப்பு மாண்புமிகு உணவு-மீனளத்துறை
அமைச்சர் அவர்களிடத்திலே இல்லை என்றாலும் அரசுக்கு
இந்த அமைச்சரே பரிந்துரை செய்து அந்த வரியை நீக்குவதற்கு
ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடியிலே ஒரு பிஷிங் ஹார்பர் இருக்கிறது.
அது ஆரம்பித்து பல வருடங்கள் ஆகின்றன. இதுவரையிலே
அங்கே எந்த விருத்தியும் ஏற்படாத அளவிற்கு ஐஸ் பிளாண்ட்,
ஃப்ரீசிங் பிளாண்ட் இல்லாதது காரணம் என்று சொல்லப்படு
கிறது. அந்தக் காரணத்தால் மிகப் பெரிய அளவிற்கு அது வளர
முடியாத சூழ்நிலை இருந்துக் கொண்டு இருக்கிறது என்பது மட்டு
மல்லாமல் அங்கே இருக்கின்ற மீன் போன்ற பொருட்களை
ஏற்றி இறக்குவதற்குச் சரியான வாய்ப்பும் வசதியும் இல்லை
யென்றுகூடச் சொல்லுகிறார்கள். இவைகளையெல்லாம் செய்து
அந்த தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை மேலும் அபிவிருத்தி
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலே குளைச்சல் ஒரு புராதன துறைமுக
மாக இருந்துகொண்டிருக்கிறது. அதை மீன்பிடி துறைமுகமாக
மாற்ற வேண்டுமென்று பல வருடங்களாகக் கேட்டுக்கொள்ளப்
பட்டு வருகிறது. அந்தக் கோரிக்கை, வேண்டுமானால் கால
தாமதம் ஏற்படலாம், ஆனால் மீன் பிடிக்கக் கூடிய படகுகள்

[திரு. பொ. விஜயராகவன்] [1979 ஏப்ரல் 20

வந்து போகக் கூடிய அளவிற்கு படகுத் துறை ஒன்றைக் கட்டித்
தருவார்களானால் அவர்கள் கடலில் போய் வருவதற்கு ஆழ்
கடலில் மீன் பிடிப்பதற்கு வழி வகைகள் இருக்கும். கன்னியா
குமரி மாவட்டத்தில் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு வழியில்லாத
ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம் என்னவென்றால் அங்கே
சரியான மீன்பிடி துறைமுகம் இல்லாததுதான். ஆகவே இந்த
அரசு அதைச் செய்யவேண்டுமென்று எண்ணுகிறேன்.

(பிற்பகல் 12-30)

அந்த குளைச்சல் பகுதியில் ஒரு படகுத் துறை உடனடியாக
கட்டித் தருவதற்கு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்ள
வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஒருங்கிணைந்த கிராம மதிப்பீடு திட்டத்தின் கீழ்
8 கிராம மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும்தான் விசைப்
படகு கன்னியாகுமரி மாவட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.
மேலும் ஏறக்குறைய 38 மீனவர் கூட்டுறவு கிராமச் சங்கங்கள்
இருக்கின்றன. இவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இவை
களை உடனடியாக ஏற்று இவர்களுக்கும் விசைப் படகுகள்
கொடுக்கப்பட வேண்டும். இந்த ஒருங்கிணைந்த கிராம மதிப்பீடு
திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற எல்லா சலுகைகளும்,
எல்லா மீனவ கிராமங்களுக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்
பட வேண்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி 50 சதவீதம்
மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் கொடுக்கப்படுகிறது
என்று தெரிகிறது. அவைகளை எல்லாச் சங்கங்களுக்கும் கொடுப்
பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளைச்சல் பகுதியில் கடலூர்
பட்டணத்தில் ஒரு மீனவர்கள் பயிற்சி நிலையம் இருந்து வரு
கிறது. அதை எடுத்து விடப் போவதாக சொல்கிறார்கள்.
அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக
இருக்கக் கூடிய ஒரே பயிற்சி நிலையம் அது. அதன் மூலம்
அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு பல உத்திகளை
சொல்லித் தருவதற்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. ஆகவே
அந்தப் பயிற்சி நிலையம் அங்கே இருக்க வேண்டும், என்று இந்த
அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். 1978-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட கடல்
கொந்தளிப்பு, புயல் மழை காரணமாக, ஏராளமான மீனவர்கள்
தங்களின் கட்டுமரம், வலை முதலியவற்றை இழந்தனர். அவர்

1979 ஏப்ரல் 20] [திரு. பொ. விஜயராகவன்]

களுடைய நஷ்டத்தை மதிப்பீடு செய்ய மீன் துறை அதிகாரிகள்,
அந்த மீனவ கிராமங்களுக்கு நேரிடையாகச் சென்று மதிப்பீடு
செய்து அரசுக்கு பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால்
அதற்கான புரொபோசல்கள் அனுப்பப்பட்டும் இதுவரை அவர்
களுக்கு எந்தவிதமான உதவியும் வழங்கப்படவில்லை. நஷ்ட
ஈடும் கொடுக்கப்படவில்லை. அவைகளை அனுமதிக்கப்படவே
இல்லை. அதை உடனடியாக அனுமதித்து அவர்களுக்கு வழங்
கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடி
யுங்கள். மணியாகிவிட்டது.

திரு. பொ. விஜயராகவன் : இன்னும் ஒரே ஒரு விஷயம்
உப்பு நீரில் மீன் வளர்ப்பதற்கான பண்ணையும், கழிமுகப் பகுதி
யில் மீன் வளர்த்தலும் என்ற தலைப்பின் சில தகவல்களை
சொல்லியிருக்கிறார்கள். சீர்காழி என்கிற இடத்தில் கழிமுக
மீன் பண்ணையை அமைச்சர் கூட சென்று பார்வையிட்டார்
என்று சொல்கிறார்கள். அந்த மீன் பண்ணையிலும் உள்நாட்டு
மீன் பண்ணையிலும் இறால் மீனை வளர்ப்பதற்கான சூழ்நிலையை
உருவாக்கியிருக்கிறார்கள். இருந்தாலும் எல்லா இடங்களிலும்
இதுபோன்ற மீன் பண்ணைகளை உருவாக்கி மீனவர் குடும்பங்
களிலிருந்து வருகிறவர்களுக்கும், வேலையில்லா படித்த பட்ட
தாரிகளுக்கும் ஊக்கம் அளித்து, அவர்களுக்கு இதுபோன்ற
பண்ணைகளில் வேலை செய்வதற்கும், புதிதாக பண்ணைகளை
அமைப்பதற்கும் தேவையான எல்லா வசதிகளையும் உதவிகளை
யும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து
சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 5 பேர்கள்
பேசுவதற்கு இருக்கிறார்கள்.

திரு. பொ. விஜயராகவன் : இன்னும் ஒரே ஒரு கருத்தைச்
சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். மீனவர்களுக்காக
வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கன்னியா
குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து கொல்லம்கோடு
வரையில் எடுத்துப் பார்த்தால் இந்த மீனவர்கள் கிராமங்கள்
தான் உள்ளன. அவர்களுடைய வீடுகள் அடிக்கடி தீப்பிடிக்
கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த மீனவர்களுக்கு வீடு
கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்ற
கோரிக்கையை முன் வைத்து, என்னை பேச அனுமதித்த துணைத்
தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

[1979 ஏப்ரல் 20

*திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத்துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை சட்டப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுத்த பேராவூரணித் தொகுதியில் 30 கிலோ மீட்டர் தூரம் வரையில் சுமார் 25-க்கு மேற்பட்ட கிராமங்களில் மீனவ மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் மீன் பிடிக்கச் சென்று வர வசதியாக ஏரிப்புறக்கரை, மல்லிபட்டினம், செந்தலை வயல் ஆகிய ஊர்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகின்றேன்.

பேராவூரணித் தொகுதி கடலோரப் பகுதியில் உவர் நீர் மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கறுப்பு இறால், வெள்ளை இறால் போன்ற மீன்களை வளர்க்கத் திட்டமீட்டுச் செயல் படுத்தி வருவதற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சை மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தின் கிளை அலுவலகத்தை மல்லிப் பட்டினத்தில் துவக்கியதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

கடலோர மீனவர்கள் புயல் கடல் கொந்தளிப்புக் காலங்களில் கீற்றாலும், ஓலைகளாலும் கட்டப்பட்ட தம்முடைய குடிசைகளையும், தம் பிழைப்புக்கு பயன்படுத்தி வந்த சிறு படகுகளையும் கட்டு மரங்களையும் விட்டு விட்டு சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலுள்ள நகரப் பகுதிகளுக்கு ஓடிச் செல்லும் காட்சி மிகுந்த பரிதாபமானதாகும். இந்நிலையைப் போக்குவதற்கு ஏரிப்புறக்கரை, கீழத் தோட்டம், அந்தோனியார்புரம், பிள்ளையார் திடல், சேதுபாவா சத்திரம், சம்பைப் பட்டினம், அம்மணி சத்திரம், அடைக்குத் தேவன், செந்தலை வயல், பந்தர் பட்டினம், சோமநாதன் பட்டினம், கணேசபுரம், செம்பியன் மகாதேவிப் பட்டினம் போன்ற கிராமங்களில் புயல் காப்பிடங்களுக்கான கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டுகிறேன்.

மீனவர்கள் தங்களுடைய வலைகளை பழுது பார்ப்பதற்கும் புதிய வலைகள் தயார் செய்வதற்கும் அரசு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடனுடனும், மானியத்துடனும் நைலான் பருத்தி நூல்கள் வழங்க ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

பேராவூரணித் தொகுதி மீனவர்கள் பிடித்து வரும் இறால் மற்றும் மீன்களை தனிப்பட்ட வியாபாரிகளே விலைக்கு வாங்குகின்றனர். இதனால் மீனவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை.

1979 ஏப்ரல் 20] [திரு. எம். ஆர் கோவேந்தன்]

ஆகவே மல்லிப்பட்டினத்தில் குளிர்பதன நிலையத்தினை ஏற்படுத்தி மீன்களை அரசே நேரடியாக வாங்கி மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

கருமங்குடா, காரங்குடா ஆகிய கிராமங்களில் 100 ஆண்டுகளுக்கு மேலாக புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து வரும் மீனவ மக்களுக்கு அவர்கள் அனுபவித்து வரும் நிலத்தை அவர்களுக்கு பட்டாச் செய்து தர வேண்டுகின்றேன்.

மல்லிபட்டினத்திலுள்ள இயந்திரம் பழுது பார்க்கும் நிலையம். இயந்திரங்கள் அனைத்தையும் பொறுத்தப்பட்டும் இதுவரை இயங்கவில்லை, அதை உடனடியாக இயங்க வைக்க ஆவன செய்ய வேண்டுகின்றேன்,

எனது தொகுதியிலே கடலோரப்பகுதியிலே வாழும் மீனவர்கள் மருத்துவ வசதி இல்லாது வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி பல தொற்று நோய்கள் பரவுகிறது. ஆகவே இதில் உடனடி கவனம் செலுத்தி மல்லிபட்டினத்தில் உள்ள கிராம மருத்துவ மனையை விரிவு படுத்த அரசு மருத்துவ மனையாக்கி தரம் உயர்த்தி எம்.பி.பி.எஸ். மருத்துவரை நியமனம் செய்து படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவ மனையாக மாற்றித் தர, உயர்த்தித் தரக் கேட்டுக் கொள்கிறேன்.

மனோராவுக்கு பக்கத்தில் கட்டப்பட்டுள்ள மீனவர்கள் காலனியில் 100 வீடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டும் இதுவரையில் யாரும் குடி புகாமல் தவறான காரியங்களுக்குப் பயன்படும் கூடாரங்களாக இருக்கின்றது. காடுபோல் உள்ள அப்பகுதியை அழகுபடுத்தி சாலை அமைத்து, மின் விளக்குப் போட்டு உடனடியாக குடியமர்த்த ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

மீனவர்கள் வாழும் கிராமங்களுக்கு மீன்துறை மானியத்தின் மூலம் செய்து தரப்பட்ட இணைப்புச் சாலைகள் அனைத்தும் பழுதுபட்டு. போக்குவரத்திற்கு லாயக்கில்லாமல் இருக்கிறது. இச்சாலைகளை மீன் துறை மூலம் உடனடியாக செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவ மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஒரு புறக் காவல் நிலையம் உடனடியாக சேதுபாவாசத்திரத்தில் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கடற்கரை ஊர்களாகிய மல்லிபட்டினம், கம்பைபட்டினம், கீழத்தோட்டம் ஆகிய ஊர்களில் ஊருக்கும், கடலுக்கும் போய் வரும் கால்வாயை அகலப்படுத்தி ஆழப்படுத்தி வெட்டித்தர ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

சம்பைப்பட்டினத்திலிருந்து கடலுக்கு போய்வரும் கால்வாயை அகலப்படுத்தி, ஆழப்படுத்தித் தருமாறு மீன் துறை இயக்குனரைக் கேட்டுக் கொண்டபோது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டு கோடி ரூபாய் செலவு பிடிக்கும் என்று தவறான கணக்குப்போட்டு அதனால் கால்வாயை ஆழப்படுத்த முடியாது என்று எனக்குக் கடிதம் வந்துள்ளது. மீன் துறை அதிகாரிகளின் கவனக்குறைவிற்கு இது எடுத்துக் காட்டாகும்,

நான் இது சம்பந்தமாக பொறியாளர்களை அணுகிக் கேட்டதற்கு ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு பிடிக்காது என்று கூறுகின்றார்கள் அதை ஆய்வு செய்து தவறான புள்ளி விவரம் கொடுத்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கூட இத்துறை அதிகாரிகள் உதாசீனம் செய்கின்றார்கள், இதை அவையின் மூலம் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். தமிழ்நாட்டிலுள்ள 12,500க்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்களின் ஓரளவு வருமானம் மீன்பாசிக் குத்தகை மூலம் கிடைத்து வந்தது. அது தற்போது ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியம் வருவாய்த்துறை பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குளம், குட்டை, ஏரிகளிலுள்ள மீன்பாசி வருமானம் அனைத்தையும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

இது ஊராட்சி மன்றங்களை செயலிழக்க வைக்கும் வருவாய் இழப்புத் திட்டமாகும். இதை அரசு மறு பரிசீலனை செய்து முன்பு இருந்ததை போலவே ஊராட்சிகளுக்கு வருவாய் வர ஆவன செய்யவேண்டுகின்றேன்.

சென்ற பல ஆண்டுகளாக கடலோரப் பகுதிகளின் நாட்டுப் படகு, விசைப்படகு தகராறு இருந்து வருகின்றது. இந்நிலையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாளே நேரடியாக தலையிட்டு சுமுகமான சூழ்நிலை உருவாக்க பெரு முயற்சி எடுத்துக் கொண்டு வருவதை நாடறியும் என்றாலும் அப்பிரச்சினை இன்று வரை தீராததால் நாட்டுப்படகு நான்கு நாட்கள் விசைப் படகு மூன்று நாட்கள் என்று கடலில் மீன்பிடிக்கச் செல்வதால், விசைப் படகுக்காரர்களுக்கு கடனும் வட்டியும் கட்ட முடியாமலும், நாட்டுப் படகுக்காரர்கள் வருமானமின்றி அன்றாட வாழ்வுக்கே அல்லல்படுவதாலும் இப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து எல்லாக் காலங்களிலும் எல்லா மீனவர்களும் மீன் பிடிக்க வழி செய்யும் வகையில் விரைந்து ஒரு நல்ல தீர்வு காண இந்த

அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதிலே இருந்து அத்தியாவசியப் பண்டங்களும் எந்தவிதமான தட்டுப்பாடு இல்லாமல், குறிப்பாக மக்களுக்கு அரிசி பஞ்சம் இல்லாத வகையில் நிலைமைகளை உருவாக்கியிருப்பதற்காக இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வியாபாரிகள் புளியை வாங்கி பதுக்கி, அதிக விலைக்கு விற்க திட்டமிட்டு இருக்கிறார்கள். அதை இந்த அரசு கவனத்துடன் கண்காணித்து புளி தாராளமாகக் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

[பிற்பகல் 12-40]

திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய நுகர்பொருள் வழங்கல், மீனளம் ஆகிய இரு மானியக் கோரிக்கைகள் மீதும் நான் சார்ந்து இருக்கக்கூடிய இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளிலே முக்கியமாக உணவுப் பொருளைப் பொறுத்தவரையில், பல்வேறு திட்டங்கள் குறிப்பிடப் பட்டு உள்ளன. அவற்றை இரண்டு பிரிவுகளாக பிரிக்கும் நேரத்தில், ஒன்று, வாங்கி உண்பவர்கள்—நகர மக்களின் முக்கியமான குறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் புள்ளி உயராமல் இருக்க, விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற விதத்தில் இன்று அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இந்த ஆண்டிலே அந்தப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த எடுத்து இருக்கிறார்கள் அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

இன்னொரு பகுதியாக இருக்கும் அந்த பொருள் உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இருக்கும் விவசாயிகளின் நிலையை ஒரு அளவிலே கண்காணிக்க வேண்டும் என்ற விதத்தில் எடுத்து வைக்க வேண்டுகிறேன். இன்று நாட்டிலே இருக்கும் கொந்தளிப்பான நிலையை அரசு கவனிக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், அதிலே. எங்களுக்கும் அக்கரை உண்டு, அந்த வகையில் மக்கள் பல்வேறு பிரச்னைகளை எங்களிடம் தெரிவிப்பதால். உங்களோடு ஒத்துழைக்க நாங்கள் கடமைப்பட்டு இருக்கிறோம், இன்று இருக்கும் நிலையில் உணவுப் பொருள் உற்பத்தியின் விலை குறிப்பாக நெல்விலையை எடுத்துப் பார்த்தால் நெல்லின் விலை கட்டுப்படியாகாத

விலையாக இருக்கிறது என்பதை அரசே ஏற்றுக்கொள்ளும் சூழ்
நிலை இருக்கிறது. இன்று விவசாயப் பல்கலைக்கழக பரிந்துரை
யின் அடிப்படையில் 117 ரூ. உற்பத்தி செலவு ஆகிறது என்று
சொல்கிற நேரத்தில் மத்திய அரசின் அடிப்படை 85 ரூபாய்
விலைக்கு மேல் கொடுக்கமுடியாது என்று சொல்கிற சூழ்நிலை
இருக்கிற காரணத்தால். கொடுக்கிற விலை கட்டுப்படியாகாத
விலையாக இருக்கிற காரணத்தால். விவசாயிகள் நிச்சயமாக இந்த
ஆண்டிலே உற்பத்தியைக் குறைத்துக் கொள்வார்கள், அது
நாட்டுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இன்றைக்கு விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும்
என்பதற்காக. அவர்களின் உற்பத்தித் திறன் பெருகவேண்டும்
என்பதற்காக அரசின் பல்வேறு திட்டத்தின் மூலம் அதனைப்
பெருக்கியிருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம், அந்த
இன்டன்சிவ் கல்டிவேஷன் முறையில் அதிகமான அளவிற்கு தீவிர
மான கவனம் செலுத்தி வந்ததன் காரணமாக நெல் உற்பத்தி
60 லட்சம் டன் என்ற முறையில் அமைந்து இருக்கிறது என்று
குறிப்பிட்டு இருக்கிறார்கள், ஆனால் வேளாண்மை அமைச்சர்
அவர்கள் கொடுத்த அறிக்கையில் 64 லட்சம் டன் சென்ற ஆண்டு
உற்பத்தி ஆகி இருந்தது என்றும். இந்த ஆண்டு 1 லட்சம் டன்
அதிகம் உற்பத்தி செய்து 65 லட்சம் டன் ஆக உயரும் என்றும்
புள்ளிவிவரம் கொடுத்து இருக்கிறார்கள், இந்தப் புள்ளி விவரங்
களில் மாறுதல்கள் இருந்தபோதிலும். இந்த மாதிரி உற்பத்தி
இருக்கிற நிலையில் பாதிப்பு எற்பட்டால் இப்போது ஏற்பட்டு
இருக்கும் மகிழ்ச்சிகரமான நிலை அடுத்த ஆண்டு இல்லாமல்
வேறு விதமாக பிரதிபலித்து விடும் என்பதைக் கூறிக் கொள்
கிறேன். அந்த நிலைமையைப் போக்க மத்திய அரசை வலி
யுறுத்த ஜனதா கட்சி உறுப்பினர்கள் முன்வரவேண்டும்.
ஆனால் அவர்கள் நெல்லுக்கு 85 ரூ. என்று மத்திய அரசு நிர்ண
யித்து இருக்கிறது. அதையே சரியாகப் பயன்படுத்தவில்லை
என்று கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் நிச்சயம் தமிழ் நாட்டு
மக்களின் நலன் கருதி, மத்திய அரசிடம் வற்புறுத்துவார்கள்.
வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அப்படி
வற்புறுத்தினால் தான் நம்முடைய பிரச்னை தீரும்.

குறிப்பாக நெல் விலை இப்படி குறைந்து இருப்பதற்குக்
காரணம். தமிழகத்திலே அதிகமான உற்பத்தியின் காரணமாக
வும், வெளி மாநிலத்திற்குப் போகமுடியாத சூழ்நிலையும்.
இருப்பதாலும். அதிகமாக உற்பத்தி செய்த தானியங்களை அரசு
வாங்குவதற்கு முடியாத நிலையில் இருப்பதாலும், இன்று நுகர்
பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வாங்கிச் சேர்க்க முடியாத
நிலை இருப்பதாலும் தான் என்று கூறிக்கொள்கிறேன், நம்
முடைய கையிருப்புகளை வேறு மாநிலத்திற்கு அனுப்புவதோடு
மட்டுமல்லாமல். அரிசியின் விலை குறைவாக இருக்கிற இந்த

நேரத்தில் அதைக் கொள்முதல் செய்து வெளி உலகச் சந்தையில்
அதிக விலைக்கு விற்று அதன் மூலம் கிடைக்கும் உபரி தொகையை
வைத்து விவசாயிகளுக்கு ஓரளவிற்கு எப்போதும் நியாயமான
விலை கிடைக்கத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கருத்தை
நான் கூறிக்கொள்கிறேன்,

அடுத்து நம்முடைய மாநிலத்துக்குள்ளே இந்த நெல் போக்கு
வரத்துத் தடையை நீக்கிவிட்டோம். இன்றைக்கு தமிழகத்தில்
எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் ஓரளவிற்கு தங்க
ளுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய அளவிற்கு
நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இக்காரணத
தால் அரிசி அதிகமாக மக்கள் உட்கொள்வதன் காரணமாக
தானிய வகைகளான கம்பு, சோளம், ராகி போன்ற பொருட்
களை கையால் கூட தீண்டுவது கிடையாத அளவிலே இன்று
மக்கள் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அதிகமான
அரிசி நம்மிடத்தில் இருப்பதால்தான். ஆகவே, அரிசியை
வேறு மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதிலே இருக்கக்கூடிய
தடைகளை நீக்க வேண்டும். குறிப்பாக நுகர் பொருள் வாணிபக்
கழகம் கொள்முதல் செய்து அனுப்பலாம் வேறு மாநிலங்களுக்கு.
இந்த வியாபாரிகள் வாங்கிய நெல்லில் 20 சதவீதம்
லெவியாகக் கொடுத்துவிட்டுத்தான் வேறு மாநிலங்களுக்கு
எடுத்துச் செல்லவேண்டும் என்று இருக்கிறது. லெவியை அரசு
எடுத்துக் கொள்ள முன்வராததால் இதன் அடிப்படையிலே வெளி
மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய நெல் தடுக்கப்படுவதால் இங்கே
இருக்கின்ற விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை
விற்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே இதை உணர்ந்து
தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்று இருக்கக்கூடிய பல்வேறு விலைவாசிகளைப்
பார்க்கின்ற நேரத்திலே உணவுப்பொருட்களின் விலை குறைந்து
இருக்கின்றது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருளின் விலை
குறைந்திருந்தும் கூட இந்த நாட்டில் வாழ்க்கைப் புள்ளி விவரம்
அதிகமாக உயர்ந்துக்கொண்டே போகிறது. ஆகவே
அதற்குத் தகுந்தவாறு சம்பளமும் அதிகமாகக் கொடுக்கவேண்டிய
நிலைகள் எல்லாம் ஏற்பட்டு சம்பளமும் அதிகமாகக் கொடுத்துக்
கொண்டிருக்கிறோம். இதை நாம் கவனிக்கவேண்டும். இப்
போது நமது அமைச்சரவர்கள் கூறுகிற நேரத்தில் பணப்பயிராகிய
வாழையினுடைய விலை குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள்
இன்றைக்கு விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய வாழைத்தாரின்
விலை 7 அல்லது 8 ரூபாய் என்ற அளவில் தான் இருக்கிறது.
ஆனால் வெளியிலே சென்னை போன்ற நகர் புறங்களில் வாழைப்
பழம் சாப்பிட வேண்டும் என்ற நிலையில் அதனுடைய விலையைப்

பார்த்தால் தார் 30 ரூபாய் என்ற அளவிலே இருக்கின்றது.
வெளியிலே ஏன் இந்த அளவிற்கு விலை உயர்கிறது. ஆகவே
இதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இதைக் கட்டுப்படுத்தி இடைத்தரகர்களை ஒழித்தால் வாங்கிச்
சாப்பிடுகிறவருக்கும் செலவு குறைந்து, வாழ்க்கைப் புள்ளியும்
குறையும். இதை ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன்.
இதுபோன்ற பல நிலைகளை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

அடுத்து சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன், விவசாயி உற்பத்தி
செய்த பொருட்களை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும்.
விலை உயருகின்ற காலத்திலே, வெளியிலே அதிகமான விலை
ஏற்படுகின்ற காலத்திலே, வெளியிலே விற்கின்ற விலையை விட
குறைவான விலைக்கு விற்கவேண்டும். அப்படி இல்லாமல்
இங்கேயும் அதைவிட அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அதன்
காரணமாகத்தான் விலைவாசிகள் எல்லாம் உயர்ந்து கொண்டே
போகின்றன. இதனை நிச்சயமாகக் கட்டுப்படுத்தவேண்டும்
என்ற எண்ணத்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிவில்
சப்ளைக் கார்ப்பரேஷன் மூலமாகக் பெறக்கூடிய அரிசியின்
விலை பல்வேறு கட்டங்களுக்குச் சென்று கடைசியாக உயர்
வதைப் பார்க்கவேண்டும். அப்போது வெளியிலே உள்ள விலை
குறைவாக இருக்கின்றது. அப்படியில்லாமல் சிவில் சப்ளைக்
கார்ப்பரேஷனிலே விலை குறைவாக இருக்கும் என்ற எண்ணத்தை
மக்கள் மனதிலே ஏற்படுத்தவேண்டும். அந்த வகையிலே
செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சென்ற ஆண்டிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய விவ
சாயிகளுடைய நிலையை எடுத்து அமைச்சரவர்களிடத்திலே
சுட்டிக்காட்டினேன். இப்போது இரண்டு அமைச்சர்களும்
பக்கத்திலேயே இருக்கிறார்கள். இரண்டு பேர்களிடத்திலே
யும் தமிழகத்தில் உள்ள விவசாயிகளுடைய நிலையை எடுத்துக்
காட்டினேன். விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை
குறிப்பாக வெங்காயத்தை அறுவடை செய்வதற்கு கூட முடியாத
கேவலமான சூழ்நிலையில் விலை இருப்பதைச் சுட்டிக்காட்டி
அவைகளைக் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யவேண்டும்
என்று கூறினேன். அப்போது உணவு அமைச்சரவர்கள் பல்
வேறு புள்ளிவிவரங்களைச் சேகரித்து மத்திய அரசி
னிடத்திலே இந்த மாநிலத்தில் பற்றாக்குறை இருக்கிறது
என்றும் அதனால் இங்கிருந்து வெங்காயத்தை ஏற்றுமதி
செய்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என்று சொல்லி
விட்டோம். அதனால் மீண்டும் நாங்கள் பார்த்துச் செய்கிறோம்
என்று சொன்னார்கள். இதை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன்
என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் ஒரு பொருளை
உற்பத்தி செய்யப் போகிறோம் என்ற உடனே எவ்வளவு உற்

பத்தி செய்யப் போகிறோம் எவ்வளவு நிலங்கள் அவற்றை
உற்பத்தி செய்யக்கூடிய அளவில் இருக்கின்றன என்பதை எல்லாம்
கணக்கெடுத்தால் நல்லது. சென்ற ஆண்டைவிட பன்மடங்கு
அதிகமாக வெங்காயம் உற்பத்தியாகி இருக்கின்றது. ஆகவே
தக்க முறையிலே வெளியிலே ஏற்றுமதி செய்திருந்தால் சென்ற
ஆண்டை விட மூன்றுமடங்கு அதிக அளவிலே ஏற்றுமதி செய்
திருக்க முடியும். அதன் மூலமாக விவசாயிகளுக்கு நல்ல விலை
கிடைத்திருக்கும். அன்னியச் செலாவணியும் பெருகி இருக்கும்
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இப்போதிருக்
கின்ற நிலைக்குக் காரணம் புள்ளி விவரங்களைச் சேகரிக்க
முடியாத நிலைதான் என்ற குறையினைக் கூற விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

இந்த மாதிரி சுட்டிக் காட்டினேன்: 60 லட்சம் என்று
உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; 64 லட்சம் என்று
விவசாய அமைச்சர் சொல்கிறார். ஆரம்ப காலத்திலேயே
சரியான முறையில் கணக்கிட்டால், தேவைக்கு அதிகமாக இருக்
கின்ற நெல்லை வேறு மாநிலங்களுக்கு அனுப்பினால், நாம்
இதை சரிசெய்துகொள்ள முடியும் என்ற எண்ணத்தை இந்த
நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
இன்று இருக்கின்ற நிலையில், உணவுப் பொருளைப் பொறுத்த
வரையில், நெல்லைத் தவிர, வேறு தானியங்களைப் விவசாயம்
செய்யமுடியாத நிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் மன
திலே வைத்துக்கொள்ள வேண்டும்.

சிவில் சப்ளைஸ் பற்றி கூற விரும்புகிறேன். 1977ஆம்
ஆண்டில் புயல், வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் மூலமாக வெளி மாநிலங்களிலே இருந்து பெற்ற
அரிசியை இங்கே இருக்கக்கூடிய கூட்டுறவு நாணய சங்கங்கள் மூல
மாக விநியோகம் செய்ய கொடுக்கப்பட்ட அரிசி மிகவும் கெட்டுப்
போன அரிசி. அவைகளை திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டும்
என்று பலமுறை வாதாடியும், சென்ற 7 மாதங்களுக்கு முன்பு
ஏற்றுக்கொள்ளப்பட்டது. 7 மாதங்கள் ஆகியும், உரிய தொகையை
திருச்சி ஜில்லா கரூர் தாலூக்காவில் உள்ள கூட்டுறவு நாணய
சங்கங்களுக்கு கொடுக்கப்படவில்லை. அப்படி கொடுக்கப்
படாத காரணத்தால், அவர்கள் வங்கியிலே இருந்து பெற்ற
ஓவர் டிராப்ட் தொகைக்கு, அபராத வட்டித் தொகையாக
பன்மடங்கு அவர்கள் செலுத்த வேண்டியிருக்கிறது. மீண்டும்
அவர்கள் ஓவர் டிராப்ட் வாங்கமுடியாத நிலைமையிலே இருக்
கிறார்கள் என்பதை மான்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலை

யில், அதற்குரிய தொகையை இந்த வங்கியின் கணக்கிலே கட்ட வேண்டுமென்று ஒரு உத்தரவை அமைச்சர் அவர்கள் உடனடியாக இடவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த கிரசினைப் பற்றி எல்லோரும் சொல்லி விட்டார்கள். நான் கிராமத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு சென்று வந்தேன். அங்கே சிமெண்ணையைப் பொறுத்த வரையிலும் இப்போது அவர்களுக்கு அது ஒரு அரிய பொருளாக இருக்கிறது. சிமெண்ணை 10 பைசா அதிகமான விலையில் கிடைக்கின்றது என்று சொன்னார்கள். 10 பைசா அல்ல, எவ்வளவுக்கு கிடைத்தாலும், எவ்வளவு ரூபாய் ஆனாலும், கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் மின்சார வசதி இல்லாத காரணத்தால், சிமெண்ணை வாங்குவதற்குத் தயாராக இருக் கிறார்கள். அவர்களுக்கு 100 மில்லி கூட கிடைப்பதில்லை. 100 மில்லி ஒரு ரூபாய் ஆனாலும் வாங்கக்கூடிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே, இதை அமைச்சர் அவர்கள் கவனித்து விரைவாக அங்கே இருக்கக் கூடிய கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு விற்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்று உணவு உற்பத்தியிலே விவசாயிகளுடைய நிலைமையைப் பற்றிச் சொல்லவேண்டும். உங்களிடம் இல்லாமல் இருக்கலாம். அந்தத் துறை களைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட் டிருக்கிறது. இருந்தாலும் விலைவாசி இந்தச் சூழ்நிலையைப் போக்குவதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும். டீசலைப் பொறுத்தவரையில் அது உள்நாட்டு இலாகாவின் பொறுப்பிலே இருக்கிறது. அவர்களை இது கிடைப்பதற்கு பரிந்துரை செய்யவேண்டும் என்று எடுத்துச் சொல்லவேண்டும். மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதன் காரணமாக, டீசல் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். டீசல் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அதிகப் பணம் கொடுத்தால், எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. 200 லிட்டர் கொண்ட ஒரு பேரல் ரூ. 400-க்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

டீசல் பற்றவில்லை என்றும், கிரசின் பற்றவில்லை என்றும் சொன்னார்கள். நகரத்திலே காஸ் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தால், கிரசினை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னார்கள். இவைகளை எல்லாம் மனதிலே வைத்து ஆவன செய்யவேண்டும். நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் மணியடித்து உட்காரச் சொல்லலாம்.

இப்படிப்பட்ட வழிகளில், அமைச்சர்கள் தனது துறை இல்லையே என்று பாராமல் அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் எளிதான முறையில் போதிய அளவு டீசல் கிடைப்பதற்கு வழி செய்து, பிரச்னையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு சி. ராமநாதன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவ தற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியையும் வணக்கத்தை யும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்துள்ள உணவு—மீனவ துறைகளின் மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைத் கூறலாம் என விழைகிறேன். உணவுப் பண்டங்கள் கடந்த காலத் தில் அதிகமான விலையில் விற்கப்பட்டு இப்போது இரண்டாண்டு காலமாக உணவுப் பண்டங்களின் நிலைமை சீரடைந்து இருப்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இருந்தாலும் இந்த நிலைமை எப்படி வந்தது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் வறட்சியினால் விளைப்பொருட்கள் பாதிக்கப்பட்டு அதனால் விளை பொருட்களின் விலையேற்றம் அதிகமாக இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியை ஏற்றபிறகு நல்ல மழை பெய்ததின் காரணமாகவும் விவசாயத்திற்கு நல்ல பாசனம் கிடைத்ததின் காரணமாகவும் விளைபொருட்கள் அதிகமாக விளைந்தது. அந்த நிலைமையில் விளை பொருள்களுக்கு நல்ல கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை என்றும், அதன் காரணமாக மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் கூறிக் கொண்டிருப்பதை அரசு நன்கு உணர்ந்து இருக்கிறது. அதே நேரத்தில் நான் அரசுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமது எதிர்க்கட்சியில் இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கூறும்போது இனிமேல் நெல் உற்பத்தி கண்டிப்பாக குறையும் என்று சொன்னார்கள். அது உண்மையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து என்பதை கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இன்று விவசாயிகள் நெல் உற்பத்தியை அறவே மறந்து, அவர்கள் வணிகப் பயிர்களை பயிரிட முற்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக கூறிக்கொள்ள கடமைப்பட்டிருப்பதால் இதைச் சொல்லுகிறேன் உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அதை மறுத்து விவசாயிகள் தண்ணீர் வசதி கேட்டிருக்கிறார்கள் என்றும், அந்த அதிகமாக கொடுத்திருப்பதால், நெல் உற்பத்திக்கு அதிகமான வாய்ப்பு இனியும் இருக்கிறது என்றும் கூறினார்கள். இருந்தாலும் தண்ணீர் கிடைப்பதும் விவசாயத்திற்கு முக்கியம் என்றிருப்ப தால், நமது விவசாயத்துறை அமைச்சர் அவர்களும் உணவுத்

துறை அமைச்சர் அவர்களும் கலந்து ஆலோசித்து எதிர்காலத்தில் உணவு பற்றாக்குறை இல்லாமல் இருப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கொள்முதல் விலையைப் பொறுத்த வரையில் நமது அரசு, மத்திய அரசோடு போராடிக் கொண்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்று என்றாலும். நாம் இதில் உறுதியான திடமான நடவடிக்கை எடுக்காவிட்டால் உண்மையிலேயே இது எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதோடு, விளைபொருட்களின் விலை குறைவு காரணமாக உற்பத்தி குறைந்துவிடாமல் இருப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். கொள்முதல் விலை 74 என்று சொல்லும்போது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் விலை 85 என்று சொல்லப்பட் டிருந்தும், அந்த முறையில் கொள்முதல் செய்தாலும் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவது உண்மை என்றாலும், விவசாயிகளுக்கு ஏற்படுகிற நஷ்டத்தை கருத்தில் கொண்டு 115 ரூபாய் என்பது ஓரளவு சட்டுப்படியான விலை யாக இருக்கிறது. இந்த 115 ரூபாய் விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லும்போது

(பிற்பகல் 1—00)

6 லட்சம் டன் கொள்முதல் செய்வதற்கு 42 கோடி நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறும்போது, கிட்டத்தட்ட 60 லட்சம் டன் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட 420 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் சொள்ள விரும்புகிறேன். ஆகவே இப்படிப்பட்ட செயல்களில் நாம் மத்தியஅரசோடு போராட வேண்டும். மத்திய அரசு இந்த நெல் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்வது ஏதோ வடக்கு தெற்கு என்ற போக்கில் செயல்படும் ஒன்றாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 300 கோடி ரூபாய் கோதுமைக்கு கொடுக்கப்படும் மானியம் ஏன் இந்த நெல்லுக்கு மட்டும் கொடுக்கக் கூடாது ?

இன்று இந்த விவசாயிகளிடம் இருக்கும் ஒரு பெரிய குழப்பத் திற்கு இந்த மத்திய அரசு செவி சாய்க்கவில்லை என்பதுதான் காரணம். எனவே இந்தக் கொள்முதல் விலையை உயர்த்திச் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று ஒரு எச்சரிக்கையாக மத்திய அரசை இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஆந்திரா, கர்நாடகம், பீகார், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களிலே இருந்து புளியை கொள்முதல் செய்கிறோம். ஆனால் நம்முடைய போக்குவரத்து சாலைகளின் இரு பக்கத்தி லேயும் நிறைய புளியங்கன்றுகளைவைத்து, மரங்களை உற்பத்தி செய்தால்இது எதிர்காலத்தில் இந்த புளி தட்டுப்பாட்டை போக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதை உணவு அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் ஆகியவர்களோடு கலந்து அதற்குத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காய்கறி நிலைமை. 80 கிலோ கொண்ட ஒரு மூட்டைக் கத்தரிக்காய், முன்பு கிலோ 4 ரூபாயாக இருந்தது இப்போது அது 2.50 ஆக குறைந்து விட்டது; ரூ. 2 க்கும் விற்கப் படுகிறது. இந்த நிலைமையை சரி செய்வதற்கு ஏதாவது ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கிராமப்புறங்களில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு, ஒரு பெரிய பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. நகர்ப்புறத்தில் லைசன்ஸ் பெற்றிருப்பவர்கள்தான் விளியோகம் செய்ய வேண்டும். அப்படி விளியோகம் செய்யும் போது, 11 மணிக்குப் போய் கியூவிலே நின்றால் இடையிலே இந்த விளி யோகத்தை நிறுத்தி விடுகிறார்கள். வெய்யிலிலே நின்று எண் ணை வாங்குவோம் என்று பல மணி நேரம் நின்றாலும், எண்ணை கிடைப்பதில்லை. எண்ணை கிடைக்காமல் திரும்பி செல்ல வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் இந்த நிலையிலே மண் ணெண்ணை விநியோகத்தை அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலமாகவோ அல்லது நியாயவிலைக் கடைகளின் மூலமாகவோ விளியோகம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஜே. உய்யக்கொண்டான் : சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவு மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தைப் பார்க்கும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் பெரும் அளவிற்கு குறைந்து காணப்படு கிறார்கள். எனக்கு ஏற்படுகின்ற ஐயப்பாடு, இன்றைய கால கட்டத்திலே உணவு நிலைமை மிகவும் திருப்திகரமான சூழ்நிலை இருக்கும்போது, நாம் இந்த மானியத்தின்மீது என்ன பேசப் போகிறோம் என்ற கருத்தில் அவர்கள்வெளியே சென்றிருக்கலாம். ஆனால், இந்த நேரத்திலே இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் களில் பெருவாரியாக ஒத்த கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். நானும் இந்த கருத்தின் அடிப்படையிலே, இந்த விவசாயிகளுக்

1979 ஏப்ரல் 20] [திரு. கே. ஜே. உய்யக் கொண்டான்]

குவிண்டால் அரிசி தயாரிக்க 150 கிலோ நெல் தேவை. 150 கிலோ நெல்லின் கிரயம் 127.50. நெல்லை அவித்து, அரைத்து உலர்த்துவதற்குண்டான செலவுகள் ஆட்களின் கூலி எல்லாம் ஒரு குவிண்டால் அரிசிக்கு 12 ரூபாய் ஆகும். ஆகவே, ரூ. 139.50 காசு ஏறக்குறைய 140 ரூபாய் ஆகிறது. தனிப்பட்ட வியாபாரி என்றால் அரைவை செய்து விற்பனை செய்வதில் 5 சதவிகிதம் லாபம் வைத்துக் கொள்ளலாம் 10, 15 சதவிகிதம் லாபம் வைத்துக் கொள்ளலாம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். 15 சதவிகிதம் லாபம் என்று கணக்கிட்டால் 161 ரூபாய் விலை ஆகிறது. ஆனால் இன்றைய தினம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கிலோ ரூ. 1.60' குவிண்டால் 160 ரூபாய்க்குத் தான் விற்பனை செய்து வருகிறது என்பதை ஆதாரத்தோடு கூறுகிறேன்.

நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் கூட பல பொதுக் கூட்டங்களிலும் இந்த மாமன்றத்திலும் கூறியிருக்கிறார்கள்—மத்திய அரசு நெல் விலையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முதல்வர்கள் மாநாட்டிலும் வலியுறுத்திக் கூறியிருக்கிறது. அது நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால் போராடுவேன் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தேவையில்லை—அவர்களுக்கு ஆளைக்... பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நன்றாகக் கவனித்துக் கொள்ளட்டும். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்புங்கள். நாங்கள் போராடத் தயாராக இருக்கிறோம்.

இன்னொரு காரியத்தையும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் நான் சொல்லப்போகும் கொள்கையை மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரதம அமைச்சருக்கு 100 ரூபாய் விலையாவது நெல்லுக்குக் கொடுக்க வேண்டுமென்று தந்தி கொடுக்கவேண்டும். அவரவர்கள் கட்சிகளின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கும் பிரதம அமைச்சர் அவர்களுக்கும் சிற்றூர், பேரூர் கிளைக் கழக அமைப்பாளர்கள், செயலாளர்கள் தந்தி கொடுத்து கண்டனத்தைத் தெரியப்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லும்போது 85 ரூபாய்க்கு வாங்கினால் 1½ குவிண்டால் நெல்லுக்கு 1 குவிண்டால் அரிசி கிடைக்கும்; ஒரு குவிண்டால் அரிசி ரூ. 127.50 காசு ஆகிறது. செலவு 12 ரூபாய் ஆகிறது

ஆகவே, 140 ரூபாய் ஆகிறது; அப்படியானால் ஒரு கிலோ
வுக்கு ரூ. 1.40 பை அடக்கம் ஆகிறது. 12 சதவிகிதம், 15 சத
விகிதல் லாபம் இருக்கலாம் என்று சொன்னேன் என்று சொன்
னார்கள்.

நீங்கள் லாபமே சேர்க்காமல் சொன்னால் 1.40 அடக்க
விலை வருகிறது. 1.60 என்று விற்றால் 0.20 லாபம் இருக்
கிறது, ஆனால் நீங்கள் நட்டத்தில் விற்கிறார்கள் என்று சொல்
கிறீர்களே எப்படிப் பொருத்தமாக இருக்கும்? 1.40 தான்
அடக்கவிலை ஆகிறது.

[பிற்பகல் 1.10]

திரு கே. ஜே. உய்யக்கொண்டான் : அடக்கவிலை 1.40
என்று தான் நானே குறிப்பிட்டேன். ஆனால் சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் ரிசர்வ் பாங்கியிலிருந்து கடன் வாங்கிய 100
கோடிரூபாய் பணத்திற்கு வட்டி எங்கே போவது. அது மட்டு
மல்ல, வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனுக்கு ஸ்டாக் வைப்பதற்காக
கொடுக்கப்படுகிற வாடகை எங்கே போவது? அதையெல்லாம்
சேர்க்கவேண்டாமா?

திரு. சோ. அழகர்சாமி : அனுபவம் உள்ள தாங்கள்,
ஒன்றரை குவிண்டால் நெல்லுக்கு 127 ரூபாய் ஆகிறது, அதற்கு
வட்டி எவ்வளவு வாடகை எவ்வளவு ஆகும் என்றெல்லாம் சொன்
னால் நலமாக இருக்கும்.

திரு கே. ஜே. உய்யக்கொண்டான் : தனிப்பட்ட வியாபாரி
5 சதவீதம் லாபம் வைத்து அன்றாடம் விற்றுவிடுவார்கள்.
ஆனால் இது ஒரு பெரிய நிறுவனம். அரசாங்கத்தோடு தொடர்பு
கொண்டு தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலகட்டத்திலேயெல்லாம்
செயல்படக்கூடிய அந்த அளவிற்கு லாபத்தை வைத்தால் தான்
கட்டுபடியாகும். ஆனால் 74 ரூபாய்க்கு கொள்முதல் செய்த
போது 1.60 க்குதான் விற்றார்கள், இப்போது 85 ரூபாய்க்குக்
கொள்முதல் செய்தாலும் 1.60-க்குத் தான் விற்கிறார்கள்,
இதைப் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்?

தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆற்காடு தான் உணவு
தானிய உற்பத்தியிலே பெரும்பங்கு இரண்டவதாக வகித்து
வருகிறது. என்னவோ தெரியவில்லை தி.மு.க. ஆட்சியானாலும்
சரி, இந்த ஆட்சியும் சரி அப்போது லெக்கபோனஸ் என்ற முறை
யிலே கொள்முதல் செய்தபோது தஞ்சை மாவட்டத்திற்கு அளித்
தார்கள், வட ஆற்காடு மாவட்டத்திருக் கிடையாது. இப்

போதும் கேரள மாநிலத்திற்கு லெவி இல்லாமல் தஞ்சையிலி
லிருந்து அனுப்புகிறார்கள், ஆனால் வட ஆற்காடு மாவட்ட த்திற்கு
அந்த வசதி கிடையாது. உறுப்பினர்கள் தமிழகம் பூராவிற்கும்
வேண்டுமென்று கேட்கிறார்கள், அதைப் போல் செய்ய
வேண்டும். அப்படி ஏதாவது தட்டுப்பாடு ஏற்பட்டால் இருப்பை
வேண்டுமானால் வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆகவே
தஞ்சையைப் போல் வட ஆற்காடு மாவட்டத்திலும் லெவி,
இல்லாமல் அண்டை மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு அரசு
ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது புட் செல் விஜிலன்ஸ் என்பது தேவையற்ற ஒன்று.
இப்போது லிமிட்டே இல்லை, ஸ்டாக் லிமிட் என்பதே தேவை
யில்லை, ஸ்டாக் லிமிட்டை ஒழித்து இந்த புட்செல் விஜிலன்ஸை
யும் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டு
மானால் மாநிலத்தின் பார்டர்களிலே அப்படிப்பட்ட படையை
வைத்துக் கொண்டு அதைச் செய்யலாம்.

அடுத்து ஹல்லிங் ஏஜன்ட்ஸ், நுகர் பொருள் வாணிபக் கழகத்
தினால் நியமிக்கப்பட்ட அவர்களுடைய கணக்குகள் எல்லாம்
பல ஆண்டுகாலமாகியும் சரிவர முடித்துக்கொடுக்காமல்
இருப்பதாக வியாபாரிகள் என்னிடத்திலே முறையிட்டார்கள்.
அதை மனிதாபிமானத்தோடு அவசியம் என்று கருதி உடனடி
யாக அந்தக் கணக்குகளை உடனடியாக முடித்துக் கொடுத்தால்
மீண்டும் அவர்களை ஹல்லிங் ஏஜன்ட்களாக நியமித்தால் அவர்
கள் அதற்கு முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே வைக்கும்
போது நான் ஒன்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்
பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு அதிகமான விலை கொடுக்க
நீங்கள் வழிவகை செய்யவேண்டும், மத்திய அரசைக் காண்
பிக்க வேண்டாமென்று மீண்டும் ஒரு முறை கூறிக்கொண்டு,
நான் இப்போது முக்கியமாகச் சொன்ன கணக்குகளின் அடிப்
படையில் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த
அவையிலே வைக்கப்பட்டிருக்கிற நுகர்பொருள் வாணிபக்
கழக மானியக் கோரிக்கையின்மீதும், மீன் வளத் துறையினுடைய
மானியக் கோரிக்கையின்மீதும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்
கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதற்காக, துறையின்
சார்பிலே, என்னுடைய நன்றியை அவர்களுக்கு நான்

தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்றையதினம் உணவு நிலைமை எவ்வளவு மன நிறைவு தரக்கூடியதாக இருக்கிறது என்பதை இந்த அவையிலே, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு ங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பல்வேறு உறுப் பினர்களுடைய கருத்துக்களை ஆராயும்போதும் தெரிவ தோடு, இந்தப் பிரச்னை முன்னாலே இருந்ததைப் போல் ஒரு வேதனை தரக்கூடிய, பிரச்னையாக இல்லையென்பதை இன்றையதினம் இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர் களுடைய எண்ணிக்கையே நமக்குக் காட்டுகிறது என்பதைத் தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இது ஒரு மிகவும் சிக்கலான பிரச்னை அல்லது நாட்டிலே இருக்கிற ஒரு மோசமான பிரச்னை என்கிற நிலைமை இருக்குமேயானால். மாண்புமிகு உறுப்பினர்கள் பெருவாரியான அளவிலே இந்த அவையிலே, இந்த விவாதத்திலே கலந்து கொண்டிருப்பார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் மிக விளக்கமான கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் நம்பு கிறேன். காரணம், நேரமும் 1¼ மணி ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பகல் உணவிற்குப் போக வேண்டு மென்கிற அவசரத்திலே இருக்கிறார்கள் என்பதையும் நான் நல்லமுறையிலே அறிவேன். ஆகவே, அதல்லாமல், இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் துறையின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகள் எல்லா புள்ளி விவரங்களும் அமைந்ததாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே, சில உறுப் பினர்கள் இங்கே எழுப்பிய பல்வேறு பிரச்னைகளுக்கு மாத்திரம் பதில் சொல்வதன் மூலம் நான் முடித்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்றைய தினம், தமிழகத்திலே, உணவு நிலைமையைப் பொறுத்த மட்டில், இந்த ஆட்சி பொறுப்பேற்ற காலம் முதல் அரிசி, தாராளமாகக் கிடைக்கிறது என்பதோடு மாத்திரமல்லாமல் இந்த ஆட்சி வருவதற்கு முன்னால், 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த நிலைமைகள் எல்லாம் மாறி, மிகக் குறைந்த விலையில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல முறையிலே அறிவார்கள். வெளிச் சந்தையிலே எந்த அளவிற்கு அரிசியினுடைய விலை குறைந்திருக்கிறது என்பதையும், எவ்வளவு தாராளமாகக் கிடைக்கிறது என்பதையும் நான் மிகவும் விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் நடத்துகின்ற நியாய விலைக்கடை

களிலே, இன்றைய தினம் விற்பனை எந்த அளவிற்குக் குறைந் திருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதற்குக் காரணம், இந்தக் கடைகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம், நாட்டு மக்களுக்கு எழவில்லையென்கிற ஒரு நிலைமையை நான் சுட்டிக் காட்டுவதன் மூலம், தாராளமாகக் குறைந்த விலையில் அரிசி வெளியே கிடைக்கிறது என்பதை எடுத்துச் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

[பிற்பகல் 1-20.]

கொள்முதலைப் பொறுத்த வரையில், இங்கே நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டும். எதற்கெடுத்தாலும், மத்திய அரசின் மீது பழியைப் போட்டு விட்டு மாநில அரசு தப்பித்துக் கொள்ளக் கூடாது என்ற கருத்தை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். அதிலே சில உறுப்பினர்கள் அதற்காகப் போராட்டம் நடத்த வேண்டுமா என்றார்கள். அவர்கள் எதைச் சொன்னால் என்ன நாம் நியாய மான விலை என்று எதை நிர்ணயிக்கிறோமோ அந்த விலையை இந்த அரசு கொடுத்து, அதற்குக் குறுக்கே மத்திய அரசு வருமானால், நாங்கள் அதற்காகப் போராட உறுதுணையாக இருக்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கே புள்ளி விவரங்களை வைத்து இருக்கிறேன். அவற்றை எல்லாம் வாசித்தால் இந்த அவையின் நேரம் வீணாகும் என்று கருதுகிறேன். என்றாலும், 1967-68 ஆம் ஆண்டில் கொள்முதல் விலை ரூ. 43 ஆக இருந்த நேரத்தில், கோதுமை யின் கொள்முதல் விலை ரூ. 70—க்கு மேல் ரூ. 76 வரைக்கும் இருந்தது. இன்றைய தினம் 1978—79-ல் நெல் குவிண்டாலுக்கு ரூபாய் 85 என்று மத்திய அரசால் விலை நிர்ணயம் செய்திருக்கிற நேரத்தில் கடந்த ஆண்டு ரூ.112.50 என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது, இந்த ஆண்டு 115 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல முறையில் அறிவார்கள்.

நெல்லின் உற்பத்திச் செலவு, கோதுமையின் உற்பத்திச் செலவைவிட அதிகமாக இருக்கிறது என்பதை எல்லாம் கடந்த காலத்தில் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட் டில் கலந்து கொண்டு பேசிய நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே எடுத்துச் சொல்லி, ரூ. 117 செலவாகிறது, ஆகவே ரூ. 130 கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை

நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது மிகவும்
பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அது
மாத்திரம் அல்ல. எந்த அரசும் எடுக்காத முயற்சிகளை
இந்த அரசு விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு
இருக்கிற காரணத்தாலே எடுத்து இருக்கிறது என்பதையும்
இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம் என்று
நான் நினைக்கிறேன்.

தமிழகத்திலே இதற்கு முன்னாலே ஆட்சிக் கட்டிலே இருந்
தவர்கள் நெல்லின் கொள்முதல் விலைக்கும், கோதுமையின்
கொள்முதல் விலைக்கும் காத தூர வித்தியாசம் இருந்த நேரத்தில்
மத்திய அரசுக்கு காவடி எடுத்துக் கொண்டு இருந்தார்களே
தவிர, வேறு அல்ல; உரிமைகளை நிலை நாட்டுகிற வகையில் மத்திய
அரசு உணர்கிற வகையில் தென் மாநில முதல்வர்களை ஒன்றாகக்
கூட்டி, நெல்லுக்கு இந்த விலை கொடுத்தாக வேண்டும் என்ற
தீர்மானத்தைப் போடுகிற முயற்சியில் ஈடுபாடு கொண்ட ஒரு
முதலமைச்சர், தென் மாநிலங்களில் உண்டு என்றால் அது
தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைத் தவிர
வேறு எந்த முதலமைச்சரும் அந்த முயற்சியை எடுக்கவில்லை
என்பதை இந்த நேரத்தில் என்னாலே தைரியமாகச் சொல்ல
முடியும். அந்த அளவிற்கு எடுக்க வேண்டிய முயற்சிகளை,
எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

இப்போது கூட சில தரப்பில் இருந்து விவாதங்கள்
வருகின்றன. ரூ. 74 மத்திய அரசு விலை நிர்ணயம் செய்திருந்த
நேரத்தில் கூட ரூ. 15 முன்னால் இருந்த அரசு போனஸ் என்ற
வகையில் கொடுத்து, ரூ. 89க்கு வாங்கவில்லையா, அதைப்
போல் இன்றைக்கு ரூ. 85 என்று ஒரு குவிண்டாலுக்கு விலை
நிர்ணயித்து இருக்கிறபோது, ரூ. 15 கூடுதலாகக் கொடுத்து
ரூ. 100—க்கு வாங்கக் கூடாதா, அதற்கான முயற்சிகளை மேற்
கொள்ளக் கூடாதா என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.
அந்த மாதிரியான வாதங்கள் எல்லாம் எதிர்த்தரப்பில் இருந்து
வருகின்றன. நான் ஒன்றை மாத்திரம் இந்த அவையில் தெரி
வித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ரூ. 74
ஒரு குவிண்டாலுக்கு என்று விலை நிர்ணயிக்கப்பட்டபோது,
இந்த மாநில அரசு எவ்வளவு வேண்டுமானாலும் அதிகம்
கொடுத்து வாங்குவது என்றாலும் அதற்கு எந்தவிதமான
தடையும் அப்போது இருந்த மத்திய அரசு விதிக்கவில்லை
என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்லி, இன்றைய
நிலையில் 85 ரூபாய்க்கு மேல், மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு
மேல், கூடுதலாக ஒரு காசு கூட மாநில அரசு கொடுக்கக் கூடாது.
அப்படிக் கொடுத்தால் நாம் வாங்குகிற ரிசர்வ் வங்கிக் கடன்
தொகையைத் தர மறுக்கும் சூழ்நிலை இருக்கிற காரணத்தால்
85 ரூபாய்க்கு மேல் அதிகமாக, கூடுதலாக கொடுக்க வேண்டும்
என்று விரும்பினாலும், கொடுப்பது அவசியம், நியாயம், தேவை

என்று நாம் வாதத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டாலும்,
மத்திய அரசு மாநில அரசின் கரங்களிலும், கால்களிலும் மிகப்
பெரிய விலங்கைப் போட்டு இன்றைய தினம் அதைத் தடுத்துக்
கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்
தயவு செய்து உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்றைய தினம் ஏறத்தாழ 6 இலட்சம் டன் அரிசியைச்
சேகரித்து வைக்க வேண்டிய ஒரு நிலைமை நம்முடைய மாநில
அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த 6 இலட்சம் டன் அரிசிக்குத்
தேவையான 9 இலட்சம் டன் நெல்லை நாம் வாங்க வேண்டு
மென்றால் இன்றைய தினம் உள்ள நிலைமையிலே ஏறத்தாழ
60 கோடி ரூபாய் முதல் 100 கோடி ரூபாய் வரை ரிசர்வ் பாங்கி
லேயிருந்து கடன் பெற வேண்டி இருக்கிறது. இந்த 60 கோடி,
100 கோடி ரூபாயை ரிசர்வ் பாங்கிலேயிருந்து பெற்றுத்தான்
இந்தக் கொள்முதலைச் செய்ய முடியுமே தவிர மாநில அரசி
னுடைய நிதிநிலைமை, 60 கோடி ரூபாய், 100 கோடி ரூபாய்
என்ற அளவில் நெல் கொள் முதலுக்கு என்று ஒதுக்கக் கூடிய
அளவுக்கு நிச்சயமாக இல்லை. இதை நான் விளக்கிச் சொல்ல
வேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற
85 ரூபாய்க்கு, கூடுதலாகக் கொடுக்க முடியாது. அப்படிக்
கொடுத்தோம் என்றால் ரிசர்வ் பாங்க் ஒரு பைசா கூட நமக்கு
கடனாகத் தர மாட்டார்கள் என்ற நிலைமை வந்தால் இப்
போது செய்கின்ற இந்தக் கொள்முதலைக் கூட நாம் நிச்சய
மாகச் செய்ய முடியாது. மத்திய அரசு தாமாக முன்வந்து
நெல்லுக்கு அதிக விலை நிர்ணயித்தால்தான் இந்த மாநில அரசு
அதைச் செய்ய முடியுமே தவிர மாநில அரசுக்கு அதிக விலை
நிர்ணயிக்கின்ற அதிகாரம் இல்லை. ஆகவே உங்களுக்கு மனம்
இல்லையென்றெல்லாம் சொல்வது உண்மையிலேயே விரும்பத்
தக்கதாக இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அடிப்படையிலே இந்த மாதம் 23-ம் தேதி அக்ரிகல்சர்
ப்ரைஸ்கமிஷன் இதைப் பற்றி விவாதிக்க இருக்கிறது. அப்போது
நம்முடைய துறைச் செயலாளர் அவர்களும் அங்கு செல்ல இருக்
கிறார்கள். அவர்கள், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க
வேண்டும் என்று நிச்சயமாக வலியுறுத்துவார்கள். அதிலே
எந்த உறுப்பினர்களுக்கும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.
அதற்குப்பிறகு எல்லா மாநிலத்தினுடைய முதலமைச்சர்களையும்
மத்திய அமைச்சரவர்கள் கூப்பிட்டுப் பேசுவார்கள்.
சென்ற ஆண்டு வலியுறுத்தியதைப் போல இந்த ஆண்டும் நெல்
லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசின்
சார்பிலே நிச்சயமாக மத்திய அரசிடம் வலியுறுத்துவோம் என்
பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமை
பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்க முடியாத
சூழ்நிலையில் வேறு எந்த வகையிலே இந்த விவசாயிகளுக்கு
நாம் நன்மை செய்ய முடியும் என்பதைச் சிந்தித்து, நம்மால்
தான் அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லை, அடுத்தவர்
களாவது கூடுதல் விலை கொடுத்து வாங்குவதற்கு வழி வகை
செய்து கொடுக்க முடியுமா, அதற்கான வழி அமைத்துக்கொடுக்க
முடியுமா என்கிற ஆலோசனையைச் செய்ததின் மூலமாகத்
தான் கடந்த ஆண்டு மே மாதம் 11-ம் தேதி தமிழ்நாட்டிலுள்ள
அத்தனை லெவி முறைகளும் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதே போல் வெளி
மாநிலத்திற்கு முன்பெல்லாம் நெல்லை, அரிசியைக் கொண்டு
போக வேண்டும் என்றால் 50 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும்
என்கிற நிலைமை இருந்தது. அதை எல்லாம் இன்றைக்கு மாற்றி
அந்த லெவியை 20 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம்
என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதைப்
போல கடந்த குறுவை அறுவடையின்போது தஞ்சை மாவட்டத்தி
லிருந்து வெளி மாநிலத்திற்கு எவ்வளவு கொண்டு சென்றாலும்
அதற்கு லெவி இல்லை என்கிற உத்தரவை ஏற்கனவே இந்த அரசு
போட்டிருக்கிறது.

இங்கே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். மார்க்ஸிஸ்ட் கம்
யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞான
சிகாமணி அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள், கேர
ளாவிற்குப் போகின்ற நெல்லை ஏன் தடுக்கிறீர்கள் என்று
கேட்டார்கள். அதைப்போல அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. உய்யக்கொண்டான் பேசு
கிற நேரத்திலே கூட தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மாத்
திரம்தானா, ஏன் வட ஆற்காடு மாவட்ட விவசாயிகளுக்குக்
கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். வெளி மாநிலத்திற்கு
எடுத்துச் செல்லப்படுகிற நெல்லுக்கு லெவி கேட்காமல் நெல்லை
எடுத்துச் செல்வதற்கு அனுமதி கொடுத்தால் நமக்கு அதிக விலை
கிடைக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அவ்வாறு வலி
யுறுத்துகிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேதான்
கடந்த குறுவையின்போது தஞ்சை மாவட்டத்திலே இருந்து
எவ்வளவு நெல் வெளி மாநிலத்திற்குச் சென்றாலும் அவற்றுக்கு
லெவி இல்லை என்ற உத்தரவை இந்த அரசு விதித்திருக்கிறது
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையிலே உணர்ந்
திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாம் ஒன்றை எதிர்பார்க்கிறோம். சில நேரங்களில் அது
நடைபெறுவதில்லை. அதற்காக நாம் பொறுப்பாக முடியாது.
அது வியாபாரிகளாலே ஏற்படுகிற தவறாக இருக்கலாம்.
(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் கூட ஒரு
கருத்தைச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கூட்ட நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு க. உரோ, எட்மண்ட் : அரசு கேரள மாநிலத்திற்கு ஏன் நெல்லைவிற்கக் கூடாது என்று கேட்டார்கள். அதற்குரிய முயற்சியை எடுத்திருக்கிறோம். எடுக்காமல் இல்லை. ஆனால் கேரள அரசு நம்மிடமிருந்து வாங்குவதற்குத் தயாரா இல்லை. இன்னொரு காரணம், அவர்களுக்குத் தேவையான நெல்லை, ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவே நேரடியாகக் கொடுத்துவிடுகிறார்கள். இன்னும் சொல்வேன்—கேரள மாநிலத்தில் உள்ள வியாபாரிகள் இங்கே வாங்குவதைவிட, பஞ்சாப் மாநிலத்திலிருந்து வாங்குவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிலே இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த அரசு அந்த அரசுக்கு விற்றால் குறை சொல்ல மாட்டார்கள். இந்த அரசு அங்கே உள்ள வியாபாரிகளுக்கு எப்படி விற்க முடியும் ? பல பிரச்னைகள் எழும். இந்த அரசு விவசாயிகளின் நன்மைக்காக பல திட்டங்களை வகுத்தும், சலுகைகளை அளித்தும், அந்தச் சலுகைகள் சில நேரங்களில் அவர்களுக்குக் கிடைக்காமல் போவது வருந்தத்தக்கது. அதற்கு மாற்று வழிகளை யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்கவில்லை என்பதை அரசு உணர்கிறது, அனைவரும் அறிகிறோம். விவசாயிகளுக்கு ரூ. 129 விலை கிடைக்க ஆளுங்கட்சி சிபாரிசு செய்ததாகத் தெரிகிறது. எந்த அடிப்படையில் கூறுகிறார்கள் ? 85 ரூபாய்க்கு மேல் ஒரு சல்லிக் காசு கூட கொடுக்க இயலாது; கொடுத்தால் அதற்கு மத்திய அரசு பொறுப்பு அல்ல ; இந்தச் சலுகைக்கு ஆதரவாக ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், கொடுக்க இயலாது என்று அறிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கமே ரூ. 85 விலையில் அதிகமாகக் கொள்முதல் செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. க. ரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைச் சொல்வதற்குத்தான் வந்தேன். இதற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள். இப்போது நெல்லை வாங்கவில்லை என்ற நிலைமை நிச்சயமாக இல்லை. வாங்குவதால்தான் நம்மிடம் போதிய கையிருப்பு இருக்கிறது.

ஓராண்டுக்குத் தேவையான அளவிற்குத் தேக்கப்பட்டிருக்கிறது.
எவ்வளவு வட்டியை செலுத்தியிருக்கிறோம் என்பதை பார்த்தாக
வேண்டும். ஓராண்டுக்கான கையிருப்பு நம் பொறுப்பில் இருக்கும்
போது இன்னும் எவ்வளவு அதிகமான நெல்லை வாங்குவது?
நஷ்டம் ஏற்பட்டால் யார் ஏற்றுக்கொள்வது என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். அன்றைக்குக் கொள்முதல் செய்
தார்களே என்று சொன்னால்—அவர்கள் இங்கே இல்லை, இருந்
தாலும் சொல்கிறேன். அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில்
கொள்முதல் கட்டாயம் செய்ய வேண்டிய நிலை அவர்களுக்கு
ஏற்பட்டது. வெளிச் சந்தையில் அரிசியின் விலை ரூ. 2.90லிருந்து
ரூ.3.40 வரை இருந்தது. ஆனால் இப்போது நம்முடைய
கிடங்குகளில் விற்பனை ஆகவில்லை. வெளிச்சந்தையில் அரிசி
நடமாட்டம், புழக்கம் ஜாஸ்தியாக இருக்கிறது. விலை
குறைவாக இருக்கிறது. அதன் விளைவாக நம்மிடம் போதிய
அளவிற்கு விற்பனை இல்லை. விற்பனை இல்லாத காரணத்தால்
எவ்வளவு கொள்முதல் செய்வது? கொள்முதல் செய்யாமல் இருக்க
கூடாது என்பதற்காக, கொள்முதல் நிலையங்களை அமைத்து
வருகிறோம். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 37
கொள்முதல் நிலையங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
தென் ஆற்காடு மாவட்டத்தில் 4 நிலையங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் 5, செங்கற்
பட்டு மாவட்டத்தில் 11 கொள்முதல் நிலையங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன். கொள்முதல் செய்யவில்லை என்று சொல்வது
பொருத்தமாக இருக்காது. இன்னும் சொல்லப்போனால் கொள்
முதல் செய்து நம்மிடம் ஓராண்டுக்குத் தேவையான அரிசி
இருக்கிறது. மேலும் வாங்கினால் எங்கே கொண்டு போய்
வைப்பது? வைப்பதற்கும் இடம் வேண்டும்....

திரு. ரா மார்க்கபந்து : அமைச்சர் அவர்கள் சொல்
லும்போது, தேவைக்கு அதிகமாக நம்மிடத்தில் நெல்
இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் வெளி மாநி
லங்களுக்கு நெல் அனுப்புகிறவர்கள் 20 சதவீதம் லெவி கொடுக்க
வேண்டும் என்று ஏன் கட்டுப்பாடு வைத்திருக்க வேண்டும்?
அதே நேரத்தில் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகின்ற 130 ரூபாய்
கூடக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்றும் சொல்லு
கிறார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி 85 ரூபாய்
என்று நிச்சயித்திருக்கிறோம். அதற்கு மேல் கொள்முதல்
செய்வதாக இருந்தால் 130 ரூபாய் கூட கொடுப்பதற்கும்
தயாராக இருக்கிறோம், அதே நேரத்தில் உங்களுடைய

ஸ்டேட் கவன் மென்ட் 'இஷ்யூ இஷ்யூ பிரைஸை' ஏற்றிக்
கொள்வதற்கு தயாராக இருந்தால் நாங்கள் 130 ரூபாய் கூடக்
கொடுப்பதற்காக தயாராக இருக்கிறோம் என்றும், இஷ்யூ
பிரைஸை அதிகமாக்கியதின் காரணமாகத்தான் கோதுமையி
னுடைய கொள்முதல் விலையையும் அதிகமாகக் கொடுக்க
முடிந்தது என்றும் மத்திய உணவு அமைச்சர் சொல்லுகிறார்.
அப்படியானால் அரசாங்கத்தினுடைய நிலைமை என்ன
என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நம்மிடம் கையிருப்பு அதிகமாக
இருக்கும்போது, எல்லோரிடத்திலிருந்தும் லெவி வாங்குவதை
நிறுத்திவிடுகிறோம். அதே நேரத்தில் கையிருப்பு அதிகமாக
இருக்கும்போது வெளிமாநிலங்களுக்கு அரிசியை அனுப்பு
கிறவர்களிடமிருந்து 20 சதவீதம் லெவியை ஏன் வாங்குகிறீர்கள்
என்ற பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். நான் தெரிவித்துக்
கொள்வது, அரசின் கடமை வெறும் கொள்முதல் செய்வது
மட்டுமல்ல; அரசுக்குப் பல்வேறு கடமைகள் இருக்கின்றன.
கொள்முதல் செய்வதையும் ஒரேயடியாக விட்டுவிட முடி
யாது. போதிய அளவுக்குக் கையிருப்பும் வைத்துக் கொள்ள
வேண்டும். அதே சமயத்தில் வெளிச்சந்தையில் உணவுப்
பண்டங்களின் விலையும் ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
இப்போது 20 சதவீதம் லெவி என்று ஏற்படுத்தியிருந்தும்
நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலத்திற்கு 1 லட்சம் டன்
அரிசி போயிருக்கிறது. இந்த லெவி இல்லையென்றால் இன்னும்
அதிகமாகப் போகலாம். அப்படி நம்முடைய மாநிலத்திலிருந்து
பெரும்பகுதி வெளிமாநிலத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பு இருக்
றது (குறுக்கீடு). அப்படி ஏற்படுகிற பொழுது, விவசாயிகளுக்கு
கூடுதலான விலை கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனால்
வாங்கி சாப்பிடுகிறவர்களின் நிலைமை என்ன? இன்றைக்கு
ஒரு ரூபாய் அறுபது காசுக்கு வாங்குகிறவர்கள் ரூ. 2.50, 2.60
என்ற அளவில் கொடுத்து வாங்கி சாப்பிட வேண்டிய நிலைமை
ஏற்படும். ஆகவேதான் ஒரேயடியாக விலை அதிகமாகப் போய்
விடக்கூடாது என்ற எண்ணத்தில்தான் வெளி மாநிலத்திற்கு
நெல்லை அனுப்புகின்றவர்கள் 20 சதவீதம் லெவி கொடுக்க
வேண்டும் என்று உத்தரவை போட்டிருக்கிறோம் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே கொள்முதல்
செய்யவில்லை என்கின்ற குற்றச்சாட்டை இந்த அரசின் மீது
சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதை இந்த நேரத்தில்
மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன்.

அதற்குப் பிறகு, நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பற்றி
பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கி
றார்கள். வெளியே உள்ள விலையைவிட நுகர்பொருள்

வாணிபக் கழகம் நடத்துகின்ற கடைகளில் விலை அதிகமாக இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டை பல உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். பல நேரங்களில் நாம் இதை நேரடியாகப் பார்த்து இருக்கிறோம். வெளியே இருக்கிற விலையை விட இந்த நியாய விலைக் கடைகளில் விலை குறைவாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். குறைவாக இருக்கிறது என்று சொல்லும்போது, பொருட்களின் தரத்தையும் கணக்கிட வேண்டும். அங்கே கொடுக்கப்படுகின்ற பொருட்களின் எடை எப்படியிருக்கிறது, வெளியேயுள்ள கடைகளில் உள்ள எடை எப்படியிருக்கிறது என்பதையும் கணக்கிடவேண்டும். இத்தனையையும் கணக்கில் எடுக்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம்.

அதே நேரத்தில் இன்னொன்றையும், சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வெளியில் இன்றைக்கு தனியார் கடைகளில் உள்ள அத்தியாவசிய பண்டங் களின் விலை நியாய விலைக் கடைகளிலுள்ளதைவிட குறைவாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க, வாதத்திற் கா்க நியாய விலைக் கடைகளில் விலை அதிகமாக இருக்கிறது என்று எடுத்துக்கொண்டாலும்— மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள்— அரிசியைப் பொறுத்தவரையில் ரூ. 1,40 அல்லது 1.60 என்று விலையை நிர்ணயித்தாலும், இதில் அரசாங்கத்திற்கு நஷ்டம் வருவதற்கு அவசியமே இல்லை என்று சொன்னார்கள்.

[பிற்பகல் 1—40]

நான் அவர்களை மனச்சாட்சியோடு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட வியாபாரிகள் இடத்தில், கடைகளிலே வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு சம்பளம் எவ்வளவு? நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வேலை செய்யும் சிப்பந்தி களுக்குக் கொடுக்கும் சம்பளம் எவ்வளவு? அவர்கள் வேலை ார்க்கும் நேரம் எவ்வளவு? இவர்கள் வேலை பார்க்கும் நரம் எவ்வளவு? இவற்றை எல்லாம் பார்க்க வேண்டும். இன்றைய தினம் இன்னொன்றையும் பேசினார்கள். கிடங்குகள் வாடகை பற்றிப் பேசும்போது அவர்களுக்கும், அரசுக்கும் ஒன்றுதான் என்று சொன்னார்கள். அவர்கள் அங்கேயே அரைத்து, அங்கேயே கிடங்குகளில் வைத்து விடுகிறார்கள். நமக்கு அப்படி யில்லை. எங்கே அதிகமாக விளைகிறதோ, அங்கே போக வேண்டும். விளைகின்ற மாவட்டத்திற்குப் போக வேண்டும். அங்கே அந்த கிடங்குகளில் சேமித்து வைக்க வேண்டும். தேவைப் படுகிறபோது, அவைகளை எடுத்து அரைப்பதற்கு அனுப்ப வேண்டும். அதை முடித்த பிறகு மீண்டும் கிடங்குகளிலே வைக்க வேண்டும். பிறகு விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு போக

வேண்டும். இப்படியெல்லாம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. தனியார் கடைகளில் சிப்பந்திக்கு மாதம் ரூ. 100 சம்பளம் கொடுக்கிறார்கள். கிராமப் புறங்களிலே ரூ. 50 சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே அவர்களுக்கு ரூ. 300 சம்பளம் கொடுக்கப்படுகிறது. கிராமங்களிலே நமது கிடங்குகளில் உள்ளவர்களுக்கு ரூ. 100, 150 கொடுக்கப்படுகிறது. அங்கே விற்பனை குறைவு, ஆனால் கொடுக்கப்படுகிற சம்பளம் ரூ. 100, 150. கடந்த மாதம் கூட நுகர்பொருள் வாணிபக் கழகத்து ஊழியர்கள் போராட்டம் செய்யக்கூடிய ஒரு நிலை இருந்தது. போராட்டம் நடத்தினார்கள். நான் இப்போது கேட்கிறேன். அன்றைக்கு எத்தனை உறுப்பினர்கள் இங்கே பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். குறைந்த விலையில் பொருள்களை விற்க வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் இவ்வளவு கொடுத்தால் கட்டுப்படி ஆகுமா? அதற்கு மேலும் சம்பளம் கொடுக்க முடியாது. அரசுக்கு வாதாடுவதற்காக எத்தனை உறுப்பினர்கள் முன் வந்தார்கள் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் நல்ல தரமுள்ள பண்டங்களைக் கொடுக்க வேண்டும். எடையும் சரியாக இருக்கவேண்டும்; அதே நேரத்திலே விலையும் குறைவாக இருக்க வேண்டும்; அதே நேரத்திலே நம்முடைய தொழிலாளர்களுக்கும் கூடுதல் சம்பளம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்; லாபம் வந்தால் போனஸ் கொடுக்க வேண்டும்; நஷ்டம் ஏற்பட்டாலும் போனஸ் கொடுக்க வேண்டும் என்கிற நிலைமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இவற்றை எல்லாம் நாம் பொதுத்துறையில் செய்கின்றபோது, இதிலே உள்ள பல்வேறு சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையிலே புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்.

அடுத்தாற்போல், மண்ணெண்ணெய்பற்றி இங்கே பேசியஎல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள். நாட்டிலேயே இன்றைய தினம் மண்ணெண்ணெய் பற்றாக்குறை, தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது என்றார்கள்; அதை நான் மறுக்கவில்லை. இந்த அவையிலே மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் பற்றி ஒரு மணி நேரம் விவாதம் நடந்திருக்கிறது; அதற்குப் பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போது கூட நான் அதற்கு ஒரு விளக்க அறிக்கையை இந்த அவையிலே வைத்திருக்கிறேன். இந்த மாதம் மத்திய பெட்ரோலிய அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பேசிய நேரத்திலே கூட, மண்ணெண்ணெய் தமிழ்நாட்டிலே குறைந்த அளவு கொடுக்கப்படுகிறது என்பதை விளக்கமாகச் சொன்ன போது, அதை ஏற்றுக்கொண்டார்; இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அண்மையில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த நம் பாரதப் பிரதமர் கன்னியாகுமரி பொதுக்கூட்டத்தில் பேசிய போது, வெளிப்படையாக இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். இன்றைய தினம் மண்ணெண்ணெய், டீசல் ஆகிய

இங்கே பல்வேறு நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் இந்தத் துறையின் சார்பில் சொன்னார்கள். நான் அதை வரவேற்கிற நேரத்தில் உண்மையிலேயே அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டு இருக்கிறேன். 23 ஆம் தேதி அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் கூட்டம் முடிந்த பிறகு அதிலே எடுக்கப்படுகிற முடிவு மாநில முதலமைச்சர்கள் கூட்டத் திலே விவாதத்திற்கு வருகிற நேரத்திலே இங்கே இருக்கின்ற ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இப்படிப்பட்ட கொந்தளிப்பு தமிழ்நாட்டிலே இருக்கிறது, இந்தக் கொந்தளிப்பு விவசாயிகள் மத்தியில் ஏற் பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, ஒட்டு மொத்தமாக இந்திய துணைக் கண்டத்திற்கே நல்லதல்ல என்பதை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உண்மையிலேயே உணவுத் துறையை அரசு கையாண்டு கொண்டு இருக்கின்ற முறை—திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், அதிலே கொஞ்சம் அவருக்கு அக்கறை, எல்லா பொருட்களும் நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்குப் போய்விடக் கூடாது என்று.

அவர்கள் சொல்வதைப் பார்த்தால் உணவு நிலைமை நல்ல நிலைமையில் இருப்பதற்குக் காரணம் நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமல்ல, உற்பத்தி செய்கின்ற, உழைக்கின்ற விவசாயி களாலும் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். உற்பத்தி செய்யப்படுகின்ற உணவை சேமிக்க வேண்டிய முறையிலே சேமித்து, பங்கிட வேண்டிய முறையிலே பங்கிட்டு வெளி மாநிலங் களுக்குப் போகாமல் அரண் அமைத்து பாதுகாப்பு அமைத்து இந்த அரசு நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்திச் செல்கிற காரணத்தால் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது.

இதற்கு முன்னாலே தமிழ்நாட்டிலே உற்பத்தி போதுமான அளவிற்கு திருப்திகரமாக இருந்தபோதுகூட தஞ்சை மாவட்டத் திலிருந்து நெல் கேரளத்திற்கு எடுத்துச் சென்ற வரலாற்றை எல்லாம் மறந்துவிடக் கூடாது. இங்கே தேவையான அளவிற்கு நெல் உற்பத்தி இருந்தும்கூட ஒரு படி அரிசி 5, 6 ரூபாய்க்கு விற்ற அவல நிலைமை தமிழகத்திலே இருந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள் ஒரு பக்கம், அது மட்டும் போதாது. உற்பத்தி செய்யப்படுகிற நெல்லை அண்டை மாநிலங்களுக்கு கடத்திச் சென்றுவிடாமல் கண்காணித்து இந்தக் கழகம் கடந்த இரண்டாண்டுக் காலமாக திறமையாகச் செயல்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கழகத்தைப்

பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்று சொல்லி, உணவு மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் என்னுடைய பதிலை முடிக்கிறேன்.

மீன்வளத் துறையைப் பொறுத்தமட்டில் இன்னும் 7 நிமிடங்களில் கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

கடந்த ஒரு ஆண்டுக் காலத்திலே இந்தத்துறையின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருக் கிறோம் என்பதையும் 1979—80 ஆம் ஆண்டிலே என்ன என்ன புதிய திட்டங்களை அமலாக்கப் போகிறோம் என்பதையும் ஏற்கனவே குறிப்பிலே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவைகளைப் புரிந்துகொண்டிருக் கிறார்கள் என்று நம்புகிறேன். ஒருசில உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு மாத்திரம் நான் பதிலைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு நான் அவ்வப்போது பதில்களைத் தந்திருக்கிறேன் என்றாலும் சில உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு ஒட்டுமொத்தமாக பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மீனளத்துறை நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி யிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நானகாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரைக்கும் ஏறத்தாழ 20 ஆண்டுகளிலே 47 மீனவர் கடற்கரை கிராமங்கள் இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடுவதற்கு எந்தவிதமான தொகையும் ஒதுக்கப்படவில்லை.

ஆகவே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கடலோரப் பகுதியிலே இருக்கிற மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலை கொடுப்பது என்கிற முடிவெடுத்து அதற்காக ஏறத்தாழ ரூ. 200 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட இந்த ரூ. 200 இலட்சத்தில் 1979-80 ஆம் ஆண்டில் மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் செய்து கொடுப்பதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது எந்தக் கிராமங்களுக்குச் சாலை வசதி அறவே இல்லையோ அந்தக் கிராமங்களுக்கு நிச்சயமாக முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல், மத்திய அரசினுடைய ஒதுக்கீட்டால் சில மீனவ கிராமங்களை, மாதிரி கிராமங்களாக ஏற்றுக் கொண்டு அவற்றிலே சில மாற்றங்கள் செய்கிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். தெருவிளக்குகள் கொடுப்பது, இணைப்புச் சாலைகள் கொடுப்பது,

குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, அதைப் போல் அங்கே பனிக்கட்டித் தயாரிப்பு நிலையங்கள் செய்வது, பிடிக்கின்ற மீன்களை வெளியே கொண்டு செல்லத் தேவையான வாகனங்களை அங்கே அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது என்று முடிவெடுத்து தஞ்சை மாவட்டத்திலே, பாழையாறு கிராமத்திற்கு ரூ. 28 இலட்சம் செலவிலும், முகவை மாவட்டத்திலே வாலிநோக்கம் கிராமத்திற்கு ரூ. 25 இலட்சம் செலவிலும் மாதிரி கிராமம் அமைக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலும், மத்திய அரசு 75 சத விகிதம் தொகையை மானியமாகக் கொடுக்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல், மிதக்கும் படகு நிலையங்களை அமைப்பது என்று நாம் முடிவெடுத்து, தமிழகத்திலே சில கடலோரப் பகுதி கிராமங்களில் மிதக்கும் படகு நிலையங்களை அமைக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எழுதினோம். அதற்கு அவர்கள் இப்பொழுது இவ்வளவு கிராமங்கள் தேவையில்லை, ஆரம்பக் கட்டமாக, ஒரு சோதனை ஓட்டமாக நீங்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்துச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நம்முடைய சென்னை மாநகரத் துறைமுக அதிகாரியின் பரிந்துரையின் பேரில், நெல்லை மாவட்டத்திலேயிருக்கிற வீரபாண்டியன் பட்டிணத்தில் ரூ. 8 இலட்சம் செலவில் மிதக்கும் படகு நிலையம் (Floating Jetties) அமைப்பது என்று மத்திய அரசுக்கு நாங்கள் செயற்குறிப்பு அனுப்பி இருக்கிறோம். மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மீனவ கிராமங்களிலே சமுதாயக் கூடங்கள் கட்டுவது என்று முடிவெடுத்து, முதற்கட்டமாக சென்னையிலே 2 கட்டுவது என்றும் ஒன்று வட சென்னைக்கும், மற்றொன்று தென் சென்னைக்கும் கொடுப்பது என்றும் முடிவெடுத்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தனசேகரன் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே, சென்னையிலே, எண்ணூர் பகுதியிலே அதை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஏற்கனவே முடிவெடுத்தாகிவிட்டது என்றாலும், மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதை யோசித்துப் பார்த்து, இங்கே பொருத்தமான இடம் கிடைக்குமா என்பதைப் பார்த்து, அதைப்பற்றி முடிவெடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழிகாட்டி விளக்குகள் அமைப்பது என்று முடிவெடுத்து சில கடலோரப் பகுதி கிராமங்களிலே ஏறத்தாழ ரூ. 76,000 செலவில், தஞ்சை மாவட்டத்திலே ஐந்து கிராமங்களில், அதாவது ஏரிப்புறக் கரை, மல்லிப்பட்டிணம், வான்மகாதேவி, செந்தலை வயல், காரையூர் கிராமங்களிலும் நெல்லை மாவட்டத்திலே வீரபாண்டிய பட்டினம் என்ற கிராமத்திலேயும் இந்த வழிகாட்டி விளக்குகள் அமைப்பது என்று முடிவெடுத்து, அதைப்பற்றியும் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைவிட முக்கியமாக இந்த அரசு இன்றையுதினம், இறால் மீன்களை வளர்ப்பதிலே மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் விஜயராகவன் கூடச் சொன்னார்கள். இறால் மீன்களை இங்கேயே பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பினால் என்ன? அரசே ஏற்றுக் கொண்டால், பொது துறையே ஏற்றுக் கொண்டால் என்ன என்று கேட்டார்கள்.

அண்மையில் 'தஞ்சை', 'நெல்லை' என்ற இரு டிராலர்கள், இரு படகுகள் மெக்சிகோவிலிருந்து வரவழைக்கப்பெற்று, இன்றையதினம் வெற்றிகரமாக இறால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. அவைகள் பணியாற்றத் தொடங்கிய காலத்திலேயிருந்து ஏறத்தாழ ரூ. 16 இலட்சம் மதிப்புள்ள இறாலை, அவை நமக்குத் தந்திருக்கின்றன. இந்த இறால்களுடைய பெரும் பகுதி ஜப்பான் நாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இறால் தயாரிப்பதற்கு இங்கே அதிக சாத்தியக்கூறு இருக்கிறது என்ற அடிப்படையில், தமிழகக் கடற்கரையில் இறால் தயாரிக்க எங்கெங்கே சாத்தியக் கூறுகள், வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்துவது என்ற முடிவெடுத்து, இன்றைய தினம் தமிழகத்திலே, தஞ்சை மாவட்டத்திலே மிக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 2-00)

அதிலே ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இது போன்ற இந்தத் திட்டத்தை எந்தெந்த மாவட்டங்களில் விஸ்தரிக்க செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் ஆராய்ந்து இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலித்து தமிழகம் பூராவிலும் கூடிய விரைவில் செயல்படுத்தும் என்பதையும் கூறிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களில் இயந்திரப் படகுகள் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாட்டை குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு இதற்கென திட்டமிட்டாகிவிட்டது. இந்த ஆண்டு இதற்கென 160 விசைப்படகுகளும் 30 அடி நீளமுள்ள படகுகள் 93-ம், 32 அடி நீளமுள்ள படகுகள் 67-ம் விரைவில் நமது மீனவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

அதைப்போலவே, சங்கு குளிப்பவர்களுக்கு அவர்களின் சங்குகளின் அளவிற்கு ஏற்றவாறு முன்னாலே கொடுக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலை கொடுக்கப்படவிருக்கிறது. முதலிலே அவர்களுக்குக் கொடுக்காமல் இருந்த, மீனவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட சலுகை அதாவது பனிக்காலத்தில்

அவர்கள் அகால மரணம் அடைந்தால் அவர்களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பது என்ற சலுகையை கொடுக்க இருக்கிறோம். முதலில் 2,000 பிறகு 3,000 அதற்குப் பிறகு 5,000 இப்பொழுது எல்லாம் சேர்ந்து மொத்தமாக 10,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது அந்தச் சலுகை மீனவர்களுக்கு மட்டும் அல்லாமல் சங்கு குளிப்பவர்களுக்கும் அவர்கள் சங்கு குளிக்கும் நேரத்தில் அகால மரணம் அடைந்தால் இந்த 10,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அவர்களுக்கு அவர்களின் தொழிலுக்கு உதவும் பொருட்டு சங்கு குளிக்கும் நேரத்திலே தேவையான கருவிகளை, அதாவது அவர்களுக்கு வேண்டிய முகமூடிகள், சப்பாத்துக்கள் போன்ற சாதனங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கருதி, அதை அவர்களுக்கு 50 சதவீதம் மானியம் ஆகவும் 50 சதவீதம் கடனாகவும் தருவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பல நன்மைகளை அரசு மீனவர்களுக்குச் செய்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் கொண்டு, மற்ற உறுப்பினர்கள் தெரிவித்த நல்ல பல கருத்துக்களையும் நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்று கூறிக் கொண்டு, அந்தக் கருத்துக்களின் மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்................

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, உள் நாட்டு மீன் வளத்தைப் பற்றி அமைச்சர் எதுவும் கருத்துச் சொல்லவில்லை.

திரு க. உரொ. எட்மண்ட் : உள்நாட்டு மீன் வளத்தைப் பற்றி, கொடுத்திருக்கிற அறிக்கையில் காட்டியிருக்கிறோம். நேரம் இல்லாத காரணத்தினால்தான் எடுத்துச் சொல்ல முடிய வில்லை. இங்கே மீன் குஞ்சுகளை பண்ணை வைத்து வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. அதைப்போல நவீனமான முறையிலே குஞ்சு பொரிக்கச் செய்வது, வளர்ப்பது ஆகியவற்றிற்கான செயல்முறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொண்டு இந்த அரசு எடுத்து வரும் நல்ல காரியங்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 35-நுகர் பொருள் வழங்கல்.

திருவாளர்கள் எம். அண்ணாமலை, பொ. விஜயராகவன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,88,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 21—மீனளம்.

திருவாளர்கள் செ. சதாசிவம், சி. கோவிந்தராசன், பொ. விஜயராகவன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,44,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

145. 1974–75-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

146. தமிழ்நாடு மின்சார வாரியத்தின், 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1978–79 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையும் 1948–ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*171. கோரிக்கை எண் 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

*172. கோரிக்கை எண் 31-மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

*173. 1979–80-ஆம் ஆண்டில் மீன்வளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

**174. கோரிக்கை எண் 8—தேர்தல் குறித்த மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் வரைவு உரை—கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

**175. கோரிக்கை எண் 44—எழுது பொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

கோரிக்கை எண்கள் 35, 21–க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 19-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன :—

* 18.4.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 19.4.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

பேரவைமுன் வைக்கப்பட்ட விவர அறிக்கை.

இணைப்பு I

[76 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 745-ஐக் காண விடையைக் காண்க].

1978-79 ஆம் ஆண்டு வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்ட கிராமங்களின் பெயர்ப்பட்டியல்.

மாவட்டத்தின் பெயர்.	கிராமத்தின் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
செங்கல்பட்டு ..	1. திருப்பாச்சூர் ..	30
	2. ஆகூர்	63
	3. மணமை	82
	4. ஜல்லிடாம்பேட்டை	25
		200
வட ஆற்காடு ..	5. பெருங்காஞ்சி ..	3
	6. கக்கன்கரை ..	16
	7. ஆம்பலூர்	5
	8. எக்லாஸ்புரம் ..	12
	9. கில்சாத்தமங்கலம் ..	41
	10. செங்குன்றம் ..	8
	11. காவனூர்	1
	12. சின்னதாமல் செருவு	3
		89
தர்மபுரி	13. பெரியவுலக்கை ..	5
	14. தொகரப்பள்ளி .	22
	15. சிங்காரப்பட்டி.	24
	16. சிராசகாரம். ..	21
	17. மரண்டஅலி ..	5
	18. அரூர்	104
		181

[1979 ஏப்ரல் 20

மாவட்டத்தின் பெயர்.	கிராமத்தின் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
சேலம்	19. கரட்டுவலசு ..	30
	20. ஆணையம்பட்டி ..	90
	21. உதய பட்டி ..	39
	22. சிலநாயக்கன்பட்டி ..	39
	23. ஆட்டயம்பட்டி ..	28
		226
கோயம்புத்தூர் ..	24. பேரூர் செட்டிபாளையம்	4
	25. கங்கயம்பாளையம்	8
		12
நீலகிரி	26. கப்பத்துறை ..	1
தென் ஆற்காடு ..	27. பனயபுரம் ..	43
	28. கலியானாம்பூண்டி ..	1
	29. கருவேப்பிலைப் பாளையம்.	6
	30. தடுத்த கொண்டலூர்	3
	31. மலியம்பது ..	55
	32. தாழம்பட்டு ..	11
	33. அணைவாரி ..	138
		257
தஞ்சாவூர்	34. பாதிரகுடி	40
	35. கரம்பாயம் ..	7
	36. வழுமங்கலம் ..	20
	37. பெரும்பானையூர் ..	52
	38. தைக்கல்	24
	39. சிக்கல்	25
	40. திருவிசைநல்லூர் ..	26
	41. பரட்டை	20
		214

1979 ஏப்ரல் 20]

மாவட்டத்தின் பெயர்	கிராமத்தின் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
திருச்சிராப்பள்ளி ..	42. நடராஜபுரம் ..	13
	43. லிங்கத்தூர் ..	5
	44. ஜெகடபி	5
	45. பாம்பரமுத்தன்பட்டு	11
	46. கிளியூர்	1
	47. மணப்பாளையம் ..	55
	48. செல்லிபாளையம் ..	10
		114
புதுக்கோட்டை ..	49. கொடும்பாலூர் ..	30
	50. ஒக்கூர்	41
		71
மதுரை.	51. சின்னப்பாலப்பட்டி	51
	52. சின்னக்கலையமுத்தூர்	3
	53. பரவை	25
		79
இராமநாதபுரம் ..	54. காத்தான்குடி ..	4
	55. செம்பட்டை ..	35
	56. உஞுத்திமடை ..	37
		76
திருநெல்வேலி ..	57. இருப்பையூரணி ..	45
	58. அரியநாயகிபுரம் ..	2
	59. சிவலபேரி ..	20
	60. வீரசிகாமணி ..	33
		100

மாவட்டத்தின் பெயர்.	கிராமத்தின் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
கன்னியாகுமரி	61. குலசேகரம்	5
	62. திருமாபுரம்	35
		40

இணைப்பு II

[780-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 753-க்கான விடையைக் காண்க.]

விடை

(அ) & (ஆ) : இந்தப் பேரவையின் முன் கடந்த ஆண்டு விவாதிக்கப்பட்ட 1977-ம் ஆண்டு புயல் வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் 22-ம் பத்தியில் புயல் மற்றும் மழையைத் தாங்கக்கூடிய பாதுகாப்புக் கூடங்கள், தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் கட்டப்பட வேண்டியதின் அவசியத்தை குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுடனும் கலந்து, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தென்னார்க்காடு மாவட்டங்களில் மேடான இடங்களில் பாதுகாப்புக் கூடங்கள், [illegible] கட்டமாகக் கட்டுவதற்கு முடிவெடுத்தது. சாதாரண காலங்களில், கிராம மக்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்திற்காகவும், சில இடங்களில் மாணவர்களுக்குப் படிக்கவும், சில இடங்களில் கிராம மக்கள் ஒன்று கூடி தங்கள் பிரச்சனைகளைப் பற்றி பேசவும் இவை பயன்படுத்தப்படும்.

2. முதல் கட்டமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில், நாகப்பட்டினம் வட்டத்தில் அக்கரைப்பேட்டையிலும், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் மீனிச்சலிலும், தலைமைப் பொறியாளர் பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அவர்களால் மொத்தம் இரு பாதுகாப்புக் கூடங்கள் கட்டப்படுவதற்கு 1978ம் ஆண்டு சனவரித் திங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு 1978-ஆம் ஆண்டு நவம்பரில் அடித்த புயல், மழை காலத்தில் பயன்

படுத்தப்பட்டுள்ளன. இவைகளுக்கான செலவுத் தொகையில் பாதியை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளை ஏற்க இசைந்துள்ளது. இதைத் தவிர பாதுகாப்புக் கூடங்கள் கட்டப்பட்டு வரும் 17 இடங்களின் விவரங்களாவன :—

வரிசை எண்ணும், கட்டப்படும் இடமும்.	குறிப்புரை.
(1)	(2)
தென்னார்க்காடு மாவட்டம் :—	
1. ஆலப்பாக்கம்	இவை மகாராட்டிர மாநில மக்கள் புயல் நிவாரணக்குழு இதற்காக அளித்த ரூ. 10 இலட்சத்தின் [illegible] கட்டப்படுகின்றன. இவற்றில் வல்லம்படுகை, பிச்சாவரம் ஆலப்பாக்கம், ஆகியவற்றில் கட்டிட வேலைகள் முடிந்து கட்டிடங்கள் உபயோகத்திற்குத் தயாராகவுள்ளன.
2. பெரிய குப்பம் ..	
3. பிச்சாவரம் ..	
4. ஜெயங்கொண்டபட்டினம்	
5. வல்லம்படுகை ..	
செங்கல்பட்டு மாவட்டம் :—	
6. வெம்புனூர் ..	இவை மாநில அரசும், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையும் இணைந்து, ஆளுக்குப் பாதி தொகையினை ஏற்கும் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்றன.
7. கடலோரகுப்பம் ..	
8. சாலவான் குப்பம்	
9. இஞ்சம்பாக்கம் ..	
தஞ்சாவூர் மாவட்டம் :—	
10. ஆலக்குடி ..	
11. வடபொய்யூர் ..	
12. பிரதம ராமாபுரம் ..	
13. விழுந்தமாவடி ..	
14. நாலுவேதப்பட்டி ..	
15. ஏரிப்புரக்கரை ..	

பயன்படுத்தி, வேளாளப் பெருமக்கள்
பயனாகவும், தன்னுடைய தேவைகளை நிறைவு பாடுபட்டதின்
ளும் அளவுக்குத் தமிழகம் இன்று நெல்லை செய்து கொள்
வருகிறது. விவசாயிகளின் உற்சாகம் குறையாமல் உற்பத்தி செய்து
மானால், நெல்லுக்கு நியாயமான விலை அவர்களுக்குக் இருக்க வேண்டு
வேண்டுமென்பதில், இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது. கிடைக்க

<u>நெல்லின் கொள்முதல் விலைகள் :</u>

4. நெல்லின் கொள்முதல் விலைகள் நாடு
ஆண்டுதோறும், மத்திய அரசால், விவசாய விளைபொருள்கள் முழுவதற்கும்,
விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில், நிர்
ணயிக்கப்படுகின்றன. 1978–79-ம் ஆண்டுக்கு மோட்டா ரக
நெல்லுக்குக் குவின்டாலுக்கு ரூ. 85 என்ற விலை மத்திய அர
சினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோதுமைக்கு, சாகுபடிச்
செலவை அடிப்படையாகக் கொண்டு,
ரூ. 112.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதை குவிண்டாலுக்கு
காட்டி, கோதுமையின் சாகுபடிச் செலவைவிட எடுத்துக்
படிச் செலவு எந்த வகையிலும் குறைந்ததாக நெல்லின் சாகு
மாறாகக் கூடுதலாகத்தான் இருக்கின்றது இருக்க முடியாது.
பூர்வமாக நிலை நாட்டி, நெல்லின் என்பதையும் ஆதார
உயர்த்த வேண்டுமென்று தமிழக கொள்முதல் விலையை
வேளாண்மை விளை பொருள்கள் அரசு வற்புறுத்தியது.
குழுவிடமும் இக்கருத்து பலமாக விலைவாசிகள் ஆணைக்
முதலமைச்சர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டது.
முதலமைச்சர் அவர்கள் வன்மையாக இக்கருத்தைத் தமிழக
இது குறித்துத் தமிழக முதலமைச்சர் வற்புறுத்தினார்கள்.
பிரதமருக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். அவர்கள் இந்தியப்
ஆண்டு மோட்டா ரக நெல்லுக்குக் குவின்டாலுக்கு ஆயினும், சென்ற
என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை எட்டு ரூபாய் ரூ. 77
டும உயர்த்தி, நெல் விலையை ரூ. 85 என்று மத்திய அவ்வளவு மட்
நிர்ணயித்தது, தமிழக அரசுக்கு மட்டுமல்ல, தென் மாநில அரசு
சாயப் பெருமக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. விவ

5. 1978–79-ம் ஆண்டில் கோதுமையின்
விலையைக் குவின்டாலுக்கு ரூ. 110 என்று கொள்முதல்
வேண்டுமென்று வேளாண்மை விளைபொருள்கள் நிர்ணயிக்க
வாசிகள் ஆணைக்குழு பரிந்துரைத்தது. கோதுமையின், விலை
சாகுபடிச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 101 ஆகும் என்ற அடிப்
படையில் இந்த விலையை ஆணைக்குழு பரிந்துரைத்தது. மத்திய
அரசோ, ஆணைக்குழு பரிந்துரைத்த விலையை விடக் குவின்
டாலுக்கு ரூ. 2·50 கூடுதலாக அளித்து; கோதுமையின் கொள்
முதல்விலையை ரூ. 112.50 ஆக நிர்ணயித்தது. 1979–80-...

ஆண்டுக்குக் கோதுமையின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 115 ஆக நிர்ணயிக்கவேண்டுமென்று ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டு கோதுமையின் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படுகின்ற நேரத்தில், சாகுபடிச் செலவைக் கருத்தில் கொண்டு, அதே அடிப்படையில்தான், நெல்லின் கொள்முதல் விலையும் நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது தமிழக அரசு, மத்திய அரசின் முன், தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ள கருத்து. நெல்லின் சாகுபடிச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 120 வாக்கில் அமையும் என்பதற்கான புள்ளி விவரங்களை, வேளாண்மைத் துறையிடமிருந்து மட்டுமல்ல, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக நிபுணர்களிடமிருந்தும், விவசாயிகளின் பிரதிநிதிகளிடமிருந்தும் சேகரித்துத் தமிழக அரசு, மத்திய அரசின் முன் வைத்துள்ளது.

6. கோதுமையைக் கோதுமையாகவே பயன்படுத்தலாமென்றும், ஆனால் நெல்லை அரிசி ஆக்கித்தான் பயன்படுத்த முடியுமென்றும் எடுத்துக் காட்டி, அரிசியின் விலை மிகைப்படாமலிருக்க, நெல்லுக்குக் கொள்முதல் விலையை அளவோடு நிர்ணயிக்கவேண்டுமென்று சிலரால் வாதிடப்படுகிறது. சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு தானியத்தின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்கும். நெல்லை அரிசியாக்கும் செலவையும் மனதிற்கொண்டு, அதற்காக நெல்லின் கொள்முதல் விலையைக் குறைக்க வேண்டுமென்ற அணுகுமுறையை நாம் பின்பற்றினால், நெல் உற்பத்தியாளருக்கு உற்சாகம் குறைந்து, நெல்லின் உற்பத்தி பாதிக்கப்படக்கூடும். மேலும் நாட்டின் பொதுவான உணவுக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பார்த்தால்கூட, நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்பது உணவு நிலைமையை நிதானப்படுத்துவதற்கு உரிய வழியாகும். தட்டுப்பாடுகள் ஏற்படும் நேரத்தில், உணவு தானியங்களை இறக்குமதி செய்வது அவசியமாகும் சூழ்நிலையில் கூட, சர்வதேச சந்தையிலிருந்து கோதுமையை எளிதாக இறக்குமதி செய்யலாம். ஆனால், உலகச் சந்தையிலிருந்து, அரிசியை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் அவ்வளவு அதிகம் கிடையாது. உலகச் சந்தையிலே அரிசியின் விலைகளும் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே அரிசியைப் பொறுத்தவரையில், நம் நாடு, தன் தேவைகளைத் தானே நிறைவு செய்துகொள்ளக்கூடிய வகையில், நெல்லின் உற்பத்தியைப் பெருக்குவது, இந்திய உணவுப் பொருளாதாரம் சீராக இயங்குவதற்கு இன்றியமையாததாகும். இந்த நிலையை உறுதிப்படுத்த வேண்டுமென்றால், நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும்.

[1979 ஏப்ரல் 20

7. இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, நெல்லின் கொள்
முதல் விலையை மிகக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்றும்,
உடனடியாக இது சாத்தியமில்லை யென்றால், கோதுமையின்
கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்
முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றும், தமிழக அரசு
வலியுறுத்தி வருகிறது. இக்கருத்து தென்மாநில முதலமைச்சர்
கள் அனைவருக்கும் உடன்பபான கருத்து என்பது, தமிழக
முதலமைச்சர் அவர்களின் முயற்சியின் பேரில், சென்ற ஆண்டு
கூட்டப்பட்ட தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டில்
செய்யப்பட்டுள்ள பரிந்துரைருலியிந்து தெளிவாகிறது.

8. கோதுமையின் கொள்முதல் விலையையும், நெல்லின்
கொள்முதல் விலையையும் மத்திய அரசு நிர்ணயித்து வருவதில்
பல ஆண்டுகளாக ஏற்றத்தாழ்வு தொடர்ந்து காணப்பட்டு
வருகிறது. 1967—68-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை
குவிண்டாலுக்கு ரூ. 43 ஆக நிர்ணயிக்கபட்டிருந்த நேரத்தில்,
கோதுமையின் கொள்முதல் விலை ரூ. 70 முதல் ரூ. 76 ஆக
மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டது. 1969—70-ம் ஆண்டில்
நெல்லின் கொள் முதல் விலை ரூ. 45 ஆக இருந்தது. கோதுமை
யின் கொள்முதல் விலை ரூ. 76 ஆக இருந்தது. 1970—71-ம்
ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 46 ஆக நிர்ணயிக்கப்
பட்டது. 1971—72-ம் ஆண்டில் அதே விலை தான் தொடர்ந்தது.
1972—73-ம் ஆண்டில் நெல்லுக்கு விலை ரூ. 47 ஆக நிர்ணயிக்கப்
பட்டது. 1973—74-ம் ஆண்டில் குவிண்டாலுக்கு ரூ. 19 உயர்வு
அளிக்கப்பட்டு நெல்லின் விலை ரூ. 66 ஆக நிர்ணயிக்கப்பட்டது.
1974—75-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 74 ஆக
உயர்த்தப்பட்ட நேரத்தில், கோதுமையின் கொள்முதல் விலை
ரூ. 76-லிருந்து ரூ. 105 ஆக உயர்த்தப்பட்டது. 1975—76-ம்
ஆண்டில் நெல்லுக்கும் கோதுமைக்கும் அதே விலைகள் தான்
தொடர்ந்தன. 1976—77-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல்
விலை தொடர்ந்து ரூ. 74 ஆக இருந்த நேரத்தில், கோதுமை
யின் கொள்முதல் விலைமட்டும், ரூ. 110 ஆக உயர்த்தப்பட்
டது. 1977—78-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை
ரூ. 77 ஆக உயர்த்தப்பட்டது. 1978—79-ம் ஆண்டில் நெல்லின்
கொள்முதல் விலை ரூ. 85 ஆகவும், கோதுமையின் கொள்முதல்
விலை ரூ. 112·50 ஆகவும் உயர்த்தப்பட்டது.

9. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, நெல்
லின் கொள்முதல் விலை சென்ற பத்து ஆண்டுகளில் எந்த
ஆண்டிலும் நியாயமாக நிர்ணயிக்கப்படவில்லை என்பதையும்,
கோதுமைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட நெல்லின் விலை
மிகக் குறைவாகத் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது
என்பதையும் நாம் காணலாம். இந்த விலை நிர்ணயம் நெல்

1979 ஏப்ரல் 20]

விவசாயிகளுக்குப் பெரிய அநீதி அளித்துள்ளது என்ற உணர்வு
நெல் உற்பத்தியாளரிடையே பரவ இது இடம் தந்துள்ளது. இத்
தகைய உணர்வு பரவுவது நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்
படுத்துவதற்கு உகந்ததாய் இராது என்பதையும் நாம் உணர
வேண்டும். மறுக்கமுடியாத இந்த நியாயங்களை எடுத்துரைத்து,
நெல்லின் கொள்முதல் விலையை உடனடியாகக் கோதுமையின்
கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நிர்ணயிக்க வேண்டு
மென்று தமிழக அரசு மத்திய அரசிடம் இதுவரை வன்மையாக
வலியுறுத்தி வந்துள்ளதுபோலவே, இனியும் தொடர்ந்து வலி
யுறுத்தி வரும்.

10. மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்
தாவிடிலும், தமிழக அரசு தானாக நெல்லுக்கு உயர்வான
விலையை அளிக்கலாமே என்று சில சமயங்களில் வாதிடப்படு
கிறது. அனைத்திந்திய அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் விலை
களுக்குக் கூடுதலாக மாநில அரசுகள் கொள்முதல் விலைகளை
வழங்கக் கூடாதென்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. முன்பு
ஒருசில ஆண்டுகளில் இவ்வாறு கூடுதலாக வழங்கப்பட்டதின்
காரணமாகப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. மேலும், தமிழக
அரசு தன்னுடைய கொள்முதல் நடவடிக்கைகளுக்காக ரிசர்வ்
வங்கியிலிருந்து 11 விழுக்காடு வட்டியிலே முன்பணம் பெறு
கின்றது. தமிழகத்தில் கொள்முதலை நடத்துவதற்கு ரூ. 60
முதல் ரூ. 100 கோடி வரை ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம்
பெற வேண்டிய கட்டாயம் இருந்தது என்பதைச் சென்ற
சில ஆண்டுகளின் அனுபவம் உணர்த்துகிறது. இவ்வளவு கணிச
மான முதலீடு செய்யும் பொறுப்பை, மாநில அரசு தன்னுடைய
குறுகிய நிதி வசதிகளைக் கொண்டு ஏற்றுக்கொள்ள இயலாது.
ஆகவே, ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம் பெறுவது அவசிய
மாகிறது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குக்
கூடுதலான விலைகளில் மாநில அரசு நெல்லை வாங்க முற்பட்
டால் அதற்கு ரிசர்வ் வங்கியிலிருந்து முன் பணம் கிடைக்காது
என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

11. இதில் மற்றொரு முக்கிய அம்சத்தையும் நாம் மன
தில் கொள்ளவேண்டும். உற்பத்தியாளருக்கு நியாயமான
விலை கிடைக்க வேண்டும் என்பதில் அரசுக்கு நாட்டம் ஒரு
புறமிருக்க, நுகர்வோருக்கு நயமான விலையில் அரிசியைப் பொது
விநியோக முறையின்கீழ் வழங்குவதும் அரசின் தலையாய பொறுப்
புகளில் ஒன்றாகிறது. தமிழகத்தில் பொது விநியோக முறையின்
கீழ், மோட்டா ரக அரிசியும், நடுத்தர ரக அரிசியும், கிலோ
ரூ.1·60 என்ற விலைக்கு இப்போது விற்கப்படுகின்றன. மோட்டா
ரக நெல்லை ரூ. 85 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை
ரூ. 89 என்ற விலையிலும் வாங்கும்போதே கொள்முதல் செலவுகள்

போக்கு வரத்துச் செலவுகள், அரைவை, சேமிப்பு, வட்டி
ஆகிய செலவுகள் அனைவற்றையும் சேர்த்துக் கணக்கிடும் போது,
இப்போது பொது விநியோக முறையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள
விலைகளில் அரிசியை விற்பதிலேயே மாநில அரசுக்கு நட்டம்
ஏற்படுகின்றது. கோதுமைக்கு ஒத்த அளவில் நெல்லின் கொள்
முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று நாம் வாதிடு
வதற்கேற்ப, நெல்லின் கொள்முதல் விலையை ரூ. 115 அளவில்
நிர்ணயித்தால், அரிசியின் விநியோக விலை குவிண்டாலுக்கு
ரூ. 230, அதாவது கிலோ ரூ. 2·30 ஆக அமையும் என்பதையும்
மனதில் கொள்ளவேண்டும். உற்பத்தியாளருக்கு நியாயமான
விலை நிர்ணயிக்கப்படுவது, நுகர்வோருக்கு நியாயமான
களில் அரிசி கிடைக்கச் செய்வது, ஆகிய இரண்டும் தேசிய
உணவுக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் ஆவதால், அரிசி
யின் அடக்க விலைக்கும் விநியோக விலைக்கும் உள்ள இடை
வெளியை மத்திய அரசு மானியமாகத் தந்து சரிக்கட்டினால்
தான் இந்நிலைமையைச் சமாளிக்க முடியும். உற்பத்தியாளருக்கு
நியாயமான கொள்முதல் விலை வழங்கும் நேரத்தில், நுகர்
வோருக்குப் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் அரிசி
யின் விலையை உயர்த்தாமலிருப்பது அவசியமாகும். அவ்வாறு
செய்வதற்கு மானியம் தரவேண்டுமென்றால், ஒரு கிலோவுக்கு
70 பைசா மானியம் என்ற அடிப்படையில், ஒரு இலட்சம் டன்
கள் விநியோகத்திற்கு 7 கோடி ரூபாய் மானியச் செலவு ஏற்
படும். தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம்
கள் அரிசி விநியோகமானால், 42 கோடி ரூபாய் மானியச்
செலவு ஏற்படும். இந்த மானியச் செலவை மாநில அரசு
ஏற்றுக் கொள்ள இயலாது. ஆகவேதான், சென்ற சில ஆண்டு
களில் கோதுமையின் விநியோகத்திற்கு மத்திய அரசு ஆண்டுக்கு
ஏறக்குறைய 300 கோடி ரூபாய் அளவில் மானியம் அளித்து
வந்துள்ளதுபோல், அரிசியின் விநியோகத்திற்கும் மத்திய அரசு
மானியம் அளிக்க முன் வரவேண்டுமென்று இந்த அரசு வற்
புறுத்தி வருகின்றது. இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்
டால்தான், உற்பத்தியாளருக்கு நெல்லுக்கு நியாயமான விலை
கிடைக்க வகை செய்யும் அதே நேரத்தில், நுகர்வோருக்கு அரிசி
யின் விலையை உயர்த்தாமல், இப்போதுள்ள விலையிலேயே
கிடைக்க வகை செயய முடியும். இச்சூழ்நிலையில் மத்திய அரசு
நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்தினாலன்றி, இப்
பிரச்னைக்கு மாநில அரசு தன்னுடைய சொந்தப் பொறுப்பி
லேயேதீர்வு காண இயலாது என்பது தெளிவாகும். கோதுமைக்கு
ஒத்த அளவிலாவது நெல்லுக்குக் கொள்முதல் விலையை நிர்ண
யிக்கவும், அரிசியின் விநியோக விலையை உயர்த்தாமலிருக்க
வழிசெய்யும் வகையில், கோதுமைக்கு இதுவரை தந்து வந்த

அளவில் அரிசிக்கும் மானியம் தரவும் மத்திய அரசு முன்வர வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்தி வருவதற்கு, இம்மாமன்ற உறுப்பினர்கள் முழுமனதான ஆதரவை நல்குவார்களென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

விவசாயிகள் இலாபகரமான விலை பெறுவதற்கான சூழ்நிலை.

12. நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற நிலையில், வெளிச் சந்தையில் விவசாயிகள் நெல்லை இலாபகரமாக விற்றுக் கொள்ள வசதியான சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்துள்ளது. 1975-ம் ஆண்டு சம்பாப் பட்டம் வரை கட்டாயக் கொள்முதல் நடத்தப்பட்டு வந்ததை இம் மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இப்பொழுது கட்டாயக் கொள்முதல் இல்லை. மாவட்டங்களை விட்டு நெல்லையும் அரிசியையும் எடுத்துச் செல்லக் கூடாதென்று ஒரு கட்டத்தில் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இப்போது அந்தத் தடைகளும் நீக்கப்பட்டு விட்டன. 1977-ஆம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நெல்லுக்கு 10 விழுக்காடும், அரிசிக்கு 20 விழுக்காடும், வர்த்தக லெவி விதிக்கப்பட்டிருந்தது. ஆலைகள் லெவியும் விதிக்கப்பட்டிருந்தது. 11—5—1978 முதல் தமிழகத்திற்குள் வர்த்தக லெவி, ஆலை லெவி அனைத்தும் நீக்கப்பட்டு விட்டன. ஆகவே, இப்போதுள்ள நிலைமைப்படி, தமிழகத்திற்குள் அரிசி, நெல் நடமாட்டத்திற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இதனால் பற்றாக்குறை மாவட்டங்களிலிருந்து வர்த்தகர்கள் உபரி மாவட்டங்களுக்குச் சென்று, விவசாயிகளிடமிருந்து நெல்லை நேரடியாக வாங்குவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்குள்ளாக எந்தவித நடமாட்டக் கட்டுப்பாடோ, தடையோ, லெவி நிபந்தனையோ இல்லாமல் உணவு வர்த்தகம் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

13. வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசியில் மட்டுமே லெவி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த லெவியும், முன்பிருந்த 50 சதவீதத்திலிருந்து, 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள் முதற்கொண்டு, 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1978-ம் ஆண்டுக் குறுவையின் போது, தஞ்சைக் குறுவை வெளி மாநிலங்களுக்கு எந்தவித லெவியும் செலுத்தாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. வெளிச் சந்தையில் விவசாயிகள் இலாபகரமான விலைக்கு நெல்லை விற்றுக்கொள்ள வசதி செய்யும் பொருட்டே,

இந்த அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழ கத்தின் உணவு நிலைமையைப் பாதுகாப்பதற்கும், நுகர்வோர் நலனை முன்னிட்டும், அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு, அதே சமயத்தில் நெல் அரிசி வர்த்தகம் சுதந்திரமாகவும் தடைகளின்றியும் இயங்குவதற்கு எல்லா வசதிகளையும் செய்து தருவதும், விவசாயிகள் இலாபகரமான விலையில் நெல்லை விற்க வாய்ப்புகள் அளிப்பதுமே, அரசின் கொள்கையாக இருந்து வருகிறது.

14. இந்த அடிப்படையில்தான் அரிசி அரைவை ஆலை யாளர்கள், நெல் அரிசி மொத்த வியாபாரிகள் ஆகியோர், ஒரே சமயத்தில் வியாபாரத்திற்காக வைத்துக்கொள்ளக் கூடிய நெல் அரிசி உச்சவரம்பும் அக்டோபர் 1978க்குப் பின்பு, மிகக் கணிசமாக, உயர்த்தப்பட்டுள்ளது. அரிசி அரைவை ஆலை யுள்ள மொத்த வியாபாரிகள் ஒரே சமயத்தில் 2,400 குவிண்டால் நெல்லும், மற்ற மொத்த வியாபாரிகள் 750 குவிண்டால் நெல்லும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் நிலையை உறுதிப் படுத்துவதற்காகவே, இந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகம் :

15. பொது விநியோக முறையின்கீழ், அரிசி வழங்குவதும் தொடர்ந்து நடந்துவருகிறது. வெளிச்சந்தையில் அரிசி தாராள மாகவும், நயமான விலைகளிலும் கிடைத்து வருவதால், பொது விநியோக முறையின்கீழ் அரிசி விற்பனை சென்ற ஆண்டில் மிகக் கணிசமாகக் குறைந்தது. 1976ஆம் ஆண்டில் 6 இலட்சம் டன்கள் விநியோகிக்கப்பட்டதற்கு எதிராக, 1978ஆம் ஆண்டில் 1 இலட்சம் டன்கள் அரிசிதான் விநியோகமாயிற்று. இவ்வாறு பொது விநியோக முறையில் விற்பனை குறைந்துள்ளது. வெளி சந்தையில் தாராளமாக அரிசி கிடைத்து வருவதால்தான். அதே சமயத்தில், விலைகள் ஏறிவிடாமல் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொது விநியோக முறையும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

16. நெல்லின் கொள்முதல் விலை ரூ. 74 என்று நிர்ண யிக்கப்பட்டிருந்த நேரத்தில், பொது விநியோக முறையின் கீழ், மோட்டா ரக அரிசியின் விலை ரூ. 1.60 ஆக நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இப்போது கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 85 ஆக உயர்ந்த பின்பும், பொது விநியோக முறையின்கீழ் மோட்டா ரக அரிசியின் விலையையும், நடுத்தர ரக அரிசியின்,

விலையையும் உயர்த்தாமல் கிலோவுக்கு ரூ. 1.60 ஆகவே, தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு நட்டம் ஏற்படுகின்றபோதிலும், நுகர்வோரின் நலனைக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை

17. தமிழ்நாட்டில் அரிசி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதாலும், சோளம், கம்பு கேப்பை போன்ற சிறுதானியங் களும் தாராளமாகக் கிடைப்பதாலும், பொது விநியோக முறையின்கீழ் கோதுமையின் விற்பனை பெரிதும் குறைந்து விட்டது. 1975ஆம் ஆண் டில் மாதம் 50,000 டன்கள் கோதுமை விற்பனையாகி வந்ததற்கு மாறாக, இப்போது கோதுமையின் விற்பனை மாதம் 3,000 டன்கள் அளவில்தான் உள்ளது. அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நேரத்திலோ, அரிசியின் விலை ஏறி விடுகின்ற போதிலோ மட்டும் கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கத்தை மாற்றிக் கொண்டு, சத்துணவின் தேவையை நிறைவு செய்ய, அரிசியோடு கோதுமையையும் அன்றாடம் பயன்படுத்து வது நல்லது என்பதைக் கருதி, தமிழக மக்கள் கோதுமையைப் பயன்படுத்துவதை அதிகரித்துக் கொள்வது நல்லது. அண்மை யில் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் கோதுமையின் விலையை மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ. 125-லிருந்து ரூ. 130ஆக உயர்த்திய பின்னரும், தமிழக அரசு கோதுமை யின் சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமல், கிலோ ரூ. 1.40 என்ற அளவிலே தொடர்ந்து விற்று வருகிறது. அரிசியின் விலையைவிடக் கோதுமையின் விலை குறைவு என்பதையும், கோதுமையையும் பயன்படுத்துவது உடல் நலத்திற்கு உகந்தது என்பதையும், தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டு கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்த முன் வர வேண்டும்.

18. தமிழ்நாட்டில் இயங்கிவரும் 31 கோதுமை அரைவை ஆலைகள் தங்கள் அரைவைத் திறன் முழுவதையும் பயன் படுத்தும் அளவிற்குத் தேவையான கோதுமை இப்போது தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலாகவும் அரைக்க விரும்பும் ஆலைகளுக்கு, அவற்றின் அரைவைத் திறனில் 50 விழுக்காடு கூடுதல் ஒதுக்கீடு செய்யவும் இப்போது வசதி செய்யப்பட்டுள்ளது. ஆலைகளுக்குக் கோதுமை தாராள மாக வழங்கப்படுவதின் பயனாக, மைதா, ரவை போன்ற கோதுமைப் பொருட்களின் விலைகள் வெளிச்சந்தையில் நிதானமாகவே உள்ளன. கோதுமை, கோதுமைப் பொருட் களின்மீது, எந்தவிதக் கட்டுப்பாடும் இப்போது கிடையாது.

சர்க்கரை.

19. 1978-ம் ஆண்டு ஆகஸ்டு வரை சர்க்கரைக் கட்டுப் பாட்டுக் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வந்தது. அதன்படி நாட்டிலே உற்பத்தியான சர்க்கரையில் 65 விழுக்காடு லெவி முறையின்கீழ் விநியோகத்திற்கும், 35 விழுக்காடு சர்க்கரை, வெளிச் சந்தை விற்பனைக்காகவும் ஒதுக்கப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ், சுமார் 19,000 டன்கள் லெவி சர்க்கரை ஒவ்வொரு மாதமும் தமிழகத் திற்கு ஒதுக்கப்பட்டு வந்தது. லெவி சர்க்கரையின் விலை கிலோ ரூ. 2,30 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சர்க்கரை விநியோகக் கொள்கையில் மத்திய அரசு மாற்றம் செய்து, லெவி முறையை நீக்கிவிட்டது. இதை யொட்டி, சர்க்கரை ஆலைகளுக்குப் பெரும் பிரச்சினைகள் எழுந்துள்ளபோதிலும், விவசாயிகள் கரும்புக்குப் பெற்று வந்த விலை குறைந்து விட்டபோதிலும், நுகர்வோரைப் பொறுத்த வரையில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 2.10 முதல் ரூ. 2.30 அளவில் தாராளமாகக் கிடைத்து வருகிறது. சர்க்கரை யின் விலை ஏறிவிட்டால் விலையைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமிழக அரசிடம் சர்க்கரை கையிருப்பும் கணிசமாக உள்ளது.

மண்ணெண்ணெய்.

20. தமிழகத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய 33,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை ஒதுக்கீடு செய்து வருகிறது. மத்திய அரசு, அண்மையில் மண்ணெண்ணெய் மீது கலால் வரியை உயர்த்தியதன் விளை வாக, மண்ணெண்ணெயின் சில்லறை விற்பனை விலை யில் லிட்டர் ஒன்றுக்கு 10 பைசா விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் விநியோகத்தில், தட்டுப்பாடோ, நிர்ணயிக்கப் பட்டுள்ள விலைகளுக்கு மேலாக விற்பனை செய்யப்படும் நிலைமையோ, ஏற்படாத வண்ணம் தடுக்க, விழிப்பான நட வடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமங்களிலும் மண்ணெண்ணெய் விநியோகத்தை விரிவுபடுத்த, கிராம நியாய விலைக் கடைகள் மூலமாகவும் மண்ணெண் ணெயை வழங்குவதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

II கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள்.

21. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை திறக்கப்படுமென்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அறிவிப்பு செய்தது. இவ்வாறு கிராமங்கள் அனைத்திலும் பல்லாயிரக் கணக்கான கடைகளைத் திறந்து இயக்குவதில் செலவு ஏராளமாக

ஆகும் என்று உணர்ந்திருந்தபோதிலும், கிராம மக்களுக்கு இந்த வசதி கிடைக்கவேண்டுமென்ற கவலையில் அரசு இக்கொள்கை முடிவைச் செய்தது. கிராமங்களில் பொது விநியோக முறையை விரிவாக்கவேண்டுமென்று அனைத்திந்திய அடிப்படை யில் இப்பொது முடிவு எடுக்கப்பட்டு, அதை இன்னும் ஆறுமாத காலத்தில் செயல்படுத்த வேண்டுமென்று, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. இதற்கு முன்னதாகவே தமிழகத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதும், இத்திட்டத்தில் நாடு முழு வதற்கும் முன்னோடியாகத் தமிழகம் விளங்குகிறது என்பதும், நமக்கு மன நிறைவு அளிக்கக்கூடியது. இத்திட்டத்தை வகுத் துள்ள மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு இதனால் ஏற்படும் பெரும் நட்டத்தில் பாதியையாவது ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற போதிலும், இதுவரை மத்திய அரசு மானியச் செலவில் பங்கு எதையும் ஏற்றுக்கொள்ள முன்வராதது நமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்த அரசும், பல்வேறு மாநில அரசுகளும், எழுப்பியுள்ள இந்த நியாயமான கோரிக்கைக்கு மத்திய அரசு விரைவில் இணங்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

22. தமிழ்நாட்டில் 16,660 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. அவை நீங்கலாக, 15,735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏற்கெனவே ஏறக்குறைய 5,800 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை, போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப் பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றி யமையாத மற்ற பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து, அவற்றைப் பல்பொருள் நியாயவிலைக் கடைக ளாக மாற்றும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டு அணுகு முறைகளை அரசு பின்பற்றியது. ஏற்கனவே இயங்கிவந்த உணவு பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம்; கடைகள் இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடை களைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களை யும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு, தஞ்சை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணி பக் கழகத்திடமும், எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்பு களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

23. இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய 5,800 கடைகளில், 5,600-க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள், பல்பொருள் நியாய விலைக் கடை

களாக மாற்றப்பட்டுவிட்டன. புதிதாகக் கடைகள் திறக்கப்பட
வேண்டிய சுமார் 10,000 கிராமங்களில் 8,000 கிராமங்களில்
கடைகள் இப்போது திறக்கப்பட்டுவிட்டன. மாவட்டவாரி
யாகப் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கடைகளின் விவரமும், திறக்
கப்பட வேண்டிய கடைகளின் விவரமும், கீழே உள்ள பட்டியலில்
கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	மாவட்டம்.	திறக்கப்பட வேண்டிய கடைகள்.	திறக்கப் பட்ட கடைகள்.	மேலும் திறக்கப்பட வேண்டிய கடைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	செங்கற்பட்டு ..	1,435	1,343	92
2	வட ஆர்க்காடு ..	1,539	1,478	61
3	திருச்சிராப்பள்ளி.	571	571	..
4	புதுக்கோட்டை	558	558	..
5	மதுரை ..	447	447	..
6	இராமநாதபுரம்.	599	599	..
7	கோவை ..	367	367	..
8	நீலகிரி ..	3	3	..
9	சேலம் ..	604	604	..
10	குமரி ..	எல்லாக் கிராமங்களிலும் கடைகள் உள்ளன.		
11	நெல்லை ..	442	442	..
12	தஞ்சை ..	1,040	1,040	..
13	தர்மபுரி ..	618	618	..
14	தென் ஆர்க்காடு.	1,993	..	1,993
	மொத்தம்..	10,211	8,065	2,146

ஆகவே, இத்திட்டத்தின் கீழ் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட வேண்டிய கடைகள் இன்னும் ஏறக்குறைய இருநூறு கடைகள். புதிதாக திறக்கப்பட வேண்டியவை, 2,146 கடைகள். இப்பணியும் இன்னும் ஓரிரு மாதங்களில் நிறைபெற்று விடும்.

24. அறுவடைக் காலத்தில், உற்பத்தியாகும் பொருள்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி, தரமான பொருள்களை நயமான விலைகளில் விற்க, இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்புகளும். நுகர் பொருள் வாணிபக் கழகமும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. குறிப்பாகத் தமிழ கத்தில் பற்றாக்குறையாக உள்ள பருப்பு வகைகள் போன்ற வற்றை உபரியாக உற்பத்தியாகும் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி நம் மாநிலத்தில் விற்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பொருள்களின் விலைகள் அவ்வப்போது பரிசீ லிக்கப்பட்டு ஒத்த தரமுள்ள பொருள்களின் வெளிச்சந்தை விலைகளுக்குக் குறைவாகவே நிர்ணயிக்கப்படுகின்றன.

25. அதிக மக்கள் தொகை இல்லாத கிராமங்களில் வாரத் தில் மூன்று நாட்கள் கடைகளைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு கிராமத்தில் மூன்று நாட்கள் கடைகளைக் கவனித்துக்கொள்ளும் அதே பணி யாளர்கள், பக்கத்துக் கிராமத்தில் அடுத்த மூன்று நாட்கள் கடைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். இதன் மூலம் நிர்வாகச் செலவை சிக்கனப்படுத்துவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இந்த இரட்டைக் கடை முறையின் கீழ் வாரத்தில் மூன்று நாட்கள் இயங்கும் கடைகளின் எண் ணிக்கை. 1,457.

26. இதுவரை கிராம வாசிகள் நகரங்களுக்குச் சென்று வாங்கி வர வேண்டியிருந்த பல பொருள்களையும் இப்பொழுது கிராமங்களிலேயே வாங்கிக் கொள்ள இத்திட்டம் வசதிசெய் துள்ளது. விலையேற்றத்தைத் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகவும் இத்திட்டம் பயன்படும். இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு ஏறக்குறைய 4 கோடி ரூபாய் மானியச் செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராம மக்கள் நலனைக் கருதி இந்த மானியச் செலவையும் பொருட்படுத்தாமல், தமிழக அரசு செயல்படுத்தி வரும் இத்திட்டம் அண்மையில்தான் செயல்படத் தொடங்கியது. தொடக்க கட்டத்தில் சில சிக்கல்களும் இடைஞ்சல்களும் ஏற்படக் கூடும், இவற்றிற்கு வெகு விரைவிலே தீர்வு காணப்பட்ட பின் இத்திட்டம் நிலைபெற்று கிராம மக்களுக்கு சிறந்த தொண்டாற்றும் என்று உறுதியாக நம்பலாம்.

III. விலைவாசிகள் நிலைமை

27. தற்போதைய விலைவாசிகள் நிலைமையை முந்தைய
சில ஆண்டுகளின் நிலவி வந்த விலைவாசிகளுடன் ஒப்பிட்டுப்
பார்க்கும்போது, அன்றாடம் பயன்படுத்தும் பல இன்றியமை
யாப் பொருட்களின் விலைகள் தற்பொழுது குறைந்த அளவி
லேயே உள்ளன என்பதைப் புள்ளி விவரங்கள் புலப்படுத்து
கின்றன. இப்போக்கு மிகக் குறிப்பாகக் காணப்படுவது
அரிசியைப் பொறுத்த வரையிலே, பெரும்பாலான மக்கள் பயன்
படுத்தும் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை 1976-ஆம்
ஆண்டில் கிலோ ரூ. 2·40 முதல் ரூ. 3·00 வரை இருந்ததற்கு
மாறாக, இப்பொழுது கிலோ ரூ. 1·80 முதல் ரூ. 1·90 வரை
உள்ளது. சன்ன ரகப் புழுங்கல் அரிசியின் விலையும் இப்போது
ரூ. 1·50 முதல் ரூ. 1·90 வரை உள்ளது. சென்ற நான்கு
ஆண்டுகளின் விலைகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய
விலை மிகக் குறைவானது. அரிசியின் பிற வகைகளிலும் இத்த
கைய விலை இறக்கப் போக்கே காணப்படுகிறது.

28. கேப்பை, கம்பு, சோளம் முதலிய சிறு தானியங்களின்
விலைகளும் கிலோ ரூ. 0·80 முதல் கிலோ ரூ. 1·20 வரை
அமைந்துள்ளன. சென்ற ஐந்து ஆண்டு காலத்தில் நிலவிய
விலைகளைவிட தற்போதைய விலை குறைவானதே.

29. சர்க்கரையின் விலைகளைப் பொறுத்தவரை, இரண்டு
மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வெளிச்சந்தையில் சர்க்கரையின்
விலை கிலோ ரூ. 4·00-க்கும் மேற்பட்டதாக இருந்த நிலை
க்கு மாறாக இப்போது வெளிச்சந்தையில் கிலோ ரூ. 2·10
முதல் ரூ. 2·30 வரை உள்ளது. லெவி முறை இருந்த
பொழுது லெவி சர்க்கரைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த விலையை
விட இப்பொழுது வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை
குறைவாக அமைந்துள்ளது.

30. பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் தமிழ்
நாடு பற்றாக்குறை மாநிலமாகும். தமிழ்நாட்டில் துவரம்
பருப்பிற்கான தேவை 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம்; தமிழ்
நாட்டில் அதன் உற்பத்தியோ 35,000 டன்கள்தான். கடலைப்
பருப்பின் தேவையும் 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். அதன்
உற்பத்தியோ இங்கு 5,000 டன்கள்தான். பாசிப் பருப்பின்
தேவை 50,000 டன்களுக்கும் மேற்பட்டது; தமிழ்நாட்டில்
அதன் உற்பத்தியோ 22,000 டன்கள்தான். உளுத்தம் பருப்
பின் தேவை ஒன்றரை இலட்சம் டன்களுக்கும் அதிகம்;
இங்கு அதன் உற்பத்தியோ 32,000 டன்கள்தான். மொத்தத்தில்
பருப்பு வகைகளின் தேவை தமிழ்நாட்டில் [illegible] இலட்சம் டன்கள்
என்று மதிப்பிட்டால், இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம்
டன்களுக்கும் குறைவாகவே உள்ளது. [illegible] பற்றாக்குறை [illegible]

இலட்சம் டன்கள் பற்றாக்குறையை ஈடு செய்ய, பஞ்சாப்
ஹரியானா, உத்திரப் பிரதேசம், மஹாராஷ்டிரம், மத்தியப்
பிரதேசம், ஆந்திரம் முதலிய மாநிலங்களிலிருந்து பருப்பு
தமிழகத்திற்கு வரவேண்டியுள்ளது. துவரம் பருப்பின் விலை
ஓராண்டுக்கு முன்பு கிலோ ரூபாய் 4·20 முதல் 5·20 வரை
இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூபாய் 3·65 முதல்
ரூபாய் 5·00 உள்ளது. கடலைப் பருப்பின் விலை சென்ற ஆண்டு
கிலோ ரூபாய் 2·70 முதல் ரூபாய் 3·10 வரை விற்றது. இப்
பருப்பின் விலையில் இந்த ஆண்டு சற்று ஏற்றம் காணப்பட்டு,
கிலோ ரூபாய் 2·80 முதல் ரூபாய் 3·20 வரை உள்ளது. பருப்பு
வகைகளின் விலைகளைச் சீர்படுத்தும் நோக்கத்துடன். கூட்
டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்
கழகமும், இவை உற்பத்தியாகும் உபரி மாநிலங்களிலிருந்து
விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி, இங்கு விநியோகம்
செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

31. கடலை எண்ணெயைப் பொறுத்த வரையில். கிலோ
ரூபாய் 10·10 முதல் ரூபாய் 11·65 வரை 1977-ம் ஆண்டில்
விற்று வந்ததற்கு மாறாக, இப்போது கிலோவிற்கு ரூபாய்
6·60 முதல் ரூபாய் 7·60 வரை விலை குறைந்துள்ளது. இந்த
விலையில் தாராளமாகக் கடலை எண்ணெய் கிடைத்து வருகிறது.
அயல் நாடுகளிலிருந்து எண்ணெய்களைத் தாராளமாக இறக்கு
மதி செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்துள்ள காரணத்தால்,
சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயின் விலைகளும் இப்போது நிதான
மாகவே உள்ளன. நல்லெண்ணெய் சென்ற ஆண்டு கிலோ
ரூபாய் 9·00 முதல் ரூபாய் 10·40-க்கு விற்று வந்ததற்கு மாறாக
இப்போது கிலோ ரூபாய் 7·15 முதல் ரூபாய் 8·80 வரை விற்கப்
படுகிறது. தேங்காய் எண்ணெயின் புழக்கம் தமிழ்நாட்டில்
குறைவாய் உள்ளது. மாநிலத்தின் தேவைகளுக்கான தேங்காய்
எண்ணெயைக் கேரளத்திலிருந்தே பெரும் அளவிற்கு நாம்
பெற்று வருகின்றோம். சென்ற ஆண்டிலிருந்த விலைகளைவிட
இந்த ஆண்டில் விலை ஏற்றம் காணப்படவில்லை.

32. மிளகாய் வற்றல் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 8 முதல்
ரூபாய் 11 வரை விற்கப்பட்டு வந்ததற்கு மாறாக, இப்போது
ரூபாய் 7 முதல் ரூபாய் 10 அளவில் விற்கப்பட்டு வருகிறது.
புளியின் விலையில் சென்ற ஆண்டு விலையைவிட ஏற்றம்
காணப்படுகிறது. சென்ற ஆண்டு கிலோ ரூ. 2·80 முதல் ரூ. 4.50.
வரை விற்கப்பட்டு வந்த புளி. இந்த ஆண்டு ரூ. 3·50 முதல்
ரூ. 5·50 வரை விற்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் புளி
யைப் பொறுத்த வரையிலும் பற்றாக்குறை உண்டு. நமது
தேவையில் பெருமளவு, கர்நாடகம், ஆந்திரம். பீகார், ஒரிஸ்ஸா

ஆகிய மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது. மற்ற
மாநிலங்களிலிருந்தும் புளியை வரவழைத்து. பொது விநியோக
அமைப்பில் குறைந்த விலையில் விற்பதற்கான நடவடிக்கைகளில்
கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்
கழகமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தனியாவின் தற்போதைய
விலை கிலோ ரூபாய் 2·40 முதல் ரூபாய் 3·50 வரை உள்ளது.
இந்த விலை சென்ற ஐந்து ஆண்டுகளில் காணப்பட்ட விலைகளை
விட மிகக் குறைவானதாகும்.

33. காய்கறி, இறைச்சி, விறகு ஆகியவற்றின் விலை
களும் உயர்ந்துள்ளன, அரசுக்குக் கவலை அளிப்பதாய் உள்ளது.
காய்கறிகளின் விலைகளைப் பொறுத்தவரை, மொத்த விலை
களுக்கும், சில்லறை விலைகளுக்குமிடையே பெருத்த வேறு
பாடு காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு, காய்கறி
வியாபாரிகளின் சங்கத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தை
களின் பயனாக, இச்சங்கத்தினரே முன் வந்து, நியாய விலைக்
காய்கறிக் கடைகளைச் சென்னை நகரில் நடத்தினர். இப்
போதும் குறுகிய அளவில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.
சென்னை நகரில் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்
சிகள் மேற்கொள்ளப்படும். இது தவிர, நியாய விலைகளில்
காய்கறிகளை விற்கக் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளும் முயற்சி
எடுத்து வருகின்றன. இறைச்சியைப் பொறுத்தவரையில், தமிழ்
நாட்டிலிருந்து ஆடு, மாடுகள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று
விடுவதும், விலை உயர்வுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்
துள்ளது. அதைத் தடுப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்ட நேரத்
தில், அத்தகைய தடை விதிப்பது அனைத்திந்தியக் கொள்
கைக்கு உகந்ததாயிராது என்று மத்திய அரசு அறிவுரை கூறி
யது. இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சில்லறை வியா
பாரிகளைக் கூட்டுறவு அமைப்பில் கொண்டு வந்து, அவர்களே
நேரடியாக மொத்த வியாபாரமும் செய்வதற்கு வசதி செய்து,
விலைகள் குறைவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமா
என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விறகைப் பொறுத்தவரை
வனத் துறையினருடன் தொடர்பு கொண்டு, தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகம் சில விறகுக் கடைகளைச் சென்னை
நகரில் திறந்து நடத்தி வந்தது. நெருக்கடியான நிலைமை ஏற்
பட்டிருந்த கட்டத்தில், அதைச் சமாளிப்பதற்காகக் குறுகிய
காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு, நெருக்கடி தீர்ந்த பின்
நிறுத்தப்பட்ட இந்தத் தற்காலிக நடவடிக்கையை மீண்டும்
தொடர்ந்து நடத்த முடியுமா என்பதும் பரிசீலிக்கப்பட்டு வரு
கிறது. விலைவாசிகளைக் குறைக்க அரசு விழிப்பான நடவடிக்
கைகளை மேற்கொள்கிற அதே நேரத்தில், வர்த்தகர்களிடையே
சுயகட்டுப்பாடும், பொதுநல உணர்வும், நுகர்வோரிடையே
விலையேற்றத்திற்குக் கட்டுப்பாடான எதிர்ப்பு உணர்வும் பர
வினால்தான், இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணமுடி
யும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

வர்த்தக பண்டக் குழுக்கள்.

34. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்
போது, உணவுத் துறையின் கொள்கை விளக்க உரையில், மேல்
நாடுகளில் உள்ளதைப் போன்று, இன்றியமையாப் பண்டங்
களைப் பொறுத்த வரையில், வர்த்தகர்கள் தாங்களாகவே
சுயக்கட்டுப்பாடு செய்து கொள்ளும் வகையில் வர்த்தக பண்டக்
குழுக்கள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள்
விடப்பட்டது. இந்த ஆலோசனையைச் செயல்படுத்துவதில்
சில வர்த்தகச் சங்கங்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டியுள்
ளன. கோவை மாவட்டத்தில் உள்ள இந்திய வர்த்தகச்
சங்கம் இக் குழுக்களை அமைப்பதற்கு முன் வந்துள்ளது. இதே
போன்று, திருச்சி மாவட்டத்திலும், வர்த்தகச் சங்கங்கள் பண்
டக் குழுக்கள் அமைப்பதற்கு முடிவு செய்து நடவடிக்கைகள்
மேற்கொண்டுள்ளன. இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு,
மற்ற வர்த்தகச் சங்கங்களும் இத்தகைய வர்த்தகப் பண்டக்
குழுக்களை அமைத்து செயல்பட்டால், அது வர்த்தகச் சமு
தாயத்தின் நலனுக்கும், நுகர்வோரின் நலனுக்கும் உகந்ததாக
இருப்பதோடு, இரு சாராருக்குமிடையே நல்லுணர்வும் நெருங்
கிய ஒத்துழைப்பும் உருவாக்க வழி ஏற்படும்.

வர்த்தக கட்டுப்பாடு ஆணைகள்.

35. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றி
யமையாப் பண்டங்களின் வணிகத்தை ஒழுங்குப்படுத்தும்
நோக்கத்துடன், வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள், 1955-ம்
ஆண்டு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் பிறப்
பிக்கப்பட்டுள்ளன. நெல், அரிசி, சிறு தானியங்கள், கோதுமை,
கோதுமை பொருள்கள், கடலை எண்ணெய், வனஸ்பதி,
சர்க்கரை போன்ற பண்டங்களின் வர்த்தகத்தை ஒழுங்கு
படுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளில்
முக்கியமானவை :—

1. தமிழ்நாடு, நெல் அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

3. தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968.

4. தமிழ்நாடு நிலக்கடலை, நிலக்கடலைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

[1979 ஏப்ரல் 20

5. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

6. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்கள் உரிமம் வழங்கும் ஆணை, 1962.

7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

இக்கட்டுப்பாடு ஆணைகளின் கீழ், மொத்த வணிகர்களுக்கு உரிமங்களும். சில்லறை வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மேலும், பொது நலனுக்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் வர்த்தகர்கள் செயல்படத் தேவையான ஆணைகள் பிறப்பிப்பதற்கும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடு ஆணைகளின்படி வர்த்தகர்கள், தங்களின் கொள்முதல், விற்பனை, கையிருப்பு ஆகியவற்றின் விவரங்களை உரிமம் வழங்கும் அலுவலருக்கு மாதம் இருமுறை தெரிவிக்க வேண்டும். மேலும், வணிகர்கள் ஒரே சமயத்தில் வைத்துக்கொள்ளக் கூடியவற்றிற்கு உச்ச வரம்பும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

36. தமிழகம் பருப்பு உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதியை நம்பி இருக்கிறது. இறக்குமதி செய்யப்படுகின்ற பருப்பைச் சரியான முறையில் வர்த்தகர்கள் விற்பனை செய்வதைக் கண்காணிக்கும் வகையில், பருப்பு வர்த்தகத்தை ஒழுங்குப்படுத்துவதற்கென, தனியாக ஒரு பருப்பு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணையை அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி உளுத்தம்பருப்பு, பச்சைப்பயிறு, துவரை, பட்டாணிக் கடலை போன்ற பருப்பு வகைகளை வியாபாரம் செய்வதற்கு வணிகர்கள் உரிமம் பெற வேண்டும்.

விருந்தினர் கட்டுப்பாடு ஆணை.

37. திருமணங்கள், இறுதிச் சடங்குகள், சாதாரண விருந்துகள் போன்ற வைபவங்களில் ஆடம்பரமான வகையில் உணவுப் பண்டங்களைச் செலவழிப்பதைத் தடுத்து அதன்மூலம் உணவுப் பொருட்களைச் சேமிக்க, தமிழக அரசு 25—3—1976ஆம் நாள் விருந்தினர் கட்டுப்பாடு ஆணையைப் பிறப்பித்தது. தமிழகத்தில் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதால், விருந்தினர் கட்டுப்பாடு தேவையில்லை என அரசு முடிவு செய்து, இந்த ஆணையை 13—7—1978-ல் ரத்து செய்துவிட்டது. இருந்தபோதிலும், படாடோபச் செலவுகளைத் தவிர்ப்பது நாட்டின் பொது நலனுக்கு மட்டுமல்ல, தங்கள் சொந்த நலனுக்கும் உகந்தது என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து, விருந்துகள் போனறவற்றில் சுய கட்டுப்பாடுகளைத் தாங்களே உவந்து பின்பற்றுவது நலம்.

[1979 ஏப்ரல் 20

இன்றியமையாப் பொருட்கள் குற்றப் புலனாய்வுத் துறை.

38. தமிழகத்திற்குள்ளாக, அரிசி நெல் நடமாட்டத் தடைகளும் வெளி நியந்தனைகளும் அடியோடு நீக்கப்பட்டு விட்ட சூழ்நிலையில், உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை, பதுக்கலைத் தடுப்பதிலும், இப்போது அமலிலுள்ள வர்த்தகக் கண்காணிப்புச் சட்டங்கள் சீராகப் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதிலும், முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, 1977 ஆம் ஆண்டு, தமிழ்நாடு இன்றியமையாப் பண்டங்கள் (இருப்பு விலைப் பட்டியல், மற்றும் கணக்குப் பராமரித்தல்) சட்டத்தை வர்த்தகர்கள் மீறாமல் கண்காணித்துக்கொள்ள இப்புலனாய்வுத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. 1978 ஆம் ஆண்டில் 1,511 வழக்குகளைப் பதிவு செய்தது. நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 501 வழக்குகளில் 393 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 12 வழக்குகள் தான் தள்ளுபடி செய்யப்பட்டன. எஞ்சியவை விசாரணையில் உள்ளன. சிமெண்ட் விநியோகத்தில் தவறுகள் நேரிடாமல் கண்காணிக்கும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மொத்த வியாபாரிகள், சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள சரக்கு உச்ச வரம்புகளை மீறாமல் கண்காணிக்க ஆய்வுகளை நடத்தியும், மீறியவர்கள்மீது நடவடிக்கை எடுத்தும், இன்றியமையாப் பொருட்களில் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. கலப்படப் பொருட்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதிலும் இத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

IV. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

39. தமிழ்நாட்டில் மொத்தம் 15,000-க்கு மேற்பட்ட அரிசி அரவை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 6,000 ஆலைகள் பெரிய ஆலைகள்; மற்றவை, கூலி அரைவை செய்யும் சிறிய ஆலைகள். அரைவை செய்யும் அரிசியின் தரத்தை உயர்த்தவும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவை அதிகப்படுத்தவும், அரிசி ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு, அரிசி ஆலைக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், 1970 ஆம் ஆண்டிலேயே ஆணைகள் பிறப்பித்துள்ளது. 1975 ஆம் ஆண்டுக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு மேலும் இரண்டு ஆண்டு காலம் அவகாசம் அளிக்கப்பட்டது. நவீன இயந்திரங்

கள் கிடைப்பதிலும், அதற்காகும் மூலதனச் செலவுக்காக வங்கி
களிலிருந்து உதவிபெறுவதிலும், சில சிக்கல்கள் இருந்தன,
என்று முறையீடுகள் வந்த காரணத்தால், மேலும், அவகாசம்
தரப்பட வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிடம் வற்
புறுத்தியதன் பயனாக, மேலும் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.
இப்பொழுதுள்ள நிலைமையின்படி, 1975 ஆம் ஆண்டு ஏப்ரல்
30 ஆம் பததிக்கு முன்னால் உரிமம் பெற்ற ஆலைகள்,
1980 ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ம் தேதிக்குள் நவீனமயமாக்கிக்
கொள்ள வேண்டும். 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம்
தேதிக்குப் பின்பு, நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட ஆலை
களுக்குத்தான் உரிமம் வழங்கப்படுகிறது. இந்த நிபந்தனைகள்
ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் அல்லது ஷெல்லர் பொருத்தியுள்ள
ஆலைகளுக்குப் பொருந்தும்.

40. ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகளைப் பொறுத்த
வரை, ஏற்கெனவே இயங்கி வந்த ஆலைகள் நவீனமயமாக்கிக்
கொள்ள 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாள்
வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய ஆலைகளைப்
பொறுத்த வரையில், கிராமப் பகுதியில் அமைந்து, 15 குதிரை
வேகத்திற்கு மேற்படாத இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, கூலி
அரைவை மட்டுமே செய்கின்ற ஆலைகள் உரிமம் வழங்கப்பட்ட
நாளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்குள் நவீனமயமாக்கிகொள்ள
வேண்டும்.

41. நவீனமயமாக்குவதற்காகும் மூலதனச் செலவிற்கு நிதி
உதவி செய்யுமாறு வங்கிகளுக்கும் மத்திய அரசு அறிவுரை கூறி
யுள்ளது. இத்திட்டத்தின் நன்மைகளை விளக்கவும், செய்முறை
விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யவும், ஆலை அதிபர்களுக்குத்
தொழில் ரீதியாக ஏற்படக்கூடிய ஐயப்பாடுகளைத் தீர்க்கவும்
திருவாரூரில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையமும், தென்னாற்காடு
மாவட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில்
மத்திய அரசு நிறுவியுள்ள ஆராய்ச்சி நிலையமும், உதவி செய்ய
முன்வந்துள்ளன. இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு
செய்யவும், திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆலை அதிபர்
களுக்கு ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்
பதற்கும், ஆலை அதிபர்கள் வங்கிகளிலிருந்து நிதி உதவி பெறு
வதற்கு ஆலோசனை கூறவும், உணவு வழங்கு பொருள் ஆணை
யாளர் அலுவலகத்தில், இணை ஆணையாளரைத் தலைவராகக்
கொண்ட ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்
குழுவில் தொழில் நுட்ப நிபுணர்களுடன் ஆலை உரிமையாளரின்
பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்த நடவடிக்கை
கள், நாட்டின் உணவுப் பொருளாதாரப் பொது நலனுக்கு
உகந்ததாய் உள்ளதோடு, ஆலை அதிபர்களின் தொழில் நலன்
களுக்கும் ஏற்றதாக இருக்கின்றன என்ற அடிப்படையில் உரிய
காலத்திற்குள் ஆலைகளை நவீனமயமாக்கிக் கொள்ள ஆலை
அதிபர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

V. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

42. தமிழகத்தில் உணவு நெருக்கடி கடுமையாக இருந்த கட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிறுவப்பட்டு, கொள்முதல் செய்யும் பொறுப்பும், நெல்லை அரிசியாக்கிச் சேமித்து வைத்துப் பொது விநியோகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் பொறுப்பும், அக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இப்போது உணவு நிலைமை மிகவும் வசதியாக இருப்பதால் கட்டாயக் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியமில்லை. பொது விநியோக முறையின்கீழ் விற்பனையாகும் அரிசியின் அளவு வெகுவாகக் குறைந்து விட்ட போதிலும், எதிர் பாராத எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குப் போதிய கையிருப்பு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகத்திடம் உள்ளது. நாடுமுழுவதையும் அரிசியைப் பொறுத்த வரை, ஒரே உணவு மண்டலமாக மத்திய அரசு அறிவித்த நேரத்தில், எந்த விளைவுகளையும் சந்திப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் பொருட்டு கணிசமான கையிருப்பை உருவாக்கிக் கொள்ள வெளிச் சந்தையிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அரிசியை வாங்கும் பொறுப்பும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப் பொறுப்பை இக்கழகம் மிகத் திறமையாக நிறைவேற்றியது. இன்று நம் மாநிலத்தில் உணவு நிலைமை சீராக உள்ளதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

43. சேமிப்பு முடையிருப்பில் உள்ள அரிசியைத் தரம் கெடாமல் பாதுகாத்துப் பொது விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு வசதியாக, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் தன்னுடைய சொந்த வருவாயிலிருந்து 1.25 இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. மேலும், 50,000 டன்கள் கொள்ளளவு கொண்ட 26 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. அரிசி மட்டுமல்லாமல் கோதுமை, சர்க்கரை, கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருள்களையும் இக்கழகம் சேமித்து வைத்து, விலைவாசிகள் ஏறும் நேரத்திலோ, பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படும் கட்டத்திலோ, நியாய விலையில் விநியோகத்தை மேற்கொள்கிறது. கடலை எண்ணெயில் கடுமையான நெருக்கடி ஏற்பட்ட கட்டத்தில், நியாயமான விலையில் கடலை எண்ணெயையும், சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெயையும் விற்க இக் கழகம் மேற்கொண்ட முயற்சிகள், விலைகளை நிதானப்படுத்துவதற்குப் பெரிதும் உதவின.

44. 'பொது விநியோக முறையைச் செயல்படுத்த இக்கழகம் 703 கடைகளை நடத்தி வருகின்றது. இவற்றில் 174 கடைகள் சென்னை நகரத்திலுள்ளன. அககடைகளைத் தவிர நுகர்வோருக்கு அன்றாடம் பயன்படக் கூடிய பல்வேறு பொருள்களையும் நியாயமான விலையில் விற்பதற்கு 33 அமுதம் சிறப்பு

அங்காடிகளை சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் இக்கழகம் நடத்தி வருகின்றது. கிராமத்தில் நியாய விலைக் கடைகள் திறக்கும் திட்டத்தில் நான்கு மாவட்டங்களில் கடை களைத் திறக்கும் பொறுப்பு, இக்கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தஞ்சை, தர்மபுரி, நெல்லை மாவட்டங்களில் இக்கழகம் 2,095 கடைகளை நடத்தி வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளை இன்னும் இரு மாதங்களில் இக்கழகம் தொடங்கும்.

45. பதின்மூன்று நவீனமயமான அரிசி ஆலைகளை இக் கழகம் நடத்தி வருகின்றது. 1978-79-ம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு இலட்சம் டன்களுக்கும் மேலான நெல் இந்த ஆலைகளில் அரவை செய்யப்பட்டது. இந்த ஆலைகளின் அரவைத் திறன் 91 விழுக்காடு அளவுக்கு சென்ற ஆண்டு பயன்படுத்தப்பட்டது. இந்த ஆலைகள் இலாபகரமாகவே இயங்கி வருகின்றன.

46. கட்டாயக் கொள்முதல் இப்பொழுது நடக்காத சூழ் நிலையிலும், மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை களுக்கும் கீழாக விலைகள் சரிந்துவிட்டால், விலை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்குவதற்கு இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயப் பிரதிநிதிகள் பலர் கூறிய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, மாவட்டங்களில் நடக்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலயாகவும் நெல்லை வாங்குவதற்கு இக்கழகம் முன்வந்தது. பரீட்சார்த்தமாக வட ஆர்க்காடு தஞ்சை மாவட்டங்களிலே இத்திட்டத்தைச் செயல்படுத்தியது.

47. அண்மையில் சிமென்டின் விலைகள் உயர்ந்து, சிமென்ட் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலைமையைத் தவிர்க்க, சிமென்ட் விநியோக முறையில் அரசு சில மாறுதல்களைச் செய்துள்ளது. இப்புதிய கொள்கையின்படி கூட்டுறவு அமைப்புகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், சிமென்ட் விநியோகத்தில் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் அமலுக்கு வந்த இப்புதிய திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பல்வேறு மாவட்டங்களிலும் 131 விநியோக உரிமங்களைப் பெற்றுச் சென்ற இரண்டு மாதங்களில் சுமார் 25,000 டன்கள் சிமென்டை விநியோகம் செய்துள்ளது. சிமென்ட் விநியோகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் பங்கேற்றுக் கொண்டதின் மூலம் அரசு நிர்ணயித்த விலைகளில் தடையின்றி கிராம மக்களுக்கும், நகர் வாழ் மக்களுக்கும் சிமென்ட் கிடைக்க வசதியான சூழ்நிலை உருவாகியுள்ளது.

48. அண்மையில் சென்னை நகரம் மழையினால் கடுமை யாகப் பாதிக்கப்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 கிலோ அரிசியைத் தமிழக அரசு இலவசமாக வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் சென்னை நகரத்தில் மட்டும் ஏறக்குறைய 1½ இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்பட்டது. மாநிலத்தில் மற்ற பகுதிகளில் 68,000 குடும்பங்களுக்கு அரிசி வழங்கப் பட்டது. சென்னை நகரத்தில் 50 கிலோ கொண்ட அரிசி மூட்டைகளைத் தயார் செய்து மிக விரிவான அளவிலே இந்த விநியோகத்தைத் திறம்பட நடத்துவதற்குக் குறுகிய காலத்தில் மிகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்ட கழகத்தின் பணி அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

49. கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில் யில் இக்கழகத்தின் வர்த்தக நடவடிக்கைகள் குறைந்துள்ளன. மேலும் கோதுமையின் விற்பனை பெரிதும் குறைந்து விட்ட தாலும், சர்க்கரை கட்டுப்பாடு நீக்கத்திற்குப் பின்பு லெவி சர்க்கரை விநியோகம் நின்று விட்டதாலும், இதுவரை இலாப கரமாக இயங்கி வந்த இக்கழகம், இப்போது நெருக்கடியான நிதி நிலைமையைச் சந்திக்கவேண்டியுள்ளது, உணவு நிலைமையில் எழும் மாற்றங்களுக்கு ஏற்ப, அரசின் உணவுக் கொள்கை யைத் திறம்பட நடத்தும் முக்கியப் பொறுப்பை ஏற்றுக் கொண் டுள்ள இக்கழகம், புதிய சூழ்நிலையின் அறை கூவல்களையும், பொருளாதார நெருக்கடியையும், தன் வாணிபத் திறமையாலும், சிக்கன நடவடிக்கைகளாலும், சமாளித்து, பொது மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய தன்னை ஆயத்தம் செய்து வருகிறது.

VI. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

50. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தமிழ்நாடு அரசால் 1958-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் புதிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், சொந்தக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் வாடகைக்கு இடங்களை அமர்த்தியும், உணவு தானியங்கள், உரங்கள் மற்றும் ஏனைய பொருள்களை விஞ்ஞான ரீதியில் பாதுகாக்க உதவுவதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

51. இந்நிறுவனம், தமிழக அரசினரால், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தினரின் நிதியுதவியையும் பெற்று, நடத்தப் படுகிறது. 1978-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாள் முடிய இந்நிறுவனத்தின் மூலதனம் ரூ. 201 இலட்சமாகும். 1979-80-ம் ஆண்டுக்குள் இந்நிறுவனத்தின் மூலதனத்தை ரூ. 291 இலட்சத் திற்கு உயர்த்த நடவடிக்கை எடுத்துவரப்படுகிறது.

[1979 ஏப்ரல் 20

52. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் ரூ. 380 இலட்சம் செலவில் 1,62,000 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள்ள கிடங்குகளைக் கட்ட இந்நிறுவனம்திட்டமிட்டுள்ளது. முதலாவது ஆண்டில், அதாவது 1978-79-ம் ஆண்டில், 13,500 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கட்டப் பட்டுள்ளன. மேலும், 13,500 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். இதன்படி 1978-79-ம் ஆண்டின் முடிவில் 1,51,327 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கைவசம் இருக்கும். 1979-80-ம் ஆண்டில் 54,000 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட கிட்டங்கிகளை 118.16 இலட்ச ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

53. 1979-80-ம் ஆண்டில் தூத்துக்குடி துறைமுகத்திற்குள் ரூ. 41.16 இலட்சத்தில் ஆறு புதிய கிடங்குகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81-ல் அங்கு மேலும் ஐந்து கிட்டங்கிகள் கட்டப்படும். தூத்துக்குடி துறைமுக அதிகாரிகள் பத்து ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை ஆண்டு வாடகை ரூ. 15,285-க்கு நீண்ட காலத்திற்கு தமிழ்நாடு கிடங்கு நிறுவனத் திற்குக் கொடுக்க இசைந்துள்ளார்கள்.

54. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம் இலாபத்தில் இயங்கியுள்ளது கீழ்க்கண்ட விவரங் களிலிருந்து தெளிவாகும்:

ஆண்டு.		நிகர இலாபம். (ரூபாய் இலட்சத்தில்.)	
1974-75	..	9.96	(தணிக்கை செய்யப்பட்டது)
1975-76	..	28.85	டிை
1976-77	..	18.52	டிை
1977-78	..	40.59	(உத்தேச மதிப்பு)
1978-79	..	40.76	டிை

1979 ஏப்ரல் 20]

இணைப்பு IV.

[. . பக். . 794ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

மீன் துறையின் கொள்கைக் குறிப்பு.

1979-80 ஆம் ஆண்டு.

முன்னுரை.

மாநில மீன் துறை 1907 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நாட்டில் நிறுவப் பெற்ற பழமையான மீன் துறைகளில் இதுவும் ஒன்று. பல்வேறு மீன் வளர்ச்சி திட்டங்களை வெற்றி கரமாக செயல்படுத்தியதால் இம்மாநிலத்திலுள்ள கடல், உள் நாட்டு நீர் நிலைகளிலிருந்து மீன் பிடித்தல் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது.

பின்வரும் நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, மீன் வளர்ச்சி திட்டங்கள், மீன் துறையாலும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தாலும் நிறுவகிக்கப்படுகின்றன :—

(i) தமிழ்நாட்டில் கடல், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடித்தலை மேலும் அதிகரித்தல்;

(ii) மீன் பிடித்தல் நடவடிக்கைகளை விரைவாக வளர்ச்சியடையச் செய்ய உதவுவதற்காகத் தேவையான சாலை முதலிய இன்றியமையா அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்;

(iii) சிறிய அளவில் மீன் பிடித்தல் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களின் படகுகள், இயந்திரங்கள் ஆகியவற்றின் திறனை அதிகரிப்பதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், மீன் பிடிக்கும் காரியங்களுக்குத் தேவையான உதவியை அவர்களுக்கு கிடைக்க செய்யவும் முதல் முன்னுரிமை அளித்தல்;

(iv) மீன் பிடித்தலை அதிகரிக்க வழி வகுக்கும் மீன்பிடி நடவடிக்கைகளில் வளர்ச்சியை விரைவு படுத்துதவற்கு நிறுவன நிதிகளைப் பெருமளவிற்கு இத்தொழிலில் பயன் படுத்துதல்;

(v) பெருமளவில் மீன் பிடிக்கும் பெரிய அளவிலான இழுபடகுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்;

[1979 ஏப்ரல் 20

(vi) கூனிறால் (shrimp) உற்பத்தியை அதிகரிக்கும் வண்ணம் உப்பு நீரில் பெருமளவில் மீன் வளர்த்தலை மேற்கொள்ளுதல் ;

(vii) தற்போதுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புது வலிமை அளித்தல்;

(viii) மீனவர்களுக்கு அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல்;

(ix) நிறுவன அமைப்பு வாயிலாக மீன் விற்பனை செய்வதற்கு உரிய விற்பனை நிலைய வசதிகளை விரிவாக்குதல்; நியாயமான விலையில் பொதுமக்களுக்கு நன்கு பதப்படுத்தப் பட்ட மீன்களைக் கிடைக்கச் செய்தல் ஆகியவையாகும்.

இவ்வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்தத் திட்டமிட் டுள்ள பொதுவான அடிப்படைகளின் சுருக்கம் பின்வருமாறு: —

I. கடலில் மீன் பிடித்தல்.

கடலிலிருந்து மேலும் 54,000 டன் எடை மீன்களைப் பிடிப்பதன் மூலம் மீன் பிடிப்பதலை அளவிற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இயந்திரப் அதிகரிப்பதே படகுகளைக் கொண்டு மீன் பிடித்தாலும், நாட்டுப் படகு களைக்கொண்டு மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை மேம் படுத்துவதாலும் இந்நோக்கத்தை எய்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

மீனவர்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகள் தமிழ் நாட்டில் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. இவை குறித்து விரிவாக ஆய்வு செய்யும் பொருட்டும், மீன் வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றும் பொருட்டும், கொச்சியிலுள்ள கடல் உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார மன்றத்தில் முன்னாள் இயக்குநர் திரு. கே. சிதம்பரம் அவர்கள் தலைமையில், ஆறு உறுப் பினர்களைக் கொண்ட குழு ஒன்று வன-மீன் துறையில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் 30 -ம் நாளிட்ட 942-ஆம் எண்ணுள்ள அரசாணையின் மூலம் அமைக்கப்பட்டது. பல்வகை மீன்களைப் பிடிப்பதை மேற்கொள்ளும் படகு களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து மேலும் 1,200 இயந்திரப் படகுகளை இத்தொழிலில் பயன்படுத்தலாம் என்று இக் குழு பரிவுரை செய்தது. இயந்திரப் படகுகளை மேலும் இத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்று இதன் மூலம் தெரிகிறது. தற்போதுள்ள சுமார் 42,000 நாட்டுப் படகுகளின் திறனை மேம்படுத்துவதன்

1979 ஏப்ரல் 20]

மூலமும் ஃபைபர் கிளாஸ் படகுகளைப் பயன்படுத்து வதன் மூலமும், நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்களைப் பொருத்துவதன் மூலமும், மீன் பிடி இயந்திரப் படகுகளை அதிகமாகப் பயன் படுத்துவதன் மூலமும், பெருமளவில் மீன் பிடிக்கும் படகுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும், கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று மேலும் ஒரு முக்கிய கருத்து வலியுறுத்திக் கூறப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மீன்பிடி துறை முழுவதற்கும் மொத்தம் 19.55 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யலாம் என்று மாநில திட்ட ஆணைக்குழு கருதி யுள்ளது. 1977–78ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட கடல் மீன்களின்அளவு 2.05 இலட்சம் டன்களாகும். 1979–80-ஆம் ஆண்டிற்கு கடல் மீன் வளர்ச்சிக்காக 46.76 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வகை மீன்களைப் பிடித்தல்.

தமிழ் நாட்டில் கடற்கரை நெடுக தற்போது 2,500-க்கும் அதிகமான இயந்திரப்படகுகள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இறால்மீன்களுக்கு வெளிநாட்டில் அதிக விலை கிடைப்பதால் அவற்றைப் பிடிப்பதற்காக கடலுக்கு அடியில் சென்று மீன்பிடித்தலை இப்படகுகள் மேற்கொள்ளுகின்றன. இவ்வாறு கடலுக்கு அடியில் சென்று வரையறை ஏதும் இன்றி மிகு விலை தரக்கூடிய இறால் மீன்களை நீண்ட காலத்திற்குப் பிடித்தால் அவை குறைந்துவிடும். எனவே, கடலில் பல்வேறு ஆழங்களில் கிடைக்கப்பெறும் பல்வேறு வகையான மீன்களைப் பிடிப்பதற்கு பல்வேறு வகையான தொழில் நுட்ப உற்பத்திகளை மீனவர்கள் கையாளுமாறு செய்வதால் அவர்களுடைய வருமானம் படிப்படியாக உயரு வதற்கு உறுதியளிக்கும். கடலில் ஆழத்தில் சென்று மீன் பிடிப்பதிலிருந்து மீனவர்களைத் திருப்பி அதற்குப் பதிலாக, மீன்களை அவற்றின் செவுள்களில் வலையை மாட்டி மீன் பிடித்தல் (Gill netting) கண்ணி வைத்து மீன் பிடித்தல், நீண்ட தூரத்திற்கு வலையை விரித்து மீன் பிடித்தல் ஆகிய முறைகளைக் கையாண்டு மீன் பிடிக்குமாறு மீனவர்களுக்கு வழிகாட்டுதல் என்பதே இன்றைய முக்கியப் பிரச்சினை ஆகும். பல்வேறு வகையான மீன் பிடி கருவிகளை இயக்குவது குறித்து மீனவர்களுக்கு விளக்கிக்காட்ட வேண்டியதும், மீனவர்கள் தங்களது மீன் பிடி நடவடிக்கையை பல்முனை படுத்துமாறு அவர்களை ஊக்குவிப்பதும் மீன் துறையின் கடமையாகும். 1978–79 ஆம் ஆண்டிற்கு 3.00 இலட்சம் ரூபாய் உதவித் தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 20

இவ்வாறான மீன் பிடித்தலுக்குரிய பலவகைக் கருவிகளுக்காக
1979—80-ஆம் ஆண்டில் உதவித் தொகைக்கு வகை செய்
வதற்காக இதே போன்ற செயற் குறிப்பு உள்ளது.
தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வரும் மீன் பிடி
படகுகள் கட்டுமானத்தை நன்னிலைப்படுத்துவதும், அவற்றைப்
பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் குறித்து நவீன
தொழில் நுட்ப உத்திகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை
கள் எடுப்பதும், இந்தப் பல்முனைப்படுத்துதல் திட்டத்தில்
அடங்கும். குறிப்பிட்ட பகுதியில் குறிப்பாக இரால் மீன்
பிடி பருவத்தில் ஏற்படும் மீன் பிடித்தல் குறித்த நெருக்
கடியைக் குறைப்பதற்கும் இது ஓரளவு உதவி புரியும்.

கிழக்குக் கடற்கரையை ஆய்வு செய்தல்

கிழக்குக் கடற்கரை நீர்ப்பரப்பில் மீன்பிடி படகுகளை அதிக
மாகப் பயன்படுத்துவதற்கும் அது குறித்து திட்டமிடுவதற்கும்
இப்பகுதியில் கிடைக்கப் பெறும் மீன்களின் வள வாயில்களை
அவற்றின் இருப்பு ஆகியவை குறித்து ஆய்வு செய்வதும் மதிப்பி
டுவதும் இன்றியமையாததாகும். மாநில அரசு தொடர்ந்து
கோரிவந்ததன் பேரில், உணவு, வேளாண்மை நிறுவனத்தின்
நாட்டுத் திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யும் பணியில் கிழக்குக்
கடற்கரைப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளுமாறு உணவு,
வேளாண்மை நிறுவனத்தை மத்திய அரசு அணுகியது.
எந்தெந்தப் பருவகாலங்களில் எந்தெந்த பகுதிகளில் மீன் பிடி
படகுகளையும் இயந்திரங்களையும் பயன்படுத்தலாம் என்பது
குறித்து போதிய அளவிற்கு விவரங்கள் தெரியாததால்
இப்படகுகளும் இயந்திரங்களும் குறைந்த அளவே
பயன்படுத்தப்படுகின்றன. எந்தெந்தப் பருவக் காலங்களில்
எந்தெந்தப் பகுதிகளில், எந்தெந்த வகை மீன்கள் அதிகமாகக்
கிடைக்கப் பெறும் என்ற விவரங்கள் துல்லியமாக தெரியப்
பெற்றால் இந்த மீன்பிடி படகுகளையும் இயந்திரங்களையும்
அதிக எண்ணிக்கையில் திறம்படப் பயன்படுத்த இயலும்.
200 கடல் மைலின் விரிவாக்கம் பெற்ற பொருளாதார
மண்டலப் பகுதியின் 41,412 சதுர கி.மீ. பரப்பை
உள்ளடங்க்கிய கடல்மீன் பிடித்தல் திட்டங்கள் பற்றித்
திட்டமிட்டுச் செயல் படுத்துவதற்கு இந்த ஆய்வு அரசுக்கு
உதவி புரியும். இக் கண்டத்திட்டுப் பகுதியில் சுமார் 5,30,000
டன் எடையுள்ள மீன் கிடைக்கப்பெறும் என்றும், இப்பகுதியில்
கிடைக்கப்பெறும் மீன் வாயில்கள் குறித்து நன்முறையில் அறிந்த
பிறகுதான் அத்னைப் பிடிக்க இயலும் என்றும், தொடக்க
நிலை ஆய்விலிருந்து தெரிய வருகிறது. இந்த ஆய்வை கூடிய
விரைவில் நடத்துமாறு மத்திய அரசு வலியுறுத்திக் கேட்டுக்
கொள்ளப்பட்டு வருகிறது.

1979 ஏப்ரல் 20]

மீன்பிடி படகுகளைப் பதிவு செய்தல்.

மீன்பிடி இயந்திரப் படகுகள், உரிய அனுமதி இன்றி ஒரு மாநிலத்திலிருந்து பிறிதொரு மாநிலத்திற்கு செல்வதோடு, தங்களது ஈட்டுறுதிப்பத்திரத்தைக் காலாவதி ஆகாமல் பார்த்துக் கொள்வதிலிருந்தும் தவறி விடுகின்றன. ஒவ்வொரு படகுகளையும் தனித்தனியாக அடையாளம் கண்டு இவற்றை ஆய்வு செய்வதற்கும் வாய்ப்பு இல்லை. இவற்றின் இயக்கம், மீன்பிடி தொழிலில் ஈடுபடுதல் ஆகியவற்றின் மீது அதிகக் கட்டுபாடு வகிக்கும் பொருட்டு, மீன்பிடி இயந்திரப் படகுகள் 1953-ஆம் ஆண்டு சிறு துறைமுகங்கள்-துறைமுகங்கள் படகுகள் விதியின் கீழ் இயந்திரப்படகு ஒவ்வொன்றும் அருகில் உள்ள துறைமுக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெற வேண்டும். அதன் பிறகு அப்படகுக்கு ஒதுக்கப்படும் எண், அப்படகு எந்த இடத்தில் இருந்தாலும் எளிதில் அதனை அடையாளம் கண்டு கொள்வதற்கு இயலும் வண்ணம் அந்த எண் அப்படகில் எளிதில் புலப்படும் இடத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு படகுக்கும் 25 ரூபாய் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படும். இதுவரையில், இத்திட்டத்தின்கீழ், 253 இயந்திரப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள படகுகளையும் இவ்விதியின்கீழ் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகள் ;

மீனவர்கள் பிடித்த மீன்களை, மிகவும் திறம்பட்ட முறையில் விரைந்து கரை சேர்க்க உதவவும், மீன் பிடித்தூண்டில்களில் போக்குவரத்துக்கு உதவும் பொருட்டும் தக்க முறையில் அமைந்த கரையக வசதிகளைத்தகுந்த இடங்களில் உருவாக்குவது, மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவது, மிதக்கும் தோணித் துறைகளைக் கட்டுவது போன்ற இன்றியமையா அடிப்படை' வசதிகளைக் குறிப்பிட்ட பொருத்தமான இடங்களில் துறை நிறுவி வருகிறது. இந்தப் பணி மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்கு மத்திய அரசிடமிருந்து 100 சதவீதம் உதவி கிடைக்கிறது. 'T' வடிவ தோணித்துறைகள் கோடிக்கரையிலும் மல்லிப்பட்டிணத்திலும் (தஞ்சை மாவட்டம்) கட்டப்பட்டு வருகின்றன. மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் சென்னையில் பெரிய மீன்பிடித் துறைமுகம் ஒன்று நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் வீரபாண்டியன் பட்டிணத்தில் மிதவை மீன் பிடி நிலையம் (Floating pantoon) ஒன்றை அமைக்கும் பணி செயற் குறிப்பில் உள்ளது. 'மிதவை மீன்பிடி நிலையம் '' என்பது படகுகளை நிறுத்தி வைப்பதற்கும் பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கும் உரிய வசதிகளைக் கொண்டதாகும். தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கத்திலும்,

[1979 ஏப்ரல் 20

தஞ்சை மாவட்டத்தில் பழையாறையிலும் இன்றியமையா அடிப்
படை வசதிகளை உருவாக்குவதற்காக ரூ. 52·045 இலட்சத்திற்
கும் இந்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்
பணியை நிறைவேற்றுவதற்காக சென்னை மாநில துறைமுக
அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உலர்மீன் பதன சேமிப்பு கிடங்கு ஒன்று கட்டுதல்.

மீன்களைப் பக்குவப்படுத்திப் பாதுகாப்பதற்கான பலமுறை
களில் அவற்றை வெயிலில் உலர்த்திப் பக்குவப்படுத்துவது என்பது
அனைவரும் அறிந்த, சிறந்ததென ஏற்றுக் கொண்ட ஒன்றாகும்.
மீனளத்துலிருந்து கிடைக்கின்ற பணிநிறைவு பெற்ற பொருட்கள்
மிக உயர்ந்த தேசீயத் தரம் வாய்ந்தவையாக இருக்க உறுதி
செய்யும் பொருட்டு அவை சுகாதாரமான முறையில் சேமித்து
வைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய
தேவையை நிறைவு செய்யும் பொருட்டு தூத்துக்குடியில் உலர்
மீன் பதன நவீனக் கிடங்கு ஒன்றைக் கட்டுவதற்காக ரூ. 5.00
இலட்சம் தொகை செலவிட கடல்படு பொருட்கள் உற்பத்தி
ஏற்றுமதி வளர்ச்சி அதிகார மன்றம் தானாகவே முன் வந்
துள்ளது. இத்தகையக் கட்டிடத்தைக் கட்டுவதற்காக தூத்துக்
குடி மீன்பிடித் துறைமுகப் பகுதியில் பொருத்தமான நிலம்
அளிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்டுவதன் மூலம் உலர்
பதன முறையில் பக்குவப்படுததப்பட்ட மீன்களை சுகாதார
மான முறையில் சேமித்து வைக்கவும், ஏற்றுமதி செய்யவும் பெரு
மளவில் துணை புரிவதாக அமையும்.

வழிகாட்டி விளக்குக் கம்பங்கள் நிறுவுதல்.

மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக கடலுக்குள் சென்று திரும்பி
வருகையில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துகளிலிருந்து அம்
மீனவர்களின் உயிரைக் காப்பதற்கு உரிய முக்கியமான சமூக
—பொருளாதார ஏற்பாடாகக் கடற்கரை நெடுகிலும் தேவைப்
படுகின்ற மீன்பிடி கிராமங்கள் அருகே தகுந்த முறையில் வழி
காட்டி விளக்குக் கம்பங்களை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

ஃபைபர் கிளாஸ் படகுகளைப் புதிதாகப் புகுத்துதலும் நாட்டுப் படகுகளில் மோட்டார் விசைப் பொறிகளைப் பொருத்துதலும்.

நமது மாநிலத்தில் மீனவர்களிடம் உள்ள நாட்டு படகுகள்
கட்டுமரங்கள், வள்ளங்கள் இவற்றின் மொத்த எண்ணிக்கை
42,000 ஆகும். இவற்றின் உதவியுடன் நமது மீன

1979 ஏப்ரல் 20]

வர்கள் சிறிய அளவில் மீன் பிடித்து வருகின்றனர். நமது மாநிலத்தில் கடலோர மீனள உற்பத்தி வளங்களை இவற்றைக் கொண்டே மீனவர்கள் பெற்று வருகின்றனர். கரை சேர்க்கப் படுகின்ற மொத்த மீனள உற்பத்தி அளவில் 65 சதவீதம் அவற்றின் மூலம் பெறப்படுகின்றது. நமது மீனவர்களிடம் உள்ள நாட்டுப் படகுகளில் மோட்டார் விசைப்பொறிகளைப் பொருத்து மாறு செய்தும், சிறிய பைபர் கிளாஸ் படகுகளைப் புகுத்தியும் மாறுதல்களைக் கொண்டு வந்து இவர்களது மீன்பிடித் திறனை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம், வெற்றிகரமாகச் செயல்படுமானால், இது பின்னர் பெரிய அளவில் விரிவு படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் படகுகளும், பொறிகளும் மானிய உதவியின் அடிப்படையில் வழங்கப்படும். பைபர் கிளாஸ் படகுகள், மோட்டார் விசைப் பொறி பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் அவற்றின் இயங்கு திறனைக் குறித்து ஒப்பிட்டு ஆய்வு நடத்தப்படும். பின்னர் அந்த ஆய்வின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை விரிவு படுத்துவதற்கு உரிய வழிகாட்டிக் குறிப்புக்கள் வகுக்கப்படும்.

தமிழ்நாட்டில் (அனைத்து நாடுகள்) உணவு-வேளாண்மை நிறுவனத்தின் நிதி உதவியுடன் சிறு அளவிலான மீன் பிடித் தொழில்களை மேம்பாடு செய்தல்.

உணவு வேளாண்மை நிறுவனத்தின் அனைத்து நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் குழு ஒன்று 1977-இல் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தது. இக்குழு தமிழ்நாடு முழுவதும் உள்ள கடலோரப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வு நடத்தியது. தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சிறிய அளவிலான மீன்பிடித் தொழில்களின் வளர்ச்சி குறித்த ஒரு திட்டத்தை நிறுவுவதற்காகத் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது. இந்தத் திட்டம் மூன்றாண்டுக் காலத்தில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இதற்கு 8,81,000 அமெரிக்க டாலர் செலவு பிடிக்கும். இதில் மாநில அரசின் பங்கு ரூ 12·73 இலட்சமாக இருக்கும்.

மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தல்.

நமது நாட்டின் எல்லையோரப் பகுதியைச் சேர்ந்த மீன் கடற்பரப்பிற்குள்ளாக மீன்பிடிப்பதில் இயந்திரப்படகு மீனவர்களுக்கும் நாட்டுப்படகு மீனவர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு இம்மாநிலத்தில் கடலோரப்

[1979 ஏப்ரல் 20

பகுதிகள் முழுவதிலும் இயந்திரப்படகுகளின் துணை கொண்டு
மீன் பிடித்தலை முறைப்படுத்துவதற்கு சட்டமியற்றும் நட
வடிக்கை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இப்பொருள்
பற்றிச் சட்டம் கொண்டு வரக் கருதப்படுகிறது.

II உள்நாட்டு மீன் வளம்.

மீன் முட்டை உற்பத்தியும், மீன் வளர்ப்பும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் உள்நாட்டு நீர்
நிலைகளிலிருந்து மீன் உற்பத்தி ஓராண்டிற்கு 1.25 இலட்சம்
டன் ஆக இருந்தது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது
1.85 இலட்சம் டன் என்ற அளவை எட்ட வேண்டுமென்று
திட்டமிடப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் உள்நாட்டு
மீன் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் தொகைக்கு ரூ 18.14 இலட்
சம் ஆகும். உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த மிக முக்கிய
மான தேவை ஆதாயம் தரத்தக்க மீன்குஞ்சுகளையும் நுண்ணிய
சிறு மீன் குஞ்சுகளையும் உருவாக்கக்கூடிய மீன் முட்டைகளை
வழங்குவதே ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்
கூடுதலாக 400 இலட்சம் மீன் முட்டைகள் உற்பத்தி செய்யத்
திட்டமிடப்பட்டுள்ளது. தோப்பு மீன் (Catla) பட்டகுஞ்சு
(Roho) மிருகால் (Mrigal) சேல் கெண்டை (Labeo Fimbrialberus)
காக்கா மீன் (Labeo calbasu) வெண் கெண்டை (cirrhimus cirrhosa)
போன்ற பெரிய வகை கெண்டை மீன்கள் தூண்டுதல் முறை
குஞ்சு பொரிக்கச் செய்வதற்காக தொழில் நுட்ப வசதிகள்
உள்ளன; அந்த நோக்கத்தை எய்த, போதுமான மீன் குஞ்
பண்ணை, மீன வளர்க்க இட வசதி ஆகியவை ஏற்படுத்த திட்ட
மிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள மீன் குஞ்சுப் பண்ணைகளை
விரிவு படுத்துவது, புதிதாக சிலவற்றை ஏற்படுத்துவது ஆகியவை
மூலமே இதனைச் செயல்படுத்த இயலும். பேச்சிப் பாறை,
திருக்காட்டுப்பள்ளி, செம்பரம்பாக்கம் ஆகிய இடங்களில் மீன்
குஞ்சு பண்ணைகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.
கண்ணாடி தொட்டியில் குஞ்சு பொரிக்க வைப்பதற்கான நிலைய
மொன்று பவானிசாகரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கண்
ணாடி தொட்டியில் குஞ்சு பொரிக்கும் முறைக்காக மேலும்
இரண்டு நிலையங்களை மேட்டூரிலும், பணிமுத்தாற்றிலும் ஏற்
படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எடுத்துச் செல்லத்தக்க 15
மீன் குஞ்சுப் பண்ணைகள் வாங்கப்பட்டுள்ளது. அவை பயன்
படுத்தப்படும். நீர்த் தேக்கங்களிலுள்ள குறிப்பிட்ட சில மீன்
இன வளர்ச்சிக்காக மிதக்கும் மீன் குஞ்சுப் பண்ணைகளை ஏற்
படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 20]

1978–79 ஆம் ஆண்டில் பின்வரும் நீர்த்தேக்கங்களில் மீன்
வளர்ப்பது எனக் கருதப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கங்களில்
அதாவது மேல் ஆழியாறு, மருதா நதி, சின்னாறு, கடானா ஆகிய
வற்றில் விரைவாக வளரும் மீன் இனங்கள் வளர்க்கப்படுகின்றன.
இவை சிறிய நீர்த் தேக்கங்களாக இருப்பதால், அவற்றை தீவிர
மீன் வளர்ப்புத் திட்டத்திற்காகப் பயன்படுத்தலாம். தென்னாற்
காடு மாவட்டத்திலுள்ள பெருமாள் ஏரி, துறையின் நேரடிக்
கட்டுப்பாட்டின் கீழ் மீன் வளர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு
உள்ளது. அங்கு மீன்கள் தீவிரமாக வளர்க்கப்படுகின்றன.

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனம் அமைப்பு.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான மீன் வளர்ப்போர்
மேம்பாட்டு நிறுவனத் திட்டத்தின்கீழ் குட்டையில் மீன் வளர்ப்
புக்கான நடைமுறைகள் செயல் படுத்தப்பட்டு வருகிறது.
இத்திட்டத்தின்கீழ் மீன் வளர்ப்போர்துறை வழங்கிவரும் தொழில்
நுட்ப உத்திகளைக் கொண்டும், வங்கிகளிடமிருந்தும் நிறுவன நிதி
உதவி பெற்று கடன் உதவித் தொகை அடிப்படையில் துறை
வழங்கிவரும் மீன் முட்டை, உரம் போன்ற இடு பொருட்களை
கொண்டு அறிவியல் முறையில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள
ஊக்குவிக்கப்படுகின்றனர். 1978–79 ஆம் ஆண்டு தஞ்சாவூரில்
ஏற்கனவே தொடங்கப்பட்ட ஒரு நிறுவன அமைப்புடன் மேலும்
மூன்று நிறுவன அமைப்புகளை திருச்சிராப்பள்ளி, மதுரை,
தருமபுரி ஆகிய இடங்களில் ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி
வழங்கியுள்ளது. இவை 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் செயல்
படத் தொடங்கியுள்ளது. இந்த நான்கு மீன் வளர்ப்போர்
மேம்பாட்டு நிறுவன அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த
தொகை ரூ. 29.065 இலட்சம் ஆகும். தஞ்சாவூரில் உள்ள
நிறுவன அமைப்பு 1979 ஆம் ஆண்டு சனவரி வரை 67,235 கிலோ
உயர்ரக மீன்களை உற்பத்தி செய்துள்ளது. சிறு உழவர்கள் வங்கி
களிடமிருந்து நிதி உதவி பெற்று மீன் வளர்ச்சியை மேற்கொண்டு
மீன் உற்பத்தியை அதிகரிக்குமாறு அவர்களைத் தூண்டுவதே மீன்
வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவன அமைப்புத் திட்டத்தின்
நோக்கமாகும். இந்த முன்னேற்றத் திட்டம் கிராமப்புற
மக்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பை அளிப்பதோடு
அவர்களது வருமானத்தையும் பெருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்
மீன் வளர்க்கும் குட்டைகள் அமைப்பதற்காக தருமபுரி மாவட்
டத்திற்கு ரூ. 1.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை
விரைவில் முடிக்கப்பட்டு, தருமபுரி மாவட்டத்திலுள்ள குளங்கள்
குட்டைகள், அதிக அளவில் மீன் குஞ்சுகளை வளர்க்க பயன்
படுத்தப்படும்.

[1979 ஏப்ரல் 20

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்.

பல கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடாத
பல உறுப்பினர்களின் சுயநலத்துக்கே பயன்பட்டு வந்தமையால்,
இந்தச் சங்கங்களில் மீனவர்கள் அல்லாதவர்கள் இருப்பதைத்
தவிர்க்க அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது. மீனவர்கள்
மட்டுமே இதில் உறுப்பினர்களாக இருந்து கூட்டுறவுச் சங்கத்தின்
பயனை அனுபவிக்க வேண்டும். மீனவர் அல்லாதோர் இச் சங்கங்
களில் இருப்பதை நீக்க வேண்டும். அரசுக்குச் சொந்தமான
நீர் நிலைகள் மூன்றாண்டு குத்தகைக்கு விடப்படும் அனுகூலத்தை
மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.
இதனால் ஏற்படும் அனுகூலம் இப்போது நேரடியாக மீன்
பிடிப்பதில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கே கிடைக்கும். இது இந்த
வகை ஏரிகளிலிருந்து அதிக அளவில் மின் உற்பத்தி செய்ய ஊக்க
மளிக்கும்.

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில்
வளர்ச்சியடையாததற்கான முக்கிய காரணம், பெரும்பாலான
இந்த வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் உண்மையில் மீனவர்கள்
அல்லாதவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதேயாகும். இவர்கள்
மீனவ வளர்ச்சிக்கு எந்தவித ஆர்வமும் காட்டுவதில்லை.
ஆனால் அவர்கள் உண்மையான மீனவர்களை சுரண்டுவதற்கே
அவர்களின் நிலையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இது
குறித்து அரசு பிறப்பித்த கட்டளையின் படி இச் சங்கங்களில்
இருந்து மீனவர் அல்லாதவர்களை அச் சங்கங்களிலிருந்து நீக்கு
வதற்கான தீவிர நடவடிக்கைகளை மீனத் துறை இயக்குநர்
எடுத்துள்ளார். ஒரு சில சங்கங்கள் நீங்கலாக அனைத்துச்
சங்கங்களும் அவற்றின் துணை விதிகளை தகுந்தவாறு திருத்தி
உள்ளன. திருத்தப்பட்ட துணை விதிகளின் படி, மீன் பிடிப்
பதைத் தொழிலாகக் கொண்டு உண்மையில் அதில் ஈடுபட்டுள்ள
மீனவர்கள் மட்டுமே அத்தகைய சங்கங்களில் உறுப்பினர்களாகத்
தகுதியுடையவர்களாவர். அத் தொழிலில் ஈடுபடாதோர் உறுப்
பினராக இருக்க முடியாது.

இச்சங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள உண்மையான
மீனவர்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் பரந்துள்ள நீர் நிலை
களிலிருந்து முழுமையான பயனைப் பெற ஆழ்ந்த அக்கறை
காட்டுவார்கள் என்று நம்பப்படுகிறது.

III. உவர் நீர் மீன் வளர்ப்பு.

மடவை, துள்ளுக்கெண்டை, கொடுவா முதலிய மீன்களையும்
கறுப்பு இறால், வெள்ளை இறால் போன்ற இறால் மீன்களையும்
காயல்களிலும் உப்பங்கழிகளிலும், கழிமுகங்களிலும் வளர்ப்பது
மிக முக்கித்துவம் பெற்று வருகிறது. 80,000
ஹெக்டேர்

1979 ஏப்ரல் 20]

நிலப்பரப்பு உவர் நீர் கொண்ட பகுதியாக உள்ளது. இதில்
27,000 ஹெக்டேர் பரப்பு உடனடியாக மீன் வளர்ப்புக்கு
எடுத்துக் கொள்ளலாம். அடையாற்றிலுள்ள துறை மீன்
பண்ணையில் ஆராய்ச்சிப் பணிகள் மேற் கொள்ளப்பட்டதன்
பலனாக, இறால் மீன் வளர்ப்பில் அதிக ஆதாயம் இருப்பது
தெரிய வந்துள்ளது. தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கல்பட்டு,
இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள மீன் வளர்ப்போர் இறால்
மீன் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இத்தகைய ஆர்வம் கொண்ட நான்கு தொகுதியினருக்கு இறால்
வளர்ப்ப குறித்த தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
அவர்களில் பலர் அவர்களின் சொந்தப் பகுதிகளில் இறால்
வளர்ப்பை தொடங்கத் தயாராக உள்ளனர்.

இறால் மீன் வளர்ப்புக்கான முன்னோடித் திட்டம்
அடையாறு, பழவேற்காடு, கோவளம் ஆகிய இடங்களில் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. தென்னாற்காட்டில் கிள்ளை பகுதியில்
50 ஹெக்டேர் பரப்பளவில் அமையக்கூடிய பெரிய அளவிலான
திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இறால் மீன் வளர்ப்புப்
பண்ணைக்குப் பொருத்தமான பகுதிகளை ஒதுக்குவது அரசின்
பரிசீலனையில் உள்ளது.

கடற்கரையோரத்திலுள்ள நீர் நிலைகளில் உயிரின வளர்ப்பு
குறிப்பாக தோணிகளில் ஒரு வகைச் சிப்பிகளையும், ஆழமற்ற
விரிகுடாக்களில் கடற்பாசிகள் முதலியவற்றையும் வளர்ப்பது
முக்கியத்துவம் பெற்று வருகிறது. கோவளத்தில் உள்ள மத்திய
கடல் மீனவ ஆராய்ச்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட, மீன்
பிடி தொழில் குறித்த ஆராய்ச்சித் திட்டத்தின் மூலம் நடை
பெற்ற ஆராய்ச்சியின் பயன்கள் இது போன்ற மேலும் பல
ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ள பயன்படும்.

IV. சங்கு குளிப்பு.

1971 ஆம் ஆண்டில் அரசு திருநெல்வேலி மாவட்டத்தைத்
தவிர தமிழ்நாட்டின் கடலோரம் முழுவதிலும் சங்கு குளிக்கும்
உரிமையை மாற்றி அமைத்தது. அதன்படி ஆண்டிற்கு ரூ. 10
உரிமக் கட்டணம் செலுத்தி சங்கு குளிக்கும் உரிமை பெறுபவர்கள்
இலவசமாகச் சங்குகளைச் சேகரிக்கவும், சங்கு குளிக்கவும்
உரிமை பெற்றுள்ளனர் என்று அறிவித்தது. அச்சங்குகளை
அவர்களது விருப்பம் போல் விற்கலாம். இந்த உரிம முறையால்
சங்கு குளிப்பவர்களின் சமூகப் பொருளாதார நிலை முன்னேற்ற
மடையாததால் அரசு 1977-ல் இலவசச் சங்கு குளிக்கும் முறையை
ரத்து செய்து, மாநிலம் முழுவதிலும் சங்கு விற்கும் ஏகபோக
உரிமை, அரசிடமே இருக்குமாறு செய்தது.

[1979 ஏப்ரல் 20

சங்கு குளிப்பவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு 1978–79-லிருந்து சங்குகளின் அளவிற்கு ஏற்றவாறு சங்குகளின் கொள்முதல் அளவையும் விலையையும் உயர்த்தியுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	ரூ. பை.
(1) ஜாதி (வெள்ளை) :	
(a) 2.3/8''—2.3/4'' IV அளவிற்குக் குறைவாக	2. 25
(b) 2.3/4''—அதற்கு மேல்	2 . 60
2.3/8'' அதற்கு மேல் புழு அரித்தது ..	0 . 20
(2) பட்டி (வெள்ளை) :	
2.3/8''—2.3/4'' அளவிற்குக் குறைவாக ..	1 . 10
2.3/4'' அதற்கு மேல்	1 . 30
2.3/8'' அதற்குமேல் (புழு அரித்தது) ..	0 . 10
(3) ஜாதி (செவ்வாயன்) :	
2.3/4'' அதற்குமேல்	1 . 10
(4) பட்டி (செவ்வாயன்) :	
2.3/4'' அதற்கு மேல்	0 . 75

முழு அளவிலான சங்குகளின் குறைந்த அளவு கொள்முதல் விலை ரூ. 2-லிருந்து ரூ. 2.25 ஆக உயர்த்தப்பட்டது. முன்னர் சொல்லப்படாத, 2.3/8'' அளவுள்ள சங்குகளின் கொள்முதல் விலை, சங்கு குளிப்பவர்கள் அதிக அளவு வருமானம் பெறுவதில் பெருமளவிற்கு உதவி புரிந்துள்ளது.

V. வணிகத்திற்காக முத்துச் சிப்பிகளை வளர்த்தல்.

இந் துறை முத்துச்சிப்பி உற்பத்தி செய்யும் பொருட்டு மத்திய கடல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் சேர்ந்து குடியில் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணி வெற்றிகரமான முடிவு களைத் தந்துள்ளது. தற்போது, இத் துறை வணிக ரீதியில் முத்துச் சிப்பிகளை வெற்றிகரமாகத் தயாரிக்கும் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆதலின், ஆறாவது திட்டக்காலத்தில், தூத்துக் குடியிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபத் திற்கு அருகாமையில் உள்ள குருசடைத் தீவின் பாதுகாக்கப்பட்ட விரிகுடாப் பகுதியிலும் முத்துச் சிப்பி வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளுவதற்குத் திட்டமிடப்பட்டது.

1979 ஏப்ரல் 20]

VI. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் முனைப்பான வளர்ச்சியைப் பெருக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 161 வளர்ச்சி வட்டாரங்கள் தெரிந் தெடுக்கப்படும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், படகுகள், வலைகள், மீன் குஞ்சுகள் முதலியவை வாங்கு வதற்கென்று மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்; அந்த உதவித் தொகையின் அளவு, தனிப்பட்ட முறையில் மீன்பிடிக்கும் மீனவர்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் மொத்த விலையில் 33–1/3 சதவீதமும், கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் விலையில் 50 சதவீதமும் இருக்கும்.

இத்திட்டம், கடற்பகுதியிலுள்ள மாவட்டங்களிலும், உள் நாட்டுப் பகுதியில் அமைந்த மாவட்டங்களிலும் செயலாக்கப் பட வேண்டிய போதிலும், கடற்பகுதி உள்ள மாவட்டங்களி லிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்கள், அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் திட்டத்தைச் செயலாக்கும் நோக்கத் திற்கென்று ஒதுக்கீடு செய்த நிதியைப் பயன்படுத்தும் பொருட்டு, இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே மேற்கொண்டன. செங்கல்பட்டு, இராமநாத புரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வட்டார மீனளங்கள் அதிகாரிகள் திட்டங்களை வகுத் துள்ளனர்; அவர்கள் படகுகளை வாங்கும் பொருட்டும், நைலான் வலைகளை வாங்கும் பொருட்டும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைத் தெரிந்தெடுத்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ. 7.76 இலட்சம் பெறுமான நைலான் வலைகள் 4 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்க னவே வழங்கப்பட்டன. ரூ. 4.08 இலட்சம் மதிப்புள்ள நைலான் வலைகள் வழங்குவதற்கென்று மேலும் 7 கூட்டுறவுச் சங்கங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 80,000 பெறுமான குறைந்த அழுத்த பரித்திறன் (H. B.) இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 27 நீளமுள்ள 20 படகுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றுக்கும் 50 சதவீதம் உதவித்தொகை அளிக்கப் படும். எஞ்சிய தொகை, வணிக வங்கிகளிடமிருந்து கடனாக வழங்கப்படும்.

VII. சமூகப் பொருளாதார நடவடிக்கைகள்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நடைமுறை மூலதனத் திற்குத் தொகை அளித்தல், போக்குவரத்து வண்டிகள் வாங்குதல், கிடங்குகள் கட்டுதல் முதலியவற்றுக்குத் தொகை

[1979 ஏப்ரல் 20

அளிப்பதன் மூலம் உதவி செய்யும் பொருட்டு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் பல திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீழ்க்காணும் சங்கங்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்ட தொகைகள் வழங்கப்பட்டுள்ளன—

	(ரூபாய் இலட்சத்தில்.)
கன்னியாகுமரி மாவட்டக் கூட்டமைப்பு	1.5
இராமநாதபுரம்	1.0
மேட்டூர் அணை மீனளங்கள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்	2·664
கிள்ளை மீனவர் கூட்டுறவுச் சங்கம்	2.660

மீனவர்களுக்கு நிவாரண உதவி :—

''மீனவர் நலம் மற்றும் நிவாரண நிதி'' என்ற நிதியினை 1978-ல் தொடங்கிய பின்னர், கடலில் மீன பிடிக்கும்போது இறக்க நேரிட்ட மீனவரை நம்பியிருந்த குடும்பங்களுக்கு ரூ. 5,000 கருணை மானியம் வழங்கப்படுகிறது. அத்தொகை யில், தொடக்கத்தில் ரூ. 2,000 ஒரு மொத்தமாக வழங்கப் படுகிறது. எஞ்சிய தொகை ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 100 வீதம் 30 சம மாதத் தவணைகளில் கொடுக்கப்படுகிறது. குடும் பத் தலைவரை இழந்து துயருற்றுத் தவிக்கும் மீனவர் குடும் பத்துக்கு மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே இந்த நிதி கிடைப் பதற்கு உறுதியளிக்கும் வகையில் உயர்மட்டக் குழுவின் பொறுப் பில் இந்த நிவாரண நிதி உள்ளது. மேலும், இறந்த மீனவரின் பிள்ளைகள், தொழிற்கல்வி பயிலும் பொருட்டு ரூ. 5,000 கூடுதல் தொகை வழங்கப்படுகிறது. அத்தகைய கல்வியை முடிப்பதற்குத் தேவைப்படும் தொகை அவர்களுக்கு அளிக்கப் படுகிறது. இதுகாறும் 105 மீனவர் குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன.

சங்கு குளிப்பவர்களுக்கு நிதியுதவி :—

வன மீனளத்துறையின் 10—1—1978 ஆம் நாளிட்ட அர சாணை எண் 18-ல் கடலில் மீன்பிடிக்கும் போது இறக்க நேரிட்ட மீனவரை நம்பி வாழும் குடும்பங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள், சங்கு குளிக்கும் தொழில் வர்க்கத்தினரிடையே பாதுகாப்பு உணர்வைத் தூண்டும் பொருட்டு சங்கு குளிப்பவர் களுக்கும் அச்சலுகைகளைக் கொடுப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 20]

சங்கு குளிப்பவர்கள், ஆழ்கடலில் நீண்ட தொலைவில் சங்கு குளிக்கவும், சங்குகளை அதிக அளவுக்குச் சேகரிக்கவும் வேண்டி அவர்களுக்கு முகமூடிகள், துடுப்புகள் போன்ற சாதனங்கள் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆண்டுத் திட்டம் (1979—80)

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகளையும் அதில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களையும் கருத்திற்கொண்டு 1979—80 ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்தை மாநில அரசு வகுத்துள்ளது. இத்திட்டக்கால அளவில் செயல்படுத்தக் கருதப் பட்டுள்ள திட்டங்கள் குறித்த விளக்கங்களை அடுத்துவரும் பாராக்களில் காணலாம்.

1. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்.

1. நிதி :—

தமிழநாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளன்று அமைக்கப்பட்டது. நிறுவன உதவிகளைக் கொண்டு வணிகத்தன்மை வாய்ந்த மீன ளத் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இக்கழகம் அமைக்கப்பட்டது. நான்கு படகு கட்டும் தளங்கள், மூன்று மீனைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகள், ஒரு மீன் தூள் ஆலை ஆகியவற்றை நடத்துதல், நான்கு இழுபடகுகளை இயக்குதல் ஆகியன இக்கழகத்தின் பணிகளுள் சிலவாகும். மேலும், ஏற்றுமதி உட்பட மீன் விற்பனையையும் இக்கழகமே கவனிக்கிறது. இக்கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மாநில அரசு, இக்கழகம் அமைக்கப்பட்ட நாள் தொட்டு அதற்கு ரூ. 4,91·98 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

2. இயந்திரமயமாக்கும் திட்டம்:—

இந்நிறுவனம் இதுவரையிலும் 526 இயந்திரப் படகுகளைக் கட்டி வழங்கியுள்ளது. 1978—79 ஆம் ஆண்டில், 220 இயந்திரப் படகுகள் கட்டி வழங்க இக்கழகம் கருதியுள்ளது. படகு கட்டு வதற்காகவும் மொத்தச் செலவில் 10சதவீதத் தொகையை மாநில அரசு மூலதன உதவித் தொகையாக (Capital Subsidy) வழங்கும்; எஞ்சிய 90 சதவீதத்தில் 15 சதவீதத் தொகை தொடக்கச் செலவுத் தொகையாக (Margin money) வழங்கப்படும். 1979-80 ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்தில், மூலதன உதவித் தொகை வகையில் ரூ. 10.63 இலட்சமும், இக்கழகம் இதற்கு முன்னர் வழங்கிய படகுகளுக்கான வட்டி உதவித்தொகை வகை யில் ரூ. 23·24 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 20

வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகம், மூன்றாவது
கட்டத் திட்டத்தின்கீழ் 265 படகுகளுக்கு நிதியுதவி செய்ய
இசைந்துள்ளது. இவற்றுள் 160 படகுகள், வணிக வங்கிகளிட
மிருந்து கடன் உதவி பெற்ற பின்னர் வழங்கப்படும். 1979-80
ஆம் ஆண்டில் இக்கழகம், 30' படகுகள் ஐம்பதும் 32' படகுகள்
இருபத்தைந்தும் கட்டக் கருதியுள்ளது.

3. பயிற்சித் திட்டம்:—

இக்கழகம், படகுகள் ஒதுக்கப்பட்ட மீனவர் தொகுதிகள்
ஒவ்வொன்றிலிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இத்துறையின்
பயிற்சி நிலையங்களில் சுருக்கப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பு
கிறது. மீனவர் தொகுதிகளாய் இருந்தால் 45
நாட்களுக்கும், அகதிகள் தொகுதியாக இருந்தால்
மூன்று திங்கள் கால அளவுக்கும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.
மீனவர் தொகுதியிலிருந்து நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதமும்,
அகதிகள் தொகுதியிலிருந்து நபர் ஒன்றுக்கு ரூ. 200 வீதமும்
பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ்
இது வரை 64 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

4. பக்குவப்படுத்தும் நிலையங்கள்:—

எண்ணூரில் உள்ள மீன் பக்குவப்படுத்தும் நிலையம், 1979 ஆம்
ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் நாளிலிருந்து, சென்னை திருவாளர்கள்
டாப்பர் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விடப்
பட்டுள்ளது. இந்த நிலையத்துக்கான ஆண்டுக் குத்தகை
ரூ. 1,25,000 ஆகும். மண்டபத்திலுள்ள மீன் பக்குவப்படுத்தும்
நிலையத்தை இக்கழகமே நேரடியாக நிர்வகிக்கிறது. 1977–78-ல்
ரூ. 3,34,377.25-ம், 1978–79-ல் ரூ. 4,35,456.27-ம், மொத்த
வருவாய் கிட்டியது. தூத்துக்குடியில் உள்ள மீன் பக்குவப்
படுத்தும் நிலலயத்தையும் கழகமே நேரடியாக நடத்துகிறது.
இந்நிலையத்திலிருந்து 1977–78-ல் ரூ. 2,80,857.36-ம்,
1978–79-ல் (1–7–1978 முதல் 31–1–1979 வரை)
ரூ. 1,85,570.06-ம் மொத்த வருவாய் கிட்டியது.

5. மீன் தூள் ஆலை:—

இந்த ஆலை தற்பொழுது கழகத்தின் நிர்வாகத்தில் உள்ளது.
1977–78 ஆம் ஆண்டில், 203 டன் மீன் தூள் உற்பத்தி செய்யப்
பட்டு ரூ. 2,90,378.15 மொத்த வருவாய் கிட்டியது. 1978–79-ல்
(1–7–1978 முதல் 31–1–1979 வரை) இந்த ஆலை 348 டன்
மீன் தூள் உற்பத்தி செய்தது. அதன் மூலம் ரூ. 6,88,450
வருவாய் கிட்டியது.

1979 ஏப்ரல் 20]

6. மீன்பிடி இழுபடகுகளை இயக்குதல்—

1978 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் நாள் முதற்கொண்டு இரண்டு மெக்சிகன் இழு படகுகளைக் கழகம் இயக்கி வருகிறது. ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்தின்கீழ் மாநில மீனளத் துறையால் இயக்கப்பட்டு வந்த 57 அடி நீளமுள்ள, இரண்டு நாட்டு இழு படகுகளும் உள் நாட்டு விற்பனைக்காகவும், மீன் உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும், அதிக அளவில் மீன் பிடிப்பதற்காக 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

நெல்லை, தஞ்சை என்னும் இரு இழுபடகுகள் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாள் வரை மொத்தம் 29 தடவை கடலில் சென்று மீன் பிடித்துவரப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 22,954 டன் இறால் மீன்களும், 74,677 டன் மீன்களும் பிடித்ததன் மூலம் இதுவரை ரூ. 12,40,085.17 வருவாய் கிட்டியுள்ளது. ஜப்பானுக்கு முதல் தடவை அனுப்பிய 2,120 டன் இறால் மீன்களின் மதிப்பு ரூ. 1,19,145.15-ம் இதில் அடங்கும்.

7. நீர்த்தேக்க மீன்வளம்—

பின்வரும் நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கும் உரிமை தற்போது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திடம் உள்ளது :—

(i) சாத்தனூர்—வட ஆற்காடு மாவட்டம்.

(ii) அமராவதி—கோயம்புத்தூர் மாவட்டம்.

(iii) ஆழியாறு—கோயம்புத்தூர் மாவட்டம்.

(iv) திருமூர்த்தி—கோயம்புத்தூர் மாவட்டம்.

(v) பவானிசாகர்—கோயம்புத்தூர் மாவட்டம்.

1977–78 ஆம் ஆண்டிலும், 1978 ஜூலை முதல் 1979 ஜனவரி வரையிலான கால அளவிலும் ஐந்து நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்பட்ட மீனின் அளவு, கிடைத்த வருவாய் ஆகியவை பற்றிய விவரம் வருமாறு :—

நீர்த்தேக்கத்தின் பெயர்.	1977–78	
	பிடிக்கப்பட்ட மீனின் அளவு.	கிடைத்த வருவாய்.
(1)	(2)	(3)
	(டன்கள்)	ரூ.
1. சாத்தனூர் அணை	182,246	9,60,054.43
2. பவானி சாகர்	170,801	5,53,211.32
3. அமராவதி	101,165	2,29,921.54
4. திருமூர்த்தி	14,392	32,748.85
5. ஆழியாறு	9,039	25,898.10

நீர்த்தேக்கத்தின் பெயர்.	1978–79 (1978 ஜூலை முதல் 1979 ஜனவரி வரை).	
	பிடிக்கப்பட்ட மீனின் அளவு.	கிடைத்த வருவாய்.
(1)	(4)	(5)
	(டன்கள்).	ரூ.
1. சாத்தனூர் அணை	77,929	5,40,473.11
2. பவானிசாகர்	116,105	4,49,633.44
3. அமராவதி	79,879	1,80,934.10
4. திருமூர்த்தி	3,325	8,455.57
5. ஆழியாறு	2,526	9,666.65

8. மீன் விற்பனை:

கொச்சின் மீனை ஒருங்கிணைப்புத் திட்டத்திடமிருந்து, தேனாம்பேட்டையிலுள்ள மீன் விற்பனை நிலையத்தை 1976ஆம் ஆண்டு டிசம்பரில் கழகம் மேற்கொண்டது. இந்த விற்பனை நிலையத்தின்மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு சென்னை மாநகரத்தில் மேலும் 5 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 7 மீன் விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாளுக்குள் 30 மீன் விற்பனை நிலையங்களைத் தொடங்கக் கருதியுள்ளது.

தென்கிழக்குக் கடற்கரையில் ஆழ்கடல் மீன் வள வாயில்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், சென்னை நகரத்தில் மீன் விற்பனையை மேற்கொள்ளவும் இக்கழகத்திற்கு, இந்திய அரசு 1978-ல் ரூ. 1,09.52 இலட்சம் மானியத் தொகை அளித்துள்ளது. இந்திய அரசு வழங்கிய மேற்சொன்ன மானியத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கழகம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

9. டீசல் பங்குகளை நடத்துதல்:

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் நாள் முதல் தூத்துக்குடியில் ஒரு டீசல் பங்கை நடத்தி வருகிறது. ஒரு வாரத்திற்கு 15,000 முதல் 16,000 லிட்டர் டீசல் விற்பனையாகிறது. திருவாளர்கள் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேசன் மல்லிப்பட்டினத்தில் ஒரு டீசல் பங்கை நிறுவியுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருவாளர்கள் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்இராயபுரத்திலும் ஒரு டீசல் பங்கை நிறுவியுள்ளது. இதனை நடத்துவதற்கு வணிகச் சான்றிதழ் பெறத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த பங்கு ஒரு திங்களுக்குள் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற் சொன்னவை தவிர பின்வரும் இடங்களில் டீசல் பங்குகளைத் தொடங்குவதற்கான திட்டங்களும் கழகத்திடம் உள்ளன. அவையாவன :—

(i) நாகப்பட்டினம்—தஞ்சாவூர் மாவட்டம்.

(ii) கோடிக்கரை—தஞ்சாவூர் மாவட்டம்.

(iii) பூம்புகார்—தஞ்சாவூர் மாவட்டம்.

(iv) ஆர்க்காட்டுத் துறை— தஞ்சாவூர் மாவட்டம்.

[1979 ஏப்ரல் 20

10. துறையின் திட்டங்கள்;

மீன் பிடிப்பில் மாற்று முறைகளைக் கையாளுதல் :—

மீன் பிடிப்பில் மாற்று முறைகளைக் கையாளும் பொருட்டு மீனவர்களுக்கு ஊக்கமளிக்க பாச்சுதூரி வலைகளைத் தவிர பல்வேறு வகைகளான சுருக்கிழுப்பு வலை மிட் வாட்டர் தூரி வலை (Midwater Trawl), செவுள் வலை, கல்லா கூடுகள் முதலியன தயாரிப்பதற்காக உதவித் தொகை அளிக்கப்படும். இதற்காக 1979–80 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 3·55 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் :—

1979–80 ஆம் ஆண்டில் 0·76 இலட்சம் ரூபாய் செலவில் கீழ்க்காணும் இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(i) வீரபாண்டிப்பட்டிணம்—திருநெல்வேலி மாவட்டம்.

(ii) ஏரிப்புறக்கரை—தஞ்சாவூர் மாவட்டம்.

(iii) மல்லிப்பட்டிணம்—தஞ்சாவூர் மாவட்டம்.

(v) வானமகாதேவி—தஞ்சாவூர் மாவட்டம்.

(v) செந்தாமரை வயல்—தஞ்சாவூர் மாவட்டம்.

(vi) காரையூர்—தஞ்சாவூர் மாவட்டம்.

உப்பு நீரில் மீன் வளர்ப்பதற்கான பண்ணையும் கழிமுகப் பகுதியில் மீன் வளர்த்தலும்.

(அ) இறால் மீன் வளர்ப்பதற்கான முன்னோடித் திட்டங்களை இத்துறை செயல்படுத்தியதன் பயனாக 1977–78 ஆம் ஆண்டில் கோவளத்தில் 4·24 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீரில் மீன் வளர்ப்பதற்கான பண்ணை அமைக்க அரசு அனுமதி வழங்கியது. இப்பண்ணை அமைக்கும் பணி 1979–80 ஆம் ஆண்டில் முடிவடைந்து விடும். இதற்காக 1979–80 ஆம் ஆண்டு திட்டத்தில் 2·50 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் பகுதியாக, அடையாறு மீன்பண்ணையில் தற்போதுள்ள ஆய்வுக்கூட வசதிளை விரிவு படுத்துவதற்காக 1979–80 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 0·35 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 20]

(உ) மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் கிள்ளை என்ற இடத்தில் 13·08 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீரில் மீன் வளர்ப்பதற்கான பண்ணை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பண்ணை அமைக்கும் பணி 1979–80 ஆம் ஆண்டில் முடிவடைந்து விடும். இதற்காக 1979–80 ஆம் ஆண்டு திட்டத்தில் 6·89 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(எ) மேலும் சுமார் ஒரு ஹெக்டேர் பரப்பளவில் சிறு பண்ணைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு மீன் வளர்ப்பதற்காக உள்ளூர் மீனவர்களுக்குத் தேவையான பயிற்சியும், தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கி, மேற்படி பண்ணைகளை அவர்களிடம் ஒப்படைக்க கருதப்பட்டுள்ளது. இதற்காக 1979–80 ஆம் ஆணடுத் திட்டத்தில் 9·94 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன் வளம் :

மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களை மேம்படுத்துதல்:—

தூண்டுதல் முறையில் முட்டையிட வைத்து அதிலிருந்து பொரிக்கப்படும் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கு வசதியளிக்க வேண்டிய மீன் பண்ணைகள், மீன் குஞ்சு வளர்க்குமிடங்கள், இனப் பெருக்க குட்டைகள், மீன் வளர்ப்புக் குட்டைகள் இவை தொடர்பான பிறவசதிகளை கீழ்க்காணும் இடங்களில் உருவாக்க அல்லது விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

(a) சிற்றாறு.

(b) பிலவக்கல்.

(c) பவானிசாகர்.

(d) மேல் அணை.

(e) சின்னாறு அணை.

(f) மேட்டூர் அணை.

(g) மணிமுத்தாறு.

(h) பாலாறு பொரந்தலையாறு.

(i) பேச்சிப்பாறை

(j) அமராவதி.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றி அங்கு மீன் குஞ்சுகளை உற்பத்தியை செய்வதற்காக 1979–80 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 7·73 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜாடியில் குஞ்சு பொரிக்கும் பிரிவுகளை ஏற்படுத்துதல்:— மேட்டூர் அணையிலும் மணிமுத்தாறிலும் ஜாடியில் குஞ்சு பொரிக்கும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக 1979–80வது ஆண்டுத் திட்டத்தில், ரூ.2·68 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஜாடியில் குஞ்சு பொரிக்கும் முறையினை வழக்கமாக உள்ள முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அம்முறை அதிக சத வீதத்தில் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்கு உறுதி செய்யும்.

தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களை நிறுவுதல்:— தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி முறையின் மூலம் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில உள்ள திருக்காட்டுப்பள்ளியில் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையம் தொடர்பான பணிகளை முடிப்பதற்காக 1979–80 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 3·50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்த் தேக்க மீனளங்கள் :— 1979–80ஆம் ஆண்டுத் திட்டத்தில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்குள் மீன்களை பிடிக்கவும் வேண்டி, புதிதாக உருவாக்கப்பட்ட நீர்தேக்கத்தை அதாவது மதுரை மாவட்டத்திலுள்ள பாலாறு பரந்தாலற்றில் மேற்கொள்ள கருதப்படுகிறது. இதற்காக 1979–80ஆவது ஆண்டுத் திட்டத்தில் ரூ. 0·26 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

கல்விப் பயிற்சி:

மீனளத்துறை, மீன் வளர்ப்பு வசதிகள், நிர்வாகம், புதிய வகை மீன்களைப் பிடித்தல், மீன் பதப்படுத்துதல் முதலியவற்றில் மேல் பயிற்சிப் பெறும் பொருட்டு, பம்பாயிலுள்ள மீனளக் கல்வீ மத்திய நிறுவனம், கொச்சின், ஒருங்கிணைந்த மீனளத் திட்டம் சென்னை, கொச்சின், மீனளம், கப்பல் போக்குவரத்து, பொறியியல் தொழில் நுட்ப மத்திய நிறுவனம் ஆகியவற்றிற்கு துறை அதிகாரிகளையும் நிறுவனப் பணியாளர்களையும் முகமையில் அனுப்புவது, 1979–80ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும். இதைத் தவிர பல்வேறு வியாபார நிர்வாகம், திட்டமிடுதல், மேல் பயிற்சி ஆகியவற்றில் பயிற்சி பெற, உயர் மட்ட அதிகாரிகளும் அனுப்பப்படுவர். இத்தகைய பயிற்சித் திட்டங்களுக்காக, 1979–80-ல் ரூபாய் 10·3 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

மீனவர் குப்பங்களுக்கு கிளைச் சாலைகள் போடுதல் :— மீனவர் குப்பங்களை நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதற்காக இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துவது, ஒரு அடிப்படையான இன்றியமையா வசதியாகும். அதனால், மீனவர்கள், தாங்கள் பிடித்த மீன்களை விரைவில் விற்பதற்காக அண்டையிலுள்ள விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு செல்லவும், தங்களது குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதற்கும், மருத்துவ உதவியை விரைவில் பெறவும் இயலும். நிதிவாயில்கள் போதியளவு இல்லாததனால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்படவில்லை. முக்கிய இணைப்புச் சாலைகளை ஏற்படுத்தும் பணியை நிறைவேற்றுவதற்குப் போதிய அளவு நிதி ஒதுக்க அரசு, தற்போது முடிவு செய்துள்ளது. 1979–80ஆம் ஆண்டுத் திட்டத்தில், இக்காரியத்திற்காக, நெடுஞ்சாலைகள் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விரிவாக்கம் :— மீன் பதனிடுதல், மீன் வளர்ப்பு உத்திகள் முதலியவற்றின் தேவை மற்றும் அனுகூலங்கள் பற்றி மீனவர்களுக்கு எடுத்துக் கூறுவது, விரிவாக்கப் பிரிவின் நோக்கமாகிறது. சென்னையில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற விரிவாக்கப் பிரிவு ஒன்று தவிர, இந்திய அரசு நிதியுதவியுடன் தூத்துக்குடியில் விரிவாக்கப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கொண்டும், ஒரு பிரிவை ஏற்படுத்துவதற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதுபோன்ற பிரிவு ஒன்றை தஞ்சாவூரில் ஏற்படுத்தக் கருதப்படுகிறது. இக்காரியத்திற்காக, 1979–80 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 1.14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்.

மீன்பிடி துறைமுகங்களும், மீனைக் கரை சேர்ப்பதற்கான தோணித் துறைகளும் :— இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படும் புயல், சுழற்காற்று முதலியவைகளினால் ஏற்படும் கடல் கொந்தளிப்பிலிருந்து இயந்திரப் படகுகளைப் பாதுகாக்கவும், அவைகளை நிறுத்தி வைக்கவும், பிடித்த மீன்களை இறக்கவும், கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், இராமேஸ்வரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் துறைமுகங்களையும், தோணித்துறை வசதிகளையும், மீன் துறை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தவிர, தற்போது கீழ்க்கண்ட இடங்களில் இதைப்போன்ற வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

[1979 ஏப்ரல் 20

சென்னை—தலைமை மீன்பிடி துறைமுகம்.

மல்லிப்பட்டினம்—சிறிய மீன்பிடி சிறிய தோணித்துறை.

கோடிக்கரை—சிறிய மீன்பிடி சிறிய தோணித்துறை.

மேற்சொன்ன மூன்று இடங்களில் சென்னையிலுள்ள மீன்பிடி
துறைமுகம் இந்திய அரசிடமிருந்து நேரடியாக நிதி பெற்று மத்திய
துறை திட்டமாக சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்
தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மல்லிப்பட்டினம், கோடிக்
கரை ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடி தோணித்துறைப் பணி
களை முடிப்பதற்காக 1979–80ஆம் ஆண்டுத் திட்டத்தில்
ரூ. 8.58 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடி தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாடு :

கடலோர மீன்பிடி கிராமங்களில் மீன்பிடி தொழிலுக்கான
அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காக ரூ. 28 இலட்சத்திற்கு
மேற்படாத மதிப்புள்ள திட்டங்களுக்கு 75 சதவீத மானியம்
மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றின்கீழ் நிதியுதவி
அளிக்க மத்திய அரசு முன் வந்துள்ளது. இந்த உதவியைப் பயன்
படுத்திக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையாறு,
இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் ஆகிய
இடங்களில் மீன்பிடி தொழிலுக்குத் தேவையான அடிப்படை
வசதிகளைப் பெருக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். ரூ. 52.045
இலட்சம் மொத்தச் செலவில் இரண்டு திட்டங்களுக்கும் இந்திய
அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசு 1978
அக்டோபர்-நவம்பரில் இரண்டு பணிகளுக்கான நிதி ஒப்புதல்
அளித்தது. மாநில துறைமுகத்துறைக்கு இந்தப் பணிகள்
ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பணிகள் கவனிக்கப்பட்டு
வருகின்றன. 1979–80-ல் இந்த இரண்டு பணிகளையும் செயல்
படுத்துவதற்குத் தேவைப்படும் தொகை மாநிலத் துறைமுகத்
துறையிடம் கொடுக்கப்படும்.

மத்திய துறைத் திட்டங்கள்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ், 1978–79ஆம் ஆண்டில், உதகமண்
டலத்தில் ஃபிஷ் டேலில் (Fish Dale) ஆய்வுக்கூடக் கட்டிடமும்
மீன் காட்சி சாலையும் கட்டி முடிக்கப்பட்டன. வில்சன்
மீன் பண்ணையில் கூடுதல் மீன் பண்ணை வசதிகளுக்கான பணிகள்

1979 ஏப்ரல் 20]

முடிவடையும் நிலையில் உள்ளன. இதற்காக 1978–79ஆம் ஆண்டில் ரூ. 1.75 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் ஒரு மீன் காட்சிசாலை கட்டுவதற்காக ரூ. 1.78 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணி 1979–80ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

மீனவர்களுக்கு வீட்டு வசதி :

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தினால் இதுவரை 3,695 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1978–79ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இதற்காக ரூபாய் ஒரு கோடியும், 1979–80ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒரு கோடி ரூபாயையும் ஒதுக்கியுள்ளோம். இந்த இரண்டு நிதி ஒதுக்கங்களுடன் 3,140 வீடுகளைக் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமுதாயக் கூடங்கள் கட்டுதல் :

தென் சென்னையில் நொச்சிக்குப்பத்தில் ஒரு சமுதாயக் கூடமும், வட சென்னையில் ஒரு சமுதாயக் கூடமும் ஒவ்வொன்றும் ரூ. 1·65 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொதுக்கூட்டங்கள், திருமணம், ஏனைய பொது சமுதாயத் திட்டங்களை நடத்துவதற்கும், வெள்ளம், புயல், தீ போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் காலத்தில் பாதுகாப்பு இடமாக உபயோகப்படுத்திக்கொள்வதற்கும் மீனவர்கள் இந்தக் கூடங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

புயல் நிவாரணம் :

1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாளன்று புயல் காற்று பாம்பன் அருகே தமிழ்நாட்டு கடற்கரையைக் கடந்ததன் விளைவாக திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மீன்பிடி படகுகளுக்கும் கருவிகளுக்கும் பரவலாகச் சேதமேற்பட்டது. 1,718 நாட்டுப் படகுகள் காணாமற்போயின அல்லது சேதமடைந்தன ; 527 இயந்திரப் படகுகள் ஓரளவிற்குச் சேதமடைந்தன ; 130 இயந்திரப் படகுகள் மூழ்கிப்போயின அல்லது முழுவதுமாகச் சேதமடைந்தன.

3,057 மீன்பிடி வலைகள் காணாமல் போயின அல்லது சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கீழ்க்கண்ட வீதத்தில் அரசு உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்டது.

		(ரூபாய்)
1. கட்டுமரம் ..	முழுவதும் சேதமடைந்தவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும்.	2,000
	ஒரு பகுதி சேதமடைந்தவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும்.	1,000
2 நாட்டுப் படகுகள், படகுகள்.	முழுவதும் சேதமடைந்தவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும்.	4,000
3. நைலான் வலைகள்.	முழுவதும் சேதமடைந்தவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும்.	3,000

உதவித் தொகையில் 50 சதவீதம் கடனாகவும் எஞ்சிய 50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டது. நிவாரணம் அளிப்பதற்கு ரூ. 50·00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்தொகை பின்வருமாறு ஒதுக்கப்பட்டது :—

		(ரூ. இலட்சம்.)
இராமநாதபுரம்	..	39.00
திருநெல்வேலி ..	..	5.75
தஞ்சாவூர் ..	..	3.00
புதுக்கோட்டை	..	2.25

மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள், கருவிகளை மீட்டுத்தரும் நோக்கத்துடனும், அரசுக்கு ஏற்பட்ட பெரிய நிதி இழப்பைக் குறைக்கும் நோக்கத்துடனும், மூழ்கிய படகுகளை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக இராமேஸ்வரம் தீவில் நிலவும் மோசமான நிலைமையை ஆய்வு செய்வதற்கு செயல் (Task force) குழு ஒன்று அமைக்கப்பட்டது. படகுகள் எந்த இடத்தில் மூழ்கியுள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றை அழிவிலிருந்து காப்பாற்றி கரைக்குக் கொண்டு செல்ல இந்தியக் கப்பற்படையும், பொதுப்பணிப் பொறியியல் கழகமும் கேட்டுக் கொள்ளப்பட்டன. படகுகளை மீட்கும் பணி 1979ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18ஆம் நாளில் முடிவடைந்தது. கப்பற்படையால் மூழ்கிய படகுகளை அழிவிலிருந்து காப்பாற்ற முடிந்தது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரொக்கத் தொகை, நைலான் நூல் ஆகியவை வழங்கும் பணி இன்னும் நடந்தேறி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 29,01,386 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,90,000 ரூபாய் மதிப்புள்ள நைலான் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 13,52,708 ரூபாய் மதிப்புள்ள நைலான் நூல்களை மேலும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு புயலால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை உடனடியாகப் போக்குவதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் துறை எடுத்துள்ளது.

முடிவுரை :

மேற்சொன்ன குறிப்பில், நமது மீனளத் துறையின் வளர்ச்சி பற்றியும், நமது மீனவர்களின் நல்வாழ்வு பற்றியும் இந்த அரசின் பொதுக் கொள்கைகளை விளக்க நான் முயற்சி செய்துள்ளேன். கொள்கை விளக்க வரம்பிற்கு உட்பட்டு 1979-80 ஆம் ஆண்டில் நாங்கள் செயல்படுத்த உத்தேசித்துள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் வரவு-செலவுத் திட்ட அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மதிப்பிக்குரிய உறுப்பினர்கள் தங்களின் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

சனிக்கிழமை, 1979 ஏப்ரல், 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வினாக்கள்—விடைகள்

* உடுக்குறியிட்ட வினாக்கள்

அருணா சர்க்கரை ஆலை, பெண்ணாடம்.

குறுகிய கால வினா எண் 51 திரு. எம். பெரியசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலையில் 1978-79ம் ஆண்டிற்கான கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 103.00 என்று பைனல் பில் போட்டு ரூ. 93.00 கொடுத்துவிட்டு மீதியுள்ள ரூ. 10/- ஐ கட்டாய சேமிப்பு செய்யுமாறு ஆலை நிர்வாகம் விவசாயிகளைக் கட்டாயப் படுத்துவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 1978--79-ம் கரும்புப் பருவத்துக்கு அருணா சர்க்கரை ஆலை கொடுக்க வேண்டிய சட்டப்பூர்வமான அடிப்படை விலை டன் ஒன்றுக்கு ரூ. 103.50. இதில் ரூ. 10/-ஐ வைப்புத் தொகையாக ஆலை பெற்றுக்கொள்வதாகச் சர்க்கரை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளது. ஆனால் இவ்வாறு கொடுப்பதில் விவசாயிகளை ஆலை கட்டாயப்படுத்துவதாக இதுவரை செய்தி ஏதும் இல்லையென சர்க்கரை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) வைப்புத் தொகையாக பெற்றுக்கொள்ளும் தொகையை 15 சதவீதம் வட்டியோடு 12 மாதங்களுக்குள்ளாகத் திருப்பித் தரப்படும் என ஆலை தெரிவித்துள்ளது. மத்திய அரசின் 1978-ம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) திருத்த ஆணை பிரிவு 3 (ஏ)ன்படி பதினான்கு நாட்களுக்குள் செலுத்தப்படாத கரும்பு கிரயத்திற்கு 15 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டும் என்று உள்ளது. எனவே, ஆலை ஏற்கனவே 15 சதவீதம் வட்டி கொடுக்க ஒப்புக் கொண்டுவிட்ட படியால் மாநில அரசு ஏதும் செய்வதற்கில்லை.

[1979 ஏப்ரல் 21

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து டன் ஒன்றுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதை திட்டவட்டமாக அறிவித்தார்கள். அது எந்தெந்த அடிப்படை யில் கொடுக்கப்படுகிறது? இப்போது மத்திய சர்க்கார் சில ஆலைகளை எடுத்து நடத்துகிறது. எத்தனை ஆலைகளை மத்திய சர்க்கார் ஏற்று நடத்துகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சுகர் ரிகவரி பேசிஸ்ஸில் 8.5 என்கிற சதவிகிதத்தை கட்டுமான அடிப்படையாக வைத்துக் கொண்டு, இப்படி மத்திய அரசு ஒவ்வொரு ஆலைக்கும் தனிப்பட்ட விலையாகக் கொடுத்து வருகிறார்கள். மேலும், இன்று மைய அரசு காவேரி சர்க்கரை ஆலையை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே இப்போது கொடுக்கக்கூடிய ரூ. 103/- விவசாயிகளுக்குக் கட்டுப் படியாகவில்லை என்று சொல்லி, அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படியிருக்கிறபோது கட்டாயமாக ரூ. 10 பிடித்துக் கொள்வது சரிதானா, பிடிக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடுமா, பிடித்து இருக்கும் ரூபாயைத் திருப்பி விவசாயிகளுக்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயமாகப் பிடிப்பது என்பது சட்டப்படி சரியாகாது. கட்டாயப்படுத்தக் கூடாது என்பதுதான் விதி முறைகளிலே உள்ளன. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில், அருணா சர்க்கரை ஆலையில் கட்டாயமாக ரூ. 10 பிடித்து வைத்துக் கொண்டார்கள் என்று இன்று வரையில் எந்தவிதமான புகார் மனுவும் வரவில்லை. அப்படி கட்டாய மாகப் பிடிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அரசின் கவனத் திற்குக் கொண்டு வந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படும்.

சக்தி சர்க்கரை ஆலை.

குறுகியகால வினா எண் 52 திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சக்தி சர்க்கரை ஆலைப் பகுதியில் விளைந்துள்ள கரும்பை ஆலை எடுத்துக் கொள்ள மறுத்ததினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில் அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சக்தி சர்க்கரை ஆலை கரும்பை எடுக்க மறுப்பது பற்றி சர்க்கரை இயக்கு நருக்கு இதுவரை தகவல் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை;

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு சர்க்கரையின் விலை குறைந்து இருக்கிறது என்பதால், பதிவு செய்யப்படாத கரும்பு சாகுபடி யாளர்களிடம் இருந்து கரும்பை சர்க்கரை ஆலைகள் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விவசாயிகளின் பிரச்சினை என்ன வென்றால் கரும்பை நாட்டுச் சர்க்கரையாகச் செய்வதால் அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மேலும், ஒரு டன் கரும்பை நாட்டுச் சர்க்கரை ஆக்கினால், ஏறத்தாழ டன் ஒன்றுக்கு 45 ரூபாய்தான் அவர்களுக்கு விலை கிடைக்கிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இன்று அரசின் ஆலைகளிலும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் கரும்பு கொடுத்தால் ஏறத்தாழ டன் ஒன்றுக்கு ரூ. 103.50—ல் இருந்து, ரூ. 120 வரை ஒவ்வொரு ஆலைக்கும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் விலை களுக்கு ஏற்றவாறு கிடைக்கும். ஆகவே, பதிவு செய்யப் படாத கரும்பு சாகுபடியாளர்களிடமிருந்து, ஒவ்வொரு ஆலைக்கும் கொடுக்கப்பட்டு இருக்கும் டார்ஜெட்டை அவர்கள் முடித்து விட்டார்களானால், அந்தப் பதிவு செய்யாதவர்களிட மிருந்தும் கரும்பு வாங்குவதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

சக்தி சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை ஏறத்தாழ இதுவரையிலும் 6 இலட்சம் டன் கரும்பை அவர்கள் அறைத் திருப்பதாக கேள்விப்படுகிறோம். அவர்களுடைய டார்ஜெட் 7 இலட்சம் டன் கரும்பை அறைக்க வேண்டும் என்பது. ஆகவே இன்னும் ஒரு இலட்சம் டன் அறைத்துவிட்டால் அதன் பிறகு மேலும் பதிவு செய்யப்படாத விவசாயிகளிடம் கரும்புகள் இருந்தால் அவைகளை அந்த ஆலைக்குக் கொடுக்கலாம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவ ரவர்களே, சர்க்கரை ஆலையைச் சுற்றி இருக்கக்கூடிய கரும்புத் தோட்டங்களில், அந்தச் சர்க்கரை ஆலை, உற்பத்தி செய்கின்ற கரும்பு முழுவதையும் எடுத்துக்கொள்ளும் என்ற அடிப்படையில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சர்க்கரை ஆலை முதலாளிகள் லாபம் இருக்கக்கூடிய நேரத்தில் கரும்பை எடுத்து கொள்கிறார்கள். ஆனால் லாபம் வராது என்ற நிலை வந்த

[1979 ஏப்ரல் 21

வுடனே அவர்கள் கரும்பை விவசாயிகளிடமிருந்து எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே இந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்குரிய வழிகளில் சர்க்கரை முதலாளிகள் உதவி செய்வார்களா? அல்லது அரசு உதவி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சர்க்கரைக் கொள்கையைப் பொறுத்தவரையில் அது மத்திய அரசினுடைய கொள்கையாக இருக்கின்றது. அது actually fluct-uating every year. நிலையான கொள்கையாக இல்லாது ஒவ்வொரு வருடமும் அந்தக் கொள்கை மாறுகிற காரணத்தால்தான் இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இப்படி சர்க்கரையின் விலை வீழ்ந்ததற்குக் காரணம் மத்திய அரசு சர்க்கரையின் மீதிருந்த தடையை நீக்கியது. அப்படி நீக்கியதன் காரணத்தால் மற்ற மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு சர்க்கரை அதிக அளவில் வந்தது. அப்படி வந்ததன் காரணத்தால் நம்முடைய சர்க்கரைக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. ஆனாலும் இப்போது நிலைமை கொஞ்சம் முன்னேறி இருக்கின்றது. அதாவது ஒரு குவிண்டால் 170 ரூபாய் என்றிருந்த நிலை மாறி இன்றைக்கு ஒரு குவிண்டால் 270 ரூபாய் வரை வந்திருக்கிறது. இப்படியே கொஞ்சம் நிலைமை மேலும் அபிவிருத்தி அடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு 8.5 என்ற அளவில் சர்க்கரை சத்து என்ற கட்டுமானத்தை மையமாக வைத்துக் கொண்டு 125 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு குறைந்த விலையாக 103.50 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரையில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிலைமை சீராகும் என்று நினைக்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, கரும்புக்கு வட மாநிலங்களில் 150 ரூபாய் என்ற அளவில் இன்றைய தினம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதேபோல் தமிழ்நாட்டிலும் கரும்புக்கு 150 ரூபாய் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வட மாநிலங்களில் 150 ரூபாய் கொடுக்கப்படுவதாக இந்த அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனாலும் சுகர் ரெக்கவரி பேஸிஸ் என்ற கணக்குப் போடப்படுகிறது. அந்த கணக்கின்படி வட மாநிலங்களில் உற்பத்தி ஆகிற கரும்பில் சுகர் ரெக்கவரித் தன்மை அதிகமாக இருக்கின்றது. ஆனால் தென் மாநிலங்களில் உற்பத்தியாகின்ற, குறிப்பாக தமிழகத்தில்

1979 ஏப்ரல் 21]

உற்பத்தி ஆகின்ற கரும்பில் சுகர் ரெக்கவரித் தன்மை குறைவாக இருக்கிறது என்ற கணக்கினைச் சொல்கிறார்கள். அந்தக் கணக்கின் காரணமாகத்தான் அந்த விலை கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்த சக்தி சுகர் ஆலையைப் போல் கோவை மாவட்டத்தில் அமராவதி சர்க்கரை ஆலை நஷ்டத்தில் நடந்து வருவது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதைச் சீர்திருத்த நமது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மருதமலையில் தங்கும் விடுதிகள்.

* வினா எண் 755—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் உள்ள மருதமலையில் சுற்றுலாத்துறை மூலம் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொல்லி விட்டார்கள். அதேபோல் நம் மாநிலத்திலுள்ள எந்தெந்த மலைக்கோயில்களில் சுற்றுலா மையங்கள் ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் அரசின் பரிசீலனையில் தற்போது இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலா மையங்கள் என்பது வேறு, சுற்றுலா விடுதிகள் என்பது வேறு. சுற்றுலா விடுதிகள் அமைப்பதற்கு மலைக் கோயில்கள் என்பது ஒன்றும் அடிப்படை இலக்கணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள மருதமலை என்பது பிரசித்தி பெற்ற திருக்கோயில் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அப்படி இருக்கின்ற அந்தப் பகுதிக்கு ஏராளமான பயணிகள் தமிழகம் முழுவதும் இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் சுற்றுலா வாரியத்தின் சார்பிலே ஒரு விடுதி கட்டி விடலாம். அப்படி இல்லை என்றால் அந்தக் கோயில் வருமானத்தைக் கொண்டு ஒரு சுற்றுலா விடுதி கட்டு வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் இன்னொரு சாமியார் இருந்துகொண்டு அந்தக் கோயிலைப்பற்றி துவேஷப் பிரச்சாரங்கள் செய்து

வருகிறார் என்பது அமைச்சருக்கும் தெரியும். ஆகவே அவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை என்பது கோவைக்கு அருகாமையில் இருக்கிறது. கோவை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சி கழகம் அதிக அறைகள் அடங்கிய விடுதிகளைக்கட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. சுற்றுலா விடுதிகள் அமைப்பதன் அடிப்படை நோக்கமே அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்குகிற முறையையும், அளவையும், மற்ற பிரச்னைகளையும் மனதில் கொண்டு இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுகின்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மருதமலை என்பது யாத்ரீகர்கள் வருகின்ற ஸ்தலமாக இருக்கிறது. அங்கே பக்தர்கள் தங்குகிற அமைப்புகளைக் கட்டுவதில் சுற்றுலா வளர்ச்சி கழகம் ஈடுபட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை மீது அறநிலைய துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது ஆய்வில் இருக்கிறது. இன்னொன்றையும் தெரிவித்தார்கள். அந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் யாரோ ஒரு சாமியார் துஷ்பிரயோகம் செய்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். அமைச்சருக்குத் தெரிந்து நடக்கவில்லை. ஆனால் மருதமலைக்குப் பக்கத்தில் வனத்துறைக்குச் சொந்தமான ஒரு இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அங்கே ஒருவர் தனியாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, சமூக விரோத சக்திகள் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலும் வந்திருக்கிறது. அது தீவிர பரிசீலனைக்குரியதாக இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

கிளைச் சிறைகள் நிர்வாகம்.

* வினா எண் 756—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கிளைச் சிறைச்சாலைகள் உள்ளன ?

(ஆ) கிளைச் சிறைச்சாலைகளின் பராமரிப்பினை சிறைத் துறைக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா ?

1979 ஏப்ரல் 21]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) 119. (ஆ) ஆம். சார்புச் சிறைகளின் நிர்வாகப் பொறுப்பை வருவாய்த் துறையில் இருந்து படிப்படியாக சிறைத் துறைக்கு மாற்றுவதற்கு கொள்கை ரீதியாக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. சென்ற ஆண்டு செங்கற்பட்டு சார்பு சிறைகளை எடுத்துக்கொண்டு அடுத்த ஆண்டு தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சார்புச் சிறைகளை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே இன்றைக்கு அநேகமாக அங்குள்ள சிறைச்சாலைகளில் அண்டர் டிரையல் கைதிகளை அடைத்து விடுகிறார்கள். அந்தச் சிறைச் சாலைகளில் குறைந்தபட்ச தேவைகள் கூட இல்லை. அவர்கள் குற்றவாளி கைதிகள் போல் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையைச் காண்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள கிளைச் சிறைச்சாலைகளை இந்த முறையில் சிறைச் சாலை துறை எடுத்துக் கொண்டால் 22 ஆண்டுகள் பிடிக்கும். அந்த அண்டர் டிரையல் கைதிகளுக்கு தேவையான வசதிகளை உடனடியாகச் செய்து கொடுப்பதோடு அந்த சிறைச் சாலைகளை சிறைத் துறைக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சார்பு சிறைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. நிதி நிலைமையைப் பார்த்து அது செய்யப்படும். அந்தச் சிறைச் சாலைக் கைதிகளுக்கு என்ன என்ன தேவைகள் உடனடியாகச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து வருகிறோம். சிறைத் துறைக்கு மாற்றுவது என்பது காலதாமதம் ஆகும். மற்ற வசதிகள், குறிப்பாக பிளஷ் அவுட் வசதிகள் உடனடியாக இந்த அரசு செய்து வருகிறது.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யூசுப் அவர்கள் கூறியது போல அண்டர் டிரையல் கைதிகளை அங்கே சப் ஜெயிலில் வைக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச தேவைகள் மட்டுமல்ல, 8, அல்லது 10 பேர்கள் இருக்க வேண்டிய அந்த இடத்தில் 50 பேர்களை அடைக்கிறார்கள். அங்கே காற்று வசதி கிடையாது, ஜன்னல் வசதி கிடையாது. சுகாதார வசதியே இல்லை. மூட்டைப் பூச்சி வேறு கடிக்கிறது. அவைகளையெல்லாம் செய்வதற்கு ஜெயில் சீர்திருத்த குழு ஏதாவது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி இருக்கிறதா ? அந்த அடிப்படையில் அந்த ஜெயில்களில் சீர்திருத்தம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சீர்திருத்தம் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டு அது ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. இந்தக் குழு சிறைச்சாலைகளில் உள்ள குறைகளையும் ஆராய்ந்திருக்கும் என்று நம்புகிறேன். கூடுமான வரை பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் தவிர்க்க முடியாத நிலையில் பல பேர்களைக் கைது செய்யும்போது, சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அப்போது உடனடியாகக் கைது செய்பவர்களை மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிளைச் சிறைச் சாலைகளில் லாட்ரீன் அமைத்துக் கொடுக்க செயற்குறிப்பு இருப்பதாக சொன்னார்கள். இதன்படி நிறைவேற்றவேண்டும் என்றால் 10, 15 ஆண்டுகள் ஆகும். ஆகவே சீக்கிரமாக இந்த லாட்ரீன்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா? மேலும் கைதிகளிடம் சிலைப் பேன் என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. இது எல்லா கைதிகளிடமும் பரவி விடுகிறது. இதையும் உடனடியாக போக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பெரும்பாலும் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் இந்த நவீன வசதிகள் பிளஷ் அவுட் வசதி ஏற்படுத்தப்பட்டிருக் கிறது, மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற சிலைப்பேனைப்பற்றி அரசுக்குத் தகவல்வரவில்லை. இருந்தாலும் அதுபற்றி ஆராயும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Vellore Court buildings.

* Q. No. 757 Thiru R. MARGABANDU : Will the Hon. the Minister for Law be pleased to state the present stage of the propo-sal to shift the Court buildings from Vellore Town Fort to Sathuva-cheri Housing area ?

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவைச் செயலர்): இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Thiru P. CHANDRAN : I want to know from the Hon. Parlia-mentary Secretary to the Hon. Minister for Law if the Government would come forward to construct Chambers for the Advocates prac-tising there, as we do in the High Court, since Sathuvacheri is far away from the Vellore Town Fort.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, நமது உயர்நீதிமன்றம் இந்த மாவட்ட நீதிமன்றத்தை சத்துவாச்சேரி பகுதியில் ஏற்படுத்த

கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்குமாறு வீட்டுவசதி வாரியத்தைக் கேட்டுக்கொண்டது. வீட்டு வசதி வாரியம் இதற்காக நிலம் ஒதுக்கியது. நீதிமன்ற கட்டிடங்களைக் கட்டுவதற்கு முதலில் வீட்டுவசதி வாரியம் அறிவித்த தொகை 1.04 இலட்சம். தற்போது 9.30 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்கிறது. மேலும் இந்தத் தொகையைக் கட்டவில்லையென்றால் அதற்குரிய வட்டியை வசூலிக்க நேரிடும் என்று வீட்டு வசதி வாரியம் தெரிவித்து இருக்கிறது. ஆகவே இதுபற்றி நீதிமன்றம் வீட்டு வசதி வாரியத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் சாலை ஓரங்களில் கடைகள்.

* வினா எண். 758—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மூர்மார்க்கட் சுற்றியுள்ள சாலைகளிலும், சென்னை தொலைபேசி நிலையத்திற்கும் — பூக்கடைக்கும் இடையிலுள்ள சாலையிலும் போடப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் மாநகராட்சியின் அனுமதியின் பேரில் போடப் பட்டதா?

(ஆ) ஆம் எனில் மாத வாடகை எவ்வளவு? யாரால் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. அப்புனு கவுண்டர் : தலைவரவர்களே, நடை பாதைகளில் அதிகமான கடைகளை வைத்துவிடுவதால் பாத சாரிகள் நடைபாதைகளில் நடந்து போவதற்கு பெரும் தொல்லையாக இருக்கிறது. இதை அரசு உணர்ந்து இந்த நடைபாதை கடைகளை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடை பாதைகளில் உள்ள கடைகளினால் போக்குவரத்து இடையூறு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்றாலும் இதில் வியாபாரம் செய்கின்றவர்களுடைய நிலைமையில் மனிதாபிமான உணர்வோடு இரக்கம் காட்ட வேண்டும் என்ற நிலைமையில், இந்த நடைபாதை கடை வியாபாரிகளே ஒரு முறையோடு கடைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதைப்பற்றி ஆலோசித்து முறையாக அமைத்துக் கொடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மாநகர ஆட்சி தனி அதிகாரி, பெருநகர் வளர்ச்சி மன்ற அதிகாரி, போலீஸ் ஆணையாளர்,

கமிஷனர், தலைமைப்பொறியாளர், ஊரக வளர்ச்சி நெடுஞ் சாலைத்துறை தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை இயக்குநர் நகர்ப்புற உச்சவரம்பு, இயக்குநர் புள்ளிவிவரம், இவர்களைக் கொண்ட ஒரு குழு அரசுக்கு ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, மூர்மார்க்கட் பக்கத்தில் சென்ட்ரல் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த சென்ட்ரல் ஸ்டேஷனோடு மூர்மார்க்கட் பகுதியையும் ; இணைக்கப் போவதாக ஒரு ப்ரபோசல் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி இணைக்கப்படும்போது இப்படிப்பட்ட கடைகளும் அத்துடன் சேர்த்து இணைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரம் இல்லை.

[முற்பகல் 9·20]

திரு, ரா, கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மூர் மார்க்கெட்டிலிருந்து பாரீஸ் கார்னர் வரை பல கடைகள் அந்தப் பகுதிகளிலே வைக்கப்பட்டிருக்கின்றது, மனிதாபி மானத்தோடு பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அங்கே அண்ணா பெயரிலேயே போர்டு போட்டு, வெளிப்படையாகவே வைத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அந்தப் பகுதியிலே உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை வசூல் செய்வதாக அறிகிறேன். எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறு கிறார்கள். மாநகராட்சி அந்த ஆக்கிரமிப்புக் கடைகளுக்குக் கட்டணம் வசூலித்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெருவாரியான சிறு வியபாரிகள் இன்றையதினம் வியபாரம் செய்வதற்கு இடமில்லாத காரணத்தால் சாலை ஓரங்களில் கடைகள் வைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இதைத் தவிர்க்கின்ற நிலையில் சென்னையில், ஒரு பெரிய இடத்தில் சிறுகடை வியாபாரிகளுக்காக பெரிய அளவில் வசதி செய்து தருவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து இதுகுறித்து முடிவு செய்யலாம்.

தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எடுக்கப்பட்ட ஆசிரியர்கள்.

* வினா எண் 759—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் தொடக்கப் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சியில் அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான கல்வி இலாகாவின் ஆணை எண் 56461 / ந. 1/67 – 18, நாள் 6 - 1 - 70 சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) & (ஆ) தனியார் பள்ளிகளிலிருந்து 102 ஆசிரியர்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் உதவி ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு இன்னும் 6 - 1 - 70 நாளிட்ட 56461 / இ1/ 67 கல்வித்துறை அரசாணையின்படி ஊதியம் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. பரிசீலனையில் உள்ளது.

திருவல்லிபுத்தூர் நகராட்சி குடி நீர் வழங்கு திட்டம்.

* வினா எண் 760—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலானர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியின் குடிநீர் திட்டத்திற் கானஆய்வுத் தொகை ரூ. 20, 800 / — காட்டியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1979 ஏப்ரல் 21

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் குடிநீர் பிரச்னை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் 25 பைசாவிற்கு விற்கிறது. பெண்கள் குடிநீருக்காக 2, 3 மைல்கள் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவு சீக்கிரம் செய்யப்படும் என்று கேளுங்கள். அதற்காக இவ்வளவு பெரிய விளக்கம் வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி . மழை நேரங்களில் எக்க சக்கமான தண்ணீர் வீணாகப் போகிறது. அதனால், அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து, கோடைகாலத்தில் தண்ணீர் கொடுப்பது என்பதுதான் அந்த ஆய்வுத் திட்டம். அந்த ஆய்வுத் திட்டத்திற்காக அதிகாரிகள் வந்து போனார்கள்; காலம் கடத்தப்படுகிறது. எப்போது முடியும்? இந்த ஆண்டிலாவது தண்ணீர் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கடந்த 5-10-78 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. களப்பணி முடிந்தவுடன், மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். நான் ஒரு உறுதிமொழி தருகிறேன். அரசுக்கு வந்தால், சர்க்கார் அன்றைக்கே உத்தரவிடும். இதற்கும் சீக்கிரமாகச் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி ஸ்ரீவில்லி புத்தூரைப் பற்றியது என்பது ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரியும்; இருந்தாலும் அதையொட்டிக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அது வரவேற்கத் தக்கது. குடிதண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்க்க, இந்த திட்டம் இந்த ஆண்டிலே ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு என்று சொல்லி உறுதிமொழி கொடுப்பது சரியல்ல. எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ, 'as expeditiously as possible' அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

1979 ஏப்ரல் 21]

இராயபுரம் தொகுதியில் கட்டப் பட்டுள்ள புதிய குடியிருப்புகள்.

* வினா எண். 761— திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைஇராயபுரம் தொகுதி வண்ணாரப்பேட்டை, 10 - ஆவது வட்டம் கிழக்கு கல்லறைச் சாலையில், குடிசை மாற்று வாரியத்தில் இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள 460 புதிய குடியிருப்புகளிலும் பாதுகாப்பற்ற நிலையும் மின் வசதியில்லாத மற்றும் சுகாதாரமற்ற நிலையும் இருப்பதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்குவதற்கு அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ)

அவ்வாறான நிலமையில்லை. குடியிருப்புகளில் தனித்தனி குளியல் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு ஏழு தெரு மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. வீடுகளுக்கு மின் விளக்கு வசதிகள் அதில் குடியிருப்பவர்களே செய்து கொள்ள வேண்டும். அதற்கு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தடையின்மை சான்றிதழ் (No Objection Certificate) அளிக்கின்றது. தற்போதைக்கு மேல் நிலைத் தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

Gov·rnment Pap·yee Hospital at VALAYAPATT

* Q. No. 762. Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether there is any prop.sal to start an X-ray Unit at Government Papayee Hospital at Valayapatti in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) & (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா வலயப்பட்டி அரசினர் பாப்பாயி மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவி அமைப்பதற்கு 1979-80 நிதியாண்டில் ரூ. 1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் போதாது. இன்னும் அதிகமான சலுகைகள் செய்து தரவேண்டும். உப

வட்டாரங்களில் 20 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். சிறு
நீர், ரத்த பரிசோதனை நிலையங்கள் அமைத்துக் கொடுத்
தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையான சேவை
செய்ததாகும். அதையெல்லாம் செய்து கொடுக்க அரசு
நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு இரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :
ஒவ்வொன்றாக படிப்படியாகச்
திட்டம் அரசின் செய்வதற்கான
நீண்ட காலத் தேவையாக பரிசிலனையில் இருக்கிறது.
பொருத்தப்பட்டு கிராம மக்கள் நல்வாழ்வுக்கு இருந்த எக்ஸ்ரே மெஷின்
வேண்டுமென்ற எண்ணத்தில் வழி செய்ய
அனுமதியோடு அது நிறுவப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள்

திரு. விஜயரகுநாத தொண்டமான் : எக்ஸ்ரே அமைப்பது
பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
நன்றி. புதுக்கோட்டை வட்டத்திலும் சரி, மிக்க
சரி, எக்ஸ்ரே இருக்கும் இடங்களில் பிலிம் வலையப்பட்டியிலும்
இதனால் சமயத்தில் எக்ஸ்ரே எடுக்க கிடைப்பதில்லை.
அதற்கு அரசு ஆவன செய்யுமா? முடியாமல் போகிறது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர் சௌந்தரராஜன் :
அத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்றுதான் தற்போது
தலைமை மருத்துவமனைக்குத் தேவையான மாவட்ட
பிலிம்கள் ஒதுக்கப்பட்டு அவ்வப்போது அளவுக்குப்
மனைகளில் பிலிம்கள் தட்டுப்பாடு ஏற்பட்டால் வட்ட மருத்துவ
தலைமை மருத்துவ மனையில் இருந்து பெற்றுக் மாவட்ட
என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கொள்ளலாம்
இல்லையென்ற நிலை உருவாகி எங்காவது
தொல்லை ஏற்படுகிறது என்ற அதனால் மக்களுக்குத்
அரசு கவனத்திற்குக் கொண்டு நிலை இருந்தால் அதை
எடுக்கப்படும். வந்தால் உரிய நடவடிக்கை

விருதாசலம் அரசினர் மருத்துவமனை

* வினா எண். 763 திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா?

(அ) விருத்தாசலம் அரசினர் மருத்துவமனையை
விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) இந்த மருத்துவமனையில் X-ray கருவியும் ரத்தப்
பரிசோதனை நிலையமும் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :

(அ) உண்டு.

(ஆ) இந்த மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவி அமைக்கவும் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கவும் 1979-80-க்கான நிதியாண்டில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன் : அந்த மருத்துவ மனையை விஸ்தரிக்க உத்தேசம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை படுக்கைகளை அதிகப்படுத்த உத்தேசம் இருக்கிறது? எக்ஸ்ரே கருவி எப்போது நிறுவப்படும்? விருத்தாசலம் முனிசிபல் நகரமாகவும் வட்ட தலைமை இடமாகவும் இருக்கக்கூடிய காரணத்தால் அதிகப்படியான அளவுக்கு வியாதியஸ்தர்கள் வருகிற காரணத்தால் உடனடியாக விஸ்தரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : 1976 ஆம் ஆண்டில் விருத்தாசலம் அரசு மருத்துவ மனை 20 படுக்கைகள் கொண்டதாக இருந்தது. அதற்குப் பின்னால் 1977—ல் அங்கே 44 படுக்கைகள் கொண்டதாக உருவாக்குவதற்காக வழிவகைகள் செய்யப்பட்டன. மேலும் அதிகப் படுக்கைகளை உருவாக்குவதற்காக வழிவகைகள் தற்போது இல்லை. தற்போது இரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ்ரே கருவியும் அமைக்க இந்த நிதியாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. ராமநாதன் : அமைச்சர் அவர்கள் விருத்தாசலம் தலைமை மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவியும், இரத்த சேமிப்பு நிலையமும் ஏற்படுத்த இருப்பதாகச் சொன்னதற்காக மிக்க நன்றி. ஆனால் அந்தக் கட்டிடம் சுகாதார வசதியற்ற முறையில் செல்லும் பாதையிலே கழிப்பிடம் கட்டி அசுத்தமாகிக் கொண்டிருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கு உத்தேசம் உண்டா? அந்தப் பகுதி மக்கள் உள் கிராமங்களில் இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஆம்புலன்ஸ் வண்டியைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : அந்த மருத்துவ மனைக்கு நானே நேரில் சென்று பார்த்தேன். கழிப்பறை கட்ட வேண்டாத இடத்தில் கட்டியிருப்பதைக் கண்டு பிடித்து அதற்குப் பிறகு அதை மாற்ற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆம்புலன்ஸ் வண்டி வேண்டுமென்று கேட்டார்கள். இப்போதைக்கு இல்லையென்றாலும் விபத்திற்காகத் தனிப்பிரிவுகள் ஒவ்வொரு மாவட்டமாக ஏற்படுத்திக் கொண்டு வரும் நேரத்தில், தென்னாற்காடு மாவட்டத்திற்கு விரிவுபடுத்தும் நேரத்தில் இது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1979 ஏப்ரல் 2

மதுரையில் தொலைக்காட்சி நிலையம்

* வினா எண் 764. திரு. என். லட்சுமிநாராயணன் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் டெலிவிசன் நிலையம் அமைக்கும்படி மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) மதுரையில் தொலைக்காட்சி நிலையம் உடனடியாக நிறுவ வேண்டும் என்று அரசின் சார்பில் இந்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. இந்திய அரசினர், தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைத்திட கொடைக்கானலில் ஓர் இடம் தேர்வு செய்துள்ளனர். நான்கு ஏக்கர் பரப்புள்ள அந்த இடத்தை இலவசமாக வழங்க தமிழக அரசு முன்வந்துள்ளது. தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தினை விரைவில் அமைத்திட மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. விரைவில் தொடங்க இருக்கிறது என்று மத்திய அரசு பதிலளித்து இருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவர் அவர்களே, அஞ்சல் நிலையம் ஆக அது இருக்கிறது. சென்னை நகரத்திலே பெரும்பாலான நிகழ்ச்சிகள் தெலுங்கிலேதான் இருக்கின்றன. சென்னையிலே அது சரியாக இருக்கலாம், ஆனால் மதுரையில் தமிழில் நிகழ்ச்சிகள் காட்டப்பட வேண்டுமென்ற முறையில் தனித் தமிழிலே நிகழ்ச்சிகள் நடைபெறச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிலையம் என்பது நம்முடைய ஆளுகைக்குட்பட்டது அல்ல. அது மத்திய அரசினுடைய நிர்வாகத்திற்குட்பட்ட ஒன்று. சென்னையிலே இருக்கிற காரணத்தினால் பல்வேறு மொழிகளிலும் தென்னிந்தியாவிலே இருக்கிற நிலையமாக இருப்பதால், அம்மாதிரிக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள், மதுரையிலே தனி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் இப்போது இயலாது என்று தெரிவித்து இப்போது அஞ்சல் நிலையத்தை ஏற்படுத்த இருக்கிறார்கள். அதை முதலிலே நாம் வரவேற்போம், அதற்குப் பிறகு மற்ற லாபங்களைப்பற்றி யோசிப்போம்.

திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள வானொலி நிலையத்திலும் தொலைக்காட்சி நிலையத்திலும் காட்டப்படுகிற நிகழ்ச்சிகள்

1979 ஏப்ரல் 21]

ஒலிபரப்பப்படுகிற நிகழ்ச்சிகள் அரசினுடைய திட்டங்களை எடுத்துச் சொல்வதாக அமையவில்லை என்பதை அரசு அறியுமா? அதோடு அரசுக்கு எதிரான கொள்கைப் போக்கை இந்த நிலையங்கள் கையாண்டு வருவதாக பொது மக்கள் மத்தியிலே பரவலான கருத்து நிலவி வருகிறது, அதை நீக்குவதற்கு அரசு உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னதைப்போல், ரேடியோ நிலையங்கள் தொலைக்காட்சி நிலையங்கள், ஆகியவை மத்திய அரசின் நிர்வாக அதிகாரத்திற்குட்பட்ட நிலையங்களாக இருக்கின்றன. ஆகவே அவைகள் எந்த மாநிலத்திலே இருக்கின்றனவோ அந்த மாநில மக்களின் நன்மைகளை மனதிலே கொண்டுதான் நிகழ்ச்சி நிரல்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அப்படி நிகழ்ச்சி நிரல்களை வகுத்துக் கொள்வதற்கு மாநில அரசின் துணையோடு மாநில அரசின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழு இயங்கி வந்தது. இப்போது அந்தக் குழுவையே அவர்கள் ரத்துசெய்துவிட்டார்கள். ஆனால் இப்போது நடைமுறையிலே அங்கே நடைபெறுகிற நிகழ்ச்சிகள், ஒலி பரப்புகிற - ஒளி பரப்புகிற நிகழ்ச்சிகள் எல்லாம் மக்களிடையே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் எழுப்பிய அந்த உணர்வினைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அரசு அறிந்திருக்கிறது. மிக விரைவிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இந்த மாநில மக்களுடைய நன்மையைக் குறித்த பல்வேறு திட்டங்களை ஒலிபரப்ப, ஒளிபரப்ப வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை அந்த நிர்வாகத்தின் அதிகாரிகளுக்கும் மத்திய அரசினுடைய அமைச்சருக்கும் தெரிவிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபடி அதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இன்றைய தினம் வானொலி நிலையமும் தொலைக்காட்சி நிலையமும் மத்திய அரசின் நிர்வாகத்திற்குள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. என்பது உண்மைதான். அதைப் போக்குகின்ற வகையிலே மத்திய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நேரத்திலே அதற்காக தனி கார்ப்பரேஷன் ஏற்படுத்துவோம் என்று சொன்னார்கள். இன்னும் ஏற்படுத்தவில்லை. அதை ஏற்படுத்த அரசு வற்புறுத்துமா? அதோடு மக்களின் நன்மையைக் கருத்திலே கொண்டு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கக்கூடிய முறையிலே முன்னாலே ஏற்படுத்தப்பட்ட குழுவையும் திரும்ப அமைப்பதற்கு மத்திய அரசைக் கட்டாயப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் காரியம் ஆற்றுமா?

[1979 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே,
இந்த ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிலையங்கள் தன்னாட்சி நிறுவனமாக
மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தையொட்டி மிக விரைவிலே
சட்டம் கொண்டுவர இருக்கிறோம் என்று மத்திய செய்தி
ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்திலே
தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் எப்போது முடிவு
எடுக்கிறார்களோ அப்போது அந்த முடிவை எடுப்பார்கள்.
நாம் வற்புறுத்த முடியாது, அந்த அதிகாரம் நம்மிடத்திலே
இல்லை. இருந்தாலும் தன்னாட்சி நிறுவனமாக இருந்தாலும்
மத்திய அரசின் பொறுப்பிலே உள்ள நிறுவனமாக
இருந்தாலும் மாநில மக்களின் நன்மையைக் கருதி அவைகள்
செயல்பட வேண்டுமென்ற அந்த உறுதியான கருத்தை மாநில
அரசு மத்திய அரசிற்கும் அது சம்பந்தப்பட்ட நிர்வாகிகளுக்கும்
தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ரேடியோ நிலையங்
களிலும், டெலிவிஷன் நிலையங்களிலும் ஏற்கனவே இரண்டு
ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த கட்டுப்பாடு இல்லாமல்
இப்பொழுது ஆளுங்கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும்
ஒன்றுபோல் வாய்ப்புக்களைக் கொடுப்பது இந்த அரசாங்கத்
திற்குத் தெரியுமா? இப்பொழுதுதான் நியாயமான முறையில்
அது செயல்படுகிறது என்பதனை இந்த அரசு உணருமா என்று
அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஆளுகிற கட்சிக்கு அல்லது எதிர்க்கட்சிக்கு
என்ன சலுகைகள் தருகிறார்கள் என்பதைப்பற்றி இந்த அரசு
கவலைப்படவில்லை. அது மத்திய அரசின் கருத்தை ஒட்டிய
நிலைமைகள். இந்த மாநில மக்களுடைய நன்மையைக் கருதி,
இந்த அரசு மேற்கொள்கிற, மாநில அரசுகள் மேற்கொள்கிற
நடவடிக்கைகளை, எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், முறை
யான அளவுக்கு, போதுமான அளவுக்கு, இந்த மாநில மக்களி
டத்தில் பரப்புகின்ற முறையில், இந்த இரண்டு நிலையங்களும்
செயல்படத் தவறிக் கொண்டு வருகின்றன என்பதை இந்த
அரசு மிகுந்தபொறுப்போடும் அதே நேரத்தில் மிகுந்த கண்டிப்
பான தன்மையோடும் கொண்டு வருகிறது. இந்த முறை
மாற்றப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கருத்து.

பழனி-கோடைக்கானல் பகுதியில்
வன விலங்குகள் சரணாலயம்.

*வினா எண் 765 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி
அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பழனி-கோடைக்
கானல் சாலைப் பகுதியில் வன விலங்குகள் சரணாலயம் ஒன்று
ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:— இல்லை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே,
கொடைக்கானல், இன்றையதினம் உலகம் முழுவதிலிருந்தும்
பயணிகள் வரக்கூடிய சுற்றுலா ஸ்தலமாக இருக்கிறது. அதேபோல்
பழனியும் ஒரு சிறந்த யாத்திரிகர் ஸ்தலமாக இருக்கிறது.
அண்மையில், மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருக்கக்கூடிய
காடுகள் அடங்கிய அந்தப் பகுதியில் வன விலங்கு சரணாலயம்
அமைக்கின்ற உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள்
கூறினார்கள். இனிமேலாவது, அந்த ஆலோசனையை அரசு
பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவ
ரவர்களே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி
மலையை ஒட்டியுள்ள பழனி, கொடைக்கானல் சாலையில்
காடுகள் முன்னாலே ஜமீந்தார்கள் இருந்த காலத்தில், பெரும்
பகுதி அழிக்கப்பட்டு விட்டன. எனவே, இப்பொழுது அங்கு
காடுகள் அதிகமாக இல்லை. எனவே, இப்பொழுது அங்கே வன
விலங்குகள் வசிக்கின்றன என்கின்ற நிலைமையும் குறைந்துவிட்ட
காரணத்தினாலே, இப்பொழுது சரணாலயம் அமைக்கும்
அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் இல்லை.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே,
கடந்த 17-4-1979 அன்று மேற்கு தொடர்ச்சி மலையில் புளியங்
குடியில், ஒரு யானைக் கொம்பை அங்கு வசிக்கிறவர்கள்
மாவட்ட வன அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளது அரசுக்குத்
தெரியுமா? அதை எடுத்து எவ்வளவு நாளாகிறது? யானையின்
மற்றொரு கொம்பை பதுக்கி வைத்திருந்தால், அவர்கள்மேல்
இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? தமிழக யானைகள்
கேரளாவுக்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே ஒரு கேள்வியைக்
கேளுங்கள். அமைச்சர் நினைவில் வைத்துக்கொள்ள
வேண்டாமா? ஒரே நேரத்தில், இரண்டு, மூன்று கேள்விகளைத்
தொடர்ந்து கேட்க வேண்டாம்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: தமிழக யானைகள் கேரளாவுக்கு
விரட்டிச் செல்லப்பட்டு, சுடப்பட்டு, கொம்புகள் திருடப்
படுவது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு
உறுப்பினரவர்கள் தெரிவித்த அந்த ஒரு யானையினுடைய
கொம்பு பதுக்கப்பட்டதைப்பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்
கிறது. அதுபற்றி தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. நடவடிக்கை
எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது,

கேரளாவுக்கு யானைகள் விரட்டிச் செல்லப்பட்டு, சாகடிக்கப் பட்டு, தந்தங்கள் திருடப்படுகின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லை. மாண்பு மிகு உறுப்பினரிடத்திலே தகுந்த ஆதாரங்கள் இருந்தால், உடனடியாகக் கொடுத்தால், தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்பு மிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் கொடைக்கானல் பகுதியை முக்கிய டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையிலே இருக்கிறது. இந்த நேரத்திலே, ஊட்டியிலே இருப்பதைப் போல், அங்கு ஒரு சர ணாலயம் ஏற்படுத்துவது சரி என்ற கருத்தை நான் அரசாங்கத் திடம் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது அங்கு காடுகள் இல்லை, மிருகங்கள் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், ஒரு 'சர்வே' அந்தப் பக்கத்திலே எடுத்துப் பார்த்தால் நம்முடைய கோயம்புத்தூர் எல்லையிலேயிருந்து அந்தப் பகுதி கேரளா எல்லை வரையிலும், கொடைக்கானல் பகுதி வரையிலும் எடுத்துப்பார்த்தால், முதுமலை சாங்ச்சுரியைக் காட்டிலும் அதிகமாக மிருகங்கள் இருப்பதை நாம் காணலாம். அந்தப் பகுதியை சரணாலயமாக ஆக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பழனி, கொடைக்கானல் சாலைப் பகுதியில் வன விலங்குகள் சரணாலயம் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா என்று கேட்டிருக்கிறது. அதற்கு பதில் தரப்பட்டிருக் கிறது. இப்பொழுது உறுப்பினர் அவர்கள் முதுமலை காடு களையும், கொடைக்கானல் காடுகளையும் பற்றி சொல்கிறார்கள் அப்படிப்பட்ட நிலைமையில் அங்கே வன விலங்குகள் அதிகமாக இருக்கின்றன என்று தகவல் கிடைக்குமானால் அது பற்றி ஆராய்ந்து அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பக்கத்தில் இருக்கிற காடுகளில் இருக்கிற மிருகங்களை காட்டுப்பன்றி, முளா போன்ற மிருகங்களை அந்தப் பக்கத்தில் இருக்கிற எஸ்டேட் ஓனர்கள் சட்ட விரோதமாக வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா, தெரிந்தால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சரணாலயப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காடுகளில் இப்படிப்பட்ட மிருகங்களை வேட்டையாடக்கூடாது என்று விதி வகுக்கப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவைகளில் காட்டுப்பன்றியும் ஒன்று. ஆனால் அப்படிப்பட்ட காட்டுப் பன்றிகள் பயிர்களை அழிக்க முன் வருமேயானால் அனுமதி பெற்று சுடலாம் என்றும் விதியிருக்கிறது. அப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்ததாக அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் ஜமீன்தார்களுடைய காலத்தில் அங்கே காடுகள் எல்லாம் இருந்து தற்போது அது அழிக்கப்பட்டு விட்ட தால் அங்கே இன்றைய தினம் காடுகள் குறைவாக உள்ளதால் அங்கே சரணாலயம் அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், அந்தக் காடுகள் எப்பொழுது சர்வே செய்யப்பட்டது? முன்னால் இருந்ததை விட இப்பொழுது குறைந்திருக்கிறதா? அப்படியென்றால் அதற் கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்களை சேகரித்து பதில் தருகிறேன்.

தஞ்சை மாவட்ட அரசுப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகள்

*வினா எண், 766 திரு. பொ. விஜயராகவன் : மாண்பு மிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி, பட்டுக் கோட்டை, திருத்துறைப்பூண்டி, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் நடத்த அனுமதியளிப்பதற்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 25,000 அளிக்கவேண்டுமென அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் புயலால் பாதிக்கப்பட்ட அப்பகுதிகளில் அரசே இவ்வகுப்புகளை துவக்க உத்தேசித்துள்ளதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம். தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த ரூ. 25,000 பொதுமக்கள் நன்கொடை கட்டாயம் கட்ட வேண்டும் என்ற பொது விதியுள்ளது.

(ஆ) புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு மேல் நிலை வகுப்பு துவங்க ரூ. 25,000 பொதுமக்கள் நிதி கட்டவேண்டிய அவசியமில்லை என்ற விதி விலக்களிக்கும் கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மானியம்

*வினா எண். 767 திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) +2 வகுப்புகள் நடத்தும் தனியார் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் அரசு மான்யமாக அளிக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகை பள்ளிக்குப் பள்ளி மாறுபடுகின்றதா? அல்லது சம தொகையே எல்லாப் பள்ளிகளுக்கும் அளிக்கப்படுகிறதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் சம்பளத் தொகை முழுவதையும் போதனா மானியமாக ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படுகிறது.

(ஆ) தனியார் நிர்வாகத்தின் கீழுள்ள மேல்நிலை வகுப்புகளில் பணிபுரியும் நிர்ணயிக்கப் பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசு நிர்ணயித்துள்ள சம்பள விகிதத்தின்படி ஒவ்வொரு மாதமும் மானியம் வழங்கப்படுகிறது. அதனால் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மானியத் தொகையில் வித்தியாசம் ஏற்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் பிளஸ்–2 வகுப்புகளில் சேர்ந்திருக்கிற மாணவர்கள் ஃபர்ஸ்டு (முதல்) குருப்பில், மேத்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி முதலியவைகளை எடுத்துக் கொள்ளப்படலாம் என்றுள்ளது. செகண்ட் குருப்பில் மேத்ஸ் கிடையாது. ஆனால் பெற்றோர்களால் எங்களுக்குத் தரப்பட்ட தகவல்களின்படி வருகிற எம்.பி.பி. எஸ் தேர்வுக்கு மேத்ஸ் இருந்தால்தான் இடம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஃபர்ஸ்ட் குருப்பில் இடமில்லாவிட்டால் செகன்ட் குருப்பில் சேரும் மாணவர்களுக்கு மேத்ஸ் இல்லாமல் எம். பி.பி.எஸ்.சில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியத் தொகை இவ்வளவுதான் என்று அறிவித்துள்ளபடி அரசு தருகிறதா என்பதைப் பற்றியெல்லாம் கேளுங்கள். நீங்கள் ஏதோ சம்பந்தம் இல்லாமல்....

திரு. மு. ஜான் வின்சென்ட்: பர்ஸ்ட் குருப்பில் மேத்ஸ் வருகிறது, செகண்ட் குருப்பில் மேத்ஸ் இல்லை. அப்படிப் படிக்கின்ற மாணவர்களுக்கு பின்னால் கல்லூரியில் படிக்கச் செல்லும்போது ஏதும் இடைஞ்சல் வராமல் இருக்குமா? வந்தால் அதைத்தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு அரசு மானியம் அளிக்கும் தொகை எவ்வளவு? மாறுபடுகிறதா இல்லையா என்பது பற்றித்தான் கேள்வி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சேகரித்து தயாரித்து அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர் விடுதி

*வினா எண் 768 திரு. ரா. மார்க்கப்பந்து: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி எந்தவிதமான வசதியும் இல்லாத தனியார் கட்டிடத்தில் இருப்பது தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஆம்.

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி விடுதி கட்டிடம் கட்டுவதற்கென நிதியுதவியளித்து அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். இவ்விடுதிக் கட்டிடம் துரிதமாக இவ்வாண்டே கட்டி முடிப்பதற்கென தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி கட்டிடம் புதிதான இடத்தில் கட்டப்படுமா? அல்லது ஏற்கெனவே உள்ள இடத்தில் கட்டப்படுமா? அல்லது கல்லூரி காம்பவுண்டிங்குள்ளேயே கட்டப்படுமா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதி தற்போது மூன்று தனியார் இடங்களில் இருந்து வருகிறது. தற்போது விடுதி கட்டும் திட்டத்திற்கு 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில்

கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அரசின் பங்காக ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம், பல்கலைக் கழகத்தின் மானியமாக ரூ. 2 இலட்சத்து 40 ஆயிரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரியப்பாடி கிராம அரிசனமக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகள்

*வினா எண். 769 திரு. ப. சந்திரன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் அரியப்பாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு அரசு வீடு கட்ட இடம் கொடுத்தும் அதில் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதை அந்த ஊர் மக்கள் தடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் வந்தவாசி தாலுகா, அரியபாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு இது வரை அரசு மூலம் நிலம் கையகப்படுத்தி வீட்டு மனைகள் வழங்கப்படவில்லை. ஆனால் அந்த ஊர் மக்கள் சர்வே 109 மயானப்புறம்போக்கில் அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதை ஆட்சேபிக்கிறார்கள்.

(ஆ) அந்த நிலம் மயானமாக ஜாதி இந்துக்களும், அரிசனங்களும் உபயோகிப்பதால் அவர்களின் ஆட்சேபணைகள் சரியே. வீடில்லா 19 ஏழை அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை அளிக்கும் கருத்துருவுக்கு 9-2-79-ல் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. மேற்கொண்டு விதி முறைகளின்படி நடவடிக்கைகள் தொடரப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்படும்.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த மயானப் புறம்போக்கிற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. அவர்களுடைய குறைகள் எல்லாம் அந்தப் பகுதியில் அந்த அரிசன மக்கள் வாழ்வார்களானால், அந்தப் பகுதியில் இருந்து வரும் நீர் அங்கே அருகில் உள்ள ஊர் குளத்திற்கு வரும். எனவே அந்தக் குளத்து நீர் குடிப்பதற்கு ஏற்ற நிலை இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தால்தான அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஊரிலே பல கிணறுகள், குடி நீர் கிணறுகள் இருப்பதால், இப்படிப்பட்ட எதிர்ப்பு சொல்ல நியாயம் இல்லை. ஆகவே, அரசு உடனடியாக இதில தலையிட்டு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காரணம் சரியாக இருக்குமானால், நான் நெறியாளரை நேரில் அனுப்பி, அது உண்மை என்று அவர்களிடமிருந்து அறிக்கை வருமானால், அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பட்டா போட்டுத் தர அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

நடுவச்சேரி அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 770—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் குடி தண்ணீர் கிணறு வேண்டுமென 21-3-79 முதல் உண்ணா விரதம் இருக்க முடிவு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) உண்ணாவிரதம் எதுவும் நடக்கவில்லை.

(ஆ) அவினாசி வட்டம், நடுவச்சேரி அரிசன மக்களுக்கு குடிநீர் வசதிக்காக ரூ. 30,000 செலவு மதிப்பீட்டில் ஒரு கிணறு வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் 21-3-79 அன்று உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து இருந்தார்கள். சுதந்திரம் வந்த 32 ஆண்டுகாலத்திற்குப் பிறகும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். சுதந்திரம் வந்தது எப்போது என்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியை ஆரம்பிக்கிறபோதே 5 நிமிடம் எடுத்துக் கொள்வீர்கள் போல் தெரிகிறது. சுருக்கமாகத் துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்த 32 வருஷத்திற்குப் பிறகும் குடிநீர் கேட்டு உண்ணாவிரதம் இருக்க வேண்டிய இந்த அவல நிலையைப் போக்க, அரிசன மக்கள் வாழும் காலனிகள் எல்லாவற்றிலும் குடிநீர் வழங்க சிறப்புத் திட்டம் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒதுக்குகிற நிதியை வைத்துக் கொண்டுதான் சில பல கிராமங்களுக்கு குடி நீர் வசதி செய்து தர முடிகிறது. இங்கே இருக்கிற பிரச்னை

[1979 ஏப்ரல் 21

என்னவென்றால் ஊராட்சி மன்றம், ஒன்றியம் போன்றவைகளும்
எல்லா மக்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரக் கடமைப்பட்டு
இருக்கிறது. அதேபோல் குடிநீர் வடிகால் வாரியமும் அதைச்
செய்து வருகிறது. ஆகவே நான் இது போன்ற பணிக்கு
தனி நிதி ஒதுக்குவதற்கு தற்போது போதுமான நிதி வசதி
இல்லை.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த அவினாசி தாலுக்கா, நடுவச்சேரி கிராமத்திற்கு குடிநீர்
வசதிக்காக ரூ. 30,000 ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனை விரைவாகச்
செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், நிதி
ஒதுக்கவில்லை. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடவடிக்கைகள்
எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 9-50]

திரு. சொ. ந. பழனிச்சாமி : பேரவைத் தலைவரவர்களே,
நடுவச்சேரி அரிசன மக்கள் குடிநீர்ப் பிரச்சினை பற்றி நான்
ஏற்கெனவே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருந்தேன்.
ஆனால் நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதை
ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்த போதிலும் இப்போது
நம்முடைய மாண்புமிகு அம்பிகாபதி கேட்ட கேள்விக்கு நன்றி
தெரிவிப்பதுடன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிச்சாமி
அவர்கள் நேரடியாக பேரவைத்தலைவர் மீது குற்றச்சாட்டுகளை
எழுப்பி கேள்வி கேட்கக் கூடாது. அதை எல்லாம் என்னுடைய
அறையிலே வந்து சொல்லுங்கள்.

திரு. சொ. ந. பழனிச்சாமி : தலைவரவர்களே, அரசு
இது போன்ற பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்துச்
செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் சேலூர்
பக்கம் ஓச்சம்பாளையம் அரிசனக் காலனியில் சுமார் 25 ஆயிரம்
ரூபாய் செலவில் ஆழ் குழாய் கிணறு அமைத்திருக்கிறார்கள்.
அதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நடுவச்சேரி அரிசன
மக்கள் பற்றிய பிரச்சினை. ஆகவே அதைப்பற்றி மட்டும்தான்
கேட்க வேண்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர்
அவர்களே, நடுவச்சேரி குடிதண்ணீர் பிரச்சினை அரசின்
கவனத்தில் இருக்கிறது. துரிதமாக அந்தப் பணியை
முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 21]

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, அவினாசித்
தாலுக்காவில் மட்டும் இந்தப் பிரச்சினை என்பது கிடையாது.
தமிழ்நாடு எங்கும் உள்ள அரிசன மக்கள் தண்ணீருக்காக
கண்ணீர் விடுகிறார்கள் என்பதை அரசு அறியுமா, இன்றைக்கு
சேலம் மாவட்டத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஒரு கட்சியின்
தலைவர். நடுவச்சேரி பிரச்சினை நடந்து கொண்டிருக்கும்போது
சேலத்திற்குப் போகிறீர்களே.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரிசன மக்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட
வில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே
மேலும் நிதி ஒதுக்கப்பட்டு இந்த நடுவச்சேரி திட்டத்திற்கு வரை
படம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சொல்கிறார்கள்.
தண்ணீர் எப்போது கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள்
விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர்
அவர்களே, அதற்கென்று மதிப்பீடு தயாரித்து அனுப்பி இருக்
கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.
அரசு ஆணையிட்ட பின் கிணறு வெட்டித் தண்ணீர் கொடுக்கப்
படும்.

கரும்புக்கு விலை

*வினா எண் 771—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு
வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா.

(அ) கரும்புக்கு ஓர் ஆதாயமான விலை நிர்ணயிக்கக்
கோரி மாநில அரசு, வேளாண்மை விளைபொருள் விலைகள்
குறித்த ஆணைக் குழுவிடமும், மத்திய அரசினிடமும் பரிவுரை
செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இவ்வரசு 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானம் உள்ள
கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூ. 125 விலையாக நிர்ணயிக்க
வேண்டும் என மைய அரசினிடமும், வேளாண்மை விளை
பொருள்களின் விலைகளை நிர்ணயிக்கும் குழுவினிடமும் 78
ஜூலைத் திங்களில் பரிந்துரைத்தது. மேலும், 0·1 சதவீதம்
அதிகமான சர்க்கரை கட்டுமானம் கிடைத்தால் டன் ஒன்றிற்கு
ரூ. 1 கூடுதலாக அளிக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்
பட்டது.

[1979 ஏப்ரல் 21

*வினா எண் 772 திரு செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை சத்து 8·5% இருக்கும் கரும்புக்கு டன் 1-க்கு ரூ.100 கொடுக்க மத்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளவாறு கரும்பு விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது?

(ஆ) 4½ கோடி பழைய பாக்கியையும் வசூல் செய்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ)&(ஆ) : அவையின் முன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிரிடல்

*வினா எண் 773—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் கரும்பு பயிரிடும் பரப்பளவை குறைக்குமாறு மத்திய அரசு மாநில அரசுக்கு அண்மையில் யோசனை கூறி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :

(அ) பத்திரிகைச் செய்தி தவிர வேறு இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, இந்தச் சர்க்கரைச் சத்து 8.5 என்று கணக்கிடுகின்ற நேரத்தில் சர்க்கரை ஆலைகளில் பல தவறுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதைக் கண்காணிக்க அரசு தனியாக ஒரு அதிகாரியை நியமித்து அதைச் சரியான முறையிலே கணக்கிடத் தகுந்த திட்டங்களை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் திறன் என்று சொல்லப்படுகின்ற அந்த சுகர் ரிக்கவரித் தன்மை ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு விதமாக வந்து கொண்டிருக்கிறது என்று விவசாயப் பெருங்குடி மக்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவை நடவடிக்கைகளின் மூலமாக சீர் செய்யப்படும்.

*1062-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 21]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் வங்கிகள் அளிக்கின்ற பணமாகிய சராசரி 153 ரூபாய் ஆலைகளுக்கு அளிக்கப்படாததன் காரணமாக அந்த ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையாகிய 4½ கோடி ரூபாயை கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. வங்கியில் கொடுக்கப்படவில்லை என்பதற்காக அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை என்றால் பிறகு விவசாயிகள் எப்படி உரத்திற்குரிய விலையைக் கொடுப்பார்கள், எப்படி அவர்களிடம் வேலை செய்யக்கூடிய ஆட்களுக்குச் சம்பளம் கொடுப்பார்கள்? ஆகவே வங்கிகள் கொடுக்கவில்லை என்ற சாக்குபோக்கு எல்லாம் சொல்லாமல் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை உடனடியாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டும், ஆகவே அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கம் ஆலைகளுக்குச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் அந்த ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்தக்கூடிய அளவில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட வேண்டிய பாக்கி 4½ கோடி ரூபாய் அல்ல. 68 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பாக்கி ஏற்பட்டதனுடைய காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். மத்திய அரசினுடைய சர்க்கரைக் கொள்கையின் காரணமாகத் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாகக் கட்டுப்பாட்டை நீக்கியதன் காரணமாக சர்க்கரை உற்பத்தி அதிகமாகிவிட்ட காரணத்தால் இவ்வாறு விலை குறைக்கப்பட்டது. அதனால்தான் மார்க்கெட்டிலே நம்முடைய சர்க்கரைக்கு நல்ல விலை கிடைக்காமல் போனதால் இங்கே சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய 20 ஆலைகள் நஷ்டத்தில் ஓட வேண்டிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை சீர்படுத்தப்பட வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலைமையைச் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தந்த ஆலை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்குமே ஒழிய, கொடுக்கக் கூடாது என்பதல்ல. அதன் காரணமாகத் தான் காவிரி சுகர் மில்ஸ்-ல் பாக்கிக் கொடுக்க முடியாமல், நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே ஒரு ரிசிவர் அப்பாயின்ட் செய்யப்பட்டிருக்கிறார். அருணா சர்க்கரை ஆலையிலும் அந்த நிலைமை ஏற்படக் கூடாது என்பதன் காரணமாக அந்த ஆலை பாக்கியைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். நிலைமை இப்போது முன்னேறிக் கொண்டு வருகிறது.

[1979 ஏப்ரல் 21

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது 8.5 சதவிகிதத்திற்கு 1978-79-ம் ஆண்டில் ரூ. 100 கொடுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள், எந்தெந்த சதவிகிதத்திற்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சுகர் ரெகவரி பேசிஸ்-ல் குறைந்தபட்சம் 8.5 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். அதற்குக் குறையாது உள்ள 8.5 சதவிகிதத்தைக் கருத்தில் வைத்து ரூபாய் 100 என்று 1978-79-ம் ஆண்டில் அறுவடை சீசனில் மத்திய அரசு நமக்கு விலை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கரும்பு உற்பத்தியாகும் பரப்பளவு எவ்வளவோ குறைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சங்கடத்தை நிவர்த்திக்க இந்த அரசு மத்திய அரசை ஏதாவது கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-8-78-ல் டில்லியில் நுகர்வோர் சங்கங்களின் ஒருமித்த கழகக் கூட்டத்திற்கு பல மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் தங்கள் கருத்தைக் கூறினார்கள். அப்படிப் பேசும்போது அங்கே இருக்கின்ற அமைச்சர் அவர்கள் இது போன்ற விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று கரும்பு உற்பத்தி செய்கின்ற நிலங்களின் விஸ்தீரணத்தைக் குறைக்கலாம் என்றக் கருத்தை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் உடனடியாகக் குறைத்து விட முடியாது என்கின்ற நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கரும்புக்கு 8.5 சதவிகிதத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் குறைந்த விலை கட்டுப்படியாகாது, ரூ. 125 கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தேவையான உரம், கருவிகள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றின் விலை ஏறி இருக்கிற காரணத்தால் கரும்பிலிருந்து தயார் செய்கின்ற வெல்லத்தின் விலையும் குறைந்திருக்கிற காரணத்தால் அந்த விவசாயிகள் தொடர்ந்து தங்கள் தொழிலைச் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுவதால் கரும்புக்கு விலை ரூ. 125 என்பதற்குப் பதிலாக, ரூபாய் 150 ஏன் உயர்த்தி தரக் கூடாது என்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொண்டு வருகின்ற 125 ரூபாயை அவர்கள் கொடுக்கவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் 150 ரூபாய் கேட்டால் அவர்கள் கொடுப்பார்களா என்ற சூழ்நிலைகளை யெல்லாம் நான் யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, டன் ஒன்றுக்கு 125 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால் 100 ரூபாய் கூடக் கொடுக்காமல் மதுராந்தகத்திலும், வேலூரிலும் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆக அந்தக் குறைந்தபட்ச 100 ரூபாயாவது கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் ரூ. 112.90 வேலூரில் ரூ. 108.20 என்று விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குறைவாக என்று விலை குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குறைவாகக் கொடுத்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த இரண்டு ஆலைகளிலும் குறிப்பிட்ட விலை நிர்ணயித்திருந்தாலும், விவசாயிகளுக்கு அந்த விலையை கொடுப்பதில்லை. இது விவசாயிகளுக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால் நிர்ணயித்த விலையைக் கொடுக்காமல் ஒரு பகுதியை பிடித்துவிட்டு மீதியைத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே அரசு இதைக் கவனித்து முழு விலையையும் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சர்க்கரைக்குப் போதிய விலை இல்லாததால் ஆலையில் முழுத் தொகையையும் கொடுக்க முடியாமல் இருக்கும். கொடுக்கவில்லை என்று சொன்னால் கோடிட்டு இனிமேல் கொடுக்கப் போவதில்லை என்று சொல்லுவதில்லை. பாதியைக் கொடுத்திருந்தாலும் பார்ட் பில்லாகக் கொடுத்திருப்பார்கள், நிலுவையிலுள்ள தொகையை பின்னால் பங்குதாரர்களுக்குக் கொடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு . ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்னைகள்,

அ. மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184—வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்னையை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கேட்டுள்ளார். அதே போன்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களும் அனுமதி கேட்டுள்ளார். அனுமதி வழங்கப் படுகிறது. திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பல நாட்களாக நான் இதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்கு அதற்கான தகவல்களை நான் தயாராகக்கொண்டு வரவில்லை. இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எனக்கு தாங்கள் சொல்லவும் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் உங்களுக்கு அவகாசம் வேண்டும் என்றால், இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்கிறேன்.

ஆ. 'துக்ளக்' பத்திரிகை மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. பேரவையின் 184—வது விதியின கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது. திரு. எஸ். ஆர். இராதா.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 184—வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்கண்ட பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன். 15-4-79 வெளிவந்துள்ள 'துக்ளக்' பத்திரிகையில் தலையங்கத்தில் சட்டமன்ற நடவடிக்கை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அதில் மன்றத்தில் நடக்காததைப்பற்றி எழுதப்பட்டதன் மூலம் மன்றத்தின் உரிமை மீறப்பட்டிருக் கிறது. 7-4-79 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பற்றி களங்கம் கற்பித்தும் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், தலைவர் அவர்களுடைய தீர்ப்பை களங்கப்படுத்துகிற வகை யிலும் பல்வேறு பிரச்னைகளைப்பற்றி அதில் எழுதப்பட்டிருக் கிறது என்பதை நான் தங்களது கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அதில் குறிப்பாக தனிப்பட்ட முறையில் என்னை களங்கப்படுத்துகிற வகையில் நான் அவையில் நடக்கக் கூடாத வகையில் தவறான வகையில் நடந்து கொண்டதாகவும், மிகவும் கேவலமான முறையில் என்னை

தனிப்பட்ட முறையில் தாக்கி எழுதப்பட்டிருக்கிறது. இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர் என்ற முறையில் என்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் அது இந்த அவை யிலுள்ள அத்தனைபேரையும் பாதிக்கும் அளவுக்கு நீங்கள் கருத வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் சில பத்திரிகைகளில் வேண்டு மென்றே திட்டமிட்டு என்னுடைய அரசியல் வாழ்வை கேவலப்படுத்த வேண்டும் என்ற வகையில் எழுதப்பட்டு வந்திருக் கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அப்படி எழுதுவதற்குக் காரணமாக இருந்ததாகச்சொல்லுகின்ற காரணம் கடந்த 10-3-79 அன்று நடைபெற்ற இந்த சில நிகழ்ச்சிகளில் என்னுடைய பெயரையும் சம்பந்தப்படுத்தி என்னைக் களங்கப் படுத்துகின்ற அளவில் எழுதப்பட்டிருக்கிறது. 10-3-79 அன்று இந்த மன்றத்தில் நடைபெற்ற இந்தப் பிரச்னையில் நான் எந்த அளவுக்கு சம்பந்தப்பட்டு இருந்தேன் என்பதையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்ல வேண்டும். விளக்கமாகச் சொல்ல முடியாது. நீங்கள் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இதை முடிப்பதற்கு ஒரு மணி நேரம் ஆகும் போல் தோன்றுகிறது. சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர் களே, 10-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தில் என்னைப்பற்றி எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டதாகச் சொன்ன சில வார்த் தைகள் அன்றைக்கு முரசொலி பத்திரிகையிலும் தினகரன் பத்திரிகையிலும் வெளிவந்தது. அந்த பத்திரிகைகள் மீது நான் உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருந்தேன். தாங் கள் பெருந்தன்மையோடு அந்த பிரச்னையை விட்டுவிடலாம் என்று விட்டுவிட்டீர்கள். ஆனால், பின்னால் அன்று 10—ம் தேதி நடைபெற்றதை காரணமாக வைத்துக்கொண்டு திடீரென்று 29-ம் தேதியன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரி கையும் வேறு ஒரு பத்திரிகையும் ஒரு கட்டுரை எழுதியிருக் கிறது. அந்தக் கட்டுரை எழுதுவதற்கு யார் யார் காரணம் என்று எனக்குத் தெரிந்திருந்தாலும்கூட, வேண்டுமென்றே திட்டமிட்டு என்னைக் களங்கப்படுத்த வேண்டும் என்று முயற்சித் திருக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம் என்பது எனக்கு தெரிந்திருந்தாலும், என்னுடைய அரசியல் வாழ்வில், பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆளாக்கப்பட்டு, இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் கண்ணியமாகவும், மிகுந்த கட்டுப்பாடாகவும் பணியாற்றுகின்ற என்னை— எப்படியும் களங்கப்படுத்த திட்டமிட்டு, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் 10 ஆம் தேதி யன்று கூட்டத் தொடரில் இல்லாத ஒரு பிரச்னை திடீரென்று எழுப்பப்பட்டு, இன்றைக்கு ஒரு பெரிய பூதாகாரமாக சொல்லப் படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை 'துக்ளக்' பத்திரிகை தலையங்கமாக எழுதி, நாடு முழுவதும் என்னைக்

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 ஏப்ரல் 21

களங்கப்படுத்துகின்ற வகையிலே விநியோகம் செய்யப்பட்டிருக் கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், அவைத் தலைவராக இருக்கும் உங்களுடைய நடவடிக்கை பற்றியும் அதிலே கண்டித்து எழுதப்பட்டிருக் கிறது. எனவே, இது அவை உரிமை மீறினதாக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்து, இதை அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் எழுப்பிய பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால், அப்பத்திரிகையின் ஆசிரியருக்கு எழுதிக் கேட்டு, அவர் விளக்கம் பெற்று, பின் என் தீர்ப்பை *அளிக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நீரார் சுரங்கப்பாதை வேலையில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'கோவை மாவட்டம். பொள்ளாச்சி வட்டம், வால்பாறை மலையில் நடைபெற்று வருகிற நீரார் சுரங்கப் பாதை வேலையில் 18 4-1979 ஆம் தேதி பெரும் வெடிவிபத்து ஏற்பட்டு இரண்டு தொழிலாளிகள் இறந்தும். சுமார் 25 தொழிலாளர்கள் கடுமையான காயங்கள் பட்டும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு,

(1) திரு. கே. ரமணி,

(2) திரு. ஆர். வெங்கிடு

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். வெங்கிடு.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பொள்ளாச்சி தாலுகா வால்பாறை பகுதியிலே நீரார் அணைக்கட்டுப் பகுதியில் தொழிலாளர்கள் இந்த சுரங்கப் பகுதியில் வேலை செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே வெடி விபத்து ஏற்பட்டிருக் கிறது. மலையிலே வெடிவைத்து பாறையைத் தகர்க்கக்கூடிய நேரத்திலே, எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாத அளவுக்கு சரியான பாதுகாப்புடன், வெடி வைத்து மேற்கொள்ளக்கூடிய வேலைகளை, ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்ய வேண்டும். அதிகாரிகள் கவனக் குறைவு ஏற்பட்டு, சரியான

*27-4-1979ம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

1979 ஏப்ரல் 21] [திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு]

உஷார் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ளாததால், இந்த வெடிவிபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் இரண்டு தொழிலாளிகள் இறந்திருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் கடுமையாக காயம்பட்டு, ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு, தடுப்பதற்கான அடிப்படையிலே அரசு சரியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் கீழ்நீரார் சுரங்க வழி வேலைகளில், 4 மீட்டர் தூரம் உள்ளே தள்ளி ஒரு வெடி விபத்து, கடந்த 18 ஆம் தேதியல்ல, 17 ஆம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு ஏற்பட்டது. அந்த வெடி விபத்து ஏற்பட்ட தற்குக் காரணம் அங்கே மின்னல் அதிகமாக இருந்த காரணத் தினால் ஏற்பட்டது. வெளியிலே வெடி மருந்துகளை எடுத்து வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில், இந்த மின்னல் களால் அங்கே பொறி ஏற்பட்டு, ஒரு விபத்து ஏற்பட்டது. அதன்காரணமாக, முதலிலே ஒரு குழியிலிருந்து வெடி வெடித்தது. அதற்குப் பின்னாலே, இரண்டு குழிகளிலே தொடர்ந்து வெடி வெடித்தது. அதன்காரணமாக அங்கேயிருந்த இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியைச் சேர்ந்த போர்மேன் பகால்கர் என்பவரும், லோகோ டிரைவராக பணியாற்றி வந்த பிரபு சத்வா என்ற இருவரும் இறந்திருக்கிறார்கள். மேலும் 20-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். காயம் அடைந்தவர்கள் உடனடியாக பக்கத்திலே இருக்கக்கூடிய தனியார் மருத்துவ மனைக்கு கொண்டுபோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். 20 பேர்களிலே 6 பேருக்கு இலேசான காயம் இருந்த காரணத்தினாலே, அவர்கள் எல்லாம் சிகிச்சை பெற்று, வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மேலும், இந்த வெடி விபத்து ஏற்பட்டது தெரிந்து, பொதுப் பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஸ்தலத்திற்கு சென்று, காயமுற்றவர் களுக்கு தக்க மருத்துவ சிகிச்சை அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-10]

அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆப் லேபர் விரைந்து சென்றிருக் கிறார். இறந்தவர்கள் குடும்பத்திற்கு இந்தத் துக்க செய்தி உடனடியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் அங்கு போர்மனாகப் பணியாற்றிய பகால்கர் என்பவர் மனைவி பூனாவில் இருந்து வந்து விட்டார்கள் என்று தெரிகிறது, லோகோ டிரைவராகப் பணியாற்றிய பிரபு சத்வா என்பவர் திருமணமாகாதவர். அவருடைய வீட்டிக்கும் தகவல் அனுப்பப் பட்டிருக்கிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 21

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல் அதிகாரிகள்
கவனக் குறைவால் இந்த வெடி விபத்து ஏற்படவில்லை
என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால்
அவையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க
வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்
மைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு
பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க
வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி
மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை தியாகராநகரில் ஏற்பட்டதீ விபத்துக் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. சிவ
சாமி, பொ. உத்திராபதி, ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன்,
ஏ. ஆர். மாரிமுத்து, ஓ. சோ. வேலுசாமி, சோ. அழகர்சாமி,
து. புருடோத்தமன், ஆர். இ. சந்திரன் ஜெயபால், சின்னசேலம்
மா. சுப்பிரமணியம், சேலம் மூ. ஆறுமுகம் ஆகியோர் 41வது
விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்
வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு
வந்திருக்கிறார்கள். திரு. ஜே. ஜேம்ஸ்....

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே,
சென்னை தியாகராயநகர் சிவசைலம் தெருவில் 16-3-1979
அன்று ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் அதனால் விளைந்துள்ள
உயிரிழப்பு, சொத்திழப்பு பற்றியுமான அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் : (அமைச்சரின் பேரவை
செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, 16-3-79 மாலை
சுமார் 2.30 மணிக்கு சென்னை தியாகராயநகர் பகுதியைச்
சார்ந்த, சிவசைலம் பிள்ளை, மற்றும் சோலையப்ப நாயக்கன்
தெருவில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. விபத்து நடந்த இடத்தில்
போடப்பட்டுள்ள குடிசைகள், திரு. கபாலி என்பவருக்குச்
சொந்தமானவை. அவர் குடிசைகள் கட்டி வாடகைக்கு
விட்டிருந்தார். குடிசைகள் போடப்பட்டுள்ள நிலம், வேறு
நபர்களுக்குச் சொந்தமானது. இந்த விபத்து ஒரு குடிசையின்
எரியும் அடுப்பிலிருந்து வந்த தீப்பொறியினால் ஏற்பட்டது
எனத் தெரிகிறது. தீயணைக்கும் படையினர் உடனே வந்து

1979 ஏப்ரல் 21] [திரு. பி. முசிறிப்புத்தன்]

தீயை அணைத்தனர். இத் தீ விபத்தில் 44 (நாற்பத்து நான்கு)
குடியிருப்பு குடிசைகள் எரிந்து சாம்பலாயின. மொத்தப் பொருள்
இழப்பு 44,470 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு
குடிசையில் 70 வயதான, திருமதி அமிர்தம்மாள் என்பவர்
மூச்சுத் திணறி அந்த இடத்திலேயே இறந்து விட்டார். அவர்
கண் தெரியாதவர். அவரை அவருடைய மகள், திருமதி
மணியம்மாள் (வயது 35) என்பவர் காப்பாற்றி வந்தார்.
மாநகராட்சி அதிகாரிகள் இத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு தங்க இடமும், சாப்பிட உணவுப் பொட்டலங்
களும் வழங்கியுள்ளார்கள். 17-3-79 அன்று வருவாய்த்துறை
அமைச்சர், மாவட்டாட்சியருடன் பாதிக்கப்பட்ட இடத்தைப்
பார்த்து, விசாரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல்
கூறினார். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு
வேட்டி, ஒரு புடவை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கப்
பட்டது.

திரு. சோ. அழகர்சாமி : கொடுத்த விளக்கத்தில் 44
குடிசைகள் எரிந்து விட்டதாகவும் வயதான தாய் இறந்த
தாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இறந்த அந்தத்
தாயின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுத்ததாகச் சொல்ல
வில்லை. சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு
5 கிலோ அரிசியும் 100 ரூபாயும் கொடுத்திருப்பதாகச் சொன்
னார்கள். இது திரும்ப குடிசை கட்டுவதற்குப் போதுமானது
அல்ல. தீப் பிடித்து பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு
அதிகமான உதவி செய்ய வேண்டும். ஐந்து கிலோ அரிசிக்குப்
பதிலாக மற்ற வேளைகளில் 50 கிலோ அரிசி கொடுத்தது
போல் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த விபத்திற்கும், புயல், வெள்ளம்
போன்ற நிலைமைகளால் பாதிக்கப்படுவதற்கும் வேறுபாடு
இருக்கிறது. ஏனென்றால் இன்று தனிப்பட்டவர்கள் வீடுகளைக்
கட்டி வாடகைக்குக் கொடுத்து அதிலே லாபம் சம்பாதிக்கும்
நிலைமை இருக்கும்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது
என்பது எந்த அரசாலும் இயலாத காரியமாகும். அதை
மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள் என்று
கருதுகிறேன். 5 கிலோவுக்கு மேல் தேவைப்படுகிற அவசியம்
இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டால் அதைப்பற்றி அரசு
பரிசீலிக்கும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்
களே, இந்தக் குடிசைகள் எல்லாம் கபாலி என்பவருக்குச்
சொந்தம் என்று சொன்னார்கள். கபாலி யார் என்பதைத்
தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். இந்த விபத்துக்கள் ஏற்படு
கின்றபோது தீயிலே சிக்கி சிலர் இறந்துவிடுகிறார்கள். இறந்

தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண
நிதியிலிருந்து இனிமேலாவது உதவி வழங்குவதற்கு ஏற்பாடு
செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, இறந்தவருடைய வருமானத்தைக்
கொண்டுதான் அந்தக் குடும்பங்களில் உள்ளவர்கள் பிழைக்
கிறார்கள், வாழ்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்றால்
நிச்சயமாக அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த
தியாகராயநகர் பகுதி மட்டும் அல்ல, சென்னைப் பெருநகரில்
பல இடங்களிலே இம்மாதிரித் தீவிபத்துக்கள் ஏற்படுகின்றன,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் குடிசைகளை ஒழிப்பதற்கு
வீடுகள் கட்டுவதற்கும் ஒருபக்கம் நடவடிக்கை எடுக்கிறார்கள்.
அதே நேரத்திலே வேறு பகுதிகளில் புதிய புதிய குடிசைகள்
ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன, அதைத் தடுக்க அரசு
தீவிர நடவடிக்கை எடுக்குமா? அதன்மூலம் தீவிபத்துக்கள்
ஏற்படுவதைத் தவிர்க்குமா? அதோடு புதிய குடிசைகளை
ரொம்ப நெருக்கமாகப் போடுவதால் ஒருபகுதி பற்றிக்
கொண்டால் மக்கள் வெளியேறுவதற்கு முடியாத நிலைமையில்
குறைந்த இடைவெளிதான் இருக்கிறது, 100 ரூபாய்
கொடுப்பது என்பது இன்றைக்கு இருக்கிற விலைவாசி நிலை
மையில் போதுமா? அதை அதிகரிக்கவேண்டும் 5 கிலோ
அரிசி கொடுக்கிறார்கள் அவர்கள் உடைமைகளையும் பொருட்
களையும் பணத்தையும் இழந்துவிட்ட நிலையில் நிர்க்கதியாக
நிற்கிற நிலைமையில் 5 கிலோ அரிசி போதுமா? தீவிபத்துக்
களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுக்காக குறைந்தது
500 ரூபாய் உதவித் தொகையும் இம்மாதிரி புதிய குடிசைகள்
ஏற்படுத்துவதால் தீவிபத்துக்கள் ஏற்படுவதால் அதைத்
தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கும்
அடிப்படை கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் நான்
அதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. 100 ரூபாய்
போதுமா என்பதிலே இந்தக் கேள்வியோடு அரசும் உடன்
பாடான நிலையில் இருக்கிறது. அரிசி கொடுப்பது அவர்
களுடைய மறுவாழ்விற்காக இல்லை, பசியைத் தீர்ப்பதற்காக.
அது போதவில்லை என்ற நிலைமை இருந்தால் அரசு
பரிசீலிக்கும், அவர்கள் உடைமைகளை இழந்து இருந்தால்
அரசு பரிசீலிக்கும்.

ஆ. கள்ளக்குறிச்சியில் குடிநீர் தட்டுபாடு குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே,
'தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி பேருராட்சிப்
பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் அங்கு நிலவும் பதட்ட
நிலை குறித்து' ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே,
கள்ளக்குறிச்சி பேரூராட்சியில் தற்போது கோமுகி
ஆற்றின் அடித்தள நீர் எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம்
செய்யப்பட்டு வருகின்றது. தற்போது நீர் மட்டம் குறைந்து
போவதால் தேவைப்படும் குடிநீர் கிடைக்கவில்லை. ஆகவே
தற்போது இருக்கும் நீர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும்
பொருட்டு மணிமுத்தாறு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவது
சம்பந்தப்பட்ட ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன.
ஆய்வு வேலைகள் முடிந்த பின்னர் உத்தேச மதிப்பீடு
தயாரிக்கப்பட்டு அரசு ஆட்சி ஒப்புதல் பெற தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியத்தால் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அரசு
ஒப்புதல் பெற்ற பின்னர் முறைப்படி வேலைகளைச்செயல்படுத்த
ஆவன செய்யப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே,
கள்ளக்குறிச்சிப் பகுதியிலேயும் சின்னசேலம் பகுதியிலேயும்,
எவ்வளவுதான் தமிழ்நாட்டிலே வெள்ளம் ஏற்பட்டாலும்
தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது, ஆய்வு நடந்து
கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.
சென்ற ஆண்டும் இதே பிரச்சினையை நான் எழுப்பியபோது
ஆய்வு நடப்பதாகத் தான் அறிக்கை இங்கே கொடுக்கப்பட்டது.
எனவே ஆய்வை துரிதமாக முடித்து விரைவிலே ஏற்படுத்த
அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு உடனடியாக
அதற்கு அங்கீகாரம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர்
அவர்களே, குடிதண்ணீர் கொடுப்பதில் உள்ள ஒரு முக்கியமான
பிரச்சினையை நான் இந்த நேரத்திலே சொல்வது முக்கியம்.
உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் முக்கியம்
என்று சொல்வார்கள். முக்கியமான ஒன்றைவிட்டு விட்டார்கள்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்தபிறகு தான்
அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள், குடிக்கத்
தண்ணீர் என்பதையும் சேர்த்திருக்கிறார்கள், உண்ண உணவும்
இருக்க இடமும், உடுக்க உடையும் அதோடு குடிக்க நீரும்
கொடுக்கப்பட வேண்டும். உண்ண உணவு முக்கியம், உணவு
இல்லாமல் இருக்க முடியும், ஆனால் குடிக்கத் தண்ணீர்
இல்லாமல் இருக்க முடியாது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 21
[முற்பகல் 10-20]

எனவே, 4. 5 நாட்களுக்குக் கூட உண்ணாவிரதம் இருந்து
விட முடியும். உண்ணாவிரதம் இருப்பவர்கள் கூட, குடி
தண்ணீர் with a pinch of salt குடித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.
எனவே, இந்த மூன்றுக்கு முன்னால், தண்ணீர் கொடுக்க
வேண்டுமென்று புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள
அரசு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கு என்ன
என்ன புது எதிர்ப்புகள் வருகின்றன என்பதைப் பார்க்கிறோம்.
ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம். ஆற்றிலிருந்து தண்ணீர்
எடுத்தால், பக்கத்திலே இருக்கின்ற தென்னை மாய் பாதிக்
கிறது என்றெல்லாம் புகார் வருகிறது. எனவே, இதையெல்
லாம் பார்த்து, மக்களிடமிருந்து எதிர்ப்பு வராமலே—குடி
தண்ணீர் எடுத்தால், நீர்ப்பாசனம் பாதிக்கப்படுகிறது என்று
சொல்வார்களே, அந்த மாதிரி பாதிப்பு ஏற்படாமலிருக்க
ஆய்வு செய்வதை மிக கவனமாகச் செய்வதால், தாமதம்
ஆகிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்
கொள்வார்கள் என்று கருதி' இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்
படுத்தி, தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரையும் நான்
கேட்டுக்கொள்கிறேன்,

குடிதண்ணீர்தான் முக்கியம். எனவே, அரசு கிராமக் குடி
தண்ணீருக்காக மட்டும் ரூ, 16 கோடி ஒதுக்கியிருக்கிறது—ஒதுக்கி
யிருக்கிறோம். அந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி
நோத்தில் அதையெல்லாம் சொல்ல அனுமதிக்கமாட்டீர்கள்.
இருந்தாலும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பொது
மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். குடி தண்ணீர் திட்டங்
களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்ய வேண்டும்.

திரு. சேலம் மு, ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,
கள்ளக்குறிச்சி மக்கள் இதற்கு எந்தவிதமான எதிர்ப்பையும்
தெரிவிக்கமாட்டார்கள். அவர்கள் அதற்கு வரவேற்பு
தருவார்கள். எனவே, புரட்சித் தலைவர் என்னுடைய
திருமணத்திற்கு வரும்போதே அதற்கான கால்கோள் விழா
நடைபெறுவதாக இருந்தது. ஆனால், நடைபெறவில்லை.
எனவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, முதலமைச்சர்
திருக்கரங்களால் கால்கோள் விழா நடத்தி, திட்டத்தை நிறை
வேற்ற அமைச்சரவர்கள் உறுதி தருவார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை
வரவர்களே, இந்த நல்ல உறுதிமொழி கிடைத்து விட்டபடியால்
இன்றே சூப்பரின்டென்டிங் இன்ஜினியருக்கு டெலிஃபோன்
செய்து, இந்த வேலையைத் துரிதப்படுத்தும்படி நான் கேட்டுக்
கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 21]

5. அறிக்கை அளித்தல்

உரிமைக் குழுவின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து உரிமைக் குழுவின்
அறிக்கைகளை, பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு
அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(1) 28-3-1978-ஆம் தேதியன்று வெளிநடப்புச் செய்யும்
பொழுது 'பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பினை'
எதிர்த்து பேரவையில் குரலெழுப்பிய திரு. துரை
முருகன் அவர்கள் மீதான அவையுரிமை வழக்கு.

(2) திரு. துரைமுருகன் அவர்கள் 30-3-1978 ஆம் நாளன்று
சில பெயர்கள் பொறிக்கப்பெற்ற இரண்டு அலுமினியத்
தட்டுக்களைப் பேரவையில் காண்பித்தது தொடர்பான
உரிமை மீறல் வழக்கு ஆகியவை குறித்த பேரவையின்
அவை உரிமைக்குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு
அளிக்கிறேன்.

(6) ஒழுங்குப் பிரச்சினை:

மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட விளக்கக் குறிப்புகள்
முன் கூட்டியே வழங்கப்படாமை குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: பாய்ண்ட் ஆப் ஆர்டர்.
தொழில் சம்பந்தமான மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட
புத்தகங்கள்—மற்றதெல்லாம் 2 நாளைக்கு, 3 நாளைக்கு முன்ன
தாக கொடுக்கப்பெறும். படிக்கலாம் என்று காத்திருந்தேன்.
நேற்று இரவு 10 மணி வரைக்கும் வரவில்லை. இரவு 11 மணிக்கு
என்னுடைய அறையிலே இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்த
மான விளக்கக் குறிப்புகள் வந்தன. அதுவும் பெரிய புத்தங்கள்.
முதல் நாளே வந்திருக்க வேண்டும். அல்லது. நேற்று வந்திருக்
கிறது என்று சொன்னாலும், மாலை 5 மணிக்கு முன்னாலே
கொடுத்திருக்கலாம். தலைவர் அவர்கள் இதற்கு முன்னாலே
சொல்லி இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு முன்னாலே கொடுக்கப்
படும் என்று, ஆனால், இதில் அப்படிக் கொடுக்கவில்லை. ஆகவே,
எப்படி படித்து, விவாதிப்பது என்பதைத் தலைவர்கள் சொல்ல
வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஒரு புத்தகம்
மட்டும் 323 பக்கங்கள் அடங்கிய பெரிய புத்தகம். இதில் பல
வரலாறுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரு தடவை
யாவது படிக்க வேண்டும் என்றால், எவ்வளவு நேரம் வேண்டு
மென்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளைக்கு முன்னாலே
கொடுத்தாலும், 323 பக்கங்களைப் படிக்க முடியாது,

[1979 ஏப்ரல் 21

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது விவாதத்திற்கு வந்திருக்கும் பொழுது, அவற்றைப் படிக்காமலே, இங்கே விவாதித்தால், உண்மையிலேயே அது எந்த நிலையிலே இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, இனிமேலாவது, இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்வதுதான், தாங்கள் எங்களுக்கு அளிக்கின்ற பாதுகாப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிச்சயமாக, இது குறித்து விசாரித்து, எதிர்காலத்தில் இவ்வாறு இல்லாமலிருக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

(7) வரவு-செலவுத் திட்டம், 1979-80 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண்—24: தொழில்கள்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:—

"மானியக் கோரிக்கை எண் 24— தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10, 72, 53, 000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எஸ். சதாசிவம்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் அரவக் குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குள், வெங்கைகற்கள் ஏராளமாக எடுக்கப்பட்டு, வெளி மாகாணங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்புவதைத் தடுத்து அப் பகுதியிலே ஒரு தொழிற்சாலை அமைப்பதைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண்—24 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10, 72, 53, 000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. என். பழனிவேல்; தலைவர் அவர்களே, பழனி வட்டம் நரிக்கல்பட்டிப் பகுதியில் நிரந்தரத் தொழிற்சாலை எதுவுமில்லாததால் அப்பகுதியில் அரசுத் துறை மூலம் நிரந்தர தொழில் மையம் ஏற்படுத்தித் தர வேண்டியது குறித்து விவாதிக்க—

1979 ஏப்ரல் 21]

"மானியக் கேரரிக்கை எண்—24 தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,72,53,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே கொள்கை பற்றி விவாதிக்க —

மானியக் கோரிக்கை எண் 24— தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.10,72,53,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 24 தொழிலகள்— என்ற நலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,72,53,000 இல் ந. 100 குறைக்க வேண்டும்"

ன்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்—51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,39,39,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் தலைவர் அவர்களே, பாபநாசம் தாலுக்காவில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதன் அவசியம் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண்—51 தொழில் வளர்ச்சி மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,39,39,000 இல் ரூ: 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர்
அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 51— தொழில் வளர்ச்சி
மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ. 5,39,39,000 இல் ரூ. 100குறைக்க வேண்டும்''
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, கொள்கை
பற்றி விவாதிக்க

''மானியக் கோரிக்கை எண்—51 தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ. 5,39,39,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''
என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

THIRU SALEM M. ARUMUGAM: Sir, t discus the failure
of the Government to nationalise major Industries in this State,
I move —

''That the allotment of Rs. 5,39,39,000 under Demand No. 51,
Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை
களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்
திற்காக வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்
தலைவர் அவர்களே இந்த மானியக் கோரிக்கைகளின்
மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் அவைமுன் வைக்கப்
பெற்றிருக்கின்றன. அவற்றில் இருப்பதை நான் படித்ததாக
குறிப்பேட்டில் ஏற்றுக்கொண்டு உறுப்பினர்கள் தங்கள்
கருத்தை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரிக்கை
எண்—24, 51ஐயும் தொழில், தொழில் வளர்ச்சிக் குறித்த
மூலதனச் செலவு என்கிற மானியக் கோரிக்கைகளிலே என்னு
டைய கட்சியினுடைய சார்பிலே பேசுவதற்கு அனுமதித்ததற்காக
முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவிக்க கடமைப்
பட்டிருக்கிறேன். அதன்மீது என்னுடைய கருத்துக்களை கூறவும்
கடமைப்பட்டிருக்கிறேன்.

[1062 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

குறிப்பாக இன்றையதினம் தமிழ்நாடு தொழில் வளத்திலே
முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக கருதப்பட்டிருக்கிற சூழ்
நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு காரணம்
மாபெரும் தலைவர் காமராசர்தான் என்று சொல்வதிலே
பெருமை அடைகிறேன். அவருடைய அமைச்சரவையிலே
தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன்
அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்
என்று தெரியித்துக் சொள்ளகடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு மிக முக்கியமான காரணம் தமிழகத்திலே இருக்கிற
மிகப் பெரிய தொழில்கள் எல்லாம் பாரத் ஹெவி எலக்ட்ரீகல்ஸ்,
சேலம் உருக்காலை, மற்றும் சில பெரிய தொழிற்சாலைகள்
எல்லாம் தலைவர் காமராசர் முதலமைச்சராக இருந்தகாலத்திலே
தமிழகத்திலே நிறுவப்பட்டது. அவருடைய சீரிய தலைமையிலே,
ஒழுக்கமான தலைமையிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து
போராடிபெற்றவைகள் இந்தத் தொழிற் சாலைகள். அவருக்குப்
பின்னால் தமிழக அரசின் ஆட்சியிலே மாறுதல் ஏற்பட்டதன்
காரணமாகஎந்தப் புதிய தொழில்களும் தமிழகத்திலே ஏற்பட
வில்லை. அதற்குப்பின்னால் வந்த ஆட்சியிலே இருந்த தொழில்
அமைச்சர்களோ அல்லது அமைச்சரோ அவர்களுக்குத் தெரிந்தவர்
களுக்கோ அல்லது உறவினர்களுக்கோ பயன் கிடைக்க வேண்டும்
என்பதற்காக பல கிராமங்களிலே தொழில்களை நிறுவிவிட்டு
இப்போது அங்கேயெல்லாம் கச்சாப் பொருள் கிடைக்காமல்
மூலப் பொருள் கிடைக்காமல் தொழில்கள் முடங்கிக்கிடக்கின்ற
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக திருப்பத்தூர் வட்டாரத்திலே இருக்கிற மிகப்
பெரிய தொழிற்சாலை ஒன்று இன்றையதினம் கச்சாப் பொருள்
இல்லாமல், மூலப் பொருள் இல்லாமல் மூடப்பட்டிருக்கிறது,
அவர்கள் பாரத் ஹெவி எல்க்ட்ரிகல்ஸ்ஸில் இருந்து காண்டி
ராக்ட் பெற்று தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க
வேண்டிய அவலமான நிலைமையில் அந்தத் தொழிற்சாலை
நடந்துக் கொண்டிருக்கிறது.

எந்தெந்தப் பகுதியில் மூலப் பொருள் கிடைக்கும் கச்சாப்
பொருள் கிடைக்கும்என்று பார்த்து அந்த நோக்கத்தோடு காரியங்
களை ஆற்றினால் தமிழகத்தில் தொழில் துறையில் முன்
னேற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கும். திருப்பத்தூர் பகுதியிலே
ஒரு டயர் பேக்டரியை உருவாக்க வேண்டும் என்று சொல்லி
யிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் அப்படி உருவாக்க
வேண்டும் என்ற எண்ணம் இருப்பவர்ளாக இருந்தால் கன்யா
குமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் அந்த டயர்
பேக்டரியை ரப்பர் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும்.
ஆரம்பித்தார்களா இல்லை.

அல்லது ரப்பர் பாக்டரியை ஆரம்பித்தார். ஆனால் அது போன்ற சில காரியங்களை, ஏதோ தங்களுடைய தொகுதியில், தங்களுடைய மாவட்டத்தில் தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்ற குறுகிய நோக்கில், செய்து கொண்டு இருந்தார்களே தவிர, பரந்த மனோபாவத்தில் தமிழ்நாட்டில் தொழில்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருந்து இருக்குமானால், தமிழ்நாட்டில் எங்கே தேவை இருக்கிறதோ, எங்கே மூலப்பொருள்கள் அதிகமாக கிடைக்கிறதோ, எங்கே கூலியாட்கள் குறைவான ஊதியத்திற்குக் கிடைக்கிறார்களோ அங்கே தொழில்கள் ஆரம்பித்து இருக்கவேண்டும். அப்படிப் பட்ட தவறுகள் இன்றையதினமும் தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கின்றன என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை ஆரம்பித்ததற்கு காமராஜர் அவர்களுக்குத்தான் தமிழ்நாட்டு மக்கள் நன்றி சொல்லவேண்டும். இந்த அரசாங்கமும் காமராஜர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறது. யுகோஸ்லோ யாவில் இருந்து வந்த வல்லுநர்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் அந்த தொழிற்சாலை ஆரம்பிக்க லாயக்கு இல்லை என்று சொன்ன நேரத்தில், திருச்சியில் திருவெறும்பூரில் இருக்கிற பகுதியில் அதை ஆரம்பிக்கலாம், காவிரி நீர் வரும். என்று சொல்லி காண்பித்தார்கள். அந்த இடத்தை அவர்கள் சென்று பார்த்து விட்டு, அந்த திருவெறும்பூரைப்போல் இந்தியாவிலேயே எங்கும் இடம் இல்லை என்று சொல்லி அந்த இடத்திலேயே ஆரம்பிக்கலாம் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார்கள். அதன் காரணமாக இன்றைக்கு ஆயிரக்கணக்கான பேருக்கு வேலை, அன்னிய செலவாணி ஏராளம், திருச்சி நகரமே அதன் காரணமாக ஒரு பொலிவைப் பெற்று வளர்ந்து வருகிறது என்று பெருமைப்படுகிறேன்.

சிறு தொழில் மையம் ஆரம்பிக்கும் திட்டம் அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் ஏனோ தெரிய வில்லை தமிழகத்தில் அந்த திட்டத்தை சரிவர ஆரம்பிக்க வில்லை. அதிகாரிகள் எங்கே அந்தத் திட்டத்தை செயல்படுத் தினால் நல்ல பலன் கிடைக்கும் என்று எண்ணி அந்த முறையில் செயல்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன். மாவட்ட மையத்திற்கு தேவைப்படும் அதிகாரிகளை வெளிச்சந்தையில் மாடுவாங்குவது போல் செய்யாமல். நல்ல திறமைமிக்கவர்களை, அதில் ஆர்வம் உள்ளவர்களைப்போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெறும் அதிகாரிகளை போட்டு விட்டால் மட்டும் போதாது. ஆகவே, அந்த முறையில் சிறு தொழில்களை ஊக்குவிக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் ஆரம்பிப்பதில் இருந்த சட்டங்களில் இருந்த கஷ்டங்களைக் குறைத்து ஒரு திட்டத்தை உருவாக்கி அறிவித்து இருப்பது பாரட்டுக்குரிய ஒன்றாகும். குறிப்பாக கடந்த காலத்தில் ஒரு உரிமம் ஒருவன் வாங்கவேண்டுமானால் அவர் நடையாக நடந்து ஒரு இரண்டாண்டு காலம் பல்வேறு அலுவலங்களுக்குச் சென்றால்தான் வாங்க முடியும். அதைப் போக்கும்வகையில், பஞ்சாயத்துகளோ, பஞ்சாயத்து ஒன்றியமோ விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவான ஆணை பிறப்பிக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட தொழில் மையத்தின் மேலாளரையும், தொழிற்சாலை ஆய்வாளரையும், மாவட்ட சுகாதார அதிகாரியையும். கோட்ட வளர்ச்சி அதிகாரிகளையும், கொண்ட ஒரு குழு நிர்மாணிக்கப்பட்டு அந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி நிலுவையில் உள்ள எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலித்து தேவையான உரிமங்கள் வழங்குவதற்கு வழி வகை செய்யும் என்று இந்தக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. இது திட்டமாக இருந்தால் போதாது. அதைச் செயல்படுத்த முன் வரவேண்டும். அப்படிச்செய்தால் தான் இந்த 3 ஆண்டுகாலத்திற்குள் தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திய பெருமை உங்களுக்கு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி இல்லை என்று சொன்னால் ஏதோ அதிகாரிகள் வந்து செல்வது போல், 5 ஆண்டுகாலம் வந்தோம், ஆட்சி செய்தோம் என்ற நிலைதான் ஏற்படும். அப்படி 5 ஆண்டு காலத்திற்கு வந்திருந்துவிட்டுப் போவது என்றால் அதில் பெருமை அல்ல. 5 ஆண்டுகாலத்திலே இவ்வளவு தொழில் உற்பத்தியைப் பெருக்கினோம் என்ற அளவில் பெயர் இருக்க வேண்டும்.

அடுத்ததாக மின் இணைப்பைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. மின் இணைப்பிலே நீங்கள் சில சௌகரியங்கள் செய்து கொடுத்தாலும் கூட நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மின் இணைப்பைப் பொறுத்தவரையில் அங்கங்கே இருக்கக் கூடிய சில அதிகாரிகள் அனுமதி வழங்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமை எப்படி இருக்கிறது. சாதாரணத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலைக்கு வருவதற்கு முன்பே மின் துண்டிப்பு இருக்கும் என்று சொல்வதில்லை. தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் சென்று வேலையை ஆரம்பித்த பிறகு மின் துண்டிப்பு செய்யப்படுகிறது. இதன் காரணத்தால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற சம்பளத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே தொழிற்சாலைகளில் மின் துண்டிப்பு செய்வதால் தொழிலாளிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். முதலாளிகள் பாதிக்கப்படுவதில்லை.

[திரு. நா. சுந்தரராஜ்] [1979 ஏப்ரல் 21

அதே போல கெமிக்கல் தொழிற்சாலைகள். கெமிக்கல் தொழிற்சாலைகளில் உற்பத்தி ஆகின்ற நேரத்தில் மின்சாரம் துண்டிப்பு செய்யப்படுகிறது. அதனால் அங்கே செய்து கொண்டிருந்த வேலை அத்தனையும் அப்படியே நிறுத்தப்பட்டு விடுகிறது. இதனால் பல பொருட்கள் வீணாகப் போய்விடுகின்றன. ஆகவே அங்கே உற்பத்தி பாதிக்கப்படுகிறது. துண்டிப்புசெய்யப்படவேண்டிய நேரத்திலே நம்மால் கட்டுப படுத்த முடியாது என்றாலும் மின் துண்டிப்பு வரப்போகின்ற நிலைமை ஏற்படும் என்று தெரிந்த உடன் முன் அறிவிப்பு கொடுத்து விடடே வண்டும். அப்படிக் கொடுக்கப்பட்டால் முன் எச்சரிக்கையாக இருந்து அதற்குத் தகுந்தாற்போல தொழிலதிபர்கள் தங்கள் பணி முறைகளை அமைத்துக் கொள்வார்கள். இப்போது செய்யப்படுகின்ற மின் துண்டிப்பால் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழில் அதிபர்கள் தொழிற் சாலைகளைத் துவங்குவதற்கே பயப்படுகிறார்கள். அவர்கள் நம்பிக்கையோடு தொழிற் சாலைகளைத் துவங்க முன்வருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் 1980-ம் ஆண்டிலே குறைந்தது ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கடுத்த கட்டமாக 40 ஆயிரம் பேர்கள் தீப்பெட்டித் தொழிலிலே ஈடுபடுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு தொழில்களில் மட்டும் அதிகமான நபர்கள் ஈடுபடுவார்கள் என்று சொன்னால் மற்ற திட்டங்கள் எப்படி ஏற்படப்போகிறது என்பது தெரியவில்லை: இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்களில் தொழில் மையங்களை ஏற்படுத்தி அதிகமான தொழில்களை ஏற்படுத்தி, அதிகமானபேர் பணிபுரிகிற வகையிலே திட்டங்களை அமைக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும். அப்படி இல்லாமல், ஏதோ படித்துப் பட்டம் பெற்றுவிட்ட பட்டதாரிகளுக்கு மாதம் 20 ரூபாய், 50 ரூபாய் என்றெல்லாம் கொடுத்துவிட்டால் பிரச் சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. ஆகவே, தொழில் பெரு கினால் தான் தமிழ்நாட்டில் ஒரு தொழில் மறுமலர்ச்சி ஏற்படுத் தினோம் என்று சொல்ல முடியும்.

இன்றையதினம் பஞ்சாப் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் தொழில் வளர்ச்சியும், விவாசய வளர்ச்சியும் அதிகரித்திருக் கிறது. அதற்கெல்லாம் காரணம் அன்றைய முதலமைச்சர் சர்தார் கெய்ரான் அவர்கள் சட்டங்களைப் பார்க்காமல், வேறு எதையும் பார்க்காமல் தீவிரமான முறையிலே திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அவர் தவறு செய்தார் என்ற ஒரு பெயர் இருந்தாலும் கூட பாராட்டத் தகுந்த அளவிலே தொழில்களைப் பெருக்கினார். அதனைப் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள் கூடப் பாராட்டினார்கள். மேலும்,

1979 ஏப்ரல் 21] [திரு. நா. சுந்தரராஜ்]

''கெய்ரான் போன்ற மனிதன் பஞ்சாபிலே பிறக்காமல் இருந் திருந்தால் பஞ்சாப் மிக மிகப் பின்தங்கிய மாநிலமாக மாறி இருக்குமே தவிர இவ்வளவு பெருமைப்படக்கூடிய நிலையில் இருக்க முடியாது'' என்று அங்கே உள்ள மக்கள் பேசக்கூடிய நிலை இருக்கின்றது. அந்த அளவிற்கு இங்கே திட்டங்கள் போடப்படவேண்டும். இரண்டாண்டு காலம் முடிந்துவிட்டது. இன்னும் 2½ ஆண்டு அல்லது 3 ஆண்டுகள் இருக்கின்றன. அதற்குள் எப்படித் திட்டங்களைத் தீட்டி செயல்படப் போகி றார்களோ என்ற அய்யப்பாடு இருக்கிறது. ஆகவே சீக்கிர மாகத் திட்டங்களைத் தீட்டுங்கள். தயவு செய்து அதிலே தனி அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தொழில் வளம் பெருக வேண்டும் என்று சொன்னால் அதிக அக்கறை செலுத்துங்கள். மத்திய அரசினுடைய கொள்கையை எதிர்பார்க்காதீர்கள். உங்களுக்கென்று தனிக் கொள்கையை அமைத்துக்கொள்ளுங்கள். மத்திய அரசின் தொழில் கொள்கையைத்தான் பார்க்கின்றோமே எப்படிப்பட்ட பின்தங்கியக் கொள்கை என்று. கொக்கோ கோலா நிறுவனத்தைப்பொறுத்தவரையில் எடுத்த முடிவு, பெல் கம்பெனியை சீமென் நிறுவனத்தோடு இணைத்தமை, ஜாக்கு வார் விமானம் வாங்கியது போன்றவற்றில் எல்லாம் தான் மத்திய அரசினுடைய கொள்கைதான் தெரிகிறதே. கொக்கோ கோலா நிறுவனத்தாரிடம் மத்திய அரசு இரண்டு குறிப்புக்களைக் கொடுத்தது. அதாவது பங்கு தரவேண்டும் என்றும் கொக்கோ கோலா தயாரிப்பதற்குரிய பொருட்கள் அதாவது கண்டென்ட்ஸ் என்ன என்றும் கேட்டார்கள். அதற்கு அவர்கள் பங்கு வேண்டும் என்றால் தருகிறோம், ஆனால் எப்படிச் செய்கிறோம் என்னென்ன சேர்க்கிறோம் என்பதைச் சொல்ல மாட்டோம் என்று சொன்னார்கள். உடனே மத்திய அரசு அந்தக் கம்பெனியை அங்கே இருந்து எடுத்துவிடும்படிச் சொன்னது. அமெரிக்காக்காரன் கெட்டிக்காரன், அவன் அந்தக் கம்பெனியைக் கொண்டுபோய் நேபாளத்திலே அமைத்து தொழிலை ஆரம்பித்து விட்டான். அப்படி நேபாளத்திலே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட பிறகு அங்கே இருந்து கொக்கோகோலா இங்கே வருகிறது. முதலில் தடை செய்யப்பட்டு விட்ட அந்தக் கொக்கோகோலா நேபாளத்திலிருந்து இங்கே வருகிறது.

(முற்பகல் 10-40]

நேபாளத்திலிருந்து இந்தியாவிற்கு கோகோ-கோலா வருவதை இந்திய அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியவில்லை; தடையும் செய்ய முடியவில்லை. காரணம், இந்திய அரசாங் கத்திற்கும், நேபாளத்திற்கும் ஒரு உடன்படிக்கை இருக்கிறது. எனவே, இந்தக் கொள்கையை நீங்கள் பின்பற்றாதீர்கள் உறுதியான கொள்கையை பின்பற்றி, திட்டங்கள் போட வேண்டும். யாரோ சொல்கிறார்கள் என்பதற்காகச் செய்யாதீர்கள்.

இன்றையதினம் பட்டாசுத் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை இந்தியாவிலேயே மிக முக்கியமான தொழிற் சாலைகள். பட்டாசு பல வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

தீப்பெட்டிகளுக்கு வெளிநாட்டில் அதிகமான கிராக்கியிருக்கிறது.
காரணம், அங்குள்ள சீதோஷ்ண நிலை காரணமாக அவர்களால்
தீப்பெட்டிகளை உற்பத்தி செய்ய முடியாது. நமது தீப்பெட்டி
களுக்கு ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியா போன்ற
நாடுகளில் அதிகமான கிராக்கியிருக்கிறது. ஒரு தீப்பெட்டியின்
விலை 60, 70 பைசாவாக இருக்கிறது. நாம் அதிகமாக
உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால்,
நமக்கு அதிகமான வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கும்;
அதனால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
தொழிற்சாலைகளை பெருக்கிய பங்கை நாம் செய்ய முடியும்.

அடுத்து, முந்திரி பருப்புத் தொழிற்சாலைகள் பல தென்
ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் மூடப்பட்டிருப்பதாகச்
சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன? மத்திய அரசாங்
கத்தால் அதற்கான மானியம் வழங்கப்படவில்லை என்பது
ஒன்று. இரண்டாவது, இருக்கக்கூடிய நிலங்களிலும் அரசுக்குச்
சொந்தமான காடுகளிலும் இப்போது யூகலிப்ட்ஸ் மரங்களை
வளர்ப்பதும் ஆகும். முந்திரிச் செடிகளை இப்போது நடுவ
தில்லை. ஆகவே, அரசாங்கத்தின்கீழ் இருக்கக்கூடிய
காடுகளிலே, இனிமேல் யூகலிப்ட்ஸ் மரங்களை வெட்டியபிறகு,
இந்த முந்திரிச் செடிகளை நடுங்கள். ஐந்தாண்டுகளில் முந்திரி
உற்பத்தியைப் பெருக்கி, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்தால், அந்நிய செலாவணி கிடைக்கக்கூடிய
வாய்ப்பு இருக்கிறது. அந்தத் திட்டத்தில் நீங்கள் ஈடுபட
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுத் தொழிலைப் பொறுத்தவரையில், உலகத்திலேயே
இந்தியா ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. உலகத்தின் உற்பத்தி
47,800 மெட்ரிக் டன்கள். இந்தியாவிலே உற்பத்தியாவது
2,800 டன்கள் உற்பத்தியாகிறது, ஆனால் இதில் தமிழகத்தில்
50,000 கிலோதான் உற்பத்தியாகிறது. 50,000 கிலோ உற்பத்தி
செய்தால்,நாம் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும். நமக்குத் தேவை 6 இலட்சம்கிலோ என்றால்
இந்த 6 இலட்சம் கிலோ பட்டையும் முழு மூச்சுடன் உற்பத்தி
செய்ய ஈடுப்பட்டால், கிட்டத்தட்ட 12 இலட்சம் மக்களுக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனால், மக்களிடையே
வருமானம் பெருகும். அதனால் அவர்களுடைய வாழ்க்கைத்
தரம் உயரும். அந்த வகையில் இந்தத் திட்டத்தை செயல்
படுத்துவதற்கு அரசாங்கம் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

எல்லா இலாகாக்களையும் ஒன்றாக சேர்த்து வைத்திருப்
பதைவிட, அவைகளை தனித்தனியாக பைபர்கேட் பண்ணுவது
நல்லது. 1957ல் பி.டபிள்யூ.டி. என்று ஒரு இலாகாதான்
இருந்தது. பின்னால், இந்த இலாகா, பிடபிள்யூ.டி.,
மின்சாரம், இர்ரிகேஷன், ஹைவேஸ் என்று இன்னும் பல
இலாகாக்களாக தனித்தனியாக பிரிக்கப்பட்டது. மின்சாரத்

துறைக்கு ஒரு அமைச்சர்; பி.டபிள்யூ.டி.க்கு ஒரு அமைச்சர்
மாண்புமிகு திரு குழந்தைவேலு. இப்படி தனித்தனியாக
பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி தனித்தனியாக பிரிக்கப்பட்
டிருப்பதால், அவைகளிலே அதிக கவனம் செலுத்த முடிகிறது.

அதைப்போல் தொழில் இலாகாவிலும் பிரிவினை
செய்யுங்கள். ஏதோ அவர்களுக்கு இப்போது இருக்கின்ற
அதிகாரங்களை குறைத்து விடுங்கள் என்று நான் சொல்ல
வில்லை. பிரித்துக் கொடுத்தால்தான் இதில் அக்கரை செலுத்த
முடியும்.

பட்டுத் தொழிலைப் பொறுத்தவரையில் இதற்கு அதிகமான
இடங்களில் பயிரிடப்பட்டு அதிகமாக வருவாயை ஈட்ட
வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக போடப்
பட்டிருக்கின்ற 'மேப்'பைப் பார்த்தால் புதுக்கோட்டையில்
இந்தப் பட்டு வளர்ப்பு பற்றி எதுவும் சொல்லப்படவில்லை.
புதுக்கோட்டை என்ன பாவம் செய்தது? புதுக்கோட்டை
மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்குள்ள மக்கள்
மூன்று நேரம் சாப்பிடுவதற்கு வழியில்லாமல் இரண்டு நேரம்
தான் சாப்பிடுகிறார்கள். நீங்கள் இந்தத் தொழிலை புதுக்
கோட்டை மாவட்டத்திலும் ஆரம்பித்தால் அங்குள்ள மக்கள்
மூன்றாவது நேரம் சாப்பிடுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தென்னை மரங்களிலிருந்து கிடைக்கின்ற
நாரை எடுத்து ஏற்படுத்துகின்ற தொழிற்சாலை. குறிப்பாக
தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற கடற்கரையோரங்களில்
எல்லாம் அத்தனை பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை ஆரம்
பிக்கலாம். தென்னை மரங்கள் அவ்வளவு அதிகமாக இருக்
கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கின்ற இந்த
தென்னை நார்களுக்கு விற்பனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை
என்று சொல்லப்படுகிறது. ஜப்பானிலிருந்து இங்கே சிலர்
வந்ததாக தெரிகிறது. ஜப்பானில் இப்படிப்பட்ட நார் மிகவும்
தேவையாக இருப்பதாக சொல்லுகிறார்கள். ஜப்பான்
போன்ற நாடுகளுக்கு இந்த நாரை ஏற்றுமதி
செய்வோமேயானால் நமக்கு அதிகமாக அன்னிய செலாவணி
கிடைக்கும். இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் ஏனைய
நாடுகளுக்கு இல்லாத வசதி வாய்ப்பு நமக்கு இருக்கிறது,
ஏறத்தாழ தமிழ்நாடு முழுவதும் கடற்கரைப் பகுதியிருக்கிறது.
அந்தப் பகுதிகளில் எல்லாம் தென்னைமரங்கள் இருக்கின்றன.
இங்கெல்லாம் நார்கள் உற்பத்திச் செய்யப்படுகிறது. நிறைய
தேங்காய் மட்டை கிடைக்கிறது. இங்கு கிடைக்கின்ற நார்கள்
மிக உயர்ந்த ரகமாக இருப்பதாக சொல்லப்படுகிறது.
ஆகவே அதிகமான தொழிற்சாலையை ஆரம்பியுங்கள். இதற்கு
விற்பனை யாவதற்கு தமிழ்நாட்டிலிருந்து ஆந்திர மாநிலத்திற்கு
அனுப்பலாமா, குஜராத் மாநிலத்திற்கு அனுப்பலாமா என்று
பார்ப்பதைவிட வெளிநாடுகளில் சென்று இதற்கு ப்ரமோஷன்

[திரு. நா. சுந்தரராஜ்] [1979 ஏப்ரல் 21

செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால், ஆர்டர்
கள் கிடைத்தால் அவற்றுக்கெல்லாம் ஏற்றுமதி செய்து அனுப்பு
வதற்கு வேண்டிய பெரிய தொழிற்சாலைகளை எல்லாம்
உருவாக்க வேண்டும். ஏராளமான அளவில் இந்த நார்களை
ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா,
அதற்கான மார்க்கட் இருக்கிறதா என்று பாருங்கள்.
இதற்காக அதிகாரிகளை அனுப்புங்கள். எதற்கெல்லாமோ
அதிகாரிகளை அனுப்புகிறீர்கள். குறிப்பாக இந்தத் தொழிலுக்கு
நல்ல மார்க்கட், நல்ல சந்தை இருக்கிறதா என்று போய்
பாருங்கள். அதன் மூலம் இந்தத் தொழிலை பெருக்குங்கள்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு முக்கியமான பிரச்னை ஒன்று. முதலமைச்சர்
அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். பிளாக் க்ரானைட்
ஸ்டோன் எடுக்கும் தொழில் தேசியமயமாக்கப்படும் என்று
அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. இதற்காக தனி
அதிகாரிகள் 'டாமின்' என்ற நிறுவனமும் அமைக்கப்பட்டது.
இதன் தலைவராக டாக்டர் சரவணன் என்ற நிபுணரை நியமித்
திருப்பதாக தெரிகிறது. அவர் ஒரு பேராசிரியர். இப்போது
பேராசிரியராக இருப்பவர். இவரால் இந்தத் தொழிலை
பிரமோஷன் பண்ண முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது.
அவர் நிரம்ப அறிவாற்றல் உள்ளவர். அதை யாரும் குறை
கூறவில்லை. ஆனால் இதுவரை இந்தக் கொள்கை அறிவிக்கப்
பட்டு ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் திட்டத்தை
கொண்டு வரலாம் என்றும், இதில் 65 லட்சம் ரூபாய் அளவுக்கு
லாபம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. 1977-ல் சொல்
லப்பட்டது, 1979 வரை என்ன செய்தார்கள்? அங்கே என்ன
வேலை நடந்திருக்கிறது? அங்கே வேலை செய்த தொழிலாளர்கள்
எல்லாம் சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது எந்தவிதமான வேலைக்கும் போகாமல் இருக்
கிறார்கள். இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது
என்றால் 'டாமின்' மூலம் தனிநபர்களுக்கு இதில் அனுமதி
வழங்கப்படுமா என்பதும் தெரியவில்லை. இதைப்பற்றி முடிவு
செய்வதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும்என்றுதெரிகிறது.
அப்படியானால் இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்.
எப்போது வேலை தொடங்கப்படும். எப்போது தொழிலாளர்களை
எல்லாம் எடுத்துக்கொள்வார்கள், எப்போது வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப் போகிறார்கள், எப்போது அந்நிய செலா
வணியை சம்பாதிக்கப் போகிறார்கள்? இவற்றில் எல்லாம் துரித
மாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காலம் தாழ்த்திக்
கொண்டே இருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள்
ஆகிவிட்டது, இன்னும் நடைபெறவில்லை என்று சொல்லிக்
கொண்டே காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது சரியல்ல. இப்படி
சொல்லிக் கொண்டேயிருந்தால். இன்னும் 100 ஆண்டுகள் கழித்த
பின்னாலும் சுதந்திரம் கிடைத்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது

1979 ஏப்ரல் 21] [திரு. நா. சுந்தரராஜ்]

என்ற கோஷங்களை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதால்
எந்த விதமான பிரயோசனமும் இல்லை. வேகமாக திட்டங்
களை செயல்படுத்த முன்வரவேண்டும். அதே நேரத்தில்
லாபமும் இல்லை நஷ்டமும் இல்லை என்று மட்டும் சொல்லி
யிருப்பதில் பலனில்லை. திட்டங்களை எல்லாம் விரைவில்
நிறைவேற்ற வேண்டும்.

சுண்ணாம்பு கற்கள் இருக்கின்ற இடத்தைப் பற்றி ஒரு
கருத்து தெரிவிக்கப்பட்டது. அது உண்மையாக இருக்குமானால்
முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கவனிக்க வேண்டும். 10
ஏக்கர் வரையிருந்தால் அந்த சுண்ணாம்பு கற்கள் வெட்டி
எடுக்கும் தொழிலை தனியார்கள் வைத்துக்கொள்ளலாம்
என்றும், அதற்கு மேல் இருக்கின்ற இடங்களில் எல்லாம்
தொழில்கள் பொது உடமையாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்
பட்டிருக்கிறது

(முற்பகல் 10-50)

10 ஏக்கர்களுக்கு உள்ளடங்கியுள்ள நிலத்தை வைத்திருக்கும்
பல நபர்கள், அந்தப் பகுதிகளிலே இந்தத் தொழிலை மேற்
கொள்ள வேண்டும் என்று மனு கொடுத்து, அது இந்த அரசாங்
கத்திற்கு வந்து, அரசாங்கமும் அதை பரிசீலித்து, அது இப்போது
முதல் அமைச்சரின் கையெழுத்திற்காக காத்துக் கொண்டிருப்
பதாகச் சொல்லப்படுகிறது. நான் உள்ளபடியே கேட்க விரும்பு
கிறேன். நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை 10 ஏக்கர்
களுக்கு உள்ளடங்கி இருந்தால் அனுமதி அளிப்பதென்று.
எனவே, அப்படி ஒப்புதல் அளிப்பதாக இருந்தால் அளித்து
விடுங்கள் அல்லது ஒப்புதல் அளிக்க முடியாது என்று
சொன்னால், அவைகளை ரத்து செய்து விடுங்கள்; அவை
களையும் அரசாங்கத்தின் சொத்து என்று அறிவித்து விடுங்கள்;
ஆனால் அவர்களை காக்க வைப்பதில். அரசாங்கத்திற்கு
இதிலே அரசியல் ஒன்றும் இல்லை. தினசரி நூற்றுக்கணக்கான
பேர்கள் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுங்கள், நிறைவேற்
றுங்கள் என்று கேட்பதாக அறிகிறேன். எனவே, முதலமைச்சர்
அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, ஆராய்ந்து, உடனடியாக
நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். காரணம், இது ஒரு
முக்கியமான பிரச்னை.

மதுரை மாநகரில், தெற்குத் தெருவிலே சிறு தொழிலாளி
ஒருவர் கிளிஞ்சலையும், சுண்ணாம்பையும் கலந்து, அதை
வெல்டிங்கிற்காக மூலப் பொருளாக உபயோகப்படுத்துகிறார்
என்றும், அதனால் அவர் தினமும் கிட்டத்தட்ட 100 ரூபாய்
சம்பாதிப்பதாகவும் கூறப்படுகிறது. சாதாரண ஒரு தொழிலாளி
இதிலே கிட்டத்தட்ட 100, 200 சம்பாதிக்கிறார் என்றால்,
இதிலே அரசு தயக்கம் காட்டுவதை என்னால் புரிந்து கொள்ள
முடியவில்லை. இதனால் லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும். அப்படியிருக்கும்போது, இந்தத் தொழிலை

[திரு. நா. சுந்தரராஜ்] [1979 ஏப்ரல் 21

ஏன் முடக்க வேண்டும்? உங்கள் திட்டத்திற்கு இது சாதகமாக
இருந்தாலும், பாதகமாக இருந்தாலும் அல்லது எதுவாக
இருந்தாலும். இதிலே முடிவெடுப்பதிலே உடனடியாக எடுங்கள்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் delay leads to corrapti n

இதைத் தான், காலம் தாழ்த்துவது என்பதை ஒப்புக்கொள்ள
முடியாது என்று ஐவகர்லால் நேரு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

I am not interested in excuses for the delay. But I am interested
only in things being done.

காரணம் கூறுவதில் பிரயோஜனமில்லை. காரியங்கள் நடந்தாக
வேண்டும் என்று கூறுகின்றார். அதனால், ஏதாவது செய்வதாக
இருந்தால், அதை உடனடியாக காலதாமதம் இல்லாமல் செய்
யுங்கள். ஐந்தாண்டுகள் ரூல் செய்யப் போகிறீர்களோ,
இல்லையோ அதற்குள் செய்யுங்கள். இல்லை, யாரோ ஆட்சி
பண்ணுவார்கள், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றால்,
சும்மா இருங்கள்.

அடுத்து, இன்றைய தினம் இந்தத் தொழில்களைப் பொறுத்த
வரையில் சில இடங்களிலே இதற்கு ஆக்கமும் ஊக்கமும்
கொடுப்பதற்குப் பதிலாக வெள்ளையன் டாக்கா மஸ்லீன்
துணியை நெய்தவர்களுடைய கட்டைவிரலை வெட்டியது
போல், ஒரு மோதிரத்திற்குள் சேலையை உள்ளே விடமுடியும்
என்ற அளவிற்கு திறமையான தொழிலாக இருந்த இந்த டாக்கா
மஸ்லீன், பெரியவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.
நான் சிறியவன், நான் கூற விரும்புவது எல்லாம் எல்லா
அதிகாரங்களையும் நீங்களே வைத்துக் கொண்டிராமல், தயவு
செய்து அதிகாரிகளிடத்திலும் கொஞ்சம் அதிகாரங்களைக்
கொடுங்கள். டீ—சென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ் செய்யுங்கள்.
நீங்களே அதிகாரத்தை வைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக
ஒன்றும் முடியாது. ஆகவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவது
இங்கே தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏராளமான பேர்கள்
தயாராக இருக்கிறார்கள். ஆனால். அவர்களுக்கு நீங்கள்
ஊக்கம் தரவேண்டும். அப்படி ஊக்கம் கொடுத்தால், இங்கே
தொழிற்சாலைகள் பெருகி, அதனால் வேலைவாய்ப்பு
கிடைக்கும். ஏன் உங்களுக்கு இந்த எண்ணம் வரவில்லை?
காரணம் என்ன? அரசாங்கத்தின் கொள்கைதான் இதற்குக்
காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாலைத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில்,
இது ஒரு முக்கியமான துறை. இதைப்பற்றி எல்லா நேரங்
களிலும் பேசப்பட்டிருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்த
வரையில் இங்கே உற்பத்தியாகின்ற வேஷ்டிகள். துணிகள் இந்த
நாட்டின் தேவைக்கும் அதிகமாக இருக்கிறது. ஆனால், அதே
நேரத்திலே இந்த நாட்டிலே உற்பத்தியாகும் வேஷ்டிகள் வெளி
நாட்டிற்கு அனுப்பப்பட்டு, அங்கேயிருந்து வாங்கிவந்து, இங்கே
நமக்கு 'பிரசன்ட்' செய்கிறார்கள். இது வேதனையாக

இருக்கிறது. எக்ஸ்போர்ட் குவாலிடி என்று சொல்லி, இதை எக்ஸ்போர்ட் செய்கிறார்களே தவிர, இந்தியாவிலே இதற்குத் தடை இருக்கிறது: இந்த எக்ஸ்போர்ட் குவாலிடி துணியை இங்கே உற்பத்தி செய்வதால், இங்கே உள்ளவர்கள் உடுத்தக் கூடாதா?

இந்திய நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற வேஷ்டியை வெளிநாட்டில் சென்று வாங்கி இங்கே கொண்டு வருகிறார்கள். இந்த நிலை ஏன்? எக்ஸ்போர்ட் குவாலிடி என்ற வகையில் உற்பத்தி செய்யப்படுவது இங்கேயும் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் விற்கப்பட வேண்டும், தமிழர்கள் தான் வேட்டி கட்டுகிறார்கள், வெள்ளைக்காரனா வேட்டி கட்டுகிறான்? சீனாக்காரனா வேட்டி கட்டுகிறான்? தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் நல்ல வேட்டியைக் கட்ட எக்ஸ்போர்ட் குவாலிடி இங்கும் கிடைக்க வழி செய்யவேண்டும்.

ஸ்டெயின்லஸ் ஸ்டீலைப் பொறுத்தவரை தவறோடு மோசடியும் நடப்பதாகத் தெரிகிறது. பிற்பட்ட பகுதிகளான புதுக்கோட்டை, தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அரிசன மக்களுக்கு தொழில் செய்ய அதிகச் சலுகையை மத்திய அரசும், மாநில அரசும் கொடுக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகளை யார் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? சென்னை நகரத்தில் இருக்கும் ஒரு சில வியாபாரிகள் கோடிக்கணக்கான ரூபாயை முதலீடு செய்திருப்பவர்கள் கிராமப்புறங்களிலே ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிலை ஆரம்பிப்பதற்காக லைசென்ஸ் பெற்று இருப்பவர்களிடமிருந்து, அவர்கள் அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ், எஸ். எஸ். ஐ. அனுமதி பெற்று தொழிலைத் துவங்க முனையும் நேரத்தில், இவர்கள் அவர்களிடம் சென்று பவர் ஆப் அடார்னி பெற்று புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் தொழில் துவங்க அளிக்கப்பட்ட கோட்டாவை இவர்கள் பெற்று சென்னை நகரத்திலேயே தொழிலை நடத்துகிறார்கள். கிராமப் புறங்களிலே தொழில் முன்னேறுவதற்குப் பதிலாக கை மாறுகிற நிலை இருக்கிறது. இதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை டெலிபோன் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. எம். எல், ஏ.க்கள் ஹாஸ்டலிலேயே 1967—68-ல் வைத்த டெலிபோன்கள் தான் இருக்கின்றன. அந்த டெலிபோன்கள் வேலை செய்யாது. இருக்கிறது என்ற பெயரில் இருக்கின்றது. பெங்களூரில் நல்ல முறையில் டெலிபோன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நான் பேசினால் எதிரிக்குக் கேட்காது. எதிரி பேசினால் எனக்குக் கேட்காது. தமிழ்நாட்டில் டெலிபோன் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெங்களூரில் இருப்பது போன்று இங்கும் ஒரு டெலிபோன் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க போராட்டம் நடத்துங்கள் அல்லது கோரிக்கை வையுங்கள்

தமிழ்நாட்டில் டெலிபோன் தேவை அதிகமாக இருக்கிறது.
சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கூட டெலிபோன் கொடுக்
கலாம் என்று அறிவிக்கப் போவதாக் அறிகிறேன். அந்த
வகையில் டெலிபோன் தொழிற்சாலையை அமைக்க
முதலமைச்சர் அவர்கள் அக்கறை காட்டவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அந்நிய நாட்டு மூலதனத்தை இந்தியாவுக்குக் கொண்டு வர,
தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர அதிகமான அக்கறை எடுத்துக்
கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதை
யாரும் மறுக்க முடியாது. பல்வேறு நாடுகளில் இருக்கும்
இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் வெளியேற்றப்படுகிறார்
கள். மலேஷியாவிலிருந்தும், சிங்கப்பூரிலிருந்தும் மட்டுந்தான்
வெளியேற்றப்படாமல் இருக்கிறார்கள்.
இந்தோனேஷியா, பர்மா, வியட்நாம், சிலோன், உகண்டா,
நைஜீரியா ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் இந்தியர்களை
தமிழ் வம்சாவழியினரை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
வடநாட்டைச் சேர்ந்தவர்கள் நைஜீரியாவிலிருந்து அனுப்பப்
படுகிறார்கள் என்றால் விமானத்தை அனுப்பி திருப்ப அழைக்
கிறார்கள். சிலசமயங்களில் அந்த நாட்டுக்கே திருப்பிக்
கொண்டு போய்விடுகிறார்கள். நாம் என்ன செய்கிறோம்?
சிலோனிலிருந்து வெளியேற்றப்படுவர்களை 'வாருங்கள்
வாருங்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள்
அந்த நாட்டிலே பிறந்தவர்கள், அந்த நாட்டு பிரஜா உரிமை
பெற்றவர்களை எப்படி வெளியே அனுப்புகிறார்கள்? பிஜித்
தீவில் இந்திய வம்சா வழியினர் பிரதம மந்திரியாக வந்திருக்
கிறார்கள். நாம் வருகிறவர்களை வாருங்கள் என்று கூறி
வரவழைக்கிறோம். அவர்களுக்கு வளமான வாழ்க்கை
கொடுக்க முடியவில்லை.

(முற்பகல் 11-00)

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், மலேசியா,
சிங்கப்பூர் நாடுகளில் இருக்கின்ற வசதிபடைத்தவர்கள் அல்ல,
சாதாரண வசதி படைத்தவர்கள் அதிகமாகப் பணம் வைத்
திருக்கிறார்கள், அவர்கள் தமிழ்நாட்டிலே தொழில் துவங்க
ஆசைப்படுகிறார்கள். ஆனால் அரசாங்கம் இங்கே அவர்களை
ஊக்குவிக்கக்கூடிய வகையிலே திட்டங்கள் போடவில்லை.
அவர்கள் பயப்படுகிறார்கள். என்ன பயம் தெரியுமா?

நாங்கள் தொழில்கள் ஆரம்பித்தால் இந்த அரசாங்கம்
ஒத்துழைக்குமா? மின்சார வசதி செய்து தருமா? தண்ணீர்
வசதி கிடைக்குமா? அதிகாரிகள் கெடுபிடி செய்வார்களாமே,
மிரட்டுவார்களாமே, எங்களிடம் பணிவாகப் பேசமாட்டார்
களாமே, தொழில் தொடங்க வேண்டாமென்று ஓடஓட
விரட்டுவார்களாமே என்ற அச்சம் அவர்கள் இடத்திலே
இருக்கிறதே தவிர, தொழில தொடங்கும் ஆர்வம் இல்லை.
தயவு செய்து இந்த அரசாங்கம் இந்திய ஹைகமிஷன் மூலமாக

தொழில்கள் அவர்கள் தொடங்குவதற்கான வாய்ப்புக்களை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பெரியவர்கள் எல்லாம் சொல்
கிறார்கள், உங்களுடைய அரசாங்கம் சரியான வாய்ப்புக்களை
ஏற்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள் குறிப்பாக கொக்கோ
கோலா போன்ற சாதாரண ரெபரஷர் டிரிங்க்ஸ் தயாரிக்கக்கூடிய
தொழிற்சாலைகள் தான் உருவாக்கவேண்டுமா? ஏன் ஜப்பான்
போன்ற நாடுகளிடம் நாம் உறவு வைத்துக் கொள்ளக்கூடாது.
அவர்கள் எத்தனையோ விதமான மோட்டார் சைக்கிள்களை
வெளியிட்டிருக்கிறார்கள்.

மெஸ்பி, யமாகா போன்ற மோட்டார் சைக்கிள்களை
வெளியிடுகிறார்கள். அவர்கள் எந்த நாட்டோடு தொழில்
உறவு வைத்துக்கொண்டு தொழிற்சாலையை ஆரம்பித்தாலும்,
நாங்கள் இந்த நாட்டிலே 25 ஆண்டுகள் இருப்போம். இந்த
நாட்டிலே உள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்
போம், 50 சதவீதத்தை நாங்கள் எடுத்துக்கொள்வோம், மீதம்
உள்ள 50 சதவீதத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று
சொல்லி, 25 ஆண்டுகள் முடிந்தவுடன் அந்த தொழிற்சாலை
உங்களுக்கே சொந்தம் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்
கள். ஆகவே அந்த வகையிலே நாம் வெளிநாடுகளோடு தொழில்
ஆரம்பிப்பதற்கு ஜாயிண்ட் செக்டாரிலே அரசு முயற்சிகளை
மேற்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தை கைகாட்டிக்
கொண்டிருக்க வேண்டிய வேலையைத் தயவுசெய்து விட்டு
விடுங்கள். எவ்வளவு நாளைக்கு மத்திய அரசாங்கத்தை கை
காட்டிக்கொண்டு இருப்பது? நம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை
நாம் உயர்ந்த வேண்டாமா? அந்தத் திட்டத்திலே இந்த ஆட்சி
ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம், (டாஸ்கோ)
இங்கே அதைப்பற்றி அதிகமாகப் பேசப்பட்டிருக்கிறது. பேலன்ஸ்
ஷீட் வாணியம்பாடி பகுதியிலே இரண்டு ஆண்டுகளாக கொடுக்க
வில்லை என்று சொல்லப்படுகிறது. தஞ்சையிலே சர்க்கரைத்
தொழிற்சாலையில் விகிதாசாரம் போடப்பட்டிருக்கிறது. அரிசன
மக்களுக்கு எத்தனை சதவீதம், பின்தங்கியோருக்கு எத்தனை
சதவீதம் என்றெல்லாம் போடப்பட்டிருந்தும் பின்தங்கியோர்
அங்கே நிரப்பப்படவில்லை, வேறு யாரோ நிரப்பப்பட்டிருக்கிறார்
கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்து யார்
யாருக்கு எத்தனை சதவீதமோ, அந்த வீதப்படி நிரப்பப்படுவதற்கு
உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம்.
குறிப்பாக அங்கே இருக்கக்கூடிய ஒன்றிரண்டு தொழிற்சாலைகள்
ஒன்று காவிரி மில், இன்னொன்று புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ்
இருக்கின்றன. காவிரி மில்லை அரசாங்கம் பொறுப்பேற்றுக்
கொண்டது. இருந்தாலும் 50 சதவீதம் தொழிலாளர்களுக்குத்
தான் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அரசாங்கம்
இக் மில் என்று தான் எடுத்துக்கொண்டது. ஆனால் இன்னும்
அது சிக்காகத்தான் இருக்கவேண்டுமா? டாக்டரிடம் வைத்தியம்

பார்க்கப்போனால் பாதி குணம் ஆகியிருக்கிறது, பாதி குணமாக வில்லை என்றால் எப்படி? அந்த முறையில் இன்னும் சிக்காக இருக்கிறது. அது நியாயமில்லை. அந்த வகையிலே இன்னொரு பாராட்ட வேண்டிய அம்சம் அரசாங்கம் 31 லட்சம் ரூபாய் கொடுத்திருப்பது. ஆனால் இன்னும் சிக் மில்லாக இருக்காமல் அதற்கு உத்வேகமும் ஆரோக்கியமும் கொடுக்க ஏற்பாடு செய்து அந்தப் பகுதி மக்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், (மணியடிக்கப்பட்டது).

ஆகவே, அந்த வகையிலே இன்றைய தினம் புதுக் கோட்டையைப் பொறுத்த வரையிலும் நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, அங்கே இருக்கக் கூடிய பின்தங்கிய நிலைமையை மாற்றி, அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

என்னுடைய பகுதியிலே குளுகோஸ் தொழிற்சாலை நிறுவப் படும் என்று முன்னால் அறிவிக்கப்பட்டது. 1972-ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட திட்டம் இது நாள் வரை நிறைவேற்றப் படாதது சற்று வருத்தத்தை தருகிறது. ஆகவே, குளுகோஸ் தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னொன்று புதுகோட்டை, மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளை எதற்காக அரசாங்கம் பின்தங்கிய பகுதி கள் என்றவகையில் சலுகைகள் அளிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றுதான் பின் தங்கிய பகுதிகள் என்ற வகையில் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஆனால், புதுக்கோட்டை போன்ற பகுதிகளில், திருச்சியிலே இருக்கிற முதலாளிகள் எல்லாம் அங்கிருந்து ஆட்களைக் கொண்டு வந்து வேலை கொடுத்து, திருப்பி திருச்சிக்கே அனுப்பி விடுகிறார்கள். ஆனால், புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. டி. வி. எஸ். நிறுவனம், பாடி பில்டிங் யூனிட் ஒன்றை புதுக்கோட்டையிலே நிறுவி இருக்கிறது. ஆனால், பணியாட்களை திருச்சியிலே இருந்து கொண்டு வந்து அமர்த்தியுள்ளது. மாவட்ட கலெக்டர் இத்தனை சதவீதம் புதுக்கோட்டை மக்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று கூறினாலும் அதை நிராகரித்து விட்டு, புதுக்கோட்டையிலே வாழக் கூடிய மக்களுக்கு, மாவட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு தரவில்லை. அரசாங்கம் சலுகை அளிக்கிறது என்று சொன்னால், நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அங்கே பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கும் போதே அந்தப் பகுதி மக்களுக்கு அதிகமாக முன்னுரிமை கொடுத்து. வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்ததாக என் பகுதியிலே, ஆலங்குடியிலே, காகித ஆலை ஒன்று நிறுவுவதாக இருக்கிறது. அதற்கு அமைச்சர்கள் அதிக மான அக்கறை எடுத்து அதிகமான வேகத்தோடு, அந்தக்

காகித ஆலை திட்டத்தை இந்த ஆண்டாவது ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச அனுமதி அளித்தமைக்குத் துணை தலைவருக்கும் நன்றி.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் மற்ற மாவட்டத் தொழிலாளர்களை வேலையில் வைக்கக் கூடாது என்று சொன்னார். 'சன்ஸ் ஆஃப் தி சாயில்' என்ற கொள்கையை அவர் கட்சி பின்பற்றுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: நான், சதவீதம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், மாறக் கூடாது என்பது அல்ல. 'சன்ஸ் ஆஃப் தி சாயில்' எங்களுக்கு இல்லை. 'ஹோல் ஆஃப் இந்தியா'.

*திரு. எஸ். வி. இராமசாமி: இந்த மாமன்றத்திலே, தொழில்கள், தொழில் மேம்பாடு என்ற மானியக் கோரிக்கையின் மீது சமர்ப்பித்துள்ள என்னுடைய கருத்துக்களை இணைத்துக் கொள்வது என்னுடைய கடமையுணர்வாகவும், களிப்பாகவும் இங்கே இருக்கிறது. பெரும் போருக்குப் பின்னாலே, மடிந்து விட்டோம், மாண்டு விட்டோம் என்ற நிலையிலே இருந்த ஜப்பான், இன்று உலகே போற்றும் வண்ணம், அதிசயிக்கும் வண்ணம் பீடு நடைபோடுகிறது என்றால், அதே நேரத்திலே, குண்டூசி கூட செய்ய முடியாத அளவுக்கு இருந்த நாடு, இன்று உலக அரங்கிலே தலையாய நிலையிலே நிற்கிறது என்றால், அது தன்னுடைய உறுதியான தொழில் முயற்சியினாலேதான் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. 'ஆலையின் சங்கே ஊதுவாயோ' என்று அன்றே பாடி வைத்த பாரதியாருடைய எண்ணக் கருத்துக்களுடைய நினைவை எல்லாம் அறிந்து, இன்று தமிழகத்திலே, பெரும் தொழில் புரட்சி உருவாவது உறுதி, உறுதி, உறுதி, என்ற அந்தக் கீதமெல்லாம் எங்கும் ஒலிக்கும் வண்ணம் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய நேரடியான கவனத்திலே நேரடியான சூழ்நிலையிலே, இதனை இயக்கிவருகிறார்கள்என்றும் சாதனைகள் செய்து வருகிறார்கள்என்றும், ஆகவே, அதனைப் பாராட்டுவதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன். புரட்சி, தொழில் புரட்சியை உண்டாக்குமா என்ற ஐயத்தினை அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள், இந்த மாமன்றத்திலே, கர்மவீரர் காமராஜ் அவர்கள் செய்த சாதனைகளையெல்லாம் எடுத்து வைத்து, தன்னுடைய உரையை நிகழ்த்தினார்கள். கர்மவீரர் காமராஜர் சாதனை களையெல்லாம் போற்றட்டும். அதற்கு ஈடு இணை கொஞ்சமும் குறையாத வகையில், தேர்தல் களத்திலே, எப்படி தன்னுடைய உறுதியான கொள்கைப் பிரகடனத்தைச் செய்தார்களோ, அந்தப் புரட்சித் தலைவர் அதனை நிறைவேற்றுவதற்காக வேண்டி, வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்காக வேண்டி துவக்கும் புரட்சிப் பூங்காவிலே, அங்கே தொழில்கள் எல்லாம் பூத்துக் குலுங்குகின்றன என்று வரலாறு படைத்திடும் என்ற முறையிலே அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள் இந்த

[திரு. எஸ். வி. இராமசாமி] [1979 ஏப்ரல் ?

மாமன்றத்திலே 'பெர்பார்மன்ஸ் பட்ஜெட்' என்ற சாதனைத்
திட்டங்களுடைய புள்ளி விவரங்களைக் கண்டால், நீங்கள்
உணர்ந்து கொள்ள முடியும் என்ற என்னுடைய பதில் உரையை
வைப்பதை என்னுடைய மெத்தக் கடமையாகக் கருதுகிறேன்.

[முற்பகல் 11-10]

அதற்கு முன் ஆண்டுகளில் தமிழகத்திலே புயலும் மழையும்
வெள்ளமும் வந்திருந்தபோதே கூட தொழில்கள் குன்றிவிடக்
கூடாது, தொழிலாளர்கள் சோர்ந்து விடக் கூடாது என்ற
மேலான சிந்தனையை வளர்த்துக் கொண்டிருக்கிற புரட்சித்
தலைவர் அவர்கள் கோவையிலே மூடியிருந்த பஞ்சாலையை
உடனடியாக 4½ கோடி ரூபாய் செலவிட்டு அங்கே பஞ்சாலை
தொழிற்சாலையை உயிர் பெறச் செய்தாரே அந்த வரலாற்றினை
நீங்கள் அறிந்திட மறந்து விட்டீர்களா? அருமைமிகு நண்பர்
சுந்தரராஜன் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். நீங்கள் வாதத்திற்காக பேசுவதை நாங்கள்
வரவேற்கிறோம். ஆனால் அதற்காக இந்த அரசு செய்த
நன்மைகளையெல்லாம் மறந்துவிட்டு பேச வேண்டாம் என்பதை
நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக திருச்சியிலே கர்மவீரர் காமராசர்
அவர்களுடைய சாதனை திறத்தினாலேதான் அங்கே பாரத்
ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் நிறுவப்பட்டது என்றும்,
மத்திய அரசிடம் போராடி அந்தச் சாதனையைச் செய்தார்
என்றும் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கூறியிருக்
கிறார்கள். அதே போல மைய அரசோடு போராடி அவர்
களுடைய உதாசீனத்தை தட்டிக் கேட்டு அங்கே சேலத்திலே
ஸ்டீல் பிளாண்ட் தொழிற்சாலைக்கு கால்கோள் விழாவை
நடத்தினாரே புரட்சித் தலைவர் அவர்கள், அது கண்ணிலே
படவில்லையா என்று அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்களை
கேட்க ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே கர்மவீரர் காமராசர்
அவர்கள் தொழிற்சாலைகளை நிறுவ வித்தூன்றினார் என்றால்,
தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கு, தொழில்கள் வளர்ந்து
புரட்சி பூங்காவாக தொழில் பூங்காவாக உருவாவதற்கு நமது
புரட்சித் தலைவர் அவர்கள் நீர் வார்த்திருக்கிறார்கள். அன்று
தொழில்கள் நசிந்துக் கிடந்த நிலைமையில் இருந்து தமிழகத்தைக்
காத்திட, புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சீரமான,
தீரமான சீரான, மேலான நோக்கத்திலே, தன்னம்பிக்கையிலே
பெற்றிட முடியும் என்ற உறுதியான நம்பிக்கை இருக்கிறது
என்பதை நான் இந்த மாமன்றத்திலே வைப்பதிலே மிகவும்
மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து அவர்கள் ஒரு கருத்தை கூறினார்கள், மின்சார
துண்டிப்பு இருக்கிறது-அதிகமாக இருக்கிறது என்று. தொழில்கள்
எல்லாம் இந்த மின் துண்டிப்பின் காரணமாக குறைந்து
விடுகின்ற நிலைமை இருக்கிறது என்று கூறினார்கள்.

1979 ஏப்ரல் 21] [திரு. எஸ். வி. இராமசாமி]

மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விதி முறை
அவையிலே மின்சாரத் துறை அமைச்சர் நண்பர் சுந்தரராஜ் அவர்களுக்கு
திருத்தம் கொண்டு வந்ததை நண்பர் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்கள்
நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே வேலைகள்
ஒழுங்காக நடைபெறவேண்டும் என்று, அங்கே தொழில்கள் குன்றிவிடக்கூடாது
குறைந்து விடக் கூடாது தொழில்கள் தமிழ்நாட்டில்
என்ற காரணத்திற்காக மின் துண்டிப்பு இங்கே இந்த
தொழிற்கூடங்களுக்கு அதிகமாக இல்லை என்று ஒன்றை நமது
அவையிலே ஒரு விதிமுறை திருத்தம் கொண்டு வந்தார்
மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நண்பர் திரு. சுந்தரராஜ்
என்பதை மாண்புமிகு உறுப்பினர் நமது நண்பர் கடமைப்பட்டிருக்கிறேன்.
அவர்களின் நினைவிற்கு கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். ஜவஹர்லால்

திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள்.
நேரு அவர்கள் கூறியதைப் பற்றிச் சொன்னார்கள்.

"I am not interested in excuses for delay

I am only interested in things being done"

அது போன்ற சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்க முடியுமா
என்று கேட்டார்கள். அருமை நண்பருக்கு நான் முன்னால்
கூறியது போல இரண்டு ஆண்டு கால கட்டத்திலே நமது
முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சாதனை
களையெல்லாம். செயல் திட்டங்களையெல்லாம் படித்துப்
பார்த்தால் வருகிற காலத்திலே என்னுடைய தானைத் தலைவர்
அவர்களின் புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்கள் எல்லாம்,
கருத்துக்கள் எல்லாம் செயலாக்கப்பட்டு தமிழ் நாட்டிலே
தொழில்வளம் செழித்திருக்கும் என்று கூறுகிறேன். அதற்கான
முயற்சிகளில் உடனடியாக செயல்பட்டு, அந்த முனைப்பிலேயே,
அந்த சூழ்நிலையை. அந்த ஆர்ப்பரிப்பை மக்கள் எல்லாம்
காண்கிற வண்ணம் தொழில்வளம் பெருகும் வண்ணம்

"I am not for excuse for delay. I am

for things being done" என்ற வண்ணம் அந்த செயல்
விதத்திலே நமது புரட்சித் தலைவர் அவர்கள் சாதனை செய்து
வருகிறார்கள்.

ஒரு விஷயத்திலே நான் நமது நண்பர் சுந்தரராஜ் அவர்
களின் கருத்தோடு இணைந்து ஒப்புக் கொள்கிறேன்.
தொழில்களுக்கு உரிமங்கள் வழங்குவதில் சிரமங்கள் இருக்
கின்றன. கால தாமதங்கள் ஏற்படுகின்றது. அவைகள்
நீக்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். என்னுடைய
ஊரிலிருந்து ஒரு இளைஞர் இங்கு வந்திருக்கிறார்.
என்ஜினீயரிங் படித்து விட்டு தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க
வேண்டும் என்று ஆர்வத்தோடு அவர் வந்திருக்கிறார். ஆனால்
ஓராண்டு காலமாக அவரால் ஒன்றுமே ஆரம்பிக்க முடிய
வில்லை. சிட்கோ மூலமாகத்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று
சொல்லியிருக்கிறார்கள். அந்த விதிமுறைகள் மிகவும் கடுமை
யாக இருக்கின்ற காரணத்தினால் ஒன்றுமே செய்ய இயலாமல்
போகிறது. ஆகவே அந்தக் கடுமையான விதிகளை கொஞ்சம்

[திரு. எஸ். வி. இராமசாமி] [1979 ஏப்ரல் 2

குறைத்து, முறைப்படுத்தி விரைவில் தொழில்களை துவக்க உதவ வேண்டும் என்று இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசிலே, அரசு தொழில் நிறுவனங்கள் சிட்கோ, டிட்கோ, சிப்காட் என்ற பல நிறுவனங்கள் பலபல இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இன்று இயங்கி வருகின்றன. அதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகை அரசு செலுத்தவேண்டிய அவல நிலையில் இருக்கிறோம். அவைகளை யெல்லாம் போக்கும் வண்ணம் ஒரே பகுதியில் முழு அளவில் எல்லா அலுவலகங்களும் இயங்கும் வகையில் அரசுக்குச் சொந்தமாக கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் நிறுவனங்களில் இயக்குனர் போடுவதிலும், தாழ்த்தப்பட்ட, மலைஜாதியினர் 18% போடுவதற்கான வாய்ப்புகளை அரசு அவர்களுக்கு அளிக்கவேண்டும். அப்படி அளித்தால் தாழ்த்தப்பட்ட வர்க்கம் முன்னேறும். ஆகவே அந்த தாழ்த்தப்பட்ட சமூகத்திலே இருக்கிற ஆர்வம் மிக்க, வல்லமைமிக்க, திறமைமிக்க நபர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எறையூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், அங்கே சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் டைரக்டர்களாக அதிலே பணியாற்றாத காரணத்தால், பொது மக்களுக்கும், அந்தத் தொழிற்சாலைக்கும் தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. அது நம்முடைய அரசின் ஆலை, மக்களுக்கு வேலை தரும் முறையில் இயங்குவது. நம்முடைய கவனம் அந்த ஆலைக்குத் தேவை. ஆகவே அந்த ஆலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை டைரக்டர்களாக போடுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைத் தொழில், கிராமத் தொழில், சிறு தொழில் போன்ற வற்றிற்கு ஊக்கம் தரும் வகையில் மாவட்ட வளர்ச்சி மையங்கள் அமைத்து, அதிலே மைய அரசின் கருத்துக்களை இணைந்து செயல்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னுடைய தொகுதி, உண்மையிலேயே தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து அந்தப் பகுதியில் தொழில் அபிவிருத்தி செய்யவேண்டும்; தொழிற் பேட்டை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே காகிதத் தொழிற்சாலை உருவாக்குவதற்கு வேண்டிய மூலப்பொருள்கள், சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கின்றன. அதாவது, எறையூர் சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கை கிடைக்கிறது. பேட்டைவாய்த்தலையில் உள்ள சர்க்கரை ஆலையில் இருந்தும் சக்கை கிடைக்கிறது. அருணா சர்க்கரை ஆலையும் அருகில் இருக்கிறது. காட்டூர், மோகனூர், புகளூர்

சர்க்கரை ஆலைகள் அருகில் இருக்கின்றன. அங்கேயிருக்கும் சர்க்கரை ஆலை மூலமாக கரும்புச் சக்கை கிடைக்கிறது. மேலும், பச்சைமலை, கொல்லிமலை போன்ற இடங்களிலிருந்தும் மூங்கில் கிடைக்கிறது. அண்டமங்கலம் நீர்திட்டத்தின் மூலமாக அந்த காகித ஆலைக்குத் தேவையான நீர் கிடைக்கும். ஆகவே, காகிதத் தொழிற்சாலை அமைக்க பெரம்பலூர் மிகவும் சிறந்த இடம் என்று தெரிவித்து, அந்த இடத்தில் காகித ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பந்தட்டையில் இருந்து சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச் செல்வதற்கு டிரான்ஸ்போர்ட் வசதி இல்லை என்று சென்ற முறை சொன்னேன். இப்போது நான் மனம் திறந்து சொல்கிறேன். நான் அன்று வைத்த கோரிக்கையை உடனடியாக புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அதற்கு 24 லட்சத்தை ஒதுக்கி, சாலைகள் போடுவதற்கு உத்தரவு விட்டு, அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே மனப்பூர்வமாக, மனநிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல 11.20]

ஆகவே சர்க்கரை ஆலையில் இருக்கின்ற இயக்குநர் அவர்களும் அதிகாரிகளும், மக்களும் இந்தத் தமிழக அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். வேப்பந்தட்டையிலே கரும்புகளைக் கொண்டு செல்வதற்கு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கரும்பினை எடுத்துக் கொண்டு ஆலைக்குச் செல்வதற்கு சாலை வசதிகளை அமைப்பதற்காக வேப்பந் தட்டை பகுதி சாலை மேம்பாட்டிற்கு அதிக நிதி உதவி செய்திட வேண்டியது மிகவும் தேவை என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து பட்டுப்பூச்சி வளர்த்தல். இந்தப் பட்டுப்பூச்சி வளர்ப்பதைப் பொறுத்தவரையிலே அட்டவணையிலே......

பெரம்பலூர் மற்றும் அருகே உள்ள உப்பிலியபுரத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கின்ற காரணத்தால், பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு அந்த மக்களுக்கு தேவையான மானியமும், கடனும் மற்ற வசதிகளும் இந்த அரசு செய்து கொடுத்தால் அங்கே உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து சிமிண்ட் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கவேண்டும். அருகிலே அரியலூரிலே பெரிய தொழிற்சாலை இருக்கின்றது என்றிருந்தாலும் ஒரு பெரிய தொழிற்சாலை என்று இல்லாவிட்டாலும் சிறிய மினித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட

வேண்டும். ஏனென்றால் சிமெண்ட் தயாரிப்பதற்குத் தேவையான கடல் சுண்ணாம்பு, மற்றும் ஜிப்சம் போன்றவை அந்தப் பகுதியிலே அதிகமாக கிடைக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு, அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தாலே தொழில் மையத்தை உருவாக்கி தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குரிய நடவடிக் கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே இந்த அரசினுடைய சீரிய கவனத்திற்கு என்னுடைய கருத்தை நான் முன்வைக்கிறேன்.

அடுத்து தீப்பெட்டித் தொழில். அங்கே மலைப்பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. மலைப்பகுதிகளில் அதிகமான மரங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கே தீக்குச்சி தயாரிப்பதற்கு மிகவும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செயற்கை வைரத் தொழிற்சாலை. திருச்சிப் பகுதியிலே தொழிலதிபர்கள் அதிகமான அளவில் செயற்கை வைரங்களைத் தயாரிக்கிறார்கள். அவர்கள் பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே அந்தத் தொழிலை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும். ஆகவே இந்த அரசு அந்தச் செயற்கைவைர கூட்டுறவு தொழிற்சாலை நல்லமுறையில் உருவாவதற்கும் வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கூறியது மாதிரி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு எனக்கு நேற்றிரவு 11½ மணி அளவில்தான் கிடைத்தது. அதனால் சிலவற்றைப் படிப்பதற்கும் நேரம் இல்லை. ஆகவே நான் இப்போது பேசக்கூடிய நிலையில் சில விஷயங்கள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அந்தக் குறைபாடு இங்கே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலுக்கு 10 கோடியும் மூலதன செலவுக்கு 5 கோடியே 35 இலட்சமும் ஆக 15 கோடி ரூபாய்தான் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிக மிகக் குறைவு என்பதை நான் எடுத்துச் சொல்லப் பிரியப்படுகிறேன். தொழில் வளர்ச்சி அதிகம் வேண்டும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதி மிகவும் குறைவு. ஆகவே தொழில் வளர்ச்சி நல்ல முறையிலே ஏற்பட வேண்டும் என்றால் இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏகபோக முதலாளிகள் கையில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் நாட்டுடைமையாக்கப் பட வேண்டும். அதற்கு இந்த மாநில அரசு பொறுப்பல்ல. இது மத்திய அரசு செய்யவேண்டிய காரியம். மாநில அரசு, மத்திய அரசை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்த வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாநில அரசு சம்பந்தப்பட்டவரை இங்கே பல்வேறு தொழில்களை நிறுவும்போது, பொதுத்துறை, கூட்டுத்துறை என்று வருகின்ற கூட்டுத்துறை என்ற பெயரால் மத்திய அரசு ஏராளமான பணத்தைக் கொடுக்கிறது. மாநில அரசும் பணத்தைக் கொடுக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு சிறு மூலதனத்தை மட்டும் இவைகளில் போட்டிருக்கக்கூடிய தனியார் துறையைச் சேர்ந்தவர்களிடத்தில் பெரிய பொறுப்புக்களைக் கொடுத்து அவர்களை முக்கிய நிர்வாகிகளாக ஆக்குவது என்பது சரியானதாக இருக்காது. அதுபோன்ற காரியங்களினுடைய விளைவுகளை எல்லாம் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தூத்துக்குடி ஸ்பிக்-ல இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. ஆகவே ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட அந்த நிலைமையில் அதை மாற்றி அமைக்க முடியுமா என்பதைக்கூட இந்த அரசு ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அரசினுடைய தொழிற் கொள்கை தொழில் வளர்ச்சி மேலும் பெருகவும், வேலைவாய்ப்பு பெருகவும் உதவுகின்ற வகையில் இருக்கவேண்டும் என்பது எங்கள் கருத்து. அதற்கு வேண்டிய வளங்களும், வாய்ப்புகளும் நிறைய தமிழகத்திலே உள்ளன. உதாரணத்திற்கு சொல்லவேண்டு மானால், இங்கே நம்முடைய தமிழகத்தில் 7 சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதற்குவேண்டிய மூலப் பொருள்கள் ஜிப்சம், லைம் ஸ்டோன், கிளே, கோல் போன்றவைகள் பல மாவட்டங்களில் நிறைய, தேவைக்கு அதிகமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மூலப் பொருள்களை பயன்படுத்தி சிமெண்ட் தொழிற்சாலையை பரவலாக தமிழ் நாட்டிலே ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, ராமநாதபுரம், தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டங்களில் ஏற்படுத்த வேண்டும். தொழில் வளர்ச்சியில் அவைகள் பின் தங்கிய மாவட்டங்கள்.

இப்போது கொடுக்கப்பட்ட தொழில்கள் மான்யத்திற்கான கொள்கை குறிப்பிலே இல்லை, ஏற்கனவே கடந்த ஆண்டு கூறப்பட்டது—தமிழகத்திலே இருக்கக்கூடிய 20, 23 சர்க்கரைத் தொழிற்சாலைகள் இருப்பதால், இவைகளில் கரும்பிலே இருந்து இருந்து கிடைக்கக்கூடிய ('பேகாஸ்') சக்கையிலே இருந்து ஆங்காங்கே சிறுசிறு காகிதத் தொழிற்சாலைகளை நிறுவலாம். இப்போது 132 கோடி ரூபாய் செலவில் செய்திந்தாள் காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கான சூழ்நிலையை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மீடியம் சைஸ் தொழிற்சாலைகளாக ஆங்காங்கே பரவலாக இருப்பது நல்லது.

எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த 132 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தக்கூடிய இந்த செய்தித் தாள் காகிதத் தொழிற்சாலையை தனியார்களுக்கோ அல்லது

[திரு. சி. கோவிந்தராஜன்] [1979 ஏப்ரல் 21

ஜாயின்ட் செக்டார் முறையிலோ இல்லாமல், அதை இந்த அரசு பொதுத் துறையிலே நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேபோல் கண்ணாடித் தொழிற்சாலை. தொழிற்சாலை என்று நான் கூறும்போது, கண்ணாடித் கண்ணாடித் தொழிற்சாலை அல்ல. சாதாரண தயாரிக்கும் தொழிற்சாலை. மூக்குக் கண்ணாடி அவர்கள் கண்ணாடித் தொழிற்சாலைக்கான முதல் அமைச்சர் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக கடந்த ஆண்டு ஏற்பாடுகள் சொன்னார்கள். இந்த மூக்குக் கண்ணாடி அறிக்கையிலே கான மூலப் பொருள்கள் இங்கே எண்ணூர், தொழிற்சாலைக் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. சேலம், தென் எடுத்து இப்படிப்பட்ட தொழிற்சாலையை நாம் நிறுவ இவைகளை இன்றைக்கு பாரத் ஆப்தால்மிக் கிளாஸ் லிமிடெட், முடியும். விருந்து இந்தக் கண்ணாடிகளை வாங்குகிறோம்; துர்க்காபூரி களிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இன்றைக்கு வெளிநாடு மூலப்பொருள்கள் கிடைக்கும்போது இப்படிப்பட்ட இதற்கான தொழிற்சாலைகளை தமிழகத்தில் முக்கியமான முயற்சியை செய்யவேண்டும் என்று நான் ஏற்படுத்துவதற்கான அதன் மூலம், இங்கிருந்து மற்ற கேட்டுக்கொள்கிறேன், நாடுகளுக்கும் ஏற்றுமதி மாநிலங்களுக்கும், வெளி முடியும். ஆல் இந்தியா ஆப்டிகல் செய்யக்கூடிய வகையில் வளர மாநாட்டிலே 20—4—79 அன்று மத்திய லென்சஸ் உற்பத்தியாளர் அவர்கள் பேசும்போது, மாநிலங்களில் அமைச்சர் பகுகுணா உற்பத்தி மூலப் பொருள்களைக் கொண்டு கிடைக்கும் கண்ணாடி வளர்ச்சியைப் பெருக்கிக் கொள்ள இத்தொழிலின் பேசியிருக்கிறார்கள். அப்படி வாய்ப்புள்ளது என்று மென்றும் இந்த மாநாட்டில் மாநிலங்கள் முன்வர வேண்டு முக்கிய தொழிலுக்கான பேசப்பட்டது. இப்படிப்பட்ட என்று நான் சொல்லிக்கொள்ள திட்டங்களைப் போட வேண்டும் பிரியப்படுகிறேன்.

பெரும் தொழிலான சேலம் ஸ்டீல் பிளான்டைப் பற்றி நீண்டநாட்களாக நாம் கூறி வருகிறோம். அது உண்மையிலேயே ஸ்டீல் பிளாண்டாக இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டும் என்று கூறி வருகிறார்களே தவிர, அதற்கு வேண்டிய 'அயர்ன் வோர்' வெட்டி எடுப்பதற்கான ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படவில்லை, அதற்கு மாறாக, குளிர்ச்சியூட்டி வெட்டி அடித்துத் தயாரிக்கும் இரும்பைத் தயாரிக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. கனரகத் தொழில்களை இந்த சேலம் இரும்பு உருக்காலையைப் பயன்படுத்த செய்வதற்கு தவிர, வேறு பொருள்களை இந்தத் வேண்டுமே தயாரிக்கக் கூடாது. கனரக தொழிற்சாலையில் ஏற்படுத்தினால் தான், தொழில் தொழிற்சாலையை அங்கு முக்கியமான திட்டம். வளர்ச்சி ஏற்படும்; இது ஒரு காரியங்களை அதற்குப் பதிலாக இப்படிப்பட்ட செய்வதன் மூலம், எந்த நோக்கத்தோடு

1979 ஏப்ரல் 21] [திரு. சி. கோவிந்தராஜன்]

சேலம் ஸ்டீல் பிளான் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாத நிலையை உண்டாக்குவது சரியல்ல.

[முற்பகல் 11.30]

எனவே, சேலம் ஸ்டீல்ட் பிளாண்டை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் என்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சேலம் மாக்னசைட்டில் கான்டிராக்ட் முடிந்துவிட்ட பிறகு அதில் வேலை செய்த தொழிலாளர்களை வெளியே தள்ளினார்கள், இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நிறுவனத்தை அரசு ஆரம்பித்திருக்கிறது. இந்த நிறுவனத்தில் வெளியே தள்ளப்பட்ட தொழிலாளர்க அனைவரையும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அனைவ ரையும் பழைய சர்வீஸோடு எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

16—4—79-ல் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது. டிட்கோ மூலமாக 200 கோடி ரூபாய் செலவில் திருவண்ணா மலையில் கவுதிமலையிலும் வேதியப்பன் மலையிலும் அயர்ன் ஓர் வெட்டி எடுக்கப்போவதாகவும், இதன் மூலம் 140 மிலியன் டன்கள் கிடைக்கும் என்றும், ஆண்டுதோறும் இரண்டு மில்லியன் டன் வெட்டி எடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இந்த விவரம் ஒன்றும் அரசாங்கத்தினுடைய இந்த கொள்கை விவர அறிக்கையில் கொடுக்கவில்லை. இது உண்மையாக இருந்தால் டிட்கோ எடுத்திருக்கும் இந்த முயற்சிக்கு அரசாங்கம் போதிய ஆதரவு கொடுத்து இதை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மினி சர்க்கரை ஆலை, சிறிய சிறிய சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது என்று முன்னால் சொல்லப்பட்டது. இப்போது அதுபற்றி எந்த குறிப்பும் இதில் காணப்படவில்லை. அதே நேரத்தில் வாசுதேவ நல்லூரில் இப்படிப்பட்ட தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக சுமார் 4½ லட்சம் ரூபாய் ஷேர்கள் கலக்ட் பண்ணியிருப்ப தாகவும் தெரிகிறது. அது இதுவரை திருப்பிக்கொடுக்கப்பட்ட தாகவும் தெரியவில்லை. தொழிற்சாலையும் ஏற்படுத்தவில்லை. அங்கே பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று தான் கேட்டார்கள். அது இல்லையென்றாலும் இந்த மினி சர்க்கரை ஆலையாவது ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுகிறேன். ஏற்கனவே இதற்கான ஷேர் கலக்ட் பண்ணிவிட்டதினால் இனிமேல் இதை கைவிட்டுவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று 50 ஆயிரம் மக்கள் தொகை உள்ள இடத்தில் ஒரு லட்சம் மூலதனத்தில் 'டைனி செக்டாரில்' சின்னஞ்சிறிய தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்றும், இதற்

காக 10 சதவீதம் மூலதனம் 4 சதவீதம் வட்டியில் சலுகைக் கடன் கொடுக்கப்படும் என்றும் கடந்த ஆண்டில் குறிப்பிடப்பட்டிருந்தது இந்த ஆண்டு குறிப்பில் எதுவும் இதைப்பற்றி சொல்லவில்லை. கடந்த ஆண்டில் இருந்தது. இதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநாடு உப்புக் கரிசலை அடிப்படையாகக் கொண்டு, மின் சாரத்தின் மூலமும் ரூபாய் 3 கோடி செலவில் டிட்கோவும் மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களும் சேர்ந்து ஒரு மக்னீஸம் உலோகத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்றும், இதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்துவிட்டது என்றும் கடந்த ஆண்டில் சொல்லப்பட்டது. இந்த ஆண்டும் அதுபோல் நான் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எந்தவித . அபிவிருத்தியும் இல்லை. இன்னொரு விஷயம், பல்வேறு தொழில்களைப்பற்றி கூறியிருப்பதோடு, ஏற்கனவே இருக்கக்கூடிய தொழில்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பல்வேறு தொழிற் சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் திறப்பதற்கு இந்த அரசும், முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை ஏதும் எடுத்ததாகத் தெரியவில்லை.

1977-ம் ஆண்டு தொழில்துறை மான்யக் கோரிக்கையின் போது நமது முதலமைச்சர் அவர்கள் பேசியது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. நெல்லிக்குப்பத்திலுள்ள சர்க்கரை ஆலையில் புதிய மெஷின்களை கொண்டு வந்து ஆட்குறைப்புத் திட்டத்தைப் புகுத்தவேண்டும் என்று தீர்மானித்த போது, அந்த புதிய மெஷின்களை ஆலைக்குள் கொண்டுவரக்கூடாது என்று அங்குள்ள தொழிலாளர்கள் அதை எதிர்த்து மறியல் செய்தார்கள். அந்தச் சமயத்தில் நமது முதலமைச்சர் அவர்களே, நேரடியாக—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மட்டுமல்லாமல—முதலமைச்சர் அவர்களே, தலையிட்டார்கள். அந்த சமயத்தில் இதே சட்டமன்றத்தில் அது குறித்து முதல்வர் கூறியது—''இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் 25 ஆயிரம் பேர்கள் கரும்பு விவசாயம் செய்கிறார்கள், அவர்கள் பாதிப்பு அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அத்தனை பேரும் இங்கு வரவில்லை என்றாலும் அவர்களுடைய தூதுக்குழு சென்னைக்கு வந்து தேவைப்பட்டால் அந்தத் தொழிலை நாங்களே ஏற்று நடத்து கிறோம் என்று சொன்னார்கள்.'' அதை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, ''இந்தப் பிரச்னை 1,500 பேர் அல்லது 2,000 பேர்கள் பிரச்னை மட்டும் அல்ல. 25 ஆயிரம் விவசாயிகள் இதனால் பாதகம் அடைவார்கள், அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. ஆகவே அதை அனுமதிக்க இயலாது என்றும் அறிவித்தார்கள். அதோடு அரசு ஆலோசனையை தொழி லாளர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருந்தால் அத்தனை தொழிலாளர் களையும் வெளியேற்ற வேண்டிவந்திருக்கும். அனைவரும் கைது செய்யப்பட்டிருப்பார்கள், அவர்கள் மீது வழக்குகளும் போடப் பட்டிருக்கும் என்றும் அன்றைக்கு கூறினார்கள்.

எனவே, எண்ணிக்கையைப் பார்ப்பதானால். அந்தத் தொழிலாளர்களையும் பாதுகாக்கவேண்டும், அதைவிட அதிக எண்ணிக்கையிலே உள்ள கரும்பு உற்பத்தியார்கள் 25,000 பேர்கள் இருக்கிறார்கள்; அவர்களையும் பாதுகாத்தாக வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு ஒருசில தனிப்பட்ட முதலாளிகள் ஓரிருவர், அவர்களுடைய மானேஜ்மெண்ட் தவறு காரணமாக, தொழிலாளர்களிடையே சச்சரவு இல்லை, கூலி உயர்வு கேட்கவில்லை, போனஸ் தகராறு இல்லை, வேலை நிறுத்தம் இல்லை, ஆனால் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. மிஸ் மானேஜ்மென்டின் காரணமாக ஒருசில தொழிற்சாலைகள் இன்றைக்கும் மூடப்பட்டு கிடக்கின்றன.

குறிப்பாக, குரோம் லெதர் பாக்டரியை எடுத்துக் கொண்டால், இந்த ஊருக்கே இந்தத் தொழிற்சாலையினால் அந்தப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்த பாக்டரி 1908-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1965-ல் ஒரு தனிப்பட்ட நபர் நாகப்பச் செட்டியார், அதை எடுத்து நடத்திக் கொண்டு வருகிறார். சென்ட்ரல் பாங்கியில் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, அதிலே 2000 தொழிலாளர்கள் இருந்தார்கள். ஆனால், இப்போது 750 தொழிலாளர்கள்தான் அதிலே வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் ஆசியாவிலேயே மிகவும் நேர்த்தியான பைன் பிராடக்ட் செய்யப்படுகின்றது. இந்தத் தொழிற்சாலையில் 1976—77-ல் மட்டும் டர்ன் ஓவர் ஒன்றேமுக்கால் கோடி. அந்த ஆண்டு ஏற்றுமதி ஒன்றே கால் கோடி. இப்படிப்பட்ட தொழிற்சாலை கடந்த 10 மாத காலமாக மூடப்படவில்லை; மூடப்படாமல், வேலை நடக்காமல் இருக்கிறது. உற்பத்தி இல்லாமல் இருக்கின்றது. தொழிலாளர்களுக்கு 10 மாதங்களாக சம்பளம் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று சொன்னால், சுமார் 60 லட்சம் ரூபாய் மானேஜ்மெண்டால் மிஸ்—யூஸ் பண்ணப்பட்டிருக்கிறது. அதனால், மேற் கொண்டு சென்ட்ரல் பாங்கிலே கடன் கொடுப்பதற்கு முன்வரவில்லை என்று சொல்லப்படுகிறது.

தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் 8—8—78 அன்று அரசுக்கு தொழிற்சாலையை தாங்கள் ஏற்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று அன்றைக்கு நெல்லிக்குப்ப கரும்பு விவசாயிகள் மகஜர் கொடுத்ததைப் போல், முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதே மாதிரி ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இங்கே நாகப்பச் செட்டியார் குடும்பம் மட்டும்தான். இந்த நிறுவனத்திலே சுமார் 750, 80 தொழிலாளர்களின் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் தான் மெஜாரிட்டி, நாங்கள் நடத்துகிறோம், அனுமதியுங்கள். பண இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இன்றுவரை முதல் அமைச்சர் அவர்கள் இதற்குத் தீர்வு காணவில்லை. இந் தொழிலாளர் மெஜாரிட்டி எண்ணிக்கைப்பற்றி கவலைப்படவு

இல்லை ஆனால், இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்டுமெண்டு செகரடரி யிடமிருந்து நாகப்ப செட்டியார் வைத்த கோரிக்கைக்கு என்ன பதில் போகின்றது என்றால், உங்களுக்கு அந்த பாங்கு கடன் கொடுக்காது; பாங்கே எடுத்து நடத்த ஏற்பாடு செய்யுங்கள்.

மதுரை, மீனாட்சி மில் எப்படி நடத்தப்பட்டதோ, அதே மாதிரி நடந்த ஏற்பாடு செய்யுங்கள் என்று அக்கடிதம் கூறுகிறது. அப்பேர்ப்பட்ட முக்கியமான உற்பத்தியை ஆண்டு தோறும் பதினைந்து கோடி ரூபாய்க்குமேல், அந்நிய செலாவணியைத் தரக்கூடிய இந்த தொழிற்சாலையில் இன்றைக்கு வேலை நடைபெறவில்லை. அந்தத் தொழிற்சாலையிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இந்த மெஜாரிட்டி எண்ணிக்கையைப் பற்றி அரசு கவனிக்கவில்லை என்று நான் இந்த நேரத்தில குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இந்தத் தொழிற்சாலையை உடனடியாக திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்குள் பல்வேறு தொழிற்சங்கப் பிரச்னைகள் வந்துவிடுகின்றது. ஒரே சங்கம், ஒரே ரிஜிஸ்ட்ரேஷன், இன்னொரு சாரார் இதில் உரிமை கொண்டாடு கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எந்த சங்கத்தை வைத்துக் கொண்டாகிலும், தொழிற்சாலை முதலில் திறக்கப்பட வேண்டும், தொழிலாளர்கள் வேலைக்குப் போகவேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மூடப்பட்ட பல்வேறு தொழிற்சாலைகளின் பட்டியல் என்னிடம் இருக்கின்றது. எல்லாவற்றைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொல்ல எனக்கு நேரமில்லை. சக்தி பைப் நிறுவனம் இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. இன்னும் அது திறக்கப்பட வில்லை. இந்தியா மீட்டர்ஸ்—இதுவும் $2\frac{1}{2}$ ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. நம்முடைய அரசு இதில் வேண்டிய கவனம் செலுத்தவில்லை. கடைசியாக, 'பெல்' பொறுப்பேற்று நடத்துகிறது. அதேபோல் சதர்ன் சுவிச்கீர், 1978 மார்ச்சு மாதம் மூடப்பட்டது. அதற்குக் காரணம், டைரக்டர்களுக்குள் இருந்த உட்பூசல், பாங்கு மீண்டும் கடன் கொடுக்க மறுத்தது என்பதாகும். சங்கம் அரசாங்கத்தை அணுகி இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கூறியபோது, ஆதரவு தரப்படவில்லை. இதைத் திறப்பதற்கும் முயற்சி எடுக்கவில்லை.

[முற்பகல் 11.40]

ஆனால் மத்திய அரசு, குறிப்பாக மத்திய தொழிலமைச்சர் தலையிட்டு மானேஜ்மெண்ட் பொறுப்பேற்று ப்ரொடக்ஷன், சேல்ஸ் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறோம், மாநில அரசு பாங்குக்கு காரண்டியாவது கொடுக்க முன்வரவேண்டு மென்று கேட்டபோது கடைசிவரை நம்முடைய மாநில அரசு பாங்கு காரண்டி கொடுக்கக்கூடத் தயாராக இல்லாத நிலைமை இருந்தது. இப்போது பி.எச்.இ.எல். ஆபீசர் ஒருவர் சீஃப் எக்சிக்யூட்டிவ் ஆக இருந்து நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு பிப்ரவரி மாதம் 10ஆம் தேதி மாநில முதலமைச்சர் அவர்கள் சென்று

திறந்து வைத்தார்கள். அது உங்களுடைய சாதனைப் பட்டியலில்
வருகிறது. இத்தனை ஆண்டுகளாக அதைத் திறப்பதற்கு
வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் அக்கறை எடுத்துக்
கொள்ளாமல், சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் திறப்புவிழா
நடத்துவதற்கு மட்டும் செல்லுகிறீர்கள்.

மைகிரோ டூல்ஸ் தொழிற்சாலையில் ஒரு பிரச்சினை
அதிலே 350 தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
அது 1964-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. 1970-ல்
ப்ரொடக்ஷன் தொடங்கியது. சரியானமுறையில் நடத்த
முடியாத காரணத்தால் பம்பாயிலுள்ள வைமன் கார்டன
நிறுவனம் நடத்தக்கூடிய சூழ்நிலை வந்தது. அதன்பிறகு
நல்ல ப்ரொடக்ஷன் வந்தது. அங்குள்ள இண்டஸ்ட்ரியல்
கிரெடிட் இன்வெஸ்மெண்ட் கார்ப்பரேஷன் 40 லட்சம் ரூபாய்;
இண்டஸ்ட்ரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் 24 லட்சம் ரூபாய்;
நம்முடைய டி. ஐ. ஐ. சி. 31 லட்சம் ரூபாய், ஸ்டேட்
பாங்க் ஆப் ஹைட்ராபாத் 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்
கொடுத்து நடத்தப்பட்டது. அந்தக் கடன் திருப்பிக்
கொடுக்கப்படவில்லை. திடீரென்று நான் முதலில் சொன்ன
இண்டஸ்ட்ரியல் கிரடிட் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்
ஆப் இந்தியா ஹைகோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கியதன்
மூலம் அதை மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. லிக்விடேட்டர்
போடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை
1977-ம் வருஷம் ஏப்ரல் 4-ம் தேதி பார்ஷியல் லே ஆப்
செய்யப்பட்டார்கள். 27—7—77-ல் பாக்டரி முழுவதுமாக
மூடப்பட்டு 350 தொழிலாளர் குடும்பங்களும் நடுத்தெருவில்
நிற்கின்றன. அந்தத் தொழிலாளர்களில் வறுமையின் காரண
மாக மூன்று நான்கு பேர்கள் இறந்துவிட்டார்கள். அந்தத்
தொழிற்சாலையில் மானேஜிங் டைரக்டராக இருந்த டி.ஐ.ஐ.
சி.—க்கு பர்சனல் காரண்டி கொடுத்து கடன் வாங்கிய
நபர் திரு. அனந்தகிருஷ்ணன், இன்று டி.ஐ.ஐ.சி. ல் சேர்மனாக
இந்த அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால்
அது வருந்தத்தக்கது. ஒரு கடனைக் கொடுக்கும்போது
வயபிளாக இருக்கிறதா, ரிபேயிங் கெபாசிடி இருக்கிறதா
என்று பார்த்துக் கொடுக்கவேண்டும். ஒரு நிறுவனத்தில் இருந்து
அவரே காரண்டி கொடுத்து வாங்கிய கடனைத் திருப்பிக்
கொடுக்காத நிலையில் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்ட
சூழ்நிலையில் அந்தக் கடனை யார் திருப்பிக் கேட்க வேண்டுமோ
அந்தப் பொறுப்பில் அவ்வாறு கடன் பெற காரண்டி கொடுத்த
வரை பிறகு திருப்பிக் கொடுக்க முடியாதவரை டி. ஐ. சி.சி. ல்
சேர்மனாகப் போட்டிருக்கிறார்கள் என்றால் அந்தக் கடன்
எப்படி திரும்பி வரும். எப்படி அவர் மற்றவர்களுக்குக் கடன்
கொடுக்கப் போகிறார்? வயபிளா, ரிபேயிங் கெபாசிடி
இருக்கிறதா என்று கேட்க என்ன அந்தஸ்து அவருக்கு
இருக்கிறது என்ற நிலைமை எல்லாம் வரும். இதுபற்றி முன்பு
ஒரு கேள்விக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதிலே
சட்டப் பிரச்சினை இல்லையென்று சொன்னார்கள். சட்டப்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1979 ஏப்ரல் 21

பிரச்சினை இல்லையென்றாலும் மக்கள் மத்தியில் இதை
எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? இது நியாயமா? அவரை
விலக்கவேண்டும். இப்படிப்பட்ட விரோதம் சட்டமன்றத்தில்
தொடர்ந்து நடைபெறுவதைக் கண்டு அவரே விலகிக்
கொள்வதாக ஏற்பாடு இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கு
மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டி. ஐ. சி. சி. நிறுவனம் மற்றும் சில பொதுத்துறை
நிறுவனங்களில் ஆண்டி லேபர் பாலிசி இருக்கிறது. டி. ஐ. சி. சி.
நிறுவனத்திலுள்ள ஊழியர்களை அடிக்கடி ஊர்மாற்றுவதாகச்
சொல்லுகிறார்கள். ஏதாவது குற்றம் செய்தார்கள்
என்று சொன்னால் வேலையை விட்டு நீக்கப்படுவதாகவும்
சொல்லப்படுகிறது. அடிக்கடி ஊர் மாற்றம் செய்வதாகவும்
தெரிகிறது. கணவன் மனைவியைப் பிரிக்கக்கூடாது என்று
அரசாங்க உத்தரவு இருந்தாலும் இங்கு மனைவிக்கு வேலை,
கணவனை தஞ்சைக்கு மாற்றுகிறார்கள். இப்படிப்பட்ட
காரியங்களை எல்லாம் டி. ஐ. சி. சி. மானேஜிங் டைரக்டர்
செய்து வருகிறார். இதுகுறித்து எத்தனையோ தடவை
அரசுக்கு எடுத்துச் சொல்லியும் எந்தவித நடவடிக்
கையும் எடுக்கவில்லை. அவர்கள் சங்கம் வைத்து
விட்டார்கள் என்ற காரணத்தால்தான் இப்படிப்பட்ட
காரியங்கள் நடைபெறுகின்றன. அவர்கள் சங்கம் வைக்கக்
கூடாது என்ற கடந்த கால ஃப்யூடல் ஆட்டிடியூட் இருக்கிறது.
ஏன் அவர்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் சங்கம்
வைக்கக்கூடாது? இப்படிப்பட்ட நிலைமைகள் அரசைப்
பொறுத்த நிறுவனங்களில் இருக்கக்கூடாது.

அதே மாதிரி சுகர் டைரக்ட்ரேட்டில் கீழ் இருக்கக்கூடிய
சர்க்கரை ஆலைகள், குறிப்பாக கள்ளக்குறிச்சி ஆலையைப்
பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வேலியே பயிரை மேய்ந்தால்
என்ன செய்ய முடியும்? அங்கே ஒரு தொழிற் சங்கம் நீண்ட
நாட்களாக இருந்து வருகிறது. அவர்கள் கோரிக்கைகளை
எழுப்பியிருந்தார்கள். ஆனால் திடீரென்று ஜனவரியிலே ஒரு
சங்கத்தை ஏற்படுத்தி அவர்களோடு 18 (1) செட்டில்மென்ட்
தொழிற்சாலை நிர்வாகிகள் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே
ஒரு ஒப்பந்தம் பழைய அந்த சங்கத்தோடு ஏற்படுத்தியிருக்கிற
போது புதிய சங்கத்தை ஏற்படுத்தி வேறு ஒப்பந்தம் செய்
திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பிப்ரவரி மாதத்திலே
ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு கூட்டம் போட்டு
இன்னொரு சங்கத்தை ஏற்படுத்தி அங்கே செல்வாக்கைப்
பெறவேண்டுமென்பதற்காக ரூ. 15 அலவன்ஸ் என்பது மட்டுமல்ல
நாங்கள் 35 ரூபாய் வாங்கித் தருகிறோம் என்றுசொல்கிறார்கள்.
ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களின் சங்கத்தைப் பலப்
படுத்த வேண்டுமென்ற முறையிலே காரியங்கள் இன்றைக்கு
நடைபெறுகின்றன. சுகர் டைரக்டர் என்ன செய்தார்?
ஆளுங்கட்சியைச் சேர்ந்த சங்கம் என்ற காரணத்தால் அது

1979 ஏப்ரல் 21] [திரு. சி. கோவிந்தராஜன்]

நேற்று வந்ததா இன்றைக்கு வந்ததா என்று பார்க்கக்கூடாது.
என்ற முறையிலே சொல்லி அவர் செயல்படுக் கொண்டிருக்
கிறார். ஆளுங்கட்சி சங்கத்தை ஊக்குவிக்க அதிகமாக
37½ ரூபாய் ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, சுகர் டைரக்டர் மட்டும் அடிக்கடி மாற்றப்
படுகிறார். அவர்கள் எல்லாம் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்.
ஆனால் அங்கே ஜாயின்ட் டைரக்டராக ஒருவர் இருக்கிறார்:
அவருக்கு ஒன்று அந்தத் தொழிலிலே அனுபவம் இருக்க
வேண்டும், அல்லது எஞ்சினியராக இருக்கவேண்டும், இரண்டும்
கிடையாது. அல்லது அட்மினிஸ்ட்ரேட்டரும் கிடையாது.
கெமிஸ்டும் கிடையாது. அவர் தொடர்ந்து ஆண்டுக்கணக்கில்
அங்கிருந்து கொண்டு வேண்டியவர்களுக்கு சலுகைகள் அளித்து
அங்கே விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஒரு கோஷ்டியை
உண்டுபண்ணுவது அல்லது அதிகாரிகளுக்கும் தொழிலாளர்
களுக்கும் ஒரு கோஷ்டியை உண்டுபண்ணுவது போன்ற
வேலைகளைச் செய்து வருகிறார், ஆகவே, 3, 4 ஆண்டு
களுக்கு ஒரு முறை ஏன் இவர்களையெல்லாம் மாற்றக்
கூடாது. டைரக்டர் மாறுகிறார். இவர். மாறுவதில்லை.
அனுபவமும் திறமையும் இல்லாதவர்கள் பல இடங்களுக்கு
ஏன் மாற்றக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து டிட்கோ. அரக்கோணத்திலே ஸ்டீல் பிளான்ட்
இருக்கிறது. ஆன்டிலேபர் சம்பந்தமாக ஒரு கருத்தைச்
சொல்லவிரும்புகிறேன். அங்கே மொத்தம் உள்ள 400தொழிலாளர்
களில் 280 தொழிலாளர்கள் ஒரு சங்கத்தை நீண்ட நெடு நாட்
களாக நடத்தி வருகிறார்கள். அது அங்கீகரிக்கப்பட்ட சங்கம்.
25-4-74இல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. பல கோரிக்கைகள்
சம்பந்தமாக ஏற்பட்ட ஒப்பந்தம் அது. அதிலே அந்தச்
சங்கத்திற்காக ஒரு சிறு அலுவலகத்தையும் கொடுக்க ஒப்புக்
கொள்ளப்பட்டது. ஆனால் திடீரென்று 24-3-78 அன்று
அதை காலிசெய்யவேண்டுமென்று உத்திரவு போகிறது.
இந்த நிலைமையில் இன்னொரு சங்கம் ஆரம்பிக்கப்படுகிறது.
எங்கள் சங்கம் அங்கீகாரம் பெற்றது. நீங்கள் திடீரென்று
இப்படிச் செய்யலாமா பரிசீலனை செய்ய வேண்டாமா என்று
இவர்கள் கேட்டும் பலனில்லை. அதற்குப் பிறகு ஜாயின்ட்
கமிஷன் ஆப் லேபர் 14-6-78 அன்றைய தினம் அங்கீகரிக்கப்
பட்ட சங்கம் அது. அதை திருப்பி ஒப்படைக்கக் கோருவது
சரியல்ல என்ற கடிதத்தை அனுப்பியிருக்கிறார். இருந்தாலும்
பாதுகாப்புப் படையை அனுப்பி அங்கே பலாத்காரமாக காலி
செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இன்றைக்கு சோளிங்கர்
முன்சிப் கோர்டில் அவர்கள் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள்,

அடுத்து ஸ்ரீகிருஷ்ணா ரிபைனரீஸ், ஈரோடு. அதைப்பற்றி
ஏற்கெனவே திரு. ரமணி அவர்கள் இங்கே தொழிலாளர்கள்
சம்பந்தமாக பேசும்போது குறிப்பிட்டார்கள். அது சம்பந்த
மாக ஏற்கெனவே ஒரு மனு கொடுக்கப்பட்டு அது

[திரு. சி. கோவிந்தராஜன்] [1979 ஏப்ரல் 21

முதலமைச்சர் கையில் இருக்கிறது, அதைப்போலவே
ஸ்ரீ சண்முகசுந்தரம் டிரேடர்ஸ், ஸ்ரீ பாலசுப்பிரமணியம்
டிரேடர்ஸ், காவிரி ஆயில் அண்ட் பர்டிலைசர்ஸ், துரை
கிருஷ்ணா ரைஸ் அண்ட் ஆயில் மில்ஸ் இவைகள் எல்லாம்
ஒரே குடும்பத்திற்குச் சொந்தமானவை. இவைகள் எல்லாம்
1970 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கூட
கிட்டத்தட்ட 8, 9 ஆண்டுகளாக இவைகள் பதிவு
செய்யப்படவே இல்லை. தொழிற் சங்கம் வந்த
பிறகு, தொழிலாளர் பிரச்சனை வந்தபிறகு அப்போதுதான்
தெரிந்தது அது பதிவு செய்யப்படவில்லை, என்று அங்கே
எந்தவிதமான ரிகார்டும் கிடையாது, கொள்கை
லாபம் அடித்திருக்கிறார்கள், வரிக் கட்டுவதில் டிமிக்கி
கொடுத்திருக்கிறார்கள், தொழிற்சாலைகளைப் பதிவு செய்யவே
யில்லை என்றால் என்ன நிலைமை என்பது உங்களுக்குத்
தெரியும். அங்கே இருக்கின்ற பேக்டரி இன்ஸ்பெக்டர்,
சூப்பரின்டென்டிங் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரி எல்லாம்
இவர்கள் செல்வாக்கில் இருக்கிறார்கள். அவர்கள் உதவி
செய்திருக்கிறார்கள், பெரும் புள்ளிகள் எல்லாம் மேல் மட்டத்
திலே சென்னையிலிருந்து கொண்டு இவர்களுக்கு உதவி செய்
திருக்கிறார்கள், இதைப் பற்றியும் முதல் அமைச்சரிடத்திலே
புகார் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிற்சங்
கத்தின் புகாரின் பேரில் 24-6-78 அன்று முன் தேதியிட்டு
இத்தொழிற்சாலையை இப்போதுதான் பதிவு செய்திருக்
கிறார்கள். அரசுக்குச் சேரவேண்டிய வரி பாக்கிகளையும், மற்ற
பாக்கிகளையும் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு

(முற்பகல் 11-50)

மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்டத் தொழில்
அதிபர்களை எல்லாம் பிராசிக்யூட் செய்வதற்கு--சட்டத்தை
மீறுபவர்கள், அரசாங்கத்தை ஏமாற்றுபவர்கள், வரி டிமிக்கி
கொடுப்பவர்கள் இவர்களை பிராசிக்யூட் செய்ய தயக்கம்,
அல்லது புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கவில்லை,
தாமதம் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால், தங்களுக்குப்
பிடிக்காத தொழிற்சங்கம் ஏதாவது இருக்கிறதா என்று
பார்த்து, சட்டத்திற்குப் புறம்பாக, சட்டம் இருக்கிறதா
என்று கூட சரியாக பாராமல், தொழிற்சங்க வரலாற்றிலேயே
இல்லாத நிலைமையில், தொழிற்சங்கம் மேல் பிராசிக்யூட்
செய்ய நடவடிக்கை எடுக்கிறீர்கள் அது வேறு பிரச்சினை.
வரிப்பணத்தைக் கொடுக்காமல் டிமிக்கி கொடுக்கிற நிலையில்
சட்டங்களை வயலேட் பண்ணக்கூடிய நிலையில் உள்ள
முதலாளிகளை பிராசிக்யூட் செய்ய இந்த அரசுக்கு திராணி
இல்லை ; வேறு திசையில் உங்களுடைய கவனத்தைச்
செலுத்திக் கொண்டிருப்பது சரியல்ல என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

பிளாக் கிரானைட்டைப் பற்றி பேசப்பட்டது. அரசாங்கம்
தேசியமாக்கும் என்று கடந்த ஆண்டிலேயே சொல்லியது.
இருந்தாலும், மின்சாரத் துறை அமைச்சர் நேற்றோ, முந்தைய

1979 ஏப்ரல் 21] [திரு. சி. கோவிந்தராஜன்]

நாளோ, முதலமைச்சர் சார்பாக கேள்விக்குப் பதில் சொல்லும்
போது, தனியார்களுக்கு ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்டதால்
அது ரத்து செய்யப்படாது என்று சொன்னார்கள். அத்
தொழிலில் டான்சி நிறுவனம் ஒன்றுதான் அரசு சார்பாக
இருக்கிறதே தவிர மற்றவர் எல்லாம் தனி காண்டிராக்டர்கள்,
ஆண்டொன்றுக்கு ரூ. 15 கோடி ரூ. 20 கோடி அன்னியச்
செலாவணி பெற்றுத் தரக்கூடிய தொழில் அது. இன்றைக்கும்
தனியார் துறையில் இருக்கக் கூடிய பல்வேறு ஆட்கள் அதை
எடுத்து நடத்துகிறார்கள். தென் ஆற்காட்டில், குன்னம்கரசனூர்,
திருவக்கரை, எரையூர், பெரும்பாக்கம் போன்ற பல்வேறு
இடங்களில் அத்தொழில் நடக்கிறது. வேறு பல மாவட்டங்
களிலும் நடக்கிறது. ஆந்திராவைச் சேர்ந்த மைக்கா மைன்
ஓனர்ஸ் தான் இந்த காண்டிராக்டர்கள். இவர்கள் பிரிமியர்
கிரானைட்ஸ், சோழா கிரானைட்ஸ், பல்லவா கிரானைட்ஸ்,
பாலாஜி கிரானைட்ஸ், ஜெம் கிரானைட்ஸ் என்று நம் நாட்டு
தமிழ்நாடு கிரானைட்ஸ் பெயர்களை வைத்து, ஏராளமான
தனியார் ஆட்கள் நடத்துகிறார்கள். அங்கு தோண்டி எடுக்கும்
போது, ஒரு கன மீட்டர் எடுக்க பர்மிட் இருந்தால், 2 கன
மீட்டர் எடுத்துக்கொள்கிறார்கள். ஏற்றுமதி லைசன்ஸ்
பெற்றிருப்பவர்கள், ஒரு கன அடிக்கு ரூ. 8,000 பெறக்கூடிய
நிலைமை இருக்கிறது. ஆனால், காண்டிராக்ட் முறையில்,
தொழிலாளிக்கு, ஒரு கன அடி எடுக்க ரூ. 8·0, ரூ 8·50 தான்
கொடுக்கப்படுகிறது. அது ஒரு புறம் இருக்கட்டும். எனவே,
அதனை அரசே எடுத்து நடத்தவேண்டும். அதற்கான ஒரு சர்வே
நடத்துங்கள். வெறும் டான்சி மட்டும் எடுத்து நடத்தினால்
போதாது. இது நல்ல தொழில், ஏராளமானவர்களுக்கு வேலை
வாய்ப்பு கொடுப்பது மட்டுமல்ல, ரூ. 15, ரூ. 20 கோடி அன்னியச்
செலாவணி ஈட்டுக் கொடுக்கும் தொழில். ஆகவே, அரசே
அதனை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முந்திரிப் பருப்புத் தொழிற்சாலை, கன்னியாகுமரியில்,
சிறிய-பெரிய தொழிற்சாலைகளைச் சேர்த்து, 150 தொழிற்
சாலைகள் இருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில்
ஒரு சில தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால், இன்றுள்ள
நிலைமை என்ன? 75,000, 80,000 தொழிலாளர்கள் வேலை
யற்றிருக்கிறார்கள். கச்சா முந்திரி கிடைக்காமல், தேவையான
கச்சா முந்திரியை மத்திய அரசு வெளிநாட்டிலேயிருந்து
இறக்குமதி செய்யவேண்டும். கச்சா முந்திரியை புரக்யூர்
செய்யும் உரிமையைத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு
விடாமல், அல்லது தனியார்களுக்கு விடாமல், அரசே புரக்யூர்
செய்து தொழிற்சாலைகளுக்கும் 'அலாட்' செய்யவேண்டும்.
இன்னும் அந்த 'காஷு' பிளான்டேஷன்' களை, முந்திரித்
தோட்டத்தை வளர்க்க நாம் முயற்சி செய்யவேண்டும்.
அதன் மூலம் அன்னியச் செலாவணி மட்டும் அல்ல, ஆயிரக்கணக்
கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு மட்டுமல்ல, நல்ல
ஆதாயமும் கிடைக்க வழி இருக்கிறது என்பதை இந்தச் சமயத்
தில் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1979 ஏப்ரல் 21

ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சம்பந்தமாக ஒரு தகவல் இருக்கிறது.
கோட்டா கொடுப்பதில் தவறுகள் இருப்பதாகத் தெரிகிறது.
இந்த அரசு செய்ததல்ல, ஏற்கனவே இருந்த அரசு செய்து
வந்தது. இங்குள்ளவர்கள் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பர்மிட் வாங்கி
பம்பாயில் உள்ளவர்களுக்கு விற்று, பம்பாயில் சாமான்களைச்
செய்து, இங்கே கொண்டுவந்து விற்பதாகத் தகவல் வருகிறது.
எனவே, கோட்டா கொடுப்பதை புனர் பரிசீலனை செய்ய
வேண்டும். யார், கோட்டா ஹோல்டர்ஸோ அவர்களே.
சாமான்களைச் செய்வதற்கான கருவிகளை இங்கே வைத்திருக்
கிறார்களா என்று பார்த்து, அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை
யென்றால் அந்த கோட்டாவை ரத்து செய்து, கருவிகள் வைத்தல்
போன்ற நிலைமைகளை உருவாக்கியதற்குப் பிறகு, கோட்டா
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி சம்பந்தப்பட்டவரை, நான் தொழிலாளர்,
மற்ற பிரச்னைக்குப் போகவில்லை. 'காம்போசிட் மில்ஸ்'
உற்பத்தி செய்யக்கூடிய துணிகளின் 'காஸ்ட் ஆப் புரடக்ஷன்'
உற்பத்திச் செலவு-கைத்தறி துணிகளின் உற்பத்திச் செலவை
விட 35சதவீதம் குறைவாக இருக்கிறது. அதற்கு அடிப்படை
காரணம், அந்த மில்லில் உருவாக்கக்கூடிய நூலை 35 சதவீதம்
குறைத்து அவர்களுடைய தறிகளுக்குக் கொடுப்பதுதான்.
இதனால், கைத்தறிக்கும், மில்லில் செய்யக்கூடிய துணிக்கும்
35 சதவீதம் உற்பத்திச் செலவில் வேறுபட்டிருக்கிறது.

எனவேதான் அரசு அதே விலைக்கு கைத்தறிக்கும் சப்ளை
செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அந்த நூல் அதிபர்
களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அதே மாதிரி, செங்கற்பட்டு ஆரணியில்
இருக்கக்கூடிய கைத்தறித் துணிகள் மிகவும் தரமானவை.
இங்கே இருக்கக்கூடிய அனகாபுத்தூரில் இருந்துகூட கர்சீப்புகள்
மற்றும் பல விலை உயர்ந்த துணிகள் லிபியா, டான்சானியா
போன்ற நாடுகளுக்கு அரசுக்குத் தெரியாமல் அனுப்பப்படுகிறது.
அந்த துணிகள் எல்லாம் சில்கைவிட தரத்தில் சிறந்தவை
என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவைகளை கள்ளக்
கடத்தலாக செய்து வருவதாக தெரிகிறது. ஆனால் இந்த
உற்பத்திகளை ஊக்குவித்து இந்த ஏற்றுமதியை அரசே ஏற்றுக்
கொண்டு சட்டபூர்வமாக்கி அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்
தால் 20, 30 கோடி ரூபாய்களுக்கு அன்னிய செலாவணி
கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

அடுத்து பழனி வட்டம் ஆயக்குடி பகுதியிலே மா, கொய்யா,
வாழை மரங்கள் அதிகம் உண்டு. அந்தப் பகுதி மக்களுடைய
நீண்டநாளைய கோரிக்கை ஒரு பழங்களை பதப்படுத்தும்
தொழிற்சாலை வேண்டுமென்பது. ஆகையினால் பழங்களை
பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அங்கே நிறுவ வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு
நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

1979 ஏப்ரல் 21]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்
களே இன்றைய தினம் தொழில், தொழில் வளர்ச்சி ஆகிய
இரு மானிய கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்புக் கொடுத்த
மைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகம் தொழில் துறையில் 11-வது இடத்தை
வகித்துக் கொண்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராசர்
அவர்கள் காலத்தில் தொழில் துறையில் தமிழகம் 2-வது
இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு முழுவதுமாக இந்த
அரசுதான் காரணம் என்று சொல்லவில்லை. இதற்கு முன்
னால் ஆட்சியில் இருந்த அரசின் தொழிற் கொள்கையின்
காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று
இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டுமேயானால்
தொழில்கள் துவங்கப்படக்கூடியவர்களுக்கு வேண்டியவர்கள்,
வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் தொழில் அதி
பர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் முன் வந்து
கொடுப்பார்களேயானால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி
ஏற்பட முடியும். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டும் அல்ல, தமிழகத்தில்
புதிய தொழில்கள் தொடங்குவதற்கு எவைகள் தடைகற்களாக
இருக்கின்றன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதல் அடிப்படையாக தொழில் தொடங்குவதற்கு இடம்
கிடைக்க வேண்டும். நிலத்தின் விலை இப்பொழுது உயர்ந்து
கொண்டிருப்பதை பார்க்கிறோம், நிலம் கிடைத்தாலும்
அடுத்து கட்டிடம் கட்ட வேண்டும். கட்டிடம் கட்டுவதற்கான
மூலப் பொருள்களான சிமெண்ட், இரும்பு, சுண்ணாம்பு
போன்ற பொருட்களின் விலைகளும் உயர்ந்துக் கொண்டிருக்
கிறது. அப்படிப்பட்ட தடைகளை மீறி கட்டிடங்கள் கட்டி
னாலும் தொழிலை உடனடியாகத் துவக்க முடியாது. ஏகப்
பட்ட சிரமங்கள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட நகராட்சி,
ஊராட்சிகளில் இருந்து லைசன்சுகள் பெறுவதற்கு மிகவும்
சிரமப்பட வேண்டியிருக்கிறது. மின் இணைப்பு பெறுவதும்
மிகவும் சிரமமாக இருக்கிறது. இப்படிப்பட்ட தடைகற்கள்
இருந்தால் நமது மாநிலம் தொழில் துறையில் எப்படி முன்னேற்
றத்தைக் காண முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

நிர்வாகத்தில் கால தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க
வேண்டும். காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் மட்டும்
சொல்லவில்லை. நமது முதலமைச்சர் அவர்களே தொழில்
அதிபர்கள் கூட்டத்தில் சென்ற மாதம் பேசிய நேரத்தில்
குறிப்பிட்டிருந்தார், "தமிழகத்திலே நான் போடக்கூடிய
உத்தரவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிடைப்பதற்கு

6 மாத காலம் ஆகிறது. அந்த அளவிற்கு துறைகளிலே கால
தாமதம் ஏற்படுகிறது '' என்று குறைபாட்டை அவரே கூறி
யிருப்பதை பத்திரிகைகளில் பார்த்தோம். இப்படிப்பட்ட
குறைபாடு முதலமைச்சர் கூறியதுபோல் இருக்குமேயானால்
எப்படி திட்டமிட்டபடி தொழில் துறையிலே முன்னேற்றத்தைக்
காண முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே, கால தாமதத்தை தவிர்த்து தமிழகத்தில் தொழில்
முன்னேற்றத்தை ஏற்படுத்த, முதல் அமைச்சர் அவர்கள்
ஆணையிட்டு நிர்வாக அமைப்பு முறைகளை மாற்றியமைக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல.
இன்றைக்கு தொழில் துறைக்காக அரசாங்கம் பல தேவையான
கொள்கைகளை உடனடியாக அறிவித்திருக்கிறது.

இருபத்தைந்து குதிரைச் சக்திக்கு மேற்படாத ஸ்தாபனங்
களுக்குஅவைகளை நிறுவுவதற்காக லைசன்ஸுகள் இல்லாமலேயே
மின் இணைப்பு பெறலாம் என்று உள்ளது. இது புதிய புதிய
தொழில்கள் தமிழகத்திலே துவங்குவதற்கு பேரளவிற்கு உதவி
யாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

தமிழகத்திலே புதிய தொழில்கள் துவங்கப்படுவதற்கு முன்
எந்தெந்த தொழில்களுக்கு முன் உரிமை அளிக்கப்பட வேண்டும்
என்று ஆராய்ந்து உணர்ந்து பார்க்க வேண்டும். படித்தவர்
களும் படிக்காதவர்களும் லட்சக்கணக்கில் தமிழகத்தில் இருக்
கிறார்கள். அப்படிப்பட்ட படித்த, படிக்காத வேலையற்றிருப்
போர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் சிறு
தொழில்கள் துவங்குவதற்கான உதவிகளை செய்து கொடுக்க
வேண்டும். அச்சிறு தொழில்களை கிராமப் புறங்களில்
ஆரம்பிப்பதற்கும் அரசு நிதி உதவிகளை தாராளமாகச்
செய்ய முன் வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஒவ்வொரு ஊராட்சிப் பகுதிகளிலும் இன்றைக்குத் தொழி
ல்கள் துவங்குவதற்கு பல்வேறு தடைக் கற்கள் இருக்கின்றன.
குடியிருப்பு பகுதி, குடியிருப்பு இல்லாத பகுதி, தொழில்
வளர்ச்சிப் பகுதி என்று 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்
கிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் தொழில் பகுதிகளை
நிர்ணயித்து அவற்றை அறிவிக்கும் செயல்கள் 6 மாத காலத்
திற்குள் முடிக்கப்படவேண்டும் என்று அரசு ஆணையிட்டு
இருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். இந்த
புதிய முயற்சியின் காரணமாக இன்று புதிய தொழிற்சாலைகள்
ஆங்காங்கு ஆரம்பிக்க உதவியாக இருக்கும் என்று கூறிக்
கொள்கிறேன், 25 குதிரைத் திறன் மேற்படாத மின் இணைப்
புக் கொண்ட தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில்
அவர்கள் தொழிற்சாலை ஆய்வாளர்களின் ஒப்புதலும் பெறத்
தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது தமிழகத்
தின் தொழில் முயற்சியில் ஒரு புதிய முயற்சி என்று சொல்லிக்
கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் சிறு சிறு தொழில்கள் 800-க்கு
மேற்பட்ட தொழில்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தொழில்
களில் சுற்றுப்புற சூழ்நிலை, சுகாதார சூழ்நிலை ஆகியவை
குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒரு குறிப்பிட்ட 14
வகைத் தொழில்களைத் தவிர மற்றவற்றிற்கு அந்தத் துறை
களுக்கு செல்ல வேண்டாம் என்று சொல்லி இருப்பது வரவேற்
கத் தக்கதாகும். இது சிறு தொழில்களை ஊக்குவிக்கும் என்று
மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு சுகா
தாரத் துறையை எடுத்துக் கொண்டால், இன்று அங்கே
இருக்கும் மாவட்ட சுகாதார அலுவலர்கள் இன்றைக்கு சிறு சிறு
குறைகளை சுட்டிக்காட்டி, அதன் காரணமாக பல தொழில்கள்
ஆரம்பிக்க முடியாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமை
களை உடனடியாக தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

கிராமப்புறங்களில், சிறு சிறு தொழில்களை வளர்ப்பதற்காக
மைய அரசு பின் தங்கிய மாவட்டங்களில் தொழில்களை
துவக்க 15 சதவீதம் மானியம் அளிக்கிறது. சில குறிப்பிட்ட பகுதி
கள் தான் தமிழ் நாட்டில் தொழில் துறையில் பின்தங்கிய
மாவட்டமாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இன்னும்
பல பகுதிகள் தமிழ் நாட்டில் தொழில் துறையில் பின் தங்கி
யிருப்பவை இருக்கின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் தமிழ்
நாடுஅரசே பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்து, 15 சதவீதம்
மானியம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால். மத்திய
அரசு மாநில அரசு அறிவித்த பகுதிகளுக்கு மானியம் கொடுக்க
மறுக்கலாம். அந்த நிலைமை ஏற்பட்டால், மாநில அரசே
அந்த மானியத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மாவட்டங்களில் இன்று தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்
பட்டு இருக்கின்றன. அந்த மாவட்ட தொழில் மையத்திலே
இன்று பல மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடத்தினார்கள்
சேலத்தில் நடத்தினார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
குழந்தைவேலு அவர்கள் அந்த கருத்தரங்குகளில் கலந்து கொண்
டார்கள். எனக்கும் வாய்ப்பு கிடைத்தது, நானும் கலந்து
கொண்டேன். அந்த மாவட்டங்களில் கருத்தரங்குகள்
நடத்துவது நல்லதுதான். அந்த கருத்தரங்குகளில் மக்கள் ஆயிரக்
கணக்கான மனுக்களை அமைச்சரிடம் கொடுத்து, இன்னின்ன
தொழில்களை ஆரம்பிக்க எங்களுக்கு அனுமதி வேண்டும் என்று
கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முதல
மைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு அறிவிப்பு செய்வதாகச்
சொன்னார்கள். ஆனால் எந்த அறிவிப்பும் வரக்காணோம்.
அவர் உறுதிகொடுத்து பல மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும்
அரசின் அறிவிப்பு வரவில்லை. ஆகவே, உடனடியாக அமைச்சர்
அவர்கள் அதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் மையங்கள் மூலமாக, தொழில் ஆரம்பிக்க அந்த
மாவட்ட தொழில் மையமே கடன் வசதி செய்யவேண்டும்,
மேலும், அத்தகைய வசதி வாய்ப்புகளையும் தொழில் மையம்
தேடித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்
புறத்தில் உள்ள வங்கிகள் புதிதாக தொழில்களைத் துவங்க
யார் வந்தாலும் அவர்களை மதிப்பது இல்லை, ஆகவே,
தமிழக அரசு கிராமப் புறத்தில் புதிய தொழில்களை உருவாக்கி,
வேலை வாய்ப்பு அற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க
உதவி புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் உதவி பெற்று ஆரம்பிக்கும் எல்லா
நிறுவனங்களும் அந்தந்தப் பகுதி மக்களுக்கு அந்தத் தொழிற்
சாலையில் வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்தில் ஒரு தொழில் துவங்கப்
படுகிறது என்றால் திருநெல்வேலி, கன்னியாகுமரி மக்கள் அதிக
மான அளவிற்கு அதிலே வந்து விடுகிறார்கள். சேலத்தில்
இருப்பவர்கள் அங்கே வேலை பார்ப்பவர்களைப் பார்த்து
ஏங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் எந்தப் பகுதி
யில் வேலை ஆரம்பித்தாலும் அந்தந்தப் பகுதியில் வாழும்
மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நிபந்தனையை
அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சேலத்தில் தமிழ்நாடு மேக்னசைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தை
இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்து வைத்தார்கள்.
இன்றைக்கு இந்தியாவிலேயே மேக்னசைட் அதிகமாகக் கிடைக்கக்
கூடிய இடம் சேலம் மாவட்டம். 40 ஆண்டுகளாக அது
தனியார் துறையிலே இருந்தது, அது லாபகரமாகவும்,
திறமையான முறையிலேயும் நடைபெற்று வந்தது. அந்த
நிறுவனத்தை அரசு மேற்கொண்டு தனியாருடைய திறமையையும்
பயன்படுத்தி இன்றைக்கு கூட்டு நிறுவனமாக ஏற்படுத்தி
இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. இன்றைக்கு
நாட்டிலே பல புதிய தொழில்கள் இருந்தாலும். தனியாருடைய
திறமையைப் பயன்படுத்தக்கூடிய வகையில் கூட்டு நிறுவனங்கள்
ஏற்படுத்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நிறுவனத்தைக் கூட கூட்டு நிறுவனம் என்று அறிவித்
தால் மட்டும் போதாது. இன்றைக்கு மேலும் அதை
விஸ்தரித்து மேலும் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கின்ற
வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து தென் இந்தியாவிலேயே சேலம் மாவட்டத்தில்தான்
கிளாஸ் ஃபேக்டரி அதாவது கண்ணாடி டம்ளர் போன்றவை
செய்யக்கூடிய தொழிற்சாலை இருக்கின்றது. அங்கே அந்தத்
தொழிற்சாலை 1976-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மூடப்பட்டு
விட்டது. அந்த நிறுவனத்தை மூடிவிட்டார்கள். 28 மாத
காலமாக மூடிக்கிடக்கும் அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த

500 குடும்பங்கள் சென்ற நிதிநிலை அறிக்கையின்போது கூட
இங்கே வந்து மறியல் செய்துகைது செய்யப்பட்டார்கள்.
அதற்குப் பிறகு முதலமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதியின்
பேரில் அவர்கள் விடுவிக்கப்பட்டு சென்றார்கள். ஆனால்
மாதங்கள் 28 ஆகியும் மூடப்பட்ட தொழிற்சாலை திறக்கப்
படவில்லை. எத்தனையோ தொழில்களை ஏற்று நடத்தக்
கூடிய இந்த அரசு ஏன் சில பல இலட்சங்களை ஒதுக்கி இந்தத்
தொழிற்சாலையையும் ஏற்று நடத்தக்கூடாது என்று கேட்
கிறேன், இந்த அரசினுடைய இலட்சியங்கள் உயர்ந்த இலட்சி
யங்கள். ஆகவே ஒரு 15 இலட்சம் என்பது பெரிய காரியம்
அல்ல. ஆகவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர
வர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.
நேரம் ஆகிவிட்டது.

திரு. சேலம். மு. ஆறுமுகம்: ஆகவே, நம்முடைய முதலமைச்
சரவர்களைப் பொறுத்தவரையில் அவருக்கு இலட்சியங்கள்
தான் பெரிது. லட்சங்கள் பெரிதல்ல. ஆகவே அப்படிப்
பட்டவர் சேலத்திலே மூடிக்கிடக்கின்ற கண்ணாடித் தொழிற்
சாலையை அரசே ஏற்று நடத்த வழி செய்து 500 குடும்பங்
களுக்கு ஆக்கத்தை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன், திண்ணமாக.

இன்றைக்கு வாய்க்கு அழகாக, தமிழகத்திலே பேசினால்
மட்டும் போதாது. வளமான தொழில் கொள்கை இல்லா
விட்டால் வளமான தமிழகத்தைப் பார்க்க முடியாது
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன். ஆகவே தமிழக அரசு வருங்காலத்தில் சிறந்த
தொரு தொழில் கொள்கையை ஏற்படுத்தவேண்டும். சில
தொழில்கள் துவங்குவதற்கு உடனடியாக எந்தவிதமான தடை
யும் இல்லாமல் கடன் உதவி செய்து கொடுக்க வழி செய்ய
வேண்டும். இன்றைக்கு நிர்வாகத்திலே ஆமை வேகத்திலே
செயல்படக்கூடிய அதிகாரிகளை தூக்கி எறிந்துவிடவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பகுதியில்
பெல் சார்பாக ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு 500 ஏக்கர்
நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிற அந்தப் பகுதியிலே அது
ஏற்படுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகள் மேற்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்
தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே,
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையில் வைத்திருக்கின்ற
தொழில் துறை, தொழில் முதலீட்டுத்துறை ஆகிய மானியக்
கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 21

இந்த மாநிலம் இப்போது தொழில் துறையில் எந்த அளவுக்
குப் பின் தங்கி இருக்கிறது என்பதை எனக்கு முன்பாகப் பல
நண்பர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இவற்றால் எல்லாம்
வறுமையை ஒழிக்க முடியாது. உண்மையிலேயே வறுமை
ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் இந்த நாட்டில்
இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டம் அகற்றப் படவேண்
டும். இந்த நாட்டில் வேலை இல்லாமல் காலத்தினைக்
கழித்துக்கொண்டிருக்கின்ற லட்சோபலட்சம் இளைஞர்களுக்கு
வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதுதான இன்றைய
தினம் இருக்கின்ற மைய அரசும், மாநில அரசும் செய்ய வேண்
டிய தலையாய கடமை என்பதை நிச்சயமாக இந்த அரசும்
உணர்ந்திருக்கிறது என்பதை நான் அறிகிறேன். ஆனால் இந்த
அரசு செயல்படுகின்ற முறையைப் பார்க்கின்றபோது நிச்சயமாக
கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் கருத்து
நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

தொழில் துறை சம்பந்தமாக ஒரு கொள்கை குறிப்பு
அடங்கிய புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான்
படித்துப் பார்த்தேன். அது ஒரு நல்ல 'லிட்டரேச்சர்'.
லிட்டரேச்சராக அமைந்திருக்கிறதே தவிர, ஏற்கெனவே
இருக்கிற பல்வேறு தொழிற்சாலைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்
கிறதே தவிர, அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால்
அதற்குத் தகவல் இல்லை. ஆகவே என்ன என்று கேட்டால்
ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல் இந்தக்
கொள்கை குறிப்பானது 323 பக்கத்திற்கு அதிகமாக இருந்தாலும்
கூட, அதிலே நாட்டிலே இருக்கிற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு
வழிவகை காணப்பட்டதாகத் தெரியவில்லை என்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த நாட்டிலே இருக்கிற வேலையில்லாத்
திண்டாட்டத்தை அகற்ற வேண்டும் என்றால் சிறு
தொழில்கள், குடிசைத் தொழில்கள், ஆகியவற்றை
நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பது இந்த
அரசின் கொள்கை. அதற்காக மத்திய அரசாங்கத்தின்
திட்டத்தின் அடிப்படையில் மாவட்ட தொழில் மையங்களை
ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு
கடந்த ஆண்டில் 8 தொழில் மையங்களை அமைத்தது.
ஆனால் எந்த அளவிற்கு அந்த தொழில் மையங்கள் கடந்த
ஆண்டில் செயல்பட்டன என்பதற்கு இந்த அறிக்கையைப்
பார்க்கும் போது நிச்சயமாக இந்த மாநிலத்திலே இருக்கிற
பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வழி இல்லை என்பது என்னுடைய
கருத்து. தொழில் மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற
கொள்கையை ஏற்றுக் கொண்டாலும் செயல் முறையில் இந்தத்
திட்டம் கடந்த ஆண்டில் தவறி விட்டது என்ற குற்றச்
சாட்டைக் கூற விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இங்கே கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கும்
போது 106வது பக்கத்தில் அதுசம்பந்தமாக சில விவரங்களை
இங்கே தந்திருக்கிறார்கள். சான்றிதழ் பெற்ற சிறு தொழில்களின்
எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 8 மாவட்ட தொழில் மையங்
களில், 2,576 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்
றில் கழிந்த ஆண்டில் உற்பத்தியைத் துவக்கிய மையங்களின்
எண்ணிக்கையைப் பார்த்தால், 911 என்று சொல்கிறபோது
உண்மையிலேயே இது நியாயமான முறையில் இந்த நாட்டிலே
ஏற்பட்டிருக்கிற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எந்த அளவில்
அவைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை முதல்
அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

நான் கடந்த ஆண்டிலேயே சொன்னேன்—இந்தக் கொள்கை
யில் நம்பிக்கையில்லா அதிகாரிகளை இந்த அரசு வைத்திருப்ப
தனால் அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற முடியவில்லை
என்று சொன்னேன். இப்போதும் கூறுகிறேன். இந்தக்
கொள்கையில் நம்பிக்கையில்லா அதிகாரிகள் செயல்படுவதால்
இந்தக் கொள்கைகள் ஆமை வேகத்தில் நிறைவேற்றப்படு
கின்றன என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, பல்வேறு மாவட்டங்களின் குறிப்புகளைப்
பார்க்கும்போது கன்யாகுமரி மாவட்டத்திற்கு 98 சிறு தொழில்
கள் ஆரம்பிப்பதற்கு சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் ஆரம்பித்த
தொழில்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் மிக வேடிக்கையாக
இருக்கின்றது, 28 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது
மட்டுமல்ல, அதற்காகக் கொடுத்த உதவித் தொகையைப்
பார்த்தால் 3.84 லட்சம் ரூபாய் என்று இங்கே கொடுக்கப்
பட்டிருக்கிறது. கன்யாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, தென்
ஆற்காடு மாவட்டத்தைப் பார்த்தால் சான்றிதழ் வழங்கப்
பட்டது 67. அதில் உற்பத்தி துவங்கிய தொழில்கள் 19.
அதற்காக வழங்கிய நிதி தொகை 1.2 லட்சம் ரூபாய். அது
போல சேலம் மாவட்டத்திற்கு கொடுக்கப்பட்ட நிதி தொகை
1·03 லட்சம் ரூபாய். ஆக, அனைத்து 8 மாவட்டங்களுக்கு
இந்த வகையாக வழங்கப்பட்ட நிதி உதவி 91.86 லட்சம்
என்று சொன்னால், இந்த வேகத்தில் சென்றால் இந்த
நாட்டிலே இருக்கிற பிரச்னைகள் எப்படி தீரும் என்பதை
முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கடந்த ஆண்டு சொன்னார்கள், எட்டு மாவட்டங்
களில் மாவட்ட மையங்களை அமைக்கப்போகிறோம், எஞ்சிய
மாவட்டங்களில் எல்லாம் படிப்படியாக அமைப்போம் என்று
வாக்குறுதி கொடுக்கப்பட்டது. இன்றையதினம் கொடுக்கப்பட்டி
ருக்கின்ற அறிக்கையை பார்க்கின்றபோது, இப்போதும் இன்னும்
ஒரு சில இடங்களில் மாவட்ட மையங்களை அமைப்போம் என்று
சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு பக்கம்
இன்னும் ஆறு மாதங்களில் அமைக்க முயற்சிக்கிறோம் என்று
சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கு நான் கூறுவதெல்லாம்,

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 21

இப்போதுள்ள வேகத்தை மாற்றி இன்னும் அதிதீவிரமாக
செயல்பட்டு, பல்வேறு தொழில்களை
புதிய தொழில்களை ஏற்கனவே உள்ள குறிப்பாக
பற்றி சொல்லியிருக்கிறார்கள்—அது போதாது— தொழில்களைப்
நாட்டில் தொழில்களை பெருக்குவதற்கு இன்னும் இந்த
மூலப்பொருட்கள் கிடைப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. வேண்டிய ஏராளமான
சக்தியும் கிடைக்கிறது, லட்சக்கணக்கான மக்கள் மனித
வேலையும் இல்லாமல் இருக்கிறார்கள். எந்தவிதமான
வேலைக்கு வழிவகை செய்து கொடுத்தால் அவர்களுக்கெல்லாம்
வெற்றிகரமாக நடைபெறும். இப்படி இந்தத் திட்டம்
பெறுவதின் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் வெற்றிகரமாக நடை
அப்படி நடைபெறும் என்று சொன்னால், நிச்சயமாக ஒழியும்.
பார்க்கின்றபடி வறுமையை ஒழிப்பதோடு, சமதர்ம நாம் எதிர்
இந்த நாட்டில் அமைக்கவும் முடியும் சமுதாயத்தை
விரும்புகிறேன். என்பதை கூறிக்கொள்ள

அடுத்து இப்போது எல்லாம் மாவட்ட மையங்கள்
பதின் நோக்கங்களையும் நாம் கூறியிருக்கிறோம். அமைப்
ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு தொழில்
ஒருவர் அனுமதி பெறுவதற்காக கன்னியாகுமரியிலுள்ள
இவற்றை மாற்றி ஒரேயிடத்தில் எல்லா சென்னைக்கு வரவேண்டும்.
அந்த இடத்திலேயே அனுமதியைப்பெற்றுக் வசதிகளையும் ஏற்படுத்தி
யாக இருப்பதற்குதான் இந்த தொழில் கொள்வதற்கு வசதி
மாக கூறப்பட்டிருக்கிறது. மையங்களின் நோக்க

சென்ற மார்ச் மாதத்தில் தான் இதற்கான
பட்டிருக்கிறது. ஒருவேளை இதற்கான ஆணையிடப்
என்று சொன்னாலும் இது சரிவர நோக்கம் இதுதான்
கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிறைவேறவில்லை என்பதை
வேண்டும் என்று சொன்னால் ஒரு தொழிலை ஒருவர் ஆரம்பிக்க
பிளான்கள் தயார் செய்து அதற்கான 12 ப்ளூ பிரின்ட்
கொடுக்க வேண்டும். அங்கிருந்து அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களிடம்
ஆபீஸருக்கு அனுப்பப்படும், ஒரு காப்பி டிஸ்ட்ரிக்ட் ஹெல்த்
பெக்டர் ஆப் பாக்டரீஸ்க்கு இன்னொரு காப்பி சிப் இன்ஸ்
இடங்களுக்கும் அனுப்பப்பட்டு அனுப்பப்படும். இப்படி பல்வேறு
அறிக்கை வரவேண்டும் என்று அந்த இடங்களிலிருந்து
ஆகின்றன. இவ்வளவு சொன்னால் அதற்கு பல மாதங்கள் எல்லாம்
தொடங்கக் கூடியவர், இதில் மாதங்களுக்கு அந்த
இன்னொரு மடங்கு வரை போடுகின்ற தொழிலை
நிர்ப்பந்தமான நிலை இதற்கு செலவு முதலீட்டை விட
விரும்புகிறேன். இருக்கிறது செய்ய வேண்டிய
மாற்றம் ஏற்படவில்லை. ஆகவே இந்த என்பதை கூறிக்கொள்ள
ஆணை பிறப்பிக்கப் மார்ச் நிலையில் இப்போது எள்ளளவும்
நடவடிக்கைகளை பட்டிருக்கிறது. திங்களில் தான் இதற்கான
அதிகாரிகள் இனிமேலாவது மேற்கொள்ள இனிமேல் தான் இதற்கான
தொழில் துரிதமாக வேண்டியிருக்கிறது. ஆகவே
வேண்டும் அதிபர்களுக்கு இருக்கின்ற செயல்பட்டு ஏழை/சிறிய
என்று கேட்டுக்கொள்கிறேன். சிரமங்களைக் குறைக்க

1979 ஏப்ரல் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, சிறு தொழில்களுக்காக ஒரு சில மாவட்டங்களை,
இன்டஸ்ட்ரியல் பேக் வார்டு ஏரியா என்று அறிவித்திருக்கி
றார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்னும் பல
மாவட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக
இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் தொழில் ஆரம்பித்தால்
மத்திய அரசு 15 சதவிகிதம் உதவி கொடுக்கிறது. மாநிலத்தைப்
பொறுத்த அளவில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்
மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கின்றன. ராமநாத
புரம் மாவட்டம் ஏற்கனவே பிற்பட்ட மாவட்டம் என்று
அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது போன்று இன்னும் சில
மாவட்டங்கள் இருக்கின்றன. அவற்றை மாநில அரசு தொழில்
துறையில் பிற்பட்ட மாவட்டங்கள் என்று அறிவித்து மத்திய
அரசு கொடுக்கின்ற 15 சதவிகிதம் சப்ஸிடியை கிடைப்பதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியில்லையென்று சொன்னால்
மாநில அரசாவது இந்த 15 சதவீதம் சப்ஸடியை கொடுத்துதவ
முன் வந்தால் அந்த மாவட்டங்களில் எல்லாம் தொழில் வளரு
வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இங்கு கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

அதுமட்டுமில்லாமல், இப்போது புதிதாகத் தொழில் ஆரம்பிப்
பதற்கு 25 சதவீதம் எக்ஸைஸ் ட்யூட்டியிலிருந்து விலக்கு
அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே தொழில்
ஆரம்பித்த சிலருக்கு இந்த விவரம் தெரியாமல் இருக்
கிறது. ஆகவே எற்கனவே செலுத்திய எக்ஸைஸ் ட்யூட்
டியை திருப்பித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டி
ருக்கிறார்கள். ஆனால் இந்தப் பணம் கிடைக்காமல் அவர்கள்
மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொழில்
களை ஆரம்பித்தவர்கள் ஏற்கனவே செலுத்திய எக்ஸைஸ்
ட்யூட்டியை திருப்பிக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தி
னுடைய கடமை என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

என்னுடைய கவனத்திற்கு இது சம்பந்தமான ஒரு தொழிற்
சாலையைப் பற்றி வந்திருக்கிறது. அதாவது, சிவகாசியில்
என்பர்ஸ் ரப்பர் பிரைவேட் தொழிற்சாலையில் ஏறத்தாழ
54,000 ரூபாய் திருப்பித் தரவேண்டும் என்று இந்த விதிவிலக்கின்
கீழ் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரைக்கும்
அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அரசு அந்தப்
பணத்தை அவர்களுக்கு எப்படியும் திருப்பிக் கொடுக்கவேண்டும்.
காரணம், இதுபோன்ற தகவல் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு
தெரியாமல்கூட இருக்கலாம். இதெல்லாம் தெரிந்தால்தான்,
தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு நியாயமாக இருக்கும்
என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிறு தொழில்களில் அதிகமாக நம் மாநிலத்திலே
ஈடுபட்டிருப்பது பட்டுநூல் தயாரிப்பு, தீப்பெட்டித் தொழில்
ஆகியவைகள். ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் அதிகமான
தொழிலாளர்கள் இதிலே ஈடுபட்டிருக்கின்றனர். அதோடு 2,66

[திரு. ஜே.ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 21

தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதாக இந்த அவைக்
குறிப்பிலே இருக்கின்றது. இந்த தேசத்தில் விம்கோ தொழிற்
சாலையில் தயாரிக்கப்படுகின்ற தீப்பெட்டிகள் மெஷினரியால்
செய்யப்படுகின்றன. அதற்கு மாறாக, குடிசைத் தொழில்களாக
இந்த மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும் ஏறத்தாழ இந்த
நாட்டிற்குத் தேவையான 70 சதவீதம் தீப்பெட்டிகளை, இந்த
கைத்தொழிற் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நமக்குத்
தருகின்றன. இது நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில்
சிறந்த கைத்தொழிலாக அமைந்திருக்கின்றது. இதன் வாயிலாக
இந்தத் தொழில் செய்பவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஏறத்
தாழ 30 கோடி ரூபாய் ஆண்டிற்கு எக்ஸைஸ் வரியாகக்
கொடுக்கிறார்கள். அந்த வகையிலே நமது மாநில அரசுக்கு
விகிதாசாரமாக 10 கோடி ரூபாய் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இதை மற்ற மாநிலங்களிலே ஆரம்பிப்பதற்காக,
மாநில அரசுகள் இந்தத் தொழிலை ஆரம்பிப்பவர்களுக்கு மற்ற
பல்வேறு சலுகைகளைச் செய்கிறார்கள். இலவசமாக அல்லது
குறைந்த விலையில் இதற்குத் தேவையான மரம் கொடுக்கி
றார்கள்; மற்றும் பல்வேறு டாக்ஸ்களில் எக்ஸெம்ஷன்
கொடுக்கிறார்கள். ஆனால், நமது மாநில அரசு, இதை மற்ற
மாநிலங்களுக்கு கொண்டு செல்கின்றபோது அவர்களுக்கு பல்வேறு
டியூடிகள் கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே, நமது மாநிலம்
மற்ற மாநிலங்களுக்கு எதிர்முகமாக இதிலே செயல்படுகின்
றார்கள். ஆதரவு கொடுப்பதற்குப் பதிலாக இங்கே உற்பத்தி
செய்யப்படுகின்ற கைத்தொழில் தீப்பெட்டிக்கு அவர்கள் 2
சதவீதம் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது என்று சொன்னால்,
அது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது அல்ல என்பதை நான்
கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், விம்கோ கம்பெனியை 'கம்பீட்' பண்ணி அவர்கள்
இந்த உற்பத்தியைச் செய்கிறார்கள். எனவே, தமிழகத்திலே
இருக்கின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு நமது அரசு
ஆதரவு தர வேண்டும். அதற்குப் பல சலுகைகளை வழங்க
வேண்டும். அப்படி வழங்கினால்தான் நமக்குக் கிடைக்கின்ற
இந்த 10 கோடி வருமானம் வரும். அது மட்டுமல்ல. பல
லட்சக்கணக்கான ஏழை தொழிலாளர்கள் இதனால் வேலை
பெறுவார்கள். இந்தத் தொழிலுக்கு ஆதரவு கொடுப்பதற்குப்
பதிலாக, இந்தத் தொழில் இன்று நசிந்து போகின்ற வகையில்,
நாம் இங்கே சேல்ஸ் டாக்சை சுமத்தியிருக்கிறோம். தவிர,
இந்தத் தொழில் செய்கின்றவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை
என்பதையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு சிந்திக்க
வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். ஒருவேளை இந்த அரசு
இந்த முறையில் சேல்ஸ் டாக்ஸ் சுமத்தித்தான் ஆக வேண்டு
மென்று சொன்னால், இந்தத் தொழில் இந்த மாநிலத்தை
விட்டு வேறு மாநிலத்திற்குச் செல்லும் அபாயம் இருக்கிறது
என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம் தொழிலில் மிகவும்
பின்தங்கிய மாவட்டம் என்பதை அறிவோம். இதனை முதல்
அமைச்சர் அவர்களும் அறிந்திருக்கிறார்கள். அதைப்பற்றி
எடுத்துக் கூறியபோது, இந்த மாவட்டத்திலேகூட ஒரு தொழில்
மையம் ஏற்பாடு செய்வதற்கு கழிந்த ஆண்டு சம்மதம் கொடுத்
தார்கள்.

ஆனால் அது நல்ல முறையில் செயல்படவில்லை என்பதை
வருத்தத்தோடு சொல்லுகிறேன். அதற்கான ஆதாரங்களை
எடுத்துக் கூறியிருக்கிறேன், இதுவரை அந்தத் தொழில்
மையத்திற்கான அதிகாரிகளைக் கூட நியமிக்கவில்லை என்றால்
எந்த அளவுக்கு நியாயம் அதிலே இருக்கிறது?

அந்த மாவட்டத்தில் பல்வேறு மூலப்பொருள்கள் கிடைக்
கின்றன. முக்கியமாக ரப்பர் தாராளமாகக் கிடைக்கிறது,
இந்த தேசத்தில் ரப்பர் கிடைப்பது கேரள மாநிலத்திலும்,
தமிழ்நாட்டிலுந்தான். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்
டத்தில்தான் அதிகமாகக் கிடைக்கிறது. இருந்தும் கூட
திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில் அங்கு
ஒரு ரப்பர் பாக்டரியை ஆரம்பிப்பதற்குப் பதிலாக இராமநாத
புரம் ஜில்லாவில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத பிரதேசத்தில்
ரப்பர் பாக்டரியை ஆரம்பித்து ஏறத்தாழ 85 லட்சம் ரூபாய்
நஷ்டம் ஏற்பட்டது என்பதை இந்த அரசு நன்றாக அறியும்.
சென்ற ஆண்டு இதுபற்றி எடுத்துக் கூறியபோது இது சம்பந்த
மாக விசாரணை நடந்து கொண்டிருப்பதாகவும், அது முடிந்த
பிறகு அந்த ரப்பர் பாக்டரியை கன்னியாகுமரி மாவட்டத்தில்
ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்வோம் என்றும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். விசாரணை
முடிவுற்று விட்டதா? கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிப்ப
தற்கான வழிவகைகள் இருக்கின்றனவா? இது சம்பந்தமாக
நிச்சயமாக இந்த அறிக்கையில் இருக்கும் என்று எதிர்பார்த்
தேன். எந்த அறிகுறியும் காணவில்லை. மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்—கடந்த ஆட்சி
தவறுகள் செய்திருந்தாலும் கூட அந்தத் தவறுகளைத் திருத்தி
நல்லாட்சி புரிகிற நீங்கள் நிச்சயமாக கன்னியாகுமரியில் ரப்பர்
பாக்டரியை அமைத்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் டயர் தொழிலை நடத்தவும் வாய்ப்பு இருக்கிறது.
தஞ்சாவூர் ஜில்லாவில் டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்க
ஏராளமான மூலப்பொருள் இருக்கிறது. டயர், ரப்பர்
இரண்டையும் சேர்த்து பல பொருள்களைச் செய்வதற்கான
வாய்ப்பு இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.
அதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மெம்பர்கள் அதிகமான முந்திரி
ஆலைகள் வேலை இல்லாமல் மூடப்பட்டிருக்கின்றன என்று
சொன்னார்கள். முந்திரி ஆலைகள் இயங்கவேண்டுமென்று

சொன்னால் அதிகமாக முந்திரி உற்பத்தி செய்ய வேண்டும்,
திருநெல்வேலியில் சாத்தான்குளத்தில் அரசுக்குச் சொந்தமான
முந்திரித் தோட்டம் கவனிப்பாரற்று அலங்கோலமான நிலையில்
இருக்கிறது. அரசு அதனைச் செம்மையாகக் கவனித்து
உற்பத்தியைப் பெருக்க தேவையான நடவடிக்கை எடுக்க
வேண்டும். அங்கே அதிகமாக சிமெண்ட் உற்பத்தி செய்வதற்
கான மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. அங்கே ஒரு மினி
சிமெண்ட் பாக்டரி ஆரம்பிக்க ஏற்பாடாகி இருந்தது. இது
வரையில் அது ஆரம்பிக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்
டத்தில் சாத்தான்குளம் தொகுதியில் ஒரு மினி சிமெண்ட்
பாக்டரி ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான
நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும்.

'டான்சி' நிறுவனத்தினர் இன்று மாநிலத்தின் எல்லா
மாவட்டங்களிலும் தங்களுடைய கிளைகளை ஆரம்பித்திருக்கி
றார்கள். அறிக்கையில் பார்த்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில்
'டான்சி' என்ற நாமத்தையே காணவில்லை. அதற்குக் காரணம்
என்னவென்று தெரியவில்லை. இவ்வளவு மூலப்பொருள்கள்
கிடைக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தைப் புறக்கணிக்கக்
காரணம் என்ன? 'டிட்கோ' நிறுவனம் கூட கன்னியாகுமரி
மாவட்டத்தைப் பொறுத்தவரை எந்த நடவடிக்கையும் எடுத்த
தாகத் தெரியவில்லை.

தென்னை நார் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஒரு
ஆணை பிறப்பித்திருக்கிறது. தமிழகத்தில் கன்னியாகுமரி
மாவட்டத்திற்கு தென்னை நார் மட்டைகள் எடுத்துச் செல்லக்
கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி
மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மத்திய
அரசாங்கத்திற்குத் தவறான தகவலைக் கொடுத்ததன் காரண
மாக அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி
மாவட்டத்திற்குத் தென்னை நார் மட்டைகள் எடுத்துச் செல்ல
வழி இல்லாமல் இருக்கும் காரணத்தால் அங்கிருக்கும் தொழிற்
சாலைகள் மூலப்பொருள் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன
என்பதை ஏற்கனவே இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கி
றார்கள். அந்த அரசாணையை ரத்து செய்வதற்கான
நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதோடு தங்குதடையின்றி

[பிற்பகல் 12-30]

தென்னை நார் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மற்ற மாவட்
டங்களிலிருந்து வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையிலே ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
இருக்கிறது. அது சம்பந்தமாக ஏற்கெனவே பல உறுப்பினர்கள்
பல பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அரசு ஏக்கர் 90 ரூபாய்க்கு வாங்கிய நிலத்தை 20 ஆயிரம்
ரூபாய்க்கு அவர்கள் தொழில் நடத்துகிறவர்களுக்குக் கொடுத்து
இருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான எஞ்சின்
போன்ற சாதனங்கள் காலத்தில் கொடுக்காத காரணத்தால்
அவர்கள் ஹாலிடே பீரியடான இரண்டு ஆண்டுகளுக்குள்
ஆரம்பிக்க முடியாமல் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்
கிறது. ஆகவே அவர்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கு
முன்னதாகவே அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட வேண்டுமென்று
ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் நடவடிக்கை எடுக்கிற நிலைமை
இருக்கிறது. அந்தத் தொழில்களுக்கு ஆதரவு தருகிற முறையில்
அவைகளுக்குச் சலுகையளிக்கிற முறையிலே இரண்டு ஆண்டுக்
காலம் ஹாலிடே பீரியட் என்பதை நீட்டித்துக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே டாமின் நிறுவனத்தின் மூலமாக
கருப்புக்கல் வெட்டியெடுக்கிற வேலை நடக்கிறது. அதை அரசு
நேரடியாகச் செய்யவில்லை, அந்த டாமின் நிறுவனம் தான்
உரிமம் வழங்கியிருக்கிறது, அதில் பல ஊழல்கள் நடைபெற்றி
ருக்கின்றன. பரஸ்யமாக டெண்டர் செய்யப்படவில்லை,
டெண்டர் முறையில் அது கொடுக்கப்படவில்லை. அந்த
நிறுவனத்தின் மேலதிகாரிகளின் இஷ்டத்திற்கிணங்க வேண்டிய
வர்களுக்கு அதிக லாபம் வரக்கூடிய முறையிலே கொடுக்கப்
பட்டிருக்கிறது. என்ன முறையிலே எந்த ரேட்டிற்கு கொடுத்
திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்கிற முறையிலே அந்தப்
பிரதேசத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் போய்
கேட்டால்கூட தகவல் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். காரணம்
என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கவேண்டும்.
அதில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று பலமாக நம்பப்
படுகிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அவர்கள்
சொல்வது தர்மபுரி மாவட்டம். அந்த மாவட்டத்தில் அந்த
திகழ்ச்சிக்குச் சென்றிருந்தவன் நான். அதற்கு டெண்டர் எந்த
முறையில கொடுக்கப்பட்டது என்று சட்டமன்ற உறுப்பினர்
கேட்டாலும் சொல்ல மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
டாமின் நிறுவனம் சட்டப்படி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.
புகார் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: காண்ட்ராக்ட் முறைப்படி கொடுக்கப்
படவில்லை, பரஸ்யமாகச் செய்யப்படவில்லை. ஜனங்களுக்குத்
தெரியாமல் ரகஸ்யமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காண்ட்
ராக்ட் முறையிலே கொடுக்கப்பட்டிருந்தால் எங்களுக்கு வருத்தம்
இல்லை; ஆகவே தான் சொன்னேன், அதில் ஊழல் நடை
பெற்றிருக்கிறது, முதல் அமைச்சர் அவர்கள் அதை விசாரிக்க
வேண்டுமென்று.

அடுத்து கோயம்புத்தூர் ஆல்கஹால் அன்ட் கெமிக்கல்ஸ் பேக்டரியிலிருந்து வருகிற கழிவுநீர் அந்தப் பிராந்தியத்திலே சுகாதாரத்தைப் பாதுக்கிறது என்று மனுக்கள் முதல் அமைச்சருக்கும் ஹெல்த் அமைச்சருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலித்து அந்தப் பகுதி மக்கள் பாதிக்காத முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் எண் 24, எண் 51— தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்தும் வெட்டுத் தீர்மானங்களை எதிர்த்தும் எனது கருத்துக்களை வழங்குகிறேன். வடஆற்காடு மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாகும். அந்த மாவட்டத்தில் மிகுதியாக ஜவ்வாது மலைத் தொடரிலே நிரம்ப சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டத்தில் சேன்டல்வுட் ஆயில் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை ஆரம்பிப் பதற்கு முன்பே முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள், ஆகவே உடனடியாக அதை நடத்தி வைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலையில் இரும்புத் தாதுக்கள் கிடைப்பதாகக் குறிப்புகளிலே பார்க்கிறோம். அந்த இரும்புத் தாதுக்களை நன்றாகப் பயன்படுத்த வட ஆற்காடு மாவட்டத்திலே தொழிலை அமைத்து நல்ல வளத்தைக் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, நமது அரக்கோணத்திலே ஸ்டீல் பிளான்ட் 'டிட்கோ' வால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், டிட்கோ வினுடைய வரவு செலவுகளை எல்லாம் பார்த்தால், அந்த ஸ்டீல் பிளான்டானது தொடர்ந்து நஷ்டத்திலேயே வேலை செய்து வருகிறது என்பது தெரியும். ஒரே ஒரு ஆண்டு தான் அது இலாபத்திலே வேலை செய்திருக்கிறது. மற்ற ஆண்டுகளில் தொடர்ந்து நஷ்டத்திலே வேலை செய்து வருகிறது. இப்பொழுது, நஷ்டம் மொத்தம் எவ்வளவு என்று கணக்கு பார்த்தால் ரூ. 4 கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது தொழில் வளர்ச்சியிலே ஒரு ஆரோக்கியமான நிலையை ஏற்படுத்தாது. ஆனால், பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 600 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறேன், என்று. ஏன் அந்த நிறுவனம் இலாபத்தில் வேலை செய்யவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும், ஆகவே, நஷ்ட ஈட்டை எப்படி யாவது தவிர்க்க வேண்டுமென்றால். அதற்கு ஒரு கமிட்டி யாவது போட்டு, அல்லது நிபுணர் குழுவாவது ஒன்றை வைத்து, அந்த நஷ்டத்தை எப்படி ஈடு செய்வது என்பதிலே அரசாங்கம் மிகுந்த கண்காணிப்போடு இருக்க வேண்டும்.

மூலப்பொருள்கள், சென்னைத் துறைமுகத்திலேயிருந்து ஸ்டீல் பிளான்டுக்குப் போகிறது. லாரி வாடகை, டன் ஒன்றுக்கு ரூ. 25 முதல் ரூ. 30 வரைக்கும் சாதாரணமாக இருக்கிறது, சகஜமாக இருக்கிறது. ஆனால், அந்த நிறுவனம் கொடுக்கக் கூடிய வாடகை, ஏறக்குறைய ரூ. 50. இப்படி உத்தேசமான செலவுகளை அதிகப்படுத்திக் கொண்டே போனால், அது எங்கு கொண்டு போய் விடும் என்பதை அருள் கூர்ந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில், நல்ல தொழிலாக. விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளை அளித்துக் கொண்டிருக்கிற தொழிலாக இருக்கிறது. இன்றைக்குக் கூட அரசாங்கம் அதற்கு நிறைய லோன்களைக் கொடுத்து, அந்தத் தொழில்களுடைய வளர்ச்சியைத் துரிதப்படுத்தியிருக் கிறது, கரும்பு விவசாயிகளுக்கு அபிவிருத்தி கிடைத்திருக்கிறது. ஏறக்குறைய ரூ. 2 கோடி அளவிற்கு அதற்கு நிதி உதவி இருக்கிறது. உயிர் போய் விட்ட அந்தத் தொழிலை ஊக்கப் படுத்தி, நிறுத்தி வைக்கக் கடன் கொடுத்ததற்காக தமிழக அரசுக்கு நான் நன்றியைச் செலுத்துகிறேன். அந்தத் தொழிலை இன்னும் கொஞ்சம் நன்றாக அபிவிருத்தி செய்ய வேண்டு மென்பது எங்களுடைய கருத்து. இன்றைக்கு மந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இந்த மந்த நிலைமை கடைசி வரையிலே இருக்காது. ஆனால், விவசாயிகளுக்கு வாழ்வு கொடுக்கிற தொழில் சர்க்கரை ஆலைத் தொழில்.

சர்க்கரை ஆலைகளிலிருந்து இன்றைக்குக் கழிவுப் பொருள்கள் கிடைக்கின்றன. அதாவது மொலாசஸ் என்ற கழிவுப்பொருள். அதை, 31-3-1979 வரை ஏற்றுமதி கூட செய்யலாம் என்று மத்திய அரசாங்கம் அனுமதித்து இருக்கிறது, அது தொடர்ந்து இருக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். இன்னொன்று கூடச் செய்ய லாம். சர்க்கரைப் பாகைத் தமிழகத்திலே சாராயத் தொழிற் சாலைக்கு உபயோகிக்கலாம். ஆனால், நமது முதலமைச்சருக்கு அப்படி செய்வது ஒன்றுமே பிடிக்காது. ஆனால், தொழில் வளர வேண்டுமென்றால், இங்கேயே கூட சாராயம் உற்பத்தி செய்து, நம்முடைய மாநிலத்திலே தேவையில்லை—அண்டை மாநிலத்திலே கூட விற்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் மது விலக்கிலே கடுமையாக இருக்கி றார்கள் என்பது உலகத்திற்கும் நன்றாகத் தெரியும், மத்திய அரசுக்கும் தெரியும், இந்த நாட்டிற்கும் தெரியும். ஆகவே, நீங்கள், இங்கே, சாராயத் தொழிற்சாலை வைத்தால் கூட உங்களைச் சந்தேகப்பட மாட்டார்கள். ஆகவே, இந்தச் சர்க்கரைப் பாகைக் கொண்டு, சாராயத் தொழிற்சாலை வைக்க துரிதமான முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரைத் தொழிற்சாலை பல இடங்களிலே ஆரம்பிக்கப்
பட்டிருக்கிறது. இந்த ஆண்டு திருக்கோவிலூரில் ஆரம்பிக்க
முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டி
ருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். அதே போல்
செங்கற்பட்டு மாவட்டத்திலே, திருத்தணிக்கு அருகிலே ஒரு
ஆலை நிறுவ உரிமம் வழங்கப்பட்டது. ஆனால், எந்தக்
காரணத்தினாலோ அது ரத்து செய்யப்பட்டது. ஆனால்,
அங்கிருந்து திருவலத்திற்குப் போக வேண்டுமென்றால், 50, 60
மைல்கள் போக வேண்டும். அல்லது, படாளத்திற்குப் போக
வேண்டுமென்றால், 50, 60 மைல்கள் போக வேண்டும். ஆகவே
திருத்தணியிலே ஒன்று நிறுவவேண்டும். அல்லது, திருத்தணிக்குப
பக்கத்திலே கூட, கொஞ்சம் அரக்கோணம் பார்டரிலே
அமைக்கலாம். ஆனாலும், உரிமம் இப்பொழுது ரத்து செய்யப்
பட்டிருக்கிறது. இதற்கு உயிர் கொடுக்க வேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.
பெரிய தொழில் அதிபர்கள் இன்றைக்கு எப்படியாவது
சமாளித்துக்கொண்டு போய்விடுவார்கள்.

[பிற்பகல் 12-40]

பெரிய தொழில் அதிபர்கள், சிட்கோ, டிட்கோ இவைகளைச்
சேர்ந்த அதிகாரிகளை அழைத்துக் கொண்டுபோய் பெரிய பெரிய
ஹோட்டல்களில் டாஜ் கோரமண்டில், சோழா, கோல்டன் ரீச்
போன்ற பெரிய ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்று விருந்து
கொடுத்து தங்களுக்கு வேண்டிய வேலைகளை செய்து கொள்
கின்றனர். ஆனால் சிறிய தொழில் அதிபர்கள் என்ன செய்
வார்கள். அவர்கள் எந்த விதத்தில் தங்களுக்கு தேவையான
சலுகைகளை பெற்றுக் கொள்ளமுடியும். இந்த முறை
தவறானது. அது சரியான முறையல்ல என்று எல்லோருக்கும்
தெரியும். ஆகையினால் இவைகளை தடுப்பதற்கான உத்தரவு
களைப் போட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் ஒரு தொழிலை ஆரம்பித்திருக்கிறார்கள்.
தூத்துக்குடி ஆல்கஹால் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற இந்த
நிறுவனம் வரவேற்கத் தக்க அம்சமாகும். இதிலே தலைவராக
போட்டிருப்பவர்கள் இதிலே ஊக்கம் உள்ளவர்தான், திறமை
உள்ளவர்தான். இதை 81-ல் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்
பட்டது, இதை 81-லேயாவது ஆரம்பித்தால் அது அரசாங்கத்
திற்கும் நன்மை பயக்கும் என்று கூறிக் கொண்டு, இதை
ஆரம்பிப்பதற்கான வேலையை உடனடியாக எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் இங்கே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.
டி.ஐ.ஐ.சி. என்று ஒரு நிறுவனம். தமிழ்நாடு முதலீட்டுக் கழகம்
என்ற நிறுவனம். தமிழ்நாடு தொழிலிலே நன்கு வளர முதலீடு

செய்கிற நிறுவனம் என்று பெயர்தான். இது முதலீடு செய்கிற
நிறுவனமா அல்லது வட்டிக்கு பணம் வசூலிப்பதுதான் இந்த
நிறுவனத்தின் நோக்கமா என்று தெரியவில்லை. வட்டித்
தொழில் நடத்தும் தனியார் நிறுவனமோ என்று கூட சந்தேக
மாக இருக்கிறது. காரணம் இந்த நிறுவனத்தினர் தொழில்
வளர்வதற்கு உதவி செய்வதை விட வட்டியை வசூலிப்பதுதான்
தங்களுடைய தலையாய கடமையாக நினைக்கின்றனர். தொழில்
வளர்ச்சிக்காக முதலீடு செய்ய வேண்டிய இந்த நிறுவனம்
தொழில்கள் பின் தங்கிய இடங்களில் பகுதிகளில் போய் உதவி
செய்து தொழில்களை வளர்க்க வேண்டும். தொழில்கள் பின்
தங்கிய நிலையில் இருக்கக்கூடிய இராணிப்பேட்டை, ஹோசூர்
போன்ற பகுதிகளில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஒரு தொழில் நசிந்துள்ளதா, நலிந்துள்ளதா என்று நன்றாக
தெரிந்துக் கொள்ள வேண்டும். ஆராய்ந்துப் புரிந்துக் கொள்ள
வேண்டும். ஹோசூரில் உள்ள ஹோசூர் எலக்ட்ரானிக்ஸ்
தொழிற்சாலைகளில் எந்தெந்த தொழில் நல்ல முறையில்
நடக்கிறது, எந்தெந்த தொழில்கள் நல்ல முறையில் நடக்க
வில்லை என்பதை ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
அதற்கான காரணங்கள் என்னவென்பதை தெரிந்துக் கொள்ள
வேண்டும். சில நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு சம்பளம்
கூட மாதாமாதம் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள்
என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள், கடன்களின்
மூலமாக அவர்கள் நலிந்து விடுவதுதான் இதற்கெல்லாம்
காரணம்.

இந்தக் கடன் வழங்கும் நிறுவனத்தின், தொழில் நல்ல
முறையில் நடைபெறுமா என்று ஆராய்ந்து அறிவதற்காக ஒரு
அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். அவர் அறிந்து அறிக்கை
கொடுத்தால்தான் கடன் கொடுப்பார்கள். ஆனால் அந்த
அதிகாரிக்கு அந்த தொழிலைப் பற்றி எதுவுமே தெரியாது.
அவர் அனுமதி கொடுத்தால்தான் அந்தக் கழகம் கடனை
வழங்கும். ஆனால் அவருக்கு தொழில்களைப்பற்றி எதுவுமே
தெரியாது, அனுபவமும் கிடையாது. அவர் நேரே தொழில்
அதிபர்களிடமே சென்று "என்ன இந்தத் தொழில் எப்படி
நடக்கும், இதற்கு வேண்டியது என்ன" என்று அவர்களிடமே
கேட்கிறார். அவர்கள் சொல்வதை வைத்துக் கொண்டு எழுதி
கொடுக்கிறார். அவருக்கு அதற்காக பீஸ் 3,000 ரூபாய். அந்த
3,000 ரூபாயையும் சிறு தொழில் அதிபர்களிடத்தில் இருந்து
பெற்றுத்தான் அவருக்கு கொடுக்கிறார்கள். ஏன் நல்ல அனுபவம்
உள்ளவராக, தொழில்களைப்பற்றி தெரிந்தவராக, அறிந்தவராக
படித்தவராக போடுங்களேன். வரவேற்கிறேன். இப்படி
இருந்தால் தொழில்கள் எப்படி முன்னேற்றமடையும் என்பதை
சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு இடத்தில் தொழில் செய்வ
தற்காக கடனுதவி கொடுத்து அனுமதி கொடுத்தால், அதே

தொழிலை, அந்த பகுதியிலேயே வேறு இடத்தில் துவங்கு
வதற்கு அனுமதிக்கக் கூடாது. அதனால் இரண்டு தொழிற்
கூடங்களுக்கும் போட்டி ஏற்படுகிறது. இரண்டுமே முடிவில்
நசித்து விடுகிறது. ஒரே விதமான இரண்டு, ஒரே இடத்தில்
இருந்தால் இங்கே ஹெல்த்தி காம்பிடிஷன் ஆக இருக்கமுடியாது.
கட்துரோட் காம்பிடிஷனாகத்தான் உருவாகும் என்று சொல்லிக்
கொள்ளவிரும்புகிறேன்.

ஆகவே எந்தத் தொழிலையும் ஊக்குவிக்க வேண்டும்
என்றால் நசித்துப் போகக் கூடிய அளவிற்கு போட்டியாக
இரண்டு நிறுவனங்களுக்கு உதவிகளை செய்துவிடக் கூடாது
என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சுமுகமான
நிலையை தொழில்களுக்கிடையில் வளர்க்க வேண்டும் என்பது
தான் என்னுடைய விருப்பம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஓசூரும், ராணிப்பேட்டையும் தொழில் துறையில் மிகவும்
பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஓசூரில் உள்ள இன்டஸ்
டிரியல் எஸ்டேட்டில் தண்ணீர் கிடையாது. ஒரு பீப்பாய்
தண்ணீர் விலை 7 ரூபாயாக இருக்கிறது. இந்தக் குறைகள்
எல்லாம் சிறுசிறு குறைகள், இதைப் போக்கவேண்டும் என்பது
என்னுடைய தாழ்மையான கருத்து (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 6
உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. 3/4 மணி நேரம்தான்
இருக்கிறது. முடிந்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : முடித்துக்கொள்கிறேன்.
நான் இடையூறாக இருக்கமாட்டேன். எனக்கு முன்னால் பேசிய
உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு பேராசிரியரைப்
போடலாமா என்று கேட்டார்கள். அதாவது, அந்த கருப்புக்
கல் ஷைனிங் தொழிற்சாலைக்கு, அப்படிக் கேட்டு விட்டு,
அவருடைய திறமையை நான் சந்தேகிக்கவில்லை என்று
சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்,
கருநாடக மாநிலத்தில் திரு. திம்மையா என்பவரை கனிவளத்
துறைக்குப் போட்டு இருக்கிறார்கள். அவர் பெயரைக்கூட
சொன்னார், நான் பெயரைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தப்
பேராசிரியர் அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே
'சேலத்து இரும்பு' என்ற பெயரில் ஒரு நூலை எழுதி
'உட்லான்ட்ஸ்' ஓட்டலில் வெளியிட்டார்கள். அது ஒரு
அருமையான புத்தகம். இலக்கியச் சிறப்போடு எழுதியிருக்
கிறார். அதைப் படித்தால் அவர் கனிவளத் துறையில்—தொழில்
துறையில்—எத்தகைய அக்கரை கொண்டு இருப்பவர் என்பது
தெரியும்.

மேற்கு வங்கத்தில் இருக்கும் அரசாங்கம் திரு. ஜோதி பாசு
அவர்கள் தலைமையில் இயங்கும் அரசாங்கம். அந்த
அரசாங்கமே தனியார் துறையை வா, வா என்று அழைத்துக்

கொண்டு இருக்கிறது. எங்களுடைய மாநிலத்தில் தொழில்
தொடங்குங்கள் என்று சொல்லி அழைத்துக்கொண்டு இருக்கிறது.
ஆனால், நம்முடைய அரசாங்கம் பொதுத் துறை, இல்லை
யென்றால், கூட்டுறவுத் துறை, கூட்டுத்துறை என்று சொல்லிக்
கொண்டு இருக்கிறது. இந்த வகையில் செய்வதைப் பற்றி
ஆட்சேபணை இல்லை. அரசாங்கம் ஆரம்பிப்பது என்றால்
சட்டப்பூர்வமாக ஆரம்பிக்க சில சங்கடங்கள் இருப்பதால்
கொஞ்சம் நாள் ஆகும். அந்த நிலை தனியார் துறையில் இல்லை.
ஆகவே, தனியார் துறையை ஊக்குவியுங்கள் என்று சொல்லி
முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பற்றிய இந்தக்
குறிப்பு கிட்டத்தட்ட 323 பக்கங்கள் இருக்கின்றன. அதைப்
போல், சாதனை பற்றிய புத்தகம் 60 பக்கங்கள் இருக்கின்றன.
இவ்வளவு பக்கங்கள் நிரம்பிய இந்தக் குறிப்புகளை நேற்று
இரவு 11 மணிக்குத்தான் அளித்து இருக்கிறீர்கள். தொழி
லாளர்களைப் பற்றிய விவரங்களுக்கு இனிமேல் இப்படிப்
பட்ட குறிப்புகள் அனுப்புகிறபோது இரண்டு மூன்று தினங்
களுக்கு முன்னதாகவே அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை
எடுக்கவேண்டும்.

தொழிலாளர் துறை என்பது தமிழகத்தில்
உள்ள வேலையின்மை திண்டாட்டத்தைப் போக்குவதற்கான
ஒன்று. இரண்டாவது, மக்களுக்குத் தேவையான பயனீட்டு
பொருள்கள் உற்பத்தி செய்து, மக்களின் தேவையைப் பூர்த்தி
செய்வது. எனவே, தொழில் துறை என்பது மிக முக்கியமாக
விவாதிக்கப் படவேண்டிய ஒரு விஷயம். அதைக் கருதி தான்
பாரதி உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று
கூறினார். உழவு இல்லை என்றால் தொழில் இல்லை.
தொழில் இல்லை என்றால் மக்களுக்கு நல்வாழ்வு இல்லை
என்ற அடிப்படையில் அவர் கூறினார். உழவுக்கும் தொழி
லுக்கும் வந்தனை செய்வோம், வீணில் கொழுத்து இருப்போரை
நிந்தனை செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், நம்
நாட்டில் என்ன நடக்கிறது என்றால் உண்டு கொழுத்து
இருப்போர் பாராட்டப்பெறவும், உழவும் தொழிலும் செய்ப
வர்கள் பாராட்டப்பெறாமல் இருப்பதும்தான்.

குறிப்பாக மத்திய அரசின் தொழில் கொள்கை தெளி
வற்ற ஒரு கொள்கை. சிறு தொழிலைப் பெருக்குங்கள்,
குடிசைத் தொழிலை வளருங்கள். அது தான் அவர்களுடைய
கோஷங்கள். குடிசைத் தொழிலை வளருங்கள் என்று அவர்கள்
கோஷம் போடுவதன் விளைவு சில இடங்களில் குடிசைத்
தொழிலாக வேறு சில தொழிலைச் செய்து வருகிறார்கள்.
வேலை இல்லாத் திண்டாட்டத்தின் விளைவு அப்படிப்பட்ட
தொழிலுக்கு அவர்களை ஊக்குவிக்கிறது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

குறிப்பாக, மத்திய அரசுக்கு பொதுத் துறையின் மீதும், பெரிய தொழில்களின் மீதும் ஒரு ஆத்திரம் இருக்கிறது. எனவே தான் பி. எச். இ. எல். என்ற திருச்சியில் உள்ள நிறுவனத்தை சீமன்ஸ் நிறுவனத்தோடு இணைத்து விட்டார்கள். மல்டி. மில்லியன் நிறுவனத்தோடு அந்தத் தொழிலை இணைத்து, அவர்களுக்கு வேண்டிய, அவர்கள் சொல்கிற பொருளை அங்கே உற்பத்தி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். இது கண்டிக்கவேண்டியது. தமிழக அரசும் அதைப் பற்றி எச்சரிக்கவேண்டும், கண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.50]

அடுத்து பொதுத் துறையை வலுப்படுத்துவது, வளப்படுத்துவது என்பதில் அவர்களுக்கு எந்தவிதமான அக்கரையும் கிடையாது. சிறு தொழில்களைப்பற்றித்தான் அவர்கள் விரிவாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் என்பது மிக மிக அவசியமானதாகும்.

அடுத்து, தமிழகத்தில் இன்றைக்கு 40 சதவீதம் மின் வெட்டு இருக்கின்றது. பக்கத்திலே இருக்கக்கூடிய கல்பாக்கத்தில் இருக்கும் அணு மின் நிலையம் துவங்கப்படாமலே இருக்கிறதே, ஏன் காலதாமதம் ஆகிறது. அது விரைந்து செயல்படுவதற்கு நம்முடைய அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன ? கல்பாக்கம் அணு மின் நிலையம் செயல்பட்டால் தமிழகத்தினுடைய தேவை முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். அத்தோடு அங்கிருந்துகிடைக்கக்கூடிய மின்சாரத்தைவெளிமாநிலங்களுக்கும் தருவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கமுடியும். கல்பாக்கம் அணு மின் நிலையம் மாபெரும் செலவில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்த காலத்தில் திட்டமிடப்பட்டு 400 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டது. அது விரைவில் செயல்படுதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நீர் மின்சாரத்தை மட்டும் நம்பி இருப்பது பயனற்றதாகும். அனல் மின் நிலையம், அணு மின் நிலையம் இவைகளையும் உருவாக்குவதற்கு நம்முடைய அரசு வேகமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மின்சாரத்தட்டுபாட்டின் காரணமாகப் பஞ்சாலைகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகத் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்தப் பாதிப்புக்குக் காரணம் அரசின் தவறுதானே தவிர, பஞ்சாலைகளின் தவறல்ல. ஆகவே, இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்காமல் போனதற்கு அரசாங்கம் தான் பொறுப்பு. ஆகவே, இன்றைக்கு அவர்களுக்கு ஊதியம் கொடுக்கவேண்டிய பொறுப்பை அரசே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மின் வெட்டின் காரணமாக பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்குப் பஞ்சாலைகள், சர்க்கரை ஆலைகள், எண்ணெய் ஆலைகள் இவைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்கிறவர்கள் வ்வசாயிகள். சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு, பஞ்சாலைக்குத் தேவையான பருத்தி, எண்ணெய் வனஸ்பதி ஆலைகளுக்குத் தேவையான கடலை போன்றவற்றை உற்பத்தி செய்கிறவர்கள் விவசாயிகள். ஆனால் இவர்களுக்கு மின்சாரம் கமர்சியல் பேஸிஸில் கொடுக்கப்படுகிறது. பஞ்சாலைகள், மற்ற தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணம் பாக்கி என்றால், மின் வெட்டு செய்தால் பாதகம் ஏற்படும் என்ற காரணத்தால் மின் வெட்டு செய்யப்படுவதில்லை. அதே காரணம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொடுக்கின்ற விவசாயிகளுக்கும் பொருந்தும். எனவே, வ்வசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் மின் வெட்டு செய்வது, கிரிமினல் ஆக்ஷன் எடுப்பது போன்றவை கூடாது. வேண்டுமென்றால் சிவில் நடவடிக்கை எடுத்து கோர்ட்டுக்குப் போங்கள் பணத்தை வசூலிக்க என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிற்சாலைகளிலே கை வைக்கக் கூடாது என்பது எப்படி நியாயம் என்று கருதுகிறீர்களோ அதேபோல அந்தத் தொழிற்சாலைகளுக்குரிய ரா மெட்டீரியல்ஸ் அதாவது மூலப்பொருளைக் கொடுக்கின்ற விவசாயிகளுக்கு உற்பத்தி செய்வதில் பாதிப்பு ஏற்படக்கூடிய முறையில் மின்வெட்டு செய்வது என்பது தவிர்க்கப்படவேண்டும். மின்வெட்டு செய்தால் அவர்களுடைய தொழில் பாதிக்கப்படும். அத்தோடு விவசாயி உற்பத்தி செய்த பொருளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய வகையில், பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில், விலையை நிர்ணயித்தால்தான் அந்த விவசாயத் தொழில் வளரும் எனபதையும் நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு, சர்க்கரைத் தொழிலின் நிலை என்ன? விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், விலை கிலோ $2\frac{3}{4}$ ரூபாய் என்ற அளவில் விற்கப்படுகிறது. சிலோனிலே ஒரு கிலோ 11 ரூபாய் 12 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட விவரங்களைத் தெரிந்து சர்க்கரையை வெளியிலே ஏற்றுமதி செய்வதற்காவது நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்க்கரைத் தேக்கம், தொழில் பாதிப்பு, தொழிலாளர் வேலை இழப்பு, போனஸிலே பாதிப்பு, சர்க்கரை தேக்கத்தினால் கரும்பு உற்பத்தியிலே, பாதிப்பு, விவசாயிகள் பாதிப்பு இப்படித் தொடர்ச்சியாக சர்க்கரைத் தொழில் மத்திய அரசினுடைய கொள்கையின் விளைவாக படுகொலை செய்யப்படும் நிலையில் உள்ளது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. மு. அம்பிகாபதி] [1979 ஏப்ரல் 21

அடுத்து இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில்
பல நூறு மைல்களுக்குக் கடற்கரை உண்டு. கடல் செல்வங்களை
ஆண்டுக்கு பல நூறு கோடிக்கு மேல் பெருக்க முடியும்.
சிலப்பதிகாரக் காலத்தில் முத்தும், பவளமும், மணியும் போன்ற
செல்வங்கள் பூம்புகார் நகரத்திலே கிடைத்ததாகக் கூறுகிறார்கள்.
அப்படிப்பட்ட அளவிற்குக் கடல் வாணிபம் சிறந்திருந்தது
தமிழகம். கடல் பகுதியில் உள்ள செல்வங்களை ஆண்டுக்கு
பல நூறு கோடிக்கு நாம் ஈட்ட முடியும் என்று வல்லுநர்கள்
கூறுகிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக ஒரு குழு அமைத்து
அதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடல்
பாசியிலே இருந்து பல பொருட்களை உற்பத்தி செய்யலாம்
என்று சொல்கிறார்கள். கடல் பாசியிலே அல்வா செய்யலாம்
என்று அண்ணா இருந்த காலத்திலே சொன்னார் என்பதை
நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1967-ஆம் ஆண்டுத் தேர்தலில் கடற்பாசியில் இருந்து அல்வா
செய்வதாகச் சொன்னார்கள். சிங்கப்பூரிலிருந்து ஒரு வகையான
பாசியைக் கொண்டு வந்து ஆக்கர்கா அல்வா செய்தார்கள்.
அதை நானும் சாப்பிட்டேன். கடற்பாசியிலிருந்து மற்ற
பொருள்களும், எண்ணெய் போன்ற பொருள்களும் கிடைப்
பதற்குரிய முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும். கடற்செல்
வங்களையெல்லாம் கொண்டு வந்து நாம் ஒன்று சேர்க்க
வேண்டும். 'முத்துக் குளிப்பது தென் கடலிலே......' என்று
பாரதி பாடினான். அப்படி முத்துக் குளிப்பதன் மூலம்
முத்துக்கள், மற்ற பொருள்கள் எல்லாம் எடுத்து, ஒன்று
சேர்க்கும் முறையில் திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும்.
நெய்வேலி இரண்டாவது திட்டத்தை, மத்திய அரசு திட்டமாக
இருப்பதால், அதைக் கடைசியில் இரண்டு பக்கத்தில் போட்டிருக்
கிறார்கள். இதை விஸ்தரிப்பதற்கு ஒரு புதிய திட்டமும்
இல்லை. தமிழகத்தில் முன்பு பெரம்பூர் கோச் பாக்டரி,
திருச்சியில் பெல் நிறுவனம், இதைப் போன்று பெரிய தொழிற்
சாலைகளெல்லாம் இங்கே கொண்டு வருவதற்கான முயற்சிகள்
எடுக்கப்பட்டன. இன்றைக்கு இதுபோன்ற தொழிற்சாலைகள்
ஒன்றும் கிடையாது. விஞ்ஞான ரீதியில் தொழில்களை வளர்ப்ப
தாகவும் மீன்குஞ்சுகளை வளர்ப்பதாகவும் சொல்லி காங்கிரஸ்
கட்சி காலத்தில் ஒவ்வொரு குளத்திற்கும் பக்கத்தில் தொட்டியை
கட்டி அந்தத் தொட்டிகளில் கெண்டை மீன்குஞ்சுகளை
விட்டார்கள். இரவு நேரங்களில் அந்தக் குளத்தில் இருக்கிற
பாம்புகள் வந்து அந்தக் குஞ்சுகளைத் தின்று போய்விட்டு
அங்கே தொட்டிகள் தான் இருக்கின்றன. என் பகுதியில் ஒரு
தொட்டி இருக்கிறது. வந்தால் நான் காண்பிக்கிறேன்.
இப்படிப்பட்ட நிலைமை பல பஞ்சாயத்துக்களில் இருக்கிறது.

பெரிய தொழிற்சாலைகள், கனரகத் தொழிற்சாலைகள்
எதுவும் புதிதாக ஆரம்பிக்கவில்லை. ஆனால், பேப்பர் தொழிற்
சாலை 132 கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப் போவதாக

1979 ஏப்ரல் 21] [திரு. மு. அம்பிகாபதி]

சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு சேஷசாயி
இடத்தில் ஆலோசனை கேட்கப்போவதாக சொல்லியிருக்
கிறார்கள், அங்கே போய் ஏன் கேட்கவேண்டும்? நம்மிடத்திலே
வல்லுநர்கள் யாரும் இல்லையா? சேஷசாயிடம் போய்க்
கேட்டால் அங்கே விஸ்வநாதன் தான் இருப்பார். அதனால்
அந்தத் திட்டம் பள்ளிவாளையத்திற்கு போய்விடும். தஞ்சை
மாவட்டத்திற்கு வராது. தஞ்சை மாவட்டம் பின் தங்கிய
மாவட்டம். தஞ்சை மாவட்டம் நமது வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள் இருக்கக் கூடிய பகுதி, அங்கே இந்தத்
தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். அப்படி தஞ்சை
மாவட்டத்தில் இல்லை என்றால், தஞ்சை மாவட்டத்திற்கும்
புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் இடையில் வைத்தால் இரண்டு
மாவட்டங்களுக்கும் பயன்படும்.

அதைப்போல் உப்பு தொழிற்சாலை. 'மெரின் காம்ப்ளக்ஸ்,
100 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலையை
அமைக்கப் போவதாகவும், 5,000 பேர்களுக்கு வேலை
கொடுக்கப் போவதாகவும் சொல்லப்பட்டது. இப்போது 2
கோடி ரூபாய் செலவழித்து, 1,000 பேர்களுக்கு வேலை
கொடுக்கப்போவதாகவும் சொல்கிறார்கள். எனவே, இவற்றை
யெல்லாம் பார்க்கும் போது முறையாக, தெளிவாக உங்களுக்குக்
கொள்கை இல்லை.

அதேபோல், வைக்கோலைக் கொண்டு ஒரு காகிதத்
தொழிற்சாலையைத் தஞ்சை மாவட்டத்திலே அமைப்பதற்கு
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் மோட்டார்
சம்பந்தப்பட்ட உதிரி உறுப்புகள் பற்றிக் குறிப்பிட்டார்கள்.
தஞ்சை மாவட்டத்தில் மோட்டார் சம்பந்தப்பட்ட உதிரி
உறுப்புகள், அதாவது டயர் போன்றவைகள் உற்பத்தி செய்ய
வேண்டும்.

சக்தி பைப்ஸ் 28 மாத காலமாக சக்தி இழந்து இருக்கிறது.
அதற்குப் பெயர் தான் சக்தி. சக்திக்கு ஆதாரமான சிவன்
இல்லை. சிவன் என்றால் அல்லறை இல்லை, இது அரசாங்கத்தால்
எடுத்து நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

[பிற்பகல் 1.00]

சக்தி பைப்ஸ் தொழிலாளர்கள் கடந்த 28 மாதங்களாக
இருக்கிறார்களா, இல்லையா என்பதே தெரியவில்லை.
அவர்களைப்பற்றி சர்க்கார் ஒன்றுமே கவனிக்கவில்லை. அதே
போன்று சேலம் கிளாஸ் பாக்டரியும் மூடப்பட்டது. அங்குள்ள
தொழிலாளர்கள் உண்ணாவிரதம், மறியல், போராட்டம், கைது
இவையெல்லாம் நடந்தது. சேலத்திலிருந்து பாதயாத்திரையாக
இங்கு வந்தார்கள். அதிலுள்ள தொழிலாளர்களுக்கு இன்னும்
வேறு எந்த வேலையும் அளிக்கப்படவில்லை.

அதே போன்றுதான் பல லட்சக்கணக்கான மது மரத் தொழிலாளர்கள் இன்றைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். மத்திய அரசு மதுவிலக்கைப்பற்றி சொல்லுவதைப் போல் மாநில அரசும் சொல்லிக்கொண்டிருக்கிறது. நாங்கள் ஒப்பனாகவே சொல்லுகிறோம், மதுவிலக்கில் கள்ளுக்கு விதி விலக்கு கொடுங்கள், மத்திய அரசு எல்லா இடத்திலும் மதுவிலக்கு கொண்டுவருகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இதை எதிர்த்து ஊர்வலங்கள் கள், பெட்டி, அரிவாள் இவைகளோடு, இன்றைக்கு பாண்டிச்சேரியிலும் கொண்டு வந்திருக்கிறார்கள், அங்கேயும் இதே ஊர்வலம்தான் நடக்கிறது. நாட்டில் இருக்கின்ற எத்தனையோ முக்கியமான பிரச்னைகளை எல்லாம் விட்டு மது மரத் தொழிலாளர்களை பாதிக்கின்ற பிரச்னையில் கைவைக்கவேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது? சிலப்பதிகாரத்திலே கூட சொல்லப்பட்டிருக்கிறது, 'கள்ளுடைச்சியர்' என்று— பெண்கள் கள்ளை தெருவில் விற்றுக்கொண்டிருந்தார்கள் என்று இளங்கோ அடிகளே சொல்லி யிருக்கிறார். ஆகவே கள் குடிப்பது என்பது ஏற்கனவே நமது நாட்டில் இருந்து வந்திருக்கிறது. இது ஒரு சமூகப்பிரச்னை என்ற அளவில், மது குடிப்பதை தவிர்க்கவேண்டும் என்றால் பிரச்சாரத்தின் மூலமாக தடுக்கவேண்டும். சட்டத்தை போட்டு தடுத்துவிட முடியாது. நாமம் போடுகிறார்கள், பூணூல் போடுகிறார்கள், இதையெல்லாம் சட்டம் கொண்டு வந்து தடுத்துவிட முடியுமா? திருடுவது, கொள்ளையடிப்பது, கொலை செய்வது இவையெல்லாம் குற்றம், கொலை செய்தால் மரண தண்டனை—அது கூட தேவையா என்கின்ற விவாதம் இருந்து கொண்டிருக்கிறது. பூட்டோவை தூக்கில் போட்டது கூட கூடாது என்பது எங்கள் நிலை. ஆகவே இவையெல்லாம் சமூக குற்றங்கள் என்றிருப்பதால் இதையெல்லாம் பிரச்சாரத்தின் மூலம்தான் மாற்ற வேண்டும். அது போல் குடிப்பழக்கத்தை போக்க வேண்டுமென்றால் மக்களிடையே இதைப்பற்றி பேசித்தான் திருத்த வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் குடும்பக்கட்டுப்பாட்டை அமல் நடத்துவதற்காக சட்டம் கொண்டுவரப்படுமா என்று கேட்ட தற்கு, சட்டம் தேவையில்லை, பிரச்சாரத்தின் மூலம்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இதற்கெல்லாம் சட்டம் கொண்டு வர முடியுமா என்று கேட்டார்கள். அப்படி யென்றால் இதற்கு மட்டும் ஏன் சட்டம்? ஆகவே இந்த மதுமரத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தச் சட்டத்தால் மதுமரத் தொழிலாளர்கள் பாதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன்......

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலக்கியத்தைக் காட்டி மது அருந்துவது நியாயம் என்று குறிப்பிட்டார்கள். அந்த காலத்தில் அப்படி மது அருந்தியதால் தான் கோவலன் கண்ணகியை விட்டு மாதவியிடம் சென்றான். அந்த நிலை இப்போதும் ஏற்பட வேண்டுமா?

திரு. மு. அம்பிகாபதி: கோவலன் மது சாப்பிட்டதாக இளங்கோ அடிகள் சொல்லவில்லை. பூம்புகார் தெருக்களில் மதுவை பெண்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள் என்று 'வேயா காட்டிற்கு....' என்ற அந்த அடிகளிலே குறிப்பிட்டிருக் கிறார்கள்..

திரு. ர. ஜெபமணி: திரு. அம்பிகாபதி அவர்கள், பூம்புகார் காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகிறார், அப்போது தலையில் முடியை கத்தை கத்தையாக வைத்துக் கொண்டிருந்தார்கள், சட்டை போடுவது கிடையாது, அப்படிப் பட்ட அந்த காலத்திற்குப் போக வேண்டும் என்று சொல்லு கிறார்களா?

திரு. மு. அம்பிகாபதி: பழைய காலத்திலுள்ள அத்தனை யையும் நாம் விட்டுவிட முடியாது. பழையதும் நல்லதுதான். வீட்டில் கூட பழையதைதான் நாம் விரும்பிச் சாப்பிடுகிறோம். பழைய காலத்தில் 'அம்மா' என்று அழைத்தோம், அதற்காக இப்போது 'அம்மா' என்று சொல்வதை விட்டுவிட முடியுமா?..

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கடைசியில் பதில் சொல்லலாம் என்றிருந்தேன். பஞ்சமாபாதகம் என்று சொல்லப்படுகிறதே, அந்தப் பஞ்சமாபாதகங்கள் என்னென்ன என்பதை மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொல்லு வார்களா?

திரு. மு. அம்பிகாபதி: பஞ்சமாபாதகங்களில் குடிப்பழக்கமும் ஒன்றுதான். அதற்காக எப்போதாவது குடிப்பதை பாதகம் என்று கருதக் கூடாது. அப்படிப்பட்ட பாதகம் மற்ற இடங் களில் எல்லாம் இருந்து கொண்டிருக்கும் போது, இங்கேயும், யு. பி. போன்ற இடங்களிலும் போய் ஜனதா ஆட்சி மது விலக்கைப் பற்றி ஏன் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை..

திரு. ர. ஜெபமணி: ஜனதா ஆட்சியின் கொள்கை இந்தியா முழுவதும் மதுவிலக்கை கொண்டு வரவேண்டும் என்பதுதான். ஆகவே அதைச் சொல்லி திசை திருப்ப வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி: மதுவிலக்கு வருகிறதோ இல்லையோ அதற்கு முன்னால் உங்கள் ஆட்சிக்கு விலக்கு வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நாகப்பட்டிணம் தேர்தலுக்கு முன்னால் நிச்சயமாக மதுவிலக்கு வராது.

திரு. மு. அம்பிகாபதி: எனவே, இங்கே மூடிக் கிடக்கக் கூடிய சேலம் கிளாஸ் பாக்டரியையும், இயங்காமல் இருக்கின்ற சக்தி பைப்ஸ் தொழிற்சாலையையும், இன்னும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளையும் உடனடியாக இயங்குவதற்கான

முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற
முறையில் நான் கேட்டுக்கொண்டு, தொழில் துறையில்
பெரும் தொழில்களை வளர்க்கின்ற முறையில் அரசின் அணுகு
முறையும், கொள்கையும் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி,
வலியுறுத்தி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு சட்டமன்றத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த தொழில் மானியத்தின்மீது எனக்கு
இங்கே பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றித் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த அரசு ஆட்சி அமைத்தபின் கிராமப்
புறங்களிலே மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவோம் என்றும்
வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம் என்றும்
வாக்குறுதி தந்திருக்கிறது. இந்த நேரத்திலே வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழி, கிராமங்
களிலே சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்
படுத்துவதாகும். அந்த அளவிலே நாம் இதிலே மிகுந்த அக்கறை
கொண்டு, இதற்காக அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டும்
என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நான் இன்றையதினம் குறிப்பாக ஒன்றைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் சில வாரங்களுக்கு
முன்பாக டெல்லி சென்றிருந்தபோது, அங்கே ஒரு நிறுவனத்தைப்
போய்ப் பார்த்தோம். அந்த நிறுவனத்திலே, டெல்லி மாநகரிலே
உள்ள கழிவு நீரைப் பயன்படுத்தி எரிவாயு தயாரிக்கின்றார்கள்.
இப்போது நம் நாட்டிலே மண்ணெண்ணைத் தட்டுப்பாடு
இருக்கின்றது; அதோடு மட்டுமல்ல. இன்டேன்காஸ் கிடைப்பதும்
அரிதாக இருக்கின்றது. இந்த நேரத்திலே இங்கேயும் அதே
போல் கழிவு நீரைப் பயன்படுத்தி எரிபொருளைத் தயாரிக்கலாம்.
இங்கேகூட கூவத்திலே இருந்து ஒருவித ரசாயன மாற்றத்தால்
தான், துர்நாற்றம் ஏற்படுகிறது. எனவே, இந்த கூவத்தின்
துர்நாற்றத்தைப் போக்குவதற்கும், அதே சமயத்திலே எரி
பொருள் வாயு தயாரிப்பதற்கும் நாம் முயற்சி எடுத்துக்
கொள்ளலாம். இதனால், நிச்சயமாக நமக்கு இந்த எரிபொருள்
பிரச்னை தீரவும் வழி ஏற்படும் என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். டெல்லியிலே முனிசிபல் கார்ப்பரேஷன்
ஒக்லால் பகுதியில் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தி, அந்தப்
பகுதியிலே உள்ள மக்களுக்கு கிட்டத்தட்ட 18 ரூபாய் செலவில்
இந்த எரிபொருளை வழங்குகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு
திட்டத்தை இங்கே ஆரம்பித்தால், எரிபொருள் பிரச்னையை
தீர்ப்பதற்கு வழி ஏற்படும். அதே சமயத்தில் கூவம் ஆற்றின்
துர்நாற்றமும் போகும்.

நான் இந்த மன்றத்தில் சென்ற ஆண்டு தொழில்
மானியத்தின்மீது பேசுகின்றபோது, பனை மரத்தைப் பற்றிச்
சொன்னேன். பனை மரத்தில் அதனுடைய எல்லாப் பாகங்
களும் மக்களுக்குப் பயன்படுகின்றது. குறிப்பாக ராமநாத
புரம் மாவட்டத்தில் பனை மரம் அதிகமாக உள்ளது. அங்கே

இந்த பனை மரப் பொருள்களைக் கொண்டு கைவினைப்
பொருள்களைத் தயாரிக்கிறார்கள். ஆனால், நாம் பனை மரத்திலே
இருந்து எண்ணைத் தயாரிப்பதை மேற்கொள்ளவேண்டும்.
குறிப்பாக, கோவா மாவட்டத்தில் தேங்காயிலிருந்து எப்படி
கொப்பறையில் எண்ணை எடுக்கப்படுகின்றதோ, அதேபோல்
பனை மரத்திலே உள்ள கொப்பறையிலிருந்து எண்ணை தயாரிக்
கிறார்கள். இந்த 'பாம்' ஆயிலை சாப்பிடுகின்ற உணவு
எண்ணையாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். எனவே, இந்தத்
திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். அதோடு மட்டுமல்லாமல்,
இந்த எண்ணையில் கான்டில், சோப்பு தயாரிப்பதற்கும்
உபயோகப்படுத்துகிறார்கள், விஞ்ஞான ரீதியாக என்பதையும்
நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், தேசூரில், கீழ்ப்புத்தூரில் நிலத்தடி
நீர் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே
பூமியை குடைந்த போது, பூமிக்கடியிலே நிலக்கரி இருப்பதாக
அந்த ஆய்வாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதி
மக்களும் இதைப்பற்றி பரவலாக சொல்கிறார்கள். நான் அந்தப்
பகுதிக்குச் சென்றபோது, என்னையும் கொண்டு போய் காட்டி
னார்கள். அப்படி அவர்கள் ஆய்வு நடத்திய இடத்தில்
கிடைத்தப் பொருள்கள் கருமையாகவும், அதைக் கொளுத்தினால்
எரிகின்றது என்றும் சொல்கிறார்கள். எனவே, அங்கே
நிலக்கரி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அந்தப்
பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

[பிற்பகல் 1-10]

குறைந்த அளவு ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் அப்படிப்
பட்ட நிலைமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.
எனவே, அந்த நிலக்கரி மக்களுக்குப் பயன்படும் வகையில்
திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே தோல் தொழிற்சாலைகள் பற்றிப்
பல முறை பேசி வந்திருக்கிறோம். குறிப்பாக, வட ஆற்காடு
மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன.
அந்தத் தொழிற்சாலைகள் பெரும்பாலும் மக்கள் அதிகமாக
வாழக்கூடிய பகுதிகளிலேதான் அமைக்கப்பட்டிருக்கின்றன.
அப்படிப்பட்ட நகரப் பகுதிகளிலே அமைக்கப்பட்டிருக்கும்
காரணத்தால் அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவு
நீர் மக்கள் வாழ்க்கைக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கிறது.
அந்தக் கழிவு நீரை அப்புறப்படுத்த நல்ல திட்டங்களை
மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிற கருத்து புதிய
கருத்தல்ல. இந்த மன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லப்
பட்ட கருத்து. குறிப்பாக வேலூர் பகுதியில் மக்கள் வாழ்கிற
நடுப்பகுதியில் தொழிற்சாலை அமைக்கப்பட்டு கழிவு நீர்
வெளியே விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை அப்புறப்
படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

வேலைவாய்ப்புக் கிடைக்கும் சலவைக்கல் தயாரிக்கும் நல்ல தொழிற்சாலையும் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

சிறு தொழில்களைப் பரவலாக ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே குறிப்புகளிலே கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே சிறு தொழில்கள் என்றால் இரண்டு முக்கியமான தொழில்கள், ஒன்று தீப்பெட்டி தொழில்; இரண்டு பீடித் தொழில்தான் இருக்கின்றன. கேரளாவிலே பீடித் தொழிலாளர்களே அந்த தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு கூலி 12 ரூபாய் முதல் 15 வரை கிடைக்கிறது. ஆனால் முதலாளிகளை வைத்து அவர்களிடத்திலே வேலைபார்க்கிற தொழிலாளர் களுக்கு 2,3 ரூபாய் தான் கிடைக்கிறது. இந்த நிலைமையை உணர்ந்து, கேரளாவிலே செய்திருப்பதைப்போல் தமிழகத்திலே யும் தொழிலாளர்களே பீடித் தொழில்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஏற்படுகின்ற இன்னொரு லாபத்தையும் நான் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து பீடித்தொழில் செய்கின்ற தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் என்ற முறையிலே ஏராளமான ஸ்காலர்ஷிப் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 200 மனுக்கள்கூட வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் கேரளத்திலிருந்து 6 ஆயிரம் மனுக்கள் போட்டு அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து சிறு தொழில்களுக்குத் தேவையான பணத்தை தேசிய வங்கிகள் கொடுப்பதில்லை. எந்தவகையிலேயும் அவை களுக்கு அவை உதவுவதில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தேசிய வங்கிகள் சிறு தொழில்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நம்முடைய ஜனதாக்கட்சித் தலைவர் அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே தீப்பெட்டிக்குப் போட்ட வரியைப் பற்றிச் சொன்னார்கள். அந்த வரியை நீக்கி, இங்கே வருவாய்த் துறை அமைச்சர் ஒரு பில் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே தீப்பெட்டித் தொழிலுக்கு வரி குறைந்து விட்டது என்ற செய்தியை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு தொழிலுக்கு அதிகமாக உதவி செய்வதன்மூலமாக வேலை யில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு களைச் செய்து தமிழகத்திலே வேலையில்லாத பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப் பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

*திரு. ந. தனசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்துறை, தொழில் வளர்ச்சித் துறை ஆகிய 2 மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து

வைப்பதற்குக் கொடுத்த சந்தர்ப்பத்திற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் இந்திய துணைக் கண்டம் விடுதலைப் பெற்று ஏறத்தாழ 30 ஆண்டுகள் முடிவுபெற்ற இந்த நிலையில் 20 ஆண்டுக்காலம் தொழில் துறை முன்னேற்றம் எந்த அளவில் இருந்தது? யானை கட்டி அதற்கான தீனி போடுவது போல், பெரும் முதலாளிகளை வளர்ப்பதற்காக, திட்டங்களைத் தீட்டி, தனிப்பட்ட முதலாளிகளை ஊக்குவிப்பதற்கு ஆலவட்டம் போட்டதை அன்றையதினம் நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்கடுத்த படியாக , 7 ஆண்டுகாலம் இருள் பற்றிய காலமாக, இருள் மிக்க காலமாக, இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிகப் பெரிய தடைக்கற்களாகக் காணப்பட்டதையும் நாம் பார்த்தோம். அந்த 7 ஆண்டுகள் இருளைக் கடந்து, இந்த இரண்டு ஆண்டுகாலத்தில், எந்த அளவு முன்னேற்றத்தை நாம் பார்த்திருக்கிறோம் என்றால் இன்றையதினம் அவை முன்னாலே வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே பலதரப்பட்டமுன்னேற்றத்திற்கான அறிவிப்பு களையும் பல்வேறு அரசாணைகளையும் அவசர அவசரமாக செய்திருப்பதைப் பார்க்கிறோம். அப்படி வெளியிட்டுள்ள அரசாணைகள் மூலமாக தமிழகத்திலே, எதிர்காலத்திலே ஒளிமயமான சூழ்நிலையை உருவாக்கித் தந்திடும் நிலைக்காக உள்ளபடியே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், எனது பகுதியில், உப்பை மூலதனமாகக் கொண்டு இரசாயனத் தொழிற்சாலைகள் பல ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் பல வந்து கொண்டிருக்கின்றன. அந்த உப்பை மூலப் பொருளாகக் கொண்டு, Pottasium chloride, Sodium sulphate, Bromide; Magnesium carborate தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை இந்த நேரத்திலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலோரப் பகுதிகளில் வாழ்கிற மீனவப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்காக, கடல் சார்ந்த தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடல் பாசியைப் பற்றி எடுத்துக்கொண்டால், இந்த நாட்டிற்கு அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரக் கூடிய ஒன்று அது. அந்தக் கடல் பாசியை உருவாக்க தனித் தொழிற்சாலையை அரசின் சார்பாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் தொழில் துறையிலே முன்னேறி வளருகின்ற சூழ்நிலை பெற்றிருந்தாலும், பிற்பட்ட மாவட்ட மாக அறிவிக்கப்படாத காரணத்தால், தொழில்களைத் துவங்க வருகின்றவர்கள் தயக்கம் காட்டுகிற சூழ்நிலை இருக்கிறது

ஆகவே, பல்வேறு காரணங்களை உத்தேசித்து, அந்தப் பகுதியை
பிற்பட்ட மாவட்டமாக அறிவிப்பதற்கு, மத்திய அரசாங்கத்தை
மாநில அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிடத் தொழில் புரிபவர்களைக் கூட்டுறவு
ஒன்று சேர்த்து, கட்டிடத் தொழில் கூட்டுறவு சங்கம் மூலமாக
அமைத்து, மற்ற தொழில்களில் வேலை செய்பவர்கள் என்று
விழுந்து இறந்து விட்டால், உயிர் நீத்தால், எந்த கீழே
உதவித் தருகிறோமோ, அந்த அளவுக் அளவு
தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் உதவித் தொகை கட்டிடத்
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அளிக்க

நெல்லை மாவட்டத்திலே, 'சிப்காட்' உருவாக்க
எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, இன்றையதினம் அதை உருவாக்க இடம்
முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்காக, நான்
நமது அரசைப் பாராட்டுவதோடு, அந்த 'சிப்காட்' நிறுவனத்தை
மிகக் குறுகிய காலத்திலே, விரைவான காலத்திலே உருவாக்கித்
தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதிக நேரமில்லாத
காரணத்தினால், வாய்ப்பினை தந்தமைக்கு மீண்டும் ஒரு முறை
நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. அ. பாலுச்சாமி : மதிப்பிற்குரிய மாமன்றத் துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்கள், தொழில், தொழில் வளர்ச்சிக்காக வைத்திருக்கும்
மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு
நன்றி சொல்லிக்கொள்கிறேன். இன்றைய தமிழகத்தில் தொழில்
வளம் காண வேண்டும் என்ற நோக்கத்தோடும், கிராமப்புறங்
களில் தொழில் வளம் பெருகினால்தான், அன்று கனவு கண்டு
வந்த அண்ணல் காந்தி அவர்களும், பேரறிஞர் பெருந்தகை
அண்ணா அவர்களும் கண்டு வந்து கிராம ராச்சியத்தைக்
காண முடியும் என்ற நல்ல நோக்கத்தோடு புரட்சித்தலைவர்
கிராமத் தொழில் துறை என்ற அமைச்சர் துறையை ஆரம்பித்து
கிராமங்கள்தோறும் தொழில்கள் முன்னேறுவதைக் கண்டு
கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாலே ஆண்ட முதல்வர்கள் கூட வெளிநாட்டுக்கு
சென்று வந்து தமிழகத்திலே இறங்கியவுடன் பலவிதமான
செய்திகளை வெளியிட்டார்கள். ஆனால் புரட்சித் தலைவர்
அவர்கள், "சங்கே முழங்கு, சங்கே முழங்கு மங்காத தமிழுக்கு
சங்கே முழங்கு" என்று பாவேந்தர் பாடிய பாட்டிற்கு
ஒப்பாக புரட்சி தலைவர் அவர்களின் மூச்சும்,
பேச்சும் தமிழகம் முன்னேற சங்கே முழங்கு என்ற கருத்தின்
படி வெளிநாடு சென்ற நேரத்தில்கூட ஜப்பான் நாட்டுடனும்
சிங்கப்பூர் நாட்டுடனும் தொழில் வல்லுநர்களிடம் கலந்து

பேசி தமிழ் நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும்
என்ற நல்ல எண்ணத்தை தமிழக மக்கள் போற்றிப் புகழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு.
* * * *

நேர்மையான ஆட்சியை ஆண்டு கொண்டிருக்கும் தமிழக
அரசை மாற்றுக் கட்சிக்காரர்கள் தாம்தான் இந்த நாட்டுக்கு
சொந்தக்காரர்கள் நாங்கள்தான் இந்த நாட்டை ஆள தகுதி
படைத்தவர்கள் என்றும், யார் யார் நேரத்திற்கு நேரம்
மாற்றி தங்கள் திசையை திருப்பிக் கொண்டு செல்கிறார்கள்
என்பதனை மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.
அறிந்து தெரிந்த புதிய பாடத்தை தொடர்ந்து தமிழக
மக்கள் காட்டத்தான் போகின்றார்கள் என்பதனை மெத்தப்
பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலகோடி முதலீடு செய்து சிலருக்கு வேலை
இடைப்பதை தவிர்த்தும், அளவில் பல லட்சம் முதலீடு
செய்து பல தொழிற்சாலைகளை அமைத்து
பல பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற
எண்ணத்தில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்
கொண்டு வந்திருக்கும் திட்டத்தை, தமிழகத்தில் உள்ள
மக்கள் அனைவரும், வேலையில்லா மக்கள் அனைவரும்
பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான நிலக்கோட்டைத் தொகுதியைப்
பற்றி ஒரு சில கருத்துக்களை கூற கடமைப்பட்டிருக்கிறேன்.
எனது நிலக்கோட்டை தொகுதி பலவகைகளில் பின்தங்கிய
பகுதி. இங்கு அரசு கூட்டுறவு நூல் ஆலை ஒன்றை அமைக்க
வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நிலக்கோட்டை
தொகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பதினால்,
அங்கே ஒரு பேப்பர் இன்டஸ்டிரீஸ் ஒன்றும் ஆரம்பிக்க
வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, பஞ்சாலை ஒன்றை
துவக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு
என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்
அவர்கள் சொன்ன * * * *
என்ற வார்த்தைகளை பத்திரிகைகளிருந்தும் குறிப்பேட்டில்
இருந்தும் நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவு இடுகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்று நமது அவையில் தொழில்கள், தொழில்

* * * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. கே. கந்தசாமி] [1979 ஏப்ரல் 21

வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவுகள் என்ற மானியக்
கோரிக்கைகளின் கீழ் எங்களுடைய பார்வேர்டு ப்ளாக் கட்சி
யினுடைய சார்பாக சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

அதற்கு முன்னால் நமது அம்பிகாபதி அவர்கள் பேசுகிற
போது குறிப்பிட்டார்கள், தொழில்கள் என்று சொன்னால்
ஹெவி இண்டஷ்டிரிஸ் என்று சொல்லப்படும் பெரிய
தொழில்களை அதிகமாக உருவாக்க வேண்டும் என்று
சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் பெரிய
தொழில்களை புதிதாக உண்டாக்குவதை விட, இருக்கின்ற
பெரிய தொழில்களை பாதுகாத்து வளர்க்க வேண்டும்.
கிராமப்புறங்களில் தொழில்களை ஏற்படுத்தி அரைவயிறு
கால்வயிறு சாப்பிட்டு பட்டினிக்கிடக்கும் மனிதர்களுக்கு,
மெஜாரிட்டி மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில்
அரசின் தொழிற் கொள்கைகள் இருக்க வேண்டும், என்பதுதான்
என்னுடைய கருத்து.

[பிற்பகல் 1-30]

அந்தக் கோணத்திலே பார்க்கிறபோது இப்போது ஒதுக்கப்
பட்டு இருக்கிற நிதி ஒதுக்கீட்டில் கூட ஹெவி இண்டஸ்டிரிஸ்
என்ற தலைப்பின் கீழ் கனரகத் தொழிலுக்கு 7 கோடி
ரூபாயும், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரிஸ் — என்ற
தலைப்பின் கீழ் சிறு தொழிலுக்கு 9 கோடி ரூபாய் ஒதுக்கி
இருப்பதை நான் பாரட்டுகிறேன். அதனுடைய உள்நோக்கம்
இந்த கிராமப்புறங்களில் தொழில் வளத்தைப் பெருக்குவதன்
மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவும்,
உற்பத்தி பெருக்கம் ஏற்படுத்துவதற்கும், அதன் மூலம்
நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கவும் என்ற அடிப்படை
திட்டத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கும்
என்ற வகையில்தான் செய்யப்பட்டு இருக்கிறது என்று நான்
கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10
நிமிடத்தில முடித்துவிடுங்கள். பேரவையின் இக்கூட்டத்தை
பேரவையின் அனுமதியோடு 1. 40 வரை நீட்டிக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: அந்த நல்ல நோக்கத்தோடு
ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்த தொழில் துறைக்கு
ஒதுக்கப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கையை நான்
வரவேற்று இன்னும் அதிகமான நிதி ஒதுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த மானியத்தின் மீது பொதுவாகத்தான் பேச
முடியும். நுணுக்கமாக — தெளிவாக — அதாவது கிரிட்டிகல்லாக
என்று சொல்வார்களே — அதுபோல் பேச முடியாவிட்டாலும்,
பொதுவாக நான் கேள்விப்படுகிற அளவில், மத்திய
அரசாங்கத்தின் உதவியோடு இன்னும் அதிகப் பணம் ஒதுக்க
வேண்டும் என்று கேட்டு, இன்னும் தீவிரமாக நிதி ஒதுக்கம்

1979 ஏப்ரல் 21] [திரு. கே. கந்தசாமி]

செய்தால், விரைவாக பல திட்டங்களை அமல் படுத்த
முடியும் என்று கூறி, அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்
விரைவாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். மத்திய அரசிடமிருந்து அதிகமாக பணம்
வாங்கவேண்டும். கிராமப்புறங்களில், குறிப்பாக மதுரை
போன்ற மாவட்டங்களில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு
இருந்தாலும், பல செயல்படாமல் மந்தமாக இருப்பதாகக்
கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமானால் அந்த
மந்த நிலையைப்போக்கி, மக்களின் நல்வாழ்த்துக்களைப் பெறு
வதற்கு, அரசுக்குப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள்
உறுதுணையாக இருக்கவேண்டும். தக்க நடவடிக்கைகள் எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆண்டிப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில்,
அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். 35
தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு மாண்புமிகு சிறு
தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுத்
தார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். 35 என்று இருப்பதை அடுத்த
திட்டத்தில் 100 என்று உயர்த்த வேண்டும் என்று பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன்.

மெழுகுவர்த்தி ஆரம்பிக்கும் தொழிற்சாலையையும் நம்முடைய
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து
இருக்கிறார்கள். அமைச்சரவையைப் பொறுத்தவரையில்:
அமைச்சர்கள் வெவ்வேறு துறைகளின் மூலமாக திட்டங்களை
அறிவித்து இருந்தாலும், சிறு தொழில்களின் மக்களை
ஊக்குவிக்கவேண்டும் என்ற அளவிற்கு — அது கைத்தறித்துறை
அமைச்சராக இருந்தாலும் சரி — வேறு அமைச்சராக இருந்
தாலும் சரி — சிறு தொழில்களை ஆண்டிப்பட்டித்
தொகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று
தெரிவித்துககொள்கிறேன்.

ஆண்டிப்பட்டித் தொகுதி மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதி;
பல்வேறு கிராமங்களில் மக்கள் வறுமையால் வாடிக்கொண்டு
இருக்கிறார்கள். அங்கே வைகை அணை கட்டும்போது 10—15
கிராமங்கள் காலி செய்யப்பட்டது. அவர்களுக்குப் புறம்போக்கு
நிலங்கள் தற்காலிகமாக கொடுக்கப்பட்டது. அந்த மக்களுக்கு
நிரந்தரமான வாழ்க்கை வசதி உருவாக்குவதற்கும், அந்தப்
பகுதியில் கிராமப் பொருளாதாரத்தை ஸ்தரப்படுத்துவதற்கும்
உரிய வகையில் ஏற்கெனவே வைகை அணைக்குப் பக்கத்திலே
நூலான் தொழிற்சாலை அமைக்கவேண்டும் என்று திட்டம்
அரசின் பரிசீலனையில் இருந்தது. மாண்புமிகு அமைச்சர்
இராஜா முகமது அவர்களுக்கும் அது தெரியும், அந்தத்
திட்டத்தை செயல்படுத்துவதற்கு உரிய உத்தரவை விரைவாகப்
போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டியில் ஒரு பின்தங்கிய பகுதியாகும். ஏற்கெனவே நான் அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மாதவன் அவர்கள் 2 கோடி ரூபாயில் ஒரு நவீன நூற்பாலையை—கோபிஸ்டிகேட் மில் — 25 ஸ்பின்டில்கள் கொண்டு ஆரம்பிக்கப்படும் என்று இதே மன்றத்தில் அறிவித்தார்கள். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த நவீன நூற்பாலை திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும், அந்தப் பகுதி மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், அந்த வாட்டத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மானியத்திற்கு சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களிடத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும். இப்போது நடந்துகொண்டிருப்பது இன்டஸ்ட்ரீஸ் மானியம் என்பது தெரியும். இருந்தாலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்காகக் கூறிக்கொள்கிறேன். 20 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று இருந்தாலும் ஒரு 6 ஆயிரம் ஏக்கருக்கு என்றுதான் இப்போது அறிவித்திருக்கிறீர்கள். இதை ஒரு முதல் கட்ட அறிவிப்பாகக் கருதுகிறேன். ஆகவே இதை முதல்கட்டமாகக் கொண்டு இன்னும் 14 ஆயிரம் ஏக்கருக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று 4 இலட்சம் மக்களின் சார்பாகக் கேட்டுக் கொண்டு 6 ஆயிரம் ஏக்கருக்கு வழங்கப்பட்டதற்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து இந்தத் திட்டத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, ஏப்ரல் திங்கள் 23ம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

147. தமிழ்நாடு 1978–ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலை நடத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊரகவளர்ச்சி — உள்ளாட்சித் துறையின் 31-1-1979 ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண். 165-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V / 1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது].

148. தமிழ்நாடு 1957 - ஆம் ஆண்டு திரை அரங்குகள்
(முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது
குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 31 - 8 - 1978
ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண். 2134—ல் வெளியான
அறிவிப்பு [தமிழ்நாடு திரை அரங்குகள் முறைப்படுத்துதல் சட்ட
த்தின் நாடு சட்டம் IX/ 1955) 10 (3) பிரிவின் கீழ்
(தமிழ் பேரவை முன் வைக்கப்பட்டது

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

176. 28-3-1978 ஆம் தேதியன்று பேரவைத் துணைத்
தலைவரின் தீர்ப்பினை எதிர்த்துக் குரலெழுப்பிய திரு. துரை
முருகன் அவர்கள் மீதான அவையுரிமை வழக்கு, மற்றும் திரு.
துரைமுருகன் அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
30 ஆம் நாளன்று சில பெயர்கள் பொறிக்கப்பெற்ற
இரண்டு அலுமினியத் தட்டுக்களை பேரவையில் காண்பித்தது
தொடர்பான உரிமை மீறல் வழக்கு ஆகியவற்றின் மீதான
அவை உரிமைக் குழுவின் அறிக்கைகள்.

* 177. கோரிக்கை எண். 43 – பல்வகை - கடல் கடந்த
நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும்
குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புது வாழ்வும்
பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 — 80
(தமிழ், ஆங்கிலம்)

* 178. 1979 — 80 ஆம் ஆண்டில் மறுவாழ்வுத் துறை
பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்)

* * 179. கோரிக்கை எண். 24 - தொழில் துறை பற்றிய
கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 - 80 (தமிழ், ஆங்கிலம்).

* * 180. 1979 - 80 ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய
சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

* * 181. கோரிக்கை எண். 37 - பொதுப்பணிகள் —
கட்டடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 — 80
(தமிழ், ஆங்கிலம்).

* * 182. கோரிக்கை எண். 42 - ஓய்வூதியங்கள் குறித்த
கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 - 80 (தமிழ், ஆங்கிலம்).

* * 183. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண
(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 20 / 1979).

* * 184. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண
சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்டமுன் வடிவு
எண். 21 / 1979).

கோரிக்கை எண்கள். 24, 51 - க்கான வெட்டுத் தீர்மானங்
களின் பட்டியல் 20-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்
பெற்றன.

* 19-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

* * 20-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

[1979 ஏப்ரல் 21

இணைப்பு I

[976ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 772.க்கான
விடையைக் காண்க]

விடை.

அ) 8·5 சதவீதம் சர்க்கரை
கரும்புக்கு 1978 — 79-ம் பருவத்தில் குறைந்தபட்ச சட்டபூர்வ கட்டுமானம் உள்ள
விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 100/- என மைய-அரசு
நிர்ணயித்துள்ளது. சென்ற ஆண்டு இதே சர்க்கரை கட்டுமானம்
உள்ள கரும்புக்கு விலை டன் ஒன்றுக்கு ரூ. 85/- என
மைய அரசு நிர்ணயித்து இருந்தது. ஒரு குவிண்டால் சர்க்கரை
உற்பத்தி செய்வதற்கு தல வரிகள் நீங்கலாகச் சராசரியாக
ரூ. 203 ஆகிறது. ஆனால் ஒரு மூட்டை சர்க்கரைக்கு இன்றைய
மார்க்கட் நிலவரப்படி கிடைக்கும் தொகை ரூ. 180/- ஆகும்.
இதில் 15 சதவீதம் காப்பு மற்றும் பழைய இழப்புகளுக்கு
ஈடுசெய்தது போக வங்கிகள் அளிக்கும் பணம் சராசரியாக
ரூ. 153/- ஆகும். இதனால் கரும்பு விலையினை முழுமையாகக்
கொடுக்க இயலவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு மைய
அரசுக்குக் கடன் நிதி உதவி கோரி மைய அரசின் துணைப்
பிரதமர் மற்றும். நிதி அமைச்சருக்குக் கடிதம் எழுதப்
பட்டுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டுகளில் கொடுக்கப்படவேண்டிய
கரும்பு விலையில் நிலுவை ரூ. 4½ கோடி அல்ல. 31-1.79-ம்
தேதி அளவில் பழைய ஆண்டுகளில் கொடுக்கவேண்டிய
விலையில் நிலுவை ரூ. 68. 17 இலட்சங்களாகும். கரும்பு
விலையினை கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966—ன்படி 14
நாட்களுக்கும் அளித்திடல் வேண்டும். அப்படிக் கொடுக்கத்
தவறும் ஆலைகள் ஆண்டுக்கு 15 சதவீதம் வட்டி அளித்திட
வேண்டும்.

இணைப்பு II.

[992ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

தொழில்துறை கொள்கைக் குறிப்பு.

கிராமப் புறங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் உள்ள
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற அரசுக்
கொள்கையின் அடிப்படையில், மற்ற துறைகளில் போலவே
தொழில் துறையிலும் இப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை
அதிக அளவில் உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு
வருகிறது. குறுகிய காலத்தில் அதிக அளவில் வேலை வாய்ப்புக்
களை உருவாக்கும்போது இரண்டு கருத்துக்களை கவனத்தில்
கொள்ள வேண்டியிருக்கிறது. முதற்கண் எல்லோருக்கும் தொழில்
நுட்பத் திறனை அளிக்க வேண்டுமானால் ஏராளமான பயிற்சித்
திட்டங்களுக்காக பெருஞ் செலவு ஆவதுடன் காலமும்

1979 ஏப்ரல் 21]

அதிகம் தேவைப்படும். எனவே, நிறுவப்படும் தொழில்கள்
பெரும்பாலும், நுணுக்கமான இயந்திரங்கள் இல்லாமலும்,
தொழிற் பயிற்சி அதிகம் இல்லாதவர்கள் வேலை செய்யக்கூடிய
வகையிலும் அமைவது அவசியம். இரண்டாவதாக, ஏராளமான
பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்க வேண்டியிருப்பதால்,
வேலை தேடுவோர் எங்கெங்கு வசிக்கிறார்களோ, அந்த இடங்
களிலேயே அவர்களுக்கு இந்த வேலை வாய்ப்புகள் கிட்டும்படி
தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்; இல்லை என்றால்,
இதன் காரணமாக ஏற்படும் போக்குவரத்துப் பிரச்னைகளைத்
தவிர்க்க முடியாது. இந்த இரண்டு கருத்துக்களையும் கிராமத்
தொழில்களின் மூலமே ஈடேற்றலாம். இவற்றைக் குடிசைத்
தொழில்கள் என்றும், கிராமத் தொழில்கள் என்றும் சிறு
தொழில்கள் என்றும் கூடச் சொல்லலாம். இவ்வாறாக,
கிராமத் தொழில்களை மேம்படுத்துவதுதான் தொழில்
துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது.

2. கிராமப்புறத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதால்
நடுத்தர அல்லது பெரிய தொழில்களைப் புறக்கணிக்கப்
படுகின்றன என்று பொருளாகாது. உண்மையில் நடுத்தர,
பெருந்தொழில்கள் சிறப்பாக வளர்ந்தால்தான் அதன் பயனாக
சிறு தொழில்களுக்கு தேவையான மூலப் பொருட்களும்
சிறு தொழில் உற்பத்திகளுக்கு விற்பனை வாய்ப்புகளும்
அதிகரிக்கும். ஒரு பெரிய தொழிற்சாலையை பின்தங்கிய பகுதி
களில் நிறுவுவதால், அந்தப் பகுதிகளில் பல சிறு தொழில்கள்
உருவாவதற்கும் துணைத் தொழில்கள் வளரவும் வாய்ப்புகள்
உண்டாகும். எனவே, சிறு தொழில் வளர்ச்சியின் நலனுக்குத்
குந்தகம் ஏற்படாத வகையில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்
கள் ஒன்றுக்கொன்று உறுதுணையாக அமையும் வகையில்
வளர்வது அவசியமாகிறது.

3. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் தொழில் துறை
யின் பல்வேறு பிரிவுகள், அவை பெரும் தொழில்களை வளர்ப்
பதாக இருந்தாலும், சிறு தொழில் வளர்ப்பதாக இருந்தாலும்
செயல்பட்டு வருகின்றன.

4. கிராமப்புறத்தொழில் செம்மையாகவும், விரைவாகவும்
வளர வேண்டுமானால் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்கள் இன்றியமை
யாதவை; அவையாவன :— எவையெனகணித்து
(1.) சாத்தியக்கூறான திட்டங்கள்
அவைகளை உருவாக்குதல்.
(2.) அடிப்படை உறுதுணை வசதிகளை அமைத்தல்.
(3.) தொழிலுக்குத் தேவையான கடன் உள்ளிட்ட மூலப்
பொருட்களை அளித்தல்.
(4.) சிறு தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்
வதற்கான ஆதரவு அளித்தல்.

[1979 ஏப்ரல் 21

(5.) சிறுதொழில் முனைவோருக்கு, பயிற்சியும், தொழில் நடத்துவதற்கு தகுந்த அறிவுரைகளும் வழங்குதல்.

மேற்கூறிய ஐந்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில்
ஒரு விரிவாக்க அமைப்பு தேவைப்படுகிறது. இந்த அமைப்பு ஒரு
தொழில் முனைவரைத் தேடி அவருடைய பிரச்சினைகள் எவை
என்று தெரிந்து கொண்டு, அவருடைய குறைகள் யாவையும்
கண்டு அவருக்கு வேண்டிய ஆதரவு அளிக்கவேண்டும். கூட்டுறவு
வளர்ச்சி, விவசாயம் போன்ற துறைகளில் இதுபோன்ற துணை
புரியும் அமைப்புகள் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக
நிலைபெற்றுவிட்டன. எனினும் தொழில் வளர்ச்சியைப்
பொறுத்தவரையில் சமீபகாலத்தில்தான் நிறுவப்பட்ட மாவட்டத்
தொழில் மையங்களே இதுபோன்ற துணைபுரியும் அமைப்பு
களாக செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் தற்சமயம்
எட்டு மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்
களிலும் ஒருசில மாதங்களில் இவ்வாறான மையங்கள் துவக்கப்
பட இருக்கின்றன. இந்த மாவட்டத் தொழில் மையங்களுக்குத்
தேவைப்படும் அலுவலர்கள் பதவிகளுக்கு கிராமப்புறத் தொழில்
வளர்ச்சியில் ஈடுபாடும், நுண் அறிவும் கொண்ட தகுதியுள்ளவர்
களை வெளிச் சந்தையில் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்யப்
பட்டு வருகின்றன. இவ்வாறாக வரும் அக்டோபர் மாதத்
திற்குள் எல்லா அலுவலர்களும் நியமிக்கப்பட்டு மாநிலம்
முழுவதிலும் கிராமப்புறதொழில் முன்னேற்றத்தையே முழுமுதற்
குறிக்கோளாக கொண்டு மாவட்டத் தொழில் மையங்கள் முழு
மூச்சுடன் இயங்கத் தொடங்கும். சிறு தொழில் துவங்க
முனைவோர் தமக்குத் தேவைப்படும் உதவிகளையும் அறிவுரை
களையும் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் ஒரே
இடத்தில் பெற இயலும். தொழிற் துறை ஆய்வாளர்களும்
ஊரக வளர்ச்சித்துறையின் தொழில் விரிவாக்க அலுவலர்களும்,
மாவட்ட தொழில் மையங்களில் பணியாற்றி வருகிறார்கள்.
அவர்கள் கிராமத்தொழில் வளர்ச்சி விரிவாக்கத்திற்கும் வழி
வகுத்தலுக்கும் களப்பணி அலுவலர்களாய் அடித்தளமாக
அமைவார்கள். மாவட்ட ரீதியில் அவர்கள் மாவட்டத் தொழில்
மையங்களில் உள்ள பகுதி மேலாளர்களின் மேற்பார்வையின்
கீழ் பணியாற்றுவார்கள். கிராமப் புறங்களில் ஆங்காங்கே
கிடைக்கும் மூலப்பொருள்களையும் சுற்றுப்புற அங்காடி நிலவரங்
களையும் கருத்தில் கொண்டு சாத்தியக் கூறான திட்டங்களைத்
தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அந்த மாவட்டத் தொழில் மையங்
களைச் சார்ந்தது.

5. தற்சமயம் இந்த மையங்கள் இயங்கிவரும் எட்டு
மாவட்டங்களிலும் இதற்கான முதற்சுற்று ஆய்வு முடிவடைந்து
விட்டது. மேற்கொண்டு இந்த ஆய்வின் முடிவுகளின்பேரில்
மேலும் நுண்ணிய ஆய்வுசெய்து எந்தெந்த இடத்தில் எந்தெந்த
திட்டங்கள் நிறுவுதல் நலம் என முடிவு செய்யும் நடவடிக்கையில்
இவை ஈடுபட்டு உள்ளன. எடுத்துக்காட்டாக, இராமநாதபுரம்
மாவட்டத்தில் இதுபோன்ற ஆய்வு செய்து [illegible]
கூடிய சிறு தொழில்கள் கொண்ட ஒரு பட்டியல் தயார் [illegible]

1979 ஏப்ரல் 21]

பட்டுள்ளது. இவற்றை நிறுவ ரூபாய் 423 இலட்சம் மூலதனம்
தேவைப்படும்; 6,337 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது. இந்த
திட்டங்கள் நடைமுறை சாத்தியமானது மட்டுமின்றி இரண்டு
ஆண்டுகளுக்குள் செயல்படக்கூடியதும் ஆகும். இதுபோன்ற
திட்டங்கள் மற்ற மாவட்டங்களிலும் தயாராக்கப்பட்டு
வருகின்றன. மாவட்ட தொழில் மையங்களும், மற்றும்
தமிழ்நாடு தொழில் மூலதன நிறுவனமும் ஒவ்வொரு மாவட்டத்
திலும் இதுபோன்று சாத்தியக் கூறுகள் திட்டங்களை தயாரிக்கும்
பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்
பட்ட திட்டங்கள் சிறு தொழிலில் சிரமமின்றித் தொழில் ஈடு
பட முனைவோர் தொடங்கப் பயன்படும்.

6. டாக்டர் நாயுடாமா அவர்கள் தலைமையில் கடந்த
ஆண்டு நிறுவப்பட்ட கிராம—கைத்தொழில் வல்லுநர் ஆய்வுக்
குழு தனது அறிக்கையை அரசுக்கு சமீபத்தில் பணிந்தனுப்பி
யுள்ளது. கிராமப்புறத்தில் விவசாயத்துறை கால்நடை, வனத்
துறைகளில் எளிதில் கிடைக்கும் விளை பொருட்களையும் கழிவுப்
பொருட்களையும் பயன்படுத்தி பெருவாரியாக வேலைவாய்ப்புத்
திறன் கொண்ட 300-க்கும் மேற்பட்ட திட்டங்களை அந்தக்
குழு பரிந்துரைத்துள்ளது. இந்த திட்டங்கள் ஒவ்வொன்றையும்
செயல் படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து தனித்
தனியாக உருவாக்கி அவைகளை பொதுமக்களிடையே பரவலாக
விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்திட்டங்
களை சிறுதொழில் முனைவோர்கள் அந்தந்தப் பகுதியின் சூழ்
நிலைக்கேற்ப தேர்ந்தெடுத்துச் செயலாக்க இயலும். பெரும்
பாலான திட்டங்கள் அரசு துறையாலும் அரசு நிறுவனங்
களாலும் நேரடியாகவே எடுத்துக் கொள்ளப்படும். இந்தத்
திட்டங்களைச் செயல் படுத்துவதை கண்காணிப்பதற்கு இந்தக்
குழு, "கிராம தொழிற்வளர்ச்சி கண்காணிப்புக்குழு" என்ற
பெயரில், அரசுக்கு தொடர்ந்து உதவி அளித்து வரும்.

7. அடுத்து தேவைப்படுவது சிறுதொழில் கூடங்கள்
நிறுவுவதற்கான அடிப்படை உறுதுணை வசதிகளாகும். சாதாரண
மாக, ஒரு சிறுதொழில் முனைவோர் தானாகவே தன்பொருள்
கொண்டு ஒரு தொழிற்கூட கட்டிடத்தை அமைத்து தேவை
யான நீர், மின்சாரம், மற்ற வசதிகளை அமைப்பதை விட
இந்த வசதிகளெல்லாம் அமைந்துள்ள ஆயத்தமான ஒரு
கட்டிடத்தையே தேடி நாடுவார். தற்சமயம் இதுபோன்ற அடிப்
படை உறுதுணை வசதிகள் கொண்ட பெரிய தொழிற் கூடங்
களுக்குத்தான், அதுவும் நகர்ப்புறங்களின் அருகாமையில்தான்
நிறுவப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கிராமப்புறங்களிலும் இந்த
அடிப்படை வசதிகள் கொண்ட சிறிய தொழிற்கூடங்களை நிறுவு
வதற்கான ஒரு பெரும் திட்டத்தை "சிட்கோ" நிறுவனத்தார்
மேற்கொண்டுள்ளார்கள். 1978-80 ஆண்டுகளில் ரூபாய் 7,600
பெறுமான அளவில் சற்று ஏறக்குறைய 240 சதுர அடி
பரப்பளவு கொண்ட 3000 தொழிற் கூடக் கட்டிடங்கள் கட்டப்
பட உள்ளன. இந்தத் தொழிற்கூட கட்டிடங்கள் தண்ணீர்

வசதியும், மின்சார வசதியும் கொண்டு உடனடியாகப் பயன்
படுத்தக்கூடிய நிலையில் இருக்கும். இந்த சிறுகட்டிடங்களை
வாங்க விரும்பும் தொழில்களை நிறுவ முனைவோர்களுக்கு
சுலபமான தவணை முறையில் கடன்கள் கொடுப்பதற்கும்,
வங்கிகளில் கடன்கள் பெறுவதற்கும் 'சிட்கோ' நிறுவனம்
ஏற்பாடு செய்து தருகிறது. இதுபோன்றே குடிசைத் தொழிற்
துறையில் பெருவாரியாக தீப்பெட்டி தொழிற் கூடங்கள் நிறுவ
தொழிற்கூடக் கட்டிடங்களைக் கட்டுவதில் 'சிட்கோ பெரும்
பங்கு கொண்டுள்ளது. ஏறத்தாழ 20,000 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிக்கக் கூடிய 1,000-க்கும் மேற்பட்ட தீப்பெட்டி
தொழிற் கூடங்களை உடனடியாக நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.
முன்னமே நிறுவப்பட்டுள்ள தொழில் கூட்டுறவுப்பணி நிறுவனங்
களை விரிவுபடுத்துவதால் மேலும் 20,000 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிக்க வகை உள்ளது.

8. இந்த சிறு தொழில் கூடங்களுக்கு அவசியமான மற்று
மொரு தேவை கடன் உள்ளிட்ட பல்வேறு மூலப் பொருட்கள்
தவறாமலும் ஒழுங்காகவும் கிடைக்க வகை செய்வதாகும்.
எடுத்துக்காட்டாக உருக்கு இரும்புப் பொருட்கள் சரிவர கிடைக்
காத காரணத்தால், பெரும் தொழில் அதிபர்களை விட சிறு
தொழில் அதிபர்களே, போதிய பொருள் வசதி இல்லாததால்
பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் கடந்த ஆண்டு போக்கு வரத்துத்
தாமதத்தினாலும் மத்திய அரசின் குறைவான ஒதுக்கீட்டினாலும்
இம் மாநில சிறு தொழில் அதிபர்கள் பெரும் இடர்ப்பாடு
களுக்கு ஆளானார்கள். எனவே இந்த ஆண்டு 'சிட்கோ
நிறுவனத்தார் முன்னேற்பாடாக தேவைப்படும் அளவிற்கு
உருக்கு இரும்புப் பொருட்கள், நிலக்கரி மெழுகு போன்றவை
களை வாங்கி அவைகளை நேர்மையாகவும் சீரிய முறையிலும்
சிறு தொழிற்கூடங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்
துள்ளது. கடன் உதவியை பொறுத்த மட்டில் மாவட்ட மையங்
களுக்கும் வர்த்தக வங்கிகளுக்குமிடையே ஒரு சுமுகமான உறவு
நிலையை வளர்த்து அதன் பயனாக அந்தப் பிரச்சினையைத்
தீர்க்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி, தமிழ்நாடு
தொழில் முதலீட்டு நிறுவனத்தாரும், மாவட்டங்கள் தோறும்
மாவட்டத் தொழில் மையங்களைக் கலந்தாலோசித்து பல கிளை
களைத் துவக்கி உதவ முன்வந்துள்ளார்கள்.

9. எல்லாவற்றிற்கும் மேலாக மிக முக்கியமானது
யாதெனில், சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனைச்
சந்தையை உருவாக்குவதாகும். தற்சமயம் ஆண்டுதோறும் அரசு
அலுவலகங்களிலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலும்,
அரசுடன் இணைந்து நிறுவனங்களிலும் பெரும் அளவிற்கு நுகர்
பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக்
கருத்தில் கொண்டு சமீபத்தில், அரசாங்க அலுவலகங்களிலும்,
அரச நிறுவனங்களிலும் ஊராட்சி அலுவலகங்களிலும்
கூட்டுறவுத் துறை நிறுவனங்களிலும் அவைகளுக்குத் தேவையான

பொருட்களையும் குடிசைத் தொழில் கூடங்
பல்வேறு நுகர் வாரியத்திலோ அல்லது மாவட்டத் தொழில்
களிலோ கதர் தொழிற் கூடங்களிலோ
மையங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வாங்குவதற்கு
வாங்க வேண்டுமென்றும், மேலும் அவ்வாறு தமிழக
வழக்கமான டெண்டர் முறை தேவையில்லை என்றும் நகல்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (அரசு ஆணை டி. ஜி. எஸ். டி.
இணைப்பு I ஆக உள்ளது). மேலும் அளவிற்கு ஏற்படுத்
(D. G. S. D) விலைப் பட்டியலுக்கு ஏற்ற திட்டத்தை சிறு தொழில்
தப்பட்ட விலை முன்னுரிமைத் (அரசு ஆணை இணைப்பு II
துறைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் பொருட்
ஆக உள்ளது). அரசுத் துறைகளில் உற்பத்தியாகக்
களை, கூடுமானவரையில் தமிழ் நாட்டிலேயே சாத்தியக் கூறுகளை
கூடிய பொருள்களை வாங்குவதற்கான பயனாக தமிழ்
அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த ஆய்வின் உள்ள
நாட்டிலுள்ள அரசினர் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ரூபாய்
சோதனைக் கூடங்களுக்குத் தேவையான ஒரு கோடி வாயிலாகப்
மதிப்புள்ள கருவிகளை 'சிட்கோ' நிறுவனத்தார் மேற்கொண்டுள்
பெறுவதற்கு கல்வித் துறையினர் நடவடிக்கை உள்ளது.) இது
ளனர். (அரசு ஆணை இணைப்பு III ஆக எடுப்பார்
போன்று ஏனைய இலாக்காக்களும் நடவடிக்கை பொருட்
களாயின் நம் மாநிலத்தில் சிறு தொழில் உற்பத்திப்
களுக்கு உறுதியான விற்பனை வாய்ப்புகள் பெருகும்.

10, அடுத்து, புதிய தொழிற்கூடங்கள் பெரும் எண்ணிக்
கையில் வளருவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய மற்றொரு துறை
தற்போது பயன்படுத்தப்படும் சிமிட்டிக்குப் பதிலாக
சுண்ணாம்புக் காரையைப் பயன்படுத்தும் முறையாகும். அரசு
அலுவலகங்களிலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலும்
கட்டப்படும் இரண்டடுக்குகள் வரையிலான கட்டிடங்களில்
அடித்தள கான்கிரிட்டு, கட்டிடத் தரை பூசுவதற்கான
கான்கிரிட்டு, சுவர் பூச்சு வேலைகள் ஆகியவற்றிற்கு,
சிமெண்டிற்குப் பதிலாக சுண்ணாம்புக் காரையைப் பயன்படுத்த
வேண்டும் என்று அரசு ஆணைப்பிறப்பிக்கப்பட உள்ளது. இதன்
வாயிலாக சுண்ணாம்புக் காளாவாய்கள் பெருவாரியாகத்
துவங்கவும் அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகவும் வகை
உள்ளது.

11. முன்பே கூறியது போல, புதிதாகப் பணி துவங்கும்
தொழிலாளர்களுக்கும், சிறு தொழில் முனைவோருக்கும் சிறப்புப்
பயிற்சி அளிப்பது பெரும் பொருட் செலவு ஏற்படுவதோடல்
லாது, அதற்கு அதிக அவகாசமும் தேவைப்படும். எனினும்
நாம் மேற்கொண்டிருக்கும் புதிய திட்டத்தின் வெற்றி பெரு
மளவுக்கு, தொழில் துறையில் முன்பே ஈடுபட்டுள்ள கிராமத்
தொழிலாளிகளின் கைத் திறனைச் செம்மைப் படுத்துவதைத்
தான் சார்ந்துள்ளது. எடுத்துக் காட்டாக, கிராமாந்திரங்களில்
முன்பே தொழிலில் ஈடுபட்டுள்ள தச்சர், கொல்லர் போன்
றோரைச் சிறு குழுக்களாக அமைத்து, அவர்களுக்கு சிறு

தொழில் பணிப் பயிற்சிப் பள்ளி மூலமாக, தனிப் பயிற்சி அளிக்க
ஏற்பாடாகி உள்ளது. மற்றும் தீப்பெட்டித் தொழிலைப்
போன்று உற்பத்திப் பெருக்கத்தை கிராமங்களில் பரவலாக விரி
வாக்கி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஒன்றிய
அமைப்புமுறையில் செயல்படுத்தல் நலம். இது போன்ற
தொழில்களில், தொழிலாளர்களுக்கும், தொழில் முனைவோருக்
கும் பயிற்சியளிப்பது எளிது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின்
துணை கொண்டு, தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு பயிற்சி
யளிக்க தொழில் நுட்ப வளர்ச்சி நிதியின் கீழ் ஒரு சிறப்புத்
திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. எனினும், வளம்பெற்ற
நடுத்தர மற்றும் பெருந் தொழில் அதிபர்களும், இயன்ற அளவு
இப் புதிய சிறு தொழில் முனைவோருக்கு பயிற்சி கொடுக்கவும்,
தொழில் நடத்துவதற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கவும் சிறு
தொழில் உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான விற்பனை
வாய்ப்பு அளிக்கவும் உதவ முன் வந்தால்தான் இந்த பிரச்சனை
களுக்கு குறுகிய காலத்திலேயே முடிவு காண இயலும்,

12. அடுத்து சிறு தொழில்கள் வேகமாக வளருவதற்கு
தற்சமயம் உள்ள உரிமம் வழங்கும் நடைமுறைகள் எளிதாக்கப்
படவேண்டியது அவசியமாகிறது. ஒரு சிறு தொழில் முனை
வோர் முதல் ஆண்டில் பெரும் பகுதியை பல்வேறு துறைகளிட
மிருந்து உரிமங்கள் பெறுவதிலே காலம் விரயமாகிறதென
புகார்கள் அடிக்கடி எழுப்பப்படுகின்றன. இது பற்றி தமிழக
அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட
மாவட்டத் தொழில் மையங்களின் திட்டக்குழு ஆராய்ந்தது.
இதன் விளைவாக ஊராட்சிகளால் தொழிற்கூடப் பகுதி என
ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட 14 குறிப்பிட்ட
தொழில்களைத் தவிர மற்ற தொழில்களைத் தொடங்குவதற்கு
சுகாதாரத் துறையிடமிருந்து முன்கூட்டியே ஒப்புதல் பெற
வேண்டிய தேவையில்லையென மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத்துறை ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 5 பரித்
திறனுக்குக் (H. P.) குறைவாகத் தேவைப்படும் தொழிற்
கூடங்கள் எங்கே நிறுவினாலும் அதற்கு சுகாதாரத் துறை
யினரின் அனுமதியை ஊராட்சிகள் பெறவேண்டிய தேவை
யில்லை. (அரசு ஆணை இணைப்பு IV ஆக உள்ளது) இது
போன்றே தொழிற்கூடப் பகுதியென பஞ்சாயத்துக்களாலும்,
நகராட்சிகளாலும் ஒதுக்கப்பெற்ற பகுதிகளில் 25 பரித்திறன்
களுக்கு மேற்படாத அளவு சக்தி பயன்படுத்தும் தொழிற்கூடங்
களை நிறுவுவதற்கான விண்ணப்பங்களை நகர்ப்புறம் மற்றும்
கிராமப்புறத் திட்ட இயக்குநரின் ஆய்வுக்கு அனுப்பத் தேவை
யில்லையென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனிமேல் அது போன்ற
எல்லா விண்ணப்பங்களையும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்
களோ, பஞ்சாயத்து ஒன்றியமோ, நகராட்சியோ மட்டும்
பரிசீலித்து முடிவான ஆணை பிறப்பிக்கும். (அரசு ஆணை
இணைப்பு V ஆக உள்ளது). எல்லாவித ஊராட்சிகளும் 6 மாதத்
திற்குள்ளாக தங்கள் எல்லையில் தொழிற் கூடங்களுக்கான

பகுதியை வரையறுத்து அறிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.
(அரசு ஆணை இணைப்பு VI ஆக உள்ளது.) ஒவ்வொரு மாவட்
டத்திலும் மாவட்டத் தொழில் மையத்தின் மேலாளரையும்
தொழிற்சாலை ஆய்வாளரையும், மாவட்டச் சுகாதார அதிகாரி
யையும், கோட்ட வளர்ச்சி அதிகாரியையும் கொண்ட ஒரு குழு
நிர்மாணிக்கப்பட்டு அந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி
நிலுவையில் உள்ள எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலித்து
தேவையான உரிமங்களை வழங்குவதற்கு வழிவகை செய்யுமாறு
கோரப்பட்டுள்ளது. கண்காணிப்புப் பொறியாளரையும்,
தொழிற்சாலைக் கண்காணிப்புப் பொறியாளரையும், துணைத்
தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளரென பெயரை மாற்றி
அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் பயனாக, கண்காணிப்புப்
பொறியாளரே, தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் புதிய தொழிற்
கூடங்களுக்கு உரிமம் வழங்க வகை ஏற்படும். இதற்கான அரசு
ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். தற்சமயம் தொழில் மற்றும்
வணிக இயக்குநர் வசம் உள்ள தொழில் நுட்ப மற்றும் நிதி
சம்பந்தமான அதிகாரங்கள் மாவட்டத் தொழில் மையப் பொது
மேலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக துவங்க
இருக்கும் சிறு தொழில் கூடங்களுக்கு தேவையான உரிமங்கள்
வழங்க பரிந்துரைகள் ஏதும் சென்னை தலைமை அலுவலகத்
திற்கு வரத் தேவையில்லை.

13. புதிதாகத் துவங்க இருக்கும் தொழிற்கூடங்களுக்கு
ஏற்படும் ஒரு இடர்ப்பாடு மின் இணைப்பு பெறுவதாகும். மின்
இணைப்பு பெறுவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சியிலிருந்தோ
கிராமப் பஞ்சாயத்திலிருந்தோ முன்னதாகவே உரிமம் பெற்று
மின்துறைக்குக் காட்டுதல் வேண்டுமென்ற விதி
அதனை மின் வாரியம் தற்சமயம் விலக்குவதற்கு ஆணை
பிறப்பித்துள்ளது. இது போன்றே 10 பரித்திறனுக்குக் குறை
வாகப் பயன்படுத்த இருக்கும் சிறு தொழிற் கூடங்களுக்கு மின்
இணைப்பு விண்ணப்பங்கள், இணைப்பு இலாபகரமான அடிப்
படையில் உள்ளதா என்று கருதாமலேயே மின் இணைப்பு
வழங்க வேண்டுமெனவும் மின் வாரியம் உத்தரவிட்டுள்ளது.
மின் சக்தி அளிப்பதற்கான நிர்மாணிப்பு வேலைகள் 2 இலட்சம்
மதிப்பீட்டு அளவு வரை அந்தந்த உள்ளூர் அதிகாரிகள்
ஒப்புதல் அளிக்க அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. இவ்
வாறான பல உத்தரவுகளினால் எதிர்காலத்தில் மின் இணைப்பு
பெறுதல் எளிதாக அமையும்.

14. அதிகாரங்களைப் பரவலாக்குவதும், பொறுப்புக்களை
பகிர்ந்தளிப்பதும், நடைமுறைகளை எளிதாக்குவதும் என்றுமே
தொடர்ந்து பரிசீலனைக்குரியவையாகும். எனினும், இதுகாறும்
எடுத்த நடவடிக்கைகளினால் புதிய சிறு தொழிற்கூட அமைப்புக்
கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அதற்கான உரிமங்
களை வழங்குவதில் வெகுவாகக் காலதாமதம் தவிர்க்கப்படும்.

15. பொருள்களின் விலைவாசி யேற்றம் காரணமாக, திட்டச்
செலவு அதிகரித்து, போட்ட திட்டங்களில் தொழில் முன்
முனைவோர் அளிக்கவேண்டிய பங்கு மூலதனத் தொகை அதிக

மாகிறது. இதன் தொடர்பாகத் தொழில்முனைவோருக்கு
குறைந்த வட்டிக்கு பொருளுதவும் திட்டங்களை பல வணிக
வங்கிகள் செயலாற்றி வருகின்றன. எனினும், இதன் விளைவாக
வட்டிப்பளு அதிகரித்து, தொழிற்கூட திட்டத்தின் பொருளாதார
சீரநிலையே பாதிக்கப்படுகிறது. இந்த பிரச்சினைக்குத் தீர்வு
காணும் நோக்கத்தில், மாநில அரசு, தற்சமயம் பின்தங்கிய
பகுதிகளில் நிறுவப்படும் பெருந்தொழில்களுக்கு அளிக்கப்பட்டு
வரும் மூலதன மானியத் திட்டத்தைப் போன்று, மேலும்
உள்ள பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் சிறு தொழிற்கூடங்
களுக்கு மூலதன மானிய உதவி முறையை விரிவாக்க முடிவு
செய்துள்ளது. இதற்கான முழுச் செலவையும் மாநில அரசே
ஏற்க உள்ளது. இது போன்றே கிராமப்புற ஒருங்கிணைந்த
வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராமக் கைவினைத் தொழிலாளி
களுக்கும் குடிசைத் தொழிலுக்கும் அளித்துவரும் மானிய முறை,
மற்ற சிறு தொழிற் கூடங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது.
இந்த மானியத் திட்டத்தை குடிசைத் தொழிலைப் பொறுத்த
வரை 33 விழுக்காடுக்கு மேற்படாமலும், சிறிய தொழிலைப்
பொறுத்த வரையில் 25 விழுக்காடுக்கு மேற்படாமலும் எவ்
வாறாயினும், ஒரு தொழிலுக்கு ரூ. 1,500-க்கு உட்பட்டு
மானியம் அளிக்க உள்ளது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித்
திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் இத்திட்டத்தின்
மூலம் 100 பேருக்குக் குறைவின்றிப் பயன் பெறுவார்கள் என
எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான அரசு வெளியிட்ட
அரசு ஆணை நகல் இணைப்பு VII ஆக இணைக்கப்பட்டுள்ளது.

16. புதிய தொழிற்கூடங்கள் அமைவதற்கு ஊக்கமளிக்கப்
படும் அதே நேரத்தில், முன்பே இயங்கி வரும் தொழிற் கூடங்
களில் ஏதோ ஒரு காரணத்திற்காக நலிந்த நிலையில் உள்ளவை
களுக்குக் கைகொடுத்து உதவி அவை மீண்டும் உற்பத்தியைத்
தொடங்க அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது. தற்சமயம் பெரிய
தொழிற்கூடங்களே இவ்வாரான பயன் பெற்று வருகின்றனவே
யல்லாது சிறிய தொழில் கூடங்கள் பயன் அடைவதில்லை.
இது சம்பந்தமாக இந்த நலிந்த நிலையில் உள்ள தொழிற்
கூடங்களை மீண்டும் நிலைப் படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள,
''நலிந்த நிலை தொழிற்கூடச் சீரமைக்கும் குழு' பல பிரச்சினை
களை எதிர்நோக்கியுள்ளது. அவைகளில் ஒன்று நலிந்த நிலையில்
உள்ள சிறு தொழிற்கூடங்கள் வணிக வங்கிகளில் அதிகமாக
நிதிக் கடன் பெறுவதற்கு உரிய நிதி ஈட்டுப் பெறுமானத்தை
பெருக்கிக்கொள்ள வகை இருப்பதில்லை. இந்த இடரை நீக்கு
வதற்கு 'சிட்கோ' நிறுவனத்தின் மூலமாக நலிந்த நிலையில்
உள்ள, சிறு தொழிற் கூடங்கள் தங்கள் ஈட்டுப் பெறுமானத்
தைப் பெருக்கிக் கொள்ள குறைந்த வட்டியில் கடன் உதவி
அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில்
,சிட்கோ'' நிறுவனத்தார் ரூபாய் 25 இலட்சத்தை ஒதுக்கி
,யுள்ளனர்.

17. மேற்கூறியபடி உரிமங்கள் வழங்கும் நடை முறைகளைச்
சீர்படுத்தியதாலும் பல்வேறு வகையான ஆதரவும் உதவியும்
முந்திய பத்திகளில் கூறியபடி அளிக்க இருப்பதாலும், இம்
மாநிலத்தில் சிறு தொழிற்கூடங்கள் செம்மையாகவும், விரைவாக
வும் வளர வாய்ப்பு உள்ளது. 1979—80-ல் இதன் பயனாகக்
குறைந்தது 1,50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கு
மென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலை வாய்ப்பின் பெரும்
பகுதி பட்டு உற்பத்தித் துறையில் கிடைக்குமென எதிர்பார்க்கப்
படுகிறது. ஏறத்தாழ 40,000 பேருக்கு தீப்பெட்டித் துறையில்
வேலை பெற வாய்ப்பு உள்ளது.

18. பெருந் தொழில், மற்றும் நடுத்தரத் தொழில்களைப்
பொறுத்தவரையில் அவைகளுடைய பெருக்கமும் வளர்ச்சியும்
தற்சமயம் உள்ளதைப் போல் அல்லாது, இம்மாநிலத்தில்
பரவலாகவும் பெரும்பாலான மக்கள் பயனடையுமாறும் அமைய
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு
மத்திய அரசு பெருந் தொழில் கூடங்களும் நடுத்தரத் தொழிற்
கூடங்களும் பெரிய நகர்ப்புறங்களைச் சுற்றி அமைவதைக் கட்டுப்
படுத்த வேண்டும் எனும் ஆணை பிறப்பித்துள்ளது. இதை
அனுசரித்து 'சிப்காட்' நிறுவனத்தார் அளிக்கும் விற்பனை வரிக்
கடன் திட்டம் தகுந்த முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
மேலும், ஓசூரிலும், ராணிப் பேட்டையிலும் அமைந்துள்ள
தொழிற்பேட்டைகளைப் போல் இனி மேற்கொண்டு பெரும்
தொழிற்கூடங்களைப் போலில்லாமல் சிறு தொழிற்கூடங்களை
அமைப்பதற்கான தொழிற் பேட்டைகளை இம்மாநிலத்தின்
ஏனைய பின்தங்கிய பகுதிகளில் துவக்க 'சிப்காட் நிறுவனம்
முற்படும்.

19. மின்வளமும், நீர்வளமும், அதிகமில்லாத சூழ்நிலையில்
பயிற்சிபெற்ற திறமைவாய்ந்த மனித சக்தியினை அடிப்படை
யாகக் கொண்டு மின்சாரவியல் மின் அணுவியல், பொறியியல்
துறைகளில் பெரிய தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் அதிக
அளவில் நிறுவ வாய்ப்பு உண்டு மேலும் சிறு தொழில்களுக்குத்
தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதாலோ
அல்லது சிறு தொழிற்கூடங்களின் உற்பத்திப் பொருட்களை
பயன்படுத்துவதிலோ உதவும் புதுமுயற்சிகளுக்கு ஊக்கம்
அளிக்கப்படும். இயன்ற அளவு இயந்திரங்களைப் பயன் படுத்து
வதைவிட தொழிலாளர்களை அதிக அளவில் பயன்படுத்தும்
முயற்சிகளுக்கு அரசு ஆதரவு தரும் அதற்கு ஊக்கமளிக்கப்படும்.
இயன்ற அளவு இயந்திரங்களைப் பயன் படுத்துவதைவிட, இவ்
வாறான முயற்சிகளினால் ஆங்காங்கே உள்ள தொழிலாளர்
களைக் கொண்டே செயல்படுத்தி வேலைவாய்ப்பைப் பெருக்க
அரசு எண்ணியுள்ளது. இதைப்போலவே உள்ளூரில் கிடைக்கும்
மூலப் பொருள்களைப் பெரிதும் பயன்படுத்தும் தொழில்களுக்கு
முழு அளவில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படும். அரசு துவங்க
இருக்கும் செய்தித்தாள் மற்றும் காகித உற்பத்திக்கு சாதாரண
மாகப் பயன்படுத்தும் மரக்கூழிற்கு பதிலாக நம்முடைய

[1979 ஏப்ரல் 21

மாநிலத்தில் அதிகளவு கிடைக்கும் கரும்புச் சக்கையைப் பயன் படுத்தத் திட்டமுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள 21 சர்க்கரை ஆலைகளின் கழிவுப்பாகையும் எரிசாராயத்தையும் மூலப் பொருள்களாகக் கொண்டு பல தொழில்களைத் தொடங்க வாய்ப்புள்ளது. இது போன்றே, நீண்டதொரு கடலோரத்தைக் கொண்ட தமிழ் நாட்டில், உப்பு உற்பத்தி தொழிற்சாலைகளை பெருமளவில் பெருக்கவும், உப்பின் அடிப்படையால் ஏற்படும் ரசாயனத் தொழில் இணையங்கள் செய்வதால் பெருவாய்ப் புள்ளது. இவ்வாறு அமையின், கடலோரப் பகுதிகளில் சிறு, சிறு உப்பளங்கள் தோன்றவும் வழி உண்டாகும். தமிழ் நாட்டில் ஓரிரு இடங்கள் தவிர மற்ற இடங்களில் கனிவளம் அவ்வளவாக இல்லை. கிடைக்கும் இந்த சிறு அளவு கனிவளத்தையும் பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இயன்றளவு பயன்படுத்தி வேலை வாய்ப்புகள் பெருக்கப்படும். தோல் தொழிலைப் பொறுத்தவரை, உற்பத்தியிலும், வெளி நாட்டு ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. இந்தத் தொழிலில் உற்பத்தியைப் பரவலாக்கி, விற்பனையை ஒருங் கிணைந்த முறையில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற் கூறிய கருத்துக்கள் பெருந் தொழில்களைப் பொறுத்த வரை அரசின் அணுகு முறையை விளக்குவதாக அமையும்.

V2ll,31 N79
N80-3152
122151

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் :

ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)
13/3/95	15/3		
25/10/91			
[illegible]	[illegible]		

S.F. 259A-6—1,00,000—30-1-84.